JL
031m2 N08
N09
105034

உ

கடவுள்துணை.

செந்தமிழ்.

மதுரைத் தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்
ஒரு தமிழ்ப்பத்திரிகை.

ஏழாந்தொகுதி.

பத்திராசிரியர்—மு. இராகவையங்கார்.

மதுரை:
தமிழ்ச்சங்கமுத்திராசாலைப்
பதிப்பு.

1908—1909.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்

3 5
27 NOV 1909
MADRAS

O31M2·1 I9C' N08.
N09

"செந்தமிழ்" ஏழாந்தொகுதியின்
உள்ளுறை.

அறச்சிறப்பு:—ஸ்ரீமத்-ச. ஜகநாத ஐயர். ௫௩௪.
அறிவின் உபயோகம்:—"ஜனவிநோதினி" ௭௭.
அறிவுவிளக்கம்:—ஸ்ரீமத்-அ. குமாரசுவாமிப்பிள்ளை. ௭௦.
ஆங்கிலமொழிக்கலப்பு:—ஸ்ரீமத்-அ. பொன்னையாபிள்ளை. ௪௯௦.
ஆசாபாசங்களும் அவைகளை யொறுத்துத்தற்கடிதலும்:— ஸ்ரீமத்-M. ஜோஸப்டையாஸ். ௪௯௯, ௫௧௫, ௫௫௭.
ஆத்திசூடிச்சூத்திரவிருத்தி:— ஸ்ரீமத்-கோ. வைத்தியலிங்கம்பிள்ளை. ௬௦௧, ௬௭௧.
"இயல்வது கரவேல்" (விருத்தியுரை):— ஸ்ரீமத்-கோ. வைத்தியலிங்கம்பிள்ளை. ௨௪௧, ௨௯௧, ௩௩௭.
இரட்டைப்புலவர் சரிதம்:— ஸ்ரீமத்-சி. கு. நாராயணசாமி முதலியார். ௩௦௭, ௩௫௯, ௪௦௧.
இராமாவதாரச்செய்யுட் பாடாந்தரம்:— ஸ்ரீமத்-சி. கணேசையர். ௧௩௩, ௨௭௫, ௪௫௪, ௬௯௨.
இராமாவதாரவுரை:—ஸ்ரீமத்-ரா. இராகவையங்கார். ௨௦, ௭௨.
இலக்குமி தோத்திரப் பதிகம்:— ஸ்ரீமாந்-பொ. பாண்டித்துரைத்தேவர். ௪௭௩.
ஈகை:—ஸ்ரீமத்-எம். கே. எம். அப்துல்காதிறுராவுத்தர். ௩௪௯, ௪௧௧.
உபாத்திமைத்தொழில்:—ஸ்ரீமத்-தி. சதாசிவ ஐயர். ௧௩௭.
உபாத்தியாயர்வகையுஞ்செயலும்:—ஸ்ரீமத்-தி. சதாசிவஐயர் ௯௧௫.
உபாத்தியாயனியல்பு:—ஸ்ரீமத்-தி. சதாசிவ ஐயர். ௪௯௨, ௫௪௮.
ஒட்டக்கூத்தர் ஈட்டியெழுபதுபாடிய வரலாறு:— ஸ்ரீமத்-சி. கு. நாராயணசாமிமுதலியார். ௯௨௧.
ஒருவேண்டுகோள்:—எம். கே. எம். அப்துல்காதிறுராவுத்தர். ௫௮௨.
ஒளிவீசும் ஜீவ[illegible]துக்கள்:— ஸ்ரீமத்-வெ. நரசிம்ம ஐயங்காரவர்கள் M.A.B.L. ௩௩௪.
ஓ[illegible]ரயநிவிர்த்தி:— ஸ்ரீமத்-சே. [illegible] சுப்பிரமணியக் கவிராயர். ௪௩௪, ௫௩௨.

கடவுளுக்கு ஆத்மாவைக் கொண்டுகாட்டுகிற பத்து உதாரணங்கள்:— ஸ்ரீமத்-செ.மு. செய்யிதுமுகம்மது. ௫௯.
கதாசரித்சாகரம்:— ஸ்ரீமத்-வீராசாமி ஐயங்கார். ௪௨௪, ௪௫௮, ௫௧௧, ௫௭௮, ௬௨௭.
கரிவாயு:—"ஜநவிநோதினி" ௭.
கல்வி:—ஸ்ரீமத்-ச. ஜகநாத ஐயர். ௬௩௭.
கல்விகற்கக் காலநியதியில்லை:—P. G. ௧௬௫.
கலிங்கத்துப்பரணியாராய்ச்சி:— பத்திராசிரியர். ௨௨௫, ௨௫௮, ௩௧௫.
குண்டலகேசி வரலாறு:—பத்திராசிரியர். ௬௦௩.
குதிரையைப்பற்றிய ஆராய்ச்சி:— ஸ்ரீமத்-சே. ரா. சுப்பிரமணியக்கவிராயர். ௫௮௮, ௬௪௩.
சாங்கிய கதோபதேசம்:—ஸ்ரீமத்-அ. குமாரசுவாமிப்பிள்ளை. ௬௦௬.
சாதுரியவசனங்கள்:—ஸ்ரீமத்-அ. சிதம்பர முதலியார் ௩௨௦.
சிதம்பரசுவாமிகள் சரிதம்:— ஸ்ரீமத்-சி.கு. நாராயணசாமி முதலியார். ௪௯௬.
சைவாதீனமுந் தமிழும்:— ஸ்ரீமத்-எம். எஸ். பூரணலிங்கப்பிள்ளை, B.A. ௩௯௩, ௪௪௯, ௪௮௪.
சொல்வகை நோக்கல்:—ஸ்ரீமத்-அ. குமாரசுவாமிப்பிள்ளை. ௨௪௯.
தமிழ்ப்பழஞ் சரிதம்:— ஸ்ரீமாந்-பொ. பாண்டித்துரைத்தேவர். ௨௮௩, ௩௩௧, ௪௮௩, ௫௩௯.
தமிழணியிலக்கண வரலாறு:— ஸ்ரீமத்-பி. குருராயர். (Late) ௧௪௧, ௨௧௩.
தருக்கசூத்திரங்கள்:—பத்திராசிரியர். ௭௫.
தலமுறையாராய்ச்சி:—ஸ்ரீமத்-மு. சாம்பசிவ நாயனர். ௩௦.
தனிச்செய்யுட் கோவை:— ஸ்ரீமாந்-பொ. பாண்டித்துரைத்தேவர். ௨௮௯, [illegible] ௪௩௨, ௫௩௩.
திருக்குறட்பரிமேலழகருரை விளக்கம்:— ஸ்ரீ[illegible]ண்ணையர். [illegible]

185034
600 008

திருக்குறளாராய்ச்சி:—ஸ்ரீமத்-அ. கோபாலையர். ௪௨௮, ௫௫௨.
திருக்குறளைப்பற்றிய கதைகள்:— ஸ்ரீமாந்-பொ.பாண்டித்துரைத்தேவர். ௩௮௭, ௪௪௩.
திருவள்ளுவர் பரிமேலழகருரை:— ஸ்ரீமத்-அ. குமாரசுவாமிப்பிள்ளை. ௩௭௪.
திருவள்ளுவரைப்பற்றிய சில குறிப்புக்கள்:— பத்திராசிரியர். ௨௩௧.
திருவாசக அருந்தொடர் விளக்கம்:— ஸ்ரீமத்-ஆத்மநாதன். ௬௧௯.
நல்லொழுக்கம்:— ஸ்ரீமத்-இலக்குமணப்போற்றிகள். ௪௦௭, ௪௭௭. ௫௦௨, ௫௬௭, ௬௩௩.
நாட்டியசாத்திரம்:—ஸ்ரீமத்-தி. சதாசிவ ஐயர். ௩௭.
நுண்பொருண்மாலை:— பத்திராசிரியர். ௮௫, ௨௭௮, ௩௨௨, ௩௫௫, ௫௨௫, ௬௦௦, ௬௪௦.
படிக்காசுப்புலவர் சரிதம்:— ஸ்ரீமத்-சி. கு. நாராயணசாமி முதலியார். ௧௯௯, ௨௬௧.
பத்திராசிரியர் குறிப்பு:— பத்திராசிரியர் குறிப்புக்கள்:— பத்திராசிரியர். ௧௧௯, ௩௮௦.
பர்மாவிற்கண்ட ஒருதமிழ்ச் சாஸநம்:—பத்திராசிரியர். ௬.
பழையபுலவரின் பெருந்தன்மைகள்:—பத்திராசிரியர். ௧௭௫.
புகழ்ச்சிவிருப்பு:—"ஜநவிநோதினி" ௨௫௩.
புத்தககுறிப்பு:—பத்திராசிரியர். ௧௧௮, ௧௬௧, ௨௨௯, ௨௮௨, ௬௫௩.
புராதன இந்தியா:- ஸ்ரீமத்-S. கிருஷ்ணசாமி ஐயங்காரவர்கள், M.A., M.R.A.S., ௪௨, ௯௨.
புலாலுண்ணுஞ் செடிகள்:— ஸ்ரீமத்-வெ. நரசிம்ம ஐயங்காரவர்கள். M.A. B.L. ௩௯௭.
பெரியபுராண அரும்பத விளக்கம்:— ஸ்ரீமத்-ஜி. சதாசிவம்பிள்ளை. ௫௦, ௧௦௫, ௧௫௬, ௨௧௯, ௨௬௯, ௨௯௯, ௩௪௧, ௪௩௮, ௪௮௦, ௫௩௫, ௫௯௫, ௬௪௯.
மதுரைக்காஞ்சியாராய்ச்சி:—பத்திராசிரியர். ௬௫.
மதுவிலக்கு:—ஸ்ரீமத்-அனிபெசண்டம்மை உபந்நியாசம். ௧௯௪.

உள்ளுறை.

மன்மதன்வில் முதலியன:— ஸ்ரீமத்-சே.ரா.சுப்பிரமணியக் கவிராயர் ௬௩.
முனையதரையர்:—பத்திராசிரியர். ௧௯0.
மூன்றுதமிழ்க்குடிகள்:—பத்திராசிரியர். ௧.
மொழிபெயர்ப்பு:—ஸ்ரீமத்-அ. குமாரசுவாமிப்பிள்ளை. ௪௪௫.
யானையாராய்ச்சி:—ஸ்ரீமத்-சே. ரா. சுப்பிரமணியக்கவிராயர். ௫௧௯.
வாழ்த்துக்கவி:—ஸ்ரீமத்-எம்.கே.எம். அப்துல்காதிறுராவுத்தர். ௫௮௩.
விக்கிரஹாராதனம்:—ஸ்ரீமத்-சந்திரசேகர சாஸ்திரிகள். ௯௯.
விக்கிரஹாராதனையும் வேதவாக்கியங்களும்:—ஸ்ரீமத்-P. G. ௨௭௩.
விவசாயக்குறிப்பு:—ஸ்ரீமத்-S. சுப்பிரமணிய ஐயர். ௩௬௬.
விவசாயக்குறிப்புகள்:— சென்னை, விவசாய "டிபார்ட்மெண்டார்" ௧௫௧, ௨0௭.
வௌவால்களின் பிரயோசனம்:— ஸ்ரீமத்-வீ. சுப்பிரமணிய ஐயர். ௫௪௨.
ஸ்ரீ வான்மீகரும் தென்னாடும்:—பத்திராசிரியர். ௧௧௯.
ஸ்ரீ விசிஷ்டாத்வைத ஸம்போதினீ சபை விவரணம்:— ஸ்ரீமத்-திருவேங்கடாசாரியர். ௧௧௩.
ஷோடசநியாய நிரூபணம்:—ஸ்ரீமத்-தி. வேங்கடராமஐயங்கார். ௮௨.

"செந்தமிழ்"ஏழாந்தொகுதியில் வெளிவந்த நூல்கள்.

[முடிந்தவை.]

சந்திராலோகம்:— சதாவதானம்-முத்துசாமி ஐயங்காரவர்களியற்றியது:— பத்திராசிரியர். பகுதி, ௨, ௩.
திருவாலவாயுடையார் திருப்பணிமாலை:— ஸ்ரீமாந்-பொ. பாண்டித்துரைத்தேவர், பகுதி, ௨.
கெல்:—ஸ்ரீமத்-எம். கே. எம். அப்துல்காதிறுராவுத்தர். பகுதி, ௯.
விக்கிரமசோழனுலா:— ஒட்டக்கூத்தரியற்றியது:— பத்திராசிரியர். பகுதி, ௪, ௫, ௬.

[முடியாதவை.]

அகப்பொருள் விளக்கம்:— ஸ்ரீமத்-பொ. பாண்டித்துரைத்தேவர், பகுதி. ௬, ௭, ௮ ௯, ௧0, ௧௨.
சங்கரசோழனுலா:—பத்திராசிரியர். பகுதி. ௧௨.

7

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௭] கீலக ௵ கார்த்திகை ௴ [பகுதி-௧.

மூன்று தமிழ்க்குடிகள்.

௧. கூத்தச்சாக்கையர்

சேரன் செங்குட்டுவன் பத்தினிக் கடவுளாகிய கண்ணகியைப் பிரதிஷ்டித்தல் வேண்டி, வடநாடுசென்று இமயத்தினின்றும் கொணர்வித்த சிலையினைத் தான் போரில்வென்ற ஆரியவரசர்முடிமேலேற்றிக் கங்கையில் நீர்ப்படைசெய்து கொணர்ந்து, தன்னரசிருக்கையாகிய வஞ்சிமாடம் புகுந்தனனெனவும், அங்கே அவன் தன்மனைவியாகிய வேண்மாளோடு மகிழ்ச்சியுடன் ஓலக்கமண்டபஞ் செல்லும்போது, இடையிலுள்ள நாடகவரங்கத்து நிகழ்த்தப்பெற்ற அழகிய கூத்தொன்றைக் கண்டு களித்தனனெனவும், அந்நடனம் கூத்தச்சாக்கையன் என்பவனால் நிகழ்த்தப்பட்டதெனவும் சிலப்பதிகாரம் நடுகற்காதையிற் கூறப்பட்டுளது: அது வருமாறு:—

"ஆங்கவ டன்னுட னணிமணி யரங்கம்
வீங்குநீர் ஞால மாள்வோ னேறித்
திருநிலைச் சேவடிச் சிலம்புவாய் புலம்பவும்
பரிதரு செங்கையிற் படுபறை யார்ப்பவும்
செங்க ணாயிரந் திருக்குறிப் பருளவும்
செஞ்சடை சென்று திசைமுக மலம்பவும்
பாடகம் பதையாது சூடகந் துளங்காது
மேகலை யொலியாது மென்முலை யசையாது
வார்குழை யாடாது மணிக்குழ லவிழாது
உமையவ ளொருதிற னாக வோங்கிய

இமையவ னாடிய கோட்டிச் சேதம்
பாத்தரு நால்வகை மறையோர் பறையூர்க்
கூத்தச் சாக்கையி னாடலின் மகிழ்ந்தவ
னேத்தி நீங்க விருநில மாள்வோன்
வேத்தியன் மண்டப மேவிய பின்னர்." (௬௫-௭௯.)

எனக் கண்டுகொள்க. இவ்வடிகளிற் சொல்லப்பட்ட ஆடல் கொட்டிச் சேதம் என்பது. இது கொட்டி எனவும் கொடுகொட்டி எனவும் வழங்கும்; இது, திரிபுரந் தீமடுத்தெரியக்கண்டு, ஜயாநந்தத்தால் சிவபெருமான் உமையவளுடன் ஆடியதென்பர். இதனை,

"கொட்டி யாடற் கேற்ற மொட்டிய
உமையவ ளொருபா லாக வொருபால்
இமையா நாட்டத் திறைவ னாகி
அமையா வுட்கும் வியப்பும் விழைவும்
பொலிவும் பொருந்த நோக்கிய தொக்க
அவுண ரின்னுயி ரிழப்ப வக்களம்
பொலிய வாடின னென்ப மற்றதன்
விருத்தங் காத்தற் பொருளொடு கூடிப்
பொருத்த வரூஉம் பொருந்திய பாடல்
திருத்தகு மாயிற் றெய்வத் துதிப்பே."

என்பதனானுணர்க. (பாலைக்கலி-௧) இவ்வாடல் தமிழிற் கூறப்பட்ட

கடையமயி ராணிமரக் கால்விந்தை கந்தன்
குடைதுடிமா லல்லியமற் கும்பம்—சுடர்விழியாற்
பட்டமதன் பேடுதிருப் பாவையான் பாண்டரங்கம்
கொட்டியிவை காண்பதினோர் கூத்து.

என்னும் பதினொரு புறநாடகங்களில் ஒன்றெனக் கூறுவர். மேற்கூறிய சிலப்பதிகார அடிகளால், இக்கொட்டிச் சேதம் சிவபிரானால் ஆடப்பட்ட விதம் இத்தன்மையதென்பது நன்குவிளங்கும்.

இனி, இந்நாடகத்தைச் செங்குட்டுவற்கு நடித்துக்காட்டியவன் கூத்தச்சாக்கையன் என்றும், அவனாடலைக்கண்டு அரசன் மகிழ்ந்து சென்றனனென்றும் மேற்காட்டிய அடிகள் குறிக்கின்றன. சாக்கையரென்பவர், முற்காலத்தில் அரசர்க்கு அந்தரங்க கருமத்தலைவராயிருந்தவரென்பதும் (Private Secretary) அவர் வள்ளுவராவர் என்பதும் "வள்ளுவன் சாக்கை யெனும் பெயர் மன்னர்க் குள்படு கருமத் தலைவர்க் கொன்றும்"[3] எனவரும் திவாகரத்தாற் பெறப்படுகின்றன. இக்கூத்தச்சாக்கையர் என்பவர் அச்சாக்கையரில் ஒரு பிரிவினராய் அரசரை நடனத்தால் மகிழ்விப்பவராதல் வேண்டும். இச்சாக்கையர் அப்பெயருடனும், அத்தொழிலுடனும் இன்றும் உள்ளனரென்பதும், அவரது வழக்கவொழுக்கங்களும் "மலையாளமும் அதில் வாழ்நரும்" (Malabar and its folk) என்னுந்தலைப்பெயருடன்-T. K. கோபால பணிக்கரவர்களால் ஆங்கிலத்தில் வெளியிடப்பெற்ற நூலின் 184, 185-ம் பக்கங்களிற் காணப்பட்டபோது அதிசயந்தந்தமையால்; அதில் எழுதியுள்ளவற்றைக் கீழேதருகின்றேன்.

"சாக்கையர்கூத்தென்பது அநாதிகாலமாக நடைபெறும் ஒரு புராதன ஏற்பாடாகும். சாக்கையர் ஒரு விநோதமான குலத்தைச் சார்ந்தவர். அவர் பிராமணப்பெற்றோர்க்கு பேஷ்டாகாலஸம்ஸர்க்கத்தில் பிறந்த சந்ததியார் என்று சொல்லப்படுகின்றனர். அதனால் அவர் தாழ்பிறப்பினராவர்.

"உற்சவகாலங்களிலும் மற்றக்காலங்களிலும், ஆலயங்கட்குச் சம்பந்தமானதும் கூத்துக்கென்றேற்பட்டதுமான உட்புறக்கட்டிடங்களிற் சாக்கையர்கூத்து நடத்தப்படுகிறது. கூத்தன் கால்களிலுங் கைகளிலும் சதங்கைகட்டிக்கொண்டும், இடையைச்சுற்றி நகைப்புண்டாக்கத்தக்கதும் மிகுந்தமடிப்புக்களுடன் கூடியதுமான விநோதவுடையொன்றைத் தரித்துக்கொண்டும் தேகமுழுதும் விபூதிபூசியவனாய் வெறுந்தலையுடன் தன்கூத்தைத் தொடங்குவன். சாக்கையர் பெண்கள் "நங்கையர்" என்று சொல்லப்படுவர். சாக்கையர் ஆடும்போது அந்த நங்கையரிலொருவர் எப்போதும் கூடவிருத்தல் வழக்கம். அவர், சுலோகங்கள் கூறி அவற்றின் அர்த்ததாற்பரியங்களை விளக்கிக்கொண்டு வருங்காலையில், நம்பியார் என்றழைக்கப்படுமொருவனால் இடையிடையே தம்பட்டம் அடிக்கப்படுவதுண்டு. புராணசுலோகங்களைச் சொல்லி அவற்றின் அர்த்ததாற்பரியங்களை விளக்குவதே இக்கூத்தற்குரிய விசேடம். அதனை விநோதமாகவும் மிக நுணுக்கமாகவும் நடித்துக்காட்டுவன்.

“சாக்கையர், மக்களியல்புகளையும் உலகளியல்புகளையும் பற்றிக் குணதோஷ ஆராய்ச்சிசெய்வதில் பிரமிக்கத்தக்க வல்லமையுடையர். கூத்துக்காண்பவரில் முக்கியமானவர்கள் மிக அதிசயிக்கும்படி சுலோகதாற்பரியங்களை உபயோகிப்பதிலும், அம்முழுக்கூட்டத்தையும் கொக்கரிப்புடன் குதூகலமடையச் செய்வதிலும் வேண்டியவளவு சாமர்த்திய முடையவர்கள். சாக்கையர் கூத்தாடுங்கால் அவர் நிகழ்த்தும் பரிகாசாதிகளால் எவருஞ் சினங்கொள்வதில்லை. அவர்களை நோக்கிப் பிறர் அவமரியாதையாய் உரத்துச்சிரிப்பதுமில்லை. இது தொன்றுதொட்டுவரும் ஒருமரியாதை. இம்மரியாதையில் ஏதேனுஞ் சிறிது குறைவு நேரிடுமாயின், அதுவே, அவர்கள் கூத்தை நிறுத்திவிடப் போதியதாகும். கோயில் தர்மகர்த்தர்களால் இன்னோர் சந்தேகமின்றி சம்மானிக்கப் பட்டுவருகின்றனர்.” எனக் கண்டுகொள்க.

இவற்றால், சாக்கையர் என்போர் தமிழ்நாட்டிலுள்ள பழையகுடியினரென்பதும், கூத்து நிகழ்த்துவதில் தொன்றுதொட்ட பெருமையுடையரென்பதும், நன்குவிளங்கும். சிலப்பதிகாரத்தில் “இமையவனாடிய கொட்டிச் சேதம், பாத்தரு நால்வகை மறையோர் பறையூர்க், கூத்தச் சாக்கையனாடலின்” என்னும் விஷயம் மேற்குறித்த மலைநாட்டு வழக்கத்தோடு பெரிதும் பொருந்துமாறு நோக்கிக்கொள்க.

இவ்வாறே, வேறுசில தமிழ்க்குடிகளின் வழக்கவொழுக்கங்களாகப் பழைய நூல்களுட் கண்டனவற்றிற்சிலவும், இன்றும் அப்பக்கத்தே வழங்கிவருகின்றன என்று அறியப்படுகிறது. “வேலன்றைஇய வெறியயர் களனும்” “வேலன்-நீடமை விளைந்த தேக்கட்டேறல், குன்றகச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து, தொண்டகச் சிறுபறைக் குரவை யயர” “வெறியயர் வெங்களத்து வேன்மகன்” என வேலனியல்பும் அவனயரும் வெறியாட்டும் நூல்களிற் கேட்கப்படுதல்போலவே, அக்குணங்குறிகளுடன் இன்றும் அவர் மலைநாட்டில் உள்ளனர். அவ்வாறே பாணரென்னும் வகுப்பினரும். இவர், அந்நாட்டில் நடைபெறும் கற்கடகமாதத்து விசேட நாள்களில், அதிகாலையிலே இனியகீதங்களால் “துயிலுணர்த்தல்” என்னும் வினையை இன்றும் நடத்திவருகின்றனரென்பர். இவையன்றிச் சோதிடர் கணிசன் எனவும், செய்யுள்கள் துள்ளலெனவும், மருதநிலமக்கள் செருமக்களெனவும், திருஷ்டிபடுதல் கருங்கண்ணிட்டலெனவும், தையற்காரர் துன்னல்வினைஞரெனவும் இவ்வாறே எண்ணிறந்த பழந்தமிழ்ச் சொற்கள் மிகுதியாக அப்பிரதேசத்துக் கேட்கப்படுகின்றன. இன்னும் இவைபோன்ற அரியதமிழ்ச்செய்திகளை, மலைநாட்டு ஒழுக்க வழக்கங்களில் மிகுதியும் பயின்றுவருஞ் செந்தமிழ்மக்கள் அறிவிப்பாராயின், பெரிதும் இன்பம் விளைக்குமென்பது திண்ணம்.

௨. ஓயர் அல்லது ஓவியர்.

புறநானூற்றில், ௧௭௬-ம் பாடலாலும், சிறுபாணாற்றுப்படையாலும் புகழப்பட்ட நல்லியக்கோடன் என்னும் வள்ளற்றலைவன், ஏறுமாநாடுடையானென்றும், எயிற்பட்டினம் மாவிலங்கை யென்னும் ஊர்கட்குத் தலைவனென்றும், ஓயர் அல்லது ஓவியர் குலத்தானென்றும் கூறப்படுகின்றான். இவற்றுள் இவனது குடிப் பெயராகிய ஓயர் அல்லது ஓவியர் என்பது, இப்பிரதேசத்தில் வழங்குதல் தெரியவில்லையாயினும், வட ஆர்க்காடு ஜில்லாவில் “ஓயர்” எனப்பட்ட ஒரு வேட்டுவ ஜாதியார் உளரென்றும், அப்பக்கத்துள்ள பாளையக்காரரிற் பலர் இவ்வகுப்பைச் சார்ந்தவரே யென்றும் “வட ஆர்க்காட்டுமான்யூல்” தெரிவிக்கிறது. இங்ஙனம் ஓயர் வேட்டுவசாதியார் என்று சொல்லப்படுவதற்கேற்ப, சிறுபாணாற்றுள் நல்லியக்கோடனைக் “குறிஞ்சிக்கோமான்” என வழங்குதலும் கவனிக்கத் தக்கதாகும்.

௩. முத்தரசர்.

நாலடியாரில், “பெருமுத் தரையர் பெரிதுவந் தீயும்-கருனைச் சோறார்வர் கயவர்” எனவும், “நல்கூர்ந்தக் கண்ணும் பெருமுத்தரையரே, செல்வரைச் சென்றிரவா தார்” எனவும் வருவனவற்றால், முத்தரையர் என்ற வகுப்பார் தமிழ்நாட்டிற் கொடையுஞ் செல்வமுங் கொண்டுவிளங்கியவரென்பது தெரியும். செந்தமிழ் ௮-ம் தொகுதி, முதற்பகுதியில், ஸ்ரீமாந் கோபிநாதராயரவர்கள் (M.A.) எழுதிய “சில பழையபாடல்களும் அவற்றின் காலமும்” என்ற விஷயத்துக் கண்டசாஸனங்களாலும், இம்முத்தரையவமிசம் பாண்டிநாட்டைவென்று ஆண்டுவந்த செய்தி நன்குவிளங்குகின்றது. இப்பெயருடைய ஒரு

பெருவகுப்பாரும் வட ஆர்க்காட்டுப்பிரதேசத்தில் மிகுதியாகவுள்ளனர் என்று அறியப்படுகிறது. அங்கே அநேகவூர்கட்குத் "தலையாரி"களாயுள்ளவர் இவ்வகுப்பினரே. சித்தூர்ப் பாளயக்காரரிற் பெரும்பாலார் இக்கூட்டத்தவரே யென்றும், இவர் முற்காலத்தில் சிற்றரசர்களாயிருந்தனரென வரலாறுகூறுவரென்றும் ஷைமான்யுல் கூறும். இதனால், முன்னாளில் பாண்டிநாட்டையாண்ட இவர் அப்பக்கத்திருந்துவந்தவராதல் வேண்டுமென்று கருத இடமுண்டாகின்றது.

பத்திராசிரியர்.

பர்மாவிற் கண்ட ஒருதமிழ்ச் சாஸனம்.

1903-ம் ஆண்டில் பர்மா தேசத்துப் பாகான் (Pagan) என்ற நகர்க்கு ஒருமைல் தூரத்துள்ள மைன்-பாகன் (Main-Pagan) ஆலயத்துக் கல்லில் அமைந்த சாஸனமொன்று, ஷை பாகான் பட்டணத்திற் கண்டெடுக்கப் பட்டவிஷயம் "எபிகிராபிகா இன்டிகா" (Epigraphica Indica) என்ற பத்திரிகையின் ஏழாந்தொகுதி ஏழாம்பாகத்து ௧௯௭-ம் பக்கத்தில், டாக்டர்-ஹூல்ஷ் துரையவர்களால் வெளியிடப்பட்டுளது. இச்சாஸனத்தில், பாகானகரம் புக்கம் அல்லது அரிவட்டணபுரம் என்று காணப்படுகிறது. கல்யாணி சாஸனங்களிலும், இந்நகரம், புக்கம் (Pugama) அல்லது அரிவத்தனப்ரமென்று காணப்படுமென்பர். இச்சிலாசாஸனம், மலைநாட்டிலிருந்து சென்ற தமிழரொருவரால் அங்குள்ள விஷ்ணு கோயிலுக்குச் சிலதர்மஞ்செய்த செய்தியைக் குறிக்கின்றது. அத்தர்மஞ்செய்தவர் பெயர் இராயிரன் மகனான ஸ்ரீ குலசேகரநம்பி என்பது. இச்சாஸனமுகப்பில், ஸ்ரீ குலசேகரப்பெருமாள் அருளிச்செய்த முகுந்தமாலையின் ௫-வது சுலோகமான "நாஸ்தாதர்மே" என்பது வரையப்பட்டுள்ளது. இச்சாஸன எழுத்தைக் கொண்டு, அது கி. பி. 13-ம் நூற்றாண்டில் வரையப்பட்டதாதல் வேண்டுமென்று டாக்டர்- ஹூல்ஷ் துரையவர்கள் ஊகிக்கின்றனர். அச்சாஸனம் வருமாறு:—

சாஸநம்.

"𑌨𑌾𑌸𑍍𑌥𑌾 𑌧𑌰𑍍𑌮𑍇 𑌨 𑌵𑌸𑍁𑌨𑌿𑌚𑌯𑍇 𑌨𑍈𑌵 𑌕𑌾𑌮𑍋𑌪𑌭𑍋𑌗𑍇 𑌯𑌦𑍍𑌭𑌵𑍍𑌯𑌂 𑌤𑌦𑍍𑌭𑌵𑌤𑍁 𑌭𑌗𑌵𑌨𑍍 𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌾𑌨𑍁𑌰𑍂𑌪𑌮𑍍 । 𑌏𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑍍𑌯𑌂 𑌮𑌮 𑌬𑌹𑍁𑌮𑌤𑌂 𑌜𑌨𑍍𑌮𑌜𑌨𑍍𑌮𑌾𑌨𑍍𑌤𑌰𑍇𑌽𑌪𑌿 𑌤𑍍𑌵𑌤𑍍𑌪𑌾𑌦𑌾𑌮𑍍𑌭𑍋𑌰𑍁𑌹𑌯𑍁𑌗𑌗𑌤𑌾 𑌨𑌿𑌶𑍍𑌚𑌲𑌾 𑌭𑌕𑍍𑌤𑌿𑌰𑌸𑍍𑌤𑍁 ॥௫॥

"ஸ்வஸ்திஸ்ரீ. திருச்செல்வம் பெருக. புக்கமான அரிவட்டணபுரத்து நானாதேசி விண்ணகராழ்வார்கோயில் திருமண்டபஞ்செய்து திருக்கதவமிட்டு இந்த மண்டபத்துக்கு நின்றெரிகைக்கு நிலைவிளக்கொன்றும் இட்டேன். மலைமண்டலநாட்டு மகோதையார்ப் *பட்டணத்து இராயிரன் சிறியனான சி. குலசேகரநம்பியேன். இது சிரி. இதன்மம் மலைமண்டலத்தான்"—என்பது.

இவ்விஷயம், முற்காலத்தே தமிழ்மக்கள் அந்நியதேசங்கட்குச் சென்று புகழொடுவாழ்ந்த செய்திக்குத் தக்க சான்றாகும். மணிமேகலையால், பழையதமிழ்மக்கள் சாவகம் (Java) முதலிய தீபாந்தரங்களுடன் பெருந்தொடர்புடையவர்களாயிருந்தமை போலவே, அதன்பிற்காலத்தும் நிகழ்ந்து வந்ததென்பது இதனால் விளங்குகின்றது.

பத்திராசிரியர்.

கரிவாயு.

"ஜனவிநோதினி."

சென்ற நூற்றாண்டின் முதலிலே சீமையில் ஜான் கிளேடன் என்பவன் லாங்காஷயர் என்னும் மாகாணத்தில் ஓர் அகழி இருக்கக் கண்டான். அதில் தண்ணீர் - பிராந்தியென்னும் சாராயம் போலப் பொங்கிக்கொண்டு இருந்ததாகவும், வழிப்போக்கர் அநேகர் அதன்மேல் வைத்து அதன் சூட்டினால் போஜன பதார்த்தங்களைக் கூடச் சமைத்துக் கொண்டதாகவும் அவன் சொல்லியிருக்கிறான்.

---

* சேரநாட்டின் தலைநகராக விளங்கிய கொடுங்கோளூர்க்கு "மகோதை" என்னும் மறுபெயருண்டென்று பெரியபுராணத்துக் கழற்றறிவார் சரிதத்துக் காணப்படுகின்றது. இப்போது, கொடுங்கோளூர் (Cranganore) கொச்சி ஸம்ஸ்தானத்துள்ள ஒரு சிறிய கடற்றுறைப்பட்டினமாயுள்ளது.

அந்தத் தண்ணீர் அப்படி இருப்பதற்குக் காரணம் என்னவென்று அதைக்கண்டறியும்பொருட்டு, கிளேடன் அந்த அகழியில் குறுக்கே அணையிட்டு அங்கிருந்த நீரையெல்லாம் இறைத்து அதன்கீழ்ப் பூமியை வெட்டச்செய்தான். அரைகஜம் ஆழம் வெட்டிப் பார்த்தபோது அதன் கீழெல்லாம் முற்றும் கரியாயிருந்தது. அந்தப் பள்ளத்திற்குள் ஒருவிளக்கைக் கொளுத்திக்கொண்டு போகையில் அதற்குள் இருந்த வாயுவில் தீப்பற்றிக்கொள்ள அப்படியேவிடாமல் எரிய ஆரம்பித்தது. அதுகண்டு அவன் அப்படியே எரியத்தக்க வாயுவும் அதன் அடியில் இருக்கின்ற கரியும் ஏதோ ஒருவகையில் ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்டிருக்கின்றன என்று தெரிந்து, அதன் உண்மையைக் கண்டறியும்பொருட்டு அந்தக் கரிகளில் கொஞ்சம் எடுத்து ஒரு பாத்திரத்தில் இட்டு எரித்து வடிக்கப்பார்த்தான். முதலில் அதினின்றும் ஒருவகைக் கட்டியான பொருள்வடிந்ததாயினும் பிறகு கருப்பான தைலம் உண்டாகிக் கடைசியில் ஒருவகை ஆவியெழுந்தது. அந்த ஆவியை எவ்விதத்திலும் இறுகச்செய்ய அவனால் கூடவில்லை. அந்த ஆவி தாரையாய்க் கிளம்பும்போது எரிகிற ஒரு விளக்கை அதன்மேற் படும்படி பிடிக்க, அவ்வாவி உடனே பற்றிக்கொண்டு வெகு வேகமாய் எரிய ஆரம்பித்தது.

பின்பு அந்த ஆவியில் ஏதாவது கொஞ்சம் சேகரித்துவைத்துக் கொள்ளக்கூடுமாவென்று கண்டறியும்பொருட்டு கிளேடன் புகை கிளம்பும் பாத்திரத்தின்மேல் சரியாகப் புகைபோக்கி ஒன்று அமைத்து, அதன் நுனியில் உள்ளே ஒன்றுமில்லாத ஒரு தோற்பையைப் பொருத்தினான். அந்த ஆவி அதனுள் ஏறஏற அந்தப் பை அதனால் நிறைந்து உப்பிப்போயிற்று. இவ்விதமாய் அதன் ஆவியெல்லாம் அந்தப்பைக்குள் சேர்ந்தபிறகு, மறுபடி அதை இறுகச்செய்யும்படி பலவகையாலும் முயன்றான். ஆயினும் அந்த முயற்சிமட்டும் ஒன்றும் கைகூடிவரவில்லை.

பின்பு அதைப்பற்றி அவன் சொல்லியதாவது;—‘சிநேகிதர்களையும் மற்றவர்களையும் விநோதப்படுத்தவேண்டும் என்று நான் அடிக்கடி அந்த ஆவியடங்கிய பைகளில் ஒன்றை எடுத்து அதில் ஊசியால் சிறிய துவாரம் ஒன்று செய்து அந்தத் துவாரத்தின்வழியாய் அதனுள் தீப்பற்றும்படி அதை ஒரு விளக்குக்கு நேராகப் பிடிப்பேன். உடனே அதனுள் இருக்கும் ஆவி பற்றிக்கொண்டு அது எல்லாம் ஆகுமளவும் அப்படியே ஓயாமல் எரிந்து கொண்டிருக்கும். அதைக் கண்டவர்களெல்லாம் அதிசயப்படுவார்கள். ஏனெனில், சதாரணமான வாயு அடைந்த பைகளுக்கும் இதற்கும் யாதொருவிசேஷமும் இல்லையே; அப்படியிருக்க இதில்மாத்திரம் தீப்பற்றி எரிவதற்கு ஹேதுவென்னவென்று அனைவரும் அதிசயிப்பார்கள். இவ்விதமாய்ச் சாதாரணமான வாயு அடர்ந்த பைகளுக்கும் இந்தப் பைக்கும் உள்ள பேதம் எவர்க்கும் தெரியாமலே இருந்தது” என்று சொல்லியிருக்கிறான்.

இவ்விதமாகக் கரிவாயு கண்டுபிடிக்கப்பட்டது. இப்படி ஆதியில் கிளேடன் தன் இஷ்டர்களை விநோதப்படுத்தும்படி இரண்டொரு பைகளைக் கரிவாயுவால் நிரப்புவதற்குச் செய்த வியாபாரந்தான், இப்போது இங்கிலாந்து முதலிய தேசங்களில் விசேஷமாய்த் தீபாலங்காரங்கள் செய்யவும் அடுப்பெரிக்கவும் சாதனமான அளவற்ற கருவிகள் செய்வதற்கு உபயோகமாகின்றது.

இவ்விதமாக முதலிற் கரிவாயு கண்டுபிடித்து இப்போது நூற்றெழுபத்துமூன்று வருஷமாகின்றது. அது கண்டுபிடித்து ஐம்பது அறுபது வருஷத்திற்குப் பிறகுதான் அது தீபாலங்காரம் செய்வதற்கு ஏற்ற கருவியாக எங்கும் வழங்கலாயிற்று. அருமையாய்க் கண்டுபிடிக்கப்பட்ட இந்தப்பொருளை உபயோகத்திற்குக் கொண்டுவர அத்தனைகாலம் தாமதித்தற்குப்பல காரணங்கள் சொல்லுகின்றனர். கிளேடன் கண்டுபிடித்த விஷயத்தின்மேல் பலபரிசோதனைகள் செய்தார்களாயினும், அவையெல்லாம் தத்துவத்தைப்பற்றியவையாகவே இருந்தன. கிளேடனாயினும் அவன் காலத்திலிருந்த மற்றவர்களாயினும் புதிதாய்க் கண்டுபிடிக்கப்பட்ட அந்த வாயுவைத் தீபாலங்காரம்செய்ய உபயோகப்படுத்தக்கூடுமென்று எண்ணம் கொண்டதாகக் கூடத் தோன்றவில்லை. 1792-௵த்திலேதான் முதலில் அப்படி உபயோகிக்கலாயிற்று. அந்த வருஷத்தில் அப்போது காரன்வால் மாகாணத்தில் வாசஞ்செய்துகொண்டிருந்த ஸ்காத்லாந்து தேசத்தவரான உவில்லியம் மர்டாக்கு என்பவர் அதை உபயோகப்படுத்தினா

ரெனக் கரிவாயு தீபாலங்கார சரித்திரத்தில்பிரசித்தமாயிருக்கின்றது. அதனால் கிளேடன் கண்டுபிடித்த உண்மையை உபயோகத்திற்குக் கொண்டுவந்ததனாலாகிப் பெருமை அவருடையதாகவே இருக்கின்றது. அந்த மர்டாக்கு தாமே செய்துகொண்ட ஒருகருவியாலுண்டாக்கிய கரிவாயுவால் முதலில் தன் வீட்டுக்கும் உத்தியோகசாலைக்கும் தீபாலங்காரம்செய்தார். பிறகு இரண்டு மூன்று வருஷம் கழித்து அவர் ஸ்காத்துலாந்துக்குப்போய் அங்கே காரன்வாரில் செய்தவிதமாகவே கரிவாயு உண்டுபண்ணி அதை விளக்கேற்ற உபயோகப்படுத்தினார். இவ்விதமாக, விசேஷமாகப் பரவாமலிருந்தாலும், கரிவாயு தீபாலங்காரத்துக்கு ஏற்ற கருவியென நன்றாக நிரூபிக்கலாயிற்று. ஆயினும் 1798-௵த்திலேதான் இங்கிலாந்து முதலிய இடங்களில் அதற்குமுன் வழங்கிவந்த எண்ணெய் விளக்கு முதலியவைகளுக்குப் பிரதி வர்த்தக வியாபாரங்களிலும் கரிவாயுவிளக்கு வழங்கலாயிற்று. ஆனால் அப்போது அருமையாயிருந்ததேயொழிய அதிக மில்லை.

1805-௵த்தில் யந்திரசாலைமுதலிய இடங்களில் வாயுதீபம் வழங்கலாயிற்று. 1809-௵த்தில் சீமையிலே சிலர் கூடி "கரிவாயு விளக்குச் சங்கம்" என ஒருசங்கம் சேருவதற்குச் சாஸனம் அளிக்கும்படி பார்லிமெண்டு சபைக்கு விண்ணப்பம் செய்துகொள்ள, மறு வருஷத்தில் அப்படியே செய்துகொள்ளும்படி உத்தரவாயிற்று. புதிதாய் ஏற்பட்ட அந்தச் சங்கத்தார்க்குப் பார்லிமெண்டு சபையார் உத்தரவு கிடைத்தாலும்,ஜனங்களாற் பலவிரோதங்கள் உண்டாயின. காற்றைப்பிடித்துக் கடத்தில் அடைப்பது என்பது போலக் காற்றினால் தீபாலங்காரம் செய்கிறதென்பது ஆகாயத்தில் கோட்டை கட்டுவதுபோலும் என்று சொல்லிப் பலர் இகழ்ந்தார்கள். ஒன்றும் தெரியாதவர்கள் மாத்திரமேயல்ல: எல்லாம் அறிந்த பண்டிதர்களும் பலர் இகழ்ந்தார்கள்.

ஒரு பண்டிதர் இந்தக் கரிவாயு அடங்கும் கருவியை ஸெண்டு பால்ஸ் என்னும் ஆலயத்தின் கோபுரத்தளவு பெரிதாகச் செய்ய நினைத்திருக்கிறார்களோ என்று இகழ்ந்தார். ஆயினும் அந்தச்செய்தியைக் கேள்விப்பட்ட ஒருசிற்பிமட்டும் அதைப்பற்றி நல்ல அபிப்பிராயப்பட்டு, இப்போது இது யாவரும் இகழத்தக்கதாயிருந்தாலும் சீக்கிரமே நாமெல்லாம் ஆச்சரியப்படும்படியான ஸ்திதிக்கு வரும்; இந்தக் கரிவாயுகொள்ளும் கருவி ஸெண்டுபால்ஸ் என்னும் ஆலயத்தின் கோபுரத்தளவேயல்ல, இன்னும் பெரிதாகவும் இருக்க நாம் காணப்போகிறோம் என்றார். ஆயினும் அக்காலத்தில் அவர் அப்படிச் சொன்னதை அதிவாதமாகப் புகழ்ந்துபேசுவதாக நினைத்தார்கள். கடைசியில் அது வாஸ்தவமென்றே நிரூபிக்கலாயிற்று. ஸெண்டு பால்ஸ் என்னும் ஆலயத்துக் கோபுரத்தின் குறுக்கு அளவு 145 அடி. இப்போது 200 அடி குறுக்களவுள்ள கரிவாயுக்கூடு கூட ஒன்று இருக்கிறது.

இவ்வளவு விரோதங்கள் இருந்தும் அவற்றையெல்லாம் எதிர்த்துக்கொண்டு புதிதாக ஏற்பட்ட கரிவாயுச் சங்கத்தார் இதற்கு இடையிலே போய்க் கரிவாயு தேடிக்கொண்டுவந்து, எப்படியாவது ஜனங்கள் அதை நம்பி அங்கீகரித்தாற்போதுமென்று பல வீடுகளுக்கும் வர்த்தகசாலைகளுக்கும் அநேகம் கரிவாயுக்கூடுகள் இனாமாய்க் கொடுத்தார்கள். இப்படியே இரண்டு வருஷகாலம் நடந்துவரவே, அதற்கு இருந்த இடையூறுகளெல்லாம் மெல்லமெல்ல ஒவ்வொன்றாய் அநேகமாக வெல்லப்பட்டன. ஆயின் அதற்கு இருந்த இடையூறுகள் அற்பசொற்பங்கள் அல்ல; முதலாவது, ஒருகாரணமுமின்றி அதைப்பற்றி அனைவர்க்கும் திடமான தப்பெண்ணம் ஒன்று உண்டாயிருந்தது. சாதாரணமான ஜனங்களுக்குமாத்திரமேயன்று; சாஸ்திர விஷயங்களில் நன்றாய்த் தேர்ந்த பண்டிதர்களுக்கும் பிடிவாதம் இருந்தது. இரண்டாவது, சரக்குகளுக்காக உத்தரவாதம் செய்கிற சங்கத்தார் (Insurance companies) பலவிதமாய் ஆக்ஷேபித்தார்கள். ஆயின் அவற்றுள் ஒன்று மிகவும் அற்பமானது. அந்தக் காற்று எரியும் கருவி தற்செயலாய் ஒருவேளை வெடித்துப்போமானால் அதனால் என்னகெடுதி விளையுமோ என்னும் ஆக்ஷேபத்துக்குச் சமாதானமாக, அதற்கே உரித்தாய் மிகவும் உறுதியான ஒருவகை எரிகருவி அமைக்கும்படி ஏற்படுத்தலாயிற்று. ஆயினும் அதைப் பின்பு ஒருபோதும் உபயோகப்படுத்தவில்லை.

சரக்கு உத்தரவாத் சங்கத்தார் செய்த ஆக்ஷேபத்தை அநுசரித்துத் துரைத்தனத்தாரும் அவ்விஷயத்தில் தலையிட்டுக்கொண்டா

ர்கள். அவர்கள் ஆக்ஷேபிக்கின்றபடி எவர்க்கும் தெரியாமல் இந்த வாயுதீபத்தில் ஏதாவது ஒரு கெடுதி இருக்கின்றதோ என்னவோவெனத் துரைத்தனத்தாரும் சந்தேகங்கொண்டு, அதற்காகச் சில கனவான்களை நியமித்து, அந்தக் கரிவாயு தீபசங்கத்தார் வேலைசெய்யும் இடத்துக்குச் சென்று அவர்கள் வேலை செய்யும் முறைகளை நுட்பமாய்க் கண்டுபிடித்துத் தெரிவிக்கும்படி அனுப்பினார்கள். அதன்காரியம் எப்படியாயிற்றெனில், கரிவாயுகொள்ளும் கருவி சிறிதாகவே செய்யவேண்டுமென்றும், செய்தபிறகு மிகவும் உறுதியான கட்டிடத்துக்குள்ளேயே அவற்றை வைத்திருக்கவேண்டுமென்றும் அந்தச் சங்கத்தாரை நிர்ப்பந்திக்கும்படியாக அதைப்போய்ப் பார்த்தவர்கள் துரைத்தனத்தாருக்கு அறிக்கைசெய்தார்கள்.

கரிவாயுகொள்ளும் கருவி மிகச் சிறியவைகளாகவே செய்யவேண்டுமென்று அவர்கள் அறிக்கைசெய்ததற்கு யாதுநிமித்தமெனில், ஒருவேளை அந்தக் கருவிகள் வெடிக்கும்; அவை மிகப் பெரியவையாயிருக்குமாயின் அப்போது அவற்றால் அதிக அபாயம் நேரிடுமென்பதேயாம். அதன் உண்மை யென்னவெனில், அந்தக் கரிவாயுப்பைக்குள் ஒரு விளக்கை வைப்போமானால், அது அந்தவாயுவையும் பற்றவிடாமல் தானும் உடனே அணைந்துபோம்; ஏனெனில் வெளியிலுள்ள சாதாரணமான வாயுவினுடைய சம்பந்தம் இல்லாவிட்டால் அந்தவாயுவில் தீ பற்றவே பற்றாது. அப்படியிருக்க வெடிக்குமென்கிற வார்த்தைக்கு இடம் ஏது? கரிவாயுப் பைகளில் அடங்கியிருப்பது மற்றொன்றோடும் கலவாத சுத்தமான கரிவாயுவேயொழிய, வெடிக்கும் தன்மையையுடைய கரிவாயு, வெளியிலுள்ள சாதாரணமானவாயு இவைகளின் கலப்பன்று. ஆதலால் ஒருபோதும் அது சிறிதும்வெடிக்கத்தக்கதன்று. ஆயினும் அந்த ஆதிகாலத்தில் கரிவாயுவின் தன்மை இப்படிப்பட்டதென்று இப்போது தெரிந்திருப்பதுபோலச் செம்மையாய்த் தெரியாதாகலின், அதைப்போய்ப்பார்த்துவந்தவர்கள் அது வெடிக்கத்தக்கதென்று அறிவித்ததை நாம் அவர்கள்மேல் ஒரு குற்றமாக நினைப்பது நியாயமன்று. கரிவாயுப் பைகளை மிகவும் உறுதியான ஒரு கட்டிடத்துக்குள்ளேயே அமைத்துவைக்கவேண்டுமென்று சொன்ன மற்றொரு ஆக்ஷேபமாத்திரம் முற்றும் பிழையானது. ஏனெனில், கரிவாயுப் பைகள் வெடிக்கும் தன்

மையற்றவையாயின் அந்தக்கட்டிடங்கள் அவசிமேயில்லை. உள்ளவையாயின், அப்போது அந்தக் கட்டடம், அது வெடிக்காமலிருப்பதற்குச் சிறிதும் ஆதாரமாகாதிருப்பதோடுகூட, வெடிப்பதனாலாகும் கெடுதியைப் பத்துப்பங்கு அதிகமாய்ச் செய்விக்கும். இதைப்பற்றிக்கரிவாயுச் சங்கத்தார் எவ்வளவு நியாயங்கள் எடுத்துச்சொல்லி மறுமொழிகூறியும் ஒன்றும் பயன்படாமற் போனதினால் தீராப்பொறியாய், சிறிதும் உபயோகமில்லாததும், மிகுந்த செலவுசெய்து முடிக்கத்தக்கதுமான கட்டிடங்களை அவர்கள் கட்டும்படியாக நேரிட்டது.

ஆயினும் அப்போதுமவர்களுடைய சங்கடம்நீங்கவில்லை. எல்லாம்சமாதானமாக நடந்துவருங்காலத்தில், 1814௵ ஜூன்௴ இந்தப்புதிய விளக்குகளால் யாவரும் களிக்கும்படி தீபாலங்காரமகோற்சவம் நடத்தவேண்டுமென்று ஆலோசிக்கலாயிற்று. அதற்காகத் துரைத்தனத்தாருடைய உத்தரவின்படி ஸெண்டு ஜேம்ஸ் பார்க்கு என்னுமிடத்தில் மரத்தினால் மிகப்பெரிதான ஒரு கட்டிடங்கட்டி அதற்குள் பதினாயிரத்துக்கும் அதிகமான கரிவாயு விளக்குக்கூடுகள் அமைத்து அவையெல்லாவற்றிற்கும் ஒன்றிலிருந்துமற்றொன்றுக்கு நெருப்புப்பற்றிக்கொள்ளும்படி விசித்திரமான ஓர் ஏற்பாடுசெய்தார்கள். அதன்படியே முதலில் ஒரு விளக்குக் கூட்டிலே விளக்கொளியைக் காட்ட, இந்தப்பதினாயிரம் விளக்குக்களும் உடனே பற்றிக்கொண்டு ஏறக்குறைய எண்பது அடி உயரமுள்ள அந்தக்கட்டிடம் முழுதும் மிகப் பெரியதோர் சோதிமண்டலம்போலத் தோன்றியது. அதனழகைக் கண்டு அனைவரும் அதிசயித்தார்கள். இப்படி முதனாள் இராத்திரி தீபாலங்காரமகோற்சவம் எவ்விதமான கெடுதியுமின்றிச் செம்மையாகவே நடந்தேறிற்றாயினும், மறுநாள் இராத்திரி அதன் விசாரணைத்தலைவர்களுள் ஒருவன், அதன் சிற்பத்தலைவன் சொன்ன புத்தியைக் கேளாமல், தீபாலங்காரம் நடப்பதற்குமுன் அந்தக்கட்டிடத்துக்குள் சில வாணவேடிக்கைகள் நடத்தும்படி உத்தரவு செய்தான். அதனால் கரிவாயுதீபங்கள் பற்றுவதற்கு முன்னமே அந்த மரக்கட்டிடம் முழுதும் பற்றிக்கொண்டு எரிந்து போயிற்று. ஆயினும் கரிவாயுவினாலேயே அந்தக்கட்டிடம் பற்றியெரிந்துபோனதாக எங்கும் பிரசித்தமாக அதையே எவரும் நம்பினார்கள். இது

இப்படிக் கொஞ்சம் தலையெடுத்த கரிவாயு தீபாலங்காரத்துக்கு மற்றொரு தடையாக நேரிட்டு. அதை விருத்தியாகவொட்டாமல் மறுத்தது. ஆனாலும் அதனோடு அது அடங்கிப்போகவில்லை. மறுவருஷத்தில் அதற்குக் கொஞ்சம் ஆதாரம் உண்டாகி இரண்டொரு சபா மண்டபங்களுக்குக் கரிவாயுவால் தீபாலங்காரம் செய்யப்பட்டது. அது தொடங்கி கரிவாயுதீபம் மேன்மேலும் விருத்தியடைந்து இரண்டொரு வருஷத்தில் வீதிகளிலும் எண்ணெய் விளக்குகளுக்குப் பிரதியாக வழங்கும்படியாயிற்று.

இப்போது கரிவாயுதீபம் முழுதும் விசேஷமாய்ப் பரவவில்லையாயினும் நன்றாகநிலைபெற்றிருக்கின்றது. லண்டன்நகரத்தின்தெருக்களிலே முன்னிருந்த எண்ணெய் விளக்குக்கள் போய் அவற்றிற்குப் பிரதியாக இதுவே கொஞ்சங்கொஞ்சமாகப்பரவலாயிற்று; அநேகவிடங்களில் சபாமண்டபங்களுக்கு அலங்காரம் செய்வதற்கு மிகவும் ஏற்ற கருவியாயிற்று; அதற்குப் பிறகு மேன்மேலும் விசேஷமாய்ப் பரவிப் பிரசித்தமான பலவிடங்களிலும் வழங்கலாயிற்று. பலவிடங்களிலும் கரிவாயுச்செய்ய ஆரம்பித்தார்கள். இப்படியாகக் கடைசியில் கரிவாயு ஜனங்களுக்கு மிகவும் நயமும் பத்திரமும் தெளிவும் அதிக காந்தியுமுள்ள ஓர் விளக்கெரிகருவியாய் எங்கும் பிரசித்தமாயிற்று.

இப்போது எவர்க்கும் உபயோகமான இந்தக் கரிவாயுவை உற்பத்திசெய்யும் வழியை யோசித்தால், அதன்முக்கியமான வியாபாரமானது, ஆதியில் கிளேட்டன், தன்சினேகிதர்களைக் களிக்கச்செய்ய வாயுவிளக்கு ஏற்றும்படி கொஞ்சம் கரியை ஒரு மூடிய பாத்திரத்தில் எரித்து ஆவியாக்கிய மாதிரியாயிருக்கிறதேயொழிய வேறன்று. அம்மாதிரியாகத்தான் இப்போதுந் தினந்தோறும் அநேகமாயிரம் பாரம் கரியை எரித்து ஆவியாக்குகிறார்கள்.

கரிவாயு உற்பத்திசெய்ய முக்கியமாய் வேண்டியவியாபாரங்கள் இரண்டு. அவற்றுள் முதலாவது கரியைக் காய்ச்சிவடிப்பது. இரண்டாவது அதைச் சுத்திசெய்வது.

முதலாவதான கரியைக் காய்ச்சி வடிக்கிறசெய்கை எப்படியெனில், அதற்கென்று செய்த மிகப்பெரிதான இருப்புச்சால் அல்லது களிமண் பாத்திரத்தில் கரிகளைப்போட்டுக் காய்ச்சவேண்டும். வெளியிலே கரியைக் காய்ச்சுவோமானால் அதிகமாய்ச்சூடும் ஒளியும் உண்டாகிக் கரியெல்லாம் எரிந்து சாம்பலாய்ப்போமென்பது நமக்கெல்லாம் நன்றாய்த் தெரியுமே. அதேவிதமாய்க் கரியைக் கொளுத்திக் கரிவாயு உற்பத்திசெய்ய முடியாது. கரியை வெளியே கொளுத்தாமல், இருப்புப்பாத்திரமோ மட்பாத்திரமோ, காற்று உள்ளே புகாமல் முழுதும் நன்றாய் மூடப்பட்ட ஒரு பெரிய பாத்திரத்தில் இட்டு எரித்தால், பற்றியெரியத்தக்கதான கரிவாயு விசேஷமாய் உற்பத்தியாகும். இப்படிக் கரியைப் பாத்திரத்திலிட்டு எரிப்பதுதான் கரிவாயு உற்பத்திசெய்யும் வியாபாரங்களுள் முதலாவது. இதற்குக் கரியைக் காய்ச்சி வடிப்பது என்று பெயர்.

இதைத்தெளிவாகக் காட்டச் சுலபமான திருஷ்டாந்தமொன்று உண்டு. களிமண்ணால் செய்த ஒரு சிறு புகைச்சுருட்டுக்குழாயின் மத்தியில் சிறு சிறு கரிக்கட்டிகளைப் போட்டு அதில்வெளிக்காற்றுப் படாதபடி மேலே மூடிவிட்டு நெருப்பைப்போட்டு எரித்தால் சிறிதுநேரத்தில் அதினின்றும் புகைகிளம்பி வாயு வடியத்துவக்கும். பிறகு அந்த வாயுவில் படும்படி விளக்கைக் காட்டினால் அது பற்றிக்கொண்டு அந்தக்குழாய்க்குள் கரியிருக்கிறவரையில் எரிந்து கொண்டிருக்கும்.

இப்படிச் சிறுகக்காணும் திருஷ்டாந்தப்படியேதான் பெருகப் பெரியபாத்திரங்களில் அநேகமாயிரம் பாரம் கரிகளைப்போட்டுக் கரிவாயு வடிக்கப்படுகின்றது. அஃதெப்படியெனில், செங்கல்லினால் அதற்கேற்றபடி வேண்டுமென்ற அமைத்த ஓர் உலைக்கூடத்தில் ஒரு பெரிய பாத்திரத்தையிட்டு அதற்குத் தகுமளவு சூடேற்றி வடிப்பார்கள். அந்தப் பாத்திரம் சுமார் எட்டு அடி நீளமும் ஒன்றரை அடி அகலமுமுள்ளதாய் ஒருமுனை நன்றாய்மூடப்பட்டு மற்றொரு முனையில் திறந்திருக்கும் ஒரு குழாய். திறந்திருக்கும் பக்கத்தில் சரியாய்ப் பொருந்திய கதவொன்றிருக்கிறது. அதனால் அதை அடைத்து வைப்பார்கள். அம்முனையையடுத்து அந்தக் குழாயின் மேற்புறத்தில் ஒருதுவாரமுண்டு. பாத்திரத்திலுண்டாகும் ஆவி வெளியெழுந்துபோம்படி அந்தத் துவாரத்தில் ஒரு சிறு குழாய் பொருத்தப்

பட்டிருக்கின்றது. பெரியபாத்திரத்தை உலைக்களத்தில் இட்டு நன்றாய்க் காய்ச்சி அதற்குள் நிரம்பக் கரியை உடைத்துப்போட்டுக் கதவை மூடிவிட்டால், அந்தக் கரியெல்லாம் எரிந்து ஆவியாக் கிளம்ப ஆரம்பிக்கும். அந்த ஆவிக்கு, அப்புறம்போக வேறுவழி கிடையாதாதலால், அதன் மேற்புறத்திலுள்ள குழாயின்வழியாய் எழுந்து அக்குழாயின் மற்றொரு நுனியோடு பொருந்திய ஒரு பெரிய பாத்திரத்தில்சேரும். இப்போது அந்த வாயு சுத்தமானதல்ல. பிறகு அதை வேறு பல கருவிகளிற் செலுத்தி வெவ்வேறு வகையாய்ச் சுத்திசெய்து கடைசியில் கரிவாயுப் பையில்கொண்டு அடைத்து உபயோகத்திற்கு வைத்துக்கொள்வார்கள்.

சாதாரணமாய்ச் செய்யப்படுகிறபடி கரிவாயு ஓர் இயற்கைப் பொருளல்ல; நாலைந்து பொருள்கள் சேர்ந்து உண்டான செயற்கைப் பொருள். அவற்றுள் முக்கிய உபயோகமானவை இரண்டு: அவை ஜலவாயுவும் (Hydrogen) கட்டை, கரி இவற்றின் சுவரூபமான கரிப்பொருளும் (Carbon) ஆம். இவ்விரண்டுபொருளும் ஒன்றுக்கொன்று முற்றும் வேறானவை. தனித்தனி ஒன்றும்நன்றாய் எரியத் தகுந்ததன்று; ஆயினும் இவ்விரண்டும் சேர்வதனால் அந்த விசித்திரமான குணம் உண்டாகின்றது.

கரிவாயுவில் சேர்ந்த இவ்விரண்டு பொருளும் தனித்தனி செய்கிற செய்கை என்னவென்று பார்ப்போம். ஜலவாயு எளிதில் நெருப்புப் பற்றத்தக்க பொருள்; ஆயினும் அதன் ஜ்வாலை அத்தனை பிரகாசமாயிருப்பதில்லை. ஆதலால் அதுமாத்திரம் தனியே தீபாலங்காரங்களுக்கு உபயோகமானதன்று. கரிப்பொருள் அதைப்போலச் சீக்கிரத்தில் தீப்பற்றத்தக்கதல்ல; ஆயினும் தகுமளவு காய்ச்சிச் சூடேற்றினால், பிறகு அது பற்றிக்கொண்டு அதிகபிரகாசமாய் எரியும். கரிவாயு எரியும்பொழுது இவ்விரண்டு செய்கையும் நடந்தேறுகின்றனவென்றே நாம் உணரவேண்டும். ஜலவாயு சீக்கிரம் தீப்பற்றுகிற பொருளாதலின் உடனே அதில் தீஅண்டிக்கொள்ள, அதின் உஷ்ணத்தினால் கரிப்பொருளுக்கு நன்றாய்ச் சூடேறி அதுவும் பற்றிக்கொண்டு மிகப்பிரகாசமான ஒளி கொடுக்கின்றது.

கரிவாயு எரியும்பொழுது அதனால் உண்டாகும் பிரகாசத்தின் அளவு அந்தந்த வாயுவின் தன்மைக்கேற்றபடி வெவ்வேறளவாயிருக்கும். இவ்வாயுவின் தன்மை அதை உண்டாக்குவதற்குரிய செய்கையின் வித்தியாசத்தால் சிறிதளவு வேற்றுமைப்படுமாயினும், அதற்கு முதற்பொருளான கரியின் தன்மைக்கேற்றபடி வெகுவாக வேற்றுமைப்படும். இவ்விதமாக இங்கிலாந்துக் கரியினாலேயே முக்கியமாய்ச் செய்யப்படுகின்ற லண்டன் நகரத்து வாயுவானது பதினைந்து கொழுப்புவர்த்திக்குச் சரியான வெளிச்சம் தருகின்றது. ஸ்காத்லாந்திலுள்ள மிகச் சிறந்த கரியினால் செய்யப்படுகின்ற எடிம்பரோ நகரத்துக் கரிவாயுவோ, லண்டன் நகரத்துக் கரிவாயுவைப்போல இரட்டிப்பான ஒளி கொடுக்கின்றது; அதாவது முப்பது கொழுப்புவர்த்திக்குச் சரியான ஒளி தருகின்றது. இதை வெகு நுட்பமாய்ப் பரீக்ஷித்துக் கண்டறிந்திருக்கிறார்கள்.

இந்தக்கரிவாயுவின்உபயோகங்களையோசிக்கையில், தீபாலங்காரத்துக்கு ஏற்ற கருவியாய் இது செய்கிற உதவி மிகவும் அதிகமாயிருக்கின்றது. இந்த வாயு உடனே காரியத்துக்கு உபயோகப்படுவதும் மிகவும் அனுகூலமானதுமாயிருப்பதோடுகூட, செம்மையாய் உபயோகித்தால் அபாயமற்றதுமாயிருக்கிறது. நன்றாய் யோசித்துப் பார்த்தால் இப்போது நமக்குத் தெரிந்தவரையில் இவ்வளவு நயமான சிறந்த தீபக்கருவி இந்தக் கரிவாயுவைத்தவிரவேறில்லை.

இஃது இப்படியிருக்க, இதினும் சிறந்த மின்னொளி விளக்கு (Electric light) இப்போது உண்டாயிருக்கக் கண்டிருக்கிறோம்; 1879௵த்தில்,இனி இந்தக்கரிவாயுவுக்குப் பிரதியாக மின்னொளியே தீபாலங்காரக் கருவியாக வழங்கலாகுமென்ற ஓர் அறிக்கையைக் கேட்டு லண்டன் நகரத்திலுள்ள சிலகரிவாயுச் சங்கங்களின் கையொப்பக்காரர்கள் மிகவும் அச்சமுற்றார்கள்; ஆயினும் அந்த அறிக்கை சரியானதல்ல. இதுவன்றி அம்மின்னொளிவிளக்கு நயமாய் அகப்பட்டுக்கொண்டிருக்கிறவரையில் கரிவாயுவை மின்னொளி அதிகரிக்காதென்று உறுதியாய்ச்சொல்லலாம். மின்னொளியே இப்படியாகும்போது அதிகமாய் ஒளிகொடுக்கும் விஷயத்தில் கரிவாயுவுக்குப் போட்டியாக வரத்தக்கது வேறென்ன இருக்கிறது.

சௌக்கியத்தைப்பற்றி யோசித்தாலோ, அந்த விஷயத்திலும்கரிவாயுவுக்கு எதிர் ஒன்றுமில்லை. அடைப்புமூடியை வாங்கி அதற்குள்

ஒரு திரியைக்கொளுத்திக் காட்டுவதைப்பார்க்கிலும் சுலபமானது வேறென்ன? இந்தவருத்தங்கூட இல்லாமல் சுலபமாய்த்தீபமேற்றும்படி இப்போது புதிதாய் ஒருவகை மூடி கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது. அதனால் அந்தக் கருவியைத் திருப்பினால் உள்ளேயிருக்கின்ற வாயு வெளி வர வழியுண்டாவதுமன்றி அவ்வாயுவில் ஒளிபற்றும்படியாகவும் ஆகின்றது.

அபாயம் உண்டாகாதிருக்கும் விஷயத்தைப்பற்றி யோசித்தாலும், வாயுசம்பந்தமாய் எரியத்தக்க பொருள்களுள் இதற்குச்சரியானது ஒன்றுமில்லை. ஒவ்வொரு தருணங்களில் கரிவாயுதீபம் வெடித்து மிகுந்த அபாயமுண்டானதாய்க்கேள்விப்பட்டது மெய்யே; ஆயினும் அப்படிப்பட்ட அபாயம் முக்கியமாய் அஜாக்கிரதையால் வருவதேயன்றி வேறல்ல. வெடிப்பதற்கு முதற்கருவியான சாதாரண வாயுவோடு கலந்தாலன்றி, கரிவாயு தானே ஒருபோதும் வெடிக்காது. மேலும் கரிவாயுப்பைகள் வைத்திருக்கு மிடத்தில் எங்கேயாவது அதன் நாற்றம் சிறிதளவு வீசக்கண்டால், உடனே அந்தப்பைகளையெல்லாம் ஓர் அளவாக வைத்து, சிறிதளவு வெளிப்பட்டு நாற்றம் வீசின வாயு அப்புறம் ஓடிப்போம்படி அவ்விடத்தில்விளக்கேற்றுவதற்கு முன்னமே அங்குள்ள சாளரங்கள் கதவுகள் யாவையும் திறந்துவிடவேண்டும். அப்படியே ஜாக்கிரதையாக நடந்துவந்தால் கரிவாயு வெடிப்பதற்கு யாதொரு நிமித்தமும் இராது. முன்ஜாக்கிரதையாய் இந்தச் சொற்பகாரியம் செய்வதைவிட்டு, வாயு வெளிப்பட்டதென்று தெரிந்தவுடனே அநேகர் கைவிளக்கேற்றிக்கொண்டு மிகவும் அபாயத்திற்கேதுவாய் வெடிக்கத்தக்கதான கலப்புவாயு ஒதுங்கியிருக்கும் இடத்திற்குப் போகிறார்கள். அப்படிச் செய்தால் அதனால் கெடுதி விளைவதற்குக் கேட்பானேன்!

இப்படிக் கரிவாய வெளிச்சத்திற்கு ஆதாரமானபொருளாய் உபயோகப்படுவது மாத்திரமேயன்று; வைத்தியம் முதலிய சாஸ்திர விஷயமான காரியங்கள் செய்யப்படுகின்ற சாலைகளில் ரஸாயனத் தொழில் முதலிய காரியங்களுக்கு எரிக்கும் கருவியாகவும் அதிகமாய் உபயோகிக்கப்படும். இன்னும் இத்தரமான தொழிலாளிகளும் இவ்வாயுவை அடுப்பெரிப்பதற்கு ஏற்றகருவியாக் மிகவும்கொண்டாடுகிறார்கள்; சமயலுக்காக அடுப்பெரிக்கவும் அடிக்கடி உபயோகிப்பதுண்டு. விறகுக்குப் பிரதியாய் உபயோகிக்கும்போது புகை தூசி முதலியவை ஒன்றுமில்லாதிருப்பதாலும், மிகத் தெளிவாய் எரிவதாலும் இக்காரியங்களுக்கெல்லாம் கரிவாயு கொண்டாடி ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. மேலும் எந்த நிமிஷத்தில் வேண்டுமோ அந்த நிமிஷத்தில் ஏற்றி எரித்துக்கொள்ளவும் வேண்டாத நிமிஷத்தில் திடீரென்று அணைத்துவிடவும் இது அத்தனை சுவாதீனமான பொருளாயிருப்பதனாலும், இவ்வாயுவுக்கு இத்தனை சிறப்பு உண்டாகின்றது.

கரிவாயு இப்படி வெளிச்சம் உஷ்ணம் இவ்விரண்டுக்கும் ஏற்ற கருவியாயிருப்பதுமாத்திரமேயல்ல; ஒரு பொருளை அசைத்தோட்டுவதற்கு வேண்டிய திறமையுடையதாயும் இருக்கின்றது. நீராவியந்திரங்களில் நடந்தேறுவதுபோல, வாயுயந்திரத்தின் மூலமாய்நாம் இதைக்கண்டறியலாம். இந்தக்கரிவாயுவுக்கு அப்படிப்பட்ட வல்லமை எப்படி உண்டென்பீர்களோ? இந்தவாயுவும் சாதாரணவாயுவும் ஒன்றாய்க்கலந்து அதிக பலம் பொருந்தி வெடிக்கின்றதல்லவா? அப்படி வெடிப்பதற்கு ஏதுவான வலிமையே யந்திரங்களை ஓட்டி வண்டிகளை இழுக்கவும் உபயோகப்படுகின்றது. கரிவாயுவாலாகிய யந்திரத்துக்கு நெருப்பும் தேவையில்லை, நீர்கொதிக்கும் கொப்பரையும் தேவையில்லை, புகையும் தேவையில்லை.

இவ்விதமாகக் கரிவாயு உண்டாவதற்குச் செய்யும்வியாபாரத்தினால், அதனோடுகூடவே இன்னம் இரண்டு மூன்று மிகவும் உபயோகமான பொருள்கள் உண்டாகின்றன. அவற்றுள் முக்கியமானவை சுட்டகரியும், நவச்சாரமும் (Ammonia), தார் என்கிற கீல் எண்ணெயுமாம். கூட்டகரியாவது, வாயுவெல்லாம் எழுந்துபோன பின்பு அடியில் மிகுந்திருப்பது; அது விசேஷமாய் அடுப்பெரிக்க உபயோகப்படுகிறது. நவச்சாரமென்பது வாயு எழும்போது இடையே உண்டாவது; அதுமிகவும் விலைபெற்றது. தார் என்பது மிகவும் முக்கியமானது. ஆதியில் அதை மிகவும் கெட்டபொருளென்றும் தொட்டால் கை அழுக்காகுமென்றும் நல்ல பொருள்களையெல்லாம் அழித்துவிடுகிறதென்றும் எண்ணியிருந்தார்கள். ஆயினும் மேன்மேலும் ஆராய்ச்சிசெய்ததில், அது மனிதர்களுக்குப் பலவிதத்திலும் உபயோகமான பொருளெனக் கண்டறியலாயிற்று. இத

னால் பலவகை வர்ணங்களும் உண்டாக்கப்படுகின்றன; மேலும் இது வீட்டுப் பொருள்கள் கெட்டுப்போகாதிருப்பதற்காக மேற்பூச்சுப் பூசுவது கெட்ட நாற்றங்களை நீக்குவதற்காக அங்கங்கேதடவுவது முதலாகப் பலவிதத்திலும் உபயோகப்படுகின்றது.

இவ்வகையாகக் கரிவாயு விசேஷமாய்ப் பிரஜைகளுக்கு உபயோகப்படுவதுமல்லாமல், தன்னோடுகூட இப்படிப்பட்ட பல பொருள்களையும் உண்டாக்கி உலகத்துக்கு மிகவும் நன்மைவிளைவிக்கின்றது.

கம்பநாடர் அருளிய

இராமாவதாரவுரை.

நாடிய பொருள்கை கூடு ஞானமும் புகழு முண்டாம்
வீடியல் வழியு மாக்கும் வேரியங் கமலை நோக்கு
நீடிய வரக்கர் சேனை நீறுபட் டழிய வாகை
சூடிய சிலையிராமன் றோள்வலி கூறு வோர்க்கே.

(இதனுரை) நாடியபொருள் - நாடப்பட்டனவாகிய கல்விப் பொருளும் செல்வப்பொருளும்; இவ்விரண்டனையுமே பொருளென்பதனாற் கருதினாரென்பது மேலிவற்றின் பயனாக ஞானமும் புகழுமுண்டாம் என்றதனானுய்த்துணரலாகும். கல்விப்பொருளான் ஞானமும் செல்வப்பொருளாற் புகழுமுண்டாம் என்க. பொருளைப் பெற்றுப் புகழெய்தாமலும், கல்வியைப்பெற்று ஞானமெய்தாமலும் வாளாகழியும் உயிர்கள் பலவாதலின் அவற்றை வேறுகூறினார்; "ஓங்குபுகழ் செய்யான்........பொருள் காத்திருப்பான்" (நாலடி) "கற்றவர் ஞானமின்றேற் காமத்தைக் கடக்கலாமோ" (இராமாவதாரம்) எனவருதலானுணர்க. கைகூடும் என்பது கால்சீத்தல் போல்வதோர்சொல். "திருவேறு தெள்ளியராதலும் வேறு" என்று கூறப்பட்ட இருவேறு நல்வினைப்பயன்களும் ஒருங்கே கைகூடும் என்றதாம். உண்டாம் என்றது, வித்தினின்று முளையுண்டாம் என்பதுபோல, அக்கைகூடிய பொருள்களினின்று இவைதோன்றலுணர்த்தி நின்றது. "ஞானிக்குமப்பயனில்லையேற் சிறுக நினைவதோர் நினைவுண்டாம் பின்னும் வீடில்லை." (திருவாய்மொழி) எனப் பெரியார் பணித்தலான் முன்னோதிய ஞானத்தானும் எய்தலாகாமையின் 'வீடியல் வழியுமாக்கும்' என வேறே கூறினார். மற்று "ஞானத்தால் வீடெனவே நாட்டு" என்பதுபோன்று வருவனவெல்லாம் பத்திவிசிட்ட ஞானத்தையே குறித்தனவாகும். "அன்பே தகளியா........ஞானச்சுடர் விளக்கேற்றினேன்" எனவும், "ஞானநற் சுடர்கொளீஇ.......அன்பினன்றியாழியானை யாவர்காணவல்லரே" எனவும் "இனியார் ஞானங்களாலெடுக்க லெழாத வெந்தாய்" எனவும்வருந் திருவாக்குகளானிதனுண்மை யுணர்க. "பத்தி ஞானத்தினுஞ் சிறந்தது" என்னுமதம்பற்றி "வீடியல் வழி" என்று பத்தியையே ஞானத்தின் மேற்பயனாகக் கூறினார். வீடியல்வழி-வீட்டிற்கியலுநெறி; "பத்திநெறி" என்பது வழக்கு. வேரியங்கமலைநோக்கு வீடியல் வழியுமாக்கும் என்க. "வேரிமாறாத பூமேலிருப்பாள் வினைதீர்க்குமே" "அதுவுமவனதின்னருளே" எனவருந் திருவாக்குகளையுட்கொண்டு கமலைநோக்கு அப்பத்திமையை யுண்டாக்குமென்றார். பிறசான்றோரும், அருட்சத்திநோக்கந் தம்பால் வீழ்தலையே தெய்வ வழிபாட்டிற்குக் காரணமாகக்கூறுப. "அவனருளாலே யவன்றாள் வணங்கி" என்பது அவர்க்கு மேற்கோள். இவ்விராமாயணம் பத்திசாத்திரமாதலான் அப்பத்தியையே முடிவுபேறாகவுரைத்தார். "படிகொண்ட கீர்த்தி யிராமாயணமெனும் பத்திவெள்ளம்" என்பது அமுதனார் திருவாக்கு. வேரி-தேன். நீடியவரக்கர் - அழிவில்லாத அரக்கர்; "நீடுவாழ்வார்" என்புழிப் பரிமேலழகருரைத்தவாறுணர்க. அரக்கருஞ் சேனையு நீறுபட்டழிய வாகைசூடிய சிலை - வென்றிமாலை சூடிய வில். "நீறுபட்டழிய" என்றது, * "நீறுபடவிலங்கை செற்றநேரே" என்ற தெய்வச்சடகோபர் திருவாக்கினையுட்கொண்டு கூறியதாம். "மசரதமனையவர் வரமும் வாழ்வுமோர், நிசரத கணைகளானீறு செய்யுமாந், தசரதன் மதலையா வருதும்" என்று வரமளித்ததனையு நோக்குக. "தென்னிலங்கையெரியெழச் செற்றவில்லியை" என்று அப்பெரியார் பணித்தலான் நீறுபட்டவாறுணர்ந்து கொள்க. சீராமமூர்த்தி திருச்சரத்

---

* ௭. ௬. ௭. திருவாய்மொழி.

தைச் "சுடுசரம்" * எனப்பலவிடத்துங் கூறுதலுங்காண்க. அரக்கரை வேறல் முழுமுதற்கேசர் பொருளன்றாதலின் வாகைசூடியது சிலையேயென்றார். சிலையிராமன்—பரசுராமன், அலராமன் இவரின் வேறு பிரித்துணரவைத்தது. "இராமன் றோள்வலி கூறுவோர்க்கு" என்றது "தென்னிலங்கை செற்றாய் திறல்போற்றி" என்ற திருவாக்கினையுட்கொண்டு கூறியதாம். "கற்பாரிராமபிரானையல்லான் மற்றுங்கற்பரோ" எனவும், "நிற்கின்ற செல்வம் வேண்டி நெறிநின்ற வுயிர்களெல்லாங், கற்கின்றதிவன்றன்னாமம்" எனவும் வருதலாற் "கூறுவோர்க்கே" என்ற சொன்னோக்குணர்ந்துகொள்க.

கூறுவோர்க்கே கைகூடும், உண்டாம், கபலை நோக்கு ஆக்கும் எனவுரைக்க.

பாயிரம்.

உலகம் யாவையுந் தாமுள வாக்கலு
நிலைபெ றுத்தலு நீக்கலு நீங்கலா
வலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவ ரன்னவர்க் கேசர ணாங்களே.

(இ - ள்.) உலகம் என்றது புவனமும், சனமும். யாவையும் என்றது உலகிலுள்ள உயிர்கட்குத் தாரகபோடகபோக்கியங்களான மற்றெல்லாமும் எ.- று. உயிர்கட்கு வேண்டிய தனுகரண புவனபோகமெனப்பட்ட நான்கனுள் ஈண்டுலகமென்றது புவனமேயாக்வைத்து, யாவையுமென்றது அஃதொழிந்த மற்றைய மூன்றுமாம் எனினும், உலகம் என்பது காணப்பட்டதெனக்கொண்டு$ யாவையும் என்பது நூற்றொகைகளாற் கேட்கப்பட்டனவுமாம் எனினும் அமையும். கேட்கப்பட்டன சத்தியலோகாதிகள். தாமுளவாக்கல் - தாமேசிருட்டித்தல். தாம் என்றது உபாதான நிமித்தசககாரிகாரணங்கள் தம்மின் வேறல்லாமையுணர நின்றது. "மன்னுயிரெல்லாந் தானே வருவித்து வளர்க்குமாயன்" எனமேலும் இக்கருத்தே பற்றிவந்தது காண்க. (இராம. வீடணனடைக்கலம். ௧௧௪:)

---

* தாடகை வதை.

$ "லோக்ரு தர்சனே" என்பவாகலின், உலகம் காணப்பட்டதெனப் பொருள் தரும்.

நிலைபெறுத்தல் - நிற்றலைப் பெறுவித்தல். இம்முத்தொழிலும் நீங்கலாவிளையாட்டு. அலகிலா விளையாட்டு - கணக்கில்லாத விளையாட்டு. உயிர்த்தொகைகளும் அவற்றின் கருமப்பகுதிகளும் அளக்கலாகாமையின் அவைபற்றி நிகழும் விளையாட்டும் கணக்கின்றாம் என்பது: முதற்காரணமுந் தாமேயாகவும் படைப்பளிப்பழிப்பானோர் துன்புறுத்திலர் என்பார் விளையாட்டென்றார். உயிர்த்தொகைகள் ஒரோவொன்றாக வீடுபெற்றேகின் இறுதியில் ஒருகால் விளையாட்டுக்குயிர்களேயில்லையாங்கொல் என்னுஞ் சங்கையைப் பரிகரித்தற்கு நீங்கலா விளையாட்டென்றார். உயிர்ப்பகுதி ஒன்றொன்றாக எண்ணப்படினும் அதன்பெருந்தொகுதி எண்ணப்படாதென வறிக. இது காலம் என்பது, நிமிஷங் கலை காட்டை முகூர்த்தம் யாமம் பகல் இரவுநாள் திங்கள் ஆண்டூழி எனப் பலபகுதிகளாக எண்ணப்படினும், அதன் பெருந்தொகுதி முடிவுபெறாது நெடிதுசேறல்போலக் கொள்க. இதனை அநந்தாரியரியற்றிய வேதாந்தவாதாவளி என்னும் வடநூலுட் கண்டுகொள்க. இம்முத்தொழில் விளையாட்டுடையாரே தலைவரென்றது பிரமசூத்திரத்துள் வியாசபகவான் "இவற்றினுடைய தோற்றம் முதலியன எதனிடத்தினின்று நிகழ்வனவோ அது பிரமம்" எனக்கூறிய சூத்திரக்கருத்தைத் தழீஇயுரைத்ததாம். இராமாநுசரும் அச்சாரீரகபாடியமுக்கத்து "எல்லாவுலகங்களுடையவும் படைப்பளிப்பழிப்பு முதலிய விளையாட்டுடையான்" என இறைவனை முந்துறவுரைப்பது காண்க. தலைவர் - முதல்வர். இது பிரணவப்பொருளையுட்கொண்டு போந்த பாட்டாதலின், இத்துணையும் அகாரப்பொருளை விளங்க வைத்துரைத்ததாம். ஈண்டு அவ்வகரத்திற்கும் பொதுவாகிய தலைமைப்பண்புபற்றித் தலைவர் எனப்பெயராடலையுநோக்குக. இதனை "𑌅𑌕𑌾𑌰𑌾𑌰𑍍𑌥𑍋 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌰𑍍𑌜𑌗𑌦𑍁𑌦𑌯𑌰𑌕𑍍𑌷𑌾𑌪𑍍𑌰𑌲𑌯𑌕𑍃𑌨𑍍𑌮𑌕𑌾𑌰𑌾𑌰𑍍𑌥𑍋 𑌜𑍀𑌵𑌸𑍍𑌤𑌦𑍁𑌪𑌕𑌰𑌣𑌂 𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑌂 । 𑌉𑌕𑌾𑌰𑍋𑌨𑌨𑍍𑌯𑌾𑌰𑍍𑌹𑌂 𑌨𑌿𑌯𑌮𑌯𑌤𑌿 𑌸𑌮𑍍𑌬𑌨𑍍𑌧𑌮𑌨𑌯𑍋𑌸𑍍𑌤𑍍𑌰𑌯𑍀𑌸𑌾𑌰𑌸𑍍𑌤𑍍𑌰𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌾 𑌪𑍍𑌰𑌣𑌵 𑌇𑌮𑌮𑌰𑍍𑌥𑌂 𑌸𑌮𑌦𑌿𑌶𑌤𑍍" என்னும் பட்டரருளிச்செயலானுணர்க. இதன்கண் உலகின்படைப்பளிப்பழிப்பினைப் புரிகின்றவனான இறைவன் † அகரப்பொருள் என உரைத்தது காண்க. இனி, "அன்னவர்க்கே

---

† விஷ்ணு வியாபனசீலத்தாற் போந்த பெயர்; இறைவன்—எப்பொருளினுந் தங்குவோன். இறுத்தல்—தங்குதல்.

"சரண்" என்பது, ஆன்மாக்கள் தமக்கேனும் அசித்துக்கேனும் உரியவல்லவென்று உகாரப்பொருள் கொள்ளவைத்தது. உகாரம், "அகரப்பொருளான இறைவனுக்கன்றி வேறொருவர்க்குயிர்கள் உரியவல்லாமை நியமிப்பது" என்றதற்கு இயையவந்தது கண்டுகொள்க. உகாரம் அவதாரணப்பொருள் குறித்துவரும். இனி, 'நாங்கள்' என்றது மகாரப்பொருளைக்கொண்டு கூறியது; மகாரப்பொருள் ஜீவன் என்றுரைத்தவாறு நோக்கிக்கொள்க. இவ்வாறு, அ-உ-ம என்னும் மூன்றெழுத்துக்களின் பொருள்களை முறையேகொண்டு கூறியவாறறிக. "அன்னவர்க்கு" என்றது, அகாரத்திலேறிக் கழிந்த சதுர்த்தியை விரித்துரைத்ததாம். "அன்னவர்க்கே சரணாங்களே" என்பது, "உனக்கே நாமாட்செய்வோம்" என்னுங் கோதையார் திருவாக்கின் கருத்தையே தழீஇ நிற்பது. இதனாற் சரண்ங்களே என்ற பாடம் தவறுதலுணர்ந்து கொள்க.

இனித்தலைவர்க்கே நாங்கள் சரண் என்னாமல் தலைவரன்னவர்க்கே நாங்கள் சரணென்றது, தலைவர்க்கும் அவரொடொரு நீர்மையராகிய திருமகளார் முதலிய பாகவதர்க்கும் நாங்கள் சரண் என்னுமமையும். நாங்கள் சரணென்றது நாங்கள் சரண்புக்கேம் எ - று.

சிற்குணத்தர் தெரிவரு நன்னிலை
யெற்குணர்த்தரி தெண்ணிய மூன்றனுண்
முற்குணத் தவரேமுத லோரவர்
நற்குணக் கடலாடுத னன்றரோ.

(இ - ரை) சிற்குணத்தர் - அறிவே தங்குணனாகவுடையார். அவரானுந் தெரிவு அரிய முதல்வர் நன்னிலையினை. ஆன்ம சொரூப குணங்கள் தாஸியமும் ஞானமும் என இரண்டென்ப. ஈச்வரன், ஆன்மா, அசித்து எனத் தத்துவ மூன்று. இவற்றுள், ஆன்மாவுக்கு ஈச்வரனை நோக்கித் தாஸியமும் அசித்தைநோக்கி ஞானமும் சொரூப குணங்களாகத் தெளியப்படும். இவற்றுள் தாஸியமொழித்து ஞானமே தங்குணனாக்கொண்டாராற் றெரிதற்கரிதென்பது. எற்குணர்த்தரிது - அவ்விரண்டிலொன்றுமில்லாத எனக்கு பிறருணருமாறுணர்த்தவரிதேயாம். இனிச் சித்தென்றது, ஆன்மா எனக்கொண்டு சிற்குணத்தர் என்றது ஆன்மசொரூப குணமாகிய தாஸிய ஞானங்களையுடையர் என்றுரைத்து தெரிவரு நன்னிலையென்றது அவராற்றெரிய வருகின்ற முதல்வர் நன்னிலை, எனினும் பொருந்தும். இப்பொருளில் தாஸிய ஞானங்களையுடையார்க்குத் தெரிய முதல்வர் தாமே வருகின்றார் என்பதுதோன்ற வருநன்னிலை என்றார்: ஆன்மாக்கள் தம்முயற்சியாற் சென்றுபெறுதலில்லையென்பதும் ஆன்மகுணங்களான அதிகாரிவிசேடணங்கள் நன்குடையார்க்கு இறைவர் வந்தருளலே யுளதென்பதும் இவ்வாசிரியர்க்குடன்பாடென வறிக. நன்னிலையினை வடநூலார் ஸம்ஸ்தாநம் என்ப. "யான்கண்ட நல்லதுவே" எனப் பெரியார் பணித்ததனையு நோக்கிக்கொள்க. மூன்றுகுணத்துண் முற்பட்ட சத்துவகுணத்தவரே முதல்வர் என்றதனைச் சீபாகவதத்துட் பிருகுமுனி சென்றவத்தியாயத்துட்கண்டு தெளிக. ஏகாரந்தேற்றம்; பிரிநிலையுமாம். அவருடைய நற்குணங்களாகிய கடலுட்டிளைத்தலே நன்மையுடைத்து எ - று. கடலாடுதலே நன்றென்பாரை நோக்கி நற்குணக்கடலாடுதலே நன்றென்றார். நற்குணம் என்றது இயற்கைப்பொருளை யிற்றெனக்கிளந்தது, அவர்க்குத் தீக்குணமேயின்மையான். குணனைக்கடலென்றார், அளக்கலாகாப்பெருமையானும் திளைத்தார் பாவங்கழுவுதலானும். அரோ, அசை.

பின் முத்தொழில் விளையாட்டுடையார் தலைவர் என்றார், ஈண்டு அம்முத்தொழில் புரியத் "தானுஞ் சிவனும் பிரமனுமாகிப் பணைத்த தனிமுதல்" சத்துவகுணத்தவரே என்று விளக்கினார்.

ஆதி யந்த மரியென யாவையு
மோதினா ரலகில்லன வுள்ளன
வேத மென்பன மெய்ந்நெறி நன்மையன்
பாத மல்லது பற்றலர் பற்றிலார்.

(இ - ரை) யாவையும் ஓதினார் ஆதியும் அந்தமும் அரியென்று சொல்லுதற்குச்சான்றாக அலகில்லனவாய் வேதமென்ப உள்ளன இது வழக்கொடு முந்துநூல் கண்டுரைத்தது. "ஆதியந்த மனந்த மற்புத மானவானவர் தம்பிரான்" என்பது பெருமாள்திருமொழி. மெய்ந்நெறி நன்மையன் - மெய்ப்பொருளாய் அதனை எய்தற்குரிய நெறியாய் அந்நெறிச்சென்றதனை யெய்தினார்பெறு நன்மையாயுள்ள

அவன் என்றவாறு. இது சொல்லுவான் குறிப்பாற் சுட்டுப்பெயர் மாத்திரையாய் நின்று முற்கூறப்பட்ட அரியைச்சுட்டியது. இதனைத் "தானேறனையானுள்ளன் சீவகசாமியென்பானன், வானேற நீண்ட புகழான் சரிதம்மிதனை" என்னுஞ் சிந்தாமணிப்பதிகத்துப் புகழான் என்னும்பெயர் சொல்லுவான் குறிப்பான் அவன் என்னுஞ்சுட்டுப் பெயர் மாத்திரையாயிற்று; "நாணிநின்றோள்" என்றும், "அண்ணங் கருங்கடவுளன்னோள்" என்றும், அகத்திற் (களிற்றியானை நிரையுட்) கூறினாற்போல" எனவுரைத்ததனானுணர்க. இதனையே "ஒரு பொருளிருசொற்பிரிவிலவரையார்" என்னுந் தொல்காப்பிய வெச்சவியற் சூத்திரவுரைக்கண் சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் கூறியவாறு நோக்கித்தெளிக. மெய்ந்நெறி நன்மையன் என்பது உபாயோபேயங்கள் அவனேயாதல் விளக்கி நின்றது. பற்றிலார்-அகப்பற்றும் புறப்பற்றுமில்லாதார். அவன் பாதமல்லது பற்றலரென்க. அவன் பாதங்களைப் பற்றினாரே பற்றிலாரெனினுமமையும். மேல் தலைவர் எனவும் முதலோர் எனவுங் குறித்தமுழுமுதல் அரியென்று பெயர்விளங்க வைத்தவாறு. இவ்வ மூன்றுங் கடவுள் வாழ்த்து.

ஓசை பெற்றுயர் பாற்கட லுற்றொரு
பூசை முற்றவு நக்குபு புக்கென
வாசை பற்றி யறையலுற் றேன்மற்றிவ்
வேசில் கொற்றத் திராமன் கதையரோ.

(இ-ரை) இதுமுத லாறுபாடல்களான் அவையடக்குரைக்கின்றார். "அவையடக் கியலே யரிறபத் தெரியின், வல்லா கூறினும் வகுத்தனர் கொண்மினென், றெல்லா மாந்தர்க்கும் வழிமொழிந் தன்றே" என்பதோத்தாகலின். சீராமகதையினை ஒலிபெற்றுயர்ந்த பாற்கடலாகவும், தம்மை அதனைப்பருகற் காசையுற்றதோர் பூசையாகவும் கொண்டார். நக்குபு-நக்க; "அறைகாய்பறு நீர்ப்பைஞ் சுனை" என்புழிக் காய்பு-காய என அகப்பாட்டுரைகாரர் கூறியதனையும் "ஓங்கு நிலைவாயிற் றூங்குபு தகைத்த' என்புழித் தூங்குபு என்பதனைத் தூங்க எனத்திரித்துக்காலவழுவமைதியெனக் கொள்க" எனப் பதிற்றுப்பத்துரைகாரர் கூறியதனையும். நோக்கிக்கொள்க. நக்கல்-ஊண்வினை நால்வகையுளொன்று. "ஆசைபற்றி யறையலுற்றேன்" என்பது சீராமகதைக்கட் டமக்குள்ள பேராசையே அதனைப் பாடற்குக் காரணமெனக் குறித்தவாறு; "அன்பெனுநறவமாந்தி... ...மொழியலுற்றேன்" என மேலுங்கூறுவது காண்க. இதனால் இந்நூல் ஒருவர் பாடுவிக்கப் பாடியதன்மையுணர்க. ஏசில் கொற்றம்-பழிப்பில்லாதவென்றி; "ஒன்றுற்றக்கா லூராண்மை மற்றதனெஃகு" என்றபடி தன்னைப்பகைத்தார்க்கு முபகாரியாதலையே கருதுந் தோலாத தனிவீரனாதலா லிங்ஙனம் கூறினார். காசில் கொற்றத்திராமன் எனவும் பாடமுண்டு. புக்காலென என்பது புக்கென எனவந்தது. மற்று, அரோ அசைகள்.

உயர்பாற்கடல்-எல்லாக்கடலினும் உயர்ந்த பாற்கடல். எல்லாநூற்கடலினும் இராமகதையாகிய பாற்கடலே உயர்ந்தது எ-று. ஓசைபெறுதல்-புகழ்பெறுதல். "படிகொண்ட கீர்த்தி யிராமாயணம்" என்ப. பாற்கடலுற்று என்றார், ஒருபூசையானதனை யுறுதற்கேயரிதாதலான்.

நொய்தி னொய்யசொ னூற்கலுற் றேனெனை
வைத வைவின் மராமர மேழ்துளை
யெய்த வெய்தவற் கெய்திய மாக்கதை
செய்த செய்தவன் சொன்னின்ற தேயத்தே.

(இ-ரை) நொய்தினு நொய்யசொற்களான் நூலிழைக்கலுற்றேன், இஃதென்னையென்று தம்மறியாமை நோக்கி வியந்தவாறு. மராமரமேழுந் துளையெய்த அம்பினையெய்தவனுக்குப் பொருந்திய பெருங்கதையை ஒருவேடனை வைத வசவினாற்செய்த செம்மையாகிய தவத்தையுடைய வான்மீகிமுனிவன் சொற்கள் நிலைபெற்றுள்ள நாட்டிலே நொய்யசொற்களானூற்கலுற்றேன், இஃதென்னை என்க. வான்மீகிமுனிவன் ஏதிலனை வைத வசவானு மிராமகதையியற்ற வல்லான் என அவனது புலமைப்பேராற்றலுணர்த்தியவாறு.

இனி "வைதெனக்கொல்லும் விற்கைமானிடர்" (இலங்கைகாண்படலம். க.) எனவருதலான் பெரியோர் வைத வசவைப்போல் மராமரம் ஏழ்துளையெய்த அம்பெய்தவற்கு எனவுரைப்பினுமமையும். பெரியோர் வைதவசவு ஒருவனை ஏழ்தலைமுறை புரைபடுத்தும் என்பதுகொண்டு இவ்வாறு கூறினாராகக் கொள்ளினும் பொருந்தும்.

வையமென்னை யிகழவு மாசெனக்
கெய்தவும் மிஃதியம்புவ தியாதெனிற்
பொய்யில் கேள்விப் புலமையி னோர்புக
றெய்வ மாக்கதை மாட்சி தெரிக்கவே.

(இ - ரை) வையமிகழ்தல், நொய்தினொய்ய சொல்லானூற்றது கண்டாகும். மாசெய்தல், அங்ஙனம்நூற்றதன்கணுள்ள சொல்லானந்தம் பொருளானந்தம் இவற்றாலாகும். ஆனந்தக்குற்றமுள்ள பாடலைப்புனையப்பெற்றவன் மாணிடனாயின் அவனுக்கே கேடுபயக்கும். அக்குற்றமுள்ளபாடல் தெய்வத்தின் மேற்றாயின் அதன்கட்குற்றம் அதனையியற்றியோற்கே கேடுதரும்.* சுவரின் மோதவெறிந்த பந்து எறிந்தானையே எதிர்த்து மோதல்போலவும், நிலத்தைக்கையான் அறையின் அவ்வறைந்த கைக்கே அவ்வறைதலா னூறெய்தல்போலவுமிதனைக்கொள்க. இவ்விகழ்ச்சியும் மாசும் எய்தாநிற்க இஃதியம்புவதியாதுகாரணத்தானெனின், புலமையினோர்புகறெய்வமாக்கதை மாட்சிதெரிக்கவென்க—என்க. தீதுள்வழியன்றே நல்லதனன்மை இருட்டறையில்விளக்குப்போல நன்று விளங்குவதென்க. பொய்யில் கேள்விப்புலமையினோர்புகல் - பொய்த்தலில்லாத சுருதியானெய்திய ஞானமுடையாராற் சொல்லப்பட்ட. தெய்வமாக்கதை- தெய்வத்தன்மை பொருந்திய பெருங்கதை. கதைக்குத் தெய்வத்தன்மையாவது தன்னையோதியார்க்கு எல்லா நற்பயன்களுமளிக்குமாற்றலுடைமை. தெய்வமாக்கதை - தெய்வத்தைப்பற்றிய பெருங்கதை எனினுமமையும். "செய்தவன் சொன்னின்றதேயத்தே" என வான்மீகராமாயணத்தைக் கூறினார், ஆதிகாவியமாதலான். ஈண்டுப் பொய்யில் கேள்விப்புலமையினோர்புகறெய்வமாக்கதை" என்று வியாசபோதாயனர் அருளிய இராமகதையைக்கூறினார். மேல் "வடநூன்முனிவரும் புகன்றது" எனக்கூறுதலான் இதனையுணர்க.

துறையடுத்த விருத்தத் தொகைக்கவிக்
குறையடுத்த செவிகளுக் கோதில்யாழ்
நறையடுத்த வசுணநன்மாச் செவிப்
பறைபடுத்தது போலுமென் பாவரோ.

---

* "தொகைக்குற்றம் பாட்டுறிற்செல் வம்போ நோயாஞ் சுற்றமறு மரணமுறுஞ் சோருங்காலுஞ், சகத்தவர்க்கீ தன்றியே தேவர்க் காகிற் றப்பாதிப் பலன்கவிதை சாற்றினார்க்கே" என்ப. (சிதம்பரப்பாட்டியல், மரபியல், ௨௦.)

(இ - ரை) அகப்பொருள் புறப்பொருட்டுறையொடு பொருந்திய விருத்தத்தொடர்நிலைச்செய்யுள்கட்கு உறையாக அடுத்த செவிகட்கு என் பாவை ஓதின், யாழிற்பிறந்த தேன்போன்ற இசையினைப்பொருந்திய அசுணமாவினுடைய செவியிற் பறை யொலித்தது போலும் என்க. உறை - போர்வை. துறை - தமிழின் றுறை எனினுமமையும். "முத்தமிழ்த்துறை" என இவரே கூறுதல் காண்க. தாழிசை துறை விருத்தம் இவற்றினிடையது எனினுமமையும். அந்தாதித்தொடர் நிலையினை அந்தாதித்தொகை என்பதுபோல தொடர் நிலைச்செய்யுளைத் தொகைக்கவி என்றார். உறை - உறையுளுமாம். அசுணம் இசையறிவதோர் விலங்கு என்றார் நச்சினார்க்கினியர். பேராசிரியர் மெய்ப்பாட்டியலுரைக்கண், அச்சப்பொருளாவன "வள்ளெயிற் றரிமா வாள்வரி வேங்கை, முள்ளெயிற் றரவே முழங்கழற் செந்தீ, யீற்றா மதமா வேகபாதங், கூற்றங் கோண்மாக் குன்றுறை யசுணம்." என்று சொல்லப்பட்டாற் போல்வன" எனக்கூறுதலான், இது தீங்கிழைக்கும் வலியுடையதென்றும் அதுபற்றி அஞ்சத்தக்கதென்றும் மலையின்கண் உறைவதென்று முணரப்படும். அகப்பாட்டினுப், "இருங்கல் விடரளை யசுண மோர்க்கும்" என வருதல்காண்க. இஃதியாழிசைக்கின்புற்றுப் பறையொலிக்குயிர்விடுமென்ப. இதனை, "மறையிற்றன் யாழ்கேட்ட மானை யருளா, தறைகொன்று மற்றதனாருயிரெஞ்சப் பறையறைந்தாங்கு" என்னு நெய்தற்கலியானுணர்க. நற்றிணையினும் "அசுணங்கொல்பவர் கைபோனன்று மின்பமுந் துன்பமு முடைத்தே தோழிநங்களவே" என வந்தது; இன்பம் யாழிசைத்தலானும் துன்பம் பறையொலித்தலானும் என்க. பறைபடுத்தல் - பறை கேட்டல். "பறைபடுத்து" என்றார் வெண்பாமாலையினும் (பெருந்திணை. ௫.) பறையடுத்தது, பறையடித்தது எனவும் பாடம். நறை - உவமையாகுபெயரான் இசை. நன்மா, இசையறியுமருமையான். கவியாற்செய்யப்படுஞ் செய்யுளையுங் கவியென்றல் தமிழ் வழக்கு. (தொடரும்.)

ரா. இராகவையங்கார்.

தலமுறையாராய்ச்சி.

(௯-ந் தொகுதி-429-ம் பக்கத்தொடர்.)

பேர் (பெரிய) - எயில் (மதிலையுடைய) தலம்: **திருப்பேரெயில்.** இது பேரையூர் என வழங்குகிறது.

பை (பசிய) - நீலி (அவுரி) தலவிருக்ஷமாகவுள்ள தலம், **திருப்பைங்நீலி** இது திரும்மைஞ்ஞீலி என்றாயது.

அரசனுடைய தண்டலாளராயிருந்த ஓர் சிவனடியார் தண்டல் திரவியத்தைக்கொண்டு ஆலயத்திருப்பணி செய்ததை அரசனறிந்து அவரையழைப்பிக்க அவர் அரசனது தண்டனைக்குப் பயந்து உயிர் துறக்க அரசன் அவருடைய சரீரத்தை திருமங்கலக்குடிக்கப்பாற் கொண்டுபோகும்படி செய்ய அந்தச்சரீரம் திருவியலூருக்கு வந்தவுடன் அச்சிவனடியாரது பத்தினியார் பிரார்த்தனைக்கிரங்கி திருமங்கலக்குடியம்மையார் மங்களநாயகியார் திருவருளால் அவ்வடியார் உயிர்த்தெழுந்து அப்பத்தினியாருக்கு மங்கலம் கொடுத்தருளிய தலம்: **திருமங்கலக்குடி.**

வைசியர் குலத்திற்பிறந்த நங்கை நாத்திகளிருவரும் ஒருங்கே கருப்பமடைந்து வாழ்கையில் பிறக்குங் குழந்தைகளை ஒருவர்க்கொருவர் சம்பந்தஞ்செய்து கொள்ளுகிறதென்று உறுதிசெய்து கொள்ளப் பின் ஒருத்தி பெற்றது ஆமையாகவிருந்ததால் மற்றவள் தன் பெண்ணைக்கொடாதிருக்க அந்த ஆமை சிவபெருமானைப் பூசித்து ஆமையுரு நீங்கி மானிடவுருப்பெற்றுக் குறித்தபெண்ணைத் திருமணம் செய்துகொள்ளப்பெற்ற தலம்: **திருமணஞ்சேரி.**

மண்ணியாற்றின் கரையிலுள்ள தலம் **திருமண்ணிப்படிக்கரை.** இத்தலத்திற்கு, இலுப்பை தலவிருக்ஷமாகலால் இலுப்பைப்பட்டு என வழங்குகின்றது.

பார்வதியார் மயில் உருவாயிருந்து சிவபெருமானைப்பூசித்துத் திருமணஞ்செய்து கொண்டதலங்கள்: **திருமைலாடுதுறை** (மாயூரம்) **திருமைலாப்பூர்** (திருமைலம்.)

மயேந்திரன் (இந்திரன்) பூசித்துப்பேறுபெற்ற தலம்: **திருமயேந்திரப்பள்ளி.** இதனை "சந்திரன் கதிரவன் தகுபுகழயனொடும் - இந்திரன் வழிபடவிருந்தவெம்மிறைவன்" என இத்தலத்தேவாரத் திருப்பதிகத்திலமைக்கப் பெற்றமைகாண்க.

மருகல் (கல்வாழை) தலவிருக்ஷமாயுள்ள தலம் **திருமருகல்.**

முன்னொருகாலத்து மார்க்கண்டேயர்க்காகச் சிவபெருமான் தனது மழுவையனுப்பி நிருத்தனதரிசனம் கட்டளையிட்டருளிய தலம்: **திருமழுவாடி.** மழுவாடி எனவே வழங்குகின்றது. வடமொழிநாமம்: பரசுநிருத்தன க்ஷேத்திரம். தேவாரத்திருப்பதிகங்களில் திருமழபாடி எனக்காணப்பெறுகின்றது.

வேதம் (மறை) பூசைசெய்த தலங்கள்: **திருமறைக்காடு** (வேதாரணியம்) **திருவேதிகுடி.**

மாணி (பிரமசாரி) வடிவங்கொண்ட வாமனமூர்த்தி மாபலிச் சக்கரவர்த்தியிடம் ஏற்றதோஷம் நீங்கப் போற்றியதலம்: **திருமாணிகுழி;** இதனை, "நித்தநியமத் தொழிலனாகி நெடுமால் குறளனாகிமிகவும் - சித்தமதொருக்கி வழிபாடுசெய்கின்ற சிவலோகனிடமாம்" என இத்தலத்தேவாரப் பதிகத்தில் அமைக்கப்பெற்றமை காண்க.

மா தலவிருக்ஷமாகக் கொண்டதலம்: **திருமாந்துறை** (ஆம்ரவனம்.)

திருமால் பூசைசெய்து பேறுபெற்ற தலம்: **திருமாற்பேறு.**

முது (பழமையாகிய) - குன்றம் (மலை) **திருமுதுகுன்றம்** (விருத்தாசலம்.)

முருகன் பூசித்த பூண்டி: **திருமுருகன்பூண்டி.**

முல்லை வனமாகக்கொண்ட தலங்கள்: **வடதிருமுல்லைவாயில், தென்றிருமுல்லைவாயில்.**

வக்கரன் என்னுமசுரன் பூசித்துப் பேறுபெற்ற தலம்: **திருவக்கரை.**

தேவேந்திரன் கொண்டுவந்த காவிரி தீர்த்தம், நாகராஜன் பிலத்தினின்றெழுந்த துவாரத்தின் வழியாய் வலஞ்சுழித்துச் சென்ற தலம்: **திருவலஞ்சுழி.**

அந்நீத்தம் வலஞ்சுழித்து மேலெழுந்த தலம் திருவலம்புரம். இத்தலத்தின் சிவலிங்கப்பெருமான் திருமுடியில் பள்ளம் காணப் பெறுவதால் பெரும்பள்ள மெனவழங்கப் பெறுகின்றது.

வலி (வலியான்கரிக்குருவி) வலம் வரப்பெற்றதலம்: திருவலிவலம்.

வல்லாள மகாராஜன் பூசித்ததலம்: திருவல்லம்.

வன்னி (அக்கினிதேவன்) பூசித்ததலம்: திருவன்னியூர்.

ஒரு நாககன்னிகை மிகுவாஞ்சையோடு பூசித்து சிவபெருமானைத்தழுவித் திருவுருவிற்கலந்த தலம்: திருவாஞ்சியம்.

ஆரிய தேயத்தரசன் இரத்தினத்தை விரும்பி க்ஷேத்திரங்கள் தோறும் பூசித்துவருகையில் இரத்தினகிரியில் சிவபெருமான் ஒரு தொட்டியைக்காட்டி இதைக்காவிரி நீரால் நிறைக்கின் இரத்தினங்கிடைக்குமென்று அசரீரியாகத் திருவாய்மலர்ந்தருள நிரம்பநிரம்பப் பிரயாசையோடு எத்தனைகுடங்கள் கொண்டுவந்து நிறைத்தாலும் நிறையாதிருக்கக்கண்ட அரசன் கோபங்கொண்டு வாளை யோங்கிச் சிவபெருமான் திருமுடியில் வீசினான்; ஆந்தவாளைப்போக்கி இரத்தினத்தைக்காட்டியருளிய தலம்: திருவாட்போக்கி. (இரத்தனகிரி.)

மகாவிஷ்ணு தனது வாளொளியையுடைய மாணிக்கத்தை வைத்துப்பூசித்த புத்தூர்: திருவாளொளிப்புத்தூர். இது வாள்கொளிப்புத்தூர் எனப்பதிகங்களில் காணப்பெறுகிறது. அர்ச்சுனன் வாளாயுதத்தைப் பூசித்ததாகவும் ஐதீகம்.

பல்லாயிரமாண்டு தன்தேகமெல்லாம் மழுமுளைத்துப்புற்று மூடியிருக்கத் தவம்செய்ததால் பெயர்வாய்க்கப்பெற்ற வான்மீகமுனிவர் சிவலிங்கார்ச்சனைப்பேற்றை மார்க்கண்டேயராலுணர்ந்து பூசிக்கப்பெற்றதலம்: திருவான்மியூர்.

விஜயன் (அர்ச்சுனன்) பூசித்து பாசுபதாஸ்திரம் பெற்ற தலம்: திருவிஜயமங்கை. இதனை "பாண்டுவின் மகன் பார்த்தன் பணிசெய்து - வேண்டு நல்வரங்கொள் விசயமங்கை" என இத்தலத்தேவாரப்பதிகத்திலமையப்பெற்றமை காண்க.

விஜயன் (அர்ச்சுனன்) பூசித்து பாசுபதாஸ்திரம் பெற்றதலம்: திருவியலூர். (திருவிஜயனூர்) கஜம் கயம் என்றாற்போல் விஜயன் வியயன் என்றாகி வியயன் - ஊர் = வியயனூர் என்பது திருவியலூர் என மருவியது. இதனை,

"வசைவிற்கொடு வருவேடுவ னவனாய்நிலையறிவான்
றிசையுற்றவர் காணச்செரு மலைவானிலை யவனை
யசையப் பொருதசையாவண மவனுக்குயர் படைகள்
விசையற்கருள் செய்தானிடம் விரிநீர் வியலூரே."

என இத்தலத்தேவாரப் பாசுரத்திலமையப் பெற்றமை காண்க.

திரிபுரசங்காரத்திற்காகச் சிவபெருமான் இரதத்தைச் செலுத்திக்கொண்டு வருகையில் விற்கோலத்தோடு தங்கப்பெற்றதலம்: திருவிற்கோலம். இத்தலத்தில் இரதத்தினது கூவரம் (ஏர்க்கால்) முறியப் பெற்றதலம்: திருக்கூவரம். கூவரம் என்பது கூவம் எனமருவியது. பதிகங்களில் கூகம் எனக்காணப்பெறுகின்றது.

வீழி வனமாகப் பெற்றதலம்: திருவீழிமிழலை (தேஜனிவனம்.)

விழல் தலவிருக்ஷமாகக்கொண்ட நகர்: திருவிழனகர். இது விளநகர் என மருவியது.

விழல் தலவிருக்ஷமாகக் கொண்டமர்ந்த தலம்: திருவிழலமர். இது திருவிளமர் எனமருவியது.

வெஞ்சாமா சூரன் பூசித்த கூடல்: திருவெஞ்சமாக்கூடல்.

சுவேதன் பூசித்து யமதண்டனை நீங்கப் பெற்றதலம் (ச்வேதவனம்) திருவெண்காடு.

தேவர்கள் வண்டு ரூபமாய்ப் பூசித்ததலம்: திருவண்டுதுறை; இது திருவெண்டுறை யெனப்பதிகங்களில் காணப்பெறுகின்றது. திருவண்டுறை யென்றே வழங்கப்பெறுகின்றது. இத்தலவாலயத்தின் கருப்பக்கிரகத்தில் இன்றும் வண்டுகள் ரீங்காரம் செய்வது போல் ஒலிகேட்கின்றது. இதனைச் சிற்ப அமைவு எனவுங்கூறுப.

மூங்கிலினடியிற் சிவபெருமான் தோன்றியருளிய தலம்: திருவேணுக்களம். (மூங்கில்வனம்.) இது திருவேட்களமென மருவிப் பதிகங்களில் காணப்பெறுவதன்றி வழங்கவும் பெறுகின்றது.

*

விஜயனுக்கு அனுக்கிரகஞ்செய்ய வேடரூபமாய்ச்சென்ற தலம் திருவேடக்குடி. இது திருவேட்டக்குடி என்றாயது.

ஓரிராஜகுமாரனுக்குச் சிவபெருமான் திருமணவேள்வி செய்தருளிய தலம்: திருவேள்விக்குடி.

வேதங்கள் வேல் விருக்ஷங்களாகவிருந்து பூசித்ததலம்: திருவேற்காடு.

பூதேவி பூசித்த வில்வ வனம்: திருவைகாவூர் பூமி=வை - (வில்வக்) கா - ஊர்=திருவைகாவூர்.

ஓர் சிவபக்தர் சிவனடியாருக்கு அன்போடு அன்னதானம் செய்து வருகையில் சிவபெருமான் சென்று அன்னங்கேட்க அடியார் எந்தவூர் என்று வினாவினார். சிவபெருமான் ஆர்க்கூர் என்று மறைந்து, ஆலயமும் சிவலிங்கப்பெருமானுமாய்த் தோன்றியருளிய தலம்: திருஆர்க்கூர்த்தான் தோன்றிமாடம். ஆர்க்கூர் என்பது ஆக்கூர் எனமருவியது.

திருவாரூரின் கண்ணுள்ள அரனதாலயம்: திருவாரூர் அரநெறி.

வெள்ளையானை பூசைசெய்து பயம் இல்லையாகச் செய்துகொண்டதலம்: திருஇலம்பயங்கோட்டூர்.

அகத்தியமுனிவர் ஆலயம் திருக்காப்பானபின் அர்த்தயாமத்தில் ஈ ரூபமாகச்சென்று பூசித்த இமயமலைச் சிகரங்களிலொன்றாகிய (பொன்) வேங்கைமலை: ஈவேங்கைமலை: இது திருஈங்கோய்மலை யென மருவிப்பதிகங்களில் காணப்பெறுகின்றது. திருவேங்கைமலை யெனவழங்கப் பெறுகின்றது.

பிரமதேவன் தவஞ்செய்து பிரளயநீத்தத்தை தவாக்கினியால் ஒற்றித்திரளும்படி செய்ததலம்: திருவோற்றியூர்.

அங்குலன் என்னும்வேடனைப் புலிதுரத்தப் பயந்தோடி வில்வ மரத்திலேறிக்கொள்ள புலியும் மரத்தின் கீழிருக்க விடியுமளவும் வில்வத்தைப்பறித்துச் சிவலிங்கத்தின்பேரில் துயிலாதிருக்கப்போட்டுக்கொண்டிருந்தான். அதனையர்ச்சனையாகவேற்று அவ்வேடனுக்கு மதனைக் கண்ணுற்றிருந்த புலிக்கும் பிரணவ உபதேசஞ்செய்து சிவபதமருளிய தலம்: திருவோமாம்புலியூர். (பிரணவ வியாக்கிரபுரம்.)

கா (பிரமன்) அஞ்சி (பூசித்த) புரம்: காஞ்சீபுரம் - இது கச்சியென மருவியது. அம்பாளுக்கு நதியால் (நடுக்கம்) கம்பத்தையுண்டாக்கியதால் கம்பன். ஏகன் உவமையில்லாதவன். கா - அஞ்சி - ஏகன் - கம்பன் = கச்சியேகம்பன் என்று மருவியத்தலத்திற்குத் திருக்கச்சியேகம்பம் என்றாயது. இத்தலத்திலுள்ள (விநாயகர்) அனேகதம் பூசித்ததலம்: திருக்கச்சியனேகதங்காவதம். (பதம் - வதம் என்றாயது. பதம் - இடம்.) இத்தலத்திலுள்ள (கோயில்) நெறிக் (காரை வனம்) காரைக்காடு: திருக்கச்சிநெறிக்காரைக்காடு. இத்தலத்தின் (மேற்கேயுள்ள) மேல் (கோயில்) தளி: திருக்கச்சி மேற்றளி.

கடம்பு தலவிருக்ஷமாயுள்ள தலம்: திருக்கடம்பூர்.

தேவர்கள் அமிர்தகடம் வைத்துப்பூசித்த தலம்: திருக்கடவூர். இதனையடுத்துள்ள, பிரமனைச்சங்கரித்த மயானம்: திருக்கடவூர்மயானம்.

விஷ்ணுமூர்த்தி கலிக்காவதாரத்தில் பூசித்ததலம் திருக்கலிக்காமூர்.

கொடிகளையணிந்த மாடங்களையுடைய செம் (செவ்விய) குன்றின்மேலுள்ள ஊர்: திருக்கொடிமாடச்செங்குன்றூர். இது திருச்செங்கோடு என வழங்குகின்றது.

இலங்கையில் கோண (கோடி) த்தின் கண்ணுள்ளமலை: திருக்கோணமலை.

குவளை தலவிருக்ஷமாகலின் திருக்குவளை. திருக்குவளையெனவே வழங்குகின்றது. குவளை கோள் என்றாய் - இல் - இ=கோளிலி என்று மருவியது போலும். இலி இடமாகவுடையது. கோளிலி எனப்பதிகங்களில் காணப்பெறுகின்றது.

பிரமதேவன் உலகசிருட்டிக்காக சர்வமூலதிரவியங்களைப் பெய்துவைக்கக்கடம்செய்ய வேண்டியதற்காக சேறு (மண்) எடுத்த தலம் திருச்சேறை.

தலை (முதன்மையாகிய) ஆல் தலவிருக்ஷமான தலம்: திருத்தலையாலங்காடு.

தேவர்கள் பூசித்த தலம்: தேவன்குடி.

தேவகுரு பூசித்த தலம்: திருத்தேவூர்.

காவிரியும் பவானியும் நணு (நண்ணுமிடம்) திருநணு. பவானி கூடல் என வழங்கப்பெறுகின்றது.

நீலி (பார்வதியார்) பூசித்த தலம் திருநீலிக்குடி. தென்னீலிக்குடி என்பது தென்னலகுடியென வழங்கப்பெறுகின்றது. பாரத்துவாசர் பூசித்து - பலி (பூசையை) - தாயம் - (உரிமையாய்) ஏற்றுக் கொண்டதால்=திருபலிதாயம் என்றும் (பாரத்துவாசம்) கரிக்குருவி - வலியான் பூசித்ததாயம். திருவலிதாயம் என்றும் வந்தன. பலிதாயம் - வலிதாயம் என்றாயிற்று.

பாசு (மூங்கில்) இல் (இடமாகக்) கொண்ட ஆச்சிராமம்: திருப்பாச்சிலாச்சிராமம். கொல்லிமழவன் பெண்ணுக்கு முயலகன் வியாதிய்ய வாசி செய்ததலமாகலான் திருவாசி என வழங்கப்பெறுகின்றது.

சக்கரவாகப்புள் பூசித்தமங்கை: திருப்புள்ளமங்கை.

பாரிஜாதப்பூவின் வனம்: திருப்புவனம்.

வேள் (சுப்பிரமணியர்) பூசித்த மாடக்கோயில்: திருப்பெருவேளூர். மாடக்கோயில் பெருங்கோயில் எனக்காணப்பெறுகின்றது.

வாயுவும் ஆதிசேடனும் *சபதங்கொண்டு வாயு தன் வலியால் பெயர்த்தெறிந்த மேருக் கோடுமுடிகளிலொன்று கொங்குநாட்டிற் காவிரிமேல்கரையில் விழப்பெற்றதலம் கோடுமுடி. பின் பாண்டிதேயத்து அங்கவீனனான அரசகுமாரனிங்கு வந்து தவமியற்றிக் குறையுறுப்பை நிறையப்பெற்றுக் கொண்டதால் பாண்டியுங்கூடிவரப்பெற்றதால்: திருப்பாண்டிக்கொடுமுடி.

திரிகூடதலங்களில் திரிதியதிரிகூடம்: திருப்பள்ளியின் முக்கூடல்.

காமதேனு முன்னொருகாலத்தில் பிரமன் அயர்ந்து நித்திரை செய்தபோது பூசித்து உலகசிருஷ்டிசெய்த தலமாகலின் கருவூர் என்றும். ஆ - காமதேனு பூசித்த நிலை ஆநிலை யென்றும் இரண்டுஞ் சேர திருக்கருவூர் ஆநிலை என்றும் வந்தன.

பெண்ணையாற்றின் துறையிலுள்ள ஊர் திருத்துறையூர்.

சோ (அழகிய) மதிலையுடைய புரம்=திருச்சோபுரம்.

முண்டகன் (பிரமன்) பூசித்து பிரமகத்திநீங்கப்பெற்ற தலம் - முண்டகனீச்சுரம்: திருமுண்டீச்சுரம் என்றாயிற்று. அவிநாசிக்குத் திருப்புக்கொளியூர் என்றொரு நாமம் உண்டு. பிரமன் முதலியோர் ஒரு காலத்துச் சிவபெருமானிடம் புக்கு ஒளித்துக்கொண்டதலமாகலின், திருப்புக்கொளியூர். அவிமுசி சிவனதுபுரம்; திருச்சிவபுரம்.

(இன்னும் வரும்.)

௨

கடவுள் துணை.

நாட்டியசாத்திரம்.

முதலாவது அத்தியாயம்.

(நாட்டியோற்பத்தி.)

காப்பு.

மன்னு மகேச்சுரன் பூமன்றன் பாத மலரிணைகள்
சென்னி நிலம்படத் தாழ்ந்துசொல் வன்சிற கார்ந்தவெள்ளை
அன்னமெ னும்புள்ளூ வாகனத் தோன்முன் னமாய்ந்துரைத்த
நன்னர் மிகுத்திடு நாட்டிய நூலினை நன்குறவே.

தவத்திற்சிறந்தவரும், வேதாத்தியயனத்தி லிடைவிடாது செல்லுஞ்சிந்தையையுடையவரும், நாட்டியசாத்திரத்தை நன்குணர்ந்தவருமாகிய பரதமுனிவர் ஒருநாள் செபதபங்கள் முடித்துத்த மது குமாரர்கள் புடைசூழவிருக்குஞ்சமையத்தில் பஞ்சேந்திரியங்களையு மனதையு மடக்கித் தம்வசப்படுத்தும் வலிமைபடைத்த மகாத்துமாக்களாகிய ஆத்திரேயர்முதலிய முனிபுங்கவர்கள் அவரையடைந்து வணங்கி “ஒஸ்வாமி! தேவரீரால் வேதார்த்தங்களை யடக்கிச்செய்யப்பட்டதாகிய நாட்டியவேதத்தின் உற்பத்தியாது?

அதுயார்பொருட்டுச் செய்யப்பட்டது? அதன் அங்கங்களியாவை? அதன்பிரயோசனம்யாது? அதன்பிரயோகம்எவ்வகைத்து? என்ற விவற்றினுண்மையை யெங்கட்குக் கூறியருளல் வேண்டும்" என்று வேண்டிக் கொண்டார்கள். அம்முனிவர்களது வசனத்தைக்கேட்டவராகிய பரதமுனிவரும் நாட்டியவேதத்திலுற்பத்தியை யவர்களுக்குக்கூறுபவராகி யவர்களைப்பார்த்து "ஓமுனிசிரேட்டர்களே! நீவிர் சுசியுடையவர்களும் மனதையடக்கியவர்களுமாதலி னுங்களுக்கு அப்பிரமதேவரால் நியமிக்கப்பட்டதாகிய நாட்டியவேதத்தைச் சுருக்கமாகச் சொல்லுகின்றேன்" என்று சொல்லத்தொடங்கினார்.

முன்னொருகாலத்துச் சுவாயம்பு மனுவந்தரத்துக் கிருதயுக முடிந்து வைவச்சுதமனுவின்காலந்தொடங்கிய திரேதாயுகாரம்பத்தில் சுகமுந் துக்கமும் பொருந்தியதாயஉலகத்தில் அழுக்காறுங் கோபமுமே நிறைந்துங், கிராமியதர்மங்க ளெல்லாங் காமம் லோபம் இவைகளின் வசப்பட்டனவாயும், லோகபாலர்களாய அரசர்களால் நிலைநிறுத்தப்பெற்ற சம்புத்தீவானது தேவர்தானவர் கந்தருவர் இயக்கர் அரக்கர் நாகர்முதலியவர்களின் கீழ்ப்பட்டதாகவும் ஆயின. அதனைக்கண்ட இந்திரன்முதலியதேவர்கள் பிரமதேவரை யடுத்து வணங்கி "ஓஸ்வாமி! கண்ணுக்குஞ்செவிக்கு மின்பத்தைத்தருவதாகிய ஓர் பொழுதுபோக்காகும் விளையாட்டில் விருப்புற்றேம். அதுவும் வேதங்களுக்குமாறுபடாததாயுந் தாழ்ந்த வருணத்தவராகிய சூத்திரர்களாற் கேட்டற்கருகமானதுமாயிருத்தல்வேண்டும். ஆதலின்வேறாக இந்த ஐந்தாம் வேதத்தை எல்லாவருணத்தார்க்குமுரியதாகச் செய்தருளல்வேண்டும்" என்றுபிரார்த்தித்தார்கள். பிரமதேவரும் "அங்ஙனமேயாகுக" எனக்கூறி யிந்திராதியர்க்கு விடைகொடுத்தனுப்பி, பின்புதாம் யோகத்திலமர்ந்து நான்குவேதங்களையு மனதிலெண்ணினார். வேதங்களைச் சிந்தனைசெய்தவராகிய அப்பிரமா அறம் பொருளின்பங்களின் வழிப்பட்டதுங் கீர்த்தியைத்தருவதும் இதோபதேசங்களடங்கியதுஞ் சுருக்கமானதும் உலகத்துச்செயற்பாலனவாகியகருமங்களை யெடுத்துக்காட்டுவதுமாகிய நாட்டியமென்னும் பெயர்பெறும் ஐந்தாம்வேதத்தைச்செய்வே னெனச்சங்கற்பித்துக் கொண்டு இருக்கு வேதத்தினின்று பாட்டுக்களையுஞ் சாம வேதத்திலிருந்துஇசையையும், யஜுர் வேதத்தினின்று அபிநயங்களையு மற்றைய அதர்வ வேதத்தினின்று ரசங்களையுங்கிரகித்து இருக்காதி நான்கையு மங்கங்களாக்கொண்ட நாட்டியவேதத்தைச் செய்தருளினார். அங்ஙனம் வேதோபவேதங்களின் பொருளையனுசரித்து அவைகள் நிலைபெறற்குக்காரணமாகத் தாமியற்றிய நாட்டிய சாத்திரத்தினை நாரதமுனிவருக்குபதேசித்தனர். அவ்வண்ணமுபதேசிக்கப்பெற்றவராகிய நாரதமுனிவர் மீட்டும்வணங்கி "ஸ்வாமி; தேவரீரால் நாட்டிய சாத்திரத்தை அனுக்கிரகிக்கப் பெற்றேனாயினும் அதனைப் பிரயோகிக்குமுறையாது? அதற்கியான்யாதுசெய்வேன்" என்று பிரார்த்தித்தார். பிரமதேவரும். "ஓநாரதனே! இப்போது வருவதாகிய இந்திரனது விழாக்கொண்டாட்டத்தில் இந்நாட்டிய சாத்திரம் பிரயோகத்தில் வருவதாக" எனஅருளிச்செய்தார். அதன்பின்பு, ஓமுனிசிரேட்டர்களே! தேவர்களு மசுரர்களுநெருங்கியுள்ள அவ்வுற்சவத்தில் ஆசிபூர்வமாகிய நாந்தியைமுதலிற்படித்து, பின்புதேவாசுரயுத்தத்தை அதற்குரிய வொலிக்குறிப்புகளெல்லாந் தோன்ற நடித்துக் காட்டினேம். அதனால் அச்சபையில் வந்திருந்த பிரமாமுதலிய தேவர்களெல்லாமெங்கள் செய்கையின் மிகச்சந்தோஷித்தவர்களாகி எனக்குமென்புதல்வர்க்கு மொவ்வொருவரு மொவ்வோர்சம்மானஞ்செய்தார்கள்.

இங்ஙனம் அசுரவதையை (நாட்டியத்திற்) பிரயோகிக்கஆரம்பித்தபொழுது அங்குநெருங்கியவர்களாகிய அசுரர்களெல்லாங் கோபமுற்று "இவ்விதநாட்டியத்திலெங்கட்கிச்சையன்று. இதுவெங்கட்குவேண்டியதன்றெ" னஉரைத்து அனேகவிக்கினங்களைச் செய்வாராயினர். அவ்வசுரருடன் வந்தவர்களாகிய மாயங்களில் வல்லுநர்கள் நிருத்தஞ்செய்வோரின் வாக்குச்செயல் எண்ணமாகியவற்றைத் தம்பித்துவிட்டார்கள். இங்ஙனச் சூத்திரதாரனுடைய செயல்குறைந்ததைத் தேவராசன் பார்த்து நாட்டியப்பிரயோகத்திற் பழுதுற்றதெதனாலெனத் தியானத்தானுற்று நோக்கியபொழுது அச்சபையானது விக்கினங்களாற் சூழப்பட்டதாயுஞ்சூத்திரதாரன் அறிவுநட்டமடைந்து சடபுத்தியுடையனாகியு மிருத்தலைக்கண்டு மகாகோபங்கொண்டெழுந்து அங்குநாட்டியிருந்த தன்கொடியைப் பறித்தெடுத்து அதனாலரங்கத்துவந்திருந்த அசுரர்களையெல்லாமடித்து அவர்கள்தேகங்களை முரித்தான். அசுரர்களுமவர் செய்தவிக்கினங்களு நீங்

கியபின் இந்திரன் தேவர்களைப்பார்த்து "ஓதேவர்களே! உங்கட்குக் கிடைத்த இவ்வாயுத மிகத்திவ்வியமானது. இதனாலசுரர்கள் தேகமொடிந்து மெலிவடைந்தமையின் இதற்குச்சர்ச்சரமெனும் பெருண்டாக. இதுவேயெல்லோருக்குங் காவலாயிருக்குக" எனக்கூறி மீளவு நாட்டியத்தை யாரம்பிக்கும்படிஏவுதலும் நிருத்தர்கள் நீங்காதெஞ்சி நின்றவிக்கினங்களுக்கு மிகவுமஞ்சிநிற்றலையும் அசுரர்களும் விக்கினஞ்செய்தற்காகக் கொண்டு நிற்குமுறுதிப் பாட்டையும்யான்பார்த்து புத்திரர்சகிதம் பிரமதேவரிடஞ்சென்று வணங்கி "ஹேபகவந்! இந்நாட்டியத்தினை பழிவுசெய்தற்கனேக இடையூறுகளுண்டாயின. அதனை பவைகளினின்று நன்குரக்ஷிக்குமுறையை எங்கட்குக்கட்டளையிட்டருளவேண்டு" மெனவேண்டினேன். உடனே பிரமதேவரும் விசுவகர்மாவையழைத்து அழகிய ஓர் நாட்டியத்தை யியற்றுமாறு ஆஞ்ஞாபித்தலும் அவனும்விரைந்து சிறிதுகாலத்துள் சகல இலக்கணங்களோடு கூடியதும், விசாலமுள்ளதுமான ஓர் நல்லநாட்டிய கிருகத்தை நிருமித்துப் பிரமதேவரிடத்துச்சென்று வணங்கித் தானியற்றிய நாட்டியசாலையைப்பார்க்க எழுந்தருளவேண்டுமெனப் பிரார்த்தித்தான். அப்பொழுது பரமேட்டியும் இந்திரன் முதலியதேவர்கள் புடைசூழஎழுந்துசென்று நாட்டியமண்டபத்தினைப் பார்த்து மகிழ்ந்து நின்றதேவர்களைநோக்கி"அம்மண்டபத்தை ஒவ்வொருவருந் தங்கடங்கள் அமிசங்களைக்கொண்டு காவல்செய்தல் வேண்டும்" எனக்கட்டளையிட்டனர். அவர்களுமங்ஙனமே செய்திருந்தார்கள்.

இப்படியே யெல்லோருங்காவல்பூண்டிருக்கும் பொழுது தேவர்கள் பிதாமகனைவணங்கிக்கூறுவார்கள் "ஒஸ்வாமி! விக்கினஞ்செய்பவர்களாகுமிவ்வசுரரிடத்து முதலிற்சாமோபாயத்தையும், பின்தானோபாயமும், அதன்பின்பேதத்தையும் அதற்கப்புறமே தண்டோபாயத்தையுங் கைக்கொள்ளல்வேண்டும்." இதனைக்கேட்டுச் சதுமுகன் அசுரர்களைநோக்கி "ஓ அசுரர்களே! நீவிர்இந்நாட்டியத்தை விநாசப்படுத்தும்படிநிற்றல் என்னை" எனவினவினர். பிரமாவின்வசனத்தைக்கேட்ட விரூபாக்கனென்னுமசுரன்சொல்வான்"ஓ சகலலோகபிதாவே! தேவர்கள்பொருட்டாகத் தேவரீர் இந்நாட்டியத்தையியற்றினீர். அவர்களின் வேண்டுகோளுக்கிசைந்து எங்களையுநீக்கிவிட்டீர்.

முன்னர்த்தேவரீரிடத்தே தோன்றியஎங்களுக்கும் அத்தேவர்களுக்குப்போலச் செய்தருளல்வேண்டும். இதுவேஎங்கள்குறை" எனக்கூறிய விரூபாக்கன்வார்த்தையைக்கேட்டுப் பிரமாகூறுவார் "ஓ அசுரர்களே! நீங்கள் கோபித்தல்வேண்டாம் [illegible] தைவிடுங்கள்; உங்கட்குந்தேவர்கட்குமுடைய [illegible] வேற்பாட்டுக்கிசைய இந்நாட்டியவேதஞ் செய்யப்பட்டது. இதில் உங்கட்குந் தேவர்க்குமொரேயிடத்திலேயே ரமிப்பு எங்ஙனமுண்டாகும். இந்நாட்டியமானது மூன்றுலகிலுமுள்ளாரது மனோவிகாரங்களையுமுள்ளடக்கியது. சிலவிடத்துப்புகழ்ச்சியுஞ் சிலவிடத்து விளையாட்டுஞ் சிலவிடத்துக்கீதமுஞ் சிலவிடத்துக்காமமுஞ் சிலவிடத்துயுத்தமுதலியனவும் அதிகரித்துநிற்கும். தருமவழிநிற்போர்க்குத் தருமத்தையு மின்பத்தைத்தேடுபவர்க் கின்பத்தையுந் துட்டர்களுக்குநிக்கிரகமும் மதம்பிடித்தவர்க்கு அடக்கத்தையும் இளையோர்க்குஉற்சாகத்தையுந் துக்கத்தினாற் பீடிக்கப்பட்டார்க்குத் தைரியத்தையும் வித்வான்களுக்குச் சாமர்த்தியத்தையும்எல்லோர்க்குஞ் சீவனசத்தியையுங்கொடுக்கும்படியாக நாநாவித ரசங்களையுடையதாயும் பலவிதநிலைகளையும் உலகத்துப்பலவேறு செயல்களையும் குறிப்பிற்காட்டுவதாகவும் இந்நாட்டியவேதஞ் செய்யப்பட்டது. அதுவுமன்றி உலகத்துள்ள உத்தமர் மத்திமர் அதமர் என்னுமூவகையினர் செய்கையைக் காட்டுவதாயும் இதமானநீதிகளைக் கூறுவதாயுந் தைரியம் பலம் விநோதமுதலியவைகளைச்செய்வதாயுந் துக்கமுடையோர்க்குஞ் சமர்த்தர்க்குஞ் சோகப்பட்டோர்க்கு மெலிந்தவர்க்குங் காலங்களில் விச்சிராந்தியை (ஆறுதல்) த்தருவதாகவுமுள்ளது. அதுமட்டோ! தருமகுணங் கீர்த்தி ஆயுசு புத்தி விருத்திமுதலியனவு மிதனாலுண்டாம். இந்நாட்டியத்துக்காணப்படாதனவாகிய கேள்விசெய்கைவித்தைகலையோகமுதலியன அவ்வவைக்குரிய சிறப்பினைப்பொருந்தா. ஆகையால் அசுரர்களே! யானியற்றிய இந்நாட்டியமின்றுச்செய்தல் கூடாதென நீவிர்தேவர்களோடு கோபித்தல்வேண்டாம். இந்நாட்டியமானது தேவர்களுமசுரர்களுந் தங்களிராச்சியத்தை யாளுமுறையையும் உலகத்துக்குச் சுபாவமாயுள்ளசுகதுக்கங்களை அபிநய மூலமாகக் காட்டுவதாம். மேலுமிது வேதபுராண இதிகாசங்களின் பொருள்களைக்கற்பித்து உலகத்துக்கு விநோதவியாசத்தாற்காட்டும்" என்று

கூறித்தேவர்களைப்பார்த்து "அரங்கபூமிக்குவேண்டிய மந்திரமோ பலிவகைகளைச்செய்யாது அதற்குள்பிரவேசித்தல் கூடாது.எவன் அரங்கபூமிக்கு வேண்டியபூசையைச் செய்யாதுவிடுகிறானோ அவன் எவ்வளவு பெருமையுடையனாயினுந் தாழ்வினையடைவான்" என்றிவ்வாறு அருளியவ்வரங்கத்துக்குரியபூசையைச் செய்யுமாறு எனக்குக் கட்டளையிட்டனர்.

நாட்டியோற்பத்தி அத்தியாய முற்றிற்று.

தி. சதாசிவஐயர்,
யாழ்ப்பாணம்.

புராதன இந்தியா.

[பங்களூர்-ஸ்ரீமாந் S. கிருஷ்ணசாமி ஐயங்காரவர்கள், M. A. எழுதியது.]

(௬-ம் தொகுதி ௧௧-ம் பகுதி 525-ம்பக்கத்தொடர்ச்சி.)

சுங்கணவ வம்சத்தியர் காலம் இத்தேயத்து ஸம்ஸ்கிருத பாஷைக்குப் பிரத்தியுஜ்ஜீவந காலமாய் விளங்கியதுமன்றி, விக்கிரமாதித்தியன் இக்காலத்தில் வதிந்தானென்னுங் கர்ணபரம்பரைக்கு ஆஸ்பதங் கொடுப்பதாகவுமிருக்கிறது. இக்காலமே புட்கலகம் பெற்ற காலமாயிருந்தது. ஆசியராஜாங்கம், ஸிலியூகஸ் (selucus) வழிவந்தோர் காலத்திலேயே யுற்றதாழ்வு, மத்திய ஆசியதேயங்களினுணரப்பெற்று இந்தியாவினு மறிவுறுத்தப்பட்டது. ஆசியவிஜயயாத்திரை செய்து ரோமகதேயத்தாரோடு தானே விளைவித்துக்கொண்ட பெரும் போரில் ஆண்டிஸிகஸ் (Antiochus) என்பான் சீரழிவு பெற்றான். இவனைத்தொடர்ந்தாண்டோர் நாளில் ஆஸ்ரகிஸ் (Arsakes) என்பானால் பார்த்தியாவும், (Parthia) தன் அரசப்பிரதிநிதியினாலேயே பாக்டிரியா (Bactria) வும், ஆகிய இவ்விரண்டு மண்டலங்களுந் தனித்தேசங்களாய் நிலைகொண்டன. பாக்டிரிய பிரதிநிதி ஸிந்துநதிக்கரைவரை படையெடுத்து வந்து, தன்மகனாலேயே கொலையுண்டான்.

வனுக்குப்பின் வந்தோனாய மீனாண்டர் என்பவன் தான் புஷ்யமித்திர ஆதிபத்யத்தை யெதிர்த்து, யூஎச்சி (Yuechi) என்பவர்களாலுந்தப்பட்டு சகர்கள் குழப்பத்தால், பின்திரும்பிப் போவானாயினான். இச்சகர்கள் தான் இந்தியதேசம் புகுந்து பஞ்சநதத்திலும் ஸிந்துகீழ்த்தேயங்களிலும், பார்த்திய மித்திரடேட்டிஸ் (Mithridates) என்னு மரசனாணைக்குட்பட்ட சில ராஜ்யங்களில் நிலைபெற்றார்கள். இச்சகர்களை பின்னுந் தப்பிச் சகஸ்தானம்என்னுமிடத்தில் கடைசியாய் நிலைகொண்டார்கள். இப்பெருவிளைவில் மாளவதேயத்தரையனொருவன் புகழ்வாய்ந்து, காளிதாஸன் முதலாய கவிகட்குப் பெருவள்ளலாய் நின்று, நன்றியறியும் நன்மக்களால் இத்தேயத்தை யுய்வித்தோனென்று பெயர்வாய்ந்திருத்தல் கூடும். ஆயினும் க்ஷேத்திரபர் என்று பேர்வாய்ந்த சில சகஜனங்கள், ஸிந்துநதியின் வலபுறம் நிலைபெற்று தக்ஷிணசரித்திரத்தில் நடைபெற்றோராவர்.

பஞ்சநதத்தில் நிலைபெற்ற சகரர்கள் யூஎட்சியர் குழுவொன்றால் ஓட்டப்பட்டார்கள். சுமார் கி. பி. 50-௵த்தின் பிறகு யூஎட்சியரே அங்கு நிலைகொண்டதனால் இந்தியதேயம் ஒருபால் ரோமர்களோடும் மற்றொருபால் சீனதேயத்தாரோடும் அயற்பட்டது. காந்தார அரசவுரிமையில் நிலைபெற்றவனும் யூஎட்சி வமிசத்தில் மூன்றாவனுமான கானிஷ்கன் என்போன் சிறிதுசிறிதாய் இவ்வரசர் ஆதிக்கமன்றி இருமருங்கும் சமுத்திரம்பெற்ற தக்ஷிணத்தை யெல்லா முள்ளடக்கிக்கொண்டான். அசோகனுக்குப்பின்னாள் அதிராஜ்யமானது அடைந்த கீழ்மைக்கு இவ்வாந்திரர்களும் இயன்றமட்டும் முயன்றவர்களாய் கி. மு. இரண்டாம் நூற்றாண்டின் இடையே மகதத்தின்மேற் படைசெலுத்திய கலிங்ககாரவேலனுக் குதவிபுரிந்தார்கள். கண்வர்கள் கவிழவே ஆந்திரர்கள், மீனாண்டர் செலுத்திவந்த யவனர்களினின்றும் கலைகளாலும், நதிகளாலும் இருபாலும் காப்படைந்தவர்களாய், வடக்கே புரண்டு மகதத்தை யாக்கிரமத்துக்கொண்டனர். மேற்கூறிய செய்திகள் பலவும் நிகழ்ந்த காலமெல்லாம் உள்நாட்டாந்தரர்கள் சிறிதும் இடர்ப்படாதவர்களாய் நின்று, பார்த்தியவரசாதீனத்தராய சகக்ஷேத்திரபர்களை மாத்திரம் ஓங்கவொண்ணாமற் செய்வதில் முயற்சியுடையராயிருந்தனர். இம்முயற்சிகட்கிணங்க கீழ்ப்புறமிருந்த அமராவதிக்கண்மைத்தான கடகத்தினின்றும் வேறொரு ராஜதானியைக் கோதாவிரிக்கரை பைதானில் நிருமித்து வதிந்தனர்.

இரண்டாம் விலிவாயகூரனேமுதலாய மினாந்தர ஆட்சியாளர்கள் இச்சகர்களோடு போர்செய்து வெற்றிபெற்றவர்களானார்கள். இவ்விலிவாயகூரனே மலையத்துவரைக்கும் பரவிக்கிடந்த க்ஷேத்திரபர் பெருமையைக்குறைத்தான். இவன் மகனுமிச்செய்தியிலேயே முயன்றனன். இன்னுமிரண்டு தலைமுறைக்குப் பிற்பட்டு கனிஷ்டக வம்சத்திய கூஷணர்கள் முடிவுபெற்றகாலத்திலேயே ஆந்திரரும் அழிவடைந்தனர்.

ஆந்திரராஜ்யத்துக்கீசான்யத்தில் பார்த்தியரேயென்று கொள்ளப்பெற்ற பல்லவர், இக்காலத்திற்றான் தோன்றுகிறார்கள். இவர்களுக்கு சம்பந்தப்பட்ட பிராசீனலேகங்கள் காஞ்சிக்கு வெகுவாய் வடபாற்பட்ட விடங்களினின்று தான் வெளிவந்திருக்கின்றன. ஏனென்றால் காஞ்சி பல்லவராஜதானியானது சிறிதுகாலம் பிற்பட்டுத்தான். பல்லவர்களின்னும் ராஜ்ய நீதிகளில் மேன்மைபெற்றோராகவில்லை.

இப்பல்லவநாட்டுக்குத் தென்பால் அனேக சிற்றரசுகளுமதற்குத் தென்பால் மூவேந்தர்களும் நிலைபெற்றிருந்தனர். இவர்களுக்குத் தென்பாற்கிடந்தது ஈழம். சேரசோழ, பாண்டியராய மூவேந்தர்களும், ஆரியப்படைதந்து வெற்றிபெற்றகூற்று, ஆந்தரர்களுக்கொருகாலுதவிசெய்திருத்தல் கூடுமென்பதை வற்புறுத்தும். இவர்கட்குச்சிறிது பின்வந்து, கொடுங்கலூரினின்றும் கேரளமாண்ட செங்குட்டுவன் சிலவாரியமன்னரைக் கங்கையம்பேர்யாற்றுக் கரையிடம் வென்றதாகத் தமிழ்க்கவிஞர் சொல்லியுள்ளார். இம்மூவேந்தரும் ஒருவரோடொருவர் முரண்பட்டவராக, சரித்திர சாதனங்களேற்பட்ட காலத்துச் சோழவரசே மேலிட்டதாகத் தெரியவருகிறது. இம்மேன்மை சோழரினின்றும், சேரருக்கு கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் சென்றது. இதுகாறும் எமக்குதவிய சாதனங்களையெல்லாங் கொண்டுற்றுநோக்கின் இக்காலத்திற்றான் தமிழும், மற்றப் பிராகிருத பாஷைகளுஞ் சிறப்புற்றோங்கிய காலமெனத் தெளிவுறப்பெறும். பிராகிருதங்களிலொன்றாகிய பைசாசிபாஷையிற்றான் ஆந்தரர்காலத்தில் பிரகத் கதை (பெருங்கதை) யெழுதப்பட்டுத் தமிழிலும் மொழிபெயர்க்கப்பட்டது.

எம்மாற் பகுக்கப்பட்ட இந்தியதேய மூன்று பாகங்களிலும் ஒருமிக்க கி. பி. மூன்றாம் நூற்றாண்டின் நிகழ்ச்சிச் சாதனங்களின்மை பரிதபிக்கத்தகுந்த விஷயமேயாகும். மறுபடியும் உற்றுநோக்கக்கிடைக்குங்காலத்தில், தெற்கே பல்லவர்களுயர்ந்தோங்கியவர்களாயும், நடுவில் சளுக்கியர்களும், வடக்கில் குப்தர்களும் தோன்றுகிறார்கள். இடையே கிடந்த இவ்வநாயகத்துவத்துக்குப் பின்வருமாறு காரணங்கூறவியலும். பார்த்தியதேயத்து ஆர்ஸக்கியராஜவம்சமழிய, பாரஸீக ஸர்ஸேனியர்கள் நிலைபெற்று, சகஸ்தானத்திய சகர்களை நெருக்கவே அவர்களகன்று சிந்துக்கரையிலும், அதற்குத் தென்பாற்பட்ட குஜராத் தேயத்திலும் குடியேறிய தம்மினத்தாருடன் கூடினார்கள். இக்குடியேற்றம் மேற்குமாகாணங்களையெல்லாம் குழம்பச்செய்திருத்தல் வேண்டும். இவ்விடமிருந்து சகர்கள் மாளவதேயத்துட் புகுந்ததுடன், தக்ஷிணத்திலும் புகுவது அரிதன்று. இதுதான் தக்ஷிணராஜ்ய முடிவுக்குக்காரணம். இம்மாதிரியாகவே சகர்கள் பஞ்சநதம் புகவே கூஷணவம்சமும் நிலைகுலைந்தது. இந்நிலைமையில் இச்சகப் பெருவெள்ளத்தைத் தடைப்படுத்த எங்கு எதிர்நோக்கலியல்போ அங்கேயேதான் குப்தர்கள் தோன்றினார்கள். தக்ஷிணத்திலும் விஜ்ஜயபுரத்தில் சலுக்கியர்கள் தேன்றியக்கிருந்து வடபாலகன்றார்கள். இக்குழப்பத்தினின்றுமே நெல்லூர் ஜில்லாப்பிராந்தியத்தில் அயற்றேயத்திய பல்லவர்களும் தோன்றியிருத்தல் கூடும்.

இத்தேயத்தில் பல்லவர்போர்முனைவே குடிகளின் எதிர்ப்புக்குக் காரணமாயிருத்தல்வேண்டும். இவ்வெதிர்ப்பைத் தொடுத்தமைத்தவனே இப்பூசலினின்றும் மேன்மையடைந்து வெளிநின்றவனானான். தென்னிந்தியாவிலுயர்ந்தோங்கிய சேரர்கள், சோழபாண்டியர்களால் ஒருகால்த்திலே தகர்க்கப்பெற்று, மூவர்களும் ஒருங்கு வலியழிந்தனர். இவ்வாறு ஒரு பேராட்சியுடைந்து அனேக சிற்றரசுகளாய் மாறுபட்டு, புதிதாய் உதித்துயர்வுபெறும் பல்லவர்க்கிரையாய்நின்றன. ஆகையினால் கி. பி. நான்காம் நூற்றாண்டுமுதல் புராதன நிகழ்ச்சிகள் விளங்கப்பெறுங்கால் தக்ஷிணத்துக்கும் இந்துஸ்தானுக்கு மிடையே சகரர்கள் ஆட்படித்தாற்போல் நின்றனர். இந்நாடுகளில் க்ஷேத்திரபர் என்று பெயர்வாய்ந்த இச்சகர்கள் தக்ஷி

ணா ஆந்தரர்களை யழியச்செய்து விக்கிரமாதித்தனாட்சிக்குட் கிடந்த மாளவதேசத்தையும் உஜ்ஜயினியையும் ஆக்கிரமித்து நிலைபெற்றார்கள். கிறிஸ்தாப்த முதலிலேயே நிலைகொண்டுநின்று, வெகுமுயற்சியால் முடிவிலாந்தரர்களை வென்று, க்ஷத்திரபவரசர்களில் மிச்சிறந்து விளங்கிய ருத்திரதாமன் ஆட்சியில் பேரரசாக நிலைபெற்றனர். இவ்வரசன் காலத்திய சாஸனங்களிலொன்று அக்கால்த்திய நிகழ்ச்சிகளுக்கு அற்புத விளக்கமாய் நிலவியது. படைகள் இங்குமங்கும் போய்க்கொண்டேநின்றன; அரசவம்சங்களுயர்ந்தோங்கியும் தாழ்ந்தழிந்தும் போயின; ஆயினும் அமைதிபெற்ற வேளாண்மை, கைத்தொழில்களோ இடையூறின்றி நடைபெற்றுவந்தன. அசோகராஜன் காலத்தில் கட்டப்பட்டு, வெள்ளமேலீட்டாற் பிளவுண்ட ஏரியொன்றைப் பழுதுபார்த்துச் சீர்திருத்திய விஷயத்தைப்பற்றியதிச் சாஸனம். அயற்றேயத்தானாயினும் ருத்திரதாமன் இதன் திருத்தத்துக்கேற்பாடு செய்ததுதவிர, தேயவழக்கம்போல் நேர்மையாய் நிலைபெறுவதற்காகத் தகுந்த நிபந்தனைகளுஞ் செய்தான். இப்படியாட்சி நிருவாஹம், விவேகம்வாய்ந்து தொடர்ச்சி பெறாமற் போயிருக்குமேயாயின், ஒன்றன்மேலொன்றாய் வந்த போர்யாத்திரைகளினின்று மித்தேயத்திற்கு விளைந்திருக்கும் கேடுகள் வெகுமடங்கதிகமாயிருந்திருத்தல் வேண்டுமென்பது திண்ணம்.

மாளவதேயத்தெதிரிடைநின்ற நாட்டிற்றான் இக்காலத்து விளங்கிய பெரிய அரசவம்சம் தோன்றியது. குப்தனென்னுமியற்பெயரோ, பட்டப்பெயரோவாய்ந்த ஆந்திரவதிராஜ்யத்துக்குட்பட்ட ஒருவன், பிரயாகைக்குக் கொஞ்சம் தென்மேற்காயுள்ள கோசாம்பியைச்சுற்றிய ஒரு சிறு நாட்டதிகாரியிருந்தனன்—போலும். இவனுமிவன் மகனும் அங்கே வதிந்திறந்தனர். இவன் பேரனான சந்திரகுப்தனென்பான் ஓர் அரசவம்சத்துக்கு மூலபுருஷனாய் நின்றான். இவன் வைசாலிய அரசவம்சத்துப் பெண்ணொருத்தியை மணந்து இதனால் பெற்ற பிரபாவத்தாலும் வல்லாண்மையாலும், பூர்வீக மகதராஜ்யம் முழுமையுமாட்சிபெற்று நின்றான். மத்திய இந்திய க்ஷத்திரபர்களை முன்னிடவொண்ணாமற் செய்ததன்றி இச்சகர்கள் வன்மையை வேரொடுகளைந்தான். இவ்வளவு வெற்றியடையவே தன்பேர்கொண்ட சகமொன்றை நிலைபெறச்செய்து, தன்னாட்சிக்காலமுழுமையும் மகதம் மௌரியகாலத்தியவிரிவுபெற விடாமுயற்சிசெய்து வருவோனாயினான். இதில் சித்திபெற்றவனாய்த் தன்னாட்சி நிர்வாகத்திற் றன்மகனாகிய ஸமுத்திரகுப்தனையும் சேர்த்துக்கொண்டு மகதாதிபத்யத்தை நிலைநிறுத்திப் போந்தான்.

இச்சமுத்திரகுப்தனோவெனின், வெற்றியாளனாய் விளங்கியதோடுங்கூட ஆட்சிநிர்வாகத்திலும் திறமைபெற்று நின்றோனாயினான். தவிர, தகப்பன் மகனிருவரும் சிற்பகலைகளிலும் சாமர்த்தியம் வாய்ந்தவர்கள். சமுத்திரகுப்தனை "ரூபகிருத்" என்றுவர்ணிப்பார்கள். இப்பதம் சாதாரணமாய் சில்பியென்று பொருள்பட்டபோதிலும், நாடககர்த்தனென்று வித்வான்கள் கருத்துக்கொண்டுள்ளார். தன்னாட்சி முதலிலேயே இந்தியதேயத்தையெல்லாம் ஒருகுடைக்கீழ்ப்படுத்தும் அபிப்பிராயமே யுட்கொண்டு, இதை நிறைவுபெறச் செய்யத் தன்னாலியலுமென்னும் தைரியத்தினின்று மூண்டாய ஆவலோடும் முயல்வோனாயினான். தன் தகப்பன் மேற்குச்சமுத்திரம் வரையும் கொண்டுபோய் நிறுத்திய அதிராஜ்யத்தைத்தான் கீழ்எல்லையில் காமரூபம், தவகம், ஸமத்தம் என்னு மூன்று சுவதந்திர உடம்பாடுடைய அரசுகளைநிறுத்திப், பஞ்சப்பஞ்சநதம் நீங்கிய இந்துஸ்தானமுழுமையும் ஆட்படுத்திக்கொண்டான். இது முடிவுபெறவே விஜயயாத்திரைசெய்வான் தென்புலம் புறப்பட்டான். பாடலிபுரத்தினின்றும் புறப்பட்டு, கீழ்க்கடற்கரையோரம் மகாநதியொழுகும் நாடெல்லாங்கடந்து, பல்லவர் நிலைபெற்ற தென்காஞ்சிவரைக்கும் சென்று, வடமேற்காகத்திரும்பி மாராட்டியத்தையும் கான்தேசத்தையுங் கடந்து தன்ராஜ்யம்புகுந்தான். தானிவ்வாறு புகுந்து சென்ற பதினொரு அரசாட்சியினின்றும் அரசக்கடமை பெற்று, அவ்வரசர்களை அவருரிமையிலேயே நிலைபெறச்செய்து போந்தான். பிறகு தன்னரசுபெற்ற மாளவ, ராஜஸ்தான பஞ்சநத ஜனக்கூறுகளோடும் திருப்திகரமான உடம்படிக்கைகள் பெற்று, நேபாளதேயத்தையும், அம்மலையடிக் குழுவினையும் இவ்வேற்பாட்டிற்கிணங்கச் செய்தான். இதுவேயன்றி, காந்தார, காபூல் கூஷ்ண அரசர்களோடும், ஆக்ஸஸ் (Oxers) நதிக்கரையிலாண்ட கூஷ்ண அதீசனோடுங்கூட சந்திபெற்றவனாயிருந்தனன். அன்றியும் தெற்கே ஈழத்திய மேகவர்ணனிடமிருந்து, கயையில் பௌத்தமடங்கட்ட உத்தர

வுபெற வந்த ராயபாரத்தையுமங்கீகரித்தனன். இவ்வளவு போராற்றலடைந்து, தன் பெருஞ்செய்கைகளையெல்லாம், சிறந்த ஸம்ஸ்கிருத கவிகளிலமைதிபெறச்செய்து, அல்லாஹாபாத்திலமைந்து கிடந்த, அசோககம்பத்தில் வரைவித்து நிறுத்தினன். சமுத்திரகுப்தன் விண்பெருமை எமக்கு இன்றியமையாப்பேருபகாரமாய் நின்றது. இவன்றோன்றலாய சந்திரகுப்த விக்கிரமாதித்தனும், தந்தையைப் போலவே நீண்டவாட்சிபெற்று, இருதலைமுறையாய் வந்த ஏகாதிபத்தியத்தைக் குறைவிடாமல் நிறுத்தி, பண்டிதரால் காளிதாஸன்முதலானோர்கட்கு வேளாண்மைபூண்ட விக்கிரமாதித்தியனிவனேயென்று கொள்ளவியலுமாறு சிறப்புற்று விளங்கினன். பௌத்தமதமிடர்ப்படுத்தப்பெறாவிடினும், குப்தர்கள் நிலைபெறவே, பிராமணமதமும் ஸம்ஸ்கிருதகலையும் மிகச்செழிப்புற்றோங்கி நின்றன.

ஈழத்திய பௌத்தராய ராயபாரி, நம்பத்தகுந்தவனேயாயின், பௌத்தமதம் வெகுதாழ்ந்த நிலையில் நின்றதாகத்தோன்றும். ஆயினும் சற்றுப் பிற்பட்டு இத்தேயம்புகுந்து தக்ஷசிலையினின்றும் கங்காமுகம் வரை பிரயாணஞ்செய்த பாஹியன் (Fa Hian) என்னும் சீனயாத்திரிகன் மாறுபட்ட கொள்கையுள்ளோனவன். இவ்விஷயமான இந்தயாத்திரிகன் அபிப்பிராயங்களெல்லாம் வேறுவிஷயங்களினிடைப்பட்டுக் கிடப்பதால் விசேஷமாய் நம்பவேண்டியவாயிருக்கின்றன. இது சரியேயாயின் பௌத்தமதம் அவ்வளவு தாழ்வுற்றுக்கிடந்ததாகத் தோன்றவில்லை. குப்த ஆட்சி முழுதும் புகழத்தக்கதாகவே நின்றதாய்த்தோன்றும்; அன்றியும் உயிர்வாங்குங் குற்றங்கள் குறைவுபட்டிருந்ததால், தண்டநீதி தயைபெற்றதாயிருந்தது. தவிர, அரசாட்சியில் பிரஜைகளையிடர்ப்படுத்தும் அம்சங்கள் சிறிதுமிருந்ததாகத் தோன்றவில்லை. குடிகளோவெனில் அதிகமான சுவதந்திரத்தையும், விசேஷமான ஐசுவரியத்தையும் பெற்றுவாழ்ந்தவர்களாய் நின்றார்கள். மார்க்கங்களெல்லாம் பிரயாணிகட்குச்சிறிதுமிடுக்கணின்றிப் பாதுகாக்கப்பெற்றிருந்தனவாதலால், பௌத்தனாயிருந்த போதிலும் தன் நீண்டயாத்திரையெல்லாம் சிறிதுமிடர்ப்படாமல் பாஹியனுக்கு யாத்திரைசெய்வது சுலபமாயிருந்தது. குப்தர்கள் வைஷ்ணவர்களாயிருந்தபோதிலும், பிற இந்திய ஆட்சியாளர்களைப்போலவே எல்லாமதத்தோர்க்கும் ஒருவாறே வள்ளன்மை பூண்டோராயினர். வேற்றுமத ஸஹனம் குணமேயாகுக, குற்றமேயாகுக. மிகவலிவாய்ந்த இந்தவரசவம்சமோவெனின் இவ்விஷயத்தில் வெகுபொறுமைவாய்ந்து நின்றது. பாஹியன் ஸம்ஸ்கிருதம் கற்பதில் சிலவாண்டுகளுழைத்து பௌத்தர்களால் வெகுமதிப்புப்பெற்ற அநேக ஸம்ஸ்கிருதநூல்களைப் பெற்றனன்.

இச்சந்திரகுப்த விக்கிரமாதித்தியன் காலத்திற்றான் உலகவுழற்ச்சிக்குக் காரணமான ஹூணர்கள் ஓரேகாலத்தில் ரோமக ஏகாதிபத்திய எல்லைத்தேயங்கள் ஒருபாலும், குப்த சக்கிராதிபத்திய எல்லையொருபாலுமாக மேல்வீழ்ந்து தாக்கினர். குமாரகுப்தன்காலத்தில் இவர்களாலாய வழிவெல்லாம் சீர்திருத்தம்பெற இவன் மகன் காந்தகுப்தனென்பான் இவர்களைப்பின்னோட்டினன். மறுபடியுமிவர்கள் மேலிடவே குமாரகுப்தன் பின்வாங்கவேண்டியதாயிற்று. தோரமாணன் என்னு அரசனோடு ஹூணர்கள் மாளவத்தில்நிலைகொண்டார்கள். இவர்கள் வழியேநின்ற சகவரசான காந்தாரமும் இவர்களாலிக்காலத்திலேயே யழிவுபெற்றது. இப்படி நிகழ்ந்த இடையூறே காரணமாய்க் கி. பி. 770-௵த்தில் மஹம்மதியராலழிவுண்டவல்லபியரசவம்சம் குஜராத் பிராந்தியத்தில் சேனாபதி பட்டாரகனால் சுவாதீனமான வரசாகநிலைபெற்றது. பிரிவுபெற்றுநின்ற மாளவ ஆட்சியாளனான யசோதர்மனும், மகதத்துள்ளேயே வொடுங்கப்பட்டிருந்த பாலாதித்திய சக்கிரவர்த்தியும் ஒன்றுகூடி தோரமாணன் மகனாகிய பூதமோவென்னும் மிஹிரகுளனைத்தோல்வியடைவித்தார்கள். இம்மிஹிரகுளன் சிறைப்படவே பாலாதித்தியனுதாரத்தன்மையால் மீட்சியடைந்து, பிற்காலமெல்லாம் பழிவாய்ந்து நிற்கும் கொடுங்கோலனாய்க் கோயில்களையும் பௌத்தவிஹாரங்களையுமழித்து, கொடுமையையே யொருதலையாக வளர்த்துவந்தான். ஹூணர்களடிக்கடி தாக்கவே குப்தவதிராஜ்யம் முடிவுபெற்றது. குப்தசரிதத்தை முடித்தகலுமுன், பெரிய அதிராஜ்யத்தை நிருமித்து, சுயேச்சையாகவதிகாரஞ் செலுத்தியவர்களே யாயினும், ஆன்றவறிவோடும் முதிர்ந்தவுதாரத்தோடுமாண்டுவந்த விப்பேரரசவம்சத்தின் ஜீவகாருண்யம் வாய்ந்த பெருஞ்செய்கையொன்றின் விஷயமாய்ப் பாஹ

யன்யாத்திரைக்கோசத்தினின்று மிங்கெடுத்துக்காண்பிப்பது அவர்கட்குச் செய்பவேண்டிய கடப்பாடாயிருக்கிறது. உயிர்களிடம் பெருங்கருணை பூண்ட அசோகனால் நிலைநிறுத்தப்பட்டபடியே, இவர்கள் காலத்திலும் கல்வியும் செல்வமும் வாய்ந்த பெருமக்களால் வைத்திய சாலைகள் நிருமிக்கப்பெற்று நின்றன. 'நல்கூர்வுற்று, ஆதரிப்பாரின்றி வெகுவிதமான நோய்களாலுழன்ற எல்லா ஜனங்களுமிங்கு வருகிறார்கள். இவர்கள் நன்றாயாதரவுபெற்று, வைத்தியன்பார்க்க அவர்கள் வேண்டியவாறு ஆகாரமும் ஔஷதமும் பெறுகிறார்கள். இவ்வாறு சுகமாய்த்தங்கி ஆரோக்கியமடைந்தவுடனே புறப்பட்டுப் போகச்செலவு பெறுவார்கள்." இம்மேற்கோள்விஷயமாய் வேறு சொல்லவேண்டியது அவசியமில்லை. குப்தவழிவு கி. பி. ஆறாம்நூற்றாண்டின் முடிவிலே நிகழ்ந்ததாகும்.

(இன்னும் வரும்.)

௨

பெரியபுராண அரும்பதவிளக்கம்.

(முற்றொடர்ச்சி.)

[பழைய ஏட்டினின்று எடுத்தெழுதப்பட்டவை.]

(௨0௭) திருநாவுக்கரசு நாயனாரானவர் தம்மனத்துள்ள தடுமாற்றத்தைச் சிவனுடைய திருவருளாலறிந்தருளிக் குற்றத்தை நீக்குவார்; "என்று கொலா" மென்றுபாடி நீக்குவார் எங்க.

(௨௩௩) வரன்றல் - கொழித்தல்.

(௨௬௨) தவறுகாலந்தீர்ந்து. மூலம்-முதன்மை.

(௨௬௮) திருக்கடைக்காப்பிலே மதிக்கப்படுகின்ற நீர் "இரக்கமொன்றிலிரெம் பெருமானிரே" என்றுபாடி வணங்குதலும்:

(௨௭௫) பேழ்கணித்தல் - நித்திரையின்றிக்கண்மூடல்.

(௨௮0) பிழைசெய்து காலமறியாது திறப்பித்தேனுக்கல்லது, பக்கத்தேதாம் மறைந்தால் கதவத்தைத் தொண்டானது உறைக்கப் பாடி அடைப்பித்த.

(௨௮௭) உடம்பழுக்கைப் பெருக்கியுழலும் மூதேவிகளாகிய அமணர்கள், கொடுந்தொழிலைச்செய்யும் மாயையில் மிகவல்லவர், அவர்முன் எனக்குச்செய்த கொடுந்தொழிலும் பல.

(௨௮௯) போகும்படி துணிந்து நீரங்கேபோதல் கூடாது. அந்தச் சமணர்களுடைய தீயமாயை.

(௩௨௨) கடு-சிவலிங்கம். கருவார் பிறவிக்கு மூலகாரணமான என்று கோடலுமாம்.

(௩௨௯) சந்திரனும் ஆத்தியும் நெருங்க.

(௩௪௯) காமசாரிகள் - நினைத்துழிச்சஞ்சரிப்போர்.

(௩௫0) கூரியசூல வேலையுடைய. ஆர் - கூர்மை. கைம்மருங்கு - சமீபம்.

(௩௫௧) கதிர்கோளும் - சூரியனை மறைக்கும்.

(௩௫௨) அங்குமுற்றி - அவ்விடத்தைத்தாண்டி. மத்தியமபைதிரம் - நடுநாடு.

(௩௫௬) உஷ்ணகிரணத்தையுடைய பகற்காலத்தில் அக்காட்டில் சூரியகிரணம் பக்கத்தே பரந்து எவ்விடங்களினும் மிக்கபிளப்பினால் நாகலோகத்திற் புகுந்தெரிகின்றன. பொலிந்த அக்கினியைப் போல வருத்தும் பாலையிலுள்ள கருவேல் நிழலையடைந்த பக்கமானது புகுகின்றபகற்காலத்திற் சூரியனுடைய கிரணங்கள் போலும்.

(௩௫௮) மணிபந்து - மணிக்கட்டு.

(௩௭௭) தடங்கொண்டு - தடத்தின் வடிவுகொண்டு.

(௩௭௮) நடு இடை ஆடி - நடுவிடத்தினின்றங்குமிங்கும்போய். நடுவிடையாடி - சிவனெனினுமமையும்.

(௩௮௧) சுவாமியை முன்னேகண்டுகொண்டவராய் அவர்கொடுத்த பொதிசோறுண்ண அளவிறந்த அன்புபெற்றவரும்.

(௩௮௭) நடயாளிகை - நிருத்தமண்டபம்.

(௩௯௪) அன்பர் சூழும் மிக்கநெருக்கில் அவர்காணுமேவணங்கியருளி.

(௪௦௫) பாண்டிமாதேவியாருடைய திருமேனியைத்தீண்ட.

(௪௧௫) அறை கூவுந்திருப்பதிகம் - சரக்கறைத் திருப்பதிகம்.

(௪௧௮) புல்லையும் கல்லையும் பொன்னையும் மணியையும் சொல்லளவில் வேறுபாடறிந்தாரன்றிப் பொருளை ஒன்றாக நினைத்த.

(௪௧௯) தானநிறைந்த சுருதிகளில் தருந்த அலங்காரத்தன்மையையுடைய சங்கீதமாய அமுதைப் பரப்பும் கொவ்வைக்கனி போலும் வாயிலொளிபரப்பி.

(௪௨௦) கற்பக விருக்ஷத்தினழகிய தளிர்போலும் கால்கள் தமக்குப் போகிய அழகிய சாரி செய்தாட, செங்காந்தள் போன்ற விரல்களினபிநயங்களோடு கைகளசைய.

(௪௨௩) உம்மால் - வினைகளே! உங்களால்.

(௪௨௬) பொருந்திய அந்தக்கரணமெல்லாம் ஒருப்பட்டுச்சுவாமியைத் தியானிக்கும் உறுதிப்பாட்டால் தம்முடைய திருவடியின் கீழாகிய தமியேனை.

குலச்சிறை நாயனார் புராணம்.

(௧) நிலையான கொடையினையுடையாரது மணமேற்குடி நிலையான பழைய புகழையுடைய நல்லபாண்டிநாட்டில் செந்நெல் நிறைந்த வயலிற் பொருந்திய இனிய கரும்பினயலே நிலையான கமுகுகளையுடைய மருதநாடு சூழ்ந்தது.

(௨) பெருநம்பியென்று விதந்தோதிய. திண்மைவைப்பு - திடபத்தி.

(௩) காரணம்—மோக்ஷத்திற்குக் காரணம்.

(௪) தத்த மொழுக்கங்களையுடைய அந்தணர் முதலிய நாற்குலத்தாராயினும், அக்குல நெறியில் நீங்கிய சங்கரசாதியாராயினும்.

(௭) பஞ்சாக்கரத்தை வணக்கத்தோடு நாவாலுச்சரிப்பவர். சிவனுடைய பாதங்களை.

(௧௦) புல், நயந்து, அருகு, அந்தர்—எளிய கொள்கையுடைய அருகராகிய சமணரை.

(௧௧) திறத்திலெதைப் போற்றினேன்.

பெருமிழலைக் குறும்பநாயனார் புராணம்.

(௧) மாமரங்களும், நெருங்கிய குலைகளையுடைய தெங்குகளும், பலாமரங்களும், கமுகமரங்களும் சூழ்ந்திருக்கும்படித்தாய் வீதிகடோறும் விபூதியினொளிபரம்ப விளங்குபதியானது, நீதிவழுவா ஒழுக்கத்தையுடையராய் விளங்கும்படியால் நெடிய பூமியில் மேலேவிளங்கும் பழமையையுடையதாகிய மிழலைநாட்டிலுள்ள பெருமிழலையாம்.

(௨) எதிரேற்று—குறையிரந்து. எதிர்கொண்டு அவரதுவரவை ஏற்று என்றலுமாம். முன்னமுணர்ந்து - குறிப்பையறிந்து.

(௪) விதியால் வணங்கி - சுவாமியை விதிப்படி வணங்கி.

(௫) கடப்பாட்டினால் - அறியாத உபயபாதங்களின் கீழ்ப் பிழைக்கும் பொருட்டுச்சேர்வதற்கு மார்க்கமிதுவேயென்று அன்போடு செய்துவந்தார்.

(௬) முதல்வரது பஞ்சாக்ஷரத்தையே உரிமையும் பொருளும் அறிவுமாந்தன்மையவாய்ப்பக் கொண்டு செபித்தார்.

(௮) திருவஞ்சைக்களத்து வீற்றிருக்குஞ் சிவபிரானை வணங்கிச் சுந்தரமூர்த்திநாயனார் தேவாரங்களைப்பாடச் சிவனுடைய திருவருளாற் கயிலையில் அச்சுந்தரமூர்த்திநாயனாருக்கெய்தவரும் பெருவாழ்வை மனத்திற்றெளியும்படி இவ்விடத்திருந்தே அறிந்தார்.

(௧௦) அந்தக்கரணங்கள் நான்குமொன்றுபட்டு, நல்ல அறிவே மேற்பட்டு ஆதாரமாயிருக்கும் பிராணநாடிவழியாகக் கருத்தைப்போகவிட, கபாலநடுவிற் பொருந்தும்படி முன்செய்தயோகாப்பியாசத்தால் வேதரகசியமான பிரமரந்திரம் திறப்ப அநாதிமுதல்வரது திருவடி

களை அடைபவராகிய சுந்தரமூர்த்திநாயனாருக்குமுன்னே தாங் கயிலையையடைந்தார்.

(௧௧) சாயன் மகளிர் - சாயலையுடைய மகளிர்.

காரைக்காலம்மையார் புராணம்

(௧) வளைந்தசங்குகளை திரைசுமந்தெறிய, அதனாற் பெருகிய கழிகளையுடைய நெய்தனிலத்தில் அச்சங்குகள் உலவுகின்றவளம் பெருகும் அழகிய காரைக்கால்.

(௪) பருவத்திலேயே சிவனுடைய பாதங்களுக்கு அடிமை பழகிவருகின்ற உரிமைபெறத் தணிவில்லாதபெரிய மனக்காதலானது ததும்ப வருகின்ற மொழிகளைப்பயின்றார்.

(௫) பாராட்டோடு வளர்கின்றவராய்ச் சிவபெருமானிடத்தே நிறைந்த அன்போடு அழகின் கொழுந்தெழுவதைப்போல வளர்வார்.

(௯) விளையாட்டாய்ப் பழகுபவைகளினெல்லாம் வளர்கின்ற சந்திரனை அணிந்த சடையையுடைய தேவநாயகரது திருவார்த்தைகளிற் பொருந்த வருவனவற்றைப் பழகி.

(௭) சாமுத்திரிகாலக்ஷண நூலுடையார் நல்லனவெனக்கூறும் அழகுநிரப்பி; மகட்பேசல் - விவாகம் பேசல்.

(௧௭) குறை—இன்றியமையாப்பொருள்.

(௨௮) ஒழுக்கம் பொருந்திய கற்புவழியால் நாயகனுடைய வார்த்தையை மறைபாமை மெய்வழியன்று எனச் சொல்லமாட்டாராய் நடுங்குவார்.

(௩௩) செய்வான் போகிக்கொணர்வேனென்று கூற வணிகமாக்கள் மரக்கலஞ் செய்வித்தார்கள்.

(௩௪) மரக்கலத்தை முடித்து அதற்குவேண்டிய மாலுமிமுதலிய தொழில் செய்வாரோடு; சலந்தருகடவுள்—வருணன்.

(௩௫) கன்னிநாடு—பாண்டிநாடு. பட்டினம் - நகரம்.

(௩௮) அளவிறந்தபலபொருளை ஆக்குகின்ற உவமையில்லாத பெரியநிதிகளையெல்லாம் ஒருவழியிற் பெருகும்படி வைத்து.

(௩௯) மனைவியாரது உரிமையைத் தான்முழுதும் நீங்க நினைந்து அவரைத் தெய்வத்தொழுகுலமென்று கருதிச்செயற்பாலதாகிய கடனைச்செய்து அவர்பெயரைப் புதல்விக்கிட்டான்.

(௪௩) காமருகழுனிவீழ்த்து - அழகியதிரைச்சீலையிட்டு.

(௪௮) இவர்மானுடரல்லர், நல்ல பெரிய தெய்வமாதலை.

(௫௦) இவனினைத்த நினைப்பிதுவாயிருக்கின்றது. இனி இவனுக்காகத் தாங்கிய அழகுபொருந்திய மாமிசக்கூட்டத்தை உதறிவிட்டு.

(௫௧) நல்வழியிலறிவுமிக வேண்டினதைப் பெறுவாராயினர். அவர் சரீரத்தடைந்திருந்த அழுக்குள்ளமாமிசம் யாவையும் உதறிவிட்டு எலும்புடம்பாய்.

(௫௨) கணங்களெல்லாங் குணலையிட்டன - பூதங்களெல்லாங் குணலைக் கூத்தாடின.

(௫௩) அற்புதத்திருவந்தாதியைப்பாடி. (எங்ஙனம் பாடி) "பொற்புடைச்செய்யபாத புண்டரீகங்கள்போற்ற, நற்கணத்தினிலொன்றானேனென்று" பாடி.

(௫௪) இரட்டை மாலையந்தாதி—திருவிரட்டை மணிமாலையந்தாதி. அருளானது முன்கூர்வழிப்படும் வழியால் வந்தார்.

(௫௫) கண்டோர் வியந்து பயந்து பக்கத்தை அகன்றோடுவார்கள். தமது வேடத்தன்மையை உள்ளவாறுகூற அம்மையார் கேட்டு, சிவபெருமானென்னையறிவாராயின், என்னுண்மையை அறியாத எண்டிசையிலுள்ளார்க்கு யானெவ்வுருவாயிருந்தாலென்னையென்பார்.

(௫௭) திருக்கண்ணோக்குக்கு அவரேறுதல் காணப்பட்டது என்று கூறுதலுமாம்.

(௫௮) எம்பெருமானே ஓர் எலும்புடம்பு தலையால் நடந்திங்கேறும். அதனன்பு என்னையென்று வினவ;

(௬௧) தருமத்தையுடையவரே! இன்னும் தேவரீர் தாண்டவஞ் செய்தருளும் போது அடியேன் மகிழ்ந்து பாடித் தேவரீருடையபாதங்களின் கீழிருத்தல் வேண்டுமென்றார்.

(௬௪) "கொங்கைதிரங்கி" என்றெடுத்து, தங்குகின்ற மூலத்தைக் காணாத சிவபெருமானை அம்மை "மூத்ததிருப்பதிகம்" பாடி.

(௬௫) "எட்டியிலவமீகை" என எடுத்து, "முழவங்கொட்டக் குழகனாடுமே" எனப்பாடினார்.

அப்பூதியடிகணாயனார் புராணம்.

(௧) திருநாவுக்கரசு நாயனாருடைய பாதங்களையடைந்தவர். அவரையறிதற்கு முன்னமே அழகுதக்க ஆசைமிகக்கலந்த அன்பையுடையராயுள்ளவர்.

(௨) வீட்டிலுள்ள அளவு கருவிகளும், தராசுகளும், புதல்வர்களும், பசுவோடு எருமைகளும், ஏனையுள்ளன எல்லாவற்றிற்கும், திருநாவுக்கரசின் நாமத்தைச் சொல்லுமவ்வொழுக்கத்தையுடையவர்.

(௫) அளவிறந்த சனஞ்செல்லுதலொழியாத வழிக்கரையிலே கிருபையையுடையாரதுள்ளம் போலத் தண்ணளியையுடைத்தாய் வேனிற் காலத்திற் பொருந்திய துன்பத்தை நீக்கி, குளத்தையும் நிறைந்த நீர்த்தடாகத்தையும் போலக் குளிர்ச்சிமிகும் பரம்பையுடைத்தாயுள்ள வளம்பொருந்திய நிழலைத்தருகின்ற தண்ணீர்ப்பந்தரை வந்தடைந்தார்.

(௬) எழுந்தருளிவந்த வாசீசர் இளந்தென்றலின் குளிர்ச்சியையுடைய பந்தரோடு அமுதம்போன்ற தண்ணீரையும் பார்த்து உளம் வியப்புறவருவார் திருநாவுக்கரசெனும் பெயரை அழகுபெற எவ்விடத்தும் வரைந்திருப்பதனைக் கண்டார்.

(௧௦) முன்முடிவிறந்த தவத்தைச் செய்தேன்போலும், பொழிகின்ற கருணையைவிரும்பும் விழைவையுடையீரே தேவரீரெழுந்தருளியது என்னையென்றார்.

(௧௧) ஒருமலையை வில்லாகவுடையவரை.

(௧௩) நிலைகுலைந்த மனத்தையுடையராய், நல்வார்த்தையைச் சொன்னீரல்லீர்.

(௧௪) நம்மையாளாகவுடைய சிவனது பாதங்களின் கீழ்விரும்பிய திருத்தொண்டாலே இப்பிறப்பினும் பிழைக்கலாமென்று என் போல்வாருந்தெளியச் செப்பத்தைச்செய்கின்ற திருநாவுக்கரசுநாயனாருடைய பெயரையானெழுத, வெம்மையான மொழியையான்கேட்கக் கூறினீரெனச்சொல்லி.

(௧௫) பிறதுறையினின்றேற - சமணசமயத்தினின்றேற.

(௧௬) இல்லவர் - மனைவியார்.

(௩௨) என்செய்தான் - புதல்வனென் செய்தான்.

(௩௯) புகழ்ச்சிபெற்ற கோமய நீரினாலே பூமியைப்பொலியும்படி தடவி ஒளிபொருந்திய வெள்ளிய சுதையால் கோலமிட்டு.

(௪௩) பெருமையுடைய திருமேனியில் விபூதியை யணிந்த சிவனை அப்பூதியடிகளுடைய அடிமையைச்சிறப்பித்து விரும்புகின்ற பாமாலையை வேய்ந்த இந்தப்பெருமையை யடைந்தமேலோர் எல்லையில்லாத அன்பால் எஞ்ஞான்றும் திருநாவுக்கரசு நாயனாருடைய பாதங்களைச்செப்புகின்ற இலாபத்தைக்கைக்கொண்டார்.

திருநீலநக்கநாயனார் புராணம்.

(௧) வனப்புவாய்த்த மங்கலமறையவர் முதற்பதியானது சாத்தமங்கையென்றுலகெலா நிகழ்வுறுந்தகைத்து.

(௩) பெண்கள் வாய்ந்தகற்போடு நான்கென்றுசொல்ல அக்கற்பைவளர்ப்பார்கள்.

(௧௧) தன்னிலையினின்று முன்னேவழுவிட ஓர்சிலம்பிபொன்மேருச்சிலையினார் திருமேனிமேல் வீழ்ந்தது.

(௧௨) இளங்குழந்தையில் விழுஞ்சிலம்பி ஒழிந்துநீங்க ஊதி முன்னரேதுமிப்பவர்போல. துமித்தல் - உமிழ்தல்.

(௨௯) முன் பார்வதியாரோடு சிவபெருமானெழுந்தருளுமாறு அழுதழைத்திட: அழுதவரென்றது திருஞானசம்பந்தமூர்த்திநாயனாரை.

(௩௧) தாங்கு நூலவர் - திருநீலநக்கநாயனார். திருநீலகண்டப் பெரும்பாணர் பக்கத்தே மனைவியாருடன் சுவாமியினதருளாற்பள்ளி கொண்டார். பாங்கு - அழகு என்பாருமுளர்.

(௩௩) புதிய செந்தமிழிலே பழமறைப்பொருளாகிய தேவாரத்தை அருளிச்செய்த.

(௩௮) தரப்படுந்தொழிலையுடைய அந்தணர் வாழ்கின்ற சாத்தமங்கையிலே, இருபிறப்பினையுடைய அந்தணராகிய நமிநந்தி.

நமிநந்தியடிகணாயனார் புராணம்.

(௨)மணிமறுகு மருங்கு - அழகியவீதியின் பக்கத்தே; மாலை பயிலுந்தோரணங்கள் பயிலும் - வரிசைபொருந்திய தோரணங்கள் பொருந்தும். மாடங்களிற் கடனீரைப்பருகும் மேகங்கள்படியும், சோலையிற் குளிர்ந்த இருள்பெருகும், அரும்புகளில் ஊதுஞ் சுரும்பு பயிலும், வேதவொலி இருகாலைகளினும் பொருந்தும். செழித்தநீர் வளஞ்செறிந்த வயல்களில் செங்கழுநீர் பொருந்தும்.

(௯) பகற்கால நீங்குமாலை. விளக்குறுநெய் - விளக்கிற்குஉறு நெய்.

(௧0) ஒருபொருளே பொய்யும் மெய்யுமாமென்னும்- ஒருகடவுள் இல்லை உண்டு என்னும்.

(௧௧) நற்றொண்டாக - நல்லதொண்டு நிகழ.

(௨0) வென்றிவிடையாரும், சடையாருமாகிய வீதிவிடங்கப் பெருமாள் எந்நாளுந் திருவாரூரை ஆளுமியல்பின் முறைமைத்திருவிளையாடல் பொருந்திய உற்சவத்தையும், பங்குனிஉத்திரமாகியதிருநாளினுயர்ந்த திருவிழாவையும், சோழராசா விண்ணப்பஞ்செய்த படியே செய்தருளும் நிலையைப்பெற்றார்.

(௨௨) எழுச்சி - திருவெழுச்சி உற்சவம். விண்ணவர்தங் காவலாளர் ஓலக்கம் - சிவனுடைய கொலுவை.

(௨௩) காலம் பொருந்தச்சேவைசெய்து.

திருச்சிற்றம்பலம்.

முதற்காண்டம் திருநின்ற சருக்கத்தோடு முற்றிற்று.

(தொடரும்.)

ஜி. சதாசிவம்பிள்ளை.

உ

கடவுளுக்கு ஆத்மாவைக்கொண்டு காட்டுகிற
பத்து உதாரணங்கள்.

உலகத்துளியங்குகின்ற எண்ணிறந்த ஜீவகோடிகளுள் மக்கட்பிறப்பினர் மாத்திரமே நன்மைதீமையின்னவெனப் பகுத்தறியும் பேராற்றலுடையவராய்ச் சிறப்புற்ற ஆடூஉ மகடூஉ வென இயற்கையிருவகுப்பினராய் விளங்குகின்றனர். பெருமாண்புக்குரிய மக்கட்பிறப்பினர்களியற்கை இருவகுப்பினராயினும் சாதி மதம் என்பனபற்றி யொருவருக்கொருவர் அபிப்பிராய பேதங்களால் தனித்தனிமாறுபட்ட வொவ்வொருசாதித்தலைவர்களையும், சமயகுரவர்களையும் பற்றுக்கோடாகக்கொண்டு அவர்களின் கோட்பாட்டுக்கிணங்கவெவ்வேறு ஜாதிகளாகவும் சமயத்தவர்களாகவும் பலவகுப்பினராய்க்காணப்படுகின்றனர். பற்பல ஜாதிமதங்களைத் தழுவிநடக்கும் பலவகுப்பினருஞ் சம்மதமாகப் பொதுக்கொள்கைகள் பலவற்றையுங் கைக்கொண்டொழுகுகின்றனர். அவற்றுள் தெய்வமுண்டு என்பதே எம்மதத்தோருஞ் சம்மதமாக ஏகோபித்துக் கைக்கொண்டொழுகும் பிரதமக்கொள்கை. ஓரோவிடங்களில் காணப்படுகிற ஆண்மை பெண்மைகளிற்சேராத அலிகளும், தெய்வமில்லையென்று சாதிக்கு நாஸ்திகர்களு மக்கட்பிறப்பினராயினும் (அன்னுதிரு கல்மஉதும்) “அருகியது இல்லாததைப்போல்” என்னும் அறபுமுதுமொழிக்கிணங்க அவர்களைத் தவிர்த்துக் கடவுள் உண்டென்று நம்புமக்கள் வகுப்பினரே யீண்டு ஆராயத்தக்கவர். கடவுளைக்கண்ணாரக் காண்கின்றோரொருவனு மெக்காலத்து மெவ்விடத்துமில்லையாயினுந் தத்தம்மதி நுண்மையால் ஊகித்தறிந்த மூதறிஞர் பலர் அரும்பயனையியற்றிய வழிநூல்களுக்கிணங்கத் தமது அபிப்பிராயங்களையமைத்துக் கடவுள் உண்டென விசுவசிக்கும் பல மதஸ்தர்களும்—கடவுளுக்குரிய விலக்கணமுதலிய சில்வேறு கருமங்களிலொருவரை யொருவர் மறுப்பாராயினும்—அநேக காரியங்களில் ஒற்றுமையுடையவராவர், அறபுபாஷையி லியற்றப்பட்ட நூல்களில் உண்மை, ஏகம், பூர்வீகம், நித்யம், தன்னிற்றானிற்றல், ஒப்பின்மை, ஜீவனோடிருத்தல், அறிவுடைத்தாதல், வல்லமையுடைத்தாதல், நாடு

தல், பார்க்குதல், கேட்குதல், பேசுதல் ஆகிய பதின்மூன்றுங் கடவுளுக்கின்றியமையா இலட்சணமெனவும், இல்லாமை, துணை, புதிதாயிருத்தல், அழிவு, ஒப்பு, பிறரளவில்தேவை, சாவு, மடமை, நாடாமை ஏலாமை, கேளாதிருத்தல் பார்க்காதிருத்தல், பேசாதிருத்தல் ஆகிய பதின்மூன்றுங் கடவுளுக்கறவேயில்லாத விலட்சணமெனவும், முத்தொழில் புரிதல், நேர்காட்டல், காட்டாதிருத்தன் முதலியபலவுங் கடவுளுக்கிருப்பது மில்லாதிருப்பதுஞ் சரியான விலட்சணமெனவுங் காணப்படுகின்றன. அவைகள் பெரிதும் பல மதஸ்தர்களுக்கு மேற்கற்பாலனவென்பதை யடியிற் காட்டப்படுங் கடவுள் வாழ்த்துச் செய்யுட்களே வலியுறுத்துகின்றன.

திருவுருவாயுணருருவாயறிவினொடுதெளிவிடத்துஞ்சிந்தியாத
அருவுருவாயகம்புறமுந்தன்னியலாயளவின்றியடங்காவின்பத்
தொருவுருவாயின்மையினிலுண்மைதனைத்தோற்றுவிக்குமொளியாயாவு
மருவுருவாய்வளர்சாவன்முதலவனைப்பணிந்துள்ளிவாழ்த்துவாமே.

சிறந்தமெய்ப்பொருளையழிவிலாமணியைத்தெரிந்துமுக்காலமுமுணர்ந்து
துறந்தவரிதயாசனத்திருந்தவனைத் தொடரின்பதுன்பயற்றவனைப்
பிறந்தபல்லுயிரின்மனத்தளவுறைந்துபிறப்பிறப்பென்றிலாதவனை
மறந்தவர்சுவர்க்கப்பதியையுமறந்துமண்ணினின்மதிமறந்தவரே.

சீறுப்புராணம்.

முன்னுமாமுதலுமாகி முடிவிலாதனைத்திலுள்ளும்
பின்னுமாவிகற்பமற்றுப்பிரிவுமாய்ப்பிரிவிலாது
மன்னுமா நியதியாகிவழியொடுங்காவல் பூண்டு
தன்னுமாய்நின்றவுண்மைத்தன்மையைப்புகழ்தல்செய்வாம்.

புதூஹுஷ்ஷாம் புராணம்.

அங்கிங்கெனாதபடி யெங்கும்ப்ரகாசமா யானந்தபூர்த்தியாகி, அருளொடுநிறைந்ததெது தன்னருள் வெளிக்குளே யகிலாண்டகோடி யெல்லாந், தங்கும்படிக்கிச்சை வைத்துயிர்க் குயிராய்த் தழைத்ததெது மனவாக்கினிற், றட்டாமனின்றதெது சமயகோடிகளெலாந்தன்றெய்வ நின்றெய்வமென், றெங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிடவுநின்றதெது எங்கணும் பெருவழக்கா, யேகினுமல்லவொருசித்தாகி யின்பமாயென்றைக்கு முள்ளதெதுவே, கங்குல் பகலறநின்ற வெல்லையுளதென்பதெது கருத்திற்கிசைந்ததுவே, கண்டனவெலாமோனவுரு வெளியதாகவே கருதியஞ்சலி செய்குவாம்.

தாயுமானவர்.

தனக்குவமையில்லாதான்றாள் சேர்ந்தார்க்கல்லான்
மனக்கவலை மாற்றலரிது. திருக்குறள்.

உலகம் யாவையுந் தாமுள வாக்கலும்
நிலைபெறுத்தலு நீக்கலு நீங்கலா
அலகி லாவிளையாட்டுடையாரவர்
தலைவரன்னவர்க்கே சரணாங்களே. இராமாயணம்.

சீரியவுலகம்யாவுஞ்செய்தளித்தழிப்பதல்லா
னேரியவெதிரொப்பின்றி நீத்ததோர் கடவுடைய
வேரியகமலபாதம் வினையறப்பணிந்துபோற்றி
ஆரியவளன்றன்காதையறமுதல்விளக்கஞ் செய்வாம். தேம்பாவணி.

மெய்ப்பொருள் பகாப்பொருள் வேத முதற்பொருள்
அப்பொருளகத்தணிந் தறைகுவல் பொருளே. தொன்னூல்

ஒப்பின்மை கடவுளுக்கின்றியமையாத விலட்சணங்களிலொன்றாயிருக்கிறபடியால் கடவுளுக்கு ஒன்றையு மொப்புச் சொல்லல் கூடாது.

மகாஞானியாகிய "இமாம் சிராசி" அவர்கள் "மனிதனைக்கடவுள், தனது உண்மைக்குமிலட்சணங்களுக்கும் செயல்களுக்குமுதாரணமாகப் படைத்தான்; கடவுளுக்கு ஒன்றையுமொப்புச் சொல்லக்கூடாதுபோனாலு முதாரணமாய்ச் சொல்லக்கூடும். மனிதனுடையவுண்மை மற்ற உயிருள்ளவுயிரில்லாத சிருஷ்டிகளியாவற்றினும் வேறு விதமாக்கினான்; கடவுளின் சொந்த விலட்சணங்களாகிய ஜீவன், அறிவு, நாட்டம், சக்தி, கேள்வி, பார்வை, பேச்சு ஆகிய ஏழ் இலட்சணங்களையுங் கொடுத்துத் தனதுண்மைக்கு உதாரணஞ்சொல்லக்கூடிய தாயமைத்தான்" என்று சொல்லியிருக்கிறார்கள். இதற்கிணங்க அநேக மகான்கள் கடவுளுக்கு ஆத்மாவைக்கொண்டே உதாரணங்காட்டியுள்ளார்கள். ஆங்காங்குள்ள அவற்றைப் பத்துதாரணங்களாகத் தொகுத்து ஈண்டுத் தருகின்றேன்.

அவற்றுள் முதலாவது—நமது சரீரவியக்கம் ஆத்மாவின்றியமையாது. ஒவ்வோர் அவயவங்களையும் பற்பல செய்கைகளின் பேரில் ஆத்மாவே நடத்துகிறது. ஆத்மா நமது கட்புலனுக்குக் கதுவப்படாது போனாலும் 'ஆத்மாவே சரீரவியக்கத்துக்குக் காரணமென்பதூஉம், அஃதில்லாவிடத்துச் சரீரஞ்சவமென மறுபெயர் புனையப்ப

டுமென்பதூஉம் நமதறிவுக்குத்தெளிவாய்ப் புலப்படுகின்றது போல் உலகவியக்கங் கடவுளின்றி யமையாது. ஒவ்வோர் அண்டங்களையும் பற்பல கிரியைகளின்பேரில் கடவுளே நடத்துகிறான், கடவுள் நமது கட்புலனுக்குக்கதுவப்படாது போனாலும் அவனே வுலகவியக்கத்துக்குக் காரணனென்பதூஉம், அவனன்றியோரணுவுமசையாதென்பதூஉம், நமதறிவுக்குத் தெளிவாய்ப் புலப்படுகின்றன.

இரண்டாவது - சரீரத்திலுள்ள சகல அவயவங்களையுநடத்துவது ஒரேயாத்மா வென்பதற் கணுவளவுமையமே யில்லாததுபோல, உலகங்களையெல்லாம் நடத்துகிறவ னொரேகடவுளென்பதிற் சந்தேகமேயில்லை.

மூன்றாவது.—சரீரத்தினடக்குஞ் சகலகாரியங்களையு மாத்மா அறியாதிருத்தல் கூடாததுபோல உலகத்தினடக்குங் காரியங்களனைத்தையுங் கடவுளறியாதிருத்தல் கூடாது.

நான்காவது.—சரீரத்தைக்கொண்டு செய்கிற சகலகிரியைகளும் ஆத்மாவினாட்டத்தைக் கொண்டே நடந்து வருகின்றனபோல் உலகத்தில் நடக்கிற செய்கைகளனைத்துங் கடவுளினாட்டத்தைக்கொண்டே நடத்தப்படுகின்றன.

ஐந்தாவது.—சரீரத்தில் எந்தவிடத்திலாத்மாத் தங்கியிருக்கிறதென்று நமக்குத் தெரியாதிருக்கிறது; அது அப்படி ஓர் இடத்திற் றங்கியிருக்கிறதுமல்ல. அதுபோலவே, கடவு ளின்னதலத்திலிருக்கிறானென்று நமக்குத் தெரியாதிருக்கிறது. அவனப்படி யொருதலத்திற் றங்குகிறவனுமல்லன். தலமவனிலேயமைந்திருக்கிறது.

ஆறாவது.—சரீரத்திற்கு ஆத்மா சகலவஸ்துக்களிலும் சமீபித்திருக்கிறது போலவே சகலவஸ்துக்களுக்குங் கடவுண்மிகவுஞ் சமீபித்திருக்கிறான்.

ஏழாவது.—சரீரமுண்டாகுமுன்னு மழிந்தபின்னு மாத்மா அழிவில்லாதிருக்கிறது போலவே, உலகத்தோற்றத்திற்குமுன்னு முலகமழிந்தபின்னுங் கடவுணித்தியமாயிருக்கிறான்.

எட்டாவது.—ஆத்மாவைச் சரீரத்தோடுகூடியவிடத்துங் கூடாதவிடத்து மெந்தவஸ்துக்களுக்கு மொப்பிடக் கூடாததுபோல உலகங்களுண்டானவழியு மில்லாதவிடத்துங் கடவுளை யெந்தப்பொருளுக்குமொப்பிடக்கூடாது.

ஒன்பதாவது.—ஆத்மாவைப் பஞ்சேந்திரியங்களாலெட்டக் கூடாததுபோலவே கடவுளைப்பஞ்சேந்திரியங்களா லெட்டக்கூடாது.

பத்தாவது.—ஆத்மா சரீரத்திலிருப்பது நமதறிவுக்குப் புலப்பட்டிருந்தாலு மின்னதன்மையதென்று நிதானிக்கக்கூடாதிருப்பதுபோல, கடவுளிருக்கிறானென்பது நமது அறிவுக்குத் தெரிந்திருந்தாலு மின்னதன்மையனென்று நிதானிக்கவே கூடாது.

கீழக்கரை,
2—12—1908, } செ. மு. செய்யிது முகம்மது.

உ

திருச்சிற்றம்பலம்.

மன்மதன் வில் முதலியன.

மன்மதனது வில் கரும்புவில், பூவில், இரும்புவில் என மூன்றும்.

1. கரும்புவில்—வெண்கரும்புவில் என்பதனை அழகர்கலம்பகம் ௭௧-ஆங்கவியில், "காமனார் வெள்ளைக்கருப்புவில்லே கீற்றுமதி" எனக்கூறியிருத்தலாற் காண்க.

2. அவனுக்குப்புட்ப வில்லுண்டென்பதனை நாமலிங்கானுஸாஸநம் என்னும் அமரத்தில் முதற்காண்டத்தில் ௨௪-வது சுலோகத்தில், ,,𑌪𑍁𑌷𑍍𑌪𑌧𑌨𑍍𑌵𑌾 𑌰𑌤𑌿𑌪𑌤𑌿𑌃" என்றதனாற்காண்க. மதுரைக்கலம்பகம் ௧௬-வதுகவியில் "அலரிநீள்சிலை குனித்து" எனக்கூறலாலும் அறியலாம்.

3. மறைசையந்தாதி ௭-ஆவது கவியில், அவன் வில்லினைக் காமகாண்டம் எனப்பெயர் கூறினர்; அக்காமகாண்டம் புட்பவில், என்பதனைக் கந்தபுராணம் காமதகனப்படலம் ௬௨-ஆவது கவியில், "கயக்கணின்றபூவின்மிக்ககாமகாண்டம்" எனக்கூறியிருத்தலாற் காண்க.

4. அவனுக்கு இருப்பு வில்லுண்டென்பதனைக் கந்தபுராணங் காமதகனப் படலம் ௨௪-ஆவதுகவியில், "இயுக்கமானபாரவில்"

எனக் கூறியிருத்தலாற் காண்க. அவ்விருப்புவில் யுத்தநேரிடுங்காற் சத்துருவைச் செயிப்பதற்குக் கொள்ளும் வில் எனவுங்கொள்ளல் வேண்டும். அவன் சத்துருவைச் செயிப்பவனென்பதனைச் 'சம்பராரி' என்னும் பெயருண்மையாற்காண்க. சம்பரனென்னும் இராட்சதனைச் செயித்தவனென்பது பொருள்.

5. பூவில், கருப்புவில், இருப்புவில், இம்மூன்றிலே தேவர் மேலெய்வது பூவில், மாநுடர்மேலெய்வது கருப்புவில், இராக்கதர் மேலெய்வது இருப்புவில் எனக்கொள்க. இவற்றை, "கதியுடைத் தேவர்மேற் பூவின்மாநுடரின்மேற் கருப்புவிலிராக்கதரின்மேற் காமுறுமிருப்புவில்" என ஆசிரியநிகண்டு முதற்றொகுதி ௯-ஆவது கவியிற் கூறியிருத்தலாற் காண்க.

6. இனி, இன்ன இன்ன பூவை வில்லாகக்கொண்டானென்பதனைப் பின்வருங் கவியிற்காண்க.

"வாகைக்கு நாண்வெட்டிவேர் பாணஞ்சூதமொய்வண்டுகன்ன
லாகைக் கசோகேமவட மாந்தளிராம் வில்கந்தித்
தோகைப்பூ மட்டைமரைவிற் கந்நூல் வடஞ் சொற்குவளை
யோகைக்குவளை விற்குப்பிச்சி நாண்முல்லை யோதினரே."

இக்கவி ஸ்ரீவைகுண்டம் குமரகுருபரக் கவிராசரவர்கள் பல கவித்திரட்டுச் சுவடியிற் காணப்பட்டது.

வாகைப்பூ வில். வெட்டிவேர் நாண். சூதப்பூ பாணம்.

கன்னல் வில். வண்டு நாண். அசோகம்பூ பாணம்.

கமுகம் பூவுண் மட்டை வில. மாந்தளிர் நாண். தாமரைப்பூ பாணம்.

தாமரைப்பூவில். தாமரை நூல் நாண். நீலப்பூபாணம்.

நீலப்பூவில். பிச்சிப்பூநாண். முல்லைப்பூபாணம் எனப்பொருள் கொள்க.

இதனால், வில்லைந்து, நாணைந்து, பாணமைந்து என்க.

இவ்வில்லைந்தில் நான்கு பூவில் - ஒன்று கன்னல்வில். இவ்வுரையும் அக்கவியின்கீழ் வரையப்பட்டது.

சூதம் - மா, ஏ இரண்டும் - பாணம். மரை இரண்டும் - தாமரைப்பூ. வடம் இரண்டும் - நாண்.

இங்ஙனம்,

சேற்றூர். ரா. சுப்பிரமணியக்கவிராயர்.

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-எ] கீலக௵ மார்கழி ௴ [பகுதி-உ.

மதுரைக்காஞ்சியாராய்ச்சி.

அகத்தியனாரும், பாண்டியனும்.

மதுரைக் காஞ்சியிலே, தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் - நெடுஞ்செழியன்—

"தென்னவற் பெயரிய துன்னருந் துப்பிற்
றொன்முது கடவுட் பின்னர் மேய
வரைத்தா ழருவிப் பொருப்பிற் பொருந"

என மாங்குடிமருதனாரால் அழைக்கப்படுகின்றான். இவ்வடிகட்கு ஆசிரியர் நச்சினார்க்கினியர்—"இராவணனைத் தமிழ்நாட்டையாளாதபடி போக்கின, கிட்டுதற்கரிய வலிமையினையுடைய, பொதியமலையிலிருக்குங் கடவுளாகிய பழமைமுதிர்ந்த அகத்தியன் பின்னே எண்ணப்பட்டுச் சான்றோனாயிருத்தற்கு மேவின ஒப்பற்றவனே!" என உரையும், "இராவணன் தென்றிசையாண்டமைபற்றித் தென்னவனென்றார்......இராவணனாளுதல் பாயிரச்சூத்திரத்து உரையாசிரியர் கூறிய உரையானுணர்க......இதனால், அகத்தியனுடன் தலைச்சங்கத்துப் பாண்டியனிருந்து தமிழாராய்ந்த சிறப்புக்கூறினார்" என்பன முதலிய சில விசேடங்களும் எழுதிச் சென்றனர்.

இக்கூறியவற்றுள்ளே, அகத்தியர்இராவணனைத்தமிழ்நாடாளாதபடி போக்கினர் என்பது, தொல்காப்பியப் பாயிரத்திலும் "பொதியின்கணிருந்து இராவணனைக் கந்தருவத்தாற் பிணித்து ஆண்டுவாராமை விலக்கி" என அவ்வுரையாளரால் வற்புறுத்துக் கூறப்பட்டு

ளது. ஆயின், இங்ஙனம், அகத்தியர் இராவணனைப்பிணித்தவரலாறு வேறு நூன்மூலம் இப்போது விளங்கக்கூடவில்லை. எனினும், தஞ்சைவாணன் கோவையில், "இசைக்குருகப்பூடுசிலைப்பாவை பதமிவையே பண்டுபாடுகவே" (௩௨௫) எனவரும் அடிகளும், அவற்றின் விசேடவுரையிலே சொக்கப்பநாவலர், "இராவணனைப்பிணிக்கக் குறுமுனிபாடுமிசைக் குருகப்பட்ட பொதியமலை" எனவெழுதிய. குறிப்பும் வருதலோடு, சோணசைலமாலை ௨௫-ஆம் பாடலில் "இனிய பைந்தமிழின் பொதியமால் வரைபோ லிசைக்குரு காதிம மலையின்-தலையின் தீஞ்சொற் குருகுறுஞ் சோண சைலனே கைலைநாயகனே" எனச் சிவப்பிரகாசமுனிவருங் கூறுதலால், தென்றிசையை வென்றூண்டுவந்த இராவணன் பொதியத்துத் தங்கியிருக்கும்போது, அவனைப் பிணித்துத் தென்னாட்டைவிட் டகற்றவேண்டி அகத்தியமுனிவர் கந்தருவகானத்தைப்பாட அப்பாடற்குப் பொதியமுருகி அவனைச்சூழ்ந்து தன்னுள் அகப்படுத்திக்கொண்டது—என்றிதுபோன்றதொரு கதை வழங்கியதாகல் வேண்டுமென்று புலப்படுகின்றது. "இராவணனூதல் பாயிரச்சூத்திரத்து உரையாசிரியர் கூறிய உரையானுணர்க" என நச்சினார்க்கினியர் எழுதியது எழுத்ததிகார இளம்பூரணப்பிரதிகளிற் காணப்படாமையால் அதனாலும் இக்கதை விளங்கவிடமில்லை.

இனி, "தொன்முது கடவுட் பின்னர் மேய.....பொருப்பிற் பொருந" என்னுந் தொடர், தலைச்சங்கத்திலே ஆசிரியர் அகத்தியனாருடன் பாண்டியனிருந்து தமிழாராய்ந்த சிறப்புப்பற்றிக் கூறப்பட்டதென்பது நச்சினார்க்கினியர் கருத்து. இஃது இறையனார்களவியலுரை முதலியவற்றிற் கண்ட வரலாறுகளுடன் ஒத்ததாம். இங்ஙனமன்றி, இராவணனைத் தமிழ்நாட்டை விட்டகற்றிய அகத்தியர் அந்நாட்டைப்பின்பு பாண்டியனுக்கு அளித்தமையாலும் அப்பாண்டியற்குத் தமிழறிவுறுத்த ஆசிரியரானமையாலும் "தொன்முது கடவுட் பின்னர் மேய" எனப்பாண்டியன் விசேடிக்கப்பட்டானென்றலும் பொருந்தும். இவ்வரலாறுகள், சமீபத்து வெளிவந்த வேள்விகுடிச் சாஸனத்தில் "அகஸ்தியரால் பட்டாபிஷேகஞ் செய்யப்பட்ட பாண்டியவமிசம்" என்றும், "பாண்டியவமிசத்துக்கு ஆதியில் ஆசாரியஸ்தானம் வகித்தவர் அகஸ்தியர்" என்றும் காணப்படுவதாக, ஸ்ரீமத்-கோபிநாதராயரவர்கள் எழுதலால் தெரியலாகும். (செந்தமிழ் தொகுதி-௬; பக்-௪௩௪.) இவற்றுள், பாண்டியனுக்கு ஆசிரியர் அகத்தியனார் என்பது, இறையனார் களவியலுரை மேற்கோட்செய்யுளில் (௮௯) "அரைதரு மேகலை யன்னமன் னான் றகத்தியன்வாய்-உரைதரு தீந்தமிழ் கேட்டோ னுசிதன்" எனவருதலாலும் உணரப்படும். இனி, இரகுவமிசத்தில், "ஜனஸ்தானத்தில் போருண்டாமென்று சந்தேகித்தவனும், செருக்குடையவனுமாகிய இராவணன், பிறரடைதற்கரிய'பிரமசிரம் என்ற அஸ்திரத்தை ஈசனிடமிருந்து பாண்டியன் பெற்றிருப்பது தெரிந்து, அவனுடன் சந்திசெய்துகொண்டு இந்திரலோகத்தை வெல்லப்போனான்" என்று, ஸ்ரீகாளிதாஸர் இராவணன் தமிழ்நாட்டிற் பிரவேசியாதிருந்தமைக்கு வேறுவரலாறு கூறுவர்.

இனி, "தென்னவற்பெயரிய" என்னுந்தொடர்மொழிக்கு "இராவணனைத் (தமிழ்நாட்டையாளாதபடி) போக்கின" என்று பொருள் கூறுவர் நச்சினார்க்கினியர். இங்ஙனம் தென்னவன் - இராவணன்என், அவர் எழுதியதற்கு முன்னூற் பிரமாணமுமுள்ளது; என்னை? "தென்னவன் மலையெடுக்கச் சேயிழை நடுங்கக்கண்டு, மன்னவன் விரலாலூன்ற" என்னுந் திருநாவுக்கரசுநாயனாரது திருக்கச்சிமேற்றளிப் பதிகத்து, இராவணன் தென்னவனெனத் தெளிவாகக் கூறப்படுதலாலென்க. பிறர் இத்தொடர்க்கு "கூற்றுவனையுதைத்த கடவுள்" என்ற பொருள்கூறினர். [ஆசிரியர் நச்சினார்க்கினியர், பிறரின்வேறுபட்டுத் தாங்கூறும் உரைகளை, முன்னூற்பிரமாணமொன்றைப் பற்றியே எழுதும் வழக்கமுடையரென்பதற்கு அநேக பிரமாணங் காட்டலாம். அந்தணர் என்ற சொற்கு, "அந்தணரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்—செந்தண்மை பூண்டொழுகலான்" என்பதனாலும், அதற்குப்பரிமேலழகர் கூறுமாற்றானும் "அழகியதட்பத்தினையுடையார்' என்பதே நேர்பொருளாகவும், நச்சினார்க்கினியர்'அந்தத்தை அணவுவார் அந்தணர்: என்றது, வேதாந்தத்தையே பொருளென்று மேற்கொண்டு பார்ப்பார்" எனக் கலித்தொகையினும் திருமுருகாற்றுப்படையினும் வேறுரைகண்டனர். இப்பொருள் சிறிது வலிந்து கொண்டதாகப் பார்ப்பவர்க்குத் தோற்றினும், அவர்க்கு இஃது"அந்தண்மை பூண்ட அருமறையந்தத்துச் சிந்தைசெய்யந்தணர்" என்னுந் திருமந்திர அடிகளினின்று உதித்ததாமேயன்றித் தம்

மனோதர்மத்தா லன்றாகும். இத்திருமூலர் வாக்கினுள், அந்தணர் என்ற சொற்கு அழகிய ‘தட்பத்தினையுடையாரென்னும் பொருளோடு, "வேதாந்தத்தை நோக்குவார்" என்றபொருளும் கூறப்படுதல் காண்க. இன்னும், "வினையினீங்கி" என்னும் மரபியற்சூத்திரத்தில், இறையனார் களவியற்குரைசெய்தவரைப்பற்றி எழுதுமிடத்து "அவர் புலவுத்துறந்த நோன்புடையராகலாற் பொய்கூறாராகலானும்" எனக் கூறினர். இக்கருத்து "புலவூண் டுறந்து பொய்யா விரதத்து, அவல நீத்தறிந் தடக்கிய கொள்கை" என்னும் சிலப்பதிகாரவடிகளினின்று (பக்-௨௬௨.) உதித்ததேயாம். இன்னும், இவ்விஷயத்துக்குப்பல பிரமாணங்களுள.]

இங்ஙனம், தலைச்சங்கத்தலைவராய்ப் பாண்டியனோடு வீற்றிருந்து தமிழாராய்ந்தும், அவ்வரசற்கு நாடுங் கல்வியும் நன்களித்தும் போந்தமை பற்றியே, மாங்குடிமருதனார் என்னும் நல்லிசைப்புலவர், "தொன்முது கடவுட் பின்னர் மேய, வரைத்தா ழருவிப் பொருப்பிற் பொருந" எனப் பாண்டியனைக் கூறினாராதல் கண்டுகொள்க. சிலப்பதிகாரம், வேட்டுவவரியிறுதியில்,

"மறைமுது முதல்வன் பின்னர் மேய
பொறையுயர் பொதியிற் பொருப்பன்."

என இளங்கோவடிகளும் இங்ஙனமே பாண்டியனை விசேடித்துக்கூறினார். ஆயின், இவ்வடிகட்கு, "மறைமுதல்வன் - மாதேவன். இவன் பின்னர் - அகத்தியனாகிய கடவுள்" என அந்நூல் அரும்பதவுரையாசிரியர் பொருளெழுதியுள்ளார். [இங்கே இவர், அகத்தியனாகிய கடவுள் என்றெழுதியதன் நோக்கம், "தொன்முதுகடவுட் பின்னர்" என்ற மதுரைக்காஞ்சியடியைப்பற்றியதாகல்வேண்டும்] நச்சினார்க்கினியர், இவ்வரும்பதவுரையாசிரியர் உரையை உட்கொண்டே, முதலிற்குறித்த மதுரைக்காஞ்சியடிகளின் விசேடவுரையில், "கூற்றுவனையுதைத்த கடவுளென்று இறைவனாக்கி, அவன்பின்னரென்றது அகத்தியனை என்று பொருள்கூறின், இறைவனுக்குத் தம்பியென்றல் சாலாமையானும், அப்பொருடருங்காலத்து—"முன்னவன் பின்னவன்" (திருச்சிற்) முன்னோன் பின்னோன் என்றல்லது அச்சொல் நில்லாமையானும், அது பொருந்தாது. "முன்னரே சாநாண் முனிதக்க

மூப்புள—பின்னரும் பீடழிக்கு நோயுள" (நாலடி) எனவும் பிறாண்டும் முன்னர்பின்னரென்பன இடமுணர்த்தியே நிற்குமென அறிக" என்றிவ்வாறு, சிவபிரானுக்குப் பின்னவன் குறுமுனி என்னுமுரையிலுள்ள சொற்பொருட்குற்றங்களைக்கண்டு மறுத்தனர். இனி அடியார்க்குநல்லாரோ, "மறைமுது முதல்வன் பின்னர்....பொருப்பன்" என்பதற்கு—முதியமறையை உண்டாக்கிய பிரமன்பின்னோனாகிய குறுமுனி பொருந்திய...பொருப்பனாகிய பாண்டியன்—எனப் பிரமனுக்குப் பின்னோன் அகத்தியன் என்றுரையிட்டார். இவ்வுரையும், பின்னரென்னுஞ் சொல்வழக்கைப்பற்றிய நச்சினார்க்கினியர் மறுப்புக்குள்ளாதல் காண்க. இவ்வாறு, நச்சினார்க்கினியரால் நன்குமறுக்கப்பட்ட கொள்கைகள் எவையோ, அவற்றையே அரும்பதவுரையாளரும் அடியார்க்குநல்லாரும் எழுதிச் செல்லுதலால், அவ்விருவரும் நச்சினார்க்கினியர்க்கு முற்பட்டவரென்பது புலப்படுகின்றது. அன்றியும், அவ்விருவருந் தம்முரைக்குக் கூறப்பட்ட குற்றங்களை அறிந்தவராயின், அவற்றுக்கு ஏற்றசமாதானங்கூறாது போகாரென்பது திண்ணமாம். அங்ஙனமொன்றும் எழுதப்படாமையுங் காண்க. மஹாமஹோபாத்யாயர்-ப்ரம்மஸ்ரீ. சாமிநாதையரவர்களும், இக்கருத்துக் கொண்டே, "நச்சினார்க்கினியரால் மறுக்கப்படுவனவற்றுட்சில இவருடைய கொள்கையாகவிருத்தல்பற்றி, இவருடைய காலம் நச்சினார்க்கினியருடைய காலத்துக்கு முந்தியிருக்கலாமென்பது பெறப்படுகின்றது." என்று சிலப்பதிகாரப்பதிப்பில் அடியார்க்குநல்லார்வரலாறு கூறுமிடத்து எழுதியிருத்தலுங் காண்க. இவற்றால், மதுரைக்காஞ்சியினுஞ் சிலப்பதிகாரத்தும், முறையே, "தொன்முது கடவுட்பின்னர்மேய.....பொருநன்" "மறைமுது முதல்வன் பின்னர்மேய.....பொருப்பன்" எனப் பாண்டியன் ஒன்றுபோல விசேடிக்கப்படுதற்கு—அரும்பதவுரையாசிரியர் அடியார்க்குநல்லார் கூற்றுப்படி மாதேவன், பிரமன் இவரில் ஒருவன்பின்னோன் அகத்தியன் என்பதினும், நச்சினார்க்கினியர் கூற்றுப்படி அகத்தியன் பின்னோன்பாண்டியன் என்றலே பெரிதும் பொருந்துமாறு நோக்கிக்கொள்க.

பத்திராசிரியர்.

உ

அறிவு விளக்கம்.

முயலுகை, தவிர்கை, உண்டி, உரை முதலிய வழக்குகளெல்லாவற்றிற்கும் கருவியாய் உயிர்ப்பொருட்கண் ஒற்றுமையுற்றிருக்குங் குணமே அறிவு எனப்படும். அறிதலுடைமையால் அறிவு என்பர். அவ்வறிவும் மெய்யறிவு என்றும், பொய்யறிவு என்றும் இருவகைப்படும். யாதாயினும் ஒரு பொருளை உணரப்புகுங்கால் அப்பொருளுக்குரிய தன்மையிலே வேறுபடாமல் உறைத்து நின்று அதனை அறியும் அறிவே மெய்யறிவாகும். அதுவும் காண்டலால் அறியும் அறிவு, கருதலாலறியும் அறிவு, உரையாலறியும் அறிவு, ஒப்பினாலறியும் அறிவு, இனமொழியாலறியும் அறிவு, ஒழிபினாலறியும் அறிவு, இன்மையினாலறியும் அறிவு, வழிவழியாலறியும் அறிவு முதலியனவாகப் பலவகைப்படும்.

காண்டலறிவு, கருதலறிவு, உரையறிவு என்னும் மூன்றும் மற்றையறிவுகளை உள்ளுறுத்தி நிற்றலாற் பொருளுணர்ச்சிக்கு அமையுமெனல் அமைவுடையதாகும். புலன்களைப் பொறிகள் நேரே தொடர்ந்தறியும்அறிவு காண்டல் அறிவாகும். குறிகளைப் பொறிகள் நேரே தொடர்ந்து அவற்றின் வழிநின்று ஆராய்ந்து மறைபொருளை அறியும் அறிவு கருதலறிவாகும். ஆராய்ச்சியின் பயன் மாசுதவிர்தல். வழக்கு, அறிவிப்பு முதலிய வலியுடைய சொற்களாலே பொருளை நினைத்தறியும் அறிவு உரையறிவாகும்.

மெய், வாய், கண், மூக்குச், செவி எனப் பொறிகள் ஐவகைப்படலாற் காண்டலறிவும் ஐவகைப்படும். அறியக்கருதல், அறிவிக்கக் கருதல், காண்டலாற் கருதல், கருத்தாற்கருதல், உரையாற்கருதல் முதலியனவாகக் கருதலறிவும் பலவகைப்படும். செஞ்சொல்லாலறிதல், ஆக்கச்சொல்லாலறிதல், குறிப்புச்சொல்லாலறிதல், தொடர்ச்சொல்லாலறிதல் முதலியனவாகச் சொல்லாலறியும் அறிவும் பலவகைப்படும். இவற்றுள்ளே காண்டலறிவு எதிரே தோன்றும் பொருள்களையும், மற்றையிரண்டும் கரந்துறை பொருள்களையும் அறிந்து கொள்ளற்குக் கருவியாகும்.

பலபொருள் பயக்குஞ் சொல்லாற் பொருளுணருங்கால் சேர்வு, பிரிவு, வெறுப்பு, நட்பு, பால், இடம், காலம் முதலிய தொடர்புபற்றி அறிக. செஞ்சொல்லாவது வழக்கு முதலிய வலியால் நேரே பொருள் பயக்குஞ்சொல். ஆக்கச்சொல்லாற் பொருளுணருங்கால் வழக்கும் பயனும் நோக்கி அறிக. குறிப்புச்சொற்களாற் பொருளுணருங்காற் சொல்வலியும், பொருள்வலியும் நோக்கி அறிக. பகை, நட்பு, புணர்ச்சி முதலிய காரணம்பற்றிப் படிறர்பாலிருந்து வருஞ் சொற்களையும், ஒரு பயனும் பயவாதனவாய் மயக்கமுடையார் பாலிருந்து வருஞ்சொற்களையுங் கொள்ளற்க. அவை மெய்யறிவுபயவா. மெய்யறிவு பயப்பன வாய்மை கூறுவோர்வாய்ச்சொற்கள்.

பொறிகளும், பொறிகளின் சார்பும், குறிகளும், குறிகளின் சார்பும், உரைகளும், உரைகளின் சார்பும் கறையுறுமாயின்; அவற்றால் மெய்யறிவு ஒருகாலுங் கைகூடாது.

இனிப் பொய்யறிவாவது ஒரு பொருளை உணருங்கால் அப்பொருட்கணில்லதாந் தன்மையை உள்ளதெனக்கொண்டு வேறுபட நின்றறியும் அறிவேயாம். அதற்குக் கறைபடுதல் காரணமாகும். அப்பொய்யறிவும் ஐயவறிவு, திரிவறிவு, ஆராய்ச்சியறிவு என மூன்று வகைப்படும்.

ஐயவறிவாவ்து பலதலையாய்த்தோன்றும் அறிவு. அது பொதுத்தன்மை, சிறப்புத்தன்மை, பகைத்தன்மை என்னும் மூன்றுங் காரணமாகத் தோன்றும். "அரவோ? கயிறோ?" என்பது அரவு, கயிறு என்னும் இரண்டின்கண்ணுமுள்ள வடிவு, வளைவு முதலிய பொதுத்தன்மை காரணமாகத்தோன்றிய ஐயவறிவு. "உலகம் அழிவில்லதோ?" என்பது உலகம் என்பதின் மாத்திரமுள்ள சிறப்புத்தன்மை காரணமாகத்தோன்றிய ஐயவறிவு. ஒரு நெறியில் இருவர் மாறுபட்டுழி "எவர் நெறி தவறற்றது?" என்பது பகைத்தன்மை காரணமாகத் தோன்றிய ஐயவறிவு.

திரிவறிவாவது ஒன்றை மற்றொன்றாக அறியும் அறிவாகும். அது வடிவத்தைப் பொதுவே அறிதலும், சிறப்புவடிவம் தோன்றாமையும், ஒருபாகம் நினைத்தலும், சமீபத்திற்றோன்றாமையும் பிறவுங்

காரணமாகத் தோன்றும். கயிற்றினை அரவெனத்துணிதற்கு இஃது அரவு என்னும் பொதுவறிவும், அரவினுடைய தலை, வால் முதலிய சிறப்புருவம் தோன்றாமையும், அரவுருவமான ஒருபாகநினைவும் பிறவுங்காரணமாயின.

ஆராய்ச்சியறிவாவது ஒன்றிலொன்றினையேற்றி உடனிகழ்ச்சியாராய்தலாலே தோன்றும் அறிவு. "பனியில்லையாயிற் குளிருமில்லை" என்பது போல்வது. அது குறைந்திருப்பதின் பிறழ்வினாற் பிறழ்தலும் கூடும். ஆதலின் அதுவும் பொய்யறிவாகும்.

இங்ஙனமே மெய், பொய் என்னும் இருவகையறிவும் அறியப்படும்.

இங்ஙனம்,

அ. குமாரசுவாமிப்பிள்ளை.

ஸ்ரீ:

கம்பநாட்டார் அருளிய

இராமாவதாரவுரை.

(முற்றொடர்ச்சி.)

முத்தமிழ்த்துறையின்முறைபோகிய
உத்தமக்கவிகட்கொன்றுணர்த்துவென்
பித்தர்சொன்னவும்பேதையர்சொன்னவும்
பத்தர்சொன்னவும்பன்னப்பெறுபவோ.

(இ - ரை) மூன்றுதமிழின்றுறைவாய் முறையே நடந்த மிக்க மேம்பாடுடைய புலவர்கட்கு. "ஒண்டீந்தமிழின்றுறைவாய் நடந்தனையோ" என்றார்பிறரும். தரத்தின் மிக்கது தமம். அதனினுமிக்கது உத்தமம். உத்தமக்கவி - தமிழ்நூன்முடிபு. பித்தர் "எம்பிரானுக்கெழுமையும் பித்தனே" என்றவாறு, அவன் பொருட்டு மையலா தலைக்கொண்டவர். பேதையர் - "பேதையேன் பேதையேனே" என்றவாறு அவன் மாட்டு உள்ள மொடுங்குதலால், அவனையும் உலகியலையும் அறியாதவர். பத்தர் - எல்லாமவனென்றன்பு செய்வோர். இவருரைத்தன குணங்குற்றமாராயப்பெறுவனவில்லை என்பது. யானும் சீராமமூர்த்தியின் பொருட்டு மையல் தலைக்கொண்டு உலகியலறியாமலவன்பாலன்பாற் சிலசொல்வேன்என்பது கருத்து. இப்பாட்டிற் கம்பர் தம்மைச் சீராமபத்தர் என்றுய்த்துணரவைத்தனர். இனி, மையல் தலைக்கொண்டவர், அறியார், பத்தர்—இவர் சொன்னவை ஆராயத்தக்கனவல்ல எனினுமமையும். ஒன்று சிறிதுமாம்; "நாணெனவொன்றோ வறியலம்" என்புழிப்போல. (திருக்குறள் - ௧௨௫௭) பன்னப்பெறுபவில்லை யென்பதுணர்த்துவென் என்க. "பன்னலம் பஞ்சி" (சிந். மண். ௧௭௩) என்பதுபோலப் பன்னல் - எஃகுதல்; அது, தங்கூரிய மதியின்வைத்துக் குணங்குற்றம் ஆராய்தற்காயிற்று. "பன்னிச்சொலலாமோ" (ஷைமுத்தி-௨00) என்றாற்போலப் பன்னல் ஆராய்தலுமாமெனினுமமையும். ஓ - எதிர்மறை. துறையின்முறை - துறையினையுடைய நூல் என்பாருமுளர்; மேல்முறையினூலுணர்ந்தார் என்பவாதலாலது சிறப்பின்று.

அறையுமாடரங்கும்மடப்பிள்ளைக
டறையிற்கீறிடிற்றச்சருங்காய்வரோ
விறையுஞானமிலாதவென்புன்கவி
முறையினூலுணர்ந்தாருமுனிவரோ.

(இ - ரை) இஃது, உணர்ந்தாருமுனிவரோ என்ற வினாவிற்குத் தச்சருங்காய்வரோ என எடுத்துக்காட்டுவமை முகத்தான் வினாவெதிர்பெய்து செப்புநிகழ்த்தியவாறு. இருவேறுதொடர்கள் உவமைவாசகமின்றி ஒன்றற்கொன்றுவமையாய்வரினஃது எடுத்துக்காட்டுவமை. "அகரமுதல" "நிலத்தியல்பான்," என்னுந் திருக்குறள்கள்போலவும், "காகத்திருகண்ணிற்கொன்றேமணி கலந்தாரிருவர்" என்ற திருக்கோவைப்பாடம்போலவும் வருவனவற்றுட்காண்க. வினாவே செப்பாதல் "வினாவுஞ்செப்பே வினாவெதிர்வரினே." என்னுங்கிளவியாக்கவிதியாற் கொள்க. பேரிடத்தைச் சிலசிலவிடங்களாக அறுத்தலால் அறை. மடப்பிள்ளைகள்—பேதைச்சிறார்; அவரவர் நாட்கும் பெயர்க்கும் பொருந்த அளவுகண்டறைகள் எடுத்தலும் ஆடரங்குக்கு விதித்த கோலுயரம் கோலகலம் கோனீளங்கண்டியற்றலும் அறியாத சிறுவர்கள். சிலப்பதிகாரவரங்கேற்றுகாதைக்கண், "எண்ணிய நூலோரியல்பி[illegible] வழாஅது" என்பது முதலாக அரங்கினமைதி

கூறியவடிகளான் இதனையுணர்க. தறை - வன்னிலம். தறுதல் - வலி தாயிறுகுதல். வன்கண் தறுகண், ஒருபொருட் கிளவியாதல், "செந் தொடை பிழையா வன்க ணாடவர்" என்னும் புறப்பாட்டுரையானு மறிக. தச்சரும் - சிற்பாசிரியரும். காய்வரோ முனிவரோ— எதிர்மறை வினாக்கள்: காய்பவர் தச்சராகார் என்றும், முனி பவர் முறையா னுணர்ந்தவராகார் என்றும் வேறுபொருளும் பயத்தல் நோக்கிக்கொள்க. இஃது அவைக்கட் டாமடங்குமாற்றான் அவையினைத் தாமடக்கி நின்றவாறு. இதுவே,அவையடக்கிற்குப் பொருளாக்கொண்டார் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் (தொல். செய். ௧௧௨). முறைபோகிய வுத்தமக்கவி என்றாற்போல ஈண்டும் முறையினா னுணர்ந்தார் என்றார். ஞானமிறையுமிலாத என்க. இறை யுங் கேள்வி எனவும் பாடம். புன்கவி - சொல்லானும் பொருளானும் தெளிவில்லாத கவி. "புன்கவியெனத்தெளிவின்றி" (நகரம்) என்பத னானறிக.

தேவ பாடையி னிக்கதை செய்தவர்
மூவ ரானவர் தம்முளு முந்திய
நாவி னாருரை யின்படி நான்றமிழ்ப்
பாவி னானிதுணர்த்திய பண்பரோ.

(இ - ள்) தேவபாடையினிக்கதை செய்தவராகிய மூவருரையின் படியும், அங்ஙனஞ்செய்தவரானவர்தம்முளும் முந்திய நாவினாருரையின்படியும் நான் தமிழ்ப்பாக்களான் இக்காப்பியமுணர்த்திய பண்பு எ - று. இது நூல்வழி கூறிற்று. பொதுவாக மூவருரையினையும் அவருட்சிறப்பாக முந்திய நாவினாருரையினையுமே வழிக்கொண்டுணர்த்திய பண்பு எ - று. இவர் வான்மீகத்தோடு வேறுபடுமிடனெல்லாம் மற்றையோருரையினை வழிக்கொள்கின்றாரென்று உணர்க. படி, பிரதியின் சிதைவு. தேவபாடை - தேவரும் வழங்கு மொழி; மக்களும் வழங்குவதேனும் சிறப்புப்பற்றிக் கூறப்பட்டது: அந்தணர் நூல் என்பதுபோல; ஆரியச்சொல், எல்லாத்தேயத்துக்கும் விண்ணுலகமுதலியவற்றுக்கும் பொது என்பர்.

(தொடரும்.) இங்ஙனம்,
ரா. இராகவையங்கார்.

தருக்க சூத்திரம்.

பொருள்குணங் கருமம் பொதுச்சிறப் பொற்றுமை
யின்மை யுடன்பொரு ளேழென மொழிப. (௧)

மண்புன லனல்கால் வெளிபொழு தாசை
யான்மா மனதோ டொன்பதும் பொருளே. (௨)

வடிவஞ் சுவையிரு நாற்ற மூறெண்
ணளவு வேற்றுமை புணர்ச்சி பிரிவு
முன்மை பின்மை திண்மை நெகிழ்ச்சி
சிக்கென லோசை யுணர்ச்சி யின்பந்
துன்பம் விருப்பம் வெறுப்பு முயற்சி
யறமறம் வாதனையொடு குணமறு நான்கே. (௩)

எழும்பல் விழுதல் வளைத னிமிர்த
னடத்த லுடனே கருமமை வகைத்தே. (௪)

பொதுமை மேல்கீ ழெனவிரு வகையே. (௫)

மன்னிய பொருளின் கண்ணவா யவற்றின்
வேற்றுமை தெரிப்பன பலவாஞ் சிறப்பே. (௬)

ஒற்றுமை யாப்பஃ தொன்றே யென்க. (௭)

முன்னின்மை பின்னின்மை முற்று மின்மை
யொன்றினொன் றின்மையென் றின்மை நான்கே. (௮)

மண்ணீ ரனல்கான் முறையே நாற்றந்
தட்பம் வெட்ப மூற்ற மாகி
மெய்ப்பொரு ளழிபொருண் மேவு மென்க. (௯)

அணுக்கண் மெய்ப்பொருள் காரிய மழிபொருள்
பிருதிவி நித்திய வநித்திய வணம்பெறும்
நிலையணுப் பொருணிலை யில்லது காரியம். (௧௦)

அதுவே:—
உடல்பொறி விடய மூவகைப் படுமே

நம்மனோர் யாக்கை மண்கூற் றுடம்பு
நாற்றங் கவர்வது நாசியி னுனியே
மண்கல் முதலிய விடய மாகும். (௧௧)

நீரிறை வரைப்பிற் கட்டுநீ ருடம்பு
சுவைத்திறங் கவர்வது நாவி னுனியே
கடல்யா றாதி விடய மாகும். (௧௨)

கதிரோன் வரைப்பிற் கட்டன லுடம்பே
யுருவங் கவர்வது கருமணி விழியே
மண்விண் வயிறு கரநால் விடயம். (௧௩)

வளியிறை வரைப்பிற் கட்டுகா லுடம்பே
யூற்றங் கவர்வது மீந்தோ லெங்க
விடய மாமுத லசைதற் கேதுவே
பிராண னுடலகத் தியங்குங் காற்றே. (௧௪)

விசும்பே காலந் திசையோ டான்மா
மனமிவை யைந்து நித்தியப் பொருளே. (௧௫)

ஓசைப் பண்பிற் றாகா யம்மே. (௧௬)

இறப்புமுதல் வழக்கிற் கேதுக் காலம். (௧௭)

கிழக்குமுதல் வழக்கிற் கேதுத் திசையே. (௧௮)

அறிவுப் பண்பிற் றான்மா வெங்க
விறையே யீசன்மூற் றறிவனோர் முதலே
யுயிர்தா னுடறொறும் வெவ்வே றாகும். (௧௯)

மனமணு வடிவாய் வருமின் பாதி
யறிதற் கின்றி யமையாக் கருவி
யாகிப் பலவா யழிவின் றுறுமே. (௨௦)

குறிப்பு:—இச்சூத்திரங்கள் அகத்தியரியற்றின என்பர். இவ்வளவே இப்போதகப்படுவன. இவை, சில பழைய அச்சுப்பிரதிகளில் அருகிக்காணப்படுவனவாதலின், செந்தமிழபிமானிகளின் பொருட்டுப் பதிப்பிக்கலாயிற்று—ப—ர்.

௨

அறிவின் உபயோகம்.

நமக்குக்கிடைத்த சக்திகளை நாம் எப்படி உபயோகிக்கிறோமோ, அதற்குத்தக்கபடியே நமக்குக் கௌரவமுண்டாகும். தனக்குக்கிடைத்த புத்திசாமர்த்தியம் ஒன்றாயினும் அதை ஒருவன் சரியாகப் பிரயோகிப்பானானால், பலவிதமான புத்திசாமர்த்தியமுள்ளவனைப்பார்க்க அதிகமாய்ப் பெருமைபெறுவதற் குரியவனாவான். திரண்ட ஸ்திதி ஒருவனுக்குப் பிதிரார்ச்சிதமாய்க் கிடைத்தால் அதில் எப்படி ஒரு மேன்மையுமில்லையோ அப்படியே சிறந்த புத்திசாமர்த்தியங்கள் இயற்கையாய் அமைந்திருப்பதிலும் ஒரு மேன்மையுமில்லை. அந்தப் புத்திசாமர்த்தியங்களை எப்படி உபயோகிக்கிறோமோ அந்தப் பூஸ்திதியை எவ்விதமாய்ப் பண்படுத்துகிறோமோ அதைக்கொண்டுதான் அவற்றின் மேன்மையை அறியவேண்டும். ஓர் உபயோகமுமின்றிக் கல்விப்பொருட் பெருஞ்செல்வத்தை மனது விசேஷமாய்த் தேடிவைத்துக் கொண்டிருக்கலாம். அவ்வறிவு, நன்மைக்கும் விவேகத்திற்கும் துணையாகி நல்லொழுக்கத்திற் புகாதிருக்குமாயின், இருந்தும் இல்லாததுபோலவே. அறிவானது இவ்வுலகில் வழங்கும் அற்பமான அக்கிரமங்களுக்கு உடன்படவொட்டாமல் ஒருவனை விலக்கிக்காக்குமென்றாலும், உண்மையான நீதியொழுக்கமுதலியவைகளால் பத்திரமாய்க் காக்கப்பட்டாலன்றி சுவப்பிரயோஜனமான துர்மார்க்கங்களினின்றும் விலக்கிக் காக்கமாட்டாது. ஆனதுபற்றியே கல்வியில் நன்றாய்த்தெளிந்தும் ஒழுக்கத்தில் மிகவும் குறைவுள்ளவர்களாயும், பாடசாலைப்படிப்புப் பூரணமாயிருந்தும் வியவகாரஞானம் சிறிதுமில்லாதவர்களாயும், நாம் பார்த்தனுசரிக்கத்தக்க நல்லொழுக்கமுள்ளவர்களாயிருக்கவேண்டுவது போக நாம் கண்டஞ்சி ஜாக்கிரதையாயிருக்கவேண்டிய தப்பொழுக்கமுள்ளவர்களாயும் அங்கங்கே அநேகரைக் காண்கிறோம். "புத்திமான் பலவான்" என்று அடிக்கடி பழமொழி வழங்குகிறதென்றாவும், அந்தப்புத்தியை நல்வழியிற்கொண்டு திருப்பாவிட்டால் அது சிறிதும் பலமாகமாட்டாது. மேலும் தீயோர்

களைப்பினும் கொடியவர்களாக்கி உலகத்திற்கே அபாயம் விளைப்பதாகும்.

இக்காலத்திலிருக்கும் கல்விப்பயிற்சியின் மேம்பாட்டை நாம் மிகவும் பெருமைப்படுத்திப் பேசும்படியாயிருக்கும்; புஸ்தகசாலைகளும், தர்மசாஸ்திரங்களும், வினோதப்பொருட்காட்சிச் சாலைகளும் அநேகமிருப்பதனால் அவற்றைக்கண்டு நமது கல்விப்பயிற்சி விசேஷமாய்ப் பெருகுகிறதென்று எண்ணும்படியாகவுமிருக்கும். ஆயினும் இவ்வகையான சாதனங்கள் அவனவன் உயர்ந்த கல்வித்துறைகளில் தன்னைத்தான் பண்படுத்திக்கொள்வதற்குத் துணையாயிருப்பதுபோலவே பெரும்பாலும் அதற்கு இடையூறாகவும் கூடும். பொருளுள்ளவர்களெல்லாம் எப்படிப் பெருங்கொடையுள்ளவர்களாவதில்லையோ, அப்படியே விசேஷமாகப் புத்தகங்களைக் கையாள்பவர்களும் வித்வான்களாகமாட்டார்கள். நம்மிடத்தில் விசேஷ சுகசாதனங்களுள வென்றாலும், ஊன்றிப்பார்த்தல், அவதானம், விடாமுயற்சி, உழைப்பு இவையாகிய பழைய வழியைப்பிடித்துச் சென்றாலல்லது அறிவும் விவேகமும் ஒருபோதும் நமக்குச் சுவாதீனமாகமாட்டா. கல்விக்கு வேண்டிய கருவிகளைமட்டும் கையாள்வது வேறு; படிப்பினும் உயர்ந்த சிக்ஷையால் அடையத்தக்க அறிவும் விவேகமும் வேறு. படிப்பாவது, பெரும்பாலும் பிறருடைய கருத்துக்களைக் கேட்டுத் தெரிந்துகொள்வதேயொழிய வேறல்ல. ஏனெனில், ஒன்றைப்படிக்கும்போது படிப்பவன் புத்தி புதிதாய் ஒருவேலையும் செய்வதில்லை. ஆதலால் நமது படிப்பு, சிறிதளவேனும் மனதைத் திருத்தித் தெளிவிக்காமலும், ஒழுக்கத்தை உறுதி செய்யாமலும், கணப்பொழுது இதமான உள்ளக்கிளர்ச்சி தரும் ஒருவிதமான மதுபானஞ்செய்வது போலாகின்றது. இவ்வாறே அநேகர், வீணாய்ப் பொழுதுபோகும் எளியவேலை செய்துவருங் காலத்தில், தங்கள் மனதைப் பண்படுத்துகிறோமென்று சொல்லிப் பாசாங்குசெய்து திரிகிறார்கள். ஆயின் அதினும் இழிதொழில் செய்யப்புகாமல் அந்தமட்டிலாவது அவர்களைக் காக்கிறதேயென்று அப்பொழுதுபோக்கும் வேலையைப்பார்த்தும் நாம் சந்தோஷிக்க வேண்டுவதுதான்.

மேலும் புத்தகங்களைப் படித்துவரும் அறிவு வெகுவாய் விலைபெற்றதாயிருந்தாலும் புத்தகப்படிப்பாகவே முடிகிறது. அனுபவத்தால் வரும் அறிவோ விவேகமாகமுடிகிறது. ஏட்டுக்கல்வி அளவற்றிருப்பதும் சரி, அனுபவம் சிறிதளவிருப்பதும் சரி. ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாதல்லவா?

நல்லநூல்களை வாசிப்பது நமக்குப் பயன்பட்டு ஞானத்தை விருத்திபண்ணுமாயினும், மனதைப் பண்படுத்தும் விஷயத்தில் பத்தோடு பதினோராவதாயிருக்கிறதேயன்றி மற்றப்படியல்ல. நல்லொழுக்கமுண்டாக்கும் விஷயத்திலோ நல்ல அனுபவமும் உதாரணமும் உதவுவதுபோல அவ்வளவு ஒருபோதும் உதவுவதில்லை. ஆதலால் முக்கியமாய்க் கல்வி கற்பதின்நோக்கம், பிறருடைய கருத்துக்களைக்கொண்டு நம்மனத்தை நிறைத்து, நமது முயற்சி சிறிதுமின்றி அவர்களுடைய கல்வியறிவைக் கற்றுக்கொள்வதன்று; நமது புத்தியையும் நன்றாய் விகாசப்படுத்தி, ஜீவகாலத்தில் நாம் செய்யும்படி நேரிடுகிற பலவித வேலைகளையும் செம்மையாய்ச்செய்து உலகத்திற்கு உபகாரிகளாக்கிக் கொள்ளவேண்டுமென்பதே. மிக்க ஊக்கமும் உற்சாகமுமாயுழைத்து உலகத்திற்கு உபகாரிகளான பலரும் வெகுவாய்ப் படிப்பில் தேர்ச்சிபெறாதவர்களே. பிரிண்டிலி, ஸ்டிவின்ஸன் இவர்களுக்கு நல்ல வயதுவந்து பெரியோர்களாகிற வரையில் எழுதப்படிக்கக்கூடத் தெரியாது. ஆயினும் சிறந்த செயல்களைச்செய்து இருவரும் இருபதுபேருக்குச் சமானமாய்க் காலங்கழித்தார்கள். ஜான்ஹண்டர் என்பவருக்கு இருபதுவயதுவரையில் எழுதப்படிக்கத் தெரியாதென்றாலும் தச்சுவேலை பயின்ற எவனுக்கும் இளைக்காமல் மேஜை நாற்காலிகள் மட்டும் செய்ய வல்லவராயிருந்தார்.

ஆதலால், அறிவுவேண்டுவது அவசியமென்றாலும், ஒருவன் விசேஷமாயறிவதே முக்கியமன்று; அவ்வறிவின் நோக்கமும் பிரயோஜனமுமே முக்கியமாம். விவேகத்தை விருத்திபண்ணி, ஒழுக்கத்தைச் சீர்படுத்தி, நம்மை முன்னினும் மிக்க யோக்கியர்களாயும், சௌக்கியமுள்ளவர்களாயும், பிறர்க்கு உபயோகமானவர்களாயும், ஈவிரக்கமுள்ளவர்களாயும், விசேஷ சர்மர்த்தியமும் உலகத்தில் எவ்

வகைச்சிறந்த காரியத்தையும் விடாமுயற்சியாய்ச் செய்து முடிக்கவேண்டுமென்கிற ஊக்கமுள்ளவர்களாயும் ஆக்குவதே அறிவின் நோக்கமாயிருக்கவேண்டும். நீதிநெறியைக் கவனியாமல் இவ்விதமான புத்தி வைபவத்தைமாத்திரம் வியந்து விருத்திசெய்யும் வழக்கத்தை ஒருதரம் கையாளப்புகுந்தால், அவர்கள் இழிவென்னப்படும் அனைத்திற்கும் செல்லும் பெரும்பாதையில் அடிவைத்தவர்களென்றே சொல்லவேண்டும். பிறரிருந்த ஸ்திதியையும் செய்த செயல்களையுங்குறித்து எழுதிவைத்திருப்பவைகளைப் படித்துச் சிந்தனைசெய்வது மாத்திரமே போதுமென்று திருப்தியடைந்திருக்கக்கூடாது. நாமும் அவ்விதமான ஸ்திதிக்குவந்து அவ்வகைச்செயல்களைச் செய்ய முயலவேண்டும். நமது உயர்ந்த அறிவு ஒழுக்கத்திலும், உயர்ந்த யுக்தி ஆலோசனைகளெல்லாம் காரியத்திலும் உபயோகமாகவேண்டும். நான் என்னால் சாதிக்கக்கூடிய மட்டும் சாதித்தேன்; இதற்கு மிஞ்ச எவர்க்கும் அவசியமில்லை என ரிக்டர் சொன்னவளவாவது நாமும் சொல்லத் திறமையுள்ளவர்களாக வேண்டும். தமக்கு இயற்கையாயமைந்த சக்தி சாமர்த்தியங்களுக்குத் தகுந்தபடி தெய்வசகாயத்தைக்கொண்டு தன்னைத்தானே நன்றாய்ப் பண்படுத்தி நல்வழிப்படுத்துவது எவர்க்கும் கடமை.

தன்னைத்தானே சிக்ஷித்துக்கொள்வதும் தன்னைத்தானே அடக்கி ஆள்வதுமே அப்பியாசஞானம் உண்டாவதற்குக் காரணமாம். இவற்றிற்கெல்லாம் மூலாதாரம் தன்மானமென்பது; அதாவது, தன் பெருமையைத் தானறிந்திருப்பதாம். ஒருவனுக்குக் கோரிக்கையென்பது இதனின்றுமுண்டாகின்றது. கோரிக்கையானது அதிகாரத்துக்குத் தோழனும் காரியசித்திக்குத் தாயுமாம். அப்படிச்சிறந்த கோரிக்கையுள்ளவனிடத்தில் அற்புதமான வரப்பிரசாதமிருக்கிறதென்றே சொல்லவேண்டும். அவர்வர் தம் இயற்கையான தீக்குணங்களை விலக்குவதுமாத்திரமேயன்றி நற்குணங்களை விருத்திபண்ணவும் வேண்டும். தன்மானம்போலப் பிறர்மானத்தையும் பாராட்டவேண்டும். பிறரும் அப்படியே நம்முடைய கௌரவத்தைப் பாராட்டுவது கடன்.

தன்மானமென்பது ஒருவன் தரித்துக்கொள்ளத்தக்க உயர்ந்த வஸ்திரமும், தன்னை விசேஷமாய்ப் பெருமைப்படுத்திக் கொள்ளும்படியான ஈசுவரயத்தினமாய் இருதயத்தில் உதிக்கத்தக்க உயர்ந்த அபிப்பிராயமுமாம். தன்னைத்தானே இழிவாய் நினைப்பது, பிறர் மதிப்பில்மாத்திரமேயன்றித் தன் மதிப்பிலும் தாழ்ந்துபோவதாம். சிந்தனையெப்படியோ அப்படித்தான் செய்கையும். இழிவானவைகளையே எண்ணிக்கொண்டிருப்பவன் ஒருபோதும் உயர்பதம் பெறமாட்டான். உயர்ந்தபதம் பெறவேண்டுமானால் உள்ளக்கருத்துகளும் உயர்ந்தேயிருக்கவேண்டும். எளியார்க்கெளியனும் இதை முறைமையாய் நினைந்து அனுசரித்து வருவானானால், தடையின்றி உயர்ந்தெழுவான். தன்மானமாத்திரம் ஒருவனுக்கு இருக்குமானால், தரித்திரஸ்திதியும் மேன்மைபெற்றுச் சிறப்பாய் விளங்கும். ஏழையொருவன், துராசைகள் பல சூழ்ந்துகொள்ளும்பொழுதும் நெறிவிலகாது நேராய்நின்று இழிந்த செயல்செய்ய உடன்படாதிருப்பானாயின் அதைவிட அற்புதக்காட்சி வேறென்ன?

உலகத்தில் தான் விருத்தியடையவேண்டுவதற்கு மாத்திரம் முக்கியசாதனமாய் எண்ணி ஒருவன் தற்பயிற்சி செய்வானாயின், அவ்வெண்ணமே அப்பயிற்சியை இழிவுபடுத்துவதாம். இந்த நோக்காய்ப் பார்க்குமிடத்தில், காலம் உழைப்பு என்னும் மூலதனத்தை வித்தியாப்பியாசத்திற்காக வைப்பது ஓர் உத்தம உபாயமென்பதற்கு ஐயமில்லை. அறிவுதெளிந்தவன் எந்த ஜீவனோபாய மார்க்கத்திலும் காலதேச வர்த்தமானங்களுக்கு ஏற்றபடி அறிந்துநடக்கவல்லவனாவான். திருத்தமாய்த் தொழில்செய்யும் விதம் எதுவும் அவன் புத்தியில் தோன்றும். எல்லாவிஷயத்திலும் அவன் விசேஷ சாமர்த்தியமும், கருமமுடிக்கும் திறமையும் உடையவனாவான். சரீரமும் மனமும் ஒத்து உழைப்பவன் தன் வேலைகளைத் தெளிவாய்ப் பார்க்கவல்லவனாவான். அவனுடைய சாமர்த்தியம் விருத்தியாவது அப்போது அவனுக்கே நன்றாய்த்தெரியும். இதுவே மனிதர் மனதிற்பிறக்கும் அறிவுகளெல்லாவற்றுள்ளும் மிகுந்த உல்லாசந்தரும் அறிவுபோலும். தன் முயற்சியின்வலிமை வரவர விருத்தியாகும். ஒருவனுக்குத் தன்மானம் இருக்குமளவிற்கேற்றபடி அற்பவிஷயங்களிலுள்ள துராசைகளை விலக்க அவனுக்குத் திறமையுண்டாகும்.

ஆயினும் மேலெடுத்துக்கூறிய பல திருஷ்டாந்தங்களில் விளங்கியபடி தம்பயிற்சியால் மேன்மை கிடைக்காமலேயிருந்தாலும் இருக்கும். மனிதரிற் பெரும்பாலார் எவ்வளவு சிறப்பும் நாகரீகமும் பெற்றிருந்தாலும், ஜீவனோபாயத்திற்கு வேண்டிய சாமானியத்தொழில்முயற்சிசெய்துவராமல் தீராது. ஓர் ஊரார்க்காக ஒரு தேசத்தார்க்காக; மனம் எவ்வளவு பண்பட்டிருப்பினும் 'அவர்கள் தவறாமல் செய்யவேண்டிய தினவேலையை ஒழித்திருக்க அவர்களாலாகாது ஆனால் ஒன்று. உயர்ந்தோர் இழிந்தோர் ஆகியயாவரும் சிறப்பித்து வியக்கத்தக்க உயர்ந்த அபிப்பிராயங்களுக்கேற்றபடி அந்த உழைப்பின் தரத்தையும் உயர்த்தலாம். எப்படியெனில், முற்காலத்திலும் தற்காலத்திலும் நூதனதத்துவங்களை நுணுகநினைந்தறியவல்ல பண்டிதர்; ஒருவன் எத்தனைவறிஞனும் தணிந்தவனுமாயிருப்பினும், அவன் ஒதுங்கும் குடிசை எத்தனை அலங்கோலமாயிருப்பினும், அவனை வீடுதேடிப்போய்க் கண்டு அவனுடன் உட்கார்ந்து அவ்வேலைக்குத் தோழமைகொண்டாடினாலும் கொண்டாடுவர். இவ்வாறே நலந்தெரிந்து நல்ல கிரந்தங்களை வாசிப்பதனால் உண்டாகும் கல்விப்பயிற்சியானது மிகுந்த மனவெழுச்சிக்கும் தன்னறிவு தன்முயற்சி இவைகளால் திருந்தி விருத்தியடைவதற்கும் ஏதுவாகி நற்குணம் நன்னடக்கை இவைகளை மெத்தனவே நன்றாய்ப் பழக்குவித்து எப்போதும் நற்பயனை விளைவிக்கும். வித்தையில் தம்மைத்தரம் பண்படுத்துவோர்க்குச் செல்வப்பொருள் சேராதிருப்பினும், உயர்ந்த அபிப்பிராயங்களோடு தோழமையுண்டாம்.

ஜனவிநோதினி.

ஷோடச நியாய நிரூபணம்.

க. காகதந்த பரீக்ஷை நியாயம்.

காக்கையின் பற்களைப் பரிசோதித்தலென்பது இதன் பொருள். ஒரு விஷயம் உபயோகமற்றதென்பதைத் தெளிவாகக்காட்டும்போது இது வழங்கப்படுகின்றது. (கடோபனிஷத்பாஷ்யத்தில் ஸ்ரீசங்கராசாரியர் கூறியது.)

௨. காகநிஷ்கதாச நியாயம்.

ஒரு சோகியை ஒருவராகனாக நினைத்துத் தாசனாய் விடுவது. (சங்கற்ப சூரியோதய நாடகம். 5-ம் அங்கத்தில் ஸ்ரீவேங்கட நாதாசாரியர் கூறியது.)

௩. கூபமண்டூக நியாயம்.

அஃதாவது கிணற்றுத்தவளை நியாயம். தமிழர் "கிணற்றுத்தவளைக்கு நாட்டுவளப்பமேன்" என்பர். உலகவிஷய மொன்றுமறியாத மூடனைச்சுட்டி நிற்கின்றது. (பிரஸன்னராகவ நாடகத்திற்காண்க.)

௪. கைமுதிக நியாயம்.

கிமுதா என்பது கைமுதிகமாயிற்று. (கிமுதா-கேட்பானேன்) பூனைக்கஞ்சும்போது புலிக்கஞ்சுதலைப்பற்றிக் கேட்பானேன் என்பது. (சங்கற்ப சூரியோதய நாடகம் முதலங்கம்.)

௫. பகவ்ருத்தி நியாயம்.

(பகம் - கொக்கு) கொக்கைப்போல் ஒன்றுமறியாதவன் போலிருந்து சமயம் பார்த்து மோசம் செய்தல் (விஷ்ணுபுராணம். மூன்றாம் அம்சம்). இஃது, ஒருகெட்ட சிஷ்யன் தன்மையை உணர்த்துதல் காண்க.

௬. பிடாலவிருத நியாயம்.

(பிடாலம் - பூனை) எதிரில் பிரியமாய்ப்பேசுவதும் மறைவில் தீங்குசெய்தலையு முணர்த்துகின்றது; இதுவும் தீயமாணாக்கன், தன்மையைச் சுட்டுகின்றது. (விண்டுபுராணம் மூன்றாம் அம்சம்.)

௭. மர்க்கடகிசோர நியாயம்.

(மர்க்கடம்=குரங்கு) (கிசோரம்=குட்டி) குரங்கு தன்னை இறுகக்கட்டிக்கொண்ட தன் குட்டியைக்காப்பாற்றுதல் என்பது. பகவான் காரணமொன்றையும் நாடாமலே அடியார்களைக் காப்பதுண்மையாயினும் அவன் கட்டளையாயும் அவன் ஸம்மதிகொண்டவாயுமுள்ள கருமங்களை அவனடியார் செய்தல் வேண்டுமென்பதைச்சுட்டி வைணவர் கூறுவது. (ஸ்ரீவேங்கடநாதாசாரியரின் பரமபதசோபானம்.)

௮. மார்ஜாரகிசோர நியாயம்.

(மார்ஜாரம் - பூனை) யாதோர் ஏதுவுமின்றிப்பூனை தன் குட்டியைத்தானே சென்று பிடரியைக்கவ்வி எடுத்துக் காப்பாற்றுதல்போல் பகவான் தானாகவே காரணங்கருதாது சென்று காப்பரென்பது. (பரமபதசோபானம் விவேக பருவம்.)

௯. பிக்ஷுபாதப்ரஸரண நியாயம்.

கால்வைக்க ஓர் ஸன்னியாசி இடங்கேட்டுப் பிறகு கிரகமுழுவதையும் அபகரித்துக்கொண்டது. (சங்கற்பசூரியோதய நாடகம். மூன்றாம் அங்கம்.)

௧௦. சந்திரசந்திரிகா நியாயம்.

சந்திரனும் அவனொளியும் பிரியாது ஒன்றுசேர்ந்திருத்தல். (சங்கரவிஜயம் - ஆநந்தகிரி செய்தது.)

௧௧. மண்டூகப்லுதி நியாயம்.

இதனைத் தமிழ்நன்னூலில் பவணந்திமுனிவர் தவளைப்பாய்த்தென்றனர். சூத்திரங்களொன்றோடொன்று தொடர்ந்து நிற்கும் நான்கு நிலைகளிலிஃது ஒன்று. தவளை பாய்வதுபோல் ஒருசூத்திரம் இடையில் சிலசூத்திரங்களை விட்டு விட்டு வேறொன்றைநாடிக்குதித்தல்.

௧௨. மத்யதீபிகா நியாயம்.

நடுவில் நின்றொளிரும் தீபம் இரண்டுபக்கங்களிலுமொளியை வீசுதல். (இராமதீர்த்தர் செய்த வேதாந்தஸாரம்.)

மத்திய மணிநியாயம்.

என்பது மிதுவே. மாதர்கள் மூக்கிலணியும் நத்தென்னுமணியிலுள்ள ஓர்செம்மணி அதனிருபக்கத்திலுமிருக்கும்முத்துக்களின் மேல் ஒளியைவீசுதல்.

௧௩. விஷக்கிருமி நியாயம்.

விஷங் கொல்லுந்தன்மையுடையதாயினும் அதிற் புழு உண்டாகிச் சாகாதிருப்பதுண்டென்பது. அஃதாவது ஒருவருக்கு விஷம் போன்றது மற்றொருவருக் கமுதுபோற் சுகமளிக்குமென்பதாம்.

௧௪. சுபகாபிக்ஷுக நியாயம்.

மருமகள் ஒருபிக்ஷுகனுக்குப் பிக்ஷையில்லையென்று கூறவே அவள்மாமி பிக்ஷுகனை யழைத்து, இல்லத்தில் நின்று பிக்ஷையில்லையென்று கூற அவளுக்கென்ன அதிகாரம்? அந்த அதிகாரம் என்னுடையதாம்; ஆதலின் நீர் போகலாமென்று கூறியனுப்பினளென்பது (சங்கற்ப சூரியோதய நாடகம். 2. ம் அங்கம்)

௧௫. ஸ்தாலீபுலாக நியாயம்.

ஒருபானைச்சோற்றிற்கு ஓர் அவிழைப் பதம்பார்ப்பதுபோல்வது. பலதுறையிலுந் தேர்ந்தாரொருவரை அவரது ஒருதுறையிற் கண்ட தெள்ளியநியாயங்கொண்டே மற்றைய துறைகளிலுந் தேர்ந்துளாரெனக் கொள்வது போல்வது; (முன்சொன்ன 2, ம் அங்கம் நாடகம்.)

௧௬. ஹாலிகஜம்புக நியாயம்.

ஒருவன்கொல்லை உழுதுகொண்டிருக்கையில் அங்கே ஒரு நரி வரக்கண்டு அந்நரியைப்பின்தொடர்ந்து செல்வதுபோல்வது. கைக்கொண்டதொன்றை நீத்து நடுவில்நேர்ந்ததை நாடுதல் பிழையுளதென்பதை இஃது உணர்த்துகின்றது.

(இன்னும் தொடரும்)

இங்ஙனம்,
தி. வேங்கடராம ஐயங்கார்,
தமிழ்ப்பண்டிதர்.

நுண்பொருண்மாலை.

௧௯-ம் அதி. புறங்கூறாமை.

௧௮௪. கண்ணின்றுகண்........பின்னோக்காச்சொல்

நு - லை:—கண் - கண்ணோட்டம். பின்வருங் குற்றமென்றதால் பின் ஆகுபெயர். நோக்காதசொல் - அக்குற்றம் பரிகரிக்கக் கருதாத சொல். முன்னிற்றலு சொல்வான்தொழில் சொன்மேலேற்றப்பட்டது.

௧௮௭. பகச்சொல்லிக்........றேற்றாதவர்

நு - லை:—பிரிப்பர் - பிரியப்பண்ணுவர்; "அறிவகற்றும்"(திருக்-௩௭௨.) என்பதும் அது. "தேற்றாதவர்"—அறியாதவர் எனத்தன்வினையானது. "தேற்றுதலார்க்குமரிது" (ஷை ௬௯௩) என்றதுபோல நில்லாமையானுமறிக.

௨௦-ம் அதி - பயனிலசொல்லாமை.

௧௯௧. பல்லோர்முனியப்........மெள்ளப்படும்.

நு - லை:—எல்லாருமென்றது மூன்றன் விகாரம். இஃது "என்புமுரியரோடு" (௭௨) ஒக்கும்.

௧௯௪. நயன்சாரா........பல்லாரகத்து.

நு - லை:—நயன்சாரா, பயன்சாரா என மூன்றனை விரித்தார். சார்ச்சியைத் தொல்காப்பியர் இரண்டனுக்கும் ஏழனுக்கும் விதித்தார் தொல்காப்பியத்துள்.(சொல் - ௮௪) இளம்பூரணர் "புள்ளியில்லா வெல்லா மெய்யும்" (தொல்-எழுத்-௧௭.) "புள்ளியில்லாவாய்" எனச்செய்தெனெச்சவாய்பாட்டான் உரைத்ததுபோல, இவ்வுரையாசிரியரும், "நயன்சாராவாய்" என உரைத்தார். "காலாழ்களரினரியடுங் கண்ணஞ்சா" (௫௦௦) என்பதுமது ஆகாரவீற்று அஃறிணைப் பன்மையெதிர்மறை வினைமுற்று எச்சமாயிற்றென அமைப்பினும் அமையும்.

௧௯௬. பயனில்சொற்........பதடியெனல்.

நு - லை:—அல்விகுதி வியங்கோள் முன்னெதிர்மறையினும் பின்னுடம்பாட்டினும் வந்தது. இவ்வாறுரையாது, அல்விகுதி முன்னெதிர்மறையினும் பின்வியங்கோளினும் வந்ததெனவுரைத்தமை பிழை. * "உள்ளத்தானுள்ளலுந்தீதே" (௨௮௨) என்பதனுள்ளும் "அங்கணத்துளுக்கவமிழ்தற்றால்" (௭௨௦) என்பதனுள்ளும் 'அல்விகுதி வியங்கோளெதிர்மறைக்கண் வந்தது' என்பதனையுமறிக. எதிர்மறையினும் விதியினும் "சொல்லுகசொல்லிற்......சொல்லற்க"(௨௦௦) எனக் கவ்வீற்று வியங்கோள் வந்தது. வினையியலில் "முன்னிலை தன்மையாயிரடத்தொடு, மன்னாதாகும் வியங்கோட் கிளவி" (தொல்-சொல். ௨௨) என்னுஞ் சூத்திரத்துள் நச்சினார்க்கினியரும் "பயனில்சொற்......மகனெனல் மக்கட் பதடியெனல்" (௧௯௬) என்பதனை உடன்பாட்டினும் எதிர்மறையினும் வியங்கோளாய் வந்ததென்றார்.

௨௦௦. சொல்லுகசொல்லிற்........பயனிலாச்சொல்.

நு - லை:—சொற்பொருட்பின்வருநிலை. "வைகலும்வைகல்" என்பது மது. (நாலடி) "குன்றினனையாருங்குன்றுப" (௧௯௫) என்பது சொற் பின்வருநிலை. பக்ஷாந்தரத்துள்—ஒத்தசொல்லும் மிக்கசொல்லுமென அமைந்து கிடந்தது காண்க.*

௨௧-ம் அதி—தீவினையச்சம்.

௨௦௩. அறிவினுளெல்லாந்........செய்யாவிடல்.

நு - லை:—செய்யாவிடல் என்பது செய்யுட்டொடை காரணமாகவந்த கடைக்குறை. "செலவிடாதீதொரீஇ" (௪௨௨) "முட்டாச்செயின்" (௫௪௨) "தோன்றாக்கெடும்" (௪௭௧) என்பனவுமாம்.

(௨௧௦) அருங்கேடனென்ப........செய்யானெனின்.

நு - லை:—அருமை இன்மைமேனின்றது. அருங்கேடன் - கேடிலன். அரிதாகிய கேட்டையுடையன் என ஈண்டுண்மைப்பொருள் கொண்டும் இன்மைமேனின்றது. "சென்றுசேர்கல்லா" என்ற நற்றிணையை† இதற்குச்சொற்சோதனை காட்டினார். "சூழ்ந்துமுரன்றணவி............வீழ்ந்தவிந்தபாசத்தார்" (தண்டியலங்காரமேற்கோள்) என்பதனுள் "வீழ்ந்தவிந்தபாசத்தா" ருமது. "சுழலுமிசைவேண்டிவேண்டா வுயிரார் (௭௭௭) என்பதும், கோவையாரில் "நீங்கினநாணொடு நேரிழை நின்றது"ம் (௪௪-ம் பாடற் கொளு) வடமொழியுள் "வீதராகி" என்பதுமது. ஓடி என்பது, செய்யான் என்னும் எதிர்மறையுள் செய்தலோடு முடிந்தது. "எண்பதத்தானோரா" (௫௪௮) "அலர் நாணவொல்வதோ" (௧௧௪௯) என்பனவும், கோவையாருள் "காவி நின்றோர்தரும்" (௪௧) "கற்றிலகண்டன்ன" (௯௭)

---

* இவர் "பிழை"யென்று காரணங்காட்டி மறுக்கும் பாடங்கள், ஏடுகளிற் சிறுபான்மை காணப்படுகின்றன.

* இங்கே காட்டிய பக்ஷாந்தரம் பரிமேலழகருரையிற் காணப்படாமையால், வேறுரை பற்றியது போலும்.

† இம்மேற்கோள், புறநானூறு, ௪௨-ம் பாட்டிற் கண்டதென்று தெரிகிறது.

என்பனவும் இவ்வாறும். “ஆக்கங்கருதி” (௪௬௩) என்பதனுள், ஊக்காரென்பதனைக் கொள்ளுமென்பது குறித்து, கருதியென்னுமெச்சம் இழக்குமென்னும் பெயரெச்சவினை கொண்டதென்றார். இவ்வாறெழுதல்பேராசிரியர்க்குமொக்கும். உடம்பாட்டெச்சம் உடம்பாட்டு வினைகொள்ளுதலன்றி எதிர்மறைவினைகொள்ளா தென்பது அவர்கள் கருத்துப்போலும். வினையெச்சத்திற்கு விதி இவ்வாறு கூறாமையின் அவர்கள் கருத்தறிதல் அரிதென்க.

௨௨-ம் அதி - ஒப்புரவறிதல்.

௨௧௧. கைம்மாறு வேண்டா........கொல்லோவுலகு.

நு - லை:—கடப்பாடு - முறையறிந்து செய்யுமுபகாரம். அஃது எழுவாயாகலிற் செய்வாரதுவேண்டாமை செய்வதன் மேனின்றது.

௨௧௩. புத்தேளுலகத்து........நல்லபிற.

நு - லை:—இன் உவமவுருபு. நல்லபிற - நல்லனபிற செய்தல்களாயிற்று.

௨௧௫. ஊருணிநீர்நிறைந்........வாளன்றிரு.

நு - லை:—இடத்து நிகழ்பொருளின்றொழில் இடத்தின்மேனின்றது. “அளவளாவில்லாதான்” (௭௮௦) “வசையிலாவண்பயன்” (௨௩௯) “அருமறைசோரும்” (௮௪௭) “புரந்தார் கண்ணீர்மல்க” (௭௮௦) “வாலெயிறூறியநீர்” (௧௧௨௧) என்பனவுமது. “நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றும்” (௧௭) “ஆபயன்குன்றும்” (௫௬௦) என்பனவுமாம். நிகழ்பொருள் இயற்கையாயுண்டாகிய பொருள்; செயற்கையுமாமென்னில், “பணைநீங்கிப் பைந்தொடி சோரும்” (௧௨௩௪) என்பதனுள் எழுதியதாலறிக.* இனி, “இலங்கிழாயின்றுமறப்பின்” (௧௨௬௨) என்னும் பாட்டினுள் “கலங்கழியும்” என்பதற்கும் “இடத்து நிகழ்பொருளின்றொழில் இடத்தின்மேனின்றது” என்றது பிழை; (இப்பாடற்கு) “பணை நீங்கிப்பைந்தொடிசோரும்” என்பதற்குரைத் தாங்குரைக்க. “அக்குமரவுமணிமணி” என்னுங் கோவையாருள் (௧௦௩) பேராசிரியரும் இவ்வாறே எழுதினரென்க.

இனித்தொல்காப்பிய வினையியலுள், ‘ஆகிடந்து செறுவிளையும்’* என்பதனை இடத்துநிகழ்பொருளின்றொழில் இடத்தின்மேனின்றதென்றார். (ஈண்டு) நிகழ்பொருள் செய்யுட்கண் வெளிப்படையாக வாராமையின் ஆகுபெயர்க்குள் அடங்குமென்க.† இவ்வாறெழுதுவது நச்சினார்க்கினியர் கருத்து. இவ்வுரையாசிரியர் “தொட்டனைத்தூறு மணற்கேணி” (௩௯௬) என்பதன்கண், இடத்து நிகழ்பொருளின்றொழில் இடத்தின்மேனின்றது என எழுதாமை காண்க.‡

௨௧௬. பயன்மரமுள்ளூர்ப்........படின்.

நு - லை:—உள்ளூர் - ஊர்நடு; முன் பின்னாகத்தொக்க ஆறும் வேற்றுமைத்தொகை. “முற்பகல் : ‘பிற்பகல்” (௩௧௯) “நுனிக்கொம்பரேறினார்” (௪௭௬) கடைக்கண் (௪௭௬-உரை) கீழ்நீர் (௯௨௯) என்பனவுமது. முருகாற்றுப்படையுள், கீழ்நீர் என்பதனை “மீயெனமரீஇய” (தொல்- எழுத்- ௨௫௰) என்னுஞ் சூத்திரவிதியால் இலக்கணமரூஉவாக்கினார் நச்சினார்க்கினியரென்க. (அடி - ௨௯ - உரை) இளம்பூரணரும், புள்ளிமயங்கியலுள், முன்றில் என்பதனையும் இலக்கணமரூஉ எனவுரைத்து, கடைக்கண் என்பதனையும் அதுவென்றார். (௩௫௫- ஆம்சூத்திரம்). இவ்வுரையாசிரியர், வடநூன்மரபும், வடநூலை மொழிபெயர்த்துச் செய்த வீரசோழியமுதலிய பின்னூலுங் கண்டு, இவ்வாறுரைத்தார்போலுமென்க. பரிபாட்டினுள், “மழையிருஞ்சூல்வண்ணன்” என்பதனை முன்பின்னாகத்தொக்க இரண்டாம் வேற்றுமைத்தொகையென்றார் இவ்வுரையாசிரியர். ஆகையால் அவர்கருத்து எம்மனோர்க்கு அறிதலரிதென்க.

௨௩-ம் அதி - ஈகை.

௨௨௧. வறியார்க்கொன்........நீரதுடைத்து.

நு - லை:—நீரது - பகுதிப்பொருள்விகுதி; பகுதிப்பொருள்விகுதியாவது, பகுதியின் பொருளையேபடும்: விகுதிபெற்றிருந்துமென்க. பகுதிவிகுதியாவது—குழையென்பது பகுதி, அன் என்பது விகுதி: குழையையுடையன் குழையனென முடிக்க. அஃதிவ்வாறு பொருட்

---

* “வளைத்தொழில் தோண்மேனின்றது” என்பது புரி......ருரை.

* தொல், சொல்லதிகாரம், வினையியல் “அம்முக்கிளவி” (௨௩௩) என்னும் சூத்திரவுரை பார்க்க.

† பரிமேலழகர், “கேணியென்றது அதன்கணீரை” எழுதினர்.

படாமைகாண்க. "நத்தம்போற்கேடு" (௨௩௫) "நுனிக்கொம்பர்" (௪௭௬) "உள்ளத்தார்காதலவராக" (௧௨0௪) "செயற்கையறிந்தக்கடைத்தும்" (௬௩௭) என்பனவுமாம்.

௨௨௩. இலனென்னுமெவ்வ.........கண்ணேயுள.

நு - லை:—குலன் - குடி. ஈதலைப்பலவாக்கிய பக்ஷாந்தரமூன்று காண்க. "ஏதிலார்போலப்பொதுநோக்கு" (௧0௯௯) என்பதற்கும் இவ்வுரையாசிரியர் அவ்வாறெழுதினரென்க.

௨௨௪. இன்னாதிரக்கப்.........காணுமளவு.

நு - லை:—இரக்கப்படுதல் - இரப்பார்க்கீவனென்றிருத்தல். படுதல் எச்சவும்மை; அளவு முற்றும்மை; (இவை) செய்யுட்டொடைவிகாரத்தாற் றொக்குநின்றன. இரக்கப்படுதல், செயப்படுபொருண்மேனில்லாது ஈவலென்றிருத்தற் றொழின்மேனின்றது. "அகத்தின்னாவஞ்சரையஞ்சப்படும்" (௮௨௪) (என்பதுமது). கோவையாருள் "கொள்ளப்படாது" (௮௭) என்பதற்குப் பேராசிரியரும் இவ்வாறுரைத்தார்.* "உதவிசெயப்பட்டார்" (௧0௫) என்பதும், "உட்கப்படாஅர்" (௯௨௧) என்பதும், பாயிரத்துள் † "கற்கப்படார்" என்பதும் இவ்வாறு வேறுபொருள்படுமென்க.

௨௨௮. ஈத்துவக்குமின்ப.........தீண்டலரிது.

நு - லை:—ஈத்து வினையெச்சத்திரிசொல். தம்முடைமை எனநிற்கற்பாலது தாமுடைமையெனவும், முன்னர்க் காமத்துப்பாலில், "தாமுடைய நெஞ்சந்துணையல்வழி"........தமரல்வழி (௧௨௯௯-௧௩00) எனவும், "பூங்கணையார்" என்னுங் கோவையாருள் (௧௯) "பாங்கனையானன்னபண்பனை" எனவும், "தெளிநீயனையபொன்னே பன்னுகோலந் தெளிவுறவே" (ஷை-௧௨௨) எனவும், "வேனில்வெயிற்குலர்ந்த மெய்வறுமைகண்டிரங்கி, வானின் வளஞ்சுரந்த வண்புயற்குத்—தானுடைய, தாதுமேதக்கமதுவுந்தடஞ்சினையார்ந் போதுமீதேந்தும் பொழில்" (தண்டி) என்பதனுள் 'தானுடைய' எனவும், பிற்காலக் கவியிலும் "தானுடைய மெய்ந்நடக்கத் தண்மா தவிக்களித்து" எனவும் பெரும்பான்மையும் வரும். "தானாமென்னுமகரவிறுதியும், யாமெ னிறுதியு மதனோரன்ன" (தொல், எழுத் - ௧௮௮) என்னுஞ் சூத்திரவிதிபெறாது உருபுபுணர்ச்சிக்கும் பொருட்புணர்ச்சிக்கும் மாறுபட்டுவருதலின், இவற்றின்கண் உரையாசிரியர் பரிகரியாமையால், இவ்வுரையாசிரியர் கருத்தும் எம்மனோர்க்கறிதல் அரிதென்க.

௨௨௯. இரத்தலினின்னாது.........தமியருணல்.

நு - லை:—நிரப்பிய என்பது செய்யிய என்னும் வினையெச்சம். "பெருங்கடலாடிய" என்றார் நாலடியாரில். இச்செய்யுளாசிரியரும், "கோட்டுப்பூச் சூடினும்.......காட்டியசூடினீரென்று" (௧௩௧௩) "தினியவிருந்தது" (௧௨௯௯) எனக்காமத்துப்(பாலுட்) கூறினர்.

௨௪-ம் அதி - புகழ்.

௨௩௧. ஈதலிசைபட.........மில்லையுயிர்க்கு.

நு - லை:—ஈதலாற் புகழுண்டாக வாழ்தலென்றார். "இரப்பார்க்கொன்றீவார்மேனிற்கும்புகழ்" (௨௩௨) என்பதுவும் இக்கருத்து. படுதல் - உண்டாதல். இனி, இவ்வுரையாசிரியர் பரிபாட்டினுள், "இலம்படு புலவர் ஏற்றகை ஞெமிரப், பொலன்சொரி வழுதி" என்பதற்குத் - தொல்காப்பியத்துள், "இலமென்கிளவிக்கு" என்னுஞ்சூத்திரத்திற்கு (தொல். எழுத்-௩௧௬) இளம்பூரணருரைத்தாங்கு உரைத்தார். அத்தன்மை எம்மனோர்க்கறிதலரிதென்க. நச்சினார்க்கினியர் அதனை வேறுரைத்தாரென்க.‡

௨௩௪. நிலவரை நீள்புகழ்.........புத்தேளுலகு.

---

* "கொள்ளப்படாதென்பது, வினைமுதன்மேலுஞ்செயப்படுபொருண்மேலுமன்றி வினைமேனின்ற முற்றுச்சொல்; "அகத்தின்னா வஞ்சரையஞ்சப்படும்" என்பதுபோல" என்றார் பேராசிரியர். பரிமேலழகரும், அஞ்சப்படுமென்பதற்கு அஞ்சுதல் செய்யப்படுமென விசேடவுரையிற் கூறினர்.

† பாயிரத்துளென்பது, தொல்காப்பியப்பொதுப்பாயிரத் தென்க.

‡ இலம்படுபுலவரென்பதற்கு 'இலத்தாற் பற்றப்பட்ட புலவர்' என இளம்பூரணரும், 'இல்லாமையுண்டாகின்ற புலவ'ரென நச்சினார்க்கினியரும் பொருள் கூறினர்.

நு - லை:—"புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின் - வலவனேவா வானவூர்தி - யெய்துப வென்பதஞ் செய்வினை முடித்து" (புறம் - ௨௭) எனக்காட்டுதலாற் புலவர் பாட்டுக்கொள்ளுதல் அறமாமென்க.

௨௩௫. நத்தம்போற்கேடு........கல்லாலரிது.

நு - லை:—போல் - ஒப்பில்போலி; "மலைநாட்டுள் மங்கலமென்பதோர் ஊருண்டுபோலும்" என்பதுமது. ஆகுமென்பதனை முன்னுங்கூட்டி அரிதென்பதனைத் தனித்தனி கூட்டுக. தனித்தனி கூட்டாதொழியின், பன்மை யொருமை மயக்கமாதலாமென்க. "கடுமொழியுங் கையிகந்த தண்டமும்...தேய்க்குமரம்" (௫௬௭) "இகலின் மிகலினி தென்பவன் வாழ்க்கை......நணித்து" (௮௫௬) என்பனவும் இவ்வாறாம். நத்தம் போற்கேடு - புகழுடம்பிற்கு ஆக்கமாகுங்கேடு. உளதாகுஞ் சாக்காடு - புகழுடம்புளதாகுஞ் சாக்காடு. நந்தென்னுந் தொழிற்பெயர் விகாரத்தால் நத்தென்றாயிற்று. அம் - பகுதிப்பொருள் விகுதி.

(தொடரும்)

பத்திராசிரியர்.

புராதன இந்தியா.

(முற்றொடர்ச்சி.)

[பங்களூர் ஸ்ரீமான்-எஸ். கிருஷ்ணசாமி ஐயங்காரவர்கள், M. A. எழுதியது.]

இக்காலத்திலெல்லாம் தக்ஷிணமோவெனின், மாளவக்ஷேத்திரபர்கள் புரிந்தபெரும்போர்களால் சிதைவுண்டு, வெகுவானசிற்றரசுகளாய்ப் பிரிவுபெற்று நின்றன.— சமுத்திரகுப்தன் இத்திசைபுகுங்கால் பதினொரு ராஜ்யங்களாக நின்றபோதிலும், மேற்புறமாத்திரம் இப்போதை மஹாராஷ்டிரத்துக்கும், கான்தேசத்துக்கும் சரியாக தைவராஷ்டிரம், ஏருண்டபள்ளியென்னுமிரு கூறுகவே நின்றது. இவ்விரண்டில் முற்கூறிய மஹாராஷ்டிரத்தினின்றுமே முதல் அரசவம்சம் வளர்ச்சிபெற்றது. ஹூணர்கட்கும் பிந்திய குப்தர்கட்கும் பெரும்போர் விளைந்து, குப்தராஜ்யம் நிலைதவறியதாய்க்கிடந்த காலத்தில், இச்சளுக்கியர் சிறிதுசிறிதாய்த் தங்கள்பாற்பட்ட கான்தேசத்தை ஆக்கிரமித்துக்கொண்டு, கிருஷ்ணாநதி வடகரையோடுங் கடல்வரை விரிந்த வெங்கிநாடு முழுதையும் தமதாக்கிக்கொண்டனர். இங்கேதான் பல்லவர்கட்கும், சளுக்கியர்கட்கும் அண்மைநேரிட்டு ஓயாப்போரும் விளைந்தது.

கிருஷ்ணாநதிக்குத் தென்பாற்பட்ட நாடுகளும் பல்லவர்பாற்பட்டு ஒன்றுபட்டுவந்தது. ஸமுத்திரகுப்தனது விஜயயாத்திரை காலத்துக் காஞ்சியிலாண்ட பல்லவன் விஷ்ணுகுப்தனென்பான். இவன் பின்வந்த பல்லவஅரசர்கள், சுற்றிலுமிருந்த பல்லவநாடுகளையும் சேர்த்துக்கொண்டு தென்புறமகன்று காஞ்சிக்கும் சோழசேரமண்டலங்களுக்குமிடைப்பட்ட நாடுகளையெல்லாம் சேர்த்துக்கொண்டார்கள். கிருஷ்ணாநதிக்கரையிலோவென்றால், சளுக்கியர்களையோங்கவிடாமல் வெகுஇமையாநாட்டத்தோடு காவல்பூண்டிருக்கவேண்டியதாயிற்று. பல்லவவுயர்வுடன் பிராமணமதமும் உயர்வடைந்தது. பல்லவவரசர்கள் ஆலயநிருமாணத்திலும், தமிழ்வளர்ச்சியிலும் ஊக்கம்பெற்று நின்றதால், இப்பொழுது வெகுபழமைபெற்ற சைவவைஷ்ணவக்கற்றளிக ளிவர்களாலேயே நிருமிக்கப்பெற்றனவென்றே கொள்ளவேண்டுவனாய்க் கிடந்தன.

இவ்வாறு நாடுகள் புதுவடிவம்பெற்று வெளிப்படுங்கால் இந்தியதேயம் மேல்வரும் மூன்று பிரிவாகக்கிடந்தது. வடக்கில் தானீச்வர அதிராஜ்யத்துக்கடிமைப்பட்ட ஹிந்துஸ்தானமும், இடையில் சளுக்கிய அதீன தக்ஷிணமும், தெற்கில் பல்லவராஜ்யம் பூண்டதென்னாடுமாம். இக்காலத்திற்றான் சீனயாத்திரிகனாக ஹுயவன்ஸாங்க் என்பவன் இத்தேயமுழுதும் யாத்திரைசெய்ததுமன்றி தேயத்துச் சரித்திரசாதனங்களும் எற்பட்டமையால் இதேகிரமத்திலிம்மூன்று கூறுகளும் எடுத்தாளப்படும். பாணகவியின் ஹர்ஷசரிதமும், நந்திக்கலம்பகமும், வைஷ்ணவப் பிரபந்தங்களும், சைவ அடியார்களிலனேகர் கவிகளும், மூன்றிடத்தவையுமான அநேக சாஸனங்களுமிக்காலத்திய நிகழ்ச்சிகளுக்குரிய சாதனங்களாம்.

ஆயினும் காலக்கிரமவேறுபாடில்லா திருத்தல் வேண்டின் தென்இந்தியா விஷயம் முதற்கூறல்தகும்— சளுக்கியப்பெருக்கைத்

தடைப்படுத்திக் கிருஷ்ணாநதிக்கரையிலே நிறுத்துவது பல்லவர்களுடைய முதற்காரியமாயிற்று. கி. பி. சுமார் 500-ல் குப்தர்கள் ஹூணர்களால் தகர்ப்புண்டு பொருது நிற்குங்கால், தெற்கேபல்லவர்கள் முதன்மைபெறவே, சளுக்கியகீர்த்திவர்மனாலும் அவன்பின்னோன் மங்களீசனாலும் தக்ஷிணமெல்லாம் ஒன்றுபடுத்தப்பட்டது. மஹேந்திரபல்லவனிறந்து பல்லவராஜ்யம் மிகப்பெருமைபெறச்செய்த நரசிம்மவர்மன்பாற்படவே, சளுக்கியவரசும் அவ்வம்சத்திய பேரரசனான இரண்டாம் புலிகேசன்பாற் பட்டுநின்றது. இவ்விருவரும் சிம்மாசனமேறியகாலத்திலே உத்தரமும் ஹர்ஷவர்த்தனன்பாற்பட, அனேகவிளைவுகளுண்டாயின. ஆகையால் முதல் தானேசுவரம்நின்று, பிறகுகன்னோசையில் நிலைபெற்ற, ஹர்ஷவர்த்தன சிலாதித்திய சரிதம் சிறிதுநோக்கல்வேண்டும்.

சாகஸத்தில் நிலைபெற்ற மிஹிரகுளன் படையெழுச்சியாலுண்டாய பெருங்குழப்பத்தினின்றும் வெளிப்பட்டு, இப்பெரும்பகைவழியினின்று இத்தேயத்துவாழ்வின் மாறாட்டத்துக்கேதுவான அனேகபெரும்பூசல் விளைந்தவிடமான குருக்ஷேத்திரத்தின் அருகே, தானேச்வரத்தில் பிரபாகரனென்னும் சிற்றரசன் குப்தவம்சத்தில் மணம்புரிந்து அவர்களோடு நட்புப்பூண்டு விளங்கினன்—தன்வலி வாய்ந்த இருமக்களால் ஹூணர்களை பின்னோட்டித்தேசத்தைப்பாதுகாத்தனன். இவர்களிலிளையோனாய்ப் பதினைந்தாண்டுவாய்ந்த, ஹர்ஷன் தன்முன்னோன் படைகொண்டு முன்னேகத் தான்பிற்கூற்றை நடாத்திச்செல்வான், இமையவரைத் தென்சாரலிற் றங்கியிருக்குமளவிலே தாதைபிரபாகரன் நோயுற்றசெய்திகேட்டுப் பின்திரும்பி வந்தனன்—மாற்றார்படையை மாள்வித்து, எல்லைநாட்டையெல்லாம் நன்னிலைபெறச்செய்து இவன்முன்னோனான ராஜ்யவர்த்தனனும் சடிதியில்வந்துசேர்ந்தனன். பிரபாகரனிறக்கவே ராஜ்யவர்த்தனன் பட்டம்பெற்றுத்தன்னொரேயுடன்பிறந்தாளான மகதகிரஹவன்மன் மனைவி ராஜ்யஸ்ரீயென்பாட்கு வாய்ந்த விதிவிளைவைக்கேட்டு மனமழன்றனன். அஃதெற்றேவெனின், மாளவதேயத்தரையனால் கிரகவன்மன் கொலையுண்ணவே ராஜ்யஸ்ரீயும் சிறைப்படுத்தப்பட்டாள். ராஜ்யவர்த்தனன் மாளவஞ்சென்று இவ்விடுக்கட்கேதுவான மாளவவரசனைப்புறங்காட்டச்செய்து திரும்பிவருமளவில் பங்காளத்தரசனாய சசங்கன் சூழ்ச்சியால் கொலையுண்டான்— ராஜ்யஸ்ரீயோவெனில் விந்தியாரண்யம் புகுந்து உயிர்பிழைத்தனள். அதிகாரம் பெற ஆவலுற்றிலனாயினும் ஹர்ஷன் ஆட்சிப்பொறையை வகிக்கவேண்டியதாயிற்று.

உடன்பிறந்தார்களைத் தேடிக்கண்டு, உயிர்ப்பலியினின்றும் மீட்பது ஹர்ஷனது முதற்கடப்பாடாய்நின்றது. இது முடிவுபெறவே, சசங்கன்மேற் றிரும்பி யவனையுமடிப்படுத்தினான். பிறகு குப்தர்கள் காலத்திருந்தவாறு அதிராஜ்யமொன்றை நிலைபெறச்செய்யவேண்டுமென்பதைத் தன் கடமையாகப் பூண்டான். அவன் நீண்டவாட்சியில் முப்பதாண்டு ஓயாமல், போர்த்தொழிலையே மேற்பூண்டு இந்துஸ்தானத்தையெல்லாம் தன்னடிப்படுத்திக் கொள்ளவே, பிராம்மணவரசனான காமரூபத்துக்குமாரராஜனும், பங்காளத்திய சைவசசங்கனும், இவ்விரண்டுக்குமெதிர்முனையில் நின்ற வல்லபி, காஸ்மீரவரசர்களுமிவனததிராஜ்யத்துக்கீடுபட்டு நின்றார்கள். ஆயினும் ஓரெல்லையில் மாத்திரம் தடைப்படுத்தப்படவே சமுத்திரகுப்தனைப்போ லேகாதிபத்தியம் பெறுவது ஹர்ஷனுக்கியலாமற் போயிற்று. எப்படியெனின், ஹர்ஷன் தக்ஷிணத்தின் மேற் படைசெலுத்தவே, சளுக்கியபுலிகேசி விந்தியக்கணவாய்களிலெல்லாம் காவலிட்டு ஹர்ஷனைத்தோல்வியடையச் செய்தனன். பிறபெருமக்கள் போலவே ஹர்ஷன் தன்வலியளவைத் தெரிந்துகொண்டு மறுபடியுமிவ்விஷயத்தில் யத்தனிக்காமல் நின்றான். இவ்வாறு ஹிந்துஸ்தான வெல்லைக்குட்பட்ட அதிராஜ்யமொன்றை நிருமித்து மிகுந்தகாலமெல்லாமிதை நிலைபெறச்செய்யும் முயற்சியையே பூண்டோனாயினன்.

இவனாட்சியின் பிற்பாதியிற்றான் சீனதர்மசாஸ்திர ஆசிரியனான ஹயவன்ஸாங் என்பவன் இந்துதேயத்தில் யாத்திரை செய்தது. இவன் ஹர்ஷவாட்சி, இரண்டு சதமானங்களுக்கு முற்பட்ட குப்தவாட்சி போலவே திருப்திகரமாயிருந்த போதிலும், பிரயாணமார்க்கங்கள் முன்போ லவ்வளவுநன்றாய்க் காப்படைய வில்லையென்று தேர்ந்தனன் போலும். சக்கிரவர்த்தியோ தன்ராஜ்யத்தில் இடைவிடாமல் சஞ்சரித்துவரவே அவர் நிலைவீடு சலிக்கும் நகரத்தைப்

போன்று விளங்கியதாம். தண்டநீதி தாமதமின்றிச்செலுத்தப்பட்டதுந்தவிர, முன்னாளிற்காட்டிலும் கொஞ்சம் குரூரமாயிருந்ததாகத்தோன்றுகிறது. நமக்கு ஒன்றும் கிடைத்தலரிதாயினும் கிரமமாய் வைத்தாளப்பெற்ற ஆட்சிப்பத்திரங்கள் அமைவு பெற்று நின்றனவாம். ஹர்ஷன் பெரிய வித்வானும் கவிஞனுமாயிருந்ததும் கல்விவளர்ப்பதில் ஊக்கமடைந்தவனாய் நின்றதுமன்றி இச்சீனயாத்திரிகன் சொல்லுமாறு ஜனங்கள் கல்விப்பயிற்சியில் உயர்வு பெற்றிருத்தல் சாத்தியமன்று. இவன் சபையில் அனேக கவிஞர்கள் இவன் வண்மையாற் றழைத்தோங்கியதனால் கவிவண்மை பூண்ட வள்ளல்களி லிவன் உயர்வு பூண்டவனானான். இயற்கையாகவேயோ பயிற்சியினாலேயோ ஹர்ஷன் மதானுஷ்டானத்தில் மிகப் பொறுமை பூண்டவனாய் நின்றனன். இவன் மதப்பொதுமை அக்பர் சக்கிரவர்த்தியதைப் போன்றதேயாயினும், பிற்காலத்தில் ஹயவன்ஸாங் உபதேசபலத்தால் மஹாயான பௌத்தக்கொள்கைகளிற் சார்புபெற்றவனானான். கன்னோசைப் பட்டணத்திலிவன் நடாத்திய பௌத்தப்பெருவிழவும், பிறகு அலஹாபாத்தில் நடைபெற்ற மதப்பொதுமை விழவும் இவனது விரிவுமறிவும் வாய்ந்த மதக்கொள்கைகளை நன்கு விளக்கும். முப்பதாண்டு போர்த்தொழில் பூண்டவனாயினும் இவன் போர்பூண்டது, இன்றியமையாமையாலேயொழிய விருப்பத்தாலன்று. இவன் மதாவேசத்தாற் குடிகளைத் துன்புறுத்தினனென்னும் கொள்கைகளெல்லாம் நம்பற்கேலாதனவே. கி. பி. 648-இல் இவன் காலமாகவே, தகுதியான யுவராஜனின்மையால் அர்ஜுனன் என்னுமமைச்சனரசாட்சியை அதிக்கிரமிக்கவே, அக்காலத்துச் சீனராயபாரியால் தோல்வியடைந்து அதிராஜ்யத்தையும் முடிவுபெறச்செய்தான். எப்படியோவெனின் ஹர்ஷன் ஒரு பிராமணனைச் சீனத்துக்கு ராயபாரம் செலுத்தினான். இவன் திரும்பிவரவே சீனசக்கரவர்த்தி இவனுடன் வாங்ஹீன்ஸீ என்பவனையனுப்பினன். ராஜ்யாபகாரியான அர்ஜுனன் அவனை அவமதித்து நடத்தவே அவன் திபத்துக்குப்போயங்குநின்றுமுதவி பெற்றுத் திரும்பிவந்து அர்ஜுனனை யழிவுபெறச்செய்து அதிராஜ்யத்தையும் முடிவுபெறச்செய்தான். கி. பி. 700-க்கு மேல். இத்தேயம் மஹம்மதியர் வசப்படுமுன் அதிராஜ்யம் என்பதேயின்றி சிறிது சிறிதாயும், சுலபமாயும் அவ்வவர் பாற்பட நின்றது.

சற்றேறக்குறைய இதேகாலத்தில் பல்லவராஜ்யமும் முடிவு பெற்றது. விந்தியமலைச்சாரலில் ஹர்ஷனைத் தடைப்படுத்தியது முகற் புலிகேசிக்கும், பல்லவ நரசிம்ம வன்மனுக்கும் பெரும்போர் விளைந்து, மலைக்குகையாலயங்களையும் மாமல்லாபுரத்தையும் நிருமித்த நரஸிம்மபல்லவன் படைத்தலைவர்கள் சளுக்கியரை அப்பாற்படுத்தி, அவர்களரசவிடாகிய வாதாபியை எரியூட்டி, சளுக்கியதேயத்தைப் பதின்மூன்று வருஷ மிறையிலியாகச்செய்தனர். புலிகேசியின்பின்னோர்கள் வடக்கெல்லைப் பிராந்தியங்களெல்லாம் இடரின்றி வதிந்தமையால் பல்லவராஜ்யத்துட் படைபோக்கி வெற்றிபெற்றனர். இப்பல்லவ எல்லைநாட்டைக் காக்கவே புலிகேசி வெங்கை ஆதிபத்தியமொன்று தனியே நிலைபெறச்செய்து தன் பின்னோனாய குப்ஜ விஷ்ணு வர்த்தனனைப் பிரதிநிதியாக நிறுத்தினன்போலும்.

கி. பி. எழாம்நூற்றாண்டி னிரண்டாம்பகுதியில் சளுக்கியர்கட்குப் பெரிய விபத்தொன்று நேர்ந்தது. பல்லவ எல்லையினின்றும் வெகு தூரத்தில்நின்ற பான்யகேத ராஜதானிபெற்ற ராஷ்டிரகூடர்கள் சளுக்கியவரசவம்சத்தை யழிவுபெறச்செய்து, அவருரிமையெல்லாந் தாம் பெற்றனர். இது பல்லவர்கட்குக் கொஞ்சம் விராமம்கொடுத்தது. ஆயினும் ராஷ்டிரகூட தந்திதுர்க வைரமேகன் காஞ்சிசூழ்ந்து நீங்கியபிறகு, நந்திவர்மனே கடைசியாக, பல்லவஅதிராஜ்யம் சிதறுண்டு பல சிற்றரசுகளாய்க் கிடந்து முடிவில் சோழசக்ராதிபத்தியத்தி லடங்கிப்போயிற்று.

இப்போது நாம் இதுகாறும் விவரித்த சரித்திரகாலமெல்லாம், இத்தேயத்துச் சிறுதுணுக்குகளான ராஜ்ஜியங்கள் எவ்வளவோ குழப்பம் பெற்றிருந்தபோதிலும் இக்குழப்பத்தினின்றும் தெளிவாய் நாமறியத்தகுந்த கொள்கையொன்று முன்னிற்கும். அஃதேதோவெனின் மௌரியரேயாகுக; குப்தரேயாகுக; இல்லாவிடில் ஹர்ஷனேயாகுக; யாரேனுமொருவன் கைப்பட்டு, தேயமெல்லாமொன்றுபடுத்தப்பெற்று ஒரேயதிராஜ்யமாய் நின்றுவிளங்கியபோது தேயமெல்லாமமைதியடைந்து, நல்லாட்சியின நல்விளைவுகளைப் பெற்றதுமன்றி, எல்லைநாடுகளுமிருகூறின்றி நின்றன. எவ்வெக்காலத்தி லிவ்வைக்கியமில்லாமற்போயிற்றோ அக்காலங்களிலெல்லாம் தலையெடுத்து, தேயகூறுகளெல்லாம் ஒன்றோடொன்று முரண்பட்டு, அயற்றேயத்திய அரசர்களை யழைப்பது போனின்றன.

அத்தருணத்தில் உட்புக வயலாருமாயத்தமாயிருத்தற் கையமில்லை. ஆகையால் கி. பி. 700-ம் வருடத்தோடு முடிவுபெறும் ஆயிரமாண்டுகளில், சிறந்துவிளங்குமரசியல் லக்ஷணமேதேனுமொன்றுண்டேயாயின் அது சக்கராதிபத்தியநிர்மாணயத்தனமென்று சொல்லலாம். இவ்வளவுகுழப்பங்களினும் ஜனங்கள் வெகுவாயமைதிபெற்று, நல்வாழ்வுற்று தனதான்யச்செழிப்புப்பெற்றுப் பெரும்பாலும் சுகமாய் வாழ்ந்தனரென்பது நன்குபுலப்படுகிறது. கல்வியேமுதலாயகலைகளில் நம்முன்னோரடைந்த சிறப்பு நாம் நன்குமதித்துப் பெருமைபாராட்டத்தக்கதேயாகும். நவீனரானநம்மைக்காட்டிலும் நம்முன்னோர்கள் அகன்ற தூரதிருஷ்டிபெற்றவர்களாய், தங்கள்நயத்தையே பாராட்டாது பின்வருவோரனுகூலத்தையே வேண்டித் தம்மாலியன்றமட்டும் முயற்சிசெய்ததேயிதற்கெல்லாம் காரணமாய் நின்றது.

ஆயினும் நம்முன்னோர் தமநாட்டபட்ட சிற்றாட்சிக்கும் அதிராஜ்யப்பராதீனத்துக்கு முட்கிடந்த மாறுபாட்டை நீக்கியொற்றுமைபெறச்செய்யும் கொள்கைகளைக் கண்டுபிடிக்காமற்போனது வியாகுலப்படத்தக்கதே. ஏனெனின் இத்தேயத்துக்குண்டான அழற்சிக்கெல்லாமிவ்வொற்றுமையின்மையே காரணமாம்.

இவ்வியாசமெழுதியதின் அபிப்பிராயத்தையிரண்டொரு வார்த்தைகளால் விளக்கி யதை முடிவுபெறச்செய்வது நேர்மைபெறும். நமக்குக்கிடைத்திருக்கும் சாதனங்களையெல்லாம் ஒருவாறு யுற்றுநோக்கிச்சரித்திரம் நிரூபிக்கப்புகின் இந்து ஹிந்தியசரிதம் ஒற்றுமைபெறுமென்பதற்கையமேயில்லை. இச்சாதனங்களையெல்லாமொருங்குசேர்த்து அரசவம்சத்தியர் சரிதத்தைவிட்டு ஜனங்களைப்பற்றியேயெழுதப்புகின் இவ்வொற்றுமை நன்குவிளங்கும். ஆயின் முன்னதின்றிப் பின்னது முடியாமையாற்றான் இவ்வியாசம் வரையப்பெற்றது. ஆயின் இந்தியஜனசரிதமெழுத சாதனங்கள் இந்தியவாராய்ச்சியையே மேற்பூண்டுழைக்கும் மஹான்களின கைம்மாறுகருதாப் பெருமுயற்சியால் நாளைக்குநாள் முடியற்பாலதாய் நிலைபெறுகிறது. இதையாரேனும் செய்க. என்னபிப்பிராயமெல்லாமப்பேர்ப்பட்டவர்களைக்கொஞ்சம் தூண்டிவிடவேண்டுமென்பதே. இக்காரியத்தில் சிறிதேனுஞ் யானுஞ்சாதித்தவனேயாயின் என்முயற்சியெல்லாம் நற்பயன் பட்டதாகக் கருதுவேன்.

(முற்றும்.)

விக்கிரஹாராதனம்.*

விக்கிரஹாராதனம் முற்காலங்களில் இந்த தேசத்திலும் மற்ற தேசங்களிலும் விஸ்தாரமாய்ப் பரவியிருந்ததென்றும் நாஸ்திகமதங்களும் ஆஸ்திக மதங்களும் கிரஸ்து மதம்போன்ற சிலமதங்களும் பிரசாரப்படுகையில் வரவரக்குறைந்துபோனபோதிலும் இத்தேசத்திலும் பின்னுஞ் சிலதேசங்களிலும் மற்ற மதஸ்தர்களுடைய துர்போதனைகளுக்குட்பட்டு முழுவதும்அழிந்துபோகாமல் இதுவரை ஜீவித்திருக்கின்றதென்பதும் யாவருக்குந் தெரிந்த விஷயம். இந்த விக்கிரஹாராதனமானது உபநிஷத்துகளிலும் புராணங்களிலும் பாஞ்சராத்திரம் முதலிய ஆகமங்களிலும ஆத்மாவாகிய பரமேசுவரனுடைய வாஸ்தவ சுவரூபமறியாதவர்கள் கிரமக்கிரமமாக அவருடைய உண்மையான சுவரூபத்தை அறிந்துகொள்ளுவதற்காக ஏற்படுத்தப்பட்ட ஓர் உபாயமாகிறது. இதற்கு அர்ச்சை என்றும் பிம்போபாஸனை யென்றும பிரதிமோபாஸனை யென்றும் பேர்களுண்டு. விக்கிரஹம் என்றால் சரீரம்; ஆராதனமென்றால் பூஜை. ஆகவே விக்கிரஹாராதனமென்பதற்கு சரீரபூஜை யென்றர்த்தம். அஃதாவது ஈசுவரன் எங்கும் நிறைந்தவராயும் வடிவமற்றவராயும ஆகாயம்போல சகல வஸ்துக்களிலுமுள்ளும் வெளியும் வியாபித்திருந்து நம்முடைய அற்பபுத்தியால் உள்ளபடி அறியத்தகாதவராயுமிருக்கிறபடியால் அவரை உள்ளவாறு அறிந்துகொள்வதற்காக ஏற்பட்ட உபாயமென்றாகிறது. அஃதெப்படிப்போலென்றால், கண்ணால் காணமுடியாத அகாரம் முதலிய ஒவ்வோர் ஒலியையும் அவைகளின் வரிசைகளாகிய வார்த்தைகளையும் வாக்கியங்களையும் இன்னின்னவையென்று கண்டுகொள்வதற்காகவும் அவற்றின் அர்த்தமின்னவென்று தீர்மானிக்கவும், ஒவ்வொரு தேசத்தார் ஒவ்வோர் எழுத்தைக் கற்பித்துக்கொண்டு அப் பற்பல எழுத்துக்கள் நிறைந்த புஸ்தகங்களின் வாயிலாய் வரிசைக்கிரமமாக ஏற்பட்ட ஒலிகளாகிய சாஸ்திரங்களை அறிந்துகொள்ளுகிறார்கள். நன்றாய் விசாரித்தால் அந்தந்த

---

* இவ்வியாசம், மதுரை நேடிவ் காலேஜ் ஸம்ஸ்கிருத பண்டிதராயிருந்து, இப்போது சென்னை சம்ஸ்கிருதகலாசாலைப் பண்டிதராய் விளங்கும் ப்ரம்மஸ்ரீ-சந்திரசேகர சாஸ்திரிகள் எழுதியனுப்பியது.

தேசத்தாராற் கற்பிக்கப்பட்ட எழுத்துகளில் ஒன்றாவது அந்தந்த ஒலிகளின் வாஸ்தவமான வடிவமல்லவென்பது யாவருக்குந்தெரிந்த விஷயம். அப்படியிருந்தும் இந்தப்பொய்யான வடிவங்களைக் கொண்டு மெய்யான ஒலிகளை அறிந்துகொள்ளுகிறார்கள். அதுபோலவே நிராகாரராகிய பரமேசுவரனுக்கு நம்மாற் கற்பிக்கப்பட்ட ஒவ்வொரு வடிவமும் வாஸ்தவமல்லவாயினும் அவைகளின் மூலமாய் அவர் அறியத்தக்கவரென்பதில் ஆக்ஷேபமில்லை. முதன் முதல் எழுத்துக்களைக் கற்க ஆரம்பித்தவனிடம் அகரவெழுத்து வேறு, அகரவொலி வேறு என்று சொன்னால் அச்சிறுவனுக்கு ஒன்றும் விளங்காது; அகரஎழுத்தும் அகரவொலியுமொன்றென்று தான் அவனுக்கு முதலிற் கற்பிக்கவேண்டும். சிலகாலஞ் சென்றபிறகு இஃது அகர எழுத்து: இதன் மூலமாய் அறியப்படத்தக்க அகர வொலியொன்றிருக்கின்றது—என்றுசொன்னால் அவனுக்கு நன்றாய்த் தெரியும். அதுபோலவே முதலில் சுவாமியை யுபாசிக்கத்தொடங்குபவனுக்கு விக்கிரஹந்தான் சுவாமியென்று உபதேசித்துச் சிலகாலஞ் சென்று அந்த விக்கிரஹத்தில் அவனுடைய மனசு திடப்பட்டபின் இஃது அவரை அறிவிக்கும் உபாயம்: இதன் மூலமாய் உபாசிக்கத்தக்கவராகிய ஈசுவரன் வேறொருவருண்டென்று உபதேசித்தால் அப்பொழுது வெளிப்புலன்களால் விக்கிரஹத்தையும் மனதினாலீசுவரனையு முபாசிக்கும் யோக்கியதை அவனுக்குண்டாகும். அப்படியே சிலகாலமாய்விட்டால் விக்கிரஹத்தின் உதவியின்றியே மனதினாலீசுவரனை யுபாசிக்கும் யோக்கியதை யுண்டாம். அஃதெப்படியெனில், ஒரு மனிதன் ஒரு புதுக்கறவைமாடு வாங்கினனென்று வைத்துக்கொள்வோம். அவன் அதை மேய்ச்சலுக்காக மாட்டுக்காரனிடம் ஒப்புவித்து சாயங்காலம்வரை மேய்த்துவரும்படி கட்டளையிடுகிறான். அந்தப் பசுமாடானது தனிமையாக மேய்ச்சலுக்குக் கொண்டுபோகப்பட்டால் அது சரியாக மேயாமல் எங்கேயோ தன்னைக் கொண்டுவந்துவிட்டார்களே யென்று ஏமாறித் திக்குகளை நோக்கி திகைத்து ஓட்டம்பிடிக்கும்; அதேமாட்டைச் சிலகாலம் வரை பழகிய நாலுமாடுகளுடன் சேர்த்துப் பிணைத்து அனுப்பினால் கொஞ்சங்கொஞ்சமாய்க் கூச்சந்தெளிந்து சிலநாட் செல்லுகையில் மற்ற மாடுகளின் உதவியை எதிர்பாராமலே தானே தனிமையாக

மந்தை சென்று நன்றாய் மேய்ந்து வரும். அதுபோலவே மனதென்ற புதுமாட்டுக்கு வெளிப்புலன்கள் துணைமாடுகளாம். ஆகையால் முதலிற் கண்ணால் பார்க்கக்கூடிய உருவத்தையே பகவானென்று பாவித்துப் பிற்பாடு கண் முதலிய புலன்களின் உதவியின்றியே மனதினாலேயே பகவானை நாம் தியானிக்க முடியும். இவ்விதமாக, பகவானுடைய வாஸ்தவரூபம் வெளியாவதற்காக விக்கிரஹாராதனம் ஆவசியகமென்றேற்பட்டது. அவருக்கு எத்தகைய வடிவத்தைக் கற்பிக்கலாமென்றாலோசிக்கையில் உலகத்திலே ஒருவருடைய எண்ணம்போல் மற்றவருக்கிருக்கவேண்டுமென்பதின்மையால் அவரவர்களுடைய புத்திக்கெட்டியவரை பகவானுக்கு அந்தந்த வடிவத்தைக கற்பித்து உபாசிக்கிறார்கள். சிலர் உலகத்திலுள்ள வஸ்துக்களில் உயிர்ப்பிராணி உயர்ந்ததென்றும், உயிர்ப்பிராணிகளில் மனிதர் உயர்ந்தவரென்றும் நினைத்து, மனிதரைவிட உயர்ந்த வேறு ஜீவராசியை இவர் பார்க்காமையால், தங்களுக்கு மேலானதாகத்தோன்றிய மானுடவுருவத்தையே பகவானுக்கு சரீரமாகக்கற்பித்து, அதிலும் நம்மைவிட பகவானுக்கிருக்கும் விசேஷத்தை வெளியிடுவதற்காக, அவருக்கு 4- தலைகள் 5- தலைகள் 6- தலைகள் 4கைகள், 8கைகள், 3கண்கள், முதலிய அநேகவித்தியாசங்களைக்கற்பித்து உபாசிக்கிறார்கள்.* மற்றவர்களோ ஆகாரமற்ற பகவானுக்கு நம்மைப்போல் ஆகாரம் கற்பிப்பது முறையல்லவென்று நினைத்து அவருக்கு யாதோர் உருவமுங்கிடையாது என்பதைத திடப்படுத்துவதற்காக, சிவலிங்கம் சாளக்கிராமம் முதலியவைகளில் பகவானையுபாசிக்கிறார்கள். பகவானுக்கு வாஸ்தவத்தில ஆகார மில்லையேனும், அவிவேகிகளுடைய சஞ்சலமானமனசு திடப்பட்டு தியானத்துக்கு யோககியமாதல்வேண்டி, விக்கிரஹங்கள் பகவானாலேயே கற்பிக்கப்பட்டனவென்பது பின்வரும்பிரமாணங்களால் தெரியவருகிறது. பாஞ்சராத்திராகமத்தில் வாசுதேவன் தன் பக்தர்களிடத்துள்ள வாத்ஸல்யத்தால் தன் லீலையினாலே ஐந்து மூர்த்திகளைக் கற்பிக்கிறார். 1. அர்ச்சை, 2. விபவம், 3. வியூஹம், 4. சூக்ஷ்மம், 5. அந்தர்

---

* அத்வைத மதமுறையில் இங்ஙனம் சாஸ்திரிகள் கூறினும், சைவ வைணவர்கள் கொள்கைப்படி இறைவன் நிக்கிரானுக்கிரகத்தின் பொருட்டெடுத்தருளிய திருவுருவங்களே உபாசிக்கப்படுவன என்றுணர்க. ப-ர்.

யாமியென ஐந்துமூர்த்திகள். பிரதிமைகளே அர்ச்சையெனப்படும்-பத்து அவதாரங்களும் விபவமெனப்படும்.

1, ஸங்கர்ஷணன், 2, வாசுதேவன், 3, பிரதியும்னன், 4, அனிருத்தனென நான்கு வியூகங்கள். (இவைகளை மனோபுத்தி சித்தாஹங்காரங்களென்றும் சொல்லலாம்) (1. சர்வஞ்ஞத்துவம், 2. நித்தியதிருப்தி, 3. நித்தியஞ்ஞானம், 4. சுவாதீனம், 5. குறைவற்றசக்தி, 6. அளவற்றசக்தி-) என்கிற 6-குணங்கள் நிறைந்தவர் சூக்ஷ்மமாவார். இந்த சுவரூபத்துக்குத்தான் வாசுதேவனென்றும் பரப்பிரம்மமென்றும் பெயர். ஜீவனுக்குள்ளிருந்து அவன்செய்த முன் கருமத்துக்குத்தக்கபடி நல்ல அல்லது கெட்ட செய்கைகளைச்செய்யும்படி ஏவுகிறவர் அந்தர்யாமியாவார். அர்ச்சோபாசனையென்கிற விக்கிரஹாராதனையினால் மனதின் கல்மஷம் நீங்கினால் விபவோபாசனையிலும் அதன்பிறகு வியூஹோபாசனையிலும் அப்படியே ஸூக்ஷ்மாந்தர்யாமி யுபாசனைகளிலும் யோக்கியதையுண்டாகும்."

சைவாகமங்களில் "பரமேசுவரன் ஆகாரமற்றவராகவேயிருந்தால் சாதாரணபுத்திக்குப் புலப்படமாட்டாராதலின் ஆகாரமுடையவராகவே அவரை யுபாசிக்கவேண்டும். உபாசிக்கிறவர்களுக்கு அனுகூலமாயிருப்பதற்காகவே ஈசானதத்புருஷாகோரவாமதேவஸத்யோஜாதங்களென்கிற 5-மந்திரங்களுள் பகவானுக்கு ஈசானமந்திரத்தை மஸ்தகமாகவும் தத்புருஷமந்திரத்தை முகமாகவும் அகோரமந்திரத்தை மார்பாகவும் வாமதேவமந்திரத்தை கடிப்பிரதேசமாகவும் ஸத்யோஜாதமந்திரத்தைக் கால்களாகவுங்கொண்டு இப்படி மந்திரமயமான வடிவமுடையவராக வுபாசிக்கவேண்டுமென்று சொல்லப் பட்டிருக்கிறது." எப்பொழுதுமே வெளிவிஷயங்களில் ஓடியாடித்திரிகின்றமனசு இவ்விதமான விக்கிரஹோபாசனையினுதவியால் அசைவற்று ஈசுவரனாகிய ஒரேவஸ்துவில் நிலைநிற்கும்படியான யோக்கியதையை யடைந்துவிட்டால், அப்போது அதற்கு உலகத்தில் நடக்கு மெல்லாசங்கதிகளையு மறியும்வல்லமையுள்ள பகவானுடைய அனுக்கிரகத்தால் பகவானுடைய வாஸ்தவமான சுவரூபத்தை யறியும் வல்லமையுண்டாகும். அஃதெப்படியெனில கண்ணாடி சலம் முதலிய சிலவஸ்துக்களில் பிரதிபிம்பம் காணப்படுகின்றது. ஆனால், அந்தக் கண்ணாடி முதலியவை களங்கமன்றியும் அசையாமலுமிருந்தாலொழிய சரியானபடி அவைகளில் பிரதிபிம்பத்தைப் பார்க்கமுடியாது. அப்படியே மனதும் தெளிவாயும் அசைவற்றுமிருந்தாற்றான் அதில் ஈசுவரனுடைய வாஸ்தவமான சுவரூபம் நன்றாய்விளங்கும். இந்த விக்கிரஹங்கள் 8. விதமென்று பாகவதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அவையாவன:—1. கல்விக்கிரஹம். 2. மரத்தினாற்செய்யப்பட்டது. 3. லோஹவிக்கிரஹம். 4. மண், காரை முதலியவிக்கிரஹம், 5. மணலாற்செய்யப்பட்டது, 6. சித்திரத்தில் எழுதப்பட்டது, 7. மனதினால் கற்பிக்கப்பட்டது, 8. ரத்தினத்தினால் செய்யப்பட்டது. மனோமயவிக்கிரஹத்தில் உபாசிக்கும் யோக்கியதைவந்துவிட்டால் மற்ற விக்கிரகங்கள் அவசியமில்லை. அதுவரையிலிவை வேண்டியவைகளே. அதுவுஞ் சொல்லியிருக்கிறது. "அறியாதவர்கள் பிரதிமைகளிலீசுவரனை யுபாசிக்கவேண்டியது; விவேகிகள் எங்குமீசுவரனை யுபாசிக்கலாம்."

இந்தப் பிரதிமைகளில் செய்யும் உபாசனையால் பகவானுக்கு அனுக்கிரகமுண்டாகி அவருடைய தயவுக்கு இந்த உபாசகன் பாத்திரமாகிறானென்பதெப்படி? பிரதிமைகள் வாஸ்தவத்திலீசுவரனுடைய சுவரூபங்களல்லவே? அப்படியிருக்க இந்த பிம்பங்களில் செய்கிற பூஜையினால் அவருக்கு தயவுவரக்காரணமென்ன? என்றால். கவனியுங்கள். நமது இந்துதேசத்துச் சக்கிரவர்த்தியாகிய எட்வர்ட்டு மகாராஜா அவர்களுடைய புகைப்படம் ஒன்று கடையிலிருக்கக்கண்டு நமது தேசத்து உள்நாட்டு அரசர் முதலியோர் அந்தப் புகைப்படத்தை ஆதரவுடன் வாங்கி தம்ராஜதானியாகிய பட்டணத்தில் அந்தப் புகைப்படத்துக்கு ஊர்கோலமுதலிய உபசாரங்களைச் செய்திருந்து சிலகாலமானபிறகு சமாசாரப்பத்திரிகைகளின் மூலமாயிந்த வர்த்தமானம் மஹாராஜா அவர்களுக்குத் தெரியவந்தால் வாஸ்தவத்தில் தம்முடைய சரீரமாகாத இப்படத்துக்கு அந்தராஜாக்கள் நடத்திய மரியாதையை நேரில் தமக்கே செய்ததாக எண்ணி அந்த ராஜாக்கள் தம்மிடத்தில் வைத்திருக்கிற ராஜபக்திக்காக அவர்களிடம் பரிபூர்ண தயவுடன் அவர்களுக்கு

வேண்டிய அநுகூலங்களைச் செய்ய எப்படி மஹாராஜா அவர்கள் பிரியமுடையவராவார்களோ அப்படியே பகவானுக்கு இந்த பிம்பங்கள் வாஸ்தவ வடிவமாகாவிடினும் மனப்பூர்வமாயவைகளில் செய்த பூஜையைத்தமக்குச் செய்வதாகவே யெண்ணி அநுக்கிரகிப்பாரென்பதில் சந்தேகமில்லை. சக்கிரவர்த்திக்கும் சுவாமிக்கு மிவ்விஷயத்தில் வித்தியாச மென்னவெனில், சக்கிரவர்த்திக்கு ஷை சங்கதி பத்திரிகை மூலமாவது வேறு எந்தவிதத்தாலாவது பிறர்தெரிவித்தால் தான் இதையறிய முடியும். பகவானோ எங்கும்நிறைந்து எல்லாவற்றையுமறியுஞ் சக்தியுடையவராகையால் நாம்செய்கிற ஒவ்வொருகாரியத்தையும் அந்தந்த க்ஷணத்திலேயே அறிந்துகொண்டு அநுக்கிரகிப்பார். இவ்விதம் விக்கிரகாராதனைசெய்து சித்தம்சுத்தமான மகான்களுக்குத்தான் ஞானம்பிடிபடுமாகையால் மற்றவர்கள் சித்தசுத்திக்காக விக்கிரகாராதனை செய்யவேண்டியதவசியம். சித்தசுத்தி பெற்றவர்களுக்கு அவசியமில்லையாகிலும், அவர்கள் இந்தமகாப்பிரயோசனமுள்ள விக்கிரகாராதனையை விட்டுவிட்டால், அபக்குவசித்தர்களும் இவர்களைப்பார்த்து "மகான்களே விக்கிரகாராதனை செய்யவில்லையே, நாமேன்செய்ய வேண்டுமென்று இதையலக்ஷியுஞ் செய்வார்கள். அதினால் அவர்கள்நஷ்டத்தை யடைவார்கள். ஆகையால் அவர்களை நல்வழிக்குக்கொண்டு வருவதற்காகவே, தாங்களும் அநுஷ்டித்துக் காண்பிக்கவேண்டும். அப்படியிருக்க ஞானத்தில் அதிகாரமடைந்த சிலவிக்கிரகாராதனம் முதலியகருமங்களில் யாதொருபிரயோசனமுமில்லை. எல்லாரும் 'ஞானப்பியாசந்தான்செய்யவேண்டும். கருமத்தின்பலன் அற்பமாகவே யிருக்குமென்று உபதேசிக்கிறார்கள்; அப்படி உபதேசிப்பது சரியல்ல. பகவத்கீதையில் பகவான் அர்ஜுனனுக்கு அநேக உபதேசங்களைச்செய்யும் நடுவில் "எனக்குக் கருமஞ்செய்வதினாலாகும் பயனில்லை; ஆகிலும் கருமங்களைச் செய்துவருகிறேன். ஏனெனில் உலகத்தில் பெரியவன் எதைச் செய்துவருகிறானோ அதையே சிறியவர்களும் செய்வார்களாகையால் நான்கருமங்களை விட்டுவிட்டால் என்னைப்பார்த்து அபக்குவசித்தமுடையவரும் கருமங்களை விட்டுக்கெட்டுப்போவார்கள்; தான்ஞானியாயிருந்தாலும் கருமசிரத்தையுள்ளவர்களுக்கு அவர்களுடைய புத்திபேதப்படும்படி உபதேசிக்கலாகாது" என்று உபதேசித்திருக்கிறார். இந்த விக்கிரஹாராதனையின் மூலமாய்த்தான் மார்க்கண்டேயர் முதலானபக்தர்கள் பகவானுடைய கிருபைக்குப் பாத்திரமாகி என்றும் பதினாறுவயது என்றுசொல்லும்படியான சிரஞ்சீவிபதவியையும் பின்னுஞ் சிலர் ஞானநிலைபேரில் மோக்ஷத்தையு மடைந்திருக்கிறார்கள். உலகத்திற் காணப்படுகிற பிரபுக்களை வேண்டுமானால் கபடமாயநுசரித்துத் தன்காரியங்களை அவர்களுடைய தயவினால் ஒருவாறு நிறைவேற்றிக்கொள்ளலாம். அப்படிப்போல பகவானை ஏமாற்றமுடியாது. அவர் சர்வஞ்ஞராகையால் கபடத்தை யப்போதே அறிவார். ஆகையால் நாமெல்லோரும் கபடமற்று விக்கிரஹங்களையே பகவானுடைய சரீரமென்று பாவித்துத் தக்கபூஜையை பக்தியுடன் சாஸ்திரங்களிற்சொல்லியபடி தவறாமல் செய்துவந்தால் மகா கருணாமூர்த்தியாயும் மோக்ஷம்வரைசகலபுருஷார்த்தத்தையுங் கொடுக்கும் சக்தியும் தயையுமுடைய பகவானுடைய கிருபைக்கு பாத்திரராகிச் சகலாபீஷ்டங்களையும் நாம் அடையலாமென்பதில் யாதோர் ஆக்ஷேபமுமில்லை.

பெரியபுராண அரும்பதவிளக்கம்.

[பழைய ஏட்டினின்று எடுக்கப்பட்டது.]

(முற்றொடர்ச்சி)

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்புராணம்.

(க) வைதிகமார்க்கந் தழைத்தோங்கவும், மேலான சைவம் விளங்கவும், ஆன்மகோடிகள் பொலியவும், சுத்தமாகிய திருவாயை மலர்ந்தழுத, குளிர்ந்த வளஞ்செறிந்த வயலையுடைய சீகாழியிலே திருவவதாரஞ் செய்தருளிய திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாருடைய திருவடித்தாமரைகளைச் சிரசின்மேல் வைத்துக்கொண்டு, அவருடைய திருத்தொண்டை (யாம்) பரவுவாம். பூதபரம்பரையென்பதற்குக் குருபரம்பரை என்று கோடலுமொன்று. இப்பொருட்குப் பூதம் - சுத்தம்.

(௨) கன்னிகையைப்போலச் சயபதது நணணுதற்கு அரிய காவலினையுடைய மதிலின்மீது முகில்கணெருங்குகின்ற சீகாழியாகிய பழையநகரம், சடையிலே வளராநின்ற சந்திரனையணிந்த சிலம்பையணிந்த சிவந்த திருவடியையுமுடைய சிவபெருமானது நிலையான சைவசமயத்தின் வழிவந்த குடியாகிய வளவர்களது காவிரிவளந்தருகின்ற சோழநாடு பொலிவடைய விளங்கியது. கன்னிமதில்-உவமைத்தொகை. மற்றைநகர் மதில்களினுஞ் சிறந்தமையாற் புதுமதிலெனப் பொருள்கொண்டு, பண்புத்தொகை எனக் கோடலுமாம். அழியாதமதில் என்றுமாம்.

(௩) பிராமணர்கள் தங்களுடைய ஓதும்பள்ளியில் அரிய வேதங்களை முறைப்படி அத்தியயனஞ்செய்கின்ற ஒலியோடு வளர்கின்ற செழிய கமுகஞ்சோலைபக்கத்தேசூழ, உவமையில்லாதநகரம் உயர்தலால், அது, உகமுடிவின் மாத்திரமன்றி எந்நாளுங் கடலின் மீதே மிதப்பதென்றுகூற இயைபுடைத்து; பூகச்சோலை கடனிறத்தையும், வேதவொலி கடன்முழக்கையு மொக்கும் என்க.

(௪) அலர்கின்ற ஒளிபொருந்திய மாணிக்கங்களழுத்திய மதிலில் விட்டுணு பிரமா முதலிய தேவரும் அடங்கும்படி எழுகின்ற வெள்ளங்கள் மேலே எறிந்த திரையினுடைய வளைகள் மதிலின் முற்பக்கத்தே சூழ்தல், பொங்குகின்ற பாற்கடலைக் கடைந்தநாளில் மந்தரமாகிய மத்தைச்சூழ்ந்த வரிபொருந்திய சர்ப்ப வடம்போல் விளங்கும். மதில் மந்தரத்தையும், திரையினுடையவரை சர்ப்பத்தையும் நிகர்க்குமென்க.

(௫) பல ஏரிகள், வளம்பொருந்திய மருதநிலத்தின்பக்கத்தே வாசனைபொருந்திய பசிய இலைநெருங்கிய இதழ்பொலியும நீரிலுள்ள செந்தாமரையின் அலரும் பக்குவத்தையுடைய விசாலித்தமலரால், கருமைபொருந்திய நீரையுடைய கடல் ஒரு சூரியனை மலர்வதெனக் கருதித் தான் இளஞ் சூரியர்கள் பலவற்றை மலர்ந்தாற்போலப பலவுள்ளன. இலஞ்சி பலசெந்தாமரைச் செவ்வித்தடமலரால், இளம்பரிதி பலமலர்ந்தாற்போற் பலவுள்ளன எனக்கூட்டுக.

(௬) வேதங்களைப்படிக்கும் அந்தணர்களுடைய ஓமப்புகையினிரவும், விளங்கிய விபூதியொளியிற்பொருந்திய நல்ல பகலும் மலர்ந்து, அளந்தறிதற்கரிய பழைய ஊழிகாலங்களினு நடத்தலாற் பூமியில் விளங்கிய அப்பழைய ஊர்க்குச் சூரியனுடைய உதயம் அத்தமனமாகிய இவற்றாலுண்டாகின்ற வேறான இரவும் பகலும் மிகையாம். மிகை - அதிகம்: வேண்டுவதில்லை என்பது கருத்து.

(௭) பரந்த விளைவையுடைய வயலிலுள்ள தாமரையாகிய கிளர்கின்ற அக்கினியில் வரம்பிலே வளர்கின்ற இனியமாவின் பழங்கிழிந்த தேனாகிய நறுநெய் நாடோறும் நெடிய இலைநுதியால் ஒழுகுதலினாலே நெடிதாகிய அவ்வூரிலுள்ள (அந்தணரேயன்றி) மரங்களும் ஆகுதியை வேட்குந் தகைமையுடையனவெனப் பொருந்தியது.

(௮) உஷ்ணகிரணத்தையுடையசூரியன் கடலிற்படிந்த மேன்மையையுடைய இரவில் வெள்ளிய சந்திரனானவன் சோலைதோறும் நுழைந்துபுறப்படும்பொழுது நெருங்கிய மலரின்பக்கத்தையடைந்து தேனிற்றோய்ந்து மகரந்தத்தை அணைந்துபடிந்து அதிகாலத்தில் மாலையிலெழுகின்ற சிவந்த ஒளியையுடைய சந்திரனைப்போலத்தங்கும்.

(௯) அழகிய சீகாழியிலுள்ள அந்தணரைப்போல, வாசனை கமழ்கின்றதாமரையும், புறவிதழையும் விளங்கிய நூலையுந்தாங்கிச் சுத்தமாகிய நுண்ணியதுகளை அணிந்து துளியாக வருகின்றதேனிறைந்து, தேனிற்பொருந்திய மிருதுவான வண்டினிசையால், செழுமையாகிய சாமகீதத்தைப்பாடும். அந்தணருக் கியையக்கூறுங்கால், முஞ்சிப்புல்லையும், பூணூலையும், விபூதியையுமணிந்து, கண்ணீர் நிறைந்து சாமவேதத்தைப் பாடுவாரெனக.

(௰) மாடங்களானவை, அணிந்த நீண்ட பொற்குண்டலமசையப் பொலிவாகிய கொய்சகத்தைப் பின்னேபோக்கித் தொழில்வாய்ந்த ஓமவேதியின் மெழுக்கிற்பொருந்த வெள்ளியசுண்ணத்தாற் கோலமிடுகின்ற, ஒலிக்கின்ற ஆகாயத்திலுள்ள முகில்போன்ற கூந்தலையுடைய ஒளியைச்செய்கின்ற அருந்ததிபோன்ற கற்பினையுடைய இல்லறத்திற்குரிய பெண்களுடைய வளம் பொலிவன.

(௧௧) அழகிய வீதிகள், பிதாமார் செய்கின்ற வேள்விச் சடங்கை, விளையாட்டிடங்கடோறும் புழுதியாற் பொருந்த வகுத்துண்டாக்கிப் பொன்னாற்செய்த கிண்கிணிஒலிப்ப, உருளையையுடைய அழகிய சிறியதேரை ஊர்ந்து அத்தேர் சென்றவழியிற் பூதூளி திவள்கின்ற வாழ்வையுடைய அருட்செல்வம் வளர்கின்ற பார்ப்பனப்புதல்வர் நெருங்கியுள்ளன.

(௧௨) ஒளிவிடுகின்ற நெடிய அழகிய வீதியிற் பொருந்திய வெள்ளிய சுண்ணச்சாந்துதீற்றிய மாளிகையிலுள்ள முகில்படியும் சிகரத்திலுள்ள நாசிகைதோறும் தொடுத்த கொடிகளானவை, சூழ்கின்ற இராக்காலம் நக்ஷத்திரமென்கின்ற அன்றலரு மலர்களை அலரும்படி, பொருந்திய பகற்காலத்தில் பலநிறத்தினால் நெடிய ஆகாயம் தளிர்ப்பதுபோல நெருங்கியுள்ளன, பக்கங்களினெல்லாம்.

(௧௩) நீர்மடைகளெங்கும் இரத்தினக்குப்பை, வயலெங்கும் கயல்வெள்ளம்; பக்கமெங்கும் பூமலை, அருகெங்கும் யாகப்பொலிவு, ஓதும் பள்ளிகளினெல்லாங் கலைக்கூட்டம், சோலைகளினெல்லாம் ஒலிக்கின்றவண்டுகள், இடங்களினெல்லாம் முனிவர்கூட்டம், மதில்களினெல்லாம் பொருந்தியமுகில்.

(௧௭) இருமரபு - தாய்மரபு, தந்தைமரபு. வேதத்தில் விதிக்கப்பட்ட இல்வாழ்க்கை.

(௧௮) பூமியின்மேற் சமணர்களாகிய கீழ்மக்கள், புத்தர்களுடைய பொய்ச்சமயங்கள் விருத்தியடைந்து, சிவபெருமானது அரிய வேதவழக்கங்குன்றிச் சிவனடியாரிடத்தே சிவசின்னவிளக்கம் பேணப்படுதலுண்டாகாது ஒழிய அதனைக்கண்டு.

(௨௰) பிறவி தெரிதலால் தோற்றும் பெரியபேறு, உலகுமுய்யும்படி உளதாக. "உருத்தெரியவரும் பெரும்பேறு." என்பதற்குக் கருப்பமெனக்கூறினுமமையும்.

(௨௫) தாள் - முயற்சி.

(௨௬) கெடுதலில்லாத சராசரங்கட்கெல்லாம் நன்மையை விருத்திசெய்யும்.

(௨௯) அரும்பவிழ்ந்து பூவின் மணம்பொருந்துஞ் சோலையெங்குமுள்ள தேன்பொருந்திய மகரந்தத்தோடு நெருங்க. (தேன் - எழுவாய்.) திக்குக்களினெல்லாம் ஒளிபொருந்திய பிரபைவிரிய, துகளின்றிச் சிறுதென்றலும் வந்துலாவும். பூந்துகளை அடக்கிச் சிறுதென்றலுலாவுமென்றுமாம்.

(௩௦) சுவர்க்கத்துள்ளதேவர்களும் விருப்பத்தோடு காப்பில்லாமல் சோலையிலுள்ள மலரைப்போலக் கற்பகதருவின் மலர்மழையைச் சொரிந்து பூமியில்வந்து கிருபைவளர்கின்ற சீகாழிநகரிலிருக்கும் ஒழுக்கத்தையுடைய அந்தணரோடு ஓமத்தொழிலைச்செய்வார்.

(௩௧) பூதகணாதிபர் பூம்வாழும்படி சிவனருள்செய்த அருளின் பெருமையைக் கண்டு நன்மையைச் செய்வார். அந்தணர் பிறிதுமொழியினும், அது நீங்காத வேதவாக்கால் எங்கும் ஒலி விளங்கி எழும்.

(௩௨) பலவிருக்ஷங்களுங் கொடிகளும், நிரம்பப்பிரயோசனத்தைத் தருவன. விளங்குகின்றநீரும் தெளிவோடு குளிர்ச்சியைப் பொருந்தும். ஆகாயங்களங்கமற்றொளிவிளங்கும். நல்லதிக்குக்களினெல்லாம் புட்களினொலி நன்மை செய்வனவாம்.

(௩௩) எல்லாவிடங்களிலும் படுப்பவரின்றியும் முழங்கும் மங்கலவொலி.

(௩௪) தம்மில்லின் முன்றிலில் பெரியகளிப்போடு சிவபெருமானுடைய திருவருளினாலே அரியதிருப்புதல்வரைப்பெற இயைந்த அணியைச்செய்வார்.

(௩௫) உடம்பிலணியும் நெய்யணியைத் திருவிழாவோடு செய்வர்; பிறப்பினிகழும் மங்கலத்தொழிலின் ஒலிபொங்கப் பிறப்பின் முறையான பலசடங்கைச்செய்வார்.

(௩௮) மகிழ்ச்சி மயக்கால் வாசனை அலர்கின்ற நறியதொடையலை வண்டோடு தொடுப்பார். வேப்பிலைமுதலியவற்றாற்பேய் நீங்குதற்குரிய தொழிலைச் செய்வார்.

(௪௧) இன்பத்தைத் தருகின்ற உதயத்தையுடைய சூரியனைப் போலவிளங்குகின்றதலைவரை. சரவணப்பொய்கையிலுள்ள தாமரைமலர் மீதுள்ள ஒப்பற்றமுதன்மையையுடைய குமாரக்கடவுளைப் போல.

(௪௨) பெருமலைபயந்தகொடி—உமாதேவியார் (௩—ம் வரி) பெற்ற பார்ப்பனியார் - சிவனுடையபாதங்களைப்பரவு மன்பையே திருமுலையிற்சுரந்தமுது செய்வித்தார்.

(௪௪) தாயார்களுடைய அழகிய மடியிலும், விளங்குகின்ற தடுக்கிலும், சுத்தமான ஒளியையுடைய தொட்டிலிலும், தூங்கு மஞ்சத்திலும், செப்பமான பொருளையுடைய அழகிய வேதமும் இனியதமிழும் சிறக்கும்படி வருகின்ற தலைவரைத்தாலாட்டுகின்ற நலங்கள் பலவற்றைக் கோதாட்டினர்.

(௪௫) வருகின்றமுறைமையையுடைய பருவத்தில் அழகுவளர்கின்ற சீகாழிப்பிள்ளையார், அரியவேதந் தலையெடுக்க ஆண்டதிருமுடியை யெடுத்துப் பெரியாழுவையுடைய சிவபெருமானது தொண்டினையல்லாற் பிறிதொன்றற் குடன்படேமென்பார்போல அழகிய திருமுக மண்டல மசையச் செங்கீரையாடினர்.

(௪௬) நாம்பரசமயங்களை அறியேம்; உலகிலுள்ளீரே, எதிரே நாடாது தூரத்தேபோமென்று அழகிய கையைத்தட்டுவதையும், சிவபெருமானிடத்தே அழகியதாளம் பெறுவதற்கு ஒத்துவதையுங் காட்டுதல்போல, செந்தாமரைமலர்போன்ற கைகளாற் சப்பாணிகொட்டினர். உலகிலெதிர் நாடாது போமென்பதற்கு உலகத்திலே அவை எதிரே ஒருவராலும் நாடப்படாமல் நீங்குமெனக் கூறினுமமையும்.

(௪௭) விதிதவறுபடுகின்ற பரசமயங்களாகிய குழிக்கண்வீழ்ந்து மேற்கதிகெடுமாறு பெரியஆகாயத்தில்நிறைந்த புதிய நெடிய கங்காநதியானது தவழ்கின்ற சடாமுடியையுடைய சிவபெருமான் ஞானமளித்தற் குரியராகியபிள்ளையார் சந்திரன் றவழ்கின்ற மாளிகை முன்றிலின் பக்கத்தே தவழ்ந்தருளினர். தவழ்தல்முன்னையது நகருதல்; கதிதடைப்பட்டுக் கெடுதலென்னும் பொருட்டு.

(௪௮) சூழவருகின்ற பெரியசுற்றத்திலுள்ள பெண்களும், தாதியரும், "காழியர்கஞ் சீராட்டே, கவுணியர் தங்கற்பகமே" என்று ஏழிசைகளும், பலகலைகளும் எவ்வுலகங்களுந் தனித்தனியேவாழுமாறு வருகின்றஅவரை வருக, வருக. என்றழைக்க.

(௪௯) சீகாழியிலவதரித்த பிள்ளையார் தம்மை அழைத்தவரது திருமுகங்களை அழகியசிரிப்பான் மலர்வித்தும், வருகின்றமகிழ்ச்சி அதிகரிக்க அவர்மேற்செல்லும்படி உதைத்தும், உருகிமனங்கரைந்தலையும்படி உடனே அணைந்து தழுவியும் முன்னரே பெரிய இன்பை மிகக்கொடுத்தார்

(௫0) வளர்கின்ற பருவமுறையான ஒருவருடம் வருவதன் முன்னரே மலரிற்பொருந்தும் வரியையுடைய வண்டுகுடைகின்ற கரியமிருதுவான சுருளையுடைய குடுமி உடனே அலையுமாறுசெவ்வையாக நிமிர்ந்துநின்று, விளங்குகின்ற ஒளியையுடைய கிண்கிணி ஓசைமிகக் கீழ்மை நெறியையுடைய சமயங்கள் தள்ளாடி அழுமாறு தாமுங்குறுகுறு நடந்தருளினர்.

(௫௧) தளர்கின்ற நடையின் அசைவொழிந்து, ஒளிபொருந்திய அழகிய இரத்தினம் அழுத்திய சதங்கை தொடுத்தவடத்தைப்பக்கத்தே சூழ்ந்த பாததாமரை நிலத்திற்பொருந்த; ஆண்டொன்றின் மீதணைய—ஒருவருடத்தின்மேல்வர.

(௫௨) சிறியமணிகளையுடைய தேரைத்தொடர்ந் துருட்டிச் செழுமையான அழகிய சிற்றிலைக்கட்டுகின்ற நறியநுதலையுடைய பேதையர்களின் பக்கத்தே நடந்தோடி மாறுபட்டழித்தும், குறுவெயர்வை துளியாயரும்ப, செழித்த விபூதியை யணிந்த கோலமானது வீதியிற் பேரொளியைப் பரப்பவந்தும் வளர்ந்தருளினர்.

(௫௩) திருவருளைப் பெறுதற்குச் செய்ததவத்தின் முளையைப் போல.

(௫௪) நாவையாண்ட சரசுவதியும் பலகலைகளும் நன்மைசிறக்கவும், செந்தாமரைப் பூவையாண்ட இலக்குமியும் புண்ணியமும் பொலிவடையவும், இடபத்தையாண்ட கொடியையுடையசிவபிரானது சீகாழிப்பிள்ளையாருக்கு. செய்யுளாகலின் பலகலையும்நாமகளுமென முறைபிறழவைத்தார்.

(௫௫) முன்னரே திருவடியை மறவாத தன்மையை யுடையாரை, சிவபெருமான் தவத்தையுடைய சிவபாதவிருதயரது வழிபாட்டால்கொடுத்தருள தொண்டினிலைமைத் தரவருபவராகிய பிள்ளையார் முன்னரே தொடர்பையுடைய பிரிவாலாய உணர்வு ஒருகாற்பொருந்தி எழுதலும், அச்சங்கொண்டாற்போலக் குறிப்பயிலாய் அழுவர். பயில்—சைகை. பயில் குறிப்பாய் எனப்பிரித்துக் கூட்டலுமாம். குறிப்பயலாய்—என்பதுபாடமாயின், குறிப்பு அயலாய் எனப்பிரித்துப் பொருளுரைக்க. குறிப்புக்கு அயலாக என்பதுபொருள், இரண்டாவதான குறிப்பாக என்பது தாற்பரியம்.

(௫௭) கிண்கிணி அணிந்தகாலைக் கொட்டி.

(௫௮) தருமத்தின் முடிவில் நின்ற சிவபாதவிருதயர், உகமுடிவில் ஒப்பற்றவெள்ளம் பலவற்றையும் விரிக்கின்ற கருப்பம்போல, இடையறாத தீர்த்தமெவற்றிற்கும் இருப்பிடமாய்ச் சிவபெருமானுடைய திருத்தோணிப்பற்று விடாத மென்மையதாந் தடாகத்தில்.

(௬0) ஸ்நானஞ்செய்து தருப்பணஞ்செய்து நியமங்கள் பல செய்வாராய்ச் செய்ததின்பின்பு, சிறப்பையுடைய புதல்வனார்காண்பதன் முன் தெவிட்டாத விருப்பத்தோடு அகமருஷணஞ் செய்யும் படி நீரில் அசையாதுமூழ்கினார். அகமருஷணம்—பாவத்தைக் கெடுத்தல்.

(௬௧) சிவபாதவிருதயர் ஸ்நானஞ் செய்தலும், அவரைக்காணாது "குழந்தைகள் பிதாமாரைக் காணாது இறையளவாயினுந் தரியார் என்னுந்தன்மை" காரணமாக.

(௬௨) திருமேனியிற் கண்ணீர்வாரமுன் வேறெவ்விடங் களினும் பார்த்தழுவார்தமது பழையசார்பை யுணர்ந்தோ, அல்லது பாலமையினாலேயோ சிவபெருமான் எழுந்தருளியிருக்குந் திருத்தோணியின்சிகரத்தைப்பார்த்து.

(தொடரும்)

ஜி. சதாசிவம்பிள்ளை.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.
அப்பன் திருவடிகளே சரணம்.
திருக்கண்ணபுரம்.

ஸ்ரீவிசிஷ்டாத்வைதஸம்போதிநீஸபை விவரணம்.

ஸ்ரீமத்வேதமார்க்கப்ரதிஷ்டாபநாசார்யோபய வேதாந்தாசார்யரும், சர்வதந்த்ர ஸ்வதந்த்ரரும், பாஷ்யகாரருக்கு பாகிநேயரும் சிஷ்யருமான முதலியாண்டான் திருவம்சத்திலவதரித்தவரும், பாஷ்யகாராபராவதாரமான மணவாளமாமுனிகள் நியமித்தருளிய அஷ்டதிக்கஜங்களில் அக்ரகண்யராயுள்ள கோயில் கந்தாடையண்ணனுக்குத் திருத்தம்பியாருமான கோயில் கந்தாடையப்பன் திருவம்சத்திலவதரித்து, ஸ்ரீ விசிஷ்டாத்வைத சித்தாந்த நிர்த்தாரண சார்வபௌமரா யெழுந்தருளியிருக்கிற கோயில் கந்தாடையப்பன் பிரணதார்த்திஹராசார்யஸ்வாமிகளால் தங்கள் குலகூடஸ்தராயுள்ள கோயில் கந்தாடையப்பன் திருநக்ஷத்ரமான புரட்டாசிமகம்தொடங்கி நடத்திவரும், மஹோத்ஸவகாலத்தில் வருஷந்தோறும் அந்தஸ்வாமி நியமனப்படி இந்த விசிஷ்டாத்வைதஸம்போதிநீ என்னும் ஸபை நடைபெற்றுவருகின்றது.

இந்தச் சபையில், மேற்காட்டியவிதியை யநுசரித்து வாய்க்கேள்வியாகவும், எழுத்துமூலமாகவும் கீழேகாட்டப்படும் விசிஷ்டாத்வைத சாஸ்திரங்களில் பரீக்ஷிக்கப்பெற்றுத்தேர்ந்தவர்களுக்கு ஸம்மானம்செய்யப்படும். இந்தப்பரீக்ஷையிலடங்கிய வித்தியாவிபாகங்களைக் கற்றுப் பரீக்ஷைக்குவருபவர்கள் (௧) தம்மை பரீக்ஷிக்க விரும்பும் இஷ்டமான வித்தியாவிபாகம் இன்னதென்பதும், (௨) தங்கள் சிறப்படையாளமுள்ள முழுப்பெயரும், (௩) வயதும், (௪) தொழிலும், (௫) வசிக்குமிடமும் அதற்குரிய போஸ்டாபீஸும், (௬) தாம் இச்சபையில் முன் பரீக்ஷிக்கப்பட்டிருந்தால் அவை யின்னவிபாகம் என்பதும்கண்டு இச்சபையின் காரியதரிசியவர்களுக்கு ஆடி

மாதத்துக்குள் எழுத்துமூலம் விண்ணப்பம் செய்துகொள்ளவேண்டும். அதன்பிறகு அவரைப்பரீக்ஷைக்கு அங்கீகரித்துக்கொண்டது முதலியவிவரங்கள் தெரிவிக்கப்படும்.

1, 2 அடையாளமுள்ள பண்டிதவகுப்புப் பரீக்ஷைக்கு வருபவர்கள் 35-வயதுக்கு மேற்படாமலிருக்கவேண்டும். இதர வித்தியாவிபாகங்களில், பரீக்ஷைக்குவருபவர்கள் 40 - வயதுக்கு மேற்படாமலிருக்கவேண்டும்.

பண்டிதவகுப்பில் தேர்ந்தவர்களுக்குள் முதலாகத் தேர்ந்தவருக்கு, ரூபா - 35 சம்மானித்துப் பத்துவருஷம்வரை வருஷந்தோறும், ரூபா- ஐந்துவீதமும், மற்றை இரண்டாவது மூன்றாவதுதரத்திற்றேர்ந்தவர்களுக்கு ரூபா- 30- 25, சம்மானித்துப் பத்துவருஷம்வரை வருஷந்தோறும் ரூபா - நான்குவீதமும், இச்சபையிலிருந்து அநுசம்மானம்செய்யப்படும். வைதுஷ்யாபிநந்தந பத்திரிகை (சர்ட்டுபிகேட்டு) இவர்களுக்கே கொடுக்கப்படும்.

பத்து வருஷம்வரை அநுசம்மானம் பெறவேண்டியவர்கள் ஒவ்வொருவருஷமும் இச்சபையின் பரீக்ஷாகாலத்தில் வந்திருந்து நேரில் பெற்றுக்கொள்ளவேண்டும்.

பரீக்ஷைக்கு வருபவர்கள் ஒருவருஷத்தில் கீழேகாட்டப்படும் வித்தியாவிபாகங்களில் ஏதேனும் ஒருவகையில்மாத்திரம் வரலாம். ஒரேவருஷத்தில் பலவகையில் பரீக்ஷிக்கப்படமாட்டார்கள். ஒருமுறை பரீக்ஷிக்கப்பட்டுத் தேர்ந்த வித்தியாவிபாகத்தில் மறுமுறை பரீக்ஷிக்கப்படமாட்டார்கள்.

பரீக்ஷையில் நூற்றுக்கு ஐம்பது அம்சத்துக்கு மேற்பட்டவர்களே தேர்ந்தவர்களாவார்களென்று தீர்மானிக்கப்பெறுவார்கள்.

☞ இங்ஙனம், ஆஸ்தானவித்வான்,
திருவேங்கடாசார்யர் கார்யதர்சி,
விசிஷ்டாத்வைத ஸம்போதிநீசபை திருக்கண்ணபுரம்,
நன்னிலந்தாலூகா, தஞ்சாவூர்.

னைத் தமிழ்மக்கள் அறிந்து மகிழ்தற்கும், தக்ககனவான்கள் அவற்றையறிந்து அம்முயற்சியில் ஐயங்காரவர்களை ஊக்குவதற்குமநுகூலமாக, அவ்வுரைப்பகுதி வெளியிடப்பட்டது. இதனால், நான் முழுதுக்கும் அவர்களுரையெழுதியிருப்பதை யான் வெளியிடத் தொடங்கவில்லை எனவுணர்க.

ஐந்திணையைம்பதும்-தொல்காப்பியச் செய்யுளில் நச்சினார்க்கினியமும்:—செந்தமிழ் நான்காம் தொகுதியில் ஐந்திணையெழுபது என்னுஞ் சங்கநூல் அச்சிடத்தொடங்கி ஒருபாரம் வெளிவந்து அதனுடன் நின்றுவிட்டது. அதனெஞ்சிய பகுதியும் வெளிவரவில்லையென்று சிலர் குறைகூறுவதாகத் தெரிகின்றது. ஐந்திணையெழுபதை ஒருபாரம்வரை ஒழுங்காயிருந்தமையால் அச்சிட்டு, அதனெஞ்சிய பகுதியைப் பின்பு ஆராய்ந்தபோது, மிகப்பிழைபாடுடையதாகக் காணப்பட்டமையால், நல்லபிரதிகள் சிலவற்றைத்தேடிப் பரிசோதித்துக் கொண்டபின்னரே அந்நூல் வெளியிடத்தக்கதென்று அப்பொது நிறுத்திக்கொள்ளப்பட்டது. பின்பு, வேறு தக்கபிரதிகள் கிடைக்குமென்று எதிர்பார்த்தமையும், முன்னதுபோலவேயிருத்தலால் அம்முயற்சியை இப்போதும் தொடங்கக்கூடாதிருத்தலை விசனத்துடன் அறிவிக்கவேண்டியிருக்கிறது. இனி, முன்பு செந்தமிழில் வெளியிட்டுவந்த தொல்காப்பியச் செய்யுளியல் நச்சினார்க்கினியத்தைத் தாமேதொடங்கி முடித்துவிடுவதாக ஸ்ரீ இராகவையங்காரவர்கள் கூறியபடி, அந்நூல் அவர்கள் ஆராய்ச்சிக்கே விடப்பட்டுள்ளது. அங்ஙனமே, சென்ற இரண்டு பகுதிகளில் அவர்கள் ஆராய்ந்தனுப்பிய அவ்வுரைப்பாகம் வெளிவந்துமிருக்கிறது. ஆனால், சிலமாதங்களாக அவர்கள் மேற்கொண்டுள்ள வேறுவேலைகளால் அஃது இடையீடின்றி வெளிவரல் கூடவில்லை. ஆயினும், சௌகரியத்தில் முடித்துத்தருவதாகவே ஐயங்காரவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

பத்திராசிரியர்.

புத்தகக்குறிப்பு.

ஸ்ரீ விவேகானந்தவிஜயம்;—இப்பெயர் கொண்டதோர் அரிய நூல் ஸ்ரீ மகேசகுமார சர்மா அவர்களால் இயற்றி வெளியிடப் பெற்றுள்ளது. ஸ்ரீ விவேகானந்தசுவாமிகளது அழகியவைபவமும், அவர்கள் அயனாடுகளிலும் நம்பரதகண்டத்திலும் புரிந்த அற்புதபிரசங்கங்களில் முக்கியமானவும், பற்பல அரியவிஷயங்களைப் பற்றிய சுவாமிகளபிப்பிராயங்களும் பிறவும் இதனில் அடங்கியிருக்கின்றன. இந்நூல்விஷயத்தில் சர்மா அவர்கள் காட்டியிருக்கும் மொழிபெயர்ப்பாற்றலை எழுதுவதாயின் முன்பு அவர்களது “ஆனந்தமட”த்தைப்பற்றி யானெழுதிய உண்மைப் புகழ்ச்சிகளிலும் சிலமடங்கு அதிகமாகவே கூறவேண்டியிருக்கிறது. ஏனெனில், சாதாரண கதாபாகமன்றி, மொழிபெயர்த்தற்கரிய வேதாந்தமுதலிய நுட்பவிஷயங்களிலும், அவர்கள் மூலத்தின்சுவைபெற அரியசாமர்த்தியங் காட்டியிருத்தலாலென்க. சுருங்கவுரைக்குமிடத்து, இந்நூலின் அரியவிஷயங்கள் விவேகானந்தசுவாமிகளது அற்புதசக்தியை விளக்குவதுபோலவே, இதனடை சர்மா அவர்களது மொழிபெயர்ப்பாற்றலை நன்குவிளக்குவதென்னலாம். இந்நூலைப்படித்துவருமிடத்து, வேதாந்த நுட்பங்கள்பல, வெள்ளிடைமலைபோல் விளங்குவதோடு, ஆசாரச்சீர்திருத்தப்பற்றியும் வித்தியாவிஷயம் பற்றியும், இந்தியாவின்மேம்பாட்டுக்குற்ற பிற லௌகிக வைதிக தர்மங்களைப் பற்றியும் ஒவ்வொருவருந் தெரிந்துகொள்ளற்குரிய நுணுக்கங்கள்பல மிகத்தெளிவாக வற்புறுத்தி முழக்கப்பட்டிருக்கின்றன. இந்நூல் நம்மவர்க்கு நல்விருந்தாயும் பேராறுதலளிப்பதாயும் உள்ளதாதலால், தமிழ்மக்கள் இதனை மகிழ்ச்சியுடன் எதிர்கொள்ளத் தவறார்களென்றே நம்புகிறேன். இந்நூலைப்பற்றிய குறிப்பை, அசௌகரியங்கள் சிலவற்றால், நாட்பட்டு எழுதநேர்ந்ததைப்பற்றி வியசனிக்கிறேன். இந்நூல் விலை ரூபா—1—4—0 இது சென்னை “ரிப்பன் பிரஸ்” தலைவரிடம் பெறுதற்குரியது.

---

123 MADRAS

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-எ] கீலக௵ தை ௴. [பகுதி-௩.

ஸ்ரீவான்மீகரும் தென்னாடும்.

“வாங்கரும் பாதநான்கும் வகுத்தவான் மீகியென்பான் - தீங்கவி செவிகளாரத் தேவரும் பருகச் செய்தான்” என்றும், “செவ்விய மதுரஞ் சேர்ந்தநற் பொருளிற் சீரிய கூரிய தீஞ்சொல்-வவ்விய ...முனிவ” ரென்றும், மகாகவிகளெல்லாம் புகழும் ஸ்ரீவால்மீகிபகவான், தம்காலத்தில் விளங்கிய பரதகண்டநிலையைத் தம் ஆதிகாவியத்தில் உரியவிடங்களிலெல்லாம் சூசிப்பித்தருளுவர். அம்முறைப்படி, தென்னாடும் அவர்வாக்கில் குறிப்பிடப்பட்டுளது. வான்மீகிமுனி கூறிய தென்னாடென்பது விந்தியமலையின் தென்பக்கமுழுமையுமாம். கிஷ்கிந்தையில்,* சுக்கிரீவமகாராஜன், பிராட்டியைத் தேடிவரும்படி வானரவீரர்களை ஏவும்போது, தென்பக்கமாகச் செல்லுதற்குரியாரைநோக்கிச் சொல்லியதாக வால்மீகிமுனிவர் கூறியவை அடியில்வருமாறு;—

“அந்தப்பெரிய வானரசேனையை அனுப்பிவிட்டுக், குறிக்கப்பட்ட வானரர் சிலரைச் தென்றிசைக் கேவுவானாயினன்... .....பின்பு அவன் தென்றிசையில் போதற்கரிதாயிருக்குமென்பதைப்பற்றி அவர்களைநோக்கிச் சொல்லத்தொடங்கி—“பலவித மரங்களும் கொடிகளுஞ்செறிந்த ஆயிரஞ் சிகரங்களையுடைய விந்தமலையையும், பெரும்பாம்புகள் தங்குவதும் கடத்தற்கரியதுமாகிய நருமதாநதியையும், பெரும்பகுதிகளையுடைய வரதாநதியையும், மேகலை உத்கலை தசார்ண முதலிய நாடுகளையும், அசுவவந்தி அவந்திமுதலிய நகரங்களையும் நீங்கள் காண்பீர்கள்; விதர்ப்பம் ருஷிகம் மாகிஷகம் வங்கம் கலிங்கம் கௌசிகம், மலைகளும் நதிகளும் குகைகளுமுடைய தண்டகாரணியம், கோதாவரிநதி முதலியவற்றையும் காண்பீர்கள்;

---

* இது மைசூர் ராஜ்யத்துக்கு வடபாலுள்ளதும், துங்கபத்திரைக்குச் சமீபமானதும், பம்பாசரவிருந்தவிடமுமாகிய ஹம்பி (Hampi) நகருக்குப் பக்கத்திருந்ததென்பர்.

அவ்வாறே, ஆந்திரம் புண்டரம் சோளம் கேரளத்தோடுகூடிய பாண்டிய நாடுகளையும் காண்பீர்; பின்பு, தாதுக்கள் நிறைந்ததும் விசித்திரமான சிகரங்களுடையதும் பலவர்ணமான பூக்கள் நிறைந்த சோலைகளையுடையதும் சந்தனவனங்கள் செறிந்ததுமான பெரிய அயோமுகமலையைத் *தேடுங்கள்; அதன்பின், தேவரம்பையர் வந்து நீராடுகின்ற திவ்யமான தெளிந்தநீரையுடைய அழகிய காவேரிநதியை அங்கே காண்பீர்கள்; அந்த மலையமலையின் சிகரத்திலே ஆதித்தனுக்குச் சமானமான மிகுந்த ஒளியையுடைய முனிசிரேஷ்டரான அகஸ்தியரைக் காண்பீர்கள். பின் அம்மகருஷியிடத்தில் ஆணைபெற்றுச்சென்று முதலைகள் நிரம்பிய பெரிய தாமிரபர்ணி நதியைத் தாண்டுங்கள். அந்நதி அழகிய சந்தனச்சோலைகளால் மூடப்பெற்ற திட்டுக்களையுடையதாய், கணவனிடத்தன்புள்ள யுவதியானவள் புக்ககம் புகுமாறுபோல, சமுத்திரத்திற்சென்று விழும். பிறகு பொன்னிறைந்ததாயும் அழகுடைத்தாயும், முத்தமயமான மணிகளால் அலங்கரிக்கப் பெற்றதாயும், பாண்டியர்க்கு யோக்கியமாயுள்ள கவாடத்தையும் பார்க்கக்கடவீர்கள்; அதன்பின் சமுத்திரத்தையடைந்து காரிய நிச்சயத்தைச் செய்யுங்கள்."

வான்மீகி பகவானது இவ்வாக்கியங்களில், விந்தியபர்வதத்துக்குத் தென்பக்கத்தே — நருமதை, கிருஷ்ணவேணி, கோதாவரி, காவேரி, தாமிரபர்ணி முதலிய நதிகளும், மேகலதேசம் (விந்தப்ரதேசம்) உத்கல (கஞ்சம்) தேசம், தசார்ணம் (சண்டயிரியின் கிழக்கு) அசுவவந்தி; விதர்ப்பம் (பீரார்) ருஷிகதேசம் (பங்காளப் பகுதி) மாகிஷக[illegible]ம்†, கலிங்கம் (வடசர்க்கார்) கௌசிகம், ஆந்திரம் (தெலுங்காணம்) புண்டரம் (வங்கதேசப்பகுதி) சேரசோழபாண்டியம் முதலிய நாடுகளும், தண்டகாரணியம் என்ற பெரிய வனமும் குறிக்கப்பட்டுள்ளன. சுக்கிரீவன் வானரவீரர்களைத் தென்றிசைக்குச் செல்லும்படி விடுக்குமிடத்து, இந்நாடு முதலியவை வருதலால், இவை, ஆரியமக்களால் தக்ஷிணப்பிரிவுகளாக முன்பு கருதப்பட்டிருந்தனவென்பது விளங்கும்.

இவற்றுள் தண்டகாரணியத்தினைப்பற்றிய வரலாறுகள்சில வான்மீகத்தினின்று அதிகமாக அறியப்படுகின்றன. இவற்றை, யாழ்ப்பாணத்து ஸ்ரீமாந்-முத்துத்தம்பிப் பிள்ளையவர்கள் "தமிழ்நாட்டின் பூர்வநிலை" * என்ற வியாசத்துக் குறித்திருக்கிறார்கள். அவர்கள் ஆண்டு வேண்டியவளவே எடுத்தெழுதியிருத்தலால், [illegible] ஆராய்ச்சியின்பொருட்டு அவைமுழுதும் அடியில் தருகிறேன். †

1. மகாதபஸ்வியாகிய அகஸ்தியரே! இந்தச் சகலமான தேசமும் முன்பு ஒருவரும் இல்லாது பாழாயிருந்தனவே; எப்படி இப்போது ஜனங்களால், குடியிருக்கப்பெற்றவாயின?

2. அதை எனக்கு விடாது சொல்லுங்கள்; அதைக்கேட்க விருப்பம் அதிகமாயிருக்கிறது என்றார். அந்த இனிமையான வார்த்தையைக்கேட்டு,

3. பகவானாகிய அகத்தியமுனிவரானவர் ஸ்ரீராமனைப்பார்த்து, ரகுகுலோத்தமா! இந்தத் தேசத்தினுடைய கதையை உள்ளபடி சொல்லுகிறேன் கேளும் என்றுவிடையளித்தார்.

4. மகாபுருஷனாகிய தண்டகன் என்பவனால் விடப்பட்ட இந்தத் தேசமானது, பார்க்கவமகரிஷியின் சாபத்தால் மனுஷர்கள் இல்லாததாயும் மிருகமில்லாததாயுமாயிற்று.

5. அப்பா இராகவா! மரம், புதர், கொடி இவைகளில்லாததாயும் ரிஷிகள் இல்லாததாயும் அதிக பயங்கரமாயும் கொடியதாயுமான காடாய் விட்டது.

6. விந்திய பர்வதத்தின் தாழ்வரைத் தெற்கில் ஆயிரம் யோசனை தூரம் வரையில் காடாய்விட்டது. இங்கு மேகம் மழை பொழிவதுமில்லை; நல்ல காற்று வீசுவதுமில்லை.

7. அதிக பயங்கரமாயும், கொடியதாயும், கோரமாயும், புகை சூழ்ந்ததாயுமான காடாய்விட்டது. இந்தக்காடானது அனேக ஆயிரம்வருஷம் வரையில் ஒருமனுஷனும் இல்லாததாக இருந்தது.

8. கந்தர்வர்களாலும், ரிஷிக்கூட்டங்களாலும், தேவதைகளாலும் விடப்பட்டதாக ஆயிற்று. ராஜாவே! சிலகாலம் சென்றதன்மேல் தெய்வாதீனமாய் நான்—

---

* இது மலையமலையைக் குறிக்கும்.

† இது விந்தப்பிரதேசத்தைச் சார்ந்த அநூபதேசத்தின் தலைநகர் என்று இரகுவம்சத்து, ௬-ம்சர்க்கம், ௩௭, ௪௩-ம் சுலோகங்களால் விளங்குகிறது. மைசூர்அன்றுபோலும்!

* செந்தமிழ்த் தொகுதி - ௧; பக் - ௩0௧.

† இப்பகுதி—ஆரணியகாண்டத்துப் பதின்மூன்றும் அத்தியாயத்துக் கண்டதென்று—ஷை பிள்ளையவர்கள் குறித்திருத்தலோடு, "மூதற்குறளுண்மை" என்னுந் தலைப்பெயருடன் 1900-ஆடு மதுராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையினின்று வெளிவந்த புஸ்தகத்தும் விவரிக்கப்பட்டுள்ளது. அதிற்கண்டபடியே, ஈண்டுப் பதிப்பித்திருக்கிறேன். இப்பகுதி அச்சுப்பிரதிகளிற் காணப்படவில்லையென்றும், சில வான்மீகக் கையெழுத்துப் பிரதிகளிற் கண்டதென்றுந் தெரியவருகிறது.

9. வெண்மையுள்ள இமயமலையுச்சியிலிருந்து இங்குவந்தேன்; பிறகு என்னால் பர்ஜன்யமென்னும் ஜலதேவதையானது மேகங்களுடன் இங்கே கொண்டுவரப்பட்டது.

10. சத்துருக்களைக் கொல்லுகிறவனே! சிலகாலம்வரையில் மேகங்கள் இஷ்டப்படி மழைகளை வர்ஷிக்கும்படி செய்யப்பட்டன. தபப்பிரதாபத்தினால் அநேக யமதூதர்களும்—

11. மிருத்யுதூதர்களும், வியாதிகளும் போக்கடிக்கப்பட்டன. இமயமலையடிவாரத்திலுள்ள மரங்களெல்லாம் நினைத்தமாத்திரத்தில் இங்கே கொண்டுவரப்பட்டன.

12. மறுபடியும் மலர்ந்த தாமரைகளையுடைய நதிகளும், அழகானகுளங்களும், ஏரிகளும், குட்டைகளும் செய்யப்பட்டன.

13. அழுக்கில்லாததாயும், நல்ல வாசனையுள்ளதாயும், சுகசீதளமாயுமுள்ள ஜலமும் காற்றும் உண்டாயின. பிரகு இந்தத்தேசமானது அனேக வனக்கூட்டங்களுள்ளதாயும், நன்றாய்விளைந்த தானியங்களையுடையதாயும்,

14. மனதிற்குச் சந்தோஷமுள்ளதாயும், அனேக ரிஷிக்கூட்டங்களால் அடையப்பட்டதாயும் ஆயிற்று. ரகுநந்தனா! அந்தத் தண்டகனுடைய சாபத்தால் மாத்திரம்—

15. கொடிய செய்கைகளையுடைய ராட்சதர்களால் உபத்திரவத்தோடு கூடியதாயிருந்தாலும் எப்போதுமுதல் நீ சித்திரகூடத்துக்கு வந்தாயோ,

16. அப்போதுமுதல் ராட்சதர்கள் ரிஷிகளை இம்சை செய்கிறார்கள். ஆகையால் வீரனே! ரிஷிகளுக்கு அபயத்தைக்கொடுக்கச் சக்தியுள்ளவனாகிறாய்.

17. இந்தக் காரணத்தால், ராமா! தண்டகாரணியத்தில் வசிக்கிறவர்களைக் காப்பாற்றுகிறதற்காகவே நீ இங்குவந்தாய்; ஆகையால் நீ எங்களைக்காப்பாற்ற வேண்டும்.

18. ஸ்ரீராமனே! மூன்று உலகங்களையும் காப்பாற்றுவதில் சாமர்த்தியமுள்ளவனாயிருக்கிறாய்; அப்படியிருக்கப் பிராமணர்களுடைய கோபத்தினால் மாண்டுபோகும் அபாயமுள்ள இந்த ராட்சதர்களை நீ ஜயிப்பாய் என்பதில் சந்தேகமுண்டோ?

19. அதிக பலமுள்ளவனாகிய இராமனே! இட்சுவாகுவின் புத்திரனாகிய தண்டகன் நிமித்தம் சாபத்தினால் இந்தத் தேசமானது அழிக்கப்பட்டது.

20. இந்த எல்லாத் தண்டகாரணியமும் உன்னுடைய பார்வையினாலேயே காப்பாற்றப்பட்டனவாயின. சத்துருக்களை ஜயிக்கும் திறமுள்ள ரகுராமனே! அவனுடைய தேசசாப முடிவின்பொருட்டே நீ இங்குவந்தாய்.

21. ஆகையால் நீ உன்முன்னோர்களாகிய பிதுர்க்களால் தள்ளப்பட்டதாகிய இந்தத் தண்டகாரணியத்தைச் சாபத்திலிருந்து கரையேற்றிவிடுக."

இச்செய்திகளால், இராமாயண சரித்திரம் நடந்தேறுதற்கு முன்னர், தண்டகாரணியத்துக்கு அகஸ்தியமகருஷி வந்தாரென்றும் அவர் வருகைக்கு முன்பு இக்காடு வெறும்பாழ்வனமாயும் சிலவிடத்து அடர்ந்தபெருங் காடாயுமிருந்ததென்றும், அம்முனிவர் இங்கு வரும்போது அநேக ருஷிகளையும் அழைத்துவந்தாரென்றும், அக்குறுமுனிவரே இத்தேசத்தில் நல்லமழை நல்லநதி நன்மரங்கள் முதலியவற்றை உண்டாக்கினாரென்றும் புலப்படும். அகத்தியனார் இங்கு வருதற்குமுன், இக்ஷ்வாகு மைந்தனாகிய தண்டகன் சுக்கிர சாபத்தினால் மண்மாரிபெய்ய மடிந்தகாலத்து அவன் ராஜ்யமும் மடிந்ததென்பது இராமாயணம் உத்தரகாண்டத்துக் கண்டது. இக்ஷ்வாகுவின் மைந்தனான தண்டகன் கொடியோனாய் விந்தத்துக்கும் சைவலத்துக்கும் இடைப்பட்ட நாட்டை ஆட்சிசெய்து வருகையில், பார்க்கவ புத்திரியாகிய அரசை யென்பாளைக் காதலித்து அவளை வலிதிற்புணர்ந்து அக்காரணத்தால் அங்ஙனம் சாபம் பெற்றனனென்பது கதை. இதனை,

"அந்த வெள்ளி யனலென்ன வாலகால விடமென்னச்
சிந்தை யெழுந்த பெருங்கோபந் தீரா விடும்பை யென்மகட்குத்,
தந்த தண்டன் வளநாடுந் தானுங் கிளையுந் தந்திரமும்
வெந்து பொடியாய் வீழ்கவென வெல்லாம் பொடியாய் வீழ்ந்தனவே.

"அவன்றனாட்டிற் றண்டகமா மடவி யாகி யாரழலின்
சிவந்த வெள்ளி சாபத்தா னார்புண் மிருகஞ் சேர்வின்றித்
தவஞ்செய் முனிவர் நெருங்குதலாற் சனமாதான மெனப்போய்
உவந்த கருணை பொழிவிழியா யுற்றதிதுமுன் பெனவுரைத்தான்".

எனத் தமிழ் உத்தரகாண்டம், சம்புவன் வதைப்படலம், ௬௪, ௬௫-ஆம் பாடல்களாலும் அறிக.

தண்டகாரண்ய மென்பது, முற்காலத்தில், சேரசோழ பாண்டிய நாடுகளை அடுத்திருந்ததென்பதூ, அந்நாடுகட்கும் விந்தத்துக்கு

மிடையில் வேறுதேசங்களைக்குறியாது, *‘விந்தத்தின் தெற்கே ஆயிரம் யோசனையளவும் வெறுங்காடாய்க் கிடந்தது” என வான்மீகி கூறுதலால் விளங்கும். ஸ்ரீராமபிரான்காலத்தில், அப்பெருவனாந்தரத்தில் அங்கங்கே ருஷிகளநேகர் குடியேறி வசித்துவந்தனரென்பதும், அப்பிரதேசம் ஜனஸ்தானம் எனப் பெயர்பெற்றதென்பதும் மேற்காட்டிய பிரமாணங்களை விளக்கும். “ஜனஸ்தானத்தில் போருண்டாகுமென்று சந்தேகித்தவனும் இலங்கைக் கரசனுமாகிய இராவணன், ஈசுவரனிடமிருந்து அடைதற்கரிய பிரமசிர மென்ற அஸ்திரத்தைப் பாண்டியன் பெற்றிருப்பது தெரிந்து, அம்மன்னனுடன் சந்திசெய்துகொண்டு இந்திரலோகத்தை வெல்லப் போனான்”† எனக் காளிதாசர் ரகுவமிசத்திற் கூறுவதால், அந்த ஜனஸ்தானமும் தமிழ்நாட்டுக்கு வெகுதூரமன்றென்பது பெறப்படும். இத்தண்டகாரண்யம், ஆரியமக்களால் மிகுதியுங் குடியேறப்பெற்ற பிற்காலத்திலும், அவ்வனத்தின் ஆதிப்பெயரே தன்பெயராய்த் தண்டகாரண்ய நாடென்னும் பெயர்பெறலாயிற்று. பதிற்றுப்பத்தின் ஆறாவதன் பதிகத்தில், ஆடுகோட்பாட்டுச்சேரலாதன் செய்கைகளுள், “தண்டா ரணியத்துக் கோட்பட்ட வருடையைத், தொண்டியுட்டந்து கொடுப்பித்து” எனவும், அதனுரையில் “தண்டாரணிய மென்றது ஆரிய நாட்டிலுள்ளதோர் நாடு” ‡ எனவும் வருதலால், சேர நாட்டை யடுத்து அஃதிருந்ததும் பிறவும் உணர்க.

இத்தண்டகாரணியத்துக்குப் பின், வான்மீகி முனிவர், ஆந்திர புண்டரசோழ கேரளபாண்டிய நாடுகளைக் குறித்துவிட்டு, தெற்கே

---

* சேரசோழ பாண்டியதேசங்கள் நீங்க, மேலே கூறிய நாடுகளெல்லாம் விந்தியத்தையொட்டியும் அதனைச்சிறிது அடுத்து முள்ளவைகளேயாதலாலும், விந்தத்துக்குந் தென்னாட்டுக்கும் மத்தியில் வேறுதேசங் குறிக்கப்படாமையாலும், வால்மீகிகாலத்து அவ்விடம் பெருவனாந்தரமேயென்பது நன்கு தெளியப்படும். பாரதத்தில், தெற்கே அநேக ராஜ்யங்கள் குறிக்கப்பட்டுள்ளன. (See Bhandarkar's History of Dekkan, pp. 142.)

† இரகுவமிசம், சர்க்-௬; சுலோ—௬௮.

‡ மகாராஷ்டிர தேசத்துப் பிராமணர், விசேடகாலங்களிற் செய்யும் ஸங்கல்பத்தில் “மகாராஷ்டிரதேசே” என்னாது “தண்டகாரண்ய தேசே” எனக் கூறிவருதல் இன்றும் வழக்கமென்று தெரிதலால், அம்மகாராஷ்டிர தேசமே இவ்வாரிய நாடாகக் கருதத்தக்கது. (Ibid. pp. 136.)

மலையபருவதத்தின் சிறப்பையும் அம்மலையினின்று காவேரிநதி பிரவகித்தலையும் குறிப்பிட்டுள்ளார். மலையபர்வதமென்பது, தென்கோடியிலுள்ள பொதியின்மட்டுமன்றி, இப்போது “மேற்குத்தொடர்ச்சிமலை” என்று கூறும் நீண்டமலைத்தொடர் முழுதுமாமென்பது வான்மீகத்துப் பலவிடங்களாலுந் தெரியவருகிறது. இம்மலையினின்று தெய்வத்தன்மைவாய்ந்த காவிரி வெளியாவதையும் அம்மலையினுச்சியில் அகஸ்தியமுனிவர் விளங்குவதையும், வான்மீகியார் கூறுதல் காண்க. அகஸ்தியர் காவிரியுற்பத்தியாகுமிடத்தில் வசிப்பதாக முனிவர் இங்கே கூறினும், ஆரணியகாண்டத்தில், கோதாவரிக் கரையிலுள்ள பஞ்சவடிக்கு (Nasik) இரண்டுயோசனை தூரத்தில் அகஸ்தியாசிரமமிருந்ததாக அவர் விரிவாகக் கூறியிருத்தலால், அக்குறுமுனிவர், “மலையம்” என்னும் மேற்குத்தொடர்ச்சிமலை முழுமைக்குமுரியவராய்த் தென்னாட்டைக் காத்தருளியவரென்பதே கொள்ளத்தக்கது. இனி வானரவீரர்களைநோக்கி சுக்ரீவன் வழிகூறும்போது, “அம்மலையமலையினுச்சியில் மிகவும் தேஜோவானாய் சூரியஸமானராய் ருஷிசிரேஷ்டராய் உள்ள அகஸ்தியமுனிவரையும் பாருங்கள்; பிறகு, நிர்மலசித்தமும் மிகவும் ஞானவானுமான அம்முனிவரது ஆணைபெற்றுக்கொண்டு தாமிரபர்ணியைத் தாண்டுங்கள்” எனக்குறித்தலால், தென்னாட்டிற்புகுவதற்கு அகஸ்தியமுனிவரது கட்டளைபெறுதல் அக்காலத்தில் அநுகூலமாயிருந்ததென்பதும் விளங்கும். இதனை நோக்கும்போது, “இராவணனைக் கந்தருவத்தாற் பிணித்து அவனை ஆண்டு (தென்னாட்டுள்) வாராமை விலக்கி” என்ற நச்சினார்க்கினியர் வரலாறு ஞாபகத்துக்கு வருகிறது. அக்காலத்து அந்நியரால் தென்னாட்டுக்கு நேரும் இடுக்கணீக்குதற்கும் அநுகூலஞ்செய்தற்கும் அகத்தியரே முன்னின்றுபகரித்தாரென்பதற்கு வடமொழி தென்மொழிப்பிரமாணங்கள் பலகாட்டலாம். வான்மீகிபகவான், ஸ்ரீராமபிரான் லக்ஷ்மணரை நோக்கி அகஸ்தியாசிரமத்தைப்பற்றிக் கூறியதைக் குறிக்கும்போது, “அம்மகானாகிய அகஸ்தியர், தாம் இவ்வுலகத்துக்கு நன்மை செய்யும்பொருட்டு, இங்கிருந்த யமனுடைய உபத்திரவத்தை நீக்கி, இத்தென்றிசையையும் சுகமாகக் வசிக்கத்தக்க திசையாகத் தமது தவவலிமையாற் செய்து வைத்தார்” எனவும், “எவரொருவருடைய மகி

மையால், இன்றைக்கும் அசுரர்கள் இத்தென்றிசையைக் கண்ணெடுத்துப் பார்த்து உட்புக நடுங்குகின்றார்களோ, அவருடைய ஆசிரமம் அது; மகா புண்ணியமூர்த்தியாகிய அவர் இத்திசைக்கு வந்ததுமுதல், இங்கே அரக்கர்கள் தம் பகைமைநீங்கிச் சாந்தமுள்ளவராய் விட்டார்கள். அவர் பெயரைக்கொண்டே இத்தென்றிசையும் **அகஸ்தியர்திசை** என்று வெகு சாந்தமான பெயர் பெற்று மூவுலகத்தும் பிரசித்தியடைந்து கொடியவர் அஞ்சும் திசையாக விளங்குகிறது" எனவும் ஆரணியகாண்டத்து ௧௧-ம் சருக்கத்துக் கூறுதலால் மேற்கூறிய விஷயம் நன்கு வெளியாகும். இனித் தமிழ் வரலாறுகளை நோக்குமிடத்து, முற்காலத்தே அசுரர்களால் துன்பநேர்ந்தபோது சோழனொருவன் "தூங்கெயிலெறிந்"தது இக்குறுமுனிவர் அருளினாலேயாமென்பது விளங்கும். இதனை,

"உலகக் திரியா வோங்குயர் விழுச்சீர்ப்
பலர்புகழ் மூதூர்ப் பண்புமேம் படீஇய
ஓங்குயர் மலையத் தருந்தவ னுரைப்பத்
தூங்கெயி லெறிந்த தொடித்தோட் செம்பியன்" (காதை - ௧.)

என்னும் மணிமேகலையடிகளிற் காண்க. காந்தமன் என்னும் மற்றொரு சோழன், பரசுராமரது கொடுமையினின்று •தப்ப, இம்முனிவரது பேரருளை நாடிய வரலாறு "அமர முனிவ னகத்தியன் றனாது, துயர்நீங்கு கிளவியின் யான்றோன் றளவுங், ககந்தன் காத்தல்" என அந்நூலானே (௨௨ சிறைசெய்காதை; அடி,—௩௫-௩௭) அறியலாம். இக்காந்தமன்னவன் பொருட்டே, காவிரியைச் சோணாட்டிற் பிரவகிக்கும்படி அவ்வகத்தியனார் செய்தாரென்பது,

"செங்கதிர்ச் செல்வன் திருக்குலம் விளக்கும்,
கஞ்ச வேட்கையிற் காந்தமன் வேண்ட
அமர முனிவன் அகத்தியன் றனாது
கரகங் கவிழ்த்த காவிரிப் பாவை
செங்குணக் கொழுகிய சம்பாபதி (புகார்)

எனவரும் அந்நூற்பதிகத்தால் அறிக. இதனுள், "அமர முனிவ னகத்தியன் றனாது, கரகங் கவிழ்த்த காவிரி" என்பதனால், அகஸ்தியாசிரமமொன்று, பஞ்சவடிக்குப்பக்கத்திலன்றித் தென்னாட்டிலும் இருந்தமை வலிபெறும். இவ்வாறே, பாண்டியனுக்கு அகத்தியனார் மிகவும் அருள்செய்தவரென்பது, சென்ற பகுதியில் "மதுரைக்காஞ்சியாராய்ச்சி" என்னும் என்வியாசத்துப் பரக்கக் காணலாம். "மகாபருவதமாகிய விந்தியமலையை அடக்கினவராயும், சமுத்திரத்தை முற்றுங் குடித்து வெளியிட்டவராயுமுள்ள அகஸ்தியமாமுனிவர், இப்பாண்டியர் தமது அசுவமேதயாகத்தை முடித்து அவபிருதஸ்நானஞ் செய்தவுடன், வெகு அன்போடும் இம்மன்னரிடம் வந்து 'தங்களுடைய ஸ்நாநம் சரிவர முடிந்ததா? என்று கேட்கிறார்' என்று காளிதாசரும் இரகுவமிசத்துக் (சருக்-௬; சுலோ-௬௧) கூறுதல், அகஸ்தியர் பாண்டியர்க்குள்ள நெருங்கியதொடர்பை விளக்கும்.

இனி, விந்தியத்தின் தென்பாலுள்ள நாடுகளைக் குறித்துவந்த வான்மீகிமுனிவர், "சோளாந் பாண்ட்யாந் ஸகேரளாந்"—(சோழதேசத்தையும் கேரளத்தோடுகூடிய பாண்டியதேசத்தையும்) என்று கூறுகிறார். "ஒருவினையொடுச்சொல் லுயர்பின்வழித்தே" என்னுந் தமிழ் வழக்குப்படி, 'கேரளத்தோடுகூடியபாண்டியம்' என்பது கேரளதேசம் உயர்ந்ததென்பதைக் குறிக்குமாயினும், வடமொழி வழக்கு இதற்கு நேரெதிராகும்; என்னை? "ஸஹயுக்தே அப்பிரதானே" என்பது அதனிலக்கணமாதலின். அஃதாவது "ஒருவினையொடுச்சொல் இழிபின் வழித்தே" என்பதாம். இங்ஙனம் 'பாண்ட்யாந் ஸகேரளாந்' என அப்பிரதானத்தில் கேரளத்துக்கு ஓடுக்கொடுத்திருத்தலால் வால்மீகி காலத்துப் பாண்டியநாட்டுக்குள்ளடங்கிச் சேரநாடிருந்தது போலும் !

இனி, மலையத்திலுள்ள அகத்தியமுனிவர்பால் விடைபெற்ற பின்னர், தாமிரபர்ணிநதியைத் தாண்டும்படி கூறப்படுதலோடு, அந்நதி சமுத்திரத்துச் செல்லுமாறுஞ் சொல்லப்படுகிறது.* அதன் பின்பு பாண்டியனது நகரவிசேடம் வருகின்றது. இங்ஙனம், அந்நதி சமுத்திரஞ்சார்தலைக்கூறிப் பாண்டியநகரவிசேடத்தை வால்மீகி குறித்தலால், அப்பட்டணம் தாமிரபர்ணியின் சங்கமத்தயலில் இருந்ததாகக் கருதத்தக்கது. "அதன்பின் சமுத்திரத்தையடைந்து காரிய நிச்சயத்தைச் செய்யுங்கள்" என முடிவில் மகருஷிகூறுதலாலும் இதுவே கருத்தாதல் காணலாம். இனி, இப்பாண்டியனது நகரவிசேடத்தைப்பற்றி வால்மீகி கூறும் சுலோகம் வருமாறு:—

---

* தென்பால்,வையை முதலியநதிகளை,முனிவர் கூறாமைகவனிக்கத்தக்கது.

*

𑌤𑌤𑍋𑌹𑍇𑌮𑌮𑌯𑌂𑌦𑌿𑌵𑍍𑌯𑌂 𑌮𑍁𑌕𑍍𑌤𑌾𑌮𑌣𑌿𑌵𑌿𑌭𑍂𑌷𑌿𑌤𑌂।
𑌯𑍁𑌕𑍍𑌤𑌂𑌕𑌵𑌾𑌟𑌂𑌪𑌾𑌣𑍍𑌡𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌗𑌤𑌾𑌦𑍍𑌰𑌕𑍍𑌷𑍍𑌯𑌥𑌵𑌾𑌨𑌰𑌾𑌃॥

இதன்பொருள்:—"பிறகு, பொன்னிறைந்ததாயும் அழகுடைத்தாயும், முத்துமயமான மணிகளால் அலங்கரிக்கப்பட்டதாயும், பாண்டியர்க்கு யோக்யமானதாயுமுள்ள கவாடத்தை வானரவீரர்காள்! பார்க்கக்கடவீர்" என்பது. இவ்வுரை, திலகர் தீர்த்தர் கோவிந்தராஜர் என்னும் பழைய இராமாயண வியாக்யாதாக்களுள் பின்னவர் கூறியது. முன்னவரிருவரும் "பின்பு பொன்னிறைந்ததாயும், அழகுடைத்தாயும், முத்துமணி யிவற்றால் அணியப்பட்டதாயும் நகரத்தரணோடு இணைக்கப்பட்டதாயுமுள்ள பாண்டியர் வாயிற்கதவை வானரர்காள்! போய்க்காண்பீர்" என்னும் பொருள்படக்கூறினர். அஃதாவது—"கவாடம் - பாண்ட்யாநாம் நகரத்வாரகபாடம்"—(பாண்டியரது நகரவாயிற் கதவு) - என்பது தீர்த்தீயம்; "யுக்தம்—புரப்ராகாரகடிதம்" (நகரத்தெயிலோடு இணைக்கப்பட்ட) என்பது திலகம். இங்ஙனம், வடநாட்டாராய் விளங்கிய உரையாசிரியர் கருத்திவையாயினும், தென்னாட்டாராய் வான்மீகத்துக்குரையிட்ட கோவிந்தராஜர் முழுக்கருத்தும் ஈண்டு ஆராயத்தக்கது. அவர் அடியில் வருமாறு எழுதுகிறார்.

𑌤𑌤𑍋𑌹𑍇𑌮𑌮𑌯𑌮𑌿𑌤𑌿॥ 𑌪𑌾𑌣𑍍𑌡𑍍𑌯𑌾𑌨𑌾𑌂-𑌪𑌾𑌣𑍍𑌡𑍍𑌯𑌰𑌾𑌜𑌾𑌨𑌾𑌮𑍍। 𑌯𑍁𑌕𑍍𑌤𑌂-𑌯𑍋𑌗𑍍𑌯𑌂। 𑌕𑌵𑌾𑌟𑌂-𑌅𑌨𑍇𑌨 𑌨𑌗𑌰𑌂𑌲𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑍇। 𑌮𑍁𑌕𑍍𑌤𑌾𑌰𑍂𑌪𑍈𑌰𑍍𑌮𑌣𑌿𑌭𑌿𑌃 𑌰𑌤𑍍𑌨𑍈𑌃 𑌭𑍂𑌷𑌿𑌤𑌂; 𑌤𑌦𑍁𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑌿𑌦𑍇𑌶𑌤𑍍𑌵𑌾𑌦𑌿𑌤𑌿𑌭𑌾𑌵𑌃॥

பொருள்:—பாண்டியாநாம் - பாண்டிய ராஜாக்களுடைய; யுக்தம் - யோக்யம். கவாடம் - இதனால் நகரம் குறிக்கப்படுகிறது. முக்தாமணிவிபூஷிதம் -முத்துமயமான மணிகளால் அலங்காரமாகிய: என்றது அது பிறக்குமிடமாதலால் (அங்கே அது மிகுந்துள்ளது) என்பதுகருத்து."

இவ்வரும்பதவுரையால், ஸ்ரீகோவிந்தராஜர் "முத்துமயமான மணிகளால் அலங்காரமானதும் பாண்டியர்க்கு யோக்யமானதுமான பாண்டியரது கவாடபுரம்" என்பதே பொருளென்று கருதினராதல் காண்க. முற்கூறிய தீர்த்தீய திலக வியாக்கியானங்களினும், இவ்வியாக்கியானம், தமிழ்வழக்குகளைத் தழுவி மிகச்சிறந்து நிற்றல் தெளியப்படும்; என்னை? "கபாடபுரம்" என்பது பழங்காலத்தே பாண்டியராஜ்தானியாய்த் தமிழாராய்ச்சி செறிந்துநிகழ்ந்த நகரமென்பதற்கு இலக்கியங்கள் மிகுதியுமுண்டாதலால் என்க. இதனை, இறையனார் களவியற் பாயிரத்தில் "அவர் (இடைச்சங்கத்தார்) சங்கமிருந்து தமிழாராய்ந்தது கபாடபுரத்தென்பது" எனவும்; சிலப்பதிகார உரைப்பாயிரத்தே "இரண்டா மூழியதாகிய கபாடபுரத்தில் இடைச்சங்கத்துத் தொல்காப்பியம் புலப்படுத்திரீஇய நிலந்தரு திருவிற் பாண்டியன் அவைத்து" எனவும் "இவ்வகை யரசரிற் கவியரங்கேறினர்; ஐவகை யரச ராயிடைச்சங்கம், விண்ணகம் பரவும் மேதகுகீர்த்திக், கண்ணகன் பரப்பிற் கபாடபுரமென்ப"* எனவும் வருதலாற் காண்க. திலக முதலிய வியாக்யானங்களின்படி, கவாடமென்பது பாண்டியரது வாயிற்கதவெனக்கொண்டு, அதற்கேற்ப 'யுக்தம்' என்னும் சொல்லை நகரத்தரணோடிணைக்கப்பட்ட என்னும் பொருள்படுத்திக் கவாடத்துடன்பொருத்தல் சிறவாமை கண்டு, அது பாண்டியரது நகரத்தையே குறித்ததாகல் வேண்டுமென சுலோகவியல்பையறிந்து கோவிந்தராஜர் எழுதியவுரை ஈண்டுப் புகழத்தக்கதாம். கபாடமென்னும் பெயர்கொண்ட பாண்டிய நகரமொன்றிருக்கும்போது, கதவென்னல் வேண்டா என்பது எளிதில் விளங்கத்தக்கதன்றோ. இனி, "முக்தாமணி விபூஷிதம்" என்னும் அடைக்கு கோவிந்தராஜர், முத்துமணியுமிவற்றால் அலங்கரிக்கப்பட்ட எனக் கதவுக்கேற்பக் கொள்ளாது, "முத்துமயமானமணிகளால் அலங்காரமாயுள்ள; என்றது அது பிறக்குமிடமாதலால் (அந்நகரத்தில் அது மிகுந்துள்ளது) என்பது கருத்து" என்று நகரத்துக்கேற்பக் கூறியதும், அவரது தமிழ் வழக்கனை யறிந்தெழுதும் உரைத்திட்பத்தைக் குறிக்கின்றது. என்னை? கபாடபுரம், தாமிரபர்ணியின் சங்கமத்தயலில் உள்ளதாதலாலும், அந்நதி கடலுடன் கலக்குமிடத்துப் பிறக்கும் முத்து ஆணித்தரமானதென நூல்கள் கூறலாலும் என்க. இதனை "அலங்காவலன்றஞ்சை வா

---

*சிலப்பதிகார உரைப்பாயிரத்தில், மகாமகோபாத்யாயர். ஸ்ரீ வே. சாமிநாதையரவர்கள் காட்டியிருக்கும் பழைய அகவலொன்றைப் பார்க்க.

ணன்முந் நீர்பொருந் தண்பொருந்தத் திலங்கார் வலவடக் * கொங்கை வெற்பா” என்னும் பொய்யாமொழியார் வாக்காலும் (தஞ்சை வாணன்கோவை, பாட்டு-௫௪) **ஸ்ரீகாளிதாசரும்**, “ரகுமகாராஜருக்கு அப்பாண்டியர், தாமிரபர்ணி சமுத்திரத்தில் விழுமிடத்திலிருந்து எடுத்த நன்முத்துக்களை, தாங்கள் அவ்வளவு நாளாகச் சேர்த்து வைத்திருந்த புகழைக் கொடுப்பதுபோல, கொடுத்தார்கள்” என இரகுவமிசத்துக் (ஸர்க்-௪; சு-௫௦) கூறுதலாலும் அறியலாகும். இதனால், ஆணிமுத்துக்களின் வளத்தால் அலங்காரமாயுள்ளது கபாடபுரமென்பதாயிற்று.

இங்ஙனம் “விண்ணகம் பரவுமேதகு கீர்த்திக்-கண்ணகன் பரப்பிற் கபாடபுர” த்தை, தெய்வப்புலமை வால்மீகிபகவான் சிறப்பித்துக் கூறியிருத்தல்போலவே, அவரால் வேறு தமிழ்நாட்டு முக்கிய பட்டணமும் கூறப்பட்டதுண்டோ எனின்; உண்டு. வானர வீரரிற் சிலரை, சுக்கிரீவன் மேல்நாடுகளில் தேடவிடுக்கும்போது அடியிற்கண்ட சுலோகம் சொல்லப்பட்டுள்ளது.

𑌮𑌰𑌚𑍀𑌪𑌤𑍍𑌤𑌨𑌂𑌚𑍈𑌵 𑌰𑌮𑍍𑌯𑌂𑌚𑍈𑌵𑌜𑌟𑍀𑌪𑍁𑌰𑌮𑍍।
𑌅𑌵𑌨𑍍𑌤𑍀𑌮𑌙𑍍𑌗𑌲𑍇𑌪𑌾𑌂𑌚 𑌤𑌥𑌾 𑌚𑌾𑌲𑌕𑍍𑌷𑌿𑌤𑌂𑌵𑌨𑌮𑍍॥

(கிஷ்கிந்தாகாண்டம், ௪௩-ம் அத்யாயம், ௧௨-ம் சுலோகம்)

இச்சுலோகத்துக் கண்ட நகரமுதலியவைகளில், முதலிற்குறித்த முரசீபத்தனம் என்பது, அம்மேல்கடற்கரையிலுள்ள முசிரி என்னும் பட்டணமேயாம். இது, முற்காலத்தே, சுள்ளியென்ற பேர்யாறு கடலுடன் கலக்கும் இடத்துவிளங்கிய பெருந்துறைமுகமாயும், சேரவரசர்க்கு முக்கியபட்டணங்களில் ஒன்றாயும் இருந்ததென்றும், மேனாட்டு யவனரது மரக்கலங்கள் மிளகு முதலியன ஏற்றுதற்கு இதுவே அக்காலத்து ஏற்றபட்டினமென்றும், மேற்றேயத்து யாத்திரைக்காரராகிய பிளினி தாலமி முதலிய யவனாசிரியர் குறிப்புக்களால் விளங்குதலோடு, “சேரலர், சுள்ளியம் பேர்யாற்று வெண்ணுரை கலங்க, யவனர் தந்த வினைமாண் நன்கலம், பொன்னொடு வந்து கறியொடு பெயரும், வளங்கெழு முசிரி” என்னும் அகநானூற்று ௧௪௯-ம் பாட்டானும் தெளிவாகின்றது. சேரர்க்குரிய இப்பட்டினத்தை, பழங்காலத்துப் பாண்டியனொருவன் வளைந்துகொண்டு பெரும்போர் புரிந்து, இதன்கணிருந்த சேரரது படிமமொன்றைக் கவர்ந்து சென்றனன் (அகம்-௧௪௯). இத்தகைய பட்டினம், மிகுந்தபழைமையும் மேல்கடற்பக்கத்ததாயுமுண்மையால் இதனையே வான்மீகிமுனிவர் ‘முரசீபத்தனம்” என்றனராதல்வேண்டும். முசிரி என்பதை வான்மீகி முரசீ என்று ஒருபடியாகத் திரித்துவழங்க, பழையோராகிய **வராகமிகிரர்** பிரகத்சம்ஹிதையில், இதனை **மரீசிபத்தனம்** என வழங்கினர். மரீசி - மிளகு; மிளகின் வளமிகுதியைக் கொண்டிருந்தமையால் அப்பட்டினம் அவ்வாறு மரீசி எனவழங்கி அதுவே தமிழில் முசிரி எனத் திரிந்ததுபோலும். வான்மீகியும் “மரீசிபத்தனம்” என்றே வழங்கியிருந்து, பின், படிப்போரால் “முரசீபத்தனம்” என மாற்றப்பட்டதென்றலும் இழுக்காது.

இங்ஙனம், வான்மீகியார் திருவாக்கில், சோழநாட்டின் தலைநகர் காணப்படாது போயினும், ஏனைச் சேரபாண்டிய இராஜதானிகள் குறிக்கப்படுதல் தெளிவாகப் புலப்படுகின்றது. இதனால், அம்முனிவர்க்கு, வடநாட்டிற்போல, தமிழ்நாட்டுவிசேடங்கள் சிலவும் நன்குதெரிந்திருந்தனவென்பது வெளியாகின்றது. அன்றியும் ஆரணியகாண்டத்தில் இராவணனுடன் மாரீசன் இராமனது பெருமையை எடுத்துரைக்கும்போது, “இராமனுக்கு நான் மிகவும் பயந்திருக்கிறபடியால், ரகாரத்தில் தொடங்கும் ரத்னம் ரதம் என்ற பெயர்கள்கூட எனக்குப் பெரும்பயத்தை உண்டாக்குகின்றன” என்றதாக வான்மீகி கூறியிருப்பதில்—“ரேபாதீனி” என்னும் வடமொழி வழக்கையெடுத்தாளாது “ரகாராதீனி” எனத் தமிழ் வழக்குப்படி கூறுதலால், அம்முனிவர் தென்னாட்டார்பேசுமாற்றைத் தெரிந்திருந்தவராதல் வேண்டுமென்று கருதுவாருமுளர். இதற்கேற்ப, தலைச்சங்கப்புலவர்களில் “வான்மீகியார்” என்னும் புலவரொருவர் காணப்படுகின்றார். புறநானூற்றில்—

“பருதி சூழ்ந்தவிப் பயங்கெழு மாநிலம்
ஒருபக லெழுவ ரெய்தி யற்றே
வையமுந் தவமுந் தூக்கிற் றவத்துக்
கையவி யனைத்து மாற்றா தாகலிற்
கைவிட் டனரே காதல ரதனால்
விட் டோரை விடாள் திருவே
விடாஅ தோரிவள் விடப்பட் டோரே.”

---

*“தஞ்சைவாணனது கடலையெதிரும் தண்ணிய பொருநையாற்றின் கண் பிறந்தொளிரும் முத்துக்கள் கோத்த வலியவடம்” என்பது இதனுரை.

என்னும் ௩௫௮-ம் பாடல் வான்மீகையார் பாடியதென்று காணப்படுகின்றது. இப்பாடல், வான்மீகியார்பாடல் என்பதற்கேற்ப, தவத்தின் பெருமையை மிகவழகாக வர்ணித்துநிற்பதுங் காண்க. இவற்றை நோக்கும் போது, "தபஸ்வாத்யாயநிரதம்" என்று தொடங்கிய மகருஷி வான்மீகிபகவான், தலைச்சங்கத்தை அறிந்திருந்தவர் தாமோ? என்ற ஐயமுண்டாதல் இயல்பேயாம். இதற்கியைய, திரேதாயுகத்தில் வால்மீகி யிருந்ததாகக் கூறு~~[illegible]~~ [illegible] ~~[illegible]~~ இரண்டாமூழியி[illegible] ~~[illegible]~~மிருந்ததாகத் தமிழ்நூல்கள் கூறுவதும் ஒற்றுமை பெற்றதாயிருக்கிறது. அன்றியும், வால்மீகி முனிவர், தம் ஆதிநிலையில் ஆரியரின்வேறாய வேடர்கூட்டத்துடன் சேர்ந்து கொடுந்தொழில் செய்துவந்து, பின் மகருஷியானதாகக் கூறப்படுஞ்சரித்திரம், இவர் இத்தேசத்துப்பூர்வகுடிகளுடன் சம்பந்தமுடையராயிருந்ததைக் காட்டுமென்றும், தமிழ் அப்பூர்வகுடிகள் வழங்கிய பாஷைகளிற் சிறந்ததாயிருந்ததென்றும், வால்மீகியார் வசித்தபிரதேசத்தில் தமிழ் முற்காலத்து வழங்கியிருந்ததென்பதற்கு இப்போதும் அநேக சான்றுகளுண்டென்றும் * பிறவுஞ் சில ஏதுக்கள் கூறுதலுமுண்டு; இவற்றை ஈண்டுவிரிப்பிற்பெருகும். இனிக் கம்பர் வால்மீகி கூறியவாறன்றி, வானரவீரர் தேடற்குரிய விடங்களை வேறாகவுரைப்பர். அவற்றை அவரருளிய இராமாவதாரத்துக் கண்டுகொள்க.

பத்திராசிரியர்.

---

* வால்மீகிமுனிவரது ஆசிரமம் சித்திரகூடம். இது 'மத்திய இந்தியா'வில் 'பண்டில்கண்ட்'பிரதேசத்தில் உள்ளதென்பர். இவ்விடங்களில் தமிழ்ப்பாஷை முன்னாளில் வழங்கியிருக்கக் கூடுமென்பதற்கேற்ப, இம்மத்தியஇந்தியாவிலே பெரும்பான்மையான இடங்களிலும், மத்தியமாகாணங்களிலும், அதன்வடபாற் சூடியநாகபுரிப்பிரதேசங்களிலும், அதற்கு வடக்கேயுள்ள 'ராஜ்மஹால்' மலைப்பக்கத்துமுள்ள—அரவணரும் (Oraons) மலையரும (Malar) பாணியரும் (Panians) தமிழ்ச்சாதியின் சரியான அச்சாக இருக்கின்றாரெனப்படுகின்றது. இவரில் மத்தியமாகாணத்தும் சூடியநாகபுரியிலுமுள்ள பழைய திராவிடஜனத்தொகை 1901-ஆம் ஆண்டு ஜனகணிதத்தின்படி, 592,351-என்றும், அம்மக்களது பாஷை "குருக்கு" (Kurukh) அல்லது "அரவன் (Oraon) என்றும்; இவர் மொழி, திராவிட பாஷைகளில் ஏனையவற்றினும் தமிழ்கன்னடங்களுடன் மிக நெருங்கிய சம்பந்தமுடையதென்றும் தெரியவருகிறது. இனிக் கங்கைக்கரையின் கண்ணுள்ள 'ராஜ்மஹால்' மலைப்பிரதேசங்களில்வசிக்கும் தமிழ்ச்சாதியார் "மலையர் (Malar) எனவும்; அவர் பாஷை "மலாடு" (Malto) எனவும் வழங்கப்பெறுமென்றும், இம்மக்களின்தொகை, அக்கணிதப்படி, 60,777-என்றும் இவர் மேற்கூறிய 'அரவன்' களுடன் தொடர்புடைய சாதியாரேயென்றும் சொல்லப்படுகின்றன. (The Imperial Gazetteer of India; Vol I—New Edition-1907—pp. 296; 381—382.)

உ

இராமாவதாரச் செய்யுட் பாடாந்தரம்.

(முற்றொடர்ச்சி)

காட்சிப்படலம்.

இன்ன லம்பா வேந்தற் கியற்றிய
பன்ன லம்பதி னாலா யிரம்படை
தன்னன் மூன்றிற் களப்படக் கால்வளை
வின்ன லம்புகழ்ந் தேற்றி வெதும்புவாள்.

என்னும் ௨௨-ம் செய்யுள்.

இன்னல் செய்கர னாதிய ரோடெழும்
பன்னு வெள்ளக் கணக்குறும் பல்படை
தன்னன் மூன்றிற் களப்படக் கொன்றபோர்
வின்ன லத்தினை யுன்னி விரும்புவாள்.

எனக் காணப்படுகின்றது. கரனாதியர் எனப் பெயர் வெளிப்படையாய் வருதலானும், கூறியது கூறலாகாமையை 'விரும்புவாள்' என்பது விலக்கி நிற்றலானும் பின்னையதே சிறப்புடைத்து. விரும்புவாள் விரும்பிவருந்துவாள் என்க.

ஷ

'வெவ் விராதனை' என்னும் ௨௯-ம் செய்யுளின் பின்னர்;

இன்ன வெண்ணி யிடருறு வாண்மருங்
குன்றொ ராயிர கோடி யரக்கியர்
துன்னு காவலுட் டூய திரிசடை
யென்னு மங்கை துணையின்றி வேறிலாள். எனவும்,

தரும நீதி தழுவிய சிந்தைகொண்
டரிய வீடணன் றந்தரு ளொண்டொடி
திரிச டைக்கொடி நாடொறுந் தேற்றுஞ்சொ
லருளி னாற்றன தாவிபெற் றுய்ந்துளாள். எனவும்,

அன்ன ளாய வருந்ததிக் கற்பினாண்
மன்னு சோலையின் மாருதி யும்வரத்
தன்னி டந்துடித் தெய்துறச் சானகி
யென்னு மங்கை யினிதிருந் தாளரோ. எனவும்,

மூன்று செய்யுள்கள் காணப்படுகின்றன. இவை மூன்றும் ஈண்டுப் பொருத்தமுடையனவே. இனிதிருத்தல் - இடந் துடித்தலால் (தனக்கு நன்மை வரும்போலும் என்று சிறிது) இனிமையோடு இருத்தல்.

௸

நலந்துடிக் கின்றதோ நான்செய் தீவினைச்
சலந்துடித் தின்னமுந் தருவ துண்மையோ
பொலந்துடி மருங்குலாய் புருவங் கண்முதல்
வலந்துடிக் கின்றில வருவ தோர்கிலேன்.

என்னும் ௩௨-ம் செய்யுளில், ‘தருவதுண்மையோ’ என்பது ‘தருவதோவிடர்’ எனக் காணப்படுகின்றது. தருவது இன்னதென்பது வெளிப்படையாய் வருதலிற் பின்னையதே பொருத்தமுடைத்து.

௸

நஞ்சனை யான்வனத் திழைக்கு நாளிடை
வஞ்சனை யால்வலந் துடித்த வாய்மையா
லெஞ்சல வீண்டுதா மிடந்து டித்ததா
லஞ்சலென் றிரங்குதற் கடுப்ப தியாதென்றாள்.

என்னும் ௩௫-ம் செய்யுள்,

நஞ்சனை யானெனைக் கவர நண்ணிய
வஞ்சனை நாளுமென் வலந்து டித்ததா
லெஞ்சல விற்றைநா ளிடந்து டித்ததா
லஞ்சலென் றறிந்துரை யடுப்ப தியாதென்றாள்.

எனக் காணப்படுகின்றது. ‘இழைக்குநாளிடை’ என்பதும், ‘வஞ்சனையால் வலந்துடித்த’ என்பதும், ‘அஞ்சலென் றிரங்குதற்கு’ என்பதும் பொருத்தமின்மையிற் பின்னையதே பொருத்தமுடைத்து.

௸

புனைகழ லிராகவன் புயத்தை யோபுகழ்
வனிதையர் திலகத்தின் மனத்தின் மாண்பையோ
வனைகழ லரசரின் வண்மை வீக்கிடும்
சனகர்தங் குலத்தையோ யாதைச் சாற்றுகேன்.

என்னும் ௪௯-ம் செய்யுளில், ‘வனைகழலரசரின் வண்மைவீக்கிடும்—சனகர்தங் குலத்தையோ யாதைச் சாற்றுகேன்’ என்பது, ‘சனகர்தங்குலத்தையோ தருமங்காத்ததே—சனகர்தங் குலத்தையோ வாரைப்போற்றுகேன்’ எனக் காணப்படுகின்றது. இச்சீதையாற் பிறந்தகுலம் புகுந்தகுலம் இரண்டும் மேன்மையடைந்தன என்னும் பொருளடங்கு சிறந்து நிற்றலிற் பின்னையதே சிறப்புடைத்து. ஆரென்கிளவி ஈண்டு வழுவமைதிபோலும்.

௸

தருமமே காத்ததோ சழக்கன் றன்வினைக்
கருமமே காத்ததோ கற்பின் காவலோ
வருமையே யருமையே யாரி தாற்றுவா
ரொருமையே யெம்மனோர்க் குரைக்கற் பாலதோ.

என்னும் ௭௫-ம் செய்யுளில் ‘சழக்கன்றன்வினைக்-கருமமே காத்ததோ’ என்பது “சனகனல்வினைக்—கருமமே காத்ததோ’ எனக் காணப்படுகின்றது. இராவணன்றீவினை கற்பைக் காத்ததாகக் கூறல் சிறப்பின்மையிற் பின்னையதே பொருத்தமுடைத்து. மகளிர் கற்பில்வழுவின், அது பிறந்தகுலத்துக்கே பெருவசையையுண்டாக்குமாதலிற் “சனகனல்வினைக்கருமமே காத்ததோ” என்றார். ‘ஒருமையே’ என்பதை “ஒருமையோடு” எனப் பாடாந்தரமாக்கிக் கொள்க.

நிந்தனைப்படலம்.

“நானநெய் விளக்க நாவிரு கோடி நங்கைய ரங்கையி லெடுப்ப
மேனிவந் தெழுந்த மணியுடை யணியின் விரிகதி ரிருளெலாம் விழுங்கக்
கான்முதற் றொடர்ந்த நூபுரஞ் சிலம்பக் கிண்கிணி கலையொடுங் கலிப்ப
பானிறத் தன்னக் குழாம்படர்ந் தென்னப் பற்பல மழலையும் பகர”

என்னும் ௩-ம்செய்யுளில், ‘பற்பல மழலையும் பகர’ என்பது ‘பற்பல மங்கையர் படர’ எனக் காணப்படுகின்றது. ‘படர்ந்தென மழலையும் பகர’ என்பது, பொருத்தமின்மையிற் பின்னையதே பொருத்தமுடைத்து.

௸

அந்தரம் புகுந்த துண்டென முனிவுற் றருந்துயி னீங்கினு ணுண்டைச்
சந்திரவதனத் தருந்ததி யிருந்த தண்ணறுஞ் சோலையின் றனையோ

மந்திரம் யாதோ யாரொடும் போமோ வென்றுமா மனமறுக் குறலா
லிந்திரன் முதலோ ரிமைப்பிலா நாட்ட முகிழ்த்தன ருயிர்ப்பவிந் திருப்ப.

என்னும் ௪-ம் செய்யுள்,

அந்தரம் புகுதற் குன்னினன் முனிவுற் றருந்துயி னீத்ததோ வதன்மேற்
சந்திர வதனத் தருந்ததி யிருந்த தண்ணறுஞ் சோலைபுக் குறவோ
மந்திரம் யாதோ யாரொடும் போமோ வென்றுதம் மனமறுக் குறலா
லிந்திரன் முதலோ ரிமைப்பிலா நாட்டத் தெனைவரு முயிர்ப்பவிந் திருப்ப.

எனக் காணப்படுகின்றது. 'அந்தரம் புகுந்த தன்டென முனிவுற் றருந்துயி னீங்கினன்' என்பதும், 'சோலையின் றனையோ' என்பதும், பொருத்தமில்லனவாதலிற் பின்னையதே பொருத்தமுடைத்து.

ஷை

கூசி யாவி குலைவுறு வாளையு
மாசை யாலுயி ராசழி வானையும்
காசில் கண்ணிணை சான்றெனக் கண்டனன்
ஊச லாடி யுளையு முளத்தினான்.

என்னும் ௨௨-ம் செய்யுளில், 'ஊசலாடியுளையு முளத்தினான்' என்பது 'ஊசலாடு முளமொழிந் தோதுவான்' எனக் காணப்படுகின்றது. சானகி கூசியாவி குலைதலானும், இராவணன் ஆசையா லுயிரழிதலானும் சானகியின் கற்பிற்குக் கேடின்மை யறிந்தானாதலின் முற்கொண்டசந்தேகம் நீங்கினான் என்பார் 'ஊசலாடுமுளமொழிந்து' என்றாராதலிற் பின்னையதே பொருத்தமுடைத்து.

ஷை

(வாழி சானகி) 'என்னும் ௨௩-ம் செய்யுளின் பின்னர்,

என்ன வாழ்த்திய மாருதி யீதுரா
மின்னுங் காண்டு மெனமறைந் தெய்தினான்
சொன்ன வாளரக் கன்சுடு தீச்சுடு
மன்னை வைகுறு மவ்விடத் தாயினான்.

என ஒரு செய்யுள் காணப்படுகின்றது. இஃது ஈண்டுப் பொருத்தமுடையதென்பது, முன்பின் செய்யுட்களோ டியையுமாற்றாற் காண்க.

சி. கணேசையர்.

உ

கடவுள்துணை

உபாத்திமைத்தொழில்.

உலகத்துள்ளவர்களா னனுசரிக்கப்படுந்தொழில்கள் பல. தொழிலாவது, உலகநடத்தற்கேதுவாய்த்தன்னயமும் பிறர்நயமுங்கருதி ஒருவர் நியதியாகச் செய்யுமுயற்சியேயாம். அங்ஙனம் தொழில் செய்யுங்கால் ஒரேதொழிலைச் செய்வோரெல்லாந் தம்முளொன்று கூடித் தாம் சிறப்படைதற்கேதுவாய பிரமாணங்களியற்றி ஓர் சங்கமாக வாழ்வர். இதனானே அத்தொழிலு மதனானத்தொழிலாளரு நன்கு மதிக்கப்பட்டுச் சிறப்படைதல் நிச்சயம். இதுவே இக்காலத்தில் ஐரோப்பா முதலிய மேலைத்தேசங்களிலுமுள்ள வழக்கு. உதாரணமாகச் சட்டவித்தை கற்று நியாயதுரந்தரராயினோரொரு கழகமும், வயித்தியங்கற்று வயித்தியத்தொழில் பூண்டவரொரு கழகமும், வர்த்தகஞ்செய்வோர் தம்முளொருகூட்டமும், மலைப்பிரதேசங்களிற் பயிர்செய்வோர் ஒரு கூட்டமும் உடையராயிருப்பர். இப்படியே யொவ்வோர்தொழிலாளருந் தம்முளோர் சங்கம் சேர்ந்து ஒருவர்க்குச் செய்ததீங்கு அச்சங்கத்தாரெல்லார்க்குஞ் செய்ததுபோலவும் ஒருவருக்குவந்தபெருமை எல்லோர்க்கும் வந்ததுபோலவும் பாவித்துச் சகோதரபாவத்துடன் வாழ்வர். இவ்விதமாயுள்ள தொழில்கள் மேலோங்குவதும் அல்லாதன அத்தொழிலாளருளொற்றுமையின்மையால் நசிப்பதும் யாவருமனுபத்திற் காணலாம்.

இங்ஙனமாய தொழில்களுட்சிறந்தது உபாத்திமைத் தொழிலே. என்னை? பொருண் முதலியன தேடியவற்றா னிப்பூதவுடம்பிற்கு மாத்திரமுறுதிசெய்ய இயன்றனவாய் மற்றத்தொழில்களைக் கற்றற்கும் இன்றியமையாக்கருவியுஞ் "சிற்றுயிர்க்குற்றதுணை" யுமாகிய கல்வியைப் போதிக்குந் தொழிலாதலின். மேலும் உபாத்தியாயரே எச்சாதியாரையு நன்னிலைப்படுத்துயர்த்துபவர்: அவ்வச்சாதிச்சிறுவர் மனதைத் தெருட்டியருளிவிடுபவரவராதலின். தரிசாகக் கிடக்கு நிலத்தை உழுதுபண்படுத்தி அதிலிடும் வித்து முளைத்துத்

தழைத்தோங்குமாறு செய்யு மேழிச்செல்வனதுபோலத் தன்னையடைந்த சிறுவரது மனதைத் திருத்திப் புத்தியை விருத்தியடையச்செய்து சித்தத்தையூக்கப்படுத்தும் உபாத்தியாயன்றொழில் மிக்குயர்ந்ததென்பது. ஒருபாத்தியாயனுக்குக் கீழுள்ள சிறுவர்கள் அவன்றன்மையே சிறிதுசிறிதாகப் பின்பற்றுவர். 'அரசனெவ்வழியவ்வழிக் குடிகள்" என்றபடி, உபாத்தியாயன் செய்வன, சொல்வன, எண்ணுவன ஒவ்வொன்று மவன்கீழ்க்கற்பவரிற் பிரதிபலித்தலொருதலையாம். ஒருபாத்தியாயனது செயல் மாணாக்கனுக்கு எழுத வாசிக்கக் கற்றுக்கொடுத்தல்மாத்திரமன்று. அஃது அவன்செய்கையின் ஓர் மிகச்சிறுபாகமேயாம். மாணாக்கன் தன்னாசிரியனிடம் பழகிய குணமே அவனதெஞ்சிய சீவியத்துச்சுகதுக்கங்களுக்குக் காரணமாகும். ஆகவே ஒருவன் றன்னாசானிட மடையுநன்மைதீமைகள் அவன் செய்யுஞ்சீவியத்தின் குணாகுணங்களானறியப்படும்.

ஆதலின் உபாத்தியாயனது தொழிலின் பயன் உடனுக்குடன் அறியப்படுவதன்று. அவனால் மாணாக்கனுக்கு இவ்வளவு நன்மையல்லது இவ்வளவு தீமை விளைந்ததென்றும், இவ்வளவுவேலை தான்செய்யப்பட்டது: இது இத்தனைரூபா இத்தனை சதம்பெறுமென்றும் அளந்து நிச்சயித்தல்கூடாது. ஓர் நோயாளிக்கு வைத்தியஞ்செய்வோன்றிறம் அந்நோய்நீக்கம் அல்லது நீங்காமையானும், நியாயத்தலத்தில் ஓர் கட்சிக்காரனுக்காக வாதிக்கு நியாயதுரந்தரன்றிறம் அவனவ்வழக்கை வெல்வது அல்லது தோற்பதனாலும் நிதானித்து அளக்கப்படும். உபாத்தியாயன்றொழிலோ அங்ஙனமன்று; அவன் செய்கையின் பயனும பயனின்மையும் ஒருநாள் இருநாள் அல்லது ஒருமாதமிருமாதங்களில் அல்லது ஒருவருடமிருவருடங்களிற்றானு நிச்சயிக்கப்படாமையின். ஆதலினன்றே கற்போரெவருங் கற்கப்படுபவராகிய நல்லாசிரியரை அடைதல்வேண்டியதவசியமாயிற்று.

இங்ஙனமற்றைய தொழிலெவற்றினுமிக்க மேம்பாடுடைத்தாய இவ்வுபாத்திமைத் தொழில், அத்தொழிலாளருளொற்றுமையின்மையாற் சில விசேட குறைவுகளையுடைத்தாகின்றது. அவைதாம், உபாத்தியாயருடைய வேதனமிகக் குறைவாயிருத்தலும், அதனாலும்வேறு காரணங்களாலும் அத்தொழிற்கு மதிப்புக்குறைவு மென்பன. படிப்பித்தலுமொருதொழிலா யுறுதிபெற்றுக்கட்டுப்பாடடை யாததே அவற்றின்காரணம். அக்கட்டுப்பாடும் பலதிறத்தராய உபாத்தியாயருந் தத்தந் தராதரத்துக்கேற்பச் சங்கங்கள் சேர்ந்து ஒற்றுமையுடையராய வழியே பெறப்படும். உபாத்தியாயருள் ஒற்றுமையின்மையால் அவர் வேதனமிகக்குறைய அதனாலத்தொழிற்குக் கௌரவக் குறைவாயிற்று. குறையவே அத்தொழிலிற் பிரவேசிப்பவருமரியராயினர். இக்காலத்திற் சிலர் ஓர்பாடசாலையி லுபாத்திமைத் தொழிலிலமர்ந்து, மற்றொரு உத்தியோகத்துக்கு வேண்டிய பரீக்ஷைகளுக்குப் படித்துத்தேர்ந்து அதிற் சித்தியெய்தியவுடன் தமது உபாத்திமைத்தொழிலைக் கைவிடுவர். இப்படிப்பட்டவர்களின் கருத்தெல்லாம் வேறுத்தியோகத்தின் மீதிருக்குமல்லாமல் பாடசாலையின் மீதிராது. உபாத்தியாயரெல்லாமொன்றுகூடி "உபாத்திமார் சங்கம்" என ஓர் சங்கத்தினராய் இத்திற உபாத்தியாயனின்ன வேதனத்துக்குக் குறையினிசைவதில்லையென ஓர் கட்டுப்பாடுசெய்து கொள்ளினன்றி அவர் வேதனமுயர்வதும் அத்தொழிலாளர்க் கூக்கமுமின்றாம். மேலும் உபாத்திமைத்தொழிற்குக் கௌரவக்குறைவு நேர்ந்தது. அத்தொழிற்கருகரல்லாதாரனேகர் அதிற்பிரவேசித்தலினாலுமாம்—உபாத்திமைத்தொழில் மிக இலகுவானதென்றனேகர் எண்ணுகின்றனர். அது தவறு. படித்தவர்களெல்லாந் தாம் படித்ததைப் பிறர்க்குக்கற்பித்தலிலும் வல்லுநரெனல்கூடாது. வல்லுநரென்றல் செல்வர்களெல்லாம் உதாரகுணமுடையரெனல்போல அவ்வியாத்தியாம்.

கற்பிக்குந்திறனுமொருவர்க்கியற்கையில் அமைந்திருத்தல் விசேடம். "வரமுடன்புவியிற்றோன்றுங்" கவிச்சுரர்கள்போல உபாத்தியாயர்களும் அதற்கெனப் பிறத்தல்வேண்டுமென்பது ஒரு சாரார் கொள்கை. அது பொருந்தாது. என்னை? கவிகளுள் அதியுத்தமகவியே யுலகத்திற்கு வேண்டப்படுபவன். அன்றி மற்றை அதமர் மத்திமரன்று; உபாத்தியாயருளோ உத்தமரேயன்றி யேனைய மத்திமருங் கொள்ளப்படுபவராவாதலின். போதனாசத்தி இயற்கையிலமையப்பெறாரெங்ஙன மத்திறமையடைவரெனின், அதுவும் அத்

திறமையியற்கையிலமையப்பெற்ற நல்லுபாத்தியாயரையடுத்து பற்பல மாணாக்கர்க்குப் பற்பலவிஷயங்களைக் கற்பித்தலி லவர்கைக்கொள்ளும் விதிகளையும், பிரயோகிக்குமுபாயங்களையுமுற்றுநோக்கித் தாமுமவற்றைப்பயின்று கற்றலின்வருமென்க. போதனாஞானத்தைக்கற்பித்தற்கெழுந்தன போதனாசிரியவித்தியாசாலைகள். "ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாத"துபோல் போதனாசிரியவித்தியாசாலையிற் போதனாஞானத்தைமாத்திரங் கற்றவளவில் நல்லாசிரியனாதலெங்ஙனமெனச்சிலர் நகையாடுவர். ஆயினுங் காரியங்களை நன்கு ஆராயுங்கால் அவர் நகைப்பின்பொருளன்மை தெள்ளிதிற்புலப்படும்.

உலகத்துள்ள எக்கருமத்தைச்செய்தற்கும் வேண்டப்படும் அறிவு இருவகைத்து. ஒன்று நான்குவகுக்கப்பட்டு ஒழுங்குபடுத்திய பொதுவிதிகளினறிவு. அதுவே சாத்திர அறிவு அல்லது சாத்திரஞானமெனப்படும். மற்றையது அச்சாத்திரஞானத்தை வெளிப்படையான் அல்லது குறிப்பினாற் றழுவிக் காரியங்களைச்சாதிக்குமிடத்துக் கரநயனாதியவயவங்களையுபயோகித்தலிற் கூர்மையுஞ்சாமர்த்தியமும் ஆகிய பிரயோகஞ்ஞானம். ஆதலின் போதிக்குமறிவும் "சாத்திரம்" "பிரயோகம்" என இருபாற்று. அவற்றுட்போதனாசாத்திரஞ்ஞானம் படிப்பித்தலிற்பீடிகையாயுள்ள பொதுவிதிகளுஞ்சிறப்புவிதிகளுமாம். பிரயோகஞ்ஞானம் பாடசாலையிற்செய்யப்படும் அப்பியாசம். பிரயோகம் முந்தியது. சாத்திரம் பிந்தியது. அது "இலக்கியங்கண்டதற்கிலக்கணமியம்பல்" போலும். சாத்திர அறிவும் பிரயோகமும் ஒன்றற்கொன்று துணையாவனவன்றி வெவ்வேறன்று. படிப்பித்தற்கு வேண்டும் பீடிகை விதிகளையறியாது குருட்டுத்தனமாகச் செல்லும் அனுபவஞானியும் பிரயோகானுபவஞ்சிறிதுமின்றிப் பகற்கனவுகாணுஞ் சாத்திரஞானியுமென இவ்விருவருந் தவிர்க்கப்படவேண்டியவர். சாத்திர அறிவும் அனுபவமுங்கலந்திருப்பவரே நல்லாசிரியர். சாத்திரஞானமில்வழிப் பிரயோகமும், பிரயோகமில்வழிச் சாத்திரஞானமுஞ் சிறப்படையா. கல்விகற்பிக்குமுறையைச் செவ்வனேகற்று உபாத்திமைத்தொழிலி லிதுகாறுஞ்செய்யப்பெற்ற சாதனங்களை நன்கு பயின்றவரேனும் அம்மாத்திரத்தில் அவர் நல்லாசிரியராகிவிடல் முடியாது. ஏனெனிற் கற்பித்தலின் மேலாந்தரமும் காலமிடங்களுக்கேற்ப மாறுபடும் பலகாரியங்கள் சேர்ந்து சித்திப்பதொன்றாம். சரிதகமாகிய காரியங்களுள் படிப்பிக்குமுறைக்குரிய பீடிகாவிதிகளையுஞ் சிறப்புவிதிகளையுங்கற்றலும் ஒன்று. அங்ஙனம் அவைகளைக்கற்றலால் உபாத்தியாயத்தொழிலிற் புதிதாகப்பிரவேசிக்குமிளைஞன் அனேக தவறுகளினின்றுந் தப்பித்துக்கொள்வன்; தான் முன்செய்ததையாதல் மற்றையோர் செய்துவந்ததையாதல் குருட்டுத்தனமாய்ப் பின்பற்றிச்செய்யான். அன்றியுந் தன்னனுபவத்தைப் பொதுவிதிக்கிணங்கத் திருத்தி மிக்க பலனுறச்செய்வன்; அதுமட்டோ, தன் முயற்சியையுமோர் "தொழிலி"னது கௌரவத்தையடையச்செய்வன்.

ஆதலின், கற்பிக்குமறிவுக்குரிய சாத்திரஞ்ஞானம், உபாத்தியாயராவார் எல்லாராலு மவசியங் கற்கப்படவேண்டியதென்பது. அது போதனாசத்தி இயற்கையிலமையப்பெறார்க்கேயன்றிப் பெற்றார்க்கு மிக்க துணையாம். போதனைமுறையைப்பயிறலால் மத்திமராயிருப்பவர் உத்தமராகவும், உத்தமராயிருப்பவர் உத்தமோத்தமராகவும் ஆவர். இப்போதனைமுறையும்—ஆசாரியன்றன்மையும், மாணாக்கன்றன்மையும், ஈதலியற்கையுமென மூவகைத்து. ஈயப்படுவனவற்றினியற்கை யீதலியற்கையுளடங்கும். அவற்றை மேற்கூறுதும்.

தி. சதாசிவ ஐயர்.

தமிழணியிலக்கண வரலாறு.

தமிழிலக்கணம் எழுத்துச்சொல் பொருள் யாப்பு அணியென்னும் ஐந்து பகுதிகளையுடைத்து. இப்பாகுபாடனைத்து மடங்கிய இலக்கண நூல்கள் சிறுபான்மையா யுள்ளன. இவற்றுள் மிகப்பண்டையதும், இக்காலத்துத் தமிழுக்கிலக்கணமா யெடுத்தாளப் படுவதுமாகிய நூல் **தொல்காப்பியம்.** இந்நூலாசிரியர் தமிழிலக்கணத்தை எழுத்துச் சொல் பொருளென மூவகையாக்கிக் கூறிப்

---

* காலஞ்சென்ற ஸ்ரீ. P. தருராயரவர்கள் "ஞானபோதினியில்" எழுதி வெளிப்படுத்தியது.

போந்தாரேயன்றி யாப்பணிகளை வேறதிகாரங்களா யமைத்துக் கூறிற்றிலர். இயலிசைநாடகமென்னும் முத்தமிழையுங் கூறுவதாகிய அகத்தியம் வெகுகாலத்துக்கு முன்னரே இறந்தமையின், அநத்தியனார் இயற்றமிழ்ப் பகுதிகளை யின்னமுறையமைப்பட வகுத்து நூல் யாத்தனரென்று துணிதலியலாது: ஆயினும்,

"எழுத்துஞ் சொல்லும் பொருளு நாடிச்
செந்தமி ழியற்கை சிவணிய நிலத்தொடு
முந்துநூல் கண்டு முறைப்பட வெண்ணி"

எனத் தொல்காப்பியப்பாயிரச் சூத்திரத்துப் பனம்பாரனார் கூறியிருத்தலின் அகத்தியனாரும் தமிழின் பாகுபாடுகள் எழுத்துச் சொற்பொருள்களென்றே கொண்டனர்போலும். இம் மூன்று பகுதிகளையும் எழுத்தின் பின் சொல், சொல்லின்பின் பொருள் என முறைகாட்டிக் கூறாது இவ்வாசிரியர் இவற்றி னிலக்கணங்களை விரவிக் கூறினரென்ப. முதனூலாகிய வகத்தியத்து விரவிக்கூறிய முத்தமிழில் இயற்றமிழை வேறுபிரித்து அதன் பகுதிகளாகிய எழுத்துச் சொற்பொருள்களை முறைப்படுத்து ஆசிரியர் தொல்காப்பியனார் நூல்செய்ததுபோலவே தொல்காப்பியப் பொருளதிகாரத் தடங்கிக் கிடக்கும் யாப்பணிகளைப் பிற்காலத்தார் வேறியல்களாக அமைத்து இலக்கணநூல் செய்தனர். பிற்காலத்துத் தோன்றிய இலக்கண நூல்களி லொன்றாகிய நன்னூலை யியற்றிய பவணந்தி முனிவரும் எழுத்துச் சொற் பொருள் யாப்பணிகளாகிய ஐந்து பகுதிகளையுமடக்கி நூல் கூறுவான் தொடங்கினமை;

"குணகடல் குமரி குடகம் வேங்கடம்
மெனுநான் கெல்லையி னிருந்தமிழ்க் கடலு
ளரும்பொரு ளைந்தையும் யாவரு முணரத்
தொகைவகை விரியிற் றருகென"

என்று அந்நூலின் சிறப்புப் பாயிரத்துட் கூறியிருத்தலால் விளங்கும். எழுத்துச் சொற்களி னிலக்கணத்தைமாத்திர மினிதுணர்த்தித் தமிழ்ப்புலவர்களாற் புகழ்ந்துரைக்கப்படு மிந்நூல் ஏனைப் பொருள் யாப்பணிகளாகிய முப்பகுதிகளையு மடக்கிய நூலாயிருக்குமாயி னெத்துணைச் சிறப்பிற்றாகக்கொண்டாடப்படுமோ! தமிழினைந்திலக்கணங்களையு முணர்த்துவான்றொடங்கிய பவணந்தி முனிவர் செய்த நூலினுட் பொருள்யாப்பணிகள் காணப்படாமைக்குக் காரணம் யாதோவறிகிலோம். இலக்கண விளக்க முடையாரும் எழுத்து முதலிய பகுதிகளைந்தையு மடக்கி ஒரு நூலியற்றினர். இவ்வாறு இலக்கணப்பகுதிகள் யாவு மடங்கிய நூல்களன்றி இவற்றுள் ஒவ்வொன்றனையே விரித்துக் கூறுமிலக்கணநூல்களு முள. அவை யாப்பருங்கலக்காரிகை முதலியன. மேற்கூறியவாற்றால் அணியிலக்கணம் பண்டைக்காலத்து நூல்களில் தனித்து ஓரதிகாரமாகக் கூறப்படவில்லையெனபதும் பிற்காலத்து நூல்களில் வேறோரதிகாரமாகக் கூறப்பட்டதென்பதும் விளங்குகின்றன. சங்கத்தார் காலத்துத் தோன்றிய இலக்கணநூல்களில் இப்பொழுதுள்ளதாகிய தொல்காப்பியத்தைச் சிறிதாராய்வோமாயின், இந்நூலாசிரியர் காலத்து அணியிலக்கணத்தின் நிலைமை இத்தன்மைத்தா யிருந்ததென்பது நன்குபுலப்படும். இப்பழைய நூலின் பொருளதிகாரத்துள்ள பலவியல்களுள் உவமவியல் ஒன்று. இவ்வியல் பலவகையாகிய அணிகளுள் உவமமொன்றனையே கூறும். பொருட்புலப்பாட்டினுக் குபகாரமுடைத்தாதல் பற்றி இவ்வியலை ஆசிரியர் பொருளதிகாரத் தடக்கினர். தொல்காப்பிய வகத்திணையியலில் அவர் உவமத்தினை உள்ளுறையுவமம் ஏனையுவமமென இருகூறாக்கிச் சுருக்கியோதி உவமவியலுள் அவற்றை விரித்துக் கூறினர். உவமத்தின் கூறுபாடுகள் தொல்காப்பியத்துட் கூறியபடி நான்காகும். அவை தொழில் பயன் வடிவு வண்ணம் என்பனவாம். பிற்காலத்து நூல்களிலோ வென்றால், இவ்வணி பலவகையாகித்தோன்றும். உவமம் பலவகையாயிருத்தலானும் வேறு பல அலங்காரங்களுக்கு அடியாயிருத்தலானும் பிற்காலத்துத்தோன்றிய அலங்கார நூல்கள் இதனைப் பலவகையாக்கியும் வேறுபல அலங்காரங்களைக் கூட்டியும் பொருளணிக்கிலக்கணங் கூறுவன வாயின. சொல்லணி யெத்துணைச் சிறப்பிற்றாய்ப் பிற்காலத்து நூல்களிற்காணப்படுகின்றதோ அத்துணைச் சிறப்புடைத்தாகத் தொல்லாசிரியர் கருதவில்லை யென்பது பழைய நூல்களையும் பிற்காலத்துச் செய்யுட்களையும் ஒப்பிட்டுச் சீர் தூக்கி நோக்க விளங்கும்.

தொல்காப்பியர் உவமமொன்றனையே அணியாகக் கொண்டனர். பொருளணிகள் பல உவமத்தினடியாகத் தோன்று மென்னுங் கருத்து அப்பையதீக்ஷித ரியற்றிய சித்ர மீமாம்ஸையிலுள்ள

* உவமை யென்னுந் தவலருங் கூத்தி
பல்வகைக் கோலம் பாங்குறப் புனைந்து
காப்பிய வரங்கிற் கவினுறத் தோன்றி
யாப்பறி புலவ ரிதய
நீப்பறு மகிழ்ச்சி பூப்ப நடிக்குமே.

என்னும் பொருள்கொண்ட ஆரியையாலும் புலப்படும். பிற்காலத்து நூல்செய்த ஆசிரியர் உவமத்தின் விகற்பங்களை வேறுகூறியிட்டு வெவ்வேறலங்காரங்களாக்கி யுரைத்தனர். தொல்காப்பியர் அவற்றை உவமமாகக் கருதினாரேயன்றி வேறு பெயராற் கூறிற்றிலர். இவ்வுவமத்தின் வேறுபாடுகளுட் குறிப்பினால் உவமை கோடலொன்று. இதனை நச்சினார்க்கினியர்,

“உயர்ந்ததன் மேற்றே யுள்ளுங் காலை”

என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தில் ‘உள்ளுங்காலை’ என்பதனாற் கொண்டார். இதைக் குறித்த இவ்வுரையாசிரியருரை இங்கு ஆராயத் தகுந்தது. “என்ற வியப்ப வென்றவை யெனாஅ” என மேல் வருஞ் சூத்திரத்துள் “என்ற” வென்பதோர் உவமவுருபு கூறினமையின், “வாயென்ற பவளம்” எனவும், “வாய்பவளமாக” எனவும், “வாய்பவளம்” எனவும் வருவனவும், அக்குறிப்புவமையின் பகுதியெனவே படும். இவற்றை வேறுவேறு பெயர் கொடுத்து விரித்துக்கூறாது முன்னத்தி னுணர்வனவே இவை யெல்லா மென்னுந் துணையே இலேசினாற்கூறி ஒழிந்ததென்னை யெனின், இவற்றாற் செய்யுள் செய்வார் செய்யும் பொருட்படைப்பகுதி எண்ணிறந்தனவாகலின், அப்பகுதியெல்லாங் கூறாது பொதுவகையான் வரையறைப்படும் இலக்கணமே கூறியொழிந்தா ரென்பது. வாயென்ற பவளமெனவும் வாய்பவளமாக வெனவும் வாய்பவள மெனவும் வந்த பவளக் குறிப்புவமைகளை இக்காலத்தார் உருவக மென்றே வழங்குப. இனி வாய் பவளமெனவும் ‘கண்’ கருவிளை யெனவும் பெயர்ப்பயனிலைவரின் அவற்றை ஒற்றுமைகாட்டி உருவகமென்றாராகலின் அதுவும் உவமையெனவே படுமென்பது. பொருளை உவமமாக்கி உவமையைப் பொருளாக்கிக் கூறுவதும் ஒருவமைவிகற்பமாகின்றது. ‘திருமுகம் வீழ்ந்த தெய்வத் தாமரை’ என்றவிடத்துத் திருமுகம் உவமையும் தாமரை பொருளுமாயின. இஃது உவமத்தொகையாங்கால் முகத்தாமரையென நிற்கும். இதைக்குறித்து நச்சினார்க்கினியர் ‘இவற்றை வேறு உருவகமென்றும் பிறர் மயங்குப’ என்றார். இவ்வாறன்றி இன்னும் பலவாறாக வேறுபட்டு வந்த உவமச்சாதிகளை ஆசிரியர்,

“வேறுபட வந்த வுவமத் தோற்றங்
கூறிய மருங்கிற் கொள்வழிக் கொளாஅல்”

என்ற சூத்திரத்திலடக்கினார். இதனுரையில் நச்சினார்க்கினியர் உவமத்தின் வேறுபாடுகளை விரித்துரைத்து உதாரணங்காட்டி விளக்கியிருக்கின்றார். இவ்வுதாரணச் செய்யுட்களுட் சில தண்டியலங்காரவுரையில் வேற்றுமையணிக்கும் தற்குறிப்பேற்றவணிக்கும் இலக்கியமாகக் காட்டப்பட்டிருக்கின்றன. தண்டியலங்காரத்து நிரனிறையென்ற பெயராற் கூறப்பட்டிருக்கும் அணியினைத் தொல்காப்பியர் உவமத்தின்பாற் படுத்தோதுவர். ஆயினும் தொல்காப்பியத்துக் கூறிய நிரனிறை உவமையையும் பொருளினையும் நிரலேநிறுத்து ஒப்புமை கோடலொன்றனையே குறித்தது. தண்டியலங்காரத்துள்ள நிரனிறையோ வெனின், இவ்வாறன்றி இன்னும் பலவாகச் சொல்லையும் பொருளையும் நிரலே நிறுத்துப் பொருள்கொள்வது. இவ்வணியைத் தண்டியாசிரியர் தமது காவ்யாதர்சத்துட் கிரமமென்றும் சந்திராலோகமுடையார் யதாஸங்கிய மென்றும் கூறுவர்.

உவமத்தின் பலவிகற்பங்களையும் வேறணிகளாக்கி யுரைத்தல் நச்சினார்க்கினியர்க்கும் உடன்பாடன்மை அவர் இச்சூத்திரத்துக் கூறிய வுரையால் நன்கு புலப்படும். “இனி இவ்வோத்தினிற் கூறுகின்ற உவமங்களுட் சிலவற்றையுஞ் சொல்லதிகாரத்தினுள்ளுஞ் செய்யுளியலுள்ளுஞ் சொல்லுகின்ற சில பொருள்களையும் வாங்கிக்கொ

---

* 𑌉𑌪𑌮𑍈𑌕𑌾 𑌶𑍈𑌲𑍂𑌷𑍀 𑌸𑌂𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌾 𑌚𑌿𑌤𑍍𑌰𑌭𑍂𑌮𑌿𑌕𑌾𑌭𑍇𑌦𑌾𑌨𑍍।
𑌰𑌂𑌜𑌯𑌤𑌿 𑌕𑌾𑌵𑍍𑌯𑌰𑌂𑌗𑍇 𑌨𑍃𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑍀 𑌤𑌦𑍍𑌵𑌿𑌦𑌾𑌂 𑌚𑍇𑌤𑌃 ॥
என்ற ஆரியையின் மொழிபெயர்ப்பு இது.

ண்டு மற்றவை செய்யுட்கண்ணே அணியாமென இக்காலத்தாசிரியர் நூல் செய்தாருமுளர். 'அவை ஒரு தலையாகச் செய்யுட்கு அணியென்று இலக்கணங் கூறப்படா...... .....?....................

அல்லதூஉம் பொருளதிகாரத்துப் பொருட்பகுதிகளெல்லாஞ் செய்யுட்கு அணியாகலான் அவை பாடலுட் பயின்றவை யெனப்பட்டன என்றதனான் அவையெல்லாந்தொகுத்து அணியெனக்கூறாது வேறு சிலவற்றை வரைந்து அணியெனக்கூறுதல் பயமில் கூற்றாமென்பது" என்றும், "இனி இரண்டு பொருளெண்ணியவற்றை வினைப்படுக்குங்கால் 'ஒருங்கு' என்பதோர் சொற்பெய்தல் செய்யுட்கு அணியென்ப. பிறவும் இன்னோரன்ன பலவுஞ் செய்யுட் கணியாமென்பது அவர் கருத்து. ஒருங்கே யென்பதேயன்றி மூன்று தாழிசையுண் மூன்று பொருள் கூறி 'எனவாங்கு' என்பதொரு சொல்லான் முடிந்தவழியும் எனவாங்கு என்பதோர்மொழி, எனவென்பது ஓரலங்காரமெனல் வேண்டுமாகலான் அவ்வாறு வரையறுத்துக் கூறலமையாதென்பது. பிறவும் அன்ன. இனி அவற்றைப் பொருளுறுப் பென்பதல்லது அணியென்பவாயிற் சாத்தனையுஞ் சாத்தனுலணியப்பட்ட முடியுந்தொடியு முதலாயவற்றையும் வேறு கண்டாற்போல அவ்வணியுஞ் செய்யுளின் வேறாகல் வேண்டுமென்பது" என்றும், "இனிச்செய்யுட் கணிசெய்யும் பொருட்படை எல்லாங் கூறாது சிலவே கூறி ஒழியின் அது குன்றக்கூறலாமென்பது" என்றும் அவர் கூறியிருத்தலால் உவமத்தினைத்தவிர்த்து வேறு சிலவற்றை அணியாகக் கொள்ளுதல் பயனின்றென்பது அவர் கருத்து.

தொல்காப்பியர் உவமமொன்றனையே ஓரியலாக்கி இலக்கணங் கூறினாராக, இவர்க்குப்பின் வந்த இலக்கண நூலாசிரியர்களின் கொள்கையைச் சிறிதாராய்வோம். சங்கத்தார் காலத்துத்தோன்றிய நூல்களுள் தொல்காப்பியத்தைத் தவிர்த்து அகப்பொருளைப்பற்றிய இறையனாரகப்பொருளும் புறப்பொருளைப்பற்றிய பன்னிரு படலமும் புறப்பொருள்வெண்பாமாலையும் போன்று அணியிலக்கணத்தைக் கூறும் நூல்கள் வேறு காணேம். யாப்பிலக்கண நூல்கள் அக்காலத்து வேறு சில தோன்றி வழங்கி வந்தன. இவற்றுட் சிலவற்றை யியற்றிய ஆசிரியர்கள் இன்னாரென்பது,

"தொல்காப் பியப்புலவர் தோன்ற விரித்துரைத்தார்
பல்காய னார்வகுத்துப் பன்னினார்—நல்யாப்புக்
கற்றார் மதிக்குங் கலைக்காக்கை பாடினியார்
சொற்றார்தந் நூலிற் றொகுத்து"

என்னும் வெண்பாவால் விளங்கும். தொல்காப்பியரைத் தவிர்த்து இங்குக்கூறிய பல்காயனார் காக்கைபாடினியா ரென்னு மிவர்களேயன்றி நத்தத்தனார் அவிநயனார் மயேச்சுரனார் என்ற ஆசிரியர்களும் யாப்பு நூல் யாத்தனரென்பது யாப்பருங்கலக்காரிகையி னுரையாலும் வீரசோழியயாப்புப் படலத்தினுரையாலும் இனிது புலப்படும். தொல்காப்பியர் காலத்தாயினும் அன்றி அவர் காலத்துக்குச் சிறிதுபின்னராயினும் அணியிலக்கணநூல் வேறு யாதொன்றும் இயற்றப்பட வில்லையென்றே கொள்ளல் வேண்டும். சங்கத்தார் காலத்துத்தோன்றிச் சிறிதுகாலம் வழங்கிவந்து பின் இறந்துபோன மிகப்பழைய நூல்கள்போன்று அலங்காரநூல்களும் முற்காலத்துச் சில தோன்றிப் பின்னிறந்தனவெனக் கருதலமையாதோ வெனின், அவ்வாறு கருதுதற்குச் சான்றுயாதும் காணப்படவில்லை. இக்காலத்து எங்கும் புலவர்களா லணிகளுக்கிலக்கணமா யெடுத்தாளப்பட்டு வருவதாகிய நூல் தண்டியலங்காரம். இந்நூலைத்தவிர்த்து மாறனலங்காரம் என்ற பிறிதோரலங்காரநூலுண்டு. தமிழின் ஐவகையிலக்கணங்களையும் ஒருங்கே முறைப்படுத்துக் கூறும் இலக்கண நூல்களும் சில உள. இவற்றுள் இலக்கண விளக்கம் முற்கூறப்பட்டது. இதுபோன்றதாகிய மற்றொரு நூல் வீரசோழியம். இவ்விரண்டனுள் இலக்கண விளக்கம் மிகப்பிற்காலத்தது. இதிலுள்ள அணியியல் பெரும்பான்மையும் தண்டியலங்காரத்தைத் தழுவி யெழுதப்பட்டிருக்கின்றது. வீரசோழியம் மிக முற்காலத்ததுமன்று மிகப்பிற்காலத்தது மன்று, இவ்விலக்கண நூல்தோன்றிய காலத்தைச் சிறிதாராய்வோம். இது வீரசோழன் காலத்தில் அவன்கீழ்ப்பொன்பற்றியூரிற் சிற்றரசு புரிந்த புத்தமித்திர அரசனால் எழுதப்பட்டு அவ்வீரசோழனது பெயர் * வகிக்கப்பெற்றிருக்கின்றது. இவ்வீரசோழனென்னும் அரசன் இன்னகாலத்தின னென்பதை நாம் ஆராய்ந் தறிவோமாயின் இந்த இலக்கண நூல் தோன்றிய காலத்தினை

---

* வீரசோழியப் பதிப்புரை.

185031

ஒருவாறு வரையறுத்துக் கூறல் இயலும். வீரசோழனென்றபெயர் இந்நூலாசிரியர் காலத்தரசுபுரிந்து வந்தசோழன் ஒருவன் மாத்திரமே கொண்டபெயரன்று. சோழர் பரம்பரையிலுள்ள வேறு சில வேந்தர்களும் இப்பெயர் வகித்திருந்தார்களென்பது விளங்குகின்றமையின், இஃது ஒரு சோழனுக்குரிய பெயரன்றென்பதும், சிறப்புப்பற்றிப் பலசோழர்களாற் புனையப்பட்டதென்பதும் புலப்படும். இஃது எங்ஙனமோவெனின், * முதற்பராந்தக சோழனுக்கும், கீழ்நாட்டுச் சாளுக்கியர் பாரம்பரையைச்சார்ந்த † ஒன்பதாம் விஷ்ணுவர்த்தனனென்னும் அரசனுக்கும் வீரசோழ னென்ற பெயருண்டு. இவர்கள் போலவே இந்நூல் தோன்றியகாலத்துச் சோழநாட்டில் ஆண்டுவந்த அரசனும் வீரசோழனென்னும் பெயரைப் பூண்டிருந்தனனென்பது தெளிவாய் விளங்குகின்றது. இவ்வரசனியற்பெயர் யாதோவெனின், வீரசோழியத்தின் சந்திப் படலத்துள்ள,

ஆவி யனைத்துங் கசத நபமவ் வரியும்வவ்வி
லேவிய வெட்டும்யவ் வாறுஞ் நான்குமெல் லாவுலகு
மேவிய வெண்குடைச் செம்பியன் வீரா சேந்திரன்றன்
நாவியல் செந்தமிட் சொல்லின் மொழிமுத னன்னுதலே.

என்னும் செய்யுளால் இச்சோழன் வீரராசேந்திர னென்னும் பெயரினன் என்பது புலப்படும். இவ்விடத்தன்றி அலங்காரப் படலத்து இவ்விலக்கண நூலினுரையாசிரியராகிய பெருந்தேவனார் எட்டாரைச் சக்கர மென்னுஞ் சித்திரக்கவிக்கிலக்கியங் காட்டியுள்ள செய்யுளை விளக்குமிடத்து "இதன் கணிரண்டாநேமியிற் கயிலகுலகரனு நான்காநேமியிற் காவேரிவல்லவனு மாறாநேமியிற் கண்ணுமுனையிவானு மெட்டாநேமியிற் கரிகாலனும் பத்தாநேமியில் விக்கிரமசோழனும் பன்னிரண்டாநேமியில் வளவ நாராயணனும் பதினாலாநேமியில் வீரராசேந்திரனும் பதினாறாநேமியிற் பரநிருபகாலனுமென எட்டுப்பெயரும் புலப்படும்" என்று கூறியிருத்தலின் இவ்வரசனுக்குப் பல பெயர்களுண்டென்பது நன்கு புலப்படும். மேலெடுத்துக்காட்டிய வீரசோழியச்செய்யுளிற் கூறியுள்ள வீராசேந்திரனே இங்குக்கூறப்பட்டிருக்கும் வீராசேந்திரனென்பதற்கு ஐயமில்லை. இவ்வுரையின்கண் * உள்ள

"விண்கூடல்சங்க மத்துடைந்த வெல்வடுக
ரெண்கூடலாறு மிருங்கானிற்—கண்கூடப்
பண்ணினான் றன்னுடைய பாதம் பணியாமைக்
கெண்ணினார் சேரு மிடம்"

"மின்னார் வடிவேற்கை வீரா சேந்திரன்றன்
பொன்னார் பதயுகளம் போற்றாது—கன்னாடர்
புன்கூடலசங்க மத்தினும் போருடைந்தார்
நன்கூடலசங்க மத்து."

என்றவெண்பாக்களால் இவ்வரசன் கூடலசங்கம் என்னுமிடத்து நடந்த போரில் வெற்றியடைந்தமை விளங்குகின்றது. இத்தேயத்தின் தென்னாட்டுச் சிலாசாதனங்கள் † இப்போரைப்பற்றிக் கூறும். ஆகலின் நூலாசிரியராகிய புத்தமித்திரரும் உரையாசிரியராகிய பெருந்தேவனாரும் ஒருகாலத்தினரென்பது புலப்படும். ஸ்ரீ: தாமோதரம் பிள்ளையவர்கள் தமிழுலகத்துக்கு மிகப்பயன்படுமாறு பதிப்பித்த வீரசோழியத்தின் பதிப்புரையில் 'உரையில் எடுத்துக்காட்டாகப் பல செய்யுட்களை விக்கிரமசோழன் மகன் மகனாகிய அநபமசோழனது புகழாகப்பாடிச் சேர்த்ததனால் உரையாசிரியரும் ஆசிரியரும் ஒரேகாலத்தினராயிருத்தல் வேண்டும். "உரையைக்கடனாவே நவின்றான்" என்றுரைச்சிறப்புப்பாயிரத்தார் கூறினமையால் அவர் புத்தமித்திரனார் மாணாக்கரிலொருவரென உத்தேசிப்பாரும் பலருண்டு'' ‡ எனக்கூறியிருத்தலால் அவர்கருத்து மிதுவேயாகின்றது. கொப்பமென்னுமிடத்தில் நடந்தபோரில் இராசேந்திரதேவனென்னும் சோழன் வெற்றியுறப்பொருதமை ஒரு சிலாசாதனம் $ கூறும். வீரசோழியத்தினுரையில் இப்போரைக்குறித்த செய்யுளொன்று இலக்கியமாகக் காட்டப்பட்டிருக்கின்றது. இச்செய்யுள்,

---

* Parantaka I. † VishnuvardhanaIX of the Eastern Chalukya Dynasty. Dr. Hultzsch's *South Indian inscriptions*. Vol. I. p. 32.

* அலங்காரப்படலவுரை—ப. 187. 8. † Dr Hultzsch's *South Indian Inscriptions* Vol II. Part II. Introduction to No 58 p-p. 229-232. ‡ வீரசோழியப்பதிப்புரை—ப. 24. $ Dr. Hultzsch's *South Indian Inscriptions* Vo.l I. p. 134, No. 127.

"துற்றுற் றன்றிவெம் போர்செய்த விற்கைப் பன்மன்முன் போடவோர் - தத்திற் றுன்றுவன்பாய்பரியுய்த்துத் தம்மைகொண்டோடிய, வெற்றுச்செம்பியன் பார்புகழ்கொற்ளுகக் கண்டன்வன் பாரதம்-வெற்புக்கொண்டுதிண் போர்புரி கொப்பத் தன்றெதிர்ந்தோர் பெறு, கொற்றத்தொங்கல்சிங் காதன மொற்றைச்சங்குவெண் சாமரை - குத்துப்பந்தர்முன் பாவிய முத்துப்பந்திமுன் றான்மகி, மொற்றைப் பெண்டிர்மண் டாரமொ டொற்றைத் தன்பெருஞ் சேனையு, மிட்டிட் டன்றுடைந் தான்வசைப் பட்டுக் கண்டவங் காரனே" * என்பது. கலிங்கத்துப்பரணி யிராசபாரம் பரியத்தும்இதைக்குறித்த

ஒருகளிற்றின்மேல் வருகளிற்றையொத்
துலகுயக்கொளப் பொருதுகொப்பையிற்
பொருகளத்திலே முடிகவித்தவன்
புவிகவிப்பதோர் குடைகவித்ததும். †

என்றசெய்யுளொன்றுண்டு. கோப்பத்தில் நடந்தபோரைக்கூறும் செய்யுளைப் பெருந்தேவனார் இலக்கியமாகக்காட்டியிருத்தலின் இவர் இராசேந்திர தேவன் காலத்தும் இருந்தனரெனக்கூறுதற்கிடமுண்டு. கி. பி. பதினொன்றாம் நூற்றாண்டின் பிற்பாகத்தும், பன்னிரண்டா நூற்றாண்டினுடைய முற்பாகத்திலும் அரசுபுரிந்துவந்த குலோத்துங்க சோழதேவனுக்கு ‡ முன்னாண்ட சோழர்களின் முறைமையின்னதெனச் சிலாசாதனங்களாலறியலாம். ஸ்ரீராசராசதேவன், இராசேந்திரசோழன், இராசேந்திரதேவன், வீரராசேந்திரதேவன் என்னுமிவ்வரசர்கள் $ குலோத்துங்கசோழதேவனுக்கு முன்னர் இங்குக்காட்டிய முறைப்படி ஆண்டுவந்தமை விளங்குகின்றது. வீரராசேந்திர தேவன் கி. பி. 1063-ஆம் ஆண்டின் பின்னரும் ஆண்டுவந்தமை ஒரு சிலாசாதனத்தாற் புலப்படுகின்றது.¶ ஆகலின் வீரசோழியமென்னுமிலக்கணநூலும் அதன் உரையும் கி. பி. பதினொன்றாம் நூற்றாண்டிலெழுதப்பட்டன வென்று கொள்ளல்வேண்டும்.

(தொடரும்.)

---

* வீரசோழியம், யாப்புப்படல உரை—செய்யுள் 34-ப. 136.

† கலிங்கத்துப்பரணி, இராசபாரம்பரியம்—27.

‡ கி. பி. 1064—1113. Dr. Hultzsch's *South Indian Inscriptions* இவ்வரசன் ஆண்டகாலம் சிறிது வேறுபட்டும் தோன்றும்.

$ Dr. Hultzsch's *South Indian Inscriptions* Vol. II, Part II, Introduction of No. 38.

p. 229 232.

DEPARTMENT OF AGRICULTURE, MADRAS.

விவசாயக் குறிப்புக்கள் *

I

விவசாய பாடசாலை.

ஜூன் மாதத்தில் விவசாய பாடசாலை கோயம்புத்தூரில் திறக்கப்பட்டது. சைதாப்பேட்டை விவசாய பாடசாலையில் மாணாக்கர்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுத்ததுபோல, கோயம்புத்தூர்ப் பாடசாலையில் கொடுக்கப்படாது. ஆனால் மாணாக்கர்கள் வசிக்கும் இடங்களுக்கும் அவர்களைப் படிப்பிப்பதற்கும் கட்டணமொன்றும் கட்டவேண்டியதில்லை. மாணாக்கர்கள் தங்கள்சாப்பாட்டுச்செலவைத் தாங்களே செய்துகொள்ளவேண்டியது. பிரவேசத்திற்கு அனேக விண்ணப்பங்கள் வந்தன. ஆனால், பாடசாலைத் தலைவர் 22 மாணாக்கர்களை மாத்திரம் சேர்த்துக்கொள்ளக்கூடியவரானார். இவர்களில் 14பேர் மெட்ரிகுலேஷன் பரீக்ஷையில் தேர்ந்தவர்கள். மீதி 8 பேர் பாடசாலைத்தலைவருடைய நற்சாட்சிப் பத்திரிகையினால் பரீக்ஷையில் தேர்ந்தவர்களாயிருக்கவேண்டுமென்னும் விதியிலிருந்து கவர்ன்மெண்டாரால் முக்கியமாய் நீக்கிவிடப்பட்டார்கள். மாணாக்கர்களை விவசாய பாடசாலைக்குப் பொறுக்கும்போது பாடசாலைத் தலைவருடைய முக்கியகருத்து என்னவென்றால், பயிராளிகளுடையவும் விசேஷ நிலங்களை உடையவர்களுடையவும் பிள்ளைகளுக்குப் பண்ணையில் உயர்ந்த விவசாயத் தொழில்களைக் கற்பித்து அத்தொழில்களைத் தங்களுடைய நிலங்களில் உபயோகப்படுத்தும்படி செய்வது. ஒவ்வொரு மாணாக்கனும் தானே நிலத்தை உழுது, விதைவிதைத்து, கிருஷிகளைப்போல் ஒவ்வொருநாளும் செய்யவேண்டிய வேலைகளையெல்லாம் செய்துவரவேண்டும். அப்படிச் செய்வதினால் அவன் பிறகு தன்குடியானவர்களுக்கும் கூலிக்காரர்களுக்கும் கற்பிக்கக்கூடியவனாவான். இந்தக்காரணம்பற்றியே தேகசவுக்கியமும் பலமுமுள்ளமாணாக்கர்களைப் பாடசாலையில் சேர்க்கிறார்கள்.

---

* இவை சென்னை "விவசாயடிபார்ட்மெண்"டாரிடமிருந்து, பத்திரிகையில் வெளியிடும்படி எமக்கு அனுப்பப்பட்டவை. ப - ர்.

*

மாணாக்கர்கள் வசிப்பதற்காக ஒவ்வொரு வீட்டிலும் ஆறுமாணாக்கர்கள் வசிக்கும்படியான பத்து வீடுகளைக் கட்டும்படி சர்க்கார் உத்திரவு செய்திருக்கிறார்கள். ஆகையால், எல்லாவித ஜாதி மாணாக்கர்களுக்கும் தாங்கள்வசிப்பதற்குத் தகுந்த இடமுண்டு.

II

நெல்விதை விதைத்தல்,

அநேக இடங்களில் இப்போது சம்பாப்பயிருக்காக நாற்றுப் பயிரிடுவார்கள். திருநெல்வேலி ஜில்லாவில் நாற்றுக்காக ஒவ்வோர் ஏகராவுக்கு 60 - பட்டணம்படி நெல்விதை விதைக்கிறார்கள். மற்றத் தமிழ் ஜில்லாக்களில் ஓர் ஏகராவுக்கு 30 முதல் 40 பட்டணம்படி நெல்விதை விதைக்கிறார்கள். கிருஷ்ணா ஜில்லாவில் 5 அல்லது 6 பட்டணம்படி மாத்திரம் விதைக்கிறார்கள். கிருஷ்ணா ஜில்லாவில் வளரும் பயிர்கள் இதர ஜில்லாக்களில் வளரும் பயிர்களைப்போல நன்றாயிருக்கிறபடியால், திருநெல்வேலிஜில்லாவிலும் இதர தமிழ்ஜில்லாக்களிலும் விதைகள் அதிகமாய் வீணாக்கப்படுகின்றனவென்பது தெளிவாயிருக்கிறது. இப்படி வீணாக்கப்பட்ட விதையினால் அநேக ஜனங்களைப் போஷிக்கலாம்.

கிருஷ்ணா ஜில்லாவில் ஏன் கொஞ்சவிதை விதைக்கிறார்களென்றால் அவ்விடத்தில் நாற்றங்காலுக்கு நல்ல எருப்போட்டு விதைகளை அதிக நெருக்கமாயில்லாமல் தூரமாய் நடுகிறார்கள். இப்படிச் செய்வதால் பயிர்கள் பெரிதாய் வளர்கின்றன. நாற்று நடும்போது ஒரு துளையில் ஒரு செடியை நடுகிறார்கள், வளர்வதற்கு வேண்டிய இடமிருப்பதால் நாற்றிலிருந்து அநேக பக்கக்கிளைகள் உண்டாகின்றன. நெருக்கமாய் நடப்பட்ட பத்துச்செடிகளைப் பார்க்கிலும் அதிகக் கதிர்களை இக்கிளைகளெல்லாம் சேர்ந்துவிடுகின்றன. ஏனென்றால் இந்தப் பத்துச்செடிகளுக்கும் வளர இடமில்லை. அவைகள் ஆகாரமின்மையால் இளைத்துப்போயின. அது எப்படியென்றால் ஒரு கால்நடைக்குவேண்டிய புல்மேயும் நிலத்தில் அநேக மாடுகளை மேய்த்தால் அவைகள் இளைத்துவிடுவதுபோலப் பயிர்களும் இளைத்துப்போம். இதற்கு திருஷ்டாந்தமாகக் கோயம்புத்தூரிலிருக்கும் சர்க்கார்பண்ணையில் ஒரே நாற்று நட்டிருக்கும் செடியிலிருந்து உண்டாகும் ஐம்பது பக்கக்கிளைகள் எண்ணப்பட்டன.

தென் ஆர்க்காடு ஜில்லாவில் சிதம்பரத்துக்கு அருகிலேயிருக்கும் வீரசோழத்தில் ஒரு புத்தியுள்ள பயிர்க்குடியானவன் இந்தச் சங்கதியை தானே தெரிந்துகொண்டு ஓர் ஏகராவுக்கு 2½ பட்டணம்படி விதைமாத்திரம் உபயோகப்படுத்தி அவனுக்குப் பக்கத்திலிருக்கிற பயிராளிகளைவிட அதிகக் கண்டுமுதலை அடைகிறான்.

ஒவ்வொரு பயிராளியும் தன்னுடைய நிலத்தில் ஒரு துண்டில் இந்தவிஷயத்தை தானே சோதித்துப் பார்க்கவேண்டும். நாற்றங்காலில் ஒரு மூலையில் கொஞ்சம் விதைகளைத் தனித்தனியாய் விதைத்து நன்றாய் எருப்போட்டு ஒருமாசத்துக்கு அதிகப்படாமல் வளரவைத்துப் பிறகு நாற்றை நடவேண்டும். இந்த நாற்றுகளுக்கு வளர அதிகஇடமிருப்பதால் அவைகள் சீக்கிரம் வளர்ந்து ஒரு மாதத்தில் அவைகளைப் பிடுங்குவதற்குப் பக்குவமாய்ப் பெரிதாய் வளர்ந்திருக்கும். நாற்று நடும்போது பூமி வளமாயிருந்தால் ஒவ்வொரு செடியும் ஒரு சாண் தூரத்தில் நடவேண்டும். பூமி வளமாயில்லாவிட்டால் ஒவ்வொரு செடியும் அரைச் சாண் தூரத்தில் நடவேண்டும். கொஞ்சநாளைக்குப் பூமியில் நீர் அதிக ஆழமாயிருக்கும்படி செய்யக்கூடாது. முக்கியமாய்க் கவனிக்கவேண்டிய விஷயங்கள் வேறே கிடையா. முதலில் செடிகள் மிகவும் எளிமையாயிருக்கும். ஆனால் இரண்டு மாதத்தில் அநேக பக்கக்கிளைகள் உண்டாகி வழக்கத்தைப்போல நடவுநட்டதுபோற் புலமுழுதும் அடர்ந்த பயிர்களாயிருக்கும். அறுப்புக்காலத்தில் இந்தச் செடிகள் அதிக தானியங்களைக் கொடுப்பதாகத் தெரியவரும். மேலும் தானியங்கள் சாதாரணமாய்ப் பயிரிட்டுவரும் தானியங்களைவிடப் பெரிதாயும் பளுவாயுமிருக்கும்.

III

சென்னை இராஜதானியின் அநேக இடங்களில் பயிரிடும் குடிகள் தங்களுடைய நன்செய் நிலங்களை எருவிடுவதற்காகப் பச்சை இலைகளையும் கொழுஞ்சி இலைகளையும் சேகரித்துக் கட்டைவண்டி, ரெயில்வண்டிமூலமாய் அதிகப் பணம் செலவுசெய்து கொண்டுபோகிறார்கள். இவ்விதமாக அதிகப்பணம் செலவுசெய்கிறதைவிட மிகவும் சுலபமான வழியிருக்கிறது. அதாவது பச்சைஎருவை நன்

செய்நிலங்களிலேயே பயிரிடுவது. அப்படிப் பயிரிடுவதால் எருவை நிலங்களுக்குக் கொண்டுபோவதற்கு வேண்டிய செலவு மீந்துவிடும்.

அடியிற்கண்ட குறிப்புக்கள் கும்பகோணத்திலும் பிரம்பலூரிலும், பச்சை யெருவை நன்செய்நிலங்களிலேயே பயிரிடுவதற்கு என்னசெய்கிறார்களென்று சுருக்கமாய்க் காண்பிக்கும்.

கும்பகோணம் விவசாயசங்கத்தின் பண்ணையில் தழை எருவுக்கென்று பயிரிடப்பட்ட சடம்பு (சணல்) பயிரின் குறிப்பு.

கும்பகோணம் விவசாய சங்கத்தார் இந்தவருஷத்தில் ஜனங்களுக்கு அனுபோகத்தில் ரூபிக்க, தங்களுடைய சங்கத்தின்பண்ணையிற் பயிர்செய்த சடம்புப் (சணல்) பயிர், தஞ்சாவூர் ஜில்லாவில் விவசாயம்செய்யும் ஒவ்வொருவருக்கும் நிரம்பவும் உபகாரப்படத்தக்கது. ஜூன்மீ மத்தியில் காலில் ஜலம்வந்தவுடன் வயல்களில் தண்ணீரைப்பாய்ச்சி, உழுது, ஏகர்ஒன்றுக்கு சுமார் 6 (ஆறு) பட்டணம்படி விதை தெளிக்கப்பட்டது. ஆகஸ்டுமீ 22உயில் மேற்சொன்ன பயிரைப் பார்க்கும்பொழுது அது சுமார் 3 அடி (இரண்டு முழம்) உயரம்வளர்ந்திருந்தது. நெல் சாகுபடி செய்யுமுன் இதை நிலத்தில் தழை எருவுக்கென்று அப்பால் உழப்பட்டது. இந்தநிலத்திற்கு வேறுகுப்பை யெரு முதலானவை போடாமல் இந்தப்பயிரையே உழுது மக்கவைத்திருப்பதின் மாசூல், எப்படிக் காணுமென்று ஆவலுடனும் சிரத்தையுடனும் எதிர்பார்க்கலாம். இப்படித் தழைப்பயிர்செய்து அதை உழுது எருவாக உபயோகிப்பதில் விதைச்செலவேதவிர வேறொன்றுமில்லை. பயிருண்டாக்க உழவு முதலானவைகளில் செலவாகுமென்று சிலர் ஆக்ஷேபணைசொல்லலாம். ஆனால் நெல் சாகுபடிசெய்யும் நிலங்கள் ஆகஸ்டுமாதத்தில் முதன்முதல் உழவாவது வழக்கம். அப்படிக்கில்லாமல் தழைப்பயிர் செய்ய பிரயத்தனஞ்செய்யும்போது காலில் ஜலம் வந்தவுடன் ஜூன் மாதத்தில் முதல் உழவு போடப்படுகிறது. ஆகவே பின்னால் செய்யப்பட்ட உழவு முன்னால் செய்யப்படுவதால், உழவுச்செலவு அதிகம் இதனாலாகிறதென்று சொல்ல மார்க்கமில்லை.

திருச்சிராப்பள்ளி ஜில்லா பிரம்பலூர்த்தாலூகாவில் தழை எருவுக்கென்று பயிரிடப்பட்ட அவுரிப்பயிரின் வரலாறு.

பிரம்பலூர்த் தாலூக்காவில் அவுரிப்பயிரானது சாயத்திற்கென்று அனேக வருஷங்களாய்ப் பயிரிடப்பட்டுவந்தது. ஆனால் அவுரி மருந்தின் (நீலத்தின்) விலை சகாயமானது. கொஞ்சகாலமாய் இந்தப் பயிரானது தழை எருவுக்கென்று சாகுபடி செய்யப்பட்டுவருகிறது. கிருஷிகளுக்குத் தழை யெரு சுலபமாய் அகப்படமார்க்கமில்லாததினாலும் தழை யெருவை உபயோகிப்பதின் குணம் சிலாக்கியமானதென்று குடியானவர்களுக்குத் தெரிந்து எல்லாரும் அதை உபயோகிப்பதால் அதிகத் தழையெரு அகப்பட மார்க்கமில்லாமையினாலும், இந்த அவுரிப்பயிரை இந்தத் தாலூக்காவில் தழை யெருவுக்கென்று பயிர்செய்கிறார்கள். பிரம்பலூர்த் தாலூக்காவின் மேற்குபாகத்திலிருப்பவர்கள் தங்களுடைய சொந்த சாப்பாட்டு உபயோகத்திற்காக நன்செய் நிலங்களிலும், கிணற்று இறைவை நிலங்களிலும், கேழ்வரகு கம்பு முதலான பயிர்களைச்சாகுபடி செய்கிறார்கள். தங்களுக்கு நேரிடும் ரொக்கப்பணச்செலவுகளுக்காக நெல்லும் சாகுபடி செய்கிறார்கள். ஆகவே கிணறுகளிருக்கும் ஒவ்வொருவரும் நெல் அவசியமாய்ச்சாகுபடி செய்துவருகிறார்கள். அந்தப்பிரகாரமே நன்செய் சாகுபடி செய்யும் குடியானவர்கள் ஒவ்வொருவரும் கிணறுகள் தங்கள் நிலங்களில் வெட்டியிருக்கிறார்கள். அப்படிக்கில்லாவிட்டாலும் கிணறு வெட்டவேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். ஆகையால் நன்செய் நிலங்களும் கிணற்றுப்பாய்ச்சல் நிலங்களும் எப்போதும் பயிரிடப்பட்டுக்கொண்டு இருக்கலாகின்றன.

மேற்சொன்ன நிலங்களில் தாள்மாற்றி (பயிர்மாற்றி) சாகுபடி செய்யும் வழக்கமுமிருக்கிறது. இவ்விடத்தில் சாதாரணமாய்க் கையாடிவரும் பின்குறித்த தாள்மாறிப்பயிரிடுதல் மிக்க சிலாக்கியமானதாக இருக்கிறது. அதாவது மார்ச்சு, ஏப்பிரல் மாதங்களில் கோடைக்கம்பு கிணற்றிறைவைப் பயிராகச்சாகுபடி செய்யப்படுகிறது. இதனுடன் ஏக்கர் ஒன்றுக்கு சுமார் 3-பட்டணம்படி அவுரிவிதையும் கலந்து தெளிக்கப்படுகிறது. கம்புப்பயிர் ஜூலைமாதத்துக்கடை

சிக்கு முன் அறுவடையாகிவிடும். அப்பால் அதில் விதைத்திருக்கும் அவுரிப்பயிரை ஆகஸ்டு, ஸெப்டம்பர் மாதம்வரை வளரும்படி செய்து அப்பால் அதைச் சேற்றில் சடைச்சம்பா நெல் நடுமுன் உழுது மக்கவைக்கிறார்கள்.* அடுத்த வருஷத்தில் நெல்லுக்குப் பின்னால், இந்தக் கம்பும் அவுரியுமே விதைக்கிறார்கள். இல்லாவிட்டால் கரும்பு சாகுபடி செய்கிறார்கள். மேற்சொன்ன கம்புப் பயிரும், கரும்புப்பயிரும் செய்யாவிட்டால் கேழ்வரகு நடுகிறார்கள். இதற்கு மாட்டுச்சாணம் குப்பை முதலாகிய எருக்கள் போடுகிறார்கள். இது அறுவடைசெய்தபின் காட்டுத்தழை எருவிட்டுச் சேற்றில் சடைச்சம்பாநெல் சாகுபடி செய்கிறார்கள்.

மேற்சொன்னபிரகாரம் அவுரித்தழை பசுந்தாள்எருவுக்காக பயிரிடச்செலவு 3-பட்டணம்படியேதவிர வேறில்லை. ஆகையால் இவ்விதமான கிணற்று இறைவைப்பயிர்களும் நீர்ப்பாய்ச்சும் சாதனமும் உள்ள எல்லாஜில்லாக்களிலும் மேற்சொன்னபிரகாரம் தழையெரு சுலபமாய்ச் செய்யக்கூடும்.

(தொடரும்)

உ

பெரியபுராண அரும்பத விளக்கம்.

[பழைய ஏட்டினின்று எடுக்கப்பட்டது.]

(முற்றொடர்ச்சி.)

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் புராணம்.

(சுச) அப்பொழுது திருத்தோணியில் வீற்றிருந்த சிவபெருமான் கிருபாநோக்கத்தால் பழையநிலைமையையுடைய திருத்தொண்டை நினைந்து.

(சுரு) வேதநூலை அறிந்த சிவபாதவிருதயருக்கும் பகவதியாருக்குங் கொடுத்த மிகுந்தவரத்தை நினைந்தோ தம்முடைய பெருமையான பாதங்களை விரும்பும் ஒருப்பாட்டான வழியில்வருகின்ற ஞானத்தைக்கொடுப்பதற்கு உடனிருந்த அரியவேதங்களை ஆளுகின்ற உமையைக் கொடுத்தருளுமாறு கட்டளையிட்டருளுவார்.

(சுஅ) உமாதேவியார் மதித்தற்கரிய சிவஞானமாகிய இனிய அமுதத்தைக் குழைத்து எதிரேபார்க்குங் கண்ணிலுள்ள நீரைத் துடைத்துக் கையிலே பொற்கிண்ணத்தைக் கொடுத்து அடிசிலை உண்ணென்று ஊட்ட, சிவபெருமான் பிள்ளையாரை அழுகைதீர்த்துக் கருணைபுரிந்தார்.

(எ0) பிறவியறும்படி நீக்கும் உரிமையோடுயர்ந்த ஞானமாகிய சிவனுடைய பாதங்களையே தியானிக்கும் அருட்செல்வம் பெருகும் சிவஞானத்தையும், உவமையில்லாத கலைஞானத்தாலுண்டாகின்ற உணர்தற்கரிய மெய்ஞ்ஞானத்தையும் தவமுதல்வராகிய திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் அப்பொழுதே அறிந்தார். பரஞானம், அபரஞானமிரண்டையும் ஒருங்கே அறிந்தார் என்பது கருத்து.

(எக) எப்பொருளையுமுண்டாக்குவோன் சிவனே என்னு முணர்வையும், அப்பொருளையாளுவோர் சிவனடியார்களென்னு மறிவையும், இப்படியாகின்ற இதுவன்றித் தம்முடைய இசைவைக்கொண்டே இயல்கின்ற அநுபவமில்லாதவர்களுடைய துணிவுகள் துகளாம்வண்ணம் எண்ணி எழுந்தார். உணர்வையும் அறிவையுஞ்சூழ்ந்தெழுந்தாரென முடிக்க.

(எரு) "எல்லையிலா மறைமுதன் மெய்யுடனெடுத்த வெழுதுமறை; மல்லனெடுந்தமிழால்"—எல்லையற்ற வேதத்தின் முதலிலுள்ள பிரணவத்தைத் தகரமெய்யோடு புணர்த்தெடுத்த எழுது மறையாகிய வளவிய நெடியதமிழ்வேதமாகிய பதிகத்தால். தகரமெய்யோடு பிரணவத்தைப் புணர்த்தால், தோ - எனவரும். பிரணவம்-ஓ; மெய் - த். இரண்டையும் புணர்த்தால் அது, தோ - எனவரும்.

(எஎ) நிலவுலகில் வாழ்வோர் குற்றஞ்செய்தாலும், வந்தடைந்தால் சிவனுடைய பெருங்கருணை அங்கீகரிக்குமெனக்காட்டற்கு எண்ணமில்லாத வலிய இராவணன் கைலையை எடுத்து முறிந்து இசைபாட, சிவனுக்கருள் புரிந்த அக்கப்பாட்டை வைத்து எட்டாந் திருப்பாட்டாலும்.

(எஅ) வணங்குபவர்க்கே சிவபெருமானருள்வதெனத் தொழாராய் வழுவான மானத்தினாலே மயக்கத்தையடைந்த விட்டுணுவும் பிரமாவும் இழிவான பன்றியு மன்னமுமாய்ச் சென்று அடையாமையால் விழுபவர்கள் பஞ்சாக்ஷரங்களையுந் துதிசெய்துய்ந்ததிறத்தை ஒன்பதாந்திருப்பாட்டிலும் அமைத்தார்.

(எகூ) எம்பெருமானாகிய சம்பந்தநாயனார், வேதகாரணராகிய பாலசந்திரன் சேர்ந்த சிவந்த சடையையுடைய சிவபெருமானது மார்க்கத்தை அறிந்துய்யாராய்த் தம்மிலே நன்கு மதிக்கும் ஞானமில்லாதவர்களாகிய சமணர்கள் புத்தர்களுடைய மார்க்கங்கள் பழிக்கப்படும் ஏதத்தை ஆக்குமென்பதைப் பத்தாந்திருப்பாட்டிலருளிச் செய்தார்.

(அ0) இருக்குமொழி—வேதமொழி: தேவாரம்.

(அஉ) வேதங்கள் கிளர்ந்து ஒலிவளரும்படி முழங்கிட, தேவர்களானோர் தங்களுடைய அழகுநிறைந்த முடி ஒழுங்கான மணிசிந்தும்படி நெடிய வானத்துறையென வந்துலகமுழுவது நிறைய, நீங்காத மெய்ம்மையுடைய பொறை பெருகுகின்ற தவத்தையுடைய முனிவரென்கிற கடல் பக்கத்தே சூழ.

(அங) அணையும்படி வந்தெழுகின்ற அறிவு தொடங்கிய அடியாரிடத்தே உவமையில்லாத பிறவி கிளர்கின்றகடலைக்கடக்க இரண்டு தாளாகியதெப்பத்தை அவர்களுக்குக் கொடுக்கின்ற சிவபிரான் பொருகின்ற இடபத்தில் தங்கிய பொருந்திய பாகத்திலுள்ள துணையோடு வேதந்தொடர்ந்த திருத்தோணியை அடைந்தார்.

(அச) கண்வழியே சென்ற கருத்துவிடாது கலந்து செல்ல.

(அரு) மாறுவிழுந்த— அடிக்கும்படி எடுத்தகோல் வழுவித்தானே வீழ்ந்த. வெருட்சி வியப்பு - அச்சத்தோடுகூடிய வியப்பு.

(கூங) புண்ணியமுதலே, அணிந்த அழகிய அரைஞாணோடு போகின்ற கண்ணிற்கு நிறைந்த சூரியனே, இளம்பிறையே. மூன்று வருடமாகிய பவத்தே.

(கூச) நிரந்தபோது - பரந்தபோது. பியல் - பிடர்.

(கூரு) அந்தணர்குழாத்தோடு நிரம்பிய பல தொண்டர் கூட்டம் பக்கத்தே சூழ்ந்து, தாம் உத்தரியப்புடைவையை ஒப்பற்ற ஆகாயத்திலெறிந் தாரவாரிக்குந் தன்மையால், அத்தனையை பொலிந்தவீதி, சிவானந்தப்பெருக்கையுடைய ஆறு போக அதன்மேற்பொங்கும் அழகிய நுரைக்குமிழி வந்திறங்குதலைப்போல விளங்குகின்ற காட்சியினையுடைத்தாகும்.

(கூஅ) நிலத்தேவராகிய பிராமணர்களுடைய மாளிகையின் மேல்.

(கூகூ) நாம நெடுங்கதிர் - இராக்காலத்துக்கு அச்சத்தைக்கொடுக்குஞ் சூரியன்.

(க00) போத - மிக.

(க0உ) ஒத்தறுத்தல் - தாளந்தட்டுதல்.

(க0அ) தாயாராகிய பகவதியார் முன்னரே வந்து பிறக்க.

(ககக) சங்கின்வடிவமாகத் தருகின்ற முறைமையுடைய ஒழுங்கான அக்கோயிலை.

(கஉ0) 'கொடியுடை' - "கொடியுடை" என்பதை முதலாகவுடைய.

(கஉசா) "கண்காட்டுநுதலான்" என்பதை முதலாகவுடைய; திரிபுரத்தை அழித்த சிவபெருமானுடைய பாதங்களைச் சேரற்கு வழியாகிய திருமுக்குளத்தையும்பாடி.

(கஉஎ) தருக்கள் மலிந்த சீகாழியில வந்து.

(கஉஅ) தூய ஆணியாம் - சுத்தமாகிய ஆணியாகும்.

(கஙக) வணங்கத்தரு நீர்மையையுடைய.

(கஙரு) தானநிலையிலே கருவியை வசப்படுத்தி ஆரோகண அவரோகண முறைமைத்தகுதியால். கோல் - யாழ்வாசிக்குங் கருவி. அங்கணர் தம்பாணியினை - சிவபெருமானுடைய பதிகத்தை.

(கஙசா) யாழிலெழுமொலியோடு இருவர்மிடற்றொலி பொருந்தி வாழ்வையுடைய திருத்தோணியில் வீற்றிருக்கின்ற சிவபெருமான் மாட்டணையும் மாட்சியைப்பார்த்துத் தங்குகின்ற இருசிறகையுடைய பறவை படிந்தன.

(௧௪௩) புள்ளிபொருந்திய மான்றோலையுடையாகவுடையவரை; புலித்தோல் எனினும் பொருந்தும்.

(௧௪௬) வண்டொலித்தெழுகின்ற செழுமையாகிய மலர் மலையையும், இரத்தினத்தையும் முத்தையுங் கொழித்துச் சோலையின் பலவளத்தோடும் வருகின்ற நீரானது படிந்து சிவந்த பாதங்களிலே தாழ, தெளிந்ததிரையுடைய கடலினது பவளத்தையுஞ் சங்கையுஞ் செழுமையாகிய இரத்தினக்குலவகைகளையும் முத்தையுங் கொண்டொலித்துப் பாய்கின்ற திரை எதிர்கொள்ளக் கொள்ளிடத்தைக்கடந்தேறி.

(௧௪௮) நீரையுடைய தடாகம், தங்குகின்ற புட்களினொலியாகிய வாழ்த்துரையெடுத்து, முதன்மைபொருந்திய தேன் செறிந்த தாமரையாகிய வாசனைபொருந்திய பொலிவான சிவந்த முகையாகிய கையைக்குவித்து அலர்முகங் காட்டின.

(௧௪௯) மலர்களையுடையசோலை, தோகையையுடைய மிருதுவான மயிற்கூட்டம் மகிழ்ந்தழைக்கப், புதிய மணத்தையுடைய குளிர்ந்த வாயுவந்துலாவி முன்னரே வணங்கி எதிர்கொள்ளக் கிளர்ந்தெழுந்துடனே வருகின்ற வண்டொலிக்க, சிவந்த தளிரினொளி நிறம் விளங்க இருகுழை பக்கத்தேயாட, மலர்முகங்கள் பொலிந்தசைய, மிருதுவான கொம்பர் நின்றாடுவன. பெண்களுக் கிசையக் கூறுங்கால், கலவம் என்பதற்குக் கலவமென்னும் ஆபரணமென்றும், சுருப்பு என்பதற்கு வளையல் என்றும், செந்தளிரொளி நிறம் என்பதற்குச் செந்தளிர்போன்ற ஒளிபொருந்திய உடம்பினிறமென்றும், குழைஎன்பதற்குக் குண்டலமென்றும், மலர்முகமென்பதற்குத் தாமரைமலர்போன்ற முகமெனவுங் கொள்க.

(௧௫௦) விசாலித்த மருதநிலத்திற் பொருந்திய வயலிலுள்ள நெற்கள் குளிர்ந்த தென்றலால் நறிய மலரிலுள்ள நுண்ணியதுகளை வீசி.

(௧௫௧) பலகண் பெறுந்தன்மையால்; கண் - வரை.

(௧௫௨) புகைப்பரப்பால் நெடியவானம் உயர்ந்த நீலநிறம்பொருந்திய நுண்ணிய புடைவையால் விதானித்தது போன்றது.

(௧௫௫) சோபனவாக்கம் -சோபனத்தைத்தருகின்ற ஆக்கம்.

(௧௫௬) ஆவணமறுகு - கடைவீதி.

(௧௫௭) மலர்ந்த பேரொளி குளிர, சிவமணங்கமழ்ந்து, மிகுந்ததுகள்மாறி.

(௧௬௧) அறிவில் நேர்பெறுதற்கு அரிய சிவயோகத்தை நீக்கமின்றி உடம்பிலுள்ள பஞ்சப்பொறியளவினும் எளிவரும்படி அருளினீர், எனத்துதித்து.

(௧௬௩) தேவநாயகருடைய கூத்தை மிகவெளியே தரிசித்து. காலம்பெற - காலத்திலே ஞானத்தைப் பெற.

(௧௭௧) ஐயரே நீர் வர; செய்தவாறென்னை என்று.

(௧௮௩) ‘முத்தாறொடு’ என்பதனைத் தொடுத்த பாமாலையை.

(௧௮௫) பெருவரத்தினிற் பெற்றவர் - சிவபாத விருதயர்.

(௧௮௭) தாமரை - எழுவாய்.

(௧௮௯) பாசமற்றிலராயினும் பூமியில் ஆசை சிவனுக்கான தன்மையால் ஒளிமிக்க திருவுருவத்தையுடைய பிள்ளையார். மற்று அசை. இவ்வாறன்றி ஆசைபிறிதிலராயினும் எனினுமமையும்.

(௧௯௩) பேணுவார் வினையாலணையும் பெயர்.

(௧௯௫) விபூதியைமகிழ்ந்த மலரகிதர் ஏறற்குப்பல்லக்கு, நிழற்றக்குடை, திருநாமங்களைக்கூறி ஊத அழகிய சின்னங்கள், உவமையில்லாத முத்தின்றன்மையால் மன்னியவற்றை.

(௧௯௬) குலமறைதேடு சேவடிதோன்ற - சிவபிரான் கூட்டமானவேதங்கள் தேடுகின்ற சிவந்த பாதங்கள் தோன்ற.

(௧௯௮) அந்தணாளரானோர்.

(௧௯௯) அருளானது அடியாரோடு கோயிலிலுள்ளார்க்குமுண்டாக.

(௨௦௧) சந்திரன்போலும் நீர்மையையுடைய.

(௨௦௮) மாலையையுடைய யாமம் புலர்வுறுகின்ற வைகறையில்.

(உகஉ) பன்றுளார் அருள் சேர்ந்ததென்று.

(உகச)மெய்ம்மையைப் போற்றி விடாவிருப்பால் தம்மைத் தியாணிக்குந்தன்மையைத் தந்தாள்வோர் செப்பமான முத்துச்சிவிகை தான் எம்மையாளாக உவப்போனின்று தந்தது.

(உகஅ) ஆதாரமாய் ஆர்க்கப்பட்ட ஒப்பற்ற கருணையிற்றொடக்குண்டவாகிய முத்து விளையுமிருந்த கிரணங்களுடைய.

(உஉக) மாற்றுயர்ந்த பொன்னாலலங்கரிக்கப்பட்ட. சைவமாமறைத்தலைவர் -சிவாகமங்களை அருளிச்செய்த சிவபெருமான்.

(உஉஉ) உமையம்மையை, முற்றுமானவளென்றது.

உஉஎ) திருமேனியிற் சொரிந்திழி கண்ணீரிலாடினார்.

(உஙஉ) கதிர்செய்வான் - சூரியன் உதிக்கும் வானிற்கலப்ப. பூமியைக் கைம்மாறின்றிக் காக்க வந்தருளிய திருஞான சம்பந்தப் பிள்ளையார்.

(உஙங) வயிரின்குறை - வயிராகிய குறை.

(உசச) சிவபெருமான் சடையினுள்ள சுத்தமான மாலையை மூன் சூட்டின சண்டேசுர நாயனார் உரிமையோடு வரும்பதி என்று.

(உசரு) பெருமையையுடைய அந்தணர்கள் அழகிய திருஞானசம்பந்தப்பிள்ளையார் எழுந்தருளத் தங்களுடைய பிள்ளையாராகிய சண்டேசுர நாயனார் அழகிய பதியில் வந்தருளக்கண்டாராகும் மகிழ்வோடு.

(உசஅ) பாதகப் பயன் பெறும் - பாதகத்தாற் பயனைப் பெறும்.

(உருச) பைப்பணியவர் - படம் பொருந்திய சர்ப்பத்தை ஆபரணமாகவுடையவர்.

(உருசு) கண் - கணு.

(உருஅ) வாரணங்கு - கச்சிற்குத் துன்பத்தைச் செய்யும்.

(உசுஉ) முதலாயுள்ளவற்றை.

(உசுங) ஒல்லைமுறை - பழையமுறைப்படி. தோலோடு தாங்கினார் - மூஞ்சிமான்றோலோடு யஞ்ஞோபவீதத்தைத் தாங்கினவர்.

(உசுஅ) பந்து வந்தணைகின்ற மெல்லியவிரலையுடையாளும்.

(உசுகூ) வாக்கின் பெருவிறன்மன்னவர் - வாசீகர். நல்வினை ஆக்கியபேறென்று.

(உஎ0) மனத்தினிடையறுவன்பும் திருமேனியிலசைகின்ற கந்தையும் மிகை என்கின்ற கருத்தும்.

(உஎச) புகலிப்பிரானானவர் உடன்பாட்டோடும் பின்னாகவர.

(உஎரு) நிறைந்தவெள்ளமாகிய வேதத்திலே திருத்தோணியில் வீற்றிருந்தவரை. தூக்கின் - யாப்பினால்.

(உஅசு) சம்பாதி, சடாயுவென்னும் பட்சிராசர் வணங்கி.

(உஅகூ) பருத்த யானையை யுரித்தவர்.

(ஙOக) புலனைந்தும் பொறி கலங்குமிடத்தஞ்சற்க என்பாருடைய ஐயாறென்று.

(ஙOசு) "அங்கையாரழல்" என்று முதலிலெடுத்து, மங்கை வாழ் பாகத்தார் மழபாடி தலையினால் வணங்குவார்கள், பொங்கு மாதவமுடையாரெனப்பாடி வணங்கி.

(ஙOஎ) வயிரமணித்தூணமர்ந்து மகிழ் - வச்சிரத்தம்பநாயகர் விரும்பி மகிழ்கின்ற.

(ஙகO) செந்தாமரையின் முறுக்கவிழ.

(ஙகக) அந்நகரிலுள்ள கொல்லி மழவனானவன் தான் பெற்ற பெறற்கரிய அமுதம்போன்ற மென்சொல்லையுடைய கன்னிகையாகிய இளமடப்பிணையாகும், விரும்பத்தக்க அழகிய கொழுந்தினுடைய ஒளிபொருந்திய உடம்பில் நிலையான பெருவியாதியாகும் முயலகன் வந்தடைய உடம்பு வருத்தத்தைப் பொருந்தி.

(ஙகஉ) வேறொரு தன்மையாற் றவிராததாக, சிவபெருமானுடைய பாதங்களைப்பற்றியே வருங்குலத்துப்பான்மையினாதலினால் வருத்தந்தீர.

(ஙகச) நாட்டும் - நாட்டுங்கள். ஏத்தும் - ஏத்துங்கள்.

(ஙகஅ) பாச்சின்மேய - திருப்பாச்சிலாச்சிரமத்தின் மேய.

(ஙஉங) மலைவிசேடத்தால் சிவந்த கண்களையுடைய குறவரை.

(௩௨௮) அவ்விடத்தே ஆளுடையபிள்ளையா ரமர்ந்திருக்கு நாளின்கண் துளிதூங்கும் முகிற்கூட்டங்கள் சுரக்கும் பெய்தலொழி காலத்தில் மிகுந்த கடல் சூழ்ந்த உலகமெல்லாம் வெய்யிலைப்பெறுமையால் வெய்யிலின் மேல் விருப்புவரப் பக்கத்திலுள்ள மலையுங் குளிர்கின்ற பனிப்பருவம் வந்தது.

(௩௨௯) தாமரைமுகம் புலர்தலால் வண்டின் கூட்டங்கள் வெறுத்தகல, பளிங்குமணியை மரகதக்கொடியிற்கோத்தபான்மையைப் போலத் துளித்தலைமெல்லறுகானது பனியைத்தொடுத்தசைய, மலைகளுஞ் சூழ்கின்ற பனியால் குளிருக்குடைந்து வெள்ளிய வஸ்திரத்தைப் போர்த்தாற்போன்றன.

(௩௩௧) இறை - இறப்பு. கருமுகையினிதழலர்கின்ற மிருதுவான, கூந்தலையுடைய பெண்களது இரண்டாகிய கலசம்போன்ற விரும்பத்தக்க முலையில். பித்திகை, குளிர்காலத்தே உஷ்ணத்துக்காக அணியும் மலர்.

(௩௩௨) விரிந்த மிருதுவான முல்லைமலர்களையுடைய அழகிய மேலைத்திசையினிடங்களிலெல்லாம் உஷ்ணத்திற்காக மஞ்சளையுங் குங்குமத்தையும் அரைத்து அமைப்பார்கள். அயலிடங்களிலெல்லாம் பருத்த அகிற்றுண்டங்களைப் பிளந்து புகைப்பார்கள்; இடையிடங்களிலெல்லாம் அக்கினியை உமிழ்கின்ற பேழ்வாயையுடைய இரும்புத்தோணியை இழுப்பார்கள்.

(௩௩௩) கொடிமாடச்செங்குன்றூர். பனித்தல் - நடுங்கல். குளிர் முன்னைபிணி- குளிர் முன்னர்க்கண்டு பின்பு சுரங்காணுநோய்; அது, குளிர்ச்சுரம். பேழை இரும்புத்தோணி என்றது, இரும்பாற்றோணிவடிவாகச்செய்து தீயை நிறைத்துக் குளிரின் பொருட்டுச் சமீபத்தில் இழுக்கப்படுவதை.

(௩௩௫) அவ்வினைக்கிவ்வினை என்று முதலிலெடுத்து, சிவனுண்ட வெவ்வியவிடத்தை முன்னரே தடுத்து எமதிடரைநீக்கிய வெற்றியினால் எவ்விடத்தும் அடியாரிடர் தீர்ப்பது கண்டேமென்று.

(தொடரும்.)

ஜி. சதாசிவப்பிள்ளை.

கல்விகற்கக் காலநியதியில்லை.

"கல்விகற்க ஒருபொழுதும் சமயம் தப்பிப்போவதில்லை" என்னும் சாதாரண மொழி உண்மையென்பதை ஒப்பிப்பதற்குத் திருஷ்டாந்தமாய் எடுத்துக்காட்டத்தக்க மஹா பிரதாபர்களுடைய சரித்திரம் பல உண்டு. பருவமுதிர்ந்தவர்களும் ஒருவேலையைத் தொடங்க மனவுறுதிகொள்வார்களானால் அதை நன்றாகச் சாதிக்கவல்லராவார்கள். ஸ்ரீஹென்ரிஸ்பெல்மன் ஐம்பதறுபது வயதாமளவும் சாஸ்திரம் கற்கத்தொடங்கவில்லை. ப்ராங்க்லின் பதார்த்த சாஸ்திரப் பயிற்சியில் நன்றாய்ப் பிரவேசிக்கும் பொழுது அவருக்குப் பருவம் ஐம்பதாகிவிட்டது.. ட்ரைடெனும் ஸ்காட்டும் நாற்பது வயதிற்குமுன் கிரந்தகர்த்தாவென்று பெயரெடுக்கவில்லை. பொகாக்ஷோ என்பவர் கல்விகற்கத் தொடங்கியது முப்பத்தைந்து வயதில். அல்பீரி என்பவர் க்ரீக்பாஷை பயில்த் தொடங்கியபொழுது அவர்க்குவயது நாற்பத்தாறு. ஆர்னல்ட் பண்டிதர் நீபர் என்னும் கிரந்தத்தை மூலபாஷையில் வாசிக்கும்பொருட்டுப் பருவம் சாய்ந்தபின் ஜர்மானிபாஷை பயின்றார். இவ்வாறே ஜேம்ஸ் உவாட்டும் நாற்பதுவயதில் க்ளாஸ்கோ நகரத்தில் தொழிற்கருவி செய்துவரும்பொழுது ப்ரான்சுபாஷை, ஜர்மானியபாஷை, இத்தாலியபாஷை இவைகளில் உள்ள அருமையான யந்திரதத்துவ வித்தியாகிரந்தங்களை வாசிக்கும்பொருட்டு அம்மூன்று பாஷைகளையும் கற்றார். ஹீப்ரூபாஷை வாசிக்கத்தொடங்குமுன்னே தோமாஸ் ஸ்காட்டுக்கு வயது ஐம்பத்தாறாகிவிட்டது. மில்த்தன், டாந்தி என்னும் இரண்டு கவிவல்லோரையும் மெக்காலே இணையிட்டெழுதிய ஒப்பனையின் யுக்தாயுக்தத்தைப் பகுத்தறிய வல்லவராம்படி, ராபர்ட்ஹால், முதுமைப் பருவத்தில் வியாதியுபத்திரவத்தில் அழுந்தும்பொழுது ஒருநாள் தரையிற்படுத்த படுக்கையில், இத்தாலியபாஷை படித்துக்கொண்டிருக்கக் காணப்பட்டார். ஹாண்டெல் இயற்றிய பிரபலகிரந்தம் எதுவும்பிரசுரமாகுமுன்னமே அவருக்கு வயசு நாற்பத்தெட்டாயிற்று. முதுமையென்று எவரும் ஒப்புக்கொள்ளத்தக்க வயசில் நூதனமான

துறைகளில் அடிகோலியவர்களையும் நூதனமான கல்விகளைக் கற்றுத் தெளிந்தவர்களையும்பற்றி இவ்வண்ணமே அநேகவாயிரம் திர்ஷ்டாந்தங்கள் எடுத்துக்காட்டலாம். வீணரும் சோம்பருமன்றி மற்றெவரும் "கல்விகற்க எனக்கு வயசு சென்றுபோயிற்று" என்று ஒருபோதும் வீண்சாக்குச் சொல்லமாட்டார்கள்.

லோகோபகாரமான பலபெருங்காரியங்கள் செய்து உலகத்தை நிர்வகிப்பவர்களெல்லாம் பெரும்பாலும் புத்திக்கூர்மையுடையவர்களல்ல; நிலைநீங்கா மனவுறுதியும் உள்ளக்கருத்தும் சோர்வற்ற முயற்சியுமுள்ளவர்களேயாம். நிபுணர்களுடைய மேலான புத்தி, யோக்கியவயதுவருவதற்கு முன்னமே பக்குவப்படுவதைப்பற்றி எவருமறுத்தற்கரிய திர்ஷ்டாந்தம் அநேகமுண்டெனினும், இளமையில் விளங்கும் புத்திசாமர்த்தியமானது ஒருவன் பிற்காலத்தில் அடையப்போகிற ஏற்றத்தின் உயர்வு இவ்வளவென்பதை ஒருபோதும் குறிப்பிக்கமாட்டாது. யோக்கியவயது வருவதற்கு முன்னமே புத்திபக்குவப்படுவதானது, புத்தியின் திறத்தை விளக்குவதுபோய்ச் சிலசமயங்களில் ரோகமுண்டாவதற்கு அடையாளமாக முடிகின்றது. விசேஷமாக வியக்கத்தக்க புத்திசக்தியுள்ளவர்களாயிருந்த பிள்ளைகள் எல்லாருக்கும் பின்னில் என்னவாகின்றது? தலைமாணாக்கரும் வெகுமதிபெற்ற வித்தியார்த்திகளும் எங்கே? அவர்கள் நிலையை ஆதியோடந்தம் விசாரித்துப்பார்ப்போமானால், பள்ளியில் அவர்களுக்கு இளைத்த மந்தபுத்தியுள்ளவர்களாயிருந்தவர்கள் பின்னிட்டுப்பெரும்பாலும் அவர்களைமிஞ்சிப்போயிருக்கிறார்களென்று காண்போம். சாமர்த்தியமுள்ள வித்தியார்த்திகளுக்கு வெகுமதி கிடைக்கின்றது; ஆயினும் தங்களுடைய சுறுசுறுப்பாலும் கைவளத்தாலும் அவர்கள் பெற்றுக்கொள்ளும் வெகுமானங்கள் எப்பொழுதும் அவர்களுடைய விருத்திக்கு ஏதுவாவதில்லை. ஆதலால், செய்யும் பிரயத்தனத்திற்கும், விடாமுயற்சியாய் உழைக்கும் உழைப்பிற்கும், சொன்னசொற்கேட்டு அடங்கிநடக்கும் அடக்கத்திற்குமே முக்கியமாய் வெகுமதி கொடுக்கவேண்டும். ஏனெனில் இயற்கையில் மிதமான அறிவுடையவனாயிருப்பினும், தன்னால் ஆமளவிற்கு வருந்திக் கற்கும் வாலிபனையே முக்கியமாய் உற்சாகப்படுத்தவேண்டும்.

கேம்பிரிட்ஜ் வித்தியாசாலையில் ஹீப்ரூ பாஷைக்குப் பிரதம பண்டிதராயிருந்து காலஞ்சென்ற டாக்டர் லீ என்பவருடைய சரித்திரமானது, இக்காலத்தில் வித்தியாவிஷயத்தில் பொறுத்து விடாமுயற்சியும் மனவுறுதியுமாய் உழைத்துப் பாடுபட்டதற்கு ஒரு சிறந்த திருஷ்டாந்தமாகும். அவர் இளமையில் கல்விபயின்றது ஷ்ரூஸ்பெரிக்குச் சமீபத்தில் லக்னோர் தர்மபாடசாலையில். அக்கவர் சற்றுவது கருத்தாய்க் கற்காததுபற்றி உபாத்தியாயர் தம்மிடத்தில் கற்றுப்போன மாணாக்கரில் மந்தபுத்தியுள்ளோர் அனைவருள்ளும் அவர் மிகமந்தனென்று மொழிந்தார். பின்பு தச்சன் ஒருவனிடத்தில் தொழில் பழகவைக்க அவர்வளர்ந்து ஆடவனுமளவும் தச்சுவேலை செய்துவந்தார். வேலை ஒழிந்திருக்கும் வேளையில் வீண்பொழுது போக்காமல் ஏதாவது வாசிக்க ஆரம்பித்தார். வாசித்த புஸ்தகங்கள் சிலவற்றில் லத்தீன்வாக்கியங்கள் மேற்கோளாய் எடுத்துக் காட்டியிருக்கக் கண்டு, அவற்றின் பொருளை அறிய ஆசைகொண்டு லத்தீன் இலக்கணப் புஸ்தகம் ஒன்று கிரயத்திற்கு வாங்கி அந்தப்பாஷையைக் கற்கத்தொடங்கினார்: "ஒருவன் விரும்பும் மற்றெந்த விஷயத்தையும் தெளிய அறிந்துகொள்வதற்கு இருபத்துநான்கு எழுத்திற்குமிஞ்ச ஏதாவது அறியவேண்டுமோ?" என ஆர்கையில் ட்யூக் என்னும் பட்டவர்த்தனருடைய தோட்டக்காரனைஸ்தோன் என்பவன் நெடுநாள் முந்திமொழிந்தபடி, லீ நித்திரையினின்று பொழுதோடு எழுந்து இராத்திரி நாழிகை ஏறுமளவும் விழித்திருந்ததனால், தொழில் பழக உடன்பட்ட காலங்கழியுமுன் லத்தீன் பாஷையில் தேர்ந்த பண்டிதரானார். ஒருதேவாலயத்தில் வேலைசெய்யும்பொழுது க்ரீக் பாஷையில் புதிய ஏற்பாட்டுப் புஸ்தகத்தைக்கண்டு அந்தப் பாஷையும் கற்கும் ஆசையும் அந்தக்ஷணமே அவர்நெஞ்சில் உதித்தது. அதன்பொருட்டு அவர் தமது லத்தீன் புல்தகங்கள் சிலவற்றை விற்று க்ரீக் இலக்கணபுஸ்தகம் ஒன்றும் அகராதி ஒன்றும் வாங்கிக் களிப்புடன் வாசித்து விரைவில் அந்தப் பாஷையில் தெளிந்த நிபுணரானார்.

பிற்பாடு க்ரீக் புஸ்தகங்களை விற்று ஹீப்ரூ புஸ்தகங்கள் வாங்கி, எந்த உபாத்தியாயர் உதவியுமின்றி, புகழ்ச்செல்வமாவது பொருட்செல்வமாவது பெற நாடாமல், தம் புத்திசாய்ந்த துறை

யில் இறங்கி ஹீப்ரூபாஷை கற்றார். அப்பால் கால்டீ, ஸிரியாக், ஸமாரிதன் பாஷைகள் கற்றுக்கொண்டுவந்தார். ஆனால் ஓயாதெப்பொழுதும் அவர் பயின்ற கல்விப்பயிற்சி அவர் தேகசௌக்கியத்தைத் தாக்கத்தொடங்கி, நாட்பட ராத்திரிகாலத்தில் துயிலொழிந்து விளக்கொளியில் நூல்வாசித்து வந்ததனால் அவருக்கு நேத்திரரோகம் உண்டாயிற்று. ஆனதுபற்றிச் சிறிதுகாலம் புஸ்தகங்களை வைத்துவிட்டு ஆறியிருந்து உடம்பு தேறியபின் அவர் மறுபடியும் முன்போலவே அனுதினமும் வேலைசெய்துகொண்டுவந்தார். தச்சுவேலையில் அவர் மிகத் திறமையுள்ளவர் என்று ஊரறியப் பெற்றதனால் வேலை மேலுமேலும் படிந்து கைப்பொருள் ஏறியது. ஆகவே அவர் விவாகயோக்கியதையுள்ளவராகி இருபத்தெட்டுவயதில் மணம்புரிந்தார். அதன்பின் அவர் வித்தியாவினோதமாகிய சுகபோகத்தை நிறுத்திவிட்டுக் குடும்ப சம்ரக்ஷணைக்குரிய தொழிலில் கண்ணாயிருக்கத் தீர்மானித்துப் புஸ்தகம் அனைத்தையும் விற்றார். அப்படியிருக்க அவருக்கு ஜீவனாதாரமாயிருந்த தொழிற்கருவிப்பெட்டி தீக்கிரையாய்ப்போய் வறுமைப்பிணி அச்சம்காட்டி அவரை வருத்த ஆரம்பித்தது. அவ்வண்ணம் நேராதிருக்குமாயின் அவர் ஜீவனுள்ளளவும் தச்சுவேலைசெய்து பிழைக்கினும் பிழைப்பார். புதுக்கருவி வாங்க அவர்கையில் ஒன்றும் இல்லை. ஆனதுபற்றிப் பிள்ளைகளுக்கு எழுத்தறிவித்துப் பிழைக்கநினைத்தார். இத்தொழிற்கு மூலதனம் எவ்வளவும் வேண்டுவதில்லையே. ஆயினும் இதற்கும் ஒருதடை இருந்தது: அவர் பல பாஷைகளில் பண்டிதராயிருந்து சாமானியமான விஷயங்களில் அவருக்குச் சிறிதும் பயிற்சியில்லாதிருந்ததனால் முதன்முதல் அவைகளைக் கற்பிக்கஅவரால் ஆகவில்லை. ஆகாதிருந்தும், மனவுறுதியுள்ளவராதலால் அவர் சிரத்தையாய் உழைக்க ஆரம்பித்து, எண்ணும் எழுத்தும் சிறுபிள்ளைகளுக்குக் கற்பிக்கத்தக்கவளவு கற்றுக்கொண்டார். அவர் ஆடம்பரமின்றி நிஷ்கபடமும் சிறந்த ஒழுக்கமுமுள்ளவரென்று காணக்காணப் பலர் அவர்க்கு இஷ்டராயினர். இந்த வித்தகனாகிய தச்சனுடைய கல்விப்பேற்றைக் குறித்து எங்கும் புகழ்ச்சி உண்டாயிற்று. அயலூர்க் குரு ஆகிய ஸ்காத் வேதாத்தியாபகர் ஷ்ரூஸ்பெரியில் ஒரு தர்மபாடசாலை உபாத்தியாய உத்தி

யோகம் அவருக்குத் தேடிக்கொடுத்து இவ்வாசியா கண்டத்திலுள்ள தேசபாஷைகளில் தேர்ந்த நிபுணர் ஒருவர்க்கு அவரை அறிமுகம்பண்ணிவைத்தார். மேற்குறித்த இஷ்டர்கள் புஸ்தகம் வாங்கிக்கொடுக்க, லீ முறையே அரபி, பாரசீகம், ஹிந்துஸ்தானி இந்தப் பாஷைகளைக் கற்றுத் தெளிந்தார். அவர் தமதுதேசத்துக் குடிப்படை வகுப்பில் சாமானிய சேவகம்செய்து வரும்பொழுதும் கல்வியை விட்டுவிடாமல் கற்றுக்கொண்டுவந்தார்; வரவர அவருக்குப்பாஷைகளில் மிகத்தெளிவு உண்டாயிற்று. கடைசியில் முன் அவருக்கு உதவிசெய்தவரான ஸ்காட் என்பவர் கேம்ரீட்ஜ் சர்வகலாசாலையைச்சேர்ந்த க்வீன்ஸ் காலேஜ் என்னும் வித்தியாசாலையில் அவரைச் சேரும்படி செய்தார். அங்கவர் சில நாள் கற்றுக் கணிதத்தில் வல்லவரென்று குறிக்கொள்ளப்பட்டார். பின்பு அரபி ஹீப்ரூபாஷா பண்டிதர் உத்தியோகம் காலியாக, அந்தக்கௌரவமான பதவிக்கு யோக்கியரென்று அவரையே தெரிந்தேற்படுத்தினார்கள். அவர் அந்த உத்தியோகத்தை வெகுசாமர்த்தியமாய் நிர்வகித்ததுமன்றி இவ்வாசியா முதலிய கீழ்த்தேசங்களில் அவருடைய பாஷையில் கிறிஸ்தவ வேதப்பிரசங்கம் செய்யப்போக விரும்பியவர்களுக்கு அந்தப் பாஷைகளை அன்றன்று அவகாசம் கண்டுவெகுநேரம் தாமேவேண்டுமென்று போதித்தார். மேலும் அவர் கிறிஸ்து வேத புஸ்தகத்தை ஆசியாவில் வழங்கும் சில பாஷைகளில் மொழிபெயர்த்தார். பின்பு ந்யூஜீலாந்து பாஷையைத் திட்பநுட்பமாய்க் கற்றுக்கொண்டு, அப்பொழுது இங்கிலாந்திலிருந்த ந்யூஜீலாந்துகுறுநிலமன்னர் இருவருக்காக இலக்கண புஸ்தகம் ஒன்றும் நிகண்டு ஒன்றும் இயற்றினார். அவ்விரண்டு புஸ்தகங்களும் இப்பொழுது ந்யூஜீலாந்து பாட்சாலைகளில் அனுதினமும் வழங்கிவருகின்றன. ஸாம்யுயெல் லீ பண்டிதரின் வியக்கத்தக்க சரித்திரசங்கிரகம் இத்தன்மையதாம். இலக்கிய விலக்கணங்களிலும் சாஸ்திரங்களிலும் குறிக்கொள்ளத்தக்க பண்டிதர் பலருடைய சரித்திரங்களில் தன்னைத்தான் பண்படுத்துவதில் கடைப்பிடியைக் குறிக்கின்ற நீதிபோதகமான பல திருஷ்டாந்தங்களுள் இதுவும் ஒன்றாம்.

வழிதப்பி விரைந்தோடும் பந்தயக் குதிரையைச் சரியான வழியில் பொறுத்து நடக்கும் ஆமை ஜயிக்கும். முயற்சியுள்ள வாலிபன்

மந்தனாயிருப்பினும் பெரிதல்ல. ஒன்றை விரைவிற் கற்றுக்கொள்ளும் இளைஞன் அவ்வண்ணமே அதை விரைவில் மறந்திடுவான். கருத்தையும் கடைப்பிடியையும் பண்படுத்த நிமித்தம் இல்லையென்று அவன் விட்டுவிடுவான். மந்தகுணமுள்ள வாலிபனோ இவ்விரண்டு குணங்களையும் அப்பியாசப்படுத்தாமல் தீராது. எவ்வகையோக்கியதையும் அமைவதற்கு இவ்விரண்டு குணங்களே முக்கியமாம். ஆகவே, தீவிரபுத்தி தோஷமானாலுமாகும், "என்தற்காலநிலை என்னுடைய சொந்தமுயற்சியாலாகியது" என டேவி தம்மைக்குறித்துமொழிந்தது யாவருக்கும் ஏற்கும்.

கடைசியாய்ச் சொல்வதாவது:—சிறந்த விற்பத்தி பெரும்பாலும் சாதாரணமான பள்ளியிலாவது உயர்ந்த வித்தியாசாலைகளிலாவது உபாத்தியாயர்களால் அமைவதல்ல; ஆடவரானபின் அவரவர் தம் முயற்சியால் கற்றுக்கொள்வதனால் அமைவது. ஆகவே தாய்தந்தையர் தங்கள் பிள்ளைகள் புத்தியை வலிமையாய் முதிர்விக்க ஆத்திரப்பட நிமித்தமில்லை; அவர்கள் பதறாமல் பொறுத்துக் காத்திருந்து, ஒழுக்கமும் அடங்கிச்செய்யப்பயில்வதும் தடையறத் தம் பிள்ளைகளைத் தேற்றி வரவிட்டு, இதற்கு மிஞ்ச நடப்பதெல்லாம் தெய்வச்செயல் என்றிருக்கக்கடவர்கள். இளைஞரைத் தடையறத் தேகாப்பியாசம் செய்து தேகவலிமையும் தேகசுகமும் அடைய விடுவதும், தம்மைத்தாம் பண்படுத்தும் நெறியில் அடியிடுவிப்பதும், கருத்தையுங்கடைப்பிடியையும் வழக்கப்படுத்திவர அவதானமாய்க் கற்பித்துவைப்பதுமே மாதாபிதாக்களுடைய கடன். இளைஞர் பருவம்முறவறத்தேறுவதற்குரிய சாதனம் இருந்தால் எப்பொழுது வேண்டுமானாலும் தம்மைத்தாம் பண்படுத்த வல்லவராவார்கள். கல்விகற்கக்காலநியதியுண்டோ ?—

P. G.

புத்தகக் குறிப்பு.

யசோதரகாவியம் :— தமிழில் 'ஐஞ்சிறுகாவியங்கள் என்றெண்ணப்படுவனவற்றில் யசோதரகாவியமென்பது ஒன்று. இஃது, அவந்திநாட்டு உச்சயினி நகரத்தரசனாகிய யசோதரனென்பான், மாவினாற் கோழியுருவனைந்து அதனைக் காளிக்குப் பலிகொடுத்து அக்காரணத்தால் அவனும்—அவனை அது செய்யத்தூண்டிய அவன் தாயும்—கொலையுண்டு பின்னரும் பின்னரும் பலவிழிபிறப்பெய்திக் கொல்லப்பட்டுழன்று, பின் அவதிஞானமெய்தி வீடுபெற்ற வரலாற்றை விரித்துரைப்பது. இதன் பாடற்றொகை 320-ஆகும். இச்சிறுகாவியம், இற்றைக்கு ௬0 வருடங்கட்குமுன் அவ்வளவு சிறப்பின்றிப் பழையலிபியில் அச்சிடப்பட்டது. அப்பிரதியும் இப்போது முழுதும் அருகிவிட்டநிலையில், சென்னையிலிருக்கும் பண்டிதர் ஸ்ரீமாந்-தி. வேங்கடராமையங்கார் அவர்கள், மிகச் சிறப்பாக இதனைப் பதிப்பித்து வெளியிட்டிருக்கிறார்கள். இக்காலத்து நாகரிகப்பதிப்புமுறைப்படி, இந்நூலின் மூலத்துக்கு முன்னும்பின்னும்—தொகைவிளக்க அகராதி, யசோதரன்சரித்திரம், செய்யுளகராதி, அபிதானவிளக்கம், அரும்பதவுரை—இவற்றுடன், ஆங்கிலத்தும் தமிழிலும் எழுதப்பட்ட பதிப்புரை ஜைனமதமுதலியனவும் இதனுட் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இவையெல்லாம், ஐயங்காரவர்கள் இந்நூல்விஷயமாகக்கொண்ட முயற்சியையும் ஆராய்ச்சியையும் நன்கு விளக்குகின்றன. இந்நூற்கு, ஆங்கிலத்தில் மிஸ்டர் ஆர்தர் டேவிஸ்துரையவர்களால் ஒரு சிறு முகவுரையும் எழுதப்பட்டுள்ளது. இங்ஙனம், அருகியதொரு நூலை ஆராய்ச்சிசெய்து வெளியிட்ட ஐயங்காரவர்கட்குப் பொதுவாகத் தமிழ் நாட்டாரும் சிறப்பாக ஜைனமக்களும் பெரிதும் கடமைப்பட்டவராவார். இப்பதிப்பின் விலை அணா எட்டு. இதனை—பண்டிதர் ஸ்ரீமாந். தி. வேங்கடராமையங்காரவர்கள், நிர்-27. கிருஷ்ணன்கோவிற்றெரு, ஜார்ஜ்டவுன்,' சென்னை"—என்னும் விலாசத்துக் கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

ருதுவான பிராமணப்பெண்களின் விவாகம் சாஸ்திரீயமானது என்பதைப்பற்றிய வியாசம்:—இத்தகைய பெயர்வாய்ந்த கிரந்தமொன்று ஆங்கிலத்தினின்று மொழிபெயர்க்கப்பட்டுச் சமீபத்தில் வெளிவந்துள்ளது. இந்நூலின் பெயரானே இஃதின்னவிஷயம் பற்றியதென்பது நன்கு விளங்கும். இது, சென்னை "ஹிந்துஸமாஜத்தார்" கேட்டுக்கொண்டவாறு, பரிசுக்காகச் சிலர் எழுதிய சிறந்த வியாசங்களின் ஸாராம்சங்களைத்திரட்டி, ஸ்ரீமாந். வி. எஸ். ஸ்ரீநிவாஸசாஸ்திரியார் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டது. இதனைத் தமிழில் மொழிபெயர்த்துதவியோர், மதுரைப் "பிரமஞானசபை"த்தலைவரும், ஹைகோர்ட் வக்கீலுமாகிய ப்ரம்மஸ்ரீ ப. நாராயணையரவர்கள். இந்நூலைப்படிப்போர்க்கு விவாகவிஷயத்தைப்பற்றிய நுட்பமான தர்மங்கள்பலவும் பிரபலஆதாரங்களுடன் நன்குவிளங்குவதோடு, பிராசீனமேலோருடைய உயர்ந்த எண்ணங்கள் இத்தகையவென்பதும் பிறவும் வெள்ளிடை மலைபோல் வெளியாகும். இதன்கண் எடுத்தாளப்பட்ட பிரமாணங்கள் பெரும்பாலும் பழையதர்மசாஸ்திரங்களினின்றும் சூத்திரங்களினின்றுமே உதகரிக்கப்பட்டிருக்கின்றன. இவ்வியாசத்தைத் தமிழ்நாட்டு வைதிகபுரோகிதர்களும் பிறரும் பெற்றுப்படிப்பார்களாயின், நம்பெண்களின் விவாககாலத்தில் நேரும் பெருங்குறைபாடுகளிலே ஒருமாறுதல் உண்டாயினும் உண்டாகலாம். இவ்வுயர்ந்த வியாசத்தை நம்மவர் பொருட்டுத் தமிழ்ப்படுத்தி உபகரித்த ஐயரவர்கட்கு நாம்பெரிதும் நன்றிகூற வேண்டியவர்களாவோம். இப்புத்தகவிலை அணாநான்கே. வேண்டியோர் சென்னை, "ஜி. எ. நடேஜன் அண்டு கம்பெனி" யாரிடத்தும், ஷை ஐயரவர்களிடத்தும் பெற்றுக்கொள்ளலாம்.

ஸ்ரீ திலகர்சரித்திரம்.—இப்பெரியவரின் ஜீவிய சரித்திரத்தை நன்கெழுதி ஸ்ரீ: எம். வி. ஈசுவரர் என்பவர்; 80-பக்கமுடைய சிறு புத்தகமாக சமீபத்தில் வெளியிட்டிருக்கின்றனர். இச்சிறுநூல் அவ்வுத்தமதேசாபிமானியின் வாழ்க்கை வரலாறுகளை ஆதிமுதல் மிகநன்றாக உணர்த்துகின்றது. இஃது, அன்னோருடைய உயர்ந்த குணாதிசயங்களை நம்மவர் அறிந்துமகிழ்தற்கு ஏற்ற கருவியென்பதில் தடையில்லை. இதன்விலை அணா 4. வேண்டியோர்,—"ஸ்ரீ எம். வி. ஈசுவரர், 45, பவழக்காரத்தெரு, சென்னை" என்னும் விலாசத்துக்கெழுதிப் பெறுக. இதனுடன், இவர்களனுப்பிய ஸ்ரீ: வி. ஓ. சிதம்பரம்பிள்ளை சரிதமுங் கிடைக்கப்பெற்றேம். இதன் விலை அணா 2.

வாய்ப்பூட்டுச் சட்டமறுப்பு.—இப்பெயர்கொண்ட நூலொன்று சென்னைச் "சுதேசமித்திரன்" உதவியாசிரியர் ஸ்ரீ வில்வபதிசெட்டியாரவர்களால் வெளியிடப்பெற்றுளது. நம்தேசத்தில் உண்டான குழப்பங்காரணமாக, நம் ராஜாங்கத்தார், இத்தகைய சட்டமொன்றைச் சிலகாலத்துக்குமுன் செய்தபோது, டாக்டர்- ரஸவிகாரிகோஸ் அவர்களும், ஸ்ரீ கோபால கிருஷ்ணகோகலே அவர்களும் சட்டசபையில் அச்சட்டங்களை மறுத்துப்புரிந்த அற்புத உபந்நியாசங்களின் மொழிபெயர்ப்பே இந்நூல். இவர்களது அழகிய வாதங்களைச் செட்டியாரவர்கள் நன்கு மொழிபெயர்த்து மேற்குறித்த தேசாபிமானிகளிருவர்படத்துடன் வெளியிட்டிருக்கிறார்கள். இராஜகீய ஞானத்தை நம்மவர் அடைந்துகொள்ளுதற்குரிய சிறந்த கருவிகளில், இதனையும் ஒன்றென்னலாம். இதன்விலை அணா 8. வேண்டியோர் ஷை செட்டியாரவர்கட்கெழுதிப்பெறுக.

பிரமஞானசங்கிரகம்:—இந்நூல், "தியாஸாபிகல்ஸொஸைடி" என வழங்கும் "பிரமஞான" சங்கத்தாரது கொள்கைகளைத் தெளிவாக விளக்கி, அச்சபையைச்சார்ந்த லேட்பீடர் (C. W. Ladbeater) துரையவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட நூலின் தமிழ் மொழிபெயர்ப்பு. இது, பத்து அத்தியாயங்களாக வகுக்கப்பெற்று, பிரமஞானசங்கத்தினியல்பு, அதன் பொதுக் கொள்கைகள், தெய்வம், மானுடதத்துவம், புனர்ஜன்மம், மரணம், மனிதரின் சென்றகாலவருங்காலநிலைமை, காரணகாரியங்கள், பிரமஞானத்தின்பயன் முதலிய உயர்ந்த விஷயங்களைப்பற்றிய அச்சங்கத்தார் கொள்கைகளைச் சுருங்கவிளங்க உரைத்துச்செல்லுகின்றது. இந்நூலைப் படிப்பதினின்று, "தியாஸாபிகல்" சங்கத்தாரது தத்துவ ஆராய்ச்சியால் வெளிவந்திருப்பவைகளை நாம் ஒருபடியாக அறிந்துகொள்ளல் கூடும். இந்நூலை மொழிபெயர்த்தோர்—நாகபட்டணம், ஸ்ரீமத்-தி. சாம்பசிவஐயரவர்கள். இவர்கள் மொழிபெயர்க்குமாற்றல் மிகுதியுமுடையவர்களென்பதற்கு, இந்நூல் தக்க சான்றுபகர்கின்றது.

அரியதத்துவவிஷயங்களை, மிகத்தெளிவான இனிய நடையில் அமைத்திருக்கிறார்கள். இந்நூல்: நம்மவர் படித்து மகிழ்தற்குரியதென்றே நம்புகின்றோம்.

ஜன்மபூமி:—இது, ஸ்ரீ. சுப்பிரமணியபாரதியவர்களால், ஸ்ரீ பாரததேவிவிஷயமாகவும் பிறவினியவிஷயமாகவும் பலவிதமான கவிதைகளால் பாடப்பெற்ற ஒரு செய்யுட்டிரட்டு. இவர் வாக்குத் தமிழ்நாட்டார் பலரும் பலமுறை அறிந்து சுவைத்ததேயாதலின் நாம் பலபடப்புனைதல் மிகையாம். முன்பு இவர் வெளியிட்ட செய்யுட்டிரட்டினும் அதிகமாகச் சில பகுதிகள் இதனிடைக் காணப்படுகின்றன. இந்நூலை, நம்மவர் மகிழ்வுடன் எதிர்கொள்வார்களென்பதில் ஐயமில்லை. இதன் சில பகுதிகளை, எம் நண்பர்கள்முன் படித்துவரும்போது, உள்ளபடியே அவை, உரோமஞ்சிலிர்க்க எம்மைப் பெரிதும் உருக்கிவிட்டன. இதன்விலை அணா-3.

மன்பதை யாற்றுப்படை:—இப்பெயர்கொண்டதொருசிறுநூல் வேலூர், ஊர்ஹிஸ்காலேஜ் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத். பு. க. ஸ்ரீநிவாஸாசாரியரவர்களால், இயற்றப்பட்டது. இது, “பள்ளிகொண்டையென்னும் உத்தர ஸ்ரீரங்கஸ்தலத்துத் திருமாலைவணங்கியுய்ந்தானொருவன், அங்ஙனம் வணங்கி உய்வுபெறாத மக்கட்பரப்பை, அப்பெருமானிடத்தே ஆற்றுப்படுதலைக்” கூறுவது. இந்நூலின் சொன்னோக்குப்பொருணோக்கங்கள் நன்கமைந் தொளிர்தலோடு, இதன் ஆசிரியர் ஒருசிறந்த பத்திமானென்பதும் இந்நூலால் விளங்குகிறது. இந்நூலை, உரியகாலத்திற் பார்வையிட்டுக் குறிப்பெழுதமுடியாமனேர்ந்தமைக்கு வியசனிக்கின்றேன்.

பத்திராசிரியர்.

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௭] கிலக ௵ மாசி ௴. [பகுதி-௪.

பழையபுலவரின் பெருந்தன்மைகள்.

சங்கநாளில் விளங்கிய புலவர்கள் பாடல்களை ஆராய்ந்தால், அநேககற்பனைகள் கருத்துக்கள் சரித்திரங்கள் முதலியவை தெரியவருதல் போலவே, அந்தப் புலவர்களது அருஞ்செயல்கள் பெருந்தன்மைகள் பலவும் விளங்குகின்றன. அக்குணங்களும் செயல்களும் அவர்களுக்குப்பின்னிருந்த புலவர்களிடம் ஏகதேசமாகவேயிருந்தனவென்பதில் ஐயமில்லை. விரிந்தசிந்தனையும், பரிந்துருகும் தயாளமும், அற்புதமான செல்வாக்கும், அரசர்க்கு நடுநிலை தவறாது இடித்துரைக்கும் வன்மையும், உறுதிதவறாமையும் அன்னோரிடம் மிகுந்துவிளங்கின. பிற்காலங்களில், வித்வான்கள்பலர் தரித்திரமிகுதியால், மேற்காட்டிய குணஞ்செயல்களில் ஒரோவழித் தவறியிருக்கக்கூடுமாயினும், “வறுமையிற்செம்மை” என்பது முற்காலத்துப்புலவரிடஞ் சிறிதுங் குறைந்ததில்லையெனலாம். இவற்றுக்கு, எத்தனையோ திருஷ்டாந்தங்களைப் பழையநூல்களிலிருந்து நாம் காட்டக்கூடும். ஆயினும் நாமெல்லாம் என்றும் ஞாபகத்தில் வைக்கத்தக்கவண்ணம் விளங்கிய அவர்களது பெருந்தன்மைகள்சிலவற்றை இப்பத்திரிகையில் ஓரிடத்துக்காட்ட விரும்பி இவ்வியாசமெழுதலாயினேன்.

புறநானூற்றில்வரும் புலவர்களிலே, கோவூர்கிழார் என்னும் பெருந்தகையை மேற்கூறியகுணஞ்செயலுடைமைக்குத் தக்க திருஷ்டாந்தமாகக் கூறலாம். ஒருகுடிப்பிறந்த சோழவரசர்களாகிய

நலங்கிள்ளி நெடுங்கிள்ளி என்பவர், சோணாட்டை அரசாளுமுரிமை தங்கள்தங்களுக்கு உரியதென்று வழக்கிட்டு அது தீராமல் பலவிடங்களிலும் பெரும்போர் புரிந்தார்கள். அவருள் நெடுங்கிள்ளி, சோழநாட்டைத் தன்கைவசப்படுத்தி ஆண்டுவந்தமையால், அவனுடன் பகைத்த நலங்கிள்ளியே தனக்குரிய பாகத்தைப்பெறுதற்கு நெடுங்கிள்ளியின் அரண்களைக் கைப்படுத்தவேண்டியதாயிற்று. அவ்வாறே, அவன் நெடுங்கிள்ளியால் உள்ளிருந்து காக்கப்பட்ட ஆவூர்க்கோட்டையை முற்றுகையிட்டான். இம்முற்றுகை பலநாளாக நிகழ்ந்தமையால் கோட்டைக்குள்ளிருந்த பிராணிகளுக்கு நேர்ந்த பெருந்துன்பங்களைக் கண்டுபொறுக்காது, இக்கோவூர் கிழார் என்னும் பெருந்தகை, கோட்டையை அடைத்துக்கொண்டிருந்த நெடுங்கிள்ளியிடம் நேரிற்சென்று "அரசே! யானைகளெல்லாம் குளியாமலும், நெற்கவளமுதலியவற்றைப்பெறாமலும், நிலத்தின்மேற் புரளுங்கைகளையுடையனவாய்ப் பெருமூச்சுவிட்டு இடிபோல முழங்கவும், பாலில்லாமல் குழந்தைகள் அழவும், மகளிர் தம்மை அலங்கரியாமலிருக்கவும், குடிகளெல்லாம் வருந்திக்கூப்பிடும் கூப்பீட்டைக்கேட்கவும் இவற்றிற்கெல்லாம் நாணாமல் இவ்விடத்து நீ இனிதாகவிருத்தல் கொடியது. நீ தருமமுடையவனானால், (உன் ஞாதியாகிய எதிரிமுன்) இக்கோட்டை உன்னதல்லவா? என்று சொல்லித் திறத்தல்செய்வாயாக. அன்றி, வீரமுடையவனானால், யுத்தஞ்செய்து திறந்துவிடுவாயாக. இரண்டுமின்றித் திறவாமலடைக்கப்பட்ட கோட்டையில் ஒருபக்கத்தே நீயொதுங்கியிருத்தல், ஆராயுமிடத்து, மிகவும் நாணுந்தன்மையுடையது" என்னுங் கருத்துப்படக்கூறி அவனைத் திறக்கச்செய்தனர். இதனை:—

"இரும்பிடித் தொழுதியொடு பெருங்கயம் படியா
நெல்லுடைக் கவளமொடு நெய்ம்மிதி பெறாஅ
திருந்தரை நோன்வெளில் வருந்த வொற்றி
நிலமிசைப் புரளுங் கைய வெய்துயிர்த்
தலமரல் யானை யுருமென முழங்கவும்
பாலில் குழவி யலறவு மகளிர்
பூவில் வறுந்தலை முடிப்பவு நீரில்
வினைபுனை நல்லில் வினைகூஉக் கேட்பவு
மின்னா தம்ம வீங்கினி திருத்த

றுன்னருந் துப்பின் வயமான் றோன்ற
லறவை யாயி னினதெனத் திறத்தன்
மறவை யாயிற் போரொடு திறத்த
லறவையு மறவையு மல்லை யாகத்
திறவா தடைத்த திண்ணிலைக் கதவி
னீண்மதி லொருசிறை யொடுங்குத
னாணுத்தக வுடைத்திது காணுங் காலே." (௪௪)

என்பதனாலறிக. இப்பாடலால், ஜனங்கள் நெடுநாளாக அரசரிருவரது தன்னயத்தால் வருந்துதல் கண்டு, அரசனிடஞ்சென்று அவனிரங்கும்படி கூறிய இக்கோவூர் கிழார் உயிர்கள்பாற்கொண்டிருந்த கருணையும் உண்மைகூறி அரசர்க்கிடித்துரைக்கும் மனவுறுதியும் பெற்றிருந்தமை விளங்கும். இப்பெரியாரது பெருந்தகைமைகளை விளக்கும் அற்புதமான செயல்கள் வேறு சிலவுமுள்ளன. மேற்குறித்த நலங்கிள்ளி நெடுங்கிள்ளிகளிருவரும் உறையூர்க் கோட்டையில் முற்கூறியபடியே முற்றுகையிட்டும் அடைத்தும் நிற்க, ஒருகுடிப்பிறந்த இவர்களது செற்றமிகுதியைக்கண்டு இப்புலவர் சிறிதும்பொறாமல், அவ்விருவரிடமுஞ்சென்று, "அரசர்களே! (பகைத்துநிற்கும் உம்மிருவருள் ஒருவனும்) பெரிய பனையின் வெண்மையான இதழைச் சூடினவனல்லன். (சேரனல்லனென்றபடி) அல்லது கரியகொம்புகளையுடைய வேப்பமாலையையுடையவனல்லன். (பாண்டியனல்லன்) உன்னுடைய மாலையும் ஆத்தியாற் கட்டப்பட்டது; உன்னுடன் பொருவோனுடைய மாலையும் ஆத்தியாற் கட்டப்பட்டது. ஆதலால், உங்களுள் எவர் தோற்றாலும் தோற்பது உங்கள் குடியேயன்றி வேறன்று; இருவரும் வெல்லுதலென்பதோ இயற்கையில்லை; இவற்றால் உங்கள் செய்கை குடியின் பெருமைக்குச் சிறிதுந்தக்கதே அன்று; (அன்றியும்) உங்களைப்போலும் பெருவேந்தர்க்கு, இந்தயுத்தம், உடம்பு பூரிக்கும் சந்தோஷத்தைச் செய்யும். ஆதலால் இப்போரை இனிவிட்டொழியுங்கள்" என்னும் பொருள்பட:—

"இரும்பனை வெண்டோடு மலைந்தோ னல்லன்
கருஞ்சினை வேம்பின் றெரியலோ னல்லன்
நின்ன கண்ணியு மார்மிடைந் தன்றே, நின்னொடு
பொருவோன் கண்ணியு மார்மிடைந் தன்றே

ஒருவீர் தோற்பினுந் தோற்பதுங் குடியே
இருவீர் வேற லியற்கையு மன்றே, அதனாற்
குடிப்பொரு ளன்றுநுஞ் செய்தி கொடித்தேர்
நும்மோ ரன்ன வேந்தர்க்கு
மெய்ம்மலி யுவகை செய்யுமிவ் விகலே. (௪௫)

என்னும் பாடலைக் கூறினர். பழைய நாளில், தமிழ்ப்புலவர்களுக்கிருந்த விரிந்தசிந்தையை விளக்குதற்கு இத்திருஷ்டாந்தத்தைக் காட்டிலும் வேறு சிறந்த சான்றும் வேண்டுமோ? கோவூர்கிழார் ஒருகுடியிற் பிறந்து கலகமிட்டுக்கொண்டிருந்த இருவரையும் நோக்கி, "யுத்தஞ்செய்கிற நீங்கள் வேற்றரசர்களன்றி ஒருகுடியிற்பிறந்தவர்களன்றோ. உங்களில் யாராவதொருவர் தோற்றாலும் ஒருவர் ஜயித்தாலும் உமது குடி ஒருதலையாகக் கெடுமேயல்லாது, வேறில்லை. இருவரும் வென்று குடியை உயர்த்துவதென்பது உங்கள் யுத்தத்திலில்லை"என்றுகூறி, அவர்கட்குவருங்கெடுதியைப் பசுமரத்தாணிபோற் பதியக்கூறியிருக்கும் அழகு எவ்வளவு அற்புதமாயிருக்கிறது. இக்காலத்தில் நம்மவரநேகர் கெட்டொழிதற்கு இது போன்ற கலகங்களே ஏதுவாயினும் அதனை நீக்கிவைக்க முயலும் பெரியார் அரியர். முற்காலத்தில் கோவூர் கிழார்போன்ற பெருந்தகைகள் பலர் அரசருக்குள்விளைந்த மிக்கபகைமைகளை நீக்கி ஒற்றுமையும் சமாதானமுஞ் செய்துவைக்க சமயம்நேர்ந்தபோதெல்லாம் பெரும்பாடுபட்டிருக்கிறார்கள். இதற்கு மற்றொரு அரிய பிரமாணமுங் காட்டுவோம்.

காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் என்னும் புலவர் பெருமான், பெருவழுதி என்னும் பாண்டியனும் பெருந்திருமாவளவனென்ற சோழனும் ஓரிடத்துச்சேர்ந்து மிக்கநட்போடு களித்திருந்தபொழுது அவர்கள் சேர்க்கையைக்கண்டு பெரிதுமகிழ்ந்து, அவ்வரசரிருவரையும் தனித்தனிபார்த்து "நீ, காவிரிநாட்டுக்குத் தலைவன் ; இவன், மிகுந்த பழைமைவாய்ந்த ஆலமரத்தை அதன் வீழ் தாங்கிக்காப்பதுபோலத் தன் பழங்குடியைத்தாங்கி பகைவரஞ்சவாழும் பாண்டியரேறுபோல்வான்; நீ, உறந்தைநகர்க்கு அரசன்; இவன் தமிழ்வளமிகுந்த மதுரைவேந்தன். நீவிரிருவரும் பலராமனும் கண்ணபிரானும்போலச் சேர்ந்துவிளங்குகின்ற இக்காட்சியியபொருள் வேறுண்டோ? கேளுங்கள்; உங்கள் புகழ் நெடுங்காலம் வாழ்வதாக. உம்மில் ஒருவர் ஒருவர்க்கு உரியபோதெல்லாம் உதவிசெய்வீர்களாக. நீங்களிருவரும் கூடிநிற்பதினின்றும் வேறுபடாமலிருந்தால், வளமிகுந்த இவ்வுலகம் உங்கள் கையகப்படுவது பொய்யாகாது. ஆதலால், நல்லவைபோலவும், நியாயமுடையவைபோலவும், முன்னோர்கள் ஒழுகிய ஒழுக்கம்போலவும் (சோழபாண்டியர்க்குள்ள நீண்டபகைமையை எடுத்துக்காட்டியும் என்றபடி) அன்புடன்வாழும் உங்கள் மத்தியில் நுழைந்து உங்களைப்பிரித்தற்குத் திரிந்துழல்கின்ற அந்நியருடைய சிறப்பில்லாத வார்த்தைகளைக்கேளாமல், உங்களுடைய கூட்டம், இன்றுபோல என்றும் விளங்குவதாக. இருவருஞ்சேர்ந்து வெற்றிகளைப்பெறுக. பகைவருடைய குன்றையுடைய நாடுகள், புலிமுத்திரையுடன் மீனமுத்திரையும் பொறித்த சிகரங்களை உடையனவாகுக" என்னுங் கருத்துப்பட அற்புதமாக அவ்விருவரையும் வாழ்த்தினார். இதனை:—

"நீயே, தண்புனற் காவிரிக் கிழவனை யிவனே
முழுமுத றொலைந்த கோளி யாலத்துக்
கொழுநிழ னெடுஞ்சினை வீழ்பொறுத் தாங்குத்
தொல்லோர் மாய்ந்தெனத் துளங்கல் செல்லாது
நல்லிசை முதுகுடி நடுக்கறத் தழீஇ
யிளைய தாயினுங் கிளையரா வெறியு
மருநரை யுருமிற் பொருநரைப் பொறாஅச்
செருமாண் பஞ்சவ ரேறே, நீயே
யறந்துஞ் சுறந்தைப் பொருநனை யிவனே
நெல்லு நீரு மெல்லார்க்கு மெளிய
வரைய சாந்தமுந் திரைய முத்தமு
மிமிழ்குரன் முரச மூன்றுட னாளுந்
தமிழ்கெழு கூடற் றண்கோல் வேந்தே
பானிற வுருவிற் பனைக்கொடி யோனு
நீனிற வுருவி னேமி யோனுமென்
றிருபெருந் தெய்வமு முடனின் றாஅங்
குருகெழு தோற்றமொ டுட்குவர விளங்கி
யின்னீ ராகலி னினியவு முளவோ
வின்னுங் கேண்மினு மிசைவா ழியவே
யொருவீ ரொருவீர்க் காற்றுதி ரிருவிரு

முடனிலை திரியீ ராயி னிமிழ்திரைப்
பெளவ முடுத்தவிப் பயங்கெழு மாநிலங்
கையகப் படுவது பொய்யா காதே
அதனால், நல்ல போலவு நயவ போலவுந்
தொல்லோர் சென்ற நெறிய போலவுங்
காத னெஞ்சினும் மிடைபுகற் கலமரு
மேதின் மாக்கள் பொதுமொழி கொள்ளா
தின்றே போல்கநும் புணர்ச்சி வென்றுவென்
றடுகளத் துயர்கநும் வேலே கொடுவரிக்
கோண்மாக் குயின்ற சேண்விளங்கு தொடுபொறி
நெடுநீர்க் கெண்டையொடு பொறித்த
குடுமிய வாகபிறர் குன்றுகெழு நாடே." (௫௮)

என்னும் புறப்பாட்டாலுணர்க. ஈண்டு, காரிக்கண்ணனார், அவ்விருவரையும் அருமையாக அழைக்கும்விதமும், அவ்விருவரதொற்றுமையையும்பற்றி அவர்கூறிய இனியவசனங்களும், அவ்வரசரிருவர் உள்ளத்திலும் அழியாத ஒருநன்மையைச் செய்திருக்குமென்பதில் ஐயமேயில்லை. இப்பெருந்தகையார், சோழன்வாயிற் புலவரென்பது, "காவிரிப்பூம்பட்டினத்து" என்னும் இவரதடையே விளக்கும். இங்ஙனம் இவர் சோழனைச்சேர்ந்த புலவராதலால், அவ்விருவருள் தம்மரசனை விளிக்கும்போது, "நீயே—தண்புனற்காவிரிக் கிழவனை" "நீயே, அறந்துஞ்சுறந்தைப்பொருநனை" என மிகச் சுருக்கமாகவேகூறி, பாண்டியனைப் பலவடிகளாலும் பெருக்கமாகப் புகழ்ந்திருப்பது, ராஜகீயமுறையில் இப்புலவர்க்கிருந்த பழக்கமிகுதியை உணர்த்தவல்லது. இதுபோன்ற சந்தர்ப்பங்களில், தம்மரசனைக்காட்டிலும், அவனிடம் வந்த வேற்றரசனை, அதிகமாகப் புகழ்தலே முறையன்றோ. அந்நியர்கள் உங்களிருவரையும் பிரிக்க உழல்வார்களென்பதை இப்புலவர் குறிக்குமிடத்து, "தொல்லோர் சென்றநெறியபோலவும்" என, "பாண்டியசோழ வமிசங்களுக்கு நீண்ட பகைமையிருந்ததுபோல அயோக்கியர்காட்டும் நியாயங்களைக்கேளாது" என்றுகூறுதல் வியக்கத்தக்கது. இன்னும் இப்பாடலிலுள்ள ரசங்கள் அறிஞர் அறிந்து சுவைத்தற்குரியன.

இனிப், பழையபுலவர்கள், அரசரது அநியாயச்செய்கைகளைக் கண்டால், அவற்றை நீக்க முற்படுவதையும், அங்ஙனம் கொடுமை செய்த அரசர்களை வமிசபரம்பரையாக இகழ்ந்து விலக்குதலையும் பெருங்கடமையாகக் கொண்டிருந்தார்கள். கோவூர் கிழாரே முற்கூறிய விஷயத்திற்குத் தக்கதிருஷ்டாந்தமாவர். கடையேழுவள்ளல்களில் ஒருவனும், புலவர்க்குப் பரமோபகாரியும், கபிலர் முதலிய நல்லிசை யாளரால் நாவாரமனமாரப்புகழ்ந்து பாடப்பெற்றவனுமான மலையமான் திருமுடிக்காரியிடத்துள்ள பகைமையால், அவன் மக்களைப் பிடித்துக் கிள்ளிவளவனென்னுஞ் சோழன் யானையைக்கொண்டு கொல்லும்படி செய்யநேர்ந்தபோது, கோவூர்கிழார் அச்செய்தி கேட்டு விரைந்து சென்று:—

நீயே, புறவி னல்ல லன்றியும் பிறவும்
பலவும் விடுத்தோன் மருகனை யிவரே
புலனுழு துண்மார் புன்க ணஞ்சித்
தமதுபகுத் துண்ணுந் தண்ணிழல் வாழ்நர்
களிறு கண்டழூஉ மழாஅன் மறந்த
புன்றலைச் சிறாஅர் மன்றுமருண்டு நோக்கி
விருந்திற் புன்கணோ வுடையர்
கேட்டனை யாயினீ வேட்டது செய்ம்மே. (௪௬)

என, "அரசே! நீ புருவொன்றின் துக்கமட்டுமேயன்றி, பிறவும் உயிர்கட்கு நேர்ந்த துன்பங்கள் பலவற்றையுந் தீர்த்த சோழரது மரபிலுதித்தவன்; இக்குழந்தைகளோ, அறிவாலுழுதுண்ணும் புலவரதுவறுமையைக் கண்டஞ்சித் தம்முடைய பொருளைப் பகுத்துண்ணும் குளிர்ந்த நிழலையுடையராய் வாழ்வாருடைய வமிசத்துதித்தவர்கள். இப்பொழுது இந்தயானையைக்கண்டு, தம்மிளமையால் இயற்கையில் வெருவியழுகின்ற அழுகையையும் மறந்துநிற்கும் மிகச்சிறுபிள்ளைகள் இவர்கள்; இக்கூட்டத்தை அச்சத்துடன் பார்த்து, முன்பு தாங்களறிந்திராத புதியவருத்தமுடையவராயிருக்கிறார்கள். நான்கூறிய இவ்வார்த்தைகளை நீ உள்ளபடி கேட்டவனானால், இனி நீ விரும்பியதைச் செய்க." என்று மிகவிரங்கக் கூறி, அக்கொடுமையினின்று அம்மக்களைத் தப்பவைத்தார். என்ன பெருங்கருணை! எத்தகைய செல்வாக்கு! இவ்வாறே, மற்றொரு சமயத்திலும், முற்குறித்த நெடுங்கிள்ளியிடமிருந்து நலங்கிள்ளிபால்வந்த இளந்தத்தன் என்னும் புலவனைப் பிற்கூறிய அரசன்

ஒற்றனாய் வந்தானென்று கொல்லத்தொடங்கியபோது இக்கோவூர் கிழார்,:—

"வள்ளியோர்ப் படர்ந்து புள்ளிற் போகி
நெடியவென் னாது சுரம்பல கடந்து
வடியா நாவின் வல்லாங்குப் பாடிப்
பெற்றது மகிழ்ந்து சுற்ற மருத்தி
யோம்பா துண்டு கூம்பாது வீசி
வரிசைக்கு வருந்துமிப் பரிசில் வாழ்க்கை
பிறர்க்குத் தீதறிந் தன்றோ வின்றே, திறப்பட
நண்ணார் நாண வண்ணாந் தேகி
யாங்கினி தொழுகி னல்ல தோங்குபுகழ்
மண்ணாள் செல்வ மெய்திய
நும்மோ ரன்ன செம்மலு முடைத்தே." (௪௭)

என்னும் பாடலைக்கூறி, அந்நெடுங்கிள்ளியின் கொடிய எண்ணத்தை மாற்றினார். இதன்கருத்து:—வள்ளலாயுள்ளவர்களை நினைத்து, பழுத்தமரங்களை நோக்கிச் செல்லும் பறவைபோலச் சென்று, கடத்தற்கரிய வழிகளையெல்லாம் தூரமென்றுகருதாமற் கடந்து, திருந்தாத நாவால் தம்மாற்கூடியபடி பாடி, அங்கேபெற்ற சம்மானத்தால் மகிழ்ந்து தம் சுற்றத்தை உண்பித்தும் தாமும்பொருளைப் பாதுகாவாமல் உண்டும், உண்மகிழ்ச்சியுடன் பிறர்க்குக் கொடுத்தும் தம்மை ரக்ஷிக்குஞ்செல்வரால் பெறுஞ்சிறப்பு ஏதுவாக வருந்தும் இப்பரிசிலான் வாழும்வாழ்க்கை பிறர்க்குக் கொடுமைசெய்தலை அறிந்ததோ? இல்லை. இவ்வாழ்க்கை, தம்மொடு எதிர்த்தோரைக் கல்வியால் வென்று அதனால் செருக்குதலுடையதேயன்றி, உங்களைப்போன்ற அரசருடைய பெருமையுமுடைத்து என்பது.

இன்னும் சோழன் செங்கணானும் சேரமான்கணைக்காலிரும்பொறையும் நடத்திய பெரும்போரில், சேரனைப்பிடித்துச் சோழன் சிறைவைத்தபோது, பொய்கையார் என்னும் புலவர்பெருந்தகை "களவழிநாற்பது" பாடிச்சேரனைச் சிறைமீட்டவரலாறும், குமணவள்ளலை நாட்டைவிட்டுக் காட்டில் துரத்திய இளங்குமணனது செற்றத்தைப் பெருஞ்சித்திரனார் நீக்கி அவ்விருவரையும் முன்போல வாழவைத்த வரலாறும் பிரசித்தமானவை.

இனி, அரசர்களிடத்துப் பெருங்குற்றமொன்று கண்டால், முற்காலத்துப் புலவர்கள், அக்குற்றத்தை வமிசபரம்பரையாக மறவாமல் அதனையியற்றிய குலத்தை இழித்துவரும் வழக்கமுடையராயிருந்தாரென்பதும் பழையவாக்கால் அறியலாம். இதற்கு ஓர் அழகிய சரித்திரமுண்டு. இளங்கண்டீரக்கோ என்பவனும், இளவிச்சிக்கோ என்பவனும் ஓரிடத்துச் சேர்ந்திருந்தபோது சென்ற பெருந்தலைச்சாத்தனார் என்னும் புலவர், முன்னவனைத்தழுவி மரியாதைசெய்து, பின்னவனாகிய இளவிச்சிக்கோவை அங்ஙனம் மரியாதைசெய்யாமலிருந்தபோது, "என்னை நீர் தழுவாமைக்குக் காரணமென்னை?" என அவ்விச்சிக்கோ புலவரை உசாவினான். அதற்குப் புலவர் "சிறந்த மலைப்பக்கத்தில் தம் கணவர் நெடுந்தூரத்திற்சென்றாலும், அவர் பெண்டிரும் தம் தாரத்திலேநின்று, பாடும் புலவர்கள்விரும்ப, யானைக்கொடையளிக்கும் பெரும்புகழுடைய கண்டீரக்கோன் இவனாதலால் தழுவினேன்; நீயும், நன்னன் குலத்துதித்த பெருமையும் இயற்கை நற்குணங்களுமுடையவனாயினும் நின் முன்னோனொருவன் புலவர்கட்கு வாயிற்கதவடைத்த கொடுஞ்செயல்பற்றி உங்கள்மலையை எம்மவர் பாடுதலொழிந்தார்—அதுபற்றித் தழுவ இசைந்திலேன் என்னுங்கருத்துடன்.—

"பண்டும் பண்டும் பாடுந ருவப்ப
விண்டோய் சிமைய விறல்வரைக் கவாற்
கிழவன் சேட்புலம் படரி னிழையணிந்து
புன்றலை மடப்பிடி பரிசி லாகப்
பெண்டிருந் தம்பதங் கொடுக்கும் வண்புகழ்க்
கண்டீ ரக்கோ னாகலி னன்று
முயங்க லான்றிசின் யானே பொலந்தேர்
நன்னன் மருக னன்றியு நீயு
முயங்கற் கொத்தனை மன்னே வயங்குமொழிப்
பாடுநர்க் கடைத்த கதவி னாடுமழை
யணங்குசா லடுக்கம் பொழியுநும்
மணங்கமழ் மால்வரை வரைந்தன ரெமரே." (௧௫௧)

என்னும் பாடலைக்கூறினர். இவர் கூறியவாறு, புலவர்க்கு வாயிற்கதவடைத்தவன் நன்னன் என்பவனாகவேண்டும். இவன் இத்தவறேயன்றி, புலவர்களும் பிறரும் இவன்பெயரைக்கேட்டாற் காதை

ப்பொத்திக்கொள்ளத்தக்க பெரும்பழியொன்றையும் புரிந்தான். அஃதாவது, தான் தின்னுதற்கென்று இவனது சோலையில் வளர்க்கப்பட்ட மாவின்கனியொன்று, ஆற்றில் ஒதுங்கக்கண்டு அதனை எடுத்துத்தின்ற பெண்ணொருத்தியை, அக்குற்றத்துக்காகக் கொல்லுவித்தனன். அவளைக் கொல்லாதிருக்கவேண்டி ௮௧-யானைகளும் அவளளவினதான பொற்பாவையுந் தருவதாக அவள்சுற்றத்தார் எவ்வளவோ கூறினும் அதனை அவன் கேட்கவில்லை. இவ்வநியாயச்செய்கையை, பழையபுலவர்கள் பெரும்பழிக்கெல்லாம் ஓர் உதாரணமாகக்காட்டுதல் வழக்கமாயிருந்தது. இதனை,—

“மண்ணிய சென்ற ஒண்ணுத லரிவை
புனறரு பசுங்காய் தின்றதன் தப்பற்கு
ஒன்பதிற் றொன்பது களிற்றொ டவணிறை
பொன்செய் பாவை கொடுப்பவுங் கொள்ளான்
பெண்கொலை புரிந்த நன்னன் போல
வரையா நிரயத்துச் செலீஇயரோ அன்னை.”

எனப் பரணர் கூறுதலால் அறிக. (குறுந்தொகை. ௨௯௨.)

பழைய புலவர்களது உயர்ந்த காம்பீரியமும் உண்மைச்சத்தியமும் உறுதியினின்று விலகாமையும் ௸ செய்திகளால் நன்குவிளங்கும். புலவர்களது அருமைபெருமைகளையறிந்து தவறாமல் ஆதரிக்கவல்ல கருணைத்தமிழ் வள்ளல்கள்பலர் அக்காலத்திருந்த செருக்காலன்றோ இவ்வாறு முற்காலத்துக் கவிகள் விளங்குவாராயினர். இன்னும் ஒரு சிறந்த திருஷ்டாந்தம் இதற்குண்டு. வெளிமான் என்னும் சிற்றரசனிடம் பரிசிற்குச்சென்ற பெருஞ்சித்திரனார் என்பவர்க்கு அவ்வரசன் ஏதோசிறிது கொடுக்க, அதனை அப்புலவர் ஏற்காமல் சினத்துடன்சென்று, குமணவள்ளலையடைந்து அவனால் யானைப்பரிசில் பெற்றுக்கொண்டு, தன்னை அவமரியாதைசெய்த வெளிமானூர்க்குவந்து அங்குள்ள காவல்மரமொன்றில் தம்பரிசில் யானையைக்கட்டி, அவ்வெளிமானிடம் நேரிற்சென்று,—

“இரவலர் புரவலை நீயு மல்லை
புரவல ரிரவலர்க் கில்லையு மல்ல
ரிரவல ருண்மையுங் காணினி யிரவலர்க்
கீவோ ருண்மையுங் காணினி நின்னூர்க்

கடிமரம் வருந்தத் தந்தியாம் பிணித்த
நெடுநல் யானையெம் பரிசில்
கடுமான் றோன்றல் ! செல்வல் யானே. (௧௬௨)

என்ற பாடலால், “இரப்போர்க்குக் கொடுத்துப் பாதுகாப்பவன் நீயொருவனேயல்லன் ; ரக்ஷிப்பவர்கள் யாசிப்பவர்க்கு இல்லாமற்போகவுமில்லை. இனி, யாசிப்பவரிருத்தலையும் பார்! அவர்க்கு ஈவோரிருப்பதையும்பார்! உன் ஊரில் காவலையுடைய மரம்வருந்தும்படி யாம் கொண்டுவந்துகட்டிய உயர்ந்த நல்விலக்கணமமைந்த யானை எமது பரிசில். விரைவான கதிபொருந்திய குதிரைகளுடைய தலைவனே ! இனி நான் செல்வேன்.” என்னும் பொருள்படக் கூறிச் சென்றார். இதனிலும் புலவர்க்கு அக்காலத்திருந்த பெருஞ்செல்வாக்குக்கு வேறுசான்று வேண்டாஎன்பது திண்ணம். அக்காலத்துப் புலவர், அரசர்க்குரிய யானைதேர் முதலிய வரிசைகள் பெறுதலும் வழக்கம்.

இனிப் புலவர்கள், தம்புலமையைக் காட்டிப்பெறும் சம்மானங்களால் மகிழ்வரேயன்றி வெறும் யாசகமாகப்பெறும் பரிசில்களைப் பெரிதும் வெறுப்பர். இதற்குப் பல திருஷ்டாந்தங்கள் புறநானூற்றிற் காணலாம். ஆயினும், ஒன்றுகாட்டுவேன். பெருஞ்சித்திரனார் என்ற புலவர், அதிகமான் நெடுமானஞ்சியிடஞ்சென்று பரிசிற்காகப் பலநாட் காத்திருக்க, அப்புலவரது அருமைபெருமைகளை நேரிற்கண்டு களியாமலே, அவ்வரசன் ஏவலாளர்மூலம் சிலபொருளைப்பரிசிலாகக் கொடுத்தனுப்பியபோது, அதனைப் புலவர் பெற்றுக் கொள்ளாமல், “பரிசில்பெறும்பொருட்டுக் குன்றுமலையுங்கடந்து வந்தேன் எனச்சொல்லியனுப்பிய என்னிடம், அன்புகொண்டு “இப்பொருளைக்கொண்டு இவ்வாறுபோகுக” என்று விடுப்பதற்கு என்னை எத்தன்மையனாக அறிந்தான், அரசன்; என்னை அழைத்துவரச் சொல்லிக் காணாமலேதந்த இந்தப்பொருளைக் கொள்ளுதற்கு, யான் ஓரிலாபத்தையே கருதும் வெறும்யாசகன் அல்லன்; கல்விமுதலிய பெருமையின் அளவையறிந்து கொடுத்துவிடின், அப்பரிசில், தினையளவாயினும் நல்லதாகும்” என்னுங் கருத்துக்கொண்ட:—

“குன்று மலையும் பலபின் னொழிய
வந்தனென் பரிசில் கொண்டனென் செலற்கென

நின்ற வென்னயந் தருளி யீதுகொண
டீங்கனஞ் செல்கதானென வென்னை
யாங்கறிந் தனனோ தாங்கருங் காவலன்
காணா தீத்த விப்பொருட் கியானோர்
வாணிகப் பரிசில னல்லேன் பேணித்
தினையனைத் தாயினு மினிதவர்
துணையள வறிந்து நல்கினர் விடினே.'' (௨௦௮)

என்னும் பாடலைக்கூறினர். இவர்கூறிய கருத்துப்போலவே, கபிலரென்னும் புலவர்பெருமானும் மலையமான் திருமுடிக்காரி என்னும் வள்ளலைநோக்கி:—

"ஒருதிசை யொருவனை யுள்ளி நாற்றிசைப்
பலரும் வருவர் பரிசின் மாக்கள்
வரிசை யறிதலோ வரிதே பெரிது
மீத லெளிதே மாவண் டோன்ற
லதுநற் கறிந்தனை யாயிற்
பொதுநோக் கொழிமதி புலவர் மாட்டே." (௧௨௧)

என்று, "வரிசையறிந்து கொடுத்தலே கொடை"யாகுமென்பதை நன்றாக வற்புறுத்துதல் காண்க.

இங்ஙனம், பழையபுலவர்கள் தமது பெருந்தன்மைகளால், அக்காலத்தரசராற் பெரிதும் ஆதரிக்கப்பெற்றமையாற் கவலையென்பது சிறிதுமின்றியே வாழ்ந்துவந்தார்கள். "இன்னாராற் பாடப்பெற்ற அரசன்" என்று தன்னைப்புகழ்ந்து கொள்வதை அப்போதை அரசர் பெருங்கௌரவமாக மதித்துவந்தனர். தலையாலங்கானமென்ற இடத்தில் எழரசர்களைப் போரில்வென்ற நெடுஞ்செழியன் என்னும் பாண்டியன், போரில் பகைவர்முன் சபதஞ்செய்யும்போது, "என்னை இழித்துக்கூறிய அரசர்களை யுத்தத்திற் சிதற அடித்து அவர்களைச் சிறைசெய்யேனாயின், மாங்குடிமருதன் முதலான நல்லிசைப் புலவர்கள் எனது தேசத்தைப்பாடாமல் ஒழிக" எனக் கூறினனென்றால் வேறுகூறுவதென்? இதனை:—

"சிறுசொற் சொல்லிய சினங்கெழு வேந்தரை
அருஞ்சமஞ் சிதையத் தாக்கி முரசமொ
டொருங்ககப் படேஎ னாயிற் பொருந்திய

* * *

வோங்கிய சிறப்பி னுயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் றலைவ னாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்
புலவர் பாடாது வரைகவென் னிலவரை."

எனப் புறநானூற்று ௭௨-ம் பாட்டில் வருதலால் உணர்க. இம்மாங்குடி மருதனாரே, இப்பாண்டியனை மதுரைக் காஞ்சியாற் புகழ்ந்தவர். இனி, இச்செழியன் போலவே, பூதப்பாண்டியன் என்ற மற்றொருவனும்:—

"வையை சூழ்ந்த வளங்கெழு வைப்பிற்
பொய்யா யாணர் மையற் கோமான்
மாவனு மன்னெயி லாந்தையு முரைசால்
அந்துவஞ் சாத்தனு மாத னழிசியும்
வெஞ்சின வியக்கனு முளப்படப் பிறருங்
கண்போ னண்பிற் கேளிரொடு கலந்த
இன்களி மகிழ்நகை இழுக்கி."

எனச் சபதஞ்செய்தான். இவ்வடிகளிற் கூறப்பட்டவர்களிலே பலர் புலவர்களாகத் தோன்றுதல் காணலாம். இவ்வாறே, "மோசி பாடிய ஆயும்" என ஆயண்டிரன் என்றவேள் புகழப்படுவன். அன்றியும், முன்னைப்புலவர்கள், தம்மில் அசூயை என்பதின்றி, மற்றொரு புலவரது அருமைபெருமைகளை உள்ளவாறே அறிந்துபோற்றிப் புகழுவர். அதிகமான் மகன் பொகுட்டெழினி, கோவலூரை யழித்தபோது, "இன்றும் பரணன் பாடினன் மற்கொல் நீ, முரண்மிகு கோவலூர்நூறிநின்-னரணடு திகிரி யேந்திய தோளே" எனப் பரணர் அவ்வரசனைப்பாடின விசேடத்தை ஔவையார் புகழ்ந்தார். மாறோகத்து நப்பசலையார் என்னும் புலவர், மலையமான் திருமுடிக்காரியைப் புகழும்போது:—

"தெறலரு மரபினின் கிளையொடும் பொலிய
நிலமிசைப் பிறந்த மக்கட் கெல்லாம்
புலனழுக் கற்ற வந்த ணாளன்
இரந்துசென் மாக்கட் கினியிட னின்றிப்
பரந்திசை நிற்கப் பாடினன்."

எனக் கபிலர்பேராற்றலை உள்ளபடியே வியத்தலும்; பொருந்திலிளங்கீரனார் என்பார் சேரனொருவனைப் புகழும்போது:—

"செறுத்த செய்யுட் செய்செந் நாவின்
வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன்
இன்றுள னாயி னன்றும னென்றநின்
னாடுகொள் வரிசைக் கேற்பப்
பாடுவன் மன்னாற் பகைவரைக் கடப்பே."

எனக், கபிலர் இப்போது இருந்தால் எவ்வாறு புகழுவரோ அவ்வாறு நான் பாடுவேன், என்று சிறப்பித்தலும் அறிந்துமகிழத்தக்கன. இனி, இப்புலவர்களிற்பலர் பெருவள்ளல்களாற் பெரிதும் பேணப்பட்டும், மூவேந்தர்களது செங்கோன்முறையாற் காக்கப்பெற்றும், அறிஞர்களது கூட்டரவால் அகங்களிக்கப்பெற்றும், அறிவுநிரம்பிய பெண்டுபிள்ளைகள் ஏவலராதியோரால் ஆனந்தமுற்றும் வாழ்ந்துவந்தனர். கோப்பெருஞ்சோழன் என்னும் நல்லிசையரசன், பிசிராந்தையார் என்னும் பெருந்தகையாளரைக் கண்டபோது, "யான் உம்மைப்பற்றி நெடுங்காலமாகக் கேள்வியுறுகின்றேன்; நீர் நரையிலராகக் காணப்படுகின்றீரே; அதன் காரணமென்ன" எனக்கேட்க அப்புலவர், பின்வரும் மிகவழகிய விடையைக்கூறினர். அது வருமாறு :—

"யாண்டுபல வாக நரையில வாகுதல்
யாங்கா கியரென வினவுதி ராயின்
மாண்டவென் மனைவியொடு மக்களு நிரம்பினர்
யான்கண் டனையரென் னிளையரும் வேந்தனு
மல்லவை செய்யான் காக்கு மதன்றலை
யான்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழு மூரே."   (௧௯௧)

இதன்பொருள்:—உமக்குக் கழிந்தவருஷங்களோ பலவாயிருக்க, நரையில்லாதிருப்பது எப்படியாயிற்றென்று கேட்பீராயின்; (சொல்லுவேன்) என்னுடைய மாட்சிமைப்பட்ட குணங்களையுடைய மனைவியுடனே புதல்வர்களும் அறிவு நிரம்பினோர்கள்; யான் எண்ணுவதெதுவோ அதையே எண்ணிச்செய்வர் என்னுடைய ஏவலாளரும்; அரசனோ, நீதியல்லாத காரியங்களைச் செய்யாதவனாய்க் காக்கின்றான்; இதற்குமேலே—யானிருக்கின்ற ஊரில், நற்குணங்கள் நிரம்பிப் பணியவேண்டுமுயர்ந்தோரிடத்துப்பணிந்து, ஐம்புலனும் அடக்கிய கொள்கையையுடைய சான்றோர்கள் பலர்; இவையே என் நரையில்லாமைக்குக்காரணம்" என்பது. இப்பாடலொன்றே அக்காலத்துப் புலவர்களது நல்வாழ்க்கைக்குத் தக்க சான்றன்றோ. கவலையே நரைக்குக்காரணமென்றும், அக்கவலைக்குரிய காரணங்கள் தம்மிடத்தின்மையால், அது தமக்கு இல்லையாயிற்றென்றும் இப்புலவர் கூறியிருப்பது, அறிஞர்கள் ஆழ்ந்துசிந்தித்து மகிழ்தற்குரியது.

இங்ஙனம், பழைய புலவர்பெருமக்களது குணாதிசயங்களிலே முக்கியமானவை சிலவே இங்கெழுதப்பட்டன. அவர்கள் அக்காலத்தடைந்திருந்த பெருமைகளையெல்லாம் எழுதுவதானாற் பலசஞ்சிகைகளாகும். இவ்வாறு, தமிழ்ப்புலமைக்கு அக்காலத்திருந்த பெருமதிப்பு, பிற்காலத்தில் சோழபாண்டியர் முதலியோர்நாளிலும் குறையாதிருந்ததென்றே தெரிகின்றது. ஒட்டக்கூத்தர் முதலிய பெரும்புலவர்கள் சோழரால் எவ்வளவுசிறப்பாக அபிமானிக்கப்பட்டு விளங்கினர் என்பதற்குச் சரித்திரங்களே சாட்சிகளாகும். இத்தகைய செல்வாக்கு, அதற்குப் பிந்தியகாலங்களில் அநேகமாக மாறி, இந்நாளில் முற்றுஞ் சிதைந்துவிட்டதென்னலாம். அக்காலத்திருந்ததுபோன்ற புலவர்பெருமக்களைப்போல்வார் இக்காலத்தில் இல்லாதுபோயினரென்று சிலர்சொல்லக்கூடும். ஆனால், தமிழருமையறிந்து ஆதரிக்கும் வள்ளல்கள் அருகிவிட்டதுதான் தமிழ்ப்புலமை குன்றியதற்குக் காரணமேயன்றி வேறன்று. கல்வி முதலியவற்றின் செழிப்பு ஆதரிப்பவர் மிகுதியால் உண்டாவதேயன்றிப் பிறிதில்லை. இந்நாளில் தமிழ்ப்பிரபுக்கள் தம் சொந்தபாஷையை இகழுமளவு இந்தியதேசத்தே பிறபாஷையிலும் பிரபுக்களில்லையென்பது பிரசித்தமாக அறிந்ததே. இன்னோர் இகழ்தன்மட்டுமோ! அதன் விருத்தியைச் சிதைக்கவும் கூடியவரை முயல்கின்றனர். இவற்றையெல்லாம் ஈண்டுவிரிப்பதாயின், அது நம்மனோர் வயிற்றெரிச்சலைக் கிளப்பிவிடுவதாக முடியுமென்றஞ்சுகின்றேன். இக்கொடிய நிகழ்ச்சியினிடையே, மதுரையில் தமிழ்ச்சங்கத்தை நாட்டித் தமிழ்ப்பயிரை வளர்த்துவரும் கருணைவள்ளலொருவரையே நினைத்துக்கொண்டு நாம் சிறிதாறவேண்டியிருக்கின்றது. இப்பெருந்தகையைப்போன்ற செல்வமுடையார்பலர் நந்நாட்டிலுளராயினும், அவர்களில் பத்துப்பெயரேனும் தமிழ்வளர்ச்சியின்பொருட்டு முற்பட்

டுழைப்பார்களானால், பண்டைக்காலத்திருந்ததாகக்கண்ட பெரும் புகழும் புண்ணியமும் இக்காலத்தவரும் அடைதல் அரிதோ? தமிழ்த்தெய்வமே! இக்காலத்தில் நீயடைந்துள்ள பாக்கியங்களிற் சிறந்தது, இத்தமிழ்ச்சங்கவள்ளலைப் பெற்றிருப்பதே போலும்.

பத்திராசிரியர்.

முனையதரையர்.

புனையுங் குழலான் பரிந்தளித்த பொங்க லமுதும் பொரிக்கறியு
மனைய சவரி ராஜருக்கே யாமென் றருந்து மாதரவின்
முனைய தரையன் பொங்கலென்று முகுந்தற் கோது முதகீர்த்தி
வினையும் பெருமை யெப்போதும் வழங்குஞ் சோழ மண்டலமே.

எனச் சோழமண்டலசதகத்தில் ஒரு பாடல் கூறப்படுகிறது. அழகிய பெண்ணொருத்தியால் அளிக்கப்பெற்ற பொங்கலமுதையும் பொரிக்கறியையும் முனையதரையர் என்பவர் உண்ணும்போது "இவை சவரிராஜரென்னுந் திருநாமமுடைய திருமாலுக்கே அர்ப்பணம்" என்று உண்பது வழக்கமென்பதும், அக்காரணத்தால் "முனையதரையன் பொங்கல்" என்று திருமாலமுதுசெய்தருளும் சிறந்ததோர் அன்னவிசேடத்தாற் சோழநாடு பெருமைபெறுவதென்பதும் இப்பாட்டால் விளங்குகின்றன. இப்பாட்டிற்குறித்த சவரிராஜர் என்னுந் திருநாமங்கொண்ட திருமால், கோயில்கொண்டருளுந் திவ்யதேசம், சோழநாட்டுத் திருக்கண்ணபுரமாகும். இத்திருப்பதி மான்மியத்தைத் தமிழ்க்கவிகளால் சிலகாலத்துக்குமுன் ஸ்ரீநாராயணசாமி நாயக்கரென்பார் பாடியிருக்கின்றனர். மேற்கூறிய கதையின் விஷயம் இப்புராணத்தால் விளங்கக்கூடுமென்று அதனை ஆராய்ந்தபோது, "முனியோதன அத்தியாயம்" என்னும் அதன் பகுதியில் இவ்வரலாறு முழுதும் நன்கு காணப்பட்டது. அதிற் கூறப்பட்டவை வருமாறு:—

தானம் வீரமுதலியவற்றால் பெரும்புகழ்வாய்ந்து விளங்கிய "வீரசோழன்" என்பான் சோணாட்டை ஆட்சிபுரிந்து வருங்காலையில், கல்விகேள்விகளானிறைந்த "முனையதரையர்" என்பார் அரசனாற்பெரிதும் அபிமானிக்கப்பெற்று, இருபதுநாட்டு அரசர்களிடமிருந்து வருதற்குரியதிறைகளை உரியகாலங்களிற்சேகரஞ்செய்து ராஜஸமூகத்துக்கு அனுப்பும் உயர்ந்த தண்டத்தலைவராக நியமிக்கப்பெற்றார். அவ்வுத்தியோகத்தை முனையர் சிறிதும் குறைவின்றி நடத்திக்கொண்டு வந்ததோடு, திருக்கண்ணபுரத்துத் திருமாலிடம் பெரும்பத்தி நாளும் வளரப்பெற்றவராய் அத்திருப்பதியிலே ஓர் அழகிய மாளிகை கட்டி வசித்துக்கொண்டு, திருமால் கைங்கரியம் சிறப்பச் செய்துவந்தார். இங்ஙனம் வாழ்ந்துவரும்போது, கணிகையொருத்திபால் இவர் மோகமிக்கவராய் அவளின்பத்திலே அழுந்திவிட்டார்.

ஆயினும், அத்திருமால்பத்தியிற் சிறிதுங்குறைந்திலர். இவ்வாறு நிகழ்ந்துவரும்போது பெரும்பஞ்சமொன்று வந்து நாட்டைப்பெரிதும் வருத்தியது. அவ்வற்கடக்கொடுமையில் பிராணிகள் பசித்தீயால் மிகவிடர்ப்படுவதையும் சவரிப்பெருமாள் கைங்கரியங்கள் தடையுறுவதையுங் கண்டு "எம்பெருமானும் அவனது அவயவங்களாய் அவனின்வேறாகாத இவ்வான்மகோடிகளும் வருந்துவதே" என்று இரங்கி, அரசனது திறைப்பொருள்களையெல்லாம் இஃதீனமென்று கருதாமல், தானங்களிலும் பூஜைகளிலும் உபயோகிப்பாராயினர். பின்பு, வற்கடக்கொடுமை நீங்கி நாடுசெழித்த பின், அரசனது திறைப்பொருளை அனுப்புதற்கு வழியின்றி முனையர் கவலைப்படும்பொழுது, இச்செய்தி இவருக்கு விரோதியான மந்திரியொருவனால் சோழனுக்குத்தெரிவிக்கப்பட்டது. இதுதெரிந்ததும் அரசன் பெரிதுஞ்சினந்து மள்ளரையேவி "இறைப்பொருளைக் கொள்ளைகொண்ட முனையனை இரக்கமின்றி இமிசித்து மானபங்கப்படுத்திச் சிறைப்படுத்தி வாருங்கள்" என்று ஆக்ஞாபித்தனன். அன்னோர் இம்முனையரிடம்வந்து, அவ்வாறே பற்பலவிதமாகப் பொறுக்கக்கூடாத துன்பமிழைத்து மானபங்கப்படுத்திச் சிறையிட்டுச் சென்றார்கள். இங்ஙனம் சிறையிற்படும் பெருந்துன்பத்துக்காற்றாராய் முனையதரையர் திருமாலருளைநினைந்து அரற்றினர். இங்ஙனம் நிகழ முனையரது காதற்கணிகையோ, தன்காதலர்க்கு நேர்ந்த பெருந்துன்பத்துக்காற்றாது, அங்குள்ள வாவிநீரினின்றுகொண்டு அத்திருப்பதி

எம்பெருமானைப் பலவிதமாகப்பிரார்த்தித்து ஓலமிட்டழுது, "எம்பெருமானே! இன்னும் ஐந்துநாளில் என்காதலரை யானடைய நீர் செய்யாவிடின், எரியில் மூழ்கி என் இன்னுயிர் துறப்பேன்" என்றுகூறி உணவுமுதலியன கொள்ளாமல் வருந்திநின்றனள்; இது நிற்க. திருக்கண்ணபுரத்தெம்பெருமான் முனையரதும் அவரது காதற்கணிகையரதும் ஆற்றொணாத் துன்பமெல்லாமறிந்து அவற்றைநீக்கியருளத் திருவுளங்கொண்டு, ஒரு பாகவதவேடத்துடன் சோழவரசன் கனவிடைத்தோன்றி, "யான் கண்ணபுரத்தான்; என் பத்தர்க்குற்ற துன்பம் நீக்கவந்தேனென்று, அவரைச் சிறைநீக்குதற்குவேண்டிய செய்திகளையெல்லாந் திருவாய்மலர்ந்தருளி மறைந்தனர். இவற்றைக் கேட்டமன்னன் திடுக்கிட்டுவிழித்து, தன்மந்திரியை அழைத்து "பெரிய அபசாரம் உன்னால் நிகழ்ந்ததே" என்று அவனை மிகவுங் கடிந்து திருக்கண்ணபுரம்வந்து முனையரைச் சிறைநீக்கிவிட்டு அவரைநோக்கி "உம்மால் அடியேன் எம்பெருமான் தரிசனமும்பெற்றேன்" என்று அவரைப் பலபடியாகக் கொண்டாடி, "உமது காதற்கணிகை தீப்பாயுமுன்னர் நீர் அவளிடம் விரைந்துசெல்லுதிர்" என்று அனுப்பிவிட்டனன். அவரும் அவள் தீப்பாயுந்தருணத்திற் சென்று அவளைக்கண்டு இருவரும் ஆனந்தபரவசமடைந்திட, எம்பெருமான்திருவருளை மிகவும் ஏத்திப்பாடி, அன்றிரவிலே தம் திருமாளிகை புக்கனர். அப்போது நெடுநாட்பசியால் முனையர் இளைத்தவராதலின், அவர் நியமனப்படி, கணிகை, பாலரிசிபயறு நெய் சர்க்கரை இவைகலந்து அட்ட "பொங்க"லன்னத்தையாக்கி அவருக்குப்பணிமாற, அஃது அமிர்தமயமாய் இருந்தமையாலே முனையர் "இஃது எம்பெருமானுக்கே ஏற்றது" என்று உள்ளன்புடன் ஓதி அதனை உண்டனர். இங்ஙனம், அவ்விரவுகழிய, காலையிற் கோயிலைத் திருக்காப்புநீக்கி அருச்சகர் எம்பெருமானது திவ்யமங்களவிக்ரஹத்தை நோக்கியபோது நெய்யுடையடிசில் மெய்படவழிந்திருந்ததுகண்டு, "இஃதென்னை குற்றம்வந்ததோ" என்று நடுங்கி எங்கும், சோதித்துவரும்போது, முனையதரையர் இரவில் நிகழ்த்திய செய்திதெரிந்து, அவ்வூராரெல்லாம் எம்பெருமான் திருவிளையாடலை நினைந்து ஆடிப்பாடி அகங்களித்தார்கள். அப்போது முனையர் இவ்வற்புதத்தை எம்பெருமான் தம்பொருட்டு நிகழ்த்தியபடியால், அவ்விசேடம் உலகமுள்ளபரியந்தம் விளங்கும்படி, அன்றிரவில் தாமர்ப்பித்த பொங்கலமுது பெருமாளுக்கு எக்காலத்துந்நிகழ வேண்டிய வருவாய்களை ஏற்படுத்தினர். அக்காலமுதல் இன்றும், அப்பொங்கல் "முனியோதனம்" என்னும் கீர்த்தியுடன் பெருமாளுக்கு திருவமுதுசெய்தருளுஞ் சித்திரான்னமாக நடைபெற்றுவருகின்றது" என்பது. இச்சரித்திரம் சோழமண்டலசதகத்திற்கண்ட வரலாற்றைச் செம்மையாக விளக்கவல்லது. இனி, மேற்கூறிய சரித்திரத்திற் கண்டவாறு, முனையதரையருக்கு அவருடைய காதற்கணிகை அவரது பிரிவாற்றாமையைக் குறித்தெழுதிய வெண்பாவொன்று தமிழ்நாவலர் சரிதையினும், முதலிற்காட்டிய சோழமண்டல சதகப்பாடலின்கீழும் குறிப்புடன் காணப்படுகின்றது. அது :—

"இன்றுவரி லென்னுயிரை நீபெறுவை யின்றைக்கு
நின்றுவரி லன்னதுவு நீயறிவை—வென்றி
முனையா கலவி முயங்கியவா றெல்லாம்
நினையாயோ நெஞ்சத்து நீ."

என்பது. இப்பாடலால், முனையதரையர்பால் அவர்கணிகை வைத்திருந்த பேரன்பு இற்றெனவிளங்குவதோடு, அவள் புலமையிற்சிறந்தவளென்பதும் புலப்படும். இப்பாட்டு, மேலேகுறித்த சரித்திரத்திற் குறித்தபடி, முனையதரையர் சிறைப்படுத்தப்பட்டு வருந்தியபோது, அக் கணிகை, குறித்தநாளில் அவர்வருகையை விரும்பி எழுதியதாகக் கொள்ளத்தக்கது. "இன்றைக்கு நின்றுவரில் அன்னதுவு நீயறிவை" என்பது, அக்கணிகை தன்னுயிரை விடவிருந்த செய்தியைக்குறிப்பித்தலால், அவள் தீப்பாயவிருந்த கதையினுண்மை தெளிவாகிறது. இனி, புராணத்தில், முனையதரையர் என்பவர் "வீரசோழன்" காலத்தவரென்று கூறப்படினும் — அபயன் என்னுங் குலோத்துங்கசோழன் மகனாகிய விக்கிரமசோழனதவையிலிருந்த முக்கியமந்திரிகளில் இப்பெயருடையார் ஒருவர் காணப்படுகிறார். இதனை விக்கிரமசோழனுலாவில்,

"ஆர்க்குங் கழற்கா லனகன் றனதவையுட்
பார்க்கு மதிமந்த்ர பாலகரிற்—போர்க்குத்
தொடுக்குங் கமழ்தும்பை தூசிநெடுஞ் சூடிக்
கொடுக்கும் புகழ்முனையர் கோனும்."—

என வருதலால் உணர்க. இதனால், மேற்குறித்த சோழமண்டல சதகப்பாடல்கட்கும் புராணக்கதைக்கும் உரியவர், இம்முனையர் கோனேபோலும். இவராயின், விக்கிரமசோழனுக்கு வீரசோழனென்னும் மறுபெயருமுண்டென்று கொள்ளல்வேண்டும்.

பத்திராசிரியர்.

மதுவிலக்கு.

சென்ற மாதத்திலே சென்னையிலுள்ள தொண்டமண்டலம் ஹைஸ்கூலில் "லாஹிரிவஸ்துக்களால் வருந்தீங்கு" என்னும்விஷயத்தைப்பற்றி மிஸ்ஸஸ் பெசன்ட் பேசினார். அவ்விஷயத்தின் சாராம்சம்,—" சுதேசமித்திரன் " பத்திரிகையில் வெளிவந்ததை, அடியில் பதிப்பித்திருக்கிறோம் :—

தேசத்தால் ஆங்கிலத்தவளாகிய நான் இவ்விந்திய சபையில் மதுவிலக்கைப்பற்றிப்பேச நாணுகிறேன். ஏனெனில் இந்தியமதங்கள்—இந்துமதமும் மகமதியமதமும்—மதுஉபயோகிப்பதைத் தடுத்திருக்கின்றன. இருந்தும் இக்காலத்தில மதுஉபயோகிக்கும் வழக்கம் இந்தியரிடையில் பரவிவருகின்றது. கவர்ன்மெண்டு கணக்குகளைப்பார்த்தால் மதுவஸ்து வெளிநாட்டிலிருந்து வரவர அதிகமாய் இத்தேசத்திற்கு வருகின்றது என்று வெளியாகிறது.

இப்படி அதிகரிப்பது இங்குள்ள மேனாட்டார் தொகை அதிகரிப்பதால் என்று சொல்லுவதற்கில்லை. அன்றியும், வெளியிலிருந்து வருமிந்த வஸ்துக்கள் வரவர விலையேறியவாயிருக்கின்றன. ஆகவே இவைகளைவாங்கி உபயோகிப்போர் பணக்காரர்களென்று ஏற்படுகிறது. உயர்வகுப்போர்களாகிய பிராமணர்களையும் இந்தத் துர்வழக்கம்பற்றியிருக்கிறது. இது தேசத்திற்கே கெடுதிவிளைப்பதாகும். இப்படி இந்தியர்களுள் இந்தவழக்கம் பழகுவதற்கு மூன்று காரணங்கள் சொல்லலாம்.

பெரிய மனிதர்களாயுள்ளோர் வெள்ளையர் கொடுக்கும் விருந்து சமயங்களில் கலக்கவேண்டியதாகி அவரது வழக்கங்களை அனுசரிக்கவேண்டியிருக்கிறது. அரசனது தேகசௌக்கியத்திற்காகக் குடிக்கிறேனென்று ஒயின்சாப்பிடுவது வெள்ளையர்களுள் வழக்கம். இவ்விஷயத்தை எட்வர்டுஅரசர் கவனித்து இவ்விதமான சமயங்களில் ஒயினுக்குப்பதிலாக ஜலத்தை உபயோகிக்கலாமென்று உத்தரவிட்டார். இனி ஒயின் குடிப்பதிற்போல ஜலங்குடிப்பதிலும் ராஜவிசுவாசம் குறைவில்லாமலிருக்கிறது! இரண்டாவது காரணம், மேசனறி (Masonry) சங்கங்களாகும். இந்த சங்கங்கள்கூடி முடியுந்தோறும் இறைச்சியும் ஒயினும் வழங்கும் ஒரு விருந்திடுவது வழக்கமாயிருக்கிறது. இதனால் கெட்டுப்போன இந்தியர்கள் பலரை எனக்குத்தெரியும். மூன்றாவதாக இக்காலப்படிப்பில் மதபோதனை அடங்காமையாகும். மற்றையவிரண்டிலும் இதுவே பெரிய காரணமாகுமென்று நினைக்கிறேன்.

இந்நாட்டிலுள்ள இவ்வழக்கத்தால் மேனாடுகளில் விளைவதிலும் அதிகத் தீங்குவிளையும். ஏனெனில் இந்நாட்டின் சீதோஷ்ணமும் தேகவமைப்பும் பாரம்பரியமும் தீங்கை அதிகப்படுத்துகின்றன. மேனாட்டார் தலைமுறை தத்துவமாகக் குடியிற்பழகினவர்; இந்தக் குடி வழக்கத்தால் க்ஷயரோகமும், ரத்தாசய வியாதிகளும், நரம்பு நோய்களும், வாயுரோகமும், சூலைக்கட்டுமுண்டாகின்றனவென்று மேனாட்டார்களே ஒத்துக்கொள்ளுகிறார்கள். இந்தியாவை ஆதியில் காத்த மகாவீரர்களாகிய ராஜபுத்திரத்தலைவர்கள் அதிபாலியத்திலிறக்க, அவர்கள் ஸ்தானத்தில் இப்போது சிறுகுழந்தைகளிருக்கிறார்கள். பாட்டியாலா, பாரிட்பூர் போன்ற சீக்கியநாடுகளிலும் இதே நிலைமைதான். இப்போது தலைமைவகிக்கும் இச்சிறுவர்கள் ஆசாரமுடைய ஹிந்துக்கள்; மதுவைத்தொடுவதேயில்லை. இவர்கள் முன்னோர் அகாலமரணமானதற்கு அவர்கள் மேனாட்டுப்போதகர்கள் கைப்பட்டு, மேனாட்டுவழியில் விழுந்து மேனாட்டு ஆசாரவிவகாரங்களைப்பற்றியதே காரணமாகும். தலைமுறைக்கணக்காய் பரிசுத்தத் தன்மையுடைய நீங்கள் இத்தீயவழக்கத்தைப்பற்றினால் உங்களுக்கு மிக்கதிதான். இதனால் கெடுவது நீங்கள்மட்டுமன்றி உங்கள் சந்ததியுமாகும். ஆகவே இந்திய ஜனத்தை வேரிலேயே கெடுத்துவிடு

வதாகும் இந்த வழக்கம். மேனாட்டாருள் நல்ல அம்சங்களைமட்டும் கிரகித்துத் தீயவைகளையொழிக்கவேண்டும்.

மேலும், ஒவ்வொருவர்தேகமும் நிமிஷந்தோறு மாறிவருகின்றது. இஃது இக்கால சாஸ்திரவான்களும் பிரம்மஞ்ஞானிகளும் அங்கீகரித்துக்கண்டுள்ள உண்மை. ஒவ்வொரு நிமிஷமும் மனிதன் இறந்துகொண்டேயிருக்கிறானென்று சொல்லலாம். தேகமுழுமையும் ஒரேயடியாய் மாறிவிடுகின்றதே மரணமென்பது. இந்தச்சபையினுள் வந்தபடியே தேகமுடையவர்களாய் உங்களிலொருவரும் வெளிப்போகமாட்டீர்கள். ஒருவன்தேகத்தில் சிலவஸ்துக்கள் வெளிப்பட்டு மற்றொருவன் மேல்விழும். அம்மைநோய் கொண்டவொருவன் எழுந்தவுடன் அவ்விடத்தில் டிராம்வண்டியில் வேறொருவன் உட்காரமாட்டான். ஏனெனில் அந்நோயணுக்கள் தன்னைப்பீடிக்குமென்றபயத்தினால். குடிக்கிறதாகிய நோயுமப்படித்தான். ஆகையால் நாமன்றி நம்மயலாருமிந்தக்கெட்டவழக்கம் கொள்ளாமல் காப்பது பெருத்த பொதுவிசாரமாகக் கொள்ளத்தக்கது. "என்னுடம்பை நான் என்னவேண்டினாலும் செய்துகொள்வே"னென்பது அசடர்கள் வார்த்தையாகும். ஒவ்வொருவருடம்பிலும் மற்றோருக்குப்பாத்தியமுண்டு; ஒருவருடம்பால் மற்றொருவர் கெடுவதாயிருக்கிறது. நீ, அழுக்குடையவனாய்க் குடிகாரனாய்ப் பெருந்தீனிக்காரனாய் இருந்தால், சமூகமெங்குமே கெட்டவிஷத்தைச் சிதறும்படியான ஆபத்தாய் விடுகிறாய்.

உண்மை இப்படியிருப்பதால், முனிசிபாலிடி தன்தொழிலைச் சரிவர உணர்ந்துசெய்வதாயின், நகரத்தில் குடிப்பதற்கான பாகமென்று பிரத்தியேகமாய்வைத்து, மற்றோர் அங்கேபோகாமல் தடுக்கவேண்டும். இதனால் ஒவ்வொருவருக்குமுள்ள சுயேச்சையைக்கட்டுப்படுத்துவதாகுமென்றால், குடிவழக்கமில்லாதவர்கள் சுகசரீரிகளாயிருக்கப் பாத்தியமுண்டல்லவா? அந்தப்பாத்தியத்திற்குக் கெடுதிசெய்வதும் சுயேச்சையைத் தடுப்பதாகாதோ? மேலும் நன்னடத்தையுடையவர்களிடம் இந்த விஷத்துகள்கள் அதிகமாய்த்தரிக்காது போகவும்கூடும். குடிமுதலிய கெட்டவழக்கமுடையவனைக் கண்டால் தூரவிலகவேண்டும். அவனோடு புசிக்கவோ, அவன்வீட்டிற்குப் போகவோ, அவனிடம் பழகவோ கூடாது. அவன், ஏனென்றுகே

ட்டால் உண்மையைக் கூசாதுசொல்லவேண்டும். அப்படிச்செய்தால் தான் வெட்கி அவன் நல்வழிப்படுவான். பூர்வத்தில் ஜாதிவரையறை ஏற்படுத்தியது இக்காரணம்பற்றியேயாம். நடத்தையில் சுத்தமில்லாதவர்களைத் தொடக்கூடாதென்றும் அயலார்பாத்திரத்தைத் தொடக்கூடாதென்றும் ஏற்படுத்தியதற்குக் காரணமிதுவேதான். ஆனாலும், பிறப்பினாலோ பெயரினாலோ அன்றி, நடத்தையால்தான் பார்ப்பான் உயர்குலத்தோனாகிறான். ஆகவே அசுத்தனான பிராமணனைவிட சுத்தனான சூத்திரனை வீட்டில் சமையலுக்கு வைத்துக்கொள்ளலாம்.

குடியினால் வேறோர் அபாயமுண்டு. அது மூளையைக்கெடுத்துவிடுகிறது. சந்தியாவந்தனம் செய்யவேண்டியவனாகிய பிராமணன் இந்தக் குடிவிஷத்தை அஞ்சி விலக்கவேண்டியவனாகிறான். காயத்திரிமந்தர ஸ்தானங்களாகிய மூளையின் பாகத்தை இது கெடுத்துவிடுகிறது.

சூக்ஷ்மசரீரத்தைப்பற்றி யோசிக்குமிடத்து, அதற்கும் தீங்கு விளைகிறது. இறந்தபிறகு ஒரு மனுஷநிலையை அறியக்கூடுமானால், இந்தத்துர்வழக்கத்தை ஒழிக்க வேறுமுகாந்தரமெடுத்துச் சொல்லவேண்டியதில்லை. கர்மலோகத்தில் இவன் பிரேதனானபிறகு குடிவழக்கத்தாற் படும்பாடு சொல்லத்தரமன்று. இவ்விதம் கர்மலோகத்தில் வாதைப்படுகிறவர்கள் மேனாடுகளிற்போற் கீழ்நாடுகளிலும் அதிகப்பட்டுவருகிறார்கள். குடிகாரனாயுள்ளவனைச் சிலவேளையில் சிலநாள் அவ்வழக்கத்தை நிறுத்தச்செய்யலாம். பிறகு அந்தவழக்கம் அவனை மீறிவிடும். உதாரணமாக, ஓர் இந்தியஅரசர் இந்தவழக்கத்திற்குள்ளானார். அவர் சிலவருஷங்களுக்குமுன் என்னுதவியை வேண்டினார். அவர்சகோதரர் இந்த வழக்கத்தால் மூளைஜன்னிகண்டு இறந்துபோயிருந்ததால், தன்னை அக்கதியினின்று காப்பாற்றும்படி வேண்டினார். நான் சிரமப்பட்டு விவகரித்து அவரைக்கொஞ்சநாள் சரிப்படுத்தினேன். இரண்டுமூன்று வருஷங்களுக்கப்புறம் மறுபடி அந்த வழக்கத்தில் விழுந்தார். அப்புறம் விடுவதும் விழுவதுமாயிருந்து கடைசியில் இந்த லாகிரிக்கே அதிபால்யத்தில் இரையானார்; இறந்தபிறகு உள்ளநிலையென்ன! இந்த லாகிரி அவரை நூறுபங்கு

அதிகரித்து வாட்டுகிறது. ஸ்தூலதேகம் ஒழிந்துவிட்டதால், அந்த அவாமட்டும் நிற்கிறதேயன்றி அதைத் திருப்திசெய்தற்குவேண்டிய ஸ்தூல அங்கங்களில்லை. இப்படி அடங்காத தாகத்தோடு நரகத்தில் அவஸ்தைப்படவேண்டியதாகிறது. இந்த அவஸ்தை எத்தனைகாலமிருக்குமென்றால், எத்தனைகாலம் உலகிலிருந்து இந்த வழக்கத்துக்காளாகியிருந்தானோ, அவ்வளவு காலமிருக்கும். இந்தக்குடியாசை தொலையாததுபற்றித் தன்னைத்தான் தின்றுதணிகிறவரை, இந்தத் தாகத்துடன் தவிக்கவேண்டியதே. இந்த வாதைக்குச்சமானம் பூலோகத்தில் ஒன்றும் சொல்லமுடியாது. இங்கே கடினதேகமாயுள்ளதால், இதிலும் நுட்பமான ப்ரேததேகம் இந்த ஆசையால் அதிகம் பீடிக்கப்படுகிறது. இந்தக்கதிக்குக் குடிகாரரொருவரும் தப்பமுடியாது. நான்சொல்வது பொய்யல்ல. நானே கண்ணால் இந்தப்ரேதஅவஸ்தையைப் பார்த்திருக்கிறேன். உங்கள் புராதன புஸ்தகங்களில் நரகலோகத்தைப்பற்றியுள்ள விவரங்கள் தவறல்ல. அவற்றில் உண்மை உருவகமாக இயற்றிச்சொல்லப்பட்டிருக்கிறது. அவற்றில் "நெருப்பு" என்று இருந்தால், இந்தத்தீராத தாகத்தைக் குறிப்பதாய்க்கொள்ளவேண்டும். அவை மெய்யான அனுபவங்களையே சொல்லுகின்றன. பிறகு இக்கஷ்டத்தில் விழாமல் இப்போதே அறிவுடையவர்களாய் நடந்துகொள்ளுங்கள்.

பாபஞ்செய்தபிறகு அனுதாபப்படின் பிராயச்சித்தம் ஆகிவிடுமென்னும் மேனாட்டுக்கொள்கை கேவலம் அறிவீனத்தினின்று ஜனித்ததாகும். உங்களிடை அவ்வித அஞ்ஞானக்கொள்கை கிடையாது. "கர்மாவுக்குத் தப்புவோர் ஒருவருமில்லை" யென்பது உங்கள்நீதி. வினைப்பயனை வெல்லமுடியாதென்பது சிறுபிராயமுதல் உங்களுக்கு உபதேசமாயிருக்கிறது.

இவ்விதமான சபைகளில் மதுவழக்கமுடையவன் வரமாட்டான். ஆகையால் இப்போது என் எதிருள்ளவர்களெல்லாம் வெளியில் குடியனைக்கண்டவிடத்தில் தக்கபடி அவனுக்குப் புத்திசொல்லித்திருப்ப முயலவேண்டும். இந்த முயற்சிக்கு என் பிரசங்கம் சாதனமாகுமென்று நம்புகிறேன். இவ்விதப் பிரசங்கங்களால் பரிசுத்த புத்தியாகிய ஆறுபெருகி, சென்னையோர்களை எதிர்த்துள்ள ஆபத்தினின்றும் அவர்களைமீட்கவேண்டும். இதுவே நான் உங்களுக்குச்சொல்வது. நாம் வேண்டுவதும், உழைப்பதும், ஸ்மரிப்பதும்—பெருமையும் வன்மையும் சுத்தமும், இவற்றால் சுயேச்சையும் உடைய இந்தியாவை அடைவதேயாம். குடிவழக்கங்களினின்று கரையேற இங்கிலண்டு பிரயாசைப்பட்டுக்கொண்டிருக்கின்றது. அங்கு மேல்குலத்தாரும் மதுவிலக்கை வரவர அதிகமாக ஆதரித்துவருகிறார்கள். பொதுவிருந்துகளில் ஒயினைமறுப்பது இப்போது அருமையாய்க்காணப்படும் உண்மையல்ல. இங்கிலண்டில் அப்படியிருக்க, ஆதிகாலமுதல் பரிசுத்தமும் மேன்மையுமுள்ள இந்தியாவை இந்த வழக்கத்தில் நீங்கள் அமிழ்த்திவிடலாமா? இந்தியாவாகிய தாய்ப்பூமி, குடிகாரர்களாலோ, அல்லது சுத்தர்களாலோ. கடைத்தேறுவது? மகமதியரும் இந்துக்களும், மனுவழி வந்தோரும் இஸ்லாம்வழி நிற்போரும், தோளொடு தோள்சேரக் கைகோர்த்துநின்றால் இந்தியாவை எதிர்த்துள்ள இந்த அபாயத்தை நீக்கமுடியும்.

உ

சிவமயம்.

படிக்காசுப்புலவர் சரிதம்.

தாயினு நல்ல தயாவுடை யோர்க டமதுடலம்
வீயினுஞ் செய்கை விடுவர்கொல் லோதங்கள் மெய்ம்முழுதுந்
தீயினும் வீழ்வர் முதுகினுஞ் சோறிட்டுச் சிறாவின்
வாயினுங் கையிடு வாரவர் காண்டொண்டை மண்டலமே.

எனப்புகழ்பெற்ற தொண்டைமண்டலத்திலே சற்றேறக்குறைய ௨00-வருடங்களுக்கு முன்னம் பொற்களத்தூரெனவழங்கித் தற்காலம் தென்களத்தூரென வழங்கும் தலத்தின்கண்ணே நவவீரர்வழி வந்த செங்குந்தமரபினிலவதரித்து சிவானுக்கிரஹத்தால் தமிழ்க்கலைமுழுதும்பயின்று தெய்வீகம் விளங்கிய நல்வாக்கினைப்பெற்று இல்லறவாழ்க்கையில் சிறந்துவிளங்கிய இவர், கி. பி. 1647-1672-ம் வருடங்களுக்கிடையே இராமநாதபுரத்திலிருந்து அரசுபுரிந்த திருமலைசேதுபதி என மறுநாமம்பூண்ட இரகுநாதசேதுபதியின் சம்ஸ்

தான வித்துவானாகவிருந்து சிலகாரணத்தினால் அங்குநின்றும் நீங்கி வறுமைப்பிணியால் நலிவுற்ற இப்புலவர் அந்நாட்டிலுள்ள வல்லநகரத்தையடைந்து காளத்திபூபதியென்பவரின்மேல் ஓர் செய்யுளியற்றித் தம் வறுமைப்பிணி தொலைப்பானெண்ணி அவர்சமுகம் சென்று,

பெற்றாளொருபிள்ளையென்மனையாட்டியப்பிள்ளைக்குப்பால்
பற்றாதுகஞ்சிகுடிக்குந்தரமல்லபாலிரக்கச்
சிற்றாளுமில்லையிவ்வெல்லாவருத்தமுந்தீரவொரு
கற்றாதரவல்லையோவல்லைமாநகர்க்காளத்தியே.

என்னுஞ்செய்யுளைப் பிரசங்கித்து, அவரால் சில பாற்பசுவளிக்கப் பெற்றுப் பின்னர்,

வழிமேல்விழிவைத்துவாடாமலென்மனையாளைமற்றோர்
பழியாமற்பிள்ளையும்பாலென்றழாமற்பகீரெனுஞ்சொல்
மொழியாமலென்னைவரவிட்டபாவைமுசித்துச்சதை
கழியாமலாவளித்தாய்வல்லைமாநகர்க்காளத்தியே.

என்னுஞ் செய்யுளால் அவரைப்புகழ்ந்து பாடினர். பின்னர் மாவண்டூரிலே மிக்கபிரபுவாயிருந்த கஸ்தூரிமுதலியார் குமாரர் கறுப்பமுதலியாரென்னும் ஓர் வேளாளர் வேண்டுகோளின்படி "**தொண்டைமண்டலசதகம்**" என்னும் ஓர் பிரபந்தம்பாடி அரங்கேற்றி அவரால் வேண்டுந்திரவியங்கள் அளிக்கப்பெற்றனரேயன்றிப் பல்லக்குஞ்சுமக்கப்பெற்று அவ்வுவகைமேலீட்டினால்,

காவைவென்றிகெத்தூரிகண்மணிகறுப்பனென்னு
மாவையம்பதியான்றொண்டமண்டலசதகங்கேட்டு
நாவலர்புகழ்ந்துமெச்சநவநிதிபொழிந்துநன்றாய்ப்
பூவுலகெங்கும்போற்றப்புகழ்நிலைநிறுத்தினானே.

எனவும்,

ஓர்கறுப்புமில்லாததொண்டவளநன்னாட்டிலுசிதவேளைச்
சீர்கறுப்பொன்றில்லாதகத்தூரிமன்னனருள்சேயைப்பார்மே
லார்கறுப்பனென்றுசொல்லியழைத்தாலுநாமவனையன்பினாலே
பேர்கறுப்பனிறஞ்சிவப்பன்கீர்த்தியினால்வெளுப்பனெனப்பேசுவோமே.

எனவும்,

205

எல்லப்பனம்மையப்பன்றருதிருவேங்கடநாதனெழிற்சீராமன்
வல்லக்கொண்டையன்மாதைவேங்கடேசுரன்போலவரிசைசெய்தே
செல்வத்தம்பியருடனேகத்தூரிமகன்கறுப்பன்றெருவீதிக்கே
பல்லக்குத்தான்சுமந்தானதுநமக்கோராயிரம்பொன்பரிசுதானே.

எனவும், வழங்குஞ் செய்யுண்முதலியவற்றால் புகழ்ந்து மகிழ்ந்திருக்குங்கால், புலவர் சிவதரிசனஞ்செய்வானெண்ணி பலசிவஸ்தலங்களையுந் தரிசித்து வணங்கிக்கொண்டு சிதம்பரமடைந்து கனகசபை சென்று சபாநாதரையும் சிவகாமியம்மையையும் தரிசித்து,

"பொல்லாதமூர்க்கருக்கெத்தனைதான்புத்திபோதிக்கினும்
நல்லார்க்குண்டானகுணம்வருமோநரொத்திரியிற்
சல்லாப்புடவைகுளிர்தாங்குமோநடுச்சந்தைதனிற்
செல்லாப்பணம்செல்லுமோதில்லைவாழுஞ்சிதம்பரனே."

எனவும்,

"வேல்கொடுத்தாய்திருச்செந்தூரர்க்கம்பியின்மீதுவைக்கக்
கால்கொடுத்தாய்நின்மணவாளனுக்குக்கவுணியர்க்கும்
பால்கொடுத்தாய்மதவேளுக்குமூவர்பயப்படச்செங்
கோல்கொடுத்தாயன்னையேயெனக்கேதுங்கொடுத்திலையே,"

எனப்பாடித் துதித்தவளவில், பாட்டுக்குவந்தருளும் பரமேட்டி தொண்டரின் அன்பின்றிறத்திற்குவந்து பஞ்சாக்ஷரப்படிமீது ஐந்து பொற்காசுவைத்தருளினர். புலவர் போற்றிப்பணிந்து அருட்செயலை நினைந்தேத்தி ஆனந்தங்கொண்டனர். அதுமுதலாகவே "படிக்காசுப்புலவ"ரென்று, யாவரும் புகழ்ந்துபோற்றத் திகழ்ந்துநின்றனர்.

பின்னர் அத்தலத்தினின்றும் கடிதில்நீங்கித் தென்னாட்டையடைந்து மீண்டும் இரகுநாதசேதுபதியைக் கண்டு,

மூவேந்தருமற்றுச்சங்கமும்போய்ப்பதின்மூன்றொடெட்டுக்
கோவேந்தருமற்றுமற்றொருவேந்தன்கொடையுமற்றுப்
பாவேந்தர்காற்றிலிலவம்பஞ்சாகப்பறக்கையிலே
தேவேந்த்ரதாருவொத்தாய்ரகுநாதசெயதுங்கனே.

என்னுஞ் செய்யுளைப்பாடிச் சில பரிசுபெற்று பல்லக்குமுதலிய விருதுகளுடன் சிவகங்கையையடைந்தபொழுது அதனரசர்பந்துவான

"திருமலைத்தேவர்" இவரது ஆரவாரத்தைநோக்கி அழுக்காறுகொண்டு தமது பரிசனர்களைவிடுத்துப் புலவரையழைத்துத் தமதரண்மனையின்கண்ணுள்ள "கிளிக்கூட்டுச்சிறையிலே" யடைத்துவைக்க, புலவர் சினந்துவருந்தினாரெனினும்,

"ஊழிற்பெருவலியாவுளமற்றொன்று
சூழினுந்தான்முந்துறும்."

என்பதைச் சிந்தித்துத்தெளிந்து,

நாட்டிற்சிறந்ததிருமலையாதுங்கநாகரிகா
காட்டில்வனத்திற்றிரிந்துழலாமற்கலைத்தமிழ்தேர்
பாட்டிற்சிறந்தபடிக்காசனென்னுமொர்பைங்கிளியைக்
கூட்டிலடைத்துவைத்தாயிரைதாவென்றுகூப்பிடவே.

என்னுஞ் செய்யுளைப்பாடி. அவரைவசப்படுத்திப் பரிசுபெற்று அதினின்று நீங்கிக், காயற்பட்டணத்தையடைந்து சீதக்காதியென்னும் ஓர் பிரபுவைக்கண்டு,

நேசித்துவந்தகவிராசர்தங்கட்குநித்தநித்தம்
பூசிக்குநின்கைப்பொருளொன்றுமேமற்றப்புல்லர்பொருள்
வேசிக்குஞ்சந்துநடப்பார்க்கும்வேசிக்குவேலைசெயும்
தாசிக்குமாகுங்கண்டாய்சீதக்காதிதயாநிதியே.

என அவர் பெருமையை வியந்தும்,

ஓர்தட்டிலேபொன்னுமோர்தட்டிலேநெல்லுமொக்கவிற்கும்
கார்தட்டியபஞ்சகாலத்திலேதங்கள்காரியப்பேர்
ஆர்தட்டினுந்தட்டுவாராமலேயன்னதானத்துக்கு
மார்தட்டியதுரைமால்சீதக்காதிவரோதயனே.

எனவும்,

ஈயாதபுல்லரிருந்தென்னபோயென்னவெட்டிமரம்
காயாதிருந்தென்னகாய்த்துப்பலனென்னகைவிரித்துப்
போயாசகமென்றுரைப்போர்க்குச்செம்பொன்பிடிபிடியாய்
ஓயாமலீபவன்வேள்சீதக்காதியொருவனுமே.

எனவும் அவர் ஈகையைச்சிறப்பித்தும்,

தடக்கும்பகிம்புரிக்கொம்பாசலபதத்தந்திபட்
நடக்குந்தரங்கத்துறைசீதக்காதிநன்னாட்டிலுள்ள

வடக்குங்குமக்கொங்கைப்பெண்ணென்பவள்தெருவாசலிலே
கிடக்குங்கவியும்பரராசரத்தினகிரீடமுமே.

என அவர் நாட்டைவியந்தும்,

தரைகண்டமட்டும்படர்ந்தண்டகோளமுந்தாவியெங்கும்
உரைகண்டகீர்த்திபெறுஞ்சீதக்காதியுலகினில்வெண்
டிரைகண்டெழுங்கடன்மீதேதன்வங்கத்தைச்செல்லவிட்டுக்
கரைகண்டவனினங்காணானென்றிசைக்கடற்கரையே.

மைப்போதகமும்வளநாடுஞ்செந்தமிழ்வாணர்க்கருள்
கைப்போதகமனையான்சீதக்காதியைக்காத்திருந்த
வப்போதறிந்திலமிப்பாழ்ம்பணத்தினருமையெல்லா
மிப்போதறிந்தனமீயாதபுல்லரிடத்திருந்தே.

காய்ந்துசிவந்ததுசூரியகாந்திகலவியிலே
தோய்ந்துசிவந்ததுமின்னார்நெடுங்கண்டொலைவில்பன்னூல்
ஆய்ந்துசிவந்ததுபாவாணர்நெஞ்சமனுதினமும்
ஈந்துசிவந்ததுமால்சீதக்காதியிருகரமே.

என அவன் பெருவண்மையைப் புகழ்ந்தும், அப்பிரபு சமூகத்திலேயே புலவர் திலகமாய்விளங்கி அவரால் நன்குமதிக்கப்பெற வாழ்ந்துவந்தனர்.

இங்ஙனம் புலவர் குழாங்கட்குக் கற்பகதருவெனவிருந்த பிரபுகுல சிகாமணியாகிய சீதக்காதிவள்ளல் திடீரென மண்ணுலகநீத்து விண்ணுலகேகினர். இதனையுணர்ந்த புலவர் பிரபு உயிர்நீத்தமைக்கு ஆற்றாது மிகவருந்தி,

விண்ணுக்குமண்ணுக்கும்போய்விளங்குதேவேந்த்ரனென்னுங்
கண்ணுக்கினியதுரைச்சீதக்காதிகமலகிசர்
தண்ணுக்கிசைந்தவதனசந்த்ரோதயசாமியிந்த
மண்ணுக்குள்ளேயொளித்தான்புலவோர்முகம்வாடியவே.

எனவும்,

பூமாதிருந்தென்புவிமாதிருந்தென்னபூதலத்தில்
நாமாதிருந்தென்னநாமிருந்தென்னநன்னாவலர்க்குக்
கோமானழகமர்மால்சீதக்காதிகொடைமிகுந்த
சீமானிறந்திட்டபோதேபுலமையுஞ்செத்ததுவே.

எனவும்,

நற்றாய் சோதிடரை நிந்தித்ததாகவமைத்துக்கூறியது.

மாகத்தத்தும்புகழான்பகைவேந்தர்மகுடம்பொடி
யாகத்தத்தும்பரியான்சீதக்காதியணிமலரி
லேகத்தத்தும்பியிசைபாடுமோர்பினிலென்மகட்கோர்
மோகத்தத்துண்டென்றுசொன்னாரிலைமுன்மொழிந்தவரே.

எனவும்,

தேட்டாளன்காயற்றுறைசீதக்காதிசிறந்தவச்ர
நாட்டான்புகழ்க்கம்பநாட்டிவைத்தான்றமிழ்நாவலரை
ஒட்டாண்டியாக்கியவர்கடம்வாயிலொருபிடிமண்
போட்டானவனுமொளித்தான்சமாதிக்குழிபுகுந்தே.

எனவும்,

மறந்தாகிலுமரைக்காசுங்கொடாமடமாந்தர்மண்மேல்
இறந்தாவதென்னவிருந்தாவதென்னவிறந்துவீண்போய்ச்
சிறந்தாளுங்காயற்றுறைசீதக்காதிதிரும்பிவந்து
பிறந்தாலொழியப்புலவோர்தமக்குப்பிழைப்பில்லையே.

எனவும் இக்கவிகள்கூறி இரங்கினார்.

பின்னரங்கு நின்றுநீங்கித் திருச்செந்தூரடைந்து முருகக்கடவுளைத் தரிசித்து,

முன்னநின்னன்னைமுலையூட்டிமையிட்டுமூக்குச்சிந்திக்
கன்னமுங்கிள்ளியநாளல்லவேயென்னைக்காப்பதற்கே
அன்னமுமஞ்ஞையும்போலிருபெண்கொண்டவாண்பிள்ளைநீ
இன்னமுஞ்சின்னவன்றானோசெந்தூரிலிருப்பவனே.

முற்கரையப்பரையேறவிட்டாட்கொண்முதல்வருள்ளக்
கற்கரைக்கும்படிபோதித்திடுங்கருணைக்கடலைச்
சிற்பரைக்குட்டியையெங்கெங்குந்தித்திக்குஞ்செங்கரும்பின்
சர்க்கரைக்கட்டியைக்கண்டேன்செந்தூரெனுந்தானத்திலே.

சின்னஞ்சிறுபிள்ளைசெங்கோட்டுப்பிள்ளைசிவந்தபிள்ளை
பொன்னன்மணிப்பிள்ளைபூலோகமெங்கும்புகழும்பிள்ளை
சொன்னெஞ்சழல்கின்றசூரனைக்கொன்றசொக்கேசர்பிள்ளை
வன்னக்கிளிப்பிள்ளைசெந்திற்குறத்திக்குமாப்பிள்ளையே.

கல்லடிக்குமுளியிரண்கோதடிக்குளடிப்பதென்னக்கவிதைகேட்டுப்
பல்லடிக்கக்கிடுகிடெனப்பறையடிக்குநெஞ்சர்தமைப்பாடுவேனோ
வில்லடிக்கும்பிரம்படிக்குங்கல்லடிக்கும்விரும்பிநின்றமெய்யனீன்ற
செல்லடிக்குந்தடவரையிற்சேறடிக்கவலையடிக்குஞ்செந்திலானே.

என்பது முதலிய செய்யுட்களாற்றுதித்து மற்றும் சிவதலங்களைத் தரிசித்துவணங்கித் தண்டலைநீணெறியென்னுந் தலத்தையடைந்து அங்குள்ள அன்பர்கள் வேண்டுகோளின்படி "தண்டலையார்சதக" மென்னும் ஓர் சதகத்தையருளிச்செய்து அச்சந்நிதியிலரங்கேற்றிப் பல பரிசும்பெற்றுச் சிலநாளங்கு வசித்திருந்தனர். இதனிடையில் இப்புலவர் சிரோமணிக்கும், குடந்தையம்பதியில் கம்மியர்மரபினிற் றோன்றிய கும்பனென்னுமோர் புலவர்சிகாமணிக்கும் கல்வி விஷயமாகப் பலசமயங்களில் சம்வாதங்கள் நிகழ்ந்துவந்திருப்பதாக அறியக்கிடக்கின்றன. இவ்வழக்கு நமது நாட்டுக்கவிஞர்களெல்லாரிடத்துமே அமைந்திருப்பதைக் காணலாம். இது புலவர்களுக்கியற்கைபோலும். நிற்க.

இனி இப்புலவர்க்கும், கும்பனென்னும் புலவர்க்கும் அவ்வாறு நடந்த ஒரு சம்வாதத்தை இதன்கீழ்க் கூறுவாம்.

ஒருகாலத்தில் கும்பனென்னுங்கவி "மழவரங்கன்" என்னும் ஒரு பிரபுவுக்கு எழுதிய சீட்டுக்கவியில், படிக்காசுப்புலவரை,

கொஞ்சுகவியானையைவசைக்கவியெயிற்றினாற்
    குகவியுயிரான்மருட்டும்
குடிலகவிராஜசிங்கங்களைப்பங்கம் செய்
    கும்பசரபத்தினாலே
செஞ்சிவிஜயாபுரிக்கோட்டைக்கபாடம்
    திறக்கும்களிற்றுவேந்தன்
திறல்கொண்டலட்சுமணரங்கமழவேந்த்ரதுரை
    ஜெயசௌர்யனினிதுகாண்க
வஞ்சியர்களிதயமும்கொஞ்சுபுரவியின் மனமும்
    வல்லகவிராஜர்மனமும்
மகிமைபெறுமூர்த்திக்குமறிவரிது நின்சமுகம்
    வருமுனையறிச்துரநீ
பஞ்சகலிகாலப்பயங்கரன்றொண்டமான்
    பதியிலவமானமாக்கிப்
பஞ்சலட்சணமெனுங்கசைகொண்டடித்துப்
    படிக்கனைமுடுக்கினோமே.

என வசைகூறி விடுத்ததைத்தெரிந்த படிக்காசர், ஷை சமஸ்தானத்திற்குத் தாம்வரைந்த சீட்டுக்கவியில்,

* கொல்லத்தமிழ்க்கவிசெலுத்திவாய் வீண்பெற்ற
கும்பனெனுமொருத்தர்தியைக்
கொத்தியுண்டமிழண்டபோரண்டமென்னவரு
கூர்படிக்காசனேலை
வல்லச்சிவக்கொழும்பல்லவன்றன்கருணை
மாரிபோலேவழங்கும்
வாழ்வைக்கெடுக்கவருதென்குடந்தைப்பதிக்
கொள்ளிவாய்ப்பேய்களல்ல
புல்லத்துரைத்தனமெனும்பனியினிடையிலே
புகுபரிதிகிகரென்னவே
புகழ்கொண்டலட்சுமணரங்கமழுவேந்த்ராதுரை
பூபனெதிர்கொண்டுகொண்க

* * * * * * *

* * * * * * *

என்பேரிலபசாரமுண்டெனத்துதிசெய்ய
எனைவரவழைத்திடுவையே.

என நிந்தித்தனர்.

இங்ஙனமாக இவ்விருபுலவர்களும் தாங்கள் பரிசுபெற விரும்பிச்செல்லும் சம்ஸ்தானங்கள்தோறும் விவகாரம் செய்துகொண்டே வருகிறகாலத்தில், கும்பன் இராமநாதபுரத்திலரசுபுரிந்த பெருங்கொடை வள்ளலாகிய ரகுநாதசேதுபதியைக்கண்டு தமது கல்வித்திறனைக்காட்டிப் பல்லக்குமுதலிய சம்மானம்பெற்றுத் திரும்புஞ்சமயத்துப் படிக்காசுப்புலவர் அச்சமஸ்தானத்திற்குவர இப்புலவரையும் மன்னர்பிரான் உபசரித்து வரவழைத்துக் கும்பனென்பவரின் கவிவன்மையைக்கூற அதுகேட்டுப் பொறாதபடிக்காசுப்புலவர்,

எதையறிவானிவனுக்கேன்பல்லக்குச்
சேதுரகுநாதசிங்கமே—ஓதுகின்ற
* கச்சைக்கும்பச்சுரைக்காய்கறிக்காமோவதுபோல்
தச்சக்கும்பன்சொல்.

என ஓர் வெண்பாவிலிழித்துக் கூறினரென்ப.

(தொடரும்)

சி. கு. நாராயணசாமி முதலியார்,
கோவை.

---

* இப்பாட்டுக்கள் சிதைந்துள்ளன.

DEPARTMENT OF AGRICULTURE, MADRAS.

விவசாயக் குறிப்புக்கள்.

I

கோயம்புத்தூரிலிருக்கும் விவசாய பாடசாலை

இந்த விவசாயபாடசாலை கோயம்புத்தூர்ப்பட்டணத்திற்கு மேற்கே மூன்றுமைல் தூரத்தில் தெலுங்குபாளையம் கிராமத்திலும் குமரபாளையம் கிராமத்திலும் ஸ்தாபித்திருக்கிற சர்க்கார் பண்ணையிலிருக்கிறது இந்தப்பண்ணையின் விஸ்தீர்ணம் தெலுங்கு பாளையத்தில் 400-ஏகராவும் குமரபாளையத்தில் கிருஷ்ணாம்பதி ஏரிப்பாய்ச்சலுள்ள 50-ஏகரா நன்செய்நிலமுமுள்ளது. புன்செய்நிலங்களின் மண் கரிசற்காடும் செம்மண்ணுமானது. செம்மண்நிலம் அனேகமாய்க் கிணறுகளால் நீர் பாய்ச்சப்படுகிறது.

இந்த விவசாய பாடசாலையின் கருத்து இந்துதேசத்து விவசாயத்தைச் சீர்திருத்துவதுதான். அப்படிச் சீர்திருத்துவதின் முக்கிய அம்சங்களாவன :—

1. நிலச்சுவான்களின் பிள்ளைகளை விவசாயவிஷயங்களில் சிரத்தை எடுத்துக்கொள்ளும்படி செய்தல்.

2. விவசாயவிஷயங்களை விவசாய பாடசாலையின்வழியாய்ப் பரவும்படி செய்தல்.

3. சிறுவர்களுக்கு விவசாய சாஸ்திரங்களைக்கற்பித்து அவர்களைத் தங்கள் சொந்தநிலங்களுக்காவது மற்றவர்களுடைய நிலங்களுக்காவது மானேஜர்களாகத் தகுதியுள்ளவர்களாக்குதல்.

விவசாயபாடசாலையின் மாணாக்கர்கள் மூன்றுபிரிவாகப் பிரிக்கப்படுகிறார்கள். அதாவது, முதல் வருஷத்து மாணாக்கர்கள், இரண்டாம் வருஷத்து மாணாக்கர்கள், மூன்றும் வருஷத்து மாணாக்கர்கள். வழக்கமாய் மாணாக்கர்களை செஷன் ஆரம்பமாகிய ஜூன்மாதத்தில் பாடசாலையில் சேர்ப்பார்கள்.

முதல் வருஷத்து மாணாக்கர்களுக்குக் கற்பிக்கும் விஷயங்கள், விவசாயத் தொழில்களுக்கு ஆதாரமாகிய விவசாய சாஸ்திரங்கள்; அவையாவன :—

1. ரசாயன சாஸ்திரம் (கெமிஸ்டிரி)

2. தாவரசாஸ்திரம்- அதாவது புல், பூண்டு, செடிகளைப்பற்றிச்சொல்லும் சாஸ்திரம் (பாடனி)

3. தத்துவசாஸ்திரம் அல்லது ஜடசாஸ்திரம் (Physics) அதாவது இந்த உலகத்திலுள்ள சட்டங்களைப்பற்றிச் சொல்லும் சாஸ்திரம்.

4. பூகோளத்தின் இயற்கை சாஸ்திரம்--அதாவது பூகோளத்தின் மேலுள்ள நிலம், நீர், ஆகாயம், காற்றுவீசுதல், சமுத்திரம், ஜீவஜந்து முதலியவைகளைப்பற்றியும் உலகத்திலுள்ள அனேக சாரங்களைப்பற்றியும் சொல்லும் சாஸ்திரம்.

5. சிற்றுயிர்நூல் (Entomology), அதாவது சிறு உயிர்களாகிய பூச்சி, புழு முதலியவைகளைப்பற்றி சொல்லும் நூல்.

மேலும் விவசாயவேலையில் பிள்ளைகளைப் பயிற்சிசெய்யும்படி செய்கிறார்கள். இன்னும் பரிசோதனைக்காகவும் ஊர்களில் உபயோகப்படுத்துவதற்காகவும் அப்போதைக்கப்போது விவசாய டிபார்ட்மெண்டார் கொண்டுவரும் அனேகவித விவசாயக்கருவிகளின் உபயோகத்தைப்பற்றியும் மாணாக்கர்களுக்குக் கற்பிக்கிறார்கள்.

மேற்கூறிய சாஸ்திரங்களைக்கற்பிப்பதில் அந்த சாஸ்திரங்களில் சொல்லியவைகளைச் சாதனப்படுத்தும்படி செய்கிறார்கள். இப்படிக் கற்பிப்பதால் மாணாக்கர்கள் சாஸ்திரங்களிற் சொல்லியவிஷயங்களைத்தாங்களே திருஷ்டாந்தமாகச்செய்து பார்வையிட்டு அவ்விஷயங்களை அறிந்துகொள்வார்கள்.

இரண்டாவது வருஷத்தில் மாணாக்கர்களுக்கு விவசாயத்தொழிலுக்கு வேண்டிய தாவரசாஸ்திரத்தைக் கற்பிப்பார்கள். மேலும் சிற்றுயிர்நூலையும் கற்பிப்பார்கள். சிற்றுயிர்கள் பயிர்களை நாசஞ்செய்வதைத்தடுக்கும்படியான விஷயங்களையுங் கற்பிப்பார்கள். இந்த

வருஷத்தில் சரியான விவசாயத்தொழிலைக் கற்றுக்கொள்வார்கள். அதாவது ஒவ்வொரு மாணாக்கனும் ஒருதுண்டு நிலத்தைத் தானே உழுது பயிரிடுவான். மேலும் விவசாயயந்திர மராமத்துவிதிகளையும், நிலவளவை விதிகளையுங் கற்பிப்பார்கள்.

மூன்றாவது வருஷத்து மாணாக்கர்களுக்குக் கற்பிக்கும் விஷயங்களாவன :—

1. விவசாயம்.

2. விவசாயயந்திர மராமத்து விதிகள்.

3. விலங்கின்நோயை ஆற்றுதற்குரிய சாஸ்திரத்தில், மிருகங்களின் சாதாரண நோய்களைப்பற்றியதும் அந்நோய்களைத்தீர்க்கும் விதிகளும்.

விவசாயத்தொழிற் பயிற்சியில் ஒவ்வொருமாணாக்கனும் தானே ஒருதுண்டுப் புலனைப்பயிரிட்டுப் பயிரிடும் விஷயங்களையெல்லாம் அப்போதைக்கப்போது பயிரிடும் குறிப்புக் காகிதத்தில் எழுதிவைத்துக் கடைசியில் தான்பயிரிட்ட நிலத்தில் பயிரிடுவதாலுண்டாகும் லாபநஷ்டத்தைத் தெளிவாயெழுதி பண்ணைத்தலைவருக்கு அனுப்ப வேண்டியது.

மாணாக்கர்கள் வசிப்பதற்கு விவசாய காலேஜுக்கு அருகிலேயே பத்து உறைவிடங்கள் கட்டப்பட்டுள்ளன. ஒவ்வொரு இல்லிடத்தும் ஆறுபேர் வசிக்கும்படி ஆறு அறைகள் கட்டியிருக்கின்றன. இவ்வாறு அறைகளுக்கும் ஒரே சமையலறையும் போஜன அறையுமுண்டு. இப்படிப் பத்துஜாதி மாணாக்கர்களுக்கும் இடம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஒவ்வோர் இல்லிடத்திலுமுள்ள ஆறுமாணாக்கர்கள் ஒன்றுசேர்ந்து ஒரேசமையற் பாத்திரங்களையும் சமையற்காரனையும் வைத்துக்கொள்ளவேண்டும்.

மாணாக்கர்களிடத்திலிருந்து அவர்களைக் கற்பிப்பதற்கும் அவர்கள் இல்லிடங்களில் இருப்பதற்கும் கட்டணம் வசூல்செய்வதில்லை. ஆனால், அவர்கள் தங்களுடைய உணவு முதலியவற்றிற்குவேண்டிய செலவைக் கொடுக்கவேண்டும். இந்தச்செலவு அவரவர்களுடைய

வேண்டுகோளின்படி வித்தியாசப்படும். ஆனால், மாணாக்கரெல்லாம் ஒன்றுசேர்ந்து வசிக்கும் விஷயத்தில் மரக்கறிப் பதார்த்தம் சாப்பிடுவோர்களுக்கு மாதத்திற்கு ஒருவனுக்குப் பத்து ரூபாய்க்கு அதிகப்படாது. எண்ணெய் ஸ்நானத்திற்கு வேறேபணம் கொடுக்கவேண்டும்.

ஒவ்வொரு மாணாக்கனும் பாடசாலையோடு சேர்ந்திருக்கும் தேகப்பயிற்சி சங்கத்திற் சேரவேண்டும். இந்தச்சங்கத்துக்குப் பிரவேச கட்டணம் வருஷத்திற்கு ரூபா மூன்று. சமாசாரப்பத்திரிகைகள் வாங்குவதற்கும் வாசக்கூடம் வைத்திருக்கவும் ஒரு மாணாக்கர்களுடைய சங்கம் ஸ்தாபித்திருக்கிறது. அதற்கு வருஷ சந்தா ரூபா மூன்றாக நியமிககப்பட்டிருக்கிறது.

கோயம்பத்தூர்,
1908-ம் ௵
அக்டோபர் ௴ 16௳.

வி. ஜே. டப்பிலியூ. ஷெப்பலன்,
விவசாய பாடசாலைத்தலைவர்.

II.

எலுமிச்சை "சாகுபடி."

தஞ்சாவூருக்கு அடுத்த ஐயம்பேட்டை என்னும் கிராமத்தில் எலுமிச்சை மிகுதியாகப்பயிராகிறது.

பூமி—எலுமிச்சைப்பயிருக்கு நல்லவடிகாலுள்ள வண்டல்பூமி சிரேஷ்டம்.

நாற்றங்கால்:—பூமியை இரண்டு அடி ஆழம் கொத்தி புழுதி செய்கிறார்கள். அதில் நன்றாய் மக்கின மாட்டு எருவை அதிகமாகப் போட்டு மண்ணுடன் கலக்கவேண்டும். மாசி (பிப்ரவரி—மார்ச்சு) மாதத்தில் மரத்தடியில் விழுந்திருக்கும் நல்ல பழங்களை அறுத்துக் காயப்படாமல் எடுத்தவிதைகளைக் கையில் ஒட்டாமலிருக்கும்படி கொஞ்சம் சாம்பலிற்புரட்டி, பின் விதைகள் காய்வதற்குமுன் தயார் செய்தபூமியில், 4-அங்குலத்துக்கு ஒருவிதையாக ஊன்றுகிறார்கள். பிறகு அந்த நாற்றங்கால்மேல், வாழைச்சருகுகளைப் போட்டு நாற்றங்கால் காயாமல் ஜலம் விட்டுவருகிறார்கள். களைகளைக் கையால் எடுத்து விடவேண்டும். கார்த்திகைமாதத்தில் கன்றுகள்சுமார் ஓர் அடிமுதல் இரண்டு அடி வரை வளர்ந்திருக்கும். இப்போது இரண்டு அடிக்கு ஒரு கன்றாக விட்டு நடுவிலுள்ள கன்றுகளை ஜாக்கிரதையாய்ப்பிடுங்கி இவைகளுக்காக வெட்டி எருவிட்டு தயார் செய்யப்பட்ட பூமியில் இரண்டு அடிக்கு ஒன்றாக நடுவார்கள். வெய்யிற்காலமுழுவதும் செடிகள் காயாமல் ஜலம் இறைத்துவரவேண்டியது. இப்படி வளர்த்த மூன்றுவருஷத்துக் கன்றுகளை ஆழமாய்க் கொத்தி எருவிட்டுத் தயார்செய்தபூமியில் 15-அடிக்கு ஒருவரிசையாகவும் ஒவ்வொரு வரிசையிலும் 15-அடிக்கு ஒரு செடியாகவும், கார்த்திகைமாதத்தில் நடுகிறார்கள். இச்செடிகளுக்கு மத்தியில் கன்றுகள் மரமாகும்வரை வாழைப்பயிர்செய்வதுண்டு. செடிகள்வைத்த மூன்றாவது வருஷமுதல் பலன்கொடுக்க ஆரம்பிக்கிறது.

வருஷாவருஷம், தோட்டத்தைக் கொத்தி நன்றாய் மக்கின சாணம் எருப்போடவேண்டியது. அம்மாபேட்டையில் அநேகமாய் மார்கழிமாதத்தில் கொத்தி எருவிடுகிறார்கள். ஆவணி மாதத்தில் கொத்தி எருவிட்டால் மழையினால் எருவின்பலன் நன்றாய்ப் புலப்படும். பிறகு மார்கழிமாதத்தில் ஒரு கொத்துமாத்திரம் போட்டால் புற்பூண்டு மடிவதுடன், பூமிதளர்ந்து ஈரம் காக்கும். சாணி எருவே உத்தமம். எலும்புத்தூள் பலனை விருத்திசெய்யும்.

கவாத்து:—செடிகளில் உலர்ந்த கிளைகளை அப்போதைக்கப்போது ஜாக்கிரதையாய்க் கத்தரித்துவிடவேண்டும். ஒவ்வொருசெடியிலும் பூமியிலிருந்து வரும் ஒன்று அல்லது இரண்டு பெரிய கிளைகளைமாத்திரம் விட்டுவிட்டு மிஞ்சிய உபகிளைகளை நீக்கிவிடவேண்டும். கொத்திவிடவும், பழம்பொறுக்கவும், காத்தோட்டத்துக்காகவும், செடிகளின்கீழ்க்கிளைகளை அதிகமாய் வைக்காமல் நீக்கி மேற்போகச் செய்வது உத்தமம். வெயிற்காலமுழுவதும் ஜலம் இறைத்துச் செடிகளைப் பாதுகாத்துவரவேண்டும்.

இப்படி ஜாக்கிரதையாய்த் தோட்டத்தை ஆதரித்துவந்தால் சராசரி ஒவ்வொரு செடிக்கும் 1000-முதல் 3000-பழம்வரை கிடைக்கும்.

பாலூர் முகாம்,
1908-ம் ௵ செப்டெம்பர் ௴ 23௳.

எஸ். சுப்ரமணிய அய்யர்,
மானேஜர்,
விவசாயப்பண்ணை.

III.

பாங்கு நெல்.

இது, சிலவருஷங்களுக்கு முன்னால் மத்திய மகாணங்களிலிருந்து இவ்விராஜதானிக்கு நூதனமாய்க் கொண்டுவரப்பட்ட ஒரு வகை நெல். அது வெண்மையான நீண்ட அழகாயுள்ள மெல்லிய அரிசியுடையது. ஆகையால் அது நாகரீகம் மிகுந்த ஜனங்களின் போஜனத்துக்கு ஏற்ற அரிசியாகும். ஆனால் பாங்குநெல் லரிசியானது நீளமாயிருப்பதால், அதைக்குத்தி அரிசியாக்கும்போது மற்ற உருண்டை அரிசியினுடைய வகைகளில் உண்டாவதைப்பார்க்கிலும் அதிகமான குறுநொய் உண்டாகிறது. புழுங்கல் அரிசி குத்திச்சாப்பிடும் ஜனங்களுக்கோ இதனால் பாதகமில்லை. ஏனெனில் நெல்லை அவித்துக்குத்தும்போது அரிசி அதிகமாய் உடைந்து குறுநொய்யாவதில்லை. கார்ப்போகத்தில் சாதாரணமாய்ப் பயிரிடும் மற்ற வகைகளைப் பார்க்கிலும் இது மிகச்சிறந்தது. மேலும் அதில் கிடைக்கும் மேனியும் அதிகம். அது பக்கம்வைத்துக் கிளைத்து மூடுகட்டும் சுபாவம் அதிகமாயுடையது. ஒற்றைத்தனிமுதலாய் நட்டாலும், கலப்பாய் விதைத்தாலும் சிலாக்கியமான விளைவுதரத்தக்கது. காரில் பயிர்செய்தால் இது விளைவாக 4-முதல் 4½-மாதம் வரை செல்லும். வடமலையாளம் ஜில்லாவில் முதற்போகம்நெல் சாதாரணமாய்ச் செப்டம்பர் அக்டோபர்மாதங்களில் அறுவடையாகும். அங்கே இந்தவகை விளைவுக்குவர 5-மாதம் சென்றபோதிலும், விசேஷமான பலனைக்கொடுக்கிறது. சம்பாவிளைச்சற் காலத்தில் (அதாவது திருநெல்வேலியில் பிசானம் மேல் கறையில் இரண்டாம்போகம்) இந்த வகை 4 முதல் 4½-மாதத்தில் விளைவுக்குவரும். இந்தக்காலத்தில் தண்ணீர்த்தட்டு சம்பவிக்கக்கூடிய இடங்களிலும், ஆறுமாதப் பயிருக்குத் தண்ணீர் இறைப்பதில் நேரிடும் செலவு மட்டுக்குமிஞ்சினதாயிருக்குமிடங்களிலும், இந்த வகைநெல் சாகுபடிசெய்யத் தகுதியுள்ளது. மற்ற சாதாரணவகை நெற்பயிரைவிட இந்தப்பாங்கு நெற்பயிர், தண்ணீர்த்தட்டு அதிகமாய்த் தாங்குவதுமன்றி, அந்தந்தக்காலத்துக்குத் தக்கபடி மற்றவகைகளைப்பார்க்கிலும் சிலாக்கியமான மேனிதரும். ஆனால் பாய்ச்சல் ஆதாரங்களில் ஆறுமாதப் பயிருக்குப்போதுமான தண்ணீரிருக்கும்பக்ஷத்தில், இதைவிடச் சம்பாநெல்லையே பயிரிடுவது உசிதமாகும். சிறுபாத்திகளில் இந்த வகை நெல்லைப் பயிர்செய்து கேழ்வரகுப்பயிருக்குத் தண்ணீர் இறைப்பதுபோல், ஐந்துநாளைக்கொருதண்ணீர் இறைத்து, கேள்வரகுப்பயிருக்குச் செய்வதுபோலவே பருவம்செய்துவந்ததில் சிலாக்கியமான பலன் கிடைத்தது. இதனாலே இந்த வகைக்கும் நன்செயில் பயிராகும் மற்ற வகைகளுக்கும் தண்ணீர்த்தடையைத் தாங்கும் இயற்கையில் எவ்வளவு பேதமிருக்கிறதென்பது நன்றாய் வெளியாகும். ஜனவரி முதல் மேமீ வரையுள்ள வேனிற் காலத்தில் இது பயிர்செய்யத்தக்கதன்று, ஏனென்றால் அம்மாதங்களிற் பயிர்செய்தால் அது விளைவுக்குவர, ஜூன் ஜூலை மாதங்களில் சாகுபடிசெய்யும் பயிர் அறுவடையாகும் காலம்வரை செல்லும்.

H. C. SAMPSON,
Dy. Director of Agriculture.

4th February 1909.

தமிழணியிலக்கண வரலாறு.

(சென்ற பகுதித்தொடர்ச்சி.)

இவ்வீரசோழியத்தின் அலங்காரப் படலம் முழுதும் வடமொழியில் தண்டியாசிரியர் இயற்றியுள்ள காவ்யாதர்சத்தைத் தழுவியது. இது தண்டிசொன்ன,

“கரைமலி நூலின்படியே யுரைப்பன் கனங்குழையே”[1] என்பதனால் விளங்கும். இந்நூலாசிரியர் இங்குக்கூறியுள்ளபடி தண்டியென்றும்[2] தண்டிகளென்றும்,[3] இந்நூலுரையாசிரியர் தண்டியாரென்றும்[5] கூறியிருப்பது வடமொழித் தண்டியையென்றற்குச் சிறிது மையமில்லை.

---

(1) வீரசோழியம், அலங்காரப்படலம், செய்யுள் 1.
(2) ,, ,, ,, ,, 13, 20.
(3) ,, ,, ,, 7.
(4) ,, ,, ,, ,, உரை. ப. 141.
,, ,, ,, 9. ,, ,, 144.
,, ,, ,, 11. ,, ,, 147.
(5) ,, ,, ,, 9. ,, ,, 144.

இனித் தமிழின் ஐவகை இலக்கணத்துள் அணியியலொன்றனையே கூறுவதும் தமிழ்ப் புலவர்கள் பெரும்பான்மையு மெடுத்தாள்வதுமாகிய தண்டியலங்காரமென்னும் நூல் தோன்றிய காலத்தைச் சிறிதாராய முயல்வோம். இவ்வலங்கார நூலாக்கியோன் பெயரின்னதென்பது விளங்கவில்லை. நூலின் பெயர் தண்டியென்னும் பெயரொடு கூடியிருத்தலைக் கொண்டு இயற்றிய ஆசிரியர் தண்டியென்னும் பெயரினரென்று கொள்ளல் தகாதோவெனின் அங்ஙனங் கொள்ளற்கு இதனை யொழித்துச் சான்று வேறொன்றுமில்லாமையான் நூலாசிரியர் பெயர் தண்டியென்றே துணிதற்கியலாது. இந்நூலுக்குத் தண்டியலங்காரமென்னும் பெயரேயன்றி அணியியலென்றொரு பெயருமிருப்பதாகத் தோன்றுகிறது. எங்ஙனமெனின் அடியார்க்குநல்லார் சிலப்பதிகாரத்தினுரையில் எடுத்துக் காட்டியுள்ள சில சூத்திரங்கள் தண்டியலங்காரத்துக் காணப்படுகின்றமையின் அவர் அணியியலென்று கூறியுள்ள நூல் இந்நூலின் மறுபெயராதல் வேண்டும்—என்று நினைக்க இடனாகின்றது. இவ்வணியியல் என்பது வேறோரலங்கார நூலின் பெயரென்று கொள்ளலமையாதோவெனின், அவ்வாறு கொள்ளலாமாயினும் அணியியலென்னும் பெயரைத்தவிர்த்து வேறொன்றும் அந்நூலைக் குறித்து நமக்குத்தெரிந்திலது. தண்டியலங்காரத்தின் உரைத் தொடக்கத்தில் "இவ்வதிகாரம் என்ன பெயர்த்தோவெனின், அணியினதிலக்கண முணர்த்தினமையின் அணியதிகார மென்னும் பெயர்த்து" என்று காணப்படுகின்றமையின் இதற்குப் பிறிதொரு பெயருமுண்டென்பது விளங்குகின்றது. இது வல்லாமல், அடியார்க்குநல்லார் அணியியலென்னும் நூலிலிருந்து இலக்கணமாகச் சூத்திரங்களை யெடுத்துக்காட்டியிருப்பதன்றிச் சில அலங்காரங்களின் பெயர்களையே கூறியிருக்கின்றார். அவையாவெனின், தெரிதரு தேற்றவுவமை, விரோதம், பின்வருநிலை, பரியாயம் என்பன. இவற்றை "மலையிடைப்பிறக்கு மணிகுழையாமையின் அதிற்பிறவாமணியே யென்பேனோ, அலையிடைப்பிறக்கும் அமிர்திற்கு இவ்வடிவின்மையின் அதனிற்பிறவாத அமுதே யென்பேனோ, யாழ்கட்கின்னாதாகலின் அதனிடைப்பிறவாத இசையே யென்பேனோ வெனத்தெரிதருதேற்ற வுவமையென்னு மலங்காரமும், மலைகடலென விரோதமும், பின் வருநிலையென்னு மலங்காரமும் புலப்படுத்தினரென வுணர்க" வென்ற விடத்தும் "தங்கல் வயங்கலிரண்டும் விளக்கமாதலிற் பரியாயமென்னும் அலங்காரமும், தலைபாய எதுகைத்தொடை யின்பமும் புலப்படுத்தினமை யுணர்க"வென்ற விடத்தும் காண்க.[6] இங்கெடுத்துக் காட்டியுள்ள அலங்காரங்களின் பெயர்கள் தண்டியலங்காரத்தில் அவ்வவ்வணிகளுக்குக் கூறியுள்ள பெயர்களாயிருக்கின்றன. வீரசோழியத்தினலங்காரப்படலத்துள் இவ்வலங்காரங்கள் பெரும்பான்மையும் வேறு பெயர்களாற் கூறப்பட்டிருக்கின்றன. தெரிதரு தேற்றவுவமை இந்நூலின்கண் துணிவுவமை யென்றும்[7] விரோதம் முரணென்றும்[8] பின் வருநிலை மீட்சி யென்றும்[9] பரியாயம் பரியாயமொழி யென்றும்[10] வழங்கப்பட்டிருக்கின்றன. தண்டியாசிரியர் தமது காவ்யாதர்சத்தில் இவற்றை முறையே நிர்ணயோபமா விரோதம் ஆவ்ருத்தி பரியாயோக்தமென்பர். ஈற்றிற் கூறிய அணி பரியாயமென்னும் பெயராற் காணப்படினும் பரியாய மொழி யென்பதே முதனூலிலுள்ள பர்யாயோக்தமென்பதன் நேரான மொழிபெயர்ப்பாகின்றது. ஆயினும், வீரசோழிய வுரையாசிரியர் இலக்கணங்காட்டியுள்ள இடத்தில் இவ்வலங்காரம் பரியாய மென்றும்[11] காணப்படுமாதலின் இவ்வொன்றனையு மொழித்து ஏனையணிகளின் பெயர்களை யாராய்ந்து பார்ப்போம். பெருந்தேவனார் தமதுரையில் ஆங்காங்கு அலங்காரங்களுக்கு மூலத்திற் கூறியுள்ள பெயர்களேயன்றி அவற்றுக்குரிய வேறு பெயர்களையும் எடுத்துக் காட்டியிருக்கின்றனர். அங்ஙனம் அவர் காட்டியுள்ளவற்றிலும் துணிவுவமை முரண் மீட்சி

---

(6) சிலப்பதிகாரம், மனையறம்படுத்தகாதை-உரை, அடி 75-83.
(7) வீரசோழியம், அலங்காரப்படலம் செய்யுள்—14.
(8) ,, ,, ,, 12, 31.
(9) ,, ,, ,, 10.
(10) ,, ,, ,, 12, 28-28 செய்யுளில்' இவ்வணி பரியாயமென்றுங் காணப்படுகின்றது.
(11) ,, ,, ,, 12-உரை, 28செய்யுளினுரையில் இவ்வலங்காரத்துக் கிலக்கணங் கூறியுள்ள விடத்தில் உரையாசிரியர் பரியாய மொழியென்றே கூறியிருக்கின்றார். 31-செய்யுளினுரையில் இவர் "முரணெனினும் விரோதமெனினு மொக்கும்" என்று கூறியிருப்பினும் இந்நூலின்கண் முரணென்பதே பெரும்பான்மை வழக்காகின்றது.

யென்பவற்றுக்கு வேறுபெயர்களாகத் தண்டியலங்காரத்திற் கூறியிருக்கும் தேரிதருதேற்றவுவமை முதலிய பெயர்கள் காணப்படவில்லை. அடியார்க்கு நல்லார் சிலப்பதிகாரத்தில் வேறோரிடத்தமைத்துள்ள விரோத மென்னு மலங்காரத்தினை விரோதமென்று கூறியிருக்கின்றாரே யன்றி முரணென்னும் பெயரானுதல் வேறுபெயரானுதல் கூறிற்றிலர். இதனைச் "செய்யகரியவனென்பது விரோதமென்னு மலங்காரம்" என்றவிடத்துக் காண்க.[12] ஆகலின் இவ்வுரையாசிரியர் அணியியலென்று கூறியுள்ளது, தண்டியலங்கார மென்றும் மேலெடுத்துக்காட்டிய அலங்காரங்களின் பெயர்களும் இவ்வணிநூலிலிருந்தே யெடுத்தாளப்பட்டனவென்றும் கொள்ள இடமுண்டு.[13] பரிமேலழகரும் தமது திருக்குறளுரையில் ஆங்காங்குச் சில பாக்களில் அமைந்திருக்கும் அலங்காரங்களை யெடுத்துக் காட்டியுள்ளார். இவர் காட்டியுள்ள அணிகளெல்லாவற்றின் பெயர்களும் தண்டியலங்காரத்திற் கூறியிருக்கும் பெயர்களல்ல. சில அணிகள் மட்டுமே இந்நூலிற் காணப்படும் பெயர்களைக் கொண்டனவா யிருக்கின்றன. அவை யாவையெனின் வடமொழிக்காவ்யாதரிசத்தில் தண்டியாசிரியர் ஆவ்ருத்தியென்றும் ஸமாஸோக்தி யென்றும் கூறியுள்ள அணிகளாகின்றன.

இவ்விரண்டணிகளையும் தண்டியலங்கார நூலாசிரியர் முறையே பின் வருநிலை, ஒட்டு என்னும் பெயர்களால் மொழிபெயர்த்திருக்கின்றனர். ஸமாசோக்தியைப் பரிமேலழகர் பிறிதுமொழிதலென்பர். ஆயினும் பிறர்மதமாக அவர் இதற்கு வேறு பெயர்களும் எடுத்துக்காட்டி யிருக்கின்றனர். இதனை "...இது பிறிதுமொழிதலென்னு மலங்காரம்: இதனை நுவலா நுவற்சி யென்பாரும் ஒட்டென்பாருமுளர்" என்றவிடத்துக் காண்க. இவ்விரண்டு மறுபெயர்களி

லொன்றாகிய ஒட்டென்பது தண்டியலங்காரத்தின்கண் ஸமாசோக்திக்கு வழங்கியிருக்கும் பெயர்.

காவ்யாதர்சத்திற் கூறியுள்ள இலக்கணத்தில் ஸமாசோக்திக்கும் (ஒட்டு) அப்ரஸ்துதப்ரசம்ஸைக்கும்' (மாறுபடு புகழ்நிலை) பிறிதொன்றைக் கூறக்கருதிய பொருள் புலப்படுதலாகிய ஒற்றுமைகாணப்படுகின்றது. சந்திராலோகமுடையார் இவற்றுக்குக் கூறியுள்ள இலக்கணத்தில் இவ்வலங்காரங்களுள் இத்தன்மைத்தாகிய ஒற்றுமையின்றி வேற்றுமையே தோன்றுகின்றது. எவ்வாறெனின், ஸமாஸோக்தியென்னும் அணியில், ப்ரஸ்துதத்தில் அப்ரஸ்துதம் புலப்படுகின்றது; அஃதாவது, கவிகருதிய தொருபொருளைச் செய்யுளகத்துக்கூற அதனுட் பிறிதொருபொருள் தோன்றுதலாம். அப்ரஸ்துதபிரசம்ஸையிலோவெனின், அப்ரஸ்துதத்தில் ப்ரஸ்துதம புலப்படுகின்றது; அஃதாவது கவி பிறிதொருபொருளைக் கூறக்கருதிய பொருள் தோன்றுதலாம். இவ்வடமொழியலங்கார நூலாசிரியர்கள் ஸமாஸோக்திக்கும் அப்ரஸ்துதப்ரசம்ஸைக்கும் கூறியுள்ள இலக்கணங்களிற் காணப்படும் வேறுபாடு உய்த்துணரற்பாலது. சந்திராலோகமுடையார் ப்ரஸ்துதத்தில் அப்ரஸ்துதம் புலப்படுதலும், அப்ரஸ்துதத்தில் ப்ரஸ்துதம் புலப்படுதலும் முறையே ஸமாஸோக்திக்கும் அப்ரஸ்துதப்ரசம்ஸைக்கும் இலக்கணமென்பர்.[14] தண்டியாசிரியரோவெனின், கருதிய பொருளைத் தொகுத்து அதற்கு ஒத்ததாகிய பிறிதொருபொருளைக் கூறக்கருதியபொருள் புலப்படுவது ஸமாஸோக்தியென்றும் பிறிதொருபொருளைப் புகழ்ந்து கூறக்கருதிய பொருளிற் பழிப்புப்புலப்படுதல் அப்ரஸ்துதப்ரசம்ஸையென்றும் கூறுவர்.[15] கருதிய பொருளைத் தொகுத்துக்கூறலின் ஸமாஸோக்திக்குத் தொகைமொழி[16] யென்றும் ஒரு பெ

---

(12) சிலப்பதிகாரம் ஆய்ச்சியர் குரவை,படர்க்கைப்பரவல் 2 உரை.

(13) செந்தமிழ் என்னும் மதுரைத் தமிழ்ச்சங்கத்துப் பத்திரிகையின் முதல் தொகுதி முதற் பகுதியின் உள்ளுறையுள் ஒன்றாகிய நேமிநாதத்தின் உரையிற் "புனையுறு செய்யுட்பொருளை யொருவழி, வினைநின்று விளக்கினது விளக்கெனப்படுமே," "முதலிடை கடையென மூவகையான" என்பன அணியியல் ஆகலின்' எனறவிடத்து உரையாசிரியர் எடுத்துக்காட்டியுள்ள சூத்திரங்கள் தண்டியலங்காரத்துக் காணப்படாமையால் அணியியலென்பது வேறோரலங்கார நூலாயிருத்தல் வேண்டுமென எண்ண இடமாகின்றது.

14 𑌸𑌮𑌾𑌸𑍋𑌕𑍍𑌤𑌿𑌃 𑌪𑌰𑌿𑌸𑍍𑌫𑍂𑌰𑍍𑌤𑌿𑌃 𑌪𑍍𑌰𑌸𑍍𑌤𑍁𑌤𑍇𑌽𑌪𑍍𑌰𑌸𑍍𑌤𑍁𑌤𑌸𑍍𑌯 𑌚𑍇𑌤𑍍।
𑌅𑌪𑍍𑌰𑌸𑍍𑌤𑍁𑌤𑌪𑍍𑌰𑌶𑌂𑌸𑌾 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌸𑌾 𑌯𑌤𑍍𑌰 𑌪𑍍𑌰𑌸𑍍𑌤𑍁𑌤𑌾𑌶𑍍𑌰𑌯𑌾 ॥

(15) 𑌵𑌸𑍍𑌤𑍁𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌦𑌭𑌿𑌪𑍍𑌰𑍇𑌤𑍍𑌯 𑌤𑌤𑍍𑌤𑍁𑌲𑍍𑌯𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌯𑌵𑌸𑍍𑌤𑍁𑌨𑌃।
𑌉𑌕𑍍𑌤𑌿𑌃𑌸𑌂𑌕𑍍𑌷𑍇𑌪𑌰𑍂𑌪𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌸𑌾𑌸𑌮𑌾𑌸𑍋𑌕𑍍𑌤𑌿𑌰𑌿𑌷𑍍𑌯𑌤𑍇।
𑌅𑌪𑍍𑌰𑌸𑍍𑌤𑍁𑌤𑌪𑍍𑌰𑌶𑌂𑌸𑌾 𑌸𑍍𑌯𑌾𑌦𑌪𑍍𑌰𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑍇𑌷𑍁 𑌯𑌾 𑌸𑍍𑌤𑍁𑌤𑌿𑌃 ॥

(16) வீரசோழியம் அலங்காரப்படலம் செய்யுள் 11-உரை.

பருண்டு. வீரசோழிய நூலாசிரியர் இவ்வணியினைச் சுருக்கு என்பர்.

பரிமேலழகர் எடுத்துக்காட்டியிருக்கும் அணிகளின் பெயர்களிற் பின்வருநிலையும் ஒட்டும் தண்டியலங்காரத்திற் கூறியுள்ள பெயர்களாகின்றன.[17] அடியார்க்கு நல்லார் சிலப்பதிகாரத்தின் உரையில் எடுத்துக்காட்டியிருக்கும் அணியிலக்கணச் சூத்திரங்கள் தண்டியலங்காரத்துட் காணப்படுகின்றனவென்று முன் கூறப்பட்டது. இவ்வுரையாசிரியர்கள் காலம் இன்னதென வரையறுத்துக் கூறவியலாதாயினும் அதன் மேலெல்லையைச் சிறிதேறக்குறைய இன்னதெனக் காட்டலியலும். எவ்வாறெனின் அடியார்க்கு நல்லார் சிலப்பதிகாரத்தினுரையிற் கலிங்கத்துப்பரணியிலிருந்து மேற்கோள் காட்டியிருக்கின்றமையாலும், கலிங்கத்துப்பரணியென்னும் நூல் குலோத்துங்க சோழனைப்பற்றிக் கூறுதலின் அச்சோழன் அரசாண்டகாலத்துத் தோன்றிய நூலாதல் வேண்டுமாதலாலும், இவ்வரசன் ஆண்ட காலம் கி-பி. பதினொன்றும் நூற்றாண்டின் பிற்கூறும் பன்னிரண்டாம் நூற்றாண்டின் தொடக்கமும் ஆகின்றமையாலும் இவ்வுரையாசிரியர் இந்தக் காலவரைக்குப் பின்னிருந்தவராதல் வேண்டும்.—(ஞானபோதினி.)

---

(17) பரிமேலழகர் பிறிதுமொழிதலென்னு மலங்காரத்துக்குப் பிறர் மதமாகக் காட்டியிருக்கும் நுவலாநுவற்சி யென்னும் பெயர் வீரசோழியத்தின் உரையிற் காணப்படுகின்றது. மூலத்திற்கூறியுள்ள நுவலாச்சொல் என்னும் அலங்காரத்துக்கு இதனை மறுபெயராகக் காட்டியிருக்கின்றார். காவ்யாதர்சத்திற் கூறியுள்ள அலங்காரங்களின் முறையை வீரசோழிய நூலாசிரியர் தழுவியிருத்தலால் நுவலாச்சொல் என்பது அப்ரஸ்துதப்ரஸம்ஸையின் மொழிபெயர்ப்பாகத் தோன்றுமாயினும் "மாறியிகழ்மொழி வண்புகழாய் நுவலாச்சொல்வரும்" (அலங்காரப்படலம் செய்யுள் 32) என்று இவர் இதற்கு இலக்கணம் கூறியிருத்தலால், இது வ்யாஜஸ்துதியாகும். பெருந்தேவனார் இதற்குப் புகழாப் புகழ்ச்சியென்னும் ஒரு பெயரும் கொடுத்திருக்கின்றார். இதுவே தண்டியலங்காரத்திலும் இவ்வணிக்குக் கூறியுள்ள பெயராகும். "தேறுந் தெரிவில் புகழ்ச்சியொன்றைப் பழிக்கப்பிறிது கூறிப் புகழுதல்" (அலங்காரப்படலம், செய்யுள் 32) என்ற இலக்கணத்தால் தெரிவில் புகழ்ச்சி யென்பது அப்ரஸ்துதப்ரஸம்ஸையாகின்றது.

திருச்சிற்றம்பலம்.

பெரியபுராண அரும்பத விளக்கம்.

[பழைய ஏட்டினின்று எடுக்கப்பட்டது.]
(முற்றொடர்ச்சி.)

(௩௪௬) வேதம்பொருளாயுள்ள சிவபெருமானுக்கு விட்டுணுவும் பிரமாவுங்காணாத உண்மையையும், வெண்ணாவலுண்மையையும் திருமயேந்திரத்திலும், திருக்கயிலையிலும், திருவாரூரிலும் பொருந்திய பண்ணையும், திருவானைக்காவிலே புகழ்ந்துபாடி.

(௩௫௨) சிவபெருமானுடைய அருளின் வண்ணத்தை அடியாரிடத்தே பெருமையோடு கேட்டருளி.

(௩௬௧) கூட்டமான சோலைசூழ்ந்த முள்ளையுடைய தாமரை அடவிவழியேபோய்.

(௩௬௨) அக்கரைப்பரமர்பால் - எலும்பை அரையிலணிந்த சிவபெருமானிடத்தே.

(௩௭௧) பெறவகன்று - பெறும்படி அகன்று.

(௩௭௨) வந்துமுல்லைப்பந்தரின் மணங்கமழ்கின்ற.

(௩௮௨) பொருந்திய விருப்பத்தினால் திருஞானசம்பந்தப்பிள்ளையாரானவர் தம்மனத்தை வினவும் பதிகம்.

(௩௮௫) உலகிலுள்ளோர் நாடோறும், குளிர்ந்தநீரிற் படிந்துவருகின்ற தென்றலையும், நறியசந்தனக்குழம்பையும், பண்புமிக்க வாசனைபொருந்திய மென்மலரையும், மிகுந்த பனிநீரையும், நண்பையுடைய துணையாகிய சந்திரனையும், முத்தணியையும், உண்பனவாகிய மதுரித்தசுவையையும் விரும்ப.

(௩௮௬) நீர்வற்றினமையாற் கருமணல்மிகுகின்ற கான்யாற்றில் நீர்வேட்கையிலணைகின்ற மான் பெறற்கரிய நீரென்று பேய்த்தேரின்பின்னரேதொடரும்; மழைத்துளியையுணவாகக்கொள்கின்ற வானம்பாடிகள் தேம்ப, வயலில் இரையையாராயும் பறவை சிறையைவிரித்துப் பின் அச்சிறை ஒடுங்கக்குளிர்ந்த இடத்துத்தங்கும்.

(௩௮௮) குயிலானது ஒடுங்காத சோலையினுள்ள மென்றளிரைக் கோதிக்கூவியெழ.

(௩௯௧) பிறவி சுற்றுப்பக்கத்திலுமடையாமல் உதவிபுரிவோருடைய.

(௩௯௭) வெள்ளெயிற்றுப்பன்றி.

(௪௦௭) சேர வருவாராய்.

(௪௦௯) பொலிவுபொருந்திய கங்கைமுதலான சுத்தமாம்பெருந்தீர்த்தங்கள் மாமகத்திலே தம்மிடத்துள்ளபாவம் நீங்கவந்து பிரதக்கிணஞ்செய்தணைந்து.

(௪௧௨) பெருமைபொருந்திய பாம்பு அருச்சித்த.

(௪௧௮) மூலத்தேவர் - ஆதிகாரணர்.

(௪௨௦) நீணிலையாயுள்ள பக்கத்தேசூழ்கின்ற திருமாளிகை

(௪௨௨) விரும்பியங்கிருக்கும் நாளில்.

(௪௨௩) சீகாழித்தலைவர் முன்னாளிலே மொழிந்தமையைநினைந்து அருளைத்தியானித்து; முன்னாளில் மொழிந்ததென்றது, சிவபாதவிருதயர் யாகஞ்செய்தற்குப் பொன்வினயபோது இன்னுஞ்சிலகாலம் எந்தையீர் என்னுடன் யாத்திரைசெய்து பின் யாகஞ்செய்யலாமென்று கூறினமையை.

(௪௨௫) நாலடியின்மேல் இருசீர்தொடுத்தவைப்பு -நாலடிமேல்வைப்பு.

(௪௨௯) அச்சிறப்பருள்பூதம் - முத்துப்பந்தரை முன்னருளியபூதம்.

(௪௩௦) நன்று - பெரிது.

(௪௩௫) சொல்லப்பட்ட ஆறறிவையுடையோரை. அடியார் விண்ணப்பஞ்செய்தபடி அறிந்துசெய்பவரை என்றுமாம்.

(௪௪௪) அச்சுற்றத்தாருக்குக் கூறுபவராகிய பெருமையையுடைய பெரும்பாணர், ஆளுடையபிள்ளையாரருளிச்செய்த அரியபதிகங்களைத்தாம் யாழால் பயிற்றும் பேற்றை அருளிச்செய்தார்.

(௪௪௬) அளவிறந்த திருப்பதிகவிசையானது யாழில் அளவுபடாவகையை, இவர்களேயன்றி உலகத்தோரும் உண்மையினை அறிந்தீடேற உணர்த்தும் பண்போடு பலரும்புகழ்கின்ற திருப்பதிகம் பாடியருளப்பெறின், குணநீடிவிளங்கும் இசை, யாழிலடங்காமையை யான் கட்டப்பெறுவேன்.

(௪௪௭) திருப்பதிகத்துண்மையானது பூமியினுள்ளோருடைய கண்டத்திலும், யாழிலும், பூமியில் இசைநூல்கூறின பேதமான நாதத்தையுடைய இசைமுயற்சிகளால் அடங்காதவகையைக் காட்டுகின்றாராய்.

(௪௪௯) இந்தப் பெரியோரருளிச்செய்த திருப்பதிகத்திசையை யாழில்வாசிப்பேனெனக்கூறியது இவ்வியாழை நான்றொடுதலினன்றோ.

(௪௫௦) அங்கதனைப்போக்க ஓக்குதலும் - அதனை உடைக்கும்படி ஓங்குதலும்.

(௪௫௪) பாசடைப்பங்கயத்தடஞ்சூழ் - பசிய இலையையுடைய தாமரைத்தடாகஞ்சூழ்ந்த.

(௪௫௫) அடியார்கூட்டம் விரும்பிச்சென்றுஇசைந்தவழியில்.

(௪௫௬) உருகிய அன்புபொருந்தியகாதலால் மனமுருகி நனை ஈரத்தைப் பெற்றாற்போலப் பொருந்தியதிருமேனியெல்லாம் முகிழ்த்தெழுந்த மயிர்ப்புளகமானவை மயிரை வளர்க்கின்ற நீரினாலே.

(௪௫௭) யாழ்நரம்பிலே பொருந்த இயன்றஇசை கூடப்பாடி அளவிறந்த கற்பங்களுக்கு நெடிதாய் அளவுபட, யாழிலிட்டு வாசிக்கப் பாலறாவாயரருள் செய்தபொழுது.

(௪௬௧) கங்கைஒழுகும் செவ்வானம்போன்ற அந்திக்காலத்திளம்பிறையையணிகின்ற சடையையுடையாருக்குமுன் நமஸ்கரித்தெழுந்து.

(௪௬௪) இளமையான பூங்கொம்புபோன்ற உமையம்மையுடன், நீதியாய்நிகழ்கின்ற நீலநக்கநாயனாருடைய பெருங்கீர்த்தியை அப்பதிகத்தில் விளங்கவைத்து.

(௪௬௫) நண்புடையடிகள் - திருநீலநக்கநாயனார். உள்ளமுடையவர் - திருநீலநக்கநாயனார்.

(௪௬௭) கழியையுடையகானல். சுழியையுடைய ஒளிபொருந்திய.

(௪௭0) தங்கள் பெருந்தகையாரை - தம்பெருமானாரை.

(௪௭௧) மாமாத்தியப்பிராமணருடைய போரையுடைய சிங்கேற்றின்.

(௪௭௪) குணம்பொருந்திய இடியேற்றையும், கலுழனையும் போன்ற மாந்திரிகர்கள்.

(௪௭௭) வந்துஅடைந்த பாலகராய மார்க்கண்டேய முனிவருடைய உயிரின்மேற்சீறிவரும் யமனுடைய பரந்தநஞ்சின் சூழ்வுபோன்ற சிவந்த வன்கண்ணையும் வெள்ளியபற்களையுமுடைய கரியகோலம்.

(௪௮0) எம்பெருமானே! என்பிதாவளம்பொருந்திய சோலைசூழ்ந்த வைப்பூர்க்கதிபனாகிய தாமன்; அத்தாமனுக்கிவன் மருமகன்; அவனுக்குப் புதல்வியர் நல்லஇளமையான பெண்யானைகள்போன்ற எழுவர்; அவரின் மூத்தாளை இவனுக்கென்று கூறிவைத்து, அன்னியனுக்கு மனங்களிப்புமிகச் செல்வத்தைப்பெற்றுக்கொண்டு விவாகஞ்செய்துகொடுத்தான்; என்னையொழிந்த ஏனையரையும் அவ்வாறே இவனுக்கென்றுவைத்துப் பொருள்பெற்றுக்கொண்டு அந்நியருக்கு விவாகஞ்செய்துகொடுக்க, அதனால் தளர்ந்தொழியும் இவனுக்காக அன்புசெய்து அப்பிதாமாதாக்களுக்கு மறைந்து இவனையே சார்ந்துவந்தேன்.

(௪௮௧) நல்கும்படிபற்றிய கொலைத்தொழில் பொருந்திய சருப்பத்தின்விடம் நீங்குமாறு வயல்சூழ்ந்த திருமருகலிலுள்ள சிவபெருமானை.

(௪௮௨) கண்டசசி மௌலியானை - இளம்பிறையைத்தரித்த சடையையுடையவரை. வேதியன் - வேதத்தையுடையோன். கண்டச்சசி - துண்டமதி.

(௪௮௩) உலகத்தார் முன்னரே அங்கீகரிக்கும்.

(௪௯0) கண்ணீர் அருவியைச்செய்ய.

(௪௯௫) யாமுமிங்கணையப்பெற்றபேரருளுடையேம். செப்பிய வளவிய "முத்துவிதானமணி" என்கின்ற பதிகத்தினாலே திருவாதிரைச் சிறப்பைக் கூறினார்.

(௪௯௮) கொத்துக்களையுடைய மலர் பொருந்திய சோலை.

(௫0௧) உவமையில்லாத.

(௫0௨) கத்தூரி புழுகு ஆகிய பெருஞ்சோற்றில் நறிய சுத்தமான வாசனை பொருந்திய சுண்ணஞ் சொரிதலினால் சுடர் பொருந்திய ஒளிகளின் வரிசையான வீதிகள் காலை இழுக்கியஅவை கரைந்து அலையப்பூவானது தேன்மாரியை நீர்மழையைப்போற் பொழிந்தது.

(௫0௩) மாடம், மாளிகை, மண்டபமாகிய இவைகளின் பக்கங்களிலெல்லாம் புடைவைக்கொடிகளும், அழகிய கூந்தலையுடைய பெண்கொடிகளும் ஆடல் நீடுவன; வண்டுகளோடு பொற்குடங்கள் தோட்டைச்சூழ்வன; வாழைதோரணம் நிரையான கமுகு காட்டின் தன்மையைக் கொண்டன. ஆடல்முறையே அசைதலும், நாட்டியஞ் செய்தலுமாம். தோடுமுறையே இதழும் பூமாலையுமாம்.

(௫0௪) பவளவேதிகைகளிலுள்ள பூம்பந்தரானவை, மாலைசூழ்ந்த புறவிடங்களிலுள்ள அழகிய நிரையான விளக்கின் அழகுமிக்க ஒளியோடு, கோத்திடையிலே தூக்கப்படும் கரியநீலமணியினிழல் பொரப், புகர்நிறம் உண்டாகும் பான்மையவாயின.

(௫0௫) மங்கலதூரியங்கள், தேவர்குழாமும் விரும்புஞ்சிறப்பினவாய, இதழ்களையுடைய மலர்கள் பொருந்திய விசாலித்த சாலைகள் திண்ணைகள் நாற்சந்திகள் குண்டலத்தை அணிந்த முகத்தையுடைய பெண்கள் நடிக்கு மரங்குகள் ஆகிய இவைகளினெல்லாம் நெருங்கி. காதிலணிந்த குண்டலம் முகத்தையே அலங்கரித்தலின், அப்பயன்பற்றி, முகத்திலணிந்த குண்டலமென்னும் பொருள்படக் குழைமுகத்தவர் என்றார்.

(௫0௬) புரிசனங்கள் - நகரிலுள்ள சனங்கள்.

(௫0௯) தன்னுளெவ்வகைப்பட்ட பெருமையையும் தாங்குந்தகைத்தாகிய பல நெடிய சுடர்வரிசைப்பரப்பினைப்பார்த்து.

(௫௨௧) பூவாற்பொலியும் நீர்வளஞ்செறிந்த சீகாழியிலுள்ளாருடைய யானைக்கன்றினெதிரே வணங்கி.

(௫௩௨) கலயர் : குங்குலியக்கலயநாயனார்.

(௫௩௬) வேதத்தையறிந்த பெருமையையுடைய குங்குலியக்கலயநாயனாரும்.

(௫௩௮) மூங்கிலைப்போல விளங்குகின்ற கரும்போடு செந்நெற்களையுடைய வயல் செறிந்த மருதநிலத்தை நீங்கி.

(௫௩௯) அப்பொழுது சிவபெருமானால் அடிமைகொள்ளப்பட்ட திருநாவுக்கரசு நாயனாரை எதிர்கொண்ட, மெய்ம்மையான பெருமையையுடைய அந்தணர்களது சீகாழியில் வாழ்கின்ற திருஞானசம்பந்தப்பிள்ளையார். எப்பரிசினாலேயோ.

(௫௪௨) ஆளுடைய பிள்ளையார் கைத்தாமரையைச் சிரமேற்கொண்டு அப்பொழுது "அரையார் விரிகோவணவாடை" என்பதை முதலாகவுடைய உவமைசொலற்கரிய பதிகத்தினுயர்ந்த இசையைப்பாடி, விட்டுணு உண்மை ஞானத்தாற் சாத்திய கண்ணாகிய பூவை விரும்பின சிவபெருமானுடைய கோயிலையடைந்தார்.

(௫௪௩) திருநாவுக்கரசு நாயனாருடனேவர விண்ணிழிவிமானத்தைப் பிரதக்ஷிணஞ்செய்யுமவர், விட்டுணுவணங்கப் பூமியில் இறங்கிய தெய்வத்தன்மை பொருந்திய திருவுருவைத் தரிசித்து.

(௫௪௯) மிகுந்த நீர்வளத்தாலெவரும் பேணுகின்ற.

(௫௫௧) ஆளுடைய பிள்ளையாரை முதலாகக்கொண்டு ஏழிசையைச் சூழுமந்தணரையடைந்து.

(௫௫௪) மேன்மைபொருந்திய திருவீழிமிழலையந்தணர்கள் சீகாழியிலந்தணர்க்காய விருந்தைக்கொடுப்ப, உடன்பட்ட மனத்தையுடையராய் விரும்பிச் சிவபிரானைப் புகழுஞ்சிறந்த எல்லை இனிதாய்க்கழிய சீகாழியிலெழுந்தருளியிருக்கின்ற சிவபெருமான் தாமே முகில்போன்ற கொடையையுடைய அழகிய கையையுடைய திருஞானசம்பந்தப்பிள்ளையாருக்கு.

(தொடரும்.)

ஜி. சதாசிவம் பிள்ளை.

ஸ்ரீ:

கலிங்கத்துப்பரணியாராய்ச்சி.

"கவிச்சக்கரவர்த்தி"யென அடியார்க்குநல்லாராற் புகழப்பட்ட சயங்கொண்டார் பாடிய கலிங்கத்துப்பரணியின் அருமைபெருமைகளை அறிஞரெல்லாம் அறிந்திருப்பர். இப்பரணி, அபயன் என்னுங் குலோத்துங்கசோழன், கலிங்கத்தடைந்த பெருவெற்றியைப் புகழு முகத்தானே, அச்சோழன் பெருமையையும் இது பாடிய சயங்கொண்டார் பெருமையையும் நிலவுலகில் நிலைபெறச்செய்வதாகும். இது பாடிய புலவர்பெருமானது ஊர், திருவாரூர்ப்பக்கத்ததும் ஜைனகிராமமுமாகிய தீபங்குடி என்பது,

"செய்யும் வினையு மிருளுண் பதுவுந் தேனுந் நறவும் மூனுங் களவும்
பொய்யுங் கொலையும் மறவுந் தவிரப் பொய்தீ ரறநூல் செய்தார் தமதூர்
கையும் முகமும் மிதழும் விழியுங் காலுந் நிறமும் போலுங் கமலங்
கொய்யும் மடவார் விழிவா யதரங் கோபங் கமழுந் தீபங் குடியே."

என்னுந் தமிழ்நாவலர் சரிதைப்பாடலால் தெரிந்தது. இப்பரணியைப்பாடிய சயங்கொண்டார்க்குச் சோழன் வேண்டிய சிறப்புகளைச் செய்திருக்கக் கூடுமாயினும், அவ்வரசன் தானளித்த வரிசைத்திறத்தைப் பெரிதாகப் பாராட்டியபோது, இப்புலவர், சினத்துடன் கூறியதாகக் கருதப்படும்—

"காவல ரீகை கருதுங்காற் காவலர்க்குப்
பாவலர் நல்கும் பரிசொவ்வா—பூவினிலை
யாகாப் பொருளை அபயனளித் தான்புகழாம்
ஏகாப் பொருளளித்தேன் யான்."

என்னும் அழகிய பாடலொன்றும் அச்சரிதையிற் காணப்படுதல் அறிந்துமகிழத்தக்கது. இப்புலவர் பெருமானையடுத்து அபயன்மகன் காலமுதல் விளங்கிய ஒட்டக்கூத்தர், தாம்பாடிய தக்கயாகப்பரணியின் முடிவிலே, கலிங்கத்துப்பரணியைத் "தெய்வப்பரணி" என்று புகழுவரென்றால், அதுபாடிய சயங்கொண்டார்பெருமை சொல்லுந்தரத்ததோ! இதனை,

"செருத்தந் திரிந்து கலிங்க ரோடத்
தென்றமிழ்த் தெய்வப் பரணி கொண்டு
வருத்தந் தணிந்துல காண்ட பிரான்
மைந்தற்கு மைந்தனை வாழ்த்தினவே."—என்பதனாலறிக.

இக்கலிங்கத்துப்பரணி, இக்காலத்துப் பலபதிப்புப் பெற்றிருக்கிறது. இப்பதிப்புக்களில், பலவிடங்கள் பொருள் செவ்வனேபுலப்படலின்றிக் காணப்படுகின்றன. இதனால், கம்பரிராமாவதார முதலியன போல, இந்நூலும் பிற்காலத்திற் பாடங்கள் பிறழ்ந்துஞ் சிதைந்தும் போயிருக்கவேண்டுமென்று தெரிகிறது. இதுபற்றி, இச்சங்கத்திருந்த மிகப்பழைய பரணியேடொன்றை ஆராய்ந்துவரும்போது, பல அரிய பாடங்களும், வேறுசில புதியபாடல்களும் காணப்பட்டன. இப்பாடங்கள் அப்பரணியிலுள்ள சந்தேகங்களை ஒருவாறு நீக்குதற்குரியனவாயிருத்தலால், அதனை முழுதும் பரிசோதித்துப் பாடபேதங்களை வெளியிடக்கருதினேன். இங்ஙனம் வெளியிடுவதில், சுத்தபாடங்கள் சிறிது விளக்கப்பட்டும் பொருட்சிறப்பிலொத்த பாடங்கள் குறிப்பின்றிக் காட்டப்பட்டும் உள்ளன. என்னறிவைக்கொண்டு சுத்தமென்று கருதி எழுதப்படுவனவும், தவறியிருக்கக்கூடும். அவற்றை அறிஞர் ஆராய்ந்து குற்றங்களைந்து கொள்ளக் கடவர்.

க. கடவுள் வாழ்த்து.

முதற்பாட்டு—(உமாபதிதுதி)—"பூமிசையோன் றொழில்காட்ட" என்பது "பூமிசையோன் சடங்கியற்ற" என உள்ளது. தொழில்காட்ட என்பது, உய்த்துணர்வாய்ச் சடங்கென்னும் பொருடரக்கூடுமாயினும் சடங்கியற்ற என்பது குறித்தபொருளை நேரே விளக்கிநிற்றல் காணலாம்.

2—(ஷை) 'அண்டங்காக்கும்' என்பது 'அண்டகூடத்து' என்று காணப்படுகிறது.

எ. (சூரியன்றுதி) 'பேராழியுலகனைத்தும் பிறங்கவளரிருணீங்க' என்பது—'பேராழியுலகனைத்தும் பிறந்தகலியிருணீங்க' என்றுள்ளது. பின்வரும் அ-ம் பாடலிற் "பரந்தகலியிருணீங்க' எனவருவதோடு, இப்பாடம் பொருத்தம் பெற்றுநிற்றல் காண்க.

கஉ. (முருகவேள்துதி) "ஓரிரண்டு திருக்குலமு நிலைபெறவந் தொருகுடைக்கீழ்க் கடலுந் திக்கு—மீரிரண்டு படைத்துடைய விரவிகுலோத் தமன்" என்னும் பாட்டில், 'திக்கு—மீரிரண்டுபடைத்துடைய' என்பது 'திக்கோரிரண்டும் படைத்துடைய' என்றுள்ளது. எட்டுத்திக்கும் படைத்துடைய என்னும் பொருளில் 'திக்குமீரிரண்டு படைத்துடைய' எனவருதல் பொருத்தமின்மையின், முன்னையபாடமே சிறப்புடைத்து.

க0. (கணபதிதுதி) "அனைத்துலகுங் கவித்ததெனக் கவித்துநிற்கு—மருட்கவிகை" என்பது, "அனைத்துலகுந் தனதென்னக் கவித்துநிற்கும்" என்றுள்ளது. கவித்ததெனக்கவித்து நிற்கும் என்பதினும் இப்பாடம் பொருட்சிறப்புடைத்து.

கக. பூமாதுஞ் சயமாதும் பொலிந்து வாழும்
புயத்திருப்ப மிகவுயரத் திருப்ப ளென்று
நாமாதுங் கலைமாது மென்னச் சென்னி
நாவகத்து ளிருப்பாளை நவிலு வாமே.

என்னும் நாமகள் துதிப்பாடல்—

பூமாதுஞ் சயமாதும் பொலிந்து வாழ்ந்து
புயத்திருப்பத் தனித்துயரத் திருப்பே மென்று
நாமாது கருதினள்போ னயந்து சென்னி
நாவகத்து ளிருப்பாளை நவிற்றுவாமே.

எனக்காணப்படுகின்றது. முன்னைய பாடத்தில் "மிகவுயரத்திருப்பளென்று" என்பதற்கு ஏற்ற வினைமுடிவின்மையோடு, "நாமாதுங் கலைமாதுமென்ன...இருப்பாளை" என்பதற்குப் பொருளுங் காணப்படாமையால், "பூமாதுஞ் சயமாதும் (அபயனது) புயத்திருத்தலால், நாமகள், அவரிருப்பிற்கும் மேம்பட்ட இடத்திருப்பேமென்று நினைத்தவள்போல், சென்னிநாவகத்துளிருப்பவளை" எனப் பொருட்சிறப்புடைய பின்னையதே சுத்தபாடமாதல் தெளிக.

அடுத்த கச-ம் பாட்டில், "எண்மடங்கு புகழ்மடந்தைநல்லன்" என்பது "எண்மடங்கு புகழ்மடங்கா வலவனெங்கோன்" எனவும், "மகிழ்ந்த பிரானபயன்மிகவாழ்கவென்றே" எனவும் காணப்படுகின்றன.

கரு-வது (உமையவள் துதி) "செய்யதிரு மேனியொரு பாதிகரிதாகத் தெய்வமுத னாயகனை யெய்தசிலை மாரன்—கையின்மலர் பாதமலர்மீதுமணு காநங் கன்னிதன் மலர்க்கழல்கள் சென்னிமிசை வைப்

பாம்" என்னும் பாட்டில், "மாரன் கையின் மலர் பாதமலர் மீது மணுகா" என்பது "கையின்மலர் பாதமலர் மீதணிய நல்கும்" எனக் காணப்படுகிறது. சிவபிரான் திருமேனியையும் ஒருபாதி கருகும்படி யெய்த மன்மதன், தன்கையிலுள்ள மலராகிய அம்புகளை உமையவள்பாற் செலுத்த வலியற்று, அவள் திருவடிகளில் அர்ச்சிக்கும்படி செய்யுங் கன்னி" என இப்பாடத்தில் முன்னையதினுஞ் ஒரு சிறந்தபொருள் புலப்படுதல் உய்த்துணர்க. "கன்னிதன் மலர்க்கழல்கள் என்பது—கன்னிகமலக்கழல்கள்—என்றுள்ளது. இது முன்னையதினும் ஓசை நயமுடையதாம்.

௧௮. (சத்தமாதர் துதி) 'கேழன் மேழிகலை' யென்பது 'கேழன் மேழிகளிறு' எனக்காணப்படுகிறது.

௨௦. (வாழி) 'தலமுதலுள மனுவளர்கவே' என்பது 'தலமுழுதினு மனுவளர்கவே' என்றுள்ளது.

௨. கடைதிறப்பு.

௧.—'துடியளவளவெனு நுண்ணிடை' 'துடியளவளவெனி நுணுகிடை' எனவும்,

௫.—'விடுமினென்ற முனி வெகுளி' என்பது 'விடுமினென்ற மிகு வெகுளி' எனவும்,

௧௦.—'இல்லாத வவர்பெற்ற பொருள்போல்' என்பது; 'இல்லாத வன்பெற்ற பொருள்போல்' எனவும்.

௯.—'இரவுகந்தருளு கனவினில்' என்பது—'இரவுதந்தருளு கனவினில்' எனவும், காணப்படுகின்றன. இவையெல்லாம் ஓசைநயமும் பொருட்பொருத்தமுமுடையவாதல் காண்க.

அடியிற்கண்ட பாடல்கள் இவ்வேட்டில் அதிகமாகக் காணப்படுகின்றன.

௧௪. "நின்னிற்பிரி யலமென்றவர் பிரியும்பிழை கருதி
நினையாதவை யெல்லாமட நெஞ்சத்தொடு நினையா
நன்னித்தில மிருகுங்கும வரையிற்பட நகுவே
நச்சுக்கடல் பவளம்பட நகுவீர்கடை திறமின்."

௧௫. களிவருங் கொழுநர் புயமுடன் றழுவி
யெதிர்விழுந்துற மணந்திடுந்
தெளிவருங்கலவி புலவிபோலமகிழ்
தெய்வமாதர்கடை திறமினோ.

௧௮. கண்போ லிருக்குங் காதலரைக்
காணா தொழியிற் கண்டதெலாம்
புண்போ லிருக்கு மடநல்லீர்
புனைபொற் கபாடந் திறமினோ.

(தொடரும்.)

பத்திராசிரியர்.

புத்தகக் குறிப்பு.

மயூரகிரிக்கோவை:— பாண்டிநாட்டில், முருகக் கடவுளது க்ஷேத்திரங்களுள் ஒன்றான குன்றக்குடி எனவழங்கும் மயூரகிரியை விஷயமாகக்கொண்ட கோவைநூலொன்று சமீபத்தில் அச்சிடப்பெற்றுள்ளது. இந்நூலியற்றியவர்—சேதுபதிகள் வாயிற்பெரும்புலவர்களில் ஒருவரான சர்க்கரைப்புலவர் குமாரர் சாந்துப்புலவர் என்னும் புலவர்சிகாமணியாவர். இக்கோவையின் சொன்னயம் பொருணயங்கள் அறிஞர்கள் ஆராய்ந்து சுவைத்தற்குரியனவாம். இக்கோவைப்பாடல் பெரும்பாலவும் அரிதுணர்பொருளவாயினும், நுணுகியாராய்ச்சி செய்வார்க்குப் பெரிதும் ஆனந்தம்பயக்கவல்லன. இந்நூலில், இற்றைக்கு ௪௦௦-வருஷங்கட்குமுன் விளங்கிய பிரபுவும், புலவர்க்குப் பரமோபகாரியுமாயிருந்த மருதுபாண்டியரது பெருங்குணங்கள் ஆண்டாண்டுப் புகழப்பட்டிருக்கின்றன. இத்தகைய சிறந்தநூலை, இதுபாடிய புலவரின் வழித்தோன்றலும், இப்போது மன்னார்குடி காலேஜ் தமிழ்ப்பண்டிதராயுமுள்ள ஸ்ரீ-சர்க்கரை-இராமசாமிப்புலவரவர்கள் ஆராய்ந்துபதிப்பித்துத் தம் முன்னோர்புகழைப்பரப்பியிருக்கின்றனர். இவர், இக்கோவையின் பொருளைத் தாமே பலகாற் சிந்தித்துணர்ந்தும் நல்லறிஞர்பலரை உசாவியறிந்தும் மிக்க

உழைப்பெடுத்திருக்கின்றனர். இவ்விஷயம், இவர் இந்நூலுடன் சேர்த்துப்பதிப்பித்திருக்கும் அரும்பத உரையாலும் பிறவற்றாலும் நன்கு தெரியவருகின்றது. இந்நூலை, இச்சங்கத்துச் சைவநூற்பரிசோதகர் ஸ்ரீ-சேற்றூர்ச் சுப்பிரமணியக்கவிராயரவர்கள் முழுதும் பார்வையிட்டுள்ளார்கள். அன்றியும், இந்நூலியற்றிய சாந்துப்புலவர் வரலாற்றை, அவர் வழியினராகிய இப்பதிப்பாளர் பெரிதும் ஆராய்ச்சிகாட்டி எழுதியிருப்பது புகழத்தக்கதாம். இவ்வரலாறு, செந்தமிழ் வாயிலாகவும் முன்பு வெளிவந்துளது. இங்ஙனம், மறைந்துகிடந்த அரியதொருநூலை, நன்காராய்ந்து வெளியிட்டிருக்கும் புலவரவர்கள், தம்குலப்பெருமைமட்டுமேயன்றி, பொதுவிற் றமிழ்ப்பெருமையையும் ஒருவாறு விளங்கவைத்தனரென்றே சொல்லலாம். இப்புத்தகத்தின் விலை ரூ 1. வேண்டியோர் முன்கூறிய புலவரவர்கள் விலாசத்துக்கெழுதிப் பெற்றுக்கொள்க.

குசேலவெண்பா:—ஸ்ரீ குசேலமுனிவருடைய வைபவம் நம்மவரெல்லாம் படித்துங் கேட்டுமுணர்ந்ததே. இச்சரித்திரத்தை முன்னோர்கள் மிகவழகாக விருத்தத்தாற்பாடி வெளியிட்டிருக்கின்றார்கள். இப்போது, அதனை வெண்பாயாப்பில், ஸ்ரீமத்-நா. சேதுராம ஐயர் என்பவர்கள் பாடி வெளியிட்டிருக்கின்றார்கள். இவர்கள்வாக்குப் பெரும்பாலும் நன்கமைந்து படிப்போர்க்கு இன்பந்தரக்கூடியதாகவேயுள்ளது. இதன் பாடற்றொகை ௪௨௨-ஆகும்.

பத்திராசிரியர் குறிப்பு:—இப்பகுதி முதலாக, கவிச்சக்கரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தர் இயற்றிய மூவருலாக்களில், முதலதாகிய விக்கிரமசோழனுலாவை பதிப்பிக்கத்தொடங்கியிருக்கிறேன். இவ்வுலாவின் அருமைபெருமைகளை, இதனைப்படிப்போர் நன்கு தெரிந்துகொள்வர். ஆயினும், இவ்வுலாவினிறுதியில், இதற்கோர் குறிப்புரையெழுதி, விளங்காத இடங்களைக்கூடியவரை விளக்கவுமுயல்வேன். இவ்வுலாவையடுத்து, கூத்தர்பாடிய குலோத்துங்கனுலா இராசராசனுலாக்களையும் பதிப்பிக்கக்கருதியுள்ளேன். ப—ர்.

237

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௭] கீலக௵ பங்குனிமீ. [பகுதி-௫.

திருவள்ளுவரைப்பற்றிய
சில குறிப்புக்கள்.

க. திருவள்ளுவர் ஊர்.

தெய்வப்புலவரது ஊர் மைலாப்பூர் என்பர். இதற்குப் பழைய மேற்கோள் காண்டல் அரிதாயினும் உலகவழக்குப் பெரிதாயுள்ளது. இனித் திருவள்ளுவமாலையில்வரும் முன்னோர் வாக்கைக்கொண்டு பார்க்கும்போது—

> " உப்பக்க நோக்கி யுபகேசி தோண்மணந்தான்
> உத்தர மாமதுரைக் கச்சென்ப—இப்பக்கம்
> மாதாநு பங்கி மறுவில் புலச்செந்நாப்
> போதார் புனற்கூடற் கச்சு." *

என்ற நல்கூர் வேள்வியார்பாட்டில், "வடதிசையைநோக்கி, நப்பின்னைப்பிராட்டியை மணந்த கண்ணபிரானை உத்தரமதுரைக்கு அச்சு (ஆதாரம்) என்று கூறுவர்; இப்பக்கத்தை நோக்குமிடத்து, மாதாநுபங்கியும் குற்றமற்ற புலமையுடைய செந்நாப்போதாருமாகிய திருவள்ளுவர் * தென்மதுரைக்கு அச்சாவார் என்னும் பொருள்படக் கூறப்பட்டுள்ளது. கீதாசாரியராய் உலகை வாழ்வித்தருளிய கண்ணபிரான் வடமதுரைக்கு எங்ஙனம்சிறந்தவரோ, அங்

---

* செந்தமிழ் முதற்றொகுதி இரண்டாம் பகுதியில், சேதுசம்ஸ்தான வித்வான் இராகவையங்காரவர்கள், இப்பாட்டிற்கு எழுதிய சிறந்தவுரை காண்க.

ஙனம் திருக்குறளாசிரியராய்த் தமிழகத்தை வாழ்வித்த திருவள்ளுவர் தென்மதுரைக்குச் சிறந்தவரென்பது கருத்து. இப்பாட்டின் போக்கிலிருந்து, வடமதுரை கண்ணன் அவதாரவிடமாய் விளங்குவதுபோலத் தென்மதுரை திருவள்ளுவர் அவதாரவிடமாக விளங்குவது என்னுங் குறிப்புத்தோன்றுதல் காண்க. கூடற்குத் தென்மதுரையென்னும் வழக்கு “தக்கிண மதுரை தான்வறிதாக” என்னும் மணிமேகலையடியானும் அறியப்படும். இவற்றால், திருவள்ளுவர் அவதாரஸ்தலம் மதுரையெனக்கொண்டு, அவர் வசித்தவிடம் மயிலாப்பூராகக் கோடல் பொருத்தம் போலும்!

௨. ஏலேலசிங்கன்.

இப்பெயருடையான், திருவள்ளுவர்காலத்துக் கப்பல்வர்த்தகனாயிருந்தானென்பதும் திருவள்ளுவராற் பெரிதும் அநுக்கிரகிக்கப்பெற்றானென்பதும் பிறசிலவரலாறுகளும் பிரசித்தமாக வழங்கிவருகின்றன. இக்கர்ணபரம்பரைச் சரித்திரங்கள் முழுமையும் ஆதாரமின்றியே நம்பமுடியாதாயினும், அவற்றினின்று சிற்சில உண்மைகளை நாம் ஆராய்ந்துகொள்ளலாம். அம்முறையே நோக்குமிடத்து, ஏலேலசிங்கனென்பானொருவன் பழங்காலத்திலிருந்தசெய்தி இப்போது தெரியவருகிறது. இலங்கைச் சரித்திரக்குறிப்பு என்னும் பெயருடன் Hon. P. அருணாசலமவர்கள் வெளியிட்டநூலில், முற்காலத்தே இலங்கையைவென்று, அதனை மிக்ககீர்த்தியுடன் ஆட்சிபுரிந்த தமிழரசரில் ஏலேலன் என்பான் சிறந்தவனென்பது காணப்படுகின்றது. இவன் பெயருடன் இணைக்கப்பட்ட சிங்கனென்பது, சிங்களத்தை ஆண்ட அரசர்புனைந்த சிறப்புப்பெயர்களுள் ஒன்றாம். இதனை அவ்வரசர் கூட்டத்தில்வரும் பரராசசிங்கன், இராஜசிங்கன் முதலியவற்றால் உணர்க. இனி இவ்வேலேலசிங்கனுடைய வரலாற்றைப்பற்றி, ஸ்ரீ-அருணாசலமவர்கள் எழுதியிருப்பவை வருமாறு:—

“கி. மு. 237-ம் ஆண்டில் விஜயவமிசத்திற் குழப்பங்கள் தொடங்கின. அரசன்கீழ் உத்தியோகத்திலிருந்த தமிழ்ச்சிற்றரசரிருவர் அரசனைக்கொன்று அவன் பெருநாட்டை அபகரித்து அதனை அவ்விருவருமாக இருபத்திரண்டுவருஷம் ஆண்டார்கள்.

பிறகு, அவர்கள் அவ்வாட்சியினின்றும் நீக்கிக்கொல்லப்படவே, பூர்வீகவமிசமானது முன்னைநிலைமையில் வைக்கப்பட்டது. ஏலேலன் (Elalen) என்ற பெயருடைய சோழனொருவனால், பத்துவருஷத்துக்குப்பிறகு தமிழர் தங்களை மறுபடியும் ஸ்தாபித்துக்கொண்டார்கள். (இவரால்) ஆட்சியினின்று நீக்கப்பட்ட வமிசத்தார்,—எந்தவிடத்தில் இன்றும் பெரியதடாகமும் திச்சாராமாவின்கோயிலும் இன்னோருடைய ஆட்சியின் ஞாபகசின்னங்களாக விளங்குகின்றனவோ, அந்தத் தென்கடற்கரையிலிருக்கும்—மாகம்பத்தென்னுமிடத்தில் அடைக்கலம் புகுந்தார்கள். அநுராதபுரத்திலிருந்த ஏலேலன், மித்திரரிடத்துஞ் சத்துருக்களிடத்தும் பக்ஷபாதமின்றி அவ்விராஜ்யத்தை நாற்பத்துநான்குவருஷம் ஆண்டான் என்று புத்தகோசங்கள்தெரிவிக்கின்றன. சோழவரசரின் வழக்கப்படி, அவன் அரண்மனைவாயிலில், அவ்வரசர், படுக்கையின் தலைப்புடனிணைக்கப்பட்ட “ஆராய்ச்சிமணி” தொங்கிற்று. அந்தமணி அடிக்கப்பெற்றால், உடனே நியாயவிசாரணை நடைபெற்று மனக்குறைகள் நீக்கப்படும். மகாவமிசத்தில், (அவனாட்சிக்காலத்திலே) பறவைகளும் மிருகங்களுங்கூட மனக்குறை தீரப்பெற்றன என்று கதைகள் வழங்குகின்றன. அவனது வழுவாநீதியானது, தன்மகன்மேலும் மரணதண்டனை விதிக்கச் செய்தது. அம்மகன், அறியாமலே தன்றேரால் உண்டாக்கிய புத்தப்பள்ளியினழிவுக்காகத் தன் உயிரையே அவன் அதற்குப் பிரதியளிக்கும்படி நேர்ந்தது” எனக்கண்டுகொள்க.

இவற்றால், இற்றைக்கு 2100-ஆண்டுகட்கு முற்பட்ட ஏலேலசிங்கனே, திருவள்ளுவர்க்கு நட்பினனாயிருத்தல் கூடுமென்றும், இவன் இலங்கையை வெல்லுதற்குக் கப்பல்கள் பலவற்றைச்செலுத்திப் பிரசித்தியடைந்தமைபற்றி, இவனையே கப்பல்வியாபாரியென்று பிற்காலத்தார் வழங்கியிருக்கக்கூடுமென்றும் தோன்றக்கூடும். கர்ணபரம்பரையிலும், ஏலேலனுடைய இணையற்ற நீதிமுறையினாலே, “நின்னைமெய்ப் பரதனை நிகரில் பார்த்தனை—முன்னினு நினைத்தவை யனைத்து முற்றுமால்” (நைடதம்) என்றபடி, கப்பலோட்டிகள் முதலிய தொழிலாளர் தாம் நினைத்த பெருங்காரியங்கள் நிறைவேறுமென்று கருதி, “ஏலேல” என அவன் பெயுரை

வழங்குவர் என்பீர். இவ்வேலேலனே திருவள்ளுவர் காலத்தானென்பதை வற்புறுத்தற்கு இவற்றுக்குமேல் ஒன்றும் தெரியவந்திலது.

௩. திருவள்ளுவர்காலம்.

தெய்வப்புலவரை, கடைச்சங்கத்தார் காலத்துக்கு இருநூறு முந்நூறாண்டுகட்கு முன்னவராக நிறுத்துதலே பொருத்தமாகத் தோற்றுகிறது. திருவள்ளுவர்வழங்கிய சொற்களையும் பொருள்களையும் எடுத்துவழங்காத சங்கநூல்கள் ஒன்றுமில்லாமையே இதற்குத்தக்க சான்றாகும். அன்றியும், எட்டுத்தொகையுள்ளே ஔவையார் கபிலர் முதலிய சங்கப்புலவர் பாடல்களுடன் திருவள்ளுவனாரது தனிப்பாடலொன்றும் காணப்படாமையும் அறியத்தக்கது. இன்னும், கூலவாணிகன் சாத்தனார், மணிமேகலையில், பரசுராமர் காலத்திருந்த சோழவரசனாகிய ககந்தனென்பவன்சிறுவன், காவிரிக்கரையில் மருதி என்னும் பார்ப்பனியை இச்சிக்க, அதற்கு அவள் உள்ளம் நடுங்கி விரைந்து பூதசதுக்கஞ்சென்று தெய்வத்தை நோக்கித் தனக்குநேர்ந்த கற்புக்குறைவைப்பற்றிப் பிரலாபித்த போது அத்தெய்வத்தின் கூற்றாகவைத்து—

“தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை என்றவப்
பொய்யில் புலவன் பொருளுரை தேறாய்.”

எனச் சிறைசெய்காதையிற் கூறியுள்ளார். இங்ஙனம், பரசுராமர் காலத்துக் கதையிலே, தெய்வத்தின் கூற்றில்வைத்துத் திருவள்ளுவர் வாக்கைத்தொடுத்திருப்பது, சாத்தனார்க்கு இத்தெய்வப்புலவர் சிலநூற்றாண்டுகளளவேனும் முற்பட்டவரென்பதைக் குறிக்காமற்போகாது. தங்காலத்துள்ளார்வாக்கை (அவர் எத்தகையபெரியாராயினும்) மிகப்பழஞ்செய்தியில் இடைநுழைத்துக்கூறின், அஃது ஆராயத்தக்கதேயன்றோ. நம்காலத்துள்ள பெரியபுலவரொருவர் வாக்கை இராமர்காலத்திருந்த ஒருவர் கூற்றாகவைத்துப் “பொய்யில் புலவன் பொருளுரை தேறாய்” எனின், அது சிறவாதென்பது பிரத்தியக்ஷமாம். இவற்றால் தெய்வப்புலவர் சிலநூற்றாண்டுகளளவேனும் கடைச்சங்கத்து முற்பட்டவராகக் கருதலாம். இங்ஙனம் கூறின், கர்ணபரம்பரைபற்றிய சிலசெய்திகளுக்கு விரோதமாகுமெனின், அவையெல்லாம், நாம் செவ்வையாக ஆராய்ச்சிசெய்தற்குரியனவேயென்க.

௪. திருவள்ளுவர்மேற்கோள்.

திருவள்ளுவனார், தம்நூலை, “வியாழவெள்ளிகள் துணிபுதொகுத்துப் பின்னீதிநூலுடையார் கூறியவாறு கூறுவர்” என்று பரிமேலழகர் எழுதாநிற்பர். வியாழவெள்ளிகள் துணிபு - பிரகஸ்பதியும் சுக்கிரபகவானுங்கூறிய நீதிசாஸ்திரங்கள்; அவர்கள் துணிபு தொகுத்துக்கூறிய பின்னீதிநூலுடையார் - சாணக்கியரும் காமந்தகரும்; இவர்கள், அன்னோர்வழியே பற்றியவரென்பது சாணக்கிய அர்த்தசாஸ்திரம் காமந்தகங்களால் அறியப்படும். இவற்றுள், சாணக்கியரியற்றிய அர்த்தசாஸ்திரம், இதுகாறும் வெளிவந்ததில்லையாயினும், இப்போது சிலகாலமாக, அது “மைசூர்ரெவ்யூ” என்னும் ஆங்கிலமாஸிகபத்திரிகையில் மொழிபெயர்க்கப்பட்டு வருகிறது. இதனில், எத்தனையோ அரியவிஷயங்கள் வெளியாகின்றன. திருக்குறள்—தெரிந்துதெளிதல் என்ற அதிகாரத்தில்,—

“அறம்பொரு ளின்ப முயிரச்ச நான்கின்
திறந்தெரிந்து தேறப் படும்.”

என்னுங் குறளிற் பரிமேலழகர் **உபதைகளைப்பற்றிக்கூறிய** உரைமுழுதும், காமந்தகத்திலின்றேனும், சாணக்கிய அர்த்தசாஸ்திரத்துப் பத்தாவதத்தியாயத்துக் காணப்படுகிறது. இவ்வுரையினீற்றில், “இவ்விடநூற்பொருண்மையை உட்கொண்டு இவரோதியதறியாது பிறரெல்லாம் இதனை “உயிரெச்சம்” எனப்பாடந்திரித்துத் தத்தமக்குத் தோன்றியவாறே உரைத்தார்” எனப் பரிமேலழகர், பிறர்கொண்ட பாடத்தின் பிழைகாட்டித் திருவள்ளுவருண்மைக்கருத்தைச் சாணக்கியத்தைக்கொண்டு தெளிவுபடுத்தியிருத்தல் காண்க. இன்னும் “ஒற்றொற் றுணராமை யாள்க வுடன்மூவர், சொற்றொக்க தேறப் படும்” (௫௮௯) என்னுந் திருவள்ளுவர் கருத்துச் சாணக்கியம், ௧௨-ம் அதிகாரத்துக் காணப்படும். இங்ஙனமே பலவுள.

ரு. இஷ்டம் பூர்த்தம் தத்தம்.

வடநூலார் அறஞ்செயன்முறையை மூன்றுவிதமாக வழங்குவர்; அவை :—இஷ்டம், பூர்த்தம், தத்தமென்பன. அவற்றுள் **இஷ்டமாவது**, உலகனைத்தும் வாழ்கவெனக்கருதித் தெய்வங்களை நோக்கித் தொழுமுறை ; இஃது, அக்கினி, ஆகுதி, மந்திரமுதலியவற்றால் வேள்விமூலம் ஆராதித்தலாம். **பூர்த்த**மென்பது, எல்லாவுயிர்களும் இடுக்கணின்றி இன்பமடையும் வண்ணம் இயற்றும் அறம்; வித்தியாசாலை, வைத்தியசாலை, தண்ணீர்ப்பந்தல் முதலாய பொதுநன்மைகளை இது குறிக்கும். **தத்தமென்பது** எளியோர்க்கிரங்கி ஈதலாம். இம்மூவகையுள்ளே, முதலிற்குறித்த இஷ்டம் அவ்வவ்வருணாச்சிரமங்கட்கு ஏற்றவாறு சிறப்பாயமைவதென்றும் ஏனைப்பூர்த்தமும் தத்தமும் எல்லார்க்குமொத்த தர்மங்களென்றும் உணர்க. இங்ஙனம் வடநூலார் வகுத்தமுறையையே, திருவள்ளுவரும் கூறியிருத்தல் கவனிக்கத்தக்கது. அம்முப்பகுதியறங்களுள், சிறப்பியல்புடைய இஷ்டத்தை "எல்லா அறநூல்களினும் நல்லனவெடுத்து எல்லார்க்கும் பொதுப்படக்கூறுதலை இயல்பாகவுடைய" வள்ளுவனார் தம்நூலில் விரித்துரைக்க ஒருப்பட்டிலராயினும், இல்வாழ்க்கையதிகாரத்தில்—

"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க றானென்றாங்
கைம்புலத்தா றோம்ப றலை."

என்பதனால் அவ்வறத்தைக் குறிப்பித்தருளினார். பிதிர்க்களுக்கும் தெய்வங்களுக்கும் விருந்தினர்க்குஞ்செய்வன யாகாதிகிருத்தியங்களன்றோ. இங்ஙனமே, "இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கும்—நல்லாற்றி னின்ற துணை" என, வானப்பிரஸ்தமுதலிய சிறப்புத் தருமங்களையும் தெய்வப்புல்வர் சூசிப்பித்தல் காண்க. இனிப் பொதுநன்மையாகிய பூர்த்தமும், வறியராய் ஏற்றார்க்கு மாற்றாதீதலாகிய தத்தமும், இல்லறவியலினீற்றில் ஒப்புரவு ஈகை என்ற இரண்டு அதிகாரங்களால் முறையே விரித்துக்கூறினர். ஒப்புரவு எனத்தெய்வப்புலவர் கருதியது பொதுநன்மையான தர்மங்களையே என்பதை, செந்தமிழில் முன்பு தனிவிஷயமாகக்கொண்டு விளக்கியிருக்கிறேன். திருக்குறளில், ஒப்புரவறிதலதிகாரத்துள்ள பாடல்களைக்கொண்டாராயினும் அவ்விஷயம் யாவருக்கும் எளிதில் விளங்கத்தக்கது. இங்ஙனம், தெய்வப்புலவர் வடநூலார் கூறும் அறவியல் மூன்றையும் முறையே ஓதி, அவற்றால் அடைதற்குரிய புகழை இல்லறவியலினீற்றில் வைத்து முடித்திருத்தல் கண்டுகொள்க.

சா. திருக்குறள்களின் முறைவைப்பு.

திருக்குறளில் அதிகாரமுறை, ஆசிரியர்வைத்தமுறையே வழங்குகின்றனவாயினும், அவற்றின் பாடன்முறையை, உரையாசிரியர் ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமாகக் கொண்டெழுதுகின்றனர். மணக்குடவர்பரிமேலழகர் உரைகளை நோக்குமிடத்து, இவ்வேற்றுமையை அதிகாரங்கடோறும் மிகுதியாகக்காணலாம். இதனால், திருக்குறளின் ஆதிப்பாடன்முறை நிச்சயித்தல் கூடாதுபோயிற்று.

எ. ஒரு குறிப்பு.

திருக்குறளில் மற்றொருவிசேடங் கவனித்தற்குரியது. சங்கநூல்கள் பெரும்பான்மையிலும் "குஃறொடர்ந்த அன்மொழி" பயிலுதல் காணலாம், அவற்றிலும், அகப்பொருளைப்பற்றிய நூல்களிலோ எனில், அச்சொல்வழக்கம் மிகுதியேயாம். இம்முறையே, உரு-அதிகாரங்கள் காமவிஷயமாகக்கூறிய திருவள்ளுவரிலும் அச்சொல்லை எதிர்பார்த்தல் இயல்பே. ஆனால், அந்நூலில் ஓரிடத்தும் அது வழங்கப்படாமை வியக்கத்தக்கது. இச்செய்தி, வள்ளுவனார் தம் நூற்பெருமையில் பெருநோக்குடையராயிருந்தனர் என்பதைப் புலப்படுத்தக்கூடியது. ஏனைப்புலவர்கள் அகப்பொருள்விஷயமாகக் கூறியவற்றினும் பலமடங்கு சிறப்பாகவும் கௌரவமாகவும் வள்ளுவனார் தம் காமத்துப்பாலையியற்றினார் என்று அறிஞர்கள் போற்றும் புகழ்ச்சியோடு இவ்விஷயமும் சேர்த்து மதிக்கற்பாலது.

அ. இறையனார் பாயிரம்.

திருவள்ளுவமாலையில் அசரீரி நாமகள் இவர்கள் பாடலையடுத்து இறையனார்பாயிரம் வைக்கப்பட்டிருக்கிறது. இம்முறைவைப்புச் சிறிது சந்தேகத்துக்கு இடந்தருகிறது. என்னை? கல்லாடத்தில்,

"சமயக் கணக்கர் மதிவழி கூறாது
உலகியல் கூறிப் பொருளிது வென்ற
வள்ளுவன் றனக்கு வளர்கவிப் புலவர்முன்
முதற்கவி பாடிய முக்கட் பெருமான்."

எனவரும் அடிகளில் இறையனார் பாயிரத்தை "முதற்கவி" எனக் கூறுதலால் என்க. இதனால், அம்மாலையின் முதற்பாட்டு இறையனாரதே போலும் !

கூ. பரிமேலழகர்.

இவரைப்பற்றிச் செந்தமிழில் முன்பெழுதிய என் வியாசமொன்றில், இவர் உரைப்பாயிரமாகக் கண்ட

"விரைத்தா ரலங்கற் றிருவள்ளுவர் முன்பு வெண்குறட்பா
நிரைத்தார் மிகுபொரு ளெங்கும் விளங்க நெறிப்புலவ
ருரைத்தார் பலரு மதற்குரை தன்னை உலகறியக்
கருத்தான் வகுத்தமைத் தான்கலை தேரொக்கை காவலனே."

என்னும் பாடலைக்காட்டி, இவர், ஒக்கை என்ற ஊரினரென்பதை விளக்கியிருக்கிறேன். இனி, இவரின் பெருமையை, கொற்றவன்குடி உமாபதிசிவாசாரியார்,

"வள்ளுவர்சீ ரன்பர்மொழி வாசகந்தொல் காப்பியமே
தெள்ளுபரி மேலழகர் செய்தவுரை—ஒள்ளியசீர்த்
தொண்டர் புராணந் தொகுசித்தி யோராறுந்
தண்டமிழின் மேலாந் தரம்."

என விதந்துகூறுவர். இப்பாடல் உமாபதிசிவாசாரியாரதென்பது பெருவழக்கு. இச் சிவாசாரியார்காலம் இற்றைக்கு 600-வருஷங்கட்கு முற்பட்டதாகலான், பரிமேலழகர் அவர்க்கு மிகவும் முற்பட்டவரென்று தடையின்றிக்கருதலாம். இப்பரிமேலழகர் பரிபாடற்கும் உரையியற்றினவரென்பதும், இவர் வைணவரென்பதும் செந்தமிழ்வாயிலாக முன்னரே உணர்ந்தவை. செந்தமிழ் உ-ம்பகுதியில் வெளிவந்த நுண்பொருண்மாலையில் திருமேனி இரத்தினகவிராயர் இவரது பரிபாட்டுரையினின்று இரண்டு மேற்கோள்கூறிப் போதலுங்காண்க. இவரது உரையை, ஏடுகளைவைத்துப் பரிசோதிக்கும்போது பல அரியதிருத்தங்கள் காணப்படுகின்றன. உதாரணமாக,—நூன்முதலிற் காணும் வேறுபாடுகள் சில வருமாறு:—கஅ "சிறப்பொடுபூசனை" என்னுங் குறளுரையிலே—"தேவர்கட்கு இவ்வுலகின் மக்களாற்செய்யப்படும் விழவும்பூசையும் நடவாது" என அச்சிற்பதிப்பிக்கப்பட்டுளது. ஏட்டுப்பிரதிகளில் "மக்களாற் செய்யப்படும் விழவொடுகூடிய பூசையும் நடவாது" என்று காணப்படுகிறது. "விழவும்பூசையும் நடவாது" என்பது ஒருமைப்பன்மை மயக்கமாவதேயன்றி, "நைமித்திகத்தொடுகூடிய நித்தியமென்றாகலின்" என மேல் விசேடவுரையிற் கூறலாலும், அச்சுப்பாடம் பிழைபடுதல் காண்க. சங-வது குறள் விசேடவுரையிலே—"விருந்தொக்கலென்றாங்கு" என்பதன்கணுள்ள—"என்றவென்பது விகாரமாயிற்று"—என்பது அச்சுப்பிரதியிற் காணப்படுகிறது. இவ்வாக்கியம் ஏட்டுப்பிரதிகளில் இல்லை. உஎ-ம் குறளில் "சுவையொளியூறோசை நாற்றமென்றைந்தின்" என்புழி, 'என்றைந்தின்' என்னுமிடத்தும் இவர் இங்ஙனமெழுதாமைகாண்க. இனி, ககஅ-ம் குறளின் விசேடவுரையிலே "சான்றோர் சீர்தூக்கலாவது—தடைவிடைகளாற் கேட்டவற்றை ஊழானுள்ளவாறு உணர்தலாகவும்" என அச்சிற்காணப்படுகின்றது. ஏட்டுப்பிரதிகளிலே, "தொடைவிடைகளாற் கேட்டவற்றை" எனக்காணப்படுகிறது. இதுவே, மிகப்பொருத்தமானதும் பரிமேலழகர் கருத்துமென்பதை—புறப்பொருள்வெண்பாமாலை, வாகைப்படலம் அவையமுல்லையில் வரும், "தொடைவிடை யூழாத் தொடைவிடை துன்னித், தொடைவிடை யூழிவை தோலா" என்னும் பாட்டானும் அதனுரையானும் நன்கு தெளியலாம். சகூ-ம்குறளின் விசேடவுரையிலே, "ஐம்புலவின்பங்களாரத்துய்க்கும் எண்மையுடைய" என்றிருக்கற்பாலது, "துய்க்கும் மேன்மையுடைய". என்றுள்ளது. சாகூ-ம் குறளுரையிலே, "கவானின்கட்கண்ட பொதுவுவகையினும்" என்றபாடம், "கவானின்மகற் கண்டபொழுதையுவகையினும்" என ஏட்டுப்பிரதிகளிற் காணப்படுகின்றது. "கவாஅன் மகற்கண்ட தாய்மறந்தாங்கு" என்னும் நாலடியின் சொல்லையும்பொருளையும் இப்பாடம் நன்கு தழீஇநிற்றல் உய்த்துணர்க. கஙகூ-ம் குறளுரையிலே—"சொல் சாதியொருமை; சொல்லெனவே அமைந்திருக்க வாயாலென வேண்

டாது கூறினர்” எனக்காணப்படுவது, ஏட்டுப்பிரதிகளில் “சொலல் சாதியொருமை;” சொல்லெனவேயமைந்திருக்க” எனக் காணப்படுகின்றது. “ஒல்லாவே......வாயாற்சொலல்” என்ற விடத்து பால்மயக்க நீக்குதற்கு இவ்வுரை எழுதப்பட்டதாதலானும், “சொலல் - சொல்லுந்தொழில்கள்” என உரைகாரர் இக்கருத்தை விளக்குதலானும் அச்சுப்பாடம் தவறுதல் அறிக. இன்னும், இங்ஙனமே எழுதிச்செல்லின் மிகவிரியும்; சமயநேர்ந்துழி விளக்குவேன். இவையன்றி, திருக்குறளிலே உரைகாரர் கூறாத பாடபேதங்களும் காணப்படும். ௭௮-ம் குறளில் “வன்பாற்கண்” எனவும், உரையில், வன்பால் - வன்னிலமெனவும் காணப்படுகின்றன; ஏட்டுப்பிரதிகளிலே “வன்பார்க்கண்” என்றேயுள்ளது. பால் - நிலமென்பதினும், வன்பார் - வன்னிலம் என்பது பொருத்தமாகத் தோற்றுகிறது. ௩௮-ம்குறளில், “வீழ்நாள்படாமை” என—அளபெடுக்கற்பாலது—பிழைபட்டுக்காணப்படுகிறது. ௨௨௫-ம்குறளில், “ஆற்றுவாராற்றல்” என்பது “ஆற்றுவார்க்காற்றல்” எனவுமுள்ளது; “ஐந்தவித்தானாற்றல்” என்பதில், நான்கனுருபை விரித்தவர் “ஆற்றுவாராற்றல்” என்புழியும் விரியாமற்போகாராதலின், பின்னையபாடமே பாடம்போலும். இவ்வாறே மற்றுஞ்சிலவுள.

௧௦. கதைகள், பிரசித்த உலகவழக்குகள், வடமொழிப்பதங்கள்.

திருவள்ளுவர், தம்நூலில் பல சரித்திரங்களை வெளிப்படையாகவும் குறிப்பாகவும் கூறிச்செல்வர். அவை :—இந்திரன் கௌதமராற் சாபம்பெற்றமை (௨௫), நகுஷன்கேடு (௮௯௯), மார்க்கண்டேயர் (௨௬௯), ததீசி, சிபி (௭௨), திருமால் உலகளந்தது (௬௧௦),— இவையன்றிப் பரிமேலழகியார் அவ்வவ்விடங்கட்கேற்பக் காட்டுஞ் சரிதங்களும் உள. பாண்டவர் சூதாட்டம் (௯௩௫), இராமராவணயுத்தம் (௭௭௩), பொற்கைப்பாண்டியன், மகனை முறைசெய்தசோழன் (௫௧[illegible]), கட்டியங்காரன் (௫௧௪), பதுமுகன் (௭௭௧), இனி, உலகவழக்குகளில் முக்கியமானவையிரண்டு :—தூரத்தே சென்ற பந்துக்கள் நினைந்தால், அவரால் நினைக்கப்பட்டவர்க்குத் தும்மல் தோன்றுமென்பது. இதனை “நினைப்பதுபோன்று நினையார்கொ

தும்மல், சினைப்பதுபோன்று கெடும்” என்னும் ௧௨௦௩-ம் குறளிற் கண்டுகொள்க. மகளிர், சுவரின்கட் கோடிழைத்துத் தொகையெண்ணுதல் மரபு; இதனை ௧௨௬௧-ம் குறளில் “நாளொற்றித்தேய்ந்தவிரல்” என்பதற்குப் பரிமேலழகர்கூறிய உரையானுணர்க. இனித், திருக்குறளில் வடமொழி வழக்குகள் பலவற்றைத் தெய்வப்புலவர் கூறுதல்போலவே, வடமொழிப்பதங்கள் பலவும் ஆளுவர். இவற்றில், தற்சமமாகவும் தென்மொழியில் வழக்குமிகுதியாகவுமுள்ள வடசொற்களை நீக்கிப்பார்த்தாலும், ஏறக்குறைய ௫௦-க்கு மேற்பட்ட சுத்த வடபதங்கள் காணப்படும். அவை:—புரந்தரன், புருவம், பூதம், மங்கலம், மந்திரி, மதி, மணி, மாத்திரை, மாயம், மானம், முகம், முத்தம், யாமம், வித்தகர், தேயம், தேவர், நாகம், நாகரிகம், நாமம், பருவம், பாகம், பாக்கியம், பாவம், கருமம், கனம், காமம், காரணம், குணம், குலம், கோடி, சலம், ஞானம், தண்டம், தவம், தானம், துலை, தெய்வம், இலக்கம், இந்திரன், ஆயம், ஆசாரம், ஆதி, ஆகுலம், அவி, அந்தம், அமரர், அமிர்தம், அங்கணம்' அதி (நுட்பம்) முதலியன.

பத்திராசிரியர்.

“இயல்வது கரவேல்.”

இது அறஞ்செய்தலையுணர்த்தி யளவுகூறுகின்றது. இ - ள். (வறுமையானிரப்பவர்க்கு உன்னாற்) கொடுக்கக்கூடியபொருளை (நீ) ஒளியாதே எ - று. இதனாற் கொடுக்கக்கூடிய பொருள் எத்துணைச் சிறிதளவாயினும் அது குற்றமன்றென்பதும், கொடுக்கக் கூடாத பொருளில்லை யென்பதும் பெறப்படும். இவ் வளவு, இரப்பார்க்குக் கரக்கும் வச்சைமக்களை நோக்கிக் கூறியவாறு. இரப்பார்க்கு ஈயுமிரக்கமுடையரேனும் இரப்பார்பெருமைக்கேற்ப ஈயும் பொருளில்லையே, இத்துணையானீதல் பெருமையன்றே என ஈயாதொழியினும் மொழியுமென்று கருதி ஒல்லும்வகையா னவ்வீதலைச் செய்க வென்பார் இயல்வதுகரவே லென்றார். ஈண்டிரப்பார் வறியராயி

னாரன்றோ? அன்னோர்க்குப் பெருமையென்னோ? எனின்; வறியரே யாயினும் அவர்தாமுந் தகுதியிற் குணத்தி னொழுக்கத்திற் செயலிற் பலதிறப்படுவர். முன் அறஞ்செயவிரும்பென்றதன் விருத்தியுட் பிறர்பயன்கருதியதென்புழிக்கூறிய, பலர்க்கும் பயனுமாறு செய்யும் அறத்தினை யேற்றுத் தன்கையிற் பொருளின்மையா னிரக்கப் புகுவாருமுளர். அன்னோர் தகுதியிற் குறையாதார். அன்றிப் பொருளுடையராயு மிருப்பர். இருந்துந் தாமேற்ற அறச்செயன் மிகுந்து பொருளேற்கும் பெற்றியதாயின் என்செய்வர்? அத்தகுதியுந் தன்னைப் பொருட்சிறுமையு நோக்கி ஈயாதொழிதலாகாதென்பார் இயல்வது கரவேலெனக் கூறினாரெனலும் பொருந்தும். இரப்பார்பகுதி யனைத்தும் பின் ஏற்பதிகழ்ச்சி யென்பதனுட் கூறுதுங் கண்டுகொள்க. இனி; இயல்வது:—இருப்பினியல்வதும், வருவாயினியல்வதும், நிலையினியல்வதுந், தகுதியி னியல்வதும், நெஞ்சினியல்வதுஞ், சொல்லினியல்வதுஞ், செயலினியல்வது மெனப் பலவகைப்படும். இவைதம்மு ளொன்றேபெறினுஞ் சிலவேபெறினு மனைத்தும்பெறினு மெவ்வாற்றானுங் கரவேலென்பது. 'எஞ்சலின் வைப்பொடு வரனிலை தகுதி, நெஞ்சொடு சொற்செய லென்றிவை யேழி, னியல்வது கரவே லென்மனார் புலவர்.' இஃதுரைச் சூத்திரம். இவற்றுள்;

இருப்பினியல்வதென்பது:—முற்செய்துபோந்த நல்வினை காரணமாகப் பொருளெய்திய செல்வர் அடுத்து வரும் பிறவியினுந் தாம் அவ்வாறுதற்பொருட்டு 'ஈதற்குச் செய்க பொருளை' யென்பவாகலின் அவ்வறத்தினுக்கு ஆக்குங்கால் அப்பொருளி னளவறிதல். அளவறிதலாவது, ஒரேகாலத்து எல்லாப்பொருளு மொழியு மாறின்றி யெஞ்ஞான்று மது குறைவுபடாவண்ணங் காண்டல். அங்ஙனம் இருப்பினியலுமாறு செய்யுங்கால் இரப்பவர் அதற்கு உண்மகிழாதொழியின் அப்பழி ஈவார்க்கன்று. 'கரப்பினவர்பழி' யென்று ஈவார்க்கேற்றியதுபோல இரப்பார்க்கேயாமென்க. இருப்புக்கேற்பவீயாது கரக்குமேல் 'கிளைஞர்க் குதவாதான் செல்வம்... உள்ளனபோலக் கெடும்' என்பவாகலிற் 'செல்வமழியுங்காலத்து முன் ஈயாமையைக் கருதி யுலகம் அவரை யொதுக்கும். இருப்பு மிகுந்திருந்து மீயாது கரப்பரேல் அவ்விருப்பானவர்க்குப் பயனாவது மில்லை. பொருள் பெருகுநெறியே மனஞ்செல்வதியல்பு. அது பெருகுவது எதன்பொருட் டென்றாராய்தலே யறிவுடையோர் செய்கை. அங்ஙனமாராயவே, பொருள் செய்யுமாறும், இருப்பினளவும், எத்துணையளவானதனை யீதலென்பதும், ஈயாது கரத்தலான் வருங் கேடும் பிறவு முணரப்படும். இருப்புச் சிறிதேபெறினும் 'இவ்வள வேனு மிட்டுண்மின்' என்றாற்போல அதற்கியைய வளித்தலுங் கூடும், இயல்வது என்றதனால் இருப்பிற்கு விஞ்சி யளித்தலு மாகாதென்ப. ஆயின், 'ஆனமுதலி னதிகஞ் செலவானான், மான மழிந்து மதிகெட்டுப்—போனதிசை, யெல்லார்க்குங் கள்ளனா யேழ் பிறப்புந் தீயனா, நல்லார்க்கும் பொல்லனா நாடு' என்பதுபோலக் கெடும். இருப்புக்கேற்ப ஈயுமொருவனை நல்லோர் அல்லது இரப்பவர் யாவரும் யாதுமிகழாது புகழ்தலே செய்வர். அவர் செல்வரே யாவர். 'தீதிசந்து—ஒல்வது பாத்துண்ணுமொருவன், செல்வ னெனப்படுவான்' என்பது மேற்கோள். இருப்பி னளவறியா தெவ்வாற்றானு மீதலே யுறுதியென வெல்லாமீந் திடர்ப்படுவார் சிற்க; அத்தகையோராய் வள்ளலெனப் பெயரெய்தினாருமிலரோ வெனின்; அவர் தாமும் இருப்பி னளவறிந்தே யீந்துபோந்தனரென்க. தேரினை முல்லைக்குதவிய பாரி யொரு வள்ளல். மயிற்குக் கலிங்கம் வழங்கினா னொரு வள்ளல். அவரெல்லா 'மிரப்பவரென் பெறினு மென்' னென்று ஈதலையே கடைப்பிடித் தொழுகுங் கொடைமடம் பெற்றனரேயன்றி அளவின்றிக் கொடுத்துக் கெட்டவரல்ல ரென்றுணர்க. இருப்பு, வைப்பு என்பன ஒரு பொருட் கிளவி.

இனி; வருவாயினியல்வது. 'வருவாயுட் கால்வழங்கி வாழ்தல்' என வருவாயி னீயுமளவு வகுத்துணர்த்தப்பட்டது, வரவி னான்கி னொன்றென்பதாம். இதுவே வரவினியல்வதென்பது. இதனின் ஒருக்கான் மிகினுங்குற்றமின்று. மிகுமேல் ஒருக்கால் இடர்ப்படுதலுங் கூடும். குறைப்புமேற் கரத்தலென்னுங் குற்றமெய்தும். இருப்புமுடையராயின் வருவாயினளவு கடந்தீதலுஞ் செய்யலாம். இருப்பு மிகுந்தும் வருவாய் மிகுந்து முளவாயின் இருப்பினியலு மாறீதலுடன் வருவாயிற் கால் வழங்கலுங் கூடும். எவ்வாற்று

னும் 'இல்லார்க் கொன்றீயு முடைமை, நன்றறியு மாந்தர்க்குள' வென்பது கருதி ஒல்லும்வகையா னறவினைகரவாதோம்புக வென்பர்.

இனி; நிலையினியல்வ தென்பது. நிலை—தலைமையுங், கீழ்மையுங், கிழமையுஞ், செல்வமும், வறுமையும், பிரமசரியங் கிரகத்தம் வானப்பிரத்தஞ் சந்நியாச மெனவிவையும் பிறவுநின்ற தன்மை யெனப் பலதிறப்படும். இவற்றுட்டலைமை நிலையாவது: ஒன்றையாளுந் தன்மையது. இத்தலைமைப்பாடு—புரவலன் முதலிரவலனீறாகவுள்ள வினைஞர் பலர்க்கும், பார்ப்பனன்முதற் பஞ்சமனீறாகவுள்ள குலத்தினர் பலர்க்குஞ் செல்லும். அத்தலைமையெய்தினோர் தத்தந் தலைமைப்பாட்டிற் கேற்பக் கரவாதீகவென்பது. புரவலனாய தலைவன் றானாளுமாந்தர்பலர்க்கு மியல்வது கரவற்க. இரவலனாய தலைவனுந் தானிரந்துந் தன்கீழிரக்குமேனையோர்க் கியல்வது கரவற்க. பார்ப்பனா னேற்றலேயன்றி யீதற்கு முரியனாதலின் இரக்கவருஉ மெளியர்க் கியல்வது கரவற்க. பஞ்சமனுந் தன்பாலேற்றற்குரிய வியல்பினாற்கியல்வது கரவற்க. இவரு ணடுநின்று தலைமை யெய்தினோரு மஃதாகவென்ப. இதனைப் 'புணர்வின்கட்டக்க தறியுந் தலைமகனு' மென்பதனாலுணர்க. இவரெல்லாஞ் சிறுபான்மை பெரும்பான்மை இருப்பும் வரவுமுளராவரென்க. இனிக்; கீழ்மை நிலையாவது—தலைவரின் கீழ்ப்பட்ட தன்மையும், படிற்றொழுக்கமுடைய வியல்புமாம். இத்தன்மையுடையார் கணக்கர், காரியகாரர், ஊழியர் முதலாயினாரும்; களியும் மடியுங் காமியுங் கள்வரும் பிறருமாவர். இவருட் கணக்கர் முதலாகத் தலைவரின்கீழ்ப்பட்ட கீழ்மை நிலையுடையார் வரவொன்றே யுடையர். இவர் தமக்கு வரூஉம் வருவாயி னளவுணர்ந்து அதற்கேற்ப இயல்வது கரவற்க. களி முதலாகவுள்ள கீழென்னும் யோகரூடி பெற்ற படிற்றொழுக்க நிலையுடையார்க்கு இருப்பிருந்தும் இலரேயாவர். வரவினு மவரேயாவர். அவர்தாமுந் தாம்படிற்றொழுக்கச் செயற்குச் செலவிடும் பொருளளவின் நற்கருமத்திற்குஞ் சிறிதாகவென்றுஇயல்வது கரவற்கவென்ப. இனிக்; கிழமை நிலையாவது—சுற்றமுநட்பும் பிறவுமாந்தன்மையது. சுற்றமுநட்பும் வறுமையா னிடர்ப்பட்டுழி யவர் கேளாதேயு மியல்வது கரவற்கவென்ப. இதனைக் 'கிளைஞர்க் குதவாதான் வாழ்க்கை'

யெனவுங், 'காக்கை கரவா கரைந்துண்ணு' மெனவும், 'பழமை கந்தாகப் பசைந்த வழியே கிழமைதான் யர்தானுஞ் செய்க' வெனவும் பிறருங் கூறுதலாநீ கண்டுகொள்க. இனிச்; செல்வநிலையாவது பொருளுடைமை. அது முற்கூறிய இருப்புளடங்கும். செல்வமுடைமைக் கியல்வது கரவாமையேயியல்பென்பார். ஏனையோரும் 'வள்ளன்மை பூண்டான் கட்செல்வ' மெனக் கூறினர் காண்க. இனி; வறுமைநிலையாவது: இன்மைவந்தெய்திய காலத்தும், பெருக்கற்றொழிந்தவாற்றி னூற்றுநீரேபோலச் சிறிதளவேயுமியல்வது கரவற்க. இதனை 'நல்கூர்ந்தாரானு, மில்லையென மாட்டாரிசைந்து' என இவ்வாசிரியரே மற்றோர் நூலுட் கூறுமாறும் 'இல்லாவிடத்து மியைந்த வளவினா......லுவந்து, கொடையொடுபட்ட குணனுடைமாந்தர்' என நாலடியுணர்த்துமாறுங் காண்க. இனிப்; பிரமசரிய முதலியநிலையினருட் கிரகத்தர் நீங்கலாக ஏனையோர் பெறுதலொன்றற்கே யுரியாராயினுந் தாஞ்செய்யுந் தவமகிமையா னெல்லாஞ் செய்ய வல்லராதலி னவர்மாட்டிரக்கப் புகுவாருமுளர். அன்னோர்க்கவரு மியல்வதுகரவற்கவெனவுங் கூறுப. இதனை 'அந்தணரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ், செந்தண்மை பூண்டொழுகலான்' என்பதனாலுணர்க. 'தலைமை கீழ்மை கிழமை பொருண்மை, யின்மை யொடுவரு வன்னி முதலாகக், கிளந்த நிலையை யளந்தனர் புலவர்' இஃதுரைச் சூத்திரம்.

இனித்; தகுதியினியல்வ தென்பது. எல்லாநலன்களுஞ் சாலவெய்திய தகுதியும், ஒன்றேபலவெய்திய தகுதியுமெனத் தகுதி இருவகைப்படும். அவ்வவற்றிற் கேற்ப இயல்வது கரவற்கவென்பது. ஈண்டுத்தகுதியென்றது ஒழுக்கத்தையன்று: ஒழுக்கமுடையார் கரவாராதலின். இஃது ஈவார்க்குச் சொல்வதேயன்றி யிரப்பார்மேலதுமாம். இரப்பார் வறியராயினும் முற்பொருளுடையரா யிருந்தவாறு தத்தம் வருணத்திற்கும் பழக்கத்திற்கும் அறிவுக்கு மேற்பத் தகுதியினுயர்தலுங் குறைதலுங்கூடும். அவரவர் தகுதியி னியல்பறிந்து அவர்வேண்டிய தொன்றைக் கரவற்க வென்பதுமாம். உண்பார்க்கு உணவும், உடுப்பார்க்கு உடையும், இருப்பார்க்கு இல்லும், கிடப்பார்க்கு மருந்தும், அறவினை விழைந்தார்க்குப் பொருளும், அல்லலு

பூந்தார்க் கதனை யாற்றுஞ்சூளும் பிறவும் ஈண்டுத் தகுதியினியல்வதென்பது. தகுதியறியாக்காற் பயனின்றாய்முடியும். தகுதியறியானென வுலகமு நிந்திக்கும். கூழுண்பார்க்குக் கூழளித்தலொக்கும். வேண்டுமாயின் மேலுமளிக்கலாம். பாலுண்பார்க்குப் பாலுமதற்கு மேலுமன்றிக் கூழளித்தால் அப்பழக்க மவற்கின்மையின் வறுமைமிகுதியானவனதை யேற்கவரினும் அவனுடற்கஃதேலாது தீங்கெய்தினுமெய்தும். ஆகவே பழியும்பாவமுமாயிற்று. கூழுண்பான் பால்வேண்டறகுதியன்று. வேண்டி அது பெறாமையாற் பழிகூறிற்குற்றம் இரப்பார் மேலதாகும். அரசவையிற் புகுந்தானொருவன் அப்பெற்றிய தரமுடையனாவான். அரசனவற்கு அவன்றகுதிக் கேற்ப வளித்தல்கடன். வினைக் கீழ்த்தரமுடையார்க்குப் போல் ஈதல் ஏதம் பயக்குமென்ப. முண்டுடுப்பாற்கு முண்டேயன்றிக் கெண்டையுடையு மீயலாம். கெண்டையீயாமைபற்றி அவர் சண்டையிடுதல் தகுதியன்று. கெண்டையுடையுடுக்குந் தரமுடையாற்கு முண்டீதறகாது. ஏற்பானுளநாணும்: உலகமும் புகழாது. கன்னிகாதானஞ்சிறந்ததெனக் கருதிப் பார்ப்பனமகளைப் பஞ்சமமகற்குப் பண்ணுதல் தகுதியன்று, பாவமுமாம். ஈகைக்கமைந்த பெயர்களே அவரவர் தகுதியை யுணர்த்தாநிற்குங் காண்க. கூழ்தம்மினென்று கூவியிரப்போர்க்கு ஈவது ஐயமும், பலர்க்குப் பயன்படுஞ் சத்திரமுதலியவற்றிற் செய்வது தருமமும், சிராத்தமுதலிய பிதிர்க்கிரியைக்கும் விவாகமுதலிய மங்கள வினைகட்கும் வேள்விமுதலிய காமியயோகாதிகட்குங் கொடுப்பது தானமும், காரியகாரர்க்கு மூழியர்க்கும் புரிவது மானியமும், கலைவல்லார்க்குங் கவிவல்லார்க்குங் கொடுப்பது பரிசிலும், சுற்றமு நட்புஞ் சூழவளிப்பது விருந்தும், துறவோர்க்குக் கொடுப்பது பிச்சையும், கடவுளர்க்குக் காணிக்கையுமென ஈகை பலவேறுபடும். “ஐயமே பிச்சை...யுறிந்தீந்தான்” என்ப. குறவர்முதலியோர்க்குக் குடிலும், குற்றவாளர்க்குச் சிறையும், சாமானியர்க்கு வீடும், பெருஞ்செல்வர்க்கு மாளிகையும், மன்னருக்கு அரண்மனையும், முனிவருக்குப்பன்னகமும், கடவுளர்க்குக் கோயிலுமென எல்லாம் இடப்பொருளொன்றே பெறுமாக, அவரவர் தகுதிக் கேற்ப வசிக்குமிடம் பலவேறு பெயர்பெற்று வழங்கப்படுமாறு போலவென்க.

இனி; நெஞ்சினியல்வதென்பது. மனம் பொருந்துமாறெல்லாம் ஈதலைச் செய்தல். மனம் பொருந்துமாறாவது மனந் தூய்மை பெற்றுப் பற்றிய நல்வினைநிகழ்ச்சி நல்லாற்றிற் பயன்படுமாறு ஈகையினன்பு புரிதல். அன்பிற் கரவாமை வேண்டு மென்பதாம். அன்பிற் கரப்பாரிடத்து இரவலர் இரவார். இரவச்சங்கூறுமுகத்தான் அன்பிலார் மாட்டிரத்தலன்று, அன்புடையார் மாட்டிரத்தனன்றென்பார் “கரவாத திண்ணன்பிற் கண்ணன்னார் கண்ணு, மிரவாது வாழ்வதாம் வாழ்க்கை” யென்றார் பிறரும். புகழ் இடம்பம் அச்சம் முதலிய கருதி ஈதலுமுண்டு. அவையெல்லாம் பிறரது துயர்நீக்கற் கேதுவாயமையினும் அவர் கருதியது அதுவன்றாகலான் நெஞ்சினியல்வதுள் அடங்காவென்க. அவ்வாறு அறங்கருதாது மேற்கூறிய வேதுக்களானமையு மீகை யத்துணைச் சிறப்பன்றாம். “அன்பின்றி, யேற்றார்க் கியைவ கரப்பான், நிரயத்துச் சென்று வீழ்வான்’ எனப் பிறருங் கூறுதலான் நெஞ்சொடுபொருந்தச் செய்தார்க்குப் பயனு மின்றாய்முடியுமென்க. நெஞ்சொடுபொருந்து மாறின்றிச் செய்தலுமாகாதென்பர். நெஞ்சொடு பொருந்தாதார் ஈதலையொழித்தன்மட்டினில்லாது இரப்பாரைநகைத்தலுஞ் செய்வர். அவர் நித்தவநித்தங்களது வேறுபாடுஞ், செல்வ நிலையாமையும், உயிர்க்குறுதி பயக்குநெறியும், பல்புகழ்நிறுத்தும்பான்மையும் உணராதார். “இல்லார்க்கொன்றீகென்பவனை நகுவார்...யாதுங் கடைப்பிடியாதார்” எனவும், ‘இரப்பாரை யெள்ளாமகன் என்றும் பிறக்கலான்’ எனவுமோதுபவென்க. இனித், தம்மைக் கரவாதார் போலக் காட்டி மனம்வேறுதிரிந்து வாழ்வாருமுளர். அவர் நஞ்சினுங் கொடியர். நடலைவாழ்வுடையர். அவர்செயலை யீவதன்பாற் காணலாம். இன்றென்பர்; நாளையென்பர்; என்றென்று மில்லையென்று சொல்லார். நாள் பலகழிய நடப்பினு நடையொன்றே அவர்பாற்காணும் பயனாய்முடியும். இவரே நெஞ்சினியல்வது கரக்கும் பஞ்சைமக்கள். ஈய மனமிசையாது இல்லையெனல் குற்றமன்றென்பாருமுளர். “இசையா வொருபொரு ளில்லென்றல் யார்க்கும், வசையன்று வையத் தியற்கை—நசையழுங்க, நின்றோடிப் பொய்த்த னிரைதொடீஇ செய்நன்றி, கொன்றாரிற்குற்றமுடைத்து” என்பர். இதுவுங் கரப்பாரை நோக்கிக் கூறியவாறுமாம். இதில்

இல்லென்றல் என்ற லேசத்தாற் கரத்தலை மறுத்தமையுமுணர்க. அவ்வாறு கூறினரேனுங் கரத்தல் கூடாதென்பதும், கரத்தலினும் இல்லென்றனன்றென்பதூஉங் கருத்தாக அங்ஙன முணர்த்தினாரெனக்கொள்க. நெஞ்சங் கரக்குமேல் அது நெஞ்செனப்படாது. நெஞ்சென்னும் பெயரளவினின்று வேறுபொருள் கொள்ளுமென்க. இனி; நெஞ்சங் கரவா தமைந்தால் அதுவே சாலும், செய்கை யின்றெனினுங் குற்றமின்றென்பாருமுளர்.

இனிச்; சொல்லினியல்வதென்பது- இன்சொல்லின் வழுவாமை. ஈதற்கிதுவு வேண்டுவதாகலிற் சொல்லினியல்வதாயிற்று. இன்சொற்கரந்தார் ஈகையு முடன்கரந்தாரே யாவர். முட்புறப் பலவின் கொட்புறு கனியே போல்வாருமுளர். அதுவும் அத்துணைச் சிறப்பன்று: கடுமொழியைக்கேட்டபொழுதே விருந்தினன் மெல்லியனாதலிற் கடுகவகன்றிடுதலான். இதனைப் 'புல்லா—வகம்புகுமி னுண்ணுமினென்பவர்மாட் டல்லான் முகம்புகுதலாற்றுமோ' வெனநாலடியும், 'இலனென்னு மெவ்வ முரையாமை யீதல்' என வள்ளுவருங் கூறுமா றுணர்க. இவற்றுள் வள்ளுவர் கடுமொழியது வென்பார் 'இலனென்னு' மெனவும், அது தீதாமென்பார் 'எவ்வ' மெனவும், ஈதற்கு முதற்கண் வேண்டுவது இன்மொழி யென்பார் 'எவ்வமுரையாமை யீத' லென ஈதற்குமுன் எவ்வமுரையாமையை வைத்தவாறுங் கண்டுதெளிக. இவற்றின் விரிவெல்லாம் 'ஞயம்படவுரை' யென்பதன் விருத்தியுட் கூறுதும் கண்டுகொள்க. இனிச்; சொல்லினியல்வதென்பதை யீகைக்கேயன்றி, மெய்ந்நூற்பொருளை யுணர்த்தும் ஆசிரியர்க்கேற்றி அவர் உள்ளவாறு சொல்லுதலிற் கரவற்க வெனவும், மற்று முலகினர்க்கேற்றி நடுநின்று நியாயஞ் சொல்லப் புகுந்தார் அல்லது அரசவையிற் சாட்சி யாயினார் 'மன்றிற் கொடும்பாடுரைப்பார் எச்சமிழந்து வாழ்வார்' என்றிருத்தலான் நடுமொழியிற் கரவற்க வென்பதும் பொருந்தும். அங்ஙனமாயிற் பின் ஓரஞ்சொல்லேல்' என்றது மிகையாமன்றோவெனின் ஈண்டுப் பலபொருளையு மடக்கிக் குறிப்பினுணர்த்தி ஆண்டதனை வெளிப்படையின் விளக்கினாரென்பது. அல்லதூஉம் வறியராயினார்க் கீயுமாறு அன்னோர் வேண்டினராக ஏனைச் செல்வருக்கு எடுத்துச் சொல்லுதலிற் கரவற்க வென்பதுமாம். ஈயவியலாதாராயின் அவர்க்குச் சொல்லக் கூடிய சொல்லேனுங் காவாமைவேண்டுமென்பதும் பொருந்தும். இதனை 'ஈகையரிதெனினு மின்சொலினு நல்கூர்த, லோகோ கொடிது கொடிதம்மா' வென்பதனாற் கொள்க.

இனிச்; செயலி னியல்வதென்பது. விருந்தினனை (வறியனை யிரக்கவருவானை) இன்முகங்காட்டி யேற்றலும், ஓடியுந்தேடியுமிருந்துந் திரிந்தும் பிறர்க்கு நன்மை பயக்கு நற்கருமங்களி னுடலை யியக்குதலுமாம். இச்செயல்களிற் கரவற்கவென்பது. இவற்றுண் முன்னது செல்வர்க்கும், பின்னவை வறியவர்க்குமாம். இவ்வகையே இயல்வதென்பது முடிந்தது.—(இன்னும்வரும்)

பத்திராசிரியர் குறிப்பு:—யாழ்ப்பாணத்து நல்லூர் வித்துவசிரோமணி ஸ்ரீ-பொன்னம்பலம்பிள்ளையவர்கள் மாணாக்கர் ஸ்ரீமத்-கோ. வைத்தியலிங்கப்பிள்ளையவர்களால் எழுதப்பெற்ற "ஆத்திசூடி விருத்தி"யில் "இயல்வது கரவேல்" என்பதற்கு எழுதப்பட்ட விருத்தி இப்போது பதிப்பிக்கப்படுகின்றது. இந்நூலைச் செய்வித்துதவுவோர், கண்டனூர் ஸ்ரீமத்-மு. ராம. சோமசுந்தரஞ்செட்டியாரவர்கள். இவர்கள் எனக்கெழுதிய கடிதத்தினின்று, இவ்விருத்தி இப்போது அச்சிடப்பெற்று வருகின்றதென்றும், செந்தமிழுருவத்தில் இந்நூலினளவு 650-பக்கங்கட்கு மேலாகுமென்றும் தெரியவருகிறது. இவ்விருத்தியின் ஒருபகுதியை இப்பத்திரிகைவாயிலாக வெளியிட்டு, நல்லறிஞர்பலர் அபிப்பிராயத்தைத் தெரிந்துகொள்ளவேண்டுமென்பது, இதனை இயற்றுவித்த செட்டியாரவர்கள் பெருவிருப்பமாகும். இதனைப்படிக்கும் அறிஞர் தத்தம் அபிப்பிராயத்தை நம் பத்திரிகைவாயிலாகவேனும், செட்டியாரவர்கட்கு நேரிலேனும் அறிவித்தல், அன்னோரை யூக்குதலாயிருக்குமென நம்புகிறேன்.

சொல்வகைநோக்கல்.

பொருளை நினைத்துணரும்படி அறிவிக்கும் ஆற்றலுடைய எழுத்தொலியே சொல் எனப்படும். ஆற்றலாவது சொல்லாகிய தனக்கும் பொருளுக்குமுள்ள தொடர்ச்சி. இச்சொல்லினால் இப்பொருள் அறியப்படும் என்னும் இறைவனியமமே ஆற்றல் என்பாருமுளர். ஆற்றல், வலி, சக்தி என்பன ஒருபொருட்கிளவிகள். ஆற்றலில்லாதது சொல்லெனப்படமாட்டாது.

ஆற்றலும் முதியோர்வழக்கு, உபதேசம், நிகண்டுநூல், இலக்கணநூல் முதலியவற்றாற் கொள்ளப்படும். முதியோர்வழக்காவது

முதியோர் கூறிய வாக்கியத்தைக் கேட்டு இளையோர் அறிந்து வழங்கும்முறைமை. "புத்தகங்கொண்டுவா" என்று ஒருமுதியோன் கூறுங்கால் மற்றொருவனாற் புத்தகங் கொணரப்பட்டமையைப் பக்கத்தினின்ற இளையோன் கண்டு புத்தகங் கொணர்தலாகிய காரியம் இச்சொற்றொடராலே நிகழ்ந்தது என்றுணர்ந்து தானும் அவ்வாறு வழங்குவன். இவ்வாறுணர்ந்து வழங்குவதே முதியோர் வழக்காகும். உபதேசமாவது "இது பசு" "இஃதுகன்று" என்பனபோலப் பொருள்களைச் சுட்டிக்காட்டிச் சொற்களைக்கூறி அறிவித்தல். நிகண்டுநூலாவது இன்ன இன்ன பொருள்களுக்கு இன்ன இன்ன சொற்கள் என்று சொற்பொருள்களை வரிசைப்பட அறிவிக்கும் நூல்; இலக்கணநூலாவது பகுதி, விகுதி முதலியவற்றின் பொருள்களை அறிவித்துச் சொற்களின் இயல்பினையும், பொருளினையுந் துணிவிக்கும் நூல். இவற்றாலும் ஒப்புமை முதலிய பிறவற்றாலும் ஆற்றல் கொள்ளப்படும்.

உலகம் வழங்கிவருவதற்குச் சொன்னிகழ்ச்சியே காரணம். எந்தக் காரியமுஞ் சொல்லினாலே நிகழ்கின்றது. கடவுளுடைய பிரமாணங்களாகிய விதிவிலக்குகளையும் பிறவற்றையுஞ் சொற்களே அறிவிக்கின்றன. பழையோர் சரித்திரங்களையுஞ் சொற்களே அறிவிக்கின்றன. மற்றும் செய்வன, தவிர்வன, வேண்டுவன முதலிய எல்லாவற்றையுஞ் சொற்களே அறிவிக்கின்றன. சொல்லென்னும் ஒளியில்லையாயின், அஞ்ஞானமாகிய இருள்பரந்து உலகந் தடுமாறும். ஒருவர் கருத்தை மற்றொருவர் அறியமாட்டார். வேண்டும் பேறுகளைப் பெறுதலுங் கூடாது. இத்துணைச் சிறப்புடைய சொற்களைப் பிரயோகிக்குங்கால் வழுப்படவொட்டாது ஆராய்ந்துகொள்ளுதல் யாவர்க்கும் ஆவசியகம். சொற்களைத் தொடுத்துப் பேசுவோரும், எழுதுவோரும், செய்யுள் செய்வோரும் தாம் எடுத்துக்கொண்ட சொற்களிலே தாம் கருதிய பொருளைவிளக்கும் ஆற்றல் உண்டோ? இன்றோ? என்பதனை ஆராய்ந்து தொடுத்தல் நன்றாகும். ஆற்றலில்லாதன கருதிய பொருளை விளக்கமாட்டா.

தமிழ்வாக்கியங்களிலே வருஞ்சொற்களெல்லாம் தமிழ்ச் சொற்களாய் வருதலே முறையாகும். முன்னோரால் வழங்கப்பட்டுப் பயின்று வந்த வடசொற்களும் வேண்டுழி வழங்குதற் குரியனவாகும். வடசொற்குந் தமிழ்ச்சொற்கும் இயைபுமுண்டு. திருவள்ளுவர்குறள் முதலிய இலக்கியங்களிலே வருஞ்சொற்களெல்லாம் பெரும்பாலுந் தமிழ்ச்சொற்களேயாம். அற்பமாய் வடசொற்களுமுள. அவையும் பயின்றுவந்தனவேயாம். திசைச்சொற்களைக்காண்டல் அரிது. இக்காலத்திலே திசைச்சொற்களைத் தமிழ்ச்சொற்களோடு கலந்துஞ் சிலர் பிரயோகிக்கின்றனர். அது நன்றன்று. கருதிய பொருட்கு வேண்டுஞ் சொல்லில்வழி அவைகளை ஒருகாற் கொள்ளலும் அமையும்.

பெயர், வினை, இடை, உரி என்னும் சொற்களுள்ளும், செஞ்சொல்லாயுள்ளவைகளே தக்கனவாகும். செஞ்சொல்லாவது நேராற்றலினாலே தனக்குரிய பொருளை அறிவிக்குஞ் சொல். இதனை வடநூலார் வாசகம் என்பர். அது காரணச்சொல், இடுகுறிச்சொல், காரணவிடுகுறிச்சொல் என மூவகைப்படும். காரணச்சொல்லாவது பகுதி, விகுதி முதலிய உறுப்புக்களின் ஆற்றலாற் பொருளைவிளக்குஞ் சொல். இடுகுறிச்சொல் உறுப்பாற்றலின்றிச் சமுதாயவாற்றலாற் பொருளை விளக்குஞ்சொல். காரணவிடுகுறிச்சொல்லாவது உறுப்பாற்றலுடையதாயினுஞ் சமுதாயவாற்றலால் ஒருபொருளையே அறிவிப்பது.

மற்றைய இலக்கணச் சொல்லும், குறிப்புச் சொல்லும் நேராற்றலாற் பொருளை உணர்த்தமாட்டா. இலக்கணச்சொல்லாவது அதன்பாலுள்ள குறியினாலே இப்பொருளுடையது என்று அறியப்படுவது. அது வழக்கும், பயனும் பற்றிக் கொள்ளப்படும். வழக்காவது தொன்றுதொட்டு வழங்கி வந்தமுறை. இதனாற்கொள்ளப்படுவது ஆகுபெயர் எனவும்படும். பயனாற்கொள்ளப்படுவது விட்டவிலக்கணை விடாதவிலக்கணை முதலியனவாகப் பலவகைப்படும்.

குறிப்புச் சொல்லாவது குறிப்பாற் பொருள் பயக்குஞ்சொல். குறிப்பாவது கருதியறிவது. அது தனக்குரிய ஆற்றலாற் பிறப்பது, பொருட்குரிய ஆற்றலாற் பிறப்பது என இருவகைப்படும். பலபொருளொருசொற்களுங் கருதியபொருளை நேரே விளக்காது சார்பு பகை முதலியன பற்றி விளக்கலால் அவையுங் குறிப்புச்சொல்

எனப்படும், சார்பு முதலியனவாவன சார்பு, வினை, இனம், இடம் என்பன. வடநூலார் இவற்றோடு பிரிவு, உடனிகழ்ச்சி, பகை, பயன், சமயம், காலம், பொருத்தம் முதலியவற்றையுங் கொள்வர்.

சொற்களை இன்னும் பலவகையாக வகுப்பாருமுளர். அவைகளை ஆங்காங்குக் கண்டுகொள்க. வாக்கியங்களை எழுதுவோரும், செய்யுள் செய்வோருந் தாங்கள் எடுத்துக்கொண்ட சொற்களையெல்லாம் பரீக்ஷித்து நற்சொற்களைத்தெரிந்து பிரயோகித்தல் வேண்டும். வழூச்சொற்களையும், திசைச்சொற்களையும், இயைபில்லாச்சொற்களையும், திரிசொற்களையும், வழக்கில்லாச்சொற்களையும் பிரயோகிப்பாராயின், அவை சிறப்படையமாட்டா. பரிமேலழகர், சேனாவரையர், சிவஞானசுவாமிகள் முதலியோர்களுடைய வாக்கியங்களும், திருவள்ளுவர், கம்பர், முதலியோருடைய செய்யுள்களுஞ் சிறந்து தோன்றுவது, பெரும்பாலும் சொற்பிரயோக வன்மையினால் என்றே கொள்ளுதும்.

பிற்கால வித்துவான்களுள்ளே ஆறுமுகநாவலரவர்களுடைய பெரியபுராணவசனம், பாலபாடங்கள் முதலிய கத்தியரூபங்களெல்லாம் யாவராலும் பாராட்டிக்கொள்ளப்படுவதும், கேட்டார்ப்பிணிக்குந் தகையவாய்க் கேளாரும் வேட்பமொழியுஞ் சொற்பிரயேர்க வன்மையினால் என்றே கொள்ளுதும். "வாசகம் வல்லார்முன்னே யாவர் வாய்திறக்கவல்லார்" என்று கம்பருங் கூறுவர்.

இக்காலத்திலே சிலர் சிறுவர்களுக்குக் கற்பிக்கும் பாலபாடங்களைத்தானும் இங்கிலீசுநடையிலே எழுதிவிடுகின்றார்கள். "இப்பாடத்தினால் என்னபடித்துக்கொள்ளுகின்றாய்?", "தசரதன் என்று அழைக்கப்படும் அரசன் இருந்தான். ஆனால் அவன்"--இவை தமிழ்நடையாகுமா? இந்நடை தமிழ்கற்குஞ் சிறுவர் மனத்திற்பதியுமாயின் பின்னர்த்திருத்தம் எப்படி வரும்? வாக்கிய நடைமாத்திரமோ! சொற்களையும் பிழைப்படப் பிரயோகிக்கின்றார்கள்; கருப்பு என்பதற்குக் கறுத்த என்றும், பாவித்தல் என்பதற்கு வழங்குதல் என்றும், நிலவு என்பதற்குக் கிரஹணம் என்றும் பொருள் கூறுகின்றனர். இச்சொற்களிடத்திலே இப்பொருள்களை உணர்த்தும் ஆற்றல்கள் இல்லையே? சொற்களைப் பிரயோகிக்கும்போது இச்சொற்கும் இப்பொருட்கும் ஆற்றலுண்டா என்பதை ஆராயவேண்டாமா? ஆற்றலில்லாதன அசதியாடற் கிடனாகும்.

செய்யுள் செய்வோருக்கும், வாக்கியம் எழுதுவோர்க்கும் சொற்களைப் பரீக்ஷித்துத் தக்கனவற்றை எடுத்துக்கொண்டு தகாதனவற்றை விலக்குதல் ஆவசியகமேயாகும்.

இங்ஙனம்,
அ. குமாரசுவாமிப்பிள்ளை.
சுன்னாகம்.

புகழ்ச்சி விருப்பு.

நம்முடைய குணங்களைப்பற்றியும் செய்கைகளைப்பற்றியும் பிறர் புகழவேண்டுமென்னும் எண்ணம் உலகப்பற்றுள்ள நம் ஒவ்வொருவருக்கும் உண்டு. அது மானிட இயற்கை. அஃறிணைப்பொருள்களாகிய விலங்குமுதலியவைகளும் தம்முடைய இனத்தைச்சேர்ந்த ஏனைய பிராணிகளைவிடத் தாம் சில அம்சங்களில் மிகுந்திருந்து அதனாற் புகழ்பெறவேண்டுமென்று விரும்புவதை நாம் பிரத்தியட்சமாகக் காண்கிறோம். குதிரை, மாடுமுதலிய பிராணிகளையும் சேவல், புறாமுதலிய பறவைகளையும் பந்தயம்விடுகையில் அவற்றிற்குண்டாகும் ரோஷத்தின்மிகுதியைக் காணாதவர் யாவர்? சர்வஜீவதயாபரராகிய கடவுள் மானிடரிடத்து அமைத்துவைத்த சற்குணங்களுக்குள்ளே புகழ்ச்சிவிருப்பும் ஒருவித சற்குணமென்று மேலோர் ஒப்புக்கொள்ளுவர். மானிடரிடத்துள்ள சற்குணங்கள் எவற்றினும் புகழ்ச்சிவிருப்பைச் சிறந்ததென்று கூறுவதற்கு ஒரு பொருத்தநியாயமிருக்கிறது; ஏனெனில் எவனொருவன் பிறர் தன்னைப்புகழவேண்டுமென்கிற எண்ணங்கொள்ளுகிறானோ அவன் பிறர்சரியென்று ஒப்புக்கொண்டு வியந்துரைக்கத்தக்க காரியங்களையே பெரும்பாலும் செய்துகொண்டு வரவேண்டியவனாவான்.

உலகத்தில் தன்னைப் புகழவேண்டுமென்கிற எண்ணத்துடன் பிரவர்த்திக்கிற ஒவ்வொருவனும் பெரும்பாலும் ஜனசமூகவாழ்க்கைக்கு அனுகூலமான நற்காரியங்களையே செய்யவேண்டிவரும். அந்தப்படி செய்யாவிடில், யாவரும் ஏககாலத்தில் ஒருவனை யாதொரு தீயகாரியத்துக்காக எவ்வளவும் வியவார். 'பிறருடைய மதிப்பையும் அவமதிப்பையும் நாம் ஒருபொருளென மதியோம்; அவர்களுடைய புகழ்ச்சியையும் இகழ்ச்சியையும் ஒருபடித்தாய் நாம் கருதுவோம்' என்று முற்றத்துறந்த ஞானிகளைப்போல் வாய்ப்பறையடிப்பவர்களைப் பெரும்பாலும் அகங்காரிகளென்றே மேலோர் கூறுவர். அப்படிப்பட்டவர்களுடைய செய்கைகள் - "நாடொப்பனசெய்." "தேசத்தோடொத்துவாழ்." என்னும் பிரமாணங்களுக்குப் பெரும்பாலும் விரோதப்பட்டிருக்கும். அப்படிப்பட்ட அகங்காரிகள் தாம் யாருடன் கலந்துவாழ்கின்றார்களோ அவர்கள் ஒப்புக்கொள்ளத்தக்க நடையுடைபாவனைகளை அனுசரியாமல் தம்முடைய மனம்போனவழி வேறொன்றை அனுசரிக்கும்போது, அவர்களுடைய இகழ்ச்சிக்கு உள்ளாகவேண்டிவரும். அவர்களுடைய இகழ்ச்சியை ஒருபொருளாக மதியாவிடில் அப்படிப்பட்டவர்களை அகங்காரிகளென்றே கூறவேண்டியதல்லவா? இகபர ஆசைகளை முற்றும் ஒழித்து இருவினையொப்பு அமையப்பெற்ற ஞானிகளைப்பற்றியன்று, இங்கே கூறவந்தது. இல்வாழ்வானாயிருந்து உலகப்பற்று எவ்வளவும் ஒழியாதவனாகி ஏனைவிஷயங்களிற் பேரவாக்கொண்டிருக்கும் ஒருவனைப்பற்றியே இங்குச் சொல்லவந்தது.

உலகத்தில் நற்கருமங்களைச்செய்த சத்புருஷர்களுக்குள்ளே பெரும்பான்மையோர் அந்தரங்கத்தில் புகழையேவிரும்பியிருந்தவர்களாகத் தெரியவருகிறது. அதுகாரணமாக யாம் அவர்களைச் சத்புருஷர்கள் அல்லரென்று கூறவந்தோமில்லை. எவ்வகைப்பட்ட சத்கருமங்களுக்கும் புகழ்ச்சிவிருப்பே மனதில் மூலகாரணமாயிருக்கிறதென்பதைக் காட்டவந்தோம். எல்லாப் பொருள்களிடத்தும் ஆசையைமுற்றும் விட்டொழிக்கவேண்டிய துறவறநெறியைப்பூண்ட ஒருவனுக்குப் புகழ்ச்சிவிருப்பையும் விட்டொழிப்பது அத்தியாவசியகமென்று கூறவந்தவிடத்தில் சிறந்தநூலாசிரியரொருவர் அடியில்வருமாறு கூறுகின்றார்:—

"உன்னுகின்றனையுனைமனோர்பெரியனென்றுணருமாசெயவுன்பான்
மன்னுமீசனேபந்தம்வீடளிப்பவன்மற்றையாரிந்தென்னா
மன்னவன்திருப்பொன்னடிகரியதாவருந்தவஞ்செய்நெஞ்சே
பின்னைமுன்னவனுலகறிந்திறைஞ்சுமாபெருமைசெய்குவனன்றே."

"உன்னை இவ்வுலகத்திலுள்ளார் தவத்தாற் பெரியவனென்று அறியுமாறுசெய்ய நீ கருதுகின்றாய்; உன்னிடத்துவிட்டுநீங்காது நிலைபெற்றிருக்கின்ற கடவுளே நீசெய்த பாவபுண்ணியத்தையறிந்து அவற்றிற்கு ஏற்கப் பந்தமும் வீடுங்கொடுப்பார்; அவரையன்றி மற்றஜீவர்கள் உன்னைப்பெரியவனென்று அறியும்படி அவர்கள்காண நீ செய்யும் தவத்தால் உனக்கு யாதுபயன்? ஜீவசாட்சியைக்குறியாமல் கடவுள் திருவடிசாட்சியாக அரியதவத்தை நெஞ்சமே நீசெய், அந்தப்படி நீ தவஞ்செய்தபின் யாவர்க்கும் முதல்வராகிய கடவுள் இவ்வுலகத்திலுள்ளார் யாவரும் உன்னைப்பெரியவனென்று அறிந்து வணங்கும்படி உனக்குப் பெருமையைக்கொடுப்பார், இதை நீ அறிவாயாக" என்று பொருள்படக்கூறிய மேற்கண்ட பாசுரத்தின் கருத்தையோசிக்கையில், உலகத்திலுள்ள சிலர் தம்மைப்புகழவேண்டுமென்று விரும்பிய மனதைநோக்கி, இப்புகழில் நீ கருத்துவையாதே, கடவுள்சாட்சியாக நீ தவஞ்செய்தால் உலகத்திலுள்ளார் யாவரும் உன்னை வணங்கும்படியான பெருமை உனக்குக்கிடைக்கும் என்று கூறியது விந்தையினும் விந்தையாயிருக்கவில்லையா? இவ்வளவுதூரம் இங்கேசொல்லவந்ததெல்லாம் எவ்வகைப்பட்டவர்களுக்கும் புகழ்ச்சியில் விருப்பையொழிப்பது கூடாதென்பதையும் புகழ்ச்சிவிருப்பு ஜீவவியற்கை என்பதையும் காட்டுவதற்கேயாம்.

இல்லறவியலைக்கூறவந்த திருவள்ளுவநாயனார் இல்வாழ்க்கை என்னும் அதிகாரம் முதலாகப் புகழென்னும் அதிகாரம் ஈறாக இருபது அதிகாரங்கள் கட்டளையிட்டிருக்கின்றனர். இல்லற இயலின் கடைசியில் புகழைப்பற்றிய அதிகாரத்தை அப்பெருந்தகையார் சேர்த்தது யாதுகாரணத்தினால்? கிருகஸ்தாசிரமதருமத்தில் நிற்பவன் அன்புடைமை, விருந்தோம்பல், ஈகைமுதலியவற்றைத் தழுவுவதும், பிறர்மனைவிழைதல், அழுக்கறுத்தல், பயனில்சொல்லுதல் முதலியவற்றை விலக்குவதும் இல்லறவாழ்க்கையின் இறுதிப்பயனா

கிய புகழைப்பெறும்பொருட்டே என்னும் உண்மைதோன்றவே நாயனார்புகழைப்பற்றிய அதிகாரத்தை இல்லற இயலின்கடைசியில் வைத்ததாகத் தோன்றுகிறது.

> “தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார்
> தோன்றலிற் றோன்றாமை நன்று.”

மானிடராய்ப்பிறந்தால் புகழுக்கு ஏதுவாகிய நற்குணங்களோடு பிறக்கக்கடவர்; அப்படிப்பிறவாதவர்கள் மனிதர்களாய்ப்பிறத்தலினும் பிறவாமலிருத்தலே நன்று என்றும்,

> “வசையொழிய வாழ்வாரே வாழ்வா ரிசையொழிய
> வாழ்வாரே வாழா தவர்.”

வசையுண்டாகாமல் புகழுண்டாகும்படி வாழ்பவர்களே வாழ்பவர்களென்று சொல்லப்படுவார்; புகழுண்டாகாமல் இகழுண்டாகும்படி வாழ்பவர்களே வாழாதவர்கள் (இறந்தவர்கள்) என்று சொல்லப்படுவார் என்றும் தெய்வப்புலவர் தமது பொதுமறையில் கூறியிருக்கின்றனர். மேலெடுத்துக்காட்டிய நியாயங்களினால் புகழ்ச்சிவிருப்பு ஜீவஇயற்கை என்றும் புகழுக்கு ஹேதுவாகிய கருமங்களை ஒவ்வொருவரும் செய்யவேண்டியதென்றும் தெளிவாய் விளங்குகிறது.

ஆனால் நல்ல காரியங்களுக்காக உதவத்தக்க பொருள்களை மனிதன் தன்னுடைய துர்க்குணங்களினால் தீயகாரியங்களுக்கு உபயோகப்படுத்திக்கொள்வதுபோல, நற்குணங்களுக்கும் சற்கருமங்களுக்கும் பெருங்கருவியாயிருக்கும்படி மனிதனுடைய மனதில் கடவுள் தோற்றுவிக்கும் புகழ்ச்சிவிருப்பு என்னும் குணத்தைச் சிலதீயோர் கெடுத்துப் பாழாக்குகின்றனர். அத்தீயோருடைய மனதில் பிறர் தம்மைப் புகழவேண்டுமென்கிற ஓர் எண்ணம் மாத்திரம் சதாகுடிகொண்டிருக்கிறதேயன்றி அப்புகழைப்பெறுவதற்கு வேண்டிய நற்குணங்களையடையவும் நற்கருமங்களைச்செய்யவும் அவர்கள் முயலுவதில்லை. இல்லாத நற்குணங்களை உள்ளதுபோல மேலுக்குக் காட்டி நடித்து அப்புல்லறிவாளர் புகழ்பெற விரும்புகிறார்கள். இவர்களைவிடப் பெரும்பொய்யர்கள் வேறு உலகத்தில் உண்டா? இப்படிப்பட்டவர்கள் தம்மிடத்து இல்லாதகுணங்களை உள்ளனவாக

ஒருவன்வந்து முகஸ்துதிபண்ணுகையில் பெருமகிழ்ச்சிகொண்டு பின்னர் விளக்கில்வீழ்ந்து இறக்கும் விட்டில்போல் துக்கிப்பர். முகஸ்துதியினால் ஏமாந்துபோகிறவர்களுக்குவரும் பெருங்கேடுகளைப் பற்றி இங்கு விவகரிக்கவேண்டிய அவசியமில்லை. புகழ்ச்சிவிருப்பை விசேஷமாக மேலேகூறியதெல்லாம் அப்புகழை விரும்புவதற்கு ஏதுவாகிய குணங்களை வாஸ்தவத்தில் அடையவும் காரியங்களைச் செய்யவும் ஒருவன் மனமொழிமெய்களினாற் பாடுபடவேண்டுமென்னும் கருத்தைக்கொண்டேயாம். உத்தமர்கள் இன்ன சற்கருமங்களைச்செய்தால் அதற்குக் கூலியாக இவ்வளவு புகழுண்டாகும் என்பதை நோக்காமலே நல்லகாரியங்களைச் செய்வார்கள். அக்காரியங்களின் பயனாகப்புகழ் அவர்களுக்குத்தானே விளையுமென்பதற்கு எவ்வளவும் சந்தேகமில்லை. நாம் மனச்சாட்சிக்கு ஏற்கச் சற்கருமங்களைச்செய்துகொண்டே வரவேண்டியது. அவற்றிற்குப் பயனாகப் புகழ் தானேவிளையும். புகழ் விளையவேண்டுமென்றுகருதி ஒருகாரியத்தைச்செய்வது மாத்திரம் சரியல்ல. அறிவுடையோர் நம்முடைய குணாதிசயங்களையுஞ் செய்கைகளையுங்கண்டு மெச்சுவதையே புகழென்று சொல்லவேண்டும். அறிவிலிகள் நம்மை எப்படிச்சொன்னாலும் அதனால் நாம் மனக்கலக்கம்கொள்வது சரியன்று. ஏனெனில்,

> “அவமதிப்புமான்ற மதிப்புமிரண்டு
> மிகைமக்களான் மதிக்கற்பால-நயமுணராக்
> கையறியாமாக்களிழிப்பு மெடுத்தேத்தும்
> வையார் வடித்தநூலார்”

ஒருவரைத் தாழ்வாகமதித்தல், உயர்வாகமதித்தல் என்னும் இவ்விரண்டும் மேன்மக்களால் மதிக்கத்தக்கன; விதிவிலக்குகளையுணராத கயவர்களுடைய இகழ்ச்சியையும் புகழ்ச்சியையும் ஒருபொருளென அறிவுடையோர்கொள்ளார் என்று பிரமாணமிருக்கிறது.

உலகத்திலுள்ளயாவரும் தம்மைப்புகழும்படி ஒருவன் நடந்துகொள்ளமுயல்வது வியர்த்தமாய்முடியும். “உலகத்தோடொட்டவொழுகல்” என்பதுபோன்ற சந்தர்ப்பங்களில் உலகென்பதை உயர்ந்தோரென்றே உரையாசிரியர் பலருங் கூறியிருக்கின்றார்கள். வாசனையென்னும்பதம் நறுமணத்துக்கும் தீநாற்றத்துக்கும் பொதுவான

தாயிருப்பினும் அதை நறுமணத்துக்கே நாம் உபயோகித்துவருவது போலப் புகழ்என்னும் பதம் சற்கருமங்களுக்குரித்தானதாகவே உபயோகிக்கப்பட்டுவருகின்றது. திருடர்களும் பொய்யர்களும் வசிக்கும் ஓர் ஊரிலிருக்கும் ஒருவன் அவ்வூரில் புகழ்பெறவேண்டுமானால் பெருந்திருடனாகவும் பெரும்பொய்யனுமாக வல்லவா இருக்க வேண்டிவரும்? அவ்வாறு அத்திருடர்களும் பொய்யர்களும் தம்மை வியப்பது எதார்த்தத்தில் புகழாகமாட்டாது. ஆகவே அறிவுடையோர் வியந்துபுகழத்தக்க காரியங்களைப்புரிந்து தன்னை இவ்வுலகத்தில் நிலைபெறச்செய்து கொள்ளவேண்டியது மானிடனாய்ப்பிறந்த ஒவ்வொருவனுக்கும் பரமபுருஷார்த்தமாகும். ஏனெனில்,

> “ஒன்றா வுலகத் துயர்ந்த புகழல்லாற்
> பொன்றாது நிற்பதொன் றில்”.

உலகத்தில் அழியாது நிலைபெறுவது, தனக்கு நிகரில்லாது ஓங்கிய புகழையன்றி வேறில்லை. இதற்கு, ஈகையிற்சிறந்த கன்னனும் சத்தியத்திற்சிறந்த அரிச்சந்திரனும் பொறையுடைமையிற்சிறந்த தர்மபுத்திரரும் நாளைக்கும் புகழுடம்புபெற்று உலகத்தில் ஓங்குவதே உதாரணமாயிருக்கின்றது.—(ஜ. வி.)

கலிங்கத்துப்பரணியாராய்ச்சி.

(முற்றொடர்ச்சி.)

உ௦. “மீனம்புகு கொடிமீனவர் விழியம்புக வோடிக் - கானம் புக வேனம்புக மடவீர்கடை திறமின்” என்னும் பாட்டில், “மீனவர் ......கானம்புக வேளம்புகு மடவீர்” எனக் காணப்படுகிறது. “கானம்புக வேனம்புகக்...கடைதிறமின்” என்பதற்குச் சிறந்தபொருள் புலப்படாமையானும், பாண்டியர் காட்டுட்புகுதலால், அவர் பிரிவாற்றாது (வேள் - அம்பு - உகு-மடவீர் =) மன்மதன் தன்பாணத்தை உகுத்தற்கிலக்காயிருக்கும் மடவீர் என்னும் சிறப்புடைப்பொருடரலானும், பின்னையதே சுத்தபாடமாதல்வேண்டும். கடைதிறப்பிற்குரிய மகளிரெல்லாம் பகைவரது மடவாரேயென்பர்; “அலைநாடிய” (உக) “மழலைத்திரு” (உ௨) என்ற பாடல்களாலும் இதனை நோக்கிக்கொள்க.

உ௨. “மழலைத்திரு மொழியிற்சில வடுகுஞ்சில தமிழும் - குழறித்தரு குருநாடியர் குறுகிக்கடை திறமின்” என்பது—

> “மழலைக்குறு மொழியிற்சில வடுகும்பல தமிழுங்
> குழறித்தரு கருநாடியர் குறுகிக்கடை திறமின்”

எனக் காணப்படுகின்றது. குருநாடு பாஞ்சாலமாதலின் அந்நாட்டு மகளிர் சிலவடுகுஞ் சிலதமிழுங் குழறித்தருவரென்றல் பொருந்தாமையானும், கருநடமகளிரே அங்ஙனங் குழறுதற்குரியராதலானும் பின்னைப்பாடமே பொருத்தமென்க. இனி, “சிலவடுகுஞ் சிலதமிழும்” என்பதினும், “சிலவடுகும் பலதமிழும்” என்பதே பெரிதும் பொருந்தும். என்னை? கன்னடபாஷையிற் பெரும்பான்மை தமிழ்ச்சொற்களும் சிறுபான்மை தெலுங்குச்சொற்களுங் கலந்துநிற்றல் எல்லாருமறிந்ததேயாதலின். பழங்கன்னடத்தை நோக்குவார்க்கு இவ்விஷயம் இன்னுந் தெள்ளிதின் விளங்கும்.

உ௩. “வேகம் விளையவருங் கொழுநர் மேனிசிவந்த படிநோக்கிப்—போகம் விளைய நகைசெய்வீர்” என்பதில், ‘மேனிசிவந்தபடி’ என்பது ‘விழிகள் சிவந்தபடி’ எனக் காணப்படுகின்றது. போரில் அல்லது நீண்டவூடலிலுண்டாய சினத்தால் கணவர்க்கு விழிசிவத்தலைக்கூறலே பொருந்தும்.

உ௪. “அளகபாரமிசை யசையமேகலைக ளவிழ வாபரண மிவையெலா—மிளகமாமுலைக ளிணைய றுமல்வரு மியலினீர் கடைக டிறமினோ” என்னும் பாடலில், “ஆபரணமிவையெலா - மிளக மாமுலைக ளிணையறுமல்வரு மியனலீர்” என்பது—“ஆபரண வகையெலாம் - இளக மாமுலைகொ டிடைவராமல் வருமியல்பினீர்” எனக்காணப்படுகின்றது. மேலே அளகமசையவும், கீழே மேகலைகளவிழவும், மத்தியில் ஆபரணமிளகவும் பெருத்ததனங்கள்கொண்டு வருமகளிருடன் அவர் இடைவரவில்லையென ஒரு வியப்பைக்குறித்துப் பின்னைப்பாடம் சிறந்துநிற்றலும், அச்சுப்பிரதிப் பாடத்திற் பொருட்சிறப்பின்மையுங் காண்க.

இனி, அடியில்வரும் பாடபேதங்களிற் சிறப்புடையனவற்றை ஆராய்ந்துகொள்க.

௪0. "கோடுமிளம் பிறையிற் குறுகியமுத்துதிர" என்பது "கோடுமிளம் பிறையிற் குறுவெயர் முத்துருள" எனவும்—௩0. "முருகிற் சிவந்த கழுநீரும்" என்பது "முருகிற் சிறந்தகழுநீரும்" எனவும்,—௧௩. "பவளவாயணிசிவப்புற" என்பது "பவளவாயணி வெளுப்புற" எனவும்,—௨௧. "அபயற்கிடுதிறையான் மலைநாடியர் துளுநாடியர்" என்பது "அபயற்கிடுதிறையாம்—மலைநாடியர் துளுநாடியர்" எனவும், "தங்கள்பால் முனிவொழிந்து கூடுதலினுங்களைத் தேடுவீர்" என்பது—"தங்கள்பான்முனிவ துள்ளழிந்துருகி யுண்களைத் தேடுவீர்" எனவும்,—௨௮. "மதனவேள் கருதிவழிபடு படையொடு" என்பது—"மதனவேள் கருதிவழிபடு படையது" எனவும் காணப்படுகின்றன;

இனி, அச்சுப்பிரதியிலுள்ள பாடல் சிலவற்றுக்குப் பிரதியாக அவற்றின் கருத்தமைந்த வேறுபாடல்கள் காணப்படுகின்றன. அச்சுப்பிரதியில் ௪௯-வதாகவுள்ள

"வருவார் கொழுநரெனத்திறந்தும்
வாரார் கொழுநரெனவடைத்துந்
திருகுங் குடுமி விடிவளவுந்
தேயுங் கபாடந் திறமினோ"

என்பது—

"வாரார் கொழுநரென வடைத்தும்
வருவார் கொழுநரெனத்திறந்துஞ்
சீரார் பொழுது விடிவளவுந்
தேயுங் கபாடந் திறமினோ."

எனக் காணப்படுகின்றது. "தாயரடைப்ப மகளிர் திறந்திடத்—தேயத் திரிந்த குடுமியவே—யாய்மலர், வண்டுலாங் கண்ணி வயமான்றேர்க் கோதையைக், கண்டுலாம் வீதி கதவு" என முத்தொள்ளாயிரப்பாடலிற் கண்டவாறு "திருகுங் குடுமி" என்னும் அரிய சொற்பிரயோகம் அச்சுப்பிரதியிற் காணப்படுகிறது. இனி, ௪௭-ம் பாட்டாகிய—

"நேயக் கலவி மயக்கத்தே
நெகிழ்ந்த மொழியைக் கிளியுரைப்ப
வாயைப் புதைக்கு மடநல்லீர்
மணிப் பொற்கபாடந் திறமினோ"

என்பது—

"இரவிற் கலவி யயர்மொழியை
யின்சொற் கிளிவஞ் சியாருகே
பரவக் கனியால் வாயடைப்பீர்
பைம்பொற் கபாடந் திறமினோ"

எனக் காணப்படுகின்றது. இது, முன்னையதினும் சிறந்ததேயாம்.

இனிக் கடைதிறப்பின் முடிவில் வேறு இரண்டுபாடல்களுங் காணப்படுகின்றன.

"பூட்டொன்று சிலைவளவன்
ஒருபுலவன் புகார்பாடும்
பாட்டொன்றுக் கருளியபொன்
பதினொருநூ றாயிரமே"

"குரிசில் சயதர னொருவ னொருகவி
கொண்டு பதினொரு கோடிபொன்
பரிசி லுதவிய வளவன் ரவிகுல
திலக னிசைதிசை பரவவே"

(தொடரும்)

பத்திராசிரியர்.

படிக்காசுப்புலவர் சரிதம்.

(முற்றொடர்ச்சி.)

இங்ஙனமாக இவ்விரு புலவர்களுள்ளுமேற்பட்டிருக்கும் விவாதத்தை யுணர்ந்த சேதுபதியரசர் மிகவருந்தினாரெனினும், புலவர்களிவ்வாறு வழக்கிட்டு நிற்பது எவ்வாற்றானுமொவ்வாததாகவிருப்பதால் இதற்கென்செய்வதெனப் பலவாறுசிந்தித்து முடிவில் இவர்களுட் கொண்டிருக்கும் விரோதத்தையொழித்து நேசப்பான்மை கொள்ளற்கேதுவாம் சாதனங்களைச்செய்தலே சிறப்புடையதும் அற

நெறி முறைமைக்கோர் அறிகுறியாயுமிருக்குமெனத் தீர்மானித்து அவ்விருபுலவர்களையும் நேரில் வரவழைத்து, செந்தமிழ்ப்பனுவலைச்சீருடனோதிய சிறப்புடைப்புலவீர்! நம்மாட்டு நாமறிவிக்கவிருக்கும் ஓர் விஷயத்தினைச் செவியேற்று அதன்படியே நடக்கத்தவறமாட்டீர்களென்றும் நம்புகிறேன். உலகில், "கூடிக்கெட்டாருமில்லைப் பிரிந்துவாழ்ந்தாருமில்லை." என்னும் பழமொழி நீங்களறியாததல்லவே. அங்ஙனமிருக்க நீங்கள் உங்களில் நீங்காதபகையைக்கொண்டிருப்பதாகவறிகிறேன். இச்செயல் உங்கள் பெருமைக்கொருவாற்றானுமேற்றதல்ல: ஆகையால் நீங்களிருவரும் இன்றுமுதல் உங்களில் வைத்திருக்கும்த்வேஷத்தை முற்றிலுமொழித்து இனிப்பகையென்பதைக் கனவிலுங் கருதாது ஒத்த அன்பினர்களாய் ஒருயிர் இரண்டுடலெனக் கலந்துறவாடும் பெற்றியைக் கைக்கொள்வீர்களாகவும்" என அரசன் கூறலும், புலவர்கள் வேந்தன் உரையை மாற்றவகையின்றி அங்ஙனமே உடன்பட்டிருப்பதாக உரைத்தலும் புரவலன் மிக்கவானந்தங்கொண்டு புலவர்களை நோக்கி நீங்களென்னுரையைத் தழுவி நேசப்பான்மைகொண்டதினடையாளமாக ஒருவர்மேலொருவர் புகழ்ச்சியாகப் பாடுவீரேல் அவைதாம் நீங்கள் ஒற்றுமையைக் கைக்கொண்டிருப்பதை விளக்கக்கூடியவை என மொழிதலும், புலவர்களிசைந்து பாடிய கவிகள்,

படிக்காசுப்புலவர், கும்பனென்னும் புலவர்மேற்சொல்லிய கவி.

"யமகம்."

கும்பாகனகசபாபதியீன்றகுளிர்ந்துரசிக்
கும்பாவலர்சிரோரத்தினமேதமிழ்க்கோப்பசுவின்
கும்பாதபாலுடன்றேனையுங்கூட்டிக்குழைத்துச்செம்பொற்
கும்பாவிலேயெடுத்துக்குடித்தாலந்தக்கூடுருக்குமே.

என்று கூற,

கும்பனென்னும்கவி படிக்காசுப்புலவர்மேற் கூறியகவி.

மட்டாருந்தென்களந்தைப்படிக்காசனுரைத்ததமிழ்
    வரைந்தவேட்டைப்
பட்டாலேசூழ்ந்தாலும்மூவுலகும்பரிமளிக்கும்
    பரிந்தவேட்டைத்

தொட்டாலுங்கைமணக்குஞ்சொன்னாலும்வாய்மணக்குந்
    துய்யசேற்றில்
நட்டாலுந்தமிழ்ப்பயிராய்விளைந்திடுமே
    பாட்டினதுநளினந்தானே.

என்று கூறி இப்புலவர் சிகர்மணிகளிருவரும் ஆயுள்பரியந்தம் ஒற்றுமையாகவே இருந்தார்களெனத் தெரிகிறது. பின்னொருகாலத்தில் இப்புலவர் அறியலூர் சென்றிருந்தசமயம் இவரை அபிமானித்திருந்தபிரபு காலவித்தியாசத்தால் இவருக்கு வருஷாந்தரமாகக்கொடுக்கவேண்டிய ஆயிரம் பொன்னைக்கொடாது ஐந்நூறுபொன்கொடுக்க அப்பொழுது புலவர் பிரபுவுக்குக் கூறிய கவி,

கனத்தசிராப்பளிதனிலேவடுகர்கூத்துக்
    கட்டியாளுவதாச்சுத்தஞ்சாவூரோ
முனைத்தமராடியகாடுமிஞ்சிப்போச்சு
    முனையும்போம்மூக்கும்போம்மைசூர்போச்சு
பினற்றுறையூர்காய்ச்சலாம்வடதேசத்துப்
    பேய்த்துலுக்கருடையாரோகவிதைகேளார்
இனித்தமிழுக்கறியலூரொன்றிருந்தோ
    மிங்குஞ்சம்பளங்குறைந்தாலென்செய்வோமே.

இக்கவியைக்கேட்டுப் பிரபுதக்க சம்மானஞ்செய்தனுப்பினராம்.

மற்றொருக்கால் ஷை பிரபு இப்புலவரைநோக்கி ஐயா! பள்ளியர்களை உலகத்தில் தாழ்வாகக் கூறுகின்றார்களே? அஃது அப்படித்தானோ? என்று கேட்கப்புலவர்,

தெள்ளியபாலும்பள்ளிசெந்தமிழ்ப்பதியும்பள்ளி
ஒள்ளியமடவாரெல்லாமுண்ணவேசமைக்கும்பள்ளி
வெள்ளியிலிருந்தபெம்மான்விளங்கிழையோடும்பள்ளி
பள்ளியென்றுரைத்தவார்த்தைபகாநற்சிலையதாமே.

என்று கூறினாரென்ப.

"சந்தம்படிக்காசலாதொருவர்பகரொணாதே"

என்ற புகழ்ச்சியை விளக்கும்பொருட்டு மற்றொருசமயம் இப்புலவர் கொங்குநாட்டிற் சஞ்சாரஞ்செய்து வருகையில் அக்காலத்திலநேக

வித்துவான்கள் கொங்குநாட்டில் பிரபலமாயிருந்ததால், தம்முடைய சந்தக்கவிகளையாரும் மதியாமையைக்கண்டு புலவர் கூறியகவி,

அஞ்சாலிமக்களும்சாணாரும்பாணரும்அம்பட்டரும்
செஞ்சாயக்காரரும்வேசையர்மக்களுஞ்செந்தமிழைப்
பஞ்சாகப்பன்னியொருகாசுக்கோர்வண்ணம்பாடலுற்றார்
நஞ்சாகப்போச்சுதையோவென்றமிழ்க்கொங்குநாடெங்குமே.

என ஒரு செய்யுட் காணப்படுகிறது.

வெண்பாவிற்புகழேந்திபரணிக்கோர்செயங்கொண்டான்
    விருத்தமென்னு
மொண்பாவிலுயர்கம்பன்கோவையுலாவந்தாதிக
    கொட்டக்கூத்தன்
கண்பாயகலம்பகத்திற்கிரட்டையர்கள்வசைபாடக்
    காளமேகம்
பண்பாயபகர்சந்தம்படிக்காசலாதொருவர்
    பகரொணாதே.

என ஒரு செய்யுளும் வழங்கி வருகின்றது.

தூளிபடவேவந்தகவிவாணர்கவியெலாஞ்
    சூறையிடுகவிராக்ஷகன்
துஷ்டநிஷ்டூரகவிசுப்ரதீபக்கவித்துறைக்கெலாந்
    தன்னுசேட்டு
வாளைகுதிபாய்கின்றவாந்தைகுடிமேவிய
    மகாசனத்தலைவருக்கு
மட்டலவுசோலைக்களந்தைப்படிக்காசு
    வாவிட்டவிஞ்ஞாபனம்
காளமேகம்போலவசைபாடயாமுமிக்
    காசினியிலவதரித்தோம்
காளக்கர்தோழன்மேற்கவிதையுமேலுமுள
    கவிதையுமறிந்திலையா
ஆளனுமிருக்கவேசெய்தகருமங்களுக்
    கழிவுதேடுதலாகுமோ
ஆகாதகாரியம்போகாதுவீணிலே
    யபகீர்த்திநிலைநிற்குமே.

என்னுங்கருத்தமைந்த சீட்டுக்கவியொன்றும் இப்புலவர் வாந்தைக் குடிமகாஜனத்தலைவருக்கெழுதியிருப்பதாகக் காணப்படுகிறது.

விருதுகவிராசன்கவிச்சக்ரவர்த்திவாய்
    வீண்பேசுவார்கள்மிண்டன்
விஞ்சையர்கள்தம்பிரான்களந்தைப்படிக்காசு
    விவரமுடனெழுதுமோலை
பொருவில்பிரபந்தமதிலிலகுகவிசேகரன்
    புகழ்செய்தளவாய்குமாரன்
பூசக்கரமன்னர்பணிரகுநாதசேதுபதி
    பூரித்தெழுந்துகாண்க
பரிதிமதியுள்ளளவுநிற்கும்பிரபந்தகவி
    பாடிநின்கீர்த்திகேட்டு
பஞ்சலக்ஷணமொடுதமிழ்க்காணியுங்கொண்டு
    பரிவாகவுனைநாடியே
இருபதின்காதவழிகடலேறிவந்தன
    னிருந்தமிழ்கொள்ளவேண்டி
யிருகாதவழியளவு * * * *
    * * * * * *

என இராமநாதபுரம் இரகுநாதசேதுபதி வேந்தர்க்கு இப்புலவரெழுதிய மற்றொரு சீட்டுக்கவியும் காணப்படுகிறது.

அடகெடுவாய்பலதொழிலுமிருக்கக்கல்வி
    அதிகமென்றேகற்றுவிட்டோமறிவில்லாமல்
இடருளமோகனமாடக்கழைக்கூத்தாடச்
    செப்பிடுவித்தைகளாடத்தெரிந்தோமில்லைத்
தடமுலைவேசையராகப்பிறந்தோமில்லைச்
    சனியானதமிழைவிட்டுத்தையலார்தம்
இடமிருந்துதூதுசென்றுபிழைத்தோமில்லை
    என்னசென்மமெடுத்துலகிலிருக்கின்றோமே.

என ஓர் கவியும் வழங்கா நின்றது.

இங்ஙனம் சின்னாட் சென்றபின் தருமபுராதீனத்தில் அப்பொழுது விளங்கிய ஞானாசிரியருவக்குமாறு சிலகால மணுக்கத்தொண்டராயமர்ந்திருந்து பின்னர், அவ்வாசிரியர் ஆக்கினைப்படி வைத்தீசுரர் சந்நிதியடைந்து அக்கடவுளின் கட்டளையை நடாத்திக்கொண்டு “படிக்காசுத்தம்பிரா”னென அதிகப் பிரபலமாய் வாழும் நாளில், அத்தலத்தைச்சுட்டி “வேளூர்க்கலம்பகம்” என்னும் ஓர்பிரபந்தமிய

ற்றி அச்சந்நிதியில் அரங்கேற்றி வசித்தனர். அதன்பின்பு, முன்னர்த் தமக்குப் படிக்காசுதந்து திருவருள் பாலித்த சிற்சபாநாயகர் சந்நிதியிலே தொண்டுசெய்து கதியடையவேண்டுமென்னும் அவா மேலீட்டால் ஞானாசாரியரநுமதிபெற்றுச் சிதம்பரத்தைச்சேர்ந்து ஒரு திருமடம் வகுத்து அதிலிருந்துகொண்டு அக்கடவுளுடைய தொண்டை வகித்துத்தினந்தோறும் ஆலயத்தையடைந்து சபாநாயகரைத் தரிசிக்கும்பொழுது அக்கடவுள் பஞ்சாக்ஷரப்படியில் பொற்காசு ஐந்துவைத்தருளப் பெற்று சைவாசாரியராகச் சிலகாலம் நன்மாணாக்கர்களுக்கு ஞானோபதேசம் பாலித்து வீற்றிருந்து சிலபிரபந்தங்களையும் அருளிச்செய்து அக்கடவுளுடைய திருவடி நீழலையடைந்தன ரென்ப.

இவ்வளவே படிக்காசுப்புலவர் வரலாறாகத்தெரிந்தவை. இச்சரிதங்களால் படிக்காசுப்புலவர் தெய்வப்புலமை வாய்ந்த பெரியாரிலொருவரென்பதும், சிவபிரானருள் சிறக்கப்பெற்றவரென்பதும், கலைமகளார் கருணாகடாக்ஷம் கைவரப்பெற்ற திவ்வியப்புலவரென்பதும் துறவறமடைந்து ஞானசமாதிகூடி ஏகாந்தத்தினினிமையுணர்ந்த ஞான சம்பன்னரென்பதும், சந்தம்பாடுவதில் நிகரற்ற திறமை வகித்த சரஸகவியென்பதும், கடவுளினிணையடிகளில் இடையறாத பக்திசெலுத்தி அவன் இன்னருள் பெறுதலே சிறந்தபேறெனக்கருதுமியல்புடையவரென்பதும், சபாநாயகர் இவர்பாடுந்தோறும் இவர் பாடலுக்குவந்து பரிசாகப் பஞ்சாக்ஷரப்படிமிசை பொற்காசுவைத்தருளப்பெற்ற மகானென்பதும், மற்றும் இவரது உத்தமகுணவிசேடங்களும் நன்குவிளங்கும். இவர்க்குவழங்கிய “படிக்காசுத்தம்பிரான்” “படிக்காசுப்புலவர்” என்பது இவரதுபாட்டுக்குப் பரமன் மகிழ்ந்து பொற்காசளிக்கப்பெற்ற விசேடத்தாலெழுந்த காரணப்பெயராகும். இப்புலவர் பெருமானைப்படைத்த நந்தமிழகத்தின் பெருமையை யென்னென்றியம்புவது.

இனி, இப்புலவர் பெருமான் பாடியனவாக மேலே குறித்த பாடல்களில், “எல்லப்பனம்மையப்ப” “ஓர்கறுப்புமில்லாத” “காவைவென்றிடு” என்பவற்றைச் சொக்கநாதப்புலவர் பாடியதாக வழங்கியும், “மட்டாருந்தேன்களந்தை” என்று படிக்காசுப்புலவரைப் புகழ்ந்த கும்பனென்னும் புலவன் வாக்கைப் பலபட்டடைச்சொக்கநாதப் புலவர் பாடியதாக மாற்றியும் காணப்படுகின்றன. இச்சரிதங்களில் பாடபேதங்களும் மாறுபாடுகளும் பலவுள. இவை முன்பதிப்பித்தோர் ஆராய்ச்சிபுரியாமல் அவசரப்பட்டுச்செய்த பெரும்பிழை போலும்.

இனிப்படிக்காசுப்புலவர் காலமின்னதென்பதை ஆராய்வோம். “பெற்றாளொருபிள்ளை” “வழிமேல்விழிவைத்து” என்றபாடல்களின் கடைசி அடிகளில், “வல்லமாநகர்க் காளத்தியே” என்ற ஓர்பிரபுவினைக்குறித்தும், “மால்சீதக்காதியிருகரமே” “மைப்போதகமனையானசீதக்காதி” உரைகாண்டசீர்த்திபெறுஞ் சீதக்காதி” என்ற ஓர் வள்ளலை வியந்தேத்தியும், ஏதையறிவான் இவனுக்கேன்பல்லக்குச்சேதுரகுநாதசிங்கமே” “புகழ்தளவாய் குமாரன்” “பூச்சக்கரமன்னர் பணிரகுநாதசேதுபதி” என்று இராமநாதபுரமன்னரைப் புகழ்ந்தும், இப்புலவர் பாடியிருப்பதால் இவர் இற்றைக்கு இருநூற்றுநாற்பது வருடங்கட்கு முற்பட்டவரென்பர். இப்புலவர்சிகாமணி தஞ்சைஜில்லா நாகபட்டணத்திற்கடுத்த திவ்யக்ஷேத்திரமாகிய கமலாலயமென்ற திருவாரூரின்கண் வதிந்த வன்மீகநாததேசிகர் குமாரர் வைத்தியநாத நாவலரிடம் கல்விகற்றாரென்பதை,

> “கூடுஞ்சபையிற்கவிவாரணங்களைக்கோளரிபோற்
> சாடுஞ்சதாசிவசற்குருவேமுன்னுன்றந்தைதம்மாற்
> பாடும்புலவர்களானோமின்றிச்செம்மறப்பட்டியெங்குங்
> காடுஞ்செடியுமென்னோதமிழ்க்காரிகைகற்றதுவே.”

என்று படிக்காசுப்புலவரே பாடிய செய்யுளைக் கொள்க.

தாம்பாடிய தொண்டைமண்டலசதகத்தில் “கேட்டாலுமின்பங் கிடைக்குங்கண்டீர் கொண்டகீர்த்தியொடு, பாட்டாலுயர்ந்த புகழேந்தி” என்றபாடலில் புகழேந்திப்புலவரைக் குறிப்பதால் இவர் புகழேந்திப்புலவர்க்குச் சிலநூற்றாண்டுகளுக்குப் பிற்பட்டவரென்பதுறுதி. இவர் பாடலிற்றுதித்த சீதக்காதிவள்ளலையும் “காளத்திப்பிரபுவையும்,” பற்றியவிவரமொன்றும் நமக்குப்புலப்படவில்லை. இப்புலவரெழுதிய சீட்டுக்கவியிற்கண்ட ரகுநாதசேதுபதி யென்பது சேதுபதிகள் பலர்புனைந்த பெயராயினும் கி-பி. 1647-முதல் 1672-வரை மிக்கதிற

மையுடன் ஆட்சிசெய்தவரும், புலவர்க்குப் பெருநிதியாய் விளங்கியவரும், பலபெரியதர்மங்களைச் செய்தவருமாகிய திருமலைச்சேதுபதியாம் ரகுநாதசேதுபதியைக் குறிக்கின்றதாகவே தோற்றுகிறது. இந்தத்திருமலைச்சேதுபதி பேரிற்றான், பொன்னாங்கால் அமிர்தகவிராயர் ஒருதுறைக்கோவைபாடிப்பரிசுபெற்றது. இக்கோவையில், சேதுபதியைத் தளவாய்புத்திரர் என்றும், தளசிங்கமென்றும் "இராமேசர்பதம்பணியுமையான்" என்றும் கூறப்படுதல் அச்சேதுபதியின் வரலாறாதல் கண்டுகொள்க.

இக்காரணங்களால் இப்புலவர் பெருமான் இற்றைக்கு 240-வருடங்களுக்கு முன் விளங்கியவரென்றே கொள்ளலாம்.

மற்றுமிவர் ஜனனமாதிய விசேடங்களொன்றும் கிடைக்கவில்லை. வேளூர்க்கலம்பகமும், தண்டலையார்சதகமும், தொண்டைமண்டலசதகமும், தவிர வேறு அரிய சந்தப்பாக்களொன்றும் அகப்படுவது அருமையாயிருக்கின்றது. இப்பிரதியும் மிகப்பிரயத்தனத்துடன் கிடைத்ததைக்கொண்டு முயன்று பரிசோதிக்கப்பட்டன.

இப்புலவர் செங்குந்தமரபினரென்பதை,

> புகழ்பூத்திடுந்தில்லைமேலோனையம்மையைப்போற்றியெங்கு
> மகிழ்பூத்திடாதபொற்காசைப்பஞ்சாக்கரத்தின்படிமே
> னிகழ்பூத்தல்பெற்றுப்புள்வேளூர்கலம்பகநீட்டியருத்
> திகழ்பூத்துநின்றசெயலோர்செங்குந்தசிலாக்கியரே.

எனவரும் பிரமாண முகத்தானு முணர்க. வேறிரண்டு பாடல்களும் இவர் பாடியதாகக்கண்டவை வருமாறு:—

> கன்மாரிகாத்தமுகில்கஸ்தூரியருள்மாலைக்கருப்பனென்னும்
> வின்மாரிதனதுகிளையத்தனையுஞ்சபைகூட்டிவியந்துகேட்டுச்
> சொன்மாரிபொழிந்திடவேசிரக்கம்பஞ்செய்ததொடுசுருளுந்தந்து
> பொன்மாரிபொழிந்துதந்தப்பல்லக்குஞ்சுமந்ததனாற்புகழ்பெற்றானே.
>
> கூடுந்திரைகொண்டிவன்வேளைபார்த்துக்குறுகலர்கள்
> தேடுந்தென்மாலைக்கருப்பனெங்கோனெஞ்சிவிகைதனைப்
> பாடுந்தமிழ்ப்பெருமானொட்டக்கூத்தன்பதாம்புயத்தைச்
> சூடுங்குலோத்துங்கசோழனைப்போலச்சுமந்தனனே.

சி. கு. நாராயணசாமி முதலியார்,
கோ-வை.

உ
திருச்சிற்றம்பலம்.

பெரியபுராண அரும்பத விளக்கம்.

[பழைய ஏட்டினின்று எடுக்கப்பட்டது.]
(முற்றொடர்ச்சி.)

(௫௬௨) தேவர்களுக்குஞ் சிறப்போடுவரும் பூசையாற்றாமல்.

(௫௬௭) நாட்கூறு - முற்பகல். தீவினைக்கு நீரென்று மடையில்லாதீர் - தீத்தொழிற்கு என்றுமியைபில்லாதவர்களே.

(௫௬௮) இதுபிற்பாடு - இதுவே பிற்படற்காரணம்.

(௫௭௩) பேரொலியையுடைய நீர்வளஞ் செறிந்த திருத்தலையாலங்காடும்.

(௫௭௬) கரிய அமணராகிய வெவ்விய சுரத்தினை.

(௫௭௯) காப்புச்செய்தல் - பூட்டல்.

(௫௮௦) அரிய வேதங்கள் திருக்காப்புச்செய்துவைத்த அக்கதவைத்திறக்க, அவ்வேதங்கள் கூறும் மிகுந்த அன்புடையார் சமீபித்து நீக்கப்பெறாமையால், அன்றுமுதலாகப்பின்னர்.

(௫௮௨) அடியார்களுடைய விண்ணோருடைய ஆர்ப்பு.

(௫௯௧) அளவிறந்த கோடி வேதங்கள் நெருங்கிச்செய்த திருக்கதவைப்பூட்டல் திறத்தலாய பணிகளை.

(௫௯௨) அழகிய வேதங்கள் சிவபிரான் முன்னருளிச்செய்தவதனையே கூறும், ஒருப்பாட்டினின்ற அடியார் சிவபெருமான் மாட்டியைய வருகின்ற அருட்செய்கையைத் தாமே வகுக்க வல்லராயின், பெரிய வேதத்தோடு மெய்யடியாருக்கு ஏற்றத்தாழ்வு மிகவுண்டு.

(௫௯௩) சைவவேடத்தோடு வந்து வாய்மூராகிய அவ்விடத்திருப்பேம்; அங்கே வாவென்றருளிப்போக.

(௫௯௯) கைவ்வகை முறைமை - ஒழுக்கமுறைமை.

(௬௦௧) பாழி - சமண் முனிவர் வசிக்குமிடம். மூழி - கமண்டலம்.

(௬௦௨) மயிர்பறித்ததலையும், பாயும், பீலியும் தடுக்கும், உடம்பிற் செறியும் முக்குடையுமாகித் திரிவோரெங்குமாகி.

(௬௦௩) பாண்டியனுய்தற்காகச் சோழன் அழகோடுபெற்றருளும்.

(௬௦௬) சேட்படு புலத்தார் - தூரத்தேயுள்ளவர்.

(௬௧௨) மானியார் - மங்கையர்க்கரசியார்.

(௬௧௩) கட்டழிந்து - நிலையழிந்து.

(௬௧௪) என்றப்பரிசனர் விண்ணப்பஞ்செய்த பின்னர்ச் சிவனடியாரெல்லாம் நன்று நம்மையடிமையாகவுடைய சிவனுடையபாதங்களை அடையாத அளவிறந்த சமணர்களாகிய கீழ்மக்களை வென்றருளி வேதநூல் வழியையே உளதாக்கி விபூதியை அரசனை இடுவித்து அவ்விடத்தே நிலைத்த செயல் சிவனடியார் செயலேயாக எம்பெருமானே தேவரீர் நினைந்தருளவேண்டுமென்று நின்று தோத்திரஞ்செய்ய.

(௬௧௬) திருநாவுக்கரசுநாயனார் அருளிச்செய்வார்: ஆளுடையபிள்ளையாரே! அந்தச்சமணர்களாகிய கீழ்மக்களுடைய வஞ்சனைக் கோரெல்லையில்லை, சொல்வதுளது, பொருந்திய கிரகங்களுந்தீயன, எழுந்தருள உடன்படுவதியையாது.

(௬௧௭) புனனாடு - சோழநாடு.

(௬௨௫) கரிய கழியையுடைய சமுத்திரக்கரையிலுள்ள.

(௬௨௬) வாசனை எங்கும் நிறைகின்ற தாமரையின் வாசனை எங்கும்.

(௬௨௭) தடாகங்களினெவ்விடங்களினும் நீர்விளையாடுகின்ற பெண்களினுடைய தொய்யிலினிறம். நடனமெவ்விடங்களினும் ஒலி நீங்காத.

(௬௨௮) சோழநாட்டைக்கடந்து நெடியமுல்லையிலுள்ள குறியபுதல்களதும், கார்காலத்தை ஆராய்கின்ற முல்லை அரும்பினதும் மணங்கமழும் முல்லைநிலத்தைக்கடந்து போரை ஆராயும் வில்லையுடைய வேடரது எளியகுறிஞ்சியினிடையேபோகி.

(௬௨௯) வாசனைபொருந்திய மலர்மலையப்பக்கத்தே எறிந்துவருகின்ற நதிகள் பலவற்றைச்சென்றடைந்து, கடந்துஏறி, முறுக்குப்பொருந்திய கொம்பையுடைய கலையைப்புணர்கின்ற மான்கன்று துள்ளிப்பாய்கின்ற காட்டைக்கடந்தணைந்தார்.

(௬௩௨) பள்ளிகளிலும் பக்கத்திற்பொருந்திய சமண்பாழிகளிலும், அழகிய இதழையுடைய அசோகின்மேலும் உண்கின்ற கவளத்தைக் கையிற்கொள்கின்ற மண்டபங்கண்மேலும், கூகையுடனாந்தையுந் தீய பட்சிசாலங்களுமாயின தம்மிற்கலகம் விளைத்தழிவைக் கூறும்.

(௬௩௩) சமணரனைவரும் பீலியுந்தடுக்கும் பாயுமாகப்பிடித்தவை வழுவிவிழ, கால்களுந்தடுமாறி, கண்களும் இடப்பக்கந்துடித்து, மேலேவருமழிவிற்காக வேறுகாரணங்களையுங் காணார்மயங்கி அறிவுகெட்டனர்.

(௬௩௪) கௌந்தியர் - (குருமனைவியர்) தம்முள்தாமே கோபித்தெழுகின்ற கலகங்கொள்ள, அங்ஙனமே சமணர் தம்முண்மாறுபட்டூறுபாட்டைச்செய்ய, பழைய தஞ்சமயநூலிற்பொருந்திய பொறை முதலியவற்றைநீங்கி மனசிற்கோபமுதலிய தீக்குணங்களிலேநின்றார்கள்.

(௬௩௭) சிறப்புமலிந்த அசோகானது தன்கீழிருந்த நங்கடவுள்மீதே வேரோடுசாய்ந்து வீழக்கண்டோம், அதன்பின்னரக்கடவுள் அழகிய முக்குடையுந்தாமுமாக எழுந்து கையைவீசிப்போக ஊருள்ளோர் ஓடிக்காணக்கண்டனமென்று கூறுவார்.

(௬௩௮) கமண்டலத்தையுடைத்துப் பாயையுங்கிழித்து ஒரு கௌந்தியோடப் பண்டிதர்கள் பாழிகளினின்றும் கழுதைமேற்செல்வார்கள். தாமாகவே அழகிய வளையலையுடைய இயக்கியாரும். (அருகன்றேவி) வளையிட்டுப்புலம்பியோட.

(௯௩௯) மிக்ககொடிய அக்கினியில் முழுகக்கண்டேம், அதன்பின் எழவுங்கண்டேம்.

(௯௪0) மிக இளைய இடபக்கன்றென்றுவந்து நம்முடைய கல்விபயிலிடத்தை உழறிச்சிதறியோடி ஒருவருந் தடுக்கப்பயந்துவிழத் தங்குதற்கு ஒருபுகலிடமுமின்றிப் பூமியைவிட்டு நிழலில்லாத மரங்களிலேறி.

(௯௪௩) அணைந்தருளும் வார்த்தையைக்கிளர்கின்ற சோபனங்கூறி வந்தோர் கூறக்கேட்டார்.

(௯௪௭) தாமரைமலரிலிருக்கும் இலக்குமியைப்போல்வள், திருவாலவாயிலெழுந்தருளியிருப்பவரைக் கும்பிடல்வேண்டுமென்று அரசனுக்குக்கூறித் தம்பரிசனர்சூழத் தனித்தடையோடும்போய்ச் சிவபெருமானை வணங்கித்தானும் ஆளுடையபிள்ளையாரது நல்வரவையேற்றுகின்றாள். தனித்தடை என்பதற்குத்தனியான காவலெனவுங் கற்பெனவுங்கொள்க.

(௯௪௮) அழகுவிளங்கும் முத்துச்சிவிகையின்மேற் சேவித்துவருகின்ற நிலவைத்தருஞ் சந்திரனைப்போல ஒளிவளர்கின்ற வெண்குடைநிழலைச்செய்ய.

(௯௪௯) துந்துபிமுதலாகிய வாத்தியங் கிளராவண்ணம் அந்தணராகிய பிராமணர்கள் ஆயிரம்வேதங்களைத் தோத்திரஞ்செய்ய, வந்தெழுகின்ற மங்கலவொலி திக்குமுட்படமுழங்கத் தென்றலெதிர்கொண்டெடப்பக்கத்துஞ் சேவைசெய்ய.

(௯௫0) வஞ்சனைத்தவத்தாலே.

(௯௫௧) நெருங்கிய நிர்வாணமாகிய உடம்பிலுள்ளதுகளாலும், ஆராய்கின்ற அறிவிலுள்ளதுகளாலும், அவ்வழியிற்செறிந்து சோந்த சமணராகிய அழுக்கைக்கழுவுதற்கு நிலையாய் ஒளிர்கின்ற வெண்மையோடும் சுத்தத்தோடும் பாண்டியநாட்டில்.

(தொடரும்.)

ஜி. சதாசிவம் பிள்ளை.

279

ஸ்ரீ:

விக்கிரஹாராதனையும்
வேதவாக்கியங்களும்.

விக்கிரஹாராதனை சம்பந்தமாக வேதத்திற் பிரமாணங்கள் சிறிதுமில்லை என்போர் அறியும்பொருட்டு, "ஆரியமத சித்தாந்தசங்கிரகம்" என்னும் நூலில் எழுதியிருப்பனவற்றைக் கீழேபதிப்பித்திருக்கின்றேன்.

"விக்கிரஹாராதனைக்கு வேதத்திற்பிரமாணமில்லையென்று சொல்லுகிறவன் வேதத்தை அத்தியயநஞ்செய்யவாவது, அதன் அர்த்த விசாரஞ்செய்யவாவது அல்லது உத்தமவைதிகர்களிடத்தில் விசாரித்தறியவாவது இல்லையென்று நிச்சயமாய்ச்சொல்லலாம். விக்கிரஹங்களை ஆவாஹநஞ்செய்யும் விஷயமாய் வேதத்திற் கணக்கற்ற மந்திரங்களேற்பட்டிருக்கின்றன. அவைகளையன்றிக் குறிப்பான வாக்கியங்களும் விக்கிரஹாராதநத்தை யாதரிக்கின்றனவாகவிருக்கின்றன. அவைகளிற் சிலவற்றை இவ்விடத்திற் குறிப்பிடுகிறேன்.

தைத்திரீயஸம்ஹிதை காண்டம் - ௫ - பிரசிநம் - ௭ - அநுவாகம் - ௨ - பஞ்சாதி - ௧ - ல், "ஸம்வத்ஸர (கால) சுவரூபியான பரமாத்துமா
"வாகிய உம்முடைய ரூபமெதுவோ அப்படிப்பட்ட பிரதிமையைச்
"(விக்கிரஹத்தை) செய்து இருட்டாகிற அஞ்ஞானதசையிலுபாசிக்
"கிறார்கள். அப்படியுபாசிக்கிறவன் வல்லமையுள்ள புத்திரனையும்
"பூர்ணமான ஆயுளையுமடைகிறான். பிரஜைகளுக் கெஜமானத்துவ
"த்தையுமடைகிறான்."

தைத்திரீயம்-காண்வஸம்ஹிதை, காண்டப்-௪-பிரசிநம்-௩-கண்டம்-௪-ல், "பிரஸந்நமான முகம், கண்களிவைகளோடுகூடிய விஷ்ணு
"வினுடைய அழகுடைத்தான ரூபமுள்ள பிரதிமையெதுவோ
"அதைப் பூஜிக்கவேண்டியது. வணங்கவேண்டியது. ஆராதிக்கவே
"ண்டியது. தியானிக்கவேண்டியது."

ஷை ஸம்ஹிதை-௫-௯-௭-ல், "ஓ! அக்நியே! ஓ! அக்நிசுவ
"ரூபமான ஹிரண்ணியகர்ப்பா! ஸகலசுவரூபியே! ஸகலத்திலும்

"வாஸஞ்செய்கிறவரே! இந்த மூர்த்திகளுடைய உலோகசுவரூபமா
"ன எல்லா அங்கங்களிலிருந்தும் வெளிப்படும், வெளிப்படும். எங்
"களை மூன்றுவித தாபத்திலிருந்து விடுவியும் விடுவியும். எங்களு
"டைய அங்கம், அவயவம், நரம்பு இவைகளிற் குளிர்ச்சியையுண்
"டாகச்செய்யும் உண்டாகச்செய்யும்."

யஜுர்வேதம்-மைத்திராயண்ணிய ஸம்ஹிதைகாண்டம்-௩-பிர
சிநம்-௧-ல், "பாஷாணம் (கல்), உலோகம், இரத்திநம், மண் இவைக
"ளாற் செய்யப்பட்ட விக்கிரஹங்களிற்செய்கிற பூஜையானது, பந்
"தத்திலிருந்து விடுபட இச்சையுள்ளவனுக்கு சுகத்தைக்கொடுக்கிற
"தாகிறது."

ஸாமவேதம் ஷட்விம்சப்பிராம்மணம். பிரபாடகம-௫. கண்டம்
"௧௦-ல், தேவாலயங்கள் நடுங்குகின்றன. பிரதிமாரூபமான தெய்வங்
"கள் சிரிக்கின்றன. அழுகின்றன. பாடுகின்றன. கூத்தாடுகின்றன.
"வாய்களைத்திறக்கின்றன. வேர்வையைவிடுகின்றன. கண்களைத்திறக்
"கின்றன, மூடுகின்றன, பிரதிமைகள் நடக்கின்றன, நதிகளில்தலையி
"ல்லாதமுண்டங்கள் காணப்படுகின்றன (நதியில் ஜலமிருந்தாலும்)
"இல்லாததாய்க் காணப்படுகிறது."

விக்கிரஹங்களுடைய செய்கை இவ்விதமாகக் காணப்படுவது உலகத்திற்குக்கேடு உண்டாகப்போகிறதென்பதற்கு முன்னறிவிப்பாகவிருக்கிறது.

இருக்ஸம்ஹிதை-அஷ்டகம்-௭-வர்க்கம்-௧௫-ல், "கரையற்றதா
"கிய ஸமுத்திரத்தில் மனிதர்களாற் செய்யப்பட்டதல்லாத எந்தக்க
"ட்டை மிதக்கிறதோ அதை சீக்கிரம் கொண்டுவா."

இந்தக்கட்டைதான் ஜகந்நாதக்ஷேத்திரத்தில் ஸ்தாபிக்கப்பட்டு தாரோஜகந்நாதமென்று பெயருண்டாயிருக்கிறது.

அதர்வணவேதம்-காண்டம்-௧-கற்பம்-௨-துவகி-௩-ல், "ஓ! பக
"வானே! வாரும், இந்தக் கற்பிரதிமையிலிரும், உமக்கு சரீரமான
"து கல்விக்கிரஹமாயிருக்கட்டும்."

கடஸம்ஹிதை-காண்டம்-௧-அத் ௩-அநுவா-௯-ல், "இந்தப்பூ
'மியில் எவ்வளவு கற்கள் செவ்வையாய்ப் பிரதிஷ்டை செய்யப்பட்
'டிருக்கின்றனவோ, தேவனுடைய மாயையினாற் பூமியினுடைய
'தூளிகள் எவ்வளவு கணக்கிடப்பட்டிருக்கின்றனவோ (அவ்வளவும்
'பரமாத்துமசுவரூபமே.)"

தைத்திரீயஸம்ஹிதை-௫-௨-௫-ல், "புருஷப்பிரமாணமுள்ள
'தாக (விக்கிரஹத்தை) நிர்மாணஞ்செய்யவேண்டியது."

இப்படிப்பட்ட அநேக வாக்கியங்கள் வேதத்திற் காணப்படுகின்றன. இவைகளெல்லாம் விக்கிரஹாராதனையை ஆதரிக்கிற வாக்கியங்களல்லவோ? ஆகையால், விக்கிரஹாராதநம் வேதத்திற் சொல்லப்பட்டிருக்கிறதென்று தெளிவாயிருக்கிறபடியால் ஸந்தேகிக்கபாதொரு காரணமுமில்லை."

P. G.

௨

இராமாவதாரச் செய்யுட் பாடாந்தரம்.

(முற்றொடர்ச்சி)

நிந்தனைப்படலம்.

மானுட ரிவரென மனக்கொண் டாயெனிற்
கானுயர் வரைநிகர் காத்த வீரியன்
றானொரு மனிதனாற் றளர்ந்து ளானெனின்
றேனுயர் தெரியலான் றன்மை தேர்தியால்.

என்னும் ௫௦-ம்செய்யுளில் தளர்ந்து ளானெனின் எனபது 'தளர்ந்துளாயெனின்' எனக் காணப்படுகின்றது. காத்தவீரியனாகிய ஒரு மனிதனால் தளர்ந்துளாயென்பதே பொருத்தமுடைமையிற் பின்னையதே பொருத்தமுடைத்து 'மனிதன்' என்பதற்குப் பரசுராமன் எனப் பொருள்கொள்வாருமுளர். அது பொருந்தாமை ௫௮-ம் செய்யுளில் காத்தவீரியனைப் பரசுராமன் வென்றமைகூறுதலானும், காத்தவீரியன் மானுடனன்றிப் பிறனன்றாதலானும் பெறப்படும்.

இருவரொன் றிகழ்ந்தனை யென்னின் யாண்டெல்லை
யொருவ னன்றே யுலகழிக்கு மூழியான்
செருவருங் காலையென் மெய்ம்மை தேர்தியால்
பொருவருந் திருவிழந் தநாயம் பொன்றுவாய்.

என்னும் ருக-ம் செய்யுளில் 'அநாயம்பொன்றுவா'யென்பது 'ஆயுப் பொன்றுவா'யெனக் காணப்படுகின்றது. 'அநாயம்' என்பது பொருத்தமின்மையின் 'ஆயு' வென்பதே பொருந்தமுடைத்து.

பொற்கணான் றம்பியென் றினைய போர்த்தொழில்
விற்கொணாண் பொருவுதோ ளவுணர் வேறுளார்
நற்கணா நல்லறந் துறந்த நாளினு
மிற்கணா விறந்தில ரிறந்து நீங்கினார்.

என்னும் ருஉ-ம் செய்யுள்.

பொற்கணான் றம்பியென் றினையர் போர்த்தொழில்
விற்கொணாண் பொருவுதோ ளவுணர் வேறுளார்
நற்கணா நல்லறந் துறந்த நாளினும்
இற்கணா விறந்தில ரிறந்து நீங்கினார்.

எனக் காணப்படுகின்றது. முன்னையினும் பின்னையது பொருட்பொருத்தமும் சிறப்புமுடைத்தாதல் காண்க. நற்கண் ஆம் நல் அறம் - நல்லகண்கள் போன்றதாகிய நல்லறம். அறந்துறந்த நாளினும் இற்கணா இறந்திலர் என்பதற்கு பிற அறங்களைத்துறந்த காலத்தினும் பிறரில்லினரைக் காதலித்து அவர்கண் நெறிகடந்து சென்றிலர் எனப் பொருள்கொள்க. இறத்தல் - நெறிகடந்துசேறல். இதனை "எளிதென வில்லிறப்பா னெய்து மெஞ்ஞான்றும்—விளியாது நிற்கும் பழி" என்னுங் குறட்குப் பரிமேலழகர் உரைத்த விரிவுரையிற் காண்க. இறந்து நீங்கினாராகிய பொற்கணான் றம்பியென்றினையரும் வேறுளாராகிய வீரருமென மேலே கூட்டிமுடிக்க. . இற்கணாரென்னும் பாடத்திற்கு இல்லின்கண்ணுள்ளாரெனப் பொருள்கொள்க.

இப்பெருஞ் செல்வநின்க ணீந்தபே ரீசன் யாண்டு
மப்பெருஞ் செல்வந்துய்ப்பா னின்றுமா தவத்தி னன்றே
யொப்பருந் திருவு நீங்கி யுறவொடு முலக்க வுன்னித்
தப்புதி யறத்தை யேழாய் தருமத்தைக் காமியாதே.

என்னும் ருங-ம் செய்யுள்,

இப்பெருஞ் செல்வநின்க ணீந்தபே ரீசன்றன்பா
லப்பெருஞ் செல்வந் துய்த்தற் கின்னுமத் தவஞ்செயாம
லொப்பருந் திருவுநீங்கி யுறவொடு முலக்க வுன்னித்
தப்புதி யறத்தை யேழாய் தருமத்திற் கருமம்யாதோ.

எனக் காணப்படுகின்றது. 'துய்ப்பானின்று மாதவத்தினன்றே' என்பது பொருத்தமின்மையிற் பின்னையதே பொருத்தமுடைத்து. அப்பெருஞ்செல்வம் - பேரின்பம். அத்தவம் - முன்னர்த்தவம்.

ஆண்டவாளரக் கன்கனன் றண்டத்தை யழிப்பான்
மூண்ட காலவெந் தீயென மூற்றிய சீற்றம்
நீண்ட காதனீர் நீத்தத்தின் வீவுறு நிலையின்
மீண்டு நின்றொடு தன்மையா லிவையிவை விளம்பும்.

என்னும் சுச-ம் செய்யுளில் 'கனன்றண்டத்தை' யென்பது 'சகதண்டத்தை' யெனவும் 'வீவுறுநிலையின்' என்பது 'வீந்ததந்நிலையின்' எனவும் காணப்படுகின்றன. மூற்றியசீற்றம் எனப் பின்வருதலானும், அந்நிலையிலெனச் சுட்டுவருதல் சிறப்புடைமையானும் பின்னையவே பொருத்தமுடைய. அந்நிலையின்மீண்டு என்பதற்கு முன்னுற்ற கோபநிலையினின்றும் மீண்டு எனப் பொருள்கொள்க.

வென்றோரு மிருக்க யார்க்கு மேலவர் விளிவிலாதோ
ரென்றோரு மிருக்க வன்றே யிந்திர னேவல்செய்ய
ஒன்றாத வுலக மூன்று முணர்கின்ற வொருவன் யானே
மென்றோளா யிதற்கு வேறோர் காரணம் விரிப்ப துண்டோ.

என்னும் சுஅ-ம் செய்யுளில் 'இருக்கவன்றே' என்பது 'இருக்கயானவ்' எனவும், 'ஒன்றாதவுலகமூன்று முணர்கின்ற வொருவன்யானே' என்பது 'ஒன்றாதவுலகமூன்று மாள்கின்ற வொருவனென்றால்' எனவும், 'விரிப்பதுண்டோ' என்பது 'விரிப்பதென்னோ' எனவும் காணப்படுகின்றன. 'அன்றே' என்பதும் 'உணர்கின்ற' என்பதும் 'உண்டோ' என்பதும் பொருத்தமில்லனவாதலிற் பின்னையவே பொருத்தமுடையன. இருக்க என்பதை வியங்கோள் முற்றாகக் கொண்டு பொருள்கூறுதலும் பொருந்தும்.

பதவிய மனிதரேனும் பைந்தொடி நின்னைத் தந்த
யுதவியை யுணரநோக்கி னுயிர்க்கொலைக் குரியரல்லர்
சிதைவுற லவர்க்குவேண்டிற் செய்திறன் றேர்ந்ததென்னி
னிதனினக் கீதேயாகி னியற்றுவல் காண்டியின்னும்.

என்னும் ௭௧-ம் செய்யுளில், ‘சிதைவுற லவர்க்குவேண்டிற் செய்திறன் றேர்ந்ததென்னி—னிதனினக் கீதேயாகி னியற்றுவல் காண்டியின்னும்’ என்பது ‘சிதைவுற னினக்குமொவ்வா தென்பது தெளிந்தேன்பின்னு—மிதமுனக் கீதேயாகி னியற்றுவ னின்னுங்கேட்டி’ எனக்காணப்படுகின்றது. முன்னையதினும் பின்னையதே பொருத்தமுடைமை காண்க.

இன்னும் இப்படலத்து ௮௨-ம் செய்யுளின் பின்னர்,

தீயோர் செய்கை தானு மிராம னொருதேவி
தாயா லன்பு மாறுதி கண்டே தளர்வெய்தி
மாயா தொன்றே யன்றி மனத்தே மலிதுன்பத்
தோயா துன்னிச் சோர்பவ னென்றங் குணர்வுற்றான்.

என ஒரு செய்யுள் காணப்படுகின்றது. இதுவும் ஈண்டுப் பொருத்தமுடைத்து.

இங்ஙனம்
சி. கணேசையர்.

ஸ்ரீ:

நுண்பொருண்மாலை.

(முற்றொடர்ச்சி)

௨௩௬. தோன்றிற் புகழொடு......நன்று.

நு - லை:—அருத்தாபத்தி.

௨௫-ம் அதி—அருளுடைமை.

௨௪௨. நல்லாற்றானடி.........மஃதேதுணை.

நு - லை:—பொறிகளாற் காணுங் காட்சியும், குறிகளானுய்த்துணரும் அநுமானமும் கருத்தாமொழியாகிய ஆகமமும் என மூன்று. ஒப்புப்பற்றியுணரும் உவமையும், இங்ஙனமன்றாயின் இது கூடாதென்றுணரும் அருத்தாபத்தியும் உண்மைக்கு மாறாய இன்மையுமென்னும் மூன்றுமாக ஆறளவை என்க. இவற்றை வடநூலார் பிரத்யக்ஷம், அநுமானம், சாப்தம், திருஷ்டாந்தம், அருத்தாபத்தி, அநுபலத்தி என்பர். “அறத்தாறிதுவெனவேண்டா” (௩௭) “அன்பிற்கு முண்டோவடைக்குந்தாழ்” (௭௧) “உயிருடம்பினீக்கியாரென்ப” (௩௩௦) “பொருளாட்சி போற்றாதார்க்கில்லை” (௨௫௨) “படைகொண்டார் நெஞ்சம் போல்” (௨௫௩) “தினற்பொருட்டாற் கொல்லாதுலகெனின்” (௨௫௬) என்பன முறையே காண்க. * ஒழிந்தது வந்தவழிக்காண்க. ஆற்றானென்பது வேற்றுமை மயக்கம்.

௨௫௪. “அருளல்லதியாதெனிற்......தவ்வூன்றினல்.’

நு - லை:—கோறலென முன்னின்றமையின் ‘அவ்வூன்’ எனச் சுட்டினார்; அல்லாக்கால், செய்யுளாதலிற் சுட்டு முற்கூறினார் என்பது. அஃது “ஆக்கமுங் கேடு மதனால் வருதலாற், காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு” (௬௪௨) என்பதனுட் காண்க. ‘யாதெனின்’ என்பதனை முன்னுங்கூட்டுக.

௨௫௭. “உண்ணாமைவேண்டும்......பெறின்.

நு - லை:—புண்ணதுணர்வார்—ஆய்தம் விகாரமென்றது, கண்டெனக் குற்றியலுகரத்தீறே உயிரேறுவதல்லது அது வென்னுஞ் சுட்டீற்றுகரம் உயிரேறாதென்பது நோக்கி; “வாளதுணர்வார்ப்பெறின்” (௩௩௪) என்பதனுட் காண்க. “விலங்கலைக் கால்விண்டு” என்னுங் கோவையாரில் (௨௪) ‘துலங்கலைச் சென்றிதென்னோ’ என்பதன் பதவுரையினுங் காண்க.

---

* “முறையே” என்றாரேனும், “அறத்தாறு”—காட்சியளவைக்கும், “அன்பிற்கு”—அநுமானவளவைக்கும் “உயிருடம்பின்”—ஆகமவளவைக்கும், “பொருளாட்சி” “படைகொண்டார்”—இவ்விரண்டும் உவமையளவைக்கும், “தினற்பொருட்டாற்”—அருத்தாபத்தியளவைக்குங் கொள்க. “ஒழிந்தது” என்றது அநுபலத்தியை என்க.

௨௬௧. உற்றநோய் நோன்றல்......தவத்திற்குரு.

நு - லை:—தவத்திற்கு உரு அற்று என்பது, யானையது கோடு கூரிது என்பது யானைக்குக்கோடு கூரிது என்பது போலும்; (இதனை) "இதனதிதுவிற்றென்னுங் கிளவியும்" (தொல். சொல். ௧௧௦) என்பதனாலறிக.

௨௬௭. சுடச்சுடரும் பொன்......நோற்கிற்பவர்க்கு.

நு - லை:—சுடரும் - ஒடும்.. ஒளி - ஞானம்.

௨௬௯. கூற்றங்........தலைப்பட்டவர்க்கு.

நு - லை:—குதித்தல் - கடத்தல். அர்த்தாங்கீகாரத்துள் கடத்தலும் என்றதனை எச்சவும்மையாக்கினார், முற்கவிப்பொருளைக்குறித்தென்க.

௨௭௦. இலர்பல......நோவாதவர்.

நு - லை:—தவம் துறந்தார் மேற்றாகலிற் செல்வம் நல்குரவு ஈண்டு அறிவினுண்மையின்மைகளாயின; "நுண்ணுர்வின்மை வறுமை யஃதுடைமை, பண்ணப் பணைத்த பெருஞ்செல்வம்" (நாலடி-அறிவின்மை) எனக் காட்டியதும் அதனைநோக்கி என்க.

௨௭௧. வஞ்சமனத்தான்......நகும்.

நு - லை:—பூதங்களைந்துமென்றே ஓதுக. கோவையாருள் "பணங்களைஞ்சாலும்" .... "குணங்களைஞ்சாற்பொலியும்" (திருக்கோவை-௨௩௫) என அடிப்பாடு நோக்கி வருவது (காண்க.) "விச்சதின்றியே விளைவுசெய்குவாய்" என்னுந் திருவாசகத்தில் (மெய்யுணர்தல்-௧௯.) "வைச்சுவாங்குவாய்" "பிச்சனாக்கினாய்" என வருவனவும் அது. "நிச்சநிரப் புக்கொன்றாங்கு (திருக்குறள்-௫௩௨.) என்பதுமது.

௨௭௨. "வானுயர்தோற்ற......குற்றப்படின்."

நு - லை:—வானுயர் தோற்றமென்பது, நாலடியில் (குடிப்பிறப்பு-௨) 'வான்றோய்குடி' என்றாற்போல இலக்கணை வழக்கு. அன்றியும் 'வன்றோய் வன்னகுடிமை'யுமாம். (ஆதிரையான் பெயராசிரியன் பொதுப்பாயிரம்) 'உடையானரசருளேறு' (திருக்குறள்-௩௮௧.) "உடையார் முன்னில்லார் போல்" (ஷை-௩௯௫.) "வானுயர்தோற்றம்" (௨௭௨) என்பனவற்றுள், உபசாரவழக்கும், உலகவழக்கும், இலக்கணைவழக்கும் முறையேகாண்க. காமத்துப்பாலுள் "யாருள்ளித்தும்மினீர்' (ஷை ௧௩௧௭) என்பதன்கண் மகளிர்வழக்குங் காண்க.

௨௭௩. வலியினிலைமையான்......தற்று.

நு - லை:—அதன் என்றது மனம் எ - று.

௨௯௩. தன்னெஞ்சறிவது......சுடும்.

நு - லை:—பொய்த்தபின் - பொய்த்தானாயின் எனச் செயின் என்வினையெச்ச வாய்பாடாய் முடிந்ததால், "பின்முன் கால்கடை" (தொல். சொல். ௨௨௬.) என்னுஞ் சூத்திரத்திற்கேற்பப் பின்னென்பதோர் வாய்பாடுபெற்ற வினையெச்சமென்க

௨௯௭. பொய்யாமை......நன்று.

நு - லை:—இதன் பக்ஷாந்தரத்துள் "செய்யாமை செய்யாமை"க்குச் 'செய்கை' (பொருள்) என்றார்; அது தண்டியலங்காரத்துள் இன்மையதபாவத்துக்கு (சூத்-௬௦.) உதாரணங்காட்டிய "வாராமையில்லை வயவேந்தன்" என்பது வருவன் வயவேந்தன் எனப்பொருள்பட்டது போல என்க.

௩௦௬. சினமென்னுஞ்......சுடும்.

நு - லை:—சேர்ந்தாரைக்கொல்லி என்பது தான்சேர்ந்த இடத்தைக் கொல்லுந் தொழிலது எனவிரியும். வடநூலாரும் தீக்கு "ஆசிருதவரி" என்று ஏதுப்பெயர் கூறுவர்.

௩௧௪. இன்னாசெய்தாரை......செய்துவிடல்.

நு - லை:—"அவ்வித்துக் காட்டிவிடும்" (திருக்குறள். ௧௬௭) என்பதுபோல 'செய்துவிடல்' இருசொல். உரையுள், 'அவ்விரண்டையும்' என்றது, அவ்விரண்டு குறட்பொருளையுமென்க.

௩௧௭. எனைத்தானு......தலை.

நு - லை:—அறியாமற் செய்ததற்குப் பாவமில்லையென்பது காண்க; பாண்டுவுந் தசரதனும் பாவமெய்திய தென்னையெனக் கடாவுக.

௩௩௭. "ஒருபொழுதும்......மல்லபல.

நு - லை:—'கருதுப' என்பது உயர்திணைப்பன்மை. பகஷாந்தரத்துள்ளும் 'வகரவீறுய்ப் பாடமோதி' என்றமையால், அஃறிணைப் பன்மைக்கு "எண்ணென்ப வேனை யெழுத்தென்ப" (திருக்-௩௯௨) என்பதுபோற் பகரமீறுயிற்று.

(தொடரும்)

பத்திராசிரியர்.

புத்தகக் குறிப்பு.

திருவுருமாமலைச் சிலேடை வெண்பா:— இப்பெயர்கொண்டதொரு சிலேடைவெண்பா, சேற்றூர் ஸ்ரீமத்-மு. ரா. அருணசலக் கவிராயரவர்களால் இயற்றி வெளியிடப்பட்டுள்ளது. திருவுருமாமலையென்பது, திருநெல்வேலி தாமிரபருணி நதியின் மத்தியிலுள்ள குறுக்குத்துறையென்னும் ஸ்தலமாகும். தென்னுடாண்ட வடமலையப்பபிள்ளையன் காலத்தே திருச்செந்தூர்க்கு, முருகக்கடவுள் திருவுருவொன்று இங்கிருந்து அமைத்துக்கொண்டுபோன காரணத்தால், இந்த க்ஷேத்திரம் திருவுருமாமலை யென்னும் பெயர்பெற்றதென்பர். இத்திருப்பதி விஷயமாகக் கவிராயரவர்கள் இயற்றியிருக்கும் சிலேடை வெண்பா தமிழறிஞரெல்லாம் படித்து மகிழத்தக்கது; ஒவ்வொரு பாடலும் மிகவழகும் பொருட்பொலிவும் பெற்றிருப்பதோடு, சிலேடைகளெல்லாம் அற்புதமான மாதிரியில் அமைந்து விளங்குகின்றன. இதற்குமுன் அமைக்கப்பட்ட சிறந்த சிலேடைமாலைகளைப் போன்றதொன்றுக இந்நூல் மதித்தற்குரியது. கவிராயரவர்கள், அச்சிலேடையின் பொருள்களை பாட்டுக்களின் அடியிற் குறிப்பிட்டிருப்பதும் உபயோகமாகும். இந்நூல், நம்மவர்க்கு ஒரு நல்விருந்தாயிருக்குமென்றே நம்புகிறேம். ப—ர்.

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௭] சௌமிய-௵ சித்திரை ௴ [பகுதி-௯.

தமிழ்ப்பழஞ்சரிதம்.

——:o:——

(முற்றொடர்ச்சி.)

இதுகாறும் கூறிவந்தவைகளால், தமிழர் ஒருகாலத்தில், இப்பரதகண்டமுழுதும் பரவியிருந்தனரென்பதும், ஆரியர் விந்தியமலையின் வடபாக முழுதும் குடியேறிப்பரவியகாலத்தில், வடக்கிருந்த பூர்வகுடியினராகிய தமிழரிற் பலர், அம்மலையின் தென்பாகத்தே தம் தலைவரின்கீழ் அமைதியுடன் அமர்ந்து ஆரியக்கலப்பின்றி நாகரிகத்துடன் வாழ்ந்துவந்தனரென்பதும் ஒருவாறுவிளக்கப்பட்டன. இக்கொள்கைகள்வலியுடையனவென்பதை நாம் ஆங்காங்கேகூறிவரும் விஷயங்களும் மெய்ப்பிக்கும். இத்தமிழர் தென்னுடு வந்து தங்கியகாலம் இன்னதென அளவிடல் மிக அருமை. அதனை அளக்க வேண்டுமாயின், நம் சென்னையில் முன் கவர்னராயும், கலாவல்லவராயுமிருந்த ஸர் கிராண்ட்டப் துரை அவர்கள், "கான்வகேஷன்" பிரசங்கமொன்றில் "தமிழரின்-புராதனத்தைநோக்குங்கால், ஆரியர் இங்கே குடியேறியகாலம், க்ஷணநேரத்துக்கு முன்பெற்ற ராய்ட்டர் தந்திச் செய்தியை யொக்கும்" என்று ஆராய்ந்து கூறியதினும் சிறப்பாகக் கூறுதல் முடியாதென்னலாம்.

விந்தியத்தின் தெற்கே வந்தேறிய திராவிடர் ஆரியரது கூட்டாவின்றி வாழ்ந்தமையால், அவரது, பாஷையும் நடையுடை பாவனைகளும் எவ்விதக் கலப்பும் பெறுமல் விளங்கின. தமிழர் தென்னுட்டிற் குடியேறுமுன்பு அந்நாட்டிலே அதன்பழைய குடிகளும் இருந்தன.

பழையர், பாணர், வள்ளுவர், பறையர், துடியர், கடம்பர் என்போரே அக்குடியினர். இதனைப், "பாணன் துடியன் பறையன் கடம்பனென், றந்நான் கல்லது குடியு மில்லை" எனப் புறநானூற்றில் வருதலால் உணர்க. இப்பழங்குடிகளைத் தமக்குத் தாழ்ந்தவராகவே தமிழர் நடத்திவந்தனராயினும், அக்குடிகளிற் சிலரைத் தக்கபடியும், சிலரைத் தம்மேவற் றொழிலோராகவும் வைத்துக்காத்துவந்தனர். அவருட் பழையர் என்போர் மலைநாடுகளில் வசித்தவர். அம்மலைகளிற் றேனெடுத்து அருந்தலும் விற்றலும் இப்பழையரது தொழிலாகும். இவர்கட்கே சிறந்த தேனெடுத்தற்றொழில் பற்றி, அத்தேனுக்குப் "பழை" என ஓர் பெயருமுண்டாயிற்று. இவர் முற்காலத்தே சிறந்த போர்வீரராக அரசர்பால் அமர்ந்திருந்தனர். பாண்டியன் படைத்தலைவனை பழையன்மாறனென்பானும் இவ்வகுப்பினனே. இப்பழைய வகுப்பினர் இன்றும் தென்னாட்டு மலைப்பிரதேசங்களில் தம்பழைய ஒழுக்கத்துடன் இருப்பதாகத் தெரிகின்றது. பாணவகுப்பினர் ஆடல் பாடல்களாலும் தூதுபோதலாலும் அரசர் முதலியோரை மகிழ்வித்து வந்தனர். அவரிற் பெண்பாலார் விறலியென்று அழைக்கப்படுவர். இவர்களும் அரசர் சமுகத்தில் மதிக்கப்பட்டனர். செந்தமிழரசியாகிய ஒளவையாரே இந்தப் பாணவகுப்பைச்சார்ந்தவரெனின், நாம் அவ்வகுப்பினரைப்பற்றி அதிகமாகப்புகழ வேண்டுவதென்னை? சுருங்கச்சொல்லின், முற்காலத்துத் தமிழரசரது பெருமதிப்புக்குட்பட்டவர்களில் இப்பாணரை முதன்மைபெற்றவராகச் சொல்லலாம். இவர்களை யடுத்து வள்ளுவரும் அரசரால் ஆதரிக்கப்பட்டனர். இவர்க்கு முக்கியமாக ஏற்பட்டிருந்த தொழில் அரசனாணையை முரசுகொண்டு அறிவிப்பதேயாம். இனிக்கடம்பர் என்றவரைப்பற்றியவிசேடம் அதிகம் விளங்கிற்றில்லையேனும் இப்பெயர்கொண்ட கூட்டமொன்று 1000-வருஷங்கட்கு முன் மிகவலிமைபெற்றிருந்ததென்று சரித்திரமூலமாக அறிகின்றோம். இதுவன்றியும் அக்கடம்பரிற் பல்லோர் சிறந்தயுத்தவீரராயிருந்து மேற்குக்கரை நாடுகள் சிலவற்றை ஆட்சி புரிந்து வந்ததாகவும் வெளியாகின்றது. இவர்களிலே பறையர் துடியரென்போரே மிக்க தாழ்ந்த வகுப்பினராக எண்ணப்பட்டவர். அஃது அவர்களது இழிந்த ஆசாரம் பற்றிப்போலும்.

இனி, ஆரியக்கலப்பின்றி வாழ்ந்த பழந்தமிழரது வழக்க ஒழுக்கங்களைப்பற்றிச் சிறிதாராய்வோம். அவர்களுடைய புராதனவழக்கத்தை அவர் வழங்கு மொழியால் சிறிதுதெரிந்துகொள்ளலாம். தமிழர் இரத்தினங்களாலும் உயர்ந்த உலோகங்களாலும் செய்தணியும் காதணிகளுக்கு ஓலை, தோடு, குழை, கொட்டை என இன்றும் வழங்குதல் அவர்கள் பழங்காலத்தில் காதில் அணிந்துவந்தவை, ஓலைகளும் பூவிதழ்களும், தழைகளும், கொட்டைகளுமாகவே யிருந்தன என்பதைக் குறிக்கும். கழுத்தணியைக் கொடியென வழங்கியிருத்தல் தமிழர் ஆதியில் படருங் கொடிகளை அணிந்தவரென்று காட்டும். கைவளைக்குப் பெயராகிய சங்கு என்பது, தமிழர் முற்காலத்தில் கடற்சங்கினை அவ்வாபரணமாக்கி யணிந்ததை விளக்குவதாம். அரைப்பட்டிகைக்கு மணவு எனச் சிறுசங்கின் பெயர் வழங்கலால், அவ்வணி, அச்சங்குகளினால் முற்காலத்தமைந்தவையென்றாம். இவ்வணி "அக்குவடம்" என இக்காலத்தும் வழங்குவது. ஆபரணங்களுக்கு வழங்கும் பழந்தமிழ்ப்பெயர்கள், இவ்வாறு தமிழரின் ஆதிசரித்திரத்தைக் குறிப்பிக்கின்றன. இவ்வண்ணமே பழஞ்சொல்லாராய்ச்சியில் தமிழ்ச்சரித்திரம் ஒருவாறு விளங்கத்தக்கதாயினும், இங்கு அவற்றை விரிப்பிற் பெருகுமாதலின் அறிஞர் அவற்றை ஆராயவல்லர். இவற்றையன்றித் தமிழ் வழக்கவொழுக்கங்களை யறிதற்கு அவர்கள் அநாதியாகவே கொண்டுவரும் அகப்பொருட் புறப்பொருட்டிணை துறைகள் நமக்கு ஏற்ற கருவிக ளென்னலாம். இத்திணை துறைகளிற் சில, ஆரியக்கலப்பிற்குப் பின்னர் உண்டானவையாயினும் பெரும்பாலன தமிழரது பழையவழக்க ஒழுக்கங்களை நன்குணர்த்துவன. ஆரியாசாரங்கட்கும் இவ்வழக்க வொழுக்கங்கட்கும் எவ்வகைத்தொடர்புமில்லை யென்பது, அவ்விரண்டையும் ஒப்ப ஆராய்வார்க்குத் தெளிவாகும். அகத்திணை விஷயங்கள், தமிழ்த்தலைவனுந் தலைவியுந் தம்முட் கூடுகின்ற காலத்தும் கூடியபின்னரும் நிகழும் செய்திகளை யெல்லாம் கூறுவன. புறத்திணை விஷயங்கள், அவையல்லாத தமிழரது அரசியல், போர் முதலிய பல வழக்கங்களை விரித்துரைப்பன. இனித், தமிழர் தாம் ஆதியிற் றென்னாட்டிற்குடியேறித் தங்கியதற்கேற்பக், குறிஞ்சி நிலமக்கள், முல்லைநிலமக்கள், மருதநிலமக்கள், நெய்தனிலமக்கள் என நான்கு பிரிவினராயினர். இப்பூமி முழு

தும் இந்நான்குவகுப்பில் அடங்குதல் கண்டவரும் அத்தன்மைபற்றி "நானிலம்" என்னும் பெயர்க்குறியை இந்நிலவுலகுக்கு இட்டுவழங்கினவருந் தமிழரொருவரே. "பாலை" என்பதையுஞ் சேர்த்துப்பிற்காலத்தார் நிலமைந்தெனக் கொண்டனரேனும், அந்நிலம் முல்லையுங்குறிஞ்சியுங் கலந்ததொன்றாதலால், பழந்தமிழர் அதை ஒன்றாகக் கருதினாரில்லை. முன்னாளில் தமிழர் பூவில் அதிகப்பிரியம் வைத்துப் போற்றிவந்தவரென்பது அவர்கள் மலைமுதலிய அகத்திணைக்கருப்பொருளை அவ்வந்நிலத்திற் சிறந்த குறிஞ்சி, மருதமுதலியவற்றாலும்; நிரைகோடல், நிரைமீட்டல் முதலிய புறத்திணைகளை வெட்சி, கரந்தையென்பனவற்றாலும் பூக்களைவைத்தே பெயரிட்டிருத்தலால் விளங்கும். மேற்கூறிய நிலங்களில் வசித்த தமிழ் மக்களுள், மலைப்பிரதேசத்தில் வசித்தவர்க்கு மறவர் இறவுளரென்று பெயர். இவரது ஊர்கள் குறும்பொறை சிறுகுடி எனும் பெயர்கொண்டு வழங்கும். இவர் வழங்கிய வாத்தியங்கள் தொண்டகப் பறை, வெறியாட்டுப்பறை, துடிஎன்பன. அவர்களின் தலைவர்—பொருநன், சிலம்பனென்றும், தலைவியர்—மறத்தியர், கொடிச்சியர் எனவும் வழங்கப்படுவர். இவரது சிறந்த தொழில்கள், தேனெடுத்தல், கிழங்ககழ்தல், குன்றமாடுதல், தினைக்கிளி கடிதலென்பன. இவர்கள் உணவுப்பொருளாகக்கொண்டவை தினையும் மூங்கிலரிசியு முதலியன. இனி, நெய்தனிலத்து ஆண்மக்களுக்குப் பரதர், நுளையர், உமணர் என்றும், பெண்மக்களுக்குப் பரத்தியர், நுளைச்சியர், உமண்டியர் என்றும் பெயர். இவர் வசிக்கும் ஊர்கள் பட்டினம், சிறுகுடி, பாக்கம் என வழங்கும். (இப்பட்டினம் என்னும் வழக்கு இப்போது மசூலிபட்டினம், விசாகபட்டினம், சென்னபட்டினம், நாகபட்டினம் எனத் திராவிட நாட்டுக் கடற்கரை ஊர்கட்கு வழங்குகின்றது.) இவரது தலைவர் துறைவன் கொண்கன் சேர்ப்பன் எனப்படுவர். இவர்களது வாத்தியம் மீன்கோட்பறை, நாவாய்ப்பறை என்பன; இவர் தொழில்கள் மீன்விற்றல் உப்புவிற்றல் முதலியன. இனி, மருதநில ஆண் பெண் மக்கட்கு முறையே உழவர், உழத்தியர், கடையர், கடைசியர் என்று பெயர். இவர் வசிக்குமிடங்கள் ஊர் பேரூர் என வழங்கும். இவரது உணவு செந்நெல் வெண்ணெல் முதலியன. தொழில் நடுதல், களைகட்டல், அரிதல், கடாவிடுதல் முதலியன. அவர் தலைவர், ஊரன், மகிணன் எனப்படுவர். இவரது வாத்தியம் மணமுழவு, நெல்லரிக்கிணை யென்பன. இனி, முல்லைநிலமாக்கள் இடையர், ஆயர் எனப் பெயர் பெறுவர். இவரூர் பாடி என வழங்கும். இவருணவு வரகு சாமை, முதிரை என்பன. நிரை மேய்த்தல் முதலியன இவர் தொழில்கள். இவர் தலைவர் மருதத்தலைவர்பெயரே யுடையர். இவர் வாத்தியம் ஏறுகோட்பறை யென்பது.

இந்நான்கு நிலத்துமக்களுள் முதல் மூவரும் தமிழ் நாட்டில் முற்பட்டகாலத்தே வந்தேறியவர்களென்று தெரிகின்றது. முல்லைநிலமாக்கள் பாண்டியன் தென்னாடடைந்த காலத்தே அவருடன் கூடவந்தவரென்று சங்கநூல்களிற் சொல்லப்படுகின்றது. இதனால் இறுதியிற் கூறப்பட்டவர் சிறிது பிந்தியவரென்று தோற்றும். இவ்வாயர், புராணங்களில் ஆபிரரென்று கூறப்பட்டிருத்தலன்றி, வட இந்தியாவில் இன்றும் "ஆஹிர்" என்று அழைக்கப்படுகின்றனர் என்பர். தென்னாட்டில் இவ்வாறே தமிழ்ப்பழங்குடியினரை வில்லவர் மீனவர் என்னும் பெயர் புனைந்து வழங்குதல்போல, இராஜபுதனத்திலும், கன்னடதேசத்திலும் இப்பெயர்கள் முறையே பில்லர் (Billar) மீனர் (Meanr) என வழங்கப்படுதல் இக்குடியினரது பழங்கால ஒற்றுமையை விளக்குகின்றது. தென்னாட்டிலிருந்த தமிழ்க்குடிகளுடன் காலாந்தரத்தில் வடபாலிருந்து வந்துகலந்த தமிழ்க்குடியினர் பலர். மேற்கூறிய நான்குநிலத்துமக்களில் ஒவ்வொருவர்க்குமுரிய பொது விஷயங்கள் சில ஒத்திருப்பினும், அவ்வவர்க்குள் அவாந்தர பேதங்கள் பலவுமிருந்திருக்கலாம். அவற்றை இப்போது எண்ணுதல் முடியாது. இந்நானிலமக்களில் நாகரிகவளர்ச்சியுடைய மருதநிலமக்களே பெரும்பாலும் தமிழர்க்குத் தலைவராயினர். குறிஞ்சி நிலப்பெண்கள் உருவழகிற்சிறந்தமையால் மருதநிலத்தலைவர்கள் அப்பெண்களைக் கந்தருவமுறைப்படி மணம்புரிவதுண்டு. நெய்தனிலப் பெண்களும் மருதநிலத்தலைவரால் சிறுபான்மை மணம்புரியப்பட்டனர். ஆனால், முல்லை நிலத்தாராகிய ஆயரது பழைய விவாகமுறை வேறு விதமாகும். வலிமையும், கொல்லுமியல்புமுடைய ஆனேறொன்றைப் பலர்முன் வெளிப்படவிடுத்து, அதைத் தழுவிப் பிடித்தானுக்கே மகட்கொடுக்கும் வழக்கம் இவ்வாயர்க்குள்ளே இருந்ததென்று பழைய நூல்களிற் சொல்லப்படு

கின்றது. ஆனேறு தழுவி மணம்புரியும் இவ்வழக்கம் நப்பின்னைப் பிராட்டியை மணந்த காலத்து ஆயர்குலபதியாகிய கண்ணபிரானாலுங் கையாளப்பட்டதாகப் புராணகதை வழங்குகின்றது. இவ்வாயரைப் பற்றிய விவாகமுறை இவ்வாறு சொல்லப்படினும், பழங்காலத்தில் வழங்கிய விவாகமுறை கந்தருவவிவாகமேயென்று பழைய இலக்கணங்களும் இலக்கியங்களும் குறிப்பிக்கின்றன. இது களவுப்புணர்ச்சி என்று தமிழில் வழங்கும். அஃதாவது—தலைமகனுந் தலைமகளுந்தமியராய் ஒரு பொழிலகத்தெதிர்ப்பட்டு வேட்கைமிகுதியாற் புணர்ந்து பின்கூடிவாழ்வது. ஆரியர் தென்னாட்டிற்புகுந்து கலந்தபின் ஏனையாசாரங்களில் மாறுபாடுநேர்ந்தது போலவே, இக்கந்தருவ முறையும் பிற்காலத்து மாறலாயிற்று. ஆசிரியர் தொல்காப்பியனார், "மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணம், (ஆரிஷமணச்சடங்கு) கீழோர்க் காகிய காலமு முண்டே" என்னும் சூத்திரத்தில் முத்திறப்பட்ட ஆரியரை மேலோரென்றும், அவ்வாரியரல்லாத தமிழ்ப் பூர்வகுடிகளைக் கீழோரென்றுங் கூறி ஆரியர்க்கு விதித்த ஆரிடமணச்சடங்கை அவரல்லாத ஏனையரும் ஓர்காலத்துத் தழுவலாயிற்றென்று கூறுதலால், ஆரியக்கலப்புக்கு முன் கந்தருவமுறையே தமிழராற் கொள்ளப்பட்டதென்பது நன்குவிளங்கும். * அவ்வாறு கொள்ளப்பட்ட விவாகமுறை, ஆதிக் காலத்தே தமிழருக்குள் மிக ஒழுங்காக நடைபெற்றதென்பதையும், பின்னர், அம்முறையில் "பொய்யும் வழுவுந்தோன்றி" யதனால் ஆரிடமணமுறை எடுத்துக்கொள்ளப்பட்டதென்பதையும், "பொய்யும் வழுவுந் தோன்றிய பின்ன, ரையர் யாத்தனர் கரணமென்ப" என்னுங் கற்பியலின் றொடக்கத்திற் றொல்காப்பியனார் குறித்திருக்கின்றார். இக்கற்பியல், விதிமுறையே செய்யப்படும் ஆரிடமணநிகழ்ச்சியைப் பற்றியது. இதனால், இம்மணமுறை ஆரியரால் விதிக்கப்பட்டதென்பதும், இதற்கு முன்பு களவியன்முறையே தமிழர்கையாண்டதென்பதும் நன்கு போதரும். இக்களவியன்மணத்தில் வேறு பல செயல்கள் நிகழ்தல் அகத்திணைத்துறைகளால் அறியப்படுகின்றது. பண்டைக்காலத்தில் இத்துறைகளைப் பற்றியே புலவர்கள் மிகுதியாகப்பாடி வந்தனர். பழைய தமிழ்த்தலைவர்கள் களவியன் முறையிற் குறிஞ்சி நிலப்பெண்களை மணந்துவாழ்ந்த செயல்கள் பல துறைகளாகப் பகுத்துப் பாடப்பட்டு வந்ததோடு, முன்னாளில் அவை பலர்முன்பு நாடகமாக நடித்துக் காண்பிக்கப்பட்டு வந்தன. கோவைகளெல்லாம் முத்தமிழுள் நாடகப்பகுதியின்பாற் பட்டதென்று கூறப்படுதல் காண்க. நாடகங்களும் கூத்துக்களும் ஒரு தேசத்தின் வழக்கத்தை யொட்டியே நடைபெறுமென்பது திண்ணம். இப்போதுள்ள அகப்பொருளிலக்கணங்களும் இலக்கியங்களும் தமிழரது ஆதிவாழ்க்கை முறைகளைக் குறிப்பிக்கின்றனவேனும், அந்நூல்களெல்லாம் ஆரியக்கலப்புக்குப் பின்பெழுந்தவையாதலால் ஆரியாசாரங்களும் அவற்றிற் புகுந்துவிட்டன. ஆதலால், பழந்தமிழரது ஏனை வழக்கங்கள் இன்னின்னவையென்று சிலசெய்திகள் அறியப்படுகின்றனவேயன்றிப் பெரும்பாலவும் ஐயத்திற்கிடமாகின்றன.

(தொடரும்)

பொ. பாண்டித்துரை.

---

* சீவக சிந்தாமணி, பதுமையாரிலம்பகத்தில், "தேவர் பண்ணிய தீந்தொடை யின்சுவை, மேவர் தென்றமிழ் மெய்ப்பொரு ளாதலிற், கோவத் தன்னமென் சீறடிக் கொம்பனாள், பூவர் சோலை புகுவளென் றெண்ணினாள்" (௧௯௯) எனவும், ஷை சுரமஞ்சரியிலம்பகம் ௯௧-ம் பாட்டில், "இலைபுறங் கண்ட கண்ணி யின்றமி ழியற்கை யின்பம்" எனவும் வருவனவற்றால், தமிழ் மக்கட்கேயுரியது இக்கந்தர்வமுறையான களவுப்புணர்ச்சியென்பது நன்கு விளங்கும்.

உ

திருச்சிற்றம்பலம்

தனிச்செய்யுட்கோவை.

ஈட்டு புகழ்நந்தி பாணநீ யெங்கையர்தம்
வீட்டிருந்து பாட விடியளவும்—காட்டிலழும்
பேயென்றா ளன்னை பிறர்நரியென் றார்தோழி
நாயென்றாள் நீயென்றேன் நான். (௧)

இச்செய்யுள், பாணன் தலைவனைக் காதற்பரத்தையிடஞ் சேர்த்ததால் உண்டாய வெகுளிகொண்டு தலைவி பாணனைப் பார்த்துக் கூறியது.

புள்ளலம்பு தார்க்கண்டன் பூம்புகார் வாழ்களியேம்
கள்ளலம்பு கள்ளுண்பேம் சோர்வறியேம்—உள்ளபடி
சொல்லவா வாவி திரௌபதையை மூக்கரிந்
தல்லவா மாபா ரதம். (௨)

இது கள்ளை உண்ணினும் தான் சோர்வுபடுத லிலனாகத் தற்புகழ்ச்சிசெய்து மயங்கிக்கூறியது.

ககரம் பிறந்தசொல் லான்கரு மாணிக்கன் கப்பல்வெற்பி
லுகரம் படைத்திருந் தோமில்லையே யுன்னைப் பெற்றபின்பு
வகரம் பிடித்தும்வந் தாரில்லையே யென்ன மாயஞ்செய்தா
யகர விகரந் தனமாக்கி வைத்த வருமகவே. (௩)

இச்செய்யுள், பாலனைப்பழித்தற்றுறை.

ககரமென்பது தமிழ் எண்ணில் ஒன்றைக் குறிக்குமாதலால், ஒன்றேயன்றி மாறுபா டவன் சொல்லிலில்லையென்பதை விளக்கி நின்றது. உகரம் படைத்திருந்தோமில்லை - இரண்டுபட்டிருந்ததில்லை. (உகரம் எண்ணில் இரண்டு.) வகரம் பிடித்து - காலைப்பிடித்து. (வகரம் எண்ணிற் கால்.) அகர விகரந்தனமாக்கி - நாலும் தனம்; அல்லது, அரையை யெட்டியதனம். (அகரவிகரம் - எட்டரை.)

முன்னவனைப் பாம்பிரவி கொடுநாகிற் புகுதுமென மொழியும்வேத
மன்னவனைச் சிறுகாலோ திமம்பழனஞ் சேண்கயிலை யடைவானேனுங்
கன்னல்வளஞ் செறிந்தோங்கு மாடானைப் பதியில்வளர் கருத்தன்பேரை
யின்னிலத்திற் கீர்த்திநெல்லி தரித்திடுமோ வென்றுமடி யேற்குத்தானே.()

பாம்பு - பணி, இரவி - ஆதவன், பாம்பிரவி - பணியாதவன். சிறுகால் - வந்து, ஓதிமம் - அன்னம், பழனம் - செய், சேண்-வான். சிறுகா லோதிமம்பழனஞ் சேண் - வந்தனஞ்செய்வான். கீர்த்தி - இசை, நெல்லி - ஆமலகம். கீர்த்திநெல்லி தரித்திடுமோ - இசையாமல் அகம் தரித்திடுமோ.

(இன்னும் வரும்.)

பொ. பாண்டித்துரை.

"இயல்வது கரவேல்."

(முற்றொடர்ச்சி.)

இனிக்; கரவேல் என்பது, காத்தல் புதைத்துவைத்தல் அல்லது மறைத்துவைத்தல். 'மறைவும் புதைவுங் கரவெனப்படுமே.' இஃதுரைச்சூத்திரம். பொருட்குப் புதைத்தலு மறைத்தலும், ஏனையவற்றிற்கு மறைத்தலொன்றுமேயாம். புதைத்தற்குச் சொல்லுங்கால் தனக்கும் பிறர்க்குமென விருவகைப்படும். தனக்கென்பதைத் தான் றுய்த்தற்கேற்றபொருளைத் துய்க்காது காத்தலெனவும், பிறர்க்கென்பதை ஈதற்கேற்றபொருளை அல்லது ஈதற்குக்கூடியதைக் காத்தலெனவுங் கொள்க. எனவே இவ்விருவகையினு மியல்வது கரவேலென்பது பெறப்படும். இதனைத் 'துய்த்துக் கழியான் றுறவோர்க்கொன் றீகலான் வைத்துக்கழியு மடவோனை—வைத்தபொருளு நகும்—அருளு நகும்.' எனப் பிறருங் கூறுமாறு காண்க. இதில் துய்த்தல்-தானனுபவித்தல். வைத்தல்-புதைத்துவைத்தல். இவர் அறிவும் அருளுமிலரென்பதாம். எனவே தானனுபவித்தலும் அறமென்பதாயிற்று; உடலோடு கூடியவழி யல்லது அறஞ்செய்ய வியலாமையி னவ்வுடலை நிலைபெறுத்தற்கு உண்டிமுதலிய அனுபவமும் வேண்டப்படுதலாலென்க இனி, மறைத்தற்குச் சொல்லுங்காற் பிறர்க்குப் பொருளீதலை மறைத்தலும், உண்மையை மறைத்தலுமெனப் பலதிறப்படுமாறு கரத்தலைக்காண்க. இவையிற்றிற்கியைய வியல்வதென்பதற்குப் பொருந்திய அல்லது இசைந்த வொன்றையெனப் பொருள்கொள்க. எவ்வாற்றானு மியல்வது கரவாமை வேண்டுமென்பதாம். இனிக்; கரவென்பது ஏமாற்றலென்னும் பொருட்டாயொளித்தலென்பதுமாம். இதனை 'ஒள்ளிது னுணர்வு மின்னே புன்னையா ரொளிக்கு மீட்டார்' எனக் கம்பர் கூறுமாறுணர்க. ஆயின், இயல்வதென்பதனோடு மூன்றனுருபொன்றுங்கூட்டி உனக்குள்ள வன்மையால் அல்லது ஒண்மையால் ஒருவரைக் கள்ளஞ்செய்து மேம்பட நினையாதேயெனப் பொருள்கொள்க. இனிக், கரவென்பதனைப் பிறர்க்குத் தீங்கெய்துமாறின்றியு முனக்குத்தீங்கெய்துமாறு மறைத்துவைத்தலென்னும் பொருளில்வைத்துக் கூறலுமொன்று.

*

இது காமநோய்கொண்ட தலைவனுந் தலைவியுந் தாமுற்ற காமநோயைப் பாங்கற்குந் தோழிக்கு நாணுடைமையி னுணர்த்தாதிருக்கையும், அதன்பாற்படும் வேறுநோய்கொண்டார் உலகம் பழிக்குமென்றெண்ணித் தாமுற்றநோயை மருத்துவற்குணர்த்தாமையும், குடியோம்புங் கிழவனுங் கிழத்தியுங் குடும்பநலத்தின்பொருட்டுச் செய்யத்தகும் அல்லது ஒருவர்க்கொருவ ருசாவத்தகு நற்கருமங்களையல்லது நல்லாலோசனையை மறைத்துவைக்கையும், வினைஞர்தாந் தொழில்செயுமுறைபி னறிதற்பாலவாகிய வையங்களைத் தம்மையொத்தார் அல்லது தம்மின்வல்ல வினைஞர்பா லுசாவாது மறைத்திருக்கையும், மாணாக்கன் றனக்குநிகழுஞ் சங்கை தன்னோடொத்த மாணவர்க்குத் தெரியின் இகழ்வுண்டாமென்றுகருதி யன்னோரையும் ஆசிரியரையுமுசாவாது பொதிந்துவைத்தலுமெனப் பலவகைப்படும். இவற்றிற்கேற்ப வியல்வதென்பதனை எத்துணையளவா னுணர்த்தினாலேதமின்றி நன்மை யெய்துமெனத்தெரியுமோ அத்துணையளவிற் பொருந்துமாறென்று பொருள்கொள்க. இன்னவாறு கரவற்கவென்பதாம். கரக்குமேற் காரியங்கெட்டுத் தனக்கேதீங்கெய்தும். இவற்றுட் காமநோய்கொண்ட தலைவனுந் தலைவியுந் தாமுற்ற காமநோயைப் பாங்கற்குந் தோழிக்குங் கரப்பரேல் அந்நோயிருவர்க்கும் புலப்படாமையாற் பிரிவுநீண்டுப்புணர்ச்சியெய்தாது மனத்துயருறுவர். தலைவனிருக்க; தலைவி தான்றனக்குற்ற காமநோயைத் 'தாமுறு காமத்தன்மை தாங்களே யுரைப்பதென்ப, தாமெனலாவதன்று லருங்குல மகளிர்க்கம்மா' வென்பதுபோலப் பிறர்க்குணர்த்தல் பழுதாமன்றோவெனின்; சேட்படுக்கப்பட்டுக் கழிபெருங் காமமுழந்தார்க்குக் 'காமமுழந்து வருந்தினார்க்கேம, மடலல்ல தில்லைபிற' வென்பதனான் நாணந்துறக்கப்படுதலானும், நாணுள்வழியு மந்நோயைக் குறிப்பானுணர்த்தன் மரபாதலானும், கூட்டமெய்துதற்கு அது வேண்டியிருத்தலானும், அச்செய்யுள் தனதியல்பைக்கரந்து கூறும் அரக்கிகூற்றுமாகலானுங், கரந்துகூறும் அக்கூற்றும் உலகின் மகளிர்க்குப் பொருந்துமாயினுந் தலைவன்மாட்டு நேரின்றுமொழிதற்கண் அமையவேண்டுதலாற் பாங்கனிடத்துந் தோழிகளிடத்துங் குறிப்பானுணர்த்துதல் பழுதாகாதென்க. மற்றவையு மிவ்வாறேயேற்ப விரித்துக்காண்க. விரிக்கிற்பெருகும்.

இனி; இயல்வது கரவேலென்பது ஈயென்னும் பொருட்டென்க. ஆயினீகவென்றது கரவேலென்றதெற்றிற்கெனின்; ஈவார் சிலர், கரப்பார் பலரே. பலர்க்கேயன்றிச் சிலர்பொருட்டாக வொன்றைச்சொல்லுமாறில்லை; அன்றி ஈகையுடையார்க்குச் சொல்லவும்வேண்டா. அஃதிலாத பலர்பொருட்டே யிதுசொல்லப் புகுந்ததாகலின் அவர்தஞ்செயலை மறுத்தபடியாமென்க. அதுபற்றியே இயலுவதீகவெனச் சூத்திரிக்கச்சொல் லியைபிருந்தும் அங்ஙனமின்றி யியல்வது கரவேலென வெதிர்மறையை மறுத்தன்முகத்தானீதலையுணர்த்தினாரென்பது காண்க. அல்லதூஉம் உலகம் பொருண்மயக்குடையதாகலானும், பொருளின் மயங்கியவழிச் சுயநன்மையே கவனிக்கப்படுதலானும், சுயநன்மையிற் கவனம்பற்றியவழிப் பொருளழிவுக்கஞ்ச வருதலானும், அவ்வச்சத்தாற் கரத்தலெய்துமாகலானும், கரத்தலை மறுத்தால் ஈகையுணர்ச்சி தானே யமையுமாகலானும், அஃதமைந்தவழியும் எத்துணையானீவதென்னு மைய நிகழுமாகலின், அவ்வைய நீக்குதற்பொருட்டு இயல்வது எனவும், ஈதற்பொருட்டுக் கரவேலெனவுஞ் சொற்களியைத்து எத்துணையானுமீகவென்பார் இயல்வது கரவேலெனக் கூறினாரெனலும் பொருந்துமென்க. அன்றி, நீதிநூலுடையாரெல்லாம் மக்களை யறநெறியினிறுத்தற்பொருட்டு மறநெறியின் விலக்குதலையே பெரிதுங்கூறுதன் மரபு. இது கருதியன்றே பின் 'ஈவது விலக்கேல்' 'ஊக்கமது கைவிடேல்' முதலாக வெதிர்மறையை மறுத்தன்முகத்தாற் சூத்திரித்து அறத்தினிறுத்துமாறும், ஈகைகூறிய திருவள்ளுவருள்ளிட்ட மற்றையாசிரியரெல்லாம் ஈகைகூறி ஈயாமையும் உடன்கூறுமாறும், ஈகைகூறிய வதிகாரத்திற் கரத்தலிற்கேடுங் கரவாமையினலமுங் கூறியவாறும், 'கற்கக் கசடறக் கற்பவை'யென விலக்கு முற்கூறிப் பின், 'நிற்கவதற்குத்தக' வென விதிகூறியதூஉம், இன்னாமையே கூறு நாற்பதெழுந்ததூஉம், அதுபோன்ற பலநூல்கள் பிறந்தவாறும், 'அறவினை யாதெனிற் கொல்லாமை' என்னுங் குறளுட் பரிமேலழகர் 'விலக்கிய தொழிதலுஞ் செய்தலோடொக்கு மாதலிற் கொல்லாமை அறவினையாயிற்று' என்றவாறும், 'அருங்கேட னென்பதறிக மருங்கோடித், தீவினை செய்யா னெனின்' என்று குறள் கூறுமாறும்; அறியாமை மறையவே யறிவு பிறப்பதும், அறியாமையை

ப்போக்க ஆசிரியனமைந்தபடியுங் கண்டுதெளிக. பிரதியோகி நியோகியோடே ஒக்குமென்பதே கருத்து' என்றார் பிரயோக விவேகமுடையாரும். அற்றேல்; பின்னையறத்தை யுடன்பாட்டிற் கூறவுங் காண்கின்றோமே? யென்னெனின்; மறநெறி நின்றாரை யந்நெறியின் விலக்கவே அன்னோர் மறநெறியின்மாறுபட்டுச் சிறந்ததோர்நெறியிதுவெனத் தெளிந்துகோடற் பொருட்டென்க. எனவே அறநெறி வேறு மறநெறிவேறு என்பதும், மறநெறி நீக்கமே அறநெறியனைத்துமன்று பலவகைப்பட்ட அறநெறிகளுள் அதுவுமொன்றென்பதும் பெறப்படும்; மறநெறி நீக்கமொன்றே யறநெறியாயிடின் வேறுபல அறங்கள் வேண்டப்படாவாகலின். மறநெறியிற் றவிர்ந்தான் அறநெறியி னுடன்பற்றும். அறநெறி யுணர்ந்தாரன்றே யந்நெறியில் நிற்பார், அன்னோர்க்கதனை யுணர்த்துத லெற்றிற் கெனின்; அறநெறியுணரா மறநெறிமாந்தர்க்கே யறங்கூறுவதன்றி யறநெறியாளர்க் கன்றென்க. நிற்க; 'விலக்கிய தொழிதலும் விதித்தது செய்தலைக் கிளக்குமென் றறிவர் கிளந்தன ருரையே' 'வடநூலாரும் வழங்குவ ரதுவே' இவை யுரைச்சூத்திரம்.

இனி; இயல்வது கரவேல் எனப்பாடமோதி யுனக்குள்ள தன்மையினொளியாதே யென்பதும் பொருந்தும். இயல்பதென்பதில் இயல்பு மக்கட்டன்மை, ஆண்டன்மை யெனவும்படும். அது பகுதிப்பொருள் விகுதி. ஆண்டன்மை வீரத்தின் வழாமையுங், கருணையின் மறாமையும், ஒழுக்கமுடைமையும், நாணின்மையும், வினைத்திட்பமு முதலாயின. 'வழுக்காவுரனு மறக்கா வருளும், ஒழுக்கமு நாணி னுறுதியு மென்றிவை, யாண்டன்மைச்செய லாகுந்தானே” இஃதுரைச்சூத்திரம். இதைச் சாதிதருமமென்ப. மகளிர்க்குநாணமடமச்சம் பயிர்ப்புப்போல. இவ்வியல்பனைத்துங் கரவேலெனவே மக்கட்டன்மை யுடையனாயிரு வென்பதுபெற்றாம். ஈண்டுக் கரவேலென்பது மறாமைப் பொருட்டென்க. கரவு ஒன்று மற்றொன்றாமாறுதலுமாம். அவ்வடைவே பொருட்கேட்டுக்கும் பொருந்தும். இயல்பது சாதியொருமை. இரப்பார்க்கு இல்லையெனலும் ஆண்டன்மைக் கிழுக்கென்பர். ஈயென்றிரப்பார் ஆண்டன்மை யிழந்தாரென இரவச்சங்கூறுநிற்கும். இரப்பா ராண்டன்மை யிழந்தாரெனவே ஈவாரஃதுடையராயினர். 'ஈவா ராணிய லெய்தியராவர்' 'இரப்பாரதனை யிழந்தன ரென்பர்' இஃதுரைச்சூத்திரம். சிறப்புப்பற்றி யாடவர்க்குக் கூறுமாயினும் இனம்பற்றி மகளிர்க்கு மொக்குமென்க. பெண்ணியலென்று கூறுமாறுங் காண்க. தலைமைபற்றிப் பெரும்பாலும் ஒழுக்கங்களெல்லாம் அரசர்மேலேற்றிக் கூறுமாறு போல். அவ்வுடைமையை யிழத்தலே ஈண்டுக் காத்தலென்பது. 'சிற்றறஞ்செய்தார் தலைப்படுவர்' என்ப. தலைப்படுதல் ஆண்டன்மை பெறுதல். இனி இயல்பென்பதனைப் பண்டுதொட்டு வரூஉம் பழக்கமெனவும், மரபெனவும், வழக்கெனவுங் கொளலும் பொருந்தும். இவ்வாறு வருவதனை வடநூலார் சகஜம் என்ப. சகஜம் பொருளோடும் பிறந்து யாண்டும் பிரிவின்றி யுடனிகழ்வது; தீயிற் சூடு போல. எனவே நெஞ்சினியல்பு மேற்கூறிய செய்தியனைத்து மென்பதாயிற்று. இதற்கியையக் கரவேலென்பதனை மறாதேயெனக்கொள்க. பண்டுதொட்டு வரூஉம் பழக்கமுதலியன ஆன்றோரா னியமிக்கப்பட்ட வொழுக்கநெறிகளைக் கடைப்பிடித்தொழுகுஞ் செயலென்பது. புராணமென்பது மதம். ஒருவன் அல்லது ஒரு கூட்டந்தொடங்கிய செயல் தீதாயின் ஆன்றோரானும் அன்னோரான் முற்கூறிய நூலானும், அரசரானும் அது அப்பொழுதே கண்டித்தொழிக்கப்படுதலானும், புகழையும் பயனையுந் தருதலின் நன்றாயின வழிமுறையிற் பின்பற்றப்படுதலானும் பண்டுதொட்டு வரூஉம் பழக்கமெல்லாந் தகுதியெனப்படூஉ மியல்பாமென்க. இவ்வியல்பு நெஞ்சினியல்புஞ் சொல்லினியல்பும் பிறவுமெனப் பலவகைப்படும். ஈண்டு நெஞ்சினியல்பென்பது உள்ளத்திற் கள்ளமில்லாமை. அகத்தூய்மை யென்பதாம். அகத்தூய்மையின் மறாதேயென்பது. அகத்தூய்மையிற் கரப்பாவது உள்ளத்தினொன்று கிடக்கச் சுயநலங்கருதியு மேம்பாடு குறித்தும் அதனை வேறொருவகையான் வெளியிடுகை. மெய்ந்நூற் பொருளை யுணராதானொருவன் நல்லாசிரியன்பாற்சென்று வழிபாடு செய்தலின்றி அறிவினைப்போல இதற்கு நீவிர் யாதுபொருள் கொண்டீரெனக் கரவானுசாவி யவ்வகையேயவரும் பொருளுணர்ந்து கோடல் உள்ளத்தாற் கள்ளமுடைமையாம். இதனை “எள்ளாமை வேண்டுவா னென்பா னெனைத்தொன்றுங், கள்ளாமை காக்க தன் னெஞ்சு” என்புழி 'மெய்ந்நூற் பொருளையேனும் ஆசிரிய

னை வழிபட்டன்றி வஞ்சித்துக் கொள்ளி னதுவுங் களவா மென்பர் 'எனைத்தொன்றுங் கள்ளாமை காக்கதன் னெஞ்சென்றார்' என்று பரிமேலழகர் உரைவிரித்தவாறு கண்டுதெளிக. இனி; 'யாண்டுத் தீயுண்டு ஆண்டுப் புகையுண்டு' 'எஞ்ஞான் றுளமிருளஞ்ஞான் றுளதே' 'நெல்லுக்குமியுண்டு' 'புல்லிதழ் பூவிற்குமுண்டே' யென்பனபோல நல்லன வுள்ளுழி யெல்லாம் அல்லனவுமுளவாமன்றே, யங்ஙனமாக நெஞ்சினியல்பிற் கள்ளமு முளவாதலொக்குமே, கள்ளமில்லாமை நெஞ்சினியல் பென்ற தென்னையெனின்; இயல்பு மக்கட்டன்மையெனவும், அதுதான் விரத்தின் வழாமையுங், கருணையின் மறாமையும், நாணின்மையும், ஒழுக்கமுடைமையும் வினைத்திட்பமு முதலியன வெனவு முற்கூறினாம். ஆகவே இயல்பென்பது மக்களுயிர்க்கு உறுதிபயக்கு நற்செய்தியாகலானுந், தீயிற்புகை முதலாயினவற்றுட் புகை முதலாயின வெறுக்கப்படுபொருள்களாகலானும், அவைதாம் உடனமைந்திருப்பினுந் தீமுதலியனவே சிறந்து போற்றப்படுதலானும், அவற்றுண் மற்றவை யடங்கி யமைதலானும் அவைபோன்ற சிறப்புப்பற்றி ஈண்டு நெஞ்சினியல் பென்றது நற்செய்தியே யாமெனக் கொள்க. இது கருதியன்றே இவ்வாசிரியர் மற்றோர் நூலுள் 'நெஞ்சிற் கரவுடையார் தம்மைக் கரப்பர் கரவார், கரவிலாநெஞ்சத்தவர்' என் நெஞ்சினியல்பைக் கூறினார். நெஞ்சம் ஈண்டு அதனியல்பை யுணர்த்திற்று. கரப்ப ரென்றதனால் அவ்வியல்பு நற்செய்தியாயிற்று. நெஞ்சிற் கரவு நெஞ்சினியல்பன்று. அதுபற்றியே கரவுடைமை யென்றார். 'நஞ்சுடைமை தானறிந்து நாகங்கரந்துறையும்' எனவுதாரணங் கூறுமுகத்தானும் அவ்வுடைமையை இயல்பிற்குப் புறம்பாக்கியவாறும், கரவிலார்க்கு 'அஞ்சாப்புறங்கிடக்கு நீர்ப்பாம்பு' எனவுதாரணங் கூறுமுகத்தாற் கரவிலா நெஞ்சம் நற்செய்தியையே இயல்பாகக் கொண்டதென விளக்கியவாறுங் கண்டுதெளிக. அற்றாக; இயல்பென்பது இயற்கையின்பாற்பட்டு ஒருவற்குப் பண்டுதொட்டு வரூஉம் பழக்கங்களுட் டீயனவு முளவெனப்படும். அவை ஆண்டன்மைக் கிலக்காவன. செப்பிற் களிம்புபோல. களிம்பொழிந்தவழிச் செம்பு தங்கமாவதுபோலத் தீயன தவிர்கவே நல்லனவாகிய ஆண்டன்மைப் பகுதியெல்லாங் கொள்ளப்படுமென்க. இனிச்; சொல்லினியல்பென்பது மெய்யுடைமை, உண்மையை ஒளியாமற் பேசுகவென்பதாம். எனவே அறிவுடையோராற் புகழப்படுஞ் சொல்லியல்பை அஃதாவது சொல்லினது நல்லொழுக்கத்தை யாதோர் பயன்குறித்தேனும் வேறுபடுத்திச்செல்லற்கவென்பது பெறப்படும். பிறவுமன்ன. விரிக்கிற்பெருகும். இனி; இயல்பு நல்லொழுக்கமுமாம். 'இயல்பாகு நோன்பிற்கு' என்றார் பிறரும். நோன்பு-சீலம், நல்லொழுக்கமுடைமை கரத்தலாற்கெடும். வேறு எத்துணை நல்லொழுக்க முடையாரேனுங் கரவொன்று முடையராயின் மற்றையொழுக்கங்களெல்லாம் இலவாய் முடியும். ஆகவே கரவின்மையே நல்லொழுக்கங்களு ளெல்லாந் தலையென்பது பெறப்படும். இதனை 'இயல்பினா னில்வாழ்க்கை வாழ்பவ னென்பான், முயல்வாரு ளெல்லாந் தலை' என்பதனா னுணர்க. இயல்பு, பழக்கம், மரபு, வழக்கு, ஒழுக்கம், விதி, இயற்கை, இயல் என்பன ஒருபொருட்கிளவி. 'இயல்பே பழக்கம் மரபு வழக்கம், இயற்கை யொழுக்க மியல்விதி யென்ப' இஃதுரைச் சூத்திரம்.

இனி; இயலது கரவேல் எனப் பாடமோதுதலும் ஒன்று. அஃதேல்; இயல், தகுதி, தன்மை, இலக்கணம், ஒழுக்கம், நன்மை, அழகு, ஒண்மை முதலியவாகப் பலதிறப்படும், 'இயலே தகுதி யொழுக்க மிலக்கணம், மயறரு மழகொளி தன்மை நன்மை, யெனப்பலவாகுமா றெண்ணுவர் புலவர்' இஃதுரைச் சூத்திரம். இவை தம்முளுஞ் சிறு சிறு வேறுபாடுண்டு. ஈண்டும் அது பகுதிப்பொருள் விகுதி. இவையெல்லாவற்றானுங் கரவேலென்பது. கரத்தல் ஈண்டு மாறுபடுதல். இவற்றுட் டகுதியென்பது ஈண்டு நடுவுநிலைமை. நடுவுநிலைமை, செப்பம், செம்மை, சமன் என்பன ஒருபொருட்கிளவி. நடுவு நிலைமைக்கு எதிர்மறை கரவு, சாய்வு, கோடு, வளைவு என்பன. 'தகுதி நடுநிலை செப்பஞ் செம்மை, சமமென மொழிப சாலபுணர்ந்தோரே' 'அதுவே, கரவே சாய்வே கோடே வளைவே, யெனவே பலவெதிர்மறையுரைபெறுமே' இவை யுரைச்சூத்திரம். எனவே தகுதியெனப்படும் நடுவுநிலைமை முதலியவற்றிற் கரவாமை, சாயாமை, கோடாமை, வளையாமை முதலிய வேண்டுமென்பதாம். இத்தகுதி நெஞ்சினிகழ்வதுஞ் சொல்லினிகழ்வதுஞ் செயலினிகழ்வதுமென

மூவகையாம். ஆகவே மூன்று கரணங்களானும் ஒருவன் றகுதியுடையனாதல் வேண்டுமென்பது பெறப்படும். இதனை 'நெஞ்சத்துக் கோடாமை சான்றோர்க்கணி' எனவும், 'சொற்கோட்டமில்லது செப்பம்' எனவும், 'தகுதி யெனவொன்று நன்றே பகுதியாற், பாற்பட் டொழுகப்பெறின்' எனவும் பிறர் கூறுமாறு காண்க. சொல்லினாற் செப்பம் பேசி நெஞ்சிற் கரவுடையரா யிருத்தலுங் கூடாதென்பார். 'சொற்கோட்டமில்லது செப்பமொருதலையா, வுட்கோட்ட மின்மை பெறின்' என்றார். ஆகவே மூன்று கரணங்களுந் தம்முளொத்துக் கரவாதிருத்தல் வேண்டுமென்பது பெற்றாம். விரிக்கிற் பெருகும். தன்மை ஆண்டன்மை பெண்டன்மை யென்பது. 'பெண்ணியலா ரெல்லாருங் கண்ணிற் பொதுவுண்பர்' என்பதில் பெண்ணியல் பெண்டன்மையாம். இதன் வரலாறு முற்சொல்லப்பட்டது. இனி; இலக்கணம் எழுத்துமுதலாகச் சொல்லப்பட்ட ஐந்துமாம். ஈண்டுக் கரத்தன் மயக்கமாம். இனி; ஒழுக்கங், கொல்லாமை, பொய்யாமை, கள்ளாமை, வெகுளாமை முதலியவற்றைக் கடைப்பிடித்தொழுகு நடை. இவற்றைக் கரத்தலாவது இவை தம்மிடத்து உள்ளனபோலக்காட்டி நெஞ்சில் அவையிலாதல். அஃது 'கொல்லாமை மறைந்தொழுகு மமண் சமயங் குறுகினார்' என்பதனானுணர்க. ஏனையவற்றிற்கு மேற்கோள் கண்டுழிக் காண்க. இனி நன்மைசெய்யத்தகு நற்செய்தி. அஃது 'இயல்வாய்ப்பச் செய்தவை நாடாச் சிறப்புடைமை' எனவும். 'இழுக்கானியனெறி யாசாண்டு வெல்வான்' எனவும் வருவனவற்றானுணர்க. இனி; அழகு உடலழகுஞ் செயலழகுமென விருவகைப்பட்டு முறையே சாயல் நலம் என இருபெயருங் கொள்ளுமென்க. இவற்றுள் உடலழகு 'அசையியற் குண்டாண்டோரேஎர்' எனவும் 'சாயலுநாணு மவர்கொண்டார்' எனவும் வருவனவற்றாற் கண்டுகொள்க. சாயலு நாணு மவர்கொண்டார் என்பதனாற் காத்தலு முடன்பெற்றாம். பொலிவழிந்திருந்தா ளென்பது. எனவே தன்றோணலத்தை யவன்றுய்த்தலிலனாக மற்றியாவர்க்கே கொல் இச்சாயல் என அதனைப்பேணாதொழிந்தனள்.

(தொடரும்.)

கோ. வைத்தியலிங்கம்பிள்ளை.

உ

திருச்சிற்றம்பலம்.

பெரியபுராண அரும்பத விளக்கம்.

[பழைய எட்டினின்று எடுக்கப்பட்டது.]

(முற்றொடர்ச்சி.)

(சுருஉ) கருங்குவளை மலர்களையுடைய வயல்செறிந்த தமிழ்நாடு பழியைகாடும்படி பரந்தமானமில்லாத அமணென்கின்ற வலிய இருள்போயழிவதற்கு இயைந்தபேரொளிப்பரப்பால் அண்ட மெல்லாவற்றையும் கொண்ட ஒப்பற்ற அழகிய ஞானதீபமெழுந்து வருவதுபோல.

(சுருங) கழுத்திடுகயிற்றையுடைய வெற்றிபொருந்திய யானைப்படையையுடைய பாண்டியர்களுடைய தமிழ்நாடுசெய்த தவப்பயன்விளங்கச் சைவவழிதழைத்தோங்க உரைக்கப்படும் திருநாமங்கள் பலவற்றையும் ஊதுகின்ற முத்துச்சின்னங்கள் பரசமயகோளரிவந்தாரென்று ஊத.

(சுருச) பிரமன் வழிபடுஞ் சீகாழியிலவதரித்த.

(சுஅஅ) வந்த பார்ப்பனப் புதல்வனை நாம் பலாத்காரஞ் செய்து போக்குதல் புத்தியன்று; அச்சிறிய பார்ப்பனப்புதல்வன் இருக்கும் மடத்தில் கொடிய அக்கினிபற்ற மந்திரத்தொழிலால் உண்டாக்கினால்.

(எ0ங) என்பொருட்டவர் செய்த தீங்காயினும், சிவனடியாருக்கெய்துமோ என்று, பின்னருமச்சம் முன்புபொருந்தப் பின்னர் கோபம்பொருந்தத் திருஞானசம்பந்தப்பிள்ளையார் அரசன் காக்கும் பெய்ம்முறை வழுவென்று.

(எ0ரு) சிவபத்தியிற்சிறந்த பாண்டிமாதேவியாருடைய அழகோடுபொருந்திய பெருமைதங்கிய திருமங்கலியத்தைக் காத்தல்

வேண்டினமையாலும், குலச்சிறை நாயனாருடைய அன்பினாலும், அரசன்மாட் டூபாராதமுறுதலானும், திரும்பச் சைவசமயத்துட்புகுட்விதி யுண்மையாலும்.

(௭௦௯) திருமடப்புறத்தின் பக்கத்தே தீதின்மையால் மனந் தெளிந்து.

(௭௧௧) அரசனுக்கு உடம்புநடுங்க வெதுப்புகின்ற வெம்மையானது காந்துகின்ற கொடிய அக்கினியைப்போல உடம்பு முழுதையுங் கவர்ந்துபோய் மாளிகைப்புறத்தின் நின்றார்களும் புலர்ந்து தீந்துபோமாறு.

(௭௧௨) அறிவும் ஆன்மாவும் ஒழிவதற்காக ஒரு பக்கத்தே ஒதுங்க, சமீபத்திலணைந்தோர் அருகே தூரத்திலகல, வாழை இளங் குருத்தோடு தளிரைப் பக்கத்திலே கொண்டுவந்தாலும் சுருங்கி அவை நுண்ணியதுகளாக.

(௭௧௫) வந்த வியாதியின் மூலவழியை அறியாது தங்களுடைய தேவர் அருளிய நூலினுட்சொல்லப்படும் மந்திரங்கொண்டு.

(௭௧௬) இருளான குற்றம்பொருந்திய உடம்பையுடைய தீயோர்கள்.

(௭௧௮) இதன்கொடுமை இந்த வஞ்சகர் முப்புரங்களையுமழித்த சிவபிரானுடைய அன்பர் மாட்டே செய்த தீங்காம், அது அரசன் மாட்டே முதிர்ந்தது.

(௭௨௦) உடம்பும் மனமும் அழுக்குக்கழுவுதல்செய்யார் செய்யும் மாயமும்.

(௭௨௧) பாண்டியனுடைய செவியினூடே மெய்யுணர்வைத் தருவோர் கூற, திருஞானசம்பந்தர்என்கின்ற நாமமாகிய மந்திரமும்.

(௭௨௩) விரகுண்டேல் - அவரை அழைத்ததற்கு உபாயம் உண்டானால், அழையுமென்றுகூற, அன்றைக்கவர் மகிழ்ச்சிபொங்கி ஆர்வத்தோடு அணையை அலைத்துச்சென்ற நீர்வெள்ளம்போலும்.

(௭௨௮) ஞானத்தினழகிய உருவை, நான்குவேதங்களினைப் பற்ற துணையை, ஆகாயத்தின் மீதன்றிப் பூமியில் வளர்கின்ற இளம் பிறையை, தேன்விளங்குகின்ற கொன்றை மலரையணிந்த சிவபிரானுடைய கீர்த்தியைத் தொடுக்கும் ஏழிசையின் பிறப்பிடத்தை.

(௭௩௧) தேற்றவுஞ்சுழன்று தெளியாதவர்களைப் பார்த்துச் சிறப்பைத்தந்து அருட்செல்வத்தையுடையீரே உங்கள் மாட்டுத் தீதுளதோ என்று வினவ.

(௭௩௨) திருமேனிக்கு அது அடாது என்று.

(௭௩௩) கொடுந் தொழிலையுடைய சமணராகிய கீழ்மக்கள் உண்டாக்கவருகின்ற வெதுப்பு அவர்செய்யும் மிக்க மாயைகளால் தீராமையால் சுரநோயாகுமயக்கத்தைப்பொருந்து மரசன்முன்னே அவர்களை வென்றருளினால்.

(௭௩௫) முத்துச்சிவிகையின்மேல் பாண்டியநாடுசெய்ததவத்தால் எழுந்தருளப்பெற்ற பேற்றையுடையேம்; இனி என் பெறேமென்று வணங்குதலும்.

(௭௩௬) ஆதலும், அழிதலும் எல்லாம் சிவன்செயல்; சமணராகிய பாவிகளைப் பார்க்கும் பழுது உடனே நீங்கவும், அவர்களை வெல்லவும்.

(௭௩௮) பார்க்க விதியிலாரைப் பார்த்துயான் தருக்கஞ்செய்ய.

(௭௪௧) பழைய மதில்சூழ்ந்த கதவுநீண்ட.

(௭௪௪) கண்ணுக் கழகாயுள்ளாருடைய எழுச்சியில் காட்சியைப்பெற்றோரான தொண்டர்கள் பாண்டியனை ஏதுவாகக்கொண்டு திருஞானசம்பந்தப் பிள்ளையார்வந்து மதுரையிற்புகுதப், பொருந்திய சமயம் வேறு நம்பினரெனினும், முன்னரே செய்த தவங்களென்னைகொலென்றார்.

(௭௪௬) முன் துயர் சிறிதேநீங்கி முழுத்த மணிகளழுத்திய பொற்பீடத்தை அவ்வரசன் தன்முடியின் பக்கத்திடுகவென்று கூற வல்லவனாயினான்.

(௭௪௭) செயலையான் - அருகன்; செயலை - அசோகு.

(௭௪௮) அரசனே உன்னுடைய தருமவழியை நீயே காத்தல் வேண்டும், ஆனால் அவரை இங்கே அழைத்தாய் உன்னுடையநோயை அவரும் நாமும் ஒருங்குதீர்க்கும்படி கூறி.

(௭௫௦) பவனம் - அரண்மனை.

(௭௫௨) கண்ட அப்பொழுது அரசன்கையைஉயர்த்திப் பொருந்தப்பார்த்துக் குளிர்ந்த பூங்கொத்துக்களையுடைய முடியின் பக்கத்தே பொற்பீடத்தைக் காட்ட.

(௭௫௩) அழிகின்ற மனம் நேர் நிற்க.

(௭௫௪) காவிரியானது வளர்தருகின்ற நாட்டையுடைய நீர் செறிந்த வயல்களையுடையபுறத்தே மருதநிலஞ்சூழ்ந்த.

(௭௫௫) பொருந்தும் மனத்திலுள்ள அச்சத்தைமறைத்து.

(௭௫௬) உதயகாலத்துதிக்குஞ் சூரியனைப் பக்கத்தே சூழுங் கரிய முகிலைப்போல, பீலியோடு சமண்கையர் ஆளுடைய பிள்ளையாரைச் சூழ்ந்தவராய் முன்னரே வாதினால் வெல்லுதற்கெண்ணித் தாங்கற்பித்த நூல்களை எடுத்தோதித் தலைவிரைக்க உரப்பினார்கள்.

(௭௫௮) இனிய அருளையுடைய பிள்ளையார் (பாலகர்) திருமேனி எளியர்போலும்.

(௭௬௨) ஒரு புடையாகிய வாமபாகத்தை முன்னரேமந்திரித்துத் தெய்வமுயற்சியினால்.

(௭௬௬) குற்றம்பொருந்திய உடம்புங்கன்றி அருகேவிட்டுத் தூரத்தேநிற்பவராய் அறிவில்லாவழியினின்றார் அறிவுடையாரைப் போன்றார்.

(௭௬௭) விளங்குகின்ற வேற்படையையுடைய பாண்டியனது உடம்பானது வலப்பக்கத்தும் இடப்பக்கத்தும் பொருந்திப் பெரிய உலகிலுள்ள தண்மையும், வெம்மையும் ஒதுங்கினாலொத்தது.

(௭௬௮) பாண்டியன் கூறுவன் இது என்னை மதித்த இக்காலமொன்றில் கொடிய நரகத்துன்பம் ஒருபாலாகும், மோக்ஷஇன்பம் மற்றொருபாலாகும்; நெருங்கியநஞ்சு ஒருபாலாகும், சுவையையுடைய அமுது மற்றொருபாலாகும் துன்பவின்பமாகிய இருதிறங்களினியல்பை என் வடிவொன்றிலேயே பொருந்தினேன்.

(௭௭௧) பிறந்தனமாகிய நாங்கள் இன்றே பிறந்த பெருமையைப் பெற்றேம்.

(௭௭௪) சைவமைந்தருடைய சொல் வெற்றியைச் சந்த இன்பம்பொருந்திய இன்சொற்பாமாலையாலே பாண்டியனுடைய வெப்பொழித்த தன்மையைக் கண்டு அறிந்தேம். மெய்ம்மைதெரிந்த தருக்கவாதத்திலே வெல்லலாவதன்று.

(௭௭௫) தள்ளப்படும் நீர்மையை உடையார்கள் வேறாகத் தருக்கவாதத்தினுத்தரங்கொள்ளும் வென்றியேயன்றி.

(௭௭௬) உமக்கென்ன வாதென்றுகூற; சில்லிவாயர் - ஓட்டைவாயர்.

(௭௭௭) அரசன் "என்ன வாது செய்வ"தென்றுரைத்ததையே வினாவாகச்சொன்ன வாசகமாகத்தொடங்கி.

(௭௮௦) இயைந்த மாந்தரும் விறகைக் குறைத்து உடனே அடுக்கி அக்கினியை அமைத்தலும் சிகையைவிடுகின்ற புகை ஒழிந்து எழுந்து சுடுகின்ற அக்கினிதேவனும் படர்ந்த ஒளியைக்காட்ட.

(௭௮௧) முறை - புத்தகம். காப்பு நாணையவிழ்த்தார்.

(௭௮௨) சொல்லப்படும் மெய்ப்பொருளைத் தருகின்ற திருமுறையைத் தாமே விபூதிபொருந்திய அழகிய கையால் திருப்புதலும் சிவபெருமானுடைய திருநள்ளாற்றின்மேலதாகிய "போகமார்த்த" என்னும் பதிகம் வந்து நேர்ந்தது.

(௭௮௩) பிள்ளையார் அத்திருப்பதிகத்தை விரும்பித் திருநள்ளாற்றைவிரும்பி அஃது எழுதப்பட்ட மெய்ம்மையானநல்ல திருவேட்டைக்கழற்றித் திருக்கரத்திற்கொண்டு.

(௭௮௪) நன்மையை உய்க்கும் மெய்ப்பதிகத்தில் நாதனென்றெடுத்து என்னை அடிமையாகவுடைய சிவனுடைய நாமமே எந்நாளும் நிலையான பொருளாமெனக்காட்ட " அக்கினியிலாகுக என்று.

(௭௮௬) பட்ட - வளர்க்கப்பட்ட.

(௭௯௩) துப்புரவு - ஐம்புலநுகர்ச்சி.

(௭௯௪) முக்காலில் ஒருதரமாயினும்.

(௭௯௯) ஒழுகாது அங்கே ஆராய்ந்து முன் தங்கும் ஏடு நல்ல பொருளைத் தாங்குவதென்றார்கள்.

(௮0௨) பால் மணங்கமழும் நறியகுதலை மொழியைப்பகரும்.

(௮0௯) பருப்பொருளுணர்ந்தார் தாங்கள் படுவன நுண்பொருளை யறியாதார் படுவனவற்றை.

(௮௧0) ஞானங்குழைத்த வட்டிலேந்திய அழகியகையின்.

(௮௧௨) கார்காலம் வாய்ப்ப விரும்புகின்ற பெண்களுடைய மனம் சிறப்பு விளங்குகின்ற நாயகன்மாட்டே விரவச் செல்லுமாறு போல, நீர்பொருந்திய கடலைநோக்கி நிரையாகத் திரையொலித்துச் செல்கின்ற நாயகர் நாயகிகண்மாட்டு எஞ்ஞான்றும்விருப்புடையரேனும், சீதளகாலமாய கார்காலத்தில் விசேடமாக விருப்புடையர் என்னும் பொருணூலார் மதம்பற்றி இவ்வாசிரியர் இங்ஙனம் கூறியருளினர்.

(௮௧௩) குரூபிகளாகிய அருகரே நீரும் விதித்த ஏட்டை இடுக என்றான். முன் தோற்றார் பின் தோலார்களென்று துணிந்தார்கள்.

(௮௧௪) உண்மைப் பொருளின்றி நெல்லினுள்ளபதர்போல உள்ளீடில்லாதவராகிய சமணர்கள் உண்மைப்பொருளை அழிப்பவராய்த் தம்மந்திரத்தை (அத்தி நாத்தி) என்று எழுதி ஆற்றில் விரைந்துசென்ற நீரைக்கண்டும் ஆசையாற் கையிலுள்ள ஏட்டை விடுதலும், விரைந்து கடல் மேற்படர்ந்தது.

(௮௧௫) அழிவைத்தரும் அப்பொருளைமேற்கொண்டதோணி (ஏடு) எட்டாது அவ்விடத்தே நூறுவிற்கிடைக்குமுன்னேபோனது. உருவக அலங்காரம்பற்றி ஏட்டைத் தோணியாகக் கூறினார். பட்டிகை - தோணி.

(௮௧௬) நட்டாறு - நடுவழியுமாம்.

(௮௧௭) மாறுகொண்டவர்களே நீருமிட்டால்.

(௮௧௮) புத்தியில் மயங்கிக்கூற குற்றமற்ற வழியிற்சேர்ந்த அரசனும் அவர்களைவிட்டு.

(௮௨0) உயர்ந்தோர் இயல் வேதநூல் ஒழுக்கமென்பதும், விளங்குகின்ற மெய்ந்நெறி சிவநெறியென்பதும், மூதேவி பொருந்திய வாயையுடைய சமணர்கள் காணாதவர்களாயினும், பலர் புகழ்கின்ற பாண்டியனறியும் பான்மையினால்.

(௮௨௨) "வாழ்கவந்தணர் வானவரானினம்" என்றருளிச் செய்த இந்த மெய்ம்மொழியின் பயன்:—உலகமின்பம் பொருந்த அழகிய யாகங்கண்முதலாகச் சிவபெருமானுக்கு அருச்சனையும் வழிபாடும் நிலைபெறவாம்.

(௮௨௩) யாகத்தின் பயனாகிய "வீழ்கதண்புனல்" என்று அருளிச்செய்தது நாடோறுமர்ச்சனைக்கு நல்ல உறுப்பாம். ஆதலான் ஆளுகின்ற அரசனை "வேந்தனுமோங்குக" என்று அருளிச்செய்தது, அருச்சனையையும் காக்குமுறைமையாம்.

(௮௨௪) "ஆழ்கதீயது" என்றருளிச்செய்தது, அயனெறிவீழ்க என்றதாம். "அரனாமமேசூழ்க" என்றது பழைய உயிர் எவையும் வாழ்வைத்தரும் பஞ்சாக்கரத்தை ஓதிவளர்தற்காம்.

(௮௨௫) "வையகமுந் துயர்தீர்கவே" என்றருளிச்செய்தது இம்மை மறுமைத்துயரை நிலையாய்வாழ்கின்ற உலகத்தோர் மாற்றும்படி கூறியதாம்.

(௮௨௬) "அரியகாட்சியராய்த் தமதங்கைசேர் எரியரேறுகந் தேறுவர் கண்டமுங்கரியர் காடுறைவாழ்க்கையர்" என்றருளியது

அம்முதல்வரைத்தேடி யறிதற்கரியநிலையால் தெரியாரென்று, உரியவன்போடு காண்பவர்க்கு. உண்மையாம்பெரியரல்ல அடையாளங்களைப்பேசியதாம்.

(௮௨௭) "ஆயினும் பெரியார்" என்றருளியது பொருந்திய இவ்வியல்பேயன்றி, ஆகாயம் முதலாகப்பரந்த பூதங்களும், பல்லுயிர்களும், அண்டங்களும், இயைந்த எவையும் இவருடைய வடிவென்றதேயாம்.

(௮௨௮) "ஆரறிவாரவர்பெற்றி" என்றருளியது எவருணர்வாலுஞ் சென்றறிதற்கரிய நிலையான பெருந்தன்மையாரென வாழ்த்தியதாம்.

(௮௨௯) "வெந்தசாம்பல் விரையெனப்பூசியே" என்றருளியது, விபூதியே சந்தனமாகப்புனைந்த தமது திருமேனி நிறங்கூறியதாம்.

(௮௩௬) "தோன்றுகாட்சி சுடர்விட்டுளன்" என்றருளியது, நிறைந்த அக்கினிபூதவொளி ஆராய்கின்ற அன்பிலூன்ற உள்ளே எழுஞ்சோதியாய் நின்றனன் என்பதாம்.

(௮௩௯) "ஆடும்மெனவாங்" திருப்பாட்டி னமைக்கப்பட்ட மூன்றும் மிக்கபுகழோ பிறருடைய துன்பத்தை நீக்குதற்கோ என்று தேடும் அறிவீரே சிவபெருமான் கருணைத்திறமாம்.

(௮௪௦) "கருதுங்கடி" என்ற திருப்பாட்டில் சிவனுடைய பூசையை மறுத்தவரைக்கொல்லுதல் முத்தியைத்தருதன்மையதாதலைச் சண்டேசருடைய செய்கையை மேலோர் *பெரிதுஞ்சொலக் கேட்டேமென்று கூறினர்.

(௮௪௪) மதுரையிற் சங்கம்வைத்தவன் றெளியத்தெளியாதவனர்களுடைய எல்லைக்காக ஏடு நீருக்கு எதிர்ந்து செல்லில்.

(தொடரும்.)

ஜி. சதாசிவம் பிள்ளை.

* * *

உ

திருச்சிற்றம்பலம்.

இரட்டைப்புலவர் சரிதம்.

இப்புலவர்கள் வரலாறு ஒருவாறு "செந்தமிழ்"த்தொகுதி 3. குதி 12-ல் பத்திராசிரியர் ஸ்ரீமத்-ரா. இராகவையங்காரவர்களால் வெளியிடப்பட்டுள்ளது. அவை "தமிழ்நாவலர் சரிதை"யிற் கண்ட லசெய்யுட் குறிப்புகளும், புலவர்கள் இன்னகாலத்தவர்களென்பதை விளக்கக்கூடிய இரண்டோரம்சங்களுமன்றிப் புலவர்களின் விசேடவரலாறுகளை விளக்குவனவாகக் காணப்படவில்லை. தமிழ்நாவலர் சரிதையிற்கண்டவரலாறுகள் மறைந்தொழியாதுலகிற்பரவியிருத்தல் வேண்டுமென்னுமோராவல் கருதி, நமது பத்திராசிரியர்வெளியிட்டிருப்பதாக விளங்குகின்றது. புலவர்களின் சரிதவிஷயங்களில் விசேடக்கவலைகொண்டிருந்த வெமக்குக் காஞ்சி ஸ்ரீமத்-பி. செ. முருகேசமுதலியாரவர்களால் வெளியிடப்பட்டுள்ள "தில்லைக்கலம்பகத்திலும்," மதுரை 'விவேகபாநு' பத்திராசிரியர், ஸ்ரீமத்-மு. ரா. கந்தசாமிக்கவிராயரவர்களால் வெளிவந்த "தமிழ்ச்செய்யுட்சிந்தாமணியிலும்" "செந்தமிழ்ப்பத்திரிகை" யிற்கண்ட "தனிச்செய்யுட்கோவையிலும்" இரட்டையர்வரலாறு சிலகாணப்பட்டன. இவைகளும் முன் செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளிவந்த விஷயங்களும் ஒழுங்குபெறத் திரண்டு ஓர் கோவையாகிச் சரிதவடிவாகச் செந்தமிழ்ப் பிரதியின்கண் வெளிவரின் நந்தமிழகத்தோர் கண்டுமகிழ்தற் கேதுவாமென்னுமோர் காரணங்கருதி இரட்டையர் வரலாற்றை இம்முறைப்பகுதியில் வெளியிடலாயினேம்.

இனி, இரட்டைப்புலவர்கள் வரலாறு வருமாறு:—

சோழமண்டல சதகத்தில்,

யோகாம் பெரிய சோழியர்வாழ் வுடையா ரீகை யுடையாராய்ப்
பாகாம் பழைய கல்வியினும் பயின்றோ ரென்னும் பரிசறிந்தோர்
ஏகாம் பாணர் கச்சியுலா விசைக்கும் புலவ ரிரட்டையர்கள்
வாகாம் பதியா மிலந்துறையால் வழங்குஞ் சோழ மண்டலமே.

எனவருதலால், இப்புலவர்கள் சோழநாட்டிலுள்ள "ஆமிலந்துறை" என்னுந் தலத்துத்தோன்றியவர்களென்பது அறியப்படும். முற்றவமுதிர்ச்சியாற்றெய்வீக மமைந்த மூதுணர்புலவர்களாய் எங்கும்புகழ்பெற்ற "செங்குந்தமரபின்"கண், சிவனடிமறவாச் செல்வர்களாய்ச் சிறந்த இவ்விருபுலவர்களும் உறவின் முறைமையில் அத்தைமகனாகவும், அம்மான்மகனாகவும் அமைந்தார்கள். இவர்கள்பெயர் முறையே "இளஞ்சூரியர்" முதுசூரியரென்று தமிழ்நாவலர்சரிதை"யால் தெரிகிறது. ஆயின், இவர்களுள் ஒருவர் "முடமாகவும்" ஒருவர் "குருடாகவுமிருந்தமையின், இவர்களுக்குள்ள ஒற்றுமையால், குருடராயுள்ளவர்மேல் முடமாயுள்ளவர் ஏறிக்கொண்டு உலாவிவருவர். அதனாலவர்களுக்கு ஆதிநாள்முதலாக "இரட்டையரெனப்"பெயர்வழங்கலாயது. அக்காலத்தே இப்புலவர்களை அபிமானித்துக்காத்த வள்ளல்கள், சனியூர் வில்லிபுத்தூராரைப் பாரதவிருத்தம் பாடுமாறு வேண்டிய வக்கபாகை ஆட்கொண்டானாகிய "கொங்கர்கோனும்" கச்சியிலிருந்த "சம்பராயன்" என்பானும், மற்றோர் பாண்டியனுமெனத் தெரிகிறது. இவ்வரலாறுகள் தமிழ்நாவலர் சரிதையில்,

இரட்டையர் திருவக்கைக் கொங்கராயன் அசனம் இடுவித்தபோது பாடிய கவி.

* சாணர்க்கு முன்னிற்கு மாட்கொண்டநாயன் றமிழ்க்கொங்கர்கோன்
பாணுற்ற வரிவண்டு சேர்வக்கை நகராதி பக்கத்திலே
பூணுக்கு வாரா திருப்பாய் விருப்பாகி யுயர்வானிலே
வீணுக்கு நின்னாக மெலிகின்ற தெவ்வாறு வெண்டிங்களே.

சம்பராசன் விகடச் சமுத்திபாடச்சொல்லப் பாடியது.

எறிக்கும் புகழ்க்கச்சி யேகாம்ப ரன்சம்ப னெண்டிசைக்கும்
பொறிக்கும் புலிக்கொடி யான்புயம் வேட்டபின் பூவையன்னாள்
வெறிக்குங் குமக்கொங்கை மீதே விழிசொரி வெள்ளந்துளித்
தெறிக்குந் துவலை பழிக்குஞ்சிந் தூரத் திலகத்தையே.

இதனைத், தொண்டைமண்டல சதகமுடையாரும்,

---

* சாணர்—சதுரர்; விழுப்புண்பட்ட தழும்புடைமைபற்றி வீரர் எனினுமமையும். சாணம்-தழும்பு.

மேதைப் புலவரெண் ணேகாம்பரச் சம்பு மெய்ச்சநெக்
காதைப் புலவ ரிரட்டையர் பாடுங் கலம்பகமு
மோதற் கரியநல் லேகம்ப வாண ருலாவுமந்த
மாதைப் பனுவலும் பாராட்டிடுந் தொண்டை மண்டலமே.

எனச் சிறப்பிக்கப்பட்டிருப்பதுங் காண்க.

படைவீடு முற்றியிருந்த பாண்டியனுக்குப் பாடியது.

காற்றா லலைப்புண்டு கண்ணன் கடல்கடைந்து
மேற்றா னெடுத்து வளைத்தெய்து—மாற்றாத
செம்பொன் மலையில்லைச் சேலுக் கிடங்கொடுக்கச்
சம்பன் மலைகை தவா.

என்னுந்தலைக் குறிப்போடுவரும் பாடல்களால் இவற்றினதுண்மை கண்டறிக.

கலைமகளாரின் கருணைவிசேடம் சிறக்கப்பெற்ற இப்புலவர்களின் இளமைக்காலத்தே இவர்களின் தாய்தந்தையர் உயிர்நீத்தமைக்கு ஆற்றாதுவருந்தி அவர்களுக்குத் தாங்களியற்றவேண்டிய கடன்களை முடித்து அதுமுதல் சிவதலயாத்திரை செய்வானெண்ணிப் பிரதமத்தில் பூலோசகைலாயமெனவும், கோயிலெனவும் புகழ்பெற்றுவிளங்கும் சிதம்பரக்ஷேத்திரத்தை யடைந்து சபாநாயகரைத் தரிசித்தார்கள். அக்காலத்தில், சிதம்பரத்துள்ள அடியார் குழாங்கள், அங்கே தரிசனத்திற்குவந்த இரட்டையர்களைநோக்கி, திருப்பாதிரிப்புலியூருக்குத் தொல்காப்பியத்தேவரியற்றியதுபோலச் சிதம்பரத்திற்கு நீங்கள் ஒருகலம்பகமியற்றியருளவேண்டும் என்றுவேண்டினர்.

இரட்டையர்கள்,

கோச்சகக்கலிப்பா.

* தொல்காப் பியத்தேவர் சொற்றதமிழ்ப் பாடலன்றி
நல்காத் திருச்செவிக்கு நாமுரைத்த தேறுமோ
மல்காப் புனறதும்ப மாநிலத்துக் கண்பிசைந்து
பல்காற் † பொருளழற்கும் பாற்கடலொன் றீந்தார்க்கே. ‡
(தமிழ்நாவலர் சரிதை.)

---

* தொல்காப்பியத்தேவர்—இவரொருபுலவர்.

† பொருளழற்கும்—பிள்ளையழுதற்கும்.

‡ இச்செய்யுள் திருவாமாத்தூர்க்கலம்பக ஏட்டுப்பிரதிகளிலும் காணப்படுகின்றது; 'நானுரைத்தது' எனவும், 'பொருமினர்க்கு' எனவும்பாடம்.

என்னும் செய்யுளைக்கூறி, 'சிவபெருமான்மீது கலம்பகம் பாடுதற்கு யாம் வல்லேமல்லேம்' என்றார்கள். கேட்டவர்கள், அதனால் தடைபடலின்றி, அங்ஙனங்கூறினமை பற்றியே நன்றுமதித்துக் கலம்பகம் பாடும்படி பின்னும் வற்புறுத்த, அவர்கள் அப்பொழுதுந் துணிவின்றித் திருப்பாதிரிப்புலியூர்க் கலம்பகத்திற் கயிறுசார்த்திப்பார்த்தார்கள். பார்த்தபொழுது,

"பாடுவோர் பாடும் பரிசில் வரிசையெல்லா
மாடுவா ரன்றி யயலா ரறிவாரோ
தோடுவார் காதன்றே தோன்றாத் துணையையர்
பாடுவா ரோரிருவர்க் கிட்ட படைவீடே." (16)

என்னும்பாடல் அகப்பட்டது. அதனைக்கண்ணுற்ற இரட்டையர்கள் அச்செய்யுளின் பின்னிரண்டடியின் பொருளையறிந்து மனமுருகி, தம்மைப்பாடும்படி ஸ்ரீ ஆநந்தநடராஜர் கட்டளையிட்டருளியதாகவே நினைந்து துணிந்து செய்யத்தொடங்கிப் பலபாவினங்களமைந்ததாய் அம்மானை, புயவகுப்பு, மதங்கம், காலம், சம்பிரதம், கார், தவம், குறம், மறம், பாண், களி, சித்து, இரங்கல், கைக்கிளை, தூது, வண்டு, தழை, ஊசல் என்னும் பதினெட்டுறுப்புகளுமியைந்த கலம்பகமென்னும் ஓர் பிரபந்தம்பாடி அரங்கேற்றியருள் பெற்றார்கள். அதன்பின், மற்றொருநாள் சபாநாதரைத் தரிசிக்கவேண்டிக் கோயிலுட் செல்லுகையில் ஒருவன்மிகவாடம்பரத்தோடு தமக்கெதிரில்வர அவனைப் புகழ்ந்து பாடினார்கள். அவன் கல்வியறிவில்லாதானாகையால் இவர்களைச் சம்மானியாது இறுமாந்திருப்ப, அதுகண்ட முடவர்,

"மூடர்முன்னே பாடன் மொழிந்தா லறிவரோ
வாடெடுத்த தென்புலியூ ரம்பலவா"—

என்றுரைத்தனர். அது கேட்டுணர்ந்த குருடர்,

ஆடகப்பொற்
"செந்திருவைப் போலணங்கைச் சிங்காரித் தென்னபய
னந்தகனே நாயகனா னால்."

எனமற்றதையுமுரைக்க, இவையெல்லாங்கேட்டு அவனருகிலிருந்த ஓரறிஞன் அவனுக்கிப்புலவர்கள் பெருமையைக்கூறிப் பரிசில்தரச்

செய்ய அதுபெற்றவிவர்கள் பின்னரங்குநின்றும் நீங்கித் "திருவாமாத்தூர்" என்னுந் தலத்தையடைந்து அங்கெழுந்தருளிய அழகியநாதரைத் துதித்துத் திரும்புகையில், அத்தலத்துள்ள சிலர், இப்பெருமான்மீது ஓர் கலம்பகம் இயற்றியருளவேண்டுமென்று பிரார்த்தித்தனர். அன்னோர் பிரார்த்தனைக்குவந்த புலவர்கள், "திருவாமாத்தூர்க்கலம்பகம்பாடி" அரங்கேற்றுவதானார்கள். அக்காலப் பிரபந்தத்துள்ள ஓர் பாடலிற் பம்பையாற்றிற்கு மேற்கரையிலுள்ள கோயிலென்று கூறியிருப்பதை அச்சபையிலுள்ளோர்கள் கேட்டுநகைத்து இப்பம்பையாறு மேற்கேயோடி யிருப்பதை இவ்விருவருள், கண்ணில்லார் காணாவிடினும், கண்ணுள்ளாரேனுங் காணவில்லையா? என்று பரிகசித்தார்கள். அஃதுணர்ந்த புலவர்களிருவரும் நமது வாக்கில் விளக்குவித்தருளிய திருவருட் செயலையுணர்ந்த பிறகே இப்பிரபந்தத்தை அரங்கேற்றி முடிப்போமென வெழுந்து போனார்கள். அன்றிரவு சிவபிரான் திருவருளால் சத்தமேகங்களும் ஆரவாரித்து அதிவிருஷ்டியாய்ப் பொழிந்தமையின், † அந்நதி முன்னோடியிருந்த வழியைத்தடுத்துத் தென்றிசைபாயோடி வடதிசையாய்த் திரும்பும்படிசெய்தது சூரியோதயமாவதற்குமுன் இவ்வாறாயினமையின் அன்றுமுதல் இப்புலவர்களருளிய "மேற்கரைக்கோயில்" என்பதே மெய்யாய்விட்டது. அது கண்ட அத்தலத்தாரும் ஏனையரும் அதிசயமும் அச்சமுமுடையவர்களாகி இப்புலவர்களை வணங்கி யாங்களியற்றிய அபராதத்தை மன்னித்தருள்வீராகவென்று வேண்டினார்கள். உடனே திருவுளமிரங்கினவர்களாய் இவ்விருவரும் முன்னாளில் நிறுத்தியபாடலைத் தொடங்கிவாசித்து அரங்கேற்றிமுடித்துச் சிவபிரான் அருள்பெற்றனரென்ப. தமிழ்நாவலர்சரிதையின்கண், ஆறுவிலகியபாட்டு என்னுந் தலைப்பின்கீழ்,

---

† இதனைப் புலவர்புராணமுடையாரும்,

இன்றுமந்நதியவ்வாறொழுகுதலும்பெருவெள்ளமெய்துமாயின்
முன்றுலக்குவழியினும்போய்மாறைநகர்ச்சூழ்தலுமுறையிற்காண்மின்
குன்றுறழுமாணவங்கொண்டிகலுமிளம்புலவீர்காள்கோடிகோடி
யென்றுபஞ்சாக்கரஞ்செபித்தாயினுமான்பாலருள்பெறலேயேற்றமாமே.

எனக்குறிப்பிடுவதையுணர்க.

* ஆற்குழையோ வரவோ வாயர்பாடி யருமனையோ
பாற்கடலோ தம்பமோ தக்குமாவலம் பலபலவா
மாற்கமு மீங்கின் றூர்மாதை நாதர்வலங் கொள்பம்பை
மேற்கரைக் கோயில்கொண் டார்புரஞ்சீறிய வெங்கணைக்கே.

எனவருவதே இவற்றிற்குச் சான்றாகக்கொள்ளத்தக்கது.

பின்புலவர்கள், "தெண்ணீர்வயற்றொண்டை நன்னாடு சான்றோருடைத்து" என ஔவைப்பிராட்டியார் அமுதவாக்காற் பாடல்பெற்றுள்ள அருந்தமிழ்நாடாகிய தொண்டைநாட்டையடைவானெண்ணிவருகையில், இடையிலுள்ள "நாங்கூர்" என்னும் க்ஷேத்திரத்தைக்கிட்டினார்கள். அக்காலிருவருக்கும் பசிநோய் வருத்தலால், அத்தலப்பெருமானைக்குறித்து முடவர்,

"தேங்குபுகழ் நாங்கூர்ச் சிவனேயல் லாளியப்பா
நாங்கள் பசித்திருக்கை ஞாயமோ"—

என்றோதினர். உடனே குருடர்,

போங்காணும்
"கூறுசங்கு தோன்முரசு கொட்டோசை யல்லாமற்
சோறுகண்ட மூளியார் சொல்."

என்றோதினர். இப்படியிருவரும் பாடியவளவில் அப்பெருமான் அருள்சுரந்து ஓரந்தணவடிவாய்வந்து பொதிசோறளித்தருள, அதனை இவர்களுண்டுகளித்து அப்பெருமான்மீதும் ஓர்பிரபந்தம்பாடி அருள்பெற்று அங்குநின்றும் நீங்கித்தொண்டைநாடென்னும் உருவமைந்த பெண்ணிற் கொளியமைந்தவதனம்போல் விளங்கும், ஸ்ரீ காஞ்சிமாநகரத்தையடைந்து "ஏகாம்பர"நாதரைக்குறித்தோர் கலம்பகம்பாடியரங்கேற்றி, அத்தலம் சிறந்தவற்றினுஞ் சிறந்தனவான கச்சபாலயம், திருவேகம்பம், திருமயானம், திருக்காயாரோகணம், மகாகாளேசம், திருமேற்றளி, அனேகபேசம், கடம்பை, பணாதரேசம், மணீசம், வராகேசம், சுரகரீசம், பரசுராமேசம், வீரட்டகாசம், வேதநூபுரம், உருத்திரர்கா, இந்திராலயம், சதுர்முகசங்கரம், திருமாற்பேறு, திருவோத்தூர் என்னும் இத்திருப்பதிகள் இருபதுடையதாயும், "காமகோட்டமும், குமரகோட்டமும்" விஷ்ணுவாலயங்களும் உடையதாயும் விளங்கலின், அத்தலத்தை நீங்கற்கருமையாய்ச் சிலகாலம் வசித்திருந்தனர். அக்காலையில் சிவபிரான் திருவிழா நடக்கையில் பவனிவரும்போது அப்பவனியைச்சிறப்பித்து "ஏகாம்பரநாதருலா" வெனவோர் பிரபந்தம்பாடினார்கள். அதையரங்கேற்றுகையில், விநாயகர் துதியெடுத்து,

" சாற்றிய வாயிரக்கான் மண்டபத்தின் சார்வாக
வேற்ற முடனே யினிதிருந்து—போற்றும்
விறல்விகட சக்ர விநாயகனை யேத்துந்
திறல்விகட சக்ரா யுதம்."

எனக்கூற, அரசனும், அங்குவந்திருந்த சபையோர்யாவரும், ஆயிரக்கான்மண்டபமும், விகடசக்ரவிநாயகரும் இங்கில்லையேயென, அதற்கிவர்கள் நாமும் அறியோம் அவளும் பொய்சொல்லாள் எனக்கூறி அவ்விரண்டும் வெளிப்படுங்கால் அரங்கேற்றுவோமென்று மீண்டும், தென்றிசையாய்ச் செல்லும்வழியில்; மாங்காடென்னும் ஊரின்கணுள்ள ஓர் வேளான் தன்பெண்ணை மாப்பிள்ளையினூர்க்கு அழைத்துக்கொண்டு செல்லுமிடையில் காடடர்ந்துள்ளவிடத்தில் மகளோடு கலந்து நிற்றலைக்கண்டு இரட்டையரில் முடவர் வியந்து,

" மாங்காட்டு வேளான் மகளை மருமகன்பாற்
போங்காட்டி லின்பம் புணர்ந்தானே"—

என்று கூறக்கேட்ட குருடர், விஷயத்தையறிந்து தக்ஷணமே மிகுந்த சமத்காரமாக,

ஆங்காணும்
" மக்கண்மெய் தீண்ட லுடற்கின்ப மற்றவர்
சொற்கேட்ட லின்பஞ் செவிக்கு."

எனமுடித்தனர். இங்ஙனம் வழியைக்கடந்து சென்று அங்குதனிகனாயுள்ள 'ஓமளநாத'னென்னும், வேளாளனிடஞ்சென்றார்கள். அவனிவர்களைக் காண்டலும் பெரும்புலவர்களென் றறிந்திருந்தும், தனதைசுவரிய கருவத்தினால் சற்றுமதியானாகிப் பலவாறுவைது வெளியிற்றுரத்த, அவனது அயல்வீட்டுக்காரனும் அங்ஙனமே சற்று

---

* ஆற்குழை—ஆலந்தளிர்.

மதியாது சீற, இப்புலவர்கள் மனம்வருந்தி வீதிக்கண்வந்து இருவருளொருவர்,

“ ஒருகாவித் தண்டலம்வா ழோமனா தன்வீ
டிருகாலும் பற்றி யெரிக.”—

என்றோதினர். இது கேட்ட மற்றொருவர்,

அருகாருங்
“ கம்பத் தான்வீடுங் கலந்தெரிக மற்றிவர்கள்
சம்பத்தெல் லாமொழியத் தான்”

எனவோதி அப்பாற்சென்றார்கள். உடனேயவ்விருவர்வீடுந் தற்செயலாய்த்தீப்பற்றிச் சகலசெல்வத்தோடு மழிந்தன.

அவணின்றப்பாற்சென்ற புலவர்கள், பாண்டியதேசத்தினை நோக்கித் “திருநெல்வேலிக்குச்”சென்றார்கள். அங்கேமூங்கிற்காடு நெருங்கிமேலே தழைபடர்ந்து, வழியுங்குறுகியிருக்கின்ற விடத்தே தினந்தோறும் பாற்குடங்கொண்டுசெல்லும் ஓரிடையன், அடியிற் சிவலிங்கமிருப்பதையறியாது செல்ல, அங்குவரும்போதெல்லாம் பாற்குடமிடறிப் பால் சிதருண்டுவருதலை ஒருநாள் அவ்விடையன் கோபங்கொண்டு அவ்விடத்தைக் கோடரியால் வெட்டத்துணிய, அதை மூடவராகிய புலவர்கண்டு,

“ வேயீன்ற முத்தர்தமை வெட்டினா னோரிடையன்
றாயீன்ற மேனி தயங்கவே”—

எனப்பாட, அதைக்கேட்ட குருடராகிய புலவர்,

நேயாகே
“ளெத்தனை நாளென்றே யிடறுவான் பாற்குடத்தை
யத்தனையும் வேண்டு மவர்க்கு.”

எனப்பாடி முடித்துச்சென்றார்கள். இதனையவ்வூரின்கண்ணுள்ளாரறிதலும், இவர்கள் வாக்குவிசேடத்தால் அவர்களுக்குச் சிவபுண்ணியத்திற் சிந்தைசெல்ல, அக்காலத்தரசாண்டிருந்த பாண்டியராசனைக்கொண்டு அச்சிவலிங்கப்பெருமானுக்கோர் ஆலயம்புதுக்கி நித்தியநைமித்தியங்கள் நடத்திவருவதானார்கள். பின், புலவர்கள் “திருவாலவா”யென்னும் மதுரைமாநகரமடைந்து சோமசுந்தரக்கடவுளைத் தரிசிக்கக்கருதிப் பொற்றாமரைத் தடத்துட்சென்று, மூடவர்மேற்படித்துறையிலிருக்கக் குருடர் கிழ்ப்படித்துறையிலிருந்து தங்கள் வஸ்திரத்தைத் துவைப்பாராயினர். அக்காலவ்வஸ்திரம் அலசியெடுத்துச் சேர்த்துப் பிழியுஞ் சமயத்தில், தற்செயலாய் அவர்கையினின்று நழுவிநீரில்விழுந்தமிழ, அது கண்டமூடவர்,

“ அப்பிலே தோய்த்திட் டடித்தடித்து நாமதனைத்
தப்பினா னம்மையது தப்பாதோ”—

என்றோதிப் பரிகசித்தனர். அது கேட்ட குருடர்வெட்கி,

அப்படியே
“ யானாலுங் கந்தை யதினுமோ ராயிரங்கண்
போனான் மயிர்போச்சுப் போ”

என்றோதிமீண்டனர். அப்போது மூடவர் சற்றுவருந்தி,

“ கண்ணா யிரமுடைய கந்தையே யானாலுந்
தண்ணார் குளிரையுடன் றாங்காதோ.”—

எனக்கூறினர், அதுகேட்ட குருடர்,

(தொடரும்)
சி. கு. நாராயணசாமிமுதலியார்,
கோ-வை.

கலிங்கத்துப்பரணியாராய்ச்சி.

(முற்றொடர்ச்சி)

காடுபாடியது.

கஎ-வது தாழிசை.

சிதைந்தவுடற் சுடுசுடலைப் பொறியைச்சூறை
சிரத்தடிப்பச் சிதறியவப் பொறியார் செம்மை
புதைந்ததனிற் புகைபோர்த்த தழலே போலும்
போலாவேதீ பொடிமூடு தழலே போலும்.

என்பது,

சிதைந்தவுடநீ சுடுசுடலைப் பொடியைச் சூறை
சீத்தடிப்பச் சிதறியவப் பொடியாற் செம்மை
புதைந்தமணி புகைபோர்த்த தழலே போலும்
போலாவேற் பொடிமூடு தழலே போலும்.

எனக் காணப்படுகின்றது. முன்னதற்குப் பொருள்புலப்படலரிதாகலானும், இறந்த பிரேததகனத்தின் சாம்பற்பொடியை, சூறைக்காற்று, அடியோடுகிளப்ப, அப்பொடியாற் றனது செம்மையான நிறம் மூடப்பட்டரத்னங்கள், புகைபோர்த்த தழல்போலவும் நீறுபூத்தநெருப்புப்போலவும் விளங்கின என்னும். பொருட்சிறப்புடைமையானும் பின்னையதே சுத்தமென்க.

௪-ம் தாழிசை.

அறிஞர் தம்பிரா னபயன் வாரண
மாசர் மண்டலத் தாண றப்பறித்
தெறித ரும்பெருங் கருணை யம்புகொண்
டெழுது தூணெனத் தாமி யற்றியே.

என்பதில், "எறிதரும்பெருங்கருணை யம்புகொண்டு" என்பது—"எறிதரும்பெருங் கணைமரங்கள்கொண்டு" எனக்காணப்படுகின்றது. யுத்தத்திற்பட்ட பொருள்கள்கொண்டு இயற்றப்பட்ட காளிகோட்டத்தைக் கவிபுனைந்து வருணிக்கின்றாராதலானும், "கருணையம்புகொண்டு" என்பதற்குப்பொருட்பொருத்தமும் சமயப்பொருத்தமுமின்மையானும் பின்னையதே பாடமென்க. கணைமரம் - யுத்தக்களத்தில் யானைவராமற்றடுக்குமரம்.

௭-ம் தாழிசை.

துங்க பத்திரைச் செங்க ளத்திடைச்
சோள சேகரன் வாளெ றிந்தபோர்
வெங்க தக்களிற் றின்க டத்தி னால்
வெளிய டங்கவே மிசைக வித்தவே.

என்னுஞ் செய்யுளில், "வெங்கதக்களிற்றின்கடத்தினால்" என்பது-- "வெங்கடக்களிற்றின்படத்தினால்" எனக்காணப்படுகின்றது. களிற்றின் கடத்தால், விதானங்கவித்தல் கூடாமையின் 'களிற்றின்படத்தினால்' என்பதே பொருந்தும்.

௨௦-ம் தாழிசை.

படை வலங்கொடு பசுந்தலை யிடங்கொடணைவார்
இடைமொழிந்திடை நுடங்கவரும் யோகினிகளே.

என்னும்பாட்டில், "இடைமொழிந்திடை நுடங்கவரும் யோகினிகளே" என்பது-"உடையொழிந்திடை நுடங்கவரும் யோகினிகளே" எனக்காணப்படுகின்றது. "இடைமொழிந்திடை நுடங்கவரு" மென்பதினும், இப்பாடம் யோகினிகளதியல்பை நன்குவிளக்குதல் காண்க.

௫. தேவியைப்பாடியது.

[இது "காளிநிலை" என்று காணப்படும்.]

௨-ம் தாழிசை.

ஒருமலை மத்துவலத் துலவு கயிற்றினுமற்
றுலகு பரித்தபணத் துரக வடத்தினுமப்
பருமணி முத்துநிரைத் துமணி தைத்தவினைப்
பரிபுரம் வைத்ததளிர்ப் பதயுக ளத்தினளே.

என்னும் செய்யுளில் முதலிரண்டடியும் "ஒருமணி மத்துவலித் துலவுகயிற்றினுமற் - றுலகு பரித்தபணத் துரக படத்தினுமப் - பருமணிமுத்தநிரைத்து" எனக்காணப்படுகிறது. வாசுகியிடத்தும், ஆதிசேடனிடத்துமுள்ள ஜீவரத்னங்களாகியமுத்தை அரியாகப்பெய்த பரிபுரமென்பது சுந்தராகலின், 'உரகவடம்' என்றல்வேண்டாமையும் 'மத்துவலத்' தென்பதினும், 'மத்துவலித்' தென்பதேசிறந்ததாதலும் கண்டுகொள்க. அரி - காற்சிலம்பின்மணிகளிலுள்ள பருக்கைக்கல்.

௩-ம் தாழிசை.

அருமறை யொத்தகுலத் தருநெறி யொத்தகுணத்
தபைய னுதித்தகுலத் துபய குலத்துமுதற்
றிருமறை யொக்குமெனத் தினகர னொக்குமெனத்
திகழ்வத னத்தினிடைத் திலக வனப்பினளே.

என்னுந் தாழிசையில், "அருமறையொத்த........அப்பயன்" என்பது, "அருமறையொத்துலகத் தருநெறி யுய்த்தகுணத் தபையன்" எனக்காணப்படுகின்றது. இப்பாடம், முன்னையதினும் மிகச்சிறத்தல் உய்த்துணர்க.

௧௧-ம் தாழிசைக்கும், "அண்டமுறு" என்னும் ௧௨-ம் தாழிசைக்குமிடையில்,

"ஓங்காரத் துட்பொருளா யொருவாது நடத்தானை
நீங்காம னின்றானை யெவ்வண்ணம் நிகழ்த்துவாம்.

என்னும் பாட்டுக்காணப்படுகின்றது. இப்பாட்டினின்றியமையாமை, இதன் பின்வரும் பாடல்களை நோக்குமிடத்து விளங்கும்.

௬. பேய்களைப்பாடியது.

[இது "கழுதுநிலை" என்று காணப்படும்.]

௧௧-ம் தாழிசை.

துஞ்ச லுக்கணித் தாமென முன்னமே
    சொன்ன சொன்ன துறைதொறும் பேயெலா
மஞ்ச வித்தொரு காலக லாமலவ்
    வணங்கி னுக்கரு காக விருக்கவே,

என்பது,

துஞ்ச லுக்கணித் தாயன மென்பது
    சொல்ல வஞ்சியச் சொல்லிய பேயெலா
மஞ்ச வித்தொரு காலக லாமனின்
    றவ்வ ணங்கி னருகே யிருக்கவே.

இது, முன்னையதினும் சிறந்ததாகல் காண்க.

௧௯-ம் தாழிசை.

ஆனைசாய வடிபரி யொன்றுகைத்
    தத்தடைப்பரு வத்தப யன்பொருஉஞ்
சேனை வீரர்நின் றார்த்திடு மார்ப்பினிற்
    றிமிரி வெங்களத் திற்செவி டானவும்.

என்னும் பாட்டில், 'அத்தடைப்பருவத்தபயன் பொருஉஞ் சேனைவீரர்' என்பது, "ஐம்படைப்பருவத்தபயன் பெறுஞ்சேனைவீரர்" எனக்காணப்படுகின்றது. 'அத்தடைப்பருவ மென்பதினும் ஐம்படைப்பருவமென்பது மிகச்சிறத்தல்காண்க. இப்பாட்டிற்கூறிய சேனைவீரர் அபயனைச்சார்ந்தவரென்பது, அவரார்ப்பாற் சில பேய்கள் செவிடானமை கூறுதலான் விளக்கமாதலின், அபயன் பொருஉஞ் சேனைவீரர் என்னுங் கவர்பொருட்டொடரினும், அவன்பெற்றசேனைவீரர் என்னும்பொருள்கொண்ட பின்னையபாடமே பாடமென்க.

இன்னும், காடுபாடியது, ௪௯-ல் "மேன்மேற்பொடித்த வியர்ப்புள்ளிகளே" என்பது, "மெய்மேற்பொடித்த" எனவும், கோயில் பாடியது, ௫-ல் 'பழுவபானையின்' என்பது 'பருமயானையின்' எனவும், ஷை ௯-ல் 'ஓரிரண்டு கீழ்நாட்டி' என்பது 'ஓரிரண்டு காணுட்டி' எனவும், ஷை ௧௪-ல் "சொல்லரிய வோமத்தீ" என்பது "சொல்லரியவீமத்தீ" எனவும், ஷை ௧௮-ல் 'பசுங்குருதியின் றுதலைவி' என்பது "கொண்டுதலைவி" எனவும், ஷை ௨௧-ல் "வீங்குதலை நெடுங்கழிபின்" என்பது, "வீங்குதலை நெடுங்கழையின்" எனவும், 'சுழற்கட் சூர்ப்பேய்' என்பது "சுழல்கட் கூற்பேய்" எனவும், ஷை ௨௫-ல் "குழவிக்கு, நல்வாய்ச்செய்யதசைதேடி" என்பது, "நல்வாய்செய்யத் தசைதேடி" எனவும், தேவியைப்பாடியது ௪-ம் பாட்டில், "அரவொருதிக்கயமெப்பொழு" தெனவும், ஷை ௯-ல் 'காடதடக்கடவுள்' என்பது 'காடதடக்கவுளக்' எனவும், 'விட்டபரித்திறலவ' னென்பது, 'விட்டவரித்திறலவ' னெனவும் காணப்படுகின்றன.

இவற்றிற் சிலபாடங்கள் மிகச்சிறந்தும் சில ஒத்தபாடமாகவும், சில ஓசைநய முதலியவுடையனவாகவும் இருத்தல் நோக்கிக்கொள்க.

(தொடரும்)

பத்திராசிரியர்.

சாதுரிய வசனங்கள்.

ஸ்ரீமத்-மு. ரா. அருணாசலக்கவிராயர் அவர்கள் பலப் பல வித்வான்கள் சமயம் நேர்ந்துழியெல்லாம் கூறிய விநோத வார்த்தைகளைத்திரட்டி செந்தமிழ் 5, 6, தொகுதிகளில் ஒருவாறு எழுதிவிடுத்தனர். அவர்களைப்பின்பற்றி ஸ்ரீமத்-சேதுராமையர் அவர்களும், சிற்சிலருடைய சாதுரியவசனங்களை யெடுத்தெழுதி விடுத்தனர். அவர்கள் எடுத்த முயற்சி பலராலும்புகழத்தக்கதே. அப்படிப்பட்ட வார்த்தைகளெல்லாம் பொன்றா வண்ணம் அவர்கள் சொற்றவண்ணமேயானும் அடியில்வரும் வசனங்களை எழுதுகின்றேன்.

1. வையாபுரிநாடென்று வையம்புகழும் பழனாபுரியில் சுமார் 30-வருடங்களுக்குமுன்னர் பிரசித்திபெற்றிருந்த ஸ்ரீமத்-மாம்பழக்கவிச்சிங்கநாவலரவர்கள் ஒருமுறை மதுரைஜில்லா இராமநாதபுரத்தில் கீர்த்திபெற்றிருந்த கலியுகவள்ளல் என்னும் ஸ்ரீலஸ்ரீ:பொன்னுசாமித்தேவரவர்களிடம் சென்று சிலநாள் தங்கியிருந்தனர். தேவரவர்களும் நாவலரவர்களும் அத்தியந்தநேசத்தையுடையவர்கள். அப்படியிருக்கும் நாட்களில் ஒருநாள் தேவரவர்கள் கவிராயரைத் தம் அரண்மனையில் எண்ணெய் தேய்த்துக்கொள்ளும்படி சொல்லித் தம் அரண்மனையில் வழக்கமாக எண்ணெய்தேய்க்கும் மல்லகசெட்டிக்கு உத்தரவுசெய்தார்கள். மல்லகசெட்டி, கவிராயருக்கு எண்ணெய் தேய்க்கச்சென்று கவிராயரிடம் தெரிவித்துத்தேய்க்க ஆரம்பிக்கும் சமயத்தில் அந்த மல்லகசெட்டியைக் கவிராயர்பார்த்து, “நீ எனக்கு எண்ணெய்தேய்க்க உன்னுடைய இரண்டு கைகள் பற்றாது” உன்னுடைய எஜமானராகிய தேவரவர்களிடம் சொல்லிவிட்டுவா,என்று அனுப்பினார். உடனே மேற்படி மல்லகசெட்டிபோய் “மஹாராஜாவே, கவிராயருக்கு எண்ணெய் தேய்க்கப்போனபோது, அவர் இரண்டுகைபற்றாது என்று சொல்கிறார்” என்று விண்ணப்பித்தான். மஹாராஜாவானவர் நுண்ணறிவும் சாமர்த்தியமுமுள்ள பிரபலவித்வானாகையால் அதிக சந்தோஷப்பட்டு அந்த மல்லகசெட்டியைவிளித்து “பலகை” எடுத்துக்கொண்டுபோய்க் கவிராயருக்குக்கொடுக்கும்படி ஆஞ்ஞாபித்தார். இதுவன்றோ வித்வான்களுடைய சாமர்த்தியம் (பலகை என்பது பலகைக்கும் பல கைகளுக்கும் பொருந்துவது கவனிக்கத்தக்கது.)

2. ஓர்காலத்தில் பிரபலவித்வானொருவர் சீட்டுக்கவியொன்று எழுதிக்கொண்டு தியாகம்பெறும் ஆசை மீதூர ஒரு ஜமீன்தாரிடம் சென்றனர். ஜமீன்தாரவர்கள் சீட்டுக்கவியைக்கேட்டு அகமிக மகிழ்ந்து புலவர்க்குத் தியாகங்கொடுக்கக்கருதி ஒரு வெள்ளித்தட்டில் கறுப்புநிறம் பொருந்திய பட்டுச்சால்வையொன்றும் வைத்து அதன்மேல் ரூபா 50-வைத்துப் புலவரிடம் கொண்டுவந்தார். சன்மானம்செய்தது புலவர்க்குத் திருப்திகரமாக இல்லை. இன்னும் அதிகமாய்ப் பெறவேண்டுமென்னும் கருத்துட்கொண்டு “இதென்ன காரித்துப்பட்டா” என்றுகூறினார். உடனே ஜமீன்தாரவர்கள் புலவருடைய சாதுரியத்தை அறிந்து தக்கபடி சன்மானம் செய்தார்கள். (காரித்துப்பட்டா என்பது கறுப்புச்சால்வைக்கும் காரித்துப்புதல் என்ற அசங்கியமான செய்கைக்கும் ஆவதைக்கவனிக்க.)

3. ஒரு ஊரில் இலக்கண வித்வானொருவனும், இலக்கணந்தெரியாத வித்வானொருவனும் இருந்தார்கள். இன்னும் இலக்கணந்தெரியாத அநேக வித்வான்களும் அவ்வூரில் இருந்தார்கள்.

“எழுத்தறியார் கல்விப் பெருக்கமனைத்தும்
எழுத்தறிவார்க் காணின் இலையாம்”

என்ற நீதிநெறிவிளக்க வாக்கியத்தின்படி அவ்விலக்கண வித்வானைக் கண்டால் ஏனையவித்வான்களுக்கெல்லாம் நடுக்கந்தான். அப்படியிருக்க இலக்கணந்தெரியாத வித்வான்களிலொருவர் ஒரு செல்வன் பேரில் பிரபந்தம் ஒன்று இயற்றி, அச்செல்வன் வீட்டில் பிரபந்தத்தை அரங்கேற்ற நிச்சயித்துக் குறித்தநாளில் ஒரு சேவகனைக் காவல்வைத்து இலக்கணவித்வானை உள்ளேவிடக்கூடாதென்று திட்டம் செய்து பிரபந்தம் அரங்கேற்றுதல் நடத்திக்கொண்டிருந்தார். இலக்கண வித்வான் இந்தச்சமாசாரம் எப்படியோ தெரிந்து மாறுவேடம்புனைந்து உள்ளேநுழைந்து வாளாவிருந்தனர். அப்பிரபந்தத்தில் ஓரிடத்தில், “வீதியெல்லாம் மாடஞ்சிறந்திட” என்ற வாக்கியத்தை யுள்ளிட்டகவியை வாசித்துப்பொருள் கூறிவரும்பொழுது இலக்க

ணவித்வான் எழுந்து, "ஐயா, இப்பாட்டுடைத்தலைவனுக்கு வீதியெல்லாம் மாடு அஞ்சு இறந்திட்டால் வாழ்வதெப்படி" என்று கூறினார். உடனே பிரபந்த வித்வான் ஏட்டைக்கட்டிவிட்டுச் சும்மா இருந்துவிட்டார். பிறகு எல்லாரும் கேட்டுக்கொண்டதன்மேல் இலக்கண வித்வான், "வீதிதோறும் பொன்மாடம் விளங்கிட" என்று திருத்திக்கொடுக்க அரங்கேற்றி முடித்தனர். (வீதியெல்லாம் பாடஞ்சிறந்திட - வீதியெல்லாம் மாடு அஞ்சு இறந்திட என்றுபிரிக்கலாம் என்பதைக் கவனிக்க.)

(தொடரும்.)

இங்ஙனம்,

துடிசை. அ. சிதம்பரம்.

ஸ்ரீ:

நுண்பொருண்மாலை.

(முற்றொடர்ச்சி)

ஙஙஅ. குடம்பைதனித்......நட்பு.

நு - லை:—நட்பென்பது ஈண்டுக் குறிப்புமொழியாய் நட்பின்றிப் போதலுணர்த்திநின்றது; "கற்கறித்து நன்கட்டாய்" என்பதுமது.

ஙருக. பொருளல்லவற்றை......பிறப்பு.

நு - லை:—மாணாப்பிறப்பு—இன்பமில்லாப்பிறப்பு; நால்வகைப்பிறப்பு—நரகர், விலங்கு, மக்கள், தேவர்; இவற்றை வடநூலார் தேவர் மக்கள் திரியக்கு ஸ்தாவரம் என வேறோதுவர்.

ஙருஉ. இருணீங்கியின்பம்......யவர்க்கு.

நு - லை:—நீங்கி எனத் தொடைநோக்கி மெலிந்தது. நச்சினார்க்கினியரும், பெரும்பாணாற்றுப்படையுள், (அடி-ஙஎ--ங) "காந்தளஞ்சிலம்பிற் களிறுபடிந்தாங்குப், பாம்பணைப்பள்ளியமர்ந்தோன்" என்பதற்குக், காந்தளென்பதற்கேற்பப் "பாம்பணை" என மெலித்தனரென்றாரென்க.* பிறப்பினை நீக்கி எனப் பிறவினையாக்கியது காண்க. நீங்க என்பதன் றிரிபெனினும் அமையும்.

ஙருகூ. சார்புணர்ந்து......நோய்.

நு - லை:—அழித்துச் சார என இயையும். "ஓர்த்துள்ளம்" (ஙருஎ) என்பதனுள், "ஒருதலையா ஓர்த்து" என்பதுமது. சஞ்சிதமாகாமியங்கள் கெடுமென்பதும், பிராரத்துவங் கெடாதென்பதுங் காண்க.

ஙஎஉ. "பேதைப்படுக்கு......முற்றக்கடை.

நு - லை:—உற்றக்கடையென்பது முன்னுங் கூட்டப்பட்டது. இழவூழ் ஆகலூழ் என இரண்டும் வேற்றுமைத்தொகை. "வேற்றுமைத்தொகை" என்றது; இழத்தற்கேதுவாகிய ஊழ், ஆதற்கேதுவாகிய ஊழ் என நான்காம் வேற்றுமைத் தொகையை.

ஙஎங. "நுண்ணிய............மிகும்."

நு - லை:—மற்றும்-பின்னும், பொருளது நுண்மைநூன்மேலேற்றப்பட்டது. உண்மையறிவு—ஊழாகிய பேதைமையுணர்வு.

ஙஎரு. "நல்லவை........செயற்கு."

நு - லை:—ஊழ் அதிகாரத்தால் வந்தது. இது வகுத்துக்கொண்ட வதிகாரமென்க. அன்றியு முற்கவியிலொன்றதிகாரப் பட்டால் அது பிற்கவிக்கு வருவதுமாம். எல்லாஅமென வளபெடுத்துச் சொல்லுக.

ஙஎசா. "பரியினு........போகாதம."

நு - லை:—பால்-ஊழ்; அஃததிகாரவரவிலொரு பொருட்கிளவியுட்காண்க.

ஙஎஎ. "வகுத்தான்........துய்த்தலரிது."

---

* "கூம்பலங்கைத்தலத்து" என்னும் (கக) திருக்கோவையாரிற் "பாம்பலங்காரப்பரன்" என்பதற்குப் பேராசிரியரும் இவ்வாறே உரைத்தார்.

ந - லை:—"இசைத்தலு முரிய வேறிடத் தான." (தொல். சொல்-௬0.) என்னுஞ் சூத்திரத்துள், வேறுவாய்பாடென்றுரைத்துக் காலமுலகமென்பவைக்குக் காலன்கொண்டான், உலகத்தார்பசித்தாரெனக்காட்டியதற் றெய்வமென்பதற்கு வகுத்தானென உயர்திணையாய் முழுதும் வேறுபட்டது.

௩௭௮ "துறப்பார்மற்........கழியுமெனின்."

ந - லை:—துறப்பார் ஆரீற்றெதிர்காலமுற்று வினைச்சொல். அஃதொரு தொழிற்சொல்லே தன்னெச்சப்பொருள்கொண்டு முடியும். அதுபெயராகிய வெழுவாயாதலும் வேற்றுமையேற்றலும் பெறுமென்க; அது 'களித்தானை' 'குளித்தானை' (திருக்-௯௨௯.) "இரப்பார்க் கொன்றீவார் மேனிற்கும் புகழ்" (ஷை-௨௩௨.) எனவரும்.

௩௮0. "ஊழிற்பெருவலி........முந்துறும்."

ந - லை:—பெருவலி-பெருவலியையுடையன; பண்புத்தொகைப்புறத்துவந்த வன்மொழித்தொகையென்னாது ஆகுபெயரென்றார். "பாயிரும்பனிக்கட" லென்னும்பரிபாட்டினுட், "கயந்தலைக்கும்." பண்புத்தொகைப் புறத்துவந்த அன்மொழி; ஈண்டாகுபெயரென்றார் இவ்வுரையாசிரியர். முன்னர், கனங்குழைக்கும் (ஷை-௧0௮௧.) இவ்வாறுரைத்தார். இனித்"தொடலைக்குறுந்தொடி"(ஷை-௧௧௩௫.)என்பதனை உவமைத்தொகைப் புறத்துவந்த அன்மொழித்தொகையென்றாராதலால், "ஐம்பா லறியும் பண்புதொகு மொழியு, மெய்யொருங் கியலுந் தொழிறொகு மொழியும்" என்னுஞ்சூத்திரவிதியாற் பண்புத்தொகை வினைத்தொகைகளை யொருமொழியாக்கி யஃதாகுபெயராய் வருமெனவும், "முன்மொழி நிலையலும் பின்மொழி நிலையலு, மிருமொழிமேலு மொருங் குடனிலையலு, மம்மொழி நிலையா தன்மொழி நிலையலும்" (தொல், சொல், ௩௮௮.) என்னுநியமவிதியாற்றொகைநிலைத்தொடர்மொழியாகிய இருமொழிக்கணன்றி ஒருமொழிக்கண் அன்மொழித்தொகை வாராதெனவுங் கொள்வது இவ்வுரையாசிரியர் கருத்துப்போலும். இனிப்பண்புத்தொகை வினைத்தொகைகளின் புறத்து அன்மொழிவருமென்னுஞ் சூத்திரத்திற் கெவ்வாறு கொள்வரோ? எம்மனோர்க்கறிதலரிதென்க. "வேயினமென்றோள்"(௨௮௨) என்னுங் கோவையாருட், 'பாயினமேகலை' என்பதனை, இச்சொற்கள் ஒருசொன்னீர்மைப்படுதலின் ஆகுபெயரெனப்படுமென்றும், "இயல்மன்னுமன்பு" என்னுங்கோவையாருள், (௩௬௫.) மன்னுமன்பென்பதனைப் பெயரெச்சத்திற்கும் பெயர்க்குமொரு சொன்னீர்மைப்பாடுண்மையின் ஒரு சொல்லென்றும், "மாதுற்றமேனி" ஆகுபெயரென்றும் பேராசிரியருமுரைத்தார்; அவை, தொகாநிலைத் தொடர்மொழியாகலானும் ஆகுபெயரேயாகவேண்டுமென்க.

முதிராமுலை, முற்றாமுலை, உண்ணாமுலை, குடங்கையினகன்றவிழி, கைபார்த்து வண்டிசைக்குங் கூந்தலென்பன முதலியனவுந் தொகாநிலைத்தொடர்மொழியாய் ஒரு சொன்னீர்மைப் பாடாய் வருதலினாகுபெயராமென்பது.

இனித், தொல்காப்பியத்துள், மக்கட்சுட்டென்பதனைப் பண்புத்தொகைப் புறத்துவந்த வன்மொழித்தொகையென்ற சேனாவரையருரைக்கு வழுக்காட்டி இருபெயரொட்டுப் பண்புத்தொகை யாகுபெயராயிற்றென்ற நச்சினார்க்கினியரும், உயர்திணை யஃறிணையென்பவற்றை வினைத்தொகை பண்புத்தொகை யாகுபெயராயினவெனக்கூறினரல்லாது, ஆகுபெயரன்மொழித்தொகை யொருசொல்லிருசொல்லென்று மாகுபெயர்க்கு மன்மொழித்தொகைக்குந் தம்முள்வேறுபாடின்னதென்றும் வரையறைகூறிற்றிலராகையால் அவர்கருத்து எம்மனோர்க்கறிதலரிதென்க.

அறத்துப்பால் பரிமேலழகரையனுரையுள்,
இரத்தின கவிராயனெடுத்துச் சேர்த்த
"நுண்பொருண்மாலை"
முற்றிற்று.

இறைமாட்சி.

முறைசெய்தென்பதனுள், இறை கடவுளாதலால் கடவுளது நற்குணநற்செய்கை.

௩௮௧. "படைகுடி.........னரசருளேறு.

நு - லை:—அமைச்சு நாடரண்பொருள்படை நட்பென்பது முறையாயினு மீண்டுச்செய்யுணோக்கிப் பிறழவைத்ததென்பது, அரசியலின்பின் அமைச்சியலும் நாடுமரணும் பொருளும் படையு நட்புமென அதிகாரம் வருதலாலென்க. "நெடுநீர்" (திருக்-௬0௫.) என்பதனுட் பிறழவைத்தல் அவ்வதிகார நோக்கியென்க.

௩௮௩. "தூங்காமை.........பவற்கு."

நு - லை:—முதற்கவிக்குண் நான்கையுங் கூட்டியதா னான்கு மென்பது முற்றும்மையாகாதிறந்தது தழீஇய எச்சவும்மையாயிற்று.

௩௮௪. "அறனிழுக்கா.........முடையதரசு."

நு - லை:—அரசு அரசனது தன்மை; உரையுட் டாழ்வின்மையையுடையதரசென்றது, உடையா "னரசெனவுரைத்ததா" லுபசாரவழக்கால் அவன்மேனின்றது. "மேலுடைய தரசருளேறென்றது" "உடையானரசருளே"றென்றதா லாகுபெயராக்கா துபசாரவழக்கென்றார். இனி "ஒற்றும் வேந்தும்" "குடிமையாண்மை" (தொல்-சொல்-௫௭.) என்னுஞ்சூத்திரவிதியாலஃறிணைக்கண்வந்த வுயர்திணைச்சொல். அவை "நின்றாங்கிசைத்தல்" (ஷை-ஷை-௫௧.) என்னும் விதியால் உரையுள், "வேந்தன்கொடியன்" (திருக்-௫௫௧.) "ஒற்றறிவான்" (ஷை-௫௮௪.) என்றார்; இனியரசுமமைச்சுந்தூதுமொன்று.

௩௮௫. "இயற்றலு.........வல்லதரசு."

நு - லை:—இயற்றல் - பொருள்வரும் வழிகளை மேன்மேலுளவாக்கல்; மற்றமூன் [illegible]ட்பொருளை செயப்படுபொருளாக வருமாதலால், ஈட்டல் காத்தல் வகுத்தலென்பவைக்கேற்ப இயற்றலென்பதற்குஞ் செயப்படுபொருள் வருவிக்கப்பட்டதென்றார். பதவுரையுள், [illegible] வந்தவற்றை என்றதனானறிக. இனிச்செயப்படுபொருள்வருவிப்பது, "சென்ற [illegible]ற் செலவிடா" (திருக்-௪௨௨.) "சுழலு மிசைவேண்டி" என மிகவும் வரும்.

௩௯0. "கொடையளி.........கொளி."

நு - லை:— முறைசெய்விய கோல்போறலிற் செங்கோலென உவமையின் பெயர் பொருள் மேனின்றது. ஒளி - விளக்கு.

௩௯௧. "கற்க.........தக."

நு - லை:— அதற்கு - அக்கல்விக்கென்றதனாற் கற்பவை பன்மையொருமை மயங்காது.

௩௯௨. "எண்ணென்ப.........முயிர்க்கு."

நு - லை:— என்ப, முன்னது அஃறிணைப்பன்மைப்பெயர்; பின்னது, உயர்திணைப் பன்மை வினையாகிய முற்றுச்சொல்; "ஆதி முதலொழிய" "எழுத்தறியத் தீரு" மென்னு மிரண்டு பாட்டுங் காண்க. எண்- கணிதம். எழுத்து- எழுத்துஞ் சொல்லும். எழுத்தெனவே யதனோ டொற்றுமையுடைய சொல்லுமடங்கிற் றென்றாராதலிற் பொருள் அவ்வாறு சிறத்த லல்ல வென்க.

௩௯௫. "உடையார்மு.........தவர்."

நு - லை:— எக்கறுதல் - ஆசையாற் றாழ்தல். கடையரென்றதனால், மறுதலைப் பெயர் வருவிக்கப்பட்ட தென்றார்; இவ்வாறுரையாத "பிறவிப் பெருங்கடற்"கு மிவ்வாறு வினவுக.

௩௯௬. "தொட்டனைத்.........மறிவு."

நு - லை:— தொட்டல்- தோண்டல். "தோட்கப்படாத செவி துளைக்கப்படாத (திருக்-௪௧௮.) ஆகலால், தொட்டலுந் தோட்டலும் வேறு.

௪0௧. "அரங்கின்றி.........கொளல்.

நு - லை:— கோட்டி கொளல்- அவையின்கணொன்றைச் சொல்லுதல்.

௪0௨. "கல்லாதான்.........பெண்காமுற்றற்று.

நு - லை:—சொற் சொல்லுதல் முதனிலைத் தொழிற் பெயர். முலை யிரண்டுமென்பது, "இனைத்தென வறிந்த சினை முதற் கிளவிக்கு, வினைப்படு தொகுதியி னும்மை வேண்டும்." (தொல்-சொல்-௩௩.) என்னுஞ் சூத்திர விதி.

௪0௪. "கல்லாத.........ரறிவுடையார்."

நு - லை:—ஒட்பம்-அறிவுடைமை. ஏரலெழுத்துப் போல்வது; ஏரல் - நத்து. * வடநூலார் குணாக்ஷரமென்பர்.

௪௦௭. "நுண்மா..........யற்று.

நு - லை:—எழில் - எழுச்சி. "எழுச்சிய தொப்பு முருபும் வெறுப்பும்" என்னும் பொருளியற்சூத்திரத்திற் காண்க. "இல்லமிளமை யெழில் வனப்பு" என்றார் நாலடியாரில்.

௪௧௦. "விலங்கொடு.........யவர்."

நு - லை:—எதிர்நிரனிறை. "சாயலு நாணு மவர் கொண்டார்" (திருக்-௧௧௮௩.) என்பது மது; நன்மையை யொத்த தீமையென்றதனாற் கொடுப்பதூஉம். (௸-௧௫.) இழிவறிந்துண்பான் (௸-௯௪௪.) என்பனவும் அவ்வாறும்.

௪௧௩. ‘,செவியுணவிற்.........விலத்து."

நு - லை.— உணவாகிய கேள்வி யென்றுரைத்து இன்சாரியை அல்வழிக்கண்வலிந்து நின்ற தென்றார். கவர் பொருட்பாடு நோக்கி. "அக்கின்ற வாமணி"யும் (திருக்கோவை-௯௮.)

௪௧௪. "கற்றிலனாயினுங்.........துணை."

நு - லை:—ஒற்கம் - தளர்ச்சி. ஊற்று - ஊன்றுகோல். ஊன்றென்னுமாகுபெயர் னகரந்திரிந்தது.

௪௧௫. "இழுக்க........சொல்."

நு - லை:—ஊற்றாகியகோலென இருபெயரொட்டாகியது, முன்னதுபெயரானது பற்றியென்க. இயங்குவார்க்குக் காவற்சாகாடு கைப்பார்க்கெனவுரைத்ததற்கு அவாய் நிலையால் வந்தவுவமையடையால் வருவிக்கப்பட்டது. பொருளடைகாவற் சாகாடுகைப்பார்.

௪௧௯. "நுண்ணிய...............லரிது."

---

* இதனால் நீர் மேலெழுத்தென்பது பாடமல்லாமையும் கல்லாதானொட்பத்துக்கு உவமை யாகாமையும் தெள்ளிதி னுணரப்படும்.

நு - லை:—அல்லாரென்றாரிவ்வுரையாசிரியர் நச்சினார்க்கினியார், அல்லாலென வினையெச்சக்குறிப்பாக்கினார். பொருளினுண்மைகேள்விமேலேற்றினார்.

௪௨௦. "செவியிற்...............வாழினுமென்."

நு - லை:—குணவலங்காரம் பத்துஞ்சொற்சுவை. "வீர மச்சமிழிப்பொடு வியப்புக் காம மவல முருத்திர நகை சாந்தம் பொருட்சுவை." கைப்பு காழ்ப்பு புளிப்பு உவர்ப்பு துவர்ப்பு தித்திப்பு அறுசுவை.

௪௨௪. "எண்பொருள...........தறிவு."

நு - லை:—எண்மை - எளிமை. செல்லச்செல்ல மனங்கொளச் சொல்லல். காண்பவனறிவுடைய னென்னுமையால் உடையவன் றொழி லறிவின்மே லேற்றப்பட்டது.

௪௩௦. "அறிவுடையா...............மிலர்."

நு - லை:—என்னெனும் உம்மைசெய்யுட்டொடை காரணமாக விகாரத்தாற்றொக்கது. என்னும் "பயன்றூக்காதியார்க்கும் வரையா" தென்பது மிப்பொருட்டு.

௪௩௮. "பற்றுள்ள...........நன்று."

நு - லை:—எவற்றுள்ளு மெற்றுள்ளுமெனச் செய்யுட்டொடையுமடிப்பாடு நோக்கியிடைக் குறைந்தது. இவறன்மை, இவறற்றன்மை, காதன்மையும் வள்ளன்மையுமவ்வாறும்.

௪௪௨. "உற்றநோய்...........கொளல்."

நு - லை:—பெற்றி - தன்மை. இங்கிதம்-குறிப்பானிகழுமுறுப்பின்றொழில். ஆகாரங்குறிப்பின்றி நிகழும் வேறுபாடுகள்.

௪௪௮. "இடிப்பாரை.................கெடும்."

நு - லை:—இல்லாதவேமராவென்பன பெயரெச்சவடுக்கு, "மூவா முதலாவுலக" மென்பது மது. (சிந்தாமணி)

௪௫௧. "சிற்றின...................விடும்.

ரு - லை:—பெருமை - பெரியோரியல்பு. சிறுமை - சிறியோரியல்பு. பெரியோரஞ்சுவரென்னாது, பெருமையஞ்சு மென்றதனாற் பொருளின் றொழில் பண்பின்மேனின்றது. "பணியுமாம்" (திருக்-௯௭௮.) அற்ற மறைக்குமென்பனவுமவ்வாறாம். இதற்கு மறுதலை "யாகாறள விட்டிதாயினு" மென்பதனு ளளவிட்டிதாயினுமெனப் பண்பின்றொழில் பொருண்மேனின்றது. பண்பின்மே னிற்குங்கா லாகாற்றள வென்னவொற்று மிகும்.

௪௫௭. "மனநல............தரும்."

ரு - லை:—தருமென்னுமிடவழுவமைதிச் சொல்முன்னுங் கூட்டப்பட்டது.

௪௫௮. "மனநல........புடைத்து."

ரு - லை:—"நன்குடையர் நல்வினையாற்றுமேயுடைய" ரென்றமையான், மூன்றாவது செய்யுட்டொடைகாரணமாக விகாரத்தாற் றொக்கது. மனநலஞ்செய்யப்படுபொருளாதலான் நன்கு கருவியாக னோக்கியென்க.

௪௬௦. "நல்லினத்தி............மில்."

ரு - லை:—ஐந்தனுருபுறழ்பொருவின்கண் வந்தது. ஊங்கென்பது பின்னுங்கூட்டி யதனிடை நின்றவும்மைதுணையு மில்லையென மாற்றியுரைக்கப்பட்டது.

௪௬௬. "செய்தக்க............கெடும்."

று - லை:—செய்தக்க செய்யத்தக்கவென்றதனாற் செய்யென் முதனிலையாகாது செயவென்னெச்சமானது. சூழ்கிடந்தவென்பது மது. "பாலொத்த நீற்றம்பலவ" னென்னுங்கோவையாருள், மணிவாயென்பது அறிவு ஆண்மை பெருமையென மூவகையாற்றல் காண்க. அவற்றுட் பெருமை பொருள் படை.

(தொடரும்.)

பத்திராசிரியர்.

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௭] சௌமிய-௵ வைகாசி-௴ [பகுதி-௭.

தமிழ்ப்பழஞ்சரிதம்.

(முற்றொடர்ச்சி.)

தமிழில் ஆரியரது கலப்புக்கு முன்பே, இயல் இசை கூத்து முதலிய கலைகள் செவ்வையாக அமைந்திருந்தன. பிற்காலத்தில் அகஸ்தியர் அவற்றை ஆரியக்கலப்புப்பெறப் புனைந்தனராயினும், அதற்கு முன்பு வேறு கலப்பின்றி அவை தமிழிலிருந்தனவென்பதில் ஐயமில்லை. அகத்தியத்துக்கு முன்பு 'குமரம்' என்னும் முத்தமிழ் இலக்கணநூல் இருந்ததென்று தெரிகிறது. இக்குமரமே அகத்தியத்திற்கு முதனூலாயிருந்ததென்பதற்குக் குமரக்கடவுளைச் செந்தமிழ்ப் பரமாசாரியனெனக்கொள்ளலும், அகத்தியரைக் குமரக்கடவுளது மாணாக்கரென வழங்கலும் உற்றசான்றாகும். இனித் தமிழர் பழங்காலத்தில் நடத்திவந்த அரசியன்முறை, போர்முறை முதலிய பல செய்திகள் புறப்பொருளிலே கூறப்படும். இவற்றில் போர்முறைமட்டும் மிகுதியாக வழங்குகின்றது. தமிழரதுபோர் மாற்றரசரது ஆநிரையைக் கவர்ந்துகொள்வதினின்று தொடங்குவது. இது வெட்சியென வழங்கும். அடுத்தது கரந்தை:—அஃதாவது பகையரசன் கவர்ந்த நிரைகளை மீட்டல். இனி, வஞ்சியென்பது அதனையடுத்து நிகழ்வது; இது மாற்றரசன் பூமியைக் கைக்கொள்ளக் கருதிப் போர்க்குச்செல்லும் நிலை. தன் காவலிடத்தைப் பகையரசர் அணுகத் தன் இடத்தைக் காப்பதற்குக் காஞ்சியென்று பெயர். பகையரசர் கைப்பற்றாவண்ணம் தன் கோட்டைமதிலைக் காவல்பூண்டிருத்தற்கு நொச்சியென்று பெயர். மதிலரணை யெதிர்த்தழித்து அவர் காவலிடத்தைக் கைப்பற்றுஞ் செயல்கள் உழிஞை என

ப்பெயர்பெறும். அரசிருவர் போர்க்களத்துக் கடும்போர்புரியும் நிலை தும்பையென வழங்கும். இவருள் வென்ற அரசன் செய்கைகள் வாகையாகும். இப்புறத்திணையின் பெயர்களெல்லாம் ஒவ்வொரு பூக்களைக்குறிப்பன. போரில் அவ்வந்நிலைக்குத்தக அவ்வப்பூக்களை அடையாளமாகப் புனைந்துகொள்ளும் வழக்கம் தமிழர்க்குள் இருந்தமையால் அப்பூக்களின் பெயர்களே போர்முறைகட்கும் வழங்கலாயின. பழங்காலத்தே யுத்தவீரத்தில் தமிழர் இணையற்றவராயிருந்தனரென்பதற்கு, பழைய நூல்களில் அது மிகுதியாகச் சொல்லப்படுதலே தக்க சான்றாகின்றது. இவரது வீரம்பற்றிச்சொல்லப்படும் வழக்கங்களையெல்லாம், இங்குரைப்பின் விரியுமாதலால், அவற்றிற் பழையனவாய்ச்சிறந்த சிலவற்றைமட்டும் இங்கு குறிப்பிடுவோம்.

தமிழரசர்கள் வீரம், நியாயம், தியாகம் என்னும் மூன்று குணத்திலும் மேம்பட்டவரென்பதற்கு, அவரது முரசுகள், வீரமுரசு, நியாயமுரசு, தியாகமுர்சு என மூன்று பிரிவுடையனவாக வழங்கப்படுதலே தெளிவிக்கும். பிறரை நியாய நெறிப்படுத்தற்கும், பிறர்க்கு வேண்டுவன வளித்தற்கும் வீரச்செயலே வேண்டுதலால், அஃது ஏனையவற்றினும் சிறந்ததென்பர். அரசர் போர்க்குச் செல்லும்போது புலவர்களும் பாணர்களும் கூடவே செல்வதும், யுத்தகளத்தில் பாடலாடல்களால் அவர்கள் அரசர்களையும் வீரரையும் மகிழ்விப்பதும், அப்போர்க்களத்தேயே அரசராற் பெருவரிசைகள்பெறுவதும் போரில்வென்ற அரசர்மீது “பரணி” பாடிப்பரிசுபெறுதலும் பழைய வழக்கங்களாகும். அரசர்கள் வீரத்தைப் புலப்படுத்துவதற்கு அறிகுறியாக வீரவுடை, வென்றிமாலை, வீரவளை, வீரக்கழல் முதலியன தாங்கிநிற்பர். மேலும் வெல்லப்பட்ட அரசர் தலைகளைப்போன்று பொறித்த வீரக்கழல்களை அணிந்துகொள்வர். இவர்கள் தம் தலைநகர்களில் தம் வீரத்துக்கறிகுறியாகத் தம்மாலும் தம் போர்வீரராலும் கவலையுடன் காக்கப்படும் “காவன் மரம்” என்னும் பெயர்பெற்ற மரங்களை நாட்டிப்போற்றுவர். இக்காவன் மரங்களைப் பகைவரழியாமற் காத்தலும், பிறர் காவன் மரங்களை யழித்தலும் முற்காலத்து வீரர்களது புகழ்ச்சிக்குரிய செயல்களாகக் கருதப்பட்டு வந்தன.

மடிந்தவுள்ளத்தோனையும், மகப்பெறாதோனையும், மயிர்குலைந்தோனையும், அடிபின் வாங்கினவனையும், படையிழந்தோனையும், ஒத்தபடையெடாதோனையும், பிறவும் இத்தன்மையுடையாரையும் கொல்லாது விடுதலும், கூறி எச்சரித்துப் பொருதலும் இவ்வரசரது போர்வீரர்கள் கையாண்ட வழக்கங்களாகும். இவ்வீரர்களது மகளிரும் மறத்தில் மிக்கவரென்று புகழப்பட்டனர். இம்மகளிரது மக்கள் கணவர் முதலிய ஆண்மக்கள் போர்க்குச்சென்று அங்கண் வீரச்செயல்காட்டி மடியினும் அவர்களையிழந்தமைக்கு வருந்தாது அவர்களது வீரச்செயலையே நன்குமதித்து மகிழ்தலும் வீரச்செயலின் மாறுபட்ட செய்திகேட்கின் அதுபற்றித் தம்முயிரையும் விட்டொழியத்துணிந்து வருந்தலும் பழந்தமிழ் நூல்களுள் மிகுதியுங் கூறியுள்ளவாற்றால் விளங்கிநின்றன. இவர் படையின், முதலிடை கடையென்னும் பகுதிகள் தூசி, இடை, கூழை எனவழங்கும். அரசர்கள் நீரரண், நிலவரண், காட்டரண், மலையரண் என்னும் நால்வகையரணுமுடையராயிருந்தனர். இவையன்றிக் கடலரணும் பழங்காலத்தே இவர்கள் உடையராயிருந்தனரென்பது, பழைய இலக்கியங்களால் அறியக்கிடந்தது. போரில் இறந்த வீரரைப் புதைக்குமிடத்தில் அவரது போர்ச்செயலை ஒரு நெடுங்கல்லிலெழுதி நட்டு, அதன்கண்ணே அவரைப்பொறித்து, மாலை பீலி முதலியன சூட்டித் தெய்வமாக வழிபாடுபுரிதல் பழைய தமிழரது வழக்கமாகும். இதனை, “வீரக்கல்” என்னும் பெயருடன் இப்போது அகப்படும் சிலைகளால் நன்றாக அறியலாகும். இச்சிலைகளிரண்டை. ஸ்ரீமத்-து. அ. கோபிநாதராயரவர்கள் அரிதிற்கண்டு “செந்தமிழி”ல் வெளியிட்டிருத்தலைப் பலரும் அறிவர்.

(தொடரும்)

பொ. பாண்டித்துரை.

ஒளிவீசும் ஜீவஜெந்துக்கள்.

PHOSPHORESCENT ANIMALS.

[ஸ்ரீமத்-வே. நரசிம்மஐயங்காரவர்கள், M. A., B. L., எழுதியது.]

மின்மினிப்பூச்சியெனப் பெயர்கொண்ட ஒரு சிறுபூச்சி, இராக்காலங்களில் சிலமரங்களைச் சுற்றிக்கொண்டு கூட்டங்கூட்டமாய் ஒளிவீசுவதை நாம்யாவரும் பன்முறையும் பார்த்திருக்கிறோம். இளைஞர்கள் அவற்றைப்பிடித்துச் சிறுபெட்டிகளில் அடைத்தும், ஒளியுண்டாம்பாகத்தைத் தொட்டுப்பார்த்தும், இன்னும் வெவ்வேறுவிதமாக அதைத் தொந்தரவுசெய்வதும் யாவருமறிந்தவிஷயம். எனினும், அங்ஙனம் அது ஒளிவிடுதற்குக்காரணம் யாதென்று யோசித்தாவது, பிறரைக்கேட்டாவதிருக்கமாட்டார்கள். பிறரைக்கேட்டிருப்பினும், அவர் "அது அப்படித்தானிருக்கும், அது ஈஸ்வரசிருஷ்டி" என்று விடைபகர்ந்திருப்பார்கள். அவ்வண்ணம் ஒளியுண்டாவதற்குக் காரணம் அதனுடம்பின் நுனிப்பாகத்தில் "பாஸ்பரஸ்" என்ற மேற்றிசைப்பேர்கொண்டதும், "நிபாக்கினி" என்ற சுதேசப்பேர்கொண்டதுமாய ஒருவகைத் தாதுப்பொருளடங்கிய அங்கமொன்றிருப்பதினாலும், அப்பொருளுக்குத் தீயினுதவியின்றித்தானே யொளிவீசுந்திறமுள்ளதாலும், என்று கண்டறியப்பட்டிருக்கின்றது. இவ்வித சம்பவத்துக்குச் "சூடற்ற ஒளிவீசல்" எனப்பெயர் கொடுக்கலாம். மின்மினிப்பூச்சியைக் கையால் தொட்டுப்பார்த்திருப்பவர் ஒளியுண்டாமிடம் சுடாமலிருப்பதைக் கண்டிருப்பார்கள். சிலபொருள்களை மிகுந்த வெளிச்சத்தில் அதிகநேரம் போட்டுப் பின்பு அவற்றை இருட்டிற்கொண்டுபோக அப்பொருள்கள் ஒளிவீசும். அத்தகைய சக்திக்கு, பூதபௌதிக சாஸ்திரங்கற்றோர் அப்பெயர் கொடுத்தனர்.

இங்ஙனமே, தீயின் சம்மந்தமின்றி மின்மினிப்பூச்சிபோல் தாமேயொளிவீசும் உலோகங்களும், தாதுப்பொருள்களும், தாவரங்களும், ஜீவப்பிராணிகளும் பலவுள. உலோகங்களிற் பிரதானமாய் அவ்விதம் ஒளிவிடுவது அப்பிரகமாம் (Mica) அதை இரண்டுதுண்டாவுடைக்குங்கால், பிளக்கப்பட்ட பாகத்தினின்று ஒளிவரும். அதற்குக்காரணம் அவ்விடத்திருக்கும் மின்சாரம் இரண்டுவகையாய்ப் பிரிவதினாலேயே. இம்மாதிரியே, தண்ணீரானது பனிக்கட்டியாய் உறையும்போது ஒளிவீசுமாம். அவ்விதமே வேறுசில தாதுப்பொருள்கள் ஜலரூபத்திலிருந்து கட்டியாக அல்லது ஸ்படிகமாகமாறும்போது ஒளிவீசுகின்றன. இனி, இத்தகைய மினுமினுப்பு உயிருள்ளவற்றிலுமுண்டென்பது பின்வருவனவற்றால் விளங்கும். இச்சம்பவத்தை, தாவரங்கள் சிலவற்றுள்ளுங்காணலாமென்று முதன்முதல் கண்டுபிடித்தவள் ஒருபெண்ணாம். அவளோ, தாவரசாஸ்திரத்து மிகநிபுணரும், அச்சாஸ்திரத்தை சாஸ்திரவிதிப்படி கற்கவேண்டிய முறைகளை முதன்முதல் ஏற்படுத்தியவரும், கி. பி. பதினெட்டாம் நூற்றாண்டில் வசித்தவரும், ஸ்வீடன் (Sweden) தேசத்துப்பிறந்தவருமாகிய லின்னியஸ் என்பவரின் குமாரத்தியாம். தனது தகப்பனாருக்காக பற்பல செடிகளினின்றும் பூக்கள் கொய்துவருங்காலத்து, அத்தேசத்துச்சில சிகப்பு அல்லது பொன்னிறம்பெற்ற மலர்கள் தாமே ஒளிவீசுவதைக் கண்டுபிடித்துத் தன் தந்தையிடஞ் சொன்னாள். அங்ஙனமே, ப்ரஸீல், இத்தலிமுதலிய தேசத்துள்ள சில காளான்களும் ஒளிவீசுவதாக உயிர்நூற்புத்தகங்களிற் கண்டிருக்கிறது. ஆயினும், வெவ்வேறு நிறத்துடன் அற்புதமாக ஒளிவீசுவன சில ஜீவப்பிராணிகளே.

இவை வீசும் ஒளி வெவ்வேறு நிறத்தது. மின்மினிப்பூச்சி, சிலவகைப்பூரான், சிலவகைப்புழுக்கள் பசுமையாகவும், இத்தலிதேசத்துள்ள மின்மினிப்பூச்சி நீலமாயும், கடலின்மேற்புறத்தும், பாதாளத்தும் வசிக்குஞ்சில ஜீவஜெந்துக்கள் நீலமும் பசுமையுங்கலந்தும் ஒளிவீசுகின்றன. "இரதியின் அரைஞாண்" என்று விநோதப்பேர் பூண்டு கடலின் மேற்புறத்துவசிக்கும் ஒருமெல்லிய ஜீவப்பிராணி வீசும் ஒளிமிகச்சிவந்தது. இதன் வனப்பேவனப்பு! இதைப்பார்ப்போர் இரதிக்கேற்ற ஆபரணமென்றே மெச்சுவார்கள். இங்ஙனமே ஆங்கிலத்தில் ஸால்பா என்ற பெயர்கொண்டு கடலில்வசிக்கும் மற்றொரு ஜீவப்பிராணி வீசும் ஒளியுஞ்சிவந்தது. வேறொரு ஜீவப்பிராணி முதன்முதல் சிவப்பாயும், பின்பு நீலமாயும், அதன்பின்பு பசுமையாயும் மாற்றிமாற்றி மிகஅற்புதமாய் ஒளிவீசும்.

இனி, ஒளிவீசுமங்கங்கள் இன்னின்னவெனச் சற்றுகவனிப்போம். "களிமீன்" முதலியவற்றைப்போன்ற மிகத்தாழ்ந்த ஜீவப்பிராணிகளுள் ஒளிவீசுவது ஒரு தனி அங்கமன்று. அவற்றினுடம்பு முழுதினின்றும் மினுமினுப்புண்டாகும். வேறுசிலவற்றுள், உடம்பின் சிற்சிலவிடங்களினின்றும், வரிசையாக விளக்கேற்றி வைத்தாற்போல் ஒளியுண்டாகும். புழுக்கள், பூரான்கள் இவற்றைப்போன்ற வேறுசிலவற்றில், அவற்றின் கால்களினின்று பிரகாசமுண்டாகும். மின்மினிப்பூச்சியிலும் அதைப்போன்ற மற்றவற்றிலும் வாலின்புறமிருந்து ஒளியுண்டாம். மெக்ஸிக்கோ என்னுந் தேயத்து மின்மினிப்பூச்சியில் மார்பினின்று ஒளிபிறக்கும். கடலின் பாதாளத்து வசிக்குமீன்களுக்குள், அவற்றின் கண்ணுக்கருகாமையிலாவது, உடம்பினிருபுறத்திலுமாவது ஒளிவிடுமங்கங்கள் உண்டு. இறந்தழுகுஞ்சவங்கள் சிற்சிலசமயத்து ஒளிவீசுவதுமுண்டு. ஆனால் இதினுமாச்சரியம், உயிரோடு வாழுஞ்சில மனிதர்களே அங்ஙனம் ஒளிபரப்பிநின்றதாக எழுதிவைத்திருக்கிறார்கள். அதற்குக்காரணம் சிலவியாதிகள் தாமென்று மேனாட்டு வைத்திய நிபுணர் சாதிக்கிறார்கள். அஃது எவ்வளவு உண்மையோ யாமறியோம். சிற்சிலசமயத்து இராக்காலத்துக் கடலில் பற்பலவிடங்களில் திட்டுத்திட்டாய் வெளிச்சந்தோன்றுவதைக் கடற்கரையோரத்தில் வசிப்போர் கண்டிருக்கலாம். அவ்வெளிச்சத்திற்குக் காரணம் கடலின்மேற்புறங் கூட்டங்கூட்டமாய்த்தோன்றும் சிறியசிறிய பிரதம ஜீவிகளும் ஓட்டுச்செந்துக்களும் வெளிவிடும் ஒளியே.

இங்ஙனம் ஒளிவிடுவதால் அவ்வப்பிராணிகட்கு உண்டாகும் பயனென்ன? அப்பிராணிகட்காவது மற்றவைக்காவது அதனாற் பயனுண்டென்பதற்கு ஐயமின்று. கடல்வாசிகளிற்சில ஒளிவீசுகின்றனவென்று முன்னமே சொன்னோம். இவற்றை மற்றப்பிராணிகள் தீனியாகக்கொள்வதில்லை. என்னை? அவற்றிடம் ஏதோவொரு துர்க்குணமோ விஷமோ இருத்தலினாற்றான். அத்துர்க்குணத்தைத் தம் வெளிச்சத்தால் பிறஜெந்துக்களுக்குப் பகிரங்கப்படுத்துகின்றனபோலும். இப்படி வெளிச்சமேற்ற ஜெந்துக்கள் சிக்கியவலையில் மீன்கள் சிக்குவதில்லையென்று செம்படவர் பலர் சொல்லக் கேட்டிருக்கிறோம். ஆகவே வேறுபிராணிகள் கொம்பென்றும், பல்லென்றும், நகமென்றும், விஷமென்றும் பற்பல உறுப்புக்கள் தற்காப்புக்காரணமாகப் பெற்றிருப்பதுபோல், இவையும் அக்காரணங்கொண்டே ஒளிவிடுமுறுப்புக்களைக் கொண்டிருக்கின்றனவாம். கடலினடிப்புறத்துவாழுஞ் சிலமீன்கள் இவ்வித உறுப்புக்கொண்டிருக்கின்றனவென்று முன் சொல்லப்பட்டது. அங்கு இரவானாலும் பகலானாலும் இருண்டேயிருக்குமாதலால், கடலடியில் அங்குமிங்கு மோடிவாழும்பொருட்டு இவ்வுறுப்புக்கள் அவற்றிற்குப்பெருந்தீபம் போல் கொடுக்கப்பெற்றிருக்கின்றன. இன்னுஞ்சில ஆண்பெண்ணென்று வேற்றுமைதோன்றும்பொருட்டு, இவ்வுறுப்புக்களைக் கொண்டிருக்கின்றன. மின்மினிப்பூச்சியே அதற்குகாரணமாம்.

"இயல்வது கரவேல்."

(முற்றொடர்ச்சி.)

அது கழிபெருங்காதல் கொண்டதலைவன்மாட்டுக் காமப்பேரன்பை யுணர்த்தாநிற்கும். அக்குறிப்பை யுலகங்காணின் அலர்தூற்றுநிற்கும்; அது அகத்தின்கண் நிகழவேண்டிய மறைபொருளாகலின். இதுபற்றியே காமவின்பத்தினை யகமென்றதுமாமென்க. இன்ன தன்மைத்தென வுணர்த்தக் கூடாததும், உணர்த்தத்தகாததுமாய அக்காமக்குறிப்பினைச் சாயலாற் கரந்து வெளிப்படுத்தற்கவென்பது. இனி நலம், இது செய்கையிடத்ததாய்த் தலைவனோர் வெளிப்பட்டுத்தோன்றும் உவகைமிகுதி. இன்பங் கூடுதற்கு இதுவும் வேண்டுவதாகலின் நாணத்தால் அவன்மாட்டு ஒளியாதே யென்பதாம். இவ்விரண்டழகுந் தலைவற்குஞ் சிறபான்மை யொக்கும். இனி; ஒண்மையென்பது அறிவுடைமை, அதனைக் கரத்தலாவது பிறரது திருவிற் பொறாமைகொண்டு அவரைக் கெடுக்குநெறியே தீமையை நன்மைபோலக் காட்டியுணர்த்துதலும், அவரது தீநெறியுணர்வைக் கண்டுவைத்துந் திருத்தமுயலாதிருத்தலும், தலைவன்றன் மடமையைக்கண்டும் அவர்க்கு உறுதி கூறாதிருத்தலும் பிறவுமாம். இதனை

'அறிகொன் றறியா னெனினுமுறுதியுழையிருந்தான் கூறல் கடன்' எனவும் 'மானத்தார் குற்றங் கடிந்த வொழுக்கமும்' எனவும் வருவனவற்றாலுணர்க. அற்றேல்; 'வெளியார்முன், வான்சுதைவண்ணங் கொளல்' 'நன்மொழியைச் சிற்றினமல்லார்கட் சொல்லல், கற்றறிந்தார் பூண்டகடன்' 'செல்லிடத் தல்லதொன்றுரைத்தல் செல்கலா, நல்லறிவாளரி னலிந்த நாவெலாம்' எனப்பிறரெல்லாம் ஒண்மையிற் கரவுகூறினரே யெனின்; அவர்கூறும் ஒண்மைமொழி அக்கீழ்களது உணர்விற் படாவாகலின் அவர்க்குப் பயனிலையாகவே கூறவேண்டாவாயின வென்பது. அது கரவுமன்று. கரவென்பது ஒருவன வேண்டியதொன்றை யுதவாமை. வேண்டாதும் மேற்கொள்ளாது மிருப்பார்க்கு ஒன்றைச்சொல்லாதிருக்கை கரவாகாதென்ப. இவற்றுள் வெளியார்- வெளிற்றறிவுடையார். வெளிறு-உள்வயிரமில்லாமரம். ஒண்மை (அறிவுடைமை) யுடையார் ஒளியாரெனப் படுதல்போல வெண்மை (அறியாமை) யுடையார் வெளியா ரென்றாயினர். அதற்கேற்பச் சுதைத்தன்மை பெறுகவென்றார். அவரவர்க் கஃதியலாயிற்று. ஆகவே ஒண்மை ஈண்டு இயல் என்பது பெற்றாம். உலகியல் எனக்கூறப்படுவதுங் காண்க.

இனி; இயல்வது கரவேலெனக் கரத்தலை மறுத்ததனால் இயல்வது கரத்தலாற் றீங்குண்டென்ப துணரப்படும். அத்தீங்கு தனக்கும் பிறர்க்கு மெய்துந் தீங்கென்றிருவகையாம். பிறரென்றதுவறியரா யிரப்பாரையென்க. வறியராயினார் இரத்தலின்றி யிருத்தலரிது. இரக்கப்புகுந்தும் இரக்கப்படுவார் கரப்புடையராயின் அவர் என் செய்வர்! இரக்கப்படுவார் கரப்புடைய ரல்லராயிருத்தல் வேண்டுமென்பதாம். இதனைக் 'கரப்பிலார் வையகத்துண்மையாற்கண்ணின் - றிரப்பவர் மேற்கொள்வது' என்பதனானுணர்க. கரப்பிலாரைக் கண்டபொழுதே இரப்பார் துன்பம் இருந்தவிடந் தெரியாமற் றொலைந்துபோம். இரப்பார்க்குக் கரப்பாரை யுலகமேயன்றி யறக்கடவுளும் வெறுக்கும். 'இலமென் றசைஇ யிருப்பாரைக் காணின் - நிலமென்னு நல்லா ணகும்' என்றார் பிறரும்.

இனி; இயல்வது கரவேலெனக் கூறி ஈதலை யுணர்த்தியதனால் அதனானெய்து நன்மையுங் கருதப்படும். ஈவார் - செல்வராயினார்.

அச்செல்வம் முன் ஈதலைச் செய்ததனான் எய்தியது பின்னுமவ்வாறு செல்வம் எய்தவேண்டுமாயின் இயல்வதுகரவேலென்றனர். எனவே யாண்டும் பொருள் சேரற்குக் கரவாதீதல் வேண்டுமென்பதாயிற்று. கரவாது கொடுப்போர் மறுமைக்கட் பொருளுடைய ராவரென்பதை 'அற்றா ரழிபசி தீர்த்த லஃதொருவன், பெற்றான் பொருள்வைப்புழி' எனவும், 'ஒளியான் விருந்திற்கு...... ஏதன்மின் மண்ணுண்டுகொள்வான் குடிவாழ்க்கை கூர்ந்து' எனவும், 'நசைஇ யவர்க்குக் கூடுவதீவானை, நாடுவ விண்ணோர் நயந்து' எனவும் பிறர்கூறுமாறு கண்டு தெளிக. இதற்கு இரப்போரே சான்றாவர். முன் ஈயாதாரன்றே பின் இரக்கப் புகுந்தார். அவரைக்கண்டு வைத்தும் இரப்பார்க்குக் கரக்கவிசைந்த தென்கொலோ! இரப்பார்க்குக்கரவாது ஈவாரையுண்மையாள ரெனவும், உறுதியாளரெனவும், தூய்மையுடையா ரெனவும், ஆண்மையுடையாரெனவும் உலகம் புகழ்தலேயன்றி அவர்க்கெய்திய செல்வம் 'பொத்தினின்றிக் காழ்த்தமர' மெனவுங் கூறப்படும். பொத்தின்றிக் காழ்த்தமர மென்பது பொந்தில்லாமல் வயிரம்பற்றிய மரமாம். விரிக்கிற் பெருகும்.

இனி; இயல்வது கரவேலென்றதனானியலாதது கரத்தல் கூடுமென்பதுங் கருதப்படும். கருதப்படுமேனுங் கரத்தல் பொருண்மேலதாகலிற் பொருளிலாதார்க் கியல்வதில்லையாதல்வேண்டும். ஆகவே யக்கருத்து வேண்டப்படாதென்க.

இனி; இயல்வதுகரவேல் என்பதற்கு (இரப்பவர்க்கு உண்ணற் கொடுக்கக்கூடுமான) சத்தியை ஒளியாதே. ஒளித்தால் அது தீராப்பழியாமென்பது கருத்து எனப் பொருளுரைத்தாருமுளர். சத்தியென்பது வன்மையல்லது ஆற்றலெனப்படுமாகலானும், ஆற்றலைப்பகைப்புலத்திற் காட்டுவதேயன்றி இன்மை துரப்பவந்தெய்தும் இரப்பவர் மாட்டுக் காட்டன் மரபும் ஆண்மையுமன்றாகலானும், இரப்பவர்க்கு ஈகையே வேண்டப்படுவதாகலானும், சத்தியையென்பதனை 'அருளென்ப சத்தி.....' யென்பவாகலின் அருளைக் கரவேலெனக் கொள்ளலாமெனிற்; கூடுமான வென ஒரு சொல்லை யவர் முற்பெய்தமையின் அருள் கண்டிக்கப்படாத வியல்பிற்றாகலின் அச்சொல் வேண்டப்படாவாகலானும், பேருள் என வொன்று பெறப்படுதலின்

அருள் பகுக்கப்படலாமெனின்; பகுக்கப்படுமேனுங்கடவுட்கே யன்றி யேனைமக்கட்கு அப்பெயர் செல்லாதாகலானும், சத்தியென்பது யோகரூடியாய்ச் சிவபிராட்டிக்கே செல்லுமாகலானும், 'அவற்குக் கொடுக்கச் சத்தியில்லை' யென்பதுபோலச் சத்தியைப் பொருண்மேலதாக்கிக் கூறலாமெனின் அதுதானும் ஆகுபெயர்த்தன்மைபெற்று அவ்வாறு பேசப்படுமேயன்றி நேரானபொருளில் வாராதாகலானும், கொடுக்கக்கூடுமானது பொருளேயாய்ச் சொல்லெச்சமாய் நிற்றலானும், சூத்திரப்பொருளியைபு மதுவேயாகலானும், பலபொருட்குஞ் செல்லுமாறு நுண்பொருளினமைத்து இயல்வதெனக் கூறினமையானும் அவ்வுரைபொருந்தாதென்க. இது கருதியே இயல்வது என்பதற்குக் 'கொடுப்பதற்கிசைவது' யெனப்பொதுப்பட மற்றொருவர் உரைதந்தனர். இது முழுதும் பொருந்துமென்க.

இனி; இயல்வது என்பது இயல் என்னு முதனிலைமீதே ஈதற்பொருளுணர்த்துந் துவ்விகுதியும், அகரச் சாரியையும், எதிர்காலங்காட்டும் வகரவிடைநிலையும்வந்து புணர்ந்து இயல்வது எனமுடிந்த தொகுதியொரு சொல் எனக்கொண்டு இனி ஈயும் பொருளைக்கரவேலென இளைஞர்க்குக் கூறியதெனலும் பொருந்துமென்க. கையிலுள்ள பண்டங்களை யொளித்து இல்லையென்று சொல்லுதலே இளைஞரெல்லார்க்கு மியல்பு. அவ்வியல்பாற் பிறர்க்குத் தீங்கில்லையாயினும் நாளடைவில் அவ்வழக்கம் முதிர்ந்தால் அவ்விளைஞர் குமாரராகும் பருவத்து இரப்பார்க்குக் கரக்குந் தன்மையிற் கொடுவந்து விடுமென்பது கருதி இளம்பருவத்திற்றானே யதனையொழிக்கும் பொருட்டு அவ்வாறு கூறினாரெனலுமாமென்க.

இனி; இயல்வது கரவேலெனக் கூறியது முயற்சியுடையார்க்கேயன்றி யேனை மடிகட்கன்று. முயற்சியுடையார் பொருணிலைமையும், பொருள் செயல்வகையும், அது வந்தவாறும், அது பயன்படுநெறியும், அதனானெய்தும் பயனும் உணர்வர். உணர்ந்து பொருளளவிற்கேற்பத் தாமுந் துய்த்துப் பிறர்க்கும் வழங்குவர். அவர் தாளாளரெனவும் வேளாளரெனவுஞ் சொல்லப்படுவர். 'தாளாளனென்பான் கடன்படா வாழ்பவன், 'வேளாளனென்பான் விருந்திருக்க வுண்ணாதான்' என்ப. அவர் 'இரவாரிரப்பவர்க்கொன் றீவார் கரவாது, கைசெய்தூண் மாலையவர்' என்ப. ஏனை மடிகளோ வெனிற் பொருள் செயல்வகை யுணராது சோம்பிக்கிடந்து கடனுண்டு வாழ்வர். அவர்க்கேது இயல்வதும் கரவா தீவதுமென்க. அன்றிப், பெற்றோர் ஈட்டிவைத்த பொருளைப் பூதம்போற்காத்துத் தாமுந் துய்க்க வகையறியாது பிறர்க்கும் வழங்க மனமிசையாது பயனின் மக்களாய் நடைப்பிணம்போலுழலா நிற்கும் வச்சைமக்களும் மடியினத்தவரே யாவர். அன்னோர்க் கறிவுறுத்துமாறும் இது சொல்லப்பட்டதென வுணர்க.

இனி; முதற் சூத்திரத்து அறத்தான் அகத்தூய்மையும், இரண்டாஞ் சூத்திரத்து வெகுளாமையான் அதற்கு உறுதிப்பாடு முணர்த்தி, அஃதுறுதிப்படவே யதனை யிவ்வளவிற் செய்கவென மூன்றாஞ் சூத்திரத்து ஈகையினளவு கூறுதலிற் சூத்திரவியைபு விளங்கும். இவ்வாறே திருவள்ளுவரும் அகத்தூய்மையி னுறுதிபெற்ற வுயர்ந்தோர் நடையை யொப்புரவாற் கூறி, மறுமையைக் குறித்த ஈகையை இம்மைக்கண்ணதாகிய அவ்வொப்புரவின்பின் உணர்த்தியதிகார வியைபு வைத்தவாறுங் காண்க.

> "ஏதம் பெருஞ்செல்வந் தான்றுவ்வான் றக்கார்க்கொன்
> றீத லியல்பிலா தான்."—திருவள்ளுவர்.

கோ. வைத்தியலிங்கம்பிள்ளை.

உ

திருச்சிற்றம்பலம்.

பெரியபுராண அரும்பத விளக்கம்.

:o:

[பழைய ஏட்டினின்று எடுக்கப்பட்டது.]

(முற்றொடர்ச்சி.)

(௮௫௭) கணுக்கள் பக்கத்தே தறிக்கப்பட்டு நீண்ட.

(௮௫௯) வைகையாற்றில் சமணர்களுடைய சமய எல்லை அழிவால் ஆர்ந்ததப்பம்.

(௮௭௦) திருவிய மகத்திலுள்ளும் - அழகிய மிகத்தினுள்ளும்.

(௮௭௭) கண்விடுத்த - கண்ணைவிடுத்த. காழியிலுள்ளாருடைய இளஞ்சிங்கம் தங்குமிடம், திருநீற்றுத்தொண்டருடைய குழாஞ்சாருமிடமாகிய இலக்குமி வீற்றிருக்கின்ற மடம்.

(௮௭௯) சார்வு - சார்ச்சி; வருதல்.

(௮௮௦) பெரிய தவத்தையுடைய அவருக்குமுன்னே இரண்டாகிய தாமரைமலர்போன்ற கையைக்குவித்தருளி, அரியதவத்தையுடைய அப்பரே, என்னை அறியாதபருவத்தேஎடுத்துஅடிமைகொண்ட பெருந்தகை எம்பெருமாட்டியுடனே இருந்ததே என்று.

(௮௮௧) அண்ணலார்தமை - சிவபெருமானை.

(௮௮௩) பொருளினிலக்கணத்தை நூலின்கட்பாடிச் சங்கப்புலவர்க்கீந்தானை.

(௮௯௨) மந்திரியாருடைய பதி.

(௮௯௪) இங்கே நான் கூறியதனுக்கிசைந்தீராகிற் சிவனுடையசமயத்தைப் போற்றியிருப்பீரென்று.

(௮௯௮) நாவலமே - நாவெற்றியே.

(௯௦௭) இத்தகைய செயற்கிவரைக் கொல்லாது இதனைப்பொறுக்கில் தங்கணிலைமேலெடுப்பரென்று.

(௯௦௮) வருமிடத்திலழகாம் நமக்கு, தருக்கத்தில் இவர்களுடைய பொருணிலைமையை, மாறாதபடி வாதிக்குமிடத்தில் வருமுறை சொல்கின்ற திருப்பதிகம் எழுதும் தொண்டராய சம்பந்தசரணாலயர் திருஞானசம்பந்தப்பிள்ளையாருடைய திருவாக்காலே இடியிடித்துவிழப் பௌத்தனுடையதலை உருண்டுவீழ்க என்று மனம்பொறாதவுரையை முன்னேவிட்டார்.

(௯௦௯) சிவபெருமானுடைய சைவநெறியாணையைச்செலுத்த எதிரேவிலக்கும் இடையூற்றை எறிந்து நீக்குகின்ற.

(௯௧௦) அத்திரவாக்கதனால், "புத்தர் சமண்கழுக்கையர்" என்கின்றதேவாரமாகிய இத்திருவாக்கால். நெறி - வழி.

(௯௧௧) அவர் தம் சைவவாய்மையோ எனமருண்டு எஞ்சலின் மந்திரவாதமன்றி எம்மோடெதிர்ந்து பொருள்பேசுதற் கிசைவதென்று மனத்திற்கொள்வாராய்.

(௯௧௩) சத்திரமண்டபம்—சத்திரத்துள்ளமண்டபம்.

(௯௧௪) எவ்விடங்களினு நிகழ்கின்ற திருச்சின்னத்தைத் தடுத்த புத்தனுடைய பெரிய தலையைப் பொடியாக்கும் உவமையற்ற சம்பந்தசரணாலயர், உங்கடலைவனையும் பொருளையும் உரைக்குகஎன்று கூறப், பொருந்திய தருக்கத்தை மேற்கொண்டு கூறுகின்றான்.

(௯௧௫) கற்பகாலங்களிலெல்லாம் பிறந்திறந்து பதவிமாறும் கணபங்க இயல்புதன்னால் அழகையுடைய தானந்தவம் தன்மைபுரிந்த நிலைமையையுடைய யோகமென்னுமிவற்றைப் பொருந்தச்செய்தால் உற்பவிக்கின்ற ஒழிவின்றி அறிந்த ஞானத்தையுடைய ஒழியாதபேரின்பம் பொருந்திய முத்தியைப்பெற்றான்; ஆரெனில், பற்பலரும் பிழைத்துய்யுமாறு தருமத்தை முன்கூறின பான்மையானாகிய யாங்கள் வணங்கும் பரம்பொருள் என்றான். தன்னில் முத்திபெற்றானென வியையும்.

(௯௧௬) என்று கூறிய சாரிபுத்தனெதிரே வந்தெதிர்த்த பெருந்தவத்துப் பெருந்தன்மையையுடைய அன்பரும் நன்று உமது தலைவன் பெற்றானென்று நாட்டுகின்ற முத்திதான் யாவது என்றார். நின்ற உரு, வேதனை, குறிப்பு, பாவனை, விஞ்ஞானம் என்ன நிகழ்ந்த ஐந்தும் ஒன்றிய கந்தங்களினீக்கமே முத்தியென்று கூறினான்.

(௯௧௭) அச் சாரிபுத்தன் கூறியதைக்கேட்ட சம்பந்தசரணாலயர் அதனை அனுவாதித்து அவனைப்பார்த்துப் பொருந்திய விஞ்ஞானத்துடனாகின்ற பஞ்சகந்தங்களுந் தாமழிந்து கெட்டனவாயின், "அப்பொழுது நுந்தலைவனுமிறந்தான். அங்ஙனமாகவும்" தலைவனீங்குளனென்று அவனுக்குவிடையமாக எவற்றையும் முன்செய்த

தற்கு விகாரமாக்கி உயர்ந்தவடிவையுண்டாக்கி விழவெடுக்கும் பூசையைக் கொள்பவர் யார், சொல்வாயாக என்றுகூற உரைக்கலுற்றான்.

(௩௧௮) கந்தமாம் வினையுடம்புநீங்க எந்தலைவன் முத்தியிற்கலந்துளன் என்றான்; அவனங்ஙனங்கூறக், காண்கின்ற இந்திரியங்கண்முதலான கரணங்களுமில்லையே, அவனுக்கு உணர்ச்சியும் இல்லையென்றார். பழைய அறிவிலனாகி நித்திரைசெய்தோனை நிந்தனைசெய்து அவனுடம்பின்மீது ஏறிவிளையாடினோர்க்கு வந்தவினைப்பயனைப்போல நந்தலைவனை வழிபட்டார்க்கும் நன்மைவருமன்றோ எனமறுத்துக் கூறினான்.

(௩௧௯) சொன்னவார்த்தையைக்கேட்டருளி அன்பரும் தொடர்ந்த வழிபாடு பலவற்றைக்கொள்வோனுக்கு அவற்றினுடன்பாடும் வெறுப்பும் இல்லை, ஆனபொழுது வழிபாடுசெய்தோன் பெறுதலில்லை என்றார். முன்னவைகளுள் விருப்பும் வெறுப்புமின்றி மிக்க நித்திரையிற்கிடந்தோனைக் கோபித்துக்கொன்றால் உயிர்போய்க்கொலையாகி முடிந்ததன்றோ.

(௩௨௦) இப்படி இயையும் என இசைந்து நீ இங்கே எடுத்துக்காட்டிய நித்திரைசெய்யுமியல்பினன்போல, உடம்பிலுள்ள கரணங்களையும் உயிரையும் இங்கே வேண்டுகின்றாய் நந்தலைவனுக்கவையானபொழுது சொல்லிய அக்கந்தத்தின் விளைவிலதாய்த் திரிபில்லாத மோக்ஷத்திற்சென்றிலனுமாயினன்.

(௩௨௧) அவ்வார்த்தையைக்கேட்டு எதிர்வசனமறைவதின்றி முத்தியிலடைந்தானென்னு மதுவும்பாழாம். வருத்தத்தோடு நின்றவனை எதிரேநோக்கி ஞானத்தையுடைய கடலமுதம்போன்ற ஆளுடையபிள்ளையாரது அடியார் பொய்பாக முத்தியிற்போன நந்தலைவன்முன்னரே பொருளெல்லாவற்றையும் உணர்ந்துரைத்துப்போனானென்று கூறினை? எங்ஙனம் அவனெல்லாவற்றையுமுணர்ந்தது, இதையும் இல்லதுரைத்தியாயினும் ஏற்போம் என்றார்.

(௩௨௨) உணர்வு, பொதுச்சிறப்பென இரண்டினுள் முன்னது உளவான மரப்பொதுமையையுணர்த்துதல், ஒழிந்த சிறப்புமரங்களில் வைத்தின்னதென்றல்.

(௩௨௩) சொன்ன அக்கினிபோ வடிவினதாம்.

(௩௫௪) "உற்றுமைசேர்வது" என்னுந் திருவியமகத்தை மகிழ்ச்சியாலெடுத்தோதி "வெற்றியாகமீ னவனவையெதிர்நதி மிசைரு கரனென்" ஈற்றுத்திருப்பாட்டைப்பாடி முடித்தருளினார். வெற்றியாகவருகின்ற அபாயஹஸ்தத்தையுடையாரே என்பது பொருள்.

(௩௬௩) கன்னியினுடைய. காப்பு - இடம்; அல்லது ஊர்.

(௩௬௫) அணைபவனுக்கு முன்னே, பூதங்கள் பாடும்படி. நின்றாடுகின்ற சிவபிரான் திருநடனத்தைப் புலப்படும்படி காட்ட.

(௩௭௪) ஓத்து—வேதம்.

(௩௭௮) அடைவு—தகுதி.

(௩௮௮) கப்பலைத்து—ஒலித்து; கப்பலைஎன்னும் பெயரடியிற்பிறந்த வினையெச்சம்.

(௪௦௧௧) திகழ்ந்த காலை—விளங்கிய உதயத்தில்.

(௪௦௧௨) புராதனரும், மூங்கிலிலேதோன்றின புனிதரும்.

(௪௦௧௫) ஒலிக்கின்ற வீரக்கழலையுடைய இந்திரனுடைய குலிசாயுதத்தால் வெட்டுண்ட சிறையைப்பெற்று அதன்பின் அவன்மேல் எதிர்க்குமாறு சிறகையடித்துப்பறக்க முயன்று உயர்ந்தனபோலும் உயர்ந்த குறிஞ்சி நிலத்தில் எழுந்தருளிச்சென்றார்.

(தொடரும்.)

ஜி. சதாசிவம் பிள்ளை.

* * *

*ஈகை.

ஈகை எனற்கு பொன், கொடுத்தல் என்பன ஆகிய பலபொருள் கூறுவர். இவண் எடுத்துக்கொண்டது கொடுத்தல் என்பதுவே.

ஒருவர்தம்மிடத்துள்ள யாதானுமொரு பொருளைப் பிறிதொருவருக்குத் தருவது அனைத்தும் ஈகையென்றே கூறப்படும். அது மகனுக்கு அரசுகொடுத்தல் ஆகிய உரிமையிற்கொடுத்தலும், மருமகனுக்கு மகளைக்கொடுத்தல் ஆகிய வழக்கத்திற்கொடுத்தலும், அரசனுக்குத்திறை கொடுத்தல் ஆகிய அச்சத்திற்கொடுத்தலும், வாய்க்கரிசியிடுதல் ஆகிய அவலத்திற் கொடுத்தலும், சேரன் சோழனுக்கு விருந்துசெய்தல் ஆகிய ஒப்போர்க்குக் கொடுத்தலும், பெருமுடிவேந்தர்க்குக் குறுநிலமன்னர் குதிரைகொடுத்தல் ஆகிய உயர்ந்தோர்க்குக் கொடுத்தலும், வறியார்க்குப்பொன்கொடுத்தல் ஆகிய இரக்கத்திற் கொடுத்தலும் முதலியவாகப் பலதிறப்படும் என்பர். இவ்வாறு பலதிறப்பட்டு நிற்குமேனும் ஈற்றிற்கூறிய இரக்கத்திற்கொடுத்தல் ஒழிந்தபிறவெல்லாம் ஓர்வித பரிவர்த்தனையேயன்றி ஈகையாகா.

“வறியார்க்கொன்றீவதேயீகை மற்றெல்லாம்-குறியெதிர்ப்பை நீரதுடைத்து.” என்பர் திருவள்ளுவர். ஆகவே உண்மையான கொடை அல்லது, ஈகையென்பது கொள்வாரால் எவ்விதபயனுங் கருதாது, தம்முள்ளத்தெழுந்த கருணைமேலீட்டினானே காலமிடமாதிய ஒன்றுங்குறியாது பிறர்க்குதவுவதேயாம்.

இதனை,

“ இம்மைச்செய்தது மறுமைக்காமெனும்
அறவிலைவாணிகன் ஆஅய் அல்லன்
பிறருஞ்சான்றோர் சென்றநெறியென
ஆங்குப்பட்டன்று அவன்கை வண்மையே.’’

---

* இவ்வியாசம் மதுரைத் தமிழ்ச்சங்கத்து எட்டாம் வருஷோத்சவ தினங்களுள் ஒன்றாகிய 1909-௵ மே௴ ௨௫வ ஸ்ரீமாந்-பொ. பாண்டித்துரைத் தேவரவர்கள் அக்கிராசனம் வகித்த வித்துவச்சபையில் ஸ்ரீமத்-எம். கே. அப்துல்காதிறுராவுத்தரவர்களாற் படிக்கப்பட்டது.

என்னும் ௧௩௪-ஆம் புறப்பாட்டானும், அதனுரையானும், “ஆற்றுநர்க் களிப்போர் அறவிலைபகர்வோர்” என்னும் மணிமேகலை ௯௫-பக். ௧௦௨-ஆம் வரியானும் தெளியலாம்.

மானிடராகப்பிறந்த ஒவ்வொருவரும் புகழ் அடைய வேண்டும். புகழ்பெறாதவர் பிறவாதிருத்தலே நலம் என்பதையும், ஒவ்வொருவரும் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருஷார்த்தங்களையடைதற் குரியார் என்பதையும் மறுப்பவரிலர். இத்தகைய புகழைத்தருவதும் புருஷார்த்தங்கள் நான்கினும் பின்மூன்றையும் தரவல்லதாகிய முன்னிற்கும் தலைமைப்பாடுற்ற அறமாவதும் இந்தக்கொடையே யல்லதில்லை. இதனை—

“ தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று.
உரைப்பா ருரைப்பவை யெல்லா மிரப்பார்க்கொன்
றீவார்மே னிற்கும் புகழ்.
ஈதலிசைபட வாழ்தல துவல்ல
தூதிய மில்லை யுயிர்க்கு.”

என்னும் திருவள்ளுவரானும் ஈகையதிகாரத்தின்கீழ் புகழ் என்னும் அதிகாரம் அமைத்தமையானும் கொடையானே புகழ் பெறலாகும் என்பதூஉம்,

ஈதலறந் தீவினைவிட் டீட்டல்பொருளெஞ்ஞான்றுங்
காத லிருவர் கருத்தொக்க—ஆதரவு
பட்டதே யின்பம் பரனைநினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு.’’

என்னும் ஔவைப்பிராட்டியார் திருவாக்கான் ஈகையேயறமாகும் என்பதூஉம் நன்கு தேறலாம்.

இன்னும் கொடையே புகழ்பயப்பதாதலை தொல்காப்பியம் பொருளதிகாரம் புறத்திணையியலுள் (சூ-௨௧) “இடையில் வண்புகழ்க் கோடைமை.” எனக்கூறுதலானும், அதனுரைகாரர் “கொடைப்புகழுடையான் மூப்புப்பிணி சாக்காட்டுக்கு அஞ்சாமையின் அது வாகையாம் எனக் கூறுதலானும், கொடுப்போரை யேத்தலும் கொடா

தாரைப் பழித்தலும் வழக்காறுதலை அவர் அவ்வியலின் கண்ணே "கொடுப்போரேத்திக் கொடார்ப் பழித்தலும்" என்பதனாற் கூறுதலானும், கொடையானது புகழைத் தருவதுபோலவே கொடாமை பழிப்பைத் தருவதாகுமென்பதும் புலப்படும். புருஷார்த்தங்கள் நான்கையும் ஓரோர் மொழியாற் கூறவந்த மூதாட்டியார் ஈதலறம் எனக்கூறியது எவ்வளவு சிறந்த பொருளைத்தருவதாகின்றது. ஆகவே, அறமும் ஈகையும் சொல்வேறுபடுதலன்றிப் பொருள் வேறுபட்டதாக இல்லை. அறம் செய்தல் அவசியம் என்பது எல்லா மதத்தருக்கு மொப்ப முடிந்ததொன்றேயாம். அறத்தை வடநூலார் இஷ்டப், பூர்த்தம், தத்தம், என மூன்று வகுப்பாகக்கூறுவர். அவற்றுள்,

இஷ்டமாவது.—உலகமெல்லார் வாழக்கருதித் தெய்வங்களைப் பராவுவது. தென்புலத்தார்ப்போற்றல், மந்திரம், யாகம் முதலியன இதிலடங்கும்.

பூர்த்தமாவது—எல்லா உயிர்களும் இன்புறுமாறு செய்யும் பொது நிலைத்தன்மம், அன்னசத்திரம், வித்தியாசாலை, நீர்ப்பந்தல், மருத்துவசாலை முதலியன இதிலடங்கும். இதையே ஒப்புரவு என்பர் வள்ளுவர். ஒருவரைக்குறியாது பலர்க்கும் பயன்பட நிலைக்கச் செய்வதாகலின்.

தத்தமாவது:—பசித்தோர்க் கமுதளித்தல் முதலாக வறியோர்க்கு ஈகை.

இந்தத் தத்தமென்பதுவே நாம் இப்போது எடுத்துக்கூறும் கொடையென்று கொள்ளவேண்டும்.

கொடை, ஈகை, தானம் என்பன ஒருபொருட் சொற்கள்.

தமிழ்நூலார் இக்கொடையைப்பற்றிப் பலவாறு விதந்து பிரித்துக் கூறுகின்றனர். அறம்பொருளின்பம் அச்சம் நாணம் அவலம் இவற்றினடியாகவே கொடைக்குணம் பிறக்குமென்பர் ஒருசாரார்.

(1) ஒருவனுக்கு ஒருவன் தன்னால் ஏதேனும் உதவிசெய்யக் கூடுமாயின் தானே முற்பட்டு வலியச்செய்தல் தலைக்கொடை.

(2) அதனைப்பெறுவான் வந்து கேட்டபின் செய்தல் இடைக்கொடை.

(3) பெறுவான் கேட்டபின்னும் பல்காலலைத்துப் பின்னராற்றுவது கடைக்கொடை. இப்பகுப்புக் கந்தபுராணக்காரரது.

"என்னானு மோருதவி யாரானும் யார்க்கெனினுந்
தன்னால் முடியுமெனிற் றானே முடித்தறலை.
சொன்னால் முடித்த லிடையாகுஞ் சொல்லுகினும்
பன்னாட் கழித்துப் புரிதல்கடைப் பான்மையதே."

என்பது அவர் கூற்று. (பன்னூற்றிரட்டு ௫௬௧.)

(1) முற்றமக்குச் செய்த நன்றிக்காக அன்றியும், பின்பொன்றைப் பெறுங்கருத்தன்றியும், உரியகாலத்தே உரிய இடத்தே தக்கார்க்கீவது சாத்துவிகதானமெனவும்.

(2) இது நாம் செய்யத்தக்ககடமையென்றும், கருத்தின்றி முற்றமக்குச் செய்நன்றியைக் கருதிச்செய்வதும், இதனாலினி நமக்கொரு நலமுண்டெனக் கருதிச்செய்வதும் இராசததானமெனவும்,

(3) பொருந்தலுறுத பொருளொன்றைக் காலம், இடம்பொருந்தாமலுற இழிந்தார்க்கு அறிவின்றி வெறுப்புடன் கொடுத்தல் தாமததானம் எனவுங் கூறுவர் பகவத்கீதைகாரர். பின்வருஞ்செய்யுட்களாலுணர்க.

"முன்செய்காரியப்பொருட்டு மின்றியே முடித்திதனாற்
பின்பொருநற் பொருள்விளையு மென்பதுவும் பேணாதே
நன்குடைய காலத்தே நல்லிடத்தே நல்லவர்க்குத்
தன்பொருளைக் கொடுக்குமது சாத்துவிக தானமே."

சொண்டுசெயத் தருங்கரும மெனுங்குறிப்பொன் றின்றியே
பண்டுசிலர் செய்ததற்காப் பரிவோடு பண்ணினவு
முண்டிதனால் மேல்விளைவொன் றுணர்வோடிச் செய்வனவு
மெண்டிசையும் நிறைபுகழா யிராசதமாந் தானமே.

வாயாத தொருபொருளை வழங்காத காலத்தே
யேயாத நிலத்திடையே யிழிந்தகுலத் தவர்களுக்கே

யாயாத வறிவினொடு மப்பிரியத் தொடங்கொடுத்தல்
சாயாத பெருந்திறலோய் தாமதமாந் தானமே.

(பன்னூற்றிரட்டு-௫௭௪-முதல் ௫௭௬-வரை.)

"ஆதுலர்சாலை யைய மறுசமயத் தோர்க்குண்டி
யோதுவார்க் குணவுசேலை யுபூமேறுவிடல் காதோலை
மாதுபோகம் மகப்பால் மகப்பேறு மகவளர்த்தல்
வேதைநோய் மருந்து கொல்லா விலைகொடுத் துயிர்நோய்தீர்த்தல்.

கண்ணாடி பிறரிற்காத்தல் கன்னிகாதானங் காவே
வண்ணார் நாவிதரே சுண்ணம் மடந்தடம் கண்மருந்து
தண்ணீர் பெய்பந்தல் கோலத் தலைக்கெண்ணெய் சிறைச்சோறோடு
பண்ணான விலங்கூணல்கல் பசுவின்வா யுறை கொடுத்தல்.

அறவையாம் பிணமடக்க லறவைத்தூரியம் வருந்தா
திறுவியே யிடம்விடாமல் நிறையத்தின் பண்டம் நல்க
லூறுதி யாவுரிஞ்சுகின்றதறி யிவையோது மெண்ணான்
கறனிலை யபிதானங்க ளம்பிகை செய்யுமாறே."

என முப்பத்திரண்டு வகையாகக் கூறுவதொரு சாரார்கொள்கை. எமது மார்க்கவேதத்தில் தானத்தை ஸக்காத்தென்றும் சதக்காவென்றும் இருவகைப்படுத்திக் கூறியுள்ளார். ஸக்காத்தென்பது முஸ்லீமாகிய ஒருவன் தன் சொத்திலிருந்து வருஷமுடிவில் நாற்பதிலொன்றெடுத்து முஸ்லீமாகிய ஏழையெளியோர்கட்கே ஈதல். (இது ஒவ்வொரு மகமதியனுடைய கடைமையாகும்.) இதை வேதபாடையார் பறுலு என்று கூறுவர்.

சதக்காவென்பது முஸ்லீமாகிய ஒருவன் தன்மதத்தின்பொருட்டு தன்னிடம்வந்து யாசிப்பவர்களெவர்களாயினும் அவர்கட்குவேண்டுவ அளித்தல். இது ஒவ்வொரு மகமதியனுடைய இஷ்டத்தைப் பொறுத்ததாக விருக்கும். இதை வேதபாடையார் சுன்னத்துஎன்று கூறுவர். இப்பிரிப்புகளெல்லாம் ஒவ்வொரு காரணம் பற்றி உலகியல் நடத்தற்குவேண்டப்படுவனவேயாம். இங்ஙனம் பிரிப்பு நோக்காது பொதுமையாக நோக்குற்றுழித்தன்னினின்று ஒருபொருளைப் பிறர்க்கு விடுப்பதனைத்தும் தானமே என்பதும், இத்தானம் சுருங்கியபோதுதான், பாகுபாடுகள் தோன்றுமென்பதும், மனத்தில்தான

சக்தி அதிகரித்தபோது பாகுபாடுதோன்றல் சிறிதுமின்றிக் கரை கடந்து யார்யார் எதை எதை விரும்பினாலும், அக்குறிப்பறிந்துழி மனமகிழ்ந்து கொடுக்கநேரிடும் என்பதும் பண்டை நூலாராய்ச்சியுடையார் யாரு மறிவர்.

பாத்திரமறிந்து பிச்சையிடு, கோத்திரமறிந்து பெண்ணைக் கொடு என்பது வழக்கேயாயினும், இரக்கம் பெருகிய இடத்துப் பாத்திர ஆராய்ச்சி சிறிதும் சித்திக்காதாம். இங்ஙனமாகவே, பெறுவான் றன்மையைக் கருதாது கொடுத்தலைக்கொடைமடம் என்றுகூறுவர். பேகன் என்னும் வள்ளலைக்கூறும் பின்வரும் புறப்பாட்டில் இக் கருத்து விளங்குமாறு காணலாம்.

"அறுகுளத்துகுத்தும் அகல்வயற்பொழிந்தும்
உறுமிடத் துதவா துவர்நில மூட்டியும்
வரையாமரபின் மாரிபோலக்
கடாஅ யானைக் கழற்காற்பேகன்
கொடைமடம் படுத லல்லது
படைமடம் படான்பிறர் படைமயக் குறினே."—(புறநா-௧௪௨)

எனக்கூறும். இத்தகைய கொடைமடத்தாலே பேர்பெற்றுச் சிறப்பெய்தியவர் எல்லாமதத்தினருள்ளும் பல்லாருள்ளார். இவ்வாறு கொடைமடம் என்று கூறத்தக்க பெருங்கொடையே எல்லா நூலாரானும் மிகப்புகழ்ந்து பாராட்டப் படுகின்றது.

"இலனென்னு மெவ்வ முரையாமை யீதல்
குலனுடையான் கண்ணே யுள."

என்னுந் திருக்குறளுக்குப் பரிமேலழகர் "யான்வறியன் என்று இரப்பான் சொல்லும் இளிவரவைத்தான் பிறர்கட்சொல்லாமையும், அதனைத் தன்கட்சொன்னார்க்கு மாற்றாதீதலும், குடிப்பிறந்தான் கண்ணே இரண்டுமுளவாவன" எனத்தாம் ஒருபொருள்கூறி, இலன் என்னும் எவ்வம் உரையாமையீதல் எனற்கு, இலனென்னுமெவ்வத்தை யொருவன் றன்பாற்சொல்லுமுன் அவன் குறிப்பறிந்து ஈதல் எனவும், அதனைப்பின்னும் பிறனொருவன் பாற்சென்று, அவனுரையாவகையால் மிகக்கொடுத்தல் எனவும், யானிதுபொழுது பொருளு

டையேனல்லேன் எனக்கரப்பார் சொல்லும் இளிவரவைச்சொல்லாது கொடுத்தலெனவும், மூன்றுபொருளைப்பிறர் கூற்றாகக்கூறுவாராயினர், விநாயகபுராணக்காரரோ இந்நான்கு பொருளுடன், ஏற்கின்றவனும் தான் பிறர்க்கு இலனென்னாதுகொடுக்க மிக்கசெல்வம் தருதலும் என ஐந்தாவது ஒருபொருளமைத்துக் கூறுவாராயினர்; அவர்கூறிய கவிகள் இரண்டும் படிக்குந்தோறும் இன்பம் விளைப்பன ஆதல்பற்றி அவற்றை யீண்டுக்கூறத் துணிகின்றேன்.

இரப்பவன் வாளாதேக விலனெனு மெவ்வங்கூறா
திரப்பினை யிரப்பனன்றா மிதனினன் றாவதாகு
மிரப்பவ னிலனென்றா வியம்பிய வெவ்வஞ்சொல்லென்
றிரப்பினும் பிறர்பாற்கூறா திரக்கமோ டீதன்மைந்தா.

அருத்தியி னிலனென்னாமுன் னளித்தலு மிலனென்றப்பா
லுரைத்தில னாகச்சால வுதவலு மேற்கின்றானும்
வருத்துற விலனென்னாமை வழங்கிட வரைவில்செல்வம்
பொருத்தலு மொன்றிதென்று புகழ்மிக விளங்கித்தோன்றும்.

என்னும் அற்புதக்கவிகளைநோக்கில் "பாத்திரமறிந்து பிச்சையிடு" "வள்வனாயினும் அளவறிந்தளித்துண்" என்பன முதலிய வரையறைமொழிகள் எதிர்நிற்குந் தரத்தனவோ? இங்கே. "குலனுடையான் கண்ணேயுள" என்பதுவும், "இட்டார்பெரியோ ரிடாதார் இழிகுலத்தோர்" என்பதுவும், "நல்லகுடிப்பிறந்தார் நல்கூர்ந்தாரானாலும், இல்லையெனமாட்டார்" என்பதுவும் எவ்வளவு பொருத்தமுடையனவாகின்றன. கொடையுடையாரே நற்குடிப்பிறப்புடையாரென்பது இவர் கருத்தாகின்றதல்லவா?

ஒரு பொருளினிடத்தே தமக்குளதாய பற்றுவிட்டாலன்றி அப்பொருளை விடுதல்முடியாது. ஒருவனுக்கு ஈகைக்குணம் மேலிடுமாயின், அவன் மனத்தில் பற்றுதல் முற்றும் அற்றுப்போவதாகும். இங்ஙனம் பற்றற்றவனே ஞானியாவான். வீடுபேற்றையுறுவான். ஆகவே யுயிர்க்குறுதிபயப்பது ஈகையேயாகும். இக்கருத்தையமைத்தன்றோ காஞ்சிப்புராணக்காரர்,

"கொடையே யவர்க்கு மெப்பேறுங் கொடுக்கு நெறியிற் பிறழாத
கொடையே யாருந் தன்வழியி னொழுகச் செய்யுங்குறைதீர்ந்த
கொடையே பகையை யுறவாக்குங் குலவும் பூத மனைத்தினையும்
கொடையே புரக்கு மென்றுள்ளங் கொள்ளப் புகன்றான் கௌதமனே.

என்று கூறினர். வேட்டவர்கள் வேட்டவெல்லாம் விலக்காமற்கொடுத்தலாகிய கொண்டமடத்தினால் இம்மைப்புகழ் மட்டுமேயுளதாமென்றும், பாத்திரமறிந்து செய்யுந்தானவகையினால் மறுமைப்பயனுஞ் சித்திக்குமென்றும், ஆதலின் இருமைப்பயனுந்தருவதாகிய கொடையே சிறப்புடைத்தென்பது பண்டும் இன்றும் பல்லார்கொண்டுள்ள கொள்கையாகின்றது. இதுபற்றியன்றே,

"நன்றாற்ற லுள்ளுந் தவறுண் டவரவர்
பண்பறிந் தாற்றாக் கடை."

என்றருளினர். இதுமட்டோ காசிகாண்டக்காரர்

"முகனெதிரொன்றும்பிரியின்மற்றொன்றுமொழிபவர்விழைவுறுதூதா
ரகன்றகேள்வியிலாருமருத்துவர்களரும்பொருள்கவருநர்தூர்த்தர்
புகலருந்தீமைபுரிபவர்மல்லர்செருக்கினர்புன்றொழிற்றீயோ
ரிகழ்தருமினையரொன்பதுபேர்க்குமீந்திடல்பழுதெனவிசைப்பார்."

என்று வரையறைசெய்து இன்னவர்கட்குக்கொடுத்தலாற் குற்றமுளதாமெனக் கூறுவாராயினர். இப்பாகுபாடெல்லாம் பொருத்தமுடையனவேயாயினும், கொடுத்துக்கொடுத்துப் பழகித்தேர்ந்து பற்றுவிட்டுநிற்கும் மனத்தினையுடையார்க்கு இவையொரு பொருட்டாகத்தோன்றாவாம்.

யுத்தகளத்தேசென்று அமர்செய்யும் வீரனுக்கு எதிர்ப்பட்டு நிற்பவர் தந்தையாயினும், சோதரராயினும, குருஆயினும் பொருது கொல்வதன்றி, அங்கே பிதுர்ஹத்தி, சகோதரஹத்தி, குருஹத்தி என்னும் மஹாபாவம் வருமென்னும் உணர்ச்சி தோன்றாதவாறுபோல, இரப்பவருக்கு எதையும் கொடுக்கவேண்டுமென்ற கோட்பாடுமுறுகிய மனத்தினர் இரப்பானைக்காண்டலும், ஈவதுதோன்றுமேயன்றி ஏற்பானது குணதோஷ ஆராய்ச்சியில் மனஞ்செல்லற்குக் காலங்கிட்டாதன்றே.

இங்ஙனமாகக் கொடுக்குங் குறிப்பல்லது பிறிதொன்றுங்கொள்ளா நிலையனவாய கொடையே **கோடைவீரம்** அல்லது **வீரக்கோ**

டை என்று கூறத்தகும். கொடையினிடமாகவும் வீரம் நிகழும் என்பதை,

"கல்வி தறுகண் ணிசைமை கொடையெனச்
சொல்லப் பட்ட பெருமி தநான்கே."

என ஆசிரியர் தொல்காப்பியர் வகுத்தமையானும், அதனுரைகாரர் "கொடையென்பது - உயிரும் உடம்பும் உறுப்பும் முதலாகிய எல்லாப்பொருளுங்கொடுத்தல்" என உரைகூறுதலானும் காணலாம்; அன்றியும் ரகுவென்னும் இரவிகுலவேந்தன் பெருமகம்புரிந்துபொருளனைத்தும் அந்தணர்க்களித்து வறியனாய் மட்கலங்களே தனக்கு பகரணங்களாகக் கொண்டுள்ளகாலைத் தன்பாற்போந்து பொன்வேண்டிய பிரமசாரிக்கு இல்லையென நாணிப் பொன்பெற்றளிப்பக் கருதிக் குபேரன்பாற் போர்க்கெழுந்தனனென்று கூறுதலானும், இராமன் மாற்றலன்வசத்துள்ள இலங்காபுரியைத் தான்கைப்பற்றுமுன்னரே, வீடணற்கு அளித்தனனெனக்கூறுதலானும், கொடைக்குணமுறுக்கெய்தி வீரச்செயலாகிப் பிறிதோருணர்ச்சி தோன்றாமற் செய்தல் காணலாம்.

இக்கருத்தை "ஒன்னாரெயிலவர்கட்டாகவும், நுமதெனப்பாண்கடனிறுக்கும்வள்ளியோய்" எனவரும் புறப்பாட்டும் வலியுறுத்துவதாமென்க. இதனை "உழிஞைத்துறையுள் "கொள்ளார்தேஅங் குறித்தகுற்றம்". என்பர் ஆசிரியர் தொல்காப்பியர்.

(தொடரும்.)

எம். கே. அப்துல்காதிறு ராவுத்தர்.

ஸ்ரீ:

நுண்பொருண்மாலை.

(முன்றொடர்ச்சி)

௪௬௭. "எண்ணித்........திழுக்கு."

நு - லை:—உபாயம், அவாய்நிலை; சாம பேத தான தண்டத்துக்கு வகைகாண்க.

௪௬௮. "ஆற்றின்..........படும்."

நு - லை:—போத்துப்படல் என்பதனை நீட்டல் விகாரமாக்கிப் "போத்தறார் புல்லறிவினா" ரென்றார் நாலடியாரினும்.

௪௭௦. "எள்ளாத........துலகு."

நு - லை:—"ஓஒதல்வேண்டும்," (திருக் - ௬௫௩) "புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டு" (ஷை - ௫௩௮) மென்னுங் குறள்களிற் போல, அல்லீற்றுவியங்கோள்முடிபாக வேண்டுமென்பதொரு சொன்னீர்மைத்தாய் முடிந்தது. இனிப் "பல்லோர்படர்க்கை" (தொல் - சொல். ௨௨௬) என்னுஞ் சூத்திரத்துள், "ஓஒதல்வேண்டு" மென்பதனையு மீற்றுவியங்கோளாக்கினார் நச்சினார்க்கினியரென்க.

௪௭௫. "பீலிபெய்.......பெயின்."

நு - லை:—சினைவினை முதன்மேனின்றது, சினைமேனிற்கிற் சாகாட்டச் சிறுமென ஒற்றுமிகும். பிறிதுமொழிதலென்னுமலங்காரம்; இதனை, நுவலாநுவற்சி, ஒட்டென்பாருமுளர்.

௪௭௬.—"நுனிக்கொம்ப........விடும்."

நு - லை:—ஏறினாரென்னும் பன்மை அறிவின்மைபற்றியிழித்தற்கண் வந்தது. "பேதை பெருங்கெழீஇ நட்பி" னறிவுடையார் (௮௧௬.) என்னும் பன்மை உயர்த்தற்கண்வந்தது.

௪௮௭. "பொள்ளென.....பவர்."

நு-ரை:—பொள்ளென வென்பது செயவெனெச்ச வாய்பாடு பெற்ற குறிப்புமொழி. கதமெனவென்பது மதி. காரணத்தைக் காரியமாக்கி வேர்த்தல் வெகுளியாயிற்று.

௪௮௮. "செறுநரைக்........தலை."

நு-ரை:—சுமத்தல் - பணிதல். கிழக்கு - கீழ்.

௪௯௨. "முரண்சேர்ந்த........தரும்."

நு-ரை:—முரண் - மாறுபாடு. முரணொடுசேர்ந்தாரை, அரணைச்சேர்ந்தென மூன்றுமிரண்டுமா யுருபுவிரிந்தது காண்க.

௪௯௫. "நெடும்புனலுள்........பிற."

நு-ரை:—நெடும்புனல், கடலோடாவென்பன மேலையலங்காரம். நெடுந்தேர் - நெடியதேர். (௪௯௬.) நெடும்புனல் - தாழ்ந்தபுனல் (௪௯௫.) நெடுங்கடல் - ஆழமுடைய கடல். (௧௭.)

௫௦௦. "காலாழ் களரி........களிறு."

நு-ரை:—கண்ணஞ்சாமை - பார்க்கடங்காமை. கண்ணஞ்சாவுமாய் முகத்தவுமாய வென்றுரைத்ததனால் ஆகார அகரவீற்றுப் பலவறிசொல்லாயின.

௫௦௧. "அறம்பொரு....... படும்."

நு-ரை:—உபதை - பரிசோதனை. அது வான்மீக ராமாயணத்திற் கச்சித்சருக்கத்திற் காண்க. *

௫௧௪. "எனைவகையாற்........பலர்."

நு-ரை:—கட்டியங்காரன் கதையைப் பிரமாணமாக வெழுதினதாற் சிந்தாமணி கட்டுக்கதையன்றென்க. எனைவகை எவ்வகையென எகரவினா மாத்திரையாய் நின்றது.

---

* வான்மீகத்தில், பாலகாண்டத்து ௧௦௦-ம் ஸர்க்கம் "கச்சித்" என்ற முதலையுடைய சுலோகங்களுடைமைபற்றி, "கச்சித்சருக்கம்" எனவழங்கும். இச்சருக்கத்தின், ௨௬-ம் சுலோகத்தே, இவ்வுபதை குறிப்பிக்கப்பட்டுளது.

௫௨௨. "விருப்பறச்........தரும்."

நு-ரை:—அருப்பு - அடிப்பாட்டுக் காரணவிகாரம். அரும்பு - முதனிலைத்தொழிற்பெயர்.

௫௨௩. "அளவளா........தற்று."

நு-ரை:—அளவளாவு மிகுதிக்கணிரட்டித்தது. "அன்புமிகுதியினளவளாயவலை" (திருக்கோவை - ௧௯௫.) என்னுங் கொளுவுட் காண்க. குளவளா - குளப்பரப்பு.

௫௨௪. "சுற்றத்தாற்........பயன்."

நு-ரை:—பெற்றதனாலென்பதனுள் அகரமும் அன்சாரியையும் விகாரத்தாற் றொக்கன. பெற்றத்தாலெனத் தகரவொற்று மிகல். "கேழுவரையு மிலலோன்" (திருக்கோவை-௨௬௯) என்னுங்கோவையாருள், வருட்டியென்பதுமது.

௫௩௬. "இழுக்காமை........தில்."

நு-ரை:—வாய்க்குமாயினெனப்பொருள்பட்ட வாயினென்பது முதனிலைத்தொழிற் பெயரடியாக வந்த வினையெச்சம். முதனிலைத் தொழிற்சொல்லாய் வந்த வினையெச்சமாகில் வாய்க்கினென்றிருக்கும். "பூண்பதென்றேகொண்ட" (௩௨௩) என்னுங்கோவையாருள் 'எழில்வாய்' என்பதுமது. *

௫௪௧. "ஓர்ந்து........முறை."

நு-ரை:—இறைமை இறையெனவும், செய்வது செய்வஃதெனவுநின்றன. ஈண்டாய்தப் பெறுதற்கு விதியின்மையி னவ்வாறுரைத்தார். செய்யுட்டொடைக்காரணவிகாரம்.

௫௪௨. "வானோக்கி........குடி."

நு-ரை:—நோக்கிவாழ்தல் - இன்றியமையாமை. மூன்றன் சூத்திரத்துள் (தொல். சொல்-௯௩) நோக்கலாத நோக்கமென்பதுமது. †

---

* இதனால், "எழில்வாய்த்த" என்பது பாடமன்மை விளங்கும்.

† "கண்ணானோக்கும் நோக்கமின்றி, மனத்தால் நோக்கும் நோக்கம்" எனப்பொருள் கூறுவர் நச்சினார்க்கினியர்.

௫௪௬. "வேலன்று.........தெனின்."

ந - லை:—கோடானென்பது பாடமாயின், கருவியின்றொழில் வினைமேனின்றது. இனி, எழுத்தாணியெழுதுமென்பது வினைமுதலின்றொழில் கருவிமேனின்றது. "மரப்பாவை நாணாலுயிர்மருட்டியற்று" (௧௦௨௦) என்பதுமது.

௫௫௦. "கொலையிற்........நேர்."

ந - லை:—களைகட்டல் - களையைக்களைந்து காத்தல்.

௫௫௧. "கொலைமேற்........வேந்து."

ஞ - லை:—கொண்டாரிற்கொடிது வேந்தென்றதனாற் பன்மையுமொருமையும் பால்மயக்கு, உறழ்ச்சி இன்னுருபு—இரண்டிலக்கணமுங் கூடவெழுதினர். "அறனழீஇ" (௧௮௨) யுள்ளுமது. "குடிப்பிறந்தார் கண்விளங்குங் குற்றம்" (௯௫௭) என்பதனைப் பால் மாறுபட்டதென்றதனானுமறிக. வேந்தென்ப துயர்திணைப்பொருட்கண் வந்த அஃறிணைச்சொல்; அரசு, அமைச்சு, ஒற்று, தூதுமது. 'குடிமையாண்மை' (தொல். சொல்-௫௭) என்னுஞ் சூத்திரவிதியால் வேந்து அஃறிணைச்சொல்லாய், "நின்றாங் கிசைத்த லிவணியல் பின்றே" (ஷை-௫௯) என்னும் விதியால் கொடியனென்றுரையிட்டார் போலும். அவர் கருத்தெம்மனோர்க் கறிதலரிதென்க.

௫௫௭. "துளியின்மை.........முயிர்க்கு."

ந - லை:—பாற்றுளி நெய்த்துளியென்றுமாமாகலிற், சிறப்புப் பற்றித் துளி மழைமேனின்றது.

௫௫௮. "இன்மையி........படின்."

ஞ - லை:—உடைமை, எழுவாய்; கட்டியிறக்குதல் கிட்டிகட்டுதல் முதலாயினகாண்க.

(தொடரும்.)

பத்திராசிரியர்.

உ

திருச்சிற்றம்பலம்.

இரட்டைப்புலவர் சரிதம்.

(முற்றொடர்ச்சி)

எண்ணுநீ
"ரிக்கலிங்கம் போனாலென் னேகலிங்க மாமதுரைச்
சொக்கலிங்க முண்டே துணை."

எனக்கூறி யுட்கார்ந்தனர். உடனே யச்சொக்கலிங்கப் பெருமானுடைய கிருபையால், நீரிலமிழ்ந்த கந்தைவஸ்திரம், நூதனவஸ்திரமாகி, யெழும்பிக் கரையின்கண்ணே தங்கியிருக்க, அதுகண்டமுடவர், குருடராலதனைக்கொணர்ந்து வரச்செய்துலர்த்தி யுடுத்துக்கொண்டு, இருவருந் தங்கள் நித்திய நியதிகளை முடித்துச் சோமசுந்தரக்கடவுளைத் தரிசித்துமீண்டவர்களாய் ஓர்நாள் பாண்டியராஜன் சமுகஞ்செல்ல, அவனிவர்களைக் காண்டலுந் தக்கபரிசில் தரவெத்தனிக்க, அதுகண்ட ஓர் துர்மந்திரி அதைத்தடுக்க, உடனேயிவர்களுட் கண்ணுள்ளவர்கண்டு கோபித்து,

† "புராதன மான கவிப்புல வீரிந்தப் புன்குரங்கு
மாமரம் விட்டிங்கு வந்த தென்னே"—

என்றுபாட, அதுகாரணம் கண்ணில்லார் அறிந்துகொண்டு,

வந்த வாறுசொல்வேன்
"தாரதல மன்னுந் தமிழ்யா றனையுந்தன் றம்பியையு
மிராகவ னென்று மிலக்குவ னென்றும்வந் தெய்தியதே."

எனப்பாடிமுடிக்க, இவையெல்லாமுணர்ந்த பாண்டியன், புலவர்மகிழும்படி பரிசில் கொடுத்தனுப்பினன். அவன் பரிசிலாகக்கொடுத்த பொருளையும், தமதுணவுக்காக வேண்டுவனவற்றையும், ஒருவஸ்திரத்தில் முடிந்துகொண்டு, வழிநடக்கையில், மலவிசர்க்கத்திற்காக அம்மூட்டையை ஓர் பிள்ளையார்கோயிலில் வைத்துச்சென்று கழித்

---

† இது தமிழ்நாவலர்சரிதையில், சித்திரத்தனுமனைப்பாடச் சொல்லப்பாடியது. எனக்காணப்படுகின்றது

துச் சௌசமுடித்துமீண்டு அம்மூட்டையை யெடுக்கப்போயினர். அப்போதம்மூட்டை யவிழ்ந்திருந்ததன்றி அதில் முடிந்துவைத்திருந்த பொருள் மாத்திரமில்லாமற் போனமையால் அங்கெழுந்தருளியுள்ள விநாயகக்கடவுளைநோக்கி, ஒருவர்,

* "தம்பியோ பெண்டிருடி தாயா ருடன்பிறந்த
வம்பனோ நெய்திருடு மாமாயன்"—

என்று கூறினர், உடனே மற்றொருவர்;

நம்பியவிம்
"மூத்தவனோ நம்பான் முடிச்சவிழ்ப்பா னென்செயலாங்
கோத்திரத்துக் குள்ள குணம்."

என்றோதி, யதனைமுடிந்து தலையின்கீழ் வைத்துக்கொண்டு இருவருமங்ஙனே சிலநேரம் சயனித்திருந்து, பின்னரெழுந்துசெல்ல, அம்மூட்டையையெடுத்தனர். அப்போது முன்னிருந்த பாரத்தினும், பதின்மடங்கதிகமாயிருத்தலைக்கண்டு வியந்து முடிச்சவிழ்த்துப்பார்க்க, அதனுள் முன்னர்க்காணாமற்போனபொருள் விசேடமாயிருக்கக் கண்டு மகிழ்ந்து, சிலநாளங்கிருந்து அதன்பின்னொருநாள் அந்நாட்டிலேயே கொடையாளனாகிய "திருவேங்கடமென்பவனையடுக்க, அவனிவர்களுக்கிரங்கிச் சம்மானம்பண்ணப் போந்தருணத்தில், அவன் தமையனாகிய "கண்ணுக்கினியா" னென்பவன்றடுக்க, அதுகண்ட முடவர் சினந்து,

"தேன்பொழியும் வாயான் றிருவேங் கடத்துடனே
யேன்பிறந்தான் கண்ணுக் கினியான்காண்"—

என்றோத, அதுகேட்ட குருடர் விடயமின்னதென்றறிந்து கொண்டவராய்,

யான்சொலக்கேள்
"சீதேவி யார்பிறந்த செய்யதிருப் பாற்கடலுள்
மூதேவி யேன்பிறந்தாண் முன்."

---

* இவ்விஷயம் "புலவர்புராண"த்தினும் வருவதைக்காண்க.
"தம்பியொருபெண்டிருடி தாயினுடன்பிறந்தவனாச்சாற்றுமாமன்
கொம்பியவாய்ச்சியர்குலையநெய்திருடினோனுனதுகுலத்துக்குள்ள
வம்பிதெனநானறிவேனீயுமெந்தம்பணந்திருடல்வழக்கோவென்று
தம்பிமுகப்பெருமான்றன்மடிபிடித்தோர்முழுப்பாட்டுஞ்சொன்னானன்றே

என்றோதிமுடிந்துமீள, இளையானதுகேட்டு வருந்தியுடன்சென்று சமாதானங்கூறித்தந்த பரிசில்களைப்பெற்றுக்கொண்டு நடுநாட்டை நோக்கிச்சென்றனர். அங்கே "திருவண்ணாமலையில்," சாத்தேய மதசித்தாந்தியான "சம்பந்தாண்டா"னென்பவன் றலைமுண்டிதமாகச் சௌளம்பண்ணிக்கொள்ளும் சமயத்தில், இவர்களவண்பாற் செல்ல, அவனிவர்களைக்கண்டு பெரும்புலவர்களென்றறிந்திருந்தும் தனது வித்தியாகர்வத்தினால் மரியாதைசெய்யாமல் ஓர் வெண்பா "மன்னென்"றெடுத்து "மலுக்கெ"ன்று முடிக்கவல்லீரோவென்றனன். அதுகேட்டவிவர்கள் நகைத்து, ஒருவர்,

† "மன்னுதிரு வண்ணா மலையிற்சம் பந்தனுக்குப்
பன்னு தலைச்சவரம் பண்ணுவதேன்"—

என்று கூறினர். உடனே மற்றொருவர்,

மின்னி
"னிளைத்த விடைமடவா ரெல்லாருங் கூடி
வளைத்திழுத்துக் குட்டா மலுக்கு."

என்று கூற. அதுகேட்ட "சம்பந்தாண்டான்" கர்வமடங்கினவனாய்த் தக்கபரிசில்கொடுத்துவந்திப்ப, அதுபெற்றபுலவர்கள், மீண்டும் அண்ணாமலைநாதரைத் தரிசித்துக்கொண்டு "கொங்குதேய"த்தினை நோக்கிச்சென்றார்கள். அத்தேயத்திலிவர்கள் ‡ "கொடிமாடச்செங்குன்றா"ரின்கணெழுந்தருளிய அர்த்தநாரீஸ்வரரைத் தரிசிக்கக் கடைமார்க்கமாகச்செல்லுகையில், அவ்வீதியிலிவர்களை யிடித்துக்கொண்டுசென்ற கொங்குவேளாளர்களுடைய பெண்டிர்களைக்கண்டு ஒருவர்,

"செங்குன்றூர் வேளாண் சிறுமியரெல் லாங்கொழுத்தே
யங்காடிக் கண்வந் தலைகின்றார்"—

---

† இது காளமேகப்புலவர்பாடியதாகத் தனிப்பாடற்றிரட்டிலும், வினோதரசமஞ்சரியிலுள்ள காளமேகப்புலவர் சரிதத்திலும், இக்காலத்து வழங்குகின்றதாயினும்; பழையவழக்கு இராட்டையர்க்கே காணப்படுகிறது.

"சொன்னவரைப் பார்த்துமுன்பி னின்னசொற்க ளியைதரப்பாத் தொடுமி னென்னா, னன்னவர்தா முடன்மன்னு மருணைநகர் வாழ்சம்பந் தாண்டானுக்கீண், டென்னவிதத் தினுக்காகத் தலைச்சவரம் பண்ணுகின்ற தென்ன மின்னார், மன்னவனைக் காந்தளங்கை கொடுகுட்டா மலுக்கென்றும் வருத்திட்டாரே.

எனவரும் புலவர்புராணத்தையும், தமிழ்நாவலர்சரிதையையும் பார்க்க.

‡ கொங்குநாடேழினிலொன்று.

என்றுகூற, மற்றொருவர்,

தங்கொழுநர்
"போதா மளவுநன்செய் புன்செய்க் குழைத்துறங்கு
மேதா விடிப்பவ ரற்றே."

என்று கூறினர். இப்பாலிவர்கள் சிவதரிசனஞ் செய்துகொண்டு, கொங்குநாட்டிலிருக்க மனமின்றிச் சோழநாடு செல்லக்கருதித்திரும்புகையில், மலையுமலைச்சாரலுமாகிய கடுவழியிற்சென்று வருந்துங்கால், ஒருவர்,

"குன்றும் வனமுங் குறுகி வழிநடந்து
சென்று திரிவதென்றுந் தீராதோ"—

என்றனர். அதுகேட்ட மற்றொருவர் மனஞ்சலித்து,

வொன்றுங்
"கொடாதாரைச் * சங்கென்றுங் கோவென்றுஞ் சொன்னு
விடாதோ வதுவே யிது.

என்று கூறிநடக்க இருவரும் சோழநாடுகுறுகி வழியில் தம்மைப்போன்றருள்பெற்று ஆசுகவிப்பெருமாளாகிய, காளமேகப்புலவரைக்கண்டு தம்முடனழைத்துக்கொண்டு கமலாலயமென்னும் திருவாரூரையடைந்து $ தேவாசிரியனைவணங்கிப் புற்றிடங்கொண்ட வன்மீகநாதரையும், வீதிவிடங்கப்பெருமானையும் சர்வலோகநாயகியாராகிய பிராட்டியாரையுந் தரிசித்தனர். அப்போது மேலிருக்கும் குருடர்,

† "நாணென்றால் நஞ்சிருக்கு நற்சாபங் ‡ கற்சாபம்
¶ பாணந்தான் ...."—

---

* சங்கநிதியென்றும், காமதேனுவென்றும்.

$ கோயில்வாயிலிலிருக்குமண்டபம்.

† இப்பாடலின்பொருள் அக்கினிஸ்தம்பமாய் விளங்கியிருப்பவனே! சிறப்புப்பொருந்திய திருவாரூரில் எழுந்தருளியிருக்கின்ற சிவபெருமானே! திரிபுரதகனஞ்செய்தகாலத்தில் உன்கையிலேந்தியவில் நாரியோ னைந்திருந்தது. அவ்வில்லோ வளைக்கப்படாத கல்லாயிருந்தது. அம்போ மண்தின்னப்பட்டிருந்தது. இப்படி உனக்குக்கிடைத்த யுத்தாயுதமெல்லாம் ஒன்றுக்கும் உதவாமற்கேவலம் அவலமானவைகளாயிருக்க, சத்துருக்களுடைய நகரத்தை நீ எரித்தாயென்பது எப்படியோ? யோசிக்குமிடத்திற் சிரிப்பாயிருக்கிறதென்பாம்.

நாண்நஞ்சிருக்குமென்றது - விஷம்பொருந்திய பாம்பென்றும்.

‡ கற்சாபம் - மேருவில்லென்றும்.

¶ மண்தின்றபாணம் - பூமியுண்ட விஷ்ணுவென்றுமாம்.

எனப்பாடி அவ்வடியை முடிக்க நாவெழாதிருக்க, அக்கால் அருகிலிருந்த காளமேகப்புலவர், "மண்டின்றபாணமே" எனக்கூறினர். அதுகேட்டுக் கீழிருந்தமுடவர், தம்மால் முடிக்கமுடியாத சீர்களை ஆச்சரியப்படத்தக்க பொருளமைதியுடன் முடித்ததற்கு வியந்து, பாட்டின் எஞ்சியபகுதியை,

தாணுவே
"சீராரூர் வாழுஞ் சிவனே சிரிப்பன்றோ
நேராரூர் செற்ற நிலை."

எனப்பாடி முடித்துப்பின், காளமேகப்புலவரை மெச்சி,

"விண்டின்ற கீர்த்தி விளைகாள மேகமே
மண்டின்ற பாணமென்ற வாயினிக்கக்—கண்டொன்று
பாகொடுதேன் சீனியிடும் பாக்கியம்பெற் றோமிலையே
யாகெடுவோ முக்கிங்கென் னும்."

என்று கூறினர்கள். அதுகேட்ட காளமேகப்புலவர் மகிழ்ந்து நம்மையிவர்கள் துதிக்க, நாம்வறிதேயிருத்தல் மரபல்லவென்று கருதி,

"பூண்டான் முறையிற் புவியுணுந்தா தன்மகனு
மாண்டான் மகனும்போன் றானவுமக்—கீண்டெதுதான்
வாய்க்கா § துயிந்நலத்தீர் வானமுது முங்கண்மொழிக்
கேட்க்காதே லென்மொழிக்கிங் கென்."

என்றுகூறித் துதித்து அவர்களிடத்தினின்றும் விடைபெற்றுக் கடிதில் நீங்கிப் பலவிடங்கள்தோறுஞ் சென்று பாடல்பாடிப் பரிசில்பெற்றுவருங் காலத்துத் தமக்கெதிர்ப்பட்ட ஒரு மங்கையைக்கண்டு அவளதிடையை வியந்து,

"நடையொன்று போதகங் கோடொன்று மென்முலை நாட்டமிரு
கடையொன்று நீல விழியிணை யாலங் கமலமுகப்
பெடையொன்று தேமற் பிறைசூடு நாதன் பிரமன்வெற்பி
விடையொன்று மில்லைமற் றெல்லா வுறுப்புமுண் டேந்திழைக்கே.

"பாதாதிகேச முதலா விவளைப் படைத்தமலர்
வேதா மருங்குல் வெளிவைப்ப னேவிந்த மேதினியி

---

§ செங்குந்தமரபிலுதித்தீர்.

லாதார மின்றி யிரண்டிள நீரந் தரநிற்குமோ
எதா யினுங்கொஞ்ச மில்லா திராதிடை யேந்திழைக்கே."

எனப்பாடியும்,

"ஓங்கிய செந்தமிழ்த் தாதற் கடிமையவ் வூரதனா
னாங்கவி சொல்வது மில்லையென் றேகம்ப நாடன்சொல்ல
வாங்கவ னேறுஞ் சிவிகை சுமந்து மடப்பையிட்டுந்
தாங்கவி கொண்டதுங் கூவந்தி யாக சமுத்திரமே."

"மட்டாருஞ் செங்கழு நீர்மணி மார்பனை வாழ்த்துமந்தக்
கிட்டாத யாசகர் கிட்டிவந் தாலதைக் கேட்டுமுன்னாட்
பட்டோலை வாசித் தவரவர்க் குள்ள பரிசையெல்லாந்
தட்டா தளிப்பது கூவந் தியாக சமுத்திரமே."

எனக் கூவத்தின்கண், பெருங்கொடைவள்ளலாகிப் புகழ்பெற்றுத் திகழ்ந்த நாரணனென்பானைப்பாடி மகிழ்ந்திருந்தனரென்ப. இவை, தொண்டமண்டல சதகத்தின் மேற்கோளில்,

–"இடுவார் சிலரு மிடாதார் பலரும்
வடுவிலா வையத் திருக்கப்—படுபாவி
கூவத்து நாரணனைக் கொன்றாயே கற்பகப்பூங்
காவெட்ட லாமோ கறிக்கு."

எனவருவதைக்கண்டுகொள்க. அன்றியும், வீரசம்பு என்பவர்க்கும் இவர்க்கும் நடந்த சம்பாஷணையிலும், கூவராயன் ஈகைதனைப்புகழ்ந்திருப்பது வருமாறு:—

வீரசம்புவினா.

"பதிவீர சம்புவென்று பாராமற் கல்விக்
கிதமுளவி ரட்டையரே யீகை—யுதவில்வலக்
கைத்தலத்திற் கொண்டு களிக்காம லும்மிடக்
கைத்தலத்திற் கொள்ளுவதேன் காண்."

இவர்கள்விடை.

"கூவரா யன்றியாகங் கொள்வோம் வலக்கைமுடி
யாவர் தரினுமிடக் கைகொள்வோம்—பூவுலகின்

மின்பணிமன் னார்மதனே வீரசம்பு வேயினிநா
மின்பமு நேரே மினி."

வீரசம்புவினா.

"என்னுடைய பேரும் புகழு மிருஞ்சீரு
மென்னுடைய வீகையுங்கண் டெப்படிநம்—முன்னவனை
யாவனுட னேயதிகஞ் சொன்னீ ரிரட்டையரே
கூவரா யன்னியல்பென் கொல்."

இவர்கள்விடை.

"மாதாபி தாவுமவன் மன்னுகுரு தெய்வமவன்
றாதா வவனே தருங்கீர்த்திக்—காதாரன்
றியாக சமுத்திரன் றண்கூவ ராயன்றன்
னீகைதனைச் சொல்லவெளி தே."

வறுமைவந்தடைந்து வருந்தியபோது, தெய்வங்களை நோக்கி யுரைத்தது.

"கேட்ட வரமளிக்குங் கீர்த்தியுள்ள தெய்வங்காள்
கூட்டோடே யெங்கே குடிபோனீர்—பாட்டாய்கேள்
செல்கால மெல்லாஞ் செலுத்தினோ மல்காலங்
கல்லானோஞ் செம்பானோங் காண்."

இரட்டையர் பாடிய வெண்பா.

"கண்ணாடி காட்டுங் களிறுஞ் சுவைப்பழத்தி
னுண்ணாடு புக்க வுறுபொருளு—மண்ணா
கனங்குறைந்த வாறென் கயவர்பாற் சென்று
தினந்தெரிந்த வாறெனவே செப்பு."

தெரிந்தவாறாவது, கயவரை முன்காட்சியிற் கனமாகநினைத்துப்பின் இலேசாகத்தெரிந்தவாறாமென்க.

இனிப், புலவர்களிருவரும் காளமேகப்புலவரை மீண்டுங்காண வேண்டுமென்னும் விருப்பால் அவருடைய வாசஸ்தானமான திருவானைக்காவுக்குவர, அப்போது தெய்வகதியால் அப்புலவர் தேகவி

யோகமெய்தி அவரது திருமேனிமயானத்தில் வேசுந்கண்டு இவ்விரு புலவர்களுந் துக்கித்து,

" ஆசு கவியா லகில வுலகெங்கும்
வீசு புகழ்க்காள மேகமே—பூசுரா
விண்டின்ற செந்தழல்வாய் வேவதே யையையோ
மண்டின்ற பாணமென்ற வாய்."

எனப்பாடிச் சோழநாட்டிலுள்ள பிறதலங்களையுந் தெரிசித்துக்கொண்டு மீளவு முன்விட்டுவந்த தொண்டைநாட்டைநோக்கி நடந்துவருங் காலையில், காஞ்சிமாநகரத்தில் அரசாண்டிருந்த சோழவமிசத்தினன் ஓர்நாள் யாதுகருதியோ யாகஞ்செய்தற்கெண்ணிப் பூமியைத் திருத்துகையில், மண்மேடாயிருந்தது கரைந்து "ஆயிரக்கான்மண்டபமும், விகடசக்கர விநாயகராலயமும்" விளங்கக்கண்டு, ஆனந்தக் கடலிலாழ்ந்து பரவசனாய் இவ்விருபுலவர்களையும் ஒற்றரைக்கொண்டு வரவழைத்து அவர்கட்கு வந்தனைவழிபாடு புரிந்து ஓ! தெய்வீகப்புலவர்களே! தாங்களுலாவிற்குறித்தபடியே நிகழ்ந்தன. அதியற்புதமே! தங்களுலாவுந்தெய்வீகவுலாவே எனப்புகழ்ந்து அரங்கேற்றல்செய்வித்துப் புலவர்களுக்குக் கனகமழைசொரிந்து சந்தோஷப்படுத்தினன்.

(தொடரும்)

சி. கு. நாராயணசாமிமுதலியார்,
கோவை.

விவசாயக் குறிப்பு.

[சென்னை விவசாய டிபார்ட்மெண்டிலிருந்து.]

தென் ஆற்காடுஜில்லா நெல்லிக்குப்பம் ஸ்டேஷனுக்கு அடுத்த பாலூரில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் சர்க்கார் விவசாயபண்ணையில் நெல் விருத்தியைக்குறித்துச்செய்த பரிட்சைகளின் சில அனுபவங்களையும் நெல்விதையைப் பொறுக்கியெடுத்துப் பயிர்செய்ததால் அது எவ்வளவு விருத்திக்குக் கொண்டுவரப்பட்டதென்பதையும் நான் சுருக்கமாகச் சொல்லுகிறேன்.

பாலூரைச் சுற்றிலுமுள்ள சமுசாரிகள் தங்களுடைய இருபோக நன்செயில் முதற்போகத்துக்காக சுவர்ணவாரி என்னும் நெல்லையும், இரண்டாம் போகத்துக்காக கருடன்சம்பா (சிறுமணி) என்னும் நெல்லையும் பயிரிட்டுவருகிறார்கள். முதற்போகத்தில் சுவர்ணவாரியை நாற்றுவிட்டு நடாமல் விதைப்பு நடந்துவருகிறது. ஏகரா ஒன்றுக்கு 22-முதல் 30 பட்டணம்படி விதை வைகாசியில் விதைக்கிறார்கள். இந்தக்காலத்தில் வாய்க்கால்களில் அதிகஜலம் கிடையாது. அநேக நிலங்கள் ஜலம் எட்டாமல் தரிசாகக்கிடக்கும். ஜலம் அதிகம் வேண்டாததும் அதிகமாய்க் கிளைக்கக்கூடியதாயுமுள்ள பங்கு என்னும் ஒருவகை நெல்லை ஷை பாலூர் பாரப்பண்ணையில் ஏகராவுக்கு $7\frac{1}{2}$-படி விதைவீதம் தெளிவாக நாற்றுவிட்டு 30-நாளுக்குள் நாற்றுக்களைப்பிடுங்கி ஒவ்வொரு நாற்றாக இரண்டு ஏகராவில் நட்டார்கள். ஆனால் $\frac{1}{4}$ ஏகராவில் 4 அங்குலத்துக்கு ஒருநாற்றும், $\frac{1}{4}$ ஏகராவில் 6 அங்குலத்துக்கு ஒருநாற்றும், மற்றவைகளில் 8 அங்குலத்துக்கு ஒருநாற்றும், மற்றொருதுண்டிலும் சாலையிலும் $\frac{1}{4}$ ஏகராவில் சொர்ணவாரியும் இப்படிப்பலவிதமாக நட்டார்கள். (சாலை நடவைப்பற்றிக் கீழேகொஞ்சம் விவரமாய்ச்சொல்லுகிறேன்.) ஒற்றை நாற்று நட்டபோதிலும் ஒவ்வொன்றும் 10-முதல் 20, 30-வரையில் கிளைப்புவிட்டுப் பயிர்கள் நன்றாய்வளர்ந்து நல்ல கதிர்களுடன் பார்த்தவர்கள் ஆச்சரியப்படும்படி விளைய, அறுவடைசெய்து இரண்டு ஏகராவுக்கும் கணக்கெடுத்துப் பார்த்ததில் சராசரி ஏகராவுக்கு $1077\frac{3}{4}$ படி வீதம் கிடைத்தது. சாலையில் நட்டநடவு எல்லாவற்றிலும் அதிகம் கண்டுமுதலைத்தந்தது. செய்நேர்த்தி முதலியவை எல்லாம் பக்கத்துச் சமுசாரிகள் செய்வதுபோலவேதான் செய்ததேயல்லாமல் வேறில்லை. இது நிற்க,

இரண்டாம் போகமாகிய சம்பாப்பயிரையும் விருத்திக்குக் கொண்டுவரக்கருதி அவ்வவ்விடங்களில் மிகுதியாகப் பயிரிட்டுவரும் கருடன்சம்பாவென்னும் நெல்லைவாங்கி நாற்றங்காலில் ஏகராவுக்கு 6 பட்டணம்படிவீதம் தெளிவாக நாற்றுவிட்டுச் சென்ற 1907-வருஷத்தில் ஒற்றைநாற்றாக நட்டார்கள். நாற்றுக்கள் 30 நாளைக்குள் தூறுவெடித்துக்கிளம்பி பூமியை மூடிக்கொண்டன. இந்தக்

காலத்தில் நடும்பொழுது பார்க்காதவர்கள் ஒற்றைநாற்று நடவு என்று சொல்லமுடியாது. பக்த்துச் சமுசாரிகள் வழக்கப்படி நட்டநடவுகள் கொஞ்சம் வெளுத்திருக்க ஒற்றைநாற்று நடப்பட்ட பயிர்கள் பசுமையாயிருந்தன. இரண்டுமாத காலத்தில் ஒற்றைநாற்று ஒவ்வொரு தூறிலும் 10-முதல் 20 கிளைகள் வெடித்து நன்றாய் வளர்ந்தன. சமுசாரிகள் பயிரில் சராசரி 3 அல்லது 4 தூறுக்குமேல் இல்லை; சமுசாரிகளுக்குக் கிடைத்த மாசூலைவிடப் பாரத்தில் மாசூல்கொஞ்சம் அதிகமாகவேயிருந்தது. தங்கள் பயிர்செழிப்பாயும் கதிர்கள் நன்றாய் வராமலிருந்தபோதிலும் குடியானவர்கள் தங்களுக்கு மறுவருஷத்துக்குவேண்டிய நெல்விதையைத் தங்கள் மாசூலிலிருந்து வழக்கப்பிரகாரம் எடுத்துவைத்துக்கொண்டார்கள். ஆனால் பாலூர் சர்க்கார் பாரத்திலோ ஒவ்வொரு வயல்களிலும்போய் மிகுதியாகக் கிளைத்தபயிர்களிற் செழிப்பான கதிர்கள்வேறாகவும் மணிநெருங்கின கதிர்கள்வேறாகவும் பொறுக்கியெடுத்து விதைக்காகத் தனித்தனியே வைத்துக்கொண்டார்கள்; இப்படி ஒற்றை நாற்றிலிருந்து நன்றாய்க்கிளைத்து நீண்ட கதிர்களிலிருந்து பொறுக்கியெடுத்த விதைநெல்லை 1908-ம் வருஷத்தில் சம்பா நடவுகாலத்தில் நாற்றங்காலில் ஒரு செண்டு நிலத்தில் ஒரு பட்டணப்படி விதையாக ஓர் ஏகராநட 6 பட்டணம்படி விதம் நாற்றுவிடப்பட்டது. இப்படி விதையை நாற்றங்காலில் தெளிவாகவிடுவதால் நாற்றுக்கள் (கேழ்வரகு) கேப்பைபோல் பட்டை உறப்பாயும் செழிப்பாயும் வந்தன. இந்த நாற்றை சுமார் 39-வது நாளிலிருந்து 40 நாளைக்குள் 6 அங்குலத்துக்கு ஓர் ஒற்றைநாற்றாக நட்டார்கள். இப்படிப் பொறுக்கியெடுத்த விதையைத் தெளிவாக நாற்றுவிட்டு 40 நாளுக்குள் ஒற்றைநாற்றாக நடப்பட இந்த நாற்றானது அதற்கு முந்தியவருஷம்போல் அல்லாமல் ஒவ்வொரு தூறிலும் சராசரி 20-முதல் 40-வரை கிளைகட்டி ஏகரா 1-க்கு சுமார் 1200 படிவரை கண்டுமுதல் கிடைத்தது. அக்கம்பக்கத்திலிருந்த சமுசாரிகளுக்கு ஏகராவுக்கு சராசரி 600 படி கிடைத்திருக்கிறது. முதல் வருஷத்தில் பாரத்தில் ஒற்றைநாற்று நட்டுப் பயிர்செய்து பலன்தந்ததை அறிந்தும் பூமிக்கு அதிக உரம் போட்டதினால் சர்க்கார் பாரத்தில் அதிகம் விளைந்தது என்று சொல்லிக்கொண்டு பாரத்து உத்தியோகஸ்தர் சொல்லை நம்பாமல் சமுசாரிகள் மோசம்போனார்கள். அதற்காகச் சென்றவருஷம் உரம்போடும்போதெல்லாம் அந்தக்காலத்தில் எதிர்ப்படும் ஒரு சமுசாரியையோ அல்லது சமுசாரிகளையோ வைத்து வயல்களுக்கு எருவிடப்பட்டது. பாரத்தில் எருவிடுவதெல்லாம் அவ்விடத்தில் சமுசாரிகள் செய்வதுபோலவேதான். அவ்விடத்தில் நன்செய்க்கு பலர் பலவித எருக்கள் உபயோகப்படுத்துகிறார்கள். அவர்கள் நன்செய்க்கு இடும் எருக்களில் எதுசிலாக்கியம் என்றறியும்பொருட்டு ஒவ்வோர் எருவையும் கால் கால் ஏகராவில் பரிசோதனை செய்யப்பட்டது.

அந்த எருக்களாவன :—

1. முத்துக்கொட்டைப் பிண்ணாக்கு ஓர் ஏகராவுக்கு ஒருபாரம் விதம்
2. மணிலாக்கொட்டைப் பிண்ணாக்கு.
3. அவுரிச்சக்கை.
4. மாட்டுச்சாணி.
5. மணிலாக்கொட்டைக்கொடி.
6. எருக்கந்தழை.
7. பூவரசுமுதலான இதர தழைகள்.

மேற்சொன்ன எருக்களின் தாரதம்மியங்கள் அறியும்பொருட்டு எருவில்லாமல் கால் ஏகராவிலும் சாகுபடி செய்யப்பட்டது.

இதில் அவுரிச்சக்கையில் ஏகராவுக்கு 1144; எருக்கந்தழை போட்டதில் 1072; எருவிடாத பயிரில் சராசரி 764.

இந்த எருப்பரிசோதனைகள் இரண்டு வருஷகாலமாய் நடந்துவருகின்றன. அஃதாவது எருவிடாத நிலத்தில் இரண்டு வருஷகாலமாக எருவில்லை. அப்படி எருவில்லாமற்போனபோதிலும் எருவிட்டுச் சமுசாரிகள்செய்த பயிரிலிருந்துவந்த மாசூலைவிட விதையைப் பொறுக்கியெடுத்து நாற்றங்காலில் விசாலமாக நாற்றுவிட்டு ஒற்றைநாற்றாக நடப்பட்ட பயிரிலிருந்து கிடைத்தமாசூல் மிகுதி. ஆனால், சிலபேர் ஒற்றை நாற்றை நட்டு இவ்வளவு கண்டுமுதலிருக்க இரண்டு நாற்று சேர்த்துப்போட்டால் ஒருவேளை கண்டுமுதல் இரண்டு மடங்கு ஆகாமற்போனாலும் கொஞ்சமேனும் மிகுதியாகக் கிடைத்தாலும் அப்படி நடுவது நலமல்லவா என்று கேட்கவுங்கூடும். அப்படி இரண்டு நாற்றுச் சேர்த்தும் 3 நாற்றுச் சேர்த்

தும் சர்க்கார் பண்ணையிலேயே சமுசாரிகள் பயிரிடுமாதிரி 6 அல்லது 8 நாற்றுச் சேர்த்தும் நட்டார்கள். இப்பொழுது அறுவடையான வருஷத்திலும் பரிசோதித்தோம். தவிரவும் ஒற்றை நாற்றுக்காக 6 அங்குலத்துக்கும் 9 அங்குலத்துக்கும் நட்டும் பரிசோதிக்கப்பட்டிருக்கிறது. மேலும், பாருங்கள், ஒரு நாற்றானது தனிமையாகக் காற்றோட்டமாயிருக்குமேயானால் அது பெரியபுற்றாகி அதிகக் கிளைப்புடன் நல்ல கதிர்களுடன் வருவதை நாமெல்லோரும் பார்த்திருக்கிறோம். அதை அனுசரித்து காற்றோட்டங்கொடுக்க நெற்பயிர் சாலைசாலையாய் நடப்பட்டது. இதிலும் கால் ஏகராவில் நெருங்கிய சாலையும் (அதாவது 8 அங்குலத்துக்குச் சாலைகளும்) மற்றொரு கால் ஏகராவில் ஓர் அடிக்கு ஒரு சாலையாகவும் நாற்று நடப்பட்டது. ஆனால், சாலையில் நெற்பயிர் இரண்டு அல்லது மூன்று அங்குலத்துக்கு ஒரு பயிர் நடப்பட்டது. இது எல்லாவற்றிலும் அரை அடி உயரமாய்வளர்ந்து நீண்ட கதிர்களுடன் வந்தது. இதில் களை எடுப்பது மிகவும் சுலபம். இதிலிருந்து ஏகராவுக்கு 1200 படிக்குமேல் கிடைத்திருக்கிறது. ஆனால் இரண்டு மூன்று சேர்த்து நட்ட நடுகையிலிருந்து சராசரி ஒரு ஏகராவுக்கு 900 படிக்குமேல் கிடைக்கவில்லை. இவ்வாறு நாற்றுக்களை அதிகப்படுத்தி நடுவதினால் ஏன், தூறுகட்டுகிறது குறைகிறது என்று யோசிப்போம். ஒவ்வொரு பயிரும் தனது வேரைத் தன்னைச்சுற்றிலும் பரவவிட்டு ஆகாரத்தை எடுத்துக்கொள்ளுகிறது. நிலத்திலுள்ள ஆகாரத்துக்குத்தக்கபடியும் ஒரு பயிருக்கும் மற்றொரு பயிருக்குமுள்ள இடைவெளிக்குத் தகுந்தபடியும் பயிர்கிளைத்துத் தூறுகட்டுகிறது. ஒரே இடத்தில் இரண்டு நாற்றுச்சேர்த்து நடும்பட்சத்தில் அந்தவிடத்திலுள்ள ஆகாரத்தை அந்த இரண்டு நாற்றுக்களும் பாகஞ்செய்துகொள்ளுகின்றன. இதேமாதிரி நாற்று அதிகப்பட அதிகப்பட ஒவ்வொரு பயிர்க்கும் கிடைக்கும் ஆகாரம் குறைகிறது. ஆகாரம் தகுந்தபடி கிடைக்காததால் பயிர் கிளைக்கிறதில்லை. தவிரவும் ஒவ்வொரு பயிர்க்கும் தகுந்த காற்றோட்டம் இருந்தால்தான் அதன்வேர் பரவும். அடர்த்தியாய் நட்ட முடியின் மத்தியில் காற்றுச்செல்வதற்கு வழியில்லை. ஆகையால் அதிகநாற்றுச்சேர்த்து நட்டவிடத்தில் கிளைப்பு குறைந்து பயிரும் மெலிந்து இருக்கும். ஆகையால் அதிக

நாற்றுச்சேர்த்து அடர்த்தியாக நடுவதில் பலன் இல்லையெனத் தெரிந்துகொள்ளலாம். இப்படி ஒற்றை நாற்றுநடுவதில் மாசூல் லாபம் என்று தெரிந்தபிறகு இதனால் மற்றுமுள்ள குணதோஷங்களையும் ஆராய்ந்துபார்ப்போம். ஓர் ஏகராவில் ஒற்றை நாற்றுநட எவ்வளவு படிநெல் வேண்டியதெனக் கவனிப்போம்; ஒருஏகராவில் ஒரு அடிக்கு ஒரு நாற்றுநட 4840×9=43560 அஃதாவது 45000 நாற்றுவேண்டியது; அரை அடிக்கு ஒன்றுநட 45000×4=180000 நாற்று வேண்டியது. ஒன்று தப்பாமல் முளைப்பதாயிருந்தால் 180000 நெல்வேணும்; ஒருபடி கருடன்சம்பா நெல்லை எண்ணிப்பார்த்ததில் 54400 நெல் இருக்கிறது. 6-அங்குலத்துக்கு ஒருநாற்று நடவேண்டுமானால் $3\frac{1}{2}$-படி நெல்விதை போதுமானது. இதற்குமேல் அவரவர்கள் நெல்விதையைப் பொறுத்தும் சில சேதங்களை உத்தேசித்தும் 6-படி விதைவரை ஒரு ஏகராவுக்குப் போடலாம். நெல் சிறியதானால் $3\frac{1}{2}$-படியும் வேண்டியதில்லை. ஆகையால் ஒற்றைநாற்று நடுவதினால் அந்தந்த ஊர்வழக்கத்துக்குத் தக்கபடி விதை லாபம் இருக்கிறது. அதாவது ஏகராவுக்கு 36 - 40 படி விதையில் விதை எப்பொழுது குறைகிறதோ விதைக்க நல்ல விதைகளைப் பொறுக்கியெடுக்கவும் நன்றாகக்காயவைத்துக்கொள்ளவும் இடமுங்காலமுங்கிடைக்கும். விதைகளைப் பொறுக்கி வைப்பதிலுள்ள குணகுணங்கள் எல்லோருக்கும் தெரிந்தவிஷயமே. ஆனபோதிலும் அதில் சமுசாரிகள் கொஞ்சமேனும் கவனம் செலுத்தாததினால் பலவகைகளிலும் நஷ்டம் அடைகிறார்கள்.

ஆகையால் நல்லபயிரைத் தெரிந்தெடுத்து அதில் நல்ல திறமானகதிர்களிலிருந்து விதையை எடுத்துவைத்துக்கொள்ளவேணும். ஒற்றைநாற்று நடுவதற்கு முடிகள் குறையுமாகையால் நாற்று பிடுங்குவதிலும் லாபமுண்டு. நாற்றுப் பட்டை உறப்பாயிருப்பதால் கேப்பை நடவுமாதிரி ஒவ்வொரு நாற்றாக நடுவதில் பிரயாசையில்லை. ஆகையால் ஒவ்வொரு நாற்றாக நட்டுப் பயிர்செய்வதில் அநுகூலமேயொழியப் பிரதிகூலம் கிடையாது. எவ்வளவு தூரத்துக்கு ஒருநாற்று நடவேணுமென்ற சங்கதி பூமிசாரம் முதலான அநேக காரணங்களைப் பொறுத்திருப்பதால் தங்கள் தங்கள் பூமியில் நாற்றை கிட்டவும் எட்டவும் நட்டுத் தீர்மானித்துக்கொள்ளவேண்டியது. தற்சாலம் நாட்டு நடவுமாதிரி நடுவதினாலேயே எனக்கு ஏகராவுக்கு 1200 படி கண்டுமுதல் கிடைக்கிறது. நான் ஏன் ஒற்றைநாற்று நடவேண்டுமென்று சிலபேர் கேட்கலாம். விளைவு பூமிசாரத்தை ஒத்தது. பாலூரில் சமுசாரிகளுக்கு 700 அல்லது 800 படி கிடைத்தலால் ஒற்றைநாற்று நடுவதில் கண்டுமுதல் அதிகப்பட்டிருக்கிறது. பூமி சாரத்தினால் நாற்று நடவினாலே 1200 படி கிடைக்கக்கூடுமானால் ஒற்

றைநாற்று அந்தப் பூமியில் நட்டால் கண்டுமுதல் அதிகப்படும் என்பதற்குச் சந்தேகமுண்டோ ?

தவிரவும் கருடன்சம்பா ஒற்றைநாற்றாகப் பயிரிட்டோமென்று சொன்னேன், அதுமாத்திரமல்ல.

மிளகுசம்பா, சின்னச்சம்பா, முத்துச்சம்பா, மல்லிகைச்சம்பா, சீரகச்சம்பா, வெள்ளைச்சம்பா, வெள்ளைச்சிறுமணி, ஆனைக்கொம்பன், பூம்பாளை, கோணுமணி, சடைச்சம்பா, சின்னகுசுமா முதலான 12 நெல்வகைகள் அநேக ஊர்களிலிருந்து தருவித்து 9 அங்குலத்துக்கு ஒரு நாற்றாக நட்டுப் பயிர்செய்ததில் விதை பொறுக்கியெடுக்காமலிருந்தபோதிலும் நல்ல நாற்றுகளை மாத்திரம் நட்டதால் நல்லபலனையே கொடுத்திருக்கிறது. இந்த வகைகளிலும் சமுசாரிகளுக்கு விதைக்காகக்கொடுக்க நெல் எடுத்துவைக்கப்பட்டிருக்கிறது; பங்கு நெல் புதிதானபடியால் தபால்சார்ஜ் உள்பட ஒரு ரூபா நெல் சமுசாரிகளுக்குக் கிரயமில்லாமல் கொடுக்கும்படிக்கு டிபார்ட்மெண்டார் உத்தரவு செய்திருக்கிறார்கள். ஒற்றை நாற்றுப்போட்டு அனுபவமில்லாத சமுசாரிகள் எல்லோரும் தங்களுடைய அபிவிருத்தியைக் கருதி அவரவர்களுடைய பூமியில் விஸ்தீரணத்துக்குத் தகுந்தது போல் பொறுக்கியெடுத்த விதையைக்கலக்க நாற்றங்காலில் விதைத்துக் கார்நெல்லானால் 18—20 நாளுக்குள்ளும் சம்பாவானால் 35—40 நாளுக்குள்ளும் கொஞ்சப்பூமியில் ஒற்றைநாற்றாக நட்டு முதலில் பரிசோதனைசெய்தால் அதன் அனுகூலம் தெரிந்து அபிவிருத்தியடைவார்களென நம்புகிறேன்.

Camp—Koilpatti,
17th March 1909.

(Signed) S. SUBRAMANIA AIYAR,
Manager.

உ

திருச்சிற்றம்பலம்.

தனிச்செய்யுட்கோவை.

திருவள்ளுவர் பாடல்.

இதனடியிற் காட்டியுள்ள செய்யுட்கள் ௪-ம் தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனாரால், இயற்றியுள்ளனவாகக் குறிக்கப்பெற்று நம் சங்கத்துள் உள்ள சைவசமய சாத்திரங்கள் பலவற்றை யெழுதிக்கோத்துள்ள ஓர் ஏட்டினிடையே கண்டனன்.

இவற்றின் முதற் செய்யுள் மட்டுமே தனிப்பாடற்றிரட்டுப் புத்தகத்துட் கண்டதன்றி, அதன்றொடர்பாயுள்ள மற்றைச் செய்யுட்கள் இதுவரை வெளிவந்தனவாக எற்குத் தோற்றவில்லை. இச்செய்யுட்கள் திருவள்ளுவநாயனார் கடைச்சங்கத்திற்குச் சென்ற காலத்து அவரை அச்சங்கத்திலுள்ள புலவர்கள் நீர் "எந்த ஊர்" என்றுகேட்க, திருவளுவர்;

எந்தவூ ரென்றீ ரிருந்தவூர் நீர்கேளீர்
அந்தவூர்ச் செய்தி யறியீரோ—அந்தவூர்
முப்பாழும் பாழாய் முடிவிலொரு சூனியமாய்
அப்பாழும் பாழா யறும். (௧)

என்னும்பாடலைக் கூறியருளினர்; அதுகேட்ட புலவர்கள் இவர் "ஞானி"யென்றனர். அதற்கு விடையாக வள்ளுவர்;

ஞானவா னென்றீ ரென்னை நாதவிந் துவுங் கடந்து
காணிலை வரையுஞ் சுட்டுக் கடுவெளி பரமா னந்தந்
தானெனு மறிவு தானுந் தவிர்ந்துதன் வசமுங் கெட்டு
மோனமுங் கடந்திட் டப்பால் முடிந்தவர் ஞானி யாவார். (௨)

என்னும்பாடலைக் கூறியருளினர். உடனே புலவர்கள் இவர் "ஐய" ரென்றனர். அதற்கு விடையாக வள்ளுவர்;

ஐயரென் றுரைக்க நாயேற் கடுக்குமோ வருளி லான்மா
உய்யமும் மலங்க ளைந்திட் டுயிர்பர வெளியி லாக்கிப்
பொய்யொழி களவு மற்றைம் புலன்களை யொடுக்கி வானின்
வெய்யவன் மதியம் போல விரவுவ ரைய ராவார். (௩)

என்னும் பாடலைக்கூறலும் புலவர்கள்கேட்டு மிகமகிழ்ச்சியுற்று "இரு"மென்று உபசரித்தனர்; அதற்கு உத்தரமாக;

இருமென வுரைத்தீ ரென்னை யேற்குமோ வேழை யேற்குத்
தருபொரு ளுணர்ந்து சைவ சமயமு மளைந்து நீங்கி
மருடரு வினையும் போக்கி மாசிலா வுண்மை ஞானம்
பெருகின ரிருப்ப ரீது பெறுதவ ரிருப்ப ரோதான். (௪)

என்னும்பாடலை வள்ளுவர் நுண்ணுணர்ச்சியாலே கூறியதைக்கேட்டுப்புலவர்கள் "போம்" என்று சொல்லினர்; அதற்கு அத்தியற்புதமாக வள்ளுவர்;

போமென வுரைத்தி ரென்னைப் பொறியொடு புலன்க ளைந்து
மாமெனு மசபை யோடு மங்கனே நிறுத்திக் கொண்டே
யேமமும் யாம மற்றே யிரவொடு பகலு மற்றுச்
சோமனூர் பதியை விட்டுத் துறந்தவர் போவ ரன்றே. (௯)

என்னும்பாடலைக் கூறியருளினர். பின்னும் புலவர்கள் "நில்லும்" எனச்சொல்லினர். அதற்கு விடையாக,

நில்லுமென் றுரைத்தி ரென்னை நேசபா சங்க ளைந்து
புல்லறி விடும்பாங் காரம் புலைகொலை களவு மற்றுச்
சொல்லிய வுண்மை ஞானச் சுழுமுனை முடிவின் மீதே
யெல்லையுங் கடந்திட் டப்பா லேகமா னவர்க ணிற்பார். (௰)

என்னும்பாடலை வள்ளுவர் கூறி முடித்துப்பின்னர்த் தாம் கொண்டு வந்திருந்த தமிழ்வேதமாகிய திருக்குறளை அப்புலவர் முன்னரங்கேற்றினரென்பது கர்ணபரம்பரைக்கேள்வி.

பொ. பாண்டித்துரை.

உ

சிவமயம்.

திருவள்ளுவர் பரிமேலழகருரை.

திருவள்ளுவரையும், பரிமேலழகருரையையுஞ் சுட்டிச் சென்ற பங்குனிமாசச் செந்தமிழ்ப்பத்திரிகையிலே பத்திராதிபர் எழுதிய குறிப்புரைகளை விருப்பொடும் நோக்கினோம். அவ்வுரைகளுள்ளே சில, திருக்குறளுரை படிப்பவர்க்குப் பயன்படத்தக்க நயம்பொருந்தி விளங்குறினும் சிலபல, தடைநிகழ்ச்சிக்கிடனாய் நமக்குப் புலப்படுகின்றன. அவைகளை ஈண்டே எழுதுதும். இதனால் அவர்க்கும் நமக்கும் வரக்கடவதோர் இழுக்கில்லை! "தெரியுங்கா-லின்மையரிதே வெளிறு" என்னுந் திருக்குறட்பாகத்தை அறிஞராயுள்ளார் யாவரும் அறிவர்.

௧. பத்திராதிபர் ஏலேலசிங்கன் செயல்கூறிச் "சிங்கன் என்பது சிங்களத்தையாண்ட அரசர்புனைந்த சிறப்புப்பெயர்களுள் ஒன்றாம். இதனை அவ்வரசர் கூட்டத்தில்வரும் பரராசசிங்கன், இராஜசிங்கன் முதலியவற்றால் உணர்க" என்றார்.' இதற்குப் பிரமாணம் யாது? பரராசசிங்கன் என்பது "இகலரசரேறு" என்புழிப்போலப் பகைத்திறந்தெறும் பெருவலி புலப்பட இட்டுக்கொண்டதோர் இயற்பெயர். சிங்கன் என்பதனைச் சிறப்புப்பெயர் என்று கொள்ளுங்காற் பரராசன் என்பதே இயற்பெயராய் முடியும். முடியவே வழக்குடன் முரண்படலும் வரும். இராஜசிங்கன் என்பதுமது. பரராசசிங்கனாவான் யாழ்ப்பாணத்திருந்து அரசியல்புரிந்து தமிழ்மொழியையும் வளர்த்துவந்த அரசர்குழாத்துள் ஒருவன்.

கட்டளைக்கலித்துறை.

இன்னங் கலைமகள் கைம்மீதிற் புத்தக மேந்தியந்தப்
பொன்னம் புயப்பள்ளி புக்கிருப் பாளென்ன புண்ணியமோ
கன்னன் களந்தைக் கவிவீர ராகவன் கச்சியிலே
தன்னெஞ்ச மேடெனக் கற்றா ளருமுத் தமிழையுமே.
(தமிழ்நாவலர் சரிதை)

விருத்தம்.

விரகன் முத்தமிழ் வீர ராகவன்
வரகவி மாலையை மதிக்கும் போதெலாம்
உரகனும் வாணனு மொருங்கு தோன்றினாற்
சிரகர கம்பிதஞ் செய்ய லாகுமே.—(தமிழ்நாவலர் சரிதை).

இவையிரண்டும் அந்த அரசர்குழாத்துள் ஒருவர்பாடிய கவிகள். அப்பொழுதைப் புலவர் பலர் தமிழரசர் என்றே இவரைப்பாடுவர். இவர்மேற் பிரபந்தம்பாடிப் பொற்பந்தம்பெற்ற தொண்டைநாட்டுக் கவிவீர ராகவமுதலியாரும் தமிழரசர் என்றே இவரைக்கொண்டார். இவரெல்லாம் சிங்களவரசர்கூட்டத்தவராகச் சேர்த்து வழங்கப்படுவாரல்லர்.

௨. "வள்ளுவன் றனக்கு வளர்கவிப் புலவர்முன் - முதற்கவி பாடிய முக்கட் பெருமான்" என்று கல்லாடத்திலே இறையனாரைக்

கூறலால் இறையனார்கவி வள்ளுவமாலைக்கு முதற்கவியாகி வரல்வேண்டும் என்றார். இறையனார்கவி இப்போது யாண்டு நிற்கின்றது? இடைகடைகளுள்ளே ஒன்றிலே நிற்கின்றதா? சங்கப்புலவர் கவி வரிசையிலே தலைக்கணின்ற முதற்கவியாகவில்லையா? "புலவர்முன் முதற்கவி" என்பதும் அதனையே அறிவுறுத்திற்று. அல்லதூஉம் "முதற்கவி" என்பது ஏழாவது விரித்தற்கும் இசையும். அசரீரியும், நாமகளும் கூறிய கவிகள் புலவர்கவிவரிசையிற் சேர்க்கப்படுவனவும், இறுதியிலே வைக்கப்படுவனவுமல்ல. அவையும் மாலையிற் கோவையாதற்பாலன. ஆதலின் அங்ஙனமாயின.

௩. "௪௩-வது குறள் விசேடவுரையிலே—"விருந்தொக்கறானென்றாங்கு" என்பதன்கணுள்ள "என்றவென்பது விகாரமாயிற்று" என்பது அச்சுப்பிரதியிற் காணப்படுகின்றது. இவ்வாக்கியம் ஏட்டுப்பிரதிகளில் இல்லை. ௨௭-ம் குறளில் "சுவையொளியூறோசை நாற்றமென்றைந்தின்" என்புழி "என்றைந்தின்" என்னும் இடத்தும் இவர் இங்ஙனம் எழுதாமை காண்க." என்றார்.

"பாலொடுநீர் கலந்தற்றே" என்பதனுரையிலே "கலந்ததற்று என்பது விகாரமாயிற்று" என்றவர் இங்கே "என்ற என்பது விகாரமாயிற்று" என்னாரோ? இவ்வாக்கியம் நிற்றலால் வருங்குற்றம் யாது? "அரங்கின்றி வட்டாடியற்றே" என்புழி வாளா சென்றவர் "இறந்தாரை யெண்ணிக்கொண்டற்று" என்புழிக் "கொண்டால் என்னும் வினையெச்சம் கொண்டு எனத் திரிந்து நின்றது" என்று கூறவில்லையா? "வட்டாடியற்று" என்பதும், "கொண்டற்று" என்பதும் ஒருவகை முடிபுடையனவல்லவா? ஒருவகை முடிபுடையவைகளை வேண்டுங்கால் தனித்தனி கூறலும் முன்னாக பின்னாக ஒன்றிற்கூறி மற்றைய உய்த்துணரப்படும் என்று வாளாவிடுதலும் இவர்க்கு வழக்கென்க. சில பிரதிகளிலில்லாமை சிலபிரதிகளில் இருத்தலை விலக்காது. பொருந்துமாறு அவசியம். தமிழ்நாட்டிலுள்ள ஏட்டுப்பிரதிகளும் பலவகை. அவையெல்லாம் ஒருவர் பார்வைக்கு அகப்படல் அரிது.

௪. "இனி ௧௧௮-ம் குறளின் விசேடவுரையிலே "சான்றோர் சீர்தூக்கலாவது தடைவிடைகளாற் கேட்டவற்றை ஊழான் உள்ளவாறுணர்தலாகவும்" என அச்சிற் காணப்படுகின்றது. ஏட்டுப்பிரதிகளிலே "தொடைவிடைகளாற் கேட்டவற்றை" எனக்காணப்படுகின்றது. இதுவே மிகப்பொருத்தமானதும், பரிமேலழகர் கருத்தும் என்பதை—புறப்பொருள் வெண்பாமாலை, வாகைப்படலம் அவையமுல்லையில் வரும் "தொடைவிடையூழாத் தொடைவிடைதுன்னித் - தொடைவிடையூழிவை தோலா" என்னும் பாட்டானும், அதனுரையானும் நன்கு தெளியலாம்" என்றார்.

ஏட்டுப்பிரதிகளிலும், வெண்பாமாலையிலும் "தொடைவிடை" என்றிருத்தலால் "தடைவிடை" என்னும் பாடம தவறென்பதே இதன் சுருக்கம்.

"தடை - ஆக்ஷேபம், விடை - சமாதானம்" என்பது ஆறுமுக நாவலரவர்கள் குறிப்புரை. தடைவிடைஎன்பது சித்தியார் முதலாஞ் சூத்திரம். ௩௧-ம் கவியுரையிலுஞ் சிவஞானமுனிவராற் பிரயோகிக்கப்பட்டிருக்கின்றது. ஆசாரியதண்டிகள் காவ்யாதர்சத்திற் கூறிய "ஆக்ஷேபம்" என்னும் ஆரியபதம் வீரசோழியகாரராலே "தடைமொழி" எனவும், தண்டியலங்காரகாரரால் "விலக்கு" எனவும் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றது. விலக்கு எனினும் தடை எனினும் ஒக்கும். தொல்காப்பியரும் "விடுத்தலும் விலக்கலும்" என்பர். எழுச்சிக்கு எழல் என்பதும் எழில் என்பதும் பெயர். "நுண்மாணுழைபுலமில்லானெழினலம்" என்புழி நோக்கி எழல் என்பது விலக்கப்படுவதன்று. திதலை என்பதனை நோக்கித் "திதனி" என்பதனை விலக்கலாமா? திதனி என்பதுந் தேமல், "அலர்முலையாகத்தாரெழிற்றிதனி" (கலி. பாலை. ௧௩) "சாகஞ்சிலீமுகஞ் சார்ந்தன்றே விற்கணையும் - வேகம்பகைக்கழிந்து" என்னும் வண்டுவிடுதூது சரகம் என்பதனைத் தடுக்குமா? சரகம் என்பதும் வழக்கு. இரண்டும் வண்டு.. இங்ஙனம் உறுப்பாலொத்து மயக்குவ பல. "தொடைவிடை" என்பது மயக்கினுந் "தடைவிடை" என்பது தடைப்படற்பாலதன்று. மகாசன சம்மதம்.

௫. "௪௯-ம் குறளின் விசேடவுரையிலே "ஐம்புலனின்பங்களாரத்துய்க்கும் எண்மையுடைய" என்றிருக்கற்பாலது "துய்க்கும் மேன்மையுடைய" என்றுள்ளது" என்றார்.

அவர் சொல்லிய நெடின்முதலுடைய "மேன்மை" என்பது நாம் வைத்திருக்கும் அச்சுப்பிரதியிலே மென்மை எனக் குறின்முதலுடையதாய் நிற்கின்றது. நம்பிரதி ஆறுமுகநாவலரவர்கள் யுவ௵ அச்சிட்டது. பத்திராதிபர் வைத்திருக்கும் பிரதியை அச்சிட்டவர் யாவர்? அச்சிட்டவர் பெயர்கூறாது "அச்சுப்பிரதி" என்று பொதுப்படச் சொல்லுவது ஐயம் விளையாதா? துறவறத்தை நோக்க இல்லறம் மெல்லியதாகுமன்றி எளியதாதலில்லை; துறவே வலியது. "நற்றவம் பரவஞால நாமுடனிறுப்பின் வைய - மற்றமிறவத்திற்கென்று மையலியனைத்துமாற்றாது" (சிந். முத். துறவுவலி) ஆதலின் எண்மை என்பது பொருந்துமாறு எங்ஙனம்? எண்மை - இழிதகவு; இல்லறம் இழிதகவுடையதன்று.

௬. ௬௯-ம் குறளுரையிலே "கவானின்கட்கண்ட பொதுவுவகையினும்" என்ற பாடம் "கவானின்மகற் கண்டபொழுதையுவகையினும்" என ஏட்டுப்பிரதிகளிற் காணப்படுகின்றது. "கவான்மகற் கண்டதாய் மறந்தாங்கு" என்னும் நாலடியின் சொல்லையும் பொருளையும் இப்பாடம் நன்கு தழீஇநிற்றல் உய்த்துணர்க" என்றார்.

உய்த்துணருங்காற் பத்திராதிபர் கொண்டபாடம் பொருந்தாது. நாலடியில்வருஞ் சொல்லையுந் தழுவினாராயின்; கவான் என்னாது "கவானின்" என்றெழுதார். சுருங்கக்கூறும் இவர்க்கு மகன் என்பது மிகைபடக்கூறலாகும். ஒருகால் விளங்கக்கூறினும் வாக்கியம் வழுவாமல் "மகனைக் கவானின்கட்கண்ட" என்றே எழுதுவர். பொதுவுவகையின்றிச் சிறப்புவகையுங் கூறார். உரையோடு சேர உய்த்துணர்க.

௭. "௭௮-ம் குறளில் "வன்பாற்கண்" எனவும், உரையில் வன்பால் - வன்னிலம் எனவும் காணப்படுகின்றன. ஏட்டுப்பிரதிகளிலே "வன்பார்க்கண்" என்றே உள்ளது. பால் - நிலம் என்பதினும் வன்பார் வன்னிலம் என்பது பொருத்தமாகத் தோன்றுகின்றது" என்றார்.

வன்பால் என்பது வன்னிலங்களாகிய குறிஞ்சியையும் பாலையையும் குறிக்கும். "வன்பால் குறிஞ்சியும் பாலையு மாகும்" என்னுந் திவாகரமும் உண்டு. ஆயினும் பொதுவே வன்னிலம் என்றார், அவற்றுள் கடுநிலம் குறித்தற்பொருட்டு. கொடிய பாலைநிலத்துள்ள வற்றன் மரந்தளிர்த்தல் அரிதேயன்றோ! கந்தபுராணகாரரும் "வன்பாலதான வடபால்" என்றார். பால் என்பது பகுதி என்னும் பொருட்டு. இனிப் 'பார் என்னுஞ் சொற்கும் நிலம் என்னும் பொருட்கும் ஆற்றலும் இல்லை. சார்பு முதலிய இயைபினால் அப்பொருள் பயப்பினும் ஈண்டைக்கு ஏலாது.

௮. "௩௮-ம் குறளிலே "வீழ்நாள்படாமை" என அளபெடுக்கற்பாலது பிழைப்பட்டுக் காணப்படுகின்றது" என்றார்.

எம்முடைய பிரதியிலே அது பிழைப்பட்டுக் காணப்படவில்லை. "படாஅமை" என அளபெடை அறிகுறியாகிய அகரம் புலப்பட நன்கு விளங்குகின்றது. தவறிய பிரதிகளும் அச்சுப்பிழை என்று கொள்ளற்பாலன.

௯. "௨௨௫-ம் குறளில் "ஆற்றுவாராற்றல்" என்பது "ஆற்றுவார்க்காற்றல்" எனவுமுள்ளது. "ஐந்தவித்தானாற்றல்" என்பதில் நான்கனுருபை விரித்தவர் "ஆற்றுவாராற்றல் என்புழியும் விரியாமற் போகாராகலின் பின்னைய பாடமே பாடம்போலும். இவ்வாறே மற்றுஞ் சிலவுள" என்றார்.

ஆற்றுவாராற்றல் என்பது, நான்காவதாயினும், ஆறாவதாயினும் தோன்ற நின்ற பொருட்டொகை; நான்கும் ஆறும் "சாத்தன் மகனிவன்" என்றாற்போல ஈண்டு வேறல்ல. உரைகாரர் நான்கு தோன்ற விரித்தார். தொகையால் வேறு பொருடோன்றி மயங்குமாறு நிற்பதுவே உருபு விரித்துக் கூறற்பாலது. இஃது அங்ஙனமில்லாமையால் "உருபு விகாரத்தாற்றொக்கது" என்பது கூறாராயினர். "ஐந்தவித்தானாற்றல்" என்பதுவோ தொகையாலே மயக்கம் கொடுக்கின்றது. ஆதலின் உருபுவிரித்தே கூறல்வேண்டும். "மயக்கங்கொடுக்கு மத்தொகையிருவகை வழக்கினுமாகா" என்று இலக்கணக்கொத்து நூலாரும் கூறுவர். (இலக்கணக்கொத்து. ஒழிபி. ௬) விரிக்கவேண்டிய உருபினை விரியாமையால் வரும் வழுவிற்குப் பரிகாரமாகவே ஆண்டு உருபு விகாரத்தாற்றொக்கது என்றார். இவ்வேறுபாடு நோக்காமல் ஈண்டும் அங்ஙனம் கூறாமையால் "ஆற்றுவார்க்

காற்றல்" என உருபு விரிந்து நிற்கும் பாடமே உள்ளபாடம் என்று கொள்ளுதல் ஒன்றுதானோ? அன்றியும் "ஆற்றுவார்க்காற்றல்" என்னும் பாடம் பின் வரும் "மாற்றுவாராற்றல்" என்னும் எதுகை நயத்தையுங் கெடுத்துச் சந்தபங்கமும் வருவிக்கும். உருபு தொக்குழியெல்லாம் விகாரத்தாற்றொக்கது எனலும் வேண்டும். ஆதலின் முன்னையபாடமே உள்ள பாடமாகும். இன்னும் கூறுதும்.

பரிமேலழகர் "ஐந்தவித்தானாற்றல், என்புழியும், "ஆற்றுவாராற்றல்" என்புழியும் நான்கனுருபு விரித்தாராகவும், "விரியாமற்போகார்" என்றது புலப்படவில்லை. இவ்விரண்டினுங் குவ்வுருபு விரியுமாயினுந் தனிநிலை கெடாது சந்திப்படும். இங்ஙனமாகவும் இன்னொலி காரணமாக "ஐந்தவித்தானாற்றல்" என்புழிக் குவ்வுருபை மறைத்துக்கூறிய நூலாசிரியர் "ஆற்றுவாராற்றல்" என்புழி விரித்துக் கூறுவாரா? ஈண்டும் இன்னொலி வேண்டுமே. "தூதுரைப் பான்பண்பு" என்புழியுரையையும் நோக்குக.

அ. குமாரசுவாமிப்பிள்ளை.

ஸ்ரீ:

பத்திராசிரியர் குறிப்பு.

ஸ்ரீமத்-அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள், திருவள்ளுவரைப் பற்றிய என் குறிப்புக்களிலே ஏற்பவற்றைக்கொண்டு, ஏலாதவெனச் சிலவற்றில் தம் ஆக்ஷேபங்களைக் குறித்துவிடுத்த விஷயம் மேலே பிரசுரிக்கப்பட்டது. என் குறிப்புக்களுள்ளே, பிள்ளையவர்களால் மிகுதியுந் தடைநிகழ்த்தப்பெற்றவை, பரிமேலழகருரைப் பாடபேதங்களாக யான் குறித்தனவே. அத்தடைகளிலே சில வியவகாரச்செறிவால் விளக்கம்பெற்றிருப்பினும், வேறு சில அங்ஙனமின்றி ஆக்ஷேபித்தற்கு இடனாகின்றன. அவை வருமாறு:—

பிள்ளையவர்கள் விஷயத்தின் ௪-ம் குறிப்பு:—"சமன்செய்து" என்னுங் குறளின் விசேடவுரையிற் "சான்றோர் சீர்தூக்கலாவது,

தடைவிடைகளாற் கேட்டவற்றை ஊழான் உள்ளவாறுணர்தலாகவும்" என்று அச்சுப்பிரதிகளில் உள்ளபாடம், "தொடைவிடை" என இச்சங்கத்துள்ள பலநாட்டுப் பிரதிகளிலும் காணப்படுவதைக் குறிப்பிட்டு, 'இதுவே மிகப்பொருத்தமானதும் பரிமேலழகர் கருதியெழுதியதும்' என்பதற்கு மேற்கோளுங் காட்டினேன். இப்படி எழுதியதனால், "தடைவிடை" என்றபாடம் தவறென்பதே என் கருத்தெனக்கொண்டு, தடைச்சொல்லின் வழக்கைப் பிள்ளையவர்கள் பெரிதும் வலியுறுத்தினார்கள்.

என் கருத்து, தடையென்னுஞ் சொல்வழக்கை ஆக்ஷேபிக்க வந்ததேயன்று; "தொடையென்பதே மிகப்பொருத்தம்" என்ற எனது முன்வாக்கியமே இக்கருத்தைப் புலப்படுத்தும். ஆயின், யான் கூறவந்ததாவது—பரிமேலழகர் அக்குறளுரையிற் கருதியது "தொடை" என்னும் வழக்கு என்பதேயாம். "சமன்செய்து" என்னுங் குறள் அவையத்தாரை நோக்கிக் கூறியதாகக்கொண்டு, உரையில், "சான்றோர் சீர்தூக்கலாவது, தொடைவிடைகளாற் கேட்டவற்றை ஊழான் உள்ளவாறுணர்தலாகவும்" என எழுதிய உரைகாரரது தொடர்மொழி, வெண்பாமாலையில், அங்ஙனமே அவைக்களத்துச் சான்றோர் தன்மைகூறும் "அவையமுல்லை" என்னுந் துறைக்குக்காட்டிய

" தொடைவிடை யூழாத் தொடைவிடை துன்னித்
தொடைவிடை யூழிவை தோலாத்—தொடைவேட்
டழிபட லாற்ற லறிமுறையேன் றெட்டின்
வழிபடூர்தல் வல்ல தவை."

என்ற பாட்டில்வருஞ் சொல்லையும் பொருளையுந் தழுவிநிற்றல் காணலாம். இவ்வாறு, பரிமேலழகர், தம்முரையிலே, "முன்னோர் மொழிபொருளே யன்றி யவர்மொழியும், பொன்னேபோற் போற்றிக்"கொள்ளும் பெருவழக்கமுடையரென்பது ௧௧௦, ௧௨௦, ௧௩௦- முதலாய திருக்குறளுரைகளால் அறியப்படும். இங்ஙனம், முன்னோரது சொற்பொருள்களை உரைநடைப்படுத்தும் இவரதியல்பும், இங்குள்ள பலநாட்டுப் பிரதிகளிலும் "தொடை" யென்றே காணப்பட்டதும், வெண்பாமாலை அவையமுல்லையில் "தொடை

விடையூழா" என்றுள்ள சொற்பொருள்களே பரிமேலழகர் வாக்கியத்தில் அமைதலும் ஆகிய இவற்றை நோக்குமிடத்து "தொடை" என்னும் பாடமே பரிமேலழகர் கொண்டதென்பது தெள்ளிதாகின்றது. தொடைவிடை என்பவற்றுக்கு - அநுயோகமும் உத்தரமுமென்று பொருள்கூறுவர் வெண்பாமாலை உரைகாரர். அநுயோகம் - வினா, விசாரணை. இதனால் தடைப்பொருளுந் தொடைப்பொருளும் வேற்றுமையுடையதாமாறு காண்க. இங்ஙனம் வினா அல்லது விசாரணைப்பொருளில் தொடை என்ற அரிய சொல்வழக்கமுண்மை தெரியவருதலால், அதனை நாம் எளிதிற் றள்ளிவிடுதல் முறையன்று.

௫-ம் குறிப்பு :—௪௬-ம் குறளுரையில் "ஐம்புலவின்பங்களாரத்துய்க்கும் மேன்மையுடைய இல்வாழ்க்கை" என்பது, பிரதிகளிலே "துய்க்கும் எண்மையுடைய" எனக் காணப்படுவதைப்பற்றிக் குறிப்பிட்டேன். பிள்ளையவர்கள் "மேன்மையுடைய" என்ற பாடம் யாவர் அச்சிட்டதென்பதை யான் விளக்கவில்லையென்றும், நாவலரவர்களது பதிப்பில் "மென்மையுடைய" என்பதே உள்ளதென்றும் கூறினார்கள். சென்னையிற் சில வருஷங்கட்குமுன், பரிமேலழகருரையைப் பொருள்விளக்கத்துடன் விரிவாக அச்சிட்ட பிரதியை நோக்கி "மேன்மை" என்னும் பாடம் குறிக்கப்படலாயிற்று. இப்பாடம் சிறந்ததன்றென்பது எம்மிருவர்க்குமே ஒத்தது. ஆனால், "துய்க்கும் எண்மையுடைய" என்று யான் குறித்த பாடம் தவறென்பதும் "மென்மையுடைய" என நாவலரவர்கள் பிரதியிற்கண்டதே பொருத்தமென்பதும் பிள்ளையவர்கள் கருத்தாகவுள்ளன. இவ்விஷயமாக அவர்கள் எழுதுவன :—

"துறவறத்தை நோக்க இல்லறம் மெல்லியதாகுமேயன்றி எளியதாதலில்லை; துறவே வலியது. "நற்றவம் பாவ ஞால நரமுட னிறுப்பின் வைய - மற்றமி றவத்துக் கென்று மையவி யனைத்து மாற்றாது." ஆதலின் எண்மை என்பது பொருந்துமாறு எங்ஙனம்? எண்மை - இழிதகைமை; இல்லறம் இழிதகவுடையதன்று" என்பவை.

பிள்ளையவர்கள் குறித்த இக்கருத்து முழுதும், ஆராயுமிடத்து விவாதத்துக்கிடமாகும். "துறவறம், மனத்தையும் பொறிகளையும் ஒறுத்தடக்கவல்ல அருமையுடைத்தாயவழியே, அவற்றை ஒறுக்கவேண்டாது ஐம்புலவின்பங்களாரத் துய்க்கும் எண்மையுடைய இல்வாழ்க்கை" என்பது யான் எழுதியபடி, பரிமேலழகர் நடை. இந்நடை, "துறவறத்தை நோக்க இல்லறம் மெல்லியதாகுமேயன்றி எளியதாதலில்லை: துறவே வலியது" என்ற பிள்ளையவர்கள் கருத்துக்கிசைய அமையவேண்டுமாயின், "துறவறம், மனத்தையும் பொறிகளையும் ஒறுத்தடக்கவல்ல வன்மையுடைத்தாய வழியே" எனவிருத்தல்வேண்டும். ஐம்புலவின்பங்களாரத் துய்க்கும் இல்லறத்தின் மென்மைக்கெதிராக, அங்ஙனந் துய்த்தலரிய துறவின்வன்மையை வைத்துக் காட்டுதலே பரிமேலழகர் போன்றார் நடைமுறையன்றி, அருமைச்சொல்லுக்குமுன் மென்மைச்சொல்லை விரோதிக்க வைத்தல் முறையன்றாம்.

ஆகவே, "மென்மையுடைய." என்ற பிள்ளையவர்கள் பாடம் பொருந்துமாறெங்ஙனம்? இவற்றால், பரிமேலழகர் வாக்கிய முறையை நோக்கின், அருமைக்கு "எண்மை" என்னுஞ்சொல்லே இயைபுடையதென்பது தெள்ளிதாகும். அருமைக்கு எதிர்மொழி எண்மை அல்லது எளிமையென்பது, "சொல்லுதல் யார்க்கு மெளிய வரியவாஞ், சொல்லிய வண்ணஞ் செயல்" "எண்பொருள வாகச் செலச்சொல்லி" "எண்பதத்தா லெய்த லெளிதென்ப" என்னுங் குறள்களினுரைகளிலே குறிக்கப்படுதல் காண்க. எளிமை எண்மைகள் - வலிமை வன்மை, அணிமை அண்மைகள் போன்றன. இனி, பிள்ளையவர்கள் "துறவறத்தை நோக்க இல்லறம் மெல்லியதாகுமேயன்றி எளியதாதலில்லை, துறவே வலியது" என்றதுடனமையாது, "எண்மை - இழிதகைமை; இல்லறம் இழிதகவுடையதன்று" எனவும் எழுதினார்கள். இதனால், எளியது என்பதற்கு இழிதகவன்றி வேறு பொருளில்லையென்பது பிள்ளையவர்கள் கருத்தாதல் விளங்கும். அங்ஙனமாயின், "எண்பொருளவாகச் செலச்சொல்லி" "எண்பதத்தா லெய்த லெளிதென்ப" என்பன முதலிய இடங்கட்கு, இழிதகவுடைய பொருள், இழிதகவுடைய செவ்வி என்னும் விரோதப்பொருள்களன்றோ புலப்படும். "எண்மை பரியவ மிழிதக வெளிமை" என்பது பிங்கலந்தையாதலின், எளிமைக்கு இழிதகவன்றி எண்

மைப்பொருளும் பெருவழக்கிற்றுமெனா அறிக. "துய்க்குமெண்மை" என அமையும் ஏட்டெழுத்து முறையில், ணகரனகரங்களின் பேதம் நன்கு புலப்படாமையே, "துய்க்குமென்மை" என்று படிக்கப்பட்டதற்குக் காரணமாதல்வேண்டும்.

௬-ம் குறிப்பு:—"ஈன்றபொழுதின்" என்னும் ௬௯-ம் குறளுரையில் "கவானின்கட்கண்ட பொதுவுவகையினும்" என்பது "கவானின் மகற்கண்ட பொழுதையுவகையினும்" எனக் காணப்படுவதைப் பிள்ளையவர்கள் ஆக்ஷேபித்தார்கள். "ஈன்றபொழுதிற் பெரிதுவக்கும்" என்பதற்கு, "தான்பெற்ற பொழுதைமகிழ்ச்சியினும் மிகமகிழும்" என்றெழுதியதற்கேற்ப விசேடவுரையில் வரும் "கவானின் மகற்கண்ட பொழுதையுவகையினும்" என்ற பாடம், "கவாஅன் மகற்கண்டு தாய்மறந்தாங்கு" என்னும் நாலடியின்சொல்லையும் பொருளையுந்தழுவியதாகல் கண்டு அஃது எழுதப்பட்டது. பிள்ளையவர்கள், "நாலடியில் வரும் சொல்லையுந் தழுவுவதாயின் "கவான்" என்றெழுதாது 'கவானின்' என்றெழுதார்" என்றார்கள். பரிமேலழகர் முன்னோரது சொற்பொருள்களைத் தழுவுமிடங்களிலே உரைப்பாயிரத்தில் "ஒப்பநாடி அதற்குத்தக வொறுத்தல்" என்று எழுதிய நடை, "ஒப்ப நாடி யத்தக வொறுத்தி" என்னும் புறப்பாட்டடியின் சொல்லையும் பொருளையுந் தழுவியதாம். இதனில் 'அத்தக' என்பதனை 'அதற்குத்தக' என விரித்திலரோ? இங்ஙனமாக, 'கவானின்' என்றெழுதார்" என்றதென்னை? "ஆன்முலை யறுத்த வறனி லோர்க்கும், மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும், பார்ப்பார்த் தப்பிய கொடுமை யோர்க்கும்" எனவரும் புறநானூற்றடிகளை "ஆன்முலையறுத்தலும், மகளிர் கருவினைச் சிதைத்தலும், பார்ப்பார்த்தப்புதலும்" எனப் பரிமேலழகர் உரைநடையாக்கி எழுதியதிலே, உருபுகள் தொக்கும் விரிந்துங் காண்டலால், பிள்ளையவர்கள் கருத்துப்படி இதனிடையும் வாக்கியவழுவுண்டாயிற் றென்னல் வேண்டுமே? இதுபோன்றதே "கவானின் மகற்கண்ட" என்பதும் எனக் கொள்வதில் இழுக்கென்னை? முன்னோரது சொற்றொடர்களைத் தம் நடையமைதிக் கேற்பக்கொண்டு எழுதிச்செல்லுதலே பரிமேலழகரியல்பென்க. இனி, இங்குள்ள எல்லாப் பிரதிகளினும், "பொழுதையுவகை" என்ற பாடமே உள்ளது. "பொதுவுவகை" என்ற பாடங்கொண்ட பிரதியும் இருந்திருத்தல் கூடும். அன்றி, ஒருநயம் பற்றித் திருத்தியிருத்தலுமாம். "கவானின் மகற்கண்ட பொழுதையுவகை" என்பதே பொதுவுவகை என்னும் பொருளைக்குறிக்குமாதலால், இப்பாடங் குற்றமுடையதன்று. இஃதெவ்வாறாயினுமாகுக; "கவானின் மகற்கண்ட" என்னும் பாடம் உரைநடையெழுதும் பெருவழக்குடைய பரிமேலழகரியல்புக்கு இயைந்ததெனா அறிக.

௭-ம் குறிப்பு:—"அன்பகத்தில்லா" என்னும் ௭௮-ம் குறளில் "வன்பாற்கண்" என்பது "வன்பார்க்கண்" எனப்பிரதிபேதங் காணப்படுதலைப் பிள்ளையவர்கள், ஆராய்ச்சிகாட்டி, மறுத்தார்கள். அவர்கள் குறித்தபடி, "வன்பால் குறிஞ்சியும் பாலையு மாகும்" என்ற நிகண்டொன்றைக் கொண்டே, பரிமேலழகர் தெளிவாக "வன்பால் - பாலை" எனப் பதவுரையினும் விசேடவுரையினும் விளக்கிவிடலாமன்றோ? அங்ஙனமின்றிப் பதவுரையில் வன்பால் எனவே விடுத்து, விசேடவுரையிலே "வன்பால் - வன்னிலம்" என்றெழுதிப் போதற்கு ஏற்ற காரணம் வேண்டும். முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலென்னும் நானிலமும், வன்பால் மென்பாலெனப் பகுக்கப்படும். இப்பகுப்பு, வன்புலம் மென்புலமென வழங்குதலுமுண்டு; "வன்புலக் கேளிர்க்கு வருவிருந் தயரு, மென்புல வைப்பினன் னாட்டுப் பொருந" எனவருதல் காண்க. (புறம்-௪௨.) இவ்வடிகட்கு எழுதப்பட்ட விசேடவுரையை நோக்கின், குறிஞ்சியையும் பாலையையும்வன்புலமென்பது போலவே, முல்லை குறிஞ்சிகளை வன்புலமென்றலும் வழக்கென்பது தெரியவரும். இனி, "வன்பாற்கண்" எனின், வற்றன் மரந்தளிர்த்தற்குரிய அம்முல்லைகுறிஞ்சிகளிடத்துஞ் சென்று, அன்பகத்தில்லா வுயிர்வாழ்க்கைக்கு ஏற்ற உவமையாகாமையின், அச்சொல்லைப் பெய்யாது, "வன்பார்" என ஆசிரியர் கூறினரென்க. பார் என்பதும் வன்னிலமென்பதும், புற்பூண்டுகள் முளையாததும் ஈரப்பசையற்றதுமான ஒரு நிலவிசேடத்துக்கு வழங்கும் மொழிகள்.* இதனை "பார்தாக்கப்பக்குவிடும்" என்றவிடத்தே, பரிமேலழ

---

* இவ்வன்னிலத்தைப் பாரென்னும் வழக்கு பாண்டிநாட்டில் இன்றும் உள்ளது.

கர், பாரை வன்னிலம் என்ற சொல்லால் வழங்குதலான் அறிக. "பாருடைத்த குண்டகழி" என்னும் புறநானூற்றடியினும் அதனுரைகாரர் பார் - வன்னில மென்றார். எனவே, இக்குறளுரையிற் பரிமேலழகர் வன்னில்மென்று வழங்குதற்கேற்ப, மூலத்திற் பாரென்ற பாடமிருத்தலே பொருத்தமென்னத்தடையில்லை. பாரென்பதே வன்னிலமாதலின், வலிய வன்னிலமென்பது மிகையாமெனக் கருதி, "வன்பால் வன்னிலம்" என விசேடவுரையிற் கருத்தைக் குறிப்பிட்டாரென உணர்க.

இதுகாறும், பரிமேலழகருரைப் பாடபேதங்களாக 'என்னாற் குறிக்கப்பட்டவைகளிலே, பிள்ளையவர்கள் நிகழ்த்திய தடைகள் சிலவற்றுக்குச் சமாதானங்கூறப்பட்டது. இதனால், அவர்களது மற்றத்தடைகளில் எனக்கு விவாதமின்மை விளங்கும். பிள்ளையவர்களும் இவ்வாறே என் குறிப்புக்கள் சிலவற்றில் மகிழ்ச்சியுடன் சம்மதமளித்தலை அவர்கள் விஷயத்தின் தலைப்பிற் கண்டுகொள்க. இத்தகைய இழுக்கற்ற ஆராய்ச்சிகள் செந்தமிழில் வெளிவருதல் பேருபகாரமேயாம். இன்னும், திருக்குறளுரையிற்காணும் பாடபேதங்களைச் சமயநேரும்போது எழுதிவரும் எண்ணமுடையேன். இங்ஙனம் எழுதுவது, நாவலரவர்கள்போன்ற தமிழ்ப்பெருமக்களைக் குறைகூறலாகுமென்று அறிஞர் கருதாதிருக்க வேண்டுகிறேன். தமிழறிந்தாரும் நிறுத்துமிடங்கூட்டுமிடமறிந்து எழுதப்படிக்கவரிய ஏட்டுப்பிரதிகளை ஆராய்ந்து தம் ஞானவன்மையால் எத்தனையோ விவாதச்சிக்கல்களை அறுத்துத் தெளிவாக்கி, அச்சுப்பதிப்பின் ஆரம்பகாலத்தே பல அரியநூல்களைப் பதிப்பித்துபகரித்த அம்மகானது அருமைபெருமைகள் நம்மெல்லாவுள்ளங்களும் நன்கறிந்தவை. ஆயின், அவர்கட்கு அப்போது கிடையாத வேறுபிரதிகளிற் சில அரியபாடங்களுமிருப்பின், அவற்றைத் தள்ளிவிடல் முறையன்றே; அதுபற்றி எழுதுவதன்றி வேறுகருத்தின்றென்க. இங்ஙனம் இனியெழுதும் பாடங்களிலும், பிள்ளையவர்கள்போன்ற நல்லறிஞர் ஆராய்ச்சிகாட்டி, ஏற்பனவற்றைத் தமிழுலகம் கொள்ளவும் ஏலாதவற்றைத்தள்ளவும் செய்வார்களென்று நம்புகின்றேன்.

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-எ.] சௌமிய ஹு ஆனிமீ [பகுதி-அ.

திருக்குறளைப்பற்றிய கதைகள்.

இந்நிலவுலகில் தமிழ்மொழியைச் சிறப்பிக்கின்றநூல்கள் பலவற்றுள்ளுஞ் சிறந்துநிற்பது திருக்குறளென்பது பலர்க்கும் ஒப்பமுடிந்ததோர் துணிபேயாம். இந்நூற்குப் பின்னெழுந்த இலக்கண இலக்கிய சமயநூல் முதலியவற்றுள் இத்திருக்குறளை யெடுத்தாளாத நூல்களை அறிதல் அரிதேயாம். இதுவன்றியும், உலகவழக்கில் இக்குறளைப்பற்றி யெழுந்த கதைகள் பலவுள. அவற்றைக் கர்ணபரம்பரையில் அறிவதேயன்றி, பிறவாற்றால் அறிதல் கூடாமையின் அதனை நம் "செந்தமிழ்" வாயிலாக வெளியிடில் பலரும் அறிந்து களிப்பாரெனுந்துணிபு பூண்டு என் சிற்றறிவிற்கெட்டிய சில கதைகளை இங்ஙன் வெளியிடலாயினேன். அவற்றுள் ஒன்று வருமாறு:—

ஒருவன் ஆறலைத்தலையே தன்றொழிலாகப்பூண்டு அக்கொடுந்தொழிலாற்கிடைக்கும் பொருள்கொண்டு தன் மனைவிமக்களைக் காப்பாற்றிவந்தான். ஒருநாள் வழியிலொருவரும் நெடுநேரம் வராதிருந்தமைகண்டு, மிக்க ஆவலோடு எதிர்பார்த்திருக்குமமையத்தே, ஒரு சந்நியாசி ஒரு மூட்டையுடன் அவ்வழிச்செல்லுதலறிந்து ஓடோடியுஞ்சென்று அச்சந்நியாசியின்றலையிற் புடைப்பான் கருதித் தன் கையிலுள்ள தடியை யோச்சக்கண்டு, சந்நியாசி அப்பா! நீ என்னை அடிக்கக்கருதும் காரணம் யாதோ? உன்மாட்டு யாதும் தொடர்பற்ற என்னை உன் சீற்றத்திற்கு இலக்காக்கியதென்னை என வினவக், கள்வன் இன்று ஒருவருமிவ்வழிச் செல்லமையால் என்றொழிலாயுள்ள வழிப்பறியைச்செய்து இதுவரை

பொருள் ஈட்டிக்கூடாமையாயிற்றென்றும், உமது மூட்டையிலுள்ளபொருளைக்கொடுத்துவிடில் உமக்கு யாதுந்துயர்செய்யாது விட்டுவிடுவேனென்றுங் கூறினான். அதுகேட்டுச் சந்நியாசி அப்பா! என் மூட்டையில் யாதும் பொருளின்மைக்கு யான் மிகவும் கவல்கின்றேன் என்று புகன்று அதில்வெறும் காஷாயத்துணிகளையன்றி யாதும் பொருளின்மையைக் கள்வன் நன்கு அறியுமாறு அவிழ்த்துக்காட்டி இத்துணியும் உனக்கு உபயோகமில்லாத காஷாயமானதுபற்றி விசனிக்கின்றேன் என்று புகன்றனர். இவர் வார்த்தையைக்கேட்ட கள்வன் இவரிடத்து மிக்க மதிப்புடையவனாய் அவரை வணங்கி விடைகொடுக்க, அதனையறிந்த சந்நியாசி அப்பா! உலகத்தில் பொருளீட்டற்கு எத்தனையோ தொழில்களிருக்க, இக்கொடுந்தொழிலை நீ மேற்கொண்டனையே. இதனால், மிக்க பாவம் உனக்குண்டென்பதை நீ யறிந்திலையா என்று வினவ, அதற்குக் கள்வன் ஐயா யான் என்செய்வேன். என் மனைவிமக்களைக் காப்பாற்றற்கு வேண்டும்பொருள் இன்மையால், இப்பாவமாயதொழிலை யான் மேற்கொண்டு அவர்களைக் காப்பாற்றுங்கடமை பூண்டேன் என்றான். சந்நியாசி அப்பா! மனைவிமக்களைக் காப்பாற்றுவான்கருதி நீ இப்பாவத்தைச் செய்யத்துணிந்தாயேல், அவர்களை வேண்டிச்செய்யப்படும் இப்பாவத்தில் அவர்கட்குப்பங்குண்டா எனக், கள்வன் இப்பொருளை அவர்களும்பாகித்து அனுபவிப்பதால் பாவத்தில் அவர்களுக்கும் பங்குண்டென்பதே தன்றுணிபெனக்கூறினன்.

சந்நியாசி உன்றுணிபால் யாதும் பயனில்லை. உன் வீட்டிற்சென்று உன் மனைவிமக்கள் உன்பாவத்தைப் பகிர்ந்துகொள்ளற்குச் சம்மதிக்கின்றார்களா என்று கேட்டறிந்து வாவென்ன, நல்வினைப்பயன் கிட்டியதால் கள்வன் சந்நியாசியை வணங்கி அவ்வாறே நும்மாணையை நிறைவேற்றுவேன் அதுவரை இம்மரத்தடியிற் றங்கியிருக்கவெனச் சந்நியாசியைவேண்டிப் பின்னர்த் தம்மனையைநோக்கிச் சென்றான். தம்மனையையடைந்து மனைவியையழைத்து உன்பொருட்டும் உன் பிள்ளைகள்பொருட்டும் யான்செய்யும் பாவத்தில் உனக்கும் பிள்ளைகட்கும் பங்குண்டா என வினவ, மனைவி என்னையும் பிள்ளைகளையும் காப்பாற்றுங்கடமை பூண்ட நீ, நல்வழியில் பொருளீட்டிக் காப்பற்றற்கு எங்களால் என்றேனுந் தடையில்லையாதலால், நீசெய்யும் பாவத்தில் ஒருசிறிது மெங்கட்குப்பாகமில்லையென, மக்களும் தனித்தனியே யவ்வாறுகூறக்கேட்டுக் கள்வன் மிக மனவருத்தத்துடன் சந்நியாசியை வந்தடைந்து சுவாமிகளே! என் மனைவிமக்களைக் காப்பற்றற்கென்றே அதிபாதகங்களை யான்செய்து ஈட்டியபொருளனைத்தையுங் கைக்கொண்டு என் பாவத்தில் ஒருசிறிதும் தமக்குச்சம்பந்தமில்லையென என்மனைவியும் மக்களும் மறுத்துவிட்டனர். ஆதலால், யான் பெரும்பாவியாயினேன். யான் இனியேனும் உய்யுமாறு உபதேசித்தருளல்வேண்டும் என மிக்க வணக்கத்துடன் பிரார்த்தித்து நின்றான்.

அருளுடைமையையே பொருளாகக்கொண்ட கல்வி கேள்வியுடைய உண்மைத்துறவி யாதலின், அவன்பால் மிக்க இரங்கியவுள்ளத்தவராய்க் கள்வனே! இவ்வாறலைக்குந் தீத்தொழிலையன்றி உன் குடும்பத்தைக் காப்பாற்றக்கூடிய வேறெத்தொழிலேனும் கற்றிருக்கின்றனையா என வினவக், கள்வன் ஐயனே, இக்கொடுந்தொழிலொன்றே, யான் பாலியமுதல் அப்பியசித்ததேயன்றி, வேறெத்தொழிலையும் அறியேன் எனப்புகலக்கேட்டுச் சந்நியாசி, இவனே நம்பால் மிக்க அன்புடையவனாய் நம்மாணையெதுவும் மறுக்காது கொண்டியற்று மனமுடையவனாய்த் தானுய்யும்வழியை நம்பாற்கேட்டுணரும் அவாவுற்றிருக்கின்றான். இவன் உய்யுமாறு இக்களவுத்தொழிலை விட்டொழியக்கூறி, அவன் அவ்வாறே விட்டொழியில் அவன் குடும்பக்காலக்ஷேபம் நடத்தல் எவ்வாறு முடியும்; இப்பாவத்தொழிலை விட்டொழியாது இவன் உய்தல் எவ்வண்ணங்கூடும் எனச் சின்னேரஞ்சிந்திக்கத், தாம் முன் கற்றுள்ள.

“பொய்யாமை பொய்யாமை யாற்றி னறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று.”

என்னுந் திருக்குறள் அவர் நினைவில் வந்தது. இதுவேயன்றி, அவன் உய்யுமாறு வேறில்லையென்னுந் துணிபையுடையவராய்க் கள்வனையழைத்து அப்பா? உன் குடும்பக்காலக்ஷேபத்துக்கு இக்களவுத்தொழிலையே நீ யின்னமு மியற்றவேண்டியவனாக ஆகிறாய்; ஆயினும், நீ உய்யும்பொருட்டு இதுமுதல் பொய்சொல்லா விரத

மொன்றை நீ யுறுதியாகக் கடைப்பிடித்து நடந்துவருவாயேல், உனக்கு க்ஷேமமுண்டாகுமெனக்கூறி, அவன்பால் விடைபெற்றுச் சென்றனர்.

இவ்வாறு சந்நியாசியால் உரைக்கக்கேட்ட கள்வன், அதனைக் குருமொழியாகக் கைக்கொண்டு எவ்வாற்றானும் பொய்சொல்லாத விரதமேற்கொண்டொழுகி வந்தான். இவ்வாறு சின்னாட்சென்ற பின், ஒருநாள் களவுசெய்தற்கென்றே இரவிற்றன் வீட்டைவிட்டு ஓர்வழிச் சென்றுகொண்டிருந்தான். அக்காலத்தே நகர்சோதனை செய்தற்கென்று வந்துகொண்டிருந்த அவ்வூர் அரசன் அக்கள்வனை யெதிருற்று நீ யாவன்? எக்கருமம்பற்றிச் செல்கின்றாய் என்று வினவ, இவன் பொய்சொல்லாவிரதியாதலால் உடனே தன்னைக் கள்வனென்றுங் களவுசெய்தற்கென்றே தான் செல்வதாகவும் அரசனிடம் அறிவித்தான். இதனைக்கேட்ட அரசன் மிக்க ஆச்சரியமுற்று அவனை இன்னும் அளந்தறியுமுள்ளத்தனாய் தன்னையும் ஒரு கள்வனென்றே அவனுக்கு அறிவித்துத்தானும் உடன்வரவிரும்புவதாயும் யாங்குச் செல்லலாமென்றும் கள்வனைக்கேட்க, அவன் சிலவிடங்களைக் குறிப்பிட்டுச்சொல்ல அவற்றையெல்லாம் மறுத்து அற்பப்பொருள்களைக் களவுகொள்ளலாற் பயனென்னை, அரசனது பொக்கிஷத்தில் உயர்ந்த பதார்த்தங்கள் இருக்குமாதலால் அவற்றிலொன்றை யாம் கைப்பற்றினும் நீண்டநாளைக்கு இத்தொழில் செய்யும் ஆவசியகமற்றுச் சுகமே யிருக்கலாமென்றும் அதுவே செய்பத்தக்கதென்றும் அரசன் கள்வனுக்கு அறிவித்தனன்.

கள்வன் காவலாளிகள் முதலியோரால் காவல் பூண்டுள்ள அரசனது பொக்கிஷத்தை யணுகலும் அருமையாமென அறிவிக்க, அரசன் அதனைத்தான் சுலபமாக முடிக்கும் வழியையறிந்திருப்பதாய்ச் சொல்லி யவனையும் அழைத்துக்கொண்டு காவலாளிகள் முதலியோர்கள் கண்ணிற்படாத தம் பொக்கிஷத்தை வந்தடைந்து அவ்வறையை யுடைத்துச்சென்று தம்பரம்பரையில் நீண்டநாளாக வைத்துப் போற்றிவருவதும் விலைமதிப்புக்கடங்காததும் மிகவுயர்ந்ததுமான மூன்று இரத்தினங்கள் உள்ளபெட்டியைத் திறந்து அக்கள்வனுக்கு இவ்விரத்தினங்களுள் ஒன்றை நாம் கைக்கொள்ளினும்

இக்களவுத்தொழிலை யாம் இனிக்கைவிட்டு மிக்கசௌக்கியத்தையடையலாமென அறிவித்தனன். கள்வனும், கள்வனாகக்கூறிவந்த அரசனுக்கு ஓர் இரத்தினங்கொடுத்துத் தனக்கென்று ஒன்றையெடுத்துக்கொண்டு மற்றொன்றை அவ்விரத்தினத்திற் குரியானுக்கு ஆகுக என அப்பெட்டியிலேயேவிட்டுத் தம்முடன் வந்தோனையும் அழைத்துக்கொண்டு வெளியேவந்தனன். அரசனும் முன் உட்பிரவேசித்த வழியே ஒருவரும் அறியாதிருக்க அரண்மனையைக் கடந்து வெளியே சென்றவுடன் அவன் உறையுள் முதலியவற்றை வினவ, உள்ளவாறு கூறிப் பின்னர்க்கள்வன் தன்னிடஞ்சென்றனன். அரசனுந் தன் அந்தப்புரம்வந்து சேர்ந்தனன்.

மறுதினங்காலையில் அரசனது பொக்கிஷ அறை உடைபட்டிருப்பதை யறிந்த காவலாளிகள் முதலியோர் அதனை யரசனுக்கறிவிக்க, அரசன் தன் மந்திரியையழைத்து பொக்கிஷவறை உடைபட்டிருப்பதால் திருடர் பிரவேசித்திருக்கலாம் அதனால் அவர்கள் கைக்கொண்டு நமக்குக்காணாதொழிந்த பொருள் இவையெனக்கண்டு அதனைத் தனக்கறிவிக்க என ஆணைகொடுத்தனுப்பினான். அவ்வாறு சென்ற மந்திரி அரசன் கருவூலத்துள் தான் தனியேசென்று பரிசோதிக்க மற்றைப்பொருள்கள் யாவுமிருக்க உயர்ந்த இரத்தினங்கள் மூன்றனுள், இரண்டு காணாதிருப்பக்கண்டு இரண்டு இரத்தினங்களையும் கவர்ந்துசென்ற கள்வன் ஒன்றையிங்குவைத்துச் செல்லற்கு ஞாயமில்லையாதலால் இவ்வொன்றையும் நாம் கைப்பற்றிக்கொண்டு மூன்று இரத்தினங்களுமே கள்வர் கைவசமாயின என்று கூறுதல் பொருத்தமுடைத்தெனத் துணிந்து அவ்வாறே யெஞ்சியிருந்த வொன்றையும் தான் கவர்ந்துகொண்டு அரசனிடம்வந்து உயர்ந்த இரத்தினங்களாக இருந்த மூன்றுமே கள்வர் கைக்கொண்டதாக அறிவித்தான்.

அதுகேட்டு அரசன் மந்திரியைத் தன்பக்கமிருக்கச்செய்து தன்முன்னின்ற ஏவலாளருள் ஒருவனையழைத்து முன்னிரவில் தாம் கள்வனிடம் அவன் வீட்டுக்குக் கேட்டிருந்த அடையாளங்களை, யவ்வாறே அவ்வேவலாளிக்கறிவித்து அவ்விடத்து வசிக்குமவனை யழைத்துவரக் கட்டளையிட்டனன். அவ்வாறு சென்ற

ஏவலாளி கள்வனைக்கண்டு அரசனாணையை யறிவிக்க அவன் றன் மனைவியை யழைத்து அரசன் அரண்மனையில் தான் முன்னிரவு செய்தகளவு வெளிப்பட்டமையால் அரசன் றன்னையழைப்பதாகவும், தான் இனி உயிருடன் மீண்டுவந்து மனைவிமக்களைப் பார்ப்பது கூடாதென்றும் அவளைத் துக்கப்படாதிருந்து மக்களைக்காப்பாற்றும்படிக்கும் சொல்லிப் பின்னர் ஏவலாளியுடன் அரசன் சமுகம் வந்தடைந்தான்.

அவனைக்கண்ட அரசன் முன்னிரவினிகழ்ச்சியை யவன்பால் வினவ, அவன் உள்ளவாறே நடந்தயாவற்றையும் சொல்லி அரசனால் தமக்கு உண்டாகும் மரணதண்டனையையும் எண்ணாது தான் கொண்ட உண்மை விரதத்தினையே சாதித்தனன். இதுகண்டவரசன் மனமிக மகிழ்ந்து நீ கவர்ந்துசென்ற இரத்தினம் எங்கே என்று கேட்க வீட்டிலிருப்பதாகவுரைத்து அரசன் ஆணைகொண்டு சென்று கொணர்ந்து அரசன்முன்னிட்டான். உடனே யரசன் உன்னுடன் வந்த கள்வன் யானே, என்பங்காகவெடுத்த இரத்தினம் இதுவே யென்றுகூறித் தன்னிடமிருந்த ஓர் இரத்தினத்தை யதன் பக்கலில் வைத்துப் பின் தன் மந்திரியைப்பார்த்து நீயுங் கள்வனாதலால் உன்பங்கிற்கு நீ கவர்ந்த இரத்தினத்தையும் இவ்விடத்தே வை யென்றுகூற மந்திரியும் திகைத்து வேறுவழியற்றவனாய்த் தன்பாலுள்ள இரத்தினத்தையும் வெளியிலெடுத்து வைத்தனன். உடனே யரசன் கள்வனுக்குரிய தண்டனையைத் தன் மந்திரிக்குக்கொடுத்து, பொய்சொல்லா விரதியாய கள்வனைத் தன் மந்திரியாக்கினன். அதுமுதல் பொய்யாவிரதியாகிய கள்வன் மிக்க நல்லொழுக்கத்தையும், சௌக்கியத்தையும், சந்நியாசியின் உபதேசத்தாலும், ஆசிர்வாதத்தாலும் தானடைந்ததென்ற வுணர்வுகொண்டு உய்வை யடைந்தான்.

இக்கதை யாம் மேற்காட்டியுள்ள "பொய்யாமை பொய்யாமை" என்னுந் திருக்குறள் பொய்யாமொழியென்பதை விளக்கிநின்றமை அறிவாளிகள் உய்த்துணர்ந்து கொள்ளநின்றது.

(தொடரும்)

இங்ஙனம்,
பொ. பாண்டித்துரை.

உ

திருச்சிற்றம்பலம்.

சைவாதீனமுந் தமிழும்.

இவ்வுலகத்திற் சைவாதீனங்களினுற்பத்தி மகிமையைப்பற்றி விசாரிப்பவர்க்குப் பெரும்பயன்றருமென்பதற் கையமில்லை; சைவசமயவுபதேச விருத்தியும், சைவதத்துவநூல்களின் விருத்தியும், ஏனைத்தமிழ்நூல்களின் விருத்தியும், இடையறாது செய்துவருதலே சைவாதீனங்களின் முதற்கடமையாம். அன்னதான முதலியன செய்தல் அவற்றிற்குத் துணையாகிய கடமையாம். இவற்றை யாவரு மறுக்கமாட்டார்.

கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை என்னு நால்வகைப் பயிற்சிகட்கு நல்ல இடமாகிய சைவாதீனங்கள் பலவற்றுள்ளுந் தலைமையான ஆதீனம் ஸ்ரீ: கைலாயபரம்பரைத் திருவாவடுதுறை யாதீனமே.

அவ்வாதீனத்தில், உரைப்பாருரைக்கு முறையிற் சிறந்த ஸ்ரீ: நமசிவாயதேசிகமூர்த்திகண்முதலாகிய பலரும் நூல், உரை, போதகம் என்னு மூன்றினுக்கு மூன்றுவிதமான ஆசிரியராக வதிந்தருளினர் என்பதைப் பலருமறிவார்.

அவர்களிலே ஸ்ரீ: நமசிவாயதேசிக மூர்த்தி மறைஞானதேசிகருக்குந், தக்ஷிணாமூர்த்திதேசிகருக்கும், அம்பலவாணதேசிகருக்கும் மெய்கண்ட சாத்திரவுபதேசஞ் செய்தருளிய தன்றித்தசகாரியமுஞ் செய்தருளினர்; அதற்கு நமசிவாயமூர்த்தி தசகாரியமெனப் பின்பு பெயராயிற்று.

தக்ஷிணாமூர்த்தி தேசிகர் மெய்கண்ட சாத்திரக்கருத்தடங்கிய தசகாரியம், உபதேசப்பஃறொடை என்னு மிரண்டு ஞானநூல்களைச் செய்தருளினர்.

அம்பலவாண தேசிகர் தசகாரியம், சன்மார்க்கசித்தியார், சிவாச்சிரமத்தெளிவு, சித்தாந்தப்பஃறொடை, சித்தாந்தசிகாமணி, உபாய

நிட்டைவெண்பா, உபதேசவெண்பா, நிட்டைவிளக்கம், அதிசயமாலை, நமச்சிவாயமாலை, பூப்பிள்ளைஎன்னுமொரு பரிபக்குவர் பொருட்டாகச் செய்ததாகிய உயிரட்டவணை என்னும் பதினொருஞான நூலகளைச் செய்தருளினர். இத்தேசிகமூர்த்தியே ஸ்ரீ: நமசிவாய தேசிகமூர்த்திக்கு இரண்டாம் பட்டத்தினிலைபெற்றிருந்த மூர்த்தி.

இவ்வம்பலவாண தேசிகமூர்த்தியிடத்து வைணவப்பிராமணருங், கல்வியறிவிற்சிறந்த பக்குவருமாகிய உலகுடைய நாயனாரென்பவர் சைவசந்நியாசமும், நிருவாணதீக்ஷையும் பெற்று மெய்கண்டசாத்திரமுங்கற்று அத்தேசிகமூர்த்தியின்மீது சைவசித்தாந்த சாத்திரக் கருத்தடங்கிய தோத்திரமாகப்பத்துத் திருவிருத்தமியற்றியிருக்கின்றார்; இதற்கு உலகுடைநாயனார் கழிநெடில் என்றுபெயர்.

இன்னுமவ் வாதீனத்தைச் சார்ந்த திருநெல்வேலியீசானமடத்திலெழுந்தருளியிருந்த ஈசானதேசிகரென்னுஞ் சுவாமிநாததேசிகர் அத் திருநெல்வேலியில் வேளாண்மை செய்திருந்த தாண்டவராயபிள்ளையின் புத்திரராகிய மயிலேறும்பெருமாள்பிள்ளை யெனனுங் கல்விக்கடலிற் பருகி இலைமறைகாய்போற் கிடந்தனவாகிய அரிய விதிகளை யொருங்குதிரட்டி வேற்றுமை, வினை, ஒழிபென மூவியலாக வகுத்து இலக்கணகொத்து எனவொரு நூலும், தசகாரியமும், திருச்செந்திற் கலம்பகமுதலிய நூலுஞ் செய்தருளினர்; அன்றியும் நன்னூற்கு விருத்தியுரைசெய்த சங்கரநமச்சிவாயப்புலவருக்கு நல்லாசிரியராகவிருந்து பலநூல்களையுங் கற்பித்தருளினர்; இத்தேசிகர் கற்கப்படாதிருந்த தமிழ்நூல் ஒன்றுமில்லையென்பதைத் காவலரெல்லா நன்குபுகல்வார்.

பெரியபட்டத்திலெழுந்தருளியிருந்தபின் வேலப்பதேசிகமூர்த்தி திருப்பறியலூர்ப் புராணம், பஞ்சாக்கரப்பஃறொடை முதலிய நூல்களைச் செய்தருளினர்; வடநூற்கடலுந் தென்றமிழ்க்கடலுமுழுதொருங் குணர்ந்த முனிவராய் விளங்கிய சிவஞான முனிவருக்கும் இத்தேசிகமூர்த்தியே கற்பித்தருளினர்.

இன்னும், வாதுளாகமப்படி ஞானபூஜாவிதி மொழிபெயர்ப்பு, மரபட்டவணை, அநுபோகவெண்பா, வருணசிவாசாரியர் பத்ததிப்

படி கிரியாபூஜாவிதி முதலிய நூல்கள் அம்மரபினான்றோராலே செய்தருளப்பெற்று வழங்குகின்றன.

அம்பலவாணதேசிக மூர்த்தி செய்தருளிய தசகாரிய முதலிய பத்தும், தக்ஷிணாமூர்த்தி தேசிகர் செய்தருளிய தசகாரியம், உபதேசப்பஃறொடை யிரண்டும், சுவாமிநாத தேசிகர் செய்தருளிய தசகாரியமொன்றும், பின்வேலப்பதேசிகர் செய்தருளிய பஞ்சாக்கரப் பஃறொடையொன்றும் ஆகப்பதினான்கு ஞானநூல்களும் பண்டாரசாத்திரமென ஆன்றோராலே வழங்கப்பட்டு வருகின்றன; வேலப்பதேசிகமூர்த்தியின் கல்விமகிமையை வியந்துபாராட்டிச சிவகிரி சேற்றூர் ஜமீந்தார் முதலியோர் நிலமானியம் விட்டிருக்கின்றார்கள்.

இனி, மாதவச்சிவஞான மாமுனிவர் செய்தருளிய நூல்கள் வருமாறு:—தொல்காப்பியத்தினுரையாகிய இளம்பூரணம், சேனாவரையம், நச்சினார்க்கினியம் என்பவற்றிலுள்ள ஆசங்கைகளை நீக்கித் தெளிவிக்கும்பொருட்டு, அத்தொல்காப்பியத்தின் பாயிரத்திற்கும், முதற்சூத்திரதிற்கும், சூத்திரவிருத்தியெனப் பெயர்பெற்ற பாஷியமும், வடமொழித் தருக்கசங்கிரக அன்னம்பட்டீயங்களின் மொழிபெயர்ப்பும், நன்னூல் விருத்தியுரைத் திருத்தமுஞ், சித்தாந்தப் பிரகாசிகை மொழிபெயர்ப்புஞ் செய்தருளினர்; இந்நான்குந் திராவிடமஹாபாஷிய முதலிய சித்தாந்த சாத்திரத்திற்கு அங்கங்களெனப்படும்.

அன்றியுங், கற்போரிடர்ப்படாது ஐயந்திரிபறக்கற்றுத்தெளியும்வண்ணம், சிவஞானபோதத்திற்குத் திராவிடமகாபாஷியமெனப் பெயர்பெற்ற விருத்தியுரையும், இலகுவியாக்கியானமாகிய சிற்றுரையும், சிவஞானசித்தியார் சுபக்ஷத்திற்குப்பொழிப்புரையுஞ் செய்தருளினர்.

அன்றியுங், காஞ்சிப்புராணமொழிபெயர்ப்பும், ஸ்ரீ: அரதத்த சிவாசாரியார் சிவபெருமானே பரம்பொருளென இருபத்திரண்டு ஏதுக்களாலே நாட்டியருளிய சுலோக பஞ்சகத்தின் மொழிபெயர்ப்பும், ஸ்ரீ-அப்பயதீக்ஷிதர் அருளிச்செய்த சிவதத்துவ விவேகமூல சுலோகங்களின் மொழிபெயர்ப்புஞ் செய்தருளினர்.

அன்றியும், சோமேசர் முதுமொழிவெண்பா, திருவேகம்பரந்தாதி, திருமுல்லைவாயிலந்தாதி, குளந்தூர்ப்பதிற்றுப்பத் தந்தாதி, கலைசைப்பதிற்றுப்பந்தந்தாதி, இளசைப்பதிற்றுப்பத்தந்தாதி, கச்சியாநந்த ருத்திரேசர்பதிகம், திருவேகம்பரானந்தக்களிப்பு, செங்கழுநீர்விநாயகர் பிள்ளைத்தமிழ், அமுதாம்பிகைபிள்ளைத்தமிழ், செப்பறை அகிலாண்டேசுவரிபதிகம், திருத்தொண்டர் திருநாமக்கோவை, நமசிவாயதேசிகமூர்த்திமாலை முதலிய பிரபந்தங்களைச் செய்தருளினர்.

அன்றியும், தருமபுரவாதீனத்தாருடன் வாதநிகழ்ந்தபோது மரபட்டவணை மறுப்பின் மறுப்பு எனவொன்றும், திருவண்ணாமலையாதீனத்தாருடன் வாதநிகழ்ந்தபோது எடுத்தென்ஐஞ்சொல்லுக்கிட்ட வயிரக்குப்பாயமெனவொன்றும், சிவசமவாதவுரை மறுப்பெனவொன்றுஞ் செய்தருளினர்.

அன்றியும், காஞ்சிபுரத்து வைணவரோடு வாதநிகழ்ந்தபோது கம்பராமாயண முதற்செய்யுட் சங்கோத்தரவிருத்தியென ஒன்றும், இலக்கணவிளக்கத்திலுள்ள வழுக்களை வெளியிடக்கருதி இலக்கணவிளக்கச் சூறாவளியென வொன்றுஞ் செய்தருளினர்.

இங்ஙனம் பலநூல்களையும், பல உரைகளையுஞ் செய்ததன்றி, அகத்திய மகாமுனிவர், தொல்காப்பியமுனிவர் முதலாய பன்னிரு மாணாக்கர்களுக்குக் கற்பித்தருளியவாறுபோல, கச்சியப்பமுனிவர், சிதம்பரநாதமுனிவர், தொட்டிக்கலைசைச் சுப்பிரமணிய முனிவர், காஞ்சிபுரம் சரவணபத்தர், இராமநாதபுரம் சோமசுந்தரம்பிள்ளைமுதலாய பன்னிரு மாணாக்கர்களுக்குப் பலநூலையுங் கற்பித்தருளினர்.

(இன்னும் வரும்.)

எம். எஸ். பூரணலிங்கப்பிள்ளை, பி. ஏ.

புலாலுண்ணுஞ் செடிகள்.

PLANTS OF PREY.

[ஸ்ரீமத்-வே. நரசிம்ம ஐயங்காரவர்கள், M. A., B. L., எழுதியது.]

ஜீவப்பிராணிகளானவை ஊனைத்தின்று தம்மூனைப்பெருக்கா நிற்கத் தாவரங்களோ அத்தகைய பாவத்திற்குள்ளாகாமல் தமதுணவை மண்ணின்கீழ்க்கிடக்கும் ஜலத்தினின்றும், பற்பல உப்புக்களினின்றும் சேகரித்துக்கொள்ளும். ஆயினும் இப்பொதுவிதிக்குச்சிறப்புவிதியொன்றுளது. ஜீவப்பிராணிகளுக்குள் புலாலுண்ணாநோன்பு கைக்கொண்டு தாவரங்களையே புசித்துச்சீவிப்பன ஆடு, மாடு, குதிரைபோன்ற சில மிருகங்களே. அதுபோலவே தாவரங்களுக்குள் மண்ணிற்கலந்திருக்கும் உப்புக்களை நீக்கி மாமிசத்தையே பக்ஷிப்பன சிலசெடிகளும் இச்சிறப்புவிதிக்குக்காரணமாய்ச் செடிகளுக்குப் புலாலுண்ணுஞ் செடிகளென்று பெயர்கொடுத்தழைப்போம். இவற்றிற்கே, ஸ்ரீமான்- அரங்காசாரியரால் இயற்றப்பட்டுச் சில மாதங்களுக்குமுன் வெளிப்போந்த “தாவரநூல்” என்னும் கிரந்தத்துள் (பக்கம்-240) “கீடகபக்ஷண ஓஷதிகள்” என்ற பெயர்கொடுத்திருக்கிறார்கள். அப்பெயர் எம்போன்ற தமிழர் நாவால் இசைத்தற்பாலதுமன்று. அதன்பொருள் எளிதில் அறிதற்பாலதுமன்று. இக்காரணம்பற்றியே எம்மாற்கூடியதொரு தமிழ்ப்பெயர்கொடுத்தனம். இச்செடிகள் மிகவரிதாயும் இவ்வுலகத்துத்தேசங்கள் சிலவற்றில் ஒவ்வோரிடத்திலுமேயகப்படும். இவற்றுக்கும். மற்றச்செடிகொடிகளுக்குமுள்ள வித்தியாசம் இவையுணவு உட்கொள்வதிலேயே. முன்சொன்னபடி மற்றச்செடிகள் தமது வாழ்க்கைக்கு வேண்டிய ஆகாரப்பொருள்களை, ஆகாயத்தினின்றும் பூமியின்கண் மறைந்திருக்கும் நீரினின்றும், பற்பல உப்புக்களினின்றும் சேகரித்து உபயோகப்படுத்திக்கொள்ள, புலாலுண்ணுஞ்செடிகளோ புழு, பூச்சி முதலிய சிறுபிராணிகளைத்தாங்கொண்ட சில சாதனங்களாற்பிடித்து அவற்றைத்தீனியாக்கிக்கொள்ளும். அவற்றிற்சிலவற்றைக் குறித்து இங்கு சில சொல்லுவோம்,

நாம் நம்மைச்சுற்றிலும் உற்றுநோக்க, இயற்கையமைப்பில் சில பிராணிகள் வேறுசில பிராணிகளைக்கொன்று தமக்கிரையாக்கவும், அங்ஙனங்கொல்லுவதற்குச்சாதனமாகப் பற்களையும், கொம்புகளையும், நகங்களையும், விஷத்தையும் அப்பிராணிகள் கொண்டிருப்பதையும், அவையொன்றோடொன்று எதிர்க்குங்கால் உண்டாகும் கோபாவேசத்தையும், தைரியத்தையும், தீராப்பகையையும் ஜெயவொலியையும், தோல்வியழுகையையுங்கண்டுங் கேட்டுமிருப்போம். ஆகவே, ஜீவப்பிராணிகளுக்குள்ளேதாம் இத்தகைய சம்பவங்கள் நேரிடுகின்றனவென்று நினைக்கலாகாது. இதுபோலவே, தாவரங்களுக்குள்ளும் ஓயாப்போர் நடக்கின்றது. அதை நடத்துவது புலாலுண்ணுஞ்செடிகளே. பார்க்கச் சாதுபோல் வேடம்பூண்டு, குணத்திலுஞ் செய்கைகளிலும் புலிபோல்வன இச்செடிகளே. சிலகுளங்களிலும் குட்டைகளிலும் தண்ணீரின்மேல் மிதந்துகொண்டு வசிக்கின்றது; "நீர்ப்பைச்செடி" (Bladerworts) என்னும் ஓரற்பச்செடி. அந்தோ! ஆனால் அது செய்யுமோசம் யாவரேயறிவர்? பொன்னிறம்போன்ற மலர்களைக்கொண்டு சிலகிளைகள் தண்ணீரின்மேற் றலைதூக்கிநிற்கும்; தண்ணீரின்கீழ்ப் பலகிளைகள் ஓட, அவற்றினிடையிடையே சிறுசிறு நீர்ப்பைகள்தோன்றும். இந்நீர்ப்பைகளே இச்செடி சிறு பிராணிகளைப்பிடிக்க விரிக்கும்வலைகளாம். தண்ணீரில் அங்குமிங்குமுலவுஞ் சிறியபூச்சிகள் புழுக்கள் திறந்திருக்கும்பைகளுள் நுழையவே, அவைதிரும்பி வெளிவராவண்ணம் அப்பைகள் மூடிக்கொள்ளும். முதற்சென்ற பூச்சிகளின் நிலைமையறிய மற்றப்பூச்சிகளும், அப்பைகளுள் ஏதோ அமிர்தமிருப்பதாகவெண்ணித் தாமும் நுழைய, எல்லாவற்றையும் அச்செடி பைகளிலுண்டாம் ஒருவகைத் திராவகத்தால் நீர்போலாக்கி உறிஞ்சிவிடும்.

"ட்ரோஸீரா" (Drocera) என்னும் பேர்கொண்ட சிறு செடியொன்று சற்று ஈரமான இடங்களில் முளைத்திருக்கும். அதைப் பார்ப்போர், அதற்கு ஜீவப்பிராணிகளைப் பிடித்துத்தின்னுந் திறமுளதோவென்று வியப்படைவார்கள். எனினும், அதன் சக்தி, அதனால் உயிர்நீத்த ஈ, கொசுகு முதலிய கணக்கற்ற சிற்றுயிர்கட்கே தெரியும்! அச்செடியின் இலைகள் நீண்ட உரோமங்கொண்டவை.

இலையின் நுனியில் ஒருவகை இரஸம் உற்பத்தியாய்க்கொண்டேயிருக்க, அதைத் தேனென்று நம்பி உண்பதற்குச் சிறுபூச்சிகள் நெருங்கி இலையின்மேல் உட்காரவே, அந்தோ! இதுவரையில் நேராய் நிமிர்ந்துநின்ற உரோமங்களெல்லாம் ஒவ்வொன்றாய் வளைந்து, தமக்கு அதிர்ஷ்டவசத்தால் வாய்த்த இரையை இறுக்கிமூடிக்கொள்ளும். பூச்சியோ, "வெளுத்தவெல்லாம் பாலென்றுநம்பி, இங்குவந்து அகப்பட்டுக்கொண்டோமே, தப்பிப்பிழைப்போம்" என்று தன் சிறகுகளையும் கால்களையும் படபடவென்றடித்துச் சண்டைசெய்யச்செய்ய உரோமங்கள் சிறிதேனும் பின்வாங்காது இரையை இறுக்கிஇறுக்கி நசுக்கும்; பூச்சியும் மாண்டுபோய் நீர் உருவமாய்மாற செடி ஊன்தின்னும். "தும்பி"யென்றும், "தட்டாரப்பூச்சி" என்றும் பேர்கொண்ட பெரும்பிராணிகள் சிற்சிலசமயத்து அகப்பட்டாலுமகப்படும். அப்பெரு விருந்தைப்பிடிக்கப் பல இலைகள் ஒன்றாய்ச்சேர்ந்து அதற்கு எமனாகும். இவ்வகுப்பிற்சேர்ந்த இரண்டுவகைச்செடிகள் ஸ்ரீமான்-அரங்காசாரியர் புத்தகத்துப்படங்களுடன் விவரிக்கப்பட்டிருக்கின்றன. இவையும், மேற்சொன்ன நீர்ப்பைச்செடியும் தென்னிந்தியாவிலகப்படுகின்றன. இனி விவரிக்கப்படுஞ்செடிகள் இத்தென்னிந்தியாவிலில்லை.

வட அமெரிக்காவில் "மோகினிப்பொறி" (Venus's fly-trap) என்ற பெயர்கொண்ட செடியொன்றுளது. அதன் இலைகளின் ஓரமெல்லாம் பற்கள்போன்ற முட்களநேகங்கொண்டிருக்கும். இத்தகைய இலைகளை நன்றாய்விரித்துக் கவந்தனைப்போலிரைக்குக் காத்திருக்கும். ஈ போன்ற பறக்குஞ்சிறு பூச்சிகள் இலைகளுக்கு இருபுறமுமிருக்கும் மிகச்சிவந்த நிறங்கொண்ட சிறுகோளங்களால் கவரப்பட்டு, அணுகி இலையின்மேலுட்கார, இலையின்பற்கள் திடீரென்றுமூடி ஒன்றோடொன்று பின்னிக்கொள்ளவே, அகப்பட்ட பூச்சியைச் செடியானது சாவகாசமாய்ச் சீரணிக்கவாரம்பிக்கும்; சிலசமயத்துப் பெரு இரை அகப்படின், அதையுட்கொள்ள இரண்டொருவாரமும் பிடிக்குமாம். அவ்விரை சீரணமானபிறகு முட்கள் ஒவ்வொன்றாய்ப் பிரிந்து முன்போல "வருகிறவர்கள் வரலாம்" எனவுபசாரஞ்செய்வனபோல் கையைவிரித்து நிற்கும்.

"லோட்டாச்செடி" (Pitcher-plant) என்ற சாதாரணப்பெயர்கொண்டதும் "நெபந்திஸ்" (Nepanthis) எனச்சாஸ்திரப்பெயர்கொண்டதுமான ஒருசெடி உஷ்ணப்பிரதேசங்களில் வசிக்கின்றது. அதற்கு அப்பெயர் வந்ததற்குக்காரணம், அதனிலையின் நுனியில் "லோட்டா"ப்போல் ஓரங்கந்தொங்கும். சிற்சில செடிகளில் அக்கோப்பைகள் ஓரடிநீளமாகவுமிருக்கும். அக்கோப்பையின் வாயைமூடுவதற்கு ஒரு மூடியுமுண்டு. அக்கோப்பையின் வாயைச்சுற்றித்தேன் சுரந்துகொண்டேயிருக்கும். அத்தேனை விரும்பிப்பூச்சிகள் அருகிற்போகத்தவறிக் கோப்பைக்குள் விழுந்துவிடும். பின்பு திரும்பி வெளியேறமுடியாது; ஏனெனில், கோப்பையின்மூடி உட்புறம் போவதற்கு மாத்திரமே வழிதிறக்குமேயொழிய, உட்போனது வெளிவர வழிதிறவாது. அக்கோப்பையினடியில் தண்ணீரும், அதிற்கரைந்த ஒரு திராவகமுமிருக்கும்; அதில்விழுந்து பூச்சிகளிறக்கும். இங்ஙனம் மோசஞ்செய்து கைப்பற்றிய இரையைச் சிலசமயங்களில் செடியானது இழந்துவிடுவதுமுண்டு. அக்கோப்பைக்குள் இனிய தீனி விழுந்துகிடப்பதைக்கண்ட கூரிய பார்வைகொண்ட சிலபறவைகள் அந்த "லோட்டா"வைக்குத்தி அதனுள்ளிருக்குமிரையைத்தின்றுவிடும்.

புலாலுண்ணுஞ்செடிகள் இங்ஙனம் அற்பப்பூச்சிகளை மட்டும் பிடித்துண்டுகளிப்பதில்லை; பெரிய வேறுபிராணிகளையுங் கொல்லும். மத்திய அமெரிக்காவில் நிக்கராகுவா என்றொரு ஜில்லாவுளது. அங்கு "சாத்தான்வலை" (Devil's noose) என்றொரு செடியுண்டு. அது தனது கறுத்தும், நீண்டும், பிசின்கொண்டுமிருக்கிற கிளைகளால் நாய் முதலிய பிராணிகளையும் பிடித்துக்கொல்லும். மனிதர்கள் யாரேனுங்கண்டு அப்பிராணியை விடுவித்தாலொழிய, அது பிழைப்பதற்குப்பின்னேது ஒன்றுமிலது. சுமாத்ரா என்னுந்தீவாந்திரத்தில் ஒருவகை அல்லிச்செடியுண்டு; அது எந்நேரமும் ஒருவித நாற்றம் வெளிவிடும்; அத்துர்க்கந்தத்தை மோந்து பார்க்கும் பக்ஷிகளும் மிருகங்களும் தக்ஷணமே உயிர் நீங்குமாம்; நமது புராணங்களிற் சொல்லப்பட்டிருக்கும் நச்சுமரம்போலும் இவ்வல்லிச்செடி.

உ

திருச்சிற்றம்பலம்.

இரட்டைப்புலவர் சரிதம்.

(முற்றொடர்ச்சி.)

அன்றுமுதல் அவ்வுலாவிற்குத் * தெய்வீகவுலாவென்று பெயராயிற்று. இவ்வாறிப்புலவர்கள் சோழநாடு, பாண்டிநாடு, சேரநாடு, நடுநாடு, தொண்டைநாடுமுதலிய எல்லாநாட்டினுமுள்ள சிவாலயமாதிய தேவாலயங்களைத் தரிசித்துக்கொண்டு முடிவில், கைலையங்கிரிக்கிருப்பிடமாகிய வடநாடடைந்து, அதுமுதல் தாங்கள் ஆங்காங்குதரிசித்த சிவமூர்த்தி, விஷ்ணுமூர்த்தி, முதலியவைகளில், சுவயம்புமூர்த்திகளைக்குறித்துச் சுவயம்புலா என்னுமோர் பிரபந்தம்பாடி, மீண்டும் அம்மூர்த்திகளைக்குறித்து அம்மானை என்னுமோர் பிரபந்தமும்பாடத்தொடங்கி, அவ்வம்மானை என்னும் பிரபந்தத்தில், ஒருவரொருதலத் தேவதையின் திருவிளையாடல் அடியிற்காட்டுமாதிரியாக இன்னதென்றோரடியால் குறிப்பிக்க, மற்றொருவர் அதிற் ‡ பிரசினங்கற்பித்து, வேறோரடியால் வினவ, அதற்குக் கலைமகளார் வினோதார்த்தமாகத் தனியடியால் விடைதர, இப்படியநேகம் பாடல்களை மூவரம்மானை எனவழங்குமாறு திருவாய்மலர்ந்தனர். அவை வருமாறு:—

சித்தம்பூர் வாழுஞ் சிவனளித்த பிள்ளையார்
மெத்தப் பெருவயிறு வீங்கினர்கா ணம்மானை
மெத்தப் பெருவயிறு வீங்கினரே யாமாயி
னித்தரையின் மீதவருக் கேச்சன்றோ வம்மானை
யிரவுபகல் குட்டுணிக்கிங் கேச்சுண்டோ வம்மானை.

ஆதார மாங்குடந்தை யாதிகும் பேச்சுரனார்
கோதாடு மன்மதனைக் கொன்றெரித்தா ரம்மானை
கோதாடு மன்மதனைக் கொன்றெரித்தா ராமாயின்
மாதாபி தாக்கள்பழி வாங்காரோ வம்மானை
வாங்குதற்கு முன்வாயின் மண்விழுந்த தம்மானை.

---

* ஏகாம்பரநாதருலா.

‡ பிரசினம் - வினா.

இப்பூமி தன்னி லியல்பாந் திருத்தணியில்
மூப்பூ விளையு முருகருக்கே யம்மானை
மூப்பூ விளையு முருகருக்கே யாமாயி
னப்பவருக் கங்கே யரிதல்லோ வம்மானை
யவர்க்குமுக மாறானா லப்பரிதோ வம்மானை.

அடுத்ததிருக் காவிரிசூ ழணியரங்க ரெப்போது
மெடுத்ததிருக் கோயிலைவிட் டெழுந்திரா ரம்மானை
எடுத்ததிருக் கோயிலைவிட் டெழுந்திரா ராமாயிற்
படுக்கையில்வி டந்தீண்டிப் பட்டனரோ வம்மானை
பட்டனரென் றன்றோ பருந்தெடுத்த தம்மானை.

தெண்டிரைசூழ் தில்லைச் சிவகாமித் தாயார்க்குக்
கண்டமெலா ஞானக் கரும்பதுகா ணம்மானை
கண்டமெலா ஞானக் கரும்பதுவே யாமாயி
னண்டர்பிரா னாலைதனி லாட்டானோ வம்மானை
யாடிப் புலியூ ரமர்ந்தனன்கா ணம்மானை.

எனவருமாற்றாலறிக. இங்ஙனம் அளவற்ற பாக்கள்பாடிப்பலவற்புதங்களை விளைத்திருந்து சிவானந்தப்பெருவாழ்வடைந்தனரென்ப.

இப்புலவர்கள் கலம்பகம் பாடுவதில் மிகச்சிறந்தவர்களென்பதை,

வெண்பாவிற் புகழேந்தி பரணிக்குச்செயங்கொண்டான்விருத்த மென்னு
மொண்பாவுக் குயர்கம்பன் கோவையுலா வந்தாதிக் கொட்டக் கூத்தன்
கண்பாவு கலம்பகத்திற் கிரட்டையர்கள் வசைபாடக் காள மேகம்
பண்பாகப் பகர்சந்தம் படிக்காச லாதொருவர் பகரொணாதே.

எனப்பிற்காலத்தார் பாடியுள்ள செய்யுளே தக்க சான்றாம்.

இப்புலவர்கள் திருவேகம்பமுடைய நயினார்பேரில் பாடிய வண்ணம்.

மறுத்தோன்ற வெளுத்தபிறை படப்பாந்த ளிடைச்செருகி
வளர்த்தோங்கி முடித்தசடையார்—காஞ்சனைமனையார்
மலர்க்காந்தண் முருக்கவிழ விதழ்த்தேன்கள் குறித்தொழுகி
மடைத்தேங்கி உடைத்து வருநீர்—போஞ்சுழிவழியே
சிறுத்தூண்டில் முறித்தசுற வரக்காம்ப லுழக்கியொரு
சிறுசசெம்பை முறித்து வெடிபோய்—வீழ்ந்தயலருகே
இடப்பாகர் முடக்கமுகின் மடற்கீன்று களித்துவரு
திருக்காஞ்சி புரத்தி றைவரே—காம்பராடியே
குறித்தேர்ந்து தடிக்குளுடல் வளைத்தாம்பி முளைத்தனைய
குடைக்காம்பு பிடித்து வரும்வே—தாந்தவிரதியீர்
குலக்காந்த னொருத்தனொடு குலக்காந்தி யொருத்தியிரு
குடித்தீங்கு விளைத்து மிகுமால்—பூங்கொடியனையா
ளுறச்சேர்ந்து மடித்தலையள் வளர்த்தேங்க டமக்குமல
வுயிர்ப்பாங்கி தமக்கு மலபா—தாம்புயமலரே
வுலைப்போன்ற பாற்பொதியி னடித்தீந்து விறற்கருகி
யுலக்கான்ற சுரத்தில் வருநீர்—தேர்ந்துளிர்தெரிவீரே.

இவ்வளவே, இரட்டைப்புலவர்கள் வரலாறாகத்தெரிந்தவை. இச்சரிதங்களால் இரட்டைப்புலவர் தெய்வீகப்புலமைவாய்ந்த பெரியோர்களென்பதும், ஐங்கரக்கடவுளே இப்புலவர்கள் வசைக்கவிகேட்க விருப்பங்கொண்டு வலிந்தாட்கொண்டு பாடப்பெற்ற பேரடியார்களென்பதும், பூமியில் மறைந்திருந்த ஆயிரக்கான்மண்டபமும் விகடசக்கர விநாயகராலயமும் வெளித்தோன்றப்பாடிய உத்தமகவிகளென்பதும், சிவபுராணக்கதைகள் பலவற்றையும் மிகப்புராதனமான நூல்களின் கருத்துக்களையும், தம்முடைய நூல்களுள் மிக அழகாக அமைத்துப்பாடிப் பிற்காலத்தார்க்கு வழிகாட்டிப்பெரும்புகழ்பெற்ற மகோபகாரிகளென்பதும், மற்றும் இவர்களது உத்தம குணவிசேடங்களும் நன்கு விளங்கும்.

இவர்களுக்கு வழங்கிய “இரட்டைய” ரெனும் பெயர் இப்புலவர்களுள் ஏற்பட்டிருந்த ஒற்றுமையுணர்ச்சியானும், அங்கஹீனர்களாய் நேர்ந்த காரணத்தால் ஒருவர் சகாயமின்றி ஒருவர் வாழமுடியாததானும், இப்புலவர்களுக்கு இப்பெயர் வழங்கியிருக்கலாம்போலும். இங்ஙனம் சீரும் சிறப்பும் தெய்வப்புலமையும் நிரம்பி இப்புலவர்கள் திகழ்ந்திருந்தது நந்தமிழகமெனின் இதன்பெருமை அளவிடற்பாலதோ !

இனி இப்புலவர்பிரான்கள் பாடியனவாக மேலே குறித்தபாடல்களில் “அப்பிலே தோய்த்திட்” என்பது ஒப்பிலாமணிப்புலவர்

வரலாற்றுடனும், படிக்காசுப்புலவர் வரலாற்றுடனும் "மன்னுதிருவண்ணாமலை" என்பது காளமேகப்புலவர் வரலாற்றுடனும் "தேன்பொழியும்வாயான்" என்பது அந்தகக்கவிவீரராகவமுதலியார், வரலாற்றுடனும், "தம்பியோரு பெண்டிருடி" என்பது இராமகவிராயர் வரலாற்றுடனும் இக்காலத்துவழங்குகின்றன. இவற்றில் பாடபேதங்களும் சிலவுள

இனி இரட்டைப்புலவர்காலமின்னதென்பதை ஆராய்வோம்.

வில்லிபுத்தூரர் மகனார் வரந்தருவார் பாடிய பாரதச்சிறப்புப் பாயிரத்தில்,

எங்குமிவனிசைபரப்பிவருநாளில்யாமுரைத்தவிந்நாட்டிற்
கொங்கர்குலவரபதியாட்கொண்டானென்றொருவண்மைக்குரிசிறோன்றி
வெங்கலியின்மூழ்காமற்கருநடப்பேர்வெள்ளத்துவிழாமனான்காஞ்
சங்கமெனமுச்சங்கத்தண்டமிழ்நூல்கலங்காமற்றலைகண்டானே.

ஆற்றியமெய்ச்செல்வத்தாலளகையைவென்றிருங்கவிஞலமாரருணை
மாற்றியபொற்றடமதில்சூழ்வக்கபாகையினறத்தின்வடிவம்போலத்
தோற்றியவக்கொங்கர்பிரான்சூழ்தமிழானாட்கொண்டான்சுற்றத்தோடு
போற்றியவிப்புவிமுழுதுந்தன்றிருப்பேர்மொழிகொண்டேபுரந்தானம்மா.

பிறந்துய்யக்கொண்டவனிப்பேருலகம்பெருவாழ்வுகூருநாளி
னிறைந்தபுகழ்ச்சனிநகர்வாழ்வில்லிபுத்தூரனைநோக்கிநீயுநானும்
பிறந்ததிசைக்கிசைசிறப்பப்பாரதமாம்பெருங்கதையைப்பெரியோர்தங்கள்
சிறந்தசெவிக்கமுதமெனத்தமிழ்மொழியின்விருத்தத்தாற்செய்கவென்றான்

எனவருதலால் வக்கபாகையிற் கொங்கர்குலபதியாய்வந்த ஆட்கொண்டான் என்னும் வள்ளல் சனியூர் வில்லிப்புத்தூராரைப்பாரத விருத்தம் பாடுமாறு வேண்டினன் என்பது அறியப்படுகின்றது. தமிழ்நாவலர் சரிதையில்,

சாணர்க்கு முன்னிற்குமாட் கொண்டநாயன் றமிழ்க்கொங்கர்கோன்
பாணுற்றவரிவண்டு சேர்வக்கை நகராதி பக்கத்திலே,

என இரட்டையர் பாடுதலானும், இதிற்காணப்படும் வக்கைநகர் இவ்வக்கபாகையேயாமென்பதும், ஆண்டு ஆட்கொண்டநாயன், கொங்கர்கோன் எனப்படுவானும், இக்கொங்கர் குலபதியாகிய ஆட்கொண்டானே என்பதும பெயரொற்றுமைபற்றி எளிதிலறியப்படும். இதனால் பாரதவிருத்தம்பாடிய வில்லிப்புத்தூராரும், இரட்டையரும் ஒருகாலத்தவர்களாதல் நன்கு தெளியப்படும்.

அன்றியும், வில்லிபுத்தூரர்க்கும், திருப்புகழ்பாடிய அருணகிரிநாதர்க்கும், "கந்தரந்தாதி" என்னும் ஒரு நூலுக்கு உரைகூறும் விஷயமாகப்பெருஞ்சம்வாதம் நிகழ்ந்ததாக டிஸ்டிரிக்டு முன்சீப்பாகவிருந்து பென்ஷன்பெற்றுக்கொண்ட வடக்குப்பட்டு ஸ்ரீமத்-த. சுப்பிரமணியபிள்ளையென்பார் வெளியிட்டுள்ள அருணகிரிநாதர் திருப்புகழ் முதற்பாகம் இரண்டாம்பதிப்பில் அவர் குமாரர் ஸ்ரீ: வ. சு. செங்கல்வராயன் என்பார், "அருணகிரிநாதர் ஆராய்ச்சி" என்ற தலைப்பின்கீழ் நன்கு விளக்கியிருக்கின்றனர்.

திருவண்ணாமலையிற் பிரபலமாகவிருந்த "சம்பந்தாண்டான்" என்பானும், அவர்காலத்திருந்ததாக அறியலாவதுடன் அருணகிரிநாதர்க்கும், சம்பந்தாண்டானுக்கும், பத்திகாரணமாக ஓர்வாது நடந்தேறியதாகவும் தெரிகின்றது. அருணகிரிநாதர்க்கும், வில்லிபுத்தூரர்க்கும் நடந்த சம்வாதமும், சம்பந்தாண்டானுக்கும், அருணகிரிநாதர்க்கும் நிகழ்ந்த தர்க்கவிஷயமும், நாம் தக்கசரிதமுகத்தானறிவதால், வில்லிபுத்தூரர், அருணகிரிநாதர், சம்பந்தாண்டான் இம்மூவரும் ஒருகாலத்தவராகக் கொள்ளத்தடையில்லை. இவர்கள் திருவண்ணாமலையில், இங்கிலீஷ் 1450-ம்வருடம் அரசுபுரிந்த பிரபுடதேவராஜன் காலத்தவரென்பதை ஸ்ரீ: வ. சு. செங்கல்வராயன் அவர்கள் தக்கசாஸன ஆதாரங்கண்டு கருதுகின்றார்கள். அருணகிரிநாதர்காலம் இற்றைக்கு 460-ஆண்டுகட்கு முற்பட்டதென்று நிச்சயிக்கையில், இவருடன் வாதுநிகழ்த்திய வில்லிபுத்தூரர்க்கும் இக்காலமேயாமென்பது சொல்லாமலேயமையும். வில்லிபுத்தூரர்க்கு 460-வருடங்கள் ஆம்போது நமது இரட்டைப்புலவர்க்கும் அஃதே பொருந்திற்றாம். காரணம், வக்கைநகர் வரபதி ஆட்கொண்டானை வில்லிபுத்தூராரும், இரட்டையரும் பாடுதலானேயாமென்க. இச்சிற்றாராய்ச்சியில் நமது தெய்வப்புலமையாளர் இற்றைக்கு நானூற்றறுபது வருடங்கட்குமுன் விளங்கியவரென் [illegible] டைத்தாம்.

[illegible] காப்பகம்
சென்னை-600 008

இரட்டைப்புலவர் காலத்தைப்பற்றி மஹாமஹோபாத்தியாயர்-ப்ரஹ்மஸ்ரீ: உ. வே. சாமிநாதையரவர்களும், திருப்பாதிரிப்புலியூர்க் கலம்பகத்தின் முகவுரையில், தொல்காப்பியத்தேவர் காலத்தைக் கூறவந்தவிடத்து, "இரட்டையர்களுடைய காலத்திற்கு முற்பட்டவரென்று தெரிதலால், இந்நூலாசிரியர், அவர்களாற் பாடப்பெற்ற வரபதியாட்கொண்டானென்னும் பிரபுவுக்கும், அவர் விருப்பத்தின்படி பாரதம்பாடிய ஸ்ரீ: வில்லிபுத்தூராழ்வாருக்கும் அவர்காலத்தவர்களாகிய ஸ்ரீ: அருணகிரியார் முதலியவர்களுக்கும் முற்பட்டவராக எண்ணப்படுகின்றார்." என்று கூறுவதையும் இதற்கு ஆதாரவாகக் கொள்க.

இரட்டைப்புலவர்கள் செங்குந்தமரபினரென்பதை,

"அத்தை மகன்குரு டம்மான் மகன்முட மாகிக்கீழ்மே
லொத்துறைந் தேகூறு பாடோ டணிகொ ளுலப்பில்கவி
முத்தரி லோதியே கம்ப ருலாமுன் மொழிந்தெவருஞ்
சித்த முவப்பத் திரிவோர் செங்குந்த சிலாக்கியரே."

எனவரும் திருவிருத்தத்தானுமுணர்க.

இப்புலவர்கள் திருவாமாத்தூர்க்கலம்பகம்பாடிய வரலாற்றைப் பற்றிச் சுப்பிரமணியக்கடவுள் க்ஷேத்திரக்கோவைப் பிள்ளைத்தமிழ்ச் சிற்றிற்பருவத்திற்கண்ட ஒருசெய்யுள் வருமாறு:—

"எம்பால்வந்தீரிரட்டையர்நீரெம்மைப்பாடுவீரென்றே
யெம்மானருளத்திருமுன்னேயிருந்தேகலம்பகம்பாடச்
செம்பாகஞ்சேர்கலம்பகத்திற்சிறந்தகங்கைமேற்கரையிற்
றிகழாலயங்கொண்டாரென்றுசெப்பப்புலவரதேதென்ன
நம்பாநாங்களுரைத்தபடிநதியைக்கீழ்பாற்றிருப்பென்ன
நாதனருளால்வடக்குவிட்டுநண்ணுங்கீழ்பாற்பெருகிவரும்
பம்பாநதிசூழாமாத்தூர்ப்பாலாசிற்றில்சிதையலே
பச்சைமயில்வாகனனுன்னைப்பணிவோஞ்சிற்றில்சிதையலே."

இரட்டைப்புலவர்சரித முற்றிற்று.

சி. கு. நாராயணசாமிமுதலியார்,
கோவை.

நல்லொழுக்கம்.

[ஸ்ரீமத்-இலக்குமணப்போற்றிகள் மொழிபெயர்த்தது.]

அடக்கமுடைமையென்பது வேறு ரூபத்திலுள்ள தைரியமேயாம். அது எறக்குறைய ஒழுக்கத்திற்கு முதன்மையான முக்யாம்சமாக மதிக்கப்படலாம். ஷேக்ஸ்பீயர் (Shakespeare) ஆனவர் மனிதனை முன்னும்பின்னும் பார்க்கிறபிராணியாக இலட்சணப்படுத்துவது இக்குணத்தினாலேதான். மனிதனுக்கும் மற்றப்பிராணிகளுக்குமுள்ள முக்கியவேற்றுமையாவது, அதுவாகின்றது. அதுவன்றி உள்ளபடியே உண்மையான மனிதத்தன்மைகிடையாது.

தன் அடக்கமானது சகல சற்குணங்களுக்கும் மூலமாகவிருக்கின்றது. ஒருமனிதன் தன் அவாக்களுக்கு இடங்கொடுக்க அந்த நிமிஷமுதற் சன்மார்க்கசுவாதீனத்தை இழந்துவிடுகிறான். இந்த ஜன்மப்பிரகிருதியின் போக்கிலேபோய்த் தற்காலத்தில் தான்மிகவும் பலத்த இச்சைக்கு அடிமையாகின்றனன்.

சன்மார்க்கத்திற்கிணங்கச் சுவாதீனமாயிருத்தற்கு ஒரு மிருகத்தினும் மேலாகச்சுவாதீனமாய் இருப்பதற்குப் பிரகிருதித்துவத்தினின்றும் கிளர்ந்த இச்சையை அடக்கச் சக்தியுள்ளவனாயிருத்தல் வேண்டும். மனஅடக்கத்தைப் பயிற்சிசெய்வதாற்றான் இதனையடையக்கூடும் இந்தச்சக்திதான், பகுத்தறிவில்லாத பிராணிகளுக்கும், பகுத்தறிவுள்ள சன்மார்க்க உயிர்களுக்கும், மெய்ம்மையான வித்தியாசமாகப் பாவிக்கப்படுகின்றது. ஒரு மனிதனுடைய சொந்த ஒழுக்கத்திற்கு முதன்மையான அஸ்திபாரமாகின்றதும் இதுவேயாம். வேதபுத்தகத்தில், ஒரு நகரத்தைப்பிடிக்கிற பலவானுக்குப் புகழ்கொடுக்கப்படவில்லை. ஆனால் தன் சொந்த இச்சையை அடக்கும் அதிகபலவானுக்கே புகழ்கூறப்பட்டுள்ளது. அப்பியாசத்தால் இடையறாது தன் மனம் வாக்குச் செயல்களின்மீது ஆளுகையை வகிப்பவனே அதிகப்பலவானாகிறான். ஜனசமூகத்தைத் தாழ்மைப்படுத்துவதும், தன் போக்கில்விட்டால் அதற்கு அவமானத்தை உண்டாக்கத்தக்க குற்றங்கள் பெருகுவதுமான துன்மார்க்க

இச்சைகளிற் பத்தில் ஒன்பதுபாகமாவது, வீரமுள்ளமனம், அப்பியாசம், தன்மரியாதை, மனஅடக்கமாகிய இவைகள் முற்படவே பயனற்று ஒதுங்கிவிடும். இக்குணங்களை ஜாக்கிரதையுடன் சாதகஞ்செய்வதால் இருதயசுத்தமும், வழக்கத்திற்கு வந்துவிடுகின்றது. ஒழுக்கமானது, சுத்தம், சற்குணம், மிதமாயிருத்தலாகிய குணங்களைப்பொறுத்து உண்டாகின்றது.

வழக்கமானது ஒழுக்கத்திற்குச் சிறந்த ஆதாரமாக எப்பொழுதும் காணப்படுகின்றது. அவ்வழக்கமானது மனம் கிரமமாக அல்லது அக்கிரமமாக நடத்தப்படுகிறதற்குத்தக்கவண்ணம் நன்மையாக அல்லது தீமையாக ஆண்டுவருகின்றது. நாம் அதைநடத்தும், கர்த்தாவாயிருக்கலாம், அல்லது அதற்கு இழிவான அடிமையாயிருக்கலாம், அது நமக்கு நன்மார்க்கத்திற்கும் உதவியாயிருக்கலாம், அல்லது நம்மைத் தீயமார்க்கத்திலுங் கொண்டுவிடலாம்.

வழக்கமானது ஜாக்கிரதையான அப்பியாசத்தால் உண்டாக்கப்படுகிறது. ஒழுங்கான சிக்ஷையாலும், அப்பியாசத்தாலும், எவ்வளவுகாரியம் செய்யப்படுகிறதென்பது ஆச்சரியமாயிருக்கிறது. திருஷ்டாந்தமாக, தெருக்களினின்றும பொறுக்கிய முரட்டான்மாக்களையும், உழவர்களினின்றும் பிடிக்கப்பட்டபச்சையான நாகரீகமற்ற நாட்டுப்புறத்துப்பையன்களையும் போன்ற முன்னுக்கு வரத்தக்க பாத்திரமாயில்லாத கருவிகளினின்றும், ஸ்திரமானசிக்ஷையும் யுத்த அப்பியாசமும், தைரியமும், சகிப்பும், தன்னயம்பாராட்டாமையுமாகிய குணங்களை நிர்ச்சந்தேகமாக எவ்வாறு உண்டாக்கினவென்பதைப் பாருங்கள். யுத்தகளத்தில் அல்லது ஸாரா ஸேண்ட்ஸ் (Sarah sands) இன் எரிவு பெர்கென் ஹெட் (Birken head) இன் கப்பல் உடைவுபோன்ற மிகவும் வருத்தமானகடல் அபாயகாலங்களில் ஜாக்கிரதையுடன் சாதகஞ்செய்யப்பெற்ற அம்மனிதர்கள், உண்மையான பராக்கிரமமும் வீரமுமான தவறில்லாத இலட்சணங்களை எப்படிக்காட்டுவார்கள் என்பதைப்பாருங்கள்.

ஒழுக்கத்தை உண்டாக்குவதிற் சன்மார்க்கசிக்ஷையும் அப்பியாசமும் குறைந்த சக்தியுடையனவல்ல. நம்வாழ்க்கையை ஒழுங்குபடுத்துவதில் அவையில்லையேல் சரியான சட்டமும் ஒழுங்கும் உண்டாகா. தன் மரியாதையின் உணர்ச்சியை வளர்த்தல், கீழ்ப்பணியும் வழக்கத்தைப்பயிற்றல், கடமையின் ஞானத்தை விருத்திசெய்தலாகிய இவற்றினுக்கு அதுவே ஆதாரமாகின்றது. மிகுதியும் தன்னையே சார்பாகத் தன்னைக்கட்டுப்படுத்திக்கொள்பவன் எப்பொழுதும் சிக்ஷைக்குள்ளிருக்கிறான். எவ்வளவிற்கு சிக்ஷைமுதிர்கின்றதோ, அவ்வளவிற்குச் சன்மார்க்கஸ்திதி உயர்வடையும். அவன் தன் இச்சைகளை வசப்படுத்தித் தன்சுபாவத்தின் உயர்வுற்ற சக்திகளுக்குள் அடக்கிவைத்துக்கொள்ளல்வேண்டும். அவைகள் உள்ளேயிருக்கிற சட்டம்பிள்ளையாகிய மனச்சாக்ஷியின் அதிகாரமொழிக்குக் கீழ்ப்பட்டிருத்தல்வேண்டும். மற்றப்படி அவர்களுடைய இச்சைகள் அவர்களைக்கேவலம் அடிமையாக்கி, உணர்ச்சியும் அவாவும் அவர்களை வேட்டையாடிவிடும்.

ஹெர்பர்ட் ஸ்பென்ஸர் (Herbert-spencer) சொல்லுகிறபடி உயர்ந்தமாதிரியான மனிதனுடைய பக்குவமான குணங்களில் ஒன்று மனஅடக்கத்தின் மகத்துவமாகும். ஆசையின் வசப்படாமல் மாறிமாறி மேலிட்டுவருகிற ஒவ்வொரு இச்சையாலும் அங்கும்இங்கும் ஓட்டப்படாமல், ஆனால் ஒவ்வொரு செய்கையையும் முற்றும் விவகரித்து அமைதியுடன் தீர்மானிப்பதற்குச் சாதனங்களாகிய உணர்ச்சித்தொகுதியின் ஒன்றுசேர்ந்த தீர்மானத்தால் ஆளப்பட்டுத்தன்னடக்கமும் நடுவுநிலைமையும் உடைத்தாயிருத்தலை உண்டாக்குதற்குச் சன்மார்க்கபோதனையானது முயற்சிப்பதாகின்றது.

சன்மார்க்க அப்பியாசம் செய்வதற்கு மேலாகச் சிறந்ததாயுள்ள கல்விச்சாலையானது நாம் முன்கூறிய குடும்பமேயாம். அப்பால் வித்தியாசாலையாகும். அதன்பின்னர், அனுஷ்டான ஒழுக்கத்திற்குரிய பெரிய கல்விச்சாலையாகிய உலகமேயாம். ஒன்று மற்றொன்றினுக்குச் சாதனமாயிருக்கின்றது. மனிதன் அல்லது ஸ்திரீயினுடைய நடப்பானது, பெரும்பாலும் அவரதுமுந்தின ஒழுக்கத்தைப் பொறுத்துண்டாகின்றது. குடும்பத்திலாவது வித்தியாசாலையிலாவது இருப்பதால் எழும்பயனை நுகராது, சிக்ஷைபோதனை அப்பியாசமின்றி வளரவிடப்பட்டால் அவர்களுக்கும் துக்கம் அவர்

களை அங்கமாய் உடைத்தாயிருக்கிற ஜனசங்கத்திற்கும் நிர்ப்பாகியமேயாம்.

சிக்ஷையானது பூர்ணமாயிருந்து அது உணரப்படாமலே உண்டாகக்கூடிய குடும்பந்தான் எப்பொழுதும் சிறந்த ஒழுங்கினுக்குட்பட்டதாகவிருக்கின்றது. சன்மார்க்க சிக்ஷையானது பிரகிருதியில் ஏற்பட்ட பிரமாணத்தின் பலத்துடன் வேலைசெய்கின்றது. அதற்குட்பட்டவர்கள் தன்னறியாமலே அதன் வயப்படுகின்றனர். நம்முடைய நடப்பானது வழக்கத்துடன் அபேதமாய்ப் பிரகாசிக்கும்வரை நம்முடைய ஒழுக்கமுழுவதையும், அது உருப்படுத்தி உண்டாக்காநின்றபோதிலும் இவ்விதமாய்ச் செலுத்தப்பட்ட வசீகரண சக்தியானது பெரும்பாலும் அதிருசியாயும் உணரக்கூடாததாயுமிருக்கின்றது.

கண்டிப்பான குடும்பசிக்ஷையின் முக்கியதையைப்பற்றி மிஸ்டிரஸ் ஸ்ச்சிம்மல் பென்னிக் (Mrs. Schimmel-pennick) உடைய சரித்திரத்திற் கீழ்க்கண்டபிரகாரம் ஒருவிதமான திருஷ்டாந்தம் உண்டு. ஒருஸ்திரீயானவள் இங்கிலாந்திலும் ஐரோப்பாவிலுமுள்ள அநேக பைத்தியசாலைகளைத் தன்கணவனுடன் போய்ப்பார்த்தனள்; அதில் அநேக நோயாளிகள் குழந்தைகளாயிருந்தனர். அவர்களுடைய சித்தங்கள் சிறுவயதில்தடுத்துச் சிட்சிக்கப்படாதவைகளாயிருந்தன. ஆனாற் பெரியகுடும்பஸ்தர்கள் சுயசிக்ஷையிற்பழகினவர்களாயிருந்த வகுப்பினர் வெகு சொற்பப்பெயர்தான் அவ்வியாதிக்குட்பட்டவராயும் இருக்கக்காணப்பட்டனர்.

சன்மார்க்க ஒழுக்கமானது பெரும்பாலும் மனோசுபாவத்தையும் தேக சௌக்கியத்தையும் குடும்பத்தில் அதிபால்ய சிக்ஷையையும் கூட்டாளிகளின் முன்மாதிரியையும் பொறுத்திருந்தபோதிலும் ஜாக்கிரதையாயும் விடாமுயற்சியுடனும் செய்யப்பட்ட மனவடக்கத்தால் ஒவ்வொருவனுடைய சக்திப்பிரகாரம் அதனை ஒழுங்குபடுத்தி அடக்கிச் சிட்சித்துக்கொள்ளவேண்டியுமிருக்கின்றது. குணங்களும் பழக்கங்களும் லத்தீன், கிரீக், பாஷைகளைப்போலப்போதிக்கத்தக்கனவென்றும், ஆனால் இன்பத்தினுக்கு மிகவும் முக்கியமாயினவென்று தக்கபோதகர் ஒருவராற்சொல்லப்பட்டிருக்கிறது.

(தொடரும்.)

* ஈகை.

(முற்றொடர்ச்சி)

தமிழ்நாட்டிலே பல்லாயிரம் வருடங்கட்கு முன்னரே தமது பூதவுடல் பொன்றியும் புகழுடம்புபொன்றாது இன்றும் விளங்கப்பெற்ற வள்ளல்களும் மன்னர்களும் பிரபுக்களும் ஆகியோரெல்லாம் மேற்கூறியவாறே முறுகிய பெருங்கொடையாளிகளேயாவர். அன்னவர் சிலர்சரிதம் பின்னர்க்கூறுதும்.

கொடுத்தற்குரியார் யாவரென்றாராயுமிடத்து, அரசர்கட்கு முக்கிய அங்கமாகிய பத்தில் (தசாங்கத்தில்) முரசமுமொன்று. அரசவாயிலில் முழங்கும் முரசு மூன்றுவகைப்படுமெனவும், அவற்றுள் ஒன்று கொடைமுரசமெனவுங் கூறுவர். இதனை, புறநானூறு-௫௮-ம் கவியில், “இமிழ்குரன் முரசமூன்றுடனாளுந், தமிழ்கெழு கூடற்றண்கோல் வேந்தே’’ என்புழி உரையாசிரியர் மும்முரசாவன: படைமுரசு, நியாயமுரசு, தியாகமுரசு எனப்பகுத்தோதியவாற்றாற் காணலாம். முரசமுழக்கி இரப்பாரையழைத்து வேண்டுவகொடுத்தல் வேந்தர்க்கியல்பென்பது இதனால் விளங்குவதன்றோ? அன்றியும்,

“கொடையளி செங்கோல் குடியோம்ப னான்கு
முடையானாம் வேந்தர்க் கொளி.”

“இன்சொலா லீத்தளிக்க வல்லார்க்குத் தன்சொலாற்
றான்கண் டனைத்திவ் வுலகு.”

“இயற்றலு மீட்டலுங் காத்தலுங் காத்த
வகுத்தலும் வல்ல தரசு.”

“அஞ்சாமை யீகை யறிவூக்க மிந்நான்கு
மெஞ்சாமை வேந்தர்க் கியல்பு.”

எனத் திருவள்ளுவர் இறைமாட்சியின்கண் நான்கு திருக்குறள்களில் அரசர்க்கு இன்றியமையாதது கொடையென்றார். இங்ஙனமாகத் தலைமைபற்றிக்கூறினாரேனும், உடையார் யாவரும் இல்லார்க்

---

* இவ்வியாசம் மதுரைத் தமிழ்ச் சங்கத்து எட்டாம் வருஷோத்சவ தினங்களுள் ஒன்றாகிய 1909-ஸு மேமீ ௨௰௨ ஸ்ரீமாந்-பொ. பாண்டித்துரைத் தேவரவர்கள் அக்கிராசனம் வகித்த வித்துவச்சபையில் ஸ்ரீமத்-எம். கே. அப்துல்காதிறுராவுத்தரவர்களாற் படிக்கப்பட்டது.

குக்கொடுத்தற்கு உரியவரேயென்று கொள்ளவேண்டும். இக்கருத்தாற்றான் இல்லறவியலுள் ஈகையென ஓரதிகாரம் அமைத்தனர். அன்றியும்,

"தெண்கடல் வளாகம் பொதுமை யின்றி
வெண்குடை நிழற்றிய வொருமை யோர்க்கும்
நடுநாள் யாமத்தும் பகலுந் துஞ்சான்
கடுமாப் பார்க்குங் கல்லா வொருவற்கு
முண்பன நாழி யுடுப்பன விரண்டே
பிறவு மெல்லா மோரொக் கும்மே
செல்வத்துப் பயனே யீதல்." (புறநா-௧௮௧.)
" துய்ப்போ மெனினே தப்புந பலவே."

எனவரும் புறப்பாட்டானும்,

"ஏற்றகை மாற்றாமை யென்னானுந் தாம்வரையா
தாற்றாதார்க் கீவதா லாண்கடன்."

எனவரும் நாலடியாரானும்,

" ஆற்றா மாக்க ளரும்பசி களைவோர்
மேற்றே யுலகின் மெய்ந்நெறி வாழ்க்கை."

எனவரு மணிமேகலையானும், "ஈதற்குச்செய்கபொருளை" என்னும் திரிகடுகத்தானும் மானிடஜென்மம் எடுத்துப்பொருள்படைத்தோர் எல்லாருங்கொடுத்தற்கு அதிகாரிகளேயென்று கொள்ளவேண்டும். கொடைப்பயனை நன்குணர்ந்தாராயவர் இன்னபொருளைத்தான் கொடுப்பதென்று கருதார். இத்தனை முறைதான் இன்னவேளைதான் கொடுப்பதென்று நியதியுங்கொள்ளார். இரப்பார் குறிப்பறிந்து எதையுங்கொடுத்து அவர் மகிழக்கண்டு, தாமுமகிழ்வார்.

நளச்சக்கரவர்த்தியிடம் இந்திரன் வரங்கேட்டபோது,

"குறிப்பறிந் தீதலே கொடைமற் றின்றென
மறுத்தலே கேட்டபின் வழங்கல்."

எனக்கூறி, "பெறற்கருமாவியும் பெட்பினீகுவன் - திறப்படவிவருளந்தெரிந்த தில்லையால்" எனக்கவலுற்றதும், விஷ்ணுகுறளுருவெடுத்து இரந்தபோது அவ்வஞ்சச்செய்தியை 'வெள்ளிகூறித்தடுத்துங் கொள்ளுகிலாது தத்தஞ்செய்த உத்தமவள்ளலாகிய மாவலிவேந்தன்,

"வெள்ளியை யாதல் விளம்பினை மேலோர்
வள்ளியராக வழங்குவ தல்லா
லெள்ளுவ வென்சில வின்னுயி ரேனுங்
கொள்ளுத றீது கொடுப்பது நன்றால்."

எனக்கூறியதும், குமணன் தனது தலையைக்கொடுக்கத்துணிந்ததும், ததீசிமுனிவர் தமது முதுகெலும்பைக்கொடுத்து நின்றதும், சிபிச்சக்கரவர்த்தி வேடனுக்குத் தனது மாமிசத்தைக்கொடுத்ததும், கன்னன் தான்செய்த புண்ணியமனைத்தையும் யுத்தகளத்தில் யாசித்த பிராமணோத்தமனுக்களித்ததும் இன்னோரன்ன பல சரிதங்களும்,

"சாதலி னின்னாத தில்லை யினிததூஉ
மீத லியையாக் கடை"

என்ற பொய்யாமொழிக்கு இலக்கியமாக விளங்குவனவன்றோ.

முற்கணத்துப்பரிசில்பெற்றானே பிற்கணத்தும் வந்திரப்பினும் முற்றந்ததைமறந்து பின்னுங்கொடுத்துப்போக்கலும், தமக்கு வறுமைப்பாடுறினும், அவ்வறுமையினும் இயன்றவளவு கொடுத்து மகிழ்வித்தலும் வள்ளியோர்கடனாம்.

"இன்றுசெலினுந் தருமேசிறுவரை
சென்றுசெலினுந் தருமேபின்னும்
முன்னே தந்தனெ னென்னாது துன்னி
வைகலுஞ்செலினும் பொய்யலனாகி
யாம்வேண்டியாங்கெம் வறுங்கலநிறைப்போன்."

(புறநா-௧௭௧) எனவும்,

"நிரப்பாதுகொடுக்குஞ் செல்வமுமிலனே
யில்லென மறுக்குஞ் சிறுமையுமிலனே"

எனவரும் புறப்பாட்டானும்,

"ஆற்றுப் பெருக்கற் றடிசுடுமந் நாளுமவ்வா
றூற்றுப் பெருக்கா லுலகூட்டும்"

என்பதனானும் இவ்வுண்மைத்திறனினிதுவிளங்கும்.

எத்துணைப்பெருஞ்செல்வம்படைத்திருப்பினும் வள்ளன்மை படைத்தாலன்றிச் சிறிதும் புகழ்பெறற்குரியராகார். துரியோதனனிடத்துப்பெற்றதோர் சிற்றரசுகொண்ட கன்னன்கொடையாலன்றோ பேரிசைபெற்று இன்றும் நிலவுகின்றான். சிற்றரசர்களான வள்ளல்கள் பெற்ற பெரும்புகழிற்கு எப்பேரரசர்பேறும் எதிர்நிற்குந்தரத்தனவோ.

சைவமதத்தினர் குருவாகிய திருநாவலூரர் சிவபிரானையன்றிப் பிறதெய்வங்களையும் பாடக்கண்டிலம். அத்தகையார் பாடலில், ‘கொடுக்கிலாதானைப்பாரியேயென்று கூறினுங்கொடுப்பாரிலை” என்று பாரியென்னும் வள்ளலைப் புகழ்ந்துகூறுவாராயினர். இதுமட்டோ,

வானம் வாய்த்த வளமலைக் கவாஅற்
கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய
அருந்திற லணங்கின் ஆவியர் பெருமகன்
பெருங்கட னாடன் பேகனும் (1) சுரும்புண
நறுவீ யுறைக்கு நாக நெடுவழிச்
சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய
பிறங்கு வெள்ளருவி வீழுஞ் சாரற்
பறம்பிற் கோமான் பாரியும் (2) கறங்குமணி
வாலுளைப் புரவியொடு வையக மருள
ஈர நன்மொழி யிரவலர்க் கீந்த
அழறிகழ்ந் திமைக்கும் அஞ்சுவரு நெடுவேற்
கழறொடித் தடக்கைக் காரியும் (3) நிழறிகழ்
நீல நாகம் நல்கிய கலிங்கம்
ஆலமர் செல்வர்க் கமர்ந்தனன் கொடுத்த
சாவந் தாங்கிய சாந்துபுலர் திணிதோள்
ஆர்வ நன்மொழி ஆயும் (4) மால்வரைக்
கமழ்பூஞ் சாரற் கவினிய நெல்லி
யமிழ்துவிளை தீங்கனி யௌவைக் கீந்த
வுரவுச்சினங் கனலும் ஒளிதிகழ் நெடுவே
லரவக்கடற் றானை அதிகனும் (5) கரவாது
நட்டோ ருவப்ப நடைப்பரி காரம்
முட்டாது கொடுத்த முனைவிளங்கு தடக்கைத்
துளிமழை பொழியும் வளிதுஞ்சு நெடுங்கோட்டு

நளிமலை நாடன் நள்ளியும் (6) நளிசினை
நறும்போது கஞலிய நாகுமுதிர் நாகத்துக்
குறும்பொறை நன்னாடு கோடியர்க்கீந்த
காரிக் குதிரைக் காரியொடு மலைந்த
வோரிக் குதிரை ஓரியும் (7) எனவாங்கு
எழுசமங் கடந்த வெழுவுறழ் திணிதோள்
எழுவர் பூண்ட ஈகைச் செந்துகம்’’

என முறையே சிறுபாணாற்றுப்படையில் வள்ளல்கள் கொடையைப்பாராட்டியிருப்பதும், இன்னும் இவ்வாறே ஒவ்வொரு வள்ளல்களையும் ஆங்காங்கு நல்லிசைப்புலவர்கள் பாராட்டிப்புகழ்ந்திருத்தலையும் நோக்குமிடத்துக்கொடுத்து நல்லிசைப்பெற்றாரே இறந்தும் இருந்தவராரென்பது அமையும். இக்கருத்தைக் கம்பநாடார்கூறிய

“மாய்ந்தவர் மாய்ந்தவ ரல்லர்கண் மாயா
தேந்திய கைகொ டிரந்தவ ரெந்தாய்
வீந்தவ ரென்பவர் வீந்தவ ரேனு
மீந்தவ ரல்ல திருந்தவ ரியாரே”

என்னும் இராமயாணச்செய்யுளும் வலியுறுத்தும்.

எம்மவர்க்குள்ளே சீதக்காதிமறைக்காயரைப் பிறமதத்தவர்களும் நன்குகொண்டாடுவர். அஃதவர் கொடையாற்பெற்றபேறாகும்.

இங்ஙனங்கொடுத்துப் புகழ்புனையும் பெரும்பாக்கியம் எல்லாருக்குங் கிட்டுவதரிது. தவமுடையார்க்கே அது முற்றுஞ் சித்திப்பதாகும். “தாதாகோடிக்கொருவன்” என்றார் பழமொழியில்.

“கொடையுளுமொருவன்கொல்லுங்கூற்றினுங்கொடியவாட்போர்ப்
படையுளுமொருவனென்றுபயங்கெழுபனுவனுண்ணூ
னடையுளார்சொல்லிற்றெல்லாம்நம்பிசீவகன்கட்கண்டாந்
தொடையலங்கோதையென்றுசொல்லுபுதொழுதுநிற்பார்.

என்றார் சிந்தாமணிக்காரர்.

இவ்வாறு பெருமையும் அருமையும்பெற்றுவிளங்கிய கொடையின்றன்மை நம் நாட்டுக்கே சிறந்த தருமமாகவிருந்தது. இக்காலத்தோ காலவேறுபாட்டால் கொடுப்பார் தொகை மிகச்சுருங்குவதாயிற்று. அதினும் ’புலவர்கட்கீவார் தொகை மிகச்சுருங்குகின்

றது. தற்காலத்தில் நம் தமிழ்ச்சங்க ஸ்தாபகராகிய ஸ்ரீமாந்-பொ. பாண்டித்துரைச்சாமியவர்கள் பெருங்கொடைவள்ளலாக வீற்றிருப்பது கண்கூடாகக்கண்டும் இவ்வாறு அவர்கள் எதிரிலேயே சொல்லுதல் சாலுமோவெனின், நாமறிந்தவரை ஜமீன்தார்களிலே இவ்வொருவரேயன்றி அடுத்தபடி வேறொருவரைக் காட்டமுடியுமா? எந்தச்சமஸ்தானத்திலாவது தமிழ்ப்புலவர்கள் கூட்டத்தைக்காணமுடியுமா? ஆங்கிலம்படிக்கப்புக்கு அதையும் தேறாது சுயபாஷைஞானத்துக்குத் தூரஸ்தராகிப் புண்ணியபாவ வுணர்ச்சிகுன்றித் தம் வயிறாரவுண்டு உலகாயதமதப்பிரவேசகர்களாய் வாழ்ந்து மடிவதே பிரபுக்கள் மகார்க்கு இயல்பாக வந்துவிட்டது. ஆதரிப்பாரற்றமையால் தமிழ்ப்பாஷையைக் கற்கப்புகுவாரும் சுருங்கினர். புலவர் என்ற பெயர் கொண்டுவந்தமாத்திரையே, கேவலம் பிச்சைக்காரரைப்போல் நினைத்து அவமதிக்கப்பட நேர்கின்றது.

முற்காலத்துப் புலவோர் பல்லோர் கவிபாடிப் பரிசுபெற்றுவாழும் வாழ்க்கையை அரசர் வாழ்க்கையினும் சிறப்பாகக்கொண்டு வாழ்ந்தனர். ஓரரசன்பாற் பரிசுக்குச்சென்று அவன் தக்கபடி கொடாவிடில் அவனை வெறுத்துச்சென்று பிறிதொரு மன்னர்பாலடைந்து பெரும்பொருள்பெற்று அதனையம்மன்னனுக்குக்காட்டியறிவூட்டிப்போவர். இப்புலவர்களது மனத்துணிவும் இறுமாப்பும் எவ்வளவு கெம்பீரநிலையிலிருந்தன.

பெருஞ்சித்திரனாரென்னும் புலவர் வெளிமான்றம்பி சிறுகக்கொடுத்ததைக்கொள்ளாது சென்று குமணனைப்பாடிப் பரிசில் பெரிதுபெற்று அவனிடம்வந்து அவனையவமதித்துப்பாடிய புறப்பாட்டை நோக்குக. அது வருமாறு:—

"இரவலர் புரவலர் நீயு மில்லை
புரவலர் இரவலர்க் கில்லையும் அல்ல
ரிரவலர் உண்மையும் காண்இனி யிரவலர்க்கு
ஈவோ ருண்மையுங் காணினி நின்னூர்க்
கடிமரம் வருந்தத் தந்தியாம் பிணித்த
நெடுநல் யானை யெம்பரிசில்
கடுமான் றோன்றல் செல்வல் யானே."

இக்கவியின் சொற்போக்கை நோக்குமிடத்து இப்புலவரதுமனக்கிளர்ச்சி மிகவும் வியக்கத்தக்கதன்றோ? இம்மட்டோ! இப்புலவர் குமணன்கொடுத்த அப்பரிசிலைக்கொடுபோய் மனையாட்குக்கொடுத்து அவள்பாற் கூறுதல் மிகக்களிப்பைத் தராநிற்கும்.

"நின்னயந்துறைநர்க்கும் நீநயந்துறைநர்க்கும்
பன்மாண்கற்பி னின்கிளைமுதலோர்க்கும்
கடும்பின்கடும்பசி தீரயாழநின்
நெடுங்குறியெதிர்ப்பை நல்கியோர்க்கும்
இன்னோர்க்கென்னாது என்னொடுஞ்சூழாது
வல்லாங்குவாழ்து மென்னாதுநீயும்
எல்லோர்க்குங்கொடுமதி மனைகிழவோயே
பழந்தூங்கு முதிரத்துக்கிழவன்
திருந்துவேற்குமணன் நல்கியவளனே."

என்பதுவே அக்கவி.

பார்த்தீர்களா! இரத்தல் தனக்குரிய "தானந்துடைத்துத்தருமத்தை வேர்பறித்து - மானந்துடைப்பதோர்வாள்" எனவும், "ஆவிற்கு நீரென்றிரப்பினும் நாவிற் - கிரவின் இளிவந்ததில்" எனவும் மிகக்குறைவாகக்கூறப்பட்டிருக்கின்றதே. இப்புலவர் பெருமக்கள் இரத்தலை மேற்கொண்டொழுகுவோரேயாயினும் இவர்கள் மனப்போக்கு எவ்வளவு கெம்பீரமாகச்செல்கின்றது.

இந்த இரவலர்கட்கு வேண்டியாங்கீயும் வள்ளன்மையாளர் பல்லாரிருந்தமையாலன்றோ இவர்கள் உள்ளந்துயரமுறாது எழுச்சிபெற்று நிலவுவதாயிற்று.

இக்காலத்துச்செல்வர்களோ, யாரேனும் இரப்போர்வந்தால் ஏற்பதிகழ்ச்சி யென்பதையறியீரா என்று பரிகசிக்கின்றாரேயன்றி ஐயமிட்டுண் என்பதைக்கற்றவராகவில்லை. இவறன்மையானது எல்லா நன்மையையும் சிதைப்பதென்பதையறிந்திலர். ஈயாத லுத்தர் இருந்தென்ன என்பதையும்,

"ஈயென விரத்த லிழிந்தன் றதனெதி
ரீயே னென்ற லதனினு மிழிந்தன்று."

(புறநா ௨௦௪) என்பதையும்,

“இரப்பாரை யில்லாயி னீர்ங்கண்மா ஞாலம்
மரப்பாவை சென்றுவந் தற்று”

என்பதையும்,

மாசித்திங்கண் மாசின சின்னத்துணிமுள்ளின்
ஊசித்துன்னம்மூசியவாடையுடையாகப்
பேசிப்பாவாய்ப்பிச்சையெனக்கையகலேந்திக்
கூசிக்கூசிநிற்பர்கொடுத்துண்டறியாதார்”

என்பதையும் நினைக்கின்றார்களில்லை. இன்னும் எங்கள் நான்காவது வேதமாகிய புறுக்கான் என்னும் குறாஆன்ஷரீபிலே முப்பத்திரண்டுஇடங்களில் ஈகையாகிய தன்மத்தைச்செய்யும்படி அல்லாஹுத்தாலாஎன்னும் கடவுள் திருவுளம்பற்றியிருக்கின்றார். எமது நபிகள்பிரான்முகம்மதுநபிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தங்கள் ஒசியத் என்ற மரணோபதேசத்தில்,

“தாங்குசந்தாக்குத்தாங்கினாலும், தனிய இரவெல்லாம் வணங்கினாலும், பாங்குசொல்லுமுன் ஒலுச்செய்தாலும், பக்லிசொர்க்கம்புகுதமாட்டான்” என வலியுறுத்திக்கூறியுள்ளார்கள். ஆகவே ஒருவன்செய்தற்கரியதவங்களைப் பன்னாட்செய்துமுடிப்பினும், ஈகைக்குணம் ஒன்றெய்தாதிருப்பின் ஒருபோதுஞ்சுவர்க்கம் எய்தான் என்பது துணிபாகின்றது.

நபிமூசா அலைஸ்ஸலாம் காலத்தில் ஒருவன் தனது செல்வத்தாலும் செல்வாக்காலும் அகங்கரித்துக் கொடுஞ்செய்கை மேலிட்டவனாகித் தன்னகரத்திலுள்ளார் பலரையும் பலவாறு துன்புறுத்திக் கொண்டிருந்தனனாக, அவர்கள் அதைச்சகிக்கலாற்றாது நபிமூசா அலைகிஸ்ஸலாம அவர்களிடம்வந்து முறையிட்டனர். நபியவர்கள் அக்கொடியனை யீடழிக்குமாறு கடவுளிடம் து ஆஇரந்தனர். எல்லாம் வல்லஇறைவனும் அத்து ஆவை கபுல்செய்து அத்தீயனைக்கொல்லுமாறு ஓர்பணிக்குப் பணித்தனன். அப்பணியவனைக் கொல்வான்கருதி யன்னான் கலைப்பொதியில் புக்கிருப்ப அதுபோது ஓர் மிடியன்போந்து முந்நாட்பட்டினியுறலான் மிக்க தன்பசிக்கு ஏதேனும் இரைகொடாவிடின் தன்னுயிர்க்கிறுதி சம்பவிக்குமெனக் கூறியிரப்ப, அதுகேட்ட அவன் கொடியோனாயினுங் கருணைகூர்ந்து தனக்கென்றிருந்தவுணவிற் பாதிகொடுத்தவன் பசியைநீக்கினன். பசிதீர்ந்த மிடியன் மனமகிழ்ந்து ‘இவர் ஆயுள்மல்குக’ எனவாழ்த்திக் கடவுளைத்துதித்துச் சென்றான். கடவுள் இவ்வேண்டுகோளையும் கபுல்செய்து முன்விடுத்த நாகத்திற்குக் கடிவாளமிட்டடக்கினன். எப்பொழுதும் மாறாத நபியவர்கள் திருவாக்கின்படி பத்தியன் இறப்பான் என எதிர்பார்த்தார். பலரும் அறிய அச்சர்ப்பம் நிகழ்ந்தவையனைத்துங் கூறிச்சென்றது.

பார்த்தீர்களா! தருமம் தலைக்காக்கும் என்னும் முதுமொழிக்கு வேறுசான்று கூறவும் வேண்டுமோ? இன்னும், ஈகைத்தன்மத்தைப்பற்றி யெத்தனையோ ஆயிரக்கணக்கான திப்பிய சரித்திரங்கள் எமது மார்க்கநூல்களில் இனிதும் எளிதுங்காணலாம்.

ஆதலின் நம் நாட்டுச் செல்வர்கள்பலரும் பண்டைத்தருமமாகிய ஈகையைக் கடைப்பிடித்து வருவார்களானால், மிக்க புகழும் புண்ணியமும் அடைவார்களென்றும், இவ்வாறாகும்படி எல்லாம் வல்ல கடவுளாகிய ஹக்சுபுகானகுத்தாலா கருணைபாலிப்பானாக என்றும் கூறும் எனது உபந்நியாசத்தை யிம்மட்டில் முடிக்கின்றேன்.

உ

திருக்குறட் பரிமேலழகருரை விளக்கம்.

(முற்றொடர்ச்சி.)

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ
னற்றா டொழாஅ ரெனின்.

இ - ள். கற்றதனால்........தொழாராயின்? எ - று.
எவனென்னும்...............கூறப்பட்டது.

வி - ம். எல்லா நூல்களுமென்றார்; கருவிநூல்களும் சமயநூல்களுமென நூல்கள் இருவகையனவாதலின். கருவிநூல்கள் தரு

க்கம் வியாகரணம் முதலியன. சமயநூல்கள் வேதம் ஆகமம் முதலியன. இறைவனடி பயக்கும் ஞானத்தை உணர்த்தலின் வேதம் ஆகமம் முதலிய சமயநூல்கள் கற்கப்படத்தக்கனவே; கருவிநூல்களைக்கற்றலாற்பயனென்னையெனின், அவை சமயநூல்களைக்கற்றற்கு இன்றியமையாதனவாய் நின்று இறைவனடி பயப்பித்தலிற் பயனுடையனவேயாம். எங்ஙனமெனின், தருக்கம் * சமயநூற்பொருள்களைத் தருக்கித்துத்தெரிவித்தலானும், வியாகரணம் "எழுத்தறியத்தீருமிழிதகைமைதீர்ந்தான் - மொழித்திறத்தின்முட்டறுப்பானாகு- மொழித்திறத்தின் - முட்டறுத்தநல்லோன்முதனூற்பொருளுணர்ந்து - கட்டறுத்துவீடுபெறும்" என்னுஞ் செய்யுளிற்கூறியவாறு மொழித்திறத்தின் முட்டறுத்துச்சமயநூற்பொருளை உணரவைத்தலானுமென்பது. (முதனூல் என்றது அறம்பொருளின்பம் வீடென்னு முறுதிப்பொருளுணர்த்துவனவாகிய சமயநூல்களை. அவை மேற்கூறிய வேதம் ஆகமம் முதலியன.) இக்கருவிநூல்களைக்கல்லாது சமயநூல்களைக்கற்கப்புகுவோர் "குன்றுமுட்டியகுரீஇப்போலவும், குறிச்சிபுக்கமான்போலவும்" இடர்ப்படுப என்பது "எண்ணென்பவேனையெழுத்தென்பவிவ்விரண்டுங்- கண்ணென்பவாழுமுயிர்க்கு" என இந்நூலாசிரியரும் பின் (௪0-அதி. கல்வி. ௨.) இக்கருவிநூல்களின் இன்றியமையாமையைச்சிறப்பித்துக்கூறுதல் காண்க. (எண் தருக்கம் என்பர் ஒரு சாரார்.)

கற்றவர் என்றது மேற்குறித்த நூல்களைக்கற்றவரை. கற்றல் நூற்பொருள்களை நல்லாசிரியர்பாற்கேட்டறிதல். கற்றவர்களே இறைவனியல்பும், தம்மியல்பும், தொழுமியல்பும், தொழுதற்குக் காரணமும் பிறவுமுணர்வார்கள். ஏனையோர் உணரார்கள். இக்கருத்து நோக்கியே, "கற்றவர் விழுங்குங்கற்பகக்கனியை.......... மற்றவரறியாமாணிக்கமலையை" எனவும், "கற்றல்கேட்டலுடையார் பெரியார்கழல் கையாற்றொழுதேத்தப்- பெற்றவூர்ந்தபிரமாபுரமேவிய பெம்மானிவனன்றே" எனவும், "ய்ருதநித்யநாதேஷவா ஸம்ஷஹதிவஞ்ஞீச:" எனவும் பிறருங்கூறுப.

அக்கல்வியறிவென்றது மேற்கூறிய நூல்களினறிவை. அவற்றுள்ளும் விசேடமாக வீட்டியல்புணர்த்தும்பகுதியே கொள்ளப்படும். என்னை? மெய்ப்பொருள் காணுதற்குரியததுவேயாதலினென்பது. அது "கற்றீண்டுமெய்ப்பொருள்கண்டார்...........நெறி" என்பதனானும், "ஞானநூறனையோதலோதுவித்தல்........ஈனமிலாப்பொருளதனைச்சிந்தித்தல்..........வீடெய்தவறிந்தோரெல்லாம்" என்பதனானும் அறியப்படும்.

யாது என்றது ஈண்டு இன்மைகுறித்துநின்ற வினாவினைக்குறிப்புமுற்று. அஃது இறைவனடியைத்தொழாராயிற்பயனில்லை என்பதை உணர்த்திநின்றது. கற்றதனாற்பயனடைய விரும்புவோர் இறைவனடியைத்தொழுதல்வேண்டும். அன்றேல், அதனாற்பயனில்லை என்பதாம். இக்கருத்து நோக்கியே தாயுமானவரும் "ஆடித்திரிந்துநான்கற்றதுங்கேட்டதுமவலமாய்ப்போதனன்றோ - தனியேயிருப்பதற்கெண்ணினேனெண்ணமிது சாமிநீயறியாததோ"எனக்கூறினார்.

மெய்யுணர்வு என்றது சர்வஞ்ஞதையை. "சர்வஞ்ஞதையாவது புறக்கரணமின்றி நிஷ்களங்க அநுபவவிஷயமாய் சமஸ்த வஸ்துக்களையும் எப்போதும் பிரத்தியட்சமாயறிதல்." இவ்வாறு பிரமசூத்திர சிவாத்துவித சைவபாடியத்துட்கூறப்பட்டுள்ளது. (தமிழ்மொழிபெயர்ப்பு.) வாலறிவனென்றமையானே அநாதிபோதமுங் கொள்ளப்படும். என்னை ? இயல்பாகவே பாசங்களினீங்கிய அறிவாதலின் என்பது. வாலறிவனென்றதற்கு மெய்யுணர்வினையுடையான் எனப்பரிமேலழகர் பொருள்கூறியது "கற்றதனால்" என்பதை நோக்கியேயாம். என்னை ? கற்கப்படும் வேதமுதலிய நூல்களையெல்லாம் மெய்யுணர்வில்லாதொழியின் இறைவனாற்றருதல் கூடாதாதலினென்பது. "சமஸ்தவஸ்துக்களையும் பிரகாசிப்பிக்கும் வேதங்களுக்குச் சிவபெருமானே கர்த்தாவாதலின் அவருக்குச் சர்வஞ்ஞதை உண்டென. நிச்சயிக்கப்படுகின்றது. அறியாததொன்

---

* பதார்த்த உணவிற்குவீடுபேறேமேலாயஉறுதிப்பயன்.......சிந்தனையைப் பிறப்பிப்பதாய பதார்த்தங்களி னுண்மையைத் தெரித்தலாற் சுருதியன்றிச் சாத்திரமு முத்தியைப் பயப்பிப்பதேயாம்......ஆகவே பதார்த்த உணர்வானே வீடுபேறாகிய மேலாமுறுதிப்பயன் கிடைத்தல்பெற்றாம். எனத் தருக்கசங்கிரககாரரும் தம்முரையின்கண் (௩௮-ம் பக்கம்.) கூறுதல் காண்க.

றைக்கூறுதல் கூடாமையின்" எனப்பிரமசூத்திர சிவாத்துவித சைவபாடியகாரரும் (மொழிபெயர்ப்பு) "இறைவனா வான்ஞானமெல்லாமெல்லாமுதன்மையனுக்கிரகமெல்லாமியல்புடையனியம்பு-மறையாகமங்களினாலறிவெல்லாந்தோற்றம்" எனச் சிவஞானசித்தியார்காரரும் கூறுதலின், இறைவனே வேதம் முதலிய சகல நூல்களுக்கெல்லாம் தலைவனென்பதூஉம், அதனால் அவனுக்குச் சர்வஞ்ஞதை உண்டென்பதூஉம் நிச்சயிக்கப்படும் என்க.

நல்லதாள்கள் தொழுவோருடைய பிறவியை நீக்கும் நன்மையையுடைய தாள்கள். தாள்களைத்தொழுதார்க்குப் பிறவிநீங்குமென்பது, "பாலூரு........நாலூர்மயானத்து நம்பான்றனடிநினைந்து-மாலூருஞ்சிந்தையர்பால் வந்தூரா மறுபிறப்பே" என்பதனானும், "சுழலார் துயர்.........நீங்காப்பிறவிக்கலைசெடுத்து......... அடித்தலமே" என்பதனானும், "பிறவிப்பெருங்கடனீந்துவர்.........ரிறைவனடிசேராதார்" என்பதனானுமறியப்படும்.

தொழாராயின் என்றதனால் தொழுதல்வேண்டுமென்பதூஉம் தொழாதொழியிற்பிறவியறாதென்பதூஉம் பெறப்பட்டன. தொழுதல்வேண்டுமென்பது "தன்னையறிவித்துத்தான்றனைச்செய்தானை..... ...மானேதொழுகைவலி" என்பதனானும், "எண்ணியகருமமுடியினும்முடியா தொழியினுமிறைவனைத்தொழுதல்-புண்ணியம்" என்பதனானும், "தஜ்ஜாதிகிமாங உவாவஸீசு" என்பதனானும் அறியபபடும். தொழாதொழியிற்பிறவியறாதென்பது "பிறவிப்பெருங்கட........நீந்தாரிறைவனடிசேராதார்" என்பதனாலறியப்படும்.

பிறவிப்பிணி - பிறவிநோய். அதனை நீக்குவது தாளாதலின் தாளைமருந்தென்றார். ஆகமம் - நூல்.

இனி இதன்கண்ணே சைவசித்தாந்த நூல்களுட்கூறிய திரிபதார்த்தலக்கணமும் பிறவுமமைந்து கிடத்தல் காட்டுதும் :—

இதனுள்; 'வாலறிவன்'என்றதனாலே தொழுவோர் மாலறிவுடையார் என்பதூஉம், அம்மாலறிவு மலத்தானே வந்ததென்பதூஉம், அதனானேமலமொன்றுள'தென்பதூஉம்; தொழுவோரென்றதனாலே தொழுதற்குரிய கருவியொன்றுளதென்பதூஉம், அது மாயையானே உண்டாயதென்பதூஉம், அதனானே மாயையொன்றுளதென்பதூஉம், தொழுதற்குரிய கருவியொன்றுளதெனவே அதனை எடுத்தற்குக் காரணமொன்றுளதென்பதூஉம்; அது கன்மமென்பதூஉம் பெறப்பட்டன. படவே, வாலறிவனென்றதனானே பதியியல்பும், தொழாஅரென்றதனானே பசுவியல்பும், பாலறிவு என்றதனானே மலவியல்பும் தொழுதற்குரிய கருவிமாயையானே யுண்டாயதென்றதனானே மாயையினியல்பும் தொழுதற்குரிய கருவியை எடுத்தற்குக்காரணமொன்றுளதென்றதனானே கன்மவியல்பும் பெறப்பட்டுத் திரிபதார்த்தலக்கணமு மமைந்தனவாதல் பெறப்பட்டன. மலமுதலிய மூன்றும் பாசமெனப்படும்.

இனி, ஆன்மாக்களுக்கு மாலறிவு மலத்தானே வந்ததென்பது "ரூத்ரா... ...ஸோநகூஹஸ்ருக்ரிய:" என்பதனானும், "அந்தக்கரணமவற்றி............சகசமலத்துணரா...... ...நின்றஞ் சவத்தைத்தே" என்பதனானும், தொழுதற்குரிய கருவிமாயை யானே உண்டாயதென்பது "நித்தமாய்............தநுகரணமுமுயிர்க்காய் வைத்ததோர் மலமாய்...........செய்யுமன்றே" என்பதனானும், தொழுதற்குரிய கருவியை எடுத்தற்குக் காரணம் கன்மமென்பது "இருவினை... ... மாயாவுருகண் மருவியார்த்து...........செலலும்" என்பதனானும் அறியப்படும்.

இன்னும் 'நற்றாள்' என்றதனானே அது சத்திவடிவிற்றென்பதூஉம், அதுவே ஞானமுதிப்பித்து வீடுபயக்கும் என்பதூஉம், இறைவனுக்குச் சகளவடிவுண்டென்பதூஉம், அவ்வடிவெடுத்ததுயிர்களின் பொருட்டென்பதூஉம், அவ்வடிவு நம்மனோர்வடிவுபோலாது சத்திவடிவிற்றென்பதூஉம் பெறப்பட்டன.

இனி, அவனடிசத்திவடிவிற்றென்பது "உருவருள்....... கரசரணாதி சாங்கம் - தருபருள்...........அசிந்தனன்றே" என்பதனானும், அதுவே ஞானமுதிப்பித்து வீடுபயக்குமென்பது "சிவனையவன்றிருவடிஞானத்தானேசேர" என்பதனானும், இறைவனுக்குச் சகளவடிவுண்டென்பது "அருவமோருபாரூபமானதோ ...உருவமுமூன்றுஞ்சொன்னவொருவனுக்குள்ளதாமே" என்பதனானும், அவ்வடிவெடுத்தது உயிர்களின் பொருட்டென்பது "உருமேனிதரித்துக்

கொண்ட.......நந்தங் கருமேனிகழிக்கவந்த கருணையின் வடிவுகாணே" என்பதனானும், "உருவருள்...... அருளுருவுயிருக்கென்றே யாக்கினனசிந்தனன்றே" என்பதனானும், "தன்னைநேரிலாப்பரம் பொருடனிபுருக்கொண்ட - தென்ன காரணமென்றியேலைந் தொழிலியற்றி - முன்னையாருயிர்ப் பாசங்கண்முழுவது மகற்றிப் - பின்னை வீடுபேறருளுவானினைந்தபோருளே" என்பதனானும், அவன்வடிவு நம்மனோர்வடிவுபோலாது சத்திவடிவிற்றென்பது "காயமோமாயையன்று காண்பது சத்திதன்னால்" என்பதனானும், "உருவருள்...... அசிந்தனன்றே" என்பதனானும் அறியப்படும்.

இனிச், சகளவடிவுளதென்பது பெறப்படவே; அதன்காரணமாகிய சகள நிஷ்களமும், அதன் காரணமாகிய நிஷ்களமும் பெறப்பட்டுப் பிருதுவிமுதல் விந்து ஈறுயுள்ள தத்துவங்களும் (சங்கார முறை) தத்துவாதி தெய்வங்களுமுளவாதலும்பெறப்பட்டன.

இங்ஙனமே சைவ சித்தாந்த சாஸ்திரமாகிய சிவஞானபோத நூலுட்கூறிய முதற்சூத்திரப் பொருளொழிய ஏனைய சூத்திரப் பொருள்கள் பெரும்பாலும் அமைந்து கிடத்தல் காண்க. முதற்குறளானே முதற்சூத்திரப் பொருளும், ஐந்தாஞ்சூத்திரப்பொருளும் பெரும்பாலும் அமைத்துக் கூறப்பட்டுள்ளன. அவற்றைச் சமயநேர்ந்துழி விளக்கிக்காட்டுதும்.

சி. கணேசையர்.

உ

கதாசரித் சாகரம்.

௫-வது சதுர்த்தாரிகாலம்பகம் ௧-வது தரங்கம்.

[ஸ்ரீமத்-வீராசாமி ஐயங்காரவர்கள் மொழிபெயர்த்தது]

பார்வதியினது மிகுந்த வேண்டுகோளாகிய மந்தரவெற்பின் சுழற்சியால் முற்காலத்தில் பரமேசுவரனது முகமாகிய சமுத்திரத்தினின்றுமுண்டாகிய இக்கதாமிருதத்தைப் பரிவுடன் எவர்கள் பருகுகின்றனரோ, அவர்கள் யாதோரிடையூறுமற்றவர்களாயும் நிறைவுடன் கூடியவர்களாயும் அப்பரமேசுவரனதனுக்கிரகத்தினாலிப்பூவுலகிற் புலவர்களாகிறார்கள்.

தனது பிரதாபத்தினால் விக்கினங்களைத் தகிக்கின்றவர்போல, மதத்தினாற் சுழல்கின்ற முகத்தினின்றுதிர்கின்ற சிந்தூரத்தூளிகளால் பூமியைப்பொடிபடச்செய்யும் விநாயகக்கடவுள் காப்பதாக.

உதயனமகாராஜன் தன் தேவியுடன்கூடித் தனது அருமைப்புதல்வனாகிய நரவாகனதத்தனென்னுங் குழந்தையைப் பரிபாலித்து வந்தான். அப்பொழுது அவ்வரசனுக்கு இக்குழந்தையை நாமெவ்வண்ணங்காப்பதென்று கவலையுண்டாக அதையறிந்த யௌகந்தராயணனென்ற மந்திரியானவன் அரசன் தனித்திருக்கும்பொழுதுசென்று, அரசனே! நரவாகனதத்தனாகிய அரசிளங்குமரன் விஷயத்திலொருபொழுதுங்கவலைப்படவேண்டாம். ஏனெனில், உமதரண்மனையிலுதித்துள்ள இக்குழந்தை, பகவானாகிய பரமேசுவரனால் வித்தியாதரர்கள் யாவர்க்கும் மேலான சக்கிரவர்த்தியாக உண்டுபண்ணப்பட்டிருக்கின்றானென்பதை வித்தியாதரர்களின் தலைவர்கள் தமது வித்தியாப்பிரபாவத்தினாலறிந்து மனத்திற் பொறாமையுற்றவர்களாய்த் தீயவெண்ணத்துடன் கலக்கமுற்றிருக்க, இதனையறிந்து பரமசிவன் இவனைக்காப்பதற்கு ஸ்தம்பகனென்று பிரசித்திபெற்ற தனது கணநாதனை யேற்படுத்தியிருக்கின்றனர்; அந்தக்கணநாதனும் ஒருவர்கண்ணுக்குந்தோன்றாது மறைந்துநின்றுகொண்டு உமது புதல்வனைக்காத்துவருகின்றனன்.

இதைப்பற்றி நாரதமகாமுனிவர் விரைவில்வந்து என்னிடம் சொல்லிப்போந்தனர் என்று யௌகந்தராயணனென்னும் மந்திரி, உதயனனென்னும் வச்சராஜனிடஞ் சொல்லிக்கொண்டிருக்கும்பொழுதே, ஆகாயத்தினின்றும் கிரீடகவசகுண்டலங்களுடனும் வாளாயுதத்துடனுங் கூடிய ஓர் திவ்ய புருஷன் இறங்கிவந்து வணங்கிநிற்க, வச்சராஜனும் விரைவில் அதிதிகளுக்குச் செய்யவேண்டிய உபசாரங்களைச்செய்தபின், அந்தத்திவ்வியபுருஷனைப்பார்த்துச்சந்தோஷத்துடன் நீயார்? இவ்விடம் வந்தகாரியமென்னவென்று கேட்டனன். அதற்கு அவன் மகாராஜனே யான்முன்பு மனுஷியனாகவிருந்து வித்தியாதரத்தன்மையையடைந்தவன். எனக்கு விரோதிகளநேகரிருக்கின்றனர்; யான் எனது வித்தியாப்பிரபாவத்தினால் உமது புத்திரனெங்களுக்கரசனாக வரப்போகிறானென்பதையறிந்து அவரைப்பார்

ப்பதற்கு வந்தேன் என்று சொல்லிக்கொண்டு தங்களுக்குச் சக்கிரவர்த்தியாய் வரப்போகின்ற நரவாகனதத்தனாகிய ராஜகுமாரனைப்பார்த்து, திருப்தியுடன்கூடிய அந்த வித்தியாதரனை நோக்கி, வத்சராஜன் சந்தோஷத்துடன் கூடியவனாய் நண்பனே! வித்தியாதரத்தன்மையென்பதெப்படிப்பட்டது, அதை யெவ்வண்ணமடைவது நீயெவ்விதம் அத்தன்மையை யடைந்தனை? இதனை விவரமாகச்சொல்லவேண்டுமென்று மறுபடியும் கேட்டனன். அதற்கு அந்தச் சந்திவேகனென்ற பெயருடைய வித்சியாதரன் வணக்கத்துடன் கூடியவனாகி அரசே! இந்த ஜன்மத்திலாவது அல்லது முற்பிறப்பிலாவது சாக்ஷாத் பரமேசுவரனைப்பூஜித்து அவனதனுக்கிரகத்தினால் அத்தன்மையடையவேண்டுமேயன்றி வேறில்லை; அதுவும் வித்தை, கத்தி, மாலை முதலிய கருவிகளுடைய மகிமையைக் கைக்கொண்டிருத்தலாலநேக விதமாயிருக்கின்றது. யான் வித்தியாதரனான தன்மையைச்சொல்லுகிறேன் கேளும் என்றுசொல்லித் தன்விருத்தாந்தத்தை வாசவதத்தையுடன் கூடியிருக்கிற வத்சராஜன்சபையில் சொல்லத்தொடங்கினான்.

பூவுலகத்திற் கணியாய்விளங்கும் வர்த்தமானமென்ற பெயரையுடையதோர் நகரமிருந்தது; அதில்முற்காலத்தில் சத்துருக்களைவாட்டுகின்ற பலத்துடன்கூடிய பரோபகாரியென்னும் பெயரையுடைய ஓர் அரசனிருந்தான். மேன்மைதங்கிய அவ்வரசனுக்கு மேகத்திற்றோன்றிமறையாது நிலைபெற்றிருக்கும் மின்னலையொத்த கனகப்பிரபையென்ற பெயருடன்கூடிய பட்டமகிஷியிருந்தனள். அந்தப் பரோபகாரியென்ற அரசனுக்குச் சிலகாலஞ்சென்றபின் கனகப்பிரபையென்னும் தனது தேவியாரிடத்தில் ஒரு பெண்குழந்தை ஜனித்தது; அக்குழந்தையானது உருவத்தில் மகாலக்ஷ்மியின்கருவத்தை யடக்குவதற்குப் பிரமதேவனால் சிருஷ்டிக்கப்பட்டதோவென்று நினைக்கும்படியும் உலகத்திலுள்ளவர்களின் கண்களுக்குச் சந்திரிகைபோலானந்தத்தை விளைத்துக்கொண்டும் மெல்லமெல்லவளர்ந்துவந்தது. அக்கன்னிகையின் பிதாவாகிய பரோபகாரியென்ற அரசன் தன் புதல்விக்குத் தாயின்பெயருக்கிணங்கக் கனகரேகையென்று பெயரிட்டனன்.

பின்பு அந்தக்கனகரேகையென்கின்ற ராஜகுமாரியானவள் ஸர்வாங்கசௌந்தரியவதியாய் யௌவனதசையையடைந்திருக்கும்பொழுது, ஒருநாள் அவள்பிதாவான பரோபகாரியென்னுமரசன் தன்மனைவி கனகப்பிரபையென்பவள் தனித்திருக்குஞ்சமயத்திற்சென்று, ஏ தேவி! நமது கன்னிகை கனகரேகைக்கு இசைந்த விவாகஞ்செய்யவேண்டுமே என்றகவலை நாளுக்குநாள் வளர்வதுபோல் வளர்ந்துவருகின்ற கனகரேகையானவள் என்மனத்தை வருத்துகின்றனள். ஏனெனில், நற்குலத்திற்பிறந்த கன்னிகையானவள் நல்ல இடத்தைச் சேராவிடில், தனக்குரிய ஸ்தானத்தையடையாதிருக்கும் இசையைப்போலக்கேட்கின்றவர்களின் செவிகட்கும் வருத்தத்தைச்செய்வாள்.

அன்றியும், அறியாமையினால் அயோக்கியனுக்குபதேசித்த கல்வியானது புகழிற்கும் புண்ணியத்திற்குமிடமாகாது மனவருத்தத்திற்கே யேதுவாவதுபோலத் தகாதவனுக்கு மணந்துகொடுக்கப்பட்ட பெண்ணும் வருத்தத்திற்கே யிடமாகின்றனள். ஆதலால் நமது கன்னிகைக்கிசைந்த ராஜகுமாரனெங்கேயிருக்கின்றான். எவனுக்கிவளை மணந்துகொடுப்பதென்னுங் கவலையானது பெரிதாயிருக்கின்றதென்று சொல்லிய தன் கணவனை நோக்கிக் கனகப்பிரபையானவள் சிரித்துக்கொண்டு ஓ மகாராஜனே! நீரோ இவ்விதம் சொல்லுகின்றீர். நமது கன்னிகையோ விவாகமே வேண்டாமென்ற எண்ணத்துடனிருக்கின்றாள். ஏனெனில், இப்போது அவள் குழந்தைகள்போலச் செய்யப்பட்ட பொம்மைகளைவைத்து விளையாடிக்கொண்டிருக்குந்தருணத்தில் அவளைப்பார்த்து ஏ பெண்ணே! நானுனக்கெப்பொழுது விவாகஞ்செய்துபார்ப்பேனென்று சொன்னேன். இந்தச் சமாசாரத்தைக் கேட்டவுடனே அவள் ஆக்ஷேபத்துடன் ஏ தாயே! உனக்கென்னைவிட்டுப் பிரியவேண்டாமென்றெண்ணமிருந்தால் என்னையொருவருக்கும் மணம்புரியலாகாது. நானழகிய கன்னிகையாகவேயிருத்தல்வேண்டும்.

இவ்வாறின்றி மணம்புரிந்தாலென்னை இறந்துபோயினளென்று நினைத்துக்கொள். இதற்கு ஒருகாரணமுமிருக்கின்றது என்றுசொல்லியதைக்கேட்டு வருத்தமுற்றவளாய் உம்முடைய சமீபத்திற்குவந்தேன். அரசே, ஆதலால் விவாகமே வேண்டாமென்கிற அவளுக்கு

வரனைத்தேடிக் கவலைப்படுவதிலென்ன பிரயோசனமிருக்கின்றது என்று ராஜபத்தினி சொல்லியதைக்கேட்டு, அவ்வரசன் கவலையுற்றவனாகி அக்கன்னிகையின் அரண்மனைக்குச்சென்று தன் புதல்வியை நோக்கி ஏ வத்ஸே! தேவர், அசுரர், இயக்கர், கின்னரர், கிம்புருஷர்முதலிய சகலஜாதியிலுதித்த பெண்களும் அரிய தவமியற்றியும் தத்தமக்குரிய கணவனையடைய விரும்புகின்றார்கள். நீயோ விவாகமே வேண்டாமென்று மறுக்கின்றனை; இதற்குக்காரணமென்னவென்றனன்.

இவ்விதஞ்சொல்லிய பிதாவின் மொழிகளைக்கேட்டவுடன் அந்தக்கனகரேகையானவள் தலைகுனிந்து கீழேபார்த்துக்கொண்டு ஏ தந்தையே! எனக்கோ இப்பொழுது விவாகத்திலிஷ்டமில்லை. தாங்களிதற்காக என்னை நிர்ப்பந்தஞ் செய்கின்றீர்கள் என்றனள். இப்படிச்சொல்லிய ராஜகுமாரியின் மொழிகளைக்கேட்டதும் புத்திமான்களிற்சிறந்த பரோபகாரியென்ற அரசன், மறுபடியும் தன் கன்னிகையைப்பார்த்துப் பெண்ணே! என்ன இப்படிச்சொல்லுகிறாய். உலகத்திற் பாவங்களைப்போக்கடிப்பதற்குக் கன்னியாதானத்திற் சிறந்ததானம் யாதிருக்கின்றது. அன்றியும், பெண்ணென்பவள் பந்துஜனங்களின் வசப்பட்டிருக்கவேண்டுமேயன்றி அவளுக்குச் சுவதந்திரமென்பது கிடையாது. பெண்ணென்று பிறந்ததுமுதல் மற்றொருவருக்கென்றே வளர்த்துவரப்படுகின்றனள்.

(தொடரும்.)

உ

திருச்சிற்றம்பலம்.

"தென்புலத்தார்" என்னுந்

திருக்குறளாராய்ச்சி.

செந்தமிழ் ௭-ந்தொகுதி ௯-ம் பகுதியில் "திருவள்ளுவரைப் பற்றிய சில குறிப்புகள்" என்னுந்தலைப்பின்கீழ், பத்திராசிரியரவர்கள் எழுதிய விஷயங்களையும், அவற்றுட்சிலவற்றைக் கண்டித்துச்சென்ற வைகாசிமாதத்துப்பத்திரிகையில் "திருவள்ளுவர் பரிமேலழகருரை" என்னுந்தலைப்பின்கீழ், ஸ்ரீமத்-அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள் எழுதியவற்றையும், இவர்களெழுதியவற்றுட்சிலவற்றிற்கு மறுப்பாக இப்பகுதியிலேயே "பத்திராசிரியர் குறிப்பு" என்னுந்தலைப்பின்கீழ் மீட்டும் பத்திராசிரியரவர்கள் எழுதியவற்றையுங்கண்ணுற்றேன். இவ்வியவகாரங்களாற் பலவுண்மைவெளிப்பட்டு ஆக்ஷேபத்துக்கிடமின்றியிருப்பினும் 43-வது குறளுரையின்மட்டும் இன்னுஞ் சிறிதாக்ஷேபத்துக்கிடமிருப்பதாக எனக்குத் தோன்றுகிறது. அது வருமாறு.—

பத்திராசிரியரவர்கள் "௪௩ - வது குறள் விசேடவுரையிலே 'விருந்தொக்கறானென்றாங்கு' என்பதன்கணுள்ள, 'என்ற என்பது விகாரமாயிற்று' என்பது அச்சுப்பிரதியிற்காணப்படுகிறது. இவ்வாக்கியம் ஏட்டுப்பிரதிகளிலில்லை. ௨௭-ம் குறளில் "சுவையொளியூறோசை நாற்றமென்றைந்தின்" என்புழி 'என்றைந்தின்' என்னுமிடத்தும் இவர் இங்ஙனமெழுதாமைகாண்க" (தொகுதி - ௭. பக். ௨௩௯.) எனக்கூறி, இங்ஙனமெழுதாமைக்குக் காரணங்காட்டாது விடுத்தார்கள். இதனை மறுத்து ஸ்ரீமாந் - பிள்ளையவர்கள் (பக்கம் - ௩௭௬.) எழுதியதைப் பத்திராசிரியரவர்கள் அங்கீகரித்துவிட்டதாக அவர்கள் எழுதிய குறிப்பினாலே விளங்குகின்றது.

பிள்ளையவர்கள் 'விருந்தொக்கறானென்றாங்கு' என்பதிலுள்ள 'என்றாங்கு' என்பதனை, 'என்ற+ஆங்கு' எனப்பிரித்து, 'என்ற' என்பது அகரவீற்றுப்பெயரெச்சமெனக்கொண்டு— 'பாலொடுதேன்கலந்தற்றே' என்பதனுரையிலே, 'கலந்ததற்றென்பது விகாரமாயிற்று' என்றவர், இங்கே 'என்ற' என்பது விகாரமாயிற்று என்னாரோ? இவ்வாக்கியம் நிற்றலால் வரும் குற்றம் யாது? 'அரங்கின்றிவட்டாடியற்றே' என்புழி வாளா சென்றவர் 'இறந்தாரையெண்ணிக்கொண்டற்று' என்புழிக் 'கொண்டால் என்னும் வினையெச்சங்கொண்டு எனத்திரிந்து நின்றது' என்று கூறவில்லையா? 'வட்டாடியற்று' என்பதும் 'கொண்டற்று' என்பதும் ஒருவகை முடிபுடையனவல்லவா? ஒருவகை முடிபுடையவைகளை வேண்டுங்கால் தனித்தனிகூறலும் முன்னாக பின்னாக ஒன்றிற்கூறி மற்றைய உய்த்துணரப்படும் என்று வாளாவிடுதலும் இவர்க்கு வழக்கென்க. சில பிரதிகளிலில்லாமை சில பிரதிகளிலிருத்தலை விலக்

காது பொருந்துமாறு அவசியம், தமிழ்நாட்டிலுள்ள ஏட்டுப்பிரதிகளும் பலவகை. அவையெல்லாம் ஒருவர் பார்வைக்கு அகப்படல் அரிது" என்கிறார்கள்.

'என்றாங்கு' என்பதனை 'என்று+ஆங்கு' எனப்பிரித்து 'என்று' என்பது எண்ணுப்பொருண்மை குறித்துவந்த இடைச்சொல் எனக்கொள்ளின் பொருளும் சந்தியிலக்கணமும் செவ்வனே யமைவு பெறுகின்றன. புணர்ச்சிவிதிகொள்ள இயலா திடர்ப்படுமிடத்து விகாரங்கொள்ளலாமேயன்றி, யாண்டும் விகாரங்கொண்டு விடுதலாகாது. ஆசிரியர் பரிமேலழகர் இதனை விகாரமெனக்கொள்ளின் இதுபோன்று முன்னுள்ள ௨௭-ம் குறளுரையிலேயே ('புகழ்புரிந்தில்லிலோர்க்கில்லை' என்னும் ௫௯-ங் குறளுரையிலே 'புரிந்தவென்னும் பெயரெச்சத்தகரம் விகாரத்தாற்றொக்கது' என்றெழுதியதுபோல) என்ற என்னும் பெயரெச்சத்தகரம் விகாரத்தாற்றொக்கது என விளக்க எழுதிவிட்டு இவ்விடத்து 'என்ற என்பது விகாரமாயிற்று' எனச்சுருங்க எழுதுவாரேயன்றி, ஆண்டு வாளாவிடுத்து ஈண்டுச்சுருங்கவெழுதிப்பின் இவைபோன்ற 'வினைபகையென்றிரண்டினெச்சம்' என்னும் ௬௭௪-ம் குறளினும் வாளாவிடுத்துச்செல்லார். பிள்ளையவர்கள் 'முன்னாக பின்னாக ஒன்றிற்கூறி மற்றையவுய்த்துணரப்படுமென்று வாளாவிடுதல் இவர்க்கு வழக்கு' என்றார்களேனும் அவர்கள் காட்டியவுதாரணத்தில் அது புலப்படவில்லை. 'வட்டாடியற்று' என்பதும் 'கொண்டற்று' என்பதும் ஒருவகை முடிபுடையனவாயினும் 'இறந்தாரையெண்ணிக்கொண்டற்று' என்புழி 'கொண்டால் என்னும் வினையெச்சம் கொண்டெனத்திரிந்துநின்றது' (குறள் - ௨௨.) என்று கூறினவர், பின் 'அரங்கின்றிவட்டாடியற்றே' (குறள் - ௪0௧) என்புழி வாளாசென்றனரேயன்றி 'அரங்கின்றிவட்டாடியற்றே' என்புழி வாளாசென்றவர் 'இறந்தாரையெண்ணிக்கொண்டற்று' என்புழி 'கொண்டால் என்னும்........ திரிந்துநின்றது' என்று கூறவில்லையாதலால் 'பாலொடுதேன்கலந்தற்றே' என்பதனுரையிலே 'கலந்ததற்றென்பது விகாரமாயிற்று' (குறள் - ௧௧௨௧) என்றதும், 'சினத்தைப்பொருளென்று கொண்டவன் கேடு, நிலத்தறைந்தான் கைபிழையாதற்று' (குறள் - ௩0௭.) என்னுங்குறளுரையில் * 'பிழையாததற்று என்பது குறைந்துநின்றது' என விளங்கவெழுதியிருத்தலை நோக்கின்றதாகலின் பிள்ளையவர்கள் சொல்லியவண்ணம் 'ஒருவகை முடிபுடையவைகளை வேண்டுங்கால் தனித்தனிகூற'லும் அதற்குள்ளேயே சிறிதுய்த்துணரவைத்தலுமாமேயன்றி இவ்விடத்திற்குப் பொருந்தாது. ஆகவே அவர்கள் காட்டிய உதாரணங்களும் என்கொள்கையை (எழுதின் ௨௭ - ங் குறளில் எழுதவேண்டுமென்பது) வலியுறுத்துமேயன்றி ௪௫-வது குறள் விசேடவுரையிலே 'என்ற என்பது விகாரமாயிற்று' என்று ஆசிரியர் பரிமேலழகர் கூறியிருப்பார் என்பதற்கு ஆதாரமாகா.

இனி 'என்றாங்கு' என்பதனை 'என்று+ஆங்கு' எனப்பிரித்தாற்செவ்வனே யமைவுபெறுமாறும், இதுவே இலக்கணநூலுரையாசிரியர்களுக்கும், ஆசிரியர் பரிமேலழகருக்குங்கருத்தாமென்பதுங்காட்டுகின்றேன். "என்றுமெனவுமொடுவுந்தோன்றி, யொன்றுவழியுடையவெண்ணினுட் பிரிந்தே" (தொல். சொல். ௧௨௯.) என்னுஞ் சூத்திரவுரையிலே ஆசிரியர் சேனாவரையரும், நச்சினார்க்கினியரும் 'வினைபகையென்றிரண்டினெச்சம்' என்னுங்குறளையே 'என்று' என்னுமிடைச்சொல் ஓரிடத்துநின்று எண்ணினுட்பிறவழியும் பிரிந்து சென்று ஒன்றியதற்கு உதாரணமாகக்காட்டியிருக்கிறார்கள். நன்னூலுரைகாரர்களும் அதற்குதாரணமாக அக்குறளையே காட்டியிருக்கிறார்கள். இதனால் அவர்கள் கருத்தெல்லாம் 'வினைபகையென்றிரண்டின்' என்னுங் குறளிலுள்ள 'என்று' என்பது எண்ணுப்பொருண்மை குறித்துவந்த இடைச்சொல் என்பதேயாம். எனவே இதுபோன்ற ௨௭, ௪௫-ம் குறள்களிலுள்ள 'என்று' என்பதனையும், எண்ணுப்பொருண்மை குறித்துவந்த இடைச்சொல் எனக்கொள்ளுதலே பொருத்தமுடைத்தாம். இனி, "அவற்றின்

---

* 'பிழையாததற்று' என்பது ஏட்டுப்பிரதிபேதம். 14, 149-ம்குறள்களிலே கொண்டிருத்தல் போல, குறைத்தல் விகாரங்கொள்ள இப்பாடமே பொருத்தமுடைத்தாம். 'பிழையாதவற்று' என்பது 'பிழையாதற்று' என்றாயினதாக ஆசிரியர் பரிமேலழகர் கருதியிருப்பின், ௫௧-ங்குறளுரையிற் கூறியதுபோலத் 'தொகுத்தல் விகார' மென்பர்.

வரூஉம் எண்ணினிறுதியும்” (தொல். சொல். ௨௯௦.) என்னுஞ் சூத்திரத்தில், “‘பெயர்க்குரிமரபிற்செவ்வெண்ணிறுதியும்” “யாவயின் வரினுந்தொகையின்றியலா” என்பதற்கு ஆசிரியர் சேனாவரையர் ‘நிலனீரெனவிரண்டும்’ என்றுதாரணங்காட்டியிருத்தலின் மேலே கண்ட (௨௭, ௪௩, ௯௭௪.) மூன்று குறளினும் வந்துள்ள என்றென்பது ‘பெயர்க்குரிமரபிற்செவ்வெண்ணிறுதியிற் பெயர்ப்பொருண்மைகுறித்துநின்ற இடைச்சொல் எனக்கோடலும் ஒன்று. எவ்வாறு கொள்ளினும் இடைச்சொல்லெனத்தடையில்லை. ஆசிரியர் பரிமேலழகரும் இதனை இடைச்சொல் என்றே கொண்டாரென்பது, எனவென்னும் இடைச்சொல் வந்துள்ள ௧௬௮, ௧௦௨௨-ம் குறள்களின் உரைகளோடு ௨௭, ௪௩, ௯௭௪-ம் குறள்களின் உரைகளை ஒப்புநோக்குவார்க்கினிது விளங்கும்.

மேற்கண்ட காரணங்களாலும், தமிழ்ச்சங்கத்திலே பல இடங்களினின்றும் வந்துள்ள ஒன்றோடொன்றொவ்வாத ஏட்டுப்பிரதி எட்டினுள்ளும் இல்லாமையானும் ‘என்ற’ என்பது விகாரமாயிற்று’ என்பது பரிமேலழகரெழுதிய வாக்கியமன்றெனக்கோடல் பொருந்துமாறு கண்டுகொள்க.

அ. கோபாலையர்.

உ

திருச்சிற்றம்பலம்.

தனிச்செய்யுட்கோவை.

(முற்றொடர்ச்சி.)

சைவ சமயஞ் சமயமெனி லச்சமயத்
தெய்வம் பிறைசூடுந் தேவென்னி—லைவரைவென்
றானந்த வெள்ளத் தழுந்துவதே முத்தியெனில்
வானங்காள் பெய்க மழை.

தருமபுரவாதீனத்திலிருந்த ஒரு சின்னப் பண்டாரச்சந்நிதி தமது வயலுக்குத் தண்ணீரின்மையால் வருத்தமுற்று இவ்வெண்பாவைக்கூற வுடனே மழைபெய்ததென்பர்.

ஈசன் பெலவீன னென்றக்கா லாலயத்தின்
மோசம்வரு மென்று மொழியலா—மீசன்றா
னாக்குவதுஞ் செய்தே யழிப்பதுவுஞ் செய்தக்கா
னோக்குவதென் னாம்பிறரை நொந்து.

தருமபுரவாதீனத்தில், சமாதியைச் சோழராசன்கண்டு கும்பிட்டுடனே கோவிலன்று சமாதியென்றுதெரிந்து இடித்துவிடச்சொல்ல இடிக்கும்போது, இவ்வெண்பாவை அக்காலத்திருந்த தேசிகர் கூற இடித்த இடத்திலிரத்தம் புறப்பட விட்டோடினரென்றும், ஈதறிந்தரசன் வேண்டிக்கொண்டு கிராமங்களைத் தானஞ்செய்தானென்றும் கூறுவர்.

கனக்கும் பொதிக்கு மெருதுக்குந் தன்னிச்சை கண்டதுண்டோ
வெனக்கு முடற்கு மெனதிச்சை யோவிணங் கார்புரத்தைச்
சினக்குங் கமலையுண் ஞானப்பிர காச சிதம்பரவின்
றனக்கிச்சை யெப்படி யப்படி யாக வுரைத்தருளே.

இக்கவி, தருமபுர ஆதீனமுதற் குரவராய ஞானப்பிரகாசதேசிகர், ஞானசம்பந்ததேசிகருக்கு உபதேசித்தருளிய பின்னர், உன்னிச்சைப்படிக்குச் செல்லலாமென விடைகொடுத்தருளியபோது ஞானப்பிரகாசதேசிகர் தம்மாசிரியரை நோக்கிக் கூறியது.

கோதனத்தின் முலையிலிங்கங் குருவா மேனி
    கூறியசங் கமமுகமாங் குலவுஞ் சீரம்
போதமுலை பொழிந்திடுமென் றதற்கன் பாகப்
    புல்லளித்தா லருந்தியிடா வுடலுங் கொள்ளா
நீதியினா லறிந்துமுகத் தளித்தா லெங்கு
    நிறைவாகு முத்திசிவ லிங்கத் தேனு
மேதமில்சங் கமத்தைவழி படுவோர்க் கன்றி
    யெய்தரிய சிவானுபவ மெய்தொ ணாதே.

இச்செய்யுள், பரமரகசிய சடஸ்தலத் திருவிருத்தம் என்ற நூலினுள்ளது.

(தொடரும்)

பொ. பாண்டித்துரை.

உ

திருச்சிற்றம்பலம்.

ஓரையநிவிர்த்தி.

இது, செந்தமிழ்ச்சந்தாதாரராகிய 112-நெ. N. A. S. வஜண்டு கண்டனூர், மு. ரா. ம. மகா-ா-ா-ஸ்ரீ சோமசுந்தரஞ்செட்டியாரவர்கள் "செந்தமிழ்" வாயிலாக வெளியிடுமாறு தமிழ்ச்சங்க வித்துவான்களை வேண்டிக்கொண்டபடி எழுதியது:—

திருமருகலில் அரவுதீண்டப்பட்டிறந்து திருஞானசம்பந்த நாயனாராலுய்ந்த வணிகனும் வேறு; திருப்புறம்பயத்தில் அரவுதீண்டப்பட்டிறந்து திருஞானசம்பந்த நாயனாராலுய்ந்த வணிகனும் வேறு. எங்ஙனமெனில்? பெரியபுராணம் திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் புராணத்தில் திருமருகலிலரவுதீண்டப்பட்டிறந்த வணிகன் பதிகனெனக்கூறியிருக்கிறது. பதிகன் - வழிச்செல்வோன்.

திருவிளையாடற்புராணம் வன்னியுங்கிணறுமிலிங்கமுமழைத்த படலத்தில், திருப்புறம்பயத்தில் அரவுதீண்டப்பட்டிறந்த வணிகன் மதுரையானெனக்கூறப்பட்டிருக்கிறது. பதிகவணிகனுடைய மாமன் வைப்பூரிலுள்ளவன் தாமன் எனக்கூறியிருக்கிறது. மதுரைவணிகனுடைய மாமன் கடற்கரையிலொருபட்டினத்துள்ளான் ஒரு வணிகனெனக்கூறியிருக்கிறது.

பதிகவணிகனுக்கு மனையாளாக வந்த மாமன் மகளுடன்பிறந்தோரெழுவரெனக்கூறியிருக்கிறது. மதுரை வணிகனுக்கு மனையாளாக வந்த மாமன் மகளுடன்பிறந்தோரில்லையெனக்கூறியிருக்கிறது.

பதிக வணிகனுக்கு மாமனிருக்கின்றான் எனக்கூறியிருக்கின்றது. மதுரை வணிகனுக்கு மாமனிறந்துவிட்டான் எனக்கூறியிருக்கின்றது.

பதிக வணிகனுக்குரிய மாமன் மூத்தபெண்ணை மருகனுக்குக் கொடுப்பதாகச்சொல்லியிருந்தும் பிறனுக்குக் கொடுத்துவிட்டான். ஏனைப்பெண்களையும் பிறருக்குக்கொடுத்துவிட்டான். அதனால் வருந்தும் அப்பதிக வணிகனுக்காதரவுசெய்து பிதா முதலோரை மறைத்து அவனுடன் சார்ந்துவந்தேன் என மணமகள் கூறியதாகக் கூறியிருக்கிறது. மதுரை வணிகனுக்குரிய மாமன் முன்றவமிருந்து பெற்றவொருமகளை முதன்மணமுடித்த மருகனுக்கே கொடுப்பேனெனக் கிளைஞரறியவுரைத்துச் சிலநாட்சென்றிறந்தான். அவன் மனையாளுமுடனிறந்துவிட்டாளெனக்கூறியிருக்கின்றது.

பதிகவணிகன் பிதாமுதலோரை மறைத்துவந்த மாதுடன் வேறு துணையின்றி வந்தானெனக்கூறியிருக்கிறது.

மதுரை வணிகன் மாமனிறந்ததற்கு வந்திருந்து மதுரையிற் போய் மணஞ்செய்வேனென்று தனக்கு மணஞ்செய்ய வைத்திருந்த மாதுடன் மாமன்பொருள்களையுமெடுத்துக்கொண்டு பரிசனங்களுடன் பிரயாணஞ்செய்துவந்தான் என்று கூறியிருக்கிறது.

பதிகவணிகன் திருமருகற்கோயிலின் புறத்தேயொருமடத்திலிரவு துயிலும்போது பாம்புகடித்திறந்தான் எனக்கூறியிருக்கிறது. மதுரைவணிகன் புறம்பயத்துக்கோயிலிற் கூவல் நீராடி வன்னிமரத்தின் பக்கத்திலன்னஞ்சமைத்துண்டு கோயிலின்பக்கத்துப் படியிற் றலைவைத்துத்துயிலும்போது பாம்புகடித்திறந்தான் எனக்கூறியிருக்கிறது.

பதிகவணிகனிறக்க மாது தனியேபுலம்பினாள். மந்திரவாதிகள் வந்து பரிகாரஞ்செய்தார்கள் விட்டுநீங்கவில்லை; அம்மாது மருகற்பிரானை வேண்டிப் புலம்பினாள் என்று கூறியிருக்கிறது. மதுரை வணிகனிறக்க மாதுமயங்கிப் பரிசனங்கள் தேற்றப்பலவாறு புலம்பினாளெனக் கூறியிருக்கிறது.

பதிகவணிகன் மனையாளாகவந்த மாது சிவபிரானைவேண்டிப் புலம்புமோசை ஆலயத்திற் சுவாமியைத் தெரிசிக்கவந்த திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் திருச்செவியிற்சார அவர் மாதினருகுவந்து வினவி வரலாற்றைத்தெரிந்து மருகற் பெருமானைவேண்டி, "சடையாயெனுமால்" என்னு முதற்குறிப்புடைய திருப்பதிகம்பாடி விடத்தாலிறந்தவனை யுய்வித்து இருவருக்கு மணஞ்செய்வித்து விடைகொ

டுத்தருளி அம்மருகலிற் சிலநாளிருந்தார் எனக்கூறியிருக்கிறது. மதுரைவணிகன் மனையாளாகவந்த மாது பலவாறு புலம்புமோசையை அங்கோர் மடத்திலெழுந்தருளியிருந்த திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் கேட்டு ஈதென்னென ஆள்விட்டுத்தெரிந்து, கோயிற்குவந்து மாதினை வினவி வரலாற்றைத்தெரிந்து இறந்தவன் பக்கத்துவந்து பதிகம் பாட[illegible] அவன் சரீரமெல்லாம் அமிர்தவுருவாகும்படி திரு[illegible]சாத்தியருளினார். உடனே விடமோடிவிட அவனுயிர்த்தெழுந்தான். பின்பு திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் அவனை நோக்கி இங்கே மணமுடித்துக்கொண்டுபோவென்றருள, அவன் குலத்துரியோரின்றிச் சாக்ஷியுமின்றி யெவ்வாறு மணஞ்செய்வதென விண்ணப்பஞ்செய்தான். நாயனார் உன் மாமன் இம்மாதையீன்றபோதே யுனக்கெனக்கூறியது சுற்றத்தாரறிவர். ஈதன்றி, இந்த வன்னியுங்கிணறு மிலிங்கமுஞ்சாக்ஷியாம். ஆதலாலெம்முறை கடவாது மணஞ்செய்யென்றருள, அவனவ்வாறே மணஞ்செய்து விடைபெற்று மதுரையடைந்தான் என்று கூறியிருக்கிறது.

திருமருகலிற்சுவாமி பெயர் மாணிக்கவண்ணமகேசுவரர் என்பர். திருப்புறம்பயத்திற்சுவாமி பெயர் சாக்ஷிநாதர் என்பர்.

மதுரை வணிகனுக்கு முந்திய மனைவியாற்பின்பு விவாதநேரிட்டமையால், புறம்பயநாதர் புறம்பயத்திற் சாக்ஷியாயிருந்ததன்றி மதுரையிலுஞ் சாக்ஷியாய் வந்திருந்தனர். அக்காரணத்தாலவர் சாக்ஷிநாதரெனப்பெயர்பெற்றனர். பதிகவணிகனுக்கு அவ்வாறு விவாதம் நேரிடவில்லை. அக்காரணத்தாலே மருகல்நாதரொருபெயர் பெறவுமில்லை.

இங்ஙனம் வரலாறென்றினுக்கொன்று வேற்றுமையாயிருப்பதனாலே திருமருகலில் விடத்தாலிறந்துய்ந்து மணஞ்செய்த வணிகனும் வேறே. திருப்புறம்பயத்தில் விடத்தாலிறந்துய்ந்து மணஞ்செய்த வணிகனும் வேறேயெனத்தெளிக.

இங்ஙனமாயின், திருவிளையாடற்புராணத்துட் கூறியதுபோலப் பெரியபுராணத்துள், திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் புராணத்திலே திருப்புறம்பயத்திலும் விடத்தாலிறந்த வணிகனையுய்யச்செய்தருளியது கூறவில்லையெனில், அந்நாயனார் காஞ்சிபுரத்திற் கெழுந்தருளியிருந்தபோது திருவேகம்பம் திருநெறிக்காரைக்காடுமுதலிய தலங்களை வணங்கித் திருமேற்றளிமுதலான தலங்களையும் வணங்கினாரென்று கூறியிருக்கின்றதேயன்றித் திருமேற்றளியிற் பதிகம் பாடினதாகவும் ஏதேனுமொருவிஷய நிகழ்ந்ததாகவுங் கூறவில்லை; காஞ்சிப்புராணத்துட்பதிகத்தில், "மாதர்மேற்றளியிற்கௌணியன் பாட்டால் மால்சிவனுருவுபெற்றதுவும்" எனக்கூறிப்பின்பு திருமேற்றளிப்படலத்தில் அந்நாயனார் திருப்பாடலான் மால் சிவனுருவம் பெற்றதைக் கூறியிருக்கின்றது.

இன்னும் அந்நாயனார் திருவாவடுதுறையடைந்து தெரிசித்து வசித்துப்பொற்கிழி பெற்றிருக்கு நாளிலே, ஒருநாட்கோயிலிற்றெரிசிக்க வருங்காற் பலிபீடத்திற்குச் சமீபித்தபோது இங்கே தமிழ் மணங்கமழ்கின்றதேயென்று திருவாய்மலர அங்குள்ளார் பலிபீடத்தைப்பேதிக்குமுறைப்படி பேதித்துவைத்தனர். நாயனார் உற்றுநோக்கி அதனடியிலே சேமித்திருந்த திருமந்திரத்தைத் திருக்கரத்தாலெடுத்துச் சிவபிரான்றிருவுளப்படி திருமூலநாயனார் இங்கே மூவாயிரவருடஞ் சிவயோகத்தமர்ந்திருந்து ஒவ்வொருவருடத்திற்கொவ்வொரு திருப்பாடலாகச்சரியை கிரியையோகஞானங்களை வகுத்துத் தமிழ்நாட்டார்க்குபயோகமாகும்படிசெய்து திருமந்திரமெனத்திருவாய்மலர்ந்த அதனையுலகமெல்லாம் பரவச்செய்தருளினரென்னுங்கதையுள்ளது. இதனை அந்நாயனார் புராணத்துட்கூறவில்லை. இதனைத்தலமுறையாகப்பதிப்பித்திருக்கின்ற தேவாரத்திற்காண்க. இவ்வாறெத்தனையோ கதைகள் பெரியபுராணத்திற்கூறவில்லை. சேக்கிழார் ஆயிரக்கான்மண்டபத்திருந்தருளிப் புராணஞ்செய்யுங்காற்றிருவருளெம்மட்டுத்தோற்றுவித்ததோ அம்மட்டே செய்யுள் புனைந்தியற்றியருளினரன்றி, யோசித்தாவது விசாரித்தாவது செய்யுளியற்றிலரெனக்கொள்க. இக்கருத்தைச் சேக்கிழார் நாயனார் பிள்ளைத்தமிழிற் சிறுபறைப்பருவத்தில், "நந்துபுராணமெவ்வளவாயிற்றென" என்னுமுதற்குறிப்புடைக் கவியிற்காண்க.

சே. ரா. சுப்பிரமணியக்கவிராயர்,
சைவநூற்பரிசோதகர்.

உ

திருச்சிற்றம்பலம்.

பெரியபுராண அரும்பத விளக்கம்.

———:o:———

[பழைய ஏட்டினின்று எடுக்கப்பட்டது.]

(முற்றொடர்ச்சி.)

(௧௦௪௮) ஆண்டெதிரணைந்து - ஆண்டெதிரே அணைதலால்.

(௧௦௪௯) உடனே சமைக்குந்தொழிலையுடைய சிறியசோறு முதலான உணவுகளைப்பயின்று.

(௧௦௫௨) நீரிற்சபதங்கூறினபின். மருப்புநீள்கழுக்கோலின் - கொம்பால் நீண்டகழுவில். சாதனம் - விபூதிருத்திராக்ஷங்கள்.

(௧௦௫௫) முல்லையரும்புபோன்ற வெள்ளியபற்களையும், அரும்புபோன்ற முலைகளையுமுடைய பூம்பாவையோடு.

(௧௦௫௭) சிவநேசரன்புபொருந்தும் ஆசையாலளித்தஉரிமையேயன்றி அழகுவிளங்குகின்ற நீர்வளஞ்செறிந்த சீகாழித்தலைவருக்கு இது இயையாதென்பதை உட்கொண்ட பான்மையானது ஒப்பற்ற பற்களையுடைய சர்ப்பக்குட்டியாய் முன்வந்ததுபோல.

(௧௦௫௮) மௌவன்மாதவி - மௌவலாகிய மல்லிகை, முல்லை. கவரும்பொழுதில் மான்போன்ற ஒள்ளியகண்களையும், நறியநுதலையும், செறித்தநெறித்தகூந்தலையும், கொவ்வைக்கனிபோன்ற வாயையுமுடைய அப்பூம்பாவையினது அரும்புபோன்ற விரலில்.

(௧௦௬௧), தொடர்ந்தசெய்வினையில் தனித்தனியே தொழிலையுடையவராய்ச்சூழ்வார்.

(௧௦௬௨) உவமையற்றனவாகிய அளவிறந்த மருந்துகளைச்செய்யவும். வலிந்துபொருந்துகின்ற ஏழுவலியவேகங்களும் முறையே பொங்கிப்பெரிய விலாசித்தகண்களையுடைய பூம்பாவையின் தலைமேற்கொண்டு.

(௧௦௬௩) பொருந்திய காருடவித்தகர்கள் இது ஊழென்று ஒழியும்போது.

(௧௦௬௫) முரசடித்த மூன்றுநாளெல்லையுள் ஒருசேர இராசவைத்தியருட்பட.

(௧௦௬௬) காரின்மல்கிய - முகிலால் நிறைந்த. தழலிடையடக்கி - அக்கினியில் தகனஞ்செய்து.

(௧௦௬௭) புடைபெருத்த - பக்கம்பெருத்த.

(௧௦௬௮) பொன்னையும், முத்தையும் பிற ஆபரணங்கள் பலவற்றையும், பொலிவாகிய வஸ்திரத்தையுமணிந்து. அறிஞர்மிருதுவாயதென்றுகூறும் அன்னத்தூவிபோன்ற பஞ்சுமெத்தையின்மேல்.

(௧௦௬௯) பாலினோர்தருபோனகம் - பாலன்னம்.

(௧௦௭௧) நெருங்கிய நெடியபந்தரிட்டு, துகிலால்மேற்கட்டிசெய்து.

(௧௦௭௩) குறைவறப்பேவி - குறைவில்லனவற்றை அனுப்பி.

(௧௦௭௪) காயல்சூழ் - உப்பளஞ்சூழ்ந்த.

(௧௦௮௦) உண்டாக்கப்படும் இனிய அருளை.

(௧௦௮௧) ஒருப்பட்ட நல்லறிவினையுடைய சிவநேசரே.

(௧௦௮௩) மூடப்படும் பலமணிகளழுத்திய சிவிகையினுள்வைத்துத் தாம் முன்னரேசெல்ல.

(௧௦௮௪) சிவபிரானுடைய அபிமுகத்திற் பாதகாணிக்கைபோல.

(௧௦௮௭) உயர்ச்சியையுடைய நல்வழிப்படுத்திட அந்நன்மைத்தன்மை அந்த எலும்போடு தொடர்ச்சியாமென்று கிருபாநோக்கால்.

(௧௦௮௮) அவர் என்றது அவ்வடியவரை.

(௧௦௮௯) "மட்டிட்ட" என்னும் நல்லபதிகத்தில், "போதியோ" என்னும் அந்த மெய்த்திருவாக்கெனும் அமுதத்தால்.

(௧௦௯௦) அத்தன்மையால் அத்திருப்பாட்டைப்போல ஏனைத் திருப்பாட்டுக்களினும் முறையேகழிந்த ஆயுவும்வடிவும் பொலிவுடனிரம்பி ஒழிந்த அக்குடத்தடங்கி முன்னரே இருந்தெழுதற்குமுன்னர் ஆளுடையபிள்ளையார் பின்னர்ச்சமண்பாட்டை அருளுவார்.

(௧௦௯௧) செங்கை - செங்கையானது.

(௧௦௯௪) விரைகொள் பூவருமாரி எனக்கூட்டுக.

(௧௦௯௫) பங்கம் - அனுசிதம்.

(௧௦௯௬) கன்னிகையினழகைக் கண்களான்முடியக்காணாராய் முன்னரே பொருந்தக்கண்டோருக்கெல்லாரங் கூட்டமான கரியகூந்தற்பாரமானது, நிலையானமுகமாகிய தாமரையில் கரியவண்டானது படிந்த ஒழுங்குநெருங்கின சூழலைப்போலிருண்டுதோன்ற.

(௧௦௯௭) பக்கத்தே அழகியவண்டுமொய்த்த குளிர்ந்தமலர் வைத்துமுடித்த அளகபந்தியையும் தேன்கமழ்கின்ற மாலைசேரும் அழகிய நெற்றியினது விளக்கத்தையும் பார்த்தால் பூங்கொடிபோல்வாளுக்கு அழகாகிய மழையைப்பொழியுமாறு முகிற்கீழிட்ட வளைந்தவானவில்லினது வளர்கின்ற ஒளியினழகுவாய்க்க.

(௧௦௯௮) புருவமாயமென்கொடிகள் முன்னரே சிவனுடைய நெற்றிநாட்டத்தக்கினியில் நீறாய் அருளைப்பெற உண்டாகும் மன்மதனுடைய போரிலெழும்வில்லொன்றும், சேமவில்லொன்றுமாக வருகின்ற இரண்டுபெரிய விற்களை முன்கொண்டெழுந்தாற்போல, நிகர்க்க - ஒன்றோடொன்று ஒத்திருக்க.

(௧௦௯௯) கடைந்த இரத்தினத்தின் செப்பமான வளர்கின்ற ஒளிபொருந்திய மேனியையுடையாளது இரண்டு கண்களினழகைக் காணில், அழகியமுகமாகிய சந்திரனது தண்ணளிப்பரந்த சோதிவெள்ளத்திலே தடுத்தலில்லாத நீளமான அழகியநிறத்தையுடைய கரிய இமையையும் செம்மையையுமுடைய கயலிரண்டை நிகர்த்துலாவ.

(௧௧௦௦) படம்போலவளர்கின்ற அல்குலையுடைய பூம்பாவையின்மூக்கும் பவளம்போலும்வாயும் பொருந்திய பேரொளியிற்றோன்றும் அழகைநோக்குவோர்களுக்கு அழகியநிறத்தையுடைய இந்திரகோபத்தைக்கண்டு அதனை வெளவுமாறுதாழ்கின்ற அழகியநிறத்தையுடைய ஓந்தி அணைவதாகும் அழகைக்காட்ட.

(௧௧௦௧) இளமையாகிய மயில்போன்ற சாயலையுடைய பெண்ணினது குண்டலம்பொருந்திய காது, வளமிக்கஅழகாலும், வடிந்த தாளையுடைமையாலும், விளங்குமொளியையுடைய மகரகுண்டலம் பொருந்திய தன்மையாலும், அளவில்லாத சிறப்பையுடைய மன்மதனது இரண்டு வெற்றிக்கொடியை அனையவாக. இனிச்சிலேடைவகையால், மன்மதனுடைய வெற்றிக்கொடிக்கியையக்கூறுங்கால், தாள் - காம்பு எனவும், மகரவேறு - தீட்டப்பட்ட மகரவேறு எனவுங் கொள்க.

(௧௧௦௨) ஒளிபொலிகின்ற முத்தக்கோவைவிளங்கிய கழுத்தானது நல்லபெரிய சங்கமென்னும் நல்லநிதியொன்று தன்மீதே அழகமைந்தமுகமாகிய பதுமநிதி பூக்கத்தோன்றும்படி நீலகண்டர் தந்தஅருளுக்கு அடையாளத்தைக்காட்ட.

(௧௧௦௩) அக்கினியைப்போலவிரிகின்றகாந்தளின் மெல்லியபூவைத் தலையிலே தொடுத்திசையுமாறுவைத்துத் திரட்சிபெறச் சுருக்கும் வெட்சிமாலையோ, வேறு உவமைதெரிந்தால் கரியநெடிய கயல்மற்சம்பொன்ற கண்களையுடைய பூம்பாவையினது கைகளாற் காந்திவெள்ளம் அருகிலிழிந்தனவோஎன்னும் அதிசயம்பொருந்திய வடிவையுடையனவாய்க் (கைகள்) தோன்ற.

(௧௧௦௪) அழகுவிளங்கும் மார்பிற்பொங்குகின்ற ஏந்தப்படும் இளமையான ஸ்தனங்கள், சர்ப்பத்தின் கருமைபொருந்திய நஞ்சை நீக்கும் சீகாழித்தலைவருடைய பார்வையால் நிறைந்ததிருவருளில் நிரம்பி அடங்கிய அமுதகும்பத்தினது சீர்வளங்கும் முகிழ்த்தலைக் காட்டும் அழகோடு விளங்கித்தோன்ற.

(௧௧௦௫) அழகியமேகலையையணிந்த கொடிபோல்வாளது மருங்கின் மீதுள்ளரோமரேகையானது மன்மதனென்னும் வேடன் உந்தியில் மறைந்துஸ்தனங்களாகிய சக்கரவாகப்புட்களை அகப்படுத்தநேரிதான வரிசையான நீண்டகண்ணியைச்சேர்த்த சலாகையைத்தூக்கியதுபோலும்.

(௧௧0௬) முறுக்கவிழ்ந்த மலர்வைத்துமுடித்த மிருதுவான கூந்தலையுடைய பெண்ணமுதனையாளது மாற்றுயர்ந்தபொன்னாபரணம் வளருகின்ற அல்குலானது தங்களுடைய சர்ப்பஞ்செய்தபிழையால் அஞ்சி இரத்தினம்விளங்கும் காஞ்சியென்னுமாபரணத்தைச்சூழ்ந்த அழகையுடைய அல்குலாய் நாகலோகத்தை ஆளுகின்ற சேடன்படத்தை விரித்தாடலைக்காட்ட. அரவுசெய்தபிழை - பூம்பாவையைக்கடித்தகுற்றம்.

(௧௧0௭) வருகின்ற மயிலஞ்சாயலையுடைய பூம்பாவையினது பொன்போன்ற தொடைகளினழகானது யானையினது இளமையான பிடியின்கையைவென்று வாழையின்மிருதுவான தண்டைக்காட்டப் பார்ப்பவர்களுக்கு மேன்மையையுடைய செழுமையான முழந்தாளினழகானது செய்யப்பட்ட பொற்பந்துபோலப்பொலிந்து ஒளிவிளங்கின.

(௧௧0௮) விரிந்தபூக்களை வைத்துமுடித்த கூந்தலையுடைய பூம்பாவையின் கணைக்கால்களானவை, மன்மதனது அம்பறாத்தூணியே போலும். அழகின் மேன்மையைப் பொருந்தப்பொருந்திய மாற்றுயர்ந்தபொற்றராசுத்தட்டின் அழகைவென்று எந்நாளுஞ்சித்திரகாரர்க்கெழுத இயலாத பரட்டினெளிவைப்பொருந்தி உயர.

(௧௧0௯) கற்பகமீன்ற அழகையுடைய விரும்பத்தகும் பவளச்சோதிபொருந்திய பொற்றிரளானவை வயிரப்பத்தியையுடைய பொலிவான பூங்கொத்துமலர்ந்தபோலும், நல்லபாதங்களானவை; கால், விரல், நகம் என்பனவற்றிற்குக்கொள்க.

(௧௧௧௨) பரமர்முன்பணிந்து - பரமனைமுன்னரேபணிந்து.

(௧௧௧௩) பள்ளத்தில் நீர்செல்லுமாறுபோல;

(தொடரும்.)

ஜி. சதாசிவம் பிள்ளை.

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௭.] சௌமிய ௵ ஆடி ௴ [பகுதி-௯.

திருக்குறளைப்பற்றிய கதைகள்.

(முற்றொடர்ச்சி)

ஓர் காலத்து ஒரு வித்துவான், நீண்டதூரத்துள்ள அயலூர்சென்று தாமியற்றற்பாலதோர் கருமம்பற்றித் தம்மில்லினின்றும் புறப்பட்டனர். தாம் செல்லுமூர், ஓர்வேளை உண்டுசெல்லற்குரிய தூரமாகலின், இடையில் ஒருவேளை தாமுண்ணற்கு வேண்டுமளவுள்ள அன்னத்தைப் பொதிசோறாக்கிக் கைப்பற்றிச்சென்றனர். அவ்வாறு சென்றவர், தாமுணவு கொள்ளற்கு உரிய அமையம் கிட்டியகாலத்து, அதற்குரிய இடத்தைநோக்கிச் செல்லுங்கால், மரத்தினிழலைத் தன் கரையிடத்தேயுடைய ஒரு பொய்கை எதிர்ப்படக்கண்டு, அதுவே தக்கவிடமெனக்கொண்டு, தாம் ஆகாரஞ்செய்தற்குமுன் இயற்ற வேண்டிய கருமங்களாய ஸ்நானமுதலியன செய்துகொண்டிருந்தார். அவ்வாறே அயலூர் செல்வான்கருதிச் செல்லும் வழிச்செல்வோரான மற்றொரு வித்வானும் அப்பொய்கையிடத்தே ஸ்நானமுதலியன முடித்து மிக்கபசியோடிருந்தார்; அவர் தம் பசிப்பிணி நீக்கத் தம்மிடத்துப் பொதிசோறின்மையின், அயலேவந்த வித்வான் கைக்கொண்டிருந்த பொதிசோற்றைக் கண்ணுற்று அவரிடம் இரந்துண்ணக் கருதியகாலத்துத் தாம் கற்ற—

“ஆவிற்கு நீரென் றிரப்பினு நாவிற்
கிரவி னிளிவந்த தில்.”

என்னுங் குறள் ஞாபகத்திற்கு வந்தமையால், இரத்தற்கு மனந்துணிவுபெறாது, சிந்தித்துக்கொண்டிருந்தனர். அச்சமயம் பொதிசோற்றுடன்வந்த வித்வான் தம் கருமங்களை முடித்துக்கொண்டு ஆகாரங்கொள்ளற்குப் பொதியை அவிழ்த்தனர். அதுசமயம் பசியோடிருந்த வித்வான் நேரே இரத்தற்குத் துணிவுகொண்டிலரேனும், தம்மை மிகவருத்தும் பசிப்பிணியைப் பொறுக்கும் ஆற்றலிலராய் அதனைக் குறிப்பால் அவர்க்குணர்த்தக்கருதித் தாம் கற்ற,

"விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று."

என்ற குறளை அவர் செவிகேட்பச் சொல்லினர். பொதிசோறுடைய வித்வான் இதனைக் கேட்டுத் தம்மிடத்துள்ள அன்னம் தம் பசியை ஒருவேளை நீக்கற்கே போதியவளவினின்றும் அதிகமின்மையால், அதனைப் பகிர்ந்துகொடுக்கில், இருவரும் பசிநீக்கிக்கொள்ள முடியாமையாயிருத்தல் நோக்கிச் சிறிது கவன்றவராகி எதிருள்ள வித்வான் குறட்படித்தவராகத் தெரிவதால், அக்குறளையே கொண்டு அவரைச் சமாதானிக்கக்கருதித் தம் பொதிசோற்றிலுள்ள ஒரு சோற்றுப்பருக்கையை எடுத்து,

"தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்றெரி வார்."

என்ற குறளைச்சொல்லி, அவ்வொருசோற்றையும் அப்பசித்திருந்த வித்வான்மீது விழ எறிந்தனர். இதுகண்ட வித்வான், தம்மை விருந்தினராக ஏற்று உபசரிக்கவிதித்த, தாம் கூறிய "விருந்துபுறத்ததா" என்னுங்குறளையொத்த வலியுடையதாகவே பொதிசோற்று வித்வான்கூறிய "தினைத்துணை" என்ற குறளும் இருக்குந்தன்மை நோக்கி, ஒருவர் கல்வியை ஒருவர் புகழ்ந்து நட்புற்றுச்சென்றனர்.

(தொடரும்)

பெர். பாண்டித்துரை.

உ

மொழிபெயர்ப்பு.

ஒரு பாஷையிலே செய்யப்பட்டிருக்கும் ஒரு நூலை மற்றொரு பாஷையிற் கொணர்ந்து நெறிப்படச் செய்வது மொழிபெயர்ப்பு எனப்படும். மொழி - பாஷை. பெயர்ப்பு - நிலைமாற்றுதல். வழிநூலின் வகைகள் எனப்படும் தொகுத்தல் முதலிய நான்கனுள்ளே மொழிபெயர்ப்பும் ஒன்று. நன்னூலார், "தொகுத்தல் விரித்தறொகைவிரி மொழிபெயர்ப் - பெனத்தகு நூல்யாப் பீரிரண்டென்ப" என்றார். தொல்காப்பியரோ மொழிபெயர்ப்பு என்னாது, "மொழிபெயர்த்ததர்ப்படயாத்தல்" என்பர். உரைகாரர், "அதர்ப்பட என்பது, நெறிப்பட" என்றும், "நெறிப்படுதல் என்பது, அவ்வாறு மொழிபெயர்த்துச் செய்யுங்கால், அது கிடந்தவாற்றானே செய்யப்படும்" என்றும், "மொழிபெயர்த்து எனவே, பொருள்பிறழாமை பெற்றாம்" என்றும், அதற்கு உரை கூறுவர். மொழிபெயர்ப்பு என்னும் நூல்யாப்புடைய வழிநூல்களெல்லாம் முதனூற்பொருளிற்பிறழாதிருத்தல் வேண்டும் என்பதே உரைகாரர் கருத்தாகும்.

நைடதம், பாரதம், இராமாயணம், இரகுவமிசம் முதலிய இதிகாசங்களும், மச்சம், கூர்மம், காந்தம் முதலிய புராணங்களும், சிவஞானபோதம், சிவதருமோத்தரம் முதலிய ஆகமங்களும், வேதாந்தசூடாமணி முதலிய வேதாந்தநூல்களும், தர்க்கசங்கிரகம், தர்க்கபாஷை, தர்க்காமிர்தம் முதலிய நியாயநூல்களும், சோதிடநூல், வைத்தியநூன் முதலிய பிறநூல்களுமாகப் பற்பல நூல்கள் தமிழ்ப்பாஷையிலே மொழிபெயர்ப்பு எனப்படும் யாப்பமைந்த வழிநூல்களாகச் செய்யப்பட்டிருக்கின்றன. வடமொழியிலே செய்யப்பட்டுள்ள நைடதம், பாரதம் முதலியவைகளே இவைகட்கெல்லாம் முதனூல்களாகும்.

மொழிபெயர்ப்பு என்னும் யாப்பிலே வழிநூல் செய்யப்புகுவோர் தாம் செய்யும் வழிநூலினும் முதனூல்போலப் பொருள்பிறழாது விளங்கும்படி அமைத்துக்கொள்ளுதல் ஆவசியகம். நைடதம், இரகுவமிசம் முதலியவைகளை முதனூற்பொருள்களெல்லாம்

பிறழாதமைந்த வழிநூல்கள் என்பர். மொழிபெயர்த்து வழிநூல் செய்வோர், விழிநூல் செய்யப்படும் பாஷையின் நெறிக்கும், செய்யுணெறிக்கும், வழிநூல் வழங்குந் தேசநடைக்கும் இயைந்து சிறந்து பயன்படுமாறு சில பொருள்களை நீக்கிச் சில பொருள்களைச் சேர்த்தமைத்தலும் வழக்காறேயாம். முதனூற் பொருள்களை முற்றுந் தழுவாது சில பொருள்களை நீக்கியிருத்தலும், வேறு சில பொருள்களைச் சேர்த்திருத்தலும் இராமாயணம், கந்தப்புராணம் முதலிய மொழிபெயர்ப்பு நூல்களிலே ஆங்காங்குக் காணப்படுகின்றன. சுருக்கம் பற்றிச் சிலவற்றை நீக்குதலும் உண்டு. ஆயினும் அவைகள் முக்கியமான பொருணிலைகளிலே முதனூல்களோடு மாறுபடமாட்டா. முழுவதும் செந்தமிழ் நடையினும், செய்யுணடையினும் சிறந்து விளங்குகின்றன. ஆரிய நடைகளும் சொற்களும் சிலசிலவிடங்களிலே அருகிவரினும் அவையெல்லாம் அடிப்பட்டனவாகத் தோன்றலாற் செந்தமிழ் என்றே கொள்ளற்பாலன. “கடிசொல்லில்லைக் காலத்துப்படினே” என்று தொல்காப்பியருங் கூறுவர். கம்பருடைய இராமாயணத்துக்கு வான்மீகிராமாயணமும் பிறவும் முதனூல்கள் என்று சிலர்கூறுவர். கம்பரோ தமது இராமாயணத்துக்கு வான்மீகி ராமாயணமே முதனூல் என்பர்.

இராமாயணம்.

தேவ பாடையி னிக்கதை செய்தவர்
மூவ ரானவர் தம்முளு முந்திய
நாவி னாருரை யின்படி நான்றமிழ்ப்
பாவி னாலி துணர்த்திய பண்பரோ.

தேவபாடை - வடமொழி. செய்தவரானவர் மூவர் தம்முளும் - இயற்றினவராய் நின்றவர் மூவருள்ளும். முந்திய நாவினார் - வான்மீகி. பண்பு - செய்தி. உணர்த்திய பண்பு நாவினாருரையின்படி என முடிக்க.

மொழிபெயர்க்குங்கால் முதலிலே முதனூல் வாக்கியங்களைத் தவறாது மொழிபெயர்த்துக்கொண்டு பின்னர்த் தாமியற்றும் வழிநூற்குரிய பாஷைநடையை நோக்கி, வாக்கியங்களெல்லாம் அந்நடையிற்றவறாமல்-இனிது நின்று பொருள்விளக்குமாறு திருத்தி அமைத்தல் வேண்டும். வேண்டுங்கால் சொற்களைச் சேர்த்தலும், விலக்குதலும், நிலைமாற்றுதலும் பிறவுஞ் செய்தல்வேண்டும். இவையெல்லாஞ் செய்து போதல் பாஷையின் நடையமைதற்கு அத்தியாவசியகம்.

வடமொழியினின்று தமிழ்மொழியிலே மொழிபெயர்த்தியற்றப்பட்ட பண்டைச் சான்றோர் நூல்களெல்லாம் வாக்கியங்கள் நின்றவாறே நிற்கச் சொற்கண் முழுதுந்தவறாமற் பெயர்க்கப்பட்ட நூல்களல்ல. விலக்கன் முதலியன செய்வுழிச்செய்யாது முழுவதும் அமைத்தியற்றப்படுமாயின், செந்தமிழ்நடை வழுவும்! பொருளும் மயங்கும்! அழகுங்கெடும்! படிப்போரும் பயனிழப்பர்! ஆரியத் துயரப்பதீக்கிகருடைய சில நூல்களும், வேறுசில நூல்களும் வடமொழிவாக்கிய நிலையும், அடைமொழிகளும், சொற்களும் தவறாது மொழிபெயர்க்கப்பட்டுச் செந்தமிழ் நடையெல்லாஞ் சிதைந்து வேறுபட்டன. குன்றக் கூறல், மிகைபடக்கூறல் முதலிய குற்றங்களுக்கும் இடனாயின.

வடமொழியிலிருந்து தென்மொழியிலே மொழிபெயர்த்து வசன நடையாக இயற்றப்பட்ட நூல்களுள்ளே சிவஞான சுவாமிகளுடைய தர்க்கசங்கிரகமும், அதனுரையும் மொழிபெயர்ப்பு என்னும் யாப்பினால் நூலியற்றுவோர்க்கெல்லாம் தக்கபிரமாணமாய் வழிகாட்டி நிற்கின்றன. மூலத்திலே நின்றாங்கு மொழிபெயர்த்தற்கியையாத வாக்கியங்களெல்லாம் செந்தமிழ்க்குரிய நெறியமையுமாறுகொண்டு கூட்டிச் சொற்பொருளும் வழுவாமற் பெயர்த்தமைக்கப்பட்டிருக்கின்றன. வடமொழிச் சம்பந்தமாய் வரும் எடுத்துக்காட்டுக்களுக்குப் பிரதிநிதிகளாகத் தென்மொழிச்சம்பந்தமாயுள்ள எடுத்துக் காட்டுக்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. வடமொழிச்சம்பந்தமாயுள்ள எடுத்துக்காட்டுக்கள் செந்தமிழிற் கற்போருக்குப் பயன்படும் செவ்வியனவாகா.

“காதம்பரி முதலியவைகளில்” என்பதற்கு, “நன்னூல் முதலியவைகளில்” என்பதும், “கிரணாவலி முதலியவைகளில்” என்பதற்குத் “தொல்காப்பியம் முதலியவைகளில்” என்பதும், யஃ ஸர்வஜ்ஞஃ ஸர்வவித்.” என்பதற்கு, “இறைவனாவான் ஞானமெல்லா மெல்லா

முதன்மையநுக்கிரகமெலாமியல்புடையான்” என்ற சித்திப்பாகமும் பிரதிநிதிகளாகச் சேர்க்கப்பட்டன. சம்ஸ்கிருதச் சொற்களுக்கெல்லாஞ் சமமான பொருளுடைய தமிழ்ச்சொற்பிரயோகங்கள் ஈண்டேபோல வேறேயாண்டுங் காண்டலரிது. தமிழ்ச்சொற்கள் தெரியாமல் வடசொற்கள் கொண்டு பலநாளாக நாம் வழங்கிவந்த எத்தனையோ பொருள்களுக்குத்தக்க தக்க தமிழ்ச்சொற்கள் இத்தருக்கசங்கிரகவுரையிலும், சிவஞான போத மாபாடியத்திலும், சிவதத்துவவிவேகம் முதலிய நூல்களிலும் சுவாமிகளாற் பிரயோகிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றுள்ளுஞ் சில காட்டுதும்.

௧. வியுற்பத்தி - சொற்பொருள்.
௨. பிரவிருத்தி - முயலுந்தொழில்.
௩. சமுதாயசக்தி - பொதுவாற்றல்.
௪. வாக்கியம் - தொடர்மொழி.
௫. அந்நுவயம் - கொண்டுகூட்டு.
௬. விருத்தம் - மாறுகொள்வது.
௭. அசித்தம் - பேறில்லது.
௮. வியபிசாரம் - தவறுதல்.
௯. அநுமானம் - வழியளவை.
௧௦. அருத்தவாதம் - புனைந்துரை.
௧௧. விடயம் - பொருள்.
௧௨. மகாவாக்யம் - பெரும்பெயர்.
௧௩. தாற்பரியம் - சொல்லவிரும்பியது.
௧௪. ஆச்சிரயம் - பற்றுக்கோடு.
௧௫. விருத்தி - தொழிற்பாடு.
௧௬. யுக்தி - பொருந்துமாறு.

இப்படியே அநேக வடசொற்களுக்குத் தக்க தமிழ்ச்சொற்கள் பெற்றுக்கொள்ளலாம். வடநூல்களைத் தமிழ்மொழியிற் பெயர்ப்பவர் யாவரும் சுவாமிகளுடைய மொழிபெயர்ப்புக்களை அப்பியாசஞ் செய்வது செந்தமிழ்நடையமைத்தற்குக் காரணமாகும்.

தர்க்கபாஷையும் மொழிபெயர்த்து வசனநடையாகச் செய்யப்பட்ட ஒரு நியாயநூல். அது கௌதமருடைய நியாயசூத்திர வழித்தாகச் சிவகேசவ மிசிரர் என்பவர் செய்தது. அதனைத் தமிழ்ப்பாஷையிலே மொழிபெயர்த்தவர் துறைமங்கலம் சிவப்பிரகாசசுவாமி. மொழிபெயர்ப்பிலோ வடமொழிநடையும், வடசொற்களும் பெரும்பாலுந் தழுவப்பட்டிருக்கின்றன.

“நியாயநூற் பிரவேசஞ் சுருங்கிய கேள்வியினாலடைதலை மடியனையும் வாஞ்சிக்கின்ற பாலன் எவன் அவனுக்கு யுக்தியந்வித தர்க்கபாஷையை யான் சுருக்கி விளக்குகின்றேன்.”

இது தர்க்கபாஷையிலே மொழிபெயர்ப்பாய் நின்ற முதலாம் வாக்கியம். இவ்வாக்கியச் சொற்களோ நிலைமாறாது முதனூலிலே நின்றவாறு நிற்கின்றன. “பாலன் எவன் அவனுக்கு” என்பதும் வடமொழிக்குரிய நடை. பிரவேசம், யுக்தியந்விதம் முதலிய சொற்களும் வடசொற்கள். இத்தர்க்கபாஷை மொழிபெயர்ப்போடு தர்க்கசங்கிரக மொழிபெயர்ப்பை நோக்குவோர்க்குப் பற்பல வேறுபாடு தோன்றும்.

இனி, ஆங்கிலேய வாக்கியங்களைத் தமிழ்ப்பாடையிலே மொழிபெயர்ப்பவர்களும் தமிழ்நடை வழுவாது பேணியமைத்தல் ஆவசியகம்.

அ. குமாரசுவாமிப்பிள்ளை.

உ

திருச்சிற்றம்பலம்.

சைவாதீனமுந் தமிழும்.

(முற்றொடர்ச்சி)

இங்ஙனமாக வுலகோபகாரம் புரிந்திருந்தருளிய திராவிடமகாபாஷ்யகர்த்தராகிய சிவஞான முனிவரை, ஸ்ரீ-நமசிவாயதேசிகமூர்த்திக்குப் பதினாறும் பட்டத்திலிருந்து பெரும்புகழ் பரப்பிய சுப்பிரமணியதேசிகமூர்த்தி, நமதாதீன குலதெய்வம் எனப்பலருக்குமெடுத்துரைப்பதன்றித், தமது பூஜைமடத்தின் முகப்பிலே சித்திரத்தினாலே திருவுருவரைந்து அதன்மேல் ஆதீனகுலதெய்வமாகிய சிவஞான முனிவர்என எழுதிவைத்திருக்கின்றனராயின் இம்முனிவர் பெருமை பேசத்தக்கார் யாவர்; இவர்செய்தநூல்களை மாத்திரமொருவர் கற்பாராயின் அவர் சிவஞானச்செல்வரே.

பின், இம்முனிவர் மாணாக்கர் பன்னிருவருட் கச்சியப்பமுனிவர் முதலாயினோரும் உலகோபகாரமாகப் பலநூல்களைச் செய்ததன்றிப் பலருக்கும் பலநூல்களைக் கற்பித்துதவினர். அவருட் கச்சியப்பமுனிவரியற்றியருளிய நூல்கள் வருமாறு:—பூவாளூர்ப்புராணம், பேரூர்ப்

புராணம், திருவானைக்காப்புராணம், திருத்தணிகைப்புராணம், விநாயகபுராணம், வேறொருபகுப்பாக மொழிபெயர்த்த காஞ்சிப்புராணம், சென்னைவிநாயகர் பிள்ளைத்தமிழ், யமகவந்தாதி, கச்சியானந்தருத்திரேசர் வண்டுவிடுதூது, பதிற்றுப்பத்தந்தாதி, பஞ்சாக்கரதேசிகரந்தாதி முதலிய நூல்களைச் செய்ததுமன்றித் தம்மாணாக்கரிற் சிறந்த சென்னைக் கந்தப்பையருக்குண்டான குன்மநோய் நீங்கற் பொருட்டுத் தணிகையாற்றுப்படையைச் செய்தருளினர்; பின்பு பேரூரில் வசித்தபோது அரசம்பலவாணர்மீது சில செய்யுளியற்றி மழை வருஷிக்கச்செய்தனர்; அங்ஙனமன்றித் திருப்பட்டீசர்மீது சிலபதிகம்பாடிப் பலருக்குங் குட்டநோய் முதலிய பிணியை நீக்கியருளினர்; இம்முனிவர்செய்த நூல்களெல்லாம் மிகக்கற்பனைகளும், நீதிகளும், மெய்கண்டசாத்திரக் கருத்துகளுமே பெரும்பாலுமுள்ளனவென எல்லா வித்துவான்களுநன்குபாராட்டத்தக்கன; இம்முனிவர் விநாயகபுராணமியற்றிச் சென்னையிலரங்கேற்றியபோது அங்குள்ள பிரபுக்கள் இரண்டாயிரவராகன் சம்மானஞ்செய்தனர்; அப்பொருளைக்கொண்டுவந்து ஆதீனத்தில் நமசிவாயமூர்த்திசந்நிதியிலே மண்டபங்கட்டியருளினர்; இம்முனிவரைக் கவிச்சக்கிரவர்த்தியென்று பண்டைக்காலந்தொடங்கி வழங்கிவருகின்றனர்; அப்பெயரை அம்மண்டபத்திலெழுதியிருப்பதைப் பார்க்கலாம்.

தொட்டிக்கலைசைச் சுப்பிரமணிய முனிவரியற்றியருளிய நூல்கள் வருமாறு:— துறைசைக்கோவை, கலைசைக்கோவை, கலைசைச்சிலேடைவெண்பா, சிதம்பரேசர்வண்ணம், திருக்குற்றாலச் சித்திரசபைவிருத்தம், பழனிமுருகக்கடவுள் பஞ்சரத்நமாலை, சுப்பிரமணியர் திருவிருத்தம், திருத்தணிகைத் திருவிருத்தம், திருச்சிற்றம்பலதேசிகர் சிந்து, பஞ்சரத்னமாலை முதலிய பலநூல்களைச் செய்தருளினர்; சுப்பிரமணியர்திருவிருத்தம் ஒருவர் குட்டநோய் நீங்கச் செய்தது; திருத்தணிகைத்திருவிருத்தம் ஒருவர் கண் குருடுநீங்கச் செய்தது.

இலக்கணச்சிதம்பரநாத முனிவர் திருப்பாதிரிப்புலியூர்ப் புராணமுதலிய நூல்களைச்செய்தருளினர்; இவர்களன்றோ மானிடரிற்சிறந்தவர்; இவர்களன்றோ தபோதனர்; இவர்களன்றோ சிவஞானச் செல்வர்; இவர்களன்றோ உலகோபகார வள்ளல்கள்; இவர்கள் மகிமையை யெவ்வாறறிந்து கூறத்தகும்.

இம்மட்டோ! மாசிலாமணி தேசிகமூர்த்தி, தஞ்சைமன்னருடன் திருவெண்காட்டுக் கெழுந்தருளியிருந்தகாலத்தில் பிராமணபோஜனம், மகேசுரபூஜையென்னுமிரண்டின் மகிமையைப்பற்றி வாதுநிகழ்ந்தபோது மகேசுரபூஜையே மிகச்சிறந்தது என்று திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரும் எலும்பைப் பெண்ணாக்கும்படி, ‘மட்டிட்ட’ வென்னு முதற்குறிப்புற்ற திருப்பதிகத்திலெடுத் துரைத்தருளினர்.

அப்பதிகத்தின் கருத்தைச சேக்கிழார்நாயனாரும் பெரியபுராணத்தில், “மண்ணினிற்பிறந்தார்பெறும்பயன்” என்னுஞ்செய்யுளில், விளக்கியருளினர். அதனை விளக்கிககாட்டலாகுமெனககூறி அவ்வரசரால் ஒருமண்டலம் பிராமணபோஜனஞ்செய்வித்து அவ்வுச்சிட்டத்தை யுவர்க்கிணற்றிலேயிடும்படி கட்டளையிட்டருளினர். முடிவிலே தூர்வையெடுத்துப் பார்க்கும்போது அக்கிணற்றிற் புழுக்களும் உவருநீங்காமலிருந்தன. பின்பு அவ்வரசராலொருமண்டலம் மகேசுரபூஜை செய்வித்து, அவ்வடியார் பரிகலசேடத்தை அக்கிணற்றிலேயிடும்படி செய்வித்தருளினர்; முடிவிலே தூர்வையெடுத்துப் பார்க்கும்போது புழுக்களின்றி யுவர்நீங்கிப் பரிமளத்துடன் கங்காஜலம்போல நறுநீர்சுரந்து பெருகியது; இவற்றையறிந்த மன்னர் அக்கிணற்றுக்குப் பரிகலக்கிணறு என்று நாமமிட்டு முற்றூட்டாகப் பலநிலங்களைத் தானஞ்செய்தனர். இன்னும் அக்கிணற்றுக்கு அந்நாமமே வழங்கிவருகின்றது.

இம்மட்டோ! பின்வேலப்பதேசிகமூர்த்திபாற் சைவசித்தாந்தசாத்திரவுபதேச முதலியனபெற்று வடமொழிப்பயிற்சியினும் வல்லவராய்ச் சிவாகமங்களிலே இரண்டுலக்ஷங்கிரந்தம்வரை யுணர்ந்தவராயிருந்த வுத்தமோத்தம குரவராகிய திருச்சிற்றம்பலதேசிகமூர்த்தி சிவக்ஷேத்திரயாத்திரையாகத் திருக்கூட்டத்துடனெழுந்தருளும்போது மார்க்கத்துள்ள இராமநாதபுரத்தில் வசித்தருளினர்; அந்நகரத்தில் அக்காலத்திருந்த சேதுபதிமன்னர்க்கு மந்திரிமுதலாயினோர் தெரிவித்தார். உடனே அம்மன்னர் இப்போது மழையில்

லாது வருந்துங்காலமாயிருக்கின்றதே? மழைபெய்யும்படி செய்விப்பீர்களா என்று வினவினர். அதைக்கேட்ட மந்திரிமுதலானோர் அவ்வண்ணமே செய்தருள்வார்களென்று தெரிவித்து மன்னரையுமழைத்துக்கொண்டுவந்து தெரிசிப்பித்து மன்னர்கருத்தையும் விண்ணப்பஞ்செய்தனர். அத்தேசிகமூர்த்தி அவ்வண்ணமே ஞானநடராசர் திருவருள்செய்வார், என்று திருவாய்மலர்ந்து அந்நடேசர்பூஜையை மிகச்சிறப்புறச்செய்துமுடித்து, அவர் சந்நிதியிலே திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரருளிச்செய்த மேகராகக்குறிஞ்சியென்னும் பண்ணையுடைய திருமுதுகுன்றப்பதிக முதலாகிய பதிகங்களையெடுத்துத் தாளத்துடனோதும்படிக்கு ஓதுவாமூர்த்திகளை நியமித்துத் தாமும் ஸ்ரீ: பஞ்சாக்கரத்தைத்தியானித்து நிட்டையில் வீற்றிருந்தருளினர். உடனே மேகங்கள் குமுறிமழைபொழிந்தன; இவற்றைக்கண்ட அச்சேதுபதி மன்னர் அற்புதமகிழ்ச்சியெய்தி அடியுறை வைத்து வணங்கித்தேசமுய்யவந்த செழுந்தவத்தோராகிய இவ்வாதீனகுருமூர்த்திகளின் றிருவுதரத்திலும், அவரடியார்களின் றிருவுதரத்திலுமன்றோ நமது அன்னஞ்சாரவேண்டுமென்று திருப்பொற்கோட்டையென்னுமொரு பெரியகிராமத்தைத் தானஞ்செய்து அக்காலவழக்கப்படி ஒரு செப்புப்பட்டையத்தி லெழுதிக்கொடுத்து, நமசிவாயதேசிகமூர்த்திக்கு வருடந்தோறுநடத்துகிற குருபூஜைச்செலவைச் சேதுசமஸ்தானத்திலிருந்து கொடுக்கும்படி மகமையொன்றுமேற்படுத்தித் தம்மூரிலே, திருமடமுஞ்சிறப்புறக்கட்டுவித்துத் தாமுமவ்வாதீனத்திற்கே யடிமையாயினர்; அம்மன்னர் செப்புப்பட்டையத்தின்கீழ்,

> "நதியாம் விரிசிலை நன்னகர் பொற்கோட்டை
> நதியார் துறைசைப் பதிக்கு—விதியாகத்
> தானமிட்டான் சேதுபதி தாரணிதா னுள்ளளவு
> மீனமில்லை யென்றெந்நா ளும்."

என்னும் வெண்பாவை வரைந்திருக்கின்றனர்; அப்பட்டையமின்னுமவ்வாதீனத்திலிருக்கின்றதைப் பார்க்கலாம். இத் திருச்சிற்றம்பலத்தேசிகமூர்த்தியின்மீது மயூரகிரிக்கோவைசெய்த சாந்துப்புலவர் கலம்பகஞ்செய்திருக்கின்றார்.

நமசிவாயதேசிகமூர்த்திக்குப் பதினான்காவது பட்டத்திலிருந்த சுப்பிரமணியதேசிகமூர்த்தி நாகப்பட்டினத்துச் சிவாலயத்திற் கும்பாபிடேக நடக்கும்போது எழுந்தருளியிருந்தனர்; ஏனையவாதீனத்துத்தேசிகமூர்த்திகளு மெழுந்தருளியிருந்தனர்; கும்பாபிடேக முடிந்தவுடன் இவர்களையெல்லாம் வரவழைத்துச் சிறப்புச்செய்து வைத்திருந்த செட்டியார் எந்தத்தேசிகமூர்த்திக்கு முந்திச்சிறப்புச் செய்கிறது என்று ஆலோசனையுற்றிருந்தபொழுது எல்லாவாதீனத்துத்தேசிகமூர்த்திகளுஞ் செட்டியாரைநோக்கித் திருவிளையாடற்புராண நகரப்படலத்தில், "அழிவிலானுரையாகமமிலக்கமாய்ந்து" எனக்கூறியபடி சிவாகமத்தில் இலக்ஷங்கிரந்தந்தெரிந்தவரே உத்தமகுருவாகச்சொல்லத்தகும், அவ்வாறு தெரிந்தமூர்த்தி இத்திருவாவடுதுறையாதீனத்துக் குருமூர்த்தியேயெனக்கூறினர்; உடனே செட்டியார் இலக்ஷங்கிரந்தம் பார்வையிட்டு மனனஞ்செய்வதோ? மனனஞ்செய்யாது பார்வையிடுவதோ? என்றையுற்றுரைத்தனர்; உடனே சுப்பிரமணியதேசிகமூர்த்தி நாம் பார்வையிட்டு மனனஞ்செய்தது இலக்ஷங்கிரந்தமும், மனனஞ்செய்யாது பார்வையிட்டிருப்பது இலக்ஷங்கிரந்தமுமாமென்று திருவாய்மலர்ந்தருளினர். உடனே மிக்கவாச்சரியமெய்தி இம்மகானே உத்தமோத்தமகுருவென்று எல்லார்க்குமுதலிலே செய்யவேண்டுஞ்சிறப்புக்கள்செய்து, அம்முறையே ஏனையவாதீன தேசிகமூர்த்திகட்குஞ் செய்தனர்; இவற்றையுடனிருந்துகண்ட சுப்போதுவாமூர்த்தியே கூறியிருக்கின்றார்; இத்தேசிகமூர்த்தியின பரிகலசேடப்பிரசாதத்தைப் பெற்றருந்துவோர் தங்கள் பிணிநீங்கிச் சுகமடைவார்.

பதினைந்தாம்பட்டத்திலிருந்த அம்பலவாணதேசிகமூர்த்தி திருமந்திரமுதலிய திருமுறைகளுக்கு நுட்பமான அருத்தங்களை நாவலரெல்லா நன்குமெச்சும்படி யுரைத்தருளியதைப் பலருமறிவர்.

(இன்னும் வரும்.)

எம். எஸ். பூரணலிங்கம்பிள்ளை, பி. ஏ.

உ
சிவமயம்.

இராமாவதாரச் செய்யுட் பாடாந்தரம்.

(முற்றொடர்ச்சி.)

உருக்காட்டுப்படலம்.

இப்படலத்து ௨௧-ம் செய்யுளின் பின்னர்,

சுற்றிய கொடியொன்றைத் துணித்துத் தூயளோர்
பொற்றடங் கொம்பினிற் பூட்டிப் பூமியே
நற்றவ முடையன்யா னாகி னாயகன்
வெற்றிசேர் திருவடி மேவு வேனென்றான்.

எனவும்,

என்றருந் ததிமனத் தெம்மை யாளுடைத்
துன்றருங் கற்பினாள் சுருதி நாயகன்
பொன்றரு மலர்ப்பதம் வழுத்திப் பூங்கொடி
தன்றனிக் கழுத்திடைத் தரிக்கு மேல்வையில்.

எனவும், இருசெய்யுட்கள்காணப்படுகின்றன. "கண்டனனனுமனும்" என்னும் ௨௨-ம் செய்யுளில் "கொண்டனன்றனுக்க மெய்தீண்டக் கூசுவான்............தொழுதுதோன்றினான்" எனக்கூறிய கருத்தை உற்றுநோக்குமிடத்து இச்செய்யுட்களிரண்டு மீண்டுப் பொருத்தமுடையன என்பது நன்குபுலப்படும். அன்றியும், இச்செய்யுட்களிரண்டு மில்வழிமுற்பிற் செய்யுட்களுக்கு இயைபின்மையானுமிவை பொருத்தமாதல் நன்கு தெளியப்படும்.

மேற்கூறிய ௨௨-ம் செய்யுளின் பின்னர்,

தோன்றினன் றனதுருக் காணத் தூயவன்
மூன்றுல கினுக்குமோ ரன்னை மொய்ம்மலர்த்
தேன்றிகழ் திருவடி சென்னியாற் றொழு
தேன்றபே ரன்புகொண் டுறைதன் மேயினான்.

என ஒருசெய்யுளும், ௨௩-ம் செய்யுளின் பின்னர்,

நோக்கின னரக்கியர் நுனிப்பில் கோடியர்
நீக்கினர் துயிலினை நின்னைக் காணாதற்
காக்கிய காலம்பார்த் தயல மர்ந்துபின்
றூக்கணங் கவர்துயில் கண்டு சார்ந்துளேன்.

என ஒரு செய்யுளும் காணப்படுகின்றன. இவையுமீண்டுப் பொருத்தமுடையவாதல் உற்று நோக்கியுணர்க.

௸

என்றவ னிறைஞ்ச நோக்கி யிரக்கமு முனிவு மெய்தி
நின்றவ னிருத னல்ல னெறிநின்று பொறிக ளைந்தும்
வென்றவ னல்ல னாகின் விண்ணவ னாக வேண்டு
நன்றுணர் வுரையன் றூய னவையிலன் போலு மென்றாள்.

என்னும் ௨௯-ம் செய்யுளில், "நன்றுணர்வுரையன் றூய னவையிலன் போலுமென்றாள்" என்பது "நன்றுணர்வுரையுந்தூய னவையிலன் போலுமென்றாள்" எனக்காணப்படுகின்றது. 'நவையிலன்' என்பதே 'தூயன்' என்பதன் பொருளை யுணர்த்தலின் 'உரையுந் தூயன்' என்பதே பொருத்தமாதல் காண்க.

௸

ஆயவன் றன்மை நிற்க வங்கதன் வாலி மைந்த
னேயவன் றென்பால் வெள்ள மிரண்டினோ டெழுந்த சேனை
மேயின படர்ந்து தீர வினையவன் விடுத்தா னென்னைப்
பாய்புன லிலங்கை மூதூர்க் கென்றனன் பழியை வென்றான்.

என்னும் ௩௬-ம் செய்யுள்,

ஆயவன் றன்மை நிற்க வருக்கன்சேய் வாலி சேயை
யேயினன் றென்பால் வெள்ள மிரண்டினோ டெழுந்த சேனை
மேயினன் புணரிதீரத் திருந்தவன் விடுத்தா னென்னைப்
பாய்புன லிலங்கை மூதூர்க் கென்றனன் பழிப்பி லாதான்.

எனக்காணப்படுகின்றது. "அருக்கன்சேய்வாலிசேயை" என்பதும், "புணரிதீரத்து" என்பதும் பொருட்கியைபும், சிறப்புமுடைமையிற் பின்னையதே பொருத்தமும் சிறப்புமுடைத்து.

௸

பொருந்திய நிலனொடு போந்து கானிடை
வருந்தின வெனினது நூலை மாறுகொண்
டிருந்தது நின்றது புவனம் யாவையு
மொருங்குடன் புணர்வஃ துரைக்கற்பாலதோ.

என்னும் ௪௨-ம் செய்யுள்,

பொருந்திய நிலமிசைப் போந்து கானிடை
வருந்தியு மிலக்கண நூலை மாறுகொண்
டிருந்தன வவன்பதம் புவனம் யாவையு
மொருங்குட னொளிப்பதை யொளிக்கற் பாலதோ.

எனக்காணப்படுகின்றது. 'எனின்' என்பதும், 'நின்றது' என்பதும் "புணர்வஃதுரைக்கற்பாலதோ" என்பதும் பொருத்தமில்லனவாதலிற் பின்னையதே பொருத்தமுடைத்து. காட்டின்கண் நிலமிசைப்போந்து வருந்தியும் அவன்பாதங்கள் இலக்கணநூலை மாறுகொண்டிருந்தன. புவனம்முழுவதையும் தன்னுண்மறைத்த அப்பாதத்தை (அப்புவனத்துள்ள உவமைப்பொருள்கள்) மறைக்கும் பகுதியதோ, என்பது இதன்கருத்து. இலக்கணநூல் என்றது, இலக்கணநூலிற்கூறிய உவமைப்பொருள்களை. ஆகுபெயர். இனிநூல் என்பதற்குப் புத்தகமெனப்பொருள்கொண்டு புறவடிக்குவமையாக்கிப் பொருள்கூறுவாருமுளர். "கானிடைவருந்தியும்" என்றதனானும், "புவனம்யாவையுமொருங்குடனொளிப்பதை" என்றதனானும் புறவடிக்குக்கொள்ளுதல் பொருந்தாது. ஈண்டுப்பொதுவாகக் காலினியல்பையே வியந்து கூறினார். பின்னையமறைத்தல் என்பதற்கு அதனியல்பைக் கீழ்ப்படுத்தித் தான்மேற்படுதல் எனப்பொருள்கொள்க

௸

தாங்கணைப் பணிலமும் வளையுந் தாங்கரா
வீங்கணைப் பள்ளியா னெனினும் வேறினிப்
பூங்கணைக் காற்கொரு பரிசு தான்பொரு
மாங்கணைக் காவமோ வாவ தன்னையே.

என்னும் ௪௩-ம் செய்யுளில், "தாங்கரா - வீங்கணைப்பள்ளியானெனினும் வேறினி" என்பது "தாங்குநீர் - வீங்கணைப்பணிமிசை மேகமன்னவன்" எனக்காணப்படுகின்றது. "எனினும் வேறினி" என்பது பொருத்தமின்மையிற் பின்னையதேபொருத்தமுடைத்து.

௸

அறங்கிளர் பறவையி னரச னொடெழிற்
பிறங்கெருத் தனையன பெயரும் பெற்றுடை
மறங்கிளர் மதகரிக் கரமு நாணின
குறங்கினுக் குவமையிவ் வுலகிற் கூடுமோ.

என்னும் ௪௪-ம்செய்யுளில், "பிறங்கெருத்தனையன பெயரும்பெற்றுடை" என்பது "பிறங்கெருத்தமுமிளங் கதலிப்பெற்றியும்" எனக் காணப்படுகின்றது. 'கரமும்' என்பதிலுள்ள உம்மைக்கும் 'நாணின' என்னும் பன்மைமுடிபிற்கு மியையவருதலிற் பின்னையதேபொருத்தமுடைத்து. கதலிப்பெற்றி - வாளைத்தண்டினியல்பு. பெற்றியை ஏனையவற்றிற்குங்கொள்க.

௸

வலஞ்சுழித் தொழுகுநீர் வழங்கு கங்கையின்
பொலஞ்சுழி யென்றலும் புன்மை பூவொடு
நிலஞ்சுழித் தெழுமணி யுந்தி நேரினி
யிலஞ்சியம் போலும்வே றுவமை யுண்டரோ.

என்னும் ௪௫-ம் செய்யுளில், "இலஞ்சியம்போலும்" என்பது "இலஞ்சியம்போது" எனக்காணப்படுகின்றது. முன்னையதிற்பின்னையது பொருத்தமுடையதாதல் காண்க.

௸

பொருவரு மரகதப் பொலன்கொண் மால்வரை
வெருவுற விரிந்துயர் விலங்க லாகத்தைப்
பிரிவுற னோற்றில னென்னிற் பின்னையத்
திருவினிற் றிருவுளர் யாவர் தெய்வமே.

என்னும் ௪௬-ம் செய்யுளில், "என்னில்" என்பது "நின்னில்" எனக் காணப்படுகின்றது. ஸ்ரீராமன்மார்பை நீ இப்பொழுது பிரிவுற்றிருத்தலாற் பிரியாதிருக்குமத்திருப்போன்ற தவமுடையையல்லை என்பான் இங்ஙனம் கூறினானாதலிற் பின்னையதே பொருத்தமுடைத்து.

௯

௫௪-ம் செய்யுளின் பின்னர்,

எள்ளற்கரிய நிலையுளதா யிசைந்துதம்மி லிணையொத்துத்
தள்ளப்படாத நிலையாகிச் சார்கத்தரிகை வகையொழுகி
யள்ளற்பள்ளத் தகன்புனலி னமைந்தவாவி யுள்வளரும்
வள்ளைத்தண்டின் வணப்பழித்த மகரக்குழையின் குழையம்மா.

என ஒரு செய்யுள் காணப்படுகின்றது. இதுவுமீண்டுப் பொருத்த முடைத்தாதல் காண்க. இதின் இரண்டாமடி, "தெள்ளத்தெளிந்து செயல்வல்லோர் சேர்த்து நூலின் வழியொழுகி" எனவும்பாடம் இதனினும் முந்தியதே சிறப்புடைத்து.

சி. கணேசையர்.

௨

கதாசரித் சாகரம்.

௫-வது சதுர்த்தாரிகாலம்பகம் ௧-வது தரங்கம்.

[ஸ்ரீமத்-வீராசாமி ஐயங்காரவர்கள் மொழிபெயர்த்தது.]

(முற்றொடர்ச்சி.)

அன்றியும், கன்னிகையானவள் பாலப்பருவத்தைத்தவிர மற்றைப்பருவங்களில் தன்கணவனை விட்டுநீங்கிப் பிதாவின் கிரகமித்தன்மைத்தென்று அறியாதவளாயிருத்தல்வேண்டும். ஒரு கன்னிகையை ருதுவாகும்வரை விவாகஞ்செய்யாதிருந்தால் அதனால் தமது பந்துக்களும் தாழ்ந்தகெதியையடைகின்றனர்; அப்படிக் கலியாணமாகாது ருதுவானபெண்ணுக்கு விருஷளி என்றும், அவளை மணந்துகொள்பவனுக்கு விருஷளீபதி என்றுமிழிவான பெயருமேற்படுகின்றன. ஆதலானுன்மனத்திற்கிசைந்த கணவனை மணந்துகொண்டு நாங்கள் யாவரும் சந்தோஷிக்கும்படி வாழ்தல் வேண்டுமென்றனன்.

இப்படிச்சொல்லிய தன்பிதாவின் வசனத்தைக்கேட்ட ராஜகுமாரியான கனகரேகையென்பவள் அரசனைப்பார்த்துப் பிதாவே! உமக்கு நான்விவாகம் செய்துகொள்ளவேண்டியதவசியமென்றுதோன்றி

னால் நான்சொல்கின்றபடி செய்யவேண்டும்; அஃதாவது, பிராமணன் க்ஷத்திரியனென்ற இரண்டு ஜாதியார்களுக்குள் எவனொருவன் கனகபுரியென்னும் நகரத்தைப் பார்த்திருக்கின்றானோ அப்படிப்பட்ட புண்ணியசாலிக்கே யென்னை மணம்புரிதல்வேண்டும்; அவனே யென் பர்த்தாவாகின்றான்; இதற்கு மாறாகவொன்றுஞ் செய்யக்கூடாது என்று தன்மனத்திலுள்ளவெண்ணத்தை வெளியிட்டனள். இதைக் கேள்வியுற்றவரசன் நமது புத்திரி யேதோதெய்வகதியால் விவாகமென்பதையங்கீகரித்தனள். ஆனாலிவள் தெய்வஸ்திரீ யென்பது நிச்சயம். நமது கிரகத்திலேதோவொரு காரணவசத்தினாலுற்பவித்திருக்கின்றனள். இல்லாவிடில் இவளிவ்வளவிளமைப்பருவத்திலே இவ்விஷயத்தை யெப்படியறியக்கூடுமென்று மனத்திலாலோசித்துக் கொண்டு அப்பொழுது தன் புதல்வியைப்பார்த்து உன்மனத்தின்படியே செய்கின்றேனென்று சொல்லிவிட்டெழுந்து அவ்வரசன் அன்று தினம் செய்யவேண்டிய காரியத்தைச் செய்தனன்.

பின்பு மறுநாள் சபையில் தன் புடைசூழ்ந்திருக்கின்றவர்களைப்பார்த்து உங்களில் யாராவது கனகபுரியென்ற நகரத்தைப்பார்த்திருப்பவர்களுண்டா? பிராமணன் க்ஷத்திரியன் இவ்விருவர்களில் எவனொருவன் அந்நகரத்தைப் பார்த்திநக்கின்றானோ, அவனுக்கு என் புத்திரி கனகரேகையை விவாகஞ்செய்துகொடுப்பதோடு அவனையுவராஜனாகவுஞ்செய்கின்றேன் என்றனன். இதைக்கேள்வியுற்றதும், அரசன் சமீபத்திலிருந்த யாவரும் ஆச்சரியத்துடன் ஒருவர்முகத்தையொருவர் பார்த்துக்கொண்டு மகாராஜனே, கனகபுரியென்ற ஒருநகரமிருப்பதாகநாங்கள் கேட்டதேயில்லை. அப்படியிருக்க அந்நகரத்தை யார் பார்த்திநக்கப்போகின்றனர் என்றார்கள். உடனே அரசனானவன் வாயில் காப்பவனையழைத்து நமது நகரத்தில் யாராவது பிராமணன், க்ஷத்திரியனென்ற இருதிறத்தவர்களில் கனகபுரியைப் பார்த்தவர்களிருந்தால் அவனுக்கு நமது கன்னிகையை மணஞ்செய்து கொடுப்பதோடு யுவராஜபட்டாபிஷேகமும் செய்விக்கின்றேனென்று பறையறையும்படி உத்தரவளித்தனன்.

உடனே, வாயில்காவலன்சென்று வேலைக்காரரிடஞ்சொல்லிய அரசனுத்தரவின்படியே முரசறைவித்தனன். அவ்வண்ணம் வீதிகள்

தோறும் முரசடித்துக்கொண்டு சொல்கின்றவார்த்தையை அந்நகரத்திலுள்ளார்கேட்டு இதென்ன ஆச்சரியம்! நாமெத்தனையோ முதிர்ந்த வயதுடையவர்களாயிருந்து மிதுவரையில் கனகபுரியென்ற நகரத்தைக்கண்டதுமில்லை கேட்டதுமில்லையே என்றொருவரோடொருவர் பேசிக்கொண்டனர். ஒருவனாவது கனகபுரியைப் பார்த்தேனென்று சொல்லவில்லை. அத்தருணத்தில் அந்நகரத்தில் வசிக்கின்ற பெலதேவனென்பவன்மகன் சக்திதேவனென்னும் பெயரையுடைய பார்ப்பானொருவன் அம்முரசொலியைக்கேட்டு இதென்ன கனகபுரியென்றொரு நகரமிருப்பதாயும் அதைப்பார்த்தவனுக்கு ராஜகன்னிகையை மணம்புரிவதாயும் பறையறைகின்றனர். நாமோ யௌவன வயதுடன் கூடியிருக்கின்றோம். நமது செல்வமோ முழுவதுஞ் சூதாட்டத்தினாற்றொலைந்துவிட்டது. கிரகத்திற்குச்சென்றால் பிதாவின் கோபத்திற்காளாகவேண்டும். வேசையர்களோ சற்றும் நம்மைக் கண்ணெடுத்துப்பாரார்கள். ஆகையால் யாதொரு கெதியுமில்லாதிருக்கின்ற நாம் கனகபுரியைப் பார்த்ததாக, முரசடிப்பவர்களிடம் பொய்ம்மொழிகூறுவோம்; நாம் பார்க்கவில்லையென்பதை எவனறியப்போகிறான். அந்த நகரத்தை எக்காலத்திலெவன் பார்த்திருக்கின்றான். ஆதலாலொருவாறு ராஜபுத்திரியுடன் கூட்டரவுநேரிடினும் நேரிடுமென்று ஆலோசித்து, முரசடித்துச்சொல்லிக்கொண்டு செல்கின்றவர்களிடம் சென்று சக்திதேவனென்பவன், கனகபுரியை யான் பார்த்திருக்கின்றேனென்று பொய்ம்மொழி கூறினன்.

அவர்களதைக்கேட்டவுடன் தெய்வாதீனந்தானென்று வாயில்காப்பவனிடம் அவனையழைத்துச்சென்றனர். அவ்வண்ணமே வாயில்காவலனிடத்திலும் கனகபுரியைப்பார்த்திருக்கின்றேன் யானென்றுசொல்ல, அவனுமுபசாரத்துடன் அரசன்பக்கலிலழைத்துச்செல்ல அவ்விடத்திலும் மாறுதலின்றி முன்கூறியபடியே பொய்மொழிந்தனன். ஆனால் சூதாடிக்கெட்டலைந்தவனுக்கு உலகிற்செய்யத்தகாதகாரியம் யாதிருக்கின்றது. அப்பொழுதரசன் இதனுண்மையை அறியும்பொருட்டு அவ்வந்தணனைத் தன்புதல்வி கனகரேகையிடமனுப்பினன்; அந்தக்கனகரேகையும் வாயில்காவலன்மூலமறிந்து தன்சமீபத்தில் வந்துநிற்கின்ற சக்திதேவனை நோக்கி, நீ கனகபுரியைப் பார்த்திருக்கின்றாயாவென்று வினவினள். அவனுமந்தக் கனகரேகையினிடத்தில் யான் கல்விகற்பதற்காக அநேக தேசங்கள் சென்றுவருங்கால் அக்கனகபுரிநகரத்தைப் பார்த்திருக்கின்றேனிது நிச்சயந்தானென்று பதிலுரைத்தனன்; அதற்கவள் நீ எவ்வழியாலவ்விடஞ்சென்றாய் அந்நகரமெவ்வண்ணமாக விருக்கின்றதென்று கேட்க, அவனும் யானிங்கிருந்து ஹரபுரமென்ற பிரசித்திபெற்றதோர் நகரஞ்சென்றேன்; அங்கிருந்தும் முறையாக வாராணசிநகரஞ் சென்றேன்; அதினின்று பலநாட்களில் பௌண்டரவர்த்தனமென்னும் நகரத்தையடைந்தேன்; அதினின்றும் கனகபுரிநகரத்திற்கேகினேன்; அந்நகரமானது புண்ணியாத்துமாக்களின் போகபூமியாய்க் காணப்பட்டது. அது இமையாநாட்டத்தவர்களாலனுபவிக்கப்படும் அழகிய இந்திரனுலகம்போலுமிருந்தது; அவ்விடத்திற் கற்கவேண்டுங்கலைகளைக் கற்றுக்கொண்டுவந்து சேர்ந்தேனென்றனன்.

இவ்வாறுகூறிய அச்சூதாடிப்பார்ப்பான் சொற்களைச்செவியுற்ற அந்த ராஜகுமாரியானவள் சிரித்துக்கொண்டு ஓகோ மகாப்பிராமணரே, நீரந்தக் கனகபுரியைப்பார்த்தது உண்மைதான். இன்னுஞ் சொல்லுஞ்சொல்லும் எந்தமார்க்கத்தினாற் சென்றீரென்றனள். மறுபடியும் அவனதேபிரகாரமாக உறுதியுடன்கூறலும், உடனேயவள் பக்கலிலிருந்த வேலைக்காரனைநோக்கி இவனை வெளியேகொண்டு தள்ளுங்களென்று உத்தரவுகொடுத்து அவனை வெளியிற்றுரத்திவிட்டுத் தன் பிதாவினிடஞ்சென்றாள். உடனே அரசன் தன் புதல்வியிடம் அப்பார்ப்பான்மொழிந்ததுண்மைதானாவென்று கேட்டலும், அந்த ராஜபுத்திரி தன்பிதாவினிடத்தில் ஐயனே! நீர் அரசனாகவிருந்து மேல்விசாரியாமலே செய்கின்றீர். உலகத்திற் சூதாடிப்பயல்கள் உண்மைமார்க்கத்திலிருக்கின்றவர்களை வஞ்சிக்கின்றார்களென்பதை நீரறியவில்லையோ? அப்பார்ப்பான் பொய்யுரைகூறி என்னை ஏமாற்றமுயல்கின்றான்; பொய்வார்த்தை சொல்லுகின்ற அப்பார்ப்பான் அந்த நகரத்தைப்பார்க்கவில்லை. சூதாடிகளோ பற்பலவிதமான வஞ்சனைசெய்கின்றார்கள். அதற்கு திருஷ்டாந்தமாக ஒருகதை சொல்கின்றேனென்று பின்வருமாறு ஒருகதை சொல்லினள்.

(தொடரும்.)

உ

கடவுள் துணை.

உபாத்தியாயனியல்பு.

உலகத்துச் செயற்பாலனவாய பற்பல கருமங்களிலுஞ் செய்பவனுக்குஞ் செயப்படுஞ்செயலுக்கும் உள்ள பரஸ்பரசம்பந்தத்தை உற்றுநோக்குங்கால் செய்யப்படுங்கருமத்தின் தன்மையும் பயனுஞ் செய்பவனின் குணங்களை அனுசரித்தனவாகக் காணப்படும். நிலம் உழுதல் மரம் வெட்டல்போன்ற சடப்பொருள்களோடடுத்த சாமானிய வேலைகளைச்செய்தற்கு வேண்டப்படுவன செய்பவனின் சரீரபலமும் வினையாண்மையுமே அன்றி அவன் மனநோக்கமும் நல்லொழுக்கத்தால் வருந்தகுதியும் அன்ற. உபாத்தியாயன் குருமுதலாயினோர் தொழிலோ மிகப்பாரம் உடைத்து; அவர் திருத்திநடத்துவது ஆறறிவுடை மக்கட்பொருளாதலின். ஆராயின், ஒருவரிடத்து நல்லொழுக்கம் வரச்செய்வதில் நல்லொழுக்கம்போன்றது பிறிதொன்றில்லை. நல்லொழுக்கம் உடையாரைச் சேர்ந்தோர்பலருந் தாமும் நல்லொழுக்கம் உடையராதல் உண்மை. உபாத்தியாயன் தன் மாணாக்கரைப்பயிற்றல் தான் சொல்வன செய்வனவற்றால் மாத்திரம் அன்று தன் குணாகுணங்களானுமாம். மனிதனாற் செய்யப்படும் மற்றெம்முயற்சியிலும் இவ்வுபாத்தியாயத்தொழிலிற் செய்வோன் தன்மைக்குஞ் செய்யப்படும்பொருளின் தன்மைக்கும் உள்ளசம்பந்தம் மிகவுநெருங்கியது. ஆதலின் இத்தொழிலிற்பிரவேசிக்கும் ஆண்பெண் என்னும் இருபாலாரும் இன்னஇன்ன இலக்கணம் உடையராயிருத்தல்வேண்டுமென முதலில் ஆராய்தல்தக்கது.

1. ஒரு விஷயத்தைப் போதிக்கப்புகும் ஒருவன் அவ்விஷயத்தை நன்கு அறிந்திருத்தல்வேண்டும் என்பது சாமானியமாய் எல்லோரும் அறிந்ததெனினும் அதனுண்மையை மனத்திற்றாங்கி அதன்வழி நடப்பவர் மிகச்சிலர். படிப்பிப்பவரினறிவு படிப்பவரறிவிற் சிறிது மேற்பட்டிருத்தல்போதும் என்பது சிலர்கொள்கை. அது பொருந்தாது. ஒருவன் தானறிந்ததை இன்னொருவனுக்கு அறிவிக்குங்கால் கேட்பவன் மனத்திற்பதியாமற் சிதைந்துபோகும் பாகங்களோ பலவாதலின், எவருந்தாமறிந்தது முழுமையையுமாதல் பாதியையாதல் மற்றவருக்கு அறிவிப்பது அசாத்தியம். சாதாரணமாக நாம் அனுபவத்திற் காணக்கூடியதொன்றுண்டு. ஒருவன் ஓர் கதையை யாதல் ஓர் காரியத்தின் விவரத்தை யாதல் நமக்குச்சொன்னால் அப்பொழுது அதுமுழுதும் நமக்கு விளங்கியதுபோலத்தோற்றும். பின்பு அதனை யாம் இன்னொருவருக்குச் சொல்லத்தொடங்கின் காத்திரப்பிரகாரம் நம ஞாபகத்திற்சில குறைவுகள் காணப்படும். கதையைக்கேட்கும்பொழுது ஆவசியகமாய்த்தோற்றாத சில அதனைமறுபடியுஞ் சொல்லும்பொழுது வேண்டியதாகின்றன. அவை எடுத்த விஷயத்துக்கு வேறாய் அதனோடு தொடர்ச்சியுடைய சில அமிசங்களாம். ஒருவன் படிப்பிக்கும் பாடத்தில் தனது அறிவு சுருக்கமாயிருப்பின் ஆதல் அப்பாடத்தை அச்சமயத்திற்காகமாத்திரம் ஆயத்தஞ்செய்திருப்பின் ஆதல் படிப்பிக்கும்பொழுது மாணாக்கர் நிகழ்த்தும் வினாக்கள் தனது அறிவினெல்லையைக் கடக்குமோ என்னும் அச்சம் அவன் மனத்தைவிட்டு நீங்காதிருக்கும். இருக்கவே அவனது பேச்சில் தடதடத்தல் உறுதியின்மை முதலியன உண்டாகும். அதுமட்டோ! உபாத்தியாயன் கற்பிப்பது தன் மனத்துள்ள நிறைந்த அறிவினாலன்று என மாணாக்கருட் சிலரேனுங்காண்பரேல் உபாத்தியாயனுக்கு அதனால் மதிப்புக்குறைதான் மாத்திரமன்றி அவன் கற்பிக்கும்பாடமும் வியர்த்தமாம். கற்பிப்பவர் எவருந் தாங்கற்பிக்கப்புகும் விஷயத்தை நன்றாக அறிந்திருத்தல் அவசியம். நாம் அறியவேண்டிய விஷயங்களோ பல. ஒருவன் எல்லாவிஷயத்தைப்பற்றி முழுமையும் அறிந்திருத்தல் முடியாது. ஆதலின் உபாத்தியாயராவார் ஒவ்வொரு விஷயத்தையும் பற்றிப் பொதுவாய் அறிதலோடு ஒருவிஷயத்தையே முழுதுமறிந்து அதில் விசேட திறமை உடையராதல்வேண்டும்.

2. கற்பிக்கப்படும் பாடம் எத்துணை இலகுவாய் இருப்பினும் அன்றி, உபாத்தியாயன் எத்துணைத்திறமைவாய்ந்தவராக இருப்பினும் படிப்பிக்கவேண்டிய ஒவ்வொரு பாடத்தையும் முன்னதாகவே நாடோறும், ஆயத்தஞ்செய்தல் அத்தியாவசியகம். ஒருவகுப்புப் பிள்ளைகளை வாசகப்பாடம் வாசிக்கச்செய்தல்போன்ற அத்துணை

இலகுவான பாடத்திலும் வாசிக்கப்படும் பாகத்தை முன்னதாகவே ஒருமுறை பார்த்து அதில் நன்றாக விளக்கவேண்டியன இன்ன பதங்களை இன்னவாக்கியங்கள் எனவும், அதற்காக எடுத்துக் காட்டப்படுந் திருட்டாந்தங்கள் இன்னவென்றும் ஆராய்ந்து நிச்சயித்துக் கொள்ளல் மிக வேண்டற்பாலது. பலமுறை கற்பித்துப்பழகிய பாடங்களை ஆயத்தஞ்செய்வதற்கு வெகுநேரம் வேண்டியதில்லை. பெரும்பான்மையும் அவ்விதமான ஒவ்வொருபாடத்திற்கும் நாலு ஐந்து நிமிஷங்கள் போதுமானவை. விசேஷபாடங்களை யாதல் புதிதாக ஒரு பாடத்தை யாதல் கற்பிக்கவேண்டின் அதனை முன்னதாக ஆராய்ந்து பாடக்குறிப்புக்கள் எழுதிக்கொள்ளல் சாலவும் நன்று. அங்ஙனஞ் செய்தலாற்றான் குறித்தநேரத்துள் இவ்வளவு செய்துமுடித்தல் கூடுமெனவும், பாடத்தின் பற்பலபாகங்களும் இன்னமுறையில் தொடரவேண்டுமெனவும் அறிதல் கூடும்.

3. படிக்கவேண்டிய பாடங்களை முன்னதாக ஆயத்தஞ்செய்தல் தஞ்சாமர்த்தியத்துக்கு இழுக்காகுமென எண்ணுவார் கொள்கை விபரீதமாம். "உரைக்கப்படும்பொருள் உள்ளத்தமைந்து" என்றார் நன்னூலாரும். உரைக்கும் முறையை முன்னதாக ஆலோசியாது மாணாக்கருக்கு முன்னின்றுகொண்டு "இதனை முன்னர்க்கூறுவேமோ அதனை முன்னர்க்கூறுவேமோ;" என்ன திருட்டாந்தத்தை இப்போது காட்டுவோம் என்றிப்படிச் சிந்திக்கும் உபாத்தியாயன் பிள்ளைகள் ஒவ்வொருவரையும் நன்கு கவனிக்கவும் அவர்களுள் விசேட குறைவுடையவர்களை ஊக்கப்படுத்தித் திருத்தவுமுடியாதவனாகின்றான். அதுவுமன்றிப் பாடமும் இடை இடையே தடைப்படும். சரித்திரம் முதலிய பாடங்களைப் புத்தகத்தைப்பார்த்துப் படிப்பிக்கலாம் என எண்ணுதல் சரியன்று. என்னை? புத்தகத்திற் பரக்கக் கூறப்பட்டுச், சிதறிக்கிடக்கும் விஷயங்களின் முக்கியாமிசங்களைத் தெரிந்தெடுத்து வற்புறுத்தல் கூடாதாகலின்.

4. மேலும் ஒருவன் உபாத்தியாயனாக வந்தவுடன் தனக்குத் தெரிந்த அறிவு போதுமெனத் திருப்தியடைந்து இராமல் மேன்மேலுங் கல்விப்பயிற்சி செய்துவரல் வேண்டும். பரீக்ஷையில் தேறினால் மாத்திரம்போதும் எனச்சிலர் எண்ணி அதனாற் கருவமடைந்து படித்ததையு மறந்துபோகிறார்கள். தானறிந்ததுபோதும் என்றெண்ணாது நாடோறுந் தன்னறிவை விருத்திசெய்து வருபவனே உபாத்தியாயத்தொழிற் குரியனெனப்படுவன்; என்னை? புதிதுபுதிதாய் அறிவைத்தேடும் பயிற்சியில்லையேல் சிறுவர் மனம் புது அறிவைக் கொள்ளும்வழி அறிந்து கற்பிக்கும் வன்மையுங் குறையுமாதலின். ஆயினும் பள்ளிக்கூடத்திற் படிப்பிக்கும் பாடங்களையேதான் அதற்கடுத்த விஷயங்களையேதான் உபாத்தியாயன் மென்மேலுங் கற்றல் வேண்டும் என்பது இதனாற் பெறப்படுவதன்று. ஒருவருக்கு எவ்விஷயத்தில் மனச்சார்புண்டோ அதனையே கற்கலாம். ஒருவன் தன் சீவியகாலமுழுதுங் கற்பவனாகவே இருத்தல்வேண்டும். போதனாசிரிய வித்தியாசாலையிற் படித்தாதல் வேறுவிதத்தானாதல் கற்பிக்குந் திறமை படைத்தோரும் அம்மட்டில் நின்றுவிடாது காலாந்தரங்களிற் புதியனவாய்ப் புகும்வழிகளையும் உபாயங்களையும் சுவ ஆராய்ச்சியாலும், புத்தகம் பத்திரிகை முதலியனவற்றாலும் அறிந்துவரல் வேண்டும். அதுவுமன்றி ஒரு மாகாணத்திலாதல் ஒரு பிரிவிலாதல் (District) இருக்கும் உபாத்தியாயர்கள் எல்லாரும் ஆண்டுக்கு ஒருதரமேனுங்கூடி அவருள் மேலானோர் தாந்தாம் எவ்விஷயத்திற் பாண்டித்தியம் பெற்றிருக்கின்றனரோ அவ்விஷயத்தில் வியாசம் எழுதிவாசித்தல் பிரசாரணஞ்செய்தல் முதலியன மிகவேண்டற்பாலன. கிராமப்பாடசாலை உபாத்தியாயர்கள் தம்மினும் உயர்ந்ததிறத்தினரைக் கண்டுபழகல் அரிதாதலின் அவர் திருத்தமுறற்கும் ஏற்றவழி இதுவே. என்னை? "அரசனை அடைந்திடாரெனில், எவரெவர் ஆக்கமும் இனிதுபேரலுமால்" என்றாராகலின்.

5. கற்பவன் தன்மையை அறிந்து அவன் மனங்கொள்ளுமாறு கற்பித்தல் உபாத்தியாயனுக்கு இன்றியமையாக்குணமாகும். "கொள்வோன் கொள்வகையறிந்தவன் மனங்கொள நூல்கொடுத்தல்" என்றார் பிறரும். அனேகர் வித்துவான்களாய் இருந்தும் போதனாசத்தி இன்மையால் கற்பித்தற்றொழிலில் அனுகூலப்படாது போகின்றார்கள். போதனாசத்தி இயற்கையிலமையப்பெறாதவர் போதனாசிரிய வித்தியாசாலையிற்பயின்று போதிக்குஞ்சத்தி சிறிதாவது சம்பாதித்துக்கொள்ளல் அவசியம். உபாத்தியாயராக வருபவரெல்லாம் போத

னாசிரிய வித்தியாசாலையிற் படித்துத்தேறியவராயிருத்தல் மிகவும் நன்று. நீராவியந்திரம் முதலிய சடப்பொருட் கருவிகளை இயக்குவதற்கு ஒருவன் அவற்றில் விசேஷ பயிற்சியுடையவனாயிருத்தல் அவசியமாயின், மானுடமனமென்னும் அதிநுட்பவிசித்திர இயந்திரத்தை நடத்துபவன் அதன் இயற்கைமுதலியவற்றை நன்றாய் அறிந்திருத்தல் எத்துணை அவசியம்! அதிலும் மனோதத்துவங்கள்பல புதிதாய்த்தோற்றுங்காலமாகிய பாலப்பருவம் உடையாரைப் பயிற்றுபவர் மனோதத்துவசாத்திரஞ் செவ்வனேகற்றுத் தேறியவராதல்வேண்டும் என்பது அதனை உரைக்கவே அடங்கும்.

6. தொழில்களெல்லாவற்றுள்ளும் உபாத்தியாயர் தொழிற்கே பொறுமை என்னுங்குணம் இன்றியமையாததாயின் அதற்கே மனமகிழ்ச்சி முகமலர்ச்சிமுதலியனவும் இன்றியமையாதன. எண்ணாதுபேசுதல், வெடுவெடுத்தல், ஆலோசனையின்றி அநீதிசெய்தல் ஆதிக்குணங்கள் யாவரிடத்து முண்டெனினும் உபாத்தியாயரிடத்து அதிகமாகக்காணப்படின் அதனால் வரும் அநர்த்தங்களோ மிகப்பல. தம்மிடத்து இக்குறைவுகள் இருப்பின் இயன்றவரை தம்மனத்தை அடக்கித் தாஞ்செய்வன சொல்வன ஒவ்வொன்றையும் ஆராய்ந்து செய்தலுஞ் சொல்லுதலும் உபாத்தியாயராவார் மேற்பொறுத்தகடனாம். அது செய்யத்தவறுவோர் உபாத்தியாயர் ஆதற்கு ஒரு சிறிதும் அருகராகார். உபாத்தியாயனது குணம் அற்பமேனும் பழிப்புக்கிடனாகாதிருத்தல்வேண்டும்; அவனைப்பார்த்து அதுபோல நடப்பவர் அனேகராதலின். ஒரு பிள்ளை ஒவ்வொருநாளும் ஐந்து ஆறு மணிநேரங்களுக்குத் தண்ணளியற்றவனுங் கோபியுங் கடுகடுப்பவனுமான ஒருபாத்தியாயன் முகத்தைப் பார்த்துக்கொண்டும் அவன் தொனியைக் கேட்டுக்கொண்டும் இருக்கவரின், அவன் துன்மார்க்கங்கள் பயிற்றும் பாடசாலையொன்றிற் சேர்ந்திருப்பதாக உணரத்தக்கது.

7. பிள்ளைகளின் சுபாவத்தை உற்றுநோக்கின் உபாத்தியாயன் சதா முகமலர்ச்சியுடையனாதல்வேண்டும் என்பது இனிதுபுலப்படும். கம்பீரமுகத்துடன் விளங்கவேண்டிய தொழிலாளரும் உண்டு. அவர்தாம் நோயாளனருகிலிருக்கும் வைத்தியனுங், குருவும் முதலாயினோர். அவரிடத்து விலாசங்கேலி முதலியன காணப்படல் தாழ்ச்சி அல்லது கௌரவமாகாது. தந்தொழிற் கௌரவத்திற்குவேண்டியதென எண்ணிச் சில உபாத்தியாயர் பாடசாலையிற்புகுந்து தம் முகத்தில் நகையொளிசிறிதுமின்றிச் சுளித்த நோக்கினராய் இருப்பர். அது அவர் மதியீனம். என்னை? மனக்கவலை சிறிதுமின்றிச் சந்தோஷமும் உற்சாகமுமே நிறைந்துள்ளவர்களாய சிறுவர்களின் மனமகிழ்ச்சியை விருத்திசெய்து படிப்பில் ஊக்கப்படுத்தல், உபாத்தியாயனும் மலர்ந்தமுகமுங் களிகூர்ந்த சிந்தையும் உடையனாயவழியன்றி முடியாதாகலின். அதுவன்றியும் பாடசாலையானது பிள்ளைகளுக்குச் சந்தோஷகரமாயிருத்தல், அவர்கள் பாடசாலைக்குத்தவறாது வருதற்கும் பாடசாலைவிஷயத்தில் சிரத்தைகொள்ளுதற்குங் காரணமாகும்.

8. தம் உபாத்தியாயரைக் கல்விக்கெல்லாம் பெரிய களஞ்சியமாகவும் தாமும் அக்கல்வியையே கற்கவேண்டியதாகவும் எண்ணும் பிள்ளைகள் கல்விகற்றதனால் தம் உபாத்தியாயர் சந்தோஷமற்றவராய் எப்போதும் மனக்கோட்டமும் முகவாட்டமும் உடையராயினரெனக் காணின் அவர்களுக் கல்விகற்றலில் அதிக ஆவலில்லாது போதலும் அவரிடத்து வெறுப்புத்தோன்றுதலும் இயல்பாம். படிப்பித்தற்றொழிலில் சித்திபெறுபவர் யாவரென ஆராயின் அவர் பிள்ளைகளுடன் எப்பொழுதுங் கடுகடுப்பாயிராமல் வேண்டிய நேரங்களில் அவர்கள் விளையாட்டில் மகிழ்ந்தும் எப்பொழுதும் உற்சாகமுடையவராயும் இருப்பவரே. உபாத்தியாயர் தாந்தொடங்குங் காரியங்களில் முயற்சியும் ஆவலுங்கொள்ளுதலில்லையாயின் மாணாக்கரும் அங்ஙனமே மந்தகுணமுடையராவர். அதனாலன்றோ உபாத்தியாயர் முயற்சியுடையராதலோடு காரியநிர்வாகத்தில் துரிதமுடையராதலும் இன்றியமையாதாயிற்று. முயற்சியுடைமை என்றால் பள்ளிக்கூடத்தில் ஓயாது சத்தமிடுதலுங் காரணமின்றி அங்கும் இங்குந் திரிதலும் அன்று.

9. உபாத்தியாயனிடத்து இருத்தற்பாலதாய முக்கிய குணங்களில் தயாளமும் ஒன்று. அஃதில்லாவழி மற்றைய குணங்கள் பிரகாசித்தலும் அதிக பயன்படலும் இன்று. பிள்ளைகளின்றன்மையை

அறிந்து அவர்கள் செய்கைகளிலும் வழிகளிலும், அவர்கள் சுகத்திலுந்துக்கத்திலுங் கலந்து பரிவுகூர்பவரே பிள்ளைகளைத் தம் கைவசப்படுத்துங் கற்பித்தலில் மேலாந்தரம் அடைபவர். அப்பரிவும், படிப்பித்தலில் தமக்கு இயல்பாயுள்ள விருப்பங்காரணமாக அத்தொழிலைப்பூண்ட உபாத்தியாயரிடத்தே இயல்பானமையும். வேறு தொழிலொன்றும் இயற்றமுடியாமையினாலாதல் வேறுதொழிலிற் பிரவேசித்தற்கு வழியாக ஆதல் உபாத்தியாயராக வருபவர்க்கு அத்தொழிலில் ஒருபொழுதும் பிரீதி உண்டாகாது. ஆகவே அவர் கற்பிக்கும் முறைகளில் தேர்ச்சியடைதலும் பிள்ளைகளிடத்துத் தயை உடையராதலும் அரிதாம். பள்ளிக்கூடமல்லாத இடங்களிற் பிள்ளைகளைச்சந்தித்தால் முகத்தைத்திருப்பிக்கொள்ளலும், மௌனமாய் இருத்தலும், மரியாதையின்றி அழைத்தல்வசனித்தலும் உபாத்தியாயர் செல்வாக்கைக்குறைப்பன. வேண்டியநேரங்களிற் பிள்ளைகளுடன் நேசத்தோடு கலந்துபேசல் தமக்கு இழிவு என்று எண்ணுபவர் நல்லாசிரியராகார். ஆனால், பிள்ளைகள் தமக்குச்சிறிதும் அஞ்சாது மிகநெருங்கித் தோழமை கொண்டாடும்படி மறைப்பின்றி அவர்களுடன் குழைந்து நடத்தல் முற்றும் நீக்கற்பாலது; அதனால் உபாத்தியாயர் கௌரவமும் அதிகாரமுங் கெடுதலின், மாணாக்கன் தன்னை "அழலினீங்கான் அணுகான் அஞ்சி" ஒழுகுமாறு அவனை நடத்துதலுந்; தானும்,

> "புரைசெறியும் பெருஞ்சீலப் பொலிவினகலவுந் திறலால்
> உரைசெறியவணுகவுமோர்ப்படானாகி.........................."

இருத்தலும் உபாத்தியாயனுக்கு இன்றியமையா.

(இன்னும்வரும்.)

தி. சதாசிவ ஐயர்.

*ஆசாபாசங்களும் அவைகளையொறுத்துத்தற்கடிதலும்.

ஆமினிமூப்பு மகன்றதிளமையுந்
தாமினிநோயுந் தலைவரும்—யாமினி
மெய்யைந்து மீதூர வைகாது மேல்வந்த
வையைந்து மாய்வ தறிவு.—புறப்பொருள் வெண்பாமாலை.

தவந்தனின் மிக்கதொன் றில்லை தாவில்சீர்த்
தவந்தனை நேர்வது தானு மில்லையாற்
றவந்தனி னரியதொன் றில்லை சாற்றிடிற்
றவந்தனக் கொப்பது தவம தாகுமே.—கந்தபுராணம்.

எவ்வகைப் பொருள்களு மீய வல்லது
செவ்விய தவமதே தெரியின் வேறிலை
யிவ்வுல கத்திலஃ தியற்று கின்றதே
யுவ்வுட லெடுத்தபே றுறுதி யென்பவே.—திருக்கூவப்புராணம்.

பிறந்தனர் பிறந்து சாலப் பெருகினர் பெருகிப் பின்னை
யிறந்தன ரென்ப தல்லா லியாவரு மின்று காறு
மறைந்துயிர் வாழா நின்றா ரில்லையால் நெஞ்சே வாழி
சிறந்தது தவத்தின் மிக்க தின்மையே சிந்தி கண்டாய்.—சூளாமணி

உடம்புங் கிளையும் பொருளும் பிறவுந்
தொடர்ந்துபின் செல்லாமை கண்டு—மடங்கித்
தவத்தொடு தானம் புரியாது வாழ்வா
ரவத்தங் கழிக்கின்ற நாள்.—அறநெறிச்சாரம்.

நீலவிதானம்போற்கவிந்த சேணின் உச்சிமுகட்டெழுந்த செங்கதிரோன் கடலாடை சூழ்ந்த காசினியிற் கவிந்து நிறைந்த காரிருணீக்கிக் கட்புலனுக்கு விடயமாயுள்ள எப்பொருளையும் கடிது விளக்கி அதிற்காணப்படும் பறப்பன, இருப்பன, ஊர்வனவாதி கணக்கற்ற ஜீவகோடிகளின் கண்ணொளிக்கும் ஒளியேயாகி உணவு சீதோஷ்ணம் காலவேற்றுமை முதலிய உயிர்வாழ்வதற்கு இன்றி

---

* இவ்வியாசம் மதுரைத் தமிழ்ச் சங்கத்து எட்டாம்வருஷோற்சவ தினங்களுளொன்றாகிய 1909-௵ மே-௴ 25௳ கூடிய வித்துவச்சபையில் கீழக்கரை, ஸ்ரீமத்-M. ஜோஸப்டையாஸ் அவர்களாற் படிக்கப்பட்டது.

யமையாச் சாதனங்களனைத்திற்கும் காரணமாவதேபோல், சத்தியசூரியனாகிய கடவுள் எமது இருதயகமலத்துதித்து அகவிருணீக்கி, ஞானப்பொருளை விளக்கிக்காட்டி, யாம் ஞான உயிர்பெற்று முத்தி உலகத்தில் அவரோடு முடிவில்லாத நித்தியகாலம் வாழ்வான்வேண்டி, எமது ஞானக்கண்ணின் ஒளிக்கும் ஒளியாகி, ஞானப்போஜன முதலிய ஆன்ம உயிர்பிழைப்பதற்கு அவசியமான சாதனங்களனைத்தையும்பெற, அவரொருவரே ஏதுவாகின்றாரென்பது வெள்ளிடைமலைபோல் தெற்றெனவுய்த்துணர்தற்பாலது. அண்டகோள சராசரமாதி அவரியற்றிய சிருட்டிப்பொருள்களனைத்தும் அவரையே பிரசங்கிக்கும் உபகரணங்களாகின்றன. இவ்வுலகின்கண் அவரொருவரையே யாம் எல்லாவற்றினுமேலாகப் பொதுவறத் தனிநின்று சிநேகித்து வணங்கி வழிபட்டு அவரியற்றிய சிருட்டிப்பொருள்களை அவர் தந்த ஞான ஒளியால் உற்றுநோக்கியுள்ளவாறுய்த்துணர்ந்து, அப்பொருள்களின்மேல் நமக்குள்ள பற்றொழித்துத், தற்பற்றும் அறச் சுயபரித்தியாகம் பண்ணி ஆசாபாசங்களை யறுத்துத் தன்னையொறுத்தல் ஆவசியகம் ஆதலின், ஆசாபாசங்கள் எவை? அவைகளை யொறுத்துத் தற்கடிவதற்கான வழிவகைகள் இவ்வியாசத்தால் ஈண்டு ஆராயத்தக்கன.

மனிதனுடைய ஆத்துமா மேலமிசம், கீழமிசமென, இரு பகுதியுடைத்து. இவைகளில் மேலமிசத்தை நீதிநியாய மென்றும் கீழமிசத்தை இந்திரிய இச்சை என்றும் வேதசாஸ்திரிகள் கூறுப. கடவுள் ஆதிமனிதனைப் பரிசுத்தமும் ஜென்மநீதியுமுள்ள பாக்கியமான நிலைமையில் உண்டாக்கினார். மேற்குலத்தானுக்குக் கீழ்க்குலத்தானும், யஜமானுக்கு ஏவலாளனும் கீழ்ப்பட்டிருக்கிறதுபோல், அப்போது அவனிடத்தில் மேலமிசத்துக்குக், கீழமிசம் கீழ்ப்பட்டிருந்தது. இதனாலன்றோ, வேதாகமத்தில் கடவுள் மனிதனை ஒழுங்குள்ளவனாகப் படைத்தாரென்று கூறப்பட்டுள்ளது. நாமிப்போது ஆசாபாசங்களுக்கு அடிமையாயிருப்பதுபோல அவனை ஒழுங்கற்றவனாக அப்போது அவர் சிருட்டிக்கவில்லை. இந்திரிய இச்சை வருத்தமும் விரோதமுமில்லாமல் நீதிநியாயத்துக்குப் பணிந்திருந்தது. மனிதன் தன்சிருட்டிகர்த்தாவை மனவுருக்கமாய்ச் சிநேகித்து, உற்சாகத்தோடு ஊழியம் பண்ணிக்கொண்டுவந்தான். அவ்வாறியற்றுவாத, ஊறுபண்ண அவனிடத்தில் ஓர் ஆசாபாசமுமில்லை. இவ்வாறு இந்திரிய இச்சை நீதிநியாயத்துக்கு முற்றுங் கீழ்ப்படிந்திருந்ததினால் மனிதனிடத்தில் அக்காலத்தில் ஒழுங்கற்றபற்றுதலொன்றும் உதிக்கவே கூடாதிருந்தது. அவன்வேண்டுமென்று விரும்பி வரவழைத்தாலொழிய, அவனிடத்தில் சோதனையொன்றும் வருதல் இயையாது. அந்நிலையில் காமக்குரோதமாதிய உட்பகைகளாலும் மற்றெவ்வித கெட்டபற்றுதலும் அவனிடத்தில் வரவே கூடாது. ஆயினும் மனிதனுடைய ஜென்மநீதிநியாயம் கடவுளுக்கு விரோதமாயெழுந்து அவருடைய கற்பனையை மீறிப் பாவஞ்செய்தது. அந்நாள் தொடர்ந்து நமது நாட்டமின்றியே வெறுக்கத்தக்க தீயமனப்பற்றுதலும் குழப்பஞ்செய்யும் வஞ்சகமான பாவச்சோதனையும் நமது இந்திரிய இச்சையில் உண்டாகி நம்மைவருத்துவதாயுணர்கின்றோம்.

இதனாலேயே, அர்ச் - சின்னப்பர் (St. Paul) "நான்விரும்புகிற நன்மையைச் செய்கிறதில்லை; விரும்பாததீமையைச் செய்கிறே"னென்று இரக்கமுற்றுச்சொன்னார். ஆதிமனிதன் தேவகட்டளையைமீறிப் பாவஞ்செய்யாதிருந்தால் ஆத்மா வேண்டுமென்று விரும்புவனவெல்லாவற்றையும் சரீரம் வருத்தமும் விரோதமுமின்றி எஞ்ஞான்றும் செய்துவர இயல்புடைத்தாகும். ஆனால் மேற்சொன்ன தன்மைகெட்டுப்போனசரீரம், அல்லது இந்திரியவிச்சை, இப்போது ஆன்மாவின்மேலேறி அதை அமிழ்த்தப் பார்க்கின்றது. ஆன்மா செய்துமுடிக்கக் கருதும் அநேக அருங்காரியங்களை முடிவுறாவண்ணம், சரீரம் தடைபண்ண எத்தனிக்கின்றது. சரீரமென்னும் முரட்டுப்பாய்மாவூர்ந்து ஆன்மா நெடுநெறிச் செல்லவேண்டியவிடத்தே அது பன்முறை செல்லமாட்டாது களைத்துக் காலிடறித் தத்தியும் சிலசமயத்துச் சிறிதும் அடங்காமல் அற்பக்காரியத்தின் பொருட்டு அயர்ந்து நின்றும் பொள்ளென விழுந்து போகாதுபடுத்துக்கொள்ளும். மனிதன் தன் சிருட்டிகர்த்தாவுக்கு அமைந்து பணிந்தொழுகாக் காரணத்தானே நீதீச்சுரனாகிய நிர்மலகடவுள் அவன் சரீரம் அவனுக்கடங்காமல் இந்தி

ரிய இச்சை இடைவிடாதவனோடு போராடல், பொருந்துமென்று, விடுத்தனர்போலும். “பாவத்தினால் மனிதன் ஞானவரங்களையுமிழந்து சுபாவவரங்களும் குன்றப்பெற்றா”னென்று வேதசாஸ்திரிகள் கூறுப.

ஏனெனில், அவன் சென்மநீதியையும் அதற்குரிய ஞானவரங்களையும் இழந்துபோனதுமன்றி சுபாவ வரங்களும் மிகுதியாய் அவனிடத்தில் மாறிப்போயின. எங்ஙனமெனின், அவன் புத்திகுன்றினது; மனது பலவீனப்பட்டது; நன்மையின்மேல் அவனுக்குள்ள ஆசைதளர்ந்தது; தீமையின்மேல் அவனுக்குள்ள சார்புபலன் கொண்டெழுந்தது; அவனுடைய ஞாபகம் குறைந்துபோயிற்று. உரூபிகரம் கலக்கமுற்றுச் சிதறிப்போய் எப்பக்கத்தினுஞ் சுற்றித்திரிகின்றது. இதனாற்பாராமுகமில்லாமற் கவனத்தோடு அற்பஜெபமுஞ்செய்வதற்குக் கூடாமற் போகின்றது. அவன் ஐப்புலன்களில், நன்மையாயிருந்தனவெல்லாம் நீங்கிப்போயின; அவன்சரீரத்திற் கெட்ட ஆசாபாசங்களும் துர்க்குணங்களுமே நிறைந்திருக்கின்றன. முடிவாக அவன் சுபாவமுழுதும் மாறிக்கெட்டுப்போனதாற், பாவஞ்செய்தற்கு முன் எளிதாயிருந்தது; பாவத்துக்குப்பின் கூடாதகாரியமாயிற்று.

ஆதிமனிதன் பாவத்துக்குமுன் அவன் தன்னைப்பார்க்கிலும், கடவுளை அதிகமாய்ச் சினேகித்தான். பாவத்துக்குப்பின், அவனைக் கொண்டு நாமெல்லாரும், கடவுளைப்பார்க்கிலும் நம்மை நாமே, அதிகமாய்ச் சிநேகிக்கின்றோம். சரியாகச்சொல்லவேண்டுமாகில் நம்மை மாத்திரம் சிநேகிக்கின்றோமென்று கூறற்பாலது. நமது மனப்போலநடந்து நம்மிச்சையை நிறைவேற்றி நமது ஆசாபாசம் நீதிநியாயத்துக்கும் தேவகற்பனைகளுக்கும் எவ்வளவு விரோதமாயிருந்தாலும் அதன்சொற்படி கேட்டுநடப்பதே நமக்குப் பிரியமாயிருக்கின்றது. இந்தக்குழப்பங்களுக்கெல்லாம் காரணமாயிருக்கிற சென்மப்பாவம் கடவுளை வழிபட ஞானப்பிறப்பின் வழியாய் நீங்கிப்போயினும், நீதிநியாயத்திற்கும் கடவுளுக்கும்விரோதமாய் இந்திரிய இச்சையில் உண்டாகிற விரோதம் நம்மைவிட்டு அகலுவதில்லை.

(இன்னும் வரும்.)

உ

திருச்சிற்றம்பலம்.

கலைசைப்பெருந்தேவித் தாயாரென்னும்

இலக்குமி தோத்திரப்பதிகம்.

இது
தொட்டிக்கலைசைக் கேசவமுதலியாரவர்கள் வேண்டுகோளின்படி
திருவாவடுதுறை யாதீனத்துத் தொட்டிக்கலைசைச்
சுப்பிரமணியசுவாமிகள் அருளிச்செய்தது.

திருமருவு கார்முகிற் பின்னல்செறி கூந்தலுஞ் சிந்துரப் பிறைந னுதலுஞ், சேல்விழியு மொண்பவள முத்தமுங் காந்தளஞ் செங்கையுஞ் சங்கமிடறுங்,—குருமணிக்கிம்புரிக் குஞ்சரக் கோடனைய கொங்கையுங் கொடிநு ணிடையுங், கோகநக பதமும்யான் கண்டுதெரி சித்துனைக் கொண்டாட வருள்புரிகுவா,—யரமகளி ரிந்த்ராணி கலைவாணி யயிராணி யனைவரும் புகழ்கல் யாணி, யாரணி யகண்டபரி பூரணி புராதநி யனந்தகுண நாராயணி,—வரியளிக ளிசைபாட மயிலாடு சோலைதட வாவிசூழ் கலைசை நகர்வாழ், வரதர்நங் கேசவர்த மிதையசெந் தாமரையின் வளர்பெருந் தேவியனையே. (௧)

சொல்லாரும் வேதாந்த சித்தாந்த மெனவோங்கு சோதியருவுருவமாதாய்ச், சுத்தநித் யானந்த சத்துவ குணத்துடன் றோன்றுமால் மனைவியாகிப்,—பல்லா யிரங்கோடி யண்டமோ வொன்றினிற் பதினாலு லோகமுந்தனுட், பானுமதி முதலான கடவுளுயிர் யாவையும் படைக்கமல ரயனை யீன்றா,—யெல்லா மணந்தின்ப முற்றுயிர்கள் பல்கவே யெழில்வசந் தனையளித்தா, யெவ்வுயிரை யும்புரந் தாயுனது மகிமையை யாவரோ யுணரவல்லார்,—மல்லார் மதிற்கொடிகள் செங்கதிர்ப் பைம்புரவி வருமிளைப் பாற்றுகலைசை, வரதர்நங் கேசவர்த மிதையசெந் தாமரையின் வளர்பெருந் தேவியனையே. (௨)

எழுவகைத் தோற்றத்தி னெண்பத்து நான்குநூறாயிரம் பேதவுடல்பெற், றிளமைபிணி மூப்பல்ல லுற்றரிவை யர்க்குநித மேவல்செய் தார்வமுந்நீர்,—மூழ்கி வஞ்சனைகளவு கொலையாதி செய்தன்பின் முறைமுறை பணிந்துநின்றாண், முன்னுதை நாயனேன் றன்

னைநின் னடியருடன் றனியாது வைத்தாளுவாய்,—பழைய * கொல்லாபுரக் கமலையிந் திரைவிமலை பதுமைகோ கநகையெனவே, பணிபாகவதர்மனத் திட்டகா மியநல்கு பரஞான மோன வடிவே,—பழையங்கிளிசுருதி வசனங்கள் பயில்காவின் மதிதவழ் வளக்கலைசைவாழ், வரதர்நங் கேசவர்த மிதையசெந் தாமரையின் வளர்பெருந் தேவியனையே. (௩)

புலிகரடி கண்டீர வம்பாந்தள் பேய்திரி பொருப்படவி நீபுகுந்தாற், புதியவள நாடுநக ரங்களா யிணையிலாப் புத்தேளி ருலகமாகு,—மலிகுருடு செவிடூமை முடவர்மூக் கறைகயவ ரதிகபிணி யாளரேனு, மம்மநின் னருள்பெறுவ ரேனுலக மூன்றிற்கு மரசாகி யினிதுவாழ்வா,—ரொலிகடற் புவியினடு வணதெய்தி னிருதலையு மோங்குநின் பொருளிலார்க்கிவ், வுலகமிலை யென்றறிஞ ரோதலாற் கண்காட்சி யுற்றமெய்த் தெய்வநீகாண்,—மலிபலா வாழைதே மாங்கனித் தேன்பெருகி வயறொறும் பாய்கலைசைவாழ், வரதர்நங் கேசவர்த மிதையசெந் தாமரையின் வளர்பெருந் தேவியனையே. (௪)

உருவென்று மருவென்று மொளியென்று மிருளென்று மொன்றிரண் டாயதென்று, முளதென்று மிலதென்று முயிர்விந்து நாதமா யோங்கார மானதென்றும்,—பருதிமதி கனலியைம் பூதமென் றுங்கதிகள் பலவென்றும் வேதாகமம், பகருநின் வடிவம்யான் கண்டுதெரிசிப்பதெப் படியென்று மிசவுமுள்ள,—முருகின்றந் தலம்வந்து தடுமாறு சிறியனேற் குண்மையறி வித்தருதமு, முனதுஞா னானந்த வெள்ளந் தனிற்றிளைத் தோங்கநின் கிருபைபுரிவாய்;—மருவுசந் திரகாந்த மணிமாட நிலவுலவ மழைசொரி திருக்கலைசைவாழ், வரதர்நங் கேசவர்த மிதையசெந் தாமரையின் வளர்பெருந் தேவியனையே.

பரமகுண் டினபுரப் பூசுரச் சாரமதி பாவையா வணிமதியினிற், பகர்பூர ணைக்குமுன் வருசுக்ர வாரமிகு பரிவாக வரலக்குமி,—விரதம்பு ரிந்திந்த்ர செல்வமுற் றாளென்ன வெள்ளிமலை வாழுமலனர், மெய்ப்பாதி குடிகொளுமை யாட்குமுன் னுரைசெய்மேதகு புகழ்

---

* கொல்லாபுரம் - விந்தகிரியிலுள்ளது; காசிகாண்டம், அகத்தியர் விந்தவரையடைந்த அத்தியாயம் ௨௬-வது கவியிற்காண்க.

ச்செல்வியே,—காரான தாருவே பிறவிபிணி லணுகாத கதியுதவு பதுமநிதியே, கருதடியர் மனதிருளை திமிரமடர் பானுவே கருணைமழை பொழிமேகமே,—மருவனச மலர்மீது வெண்டேவி யன்னநா மகளென விளங்கு கலைசை, வரதர்நங் கேசவர்த மிதையசெந் தாமரையின் வளர்பெருந் தேவியனையே. (௬)

சீவில்லி புத்தூர் விருந்தா வனத்தடத் திருமலரி னவதரித்துத், தேறுபெரி யாழ்வார் வளர்த்திட வரங்கேசர் தேவியென வீற்றிருந்தாய்,—தாவில்பாற் கடலிற் பிறந்து நாராயணர் தம்மனைவி யாயிருந்தாய், சனகன் றவப்புதல்வி யாய்வந்து சீராமர் தாமணஞ் செயமகிழ்ந்தாய்,—பூவுலகி லட்டலக் குமியாகி யெங்கணும் பொற்புற விளங்கிநின்றாய், புவனச் சராசர வுயிர்க்குமுயி ராய்கடவுள் புகலினுனை யன்றியுளதோ,—மாவில்வ முல்லைமல் லிகைசந்த னம்புன்னை மலர்மணநிறைந்தகலைசை, வரதர்நங் கேசவர்த மிதையசெந் தாமரையின் வளர்பெருந் தேவியனையே. (௭)

கதியருளு நின்பாத விணைகளிற் பன்மலர்கள் கையா லெடுத்தர்ச்சியேன், காலையினு மாலையினு நின்கோயில் சூழ்கிலேன் கண்ணா லுனைத்தெரிசியேன்,—பதின்மராம் வார்கடிரு வாய்மொழியி னாலுனைப் பலகாலு மேதுதிசெயேன், பத்திபுரி பாகவதர் கூறுநின் புகழினைப் பரிவாய் மகிழ்ந்துகேளேன்,—விதிமுறைசொ னூலுணர்ந் துனைநித் யானந்த மெய்யினைத் தியானித்திலேன், வினைசை யாற் பொய்யை மெய்யென்று நம்பியுண் மெலிவேனை யாட்கொள்ளுவாய்,—மதிநிலவி னலருமுற் பலமலர்க ளிரவினெடு மணிவிளக் கொளிசெய் கலைசை, வரதர்நங் கேசவர்த மிதையசெந் தாமரையின் வளர்பெருந் தேவியனையே. (௮)

திருவரங் கந்தஞ்சை தென்னாகை யிந்தளூர் சேறைநறை யூரழுந்தூர், திருக்கண்ண மங்கையுறை யூர்தெற்றி யம்பலந் திருக்கண்டி யூர்குடந்தை,—குருகூர் திருப்பேரை திருமாலி ருஞ்சோலை கோளூர் குறுங்குடிவர, குணமங்கை மோகூ ரனந்தபுரம் வட்டாறு கோவலூர் திருவேங்கட,—மருணவல் லிக்கேணி கச்சிதிரு நின்றவூ ரயோத்திபாற் கடல்வைகுந்த, மாகிய திருப்பதியின் வெவ்வேற

தாயன்பரர்ச்சனைக் கருண்முதல்விநீ,—மரகதமிலங்குசெய் குன்றில் வரை மகளிரென மகளிர்விளை யாடுகலைசை, வரதர்நங் கேசவர்த மிதையசெந் தாமரையின் வளர்பெருந் தேவியனையே. (௯)

*பொன்னிறப் பதுமப் பொகுட்டுநான முகனெண்ணில் புவனம் படைத்திடுவதும், பூவைமணி வண்ணமா லுலகம் புரப்பதும் புனிதமதி யணிவேணியார்,—முன்னிரு வினைப்பகுதி தேர்ந்துயிர் செகுப்பது முகிலூர்தி யரசாள்வதும், மூதறிவு கல்விநல் லழகுபுய பலவீர முழுதுமுடை யவராவது,—பின்மையி னிரந்துண்ட வண்செல்வனாவது மிரவுபக லுனையேதுதித், தின்பவெள் ளம்பெருகு நின்கருணை விட்சணத் தெள்ளளவு பெற்றவியல்பாம்,—வன்னமணி மேடையுந் தேவாலயங்களும் வளவயலு நிறைகலைசைவாழ், வரதர்நங் கேசவர்தம் மிதையசெந் தாமரையின் வளர்பெருந் தேவியனையே. (௧௦)

உன்னுடல மெண்கோயி லொளிர்விளக் கைம்பொறிக ளுனதாவி யெனதுவடிவம், முனதுசெய லெனதுசெய லென்றுநீ பல நூலுணர்த்தியுந் தெளியாமலே,—யென்னெனதெனச்சொலு மவாவினா னெடுநா ளிறந்தும் பிறந்துமுழலு, மெளியே னிடத்துனது கருணை கடாட்சம்வைத் தெனையடிமை யெனவாளுவாய்,—பொன்னிதழ் விரைக்கமல நாண்மல ரெடுத்துனைப் பூசைபுரி கேசவமுகில், புரந்தரன் செல்வமும் மார்க்கண்டராயுளும் பூண்டுலகின் வாழவருள்வாய்,—மன்னர்கெடு வீதியு மன்னமிடு சாலையும் மாதவரு மேவுகலைசை, வரதர்நங் கேசவர்தம் மிதையசெந் தாமரையின் வளர்பெருந் தேவியனையே. (௧௧)

முற்றிற்று.

பொ. பாண்டித்துரை.

---

* திரிமூர்த்திகள் செய்தொழிலும் இலக்குமியருளாலாமென்பதனைக் காசிகாண்டம், அகத்தியர் வித்தவனாயடைந்தவத்தியாயம், ௨௬-வது கவியிற் கூறியிருத்தல்காண்க.

௨

நல்லொழுக்கம்.

ஆறும் அதிகாரம்.

[ஸ்ரீமத்-இலக்குமணப்போற்றிகள் மொழிபெயர்த்தது.]

(முற்றொடர்ச்சி.)

டாக்டர் ஜான்ஸன் (Dr. Johnson) என்பவர்தம் தேகஅமைப்பின்படி துக்கத்திற்குட்பட்டவராய், தம் பாலியவயது முதற்கொண்டு, ஒருவரும் படாதவண்ணம் துன்பப்பட்டிருந்தபோதிலும், நல்ல அல்லது கெட்டகுணத்தில் ஒருமனிதன் இருப்பது அநேகமாகத் தன்மனதைப்பொறுத்ததென்று சொன்னார். பொறுமையும் திருப்தியுமான குணங்களையாவது, அல்லது முணுமுணுப்பும் அதிருப்தியுமான குணங்களையாவது, நாமே பழக்கிக்கொள்ளலாம். சொற்பத்தீமையைப் பெரிதாகமதிக்கவும், பெரியபாக்கியங்களை அற்பமாக மதிக்கவும் நாமே பழக்கிக்கொள்ளலாம். அற்பத்துன்பங்களுக்கு இடங்கொடுப்பதால் நாம் அவைகளுக்கு இரையாகப்பவிக்கலாம். இவ்வாறு நாம் நம்மைச் சந்தோஷசுபாவத்திலும், துக்கசுபாவத்திலும் அப்பியாசம் செய்துகொள்ளலாம். உள்ளபடியே பொருள்களைச் சந்தோஷமாகப்பார்ப்பதும், ஜன்மத்தை நம்பிக்கையுள்ளதாக நினைப்பதுமாகிய வழக்கமானது மற்று எந்தப்பழக்கத்தையும்போல நம்மில் வளரும்படி செய்யப்படலாம். எந்தக்காரியத்திலும், நல்லபாகத்தையே பார்க்கும் வழக்கமானது வருஷத்திற்கு ஆயிரம் பவுனைவிட எவ்வளவோ அதிகம்பெறுமானதென்று சொல்வது டாக்டர் ஜான்ஸனுடைய புனைந்துரையன்று.

வைதிகனுடைய ஒழுக்கமானது தன்னைக்கண்டிப்புடன் சிக்ஷித்து அடக்கிக்கொள்ளும் தன்மையால் வியாபிக்கப்பட்டிருக்கிறது. அவன் அமைதியாயும் ஜாக்கிரதையாயும் இருக்கவும், தீமையைவிலக்கவும், நன்மையைச்செய்யவும், ஊக்கத்துடன் நடக்கவும், மரணத்திற்குக் கீழ்ப்படியவும், தீமையானகாலத்தில் எதிர்த்துநிற்கவும், எல்லாவற்றையும் செய்துவிட்டு நிலைத்துநிற்கவும், ஞானக்கேட்டை

யும் இவ்வுலகத்தின் அஞ்ஞான அரசர்களையும் எதிர்த்துப்போராடவும், பக்தியில் வேரூன்றிக் கட்டுண்டுநிற்கவும், நன்மைசெய்வதில் இளையாமல் நிற்கவும் உரியவனாகின்றனன். ஏனென்றால், அவன் தளர்ச்சியில்லாதிருந்தால் தக்ககாலத்திற பலனையடைவான்.

ஒரு காரியஸ்தனாகிய புருஷன் கண்டிப்பான சட்டத்திற்கும் ஒழுங்கிற்கும் அவசியம் கீழ்ப்படிதல்வேண்டும். ஆன்ம ஒழுக்கத்தைப்போன்று வேலையும் சன்மார்க்க சாதனத்தால் நடத்தப்படுகிறது. இருவகையாலும் குணத்தை ஒழுங்குபடுத்தி ஜாக்கிரதையுடன் தன்னைச் சிக்ஷித்துக்கொள்வதாலேயே பெரிதும் காரியசித்தி உண்டாகின்றது. அது அறிவுள்ள புருஷனுக்குத் தன்னைமட்டுமன்று, பிறரையும் அடக்கி ஆளுதற்குத்தகுதியையுண்டாக்குகின்றது. சகிப்பும் மனஅடக்கமும் நம் ஒழுக்கத்தின் மார்க்கத்தைப் பண்படுத்தி, மற்றப்படி அடைபட்டிருக்கத்தக்க அனேக வழிகளைத்திறக்கின்றன; தன்மரியாதையும் அவ்வாறேயாம். ஏனென்றால், மனிதர்கள் தங்களைத்தாங்கள் மரியாதை செய்துகொள்ளுகிறதுபோலவே பிறருக்கு மரியாதைசெய்வது வழக்கமாகும்.

சொந்தக்காரியங்களுக்கு உரியதுபோலவே இராஜகாரியங்களிலும் ஏற்படுகின்றது. அவ்விஷயத்தில் குணத்தாலும் ஒழுக்கத்தாலும் காரியசித்தியடைவதுபோலப் புத்தி சாமர்த்தியத்தாலும் யூகத்தாலும் அவ்வளவு அடைவதில்லை. ஒருமனிதனுக்கு மனஞ்சுவாதீனமில்லையேல் அவனுக்குப்பொறுமைகுறையும்; சாமர்த்தியம் குறையும். தன்னையாவது பிறரையாவது அடக்கியாளும் சக்தியற்றவனாவான். மிஸ்டர். பிட் (Mr. Pitt.) என்பவர் இருக்கும்போது, ஒரு பிரதான மந்திரிக்கு இன்றியமையாத இலட்சணம், யாதெனச்சம்பாஷிக்கையில் ஒருவர், “வாக்கு வளம்”, என்றனர். மற்றொருவர் “அறிவு” என்றனர். பின்னொருவர் “உழைப்பு” என்றனர். பிட் (Pitt) என்பவர் “அப்படியன்று; பொறுமைதான்” என்றனர். பொறுமையாவது மனவடக்கமேயாம்; அக்குணத்தில் அவரெல்லாரையும் விஞ்சினின்றனர். அவருடைய இஷ்டர் ஜார்ஜ் ரோஸ் (George Rose.) என்பவர் எந்தக்காலத்திலும் ஒருபொழுதாவது பிட் (Pitt.) என்பவர் கோபப்படக்காணவில்லையென்று சொன்னார். ஆகிலும் பொறுமையானது சாதாரணமாய் மந்தமான பிரகிருதியாக மதிக்கப்பட்டபோதிலும், பிட் (Pitt) என்பவர் பொறுமையோடு ஆலோசனையிலும் செய்கையிலும் சுறுசுறுப்பும் பலமும் விரைவும் ‘உடையவராயிருந்தனர்.’

பொறுமையாலும் மனவடக்கத்தாலுந்தான், இயல்பாயுள்ள வீரத்தன்மை பக்குவமடைகின்றது. இவைகள்தான் மஹானான ஹேம்ப்டன் (Hambdon) என்பவருடைய பிரதான இலட்சணங்கள். அவரது மேன்மையான குணங்கள், சாதாரணமான இராஜதந்திரம்பற்றிய அவருடைய சத்துருக்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்டன. எவ்வாறெனில், அருமையான குணமும் விநயமும் இயற்கையான களிப்பும் தீக்ஷணமும் எல்லாவற்றினும் இனியசுமுககுணமும் அவரிடத்தில் நிகழ்ந்தனவென, கிளாரெண்டன் (Clarendon) விவரித்திருக்கின்றனர். அவர் பட்சமும், தைரியமும், சாந்தமும், குற்றப்படாத சம்பாஷணையுமுடையவர். எல்லாரிடத்திலும் அவருக்கு அன்பு ஜொலித்துக்கொண்டிருந்தது. அவர் அதிகவார்த்தை பேசுகிறதில்லை. ஆனால் குற்றமற்ற ஒழுக்கமுடையோராகையால் அவர் உச்சரித்த ஒவ்வொரு வார்த்தையிலும் சத்து உண்டு. அவரைவிட எந்தமனிதனுக்கும் தன்னைத்தானே அடக்கும் சக்தி விசேஷமாகக்கிடையாது; அவர் தன் ஆகாரத்தில் மிகவும் பட்டாயிருந்தனர். தன் இச்சைகளையும் ஆசாபாசங்களையும் விசேஷமாக அடக்கியாண்டனர். ஆகையினாலே பிறர்களுடைய குணங்கண்மீது விசேஷசக்தியுடையவராயிருந்தார். ராஜதந்திர காரியத்தில் வேறு எதிரியாகிய, ஸர் பிலிப்வார்விக் (Sir Philipwarwick) என்பவர் அவருடைய மிகுந்த வசீகரணசக்தியைப்பற்றித் தற்செயலாக ஒரு தர்க்கவாதத்தில் விவரிக்கிறபடி வருமாறு:—“மிஸ்டர் ஹேம்ப்டன் (Mr. Hampdon) உடைய, கூர்மையான புத்தியும், மிக்க அமைதியான குணமும், சுருக்கவார்த்தையினாற்றடுத்து, மறுநாட் காலைப்பொழுதுவரை எங்கள் கோபாவேசமான தர்க்கவாதத்தைத் தாமதிக்கும்படி செய்யாவிடில், நாங்கள் ஒருவர் மற்றொருவரின் சிகையைப் பிடித்து, ஒருவர் மற்றொருவரின் குடலுள் கத்தியைப்புகுத்தியிருப்போம்.”

(தொடரும்.

உ

திருச்சிற்றம்பலம்.

பெரியபுராண அரும்பத விளக்கம்.

———:o:———

[பழைய ஏட்டினின்று எடுக்கப்பட்டது.]

(முற்றொடர்ச்சி.)

(௧௧௪௨) ஆங்கு காலத்தின் எய்தாத - அவ்விடத்திற் காலவரையறையிலடங்காத.

(௧௧௫௭) நாட்டப்படும் வேதமுறை ஒழுக்கத்தை ஆளுடையபிள்ளையாருக்கும் கூட்டுவதை மனங்கொள்வாராய்க்குற்றமற்ற வேதநெறிச்சடங்கு காட்ட வரும் யாகங்கள் பலவற்றைப்புரிவதற்கு ஒரு கன்னிகையை விவாகஞ்செய்தருளல்வேண்டுமென.

(௧௧௬௨) நாதர் - சிவபெருமான். போதும்-இயையும்.

(௧௧௮௬) கண்ட மனிதர்களும், கடிமணத்தைக்காணவந்தணைவாராகிய கொண்டவலிய வினைப்பரப்புக்கள் அவிழ்கொள்கையவான தொண்டருமாகிய இவர்களுடைய மனமும், முகமும் மலர்ந்தன.

(௧௨0௧) விபஞ்சிவீணை - விபஞ்சியாகியவீணை.

(௧௨0௬) அற்புத நிகழ்ச்சி பொருந்த அமைதலான், அவ்வமைவு, விவாகத்தின்மேற்செல்லும் அழகமைந்து விவாகத்தின் சாயைபோல.

(௧௨0௭) தவவரசாளவுய்க்கும் - வைதிகமார்க்கமாகிய அரசை ஆளும்படி உய்க்கின்ற.

(௧௨௧௪) முழங்கைப்பொட்டு - முழங்கையிலணியுமோராபரணம். புயவளையாகிய முத்தாபரணத்தை.

(௧௨௧௫) கழுத்தாரத்தையும், கண்டிகைமாலையையும் பொருந்த முத்துவடத்தையுமணிந்து.

ஸ்ரீ

(௧௨௧௬) நெற்றிமீது - நெற்றியின்மேல் முத்தின் திரளைச்சாத்தி, அதன்மேல் மகுடத்தையு மணிந்தார். இதனை இக்காலத்தார் திருக்கோகரணம் என வழங்குப.

(௧௨௧௭) திருவடையாளமாலை - உருத்திராட்சமாலை. செந்தாமரைமாலை பிராமணருக்குரியதென்க.

(௧௨௧௯) முனிவர் சுருதி-வேதம். தொண்டர்சுருதி-தேவாரம்.

(௧௨௨௨) திருஞானசம்பந்தசுவாமி அலங்கரித்துவரப்பெற்ற நம்பியாண்டார் நம்பியுடையமாடம்.

(௧௨௨௪) சூட்டுமுதலியவைகளையுடைய பவளக்கொடி என்றது இல்பொருளுவமை. மணிப்பூண், புனைபூண் என ஒட்டுக.

(௧௨௨௫) மறைமைந்தர் நவமணிமுதலியவீச, பெரிய முதியோர் கலசநீரை இருக்குடன்வீச.

(௧௨௨௬) கண்ணொளிவிளக்கம் மிக்கு ஆர்ந்த தோரணமென்க.

(௧௨௨) எதிரேற்றல் - ஒருசொல்.

(௧௨௫௩) வேறு திருவருளினால் மோட்சம்பெற வந்தவர்களும்.

(௧௨௫௭) திண்ணனவு - உறுதிப்பாடு.

ஏயர்கோன்கலிக்காமநாயனார் புராணம்.

(௧) மிகுந்த அழகியபுகழையுடைய சோழர்களது காவிரிநாட்டில் விளங்குகின்றபக்கத்தே பொன்னைப்பொழிகின்ற காவிரியின் வடகரைக்கீழ்ப்பக்கத்தே ஆடுகின்றபொலிவாகிய கொடிகட்டப்பட்ட மாடமிகுந்த அழகியநகரானது பெருமைதங்கிய திருப்பெருமங்கலமென்னும் பெயரையுடையது. நிலவும் அணிநகர், நீடிய அணிநகர் எனக்கூட்டுக.

(௨) யந்திரங்களின் வரிசைசூழ்வனவாகிய உறுப்புக்கள் மதிலைச்சூழ்வன. மலையைப்போல உயர்ந்தமாடங்களில் முகில்கள்படி

வன. ஆடவர்களுடைய குடுமியின்பரப்பு நஞ்சு சூழ்ந்தாற்போன்ற கண்களையுடைய பெண்களது தாமரைமலர்போன்ற மென்மையான காலிலுள்ள செம்பஞ்சு சூழ்வன.

(௩) விளங்குகின்ற ஒளியையுடைய அழகிய நெடியவீதிகள் விழவுநீங்காதன. கூட்டமான கூந்தலையுடைய பெண்களது நடனசபைகள் முழவுநீங்காதன. மங்கலம் பொலிகின்ற அழகியமுற்றங்கள் குழந்தை நீங்காதன. உயர்ந்த பெரியகுடிகள் உழவுநீங்காத நல்லவளத்தையுடையன.

(௪) அப்பெருமங்கலமென்னுமூரானது கங்கையாற்பொலிகின்ற சடைமுடியையும் நெற்றிநாட்டத்தையும் முகிலைப்போலவிளங்குகின்ற கண்டத்தையுமுடைய சிவனடியார்கூடிப்பெருமையால் பூமியில் சிவனுடைய பாதங்களைத்துதிக்கின்ற சிறப்போடும் சிவலோகமெனப்படுஞ் சிறப்பான்மிக்கது.

(௫) இந்த வாழ்வையுடைய பெருமங்கலத்தில் முதன்மையுடைய ஏயர்குடியானது நிலையாய் நீடியசோழருடைய சேனாதிபதிக்குடியாகும் பழமையே நிகழ்ச்சியோடுநிறைவது. அஃதன்றிக்காவிரிநாட்டில் வேளாண்மையிலுயர்ந்த அழகையுடையது.

(௧௦) ஒளிபொருந்திய வெள்ளியசந்திரனையணிந்த சிவபிரான் பிராமணராய்த் தருக்கத்தில்வென்று.

(௧௧) தீங்கரும்பின் - இனியசருக்கரை. படிசமைத்தல் - படிக்கட்டளையிடுதல்.

(௧௮) பனிமதிமுடியான்றே - குளிர்ந்தசந்திரனையணிந்த முடியையுடைய சிவபிரானன்றே.

(௨௩) பாங்கு - உரிமை.

(தொடரும்.)

ஜி. சதாசிவம் பிள்ளை.

---

1 - SEP 1909

உ
கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௭.] சௌமிய௵ ஆவணி௴ [பகுதி-௧௦.

பழந்தமிழ்ச்சரிதம்.

(முன்றொடர்ச்சி.)

போரிலிறந்த வீரர்க்குக் கல் நடுதல் என்னும் வழக்கு பழந்தமிழ்நூல்களுள்ளுங் கூறப்படுகின்றன. இவ்வீரச்செயலைப்போன்றே செய்ந்நன்றியறிதலையுந் தம்முயிரினு மோம்பத்தக்கதாகத் தமிழர் பழங்காலத்துக் கொண்டிருந்தனரென்பதைச் சில சாஸனங்களுந் தமிழ்நூல்களும் விளக்குகின்றன. இவ்வாறே இவர்களது பெண்மக்கள் உயிரினுஞ் சிறந்து தம் கற்பையே போற்றிவந்தனரென்பதைப் பழந்தமிழ்நூல்கள் பலவற்றுள்ளும் பரக்கக்காணலாம்.

இதுகாறும் விந்தியமலையின் றென்பாகத்தையடைந்த தமிழர் வேற்றுச்சாதியாரின் கலப்பின்றி மிக்க நாகரீகத்துடன் வாழ்ந்த அவர்களது வழக்க ஒழுக்கங்களை யெம் சிற்றறிவிற்கு எட்டியவண்ணமுள்ள ஆராய்ச்சிகொண்டு எழுதினோம். இன்னும் விரிக்கிற்பெருகுமாதலின், விரிவஞ்சி இதனை இங்ஙன் இம்மட்டோடுவிட்டு, இத்தமிழர் அன்னிய சாதியாரோடு கலந்த காலத்தைப்பற்றிச் சிறிது ஆராய்வோம்.

நாகரென்ற பெருவலிபடைத்த வகுப்பினரும், இயக்கரென்ற வகுப்பினரும் தென்னாட்டில்வந்து இத்தமிழரோடு கலந்ததாக வெளியாகின்றது. முன்னவராகிய நாகர்பழங்காலத்தில் இப்பரதகண்டம் முழுதும் வியாபித்திருந்தமையோடு இந்தியாவை யடுத்துள்ள

தீபங்கள் பலவற்றினும் பரவியிருந்ததாகப் பலநூல்களாலுமறியப்படுகின்றது. மற்ற இயக்கரென்ற வகுப்பினர் தெற்கே பரவியிருந்த வரலாறு வான்மீக இராமாயணத்திற் கூறப்படுதலோடு இற்றைக்கு 2500-வருடங்களுக்குமுன் இலங்கையிற் படையெடுத்துச் சென்ற "விஜயன்" என்னும் ஆரிய அரசன் அத்தீபம் இயக்கர்களானிரம்பியிருந்ததைக் கண்டனனென்றும், அக்குலத்துப்பெண்ணாயுள்ள "குவேனி" என்பாளை யவன் மணம்புரிந்தானென்று மிலங்கைப்பூர்வசரித்திரங்கள் நன்கு விளக்குகின்றன. இவ்வியக்கரைச் சீனர் "யூகி"என்றும், சிங்களர் "எக்கோ"என்றும், ஆரியர் "யக்ஷர்" என்றும் வழங்குவர். நாகர், இயக்கர் என்னும் இவ்விரு பெருஞ்சாதியாருந் தமிழருடன் கலந்தகாலம், ஆரியர் தமிழருடன் கலந்தகாலத்துக்கு முற்பட்டதென்றே விளங்குகின்றது. கலைகளினும், அரசுத்தொழில் நெய்தற்றொழில்முதலிய பலதொழில்களினும் விருத்தியடைந்திருந்த நாகரென்னுஞ் சாதியாரது கலப்புத் தமிழரை மிகவும் மேன்மைபெறச்செய்தது. நாகர் இயக்கரென்னு மிவ்விரு வகுப்பினரது வழக்கவொழுக்கங்கள் தமிழரிடத்துந், தமிழரது வழக்கவொழுக்கங்கள் அவ்வகுப்பினர்மாட்டுங் கலக்கக்காலாந்தரத்தில் அவ்விருவகுப்பினருந் தமிழருடன் ஒன்றுபடலாயினர்.

(தொடரும்.)

பொ. பாண்டித்துரை.

உ

திருச்சிற்றம்பலம்.

சைவாதீனமுந் தமிழும்.

(முற்றொடர்ச்சி)

பதினாறாவதுபட்டத்திலிருந்த சுப்பிரமணியதேசிகமூர்த்தி சேற்றூர்ச்சம்ஸ்தான வித்துவான்களாகவிருந்த கந்தசாமிக்கவிராயர், இராமசாமிக்கவிராயர், கல்லிடைக்குறிச்சிச் சிதம்பரநாதக்கவிராயர் முதலியபலர்களை யொருசாலைமாணாக்கராகவைத்துக் கற்பிக்கும்படி செய்வித்துத் தாமுமுடனிருந்து அவ்வாதீன மகாவித்துவான் றம்பிரானெனவிருந்த தாண்டவராயமுனிவர்பாற், பலநூல்களைக்கற்றாராய்ந்துதேறிச் சிவஞானசித்தியார் சுபக்ஷத்திற்குச் சிவஞானமுனிவர் செய்தருளிய பொழிப்புரை எளிதில்விளங்குமாறு பதவுரையெழுதிவைத்தருளினர்; இத்தேசிகமூர்த்தி பாவநாசத்திற்கடுத்திருக்கின்ற சிவந்திபுரமடத்தி லெழுந்தருளியிருந்தபோது, ஆதீனத்திலிருந்து கற்றுத்தேறிய தம்பிரான்களும், வித்துவான்களுங்கூடியிருந்தமையால் அவர்கள் செய்துகொண்டுவந்த செய்யுட்களைக்கேட்கும் பேரவாவுற்று, அந்திப்போது அநுட்டானமுடித்துச் சபைகூடும்வண்ணஞ்செய்து ஒவ்வொருவர் கவிகளையுமவற்றின் பொருள்களையுங்கேட்டுப் பெருமகிழ்ச்சியுற்று ஒவ்வொருவருக்குந்தக்கவாறு பரிசளித்தருளவே இரவுநீங்கி அருணோதயகாலமாயிற்று; உடனே எல்லாருமிரவுகழிந்தது தெரியாதிருந்ததும், அமுதருந்தாதிருந்ததுநோக்கி ஆச்சரியமுற்றார்கள். அத்தேசிகமூர்த்தி, "செவிக்குணவில்லாதபோழ்து சிறிது - வயிற் க்குமீயப்படும்" என்னுந்திருக்குறளைத் திருவாய்மலர்ந்தருளினர்; அன்றிரவிலாக்கியிருந்த அமுதுகறி முதலானவெல்லாம் பசுமுதலிய காலிகட்கே யுபயோகமாயின; இதனை யுற்றுநோக்குங்கால் இத்தேசிகமூர்த்தி தெய்வச்செந்தமிழையபிமானித்து விருத்திசெய்து வித்துவான்களை யாதரவுசெய்துவந்த பெருந்தகைமையுடையராயிருந்தனரென்பது எல்லார்க்கும் வெளியாகும்.

அன்றியும், மகாகவியாகிய திரிசிரபுரம் மீனாக்ஷிசுந்தரம்பிள்ளையென்னும் வித்துவசிந்தாமணியை வரவழைத்துவைத்துத் தமக்குப்பின் சின்னப்பட்டத்திலிருந்த நமசிவாயதேசிகமூர்த்தி, திருப்பனந்தாட்காசி மடபதியாயிருந்த குமாரசாமித்தம்பிரான், குன்றக்குடியாதீனத்து ஆறுமுகதேசிகர்; மூவலூர்மடபதி பழனிக்குமாரத்தம்பிரான், இராமலிங்கத்தம்பிரான்முதலிய தம்பிரான்களுக்கும், கும்பகோணங்காலேஜ், தமிழ்ப்பண்டிதர் தியாகராஜசெட்டியார், சென்னைக்காலேஜ், தமிழ்ப்பண்டிதராகிய மகாமகோபாத்தியாயர், சாமிநாதையர்முதலிய பல்லோர்களுக்கும் பலநூல்களைக்கற்பிக்கும்படி செய்தருளினர்.

இங்ஙன மிவ்வாதீனத்தருள்பெற்றுப் பலருக்குங்கற்பித்திருந்த வித்துவசிந்தாமணி அங்கிருந்துகொண்டே செய்தபுராணங்களுஞ் சிறுநூல்களு மெத்தனையென்று கூறுவோம்; அவை, நாகைக்காரோ

ணப்புராணம், மாயூரப்புராணம், குடந்தைப்புராணம், திருப்பெருந்துறைப்புராணமுதலிய பலபுராணங்களும், சீகாழிக்கோவை, திருவிடைமருதூருலா, உறையூர்க்காந்திமதியம்மை பிள்ளைத்தமிழ், அம்பலவாணதேசிகர் கலம்பகம் முதலிய பலசிறுநூல்களுமேயாம்.

இவர்பாற் கற்றுணர்ந்தோர் ஒவ்வொருவரும் பல்லோர்களுக்குங் கற்பித்தனர்; இவர்பாற் கற்றுத்தேறிய நமசிவாயதேசிகமூர்த்தி யிலக்கியவிலக்கணங்கள், சித்தாந்தசாத்திரங்கண் முதலியநூல்களில் வல்லவரென யாவர்வரினும் அவருடன் வாதிட்டுத்தமது மேற்கோளைச் சாதிக்க வல்லவராயிருந்ததுமன்றி, அனந்தகிருட்டிணக்கவிராயர், மு. ரா. அருணாசலக்கவிராயர், ரா. சுப்பிரமணியக்கவிராயர் முதலிய பலர்களுக்கும் பலநூல்களையுங் கசடறநன்கு கற்பித்தருளியிருந்து சிவஞானபோதச்சிற்றுரைக்குப் பதவுரையுஞ்செய்தருளினர். இந்தச்சுப்பிரமணியக்கவிராயர்பாற் கற்றோர் சூரியனார்கோயிலாதீன மகாசந்நிதானமாகிய முத்துக்குமாரதேசிகமூர்த்தி முதலோரநேகருளர்.

இன்னும் அவ்வாதீனத்திலே தேசிகமூர்த்திகளும் பலதம்பிரான்கள் முதலியோர்களுஞ்செய்த நூல்களும், உரைகளும், கற்றவர்களும் இவ்வளவிற்றென்று மதித்துக்கூறவடங்காதென்பதுலகப்பிரசித்தமே.

ஒரு தம்பிரான் சிவபுண்ணிய விருப்பமிகுதியாற் பன்னிருதிருமுறைகளையு மெய்கண்டசாத்திரங்களையுமெழுதி யெழுதிக்கொடுத்துப்பெற்ற பெரும்பொருளெல்லாங்கொண்டு திருவாவடுதுறை வடக்கு வீதியிற் சிவஞானமுடையார்கோயிற் கருப்பக்கிரகமும், அர்த்தமண்டபமுங் கட்டுவித்திருக்கின்றனர். அவ்வாதீனத்தில் நெடுநாளிருந்து கற்றுத்தேறிய மதுராபுரிவாசியாகிய ஞானசம்பந்தப்பிள்ளையிடத்தும், மூவலூர்மடபதி பழனிக்குமாரதம்பிரான்சாமியிடத்தும் காவியங்கள் புராணங்கள் சித்தாந்தசாஸ்திரங்களெல்லாங் கற்றுத்தேறிய பாலவனத்தம் ஜமீந்தார், ஸ்ரீமாந்-பொ. பாண்டித்துரைசாமித்தேவர் என்னும் புலவர்திலகர் மதுரையிற்றமிழ்ச்சங்கந்தாபித்து பல மாணாக்கர்களுக்குக் கற்பித்துவருகிறதுடன். பல வித்துவான்களை வைத்துப் பலநூல்களை ஆராய்ச்சிசெய்வித்து வெளிப்படுத்தி வருகின்றனர்.

தமிழரசர்களால் புரக்கப்படுதல் நீங்கியபின், இவ்வாதீனமே தமிழைவளர்த்தற்குத் தரைமிசையமர்ந்துநின்ற சாரதாபீடமாயிருந்ததென்றெல்லாவித்துவான்களுங் கூறுவர்.

இனித் தருமபுரவாதீனத்தில் எழுந்தருளியிருந்த தேசிகமூர்த்திகள் நூல்களையுமுரைகளையு மிகுதியாகச்செய்யாவிடினும் பக்குவமுற்றுக்கற்போர்க்கு மெய்கண்டசாஸ்திரங்களைப் போதிப்பதிலே வல்லராயிருந்தனர்.

இவ்வாதீனத்துத் தம்பிரானாகிய குமரகுருபரமுனிவர் இளம்பருவத்திலே முருகக்கடவுளின் றிருவருள்பெற்றுக், கந்தர்கலிவெண்பா, மீநாக்ஷியம்மை பிள்ளைத்தமிழ், மீநாக்ஷியம்மைகுறம், இரட்டைமணிமாலை, மதுரைக்கலம்பகம், நீதிநெறிவிளக்கம், திருவாரூர் நான்மணிமாலை, முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ், சிதம்பரமும்மணிக்கோவை; சிதம்பரச்செய்யுட்கோவை, சிவகாமியம்மை யிரட்டைமணிமாலை, பண்டாரமும்மணிக்கோவை, காசிக்கலம்பகம், சகலகலாவல்லிபதிகம், காசியட்டகமுதலிய பிரபந்தங்களைச் செய்தருளினர்.

இம்முனிவர் முருகக்கடவுளின் றிருவருள்பெற்றவராதலால் இவர்செய்தநூல்களெக்குற்றங்களுமின்றிக் கற்பனைகளும், மெய்கண்டசாத்திரத்தின் கருத்துக்களு மிகச்சிறந்திருக்கின்றனவென்று பாவலரெல்லாம் பாராட்டுகின்றனர்;

இம்முனிவர் மீநாட்சியம்மைபிள்ளைத்தமிழரங்கேற்றியபோது திருமலைநாயக்கர், தமக்குக் கனகாபிடேகஞ்செய்த பொருளையெல்லாந் தம்முடைய ஆசிரியரிடஞ்சேர்க்க அவர் நமக்காகாது காசியிற் றருமஞ்செய்வாயென்று கட்டளையிட அவ்வாறே அப்பொருளையெல்லாங் காசியிற்கொண்டுபோய்க் கோயின்மடமுதலியன கட்டுவித்தருளினர்.

இம்முனிவர் ஸம்ஸ்கிருதம், ஹிந்துஸ்தானிகளிலும் வல்லவராய்த், தமது தெய்வத்தன்மைகண்டு டில்லிப்பார்ச்சா மிகச்சிறப்புச்செய்யப்பெற்றவராயிருந்து தருமபுரவாதீனத்தை மிகத்துலங்கச்செய்தனர்.

இன்னுமவ்வாதீனத்திற் சம்பந்தசரணாலயமுனிவர் பலநூல்களையுங் கற்றவராயிருந்து கந்தபுராணச்சுருக்கமுதலிய நூல்களைச்செய்தருளினர்; இவர் மைசூர் அரசரைக்காண நேரிட்டபோது அவ்வரசர் உங்களிடங்களிலுள்ளார்க ளென்னவேலை செய்வார்களென்று வினவினர்; உடனே,

" ஆய்வார் பசுபதி பாசத்தி னுண்மையை யாய்ந்தறிந்து
காய்வார் பிரபஞ்ச வாழ்க்கையெல் லாங்கல்வி கேள்வியல்ல
லோய்வார் சிவானந்த வாரியுள் ளேயொன் றிரண்டெறத்
தோய்வார் கமலையின் ஞானப்பிர காசன்மெய்த் தொண்டர்களே."

என்னுஞ் செய்யுளைக்கூறிப் பிரசங்கித்தனர். உடனே அவ்வரசர் பலசிறப்புச்செய்து விடுத்தனர்.

இன்னுமவ்வாதீனத்தில் வெள்ளியம்பலவாணமுனிவர் கவிகள் செய்வதின் மிகவல்லவராயிருந்ததன்றிச் சிந்துபூந்துறையிலிருக்கும்போது துறைமங்கலம் வீரசைவச்சிவப்பிரகாசரை நன்கு பரிசோதனையுஞ்செய்தனர். இவர் கல்வித்திறமை யாவருமதிக்கத்தக்கதேயென்பர்.

இலக்கண விளக்கஞ்செய்த திருவாரூர் வைத்தியநாதநாவலருமிவ்வாதீனத்தைப் பெருமைப்படுத்திய பாவலரென்பர்.

இனித் திருவண்ணாமலையாதீனத்தி லெழுந்தருளியிருந்த தேசிகமூர்த்திகளுஞ் சைவசித்தாந்த சாத்திரங்களைப்போதிப்பதில் வல்லராகவேயிருந்தனர். அவர்களிலே, குகையில் வசித்தவராயினுங் குன்றிலேற்றிய தீபம்போல்விளங்கிய குகை நமசிவாயதேசிகமூர்த்தியின் சாத்திரவுணர்ச்சியின் பெருமை பலருமறிந்ததே; இத்தேசிகமூர்த்திபாற் கற்றருள்பெற்றவராகிய ஆறுமுகசுவாமி என்னுமுனிவர் சிதம்பரமருவி வடகலையிலும் வல்லவராயிருந்து சிவஞானசித்தியார் சுபக்ஷத்திற்குரையெழுதினர்.

இனிச் சூரியனார்கோயிலாதீனத்திலெழுந்தருளிய தேசிகமூர்த்திகளுஞ் சாஸ்திரவாராய்ச்சியில் வல்லவராகவேயிருந்து கற்போர்க்குபகரித்தருளியே யிருந்தனர்;

இத்தேசிகமூர்த்திகளுள்ளே சிவாக்கிரயோகிகள் என்னுந் தேசிகமூர்த்தி தென்மொழி வடமொழியிரண்டினு மிக வல்லவராயிருந்து சிவஞானசித்தியார் சுபக்ஷத்திற்குத் தமிழுஞ்சம்ஸ்கிருதமுமாக வுரைசெய்தருளினர். இவ்வுரை யெல்லாவித்துவான்களும் வியந்து பாராட்டத்தக்கதாயிருக்கின்றது; தஞ்சையில் வைணவரோடு வாது நிகழ்ந்துழி அத்தஞ்சை மன்னர் இத்தேசிகமூர்த்தியை யழைத்துப் பேசும்படிசெய்ய அவர் வினவியவினாவிற்கெல்லாந் தக்கபடி விடையளித்து ஏழுநாள்வரையும் வாதிட்டுச் சிவமேதெய்வமென நிலைநாட்டியருளினர்.

இனி வீரசைவாதீனத்தவருள்ளே, துறைமங்கலத்துச் சிவப்பிரகாசசுவாமியும் பலநூலாராய்ச்சியில் வல்லவராயிருந்து, சோணசைலமாலை, நால்வர்நான்மணிமாலை, திருச்செந்திலந்தாதி, பழமலையந்தாதி, பிக்ஷாடனநவமணிமாலை, பெரியநாயகிவிருத்தம், பெரியநாயகிகலித்துறை, நன்னெறி, திருவெங்கைக்கோவை, திருவெங்கைக்கலம்பகம், திருவெங்கையுலா, காளத்திப்புராண முற்பாகம், வேதாந்தசூடாமணி முதலிய பலநூல்கள்செய்து பலவற்புதமுஞ் செய்தருளினர்.

இவ்விதமாகவே ஆதீனங்களிலுள்ள பல வித்துவசிகாமணிகள் கலைஞானத்தைப்பருகி அதனையுலகெல்லாம் விதைத்து வளர்த்துவந்தனர்; அவரெல்லாம் மறைந்தனரே!

இத்தெய்வத்தமிழை யாதரித்துவந்த சர்வகலாசாலையாருமிக்காலத்திற் கைநழுவவிட்டனரே; அந்தோ ! பரிதாபம்.

ஆதீனங்களிலே வித்துவகோஷ்டியோ மிகக்குறுகியது; சைவநூன்முதலிய நூற்பயிற்சியு மறைவாயினது; கற்கவருவாருங் காணவில்லை; குருபத்தியுந்தெய்வபத்தியுஞ் சமயாசாரங்களுமுலகிற் குறைந்துவருகின்றன; இவற்றையபிமானித்து விருத்திசெய்வதற்கன்றோ சைவாபிமானிகளாயிருந்த பல ஜமீந்தார்களும், பலபிரபுக்களும், அதிகாரிகளும் அளவிடக்கூடாத நிலங்களைத் தானஞ்செய்தார்கள்.

இக்காலத்திலே அவ்வபிமானிகள் கருத்துக்குப்பொருந்திய செய்கைகள் யாதொன்றுமவ்வாதீனகர்த்தர்கள் இயற்றாதொழிந்தும்,

அதனைவாளாபார்த்திருத்தல் சைவசமயாபிமானிகட்குந் தமிழபிமானிகட்கும் மளவில்லாக்கேடாகும்.

ஆதீனங்களிலே யெத்தனையோ விஷயங்கட்குப் பெரும்பொருள்களைச் செலவுசெய்யக்காண்கின்றோம்; அச்செலவுகளோடொன்றாகச்சேர்த்துத் தக்க பொருட்செலவுசெய்து தமிழ்ப்பயிரை வளர்த்தல் கூடாதா?

முன்னோர்களைப்போலத் தமிழ்ப்பயிரை 'வளர்த்தற்குத்தக்க வேற்பாடுசெய்யவேண்டுந் தருணமிதுவே; இங்ஙனஞ் செய்யாவிடிலோ தமிழ்ப்பயிர் வரவர வாடப்படுந்தமிழ்ப் பயிராகிவிடுமென ஆதீனத்தார்களிடம் வேண்டிக்கேட்டும் அவ்வாறு அவர் செய்யாதொழியில் அதற்குத்தக்க பரிகாரஞ்செய்யுங் கடமையுங்கட்கிருந்துமதனையறியாதவர் போலிருக்கின்றீர்; அந்தோ! இதுவுமொரு பெரும்பாவமேயாம்.

சைவாபிமானிகளே! அருந்தமிழார்வமுள்ள விற்பன்னர்களே! இனியாயினு நாடோறுங்கூட்டங்கூடி ஆதீனத்தார்களுக்குத் தெரிவித்து வேண்டிக்கொள்ளுமுறைகளை யாலோசித்துப்பேசி அவ்வாறே யறிவிக்கைசெய்து தெய்வச்செந்தமிழ்ப்பயிரை வளர்க்கும்படிசெய்ய முயலுங்கள் முயலுங்கள்; இக்காலத்திலிதனினுஞ்சிறந்த புண்ணியம் வேறில்லை; "முயற்சி திருவினையாக்கு முயற்றின்மை, யின்மை புகுத்தி விடும்." உள்ளுவதெல்லா முயர்வுள்ளன் மற்றது, தள்ளினுந் தள்ளாமை நீர்த்து."

முற்றிற்று.

எம். எஸ். பூரணலிங்கப்பிள்ளை, பி. ஏ.

உ

ஆங்கில மொழிக்கலப்பு.

ஆதியிலே மனிதர்கள், தங்கள் உள்ளநிகழ்ச்சிகளை மற்றையோர்க்கு வெளிப்படுத்தவேண்டி அவற்றை, உவகை வெகுளி வியப்ட அவலம் முதலியவற்றைக்குறிக்கும் மெய்ப்பாடுகளினாலும், அழுதல் நகைத்தல் கண்காட்டல் கூவுதல் முதலிய ஒலிக்குறிகளினாலும், தலையசைத்தல் கண்காட்டல் கைநீட்டல் ஆதிய சைகைகளினாலும், விரலாற் றரையிற்பொறித்த உருவம் முதலியவற்றாலும், வெளிப்படுத்தியிருப்பார்கள் என்பது மனுடவியல்பை ஆய்ந்துணர்ந்தார் கூற்று. பின் இயற்கைப்பொருள்களின் குணம் தொழில் முதலியன பஞ்சப்பொறிகளுக்குப் புலனாதல்கண்டு அவைகாரணமாகிய பெயர்களை அப்பொருள்களுக்கு இட்டு வழங்கினார்கள். இவ்வழித்தாய்ச் சொற்கள் காலகதியில் பெருகியனவாக மனிதர்தம் எண்ணங்களை இலகுவாகவெளிப்படுத்தத் தொடங்கினார்கள். ஆக, பாஷையும் உண்டாயது.

மனிதர்கள் வெவ்வேறுகாலங்களில் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு கூட்டங்களாக இருந்திருப்பார்கள். அவ்வக்காலங்களில் அவ்வவ்விடங்களில் அவ்வக்கூட்டங்களில் அவ்வப்பொருள்களுக்கு மேற்கூறியவகையாகப் பெயர்கள் கூறப்பட்டன. இதுபற்றியே பாஷை ஒன்றாகாது பலவாயது.

பாஷைகள் ஒவ்வோர் காலங்களில் உண்டாயினமைபற்றிச் சில பாஷைகள் முந்தியனவும் சிலபிந்தியனவுமாகும். இப்பொழுதுவழங்கும் பாஷைகளுள்ளே மிகப்பழமை வாய்ந்துள்ளன தமிழ் சம்ஸ்கிருதம், சீனம், அரபி, ஹீப்ரு, கிறீக், லத்தீன் முதலியவைகளே. இவற்றுள்ளும் இன்றுவரை பேச்சுவழக்கிலிருப்பன தமிழ் முதலிய சில பாஷைகளேயாம்.

இத் தமிழ்ப்பாஷையானது, பிறிதொன்றன் கலப்புறாது தனித்து நடத்தற்கேற்ற சொற்கள் மலிந்துகிடக்கும் தூய்மையும் யாவரையும் வசீகரிக்கும் இனிமையும் பஞ்சலக்கணங்களும் நிரம்பப்பெற்றமையால் இலக்கணவரம்பும் பொருந்தியுள்ள ஓர் சிறந்த பாஷை என்பது பாஷைநூலாராய்ச்சி செய்தோர் யாவர்க்கும் ஒத்த முடிபாகும். இதுபற்றியன்றே,

> " கண்ணுதற் பெருங்கடவுளுங் கழகமோடமர்ந்து
> பண்ணுறத் தெரிந்தாய்ந்த விப்பசுந்தமிழேனை
> மண்ணிடைச் சிலவிலக்கண வரம்பிலா மொழிபோ
> லெண்ணிடைப்படக் கிடந்ததா வெண்ணவும் படுமோ."

*

என ஆன்றோரும் இதனைத்தெய்வத்தன்மையுடையதென உபசரித்துக் கூறினார் என அறிக.

இப்பாஷையின் நிலை உந்நதநிலை இடைநிலை கடைநிலை எனமூன்றுவகையாகப் பகுக்கப்படலாம்.

சம்ஸ்கிருதபதங்கள் அதிகம் கலக்கப்பெறாத செந்தமிழ்நூல்கள் இயற்றப்பட்ட காலங்களைத் தமிழ்ப்பாஷை உந்நதநிலையுற்றிருந்தகாலம் எனவும், சம்ஸ்கிருதத்திலிருந்து புராணங்கள் மொழிபெயர்த்துப் பாடப்பட்டகாலத்திலே தமிழ்ப்பாஷையோடு சம்ஸ்கிருதபதங்கள் அதிகமாகக்கலந்து அதன் செவ்வியை ஒருவாறு குன்றச்செய்தமையால் அக்காலத்தை இடைநிலைக் காலமெனவும், மகமதியர், போர்த்துக்கீசர் முதலிய வேற்றரசர் காலத்திலே, கற்பாரும் கற்பாரை ஊக்கிவிடுவாரும் இன்மையால், அது மிகக்குன்றியது பற்றி அக்காலங்களைக் கடைநிலைக்காலமெனவும் கூறலாம்.

ஆங்கில அரசினர் காலமாகிய பிற்காலத்தில் அவர்களுடைய பாஷாபிவிருத்தியினால் தமிழ் ஒருவாறு குன்றிவந்திருப்பினும் அது இந்தியாவிலும் யாழ்ப்பாணத்திலுமுள்ள ஆதீனங்களாலும் ஸ்ரீலஸ்ரீ: ஆறுமுகநாவலர் முதலிய வித்துவசிரோமணிகளாலும் நன்குவளர்க்கப்பட்டு வந்தது.

இப்பொழுது மதுரைமாநகரத்தின் கண்ணே, முன்னாள் முச்சங்கங்களையும் தாபித்துத் தமிழைவளர்த்துவந்த பாண்டிமன்னரே மீண்டும் அதனைவளர்க்குமாறு ஓருருக்கொண்டு வந்தார்கள் என்பதைத் தமது நாமத்தாலும் அரும்பெருஞ்செயலாலும் விளக்கிநிற்பவரும், பாலவனத்தம் ஜமீந்தாரும், செந்தமிழ்க்கலாவிநோதருமாகிய ஸ்ரீமாநு-பொ. பாண்டித்துரைத்தேவரவர்கள் செந்தமிழ்ச்சங்கம் நான்காவதொன்றை நிறுவி அதன்வாயிலாகச் செய்துவரும் செந்தமிழ்ப்பரிபாலனச் செயல் அறிஞரால் மிகவும் பாராட்டப்படத் தக்கதென்பதிற் சிறிதும் ஆக்ஷேபமில்லை. ஆதலால் பின் வேண்டப்படுவதாகிய குறையையும் நீக்கித் தமிழ்ப்பாஷையை நன்னிலையுறச் செய்யும் கடப்பாடுடையவர்களும் அவர்களேயாம்.

போர்த்துக்கீசர் ஒல்லாந்தர் காலங்களில் அவ்வவர் பாஷைகளை நம்மவர் கல்லாமைபற்றி அவை உலகவழக்கில் அதிகம் வாராதொழிந்தன. அதனால் தமிழ்ப்பாஷையில் அப்பாஷைக்கலப்பு அதிகம் உண்டாகவில்லை.

ஆங்கிலமன்னர் காலமாகிய இக்காலத்தில் மேற்கூறிய பெருந்தகையாளர்களது பரிபாலனச்செயல்களால் நந்தமிழ்ப் பாஷையானது ஒருவாறு நன்னிலையுற்றுவரினும் ஆங்கிலமொழிகள் நேர்ந்த நேர்ந்தவாறு கலக்கப்பட்டுவருதலாற் பெருங்குறைவை யடைகின்றது. ஆங்கிலமொழிகள் கலத்தற்குக்காரணமாயிருப்பன ஆங்கில அரசும் அத்தேசத்தாரோடு செய்யும் வாணிகமும் ஆங்கிலக்கல்வியும் அறிவிலாச்சனங்கள் தமக்கு மதிப்புண்டாமென்று கருதி அம்மொழிகளைத் தமிழோடுகலந்து பேசுதலும் அறிவுடையாரது சாவதானமின்மையுமேயாகும். இவ்விஷயத்திற் பெரும்பான்மையாகச் சாவதானமின்றி யிருப்போர் நம்பத்திராதிபர்களும் பத்திரிகைகளுக்கு விஷயதானஞ் செய்வோர்களுமே.

இன்னோர், ஆங்கிலமொழிகளுக்கு ஒத்த கருத்துடையனவாகச் செய்துகொள்ளப்படும் செந்தமிழ் மொழிகள் மலிந்திருப்பவும் “தண்டாமரையினுடன் பிறந்துந்தண்டேனுகரா மண்டூகங்கள்போல” ஆலசியமிகுதிப்பாட்டான் அவற்றைப்பொருட் படுத்தாது அவ்வாங்கிலமொழிகளையே இருந்தவாறு பிரயோகித்துச் செந்தமிழ்ச் செவ்வியைக் கெடுத்துவிடுதலை நோக்குந்தோறும் அறிஞர் காணுகின்றார்கள்.

பண்டைக்காலத் தமிழ்நூல்களில் வழங்கும் சொற்களெல்லாம் நம்மவரால் இப்பொழுது விரும்பிக்கற்கப்படுதல்போல இக்காலத்தவரால் வெளியிடப்படும் நூல்களிலும் வியாசங்களிலுமுள்ள சொற்களெல்லாம் பின்னுள்ளவர்களாலும் விரும்பிக் கற்கப்படவேண்டுமன்றோ!

ஆதலால் நம் பத்திராதிபர்களும் விஷயதானஞ்செய்வோரும் தத்தம் வியாசங்களிலே அந்நிய பாஷைச்சொற்களை நீக்கிச் செந்தமிழ்ச் சொற்களையே பிரயோகித்துச் செந்தமிழை நன்னிலையுறச்செய்யவேண்டுமென்பது ஒருதலையாக வேண்டப்படுவதொன்று.

ஆங்கிலபாஷைச் சொற்களைப் பிரயோகித்தலால் வருங்கேட்டைக் குறித்துச் சில கூறுதும்.

௧-வது. பழையநூல்களில் உள்ளசொற்கள் வழக்கிறந்துபோக அவற்றாற் குறிக்கப்படும் பொருள்களும் பழக்கவழக்கங்களும் மாறுதலடையும். இப்பொழுது பூமியிற்காணப்படும் அடுக்குப்பாறைகளிலுள்ள புல்லினம், மீனினம், சங்கினம் முதலிய புதைபொருட்கள் உலகத்தின் காலத்தையும் தாவரசங்கமங்கள் ஒன்றின்பின் ஒன்று தோன்றியழியும் தன்மைகளையும் ஊகித்தறிதற்கு அறிகுறிகளாக நிற்றல்போல அவ்வக்காலப்பழக்க வழக்கங்களை எத்துணைக்காலஞ் செல்லினும் அழியாதுகாட்டும் ஞாபகத்தம்பங்களாக நிற்பன சொற்களே என்க. கண்முதலியவற்றால் இயற்றப்பட்ட ஞாபகத்தம்பங்கள் இயற்கைச்சலனங்களால் அழிதலுங்கூடும். சொற்களோ என்றும் அழியாது நிலைபெறுந் தன்மையுடையனவாகும்.

இப்பொழுது தமிழ்ப்பாஷையிலே அருகிவழங்கும் கிராம்பு, பாதிரியார் சுமார் முதலிய திசைச்சொற்கள் அவ்வக்கால வேற்றரசுகளையும் வாணிக நிலையையும் நன்குபுலப்படுத்திச் சரித்திர ஆராய்ச்சிக்கு எல்லையாக நிற்றல்போல இப்பொழுதை அரசினர்நிலையையும் வாணிகநிலையையும் பின்னுள்ளோர் அறிதற்கு எல்லையாக நிற்றற்பொருட்டுத் தமிழில் ஒத்தகருத்துடைய வல்லாத சில சொற்களை மாத்திரம் இன்றியமையாமைகண்டு வழங்குதல் குற்றமாகாதாயினும், அவற்றை நேர்ந்தவாறு பிரயோகித்தல் சிறிதும் பொருந்தாததொன்றென்க.

௨-வது. சொல்லின்பொருளை உள்ளவாறுணராமையால் அறிவு விருத்தியில்லாது போதல். இதற்கு உதாரணமாக ஒன்றுகூறுதும். "வைசறோய் ஆப் இன்டியா" (Viceroy of India) என்பதை இருந்தவாறே வழங்குமிடத்து லத்தீன் அறிவில்லாது ஆங்கில அறிவுமாத்திரமுள்ளவன் அதன் தாதுப்பொருளை உணராமையால் வாளா இந்திய தேசாதிபதி என்னும் பொருளையே உணர்ந்துகொள்வன். இவன்கதி இங்ஙனமாகும்போது ஆங்கிலபாஷையுமுணராத ஏனையோர்கதி எங்ஙனமாகும் என்பது உற்றுநோக்கத்தக்கது. "இந்தியபிரதிகாவலர்" என மொழிபெயர்த்துக்கூறின் அது "பிரித்தானிய அரசருக்குப் பிரதியாக இந்தியாவை ஆள்பவர்" என்று அதன் உண்மைப்பொருளை நினைக்கச்செய்து அதன் வாயிலாக மற்றைய எண்ணப்புணர்ப்புக்களையும் உண்டாக்கி அறிவை விருத்திசெய்வதற்கு ஏதுவாகுமன்றோ!

௩-வது. தமிழ்ச்சொற்களோடு ஆங்கிலச்சொற்களையும் கலந்து பேசுதலைமாத்திரமன்றி நூல்களில் எழுதியிருத்தலையும் அறியுமிடத்துப் பிறசாதியார் இது நிரம்பாப்பாஷை என்று குறைகூறுதற்கும் பிழையாக உச்சரிக்கப்படுகின்றன என்று நகையாடுதற்கும் இடமுண்டாமன்றோ!

இனி இக்குறையை நிறைவாக்குதற்குச் செய்யத்தக்கது யாதென்று ஆராய்வோமாக.

இக்காலத்திலே தத்துவசாஸ்திரக்கல்வியே பெரிதும்வேண்டப்படுதல்பற்றி ஆங்கிலபாஷையிலிருந்து நூல்களை மொழிபெயர்க்க நேரிடும். அவ்வாறாகிய சமயங்களில் ஆங்கில மொழிகளையே வழங்காது ஒத்தகருத்துடையனவாகிய தமிழ்ச்சொற்களை வழங்குதலே முக்கிய நோக்கமாக இருத்தல்வேண்டும். ஒத்தகருத்துடையசொற்கள் இல்லாதவிடத்து, பொருள்களின் குணம் தொழில் முதலிய காரணம்பற்றி, தனிமொழிகளையாவது தொடர்மொழிகளையாவது செய்துகொள்ளல் உத்தமமாகும்; வேண்டுமாயின் பயின்றுவந்த வடமொழிகளையும் வடமொழி உபசர்க்கங்களையும் அநுசரித்துச் சொல்லியற்றுதல் தவறாகாது. இவ்வாறு செய்தலே பாஷை வளர்ச்சிக்கும் காரணமாகும். என்னை? விஷயமுகத்துக் கூறியவாறு பெயர்கள் எல்லாம் ஆதியில் காரணம்பற்றியே இடப்பட்டுப் பெருகியனவாதலின். அவற்றுள்ளே காரணம் தெரிந்தன காரணப்பெயராகவும் தெரியாதன இடுகுறியாகவும் பிற்காலத்திற் கொள்ளப்பட்டன.

இவ்வாறு மொழிகளைச்செய்துகொள்ளுதலும் முற்றாக இயலாதவிடத்து ஆங்கிலமொழிகளை இருந்தவாறு பிரயோகித்தல் குற்றமாகாது.

நம் தமிழ்ப்பாஷை தன் செவ்விகுன்றப்பெறாது நன்னிலையுற வேண்டுமென்னும் பேரவாவினால் இவ்விஷயம் எழுதப்பட்டதேயன்றி ஒருவரைக் குறைகூறும் நோக்கத்தானாக வாதஞ்செய்யும் நோக்கத்தானாக எழுதப்படவில்லை என்பதைப் பெருந்தகையாளர்கள் உணர்ந்துகொள்வர்.

ஆதலினால், நம்பத்திராதிபர்களும் விஷயதாதாக்களும் ஆசிரியர்களும் பாஷாபிமானிகளும் பிறரும் ஆங்கிலமொழிக்கலப்பால் நம்பாஷைக்குநேரும் குறைகளை உய்த்துணர்ந்து நம் வேண்டுகோளை உள்ளத்துக்கொண்டு நம்மறிவிற் கெட்டியவாக மேற்கூறிய சில உபாயங்களானாவது தமது பன்னூலாய்ந்த நுண்ணுணர்விற்பட்ட வழிகளானாவது, அக்குறையை நிறைத்துத் தமிழ்ச் செவ்விவாய்ப்ப உழைப்பார்கள் என்பது எமது திண்ணம்.

அ. பொன்னையாபிள்ளை,
சிக்ஷோபாயதரிசகர்.

உ

திருச்சிற்றம்பலம்.

சிதம்பரசுவாமிகள் சரிதம்.

இப்புலவர் பெருந்தகையாரது சிறந்த சரிதமொன்றைச் செந்தமிழ்ப் பிரதியின்கண், வெளியிடவேண்டுமெனப் பலகால் முயற்சித்தும், "திருப்போரூர் சந்நிதிமுறை" "புலவர்புராணம்" இவைகளிலன்றித் தக்க ஆதாரவுகளோடு கூடிய சரிதப்பிரதிகள் கிடைப்பது அருமையாகவே முடிந்தது. மேனாட்டு நாகரீக வைரம்பற்றிய ஆங்கிலக் கவிகளது சரிதமுறைகள் தெள்ளிய காலவரையறையோடு கூடிக் கிடைப்பதுபோல், நமது நாட்டுக்கவிஞர்களது சரிதங்களகப்படுவது மிகுந்த பிரயாசையாகவே யிருக்கின்றது. காரணம், நமது தமிழ்மக்கள் சரிதப்பிரவிர்த்தியில், பரிசீலனையில்லாக்குறையென்றே கருதவேண்டும். தமிழணங்கு தழைத்தோங்கும் வகையில் நம்மனோர் ஊக்கமும் கவலையும் கொண்டாலன்றி இத்தகைய குறைகள் நம்மைவிட்டொழிவது வருத்தமாகவே முடியும். ஆனால், இக்குறைகள் முற்றும் நம்மைப் பாதித்ததாயில்லை. ஆங்காங்கு அறிஞர் பலர்தோன்றி நந்தமிழ்ப் பெரும்புலவர் சரிதங்களைப் போதியபிரமாணங்களோடு காலநிர்ணயத்துடன் வெளியிட்டும் வருகின்றனர். இதுகாறும், இம்முயற்சியால் வெளிவந்த சரிதங்கள், ஔவையார், ஒட்டக்கூத்தர், கம்பர், புகழேந்தியார், பொய்யாமொழியார், ஏகம்பவாணர் மற்றும் சில புலவர்களுமாம். மதுரைச் "செந்தமிழ்" வாயிலாக வெளிவந்த இப்புலவர் வரலாறுகட்கும், விநோதரஸமஞ்சரி, புலவர்புராணம், பாவலர்சரித்திரதீபகம், செந்தமிழ் நாவலர் திவ்ய சரிதை முதலிய நூல்களிற் கண்ட புலவர் சரிதங்கட்கும், எத்தனையோ மாறுபாடுகளும், பாடபேதங்களும், உள்ளனவென்பது அதனைப்படித்தாரே அறிந்துணரத்தக்கதாம். நமது நாட்டிற்கண்மணிபோல் விளங்கிய கவிஞர் சிகாமணிகளது அழகிய சரிதங்களை நன்றாகப் பரிசீலனைசெய்து வெளியிடுவதை நாம் படித்துணருவதால், அவர்களிடம் நமக்குக்கௌரவாபுத்தி, அதிகமாதலோடு ஜனஸமூக வாழ்வை உயர்வும், ஒழுங்கும் பெறச்செய்வதற்கும் அதுமுக்கிய ஏதுவாமென்பது புலனாம். செந்தமிழறிஞர்பலர், இன்னம் வெளியாகாதுள்ள எத்தனையோ பழம்புலவர் அரும்பெருஞ் சரிதங்களை நந்தமிழகத்தோர் கண்டுவக்குமாறு மாதந்தோறும், வெளியாகும் "செந்தமிழ்ப்பத்திரிகை"யின்கண், வெளியிட்டுபகரிப்பது சிறந்த நன்மையாம். இது விஷயத்தைப்பற்றி இன்னம் பேசப்புகின் விரியுமென்றஞ்சி, இம்மட்டோடு நிறுத்தி எடுத்துக்கொண்ட விஷயத்தை இனித்தொடங்குவாம்.

சிதம்பரகவிராயரின், வரலாறு முழுமையும் நாம் ஒழுங்காக அறிந்து மகிழ்தற்கிடமில்லையாயினும், திருப்போரூர் சந்நிதிமுறையென்னும் நூலிலும், புலவர்புராணத்திலும் காணப்படும் சில முக்கியமான செய்திகளைவைத்து நாம் ஒருபடியாகக் காணக்கூடும். ஒப்புயர்வற்ற திப்பியமக்களின் குணஞ்செயலாதி விசேடங்களை நாமறிந்துகொள்வதால் அன்னாரின் அருமைபெருமைகள் நமக்கு இன்பத்தை விளைக்கத்தக்கனவாகின்றன. உத்தமப்புலவராகிய சிதம்பரசுவாமிகளின் சிறந்த சரிதம் எவரும் விரும்பிப்படித்தற்கு ஏற்றதாகவி

ருந்தும் தகுதியான ஆதாரவோடில்லாத காரணத்தால் கர்ணபரம்பரைச் செய்தியாயுள்ளதெனக்கருதும் ஒரு குறையாகமட்டும் நின்றது. இருப்பினும் அது, சிதம்பரசுவாமிகளது உயர்ந்த பத்திநெறியையும், விரிந்த கருணைத்திறனையும், பெருங்குணங்களையும் விளக்கி நிற்பதாம். சுவாமிகளது மரபைப்பற்றிக்கூறவந்த சந்நிதிமுறையும், புலவர்புராணமும் ஒன்றுக்கொன்று வேறாக புலவர்மரபினரென்றும், வேளாளமரபினரென்றும், முரண்படவிருப்பதால், பெரிதும் ஐயம் நிகழ்தற்கேதுவாயின. ஆதலால் எம்மரபினராயினுமாகுக. இனிச் சிதம்பரபுலவர் வரலாறு வருமாறு:—

கருணையங்கடலாகிய சிவபெருமான் ஆன்மாக்களுய்தற்பொருட்டு அன்புடன்புரிந்த வெட்டெட்டுத் திருவிளையாடலும் நிகழ்ந்த பாண்டிவளநாட்டின் நல்நகராய மதுரைமாநகரின்கண்ணே முன்னையோர் செய்தவப்பயனாகவந்த சிதம்பரகவிராயர் என்னும் அபிதானமுடையார் இளமையிலேயே கலைவாணி இன்னருள் சுரந்துவப்ப, இலக்கியவிலக்கண வேதாந்தசாஸ்திரங்களில் வல்லுநராகிப் பரிபக்குவமடைந்து புண்ணியப்பயனாகக்கிடைக்கின்ற திருவருட்சித்தியையும், சிவஞானத்தையும் பெறவேண்டுமென்னும் அவாவால், நல்லாசிரியனையடைந்து நல்லுபதேசம் பெறும்பொருட்டுப் பல சிவதலங்களைத் தரிசித்துக்கொண்டு "நினைக்கமுத்திதரும்" விருத்தாசலத்தையடுத்துப் பெருமானைத்தொழுது "குமாரதேவர்" என்னும் பெரியாரைக்கண்டுவணங்கி அவர்பாலன்புடையராகி அவரோடு சிலநாளங்கு வசித்திருந்தனர். இங்ஙனமிருப்ப ஓர்நாள் சிதம்பரசுவாமிகள், ஆசிரியரைவணங்கி என்பால் திருவருட்சிறப்பு விளங்கும்படிசெய்து என்னைச்சீடனாக அங்கீகரித்தருள்வீராகவென வேண்டலும், குமாரதேவர் உள்மகிழ்ந்து தன்னை அடிமைகொண்ட சிறந்த ஆசிரியரான சாந்தலிங்கசுவாமிகளது சன்னிதானத்திலே சேர்க்கப்படவேண்டுமென்னுங் கருத்துடன் கொங்குநாட்டினில் முதன்மைபெற்றதும், சமயகுரவருள் வன்றொண்டராகிய நம்பியாரூரரால் * பாடல்பெற்றதும், ஆதிபுரி, ஞானக்கோமுத்தி, பட்டி, தென்கயிலை, பிறவாநெறி,

---

* இத்தலம்பாடல்பெற்றுள்ளதென்பதைச் செந்தமிழ்த் தொகுதி-௫. பகுதி-௫. பக்கம்-௨௫௫-பார்க்க.

பிப்பிலாரண்ணியம் ஆதியசிறந்த காரணப்பெயர்களைக்கொண்டதும், பிறவாப்புளி, இறவாப்பனை, காஞ்சிமாநதிமுதலிய விம்மிதங்களுடையதும், மேலைச்சிதம்பரமுமாகிய திருப்பேரூரைத்தாம் வதிவதற்குகந்த உறைவிடமாகக்கொண்டுள்ள தமது ஞானகுருவிடம் சிதம்பரப்புலவரை அழைத்துவந்து பரிணமத்திற்புகுந்து புறங்காத்திருந்தனர். ஒடுக்கத்தினின்றும் வெளிப்போந்த † சாந்தலிங்கசுவாமிகள், இருவரையுநோக்கி மீண்டுள்ளே எழுந்தருளித் தாமியற்றிய "வைராக்கியசதகம்," "வைராக்கியதீபம்," "அவிரோதவுந்தியார்," "கொலைமறுத்தல்" முதலிய நான்கு நூல்களையும், ¶ கண்ணுடைய

---

† சாந்தலிங்கசுவாமிகள் திருப்போரூரிலேயே தமது வாணாள்முழுதினும், திருமடங்கொண்டிருந்து பல அன்பர்கட்கு நல்லுபதேசஞ்செய்து ஆட்கொண்டருளி "ஸதேஹமுக்தி"யடைந்தனரெனச் சிறந்த மேதாவிகளாலும், கர்ணபரம்பரையாலும், சுவாமிகள் சரிதத்தாலும் நன்கு அறியப்படுகின்றது. அன்றியும், அத்திருமடம் இன்றும் தக்கபடி பரிபாலிக்கப்பட்டு உன்னத நிலையிலிருந்துவருவது பிரத்தியக்ஷமாம். இங்ஙனமிருக்கத் "திருப்போரூர் சந்நிதிமுறை" ஆசிரியவரலாற்றில்மட்டும், "திருப்புக்கொளியூரென்ற அவிநாசியில் திருமடங்கொண்டிருந்த சாந்தலிங்கசுவாமிகளிடத்துக் குமாரதேவர் சிதம்பரப்புலவரை அழைத்துவந்து தரிசனம்செய்துவைத்தாரென" காணப்படுகின்றது. இது முற்றிலும் பொருத்தமற்றதும், ஆதாரங்கெட்ட விஷயமென்பதும் உணர்க. சாந்தலிங்கசுவாமிகள் மடம் அவிநாசியில் ஒருகாலத்திலுமிருந்ததில்லை. திருப்போரூரிலிருந்தாரென்பதற்குச் சிலபிரமாணங்கள் உள்ளன. அவைவருமாறு:—

"கொங்குவள நாட்டினிடை
மேலைச் சிதம்பரமா மிக்கபுகழ்ப் பேரையினிற்
சீலத்தாற் போற்றத் திருமடஞ் செய்தற்றுனே."
(சாந்தலிங்கசுவாமிகள் சரிதம்)

"நீரைச் சென்னியில் வைத்துள்ளாரை நினைத்து நீறணிவார்கள்வா
ழூரைத் தம்மடைப் பள்ளியா விழைந்துண்டு சிற்சிலநாளினிற்
பேரைத் தொல்பதி கண்டங்குற்ற பெருந்தகைக் குரவன்........."
(சிதம்பரசுவாமிகள் சரிதம்)

"அத்தேயம் விட்டு மனையாதி யாருமவர் தம்மை நீங்கியகமு
டுத்தேக மானபடி கற்குருக்க ளூறல்பேரையென்ன... ....."
(குமாரதேவர் சரிதம்)

¶ கண்ணுடையவள்ளலாரென்பவர், சீகாழித் திருஞானசம்பந்தசுவாமிகளிடம் விசேஷபக்தியுடையராய் அருள்பெற்ற ஒருமகான். வேதாகமசாஸ்திரக்கொள்கைகளில் தெளிவுடையர். சற்குருமூர்த்தியின் திருவருள்நோக்கத்தாற்பெற்ற ஞானக்கண்ணுடையவரும், தாம்பெற்ற அறிவுவளத்தைப் பிறர்க்கு அருள்பவருமாதலால், இவர்க்குக் கண்ணுடைய வள்ளலாரென்னும்பெயர் அமைந்ததென்பர்.

வள்ளலார் இயற்றிய "ஒழிவிலொடுக்க"த்தையும் கொண்டுவந்து தரிசனந்தந்து குமாரதேவரைப்பார்த்து "முன்னம் நாம் உமக்கு உபதேசித்த பஞ்சாக்ஷரத்தை இவனுக்கு உபதேசித்து நின்மாணாக்கனாக்கிக்கொள்கவென்று கட்டளையிட்டு, பரிபாகமேலிட்ட இவ்விளவலைக்கொண்டு இந்நூல்களுக்கு உரையியற்றுவிக்கக்கடவை" எனமொழிந்து அந்நூல்களைத்தந்தருள, அவற்றைக் குமாரதேவர் இருகையினுமேற்றுக் கண்களிலொற்றிக்கொண்டு சிதம்பரகவிராயரிடத்திற்கொடுக்க, அவரும் அவைகளைப்பெற்றுச் சிரமேற்கொண்டு வணங்கி அவருடன்சென்று விருத்தகிரியை அடைந்தனர்.

பின்பு சிதம்பரசுவர்மிகள் வீராகம உத்தரசைவ சித்தாந்த நிரூபணமாகிய வீரசாமானியாதி தீக்ஷையை விதிப்படி யநுக்கிரகிக்கப்பெற்று அங்கயோகங்களையு முணர்ந்து ஞானோபதேசஞ் செய்யப்பெற்று ஞானசமாதி கூடியிருக்கையில், ஒருநாள் மயில் ஒன்று தோன்றிச் சொரூபத்தைச் சிறகால்மறைத்து நிருத்தஞ்செய்ய அதனைக் கண்டு ஆசிரியரிடத்திற்சென்று விண்ணப்பஞ்செய்தனர். அதுகேட்டுக் குமாரதேவர், "நம்மையிங்கு பெரியநாயகியார் ஆட்கொண்டுயிர்த்துணையாய் நிற்கின்றபடி உனக்கும் உயிர்த்துணையாய் நிற்கின்ற அங்கயற்கண்ணம்மை அதனைப்புலப்படுத்தும்," என்று விடைதந்தனர். ஆசிரியரருள்வாக்கின் ஆணைப்படியே சிதம்பரசுவாமிகள், சோமசுந்தரக்கடவுள் திருக்கோவில்கொண்டருளிய $ ஆலவாயினை யடைந்து நாற்பத்தைந்துநாள் வரையில் நாடோறும், பொற்றாமரையில் மூழ்கி; நித்தியகருமானுஷ்டானங்களை முடித்து, மத்தியானகாலத்தில் ஒருபிடி பச்சறுகும், மூன்றுகைத்தீர்த்தமும் உட்கொண்டு நிஷ்டைசாதித்திருக்கையில், தேவியார் சோதனைநிமித்தம் நேரும்படிசெய்த சுரம், கைகாற்பிடிப்புமுதலிய நோய்களுக்கு அஞ்சாமலும், மனநிலைகலங்காமலும் விரதந்தவறாமலும் நின்று, மீனாக்ஷியம்மையை நோக்கிக்"கலிவெண்பா"என்னுமோர் தமிழ்ப்பிரபந்தம்பாடித் துதித்தனர். தேவியார் திருவுளமகிழ்ந்து எதிர்வந்து அப்பிணிகளுடன் மலப்பிணியும் நீங்குமாறு தமது மலர்க்கரத்தாற்றடவி" இப்பதிக்குவடபால் முப்பதுயோசனைதூரத்திலே *"போரூர்"என்னும் சுப்பிரமணியக்ஷேத்திரமொன்று முன்பு ஆறுதரம் பிரசித்தியாயிருந்து இப்போது ஜீர்ணப்பட்டிருக்கின்றது; அது ஏழாந்தரம் உன்னாலே ஜீர்ணோத்தாரணமாய் நிலைபெற்று விளங்கவேண்டுவது. ஆதலால், அக்கடவுள் உனது நிஷ்டானுபவத்தில் மயில்வடிவாய்வந்து சொரூபத்தை மறைத்து நின்றனர். அக்கடவுளே உனது குருவடிவாய் எழுந்தருளித் தரிசனந்தந்து, மேல் உண்மையை விளக்கும். நீ இதுபோழ்தே அத்தலத்திற்குச்செல்க" எனத்திருவுளம்பற்ற அம்மையாரின் இன்பம் ததும்பிய அருட்டிறத்திற்கு வியந்து ஆனந்தபரவசராய்க் கட்டளையைச் சிரமேற்கொண்டு வணங்கி 'யுத்தபுரி' என்னும் திருப்போரூர் நோக்கி வருவாராயினர்.

அந்நாளிற் ஜீர்ணமுற்றுப் பனங்காடாகிப் பலவகைக்கொடிசெடிமரங்களாலும் அடர்ந்திருந்த திருப்போரூரில், ஓர் பெண்பனைமூலத்தில், ஸ்ரீ சுப்பிரமணியக்கடவுள் புற்றிடங்கொண்டு வீற்றிருந்தனர். அக்காட்டின்கணுள்ள பனைகளின் பலன்களால் ஜீவனஞ்செய்துவந்த சான்றார்களுளொருவன், ஒருநாள் அப்பெண்பனைநன்றாய் ஓங்கிவளர்ந்து ஓலைக்கோர்பனையாக அரும்பி விசேஷித்திருந்ததைக்கண்டு அதனைச்சூழ்ந்திருந்த ஊனங்கொடிகளைக்களைந்து, பாளைகளைச் சிக்கறுத்துக் குடங்களையவற்றினுட் புகுத்தி மதுவின் பய

$ மதுரைமாநகரத்தின் பழைய எல்லையை அறிவித்தருள வேண்டுமென வேண்டிய வமிசசேகரபாண்டியனுக்குச் சோமசுந்தரக்கடவுள் தன் கையிற் கங்கணமாக அணிந்துள்ள நாகத்தைநோக்கி "‘நீவரையறுத்துக்காட்டு’ என்று கட்டளையிட, அது தன் வாலும்வாயும் ஒன்றுபடும்படி உடம்பு வளைந்து அந்நகரைச் சுற்றிநின்று அதன் எல்லையைக்காட்டியதனால், மதுரை ஆலவாய் என ஒருபெயர் பெற்றது; இதனைத் திருவிளையாடற்புராணத்துத் திருவாலவாயான படலத்தினால் அறிக. ஆலவாயென்னுஞ் சொல்லுக்கு - விஷத்தை வாயிலுடையதென்பது பொருள்.

வமிசசேகரபாண்டியன். ஆலாசியமான்மியப் பாண்டியராசவமிச வழியிற்கண்ட குலசேகரபாண்டியன்றொடங்கி, மதுரேசுரபாண்டியன் இறுதியாகக்கூறுப. ௭௩-பாண்டியர்களில், வமிசசேகரபாண்டியன் ௪௬-வது பாண்டியனாகின்றான்; இவன் வமிசசேகர மகனாவன். தனது ஆட்சியில் மிலேச்சர்களையும் துருக்கர்களையும் தொலைத்தவன். மூன்றாஞ்சங்கப் புலவர்களாகச் சரஸ்வதியின் அவதாரம்:—கபிலர், பாணர் முதலாயினோரும், விக்கிரமசோழனும் இவன் காலத்தினரே.

* போரி—போரூர் என்பதன் மரூஉ; அது, முருகவேள் அசுரருடன் போர்செய்ததலமெனப்படும்; இதற்கு 'ஸமரபுரி' என வடமொழிப்பெயர் வழங்குவர். இது: தொண்டைநாட்டில் திருவான்மியூர்க்குத் தெற்கே கடற்கரையிலுள்ள சுப்பிரமணியஸ்தலம்.

னைக்கைக்கொண்டு விசேடப்பிரயோஜனம் பெற்று, அன்று மாலைப்போழ்தில் வந்துபார்க்கையில், முன்போலவே மரம் கொடிகளால் மூடப்பட்டிருக்கக்கண்டு, அவற்றையும் அறுத்து மதுவின்பயனைக் கைக்கொண்டனன். இவ்வாறு அதிகரித்துச் சுற்றிக்கொள்ளுகின்ற கொடிகளை நாடோறும் களைவதால், வருத்தமுற்று அவற்றைவேருடன் களைய எண்ணிச் சிலருடன் கருவிகளைக்கொண்டு கொடிகளைக் களைந்து பருத்துக்கீழேயுருவியோடிய அடிவேரைப்பற்றி வெட்டுகையில், புற்றில் திருமேனிமறைந்துள்ள சுயம்புவின்மேல் வாள் தாக்கப்பட்டுச் சிவப்புண்டாக, சான்றான் முதலியோர் மூர்ச்சையாய் வீழ்ந்தனர். அதுகண்ட பிறனொருவன் அயலில் மரமேறிக்கொண்டிருந்தவர்களுக்குத் தெரிவித்துப் பெண்பனையின் அடியை நன்றாகச் சோதித்துப்பார்க்கையில், புற்றினுட் சுயம்புவைக்கண்டு அஞ்சிப் பத்திமேலிட்டு முருகக்கடவுளைத் தோத்திரஞ்செய்ய, மூர்ச்சையாயினார் தெளிந்தெழுந்தனர். அதுமுதலாக அவ்வூர்ச்சான்றார் தமக்குள்ளே ஏணிக்கோர் பெரியபணம் வாங்கிப்பூசை முதலியவை நடத்திவரும்படிக்குச் செய்துகொண்ட ஏற்பாட்டின்படி ஆதிசைவர் ஒருவரைக்கொண்டு திருமஞ்சனமுதலிய செய்வித்துக் கற்பூராலத்திகள் செய்விக்கையில், அதைச்சூழ்ந்த ஊரும் அந்நாளில் இயற்றிய கூரைக்கட்டடமாகிய புற்றாலயமும் பற்றிக்கொண்டன. அதுகண்டு யாவரும் ஆச்சரியமும் பயமுமடைந்திருந்தனரென்ப.

(தொடரும்.)

சி. கு. நாராயணசாமி முதலியார்.

௨

நல்லொழுக்கம்.

ஆறும் அதிகாரம்.

[ஸ்ரீமத்-இலக்குமணப்போற்றிகள் மொழிபெயர்த்தது.]

(முற்றொடர்ச்சி.)

முரட்டுக்குணமானது கெட்டகுணமாயிருக்கவேண்டுவது அவசியமன்று. ஆனால், குணம் எவ்வளவிற்குப் பலமாகின்றதோ அவ்வளவிற்குத்தன்னை ஒழுங்குபடுத்தி அடக்கும்படிசெய்வது அவசியமாகின்றது. மனிதர்களுக்கு வயது அதிகரிக்கவே, குணமும் நன்மைப்படுகின்றது. அனுபவமும் விருத்தியடைகின்றது. ஆனால் இஃது அவர்களுடைய ஆழநீளமானதும், உதாரத்துவமானதுமாகிய பிரகிருதியைப் பொறுத்திருக்கின்றது. மனிதர்கள் குற்றங்களைச் செய்தபின்னர், தாங்கள் நடந்துகொள்ளுகிறவிதத்தால் தங்களைக் கெடுத்துக்கொள்ளுகிற அளவிற்கு, செய்தகுற்றங்களாற் கேடடைவதில்லை. புத்திசாலிகள் அவைகளால் உண்டாம் துன்பங்களாற் பயன் பெற்று இனி மேலைக்கு அவற்றை நீக்கிவிடுவர். ஆனால் அனுபவத்தாற் பக்குவப்படாதவர்களுமுளர். அவர்கள்காலம் செல்லச்செல்ல மிகவும் அற்பத்தனமும் வெறுப்புடைமையும், துன்மார்க்கமுமுள்ளவராக வளருகின்றனர்.

ஓர் இளைஞனிடத்திலுள்ள முரட்டுத்தனமாவது பக்குவப்படாமலுள்ள மிகுந்த ஊக்கமெனப்படுகின்றது. அதற்கு மார்க்கமானது செவ்வையாய் ஆக்கப்பட்டிருப்பின் உபயோகமான காரியத்தில் அது பிரவர்த்திக்கும். ஐக்கியமாகாணத்தில் பிரதாபசித்திபெற்றிருந்த ஒரு பிரான்சுக்காரனாகிய, ஸ்டெப்பன் ஜெரர்டு (Stephen Gerard) என்பவன் ஒருகணக்கன் முரடனாயிருக்கிறானென்று கேட்டபொழுது அவனை உடனே தன் வேலைக்குள்வைத்துக்கொண்டு ஓர் அறையில் தனியே வேலைசெய்யவைப்பான், என்று சொல்லப்பட்டிருக்கிறான். அப்படிச்செய்வதில் அவனுடைய அபிப்பிராயம் யாதெனில் அப்பேர்ப்பட்டவர்கள் சிறந்த வேலைக்காரரென்பதும், அவர்களுக்குச் சண்டைக்கு இடங்கொடாதவிஷயத்தில் அவர்கள் ஊக்கசக்தியானது வேலையிலேயே பிரவர்த்திக்குமென்பதுமாம்.

முரட்டுத்தனமென்பது, முரண்டும் கோபமூட்டத்தக்கதுமான சித்தம் என்றுதான் பொருள்படலாம். அது அடக்கப்படாவிடிற் சஞ்சலமான கோபச்சச்சரவுகளிலே வெளிப்படுகின்றது. ஆனால் ....என்னும் கருவிகளால் முறைபட்டு ஆளப்படுவதால் உபயோகப்படுகின்ற புகையந்திரத்தின் ஒழுங்கான சூட்சத்தில் அடைபட்ட புகையைப்போல ஆண்டு அடக்கப்பட்டால் ஊக்கமுள்ளசக்திக்கும் உபயோகத்திற்கும் காரணமாகப் பவிக்கலாம். ஆதலாற் சரித்திரத்திற் சொல்லிய சில பிரதாபவான்கள் முரட்டுக்குணமுடை

யவர்களாயிருப்பினும், தங்கள் கருத்தைக் கண்டிப்பான ஒழுங்கினுள்ளும் ஆளுகையினுள்ளும் அடக்கிவைக்கும்படியான பலத்ததீர்மானசித்தத்தையும் உடையவராயிருந்தனர்.

ஸ்ட்ரேபோர்டு (Strafford.) இன் கீர்த்திபெற்றபிரபுவானவர், மிகவும் கோபமும் முரட்டுத்தனமுமுள்ளவராயிருந்து, தன்கெட்டகுணத்தை அடக்குவதற்குத் தமக்குள்ளேயே முயன்று போராடிக்கொண்டிருந்தனர். அவருடைய குறையைப்பற்றி அவருக்குச்சொல்லி அதற்கு இடங்கொடாமலிருக்கும்படி எச்சரிக்கும்படிக்கான உண்மையுள்ளவராயிருந்த, தன் இஷ்டர்களில் ஒருவராகிய பழைய செக்ரட்டேரியாகிய, 'கூக்' (Cooke) என்பவரின் புத்திமதியைக்குறித்து அவர் எழுதியது வருமாறு: "பொறுமையாயிருக்கும் நல்லபுத்திமதியை நீர் எனக்குக்கொடுத்தீர். உள்ளபடியே யென்னுடைய வயசும் எனக்கு இயல்பானமனப்போக்கும் மட்டுக்குமிஞ்சிய உஷ்ணத்தைக் கொடுக்கின்றன. ஆகிலும் அதை இன்னும் அதிக அனுபவமானது குளிரப்பண்ணலாம். சமயத்தில் நான்தானே என்னைக்காத்துக்கொள்வதானது அதை முற்றும் ஜயிக்கலாம். மத்தியில் என் உண்மையான விருப்பமானது கண்யதைக்கும் நீதிக்கும், என் எஜமானுடைய நயத்திற்குமாயிருக்கிறபடியால், இந்தமட்டிலாவது அது மன்னிக்கத்தகுதியுடையதாகலாம். துன்மார்க்கத்திற் பிரயோகிக்கப்பட்டகோபந்தான் குற்றம் சாட்டும்படியான பாபமுள்ளதும் இடங்கொடுத்தவர்களுக்குக் கெடுதலையுண்டாக்கக் கூடியதுமாகின்றது. மற்றப்படி கோபம் எப்பொழுதும் அப்படியன்று.

கிராம்வெல் (Cromwell.) என்பவருங்கூட இளமைப்பருவத்தில் மனப்போக்கிற்செல்பவராயும் முரட்டுக்குணமுடையவராயும், துர்க்குணமும், அடக்கத்தகாமையும், மேல்மனுஷரில்லாமையும் உடையவராயும் பற்பலவாலிபச்சேஷ்டைகள் உண்டாதற்குக்காரணமாகிய மிகுந்த இளம் பிராயத்தின் ஊக்கமும் உடையவராயும் இருந்ததாகச்சொல்லப் பட்டிருக்கிறார். அவர்தன் சொந்த நகரத்தில் ....என்னும் கீர்த்தியையடைந்து கெட்டவழியிற் சீக்கிரம்சேரும் தன்மையாராகத் தோன்றினார். அப்பொழுது மதமானது, தனது மிகவும் கண்டிப்பான அனுஷ்டானங்களில் அவருடைய முரட்டுக்குணத்தைப்பற்றிக் கால்வின் (Calvin) மதத்தின் கடுமையான சிக்ஷைக்குட்படுத்திற்று. அவருடைய ஊக்ககுணத்திற்கு இவ்வாறு முற்றிலும் புதியபோக்கானது, கிடைத்து அது பொதுஜன காரியஸ்தனாவதற்குரிய மார்க்கத்தை உண்டாக்கிக்கடைசியில் இங்கிலாந்தில் கிட்டத்தட்ட இருபதுவருஷகாலம் மேலான அதிகாரத்தை உண்டாக்கிற்று.

நேசௌ (Nassaw) வம்சத்தின் சுத்தவீரரான அரசர்கள், தன் அடக்கம், தன்னயமறுப்பு, உறுதிப்பட்ட நோக்கமாகிய அதேகுணங்களுக்கு எல்லாரும் பேர்ப்போனவர்கள். மௌனமான உவில்லியம் (William the silent) என்று பெயர்வந்தது அவர் பேசாமலிருந்ததினாலன்று. ஏனென்றால் அவர் வளமானபேச்சுக்கு இடமுள்ள விடத்து, வாக்குவளமும் சக்தியுமுள்ளவராயிருந்தார். ஆனாற் பேசாமலிருக்கவேண்டுவது புத்திசாலித்தனமாகும்பொழுது வாயை மூடிக்கொள்ளும்படியான சுபாவத்தையுடையவர். தன் சொந்த ஆலோசனையை வெளியிடுவதால் தன் தேசத்தின் சுவாதீனங்களுக்கு அபாயம் நேரிடக்கூடியதாயிருக்கையில், அதனை ஜாக்கிரதையாய் அடக்கிவைப்பாராயினர். அவருடைய சத்துருக்கள் அவரைப்பயமும் கோழைத்தனமுமுள்ளவர் எனும்படி மிகவும் சாந்தமும் சமாதான குணமும் வாய்ந்தவராயிருந்தனர். ஆகிலும் ஒரு காரியமான காலம் வந்தபொழுது அவருடைய தைரியமானது சுத்தவீரமுள்ளதும் அவருடைய தீர்மானமானது மாற்றமுடியாததாயுமிருந்தது. நெதர்லாந்து (Notherland) இன் சரித்திரக்காரனாகிய, மிஸ்டர்மார்டலி (Mr. Martley) சொல்லுகிறார். "சமுத்திரத்திலுள்ளபாறை, இரைச்சலிடுகிற அலைகளினடுவே அமைதி" என்னுமொழிகளை அவருடைய இஷ்டர்கள் அவரது உறுதிப்பாட்டைப் புலப்படுத்துங்குறிகளாகக் கொண்டனர்.

மௌனமான உவில்லியம் (William the silent) என்பவரை, அவர் அனேகவிஷயங்களில் ஒற்றுமையாயிருந்த, உவாஷிங்டன் (Washington) என்பவரோடு, உவமிக்கின்றனர். மிஸ்டர் மார்ட்லி (Mr. Mortley) தச்சு (Dutch) தேசாபிமானியைப்போல அந்த அமேரிக்கன்கண்யதைக்கும் பராக்கிரமத்துக்கும் பரிசுத்தத்திற்கும்,

சரீரமேன்மைக்கும், அவதாரமூர்த்தியாகச் சரித்திரத்தில் விளங்குகின்றனர். மிகுந்த கஷ்டமும் அபாயமுமுள்ளகாலங்களிலும் அவருடைய உணர்ச்சிகளின்மீது அவருடைய ஆளுகையானது, அவரைப்பழகியறியாதவர்களுக்கு உடன்பிறந்த சாந்த குணத்தையும் சகிப்பையும், உடைத்தாயிருந்தனர் என்று கருத்துக்கொள்ளும்படியான வண்ணமிருந்தது. ஆகிலும் உவாஷிங்க்டன் (Washington) ஆனவர் இயல்பிற் கோபமும் படபடப்பும் உடையவராயிருந்தனர். அவருடைய சாந்தமும் இனிமையும் மரியாதையும் பிறரைக்கவனித்தலுமாகிய குணங்கள் தன் சிறுவயசுமுதலே ஜாக்கிரதையுடன் பழக்கிவந்த கண்டிப்பான மன அடக்கம், தளராத சுவயசிக்ஷைகளின் பயனாக இருந்தனர். "அவருடைய குணம் கோபமுள்ளதாயும் இச்சைகள் பலமுள்ளனவாயுமிருந்து, தனக்குநேர்ந்த மனக்கவர்ச்சிக்கும் மன எழுச்சிக்கும் உரிய பல விஷயங்களுள்ளும் ஒன்றை அடக்கவும், மற்றொன்றை வெல்லவுமாக இடைவிடாமுயற்சியும் முடிவாகிய வெற்றியும் அவர்பால் நிகழ்ந்தன"வென்று அவருடைய ஜீவ்யசரித்திரக்காரர் கூறுகின்றனர். பின்னும் "அவருடைய இச்சைகள் பலமாயிருந்தன. சிலவேளை அவைகள் உக்கிரத்துடன் மிளர்ந்தன. ஆனால் ஒருநிமிஷத்தில் அவைகளையடக்கும்படியான சக்தி அவருக்கு இருந்தது மன அடக்கந்தான் அவருடைய ஒழுக்கத்தில்மிகவுமுக்கியாம்சமாக இருந்தது. அதிற்சிலபாகம் சிக்ஷித்துக்கொண்டதின் பயனாகவேயிருந்தது. ஆகிலும் மற்றவர்களுக்கு இல்லாத அளவில் இந்தச் சக்தியை இயல்பிலே அவர் உடைத்தாயிருந்ததாகத்தோற்றுகிறது."

(தொடரும்.)

உ

சிவமயம்.

ஆத்திசூடிச் சூத்திரவிருத்தி.

மங்கல வாழ்த்து.

அறம் பொருள் இன்பம் வீடென்னும் உறுதிப்பொருள்கணான்கனுள் அறமும் பொருளுமாகிய இரண்டினுறுதி மக்கட்கு எளிதில் அவ்வுறுதி யெய்தற் பொருட்டுச் சிறுமொழிகளாற் சூத்திரித்து

இந்நூலியற்றப்புகுந்த ஆசிரியர் முதற்கண் இடையூறுநீக்கி இனிதுமுடித்தற்குரிய கடவுளை வாழ்த்துவதாகிய மங்கலவாழ்த்துக் கூறுகின்றார். அது வாழ்த்தும் வணக்கமும் பொருளியல்புரைத்தலுமென மூவகைப்படும். அவற்றுள் இது வாழ்த்தும் வணக்கமுங் கூறுதலெனக்கொள்க. இனிக்; கவிதான் எடுத்துக்கொண்ட பொருட்கு எற்புடைக் கடவுளையாதல், வழிபடு கடவுளையாதல் வாழ்த்துதல் மரபு. அவற்றுள் இவ்வாழ்த்து வழிபடு கடவுளையெனவறிக.

ஆத்தி சூடி யமர்ந்த தேவனை
யேத்தி யேத்தித் தொழுவோ மியாமே.

ஆத்தி திருவாத்திப்பூ. சூடி அதனைத்தரிக்கும் இறைவராகிய சிவபெருமான். பிறைசூடி யென்பதுபோல. கொன்றைப்பூ முதலிய பிறமாலைகளுமுளவாக ஆத்தியை ஈண்டுக்கூறியது, அம்மரந்தானே அடியாருய்தற் பொருட்டு இறைவர்தா மமர்ந்து யோகுசெய்தற்குச் சிறந்த நிழலையுங் கொடுத்தலானென்க. யோகுசெய்தற்கு ஆத்தியேயன்றிப் பெருந்துறைக் குருந்தும் வெள்ளிமலைக் கல்லாலுமிலவோவெனின்; அப்பூக்களை யவர்சூடலின்மையுணர்க. ஆத்திமுதலென்னும் பெயருமோதுபவென்க.

அமர்தல் ஈண்டு விரும்புதல். தேவன் மூத்தபிள்ளையாகிய விநாயகக்கடவுள். எனவே இறைவர் விநாயகர்மாட்டுக் கழிபேருவகையுடையரென்பது பெற்றாம். என்னை? "மூத்தமகனிடத் தார்வ மீன்றெடுத்த பிதாமகற்கு முதிருமாற்றால்" என்பது மேற்கோள். தேவனென்று பொதுப்படக்கூறினார். கூறினாரேனுந் தாம்வழிபடு கடவுள் விநாயகரேயாக அவரது மதங்கருதிய தலைமைப்பாட்டான் அப்பெயர் அவர்க்கே யோகரூடியாகச் செல்லுமாகலானும், ஆகமங் கூறுஞ் சிவபெருமான் சகளத் திருமேனிகாட்டிச் சத்தியை மணந்த ஞான்று அவராற் பூசிக்கப்பெறுந் தேவனாய் நின்றாரென்பது புராணமாகலானும், இறைவரது முதுமைப்பருவத்தையே விநாயகரெனக் கூறும் பிறிதோர் மதமுண்மையானும் பிறவானும் ஈண்டுத்தேவனென்றது விநாயகக் கடவுளையேயென்க. அன்றிக்; கொன்றைவேந்தன் மங்கல வாழ்த்தின் விநாயகக் கடவுளைச் செல்வனென்றதற்கேற்ப

ஈண்டுப் பிள்ளையென்னும் பொருட்டாத் தேவனென்றாரெனலுமாம். தமக்கொரு தலைவனில்லாத் தலைவரென்னும் பொருளே விநாயகரென்பதுங்காண்க.

இனி; அமர்ந்தவென்பதற்கு வீற்றிருந்தவெனவும், தேவன் என்பதற்குக் கடவுளை (ஈச்சுரனை) எனவும் பொருள்கூறி அதற்கேற்பச்சூடியை வினையெச்சமாக்கினாருமுளர். அவர் ஆத்திசூடுதல் துணையானே தேவனை ஈச்சுரனைக்கொண்டனர்போலும். விநாயகர்க்கும் மூன்று கண்களுடைமையும், மற்றை இறைவரது அங்கம் பிரத்தியங்கம் சாங்கம் உபாங்கமனைத்தும் விநாயகர்க்கு முண்மையாதல்போல ஆத்தியும் உரியதாமாறும் உணராராயினர் கொல்! இனி; ஆத்திசூடியமர்ந்ததேவனென்பதை யிரட்டுறமொழிந்து ஆத்தியாலையைச்சூடிச் சகளத்திருமேனி கொண்டெழுந்தருளிய விநாயகக் கடவுளெனவுங் கொள்ளக்கிடந்தமை காண்க.

எத்தியேத்தி என்பது 'ஈர்த்தீர்த்து' என்பதுபோல நீங்கலா வன்புணர்த்தலந்த அடுக்கெச்சம். "விறகிற்றீயினன் பாலிற்படுநெய்போன், மறைய நின்றுளன் மாமணிச்சோதியான், உறவுகோனட்டுணர்வுகயிற்றினான், முறுகவாங்கிக் கடையமுன்னிற்குமே." என்பது தமிழ்மறை. இத்திருவிருத்தத்துள் விறகிற்றீயும் பாலினெய்யும் முறுகவாங்கிக் கடையவென்பது நீங்கலா அன்புசெய்தலென்னும் பொருட்டாதலுணர்க. யாம் உளப்பாட்டுத்தன்மைப்பன்மை. யாந்தொழுவோமென முடிக்க. தெய்வவணக்கம். ஏகாரம் ஈற்றசை. ஆத்தி மலர்மேனிற்றலான் ஆகுபெயர்.

தந்தை யமர்ந்த தநயனையேத்தவே அவர்க்கு மஃதுவப்பாமென்பார் ஆத்திசூடியெனவும், பின் கொன்றைவேந்தன் எனவுங்கூறினார். அல்லதூஉம் இந்நூல் இளங்கல்விகற்குஞ் சிறுவர்க்காதலின் ஆத்திசூடியைநோக்கி விநாயகரைச் சிறுவராக்கி இனங்குறித்து ஏத்தினரெனலுமாமென்க. ஏத்தியேத்தி அவரை எப்பொழுதும் புகழ்ந்தென்றபடி.

இச்செய்யுள் அடியிரண்டாய்த் தம்முளளவொத்து ஒழுகியவோசையும் விழுமியபொருளும்பெற்று நிற்றலான் வெண்செந்துறையெனக்காண்க. என்னை? "ஒழுகிய வோசையி னொத்தடி யிரண்டாய் - விழுமிய பொருளது வெண்செந் துறையே" என்பதோத்தாகலின் என்க.

சூத்திரம்.

அறஞ்செய விரும்பு.

என்பது சூத்திரம். என்னுதலிற்றோவெனின்; இந்நூலுள் எடுத்தோதும் அறம் பொருளிரண்டனுள் அறத்துப்பாலதாகிய அறத்தையுணர்த்துதனுதலிற்று. இதன்பொருள்:—தருமத்தைச்செய்ய நீ ஆசைகொள்ளு என்றவாறு. எனவே மக்கள் விரும்பத்தக்கது அறமேயென்பதும், ஏனைவிருப்பமெல்லாம் அறத்துளடங்குமென்பதும் பெறப்படும். அறமென்பது தனக்கும் பிறர்க்கும் பயன்கருதிச்செய்யும் நல்வினை. அறமே தனக்கும் பிறர்க்குமா நல்வினை. இஃதுரைச்சூத்திரம். இவ்வாறே சூத்திரந்தோறும் விருத்திக்கு முன்னாகப்பின்னாக உரைச்சூத்திரமுஞ்செய்தாம். அது கண்டுகொள்க. பயன்கருதா தறஞ்செய்க வென்பவாயினும் பயனெய்தலுண்மையாம். அந்நல்வினை இம்மைப்பயன் கருதிச்செய்வதும் மறுமைப்பயன் கருதிச்செய்வதுமென இருவகைப்படும். அவற்றுள் ஈண்டுக்கருதியது பெரும்பான்மை மறுமைப்பயனென்க; இம்மையிற்செய்யும் நல்வினை மறுமைக்கு வித்தாகலின். இதனாற் பெரும்பான்மை மறுமைப்பயனுஞ் சிறுபான்மை இம்மைப்பயனுங் கருதப்படுமென்பது பெற்றாம்.

அந்நல்வினை தனக்கே பயன்குறிப்பதும், பிறர்க்கே பயன்குறிப்பதும், தனக்கும் பிறர்க்கும் பயன்குறிப்பதுமென மூவகைப்படும். அவற்றுள் ஒன்றாக இரண்டாக மூன்றுமேயாகப் பிறர்க்குத் தீங்குகுறித்தலின்றிச்செய்யும் எதுவும் அறவினையேயெனப்படும்.

இனித்; தனக்கே பயன்கருதிச்செய்வது: தனது உயிர்க்குப் பயன்கருதுவதும், தனதுடற்குப் பயன்கருதுவதும், தனதுயிருடல்கட்குப் பயன்கருதுவதுமென மூவகைப்படும். இம்மூன்றும் மேற்கூறியதனக்கே, பிறர்க்கே, தனக்கும் பிறர்க்குமேயென்று மூன்றிடத்துக்குமொக்கும்.

தனது உயிர்க்குப் பயன்கருதிச் செய்தலாவது: இன்பமெய்துவது உயிரேயன்றி யுடலன்று; உடல் சடமாதலின். உயிரிழந்தவுடல் பிணமென்னும் பெயர்பெற்றுணர்ச்சியற்றொழியும். ஆகவேயெய்தும் பயனெல்லாம் உயிர்க்கேயாமென்க.

தனது உடற்குப் பயன்கருதிச் செய்தலாவது: உடல் சடமாயினும் உயிரைத்தாங்குதற்கு நிலைக்களமாயிருத்தலான் அவ்வுடலைப் பேணுதலாம். உடலைப் பேணலாவது உடற்கூறறிந்து ஏற்றகாலத்து ஏற்றவுணவளித்தலும், இருவகை யுடற்கருவிகளை ஏற்றபடியியக்குதலுமாம்.

தனது உயிருடல்கட்குப் பயன்கருதிச் செய்தலாவது உயிர்க்கே பயன்கருதிச் செய்வதும், உடற்கே பயன்கருதிச் செய்வதுமாகிய நல்வினைகளைத் தனித்தனியின்றி யொருங்கே செய்தல். அவை ஸ்நான முதலிய ஆசாரங்களும், பூசைமுதலிய சற்கிரியைகளும் பிறவுமாம். இவ்வளவும் தனக்குப் பயன்கருதிச் செய்யும் நல்வினை கூறிற்று.

இனிப்; பிறர்க்குப் பயனாமாறுசெய்தல்: பிறரென்றது ஈண்டு வறியராயினாரை. அவர் பொருளிலார், உறவிலார், குருடர்,செவிடர், முடவர் முதலாயினார். இவர்தமக்கு ஏற்றவாறு செய்கவென்பது. முற்றீவினை செய்தாரன்றே பின் அதன்பயனைத் துய்த்தற்குப் பொருளில ராதியாய்ப் பிறந்தனர், அத்தீவினையாளர்க்கு நல்வினைபுரிதல் பாவமன்றோவெனின்; கடவுட்குமது கருத்தாக வுடலிருந்தன்றோ அவர்புரியுந் தண்டனையைத் துய்க்கும். அவ்வுடலை நிறுத்தற்பொருட்டு அந்நல்வினை துணையாமாதலின் அதனாற் குற்றமின்றென்க. அல்லதூஉம் 'மேலுலகமில்லெனினு மீதலே நன்று.' எனப்பிறருங் கூறுதலான் எவ்வாற்றானும் அறஞ்செய்தனன்றென்க. புகழ் இடம்பம் முதலிய கருதிச்செய்யும் நல்வினையும் பிறர்க்குப் பயனாயின் அறமேயாம். அந்நல்வினை அவருடற்கேயுரியதென்க. பெற்றோர்பொருட்டுச் செய்யும் பிதிர்க்கடனாகிய நல்வினையோவெனின்; தனதுயிர் அவரதுயிரெச்சமே யாதலின் அவருயிர்க்கேயன்றித் தனதுயிர்க்கும் பயனாமென்க. எவ்வாற்றானும் பிறரது துயர்களையச்செய்யும் நல்வினையே சிறப்புடைத்தெனக் கொள்க.

இனித்; தனக்கும் பிறர்க்கும் பயனாமாறு கூறுதும். ஒரோகாலத்து ஒரோநல்வினை தனக்கும் பிறர்க்கும் பயனாமாறு செய்தலுமுண்டு. செய்யும் வினையான் இம்மையிற் பிறர்க்கும் மறுமையிற் றனக்கும் பயனாம். இது பிறர்க்குப் பயன்கருதிச்செய்யும் நல்வினையுளடங்குமென்க, இதனாற் சிறுபான்மை இம்மைப்பயன் கருதியதென்பதுமமைந்து நின்றமை காண்க.

(தொடரும்.)

கோ. வைத்தியலிங்கம்பிள்ளை.

உ

கதாசரித் சாகரம்.

௫-வது சதுர்த்தாரிகாலம்பகம் ௧-வது தரங்கம்.

[ஸ்ரீமத்-வீராசாமி ஐயங்காரவர்கள் மொழிபெயர்த்தது.]

(முற்றொடர்ச்சி.)

இரத்தினபுரமென்று பிரசித்திபெற்றதோர் நகரமுண்டு. அது தன்பெயருக்கிணங்க இரத்தினமுதலிய செல்வங்கள் நிறைந்து நகரங்களெவற்றினுஞ் சிறந்தது. அதிற் சிவனென்றும் மாதவனென்றும் பெயரையுடைய இரண்டு சூதாடிகளிருந்தனர். அவர்கள் தங்களைப் போன்ற பலரைத்தமக்குப் பரிவாரமாக்கிக்கொண்டு வஞ்சனைத்தொழிலா லவ்வூரிலுள்ள சகலமான தனிகர்களின் பொருள்முழுவதையும் அபகரித்துவிட்டுப் பின்பொருநாளவ்விருவரும் நாமிந்நகரம் யாவுங் கொள்ளையடித்துவிட்டோம்; ஆதலாலிப்பொழுது வசிப்பதற்கு உச்சயினீபட்டணம் போய்ச்சேரவேண்டும். அவ்வூரில் அரசனுடைய புரோகிதன் சங்கரஸ்வாமியென்னும் பெயரினையுடையவோர் பெரும்பணக்காரனிருக்கின்றானென்று கேள்விப்படுகின்றோம்; அவனிடத்திலுள்ள பொருள்களையும் நமது யுக்தியினாலபகரித்து அப்பொருள்களால் மாள்வதேசத்துப்பெண்களின் கலவியின்பத்தையநுபவிப்போம்; அன்றியும் அப்பார்ப்பானுக்கோர் பெண்மணியிருக்கின்றாளென்றும் கேள்விப்படுகின்றோம். அப்பெண்ணையு மவனி—

டத்தினின்று நிச்சயமாகக் கைப்பற்றிவிடலாம் என்று தீர்மானித்துத் தாமிருவீருஞ்செய்யவேண்டிய சூட்சியின்னதென்பதையும் முடிவுசெய்துகொண்டு தம்மூரைவிட்டு வெளியேறிச்சென்றனர்.

அவ்விருவருள் மாதவனென்பவன் இராஜகுமாரன்போல வேடம்பூண்டு ஆடையாபரணங்களணிந்துகொண்டு உச்சயினீ நகரத்தையடைந்து அந்நகரத்தின் பக்கத்திலுள்ளவோர் கிராமத்திலிருந்தனன். பற்பல மாயைகளில் வல்லவனான சிவனென்பவன் பிரமசாரி வேடம்பூண்டு தானொருவனாகவே முதலிலவ்வுச்சயினீ நகரத்தையடைந்து அதையடுத்த சிப்பிரையென்னும் பெயருள்ள நதியின்கரையில் மான்தோல், பிக்ஷாபாத்திரம், தருப்பம், மண் முதலியவற்றுடன் காணப்படும் ஓர் மடத்தில் வசித்துவந்தனன். அவனெவ்வொரு தினமும் அதிகாலையில் எழுந்து தன் தேகமுழுவதையும் மண்ணாற் பூசிக்கொண்டு தலைகுனிந்தவண்ணமே யந்நதியின் நீரில் நெடுநேரமிருப்பான்; அதைப்பார்த்தால் தான்செய்யும் அகிருத்தியத்திற்குப் பயனாகித் தனக்குச் சம்பவிக்கப்போகின்ற தாழ்ந்தகெதியை இப்போதே பயிலுகின்றவன்போலக் காணப்பட்டது. பின்பு ஸ்நானஞ்செய்தவுடனெழுந்து கரையிலிருந்து சூரியனைநோக்கி மேலேபார்த்தவண்ணமாக நெடுநேரமிருப்பான். அது தான்செய்யுங் கபடவேஷத்திற்குக் கழுவிலேற்றித் தண்டித்தல்தான் தக்கதென்பதைக் காட்டுதல் போலும்தோன்றிற்று. அவன் ஸ்வாமி சந்நிதியிற்சென்று தருப்பைப்புல்லைக் கையிலணிந்துகொண்டு செபம்பண்ணுவதும் பத்மாசனத்தில் வீற்றிருந்து டம்பமாய்த் தவசிபோலபிநயம் செய்வதுமாய் சாதுக்களுடைய தெளிந்தமனத்தைத் தன் கபடத்தினாற் கவர்வதுபோலவே நல்ல தாமரைமலர்களைக்கவர்ந்து முப்புரமெரித்த பரமேஸ்வரனைப் பூஜித்துவந்தான். பூஜைசெய்தபின்னர், மறுபடியும் செபஞ்செய்பவன்போற் பாசாங்குசெய்துகொண்டு தனது வஞ்சனைத்தொழில்களை நினைப்பவன்போல் தியானஞ்செய்வான். தினந்தோறும் நாழிகையிருபதுக்குமேல் பிக்ஷையெடுக்கப்போவான். அத்தருணத்தில் கிருஷ்ணாஜிநத்தை யரையிலணிந்துகொண்டு தன் மாயமானபார்வையெவ்விடத்திலும் செல்வதுபோலவே தானுமந்த நகரம் யாவுஞ்சுற்றி மௌனத்துடன் பிராமண வீடுகள்தோறுஞ் சென்று

பிக்ஷையெடுத்து அந்த அன்னத்தை மூன்று பங்கிட்டு ஒரு பங்கைக் காக்கைக்கும், ஒருபங்கை அதிதிகளுக்கும் போட்டுவிட்டுக் கபடத்திற்கெல்லாம் மூலகாரணமாயிருக்கின்ற மற்றொருபங்கன்னத்தில் தன் வயிற்றுத்துருத்தியை நிரப்புவான். பின்னுமவன் தன் பாவங்களனைத்தையுங் கணக்கிடுகின்றவன்போலக் கையில் செபமாலையை வைத்துக்கொண்டு நெடுநேரம் பொய்யான செபம்பண்ணுவதும் இராக்காலங்களில் தானொருவனாகவே அந்த மடத்திலிருந்து உலகத்தவரை வஞ்சித்தற்குரிய சூட்சிகளையாலோசிப்பதுமாய்ப் பார்ப்பவர்கள் வருந்தும்படியாய்ப் பொய்த்தவம்புரிந்து அந்நகரத்திலுள்ளவர்கள் மனதைக்கவர்ந்தனன். அப்பொழுதவ்வூரிலுள்ள பக்திமான்களனைவரும் ஓகோ இவர் மகாதவசி மகாசாந்தர் என்று கொண்டாடும்படி கியாதியுண்டாயிற்று.

அப்பொழுது மாதவனென்பவன் தன் சிநேகிதனிவ்விதம் பிரசித்திபெற்றிருக்கின்றானென்பதைச் சாரன்மூலமாயறிந்துகொண்டு உச்சயினீநகரம் வந்துசேர்ந்து அந்நதியையடுத்த தேவாலயத்திற்கு வெளியிற் சற்றுத்தூரத்தில் ஓர் வீட்டில் வசித்துவந்தனன். அவனொருநாள் ராசகுமாரன்போலுள்ள தனது வேஷத்துடனேசென்று சிப்பிராநதியில் ஸ்நானம்பண்ணிவிட்டுத் தன் வேலைக்காரர்களுடன் ஆலயத்திற்கு வந்தான். அவ்விடத்தில் ஸ்வாமியினது முன்பு செபஞ்செய்துகொண்டிருக்கின்ற சிவனைக்கண்டவுடன் மிகவும் வணக்கத்தோடு திடீரென்று அவன்காலில் வீழ்ந்து நமஸ்கரித்து எழுந்துநின்று இந்த மகானையொத்த தவசியை யுலகத்திற்கண்டதேயில்லை. இவரை யானனேகம் புண்ணியதீர்த்தங்களில் பற்பலதடவைகளிற் கண்டிருக்கின்றேனென்று அவ்விடத்திற் கூடியிருக்கின்ற பலருமறியும்படி புகழ்ந்துபேசினன். இப்படி ஸ்தோத்திரஞ்செய்கின்ற மாதவனைச் சிவன்பார்த்தும் பாராதவன்போல டம்பத்தினால் தனது கழுத்தைச் சற்றுமசையாதவனாகி அப்படியே யிறுமாந்திருந்தனன். பின்பு மாதவன் தன் வாசஸ்தானம் போய்ச்சேர்ந்தனன். அன்றிரவிலவ்விருவருமொரேயிடத்திற் சந்தித்துத் தங்களிஷ்டப்படி வேண்டியவுணவுகளைப் புசித்துவிட்டு மேற்செய்யவேண்டிய காரியமின்னதென்பதையும் முடிவுசெய்துகொண்டார்கள். உடனே சிவனென்ப—

வன் விடியயாமத்திற்கே தன் மடம்வந்து சேர்ந்தான். மாதவன் காலையிலெழுந்து தன்னைச்சேர்ந்த சூதாடிகளிலொருவனையழைத்துத் தக்கவிலை மதிப்புள்ள இரண்டு வஸ்திரங்களை அவன் கையிற் கொடுத்து இவற்றை யிவ்வூரரசன் புரோகிதன் சங்கரசுவாமியென்பவனிடம் மிகவணக்கத்துடன் காணிக்கையாகக் கொடுத்துவிட்டு, தெக்ஷிண தேசத்தினின்று மோரிராஜகுமாரர் மாதவனென்று பிரசித்திபெற்றவர் தம் குலத்திலுள்ளவர்களா லவமதிப்புற்றுத் தன் பித்ரார்ஜிதமான வெகு தனங்களையுமெடுத்துக்கொண்டு தன்னையொத்த வேறுசில ராஜபுத்திரர்களோடு உங்களரசனை ஆசிரயிக்கவேண்டுமென்று இவ்விடம் வந்திருக்கின்றார். ஆதலால் முதலில் உங்கள் தரிசனத்திற்காக என்னையனுப்பினாரென்றுசொல்லித் தங்களைப்போல் கீர்த்திபெற்றவருலகத்தில் யாவரிருக்கின்றாரென்று புகழவேண்டுமென்றனன். இதனைக்கேட்டதுமவன் அப்படியே செய்கின்றேனென்று அந்த வஸ்திரங்களைக் கையிலெடுத்துக்கொண்டு புரோகிதன் கிரகத்திற்குச்சென்று அவன் சமயம்பார்த்துத் தனித்திருக்கும்போது காணிக்கையாகக்கொண்டுவந்த வஸ்திரங்களையவனிடங்கொடுத்து மாதவன் சொல்லிய விஷயத்தை மிகவுமொழுங்காயெடுத்துப்பேசிப் புரோகிதனை ஸ்தோத்திரஞ்செய்தனன். உடனே அவனுந் தனக்குக் காணிக்கையாகக் கொடுக்கப்பட்ட பொருளிலுள்ள ஆசையினால் அவன் சொல்லியதையுண்மையென்றே விசுவசித்தனன். ஆனால் பேராசையுள்ளவர்களை யிழுப்பதற்கு மருந்து ஈகையொன்றே போதுமானது.

பின்பு மாதவன், தானனுப்பிய மனிதன்மூலமாய்ப் புரோகிதன் நம்பிக்கையுற்றிருக்கின்றானென்பதையறிந்து மறுநாள் அவன்சமயம் பார்த்துவரச்செய்து தானேயவனைப் பார்ப்பதற்காகப் புறப்படும்போது தீர்த்தயாத்திரைக்காகக் காஷாயம்பூண்டு யோகதண்டத்துடன்கூடியிருக்கின்ற ராஜகுமாரர்களைப்போல் வேஷந்தரித்துள்ள தன்னைச்சேர்ந்த சிலர் புடைசூழ்ந்துவர முன்னேயொருவனையனுப்பித் தன்வரவை அவனுக்குத் தெரிவித்தனன். அப்புரோகிதனுமெதிர்கொண்டுவந்து இவருக்கு நல்வரவுகூறி மகிழ்வித்துத் தன் கிரகத்திற்கழைத்துச்சென்றான். அப்பொழுது மாதவன் சற்றுநேரமங்கிருந்து அவனுடன் சம்பாஷித்துவிட்டுப் புரோகிதனனுமதிபெற்றுத் தன்னிருப்பிடம் வந்துற்றனன். மறுபடி மறுநாளுமவன் இரண்டுயர்ந்த வஸ்திரங்களைப் புரோகிதனுக்குக் காணிக்கையாகக்கொடுத்தனுப்பி அவனிடஞ்சென்று நாங்கள் பல பரிவாரஜனங்கள் எங்கட்குச் சேரவேண்டுமென்பதற்காக இராஜசேவையை விரும்புகின்றோமேயன்றி வேறில்லை. ஆதலாற்றானும்மையடுத்தோம். எங்களுக்கோ மிகுந்தபொருள் கைவசமிருக்கின்றது என்றனன். இதைக்கேட்ட புரோகிதன் நாமிவனிடத்திலும் தனலாபம் பெறலாமென்ற கருத்துடன் கூடியவனாக உமதிஷ்டப்படியே செய்விக்கின்றேனென்று கூறிவிட்டு அப்பொழுதே அரசனிடஞ்சென்று மாதவன்பெருமையை மிகவும் புகழ்ந்துபேசி அவன் வந்திருக்கும் விஷயத்தையுந் தெரிவித்தனன். அரசனுந் தன் புரோகிதனிடத்துள்ள கௌரவத்தினால் அவன் சொல்லியதை அவ்விதமுண்மையென்றே கருதினன். மறுநாள் புரோகிதன் மாதவனை யவன்பரிவாரத்துடன் கௌரவத்தோடு அரசனிடமழைத்துச்சென்றான். அவ்வேந்தனும் இராஜகுமாரனையொத்த வடிவுடன் கூடியிருக்கின்ற மாதவனைப்பார்த்து ஆதரவுடன் அனுக்கிரகித்துத் தக்கவேலையிலும் நியமித்தான். அதுமுதல் மாதவன் பிரதிதினமும் பகல்முழுதும் ராஜசேவை செய்வதும் இராத்திரிதோறும் சிவனுடன் ஆலோசனை செய்வதுமாயிருந்தான்.

(இன்னும் வரும்.)

---

*ஆசாபாசங்களும் அவைகளையொறுத்துத்தற்கடிதலும்.

(முற்றொடர்ச்சி)

இந்தவிரோதத்துக்குப்பாவப்போசனமென்று, வேதசாஸ்திரிகள் பேரிட்டுவழங்குப. நம்மைத்தண்டித்து நமது அகந்தையை அடக்குவதற்காகவும் நமது இழிதகைமையையும் நிர்ப்பாக்கியத்தையும் நாமே அறிந்துகொண்டு, கடவுளுக்குமுன்பாக நம்மை நாமே தாழ்த்திக்கொள்வதற்காகவும், இந்தப்போராட்டம் நம்மிடத்து எஞ்ஞா

---

* இவ்வியாசம் மதுரைத் தமிழ்ச் சங்கத்து எட்டாம்வருஷோற்சவ தினங்களுளொன்றாகிய 1909-௵ மே௴ 25௳ கூடிய வித்துவச்சபையில் கீழக்கரை, ஸ்ரீமத்-M. ஜோஸப்டையாஸ் அவர்களாற் படிக்கப்பட்டது.

ன்றும் நிகழ்ந்துவரவேண்டுமென்று தேவதிருவுளம் நீதியாய் நிரூபித்தது.

கடவுள் மனிதனைப்படைக்கும்போது மகிமைப்பிரதாபத்தால் அவனைப்பூர்த்தியாக்கித் தமதுவரங்களாலும் வரப்பிரசாதங்களாலும் அலங்கரித்துச் சிங்காரித்தார். என்றாலும் மனிதன் இந்த நன்மையையறிந்துகொள்ளாமற் பாவஞ்செய்து தன்சிருட்டி கருத்தாவுக்கு நன்றியற்றவனாய்ப்போய் மிருகங்களுக்குரிய ஆசைக்கும் ஆசாபாசத்துக்கும் இடங்கொடுத்ததினால் மிருகத்துக்கொத்தவனாய்த் தான்பெற்றிருந்த ஞானவரங்களையுமிழந்தான். ஆதலின் அவன் தன்னை நன்றாயறிந்து கர்வியாமலிருக்கும்பொருட்டு, கடவுள் அவனைத்தாழ்த்தினார். இவைநிற்க, குழப்பஞ்செய்கிற நமது ஆசாபாசங்களும் சரீர இச்சையும் நாம் புண்ணியத்தில் முதிர்ந்து விருத்தியடைவதற்கு முக்கிய இடையூறாய் நிற்பன. எங்ஙனமெனின், நம்மைச்சோதனைகளால் வருத்திப் பாவஞ்செய்யத்தூண்டி விளைகிறபாவங்களும் குற்றங்களும் அவ்வாசாபாசங்களாலும் சரீர இச்சையினாலுமே உண்டாகின்றனவாதலின் சரீரம் நமக்கு மகாபெரிய சத்துருவாயிருக்கின்றது.

இதுபற்றியன்றோ "உங்களிடத்தில் உண்டாகிற சண்டையும் விரோதமும் எங்கிருந்துவருகின்றன ? உங்கள்புத்தியோடு போராடுகிற ஆசாபாசங்களாலன்றோ வருகின்றன" என்று அர்ச் யாகப்பர் (St. James) தமது நிருபத்திற் கூறுகின்றார். நமதுள்ளத்தில் நடக்கிற சண்டைக்கும் நாம் செய்கிற பாவாக்கிரமங்களுக்கும் காரணம் யாது? நம்மிடத்திலுள்ள இந்திரியப் பிரியமும் துர் இச்சையும் சுயசிநேகமுமே இவைகளுக்குக் காரணமாகின்றன. புண்ணியவிருத்திமார்க்கத்தில் நமக்குநேரிடுகிற இடையூறுகளுக்கும் இவைகளேகாரணங்கள். இன்பதுன்பத்தைச் சமப்படுத்துவதே புண்ணியத்தில் நேரிடுகிற பிரயாசையென்று அரிஸ்தோத் (Aristotales) என்னும் சாஸ்திரி விதித்தான். துன்பத்தைப்பட்டநுபவித்து இச்சையையடக்குவதே ஞானமென்று எப்பிக்தேத் (Epietetus) என்னும் சாஸ்திரி தீர்மானித்தான். நமக்கு நேரிடுகிற் துன்பதுரிதங்களைத் தைரியமாய்ப் பட்டநுபவித்து நமக்குப்பிரியமானதை விவேகத்தோடு விலக்கி நடப்பதே புண்ணியமாகும். யாதொருதுன்பத்தை விலக்குவதற்காகவென்கிலும் யாதொரு இன்பத்தைத் துய்த்தநுபவித்தற்காகவென்கிலும் இந்த இன்பசுகத்தைத் தவிர்க்காததினாலென்கிலும் நாம் பாவத்தில் விழுகின்றோமென்று தின அநுபவத்தாலறிந்துவருகின்றோம். சிலர் செல்வம் மகிமை பெருமை இன்பசுகமாதியவைகளின் ஆசையால் பாவஞ்செய்வர். வேறுசிலர் தேவகற்பனைகளைக் கைக்கொண்டு ஒழுகும் வருத்தத்துக்குப் பயந்தும் தங்கள் சத்துருக்களை மித்துருக்களாய்ச் சிநேகிப்பதற்கும் ஜெபதப தானதரும விரதமநுஷ்டிப்பதற்கும், ஆத்துமசம்பந்தமான நற்கிருத்தியங்களைச்செய்வதற்கான அரும்பிரயாசைகளுக்கஞ்சியும் பாவஞ்செய்வர்.

இவைகளெல்லாம் இப்படியாக நமதுகெட்ட பற்றுதல்களையும் ஒழுங்கற்ற சுயசிநேகத்தையும் அடக்கிக் குழப்பமான நமது ஆசாபாசங்களையொறுத்து நம்மைத்திருத்திக்கொள்வதே தற்கடிதலாம். இவ்வுலகத்தில் மனிதனுடைய ஆயுட்காலம் ஓயாதசண்டையென்று யோபென்னும் (Job) மகாத்துமாமொழிந்தார். நமது ஆன்ம ஆசைக்கு விரோதமான இச்சை நமது சரீரத்திலும் நமது சரீர இச்சைக்கு விரோதமான ஆசை நமது ஆன்மாவிலும் இருக்கிறதென்று அர்ச்சின்னப்பர் (St. Paul) சொல்லுகிறார். நமதுள்ளத்தில் நடக்கிற ஓயாதசண்டைக்கும் காரணமிதுவே. தன்சரீரத்தையும் ஆசாபாசங்களையுஞ் செயிக்கின்றவன் போர்வீரர் எல்லாருக்கும் மேற்பட்டவீரனென்பது திண்ணம். இதுவே தேவதாசருக்குரிய வீரசூரத்தனமென்று அம்புரோஸ் அகுஸ்தீன் (Sts. Ambrose and agustin) முனிவர்கள் அறைந்தார்கள். சரீரபலன் ஒன்றுக்கு முதவாது. தன்சரீரத்தைச்செயித்து ஆசாபாசங்களையடக்கி இன்பசுகங்களைப்புறக்கணித்து வருத்தம்பிரயாசைகளைப் பொறுமையோடுசகித்துக்கொள்ளுந் தைரியமே மெய்யான வீரசூரத்தனமாம். மற்றவர்களை ஆண்டு நடத்துகின்றதைவிடத் தன்னைத்தானே ஆண்டுதன்சுய இச்சையையும் ஆசாபாசங்களையுமடக்கி நடத்துவது மேலான அதிகாரமென்பதிற் சந்தேகமில்லை. இதனாலே வீரசூரனைப்பார்க்கிலும் பொறுமையுள்ளவனை அதிகமாகக் கனம்பண்ணவேண்டுமென்றும் பட்டணங்களை முற்றுகைபோட்டுப் பிடிக்கிறவனைப்பார்க்கிலும் கோபத்தை அடக்கிறவன் மேற்பட்டவனென்றும் ஞானியானவர் சொல்லுகிறார்.

இதற்குஅர்ச்- அம்புரோஸ் சொல்லுகிற நியாயமாவது: "நமது வெளிச்சத்துருக்கள் எல்லாரையும்விட நமதுள்ளத்திலுள்ள கெட்ட பற்றுதல் அதிக ஆபத்துக்குரிய சத்துருவாகும். ஆகையால் உட்சத்துருக்களைச்செயிக்கிறவன் வெளிச்சத்துருக்களைச் செயிக்கிறவனுக்கு மேற்பட்டவ"னென்பதே. அந்த அர்ச்-அகுஸ்தீன் என்பவரே சொல்லுகிறதாவது: "மிருகங்களுடைய நடக்கை ஓர்விதமானது. தேவதூதர்களுடைய நடக்கை வேறுவிதம். மனிதனுடையநடக்கையோ இன்னொருவகையானது. மிருகங்களுடைய நடக்கைமுழுதும் பூமியை நாடியிருக்கும்; அவைகளின் இச்சைப்படி நடப்பதே அவைகளுக்குவேலை. தேவதூதருடைய நடக்கையோ முழுதும் மோட்சத்துக்குரியது. கடவுளோடு ஒன்றிப்பதே அவர்களியற்கைத்தொழில். மனிதருடைய நடக்கையோவெனின் மிருகங்களுடைய நடக்கைக்கும் தேவதூதரின் நடக்கைக்கும் மத்திமதரமானது. மனிதன் புத்திக்கேற்ப நடந்தால் தேவதூதருக் கொப்பாவான்." "சரீரத்துக்கேற்ப நடந்தால் மிருகங்களுக் கொப்பாவான்" "சரீர இச்சைப்படி நடக்கிறவன் சரீரி, தேவகட்டளைப்படி நடக்கிறவன் அசரீரி" என்றார் அம்புரோசியாரும். ஆகையின் சரீரஇச்சையின்படி நடக்கிறவன் புத்தியுள்ளமனிதனுக்கடுத்த நடக்கையாய் நடவாமல் மிருகங்களைப்போல நடக்கிறான். நாம் ஆசாபாசங்களையொறுத்துத் தற்கடிதலுக்கு இந்தநியாயமொன்றே போதுமானது. ஏனெனில் கடவுளுடைய சாயலாகவும் முடிவில்லாத நித்தியகாலமும் அவரைச்சுகித்தநுபவிப்பதற்காகவும் உண்டாக்கப்பட்ட பிரபுவாகிய மனிதன் சரீரத்துக்கும் இந்திரிய இச்சைக்கும் அடிமைப்பட்டுச் சரீரத்துக்குக் கீழ்ப்படிந்து மிருகங்களுக்குரிய துர் இச்சைப்படி நடந்து அவைகளுக்கொத்தவனாகிறதைவிட அதிக அயோக்கியமான இலச்சைக்கேடு வேறுளதோ ? "எஜமாட்டி கீழ்ப்படிகிறதும் அடிமை அவளை ஆளுகிறதும் புத்திக்கடாத காரியமென்று" அர்ச்-பெர்னர்தூஸ் (St Bernardes) சொல்லியிருக்கிறார்.

(இன்னும் வரும்.)

திருச்சிற்றம்பலம்.

யானையாராய்ச்சி.

இதனை ஆனையெனவும் வழங்குவர். திருவிளையாடற்புராணம்-திருமணப்படலம் ௯௭-வது செய்யுளில், "கடிமுரசானைமேலறைவித்தார்" எனக்கூறியதனாற்காண்க.

இதனைப் பெரியவுயிர்க்குதாரணமாகக்கூறுவர் "அத்திமுதலெறும்பீறானவுயிரத்தனைக்கும்" என்பதனாற்காண்க.

இது மூவகைப்பிறப்புடையது. "முத்திறத்தனவெண்ணலப்பிறப்பினமூரிவெங்களியானை" எனக்கூறிய, மகாபாரதம், சூதுபோர்ச்சருக்கம், ௭௯-வது-செய்யுளிற்காண்க. மூவகையாவன:—மலையிற்பிறத்தல், வனத்திற்பிறத்தல், நதியிற்பிறத்தல் எனமூன்றும். இம்மூவகைப்பிறப்புடையனவற்றை முறையே கிரிசரம், வனசரம், நதிசரமென்பர்.

இஃது அரசர்முதலாயினோ ருலாப்போதற்குச் சிறந்தவாகனமும், போரிற் பகைவரைச்செயிப்பதற்குரிய நால்வகைச்சேனைகளில் ஒருவகைச்சேனையுமாயிருப்பது; முறையே திருவிளையாடற்புராணம்

உக்கிரகுமாரனுக்கு வேல்வளைசெண்டு கொடுத்தபடலம்-௫௮-வது செய்யுளில், "ஆனையெருத்திற்சிங்கவிளவடலேறென்னவயல்வேந்தர் சேனைதழுவவரும் பவனிக்கு" எனக்கூறியதனாலும், கம்பராமாயணம், பாலகாண்டம், திருவவதாரப்படலம்-௨௨-வது செய்யுளில், "கசரததுரகமாக்கடல்கொள்காவலன்" எனக்கூறியதனாலுங்காண்க.

அவ்வரசர் பட்டத்துயானைக்கிலக்கணமாமாறு - நான்குகாலுந் துதிக்கையுங், கோசமும், வாலுமாகியவேழுறுப்பும் நிலத்திற்றோயப் பெற்றதுமாய்ப், பாலையுஞ்சங்கையுமொத்த வெண்ணிறம்வாய்ந்த நகங்களையுடையதுமாய்க், காலினாலுந் துதிக்கையாலுஞ் சரீரத்தாலும் வாலினாலுங் கொம்பினாலுங் கொல்லவல்லதாய், ஏழுமுழவுயரமும் ஒன்பதுமுழநீளமும் பதின்மூன்றுமுழச் சுற்றுமுடையதாய், சிறியகண்ணையுஞ் சிவந்தபுள்ளிகளையுமுடையதாய், முன்புயர்ந்ததாய்ப், பின்புதாழ்ந்ததாயிருப்பது. இவ்வாறுபிங்கலநிகண்டு "காலோர் நான்குந்தனிக்கையுங்கோசமும் - வாலுறுப்போடேழுமாநிலந்தோய்வதும் - பாலுஞ்சங்கும்போலுங்காலுகிர் - காலினுந்தன்றனிக்கையினுமெய்யினும் - வாலினுமருப்பினுங்கோறல்வல்லதுவா - யேழ்முழமுயர்ந்தொன் பான்முழ நீண்டு- பதின்மூன்றுமுழஞ் சுற்றுடைத்தாகித் - தீயுமிழ்சிறுகண்ணுஞ்செம்புகரு முடைத்தாய் - முன்புயர்ந்து பின்பணிந்ததாய - தியானையரசுவாவாகுமென்ப." என-௧௪௯௨-வது செய்யுளிற்கூறியது காண்க. சிவந்தபுள்ளிகள், பட்டின்சித்திரத்தொழிலைப்போலிருக்குமென்றார். மகாபாரதம், பதினாறும்போர்ச்சருக்கம், "செம்புகர்பட்டின்றொழிலிற்பயில்கிற்பது" என்னும் ௮-வது கவியிற்காண்க.

அரசர் இதனை யொருவகைப்படையாகவைத்துப் போர்புரியச் செய்வதன்றித் தாங்களும் அதன்மேலிருந்து விற்போர்முதலியபோருஞ்செய்வர். இதனை, மகாபாரதம், பதினாறும்போர்ச்சருக்கம்-௧௧, ௧௨, ௧௫-வது கவிகளிற்காண்க.

இப்போர்க்குரிய யானைமார்பினிலே மூன்றுசுழியுடையதாய்க், கற்றூணொத்த கால்வலியுடையதாய், வெண்ணெய் நிறமுள்ள நகங்களும் ஆமைபோன்ற புறவடிகளுமுடையதாய், இளங்கமுகுபோன்ற வாலுடையதாய்க், கட்டுத்தறியையும்விலங்கையு முறிப்பதாய்ப், பாகரையுங் குத்துக்கோலையுந் தூரத்தேகண்டாலுங் கோபங்கொள்வதாய்த், தன்னிழலைக்கண்டு வேறுயானையென்று கோபிக்குங் கருத்துடையதாய், நடனந் துரிதகதி மந்தகதி ஓட்டம் எனநான்குதொழிலையுடையதாய், அங்குசம் வார்த்தை மேலிருந்தோர் காலினான் மிதிக்குமுறை இம்மூன்றாலும் ஏவுமுறையறிவதாய்ப், போரிலே இடசாரி வலசாரி வருவதாய், முற்கூறியவாறே யொன்பதுறுப்பினுங் கொல்லுந்தன்மையுடையதாயிருப்பதென்பர். அச்சருக்கத்தில் ௯, ௧0, ௧௨; ௧௫-வது கவிகளிற் காண்க.

இதற்கு மதமூன்றெனவும், அது கருநிறமாயுள்ளதெனவுங்கூறுவர். அவை கன்னமதம், கைமதம், கோசமதமென்பனவாம். திருக்கோவையார், ௫௫-வது செய்யுளிற், "கருங்கடமூன்றுகுநால்வாய்க் கரியுரித்தோன்" எனக்கூறியதனாற்காண்க.

இம்மதம் ஏழிடத்தினு நின்றொழுகுமென்பர். மகாபாரதம், சூதுபோர்ச்சருக்கம்-௭௯-வது செய்யுளில், "எழுதிறத்தினுமிகவிடு வனமததாரை" எனக்கூறியதனாற்காண்க. அவ்வேழிடமாவன— கன்னமிரண்டு, கண்ணிரண்டு, கைத்துவாரமிரண்டு, கோசமொன்றென்க. இம்மதத்தின் மணம் பெண்கள் கூந்தன்மணமும், வேங்கைமலர்மணமும் போலிருக்குமென்பர். முறையே சீவகசிந்தாமணி, கனகமாலையாரிலம்பகம்-௬௫-வது செய்யுளில், "புணர்மருப்பியானையின்புயல்கொண்மும்மத - மணமகள்கதுப்பெனநாறுமாநகர்" என்பதனாலும்; கம்பராமாயணம், நகரப்படலம், ௫௮-வது செய்யுளில், "விலக்கருங்கரிமதம்வேங்கைநாறுவ" என்பதனாலுங்காண்க.

இத்தன்மையுள்ளதாயினுமது யாழிசைக்கு வசமாகி வணங்குமென்பர், ஞானாமிர்தம், "வணக்கவாரா - வைம்புலவேழத்தின்வெந்தொழில்வீயக் - கருணைவீணைகாமுறத்தழீஇ" எனக்கூறிய, ௪-வது திருவகவலினும்; தணிகைப்புராணம், திருநகரப்படலம்; "கலவியாற்றியகாலையும் புலவிக்காலத்துங் - குலவுதந்நடை குறைந்தமைக்கொக்குமாறுதந்த - நிலவுழ்வண்டரி வணக்கியநிகரில்யாழ்தழுவி - மலருமின்னிசையெழுப்புவர் மேனிலமகளிர்." எனக்கூறிய, ௧௨௫-வது

கவியினுங்காண்க. சீவகசிந்தாமணி, காந்தருவதத்தையாரிலம்பகம், ௨௫௬-வது கவியுரையில், யானை நாதத்திற்றோற்றுதலின் அதற்கு வணங்குதலியல்பென்றார்.

இது மேற்கூறிய மதநாற்றத்தாலே மற்றையானைகளை அஞ்சுவிக்குமென்பர். "நாறும்மதத்தினாலேநாகத்தையிரிக்குநாகம்" எனச்சீவகசிந்தாமணி, காந்தருவதத்தையாரிலம்பகம், ௨௫௮-வது செய்யுளிற் கூறியதனாற்காண்க.

அரசர் மங்கள காரியங்களை நகரறிய இதன்மேல் முரசேற்றிப் பறையறையுங்கால் இதற்கு வெண்டுகிலுடுத்து, வெண்சாந்து பூசிச் சிறுதுவாரமிட்ட காதுகளிற் காதணிகளையணிந்து, மாலைசூட்டி, முத்தாபரணங்களணிந்து, திலகமுமணிந்து வைப்பாரென்பர். இவ்வாற்றால், வெள்ளணியாக வணிதல் வேண்டுமென்பதாயிற்று. சீவகசிந்தாமணி, இலக்கணையாரிலம்பகம், "விளங்குவெண்டுகிலுடுத்து வெண்சாந்து மெய்பூசித் - துளங்குமஞ்சிகை துளைச்சிறு காதினுட்டுளங்க - வளங்கொண்மாலைகள் சூடிமுத்தணிந்து வண்முரசங் - களங்கொள்வேழத்தினேற்றினர்கடிமுரசறைவான்" எனக்கூறிய, ௧௦-வது செய்யுளிற் காண்க. மஞ்சிகை - காதணி.

அரசாட்சிக்குரிய புத்திரரில்லாதபோது மந்திரி முதலாயினோர் கூடி யானையைத்துகிலாற் கண்கட்டிவிட்டு, அது பிடர்மீதேற்றிக் கொண்டுவரப்பட்ட வுத்தமரை யரசராக்குவர். பெரியபுராணத்தில், மூர்த்திநாயனார் புராணம், "கண்கட்டிவிடுங்களியானையக் காவன்மீதூர்- மண்கொட்புறவீதிமருங்குதிரிந்துபோகித் - திண்பொற்றடமாமதில்சூழ்திருவாலவாயின் - விண்பிற்படவோங்கிய கோபுரமுன்புமேவி" "வேழத்தரசாங்கண் விரைந்துநடந்துசென்று - வாழ்வுற்றுலகஞ்செய்தவத்தினின் வள்ளலாரைச்-சூழ்பொற்சுடர்மாமணி மாநிலந்தோய முன்பு - தாழ்வுற்றெடுத்துப்பிடர்மீது தரித்ததன்றே." எனக்கூறிய-௩௨, ௩௪-வது செய்யுட்களிற் காண்க.

இதன்மேற் றீர்த்த நீரைவைத்துக்கொண்டு வருவதுமுண்டு; முறையே, சீவகசிந்தாமணி, காந்தருவதத்தையாரிலம்பகம், "கங்கையின்களிற்றினுச்சிக்கதிர் மணிக்குடற்றிற்றந்த- மங்கலவாசநன்னீர்." எனக்கூறிய, ௧௩௧-வது செய்யுளிலும்; மண்மகளிலம்பகம், "கோல்பொருகொடுஞ்சிலை குருதிவெம்படை - பேலவரடக்குபு வேழமேறலின் - மாவிருவிசும்பிடைமலர்ந்த வொண்கொடி - கால்பொருகதலிகைக்கானமொத்ததே." எனக்கூறிய, ௧௧௧-வதுசெய்யுளிலுங்காண்க.

இது தன் கையை நிலத்து விழாமற் கொம்பின்மேல் வைத்துக் கொள்ளுமென்பர். சீவகசிந்தாமணி, முத்தியிலம்பகம், ௩௦௪-வது கவியில், "வலியுடை மருப்பினல்லால் வாரணந்தடக்கை வையாது" எனக்கூறலாற் காண்க.

களவுமுதலிய குற்றஞ்செய்தோரை அரசர் இதன் கொம்பாற் குத்திக்கொல்லச் செய்வரென்பர். சீவகசிந்தாமணி, முத்தியிலம்பகம், "முளரிமுகநாகமுளைபெயிறுழுதுகீற-அளவிறுயர் செய்வரிவண் மன்னரதனாலும் - விளைவரியமாதுயரம் வீழ்கதியுளுய்க்குங்- களவுகடனாகக் கடிந்திடுதல்சூதே" எனக்கூறிய, ௨௭௨-வது கவியிற் காண்க. சூது - உபாயம்.

இதன் பசுந்தோல், பிறருடம்பிற் பட்டாற் கொல்லுமென்பர். சீவகசிந்தாமணி, முத்தியிலம்பகம், ௧௮௬-வது கவியுரையிற்காண்க. சிவபிரானிதனைப் போர்த்திறவாதிருக்கின்றார். இதன்றந்தத்தாலே சீப்பு, செப்பு, தோடு, உலக்கை, செய்வதுண்டென்று அச்சீவகசிந்தாமணியிற் கூறினர்.

கட்டிற்காலாகவுஞ் செய்யலாமென்பர். புறப்பொருள்வெண்பாமாலை, நொச்சிப்படலத்தில், "ஒள்வாண்மறவருறுத்தெழுந்தும் பார்நாட் - கள்வார் நறுங்கோதை காரணமாக்—கொள்வான் - மருங்கெண்ணிவந்தார் மழகளிற்றின்கோடிக் - கருங்கண்ணிவெண்கட்டிற் கால், எனக்கூறியதனாற்காண்க.

இக்கொம்பு முற்றினால் முத்துண்டாம் என்பது, புறநானூறு "பனைமருடடக்கையொடு முத்துப்படமுற்றிய - வுயர்மருப்பேந்திய வரைமருணோன்பகடு" எனக்கூறிய, ௧௬௧-வது செய்யுளிற்காண்க. திருவிளையாடல், மாணிக்கம் விற்றபடலத்தில், "வேழமிரண்டினும் விளையுமுத்தந் - தானதுபொன்னின்சோதி" எனக்கூறிய, ௫௬-வது செய்யுளில், இம்முத்தினிறம் பொன்னிறமாயிருக்குமென்பர்.

புறநானூற்றில், யானை எறிகல்லைக் கன்னத்திலடக்கிக் கொள்ளும் என்றும், நடைக்கேற்ப ஒன்றற்கொன்று மாறுபட்டொலிக்குமணிகளையுடைய தென்றும், (௨௨) அரசரேவப்பகைவர் மதிலின் கட்கதவையும், மதிலையுங் குத்துமென்றும், (௩) பகைவர் காவற்பொய்கையைக் கலக்குமென்றும், மிக்கபசியால் மூங்கிலைத்தின்னுமென்றும், கூறப்படுவதன்றி அதற்குப்பட்டங், தந்தப்பூண்முதலிய ஆபரணங்களணியப்படுமென்றும், கற்றோர் முதலோர்க்குக் கன்றுடன் றியாகஞ்செய்யப்படுமென்றும், குழியினிடத்திலே யிட்டமேற்பரப்பிய பாவையறியாது மனச்செருக்கால் வந்துவிழப் பிடிக்கப்படுமென்றுங் கூறியிருக்கின்றனர். மணிமேகலையில், இதனை யடக்குங் கருவி முட்கருவியுந் தோட்டியும் பரிக்கோலுமென்பர்.

யானையேறுவார் அதனைத்தொழுது ஏறுவர். சீவகசிந்தாமணி; கனகமாலையாரிலம்பகம், "இழுகுபொன்மதத்தின் வரைக்குஞ்சரந் - தொழுதுவேய் முதற்றாசங்கொண்டேறினான்" எனக்கூறிய, ௪௯-வது செய்யுளிற் காண்க.

இந்த யானைக்கூட்டத்தை மிகவுடையவன், பல்யானைச்செல்கெழுகுட்டுவன் என்னுமொருசேரனென்பர். பதிற்றுப்பத்து-மூன்றாம் பத்தில், 'தன்னதாயமேல்கடனீரும் பிறநாட்டதாய்ப் பின்புதான பொருது கொண்டு தன்னாடாக்கிய நாட்டின் கீழ்கடனீரும் ஒருபகலிலேவரும்படி யானைகளைநிரைத்து அழைப்பித்து ஆடினா'னெனக்கூறியதனாற்காண்க.

இதற்குப் பாகலமென்னு நோயுண்டாமென்றும், அது பத்துவகைப்படுமென்றும், அவற்றுட்கூடபாகலம் வெளிக்குத்தோன்றாது மறைந்துநின்று விரைவிற்கொல்வது என்றுங்கூறுவர்; மகாபாரதம், பதின்மூன்றாம் போர்ச்சருக்கம், "பயந்தருகொடியகூடபாகலந்தணிந்து மெல்லக் - கயந்தெளிவுற்றதென்ன" எனக்கூறிய, ௧௫௯-வது செய்யுளிற்காண்க.

இது பரிசத்தால் உயிரையிழக்குமென்பர். "சுவையின்மீனளி நாற்றத்திற் றும்பியே பரிசந்தன்னில் - நவையிலாவசுணந்தானே நல்லிசைதனிற் பதங்கம் - உவகையாலொளியைவேட்டே யுயிரினையிழ

க்குமைந்தாம்.'' எனக்கூறிய, சூடாமணிநிகண்டு, பன்னிரண்டாவது தொகுதி ௩௪-வது செய்யுளிற் காண்க.

இது மனிதரைப்போல அறிவுடையதாயிருக்கின்றது. மலைநாட்டிலே மரமிழுத்தன்முதலிய வேலைகளைச்செய்வதை யின்றுங்காணலாம். திருவானைக்கா முதலியதலங்களிற் சிவபிரானைப்பூசித்திருக்கின்றது; திருவானைக்காப்புராணம், கெசாரணியப்படலத்திற்காண்க. இலக்குமி முதலோரையும் பூசித்திருக்கிறது; கம்பராமாயணம், நீர்விளையாட்டுப்படலம், "தையலாளையொர் தாரணிதோளினா - னெய்கொளோதியினீர்முகந்தெற்றினான் - செய்யதாமரைச்செல்வியைத் தீம்புனல் - கையினாட்டிங்களிற்றரசென்னவே'' எனக்கூறிய, ௨௫-வது செய்யுளிற்காண்க.

சே. ரா. சுப்பிரமணியக்கவிராயர்,
சைவநூற்பரிசோதகர், மதுரைத்தமிழ்ச்சங்கம்.

ஸ்ரீ:

நுண்பொருண்மாலை.

(முற்றொடர்ச்சி.)

௫௱௨. "கடிதோச்சி........பவர்."

நு - லை:—நெடிது - நெடுங்காலம். ஓச்சுதலெறிதலென்பன இரண்டும், முறையே கோல் என்னு முவமைபற்றி வந்தன.

௫௱௩. "வெருவந்த........கெடும்.''

நு - லை:—ஒருவந்தம், ஒருதலை, ஏகாந்தம் என்பன ஒருபொருட்கிளவி. வெங்கோலனென்பது வாளாபெயராய் நின்றது; வெருவந்த செய்தலும் அப்பொருட்டாதலினென்க. "அடியளந்தான் றாஅய''தும் (திருக்குறள்-௬௧0) அது. கோவையாருள், "கருங்கண்ணனை'' (௫௩) என்பதும், "தெள்ளி நறவந் திசைத்திசை பாயு மலைச்சிலம்பா'' (ஷை-௧௨௮) என்பதும் அது. "பெயர்நிலைக்கிளவியின்''

(தொல். சொல்-௪௪௯) என்னுஞ் சூத்திரத்திற், "களிறுகண்டல்லது வாளுறை கழிப்பறியா வேலோன்" எனவும், "செழுந்தாமரையன்ன வாட்கண்" எனவும் நச்சினார்க்கினியரு முரைத்தாரென்க.

௫௭௧. "கண்ணோட்ட..........உலகு"

நு - லை:—கழிபெருங் காரிகை யென்புழியொருபொருட்பன்மொழிபற்றி இவ்வுயிரழகது சிறப்புணரநின்றதென்றார். "தஞ்சமெளியன்" (திருக்-௮௬௬) என்பதும், "உடுத்தணி வாளரவன்" (௯௫௨) என்னுங் கோவையாரில், "அணிகாம"ரென்பதுமது. பரிபாட்டினுள், "நிவந்தோங்குயர் கொடி"க்குமிவ்வாறுரைத்தாராதலால், "ஒருபொருட் பன்மொழி சிறப்பினின் வழா" என்னுஞ் சூத்திரம் நன்னூலில் வருதலாலகத்தியமாதல் அவியமாதலாகவேண்டுமென்க. இனி அவ்வாறு வருவதனை, "ஒருபொரு ளிருசொற் பிரிவில வரையார்" என்னுந் தொல்காப்பியத்துள், (தொல், சொல்-௪௬0.) நச்சினார்க்கினியரடக்கினாரென்க.

௫௭௩. "பண்ணென்னாம்.............கண்"

நு - லை:—இறுதியிற்கண்ணென்பது, கண்ணகன்ஞாலம் போல முற்றிடப்பொருள் பெற்று ஏழாம் வேற்றுமை யாகாமைகாண்க. வினையெனப்படுவது வேற்றுமை கொள்ளாதென்பது பற்றி.

௫௭௬. "மண்ணோடியைந்த.........தவர்"

நு - லை:—மரக்கண்ணென்பதனை இக்காலத்தார் "கணு" வென்பர்.

௫௮௧. "ஒற்று.........கண்."

நு - லை:—தெற்றென்கவென்பது தெற்றெனென்பது முதனிலையாகவந்த வியங்கோள். "தெற்றென நன்கறிந்த நாளும்விரைந்து" என்னும் பாட்டிற் றெற்றெனவென்னுஞ் செயவெனெச்சத்தாலுங் காண்க. பொள்ளெனக் கதுமெனத் தவ்வென வென்பனவுமது. எழுந்திருந்தான் உய்த்துவிடுமென்பவற்றிற்கும் எழுந்திரு உய்த்துவிடு எனமுதனிலை காட்டுக.

௫௮௨. "எல்லார்க்கு............றொழில்."

நு - லை:—நான்காவதேழாவதன் பொருட் கண்வந்தது. "இதனினிது விற்று" (தொல், சொல்-௧௧0.) என்னுஞ் சூத்திரத்துள், அன்னபிறவுமென்றதனால் ஊர்க்கட்சென்றான் ஊர்க்குச்சென்றானென்பது போலுமென்க. ஞாபகத்தைக் காரகமாக்கியறிதலைத் தொழிலென்றது உபசாரவழக்கு.

௫௮௫. "கடாஅ.........யொற்று."

நு - லை:—கடாவென்பது கடுக்குமென்னும் பெயரெச்சத் தெதிர்மறை. கடுத்தவென்னுமிறந்தகாலப்பெயரெச்சத் தெதிர்மறையாகிற கடாதவென விறந்தகாலத் தகரவிடைநிலைபெற்றே நிற்குமென்பதிவர் கருத்துப்போலும். தகரவிடைநிலைபெறாது நிற்கில் விகாரமென்பர். அது கெடாவழிவந்த கேண்மை வளங்குன்றாநாடென்ப; இவற்றின்கட்காண்க.

௫௮௭. "மறைந்தவை...........யொற்று."

நு - லை:—வற்று - வல்லது.

௫௮௮. "ஒற்றொற்றித்..........கொளல்."

நு - லை:—மற்று - பிறிது. பின்னூல்செய்தாரு மற்றுக்கு வினைமாற்றசைநிலை பிறிதென்றாராதலால் அஃதிவ்வுரை யாசிரியர்க்குமொத்தது.

௫௯௧. "உடையரெனப்...........மற்று."

நு - லை:—உடையதெனப்படுவதூக்கமென்று முன்னுமஃறிணை வாய்பாட்டாற்சொல்லாது உடையரென உயர்திணை வாய்பாட்டாற் சொல்லியதால், அதற்குரியாரென்று சொல்லச் சிறந்ததூக்கமென்றார். அது வினவியறிக. மற்று - வேறு.

௬00. "உரமொருவர்க்.........வேறு."

நு - லை:—வெறுக்கை - ஊக்கமிகுதி. ஆதலென்னுமொருவினை முதற் சொல்லிடத்து நின்ற அல்லீற்றுவிகுதிவியங்கோள் மக்களாகார் மரங்களாவாரென எதிர்மறையினுமுடம்பாட்டினும் வந்தது.

"மகனெனல் மக்கட்பதடியெனல்." என்பதிருசொல்லின் கணின்று இருபொருளையும் விளக்கிற்று. "ஒளியொருவற்குள்ள" (வள்-௯௭௧) வெறுக்கையுமது.

௬0௧. "குடியென்னுங்............கெடும்."

நு - லை:—விளக்கமாசூர மாய்ந்து கெடுதல் விரோதப் பொருள். "மொய்ம்மலர்க் காந்தளைப் பாந்தளென்றெண்ணித் துண்ணென்றொளித்துக், கைம்மலராற்கண் புதைத்துப் பதைக்குமெங் கார்மயிலே" யென்னுங் கோவையாருமது. (௨௩௩.)

௬0௩. "மடிமடிக்.......... மூந்து."

நு - லை:—மடிக்கொண்டொழுகல் - அகத்தேகொண்டொழுகல்.

௬0௭. "இடிபுரிந்............லவர்."

நு - லை:—புரிதல் முன்னதுசெய்தல், பின்னது விரும்புதல்.

௬௧௧. "அருமையுடைத்.........,..தரும்."

நு - லை:—அசாவாமை - தளராதொழிக; மையீறு வியங்கோளானது. "அவற்றுள், முன்னிலைத் தன்மையாயீரிடத்தொடு" என்னுஞ் சூத்திரத்துள், "அஞ்சாமையஞ்சி"னேனென நச்சினார்க்கினியாருமுரைத்தாரென்க. (தொல், சொல்-௨௨௮.)

௬௧௨. "வினைக்கண்............றுலகு."

நு - லை:—தீர்ந்தன்று தீர்ந்ததென அஃறிணையொருமைக்கண் வந்த றுவ்வீற்று வினைமுற்றுச்சொல். "களம்வேட்டன்று" "நகையமர்ந்தன்று" என்பனவுமது. (வெண்பாமாலை.)

௬௧௩. தாளாண்மை............செருக்கு."

நு - லை:—தாளாண்மை - உபகாரியாந்தன்மை. வேளாண்மை வேளையாளுதற்றன்மை. ஆளென்பது முதனிலைத்தொழிற்பெயர்.

௬௩௧. "கருவியுங்............தமைச்சு."

நு - லை:—வடநூலாரிவ்வைந்தினையுமந்திரத்திற் கங்கமென்ப. அரசங்கமாறு, அமைச் சங்கமைந்து.

௬௩௨. "வன்கண்............தமைச்சு."

நு - லை:—முன்பாட்டிற் சொல்லிய அங்கங்களைந்துடனீண்டுரைத்த நான்கையுங் கூட்டுக. எண்ணொடு நீண்டது. "உடம்போடுயிரிடைநட்"பென்பதுபோல நீளாது நிற்கினுங், குற்றமில்லை; அதனையீண்டு நீண்டதென்பது இன்னொலிநோக்கியே யென்க. உரையுள் அவருடனென்பதனை அவரென்றது பட்சாந்தர முரைப்பாரை.

௬௩௬. "மதிநுட்ப............பவை."

நு - லை:—மதிநுட்பம் பின்மொழி நிலையல். வேங்கைப்பூவென்பது மது. அதியென்பது வடசொல்லின் மிகுதிப்பொருளதோரிடைச்சொல். வடநூலார் உபசர்க்கமென்பார்; அது திரிந்து நுட்பமென்பதனோடு தொக்கது. இனி, அதினுட்பமென்று பாடமோதுவாருமுளர். "அவர் சூட்சிக்கினமாய்ச் சுட்டப்படுவதொன்றில்லாமையுஞ் சுட்டுப்பெயரைந்தாமுருபேற்றவழி யவ்வாறு நில்லாமையுமறிந்திலர்" என்றது, "சுட்டுமுதலுகரம் அன்னொடுஞ்சிவணி" (தொல்-எழுத்-௧௭௬.) என்னுஞ் சூத்திரவிதியாலென்க. உழையிருந்தானெனப் பெயர்கொடுத்தார் அமாத்தியனென்னும் வடமொழிப்போக்கும் அப்பொருண்மையதாகலின்.

௬௪௨. "ஆக்கமுங்...........சோர்வு."

நு - லை:—அதனாலென்பது, "முற்படக்கிளத்தல் செய்யுளுளுரித்தே" (தொல்-சொல்-௩௯.) என்பதனானறிக. 'அவனணங்கு நோய்செய்தான்' என்பதுபோலச் செய்யுளாகலிற், சுட்டுப்பெயர் முன்வந்தது. ஆக்கத்திற்குங் கேட்டிற்குங் காரணமாகிய நற்சொல்லுந் தீச்சொல்லுஞ் சொல்லாதலொற்றுமைபற்றி அவற்றாலென்னாது அதனாலென்றொருமையாக்கினார்.

௬௪௩. "கேட்டார்ப்............சொல்."

நு - லை:—தகையவாய்-குணங்களை அவாவி. அவாவென்னுமெச்சமொழிவதென்னுஞ் செயப்பாட்டு வினைகொண்டது என்றார், தகையமொழிவதென்னும் பன்மையொருமை மயங்காமல்;

௬௪௫. "சொல்லுக............யறிந்து."

நு - லை:—பின் வருநிலை. பட்சாந்தரமிதனிலமிக்காய்த் தோன்றுவது காண்க.

௬௫௩. ஒஒதல்............மவர்."

நு - லை:—ஓஒதலென்பது அடியளந்தான்றாவியது - தாயதென்றாற்போலிடைக்குறைந்தது. வினைசெய்தலை யென்றதனால், முதனிலைத் தொழிற்பெயர் மாற்றப்பட்டது.

௬௫௯. "அழக்கொண்ட............லவை."

நு - லை:—நற்பாலவைபிற்பயக்கு மென்றதற்கு நற்பாலவைதானே பயக்குமென்று தன்வினையாயுரையாமல் பின்வந்து பயன்கொடுக்குமென்றுபயனைச் செயப்படுபொருளாக்கினார். இவ்வுரையாசிரியர்க்குப் பயக்குமென்பது செயப்படுபொருளடைந்த சொல்; "இருணீங்கியின்பம் பயக்கு" மென்பதனுட், காட்சியென்பதனை எழுவாயாக்கினதுங் காண்க. இதனைவடநூலார்சகன் மகமென்பர்.

௬௬௦. "சலத்தால்............யற்று."

நு - லை:—இரீஇயென்பதனை யிருத்தியெனப் பிறிதின் வினையாக்கிப் பட்சாந்தரத்தைத் தூஷித்தார். "நன்கிரீஇ யாண்டும் பிறிதுயாது நோக்கா"னென முள்ளியார் தன்வினையாக்கினாராதலால் இவ்வுரையாசிரியர் கருத்து எம்மனோர்க் கறிதலரிதென்க.

௬௬௫. "வீறெய்திமாண்டார்............படும்."

நு - லை:—ஊறு - உறுதல். பாடு, வீடு, கேடு என்பனவுமது போலும். அறத்துப்பாலுள், எச்சத்திரிபுகாட்டியதால், அவ்வாறு திரியுமெச்சங்களையீண்டுக் காட்டாதொழிந்ததெனவறிக.

௬௬௭. "உருவுகண்............ருடைத்து."

நு - லை:—எள்ளாமை யிகழ்தலையொழிகவென மையீறு "அருமையுடைத்தென்றசாவாமைவேண்டும்" என்பதுபோல வியங்கோளானது காண்க. ஈண்டும், வேண்டுமென்பது ஒருசொன்னீர்மைத்து. எனல், ஓதல், கொளல் என்னும் அல்லீறு தொழிற்பெயராயும் வியங்கோளாயும் வருதல்போல, மையீறுமவ்வாறு வருமென்க.

௬௬௯. "துன்ப............வினை."

நு - லை:—கணிகமாயமுயற்சி - நொடிப்பொழுதிலழியு முயற்சி. பரிணாமவின்பம் - ஒன்றொன்றாய்ப் பரிணமித்து நெடுங்காலநிற்பது.

௬௭௮. "வினையான்............தற்று."

நு - லை:—அன்னபிறிதுமோரானையென்றதனாற் பிணித்தற்கருமைதோன்றப் பின்னுங் கூட்டுக வென்றார்; அது "நனைகவுள்யானையாத்தற்று" என்பது.

௬௮௨. "அன்பறி............மூன்று."

நு - லை:—ஆராய்ந்த சொல்வன்மையாராய்ந்து சொல்லுதல்வன்மையென்றமையாற் சொல் முதனிலைத்தொழிற்பெயர். ஆராய்ந்தவெனப் பெயரெச்சமாக உரையாது வினையெச்சமாகவுரைத்தல் காண்க. முருகாற்றுப்படையுள், "சீரைதைஇய" என்றற்குரைத்தாங்குரையாது "திலகந்தைஇய" என்பதற்கு வினையெச்சமாகவுரைத்தலும், "உரையிடத்தியலு முடனிலையறிதல்" (தொல்,சொல்-௪௫௮) என்னுஞ் சூத்திரத்துட் "பெண்மை சுட்டியவுயர்திணை மருங்கின்" என்பதனையும், "ஆடிய கூத்தனும் வந்தானவனொடு-கூடிய கூத்தியுங் கொண்டு" எனவுங்காட்டி, யிவற்றைப் பெயரெச்சம் வினையெச்சமாகத் திரிந்ததெனவும் நச்சினார்க்கினியரு முரைத்தாரென்க.

௬௮௫. "தொகச்சொல்லித்............தூது."

நு - லை:—எண்ணும்மைவிகாரத்தாற்றொக்கது. எண்ணும்மை தொகுவது, உம்மைத்தொகை. விதியாயிருந்து மதனைவிகாரமென்றது; "வினையொடு நிலையினு மெண்ணுநிலை திரியா" (தொல். சொல். ௨௯௫.) என்னுஞ்சிறப்புவிதி பற்றியென்க.

(தொடரும்)

பத்திராசிரியர்.

539

உ

ஐயநிவிர்த்தி.

"திருஞானசம்பந்தமூர்த்திநாயனாருந், திருநாவுக்கரசு நாயனாருந் திருவாய்மலர்ந்தருளிய தேவாரப்பதிகந்தோறும் இராவணனைச் சுட்டிக்கூறியிருப்பது எதுபற்றியோ இதை நிவிர்த்திக்குமாறு வேண்டுகின்றேன்."

என்பது, ரெங்கோன் நா. அ. சு. செட்டியாரவர்கள் கரலிகித வசனம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் புராணத்தில்,

மண்ணுலகில் வாழ்வார்கள் பிழைத்தாலும் வந்தடையிற்
கண்ணுதலான் பெருங்கருணை கைக்கொள்ளு மெனக்காட்ட
வெண்ணமில்லா வல்லரக்க னெடுத்துமுறிந் திசைபாட
வண்ணலவர்க் கருள்புரிந்த வாக்கப்பாட் டருள்செய்தார்.

எனக்கூறியருளிய, ௭௭-வது செய்யுளானும்,

திருநாவுக்கரசு நாயனார் புராணத்தில்,

இத்தன்மை நிகழ்ந்துழி நாவின்மொழிக் கிறையாகிய வன்பருமிந்நெடுநாட்
சித்தந்திகழ் தீவினை யேனடையுந் திருவோவிது வென்று தெருண்டறியா
வத்தன்மைய னாயவி ராவணனுக் கருளுங்கருணைத்திற மானவதன்
மெய்த்தன்மையறிந்து துதிப்பதுவே மேல்கொண்டு வணங்கினர் மெய்யுறவே.

எனக்கூறியருளிய, ௭௫-வது செய்யுளானும் நிவிர்த்தி செய்து கொள்க.

சே. ரா. சுப்பிரமணியக்கவிராயர்,
சைவநூற்பரிசோதகர்.
மதுரைத் தமிழ்ச் சங்கம்.

உ

திருச்சிற்றம்பலம்.

தனிச்செய்யுட்கோவை.

(முற்றொடர்ச்சி.)

எத்தரியலிங்ககுருசங்கமந்தா னேகபரன்மனம்வாக்குக்காயமாகும்
வாய்த்தமனஞ்சிவலிங்கமாகுமூல மலமகற்றுங்குருவருள்சேர்வாக்குமாயை
தீர்த்தருளுஞ்சங்கமமாமேனிதன்னாற் றீராதவிருவினையுங்கன்மநீங்கு
மாத்தமலமூன்றகற்றுங்குறியீதாகு மல்லதுமற்றொன்றாலுமகன்றிடாவே.

திருக்குற்றாலத்துக்குப் பக்கத்திலுள்ள செங்கோட்டைக் கவிராஜபண்டாரத்தையாவவர்கள் கூறியகவி.

அருவித் திரிகூடத் தையா வுனைநான்
மருவிப் பிரிந்திருக்க மாட்டே—னொருவிமலைக்
காதியிலே பாதிதந்தா யத்தனைவேண் டாமெனக்குப்
பாதியிலே பாதிதந்து பார்.

வசைகவி ஆண்டான் கவிராயர்க்கும் சொக்கலிங்கக் கவிராயர்க்கும் விவாதம் வந்தபோது ஆண்டான் கவிராயர் கூறியகவி.

ஓலைதேடியெழுத்தாணிதேடியா ளோய்ந்திருக்கு மிடந்தேடியேயொரு
மூலைதேடிமுனைமூக்குக்கண்ணாடி முன்னர்வைத்துமுதுசொற்கள்தேடியே
மாலைதேடிக்கொடித்தேடிநாட்டுடை வளத்தைத்தேடிவழுத்துவையோர்கவி
சாலைதேடியபாப்பான்குளத்துக்குத் தக்கசொக்கலிங்கக்கவிராயனே.

(தொடரும்.)

பொ. பாண்டித்துரை.

உ
சிவமயம்.

அறச்சிறப்பு.

அறஞ்செய விரும்பு.

அறம் - தருமத்தை, செய - செய்தற்கு, விரும்பு - நீ ஆசைகொள்.

நால்வகைத்தோற்றம், எழுவகைப்பிறப்பு, எண்பத்துநான்குநூறாயிரயோனிபேதம் என்னுமிவற்றையுடையனவாய்ப் பிறந்திறந்துழலு மான்மகோடிகளெல்லாஞ் சராயுசமாகிய சனனத்தினுள்ளும் மேலான மனிதப்பிறப்பையெடுக்கின், இன்றியமையாததாயவசியஞ் செயற்பாலது யாதென வாராய்ச்சிசெய்யுமிடத்து அறமே. அதுபற்றியே ஔவையாரும் அதன்சிறப்பினைக் கூறுவான்றொடங்கி முதலிலே எல்லாவெழுத்திற்குமாதியாகிய அ என்னுமச்சை முதலாகக்கொண்டு "அறஞ்செயவிரும்பு" என்று கூறினரென்க.

அதுதான் இல்லறமுந் துறவறமுமென இரண்டுவகைப்படும். இன்பம் வீடுபோலாது அறமென்று சொல்லப்பட்டது யாதுகாரணம் பற்றியோவெனின், ஒருவற்கு இம்மைமறுமை வீடாகிய மூன்றனையும் பயத்தலின் முற்கூறியவற்றுள்ளுமறஞ்செய்தல் வலியுடைத்து என்பதுபோதர ஆதியினதனைக்கூறினர்.

அறம் இல்லறம் துறவறம் எனவிருபிரிவுடைத்து என்றதெற்றுக்கெனின், ஒருவன் இல்லறத்தை முதற்கட்செய்யாது துறவறஞ்செய்யவியலாது. இல்லறமாத்திரையே நிற்றலுமியலாது. அதன்மாத்திரையே நிற்பின் முத்திசித்தியாதாகலின். முதலிலே வள்ளுவரும் இல்லறவியல்புகளைக் கூறிப்பின்னர்த் துறவறத்தின் மாட்சிமை கூறினர் என்க.

அறஞ்செய்தல் பலவகைப்படும். அவையாவை, கோவில்களிலே திருத்தொண்டுசெய்தல், பூசைக்குதவிபுரிதல், புராதனாலயங்களைத் திருத்துதல், மிருகங்களுக்குப் புன்முதலியவற்றால் அவைகளின் இன்னலைநீக்கல், தண்ணீர்ப்பந்தல்வைத்தல், கிணறுமுதலிய வெட்டல், அன்னங்கொடுத்தல், நோயாளர் குருடர் முடவர் முதலாயினோரைத்தாபரித்தல், வித்தைக்குரிய கலாசாலைகளை நடத்துதல், நடப்பித்தல் முதலியபலவகையாம்.

இவையாவற்றையு மெவ்வாற்றாற் செய்யினும் இல்லாளுடன் தவறின்றிச் செய்பவர்க்கே முற்கூறிய இம்மை மறுமை வீடுபயக்குமென்பது போதர "இல்லறமல்லது நல்லறமன்று" என்று கூறினர் என்க.

இதுபற்றியே திருவள்ளுவரும் "அறனெனப்பட்டதேயில் வாழ்க்கை யஃதும்-பிறன்பழிப்பதில்லாயினன்று" என்று கூறினர்.

இனி இவ்வாறாகிய இல்லறத்தைச்செய்து, பின்பு புறமாகிய செல்வத்தினதும், அகமாகியயாக்கையினதும் நிலையாமையைநோக்கி அவற்றினை விடுத்தலேயாம். "அறஞ்செய்யுமகன்றேலருள்ளே வைக்கப்படுவான்" நிலவுலகத்தினுள்ளவற்று ளறந்தானேயுடன்செல்லுமாகலின். அறத்தினையொருவன் செய்வதினால் அடையும் பயன் கூறுதலரிது. செய்யாவிடின் அதனாலடையும் கேடுகளைக் கூறுதலரிது.

இதுபோதர "அறத்தினூஉங் காக்கமுமில்லையதனை - மறத்தலினூங்கில்லை கேடு’ எனக் கூறினர் என்க.

ஆதலினிவ்வியல்பினையுடைய அறத்தையாவருஞ்செய்யவேண்டுமென்பதே துணிந்தபக்கம்.

ச. ஜகநாத ஐயர்

உ
திருச்சிற்றம்பலம்.

பெரியபுராண அரும்பத விளக்கம்.

[பழைய ஏட்டினின்று எடுக்கப்பட்டது.]

(முற்றொடர்ச்சி.)

(௨௭) வழிபலவும் போதலரிதாயிட அதனைக்கண்டுமீளவும் தம்வீட்டை அடைவார்.

(௨௯) பறையறைந்தபணியாலே அணியாரூர்மறுகதனில் ஆளியங்குமாறு மூலைகளில் நிறைத்து.

(௩௨) தேவர்கள்ஒதுங்கத் திருத்தொண்டர்கணெருங்கும்.

(௪௭) பரவையார் விழாக்கொடைக்குக்குறைவறுக்க.

(௪௯) சிந்தைமுன்னம் அங்கொழிய - மனக்குறிப்பானது அப்பொழுதுநீங்க. இவனருளாலேயோ யாமறியேம். அழகிய கண்களில் நித்திரைவந்தடைந்தது.

(௫0) திருப்பணிக்காகச்சுடப்பட்ட செங்கற்கள்பலவற்றைக் கொணர்வித்துத் தேனையுண்ணும் வண்டுகள் நிறைந்த மலர்வைத்து முடித்த குடுமிமேலணையாக உயரம்பண்ணுவித்து.

(௫௫) பொற்கல்லானவை ஆளின்மேனெருங்கிப் பரவையார் தம்மாளிகையிற்புக.

(௫௬) தெய்வப்பெருமாள் - வீதிவிடங்கப்பெருமாள்.

(௬௧) வாசியறிந்து - வாசியைப்பகுத்தறிந்து, கைத்திருத்தொண்டோடு பதிகம்பாடுந்திருத்தொண்டையும் ஒருங்குடைய திருநாவுக்கரசுநாயனாருக்கு வாசியின்றியும், பதிகம்பாடுந்திருத்தொண்டைமாத்திரமுடைய திருஞானசம்பந்தமூர்த்திநாயனாருக்கு வாசியோடுங்கொடுத்தமைபற்றி இவ்வாறு கூறியருளினார்.

(௬௩) மூரிவெள்ளக்கங்கையினில் - மிக்கவெள்ளத்தையுடைய கங்கையோடு.

(௬௪) செங்கணான்வளவன் றளங்கொள்பிறப்பும் - கோச்செங்கட் சோழநாயனாருடைய மேன்மைபொருந்திய பிறப்பையும்.

(௬௮) வட்டமானகுரும்பை போலுந்தனங்களையுடையாள்.

(௬௯) திருக்குடமூக்கு - கும்பகோணம். திருநாவுக்கரசுநாயனாருக்குச் சிவபிரான்திருவடி தீக்ஷைசெய்தருளிய.

(௭0) இசையோடுபரவுந் தம்முடையசொல்லையே இலாபமாக வணிந்த சிவபிரானுடைய.

(௭௮) கேதம் - வருத்தம்.

(௮௧) திருத்தொண்டர்முகப்பே - திருத்தொண்டர்முன்னே.

(௮௨) நித்தியமும்பிரியாத நிலைமையினின்று நீங்கிப்பூமியில் அறிவுபொருந்திய மனுடப்பிறப்போடு விடுத்தகாரணத்தை அறிந்துவருந்தி ஒருப்பாட்டையுடைய எழுபிறப்பினுமடிமை என்பதையுணர்த்திச்சிறிதுமருளாதொழிந்தாலும், தலைவர் இவரல்லாதில்லையே என்பாராய் "வைத்தனன்" என்று பதிகத்தைப்பாடியருளினார். நித்தமுநீங்காநிலைமை - சாமீப்பியம்.

(௮௩) "ஏசினவல்ல" என்றுபாடியருள.

(௮௫) கண்டவர் - தரிசித்த சுந்தரமூர்த்திநாயனாரானவர். வண்டுகளொலிக்கின்ற கூந்தலையுடைய பெண்களது மனத்தைக்கவர்கின்ற பிச்சைக்குவருந் திருவடிவத்தைத்தரிசித்த இருடிபன்னியர்கள் கொண்டமயக்கத்தால்.

(௮௭) உழை - இடம்.

(௮௮) நாமமான அஞ்செழுத்தை அறிய.

(௮௯) படப்பை - சோலை.

(௯0) ஆனந்தக்கலுழி - ஆனந்தவெள்ளம்.

(௧0௮) நனியருள் கொடுக்குமாற்றால் நல்கிட - மிகவுமருள் கொடுக்குமாற்றோடு கொடுக்க. தனிமகிழ்ச்சி - ஒப்பற்றமகிழ்ச்சி. கனிவிடம் - கொடுமைமுதிர்ந்தவிடம.

(௧0௯) மருளுறவியப்ப - மயங்கிவியக்க. அங்கேவரப்பெறல் வேண்டும்.

(௧௧0) வன்றொண்டர் மச்சத்தைவெட்டிக்கைக்கொண்டு.

(௧௧௧) பொருந்தியவிருப்பத்தொண்டு பொருந்தும். உடம்பு விருத்திக்காகப்பொன்னையும் பெற்றவன்றொண்டரானவர் ஆன்மவிருத்தியான தில்லைவாழந்தணர்களிருக்கின்ற சிதம்பரத்துள்ள கனகசபையில்.

(௧௧௭) தாளாண்மை - தாளின் ஆண்டகைமை.

(௧௨0) பூமென்கருப்பு - பூவையுடையமென்கரும்பு (முற்றின கரும்பு)

(௧௨௨) மத்தயானையெடுத்து - 'மத்தயானை'யென்னும் பதிகத்தையெடுத்து.

(௧௨௩) மூவாத - அழியாத. ஓவாத - நீங்காத. தாவாத - கெடாத. திருமூலட்டானம் - திருமூலஸ்தானம்.

(௧௨௮) துணைவராகிய அவருடையகோயிலின் மாளிகைக்கு மேலைத்திசையில்.

(௧௩௨) விபூதியழகராகிய சிவபெருமான் பாட்டைமகிழ்ந்து திருவிளையாட்டில் தாமதித்து. ஆற்றிலிட்டுக்குளத்திற்றேடுவீரே சிவனருளிதுவோசாற்றுமென்று திரண்டவளையலையணிந்த பரவையார்மொழிந்தருள்.

(௧௩௩) முன்செய்த அருட்படியே வாசனைமலர்கின்ற பூவைவைத்துமுடித்த கூந்தலையுடைய பரவையானவள் தன்னுடைய சிவந்தவாயினகையைத் தாராமேபொன்னைத்தாருமென்று, ஒளிபொருந்திய யஞ்ஞோபவீதத்தையணிந்த மார்பையுடையவன்றொண்டர்.

(௧௩௪) செப்பமாக நான் பெறுதொழிந்த தளர்வினால்வந்த கவலையான துன்பத்தை, இவளுக்கெதிரே கொடுத்தருளுமென்னுங் கருத்தடக்கிய எட்டுத்திருப்பாட்டளவும்.

(தொடரும்.)

ஜி. சதாசிவம் பிள்ளை.

௫௯௯

௧

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௭.] சௌமியஸு புரட்டாசிமீ [பகுதி-௧௧.

தமிழ்ப்பழஞ்சரிதம்.

(முற்றொடர்ச்சி.)

இதுகாறும் தமிழ்மக்கள் ஆரியர்கலப்பின்றிவாழ்ந்த காலநிலையைப்பற்றிக் கூறினாம். இனி, அவ்வாரியர் தமிழ்மக்களோடுகலந்த காலநிலையைப்பற்றி ஆராய்வாம். ஆரியர் தாம் பூர்வம் தங்கிநின்ற ஆரியாவர்த்தத்திற் பல்கிப்பெருத்து வளரவே, அவரால் முன் பாவபூமியாகக்கருதப்பட்ட விந்தியத்தின்றென்பாகமும் ஆரியர்க்கு இப்போது உவப்பானதாயிற்று. ஆரியக்கலப்பேயின்றித் தமிழர் தனிமையாகவாழ்ந்துவந்த விந்தமலையின்றென்பகுதி வளமிகுதியும் வாசயோக்கியமுமான பெருநிலமாதல்நோக்கி ஆண்டுந் தங்கள் ஆட்சியைச் செலுத்த ஆரியர் முயல்வாராயினர். ஐதரேயப் பிராம்மணத்தில், விசுவாமித்திரர் தம்மக்களைச் சபித்தபோது அவர்கள் ஆரியர் இகழ்ந்தவிந்தத்தின்றென்பாகத்தே நாடுகள் ஸ்தாபித்து ஆண்டுவந்தனரென்று கூறப்படுதலே அவரது தென்றிசைப் பிரவேசத்துக்கு ஆரம்பமென்பது தெரியவரும். இதற்குப்பின், வடபுலத்தினின்றும் ஆரியமக்கள் பலரைத்தென்பாகத்தே குடியேற்றியவரில் பிரபலமானவர் அகத்தியமுனிவர்.

இம்முனிவர் இராமனுக்குத் தண்டகாரணியவரலாற்றைக் கூறும்போது தாம் ஆரியமுனிவர் பலரை அவ்வாரண்ணியத்திற் குடியேற்றி யதனைச்செழிக்கவைத்ததாகக் கூறுதல் இராமாய

ணத்தே யறியக்கிடந்தது; இஃதன்றியும் அக்குறுமுனிவர் வடபாலிருந்த ஆரியர் பலரை ஈண்டுக் குடியேற்றிய செய்தி தொல்காப்பியப்பாயிரவுரையுள், நச்சினார்க்கினியர் "துவராபதிப்போந்து நிலங்கடந்த நெடுமுடியண்ணல்வழிக்கண் அரசர்பதினெண்மரையும் பதினெண்குடிவேளிருள்ளிட்டாரையும் அருவாளரையும் கொண்டுபோந்து காடுகெடுத்து நாடாக்கிப் பொதியின்கண்ணிருந்து" எனக்கூறுமாற்றானுந் தெளியலாகும். இவ்வாறு ஆரியர் கங்கை நாடுநீங்கி விந்தத்தின்றென்பகுதியில் வியாபித்தகாலத்து அன்னோர் வருகையைத் தமிழ்மக்கள் உவந்தேற்றுக்கொள்ளாது பகைமை பாராட்டியமையால், நீண்டகாலம் அவ்வாரியர் நாட்டின்கணின்றிக் காட்டில் வசித்துவந்தனர். இவ்வுண்மை ரிஷிகள் தண்டகாரண்ணியத்தும், நைமிசாரண்ணியத்தும் வதிந்துவந்தனரென்று இதிகாச புராணங்கள், கூறுதலால் விளங்கிநின்றது. இஃதன்றியும், ஆரியரும் தமிழ்மக்களும், இத்தென்னாட்டில் நீண்டநாள் ஒற்றுமையுடன்கூடியிருக்கவில்லையென்பது கடைச்சங்கக் காலத்தேயிருந்த ஆரியப்படைதந்த நெடுஞ்செழியன், சேரன்செங்குட்டுவன் முதலியோரது சரிதங்களையாராய்வதில் வெளியாகின்றது. இவ்வாரியர் இவ்விந்தியநாட்டிற் கால்வைத்த நாள் தொட்டு இத்தேசத்துப் பூர்வ குடிகளாய தமிழ்மக்களுடன் விரோதித்த உள்ளத்தவராயிருந்ததோடு பிற்றையவர் தென்னாடடைந்த காலத்தும் தம்முற்கொள்கையினின்றும் மாறுபடாத உள்ளத்தவராய் இங்குள்ள தமிழரையும் தம்மடிமைத்தொழிற்கு உரியராகவே கொண்டதுமன்றி, இத்தென்னாட்டுப் புராதன குடிகளாய பழையர் பாணர் வள்ளுவர் துடியர் பறையர் கடம்பர் முதலிய இவர்களை அவ்வாரியர் தம்மைக்காணில் தூர விலகற்குரிய மிகத்தாழ்ந்த வகுப்பினராக எண்ணியதாகவுந் தெரிகின்றது.

ஆரியர் தம்மையுயர்ந்தோராகவும் இத்தேயத்துப் பூர்வகுடிகளை யிழிந்தோராகவுங் கொண்டு அவர்க்கு நான்காஞ்சாதி, ஐந்தாஞ்சாதி வரம்பேற்படுத்தியது ஓர் அதிசயமன்று. ஆயினும், ஆரியர் சிந்துநதிப்பிரதேசத்தில் ஆதியிற் புகுந்தபோது நிலம் நீர் அங்கி சூரியன் முதலிய இயற்கைத்தோற்றப் பொருள்களை வணங்கித் தம்மனைவி மக்களைக் காக்கவேண்டி அவற்றைப்பாடி வணங்கிவந்தாரென்பதையும், அக்காலத்திலேயே இத்தேசத்தின் பழங்குடியினராய தமிழ்மக்கள் தம் ஒழுக்கத்தினும் ஞானத்தினும் சிறந்துவிளங்கினரென்பதையும் யாம் இனிக்காட்டும் பிரமாணங்கள் நன்குவிளக்கும். ஆரியரது மிகப்பழைய ஆசாரங்கொள்கைகளை அறிதற்கு இருக்குவேதத்தினும் சிறந்த ஆதாரங்கிடையா. இதனைக்கொண்டு அறிஞர் ஆராயுமளவில் ஆரியரது புராதன மனோபாவமும் ஒழுக்கங்களும் அத்துணை முதிர்ச்சியுடையனவல்லவென்பதைத் தெற்றெனவிளக்கும். இருக்குவேதத்தின் பெரும்பான்மையும் நிரம்பிய பொருளெல்லாம் ஆரியர் தமக்குரிய ஆடுமாடுகள்பல்கல் வேண்டியும், தாம் உறையும் நிலம் செழித்தல்வேண்டியும், தம்மக்கள் மனைவியரோடு நன்குவாழ்தல்வேண்டியும், தியூ வருணன் மித்திரன் இந்திரன் முதலியவரைக் குறையிரந்தும் இயற்கைத்தோற்றங்களை யேத்தியும் பாடினபாட்டுக்களும், வேள்விவேட்கும் முறைகள்சிலவுமாம்; இவ்விருக்குவேதம் ஒவ்வொருமுனிவரால் ஒவ்வொன்றாகத் தொகுக்கப்பட்ட பத்துமண்டலங்களையுடையது. அதில் விசுவாமித்திரரால் தொகுத்த மூன்றாவது மண்டலத்தில் ஆரியர்க்குமிகச்சிறந்தமந்திரமாகிய காயத்திரிமந்திரங்காணப்படுகின்றது. இம்மந்திரத்தாற் பெறப்படுகின்றபொருள் அன்பினாற்செய்யப்படும் எம் வேள்விமுறைகளை நடைபெறுவிக்கும் தெய்வத்தன்மையையுடைய சாவித்திரியின் விரும்பத்தக்க ஒளியை யாம் சிந்திக்கின்றேம் என்பதே. இங்ஙனம், ஆரியர்க்குச் சிறந்த மந்திரமாயுள்ள காயத்திரியினும் சூரியனது வழிபாடே கூறப்படுவதென்பர். இனி இருக்குவேதத்தின் பின்னெழுந்த ஆரியமொழி நூல்களினெல்லாம் ஆரியர் தமிழர் என்னும் இருவர்க்குமுரிய இருவேறு ஒழுக்கவகை விரவிக்கிடத்தலால் அவை அவ்விருவரும் ஒருங்குவிரவிய காலவிசேடத்தே யியற்றப்பட்டன என்பதே பொருந்தும். ஆதி ஆரியர் இயற்கைத்தோற்றப்பொருள்களைவணங்கித் தத்துவவுணர்ச்சி சிறிதுமிலராய் ஒருகாலத்திருந்து பின் இந்நாட்டுப் பூர்வமக்களது சம்பந்தத்தால் அவ்வுணர்வு தலைக்கூடப்பெற்றனர் எனபதற்கு ஒரு தக்க ஆதாரமுண்டு. சுவேதகேது என்னும் ஆரியகுரு பாஞ்சாலர்கூடிய பேரவையிற் [illegible] அங்குச்சைவலி என்னுந் தலைவனோடு வாதியற் [illegible] தோல்வியடைந்து வருந்திய உள்ளமுடையோனாய், அவ்வு [illegible] பொருளைப் பெறுதற்கு அவனி

டம் குறையிரப்ப, அவனும் அச்சுவேதகேதுவுக்கு அப்பொருளை விளங்கவுரைத்துப் பின்னும் "நினக்கு முன்னே இவ்வரிய ஞானப் பொருள் பிராமணர் எவர்க்குஞ் சொல்லப்பட்டிலது. இந்தஞான போதனை உலகமெங்கணும் எம்முடைய வகுப்பினர்க்கே உரித்தாயுள்ளது. பிறரதனையறியார்" எனச்சாந்தோக்கிய வுபநிடதத்தில் (௫, ௯.) கூறப்படுதல் காண்க.

இப்பாஞ்சால வரசன் கூற்றினால் இவன் இப்பரதகண்டத்துப் பூர்வகுடிகளின் தலைவருள் ஒருவனென்பது உய்த்துணரக்கிடந்தது. இஃதன்றியும், தம் தத்துவ நுண்பொருள்களை ஆதியில் வெளியிட்டவர் திரமிடாசாரியர் எனவும், அவரை ஸ்ரீமத் - இராமாநுஜாசாரியரும் நன்குமதித்து அவர் கொள்கையை யெடுத்துப் பாராட்டியிருப்பதாகவும் வைணவர்கள் கொண்டிருக்கின்றார்கள். இதனால், ஆரியர் கலப்பிற்கு முன்னரே தமிழ்மக்கள் தத்துவவுணர்ச்சிகொண்டிருந்தார்கள் என்பது கொள்ளக்கிடந்தது.

(இன்னும் வரும்.)

பொ. பாண்டித்துரை.

உ

சிவமயம்.

ஈசுவர சிருஷ்டியில்

வெளவால்களின் பிரயோசனம்.

அசங்கியமான துர்நாற்றத்தின் பொருட்டும், சந்தடியின்பொருட்டும் பல்லோராலும் பெரிதும் விரும்பப்படாதருவருக்கப்படுகின்ற வெளவால், நம்மிந்தியநாட்டில் இந்துதேவாலயங்களில் இருட்டடர்ந்த கோபுரச்சந்துகளிலும் கோயிலுட்பிரகாரங்களிலுள்ள உயர்வான மனிதரால் சுலபசாத்தியத்தில் எட்டித்தாவமுடியாத மண்டபச்சுவர்களின் மூலைகளிலும் யோகியர்போல், பகன்முழுவதும் தலைகீழாய்த்தூங்கிக் கொண்டிருந்து இராத்திரிவேளைகளில் தம்மிரையின் பொருட்டு வெளிப்படுலாவும் சுபாவமுடையது. மிருகங்களைப்போற் குட்டிபோட்டுப்பால் கொடுத்துப்போஷிப்பதனாலும், பறவைகள்போல் இறகுகளையுடையனவாய்ப் பறப்பதனாலும் இவ்விரினங்களிற்கும் இடையினமாகவே இச்சாதாரண வெளவாலைச் சேர்த்திருக்கிறார்கள். இத்தகைய வெளவால்கள் மனிதர்களின் வீடுகளிலும் வசித்து வீடுகளை ஆபாசப்படுத்தியும் தொந்தரவு விளைப்பதனால் மனிதர்கள் இப்பிராணிகளை ஒருகால் வெறுப்பார்களாயினும் அன்னவர்களே இவைகளின் உபயோகங்களையறிந்தால் அங்ஙனம் செய்யார்கள் என்பது திண்ணம். இவ்வீட்டு வெளவால்களைத்தவிர்த்து முரட்டுச்சுபாவமுள்ள பெருத்த வெளவால்களும் பல நாட்டிலுள்ள அடர்ந்த தோப்புகளில் மனிதசஞ்சாரமில்லாதவிடங்களில் ஏராளமாய் வசிக்கின்றன. இவ்வெளவால்கள் பழந்தின்னிவெளவால்கள் என்றே பெயரிட்டழைக்கப்படுகின்றன. "மரம்பழுத்தால் வெளவாலை வாவென்றுகூவி—யிரந்தழைப்பார் யாவருமிங்கில்லை" என்னும் ஔவையார் வாக்கிற்கிணங்க இவ்வெளவால்களுக்கு எந்த மூலையில் எவ்வளவு விஸ்தாரமான தூரத்தில் பழங்கள் பழுத்தாலும் சொல்லாமலே மோப்பத்தினால் அறிந்துகொள்ளும்படியான சக்தியுள்ளது. தம் கண்களை இறுகமூடிக்கொண்டாலும், அவை தம்காதையும் மூக்கையும் நெறித்துப்பிடித்துத் தொலைதூரத்திலுள்ள பழவர்க்கங்களின் வாசனையை மோப்பம்பிடித்து ஆங்கு இரவுகளில் கூட்டங்கூட்டமாய் விரைந்துசென்று மனங்கொண்டமட்டும் அவற்றையுண்டு மீண்டும் தம்மிருப்பிடம் வந்து சேருகின்றன. பழுத்திருக்கப்பட்ட இலுப்பை, ஆல், அரசு, அத்தி, மாதுளை முதலான மரங்களிலுள்ள கனிகளை வயிறுநிறையத்தின்று வழியே பறந்துவரும்போதே அவையிற்றை வாயினாலேயே கக்கி பலவிடங்களிலும் எச்சமிடுகின்றன. இவ்வாறு எச்சமிட்டபலவிடங்களில் பழந்தருமரங்கள் அநந்தம் உண்டாகி அவ்வவ்விடங்களைச்செவ்விய காட்சிதந்து அலங்கரிப்பதுடனில்லாது மனிதர் பல்லோரும் அவையிற்றினால் அடையும்பலனோ சொல்லிலடங்காது. இப்படி இவ்வெளவால் வர்க்கத்தின் அவ்வெச்சவுரத்தின் சிறப்புமிகுதியுங்கொண்ட பழமரங்கள், முளைக்கக்கூடாத விடங்களிலும் எதிர்பாராமல் இயல்பாய் முளைத்துப்பலன் தருகின்றன. இவ்வெள

வால்கள் இங்ஙனம் பழந்தின்று உரத்தின் பெருமைகலந்த எச்சத்தைக்கண்ணுக்கெட்டாத தூரத்திலுள்ள விளைநிலங்களில் உபயோகிப்பதுடன் நில்லாது, பயிர்பச்சைகளில் வந்துமேய்ந்து, அவற்றையடியுடனழிக்கிற பூச்சி, புழுக்களைத் தின்றும்குடியானவர்களுக்குப் பெருத்த உபகாரம் செய்வனவாகின்றன.

வௌவால்கள் பழந்தருமரங்கள் உண்டாவதற்குக் காரணமாவதுபோல் காக்கைகளும், பூமியிலுள்ள அநேகவித அபூர்வவிருக்ஷவகைகளுக்கும் மூலகாரணமாகின்றன. ஜாவாத்தீவில் முதன்முதலில் விளைந்தும், மனுஷரினுபயோகத்திற் கடுத்ததாயுமிருந்த இலவங்கப்பட்டையின் விதைகளை, அக்காலத்தியடச்சு இராஜாங்கத்தாரின் அநுமதியின்பேரில் சிங்களத்தீவில் அவற்றின் விதைகளைக்கொண்டு விதைத்துத் தகுந்த பந்தோபஸ்துடன் ஆங்குப் பயிரிட்டார்கள். தக்கபந்தோபஸ்துடனே பாதுகாக்கப்பட்ட இவ்விசேஷப்பயிர் எங்ஙனம் பலவிடங்களிலும் பரவிற்றென்று விசாரித்ததில், அபூர்வமான இச்செடிகளின்மீது தம்மாகாரார்த்தமாக உட்காரும் காக்கைகள், அவற்றை ஏராளமாய்த்தின்று கண்டகண்டவிடங்களிலும் தம்மலங்களை அவ்விதைகளுடன் கழித்தலினால், அவ்வுரத்தின் பலங்கொண்ட அவ்விலவங்கப்பட்டைச்செடிகள் ஏராளமாய், எங்குமுண்டாயினவென்று தெரியவந்தது. இம்மாதிரியான விருக்ஷம், செடி, கொடி வகையராக்களை இப்பட்சிக்கூட்டங்களொன்றே எங்குமுண்டாகச்செய்து மனிதசமூகத்திற் குபயோகமாயிருக்கின்றதென்று கருதவேண்டாம். இம்மாதிரியான வேலைகளை மிருகங்களும் ஏளாவர்த்தியில் செய்து, குடியானவர்களுக்குப் பெருத்த உபயோகமாயிருப்பதென்பதற்கு, தென்னிந்தியாவில் சிலபாகங்களில் அநுபவ பூர்வமாய் தெரியவருகிறது. தென்னிந்தியாப் பொட்டல்வெளிகளில்(Dry lands)முக்கியமாய்த் திருநெல்வேலியிலும், மதுரையிலும், ஆடுகளும், மாடுகளும் ஏராளமாய் மந்தைமந்தையாய் வளர்க்கப்படுங்காலையில், அவைமேய்க்கப்படுவதற்காக நாடுகள்தோறும், ஓட்டிக்கொண்டு போகும்போது அவை, கருவேலமரத்தின்காய்களை வயிறுநிறைய மேய்ந்து தாம் திரும்பித்தங்குமிடங்களில் சாணியுடன் அக்கருவேல் விதைகளை யிடுவதனால், அநேக கருவேலங்காடுகள் உண்டாகி, அவைகள் குடியானவர்களின் கலப்பைக் கால்களுக்கென்றும், ஏற்றத்தின் கட்டைகளுக்கென்றும் இன்னும் எத்தனையோ காரியங்களுக் கென்றும் பெரிதும் உபயோகப்படுகின்றன. மேலும் அவை உயர்ந்ததினுசு விறகாக அடுப்பெரிக்கவும் காளவாய்களுக்கும் ஏராளமாய்ப் பிரயோசனப்படுவது எவரும் நன்கறிந்தவிஷயம். ஆலும் வேலும் பல்லுக்குறுதி என்னும் பழமொழியின் வண்ணம், வைத்தியசாஸ்திரரீதியிலும் மிகுதியும் பிரயோசனப்படுகிற இம்மரங்களுக்குக் காரணம் ஆடுமாடுகளேயென்றதனால், மிருகங்களும் எல்லாம் வல்ல ஈசனருளினால் மனிதரின் சௌகரியார்த்தம் வெகு தீர்க்காலோசனையுடன், சிருஷ்டிக்கப்பட்டுளதெனச் சொல்லலும் தக்கதேயாம். தோல் பதனிடுதொழிலுக்கும், ஆடுமாடுகளின் ஆகாரார்த்தமாகவும் பெரிதும் பயன்படுகிற கருவேலமரங்களின் பெருமையும் அருமையும் எழுத எழுத விரியுமாதலின் இப்போது இதைப்பற்றி இம்மட்டோடு நிறுத்தினோம்.

வௌவால்கள் என்னும் பிராணி கடிக்காதபழங்களில்லையாயினும், இவைகள் மனிதருக்குப்பல அரிய பெரிய கைத்தொழில்வேலையில் கைக்குமெய்யாய்ப் பலன்தரக்கூடியதாயிருக்கின்றதென்பதற்குத் திருஷ்டாந்தங்கள் பல உள. தென்னிந்தியாவிலுள்ள இலுப்பைமரங்களில்லாத பலவிடங்களிலும் இவ்வௌவால்களின் உதவியினால், மாந்தர் இலுப்பையெண்ணெய் ஏராளமாய் ஆட்டியெடுத்து இலாபம் சம்பாதிக்கிறார்கள். தஞ்சைஜில்லாவில் பேரளம் காரைக்கால் இருப்புப்பாதையில் பேரளத்திற்குக் கிழக்கே ஒருமைல் தூரத்திலுள்ள புரசக்குடியில் ஓராலமரத்தின்கீழ் வருஷவாரியில் நாலைந்து ஆடத்திற்குக்காணும்படியான இலுப்பைக்கொட்டைகள் தினந்தோறும் பொறுக்கியெடுத்துச்சேர்த்து ஆட்டியெண்ணெயெடுக்கும்படியாய்க் குத்தகைக்கு விடப்பட்டிருக்கின்றதென்னப்படுகிறது. தஞ்சை ஜில்லாவில் திருவாவடுதுறை யாதீனத்து இலட்சத்தோப்பிற்கு அருகாமையிலுள்ள ஒரு மூங்கிற்றோப்பில் ஏராளமாகக் குடிகொண்டிருக்கும் பழந்தின்னிவௌவாலின் எச்சத்தைக்கொண்டு வருஷவாரியில் எத்தனையோ கணக்கில்லாத ரூபா வரும்படியுள்ள இலுப்பைக்கொட்டைகள் சேகரிக்கப்பட்டு எண்ணெய் ஆட்டப்படுவதென்றால் இவ்வௌவால்கள் நம் நாட்டில் மனிதரால் நாசமாக்கப்படாது காப்பாற்,

றப்படல் வேண்டியதவசியமாகின்றதல்லவா? இவைபோன்ற இலாபகரமான எத்துணையோகைத்தொழில்களுக்கும் இவ்வெளவால்கள் சாதகமாயிருக்கின்றன. இவ்வெளவால் புழுக்கைகள் கோயில்களிலும் பிறவிடங்களிலு மிருப்பன மிகுதியும் சத்துள்ளதாகையால் இவற்றை ஆங்காங்கு சேகரித்துக் குடியானவர்கள் எருவாயுபயோகித்துப்பலன் பெறுவதைவிட்டு, அலட்சியம் செய்வது அவ்வளவு நன்றாயிராது. இவைகள் உயர்ந்த புஷ்பச்செடிகளுக்கும், பலன்தரு விருக்ஷங்களுக்கும், மிக்க உரத்தைக்கொடுப்பதாய் ரசாயனமுறையில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. நாம் அநுபவத்தில் பார்க்கிறோம். இதன் புழுக்கைகளிலேயே இந்துக்களாலும், மகம்மதியர்களாலும், ஆங்கிலேயர்களாலும் முறையே காரஞ்சேர்ந்த துவையல்களாகவும், கிச்சிலிச்சோற்றின் சேர்ப்பாகவும், பெப்பர்மிண்டு (Pepper-mint mixture) மிக்ஸ்ச்சராக ஔஷதசாலையிலுபயோகிக்கப்படுகிறதற்காகவும் பிரயோசனப்படுகிற பொதினாஇலை (செடி) உண்டாவதாகப் பெரிதும் கூறுகிறார்கள். இவ்வெளவால்கள் அநேகம் அபூர்வமான பழங்களைத்தின்று உஜ்ஜீவித்தல் நிமித்தம், பல பிரபலவைத்தியர்களாலும் இதன்புழுக்கை பல அபூர்வமான மருந்துச்சரக்குகளிலும் சேர்த்துபயோகிப்பதும் பார்த்திருக்கிறோம். பண்டைக்காலந் தொட்டுத் தென்னிந்தியாவின் சில பாகங்களில் இப்பழந்தின்னிவெளவாலினின்றும் இரத்தம் எடுத்து, இரத்தத்தின் ஒருபாகத்திற்குமேல் நான்குபாகம் நல்லெண்ணெய் கலக்கிப்பக்குவமாய் அவை ஒன்றுசேரும்படி காய்ச்சி, பலநாள்காறும் இருந்த வழுக்கைத்தலைகளுக்கும் நரைத்ததலைகளுக்கும், சிரங்கு சொறிபிடித்த தலைகளுக்கும் தடவியதனால், மண்டைக்கொதிப்புகள் பெரிதும் நீங்கி குளிர்ச்சியுண்டாகி, அநேகவழுக்கைத்தலைகளும் எதிர்பாராமல் சடைத்தமயிருடையவைகளாய் மாறின என்றால், மனுஷசமூகத்தில் இக்கைத்தொழில் எத்துணைப் பலன்தந்துவந்தது அக்காலத்தில் என்றறியவிடந்தருகின்றது.

நம் சென்னைராஜதானியில் நெடுநாளாகச் செய்யப்பட்டுவந்த இவ்வபூர்வ கைத்தொழில் இப்போது அதனை ஆதரிப்பாரின்மையாலும், வேறுநாட்டிலிருந்து நரை வழுக்கைத்தலைகளுக்கு இந்தியா நாட்டில் இறக்குமதியாகும் அநேகவிதமான நவநவமான எண்ணெய்களாலும், நமதுதேசத்திய சுவதேசியவெளவால் மயிரெண்ணெயின் கிராக்கி குறைந்து, இக்கைத்தொழிலே இருந்தவிடம் தெரியாது மறைந்தேபோய்விட்டது. இப்பேர்ப்பட்ட ஆதிகாலத்திய கைத்தொழிலினால் நிதர்சனமாய் எவ்வளவோ நன்மையையடைய ஏதுவிருக்கின்றதென்பது இங்கு விஸ்தாரமாய் எடுத்துச்சொல்லவேண்டுவதின்று.

வட இந்தியாநாட்டில் பரத்தினால் எவ்வளவோ அபூர்வமான நவநாகரீகமுள்ள பிம்பங்களும் பிரதிமைகளும், பின்னும் நம்மிந்தியா நாட்டில் அத்தியாச்சரியமான பலவித கைத்தொழில்களும் செய்யப்பட்டுவந்தன. அவையிற்றை ஆதரிப்பாரின்மையால், அந்தோ! அவை உருத்தெரியாமல் மறைந்தேபோயினபோல் இச்சிறந்தவெளவால் எண்ணெய் எடுக்கும் கைத்தொழிலும், ஆதரிப்பாரின்றிக் கைவிடப்பட்டது. நம் நாட்டிற்கு நேரிட்டிருக்கும் பிரதிகூலங்களிலொன்றாகும் என்பதற்கையமேயின்று.

இரசமுள்ள இப்பழந்தின்னிவெளவால்களின் மாமிசமும் அதன் ஔஷதமகிமையின்பொருட்டும் அதன் மாதுரியத்தின்பொருட்டும் மாந்தரால் உட்கொள்ளப்பட்டுவந்தன. அந்நியதேசங்களிலிருந்து இறக்குமதியாகிப் பிரபலமான ஔஷதமாக உபயோகப்படுத்தப்படுகிற காட்லிவர் (Codliver oil and maltine) ஆயில், மால்டீன் முதலிய மருந்துகள் தேகத்திற்குச் செய்யும் சௌகரியத்திற்கு மேலான சௌக்யத்தை யளிக்கக்கூடிய இவ்வெளவால்களின் மாமிசத்தின் அருமை, தற்காலத்தவர் பலருக்கும் நன்குதெரியாமையும், தௌர்ப்பாக்கியமுமேயாம். இப்பேர்ப்பட்ட அருமையான பழந்தின்னி வெளவால் கூட்டமாய்ச்சேர்ந்து, பழத்தோப்புகளைக்கொள்ளைகொண்டாலும் அவற்றின் உபயோகம் மனிதர்க்குப்பெரிதும் உற்றதாயிருக்கிறபடியாலும், பழுத்ததோப்பைக் கடித்துக்காட்டும் தூதனாயிருப்பதனாலும் இவற்றின் மகிமைகளை மாநுடர்போற்றல் தக்கதேயாம்.

இப்பழந்தின்னி அம்சத்தைச்சேராத வேறுவர்க்கங்களுள் வாம்பையர் (Vampire) என்றதோர் இராட்சதாம்ச வெளவால் பலவேளைகளிலும் மிருகங்கள்போன்ற பிராணிகளுடைய இரத்தத்தையும் மனிதர்களுடைய இரத்தத்தையும், அவர்களை முறையே தூங்கும்

போது, தன்னுடைய விசாலமான விசிறிபோன்ற இறகுகளையாட்டியாட்டி நன்றாகத்தூங்குவித்து, அவர்களறியாது அவர் தேகத்திலுள்ள இரத்தத்தை நன்றாக உறிஞ்சி, அவர்களுடைய ஆயுளைக்குறைப்பதாவது பற்றி, அத்தகைய வௌவால்கள் நாடுகளில் பிரபலித்து வளருவதை எவரும ஒருபோதும் விரும்பமாட்டார்கள் என்பதும் திண்ணம்.

வீ. சுப்பிரமணிய ஐயர்,
தமிழ்ப்பண்டிதர், மாயூரம்.

உ

கடவுள் துணை.

உபாத்தியாயனியல்பு.

(முற்றொடர்ச்சி.)

மாணாக்கர் அடையவேண்டும் நூலறிவிற்குத் தாம் ஓர் முன்மாதிரியாயிருத்தல்போல அவர் பயிலவேண்டும் நற்பழக்கங்களுக்குந்தாம் ஓர் நன்முன்மாதிரி காட்டுதல் உபாத்தியாயர் கடன். உபாத்தியாயரிடத்துக் காணப்படுங் குணங்கள் மாணாக்கரிடத்தும் பிரதிபலிக்குமென முன்னர்க்கூறப்பட்டது. ஆதலின் ஒவ்வொருவரும் பிள்ளைகள் முன்னிலையில் தாம் நடக்கவேண்டியவிதத்தை நன்குகவனித்தல் அத்தியாவசியகம். உபாத்தியாயர் தம் நடவடிக்கைகளில் உண்மையுள்ளவராயிருத்தல் வேண்டும். தமக்குத்தெரியாததைத் தெரிந்ததாக நடித்தல் கூடாது. பாடங்களை முன்னதாக ஆயத்தஞ்செய்துகொள்வதனாற் படிப்பிக்கும்பொழுது சந்தேகமான விஷயங்கள் ஆதல் தெரியாதவிஷயங்களாதல் வாராது காத்தல் கூடும். கீழ்த்தரச் சிறுவர்களுக்குத் தம் அறியாமையைக்காட்டுதல் நன்றன்று; அவர் தம் உபாத்தியாயரைக் கல்விக்கடலென மதித்திருப்பவராதலின், மற்றைய மேல்வகுப்புமாணவர்முன் தமக்குத்தெரியாததைத் தெரிந்ததாகக் காட்டலும் வேறொன்றுசொல்லி மறைத்தலுந் தமக்குள்ள மதிப்பைக்குறைப்பனவாம். தெரியாததைத் தெரியாதென்று சொல்லல் ஒருபொழுதும் இழிவாகாது. உண்மைபேசுதல்போல மரியாதையாகப் பேசுதலும் நடத்தலும் உபாத்தியாயர் கவனிக்கவேண்டியன. தமக்குக் கீழ்ப்பட்டவரே என நினைத்துப் பிள்ளைகளுடன் மரியாதையின்றிவசனித்தல் தவிர்க்கற்பாலது. சிலர் ஓயாது “அடே வாடா, போடா” முதலிய கடுஞ்சொற்களைப் பிரயோகித்துக்கொண்டிருப்பர். இவர் பிள்ளைகள் நற்பழக்கமுடையராதல் எங்ஙன்? பிள்ளைகள் எந்தெந்த நற்பழக்கங்களைக் கடைப்பிடிக்கவேண்டியதோ அவ்வப்பழக்கங்களை உபாத்தியாயரும் அணுவளவேனுந் தவறாது அனுசரித்தல் வேண்டும். வாயினாற் சொல்லுதல்மாத்திரம் போதாது. செய்து காட்டுவதே மிகச்சிறந்தது.

உபாத்தியாயரிடத்துப் பழித்தற்குரிய குறைவுகளுங் கெட்ட பழக்கங்களும் இருத்தலாகா. காலையாட்டிக்கொண்டிருத்தலும், மேஜையின்மீது கால்களைத் தூக்கிவைத்துக்கொண்டாதல் மேஜையை உதைத்துக் கொண்டாதல் நாற்காலியிற் சாய்ந்து கொள்ளுதலும், வாங்குமேசை முதலியவற்றிற் படுத்துக்கொள்ளுதலும், பள்ளிக்கூடநேரத்திற் தாம்பூலந் தரித்துக்கொள்ளலும் சுருட்டுப்பிடித்தலுந், தலைப்பாகையை ஆதல் மேற்சட்டை (கோற்) யை ஆதல் கழற்றி மேசையின்மீது வைத்தலும் முதலியதுர்ப்பழக்கங்களை நீக்கல்வேண்டும். உபயோகமற்ற வார்த்தைகளைப் பேசலாகாது.

உபாத்தியாயரிடத்து இருக்கற்பாலவாய சாரீரகுணங்களுள்தேகாரோக்கியம் மிகமேலாயது. உபாத்தியாயருக்குச் சரீரசுகம் இல்லையாயின் அவர் தம் வேலையில் ஊக்கமுடையராதல் கூடாது. கோபமே அதிகப்படும். தேகாரோக்கியத்தோடு கண் காதுகளுங் கூர்மையுடையனவாகப் பெறுதல் வேண்டற்பாலது. உபாத்தியாயரின் கட்புலமுஞ் செவிப்புலமும் நுண்ணியனவல்லாவழிப் பாடசாலையினொழுங்கு கெடுதலுறும். பிள்ளைகள் உரியவேலைசெய்யும்பொழுதுண்டாகுஞ் சத்தத்தையுங், கதைபேசுதல் சிரித்தல்களால் உண்டாகுஞ் சத்தத்தையும் பிரித்தறியும் விவேகமுள்ள செவியும், பாடத்திற் சிரத்தையின்மை பராக்குப்பார்த்தல் முதலியவற்றையுடனே கண்டு குற்றவாளியைச் சென்றுருக்கும் நோக்கும் உடையராதல் சாலவும் நன்று. கண் காதுகள் கூர்மையுடையனவாதலோடு உபாத்தியாய

ரின் தொனியுஞ்சாந்தமாயும் அதிகாரமுடைமையுமாயிருக்கப்பெறல் நல்லாசிரியராதற்கு அனுகூலமாகும். படிப்பிப்பவர் நாடோறும் அதிகநேரம் பேசவேண்டியவராதலின் அவர் தந்தொனியை மிதமாக உபயோகிக்கும் வழியையறிந்து திட்டப்படுத்திக்கொள்ளல் அத்தியாவசியகம். நாட்செல்லச்செல்லப் பேசுங்கருவிகள் பெலங்குறைந்து இளைத்துப்போதல் பிரத்தியட்சம். ஆதலின் சரீராரோக்கியத்தின் பொருட்டு அவசியமின்றி மட்டற்று உரத்துப்பேசுதலைத் தவிர்த்தல்வேண்டும். உபாத்தியாயர் தன்சரீரமுயற்சியை வீண்செலவு செய்யாது குறைந்த முயற்சியால் மிகுந்தபலனை யடையப் பழகல்வேண்டும். பேசும்பொழுது தாழ்ந்தகுரலோடு பேசுதல் உரத்த சத்தத்துடன் பேசுவதனாற் பெறுவதினுங் கூடியபேற்றை அடைவிக்கும். உபாத்தியாயர் பேசுந்தொனி எவ்விதமோ அவர் பள்ளிக்கூடமும் அவ்விதமே. உபாத்தியாயர் கூச்சலிட்டாற் பிள்ளைகளுங் கூச்சலிடுவார்கள். உபாத்தியாயர் கற்பனைகள் பண்ணுங்கால் ஒருபொழுதுந் தன்குரலை உயர்த்தாதிருப்பின் பிள்ளைகள் செவிசாய்த்தல் கட்டாயமாதலோடு அதற்காகத்தங்கள் சத்தத்தைக்குறைத்துத்தங்கள்வேலையை எப்பொழுதும் அமைதியாய்ச் செய்வார்கள். இரைச்சல்மிகுந்த பள்ளிக்கூடத்தில் பிள்ளைகளின் பழக்கவழக்கங்களைத் திருத்திச் செவ்வனேநடத்துதல் சிறிதும் இயலாது. அதிக சந்தடியின்றி வேலைநடத்தப்படும் பள்ளிக்கூடம் உபாத்தியாயர் தேகாரோக்கியமுடையராதற்கும் பிள்ளைகள் சற்குணமுடையராதற்கும் ஏற்ற இடமாம். உபாத்தியாயர் சொல்வது வகுப்பிலுள்ள பிள்ளைகளெல்லோர்க்குங் கேட்கும்படி தெளிவாயிருத்தல் வேண்டும். வகுப்பிலுள்ள சிலர்க்குக் கேளாமலிருக்கும்படியான தீனசுரத்துடன் பேசுதல் வகுப்பில் ஒழுங்கின்மைக்கு ஏதுவாம்.

இதுகாறுங் கூறிப்போந்த இலக்கணங்கள் எல்லாம் ஒருவரிடத்தமைதல் அரிது. ஆயினும் அவற்றுள் இயற்கையாகத் தம்மிடத்துள்ளனவோடு இல்லாத குணங்களையும் பயின்று அப்பியசிக்கப் பிரயத்தினப்படல் உபாத்தியாயத்தொழில் பூணுவர்க்குரிய கடன். நிற்க, உபாத்தியாயனாவான் முடிவற்றபொறுமையுந் தவறாத நீதியுங் கலங்காத நற்குணமுமுடையவனும், நாகரிகம் சாமர்த்தியம் இவைகட்கிருப்பிடமாயும், படிப்பிக்கும் ஒவ்வொரு விஷயத்திலும் பூரண அறிவுடையனுமாயிருத்தல் மிகவேண்டற்பாலதென்னினும், இவ்விலக்கணங்களெல்லாம் அமையப்பெற்றவர் மிக அரியர். உபாத்தியாயத் தொழிலைச் சனங்கள் எங்கனம் மதிக்கின்றார்கள்? இத்தொழிலாளர்க்குக் கொடுக்கப்படும் வேதனம் எவ்வளவு? நாகரிகமடைந்த தேசங்களொவ்வொன்றிலும் வேண்டியிருக்கும் உபாத்தியாயர் எப்பெருந்தொகையினர்? என்பனமுதலியவற்றைச்சிந்தித்தல்வேண்டும். சிந்திக்கின் உபாத்தியாயரெல்லாரும் மற்றைய தொழிலாளர்களைக் காட்டிலுங் கூடிய உணர்ச்சித்திறம் உடையராதல் வேண்டும் என்றெண்ணுதல் பொருந்தாமை தெளியப்படும். உபாத்தியாயர்தகுந்த கல்வியறிவுஞ் சிறந்த போதனாப்பியாசமும் உடையனாதல் இன்றியமையாதன. சரீர ஆரோக்கியமும் மிதமான மனோசத்தியம் இழிகுணங்களின்மையும் வேண்டற்பாலன. இவற்றினும் விசேஷகுணங்கள் ஒவ்வொருவரிடத்திலும் இருத்தல் அசாத்தியம். தம்மிடத்தில்லாத நற்குணங்களைச்சிறிது சிறிதாக அப்பியசித்துவரின் ஈற்றில் அக்குணங்களை அவர் முற்றும் பொருந்தப்பெறல் நிச்சயம்.

இன்னுங் கற்கப்படுவோரை,

> "வலம்புரிமுத்திற் குலம்புரிபிறப்பும்
> வான்யாறன்ன தூய்மையும் வான்யாறு
> நிலம்படர்ந்தன்ன நலம்படரொழுக்கமுந்
> திங்களன்னகல்வியுந் திங்களொடு
> ஞாயிறன்னவாய்மையும் யாவதும்
> அஃகாவன்பும் வெஃகாவுள்ளமுந்
> துலைநாவன்ன சமநிலை யுளப்பட
> வெண்வகையுறப்பின ராகித்திண்ணிதின்
> வேளாண்வாழ்க்கையுந் தாஅளாண்மையு
> முலகியலறிதலு நிலைஇயதோற்றமும்
> பொறையுநிறையும் பொச்சாப்பின்மையும்
> அறிவுமுருவு மாற்றலும் புகழுஞ்
> சொற்பொருளுணர்த்துஞ் சொல்வன்மையுங்
> கற்போர்நெஞ்சங் காமுறப்படுத்தலும்
> இன்னோரன்ன தொன்னெறிமரபினர்
> பன்னருஞ்சிறப்பி னல்லாசிரியர்."

என்பதனாற்காண்க.

தி. சதாசிவ ஐயர்.

உ

திருச்சிற்றம்பலம்.

திருக்குறளாராய்ச்சி.

யான் தமிழ்ச்சங்கம் சேதுபதி செந்தமிழ்க் கலாசாலையில் பண்டித பரீக்ஷைக்காகப் படித்தகாலத்தில் மாட்சிமைபொருந்திய, அக்கலாசாலையின் தலைமை உபாத்தியாயரவர்கள் முகமாக, சேனாவரையத்தைப்போலவே திருக்குறளையும் ஏடுவைத்துப்பாடங்கேட்டேன். அதிற் சில திருத்தங்களும் பாடபேதங்களும் கிடைத்தன. அவற்றுள்ளே திருத்தங்களை மட்டும் முதலில் வெளியிடுகின்றேன்.

௧௦௮. நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று.

இதன் விசேட வுரையில், "இரண்டு மொருவனாற் செய்யப்பட்டவழி மறப்பதும் மறவாததும் வகுத்துக் கூறியவாறு" என்ற வாக்கியம் சில ஏடுகளில், "இதனான் இரண்டுமொருவனாற் செய்யப்பட்ட வழி மறப்பதும் மறவாததும் வகுத்துக் கூறப்பட்டன." என்றுகாணப்படுகிறது. இவ்வுரையாசிரியர் அறத்துப்பால் பொருட்பாலென்னு மிரண்டினுமுள்ள குறள்கட்கெல்லாம், சிலவற்றிற்குத் தனியாக இதனாலின்னது கூறப்பட்டது என்றும், சிலவற்றிற்கு இரண்டு முதலியனவாகச் சேர்த்து இவையிரண்டு பாட்டானு மின்னது கூறப்பட்டது; இவை மூன்றுபாட்டானு மின்னது கூறப்பட்டது என்றும் விடாது கருத்துக் கூறியிருப்பதனாலும், ஈண்டு, ௧௦௭-ம் குறள் இறுதியில் (௧௦௬, ௧௦௭) இவையிரண்டு பாட்டானும் நன்றி செய்தாரது நட்பு விடலாகாதென்பது கூறப்பட்டது." என்றும், ௧௦௯-வதனிறுதியில் "இதனான் நன்றல்லதன்றே மறக்குந்திறங் கூறப்பட்டது," என்றும், காணப்படுதலானும், ௧௦௮-ம் குறளீற்றினும், "இதனான் இரண்டு மொருவனாற் செய்யப்பட்டவழி மறப்பதும் மறவாததும் வகுத்துக்கூறப்பட்டன" என்றிருப்பது பொருத்தமுடைத்து.

௧௨௩. செறிவறிந்து சீர்மை பயக்கு மறிவறிந்
தாற்றி னடங்கப் பெறின்.

என்பதன் விசேடவுரையாரம்பத்தில் "அறிதலிரண்டனுள் முன்னது செயப்பாட்டுவினை" என்னும் வாக்கியம் சில ஏடுகளிற் காணப்படுகின்றது. இவ்வுரையாசிரியர் ஒருசொல் இருபொருளில் வரும் (குறள் ௧௯௯ முதலியன) பிற இடங்களில் இவ்வாறு விளக்கிப் போதலின் ஈண்டு மிவ்வாக்கிய மிருத்தல் பொருத்தமுடைத்தாம்.

௧௪௧. பிறன் பொருளாட் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்
தறம்பொருள் காண்டார்க ணில்.

என்பதனுரையில், "ஞாலத் தறம்பொருள் கண்டார்கணில்" என்பதற்கு, "ஞாலத்தின்கண் அறநூலையும் பொருணூலையும் ஆராய்ந் தறிந்தார்மாட் டில்லை." என்றச்சிடப்பட்டிருக்கிறது. இதற்குச் சில ஏடுகளில் "ஞாலத்தின்கண் அறநூலும் பொருணூலு மாகிய இரண்டையு மாராய்ந் தறிந்தார் மாட்டில்லை" என்பது பிரதிபேதமாகக் காணப்படுகிறது. ஆசிரியர், "செவ்வெண்ணின் றொகை தொக்குகின்றது" எனப் பின்னெழுதியுள்ள விசேடவுரைக்கேற்ப "அறநூலும் பொருணூலுமாகிய இரண்டையும்" என விரித்தெழுதுதல் வேண்டுமாதலின் இதுவே சிறப்புடைத்தென்க. இதற்கு இவ்வாறு தொக்கு நின்றதாக இலக்கணமெழுதும் (குறள் ௧௬, ௫௧, ௧௪௨, ௧௨௭, ௧௩௮, ௧௬௫, ௫௫௧, முதலியன.) இடங்களிலெல்லாம் தொக்கு நின்றவற்றை யுரையில் விரித்தெழுதுதல் சான்றாம்.

௧௬௮. அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி யுய்த்து விடும்.

இதன் விசேட வுரையில் "பண்பிற்குப் பண்பியில்லையேனும் தன்னை யாக்கினானை யிருமையுங் கெடுத்தற் கொடுமைபற்றி அழுக்காற்றினைப் பாவியென்றார், கொடியானைப் பாவியென்னும் வழக்குண்மையின்," என்னும் வாக்கியத்தில், "பண்பிற்குப் பண்பியில்லையேனும்" என்பது "பண்பிற்குப் பண்பில்லையேனும்," என்று சில ஏடுகளிற் காணப்படுகிறது. இக்குறளில் அழுக்காறென்னும் உடல்கொ ளுயிர்க்குணத்தைப் பாவமென்னும் மற்றொரு குணமுடையது போலப் பாவியென்றது, 'பண்பிற்குப் பண்புகோடல் பொருந்தாது' என்னும் தருக்கநூற் கருத்துடன் மாறுபட்டு வழுவாதல் நோக்கி, அதனை அமைப்பான் "தன்னை யாக்கினானை இருமையுங் கெடுத்தற்

கொடுமைபற்றி அழுக்காற்றினைப் பாவியென்றார். கொடியானைப் பாவியென்னும் வழக்குண்மையின்” என்று ஆசிரியர் கூறுதலின், இதற்கேற்ப, “பண்பிற்குப் பண்பில்லையேனும்,”என்பதே பொருத்த முடைத்தாம். இவ்வாறே ஆசிரியர் சேனாவரையரும் (தொல்-சொல் ௨௧௪) “அன்மையி னின்மையின்” என்னுஞ் சூத்திரவுரையில் “அன்மையு முண்மையும் பண்பிற்கு மொத்தலிற் பண்பெனப்படா; என்னை? குணத்திற்குக் குணமின்மையின்.” எனக் கூறியதுாஉங் காண்க. குணத்திற்குக் குணமின்மையாவது - ஒரு குணத்தின்கண் மற்றொரு குணமின்மை.

௧௯௫. சீர்மை சிறப்பொடு நீங்கும் பயனில
நீர்மை யுடையார் சொலின்.

இதன் உரையில் “பயனில நீர்மையுடையார் சொலின்,” என்பதற்கு, “பயனிலவாகிய சொற்களை இனிய நீர்மையுடையார் சொல்லுவராயின்” என்றச்சிடப்பட்டிருக்கிறது. சில ஏடுகளில், “பயனிலவாகிய சொற்களை இனிமையுடையார் சொல்லுவராயின்” என்றிருக்கிறது. இனிமை நீரின் குணமாகலானும், இதனை “நீர்மை-நீரின்றன்மை” என ஆசிரியர் விசேடவுரையில் விளக்குதலானும் இனிமையுடையார் சொல்லுவராயின்” என்பதே சிறப்புடைத்தாம். ௭௮௨-ம் குறள் விசேடவுரையில ‘நீரவரென்றார், இனிமைபற்றி’ என ஆசிரியர் கூறியதுாஉங் காண்க.

௨௯௯. எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு.

இதனுரையில் “சான்றோர்க்குப் பொய்யா விளக்கே விளக்கு,” என்பதற்கு, “துறவானமைந்தார்க்கு விளக்காவது மனத்திருள் கடியும் பொய்யாமையாகிய விளக்கே விளக்காவது,” என்றச்சிடப்பட்டிருக்கிறது. சில ஏடுகளில் “துறவா னமைந்தார்க்கு விளக்காவது மனத்திருள் கடியும் பொய்யாமையாகிய விளக்கே” என்ற பாடங் காணப்படுகிறது. “சான்றோர்க்கு விள்க்கு பொய்யா விளக்கே” என அந்வயப்படுத்திப் பொருள்கொள்ளின், “துறவா னமைந்தார்க்கு விளக்காவது மனத்திருள் கடியும் பொய்யாமையாகிய விளக்கே”

என்பது பொருத்தமா யிருத்தலானும், அச்சுப்பிரதிப் பாடத்தில் ஈற்றிலுள்ள ‘விளக்காவது’ என்னுஞ்சொல் மிகையாதலோடு வாக்கியத்தின் அழகையுங் கெடுத்தலானும ஏட்டுப்பாடமே கொள்ளற்பாலதாம். இதற்கேற்ப,

இக்குறள் விசேட வுரையிற்றிலுள்ள “இனியிதற்கு.......... உரைப்பாருமுளர்” என்னும் வாக்கியத்தினும் அமைந்தார்க்கு விளக்கமாவது, பொய்யாமையான் வரும் விளக்கமே விளக்கமென்றுரைப்பாருமுளர்” என்றவிடத்து, “அமைந்தார்க்கு விளக்கமாவது பொய்யாமையான் வரும் விளக்கமே என்றுரைப்பாருமுளர்” என்ற பாடங் காணப்படுகிறது.

௩௦௪. நகையு முவகையுங் கொல்லுஞ் சினத்திற்
பகையு முளவோ பிற.

இதன் விசேடவுரையிலே ‘துறவாற் புறப்பகையில ராயினும்’ என்பதிலுள்ள ‘துறவால்’ என்பது ஏடுகளில் ‘துறவியால்’ என்றே காணப்படுகிறது. திருக்கோவையார் “அளவியை யார்க்கும் அறிவரியோன்” என்னும் ௬௦-வது செய்யுளின் விசேடவுரையில் ‘துறவு துறவியென நின்றாற்போல அளவு அளவியென நின்றது என்னும் வாக்கியம் காணப்படுதலின் ‘துறவியாற் புறப்பகை யிலராயினும்’ என்றிருத்தல் கூடுமென்பது.

௩௨௭. தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை.

இதன் விசேடவுரையில் “இனித் தன்னுயிர் நீப்பினும் என்பதற்குச் சாந்தியாகச் செய்யாதவழித் தன்னுயிர் போமாயினுமென்றுரைப்பாருமுளர்; பிறர் செய்தலு மாகாமையின், அஃதுரையன்மையறிக.” என்னும் வாக்கியத்தில் ‘பிறர் செய்தலும்’ என்பது ‘பிற செய்தலு’ மென்று ஏடுகளிற் காணப்படுகிறது. சாந்தியாகச் செய்தலாவது:—தன் அரிஷ்ட நிவிர்த்திக்காகக் கணி, கோடாங்கி முதலியோர் கூற்றின் வண்ணம் பிறரைக்கொண்டேனுந் தானாகவேனும் ஆடு முதலியவற்றைக் கொன்று பலிகொடுத்தல். இது செய்யாதவழித்தன்னுயிர் போமாயினும் தான்பிறிதோ ரின்னுயிரை யதனுடம்

*

பிணிக்குந் தொழிலைச் செய்யற்க. என்பது ஒரு சாரா ருரையென்று கூறி, அஃதுரையன்மைக்குக் காரணங் கூறுகின்றவர் 'பிறர்செய்தலு மாகாமையின்' என்னின் அவ்வுரையினாற் பிறர் செய்தல் ஆகும் என்பது போதராமையான் முன் பின் மலைவுடைத்தாம்; 'பிறசெய்தலு மகாமையின்' என்னின் 'சாந்தியாகச் செய்வதல்லாத பிற கொலை செய்தலும் ஆகாமையின்' என்றுபொருள்பட்டுப் பொருத்த முடைத்தாம். பிறகொலை செய்தல் - தன்னைக்கொல்ல வந்த வுயிரைக் கொல்லுதன் முதலியன. ஆகவே 'பிறசெய்தலு மாகாமையின்' என்பதே கொள்ளத்தக்கதாம்.

௩௬௭. அவாவினை யாற்ற வறுப்பிற் றவாவினை
தான்வேண்டு மாற்றான் வரும்.

இதன் உரையில் 'அவாவினை யாற்ற வறுப்பின்' என்பதற்கு 'ஒருவன் அவாவினை வஞ்சித்துவரக் கெடுக்கவல்லனாயின்' என்று அச்சுப் பிரதிகளிற் காணப்படுகிறது. ஏடுகளில், 'ஒருவன் அவாவினை வஞ்சித்தும் வாராமற் கெடுக்க வல்லனாயின்' என்றே காணப்படுகிறது. மேலே ௩௬௬-ம் குறளில் 'ஒருவனை வஞ்சிப்பதோரு மவா' (மெய்யுணர்தலீறாகிய காரணங்களெல்லா மெய்தி அவற்றான் வீடெய்தற்பாலனாய ஒருவனை மறவிவழியாற் புகுந்து பின்னும் பிறப்பின்கண்ணே வீழ்த்துக் கெடுக்கவல்லது அவா) என்று அவாவின் வலிமை கூறினவர் - இக்குறளில் 'அவாவினையாற்ற வறுப்பின்' என்றதனால், (அவ்வாறு வஞ்சித்து வரத்தக்க வலிமையுடைய) 'அவாவினை வஞ்சித்தும்வாராமற் கெடுக்க வல்லனாயின்' என்னும் ஏட்டுப்பாடமே மிக்க சிறப்புடைத்தாம். ஆற்றவறுத்தல்-முற்றவறுத்தல்= வஞ்சித்தும் வாராமற் கெடுத்தல்.

௭௮௦. புரந்தார்கண் ணீர்மல்கச் சாகற்பிற் சாக்கா
டிரந்துகோட் டக்க துடைத்து.

என்னுங் குறளில் 'சாகற்பின்' என்பது 'சாகிற்பின்' என ஏடுகளிற் காணப்படுகின்றது. உரையாசிரியர்; சாவப்பெறின் என ஆற்றலுணர்த்தும் இடைநிலைப் பொருடோன்ற உரை கூறியிருத்தலானும்; சாகற்பின் என்பதே பாடமாயின் இதற்கு விசேடவுரையில் இலக்கணக் குறிப்புக் கூறியிருத்தல் வேண்டும், அங்ஙனங் கூறாமையானும்; இதுபோலவே "ஏதிலார் குற்றம்போற் றங்குற்றங்காண்கிற்பிற் - றீதுண்டோ மன்னு முயிர்க்கு" (குறள் - ௧௯௦) என்னுங்குறளில், "காண்கிற்பின்" என்பதற்கு காணவல்லனாயின் என அப்பொருடோன்ற உரையுரைத்து 'நடுவுநின்று ஒப்புக்காண்டலருமைநோக்கிக் காண்கிற்பின் என்றார்' என்று விசேடங்கூறியிருத்தலானும், "சாகிற்பின்" என்னும் ஏட்டுப்பாடமே பொருத்தமுடைத்தாம்.

அ. கோபாலையர்.

*ஆசாபாசங்களும் அவைகளையொறுத்துத்தற்கடிதலும்.

(முற்றொடர்ச்சி)

அடிமைகள் குதிரைகளின்மேலேறிப் போவதையும் வம்மிசபதிகள் அடிமைகளைப்போற் கால்சாரியாய் நடந்துசெல்வதையும் கண்டேனென்று சலோமோன் (Solomon) சொல்லிக்காட்டிய முறைபிறழ்வு இதுதான். ஒருமிருகம் மனிதனைப்பிடித்து இறுக்கக்கட்டித் தன் மனப்போல எங்கும் இழுத்துக்கொண்டுபோவது சுபாவத்துக்கடாத காரியமன்றோ? இதைக்கண்ணுற்றோரெவரும் ஆச்சரியப்படாதொழிவரோ? என்றாலும் மிருகத்துக்குரிய தங்கள் ஆசாபாசங்களால் இழுபட்டு அவைகளுக்கு அடிமையாயிருக்கிறவர்கள் எந்நிலையிலும் அநேகருண்டு. அவர்கள் பெரும்பான்மையோராதலால் அவர்கள்செய்கிற இந்த இழிதகைமையையும்சிஷித்தத்தையுங்கண்டு எவரும் ஆச்சரியப்படுவதைக் காண்கிலோம். இவ்வாறு ஆச்சரியப்படாமலிருப்பதும் பிரலாபத்துக்குரிய பெரியதீமையே. தியோஷேனென்னும் சாஸ்திரி ஒருநாள் பட்டப்பகலில் விளக்கைக்கொளுத்திக் கையிற்பிடித்துக்கொண்டு எதையோ தேடுகிறவனைப்போல அத்தேன்பட்டணத்துத் தெருவழியே போய்க்கொண்டிருந்தான்.

---

* இவ்வியாசம் மதுரைத் தமிழ்ச் சங்கத்து எட்டாம்வருஷோற்சவ தினங்களுளொன்றாகிய 1909-௵ மே௴ 25௳ கூடிய வித்துவச்சபையில் கீழக்கரை, ஸ்ரீமத்-M. ஜோஸப்டையாஸ் அவர்களாற் படிக்கப்பட்டது.

அவனை இந்நிலையிற்கண்ட ஒருவன் என்னதேடுகிறாயென்றுகேட்ப, மனிதனைத்தேடுகிறேனென்று மறுமொழிசொன்னான். அதற்குமற்றவன் தெருநிறைய மனிதர்கள் நடந்து செல்லுகின்றார்களே அவர்களைக் காணவில்லையாவென்றான். அப்பொழுது தியோசேன் நீ சொல்வது சரியல்ல, இவர்கள்மனிதரல்லர் மிருகங்கள். ஏனெனில் மிருகத்துக்குரிய தங்களாசாபாசங்களை இவர்கள் பின்சென்று நடப்பதால் மனிதரைப்போல நடக்கிறதில்லை. மிருகங்களைப்போலநடக்கிறார்கள்" என்றான். சரீரம் தன்னை ஆட்கொள்ளவிடுகிறவன் தலைகீழாகவும் கால்மேலாகவும் நடக்கும் கழைக்கூத்தனைப்போல் கடவுளுடையவும் தேவதூதர்களுடையவும் பார்வைக்குக் காணப்படுவானென்றும் அந்த அகுஸ்தீன் என்பவரே சொல்லியிருக்கிறார்.

இதைவிட இகழ்ச்சியும் மதியீனமும் வேறுண்டோ? புத்தியைச்சரீரத்துக்குக் கீழ்ப்படுத்தித் தினந்தோறும் இவ்வித அயோக்கிய நடத்தை நடக்கிறவர்கள் அனேகருண்டு. இவர்கள் இதைப்பற்றி வெட்கப்படுவதுமில்லை. இப்படி வெட்கப்படாதவனுக்குப் புத்தி முழுதும் அற்றுப்போயிற்றென்று கருதற்பாலது. "என் சரீரத்துக்கு அடிமைப்படுகிறதற்காகவல்ல மேலான மகிமைக்காக நான் பிறந்திருக்கிறேன்" என்று செனேக்கர் என்னுஞ்சாஸ்திரிசொன்னதால் அவன் தன்னைப்பற்றிச் சரியான எண்ணமுற்றிருந்தானென்று அறியக்கிடக்கின்றது. இவ்வாக்கியம் நம்மெல்லாருடைய இருதயங்களிலும் பதிந்திருத்தல் சால்புடைத்து. மனிதனொருவன் மிருகமாக மாறித்தான் இவ்வாறு மாறிப்போனதாக அறிந்துகொள்ளாமலும் இதற்காகத் துக்கப்படாமலுமிருந்தால் இதைப்பார்க்கிறநாம் எவ்வாறு பெருவியப்படைவோம்! இதைப்பார்க்கமேற்கூறியவெட்கமில்லாதவன்மேல், அதிக ஆச்சரியப்படவேண்டுமென்று அந்த அகுஸ்தீனென்பவரே சொல்லுகிறார். மேற்கூறியாங்கு நீசமிருகத்தைப்போற் சரீரந்தன்னை யாளாது ஆத்மாவே சரீரத்தையாட்கொண்டு நடத்தி ஐம்புலனடக்கிக்கொன்று பாவத்தைப்பயக்கும் வரையும் பற்றற வெறுத்தொழித்தமையான் மாசற்றமனத்தூய்மையாற் பொங்கின தேவசிநேகத்துயர்ந்து தெளிந்த ஞானமுடையோரொழிய ஏனையோர் முத்தியின்பத்துக்கருகரல்லரென்றும் அம்முத்திவீழி காட்டவே, அருவனான கடவுள் அழகியவானுலகத்தினின்றிறங்கி உருவனாய் இவ்வுலகில் மனிதாவதாரம் பண்ணினரென்றும் இதனடியிற்காட்டிய தேம்பாவணிச் செய்யுட்கள் வலியுறுத்துகின்றன. அவை வருமாறு:—

"மெய்வினை யிடமைந் தின்றி விளங்கிய கடவு ளாகிப்
பொய்வினை பொறிக ளட்டுப் புரைவினை நசையு மட்டுத்
தூய்வினை யுளத்திற் பொங்குந் துடர்பிற காக வூக்கி
யைவினை யுணர்வோ ரல்லா லனந்தனற் பாதஞ் சேரார்."

உரை.—சத்த பரிச ரூப ரச கந்த மென்றைந்தினையும் பொருந்தினவுடலில்லாது கடவுளரூபியாதலாற் பொய்யைக்காட்டின செவிமுதற் பஞ்சேந்திரியங்களை யடக்கிக்கொன்று பாவத்தைப்பயக்குமாசையும் வெறுத்தொழித்தமையாலழுக்கறத் தூயமனதிலே பொங்கினதேவநட்பினையிறகாகக் கொண்டு தந்நிலையின் மேலுயர்ந்து தெளிந்த ஞானமுடையோரொழியக் கடவுள்பாதத்தை யொருவருஞ் சேரார்.

"செருவழி பொறிக ளைந்துஞ் செகுத்துத்தன் னிலையி னூக்க
லருவழி யென்று தானே யங்கண்வா னிறங்கிப் பாரிற்
கருவழி வந்தநாதன் கலைமுதிர் சுருதிகாட்ட
வுருவழி தோன்றி மாக்க ளுறவுற மகனா னானே."

உரை.—போராடி யைம்பொறிகளையும் வென்றடக்கித்தன்னிலையின் மேலுயர்ந்து கடவுள் பாதத்தை யடைதற்கரிய வழியிதென்று கடவுள்தானே யழகிய வானுலகத்தினின்றிறங்கிப் பூவுலகிற் கருப்பத்தின் வழியாக வவதரித்துக் கல்விமுதிர்ந்த வேதத்தை மனிதர்க்குக் காட்டவரூபியானவ னுருவோடுதோன்றி மனிதருறவினைத் தேடித்தானே மனிதனானான்.

"காரொழுங் ககனத் தூர்ந்த கதிர்பல வுதித்தல் தந்தே
யேரொழு மணியும் பூவு மினியதீங் கனியு மற்றச்
சீரொழும் பொறித்த மாமை திளைத்தன வெலையுந் தந்த
பேரொழுங் கருணை யானே பின்னையுந் தன்னைத் தந்தான்."

உரை.—மேகங்கள் திரியுந்திசையின் மேலெழுந்த வானத்திலூர்ந்த சந்திர சூரிய நட்சத்திரங்களுதித்து விளங்கத்தந்து வடிவழகுள்ள மணிகளையு மலர்களையு மினியகனிகளையு மெழுதப்பட்ட வழகினாற்

சிறந்த மற்றெல்லாவற்றையு நமக்குத்தந்ததின்பின் னிக்காலத்திற் பெருங்கருணையுடைய நாதனவதரித்துத் தன்னையுந்தந்தான்.

"ஊனெறி விழுங்கா வண்ண முதலிய கருணைச் சால்பிற்
ஆனெறி நரதே வாகித் தோன்றிய பின்ன ரெந்தை
பானெறி பெருகு மின்பப் பரவைநா மூழ்கல் தந்து
வானெறி வழங்குந் தன்மை மண்ணிடை வழங்கான் கொல்லோ."

உரை.—நற்றோர் நினையாத முறையை நினைத்தகருணையின் மிகுதியாலெங்கத்தாவே யவதரித்த நரதேவனாய் வந்தபின்பு பாலினாற் பெருகின வின்பக்கடலினுமினிதாய்மூழ்க வானத்தில் வழங்கினதன்மை பூவுலகிலும் வழங்கச்செய்யானோ?

"கோலநற் படலை பைம்பூக் கூருகிர் விசித்த மாலை
சாலநற் கதிர்ப்பொன் பற்றுந் தடம்மணிப் படலை மற்ற
நீலநற் கடல்சூழ் பாரி னிகரற வலிய வார்த்தி
ஞாலநற் றகவி லோங்க நாயகன் மனித னானான்."

உரை.—வடிவுள கோவையாக விறகக்கட்டின பூமாலையும், விளங்கின பொன்னாற்கட்டின பெருமணி வடமுங்கருங்கடல்சூழ்ந்தபூவுலகிலுள்ள மற்றதெல்லாமு நிகராம விருதுவத்தை வலியாக வொன்றாய்க்கட்டி மண்ணுலகு பெருமையடைந்தோங்கக் கத்தா தானே மனிதனானான்.

"பூட்டிய புணர்ச்சிப் பாலாற் புணரிரு துவங்கள் வேறாய்க்
கூட்டிய வொருவ னாய குணத்தவன் மனுவு மென்பா
னீட்டிய நலங்கள் குன்றா விறைவனு மென்பா னிவ்வாய்
சூட்டிய கருணை நன்னூற் றுறைவலோ ரடையும் பாலோ."

உரை.—தெய்வத்துவமு மனுத்துவமு மென்றிரண்டையு மொன்றாய்க் கூட்டின புணர்ச்சி முறையினாவ்விரு துவங்களிரண்டாய் நிற்பக்கூடின விரு பேராகாமலொருவனேயாகி யதனாலவன்றானே மனிதனென்றுந் தேவநற்குணங்கள் குறையாத தேவனென்றுஞ் சொல்லப்படுவா னித்தன்மையாலாண்டவன் காட்டின கிருபையை நிறைந்த கல்வியினல்லோருமடைந்து விரித்துக்காட்டத் தக்கவரோ?

"நஞ்சமிர் திரண்டுஞ் சேர்த்து நஞ்சதேல் லமிர்த மாமோ
விஞ்சவிர் பொன்னிற் சேருள் விசித்திது பசும்பொன் னாமோ
நெஞ்சவிர் கருணை பூண்ட நிமலன்றன் குணமுங் குன்றா
வெஞ்சழி மனுவின் றன்மை யிறைமையோ டுயர்த்தி னானே."

உரை:—நஞ்சுமமிர்தமு மென்றிரண்டையுங் கலந்தா லமிர்தத்தின்குணம் குன்றுமேயொழிய நஞ்சுதானமிர்தமாகாதே. விளங்கின பொன்னோடு செம்பினைக் கலந்தாற் பொன்மாற்று, குறையுமேயொழியச் செம்பு தங்கமாகாதே. ஒளியணியாகக் கருணையைப் பூண்ட கடவுளோவென்றாற் றெய்வத்துமு மனுத்துவமுமென்றிரண்டையுங் கூட்டிச் சேர்த்த தன்மையினாற் றேவத்துவமுங் குறைபடாமல் நீசமனுத்துவத்தைத் தூக்கித் தெய்வத்தொத்ததாக வுயர்த்தினான்.

இவ்வாறாய் நீசமனுத்துவத்தைத் தெய்வத்தொத்ததாகவுயர்த்தித் தமதுபிறப்பு முதல் இறப்புவரை தரித்திரதுன்பதுரிதத்தையே யநுபவித்து அத்துன்பத்தின் அறிகுறியாகிய சிலுவையைச் சுமந்து எம்மைப்புரந்து மரித்த மூன்று நாள் ஒட்டோலகராயுடலுயிரோடுயிர்த்து நாற்பானாள் பரத்துக் கெழுந்தருளிய ஏசுக்கிறீஸ்து இரக்ஷகர் தம்மைப் பின்செல்லும் பின்னடியார்க்கு வற்புறுத்தியுரைத்த வாக்கியமு மிவ்வொறுத்தலை யவர்கள் கைக்கொண்டொழுகி வளர்க்கவேண்டுமென்பதே. அவர் தமது சிஷ்யருக்குரைத்த வசனமாவது:—

"யாதொருவன் என்னைப்பின்செல்ல விரும்புவனேல், தன்னைத்தானே பரித்தியாகஞ்செய்து தன் (துன்பமாகிய) சிலுவையை அநுதினமுஞ் சுமந்துகொண்டு என்னைப் பின்செல்லக்கடவன்."

(மத்தேயு XVI—24.

இவ்வாக்கியத்தின்மேல் அர்ச். எரோனிமுஸ் (St. Eronimous) எடுத்து மொழிவதாவது:—

முன்னர்க் களி, மடி, மானி, காமி, கள்வனாதிகுற்றமுள்ளோன் தன் முந்திய நடக்கையை முற்றுந்திருத்திப் புனிதனாவதும், அடக்கவொடுக்கமில்லா தலைந்து, அலக்கணற்றவன் அறத்தினை முயன்று மறத்தினை யொழித்து அருளாளியாவதும் அறவழியிற் பலவினனும் அருங்கோழையுமானவன் அவ்வறநெறி நிற்ப ஆர்ந்த தாஷ்டீக

பலமும் அருந்துணிவுமுடையவனாய்த் தன்னைத்தானே பரித்தியாகம் பண்ணித் தன் துன்பமாகிய சிலுவையைப் பொறுமையோடு சுமந்து போகிறானென்பதற்குப் போதிய வடையாளமாகுமென்றார்.

ஆதலின் யாமும் எமதநுதின துன்பமாகிய சிலுவையை ஆவலாய்ப் பொறுமையோடு சுமந்து ஐம்புலனடக்கி ஆசாபாசங்களை யொறுத்து நம்மை நாமே கடிந்து சுயபரித்தியாகம் பண்ணி அறத்தினைமுயன்று மறத்தினையகன்று அறவாழியந்தணன் அடிப்புணை சேரப் பிறவாழி நீந்திப் பீடுற முயல்வோம்.

“ வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவ
மீண்டு முயலப்படும்”

“ தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார் மற்றல்லா
ரவஞ்செய்வா ராசையுட் பட்டு.” (திருக்குறள்)

முற்றிற்று.

உ

சிவமயம்.

இராமாவதாரச் செய்யுட் பாடாந்தரம்.

உருக்காட்டுப்படலம்.

(முற்றொடர்ச்சி.)

இறந்தனர் பிறந்தபய னெய்தினர்கொ லென்கோ
மறந்தன ரறிந்துணர்வு வந்தனர்கொ லென்கோ
துறந்தவுயிர் வந்திடை தொடர்ந்ததுகொ லென்கோ
திறந்தெரிவ தென்னைகொலிந் நன்னுதலி செய்கை.

என்னும் ௬௯-ம் செய்யுள்,

இறந்தபொருள் வந்துபய னெய்தினகொ லென்கோ
மறந்தன ரறிந்துணர்வு வந்ததுகொ லென்கோ
துறந்தவுயிர் வந்துட றார்ந்ததுகொ லென்கோ
திறந்தெரிவ தென்னைகொலம் மங்கைமகிழ் செய்கை.

எனக்காணப்படுகின்றது. இவற்றுள், முன்னையதில் பின்னடிகளெல்லாம் முன் உளதாயபொருள் இடையிலழிவுற்று பின்னுளதாயதாகிய பொருளுடையனவாக விருத்தலின் முன்னடியு மங்ஙனமிருத்தலே சிறப்புடையதாகலின் “இறந்தபொருள்வந்துபயனெய்தினகொலென்கோ.” என்னும் பின்னையதிலுள்ள முன்னடியே பொருத்தமுடைத்தாதல் காண்க. இவ்வடிக்கு “அழிந்தபொருள் பின்தோன்றிப் பிரயோசனப்பட்டன வென்பேனோ” எனப்பொருள்கொள்க. பின்னடிகளிற் பாடங்களும் சிறப்புடையவாதல் காண்க.

௸

உழைக்குலத் தீய மாய வுருவுகொண் டுறுதல் செய்தான்
மழைக்கரு நிறத்து மாய வரக்கன்மா ரீச னென்பா
னிழைத்தட மார்பத் தண்ண லெய்யப்போய் வையஞ்சேர்வா
னழைத்ததவ் வோசை யுன்னை மயக்குதற் கரக்கன் சொல்ல.

என்னும் ௭௪-ம் செய்யுளில், “இழைத்தடமார்பத்தண்ணலெய்யப்போய்வையஞ்சேர்வா—னழைத்ததவ்வோசையுன்னை மயக்குதற் கரக்கன்சொல்ல.” என்பது, “இழைத்தடமார்பத்தண்ணலேவுபட்டரக்கன்மாள்போ - தழைத்தமெய்க் குரலினோசைமயக்கிய துன்னையம்மா” எனக்காணப்படுகின்றது. “சேர்வா - னழைத்தது” என்பது பொருத்தமின்மையிற் பின்னையதே பொருத்த முடைத்து.

௸

இக்குர லிளவல் கேளா தொழிகென விறைவ னிட்டான்
மெய்க்குரல் சாபம் பின்னை விளைந்தது விதியின் செய்கை
பொய்க்குர லென்று போலாம் பொருள்பின்னர்ப் பயக்கு மென்
கைக்குரல் வரிவில் லானு மிளையவன் வரவு கண்டான். [பான்

என்னும் ௭௫-ம் செய்யுள்,

இக்குர லிளவல் கேளா தொழிகென விறைவ னீட்டு
மெய்க்குர லன்று பொய்யா மென்றனன் விதியின் கொட்பாற்
பொய்க்குர லன்று மெய்யா மென்றுநீ மறுகப் போனான்
கைக்குரல் வரிவில் லானு மிளையவன் வரவு கண்டான்.

எனக்காணப்படுகின்றது. பொருட்சிறப்புஞ் சரிதவியையு முடைமையிற் பின்னையதே பொருத்தமுடைத்து. என - என்றுசொல்லி, இவ்வெச்சத்தை என்றனன் என்பதோடு முடிக்குக.

௸

௮௮-ம் செய்யுளின் பின்னர்,

தவந்தந்த நெஞ்சிற் றனதாருயிர்த் தம்பி யோடு
நவந்தந்த குன்றுங் கொடுங்கானமு நாடி யேகிக்
கவந்தன்றனை தாவி கவர்ந்தொருக் காலு நீங்காச்
சிவந்தந்து மெய்ம்மைச் சவரிக்குத் தீர்ந்து வந்தான்.

என ஒரு செய்யுள் காணப்படுகின்றது. இதுவுமீண்டுப்பொருத்தமுடைத்தாதல் சரிதம் நோக்கியுணர்க.

௸

ஆயானை யோரம் பினிலாருயிர் வாங்கி யன்பிற்
றூயான் வயினவ் வரசீந்தவன் சுற்று சேனை
மேயான் வருவா னெனவிட்டனன் மேவு காறு
மேயா னிருந்தா னிடைதிங்க ளிரண்டி ரண்டும்.

என்னும் ௯௩-ம் செய்யுளில், "மேயான் வருவான்" என்பது "மேயாய் வருவாய்" எனக்காணப்படுகின்றது. முன்னையது படர்க்கையாய் வருதலிற் பின்னையதே பொருத்தமுடைத்து. இதற்கியைய "அரசீந்தவன்" என்பது "அரசீந்துநின்" என வருதலும்பொருத்தமுடையதாதல் காண்க.

இன்னும் ௸ ௧௱-ம் செய்யுளின் பின்னர்,

சென்றே யடியே னினதின்னல் சிறிதே யவர்க்கங் குரைத்தபோ
தன்றே யரக்கர் வருக்கமுட னையா தின்னு மடியேன்கை
மன்றே கமழுந் தொடைபோலா நிருதர் குழுவு மாநகரு
மென்றே யிறைஞ்சிப் பின்னருமொன் றிதையத் துணர்ந்தானீறில்லான்.

என ஒருசெய்யுள் காணப்படுகின்றது. இதுவு மீண்டுப் பொருத்தமுடைத்தாதல் பொருட்சிறப்பு நோக்கி யுணர்க. "அடியேன்கை மன்றே கமழுங்கொடைபோலாம்" என்றது "குரங்கின் கையிற் பூமாலை போலும்" என்னும் வழக்குநோக்கிக் கூறியதுபோலும். மன்றல் - மன்று என விகாரமாயிற்று.

சூடாமணிப்படலம்.

அன்றி யும்பிறி தொன்றுள தாரியன்
வென்றி வெஞ்சிலை மாசுணும் வேறினி
நன்றி யென்பதம் வஞ்சித்த நாய்களின்
நின்ற வஞ்சனை நீயு நினைத்தியோ.

என்னும் ௪௭-ம் செய்யுளில், "நன்றியென்பதம் வஞ்சித்த நாய்களின்" என்பது "நன்றி மற்றிலை நாடிலி ராவணன்" எனக் காணப்படுகின்றது. "நாய்களின்" என்பது சிறப்பின்மையிற் பின்னையதே பொருத்தமுடைத்து.

௸

மேலுற விராவணற் கழிந்து வெள்கிய
நீலுறு திசைக்கரி திரிந்து நிற்பன
வாலுற வனையவன் றலையை வவ்வலிற்
காலுறு கணைகடிந் திடுவ காண்டியால்.

என்னும் ௯௧-ம் செய்யுள்,

மேலுறு மரக்கனுக் கழிந்து வெள்கிய
நாலிரு திசைக்கரி நடுக்க நீங்கிட
வாலமொத் தவன்றலை யனைத்து மவ்வயிற்
காலுறக் கணைகடிந் திடுவ காண்டியால்.

எனக் காணப்படுகின்றது. "வாலுற" என்பது பொருத்தமின்மையிற் பின்னையதே பொருத்த முடைத்து. காலுற-காற்கீழ்ப் பொருந்த.

௸

நீணிற வரக்கர்தங் குருதி நீத்தநீர்
வேலைமிக் காற்றொடு மீள வேலைசூழ்
ஞாலமுற் றுங்கடை யுகத்து நச்சருக்
காலனும் வெறுத்துயிர் காலக் காண்டியால்.

என்னும் ௯௫-ம் செய்யுளில், "வேலைமிக் காற்றெடுமீள" என்பது "வேலையின் மும்மடி யிரைத்து" எனவும், "காலமுற்றுங்கடையுகத்து" என்பது "ஞாலமுற்றுறுகடைநணுக" எனவுங் காணப்படுகின்றன. முன்னையது பொருட்சிறப்பின்மையிற் பின்னையதே சிறப்புடைத்து. கடைநணுக என்பதை, கடையை நணுகுவிக்க எனப் பொருள்கொள்க. விவ்விகுதி தொக்கு நின்றது. "குடிபொன்றிக் குற்றமு மாங்கே தரும்" என்பதிற்போல.

ஷை

மத்துறு தயிரென வந்து சென்றிடை
தத்துறு முயிரொடு புலன்க டள்ளுறும்
பித்துநின் பிரிவினிற் பிறந்த வேதனை
யெத்தனை யுளவவை யெண்ணு மீட்டதோ.

என்னும் ௬௯-ம் செய்யுளில் "பித்துநின்பிரிவினிற் பிறந்தவேதனை - யெத்தனையுளவவை யெண்ணுமீட்டதோ" என்பது "பித்தனின்பிரிவினிற் பிறந்திறப்பதங் - கெத்தனையளவையென்றெண்ணற்பாலதோ" எனக்காணப்படுகின்றது. "வந்துசென்று" என்பதற்கியையப் "பிறந்திறந்து" எனவருதல் பொருத்தமுடைமையிற் பின்னையதே பொருத்தமுடைத்து. நின்பிரிவினாலே வந்துசென்று இடையிலே தடுமாறுகின்ற உயிரோடு புலன்களு மசைவுறுகின்ற பித்தன் அங்ஙனமுயிர்வந்து சொல்லுதலினாலே பிறந்திறப்பதங் கெத்தனையளவை யென்று எண்ணும் பகுதியதோ" எனப்பொருள்கொள்க.

ஷை

இந்நிலை யுடையவன் றரிக்கு மென்றியேன்
மெய்ந்நிலை யுணர்ந்துழீஇ மிடைந்த தீதெனின்
பொய்ந்நிலை காண்டியான் புகன்ற யாவுமுன்
கைந்நிலை நெல்லியங் கனியிற் காட்டுகேன்.

என்னும் ௭0-ம் செய்யுள்,

இந்நிலை யுடையவ னிருக்கு மென்றவுன்
மெய்ந்நிலை நிற்கநீ விடைதந் தாய பின்
பொய்ந்நிலை கொண்டியான் புகன்ற யாவுமுன்
கைந்நிலை நெல்லியங் கனியிற் காட்டுகேன்.

எனக்காணப்படுகின்றது. "மெய்ந்நிலை யுணர்ந்துழீஇ மிடைந்த தீதெனின் - பொய்ந்நிலை காண்டியால்" என்பது பொருட்கியைபின்மையிற் பின்னையதே பொருத்த முடைத்து. இருத்தல் வரா திருத்தல். "இங்கு வந்திலனே யென்னில்" என்பது முதலியவாகக் கூறியதையுட்கொண்டு அநுமன் இங்ஙனம் கூறினான் என்க. பொய்நிலைகொண்டு - இவன் சொல்வது பொய் என்று நீ நினைக்கத்தக்க நிலைமையைக்கொண்டு,

ஷை

வாங்கி னுடன் மலர்க்கையி னன்னது முன்னா
வேங்கி னனட லனுமனு மென்சொலிஃ தென்னா
வீங்கி னன்வியந் தானுல கேழும்வி ழுங்கித்
தூங்கு காரிருண் முற்று மிரிந்தது சுற்றும்.

என்னும் ௮௫-ம் செய்யுளில், "அன்னதுமுன்னா - வேங்கினனடலனுமனு மென்சொலிஃதென்னா - வீங்கினன் வியந்தானுலகேழும்" என்பது "மன்னனைமுன்னா - வேங்கினளவண்மாருதியென் கொலிஃ தென்னா - வீங்கினனுடல் மூவுலகோடும்" எனக்காணப்படுகின்றது. "மன்னனைமுன்னா" என்பதும் "வீங்கினனுடல்" என்பதும் பொருட்கியைபுடைமையிற் பின்னையதே பொருத்தமுடைத்து. "இருண்முற்று மிரிந்த தொலைந்தே" என்னும் பாடமும் சிறப்புடையதாதல் காண்க.

சி. கணேசையர்.

௨

நல்லொழுக்கம்.

ஆரும் அதிகாரம்

[ஸ்ரீமத்-இலக்குமணப்போற்றிகள் மொழிபெயர்த்தது.]

(முற்றொடர்ச்சி.)

டியூக் ஆப் உவில்லிங்டன் (Duke of willington) உடைய இயற்கைக்குணமானது நெப்போலியன் (Napolian) உடையதைப் போலமிகுந்த கோபத்தன்மையுடையது. ஜாக்கிரதையானமன அடக்கத்தாற்றான் அதைத்தடுக்கின்றதற்குத் திராணியுள்ளவராயினர். மற்ற இந்தியன் தலைவர்களைப்போல அபாயத்தின் நடுவே

அமைதியையும் சாந்தத்தையும் கற்றுக்கொண்டனர். வாட்டர்லோ (Waterloo) விலும் எங்கும் மிக்வும் அவசியமான அபாய நிமிஷங்களில் கிஞ்சித்தும் படபடப்பின்றியும், வழக்கமாய் அடக்கப்பட்டதினும் அதிகமான குரலில் தன் உத்தரவைப் பிறப்பித்தார்.

வோர்ட்ஸ் வொர்த் (Words-worth) கவிஞரானவர் அவருடைய குழந்தைப் பருவத்தில் தடித்தனமும் கோபக்குணமும் மூர்க்ககுணமும் கோபமூட்டுங்குணமும் தண்டனை வரட்டுமென்ற பிடிவாதமும் உடையவராயிருந்தார். அவருடைய ஜீவகாலத்திலுண்டாகிய அனுபவத்தால் அவருடைய குணமானது சிக்ஷைப்படுத்தப்பட்டபொழுது மிகுதியும் மன அடக்கத்தை அப்பியசிக்கப் பழகிக்கொண்டனர். ஆனால் குழந்தைப் பருவத்தில் அவரிடத்தில் விளங்கியகுணங்களானவை பிற்காலத்தில் அவருடைய சத்துருக்கள் தோஷங்கூறுவதை எதிர்த்து கிரஹிக்கும் திறமை பெறுவதில் உபயோகமுள்ளவைகளாயிருந்தன. வோர்ட்ஸ் வொர்த் (Words-worth) உடைய சரித்திரத்தின் எல்லாக்காலங்களிலும், அவருடைய தன் மரியாதைதானே தீர்மானித்துக்கோடல் திறமையைத் தானே உணர்தல் ஆகிய குணங்களைப் பார்க்கிலும் விசேஷமாய்க் குறிப்பிடத்தக்கது வேறொன்று மிருந்ததில்லை.

முரட்டுக் குணமானது பக்குவப்படாத ஊக்ககுணமாகச் செறிந்திருந்த மனிதனுக்கு உபதேசியாகிய மார்ட்டின் (Martyn) என்பவர் நிதர்சனமாக இருந்தார். பையனாக இருக்கும்பொழுது படபடப்பும் எறிந்து விழுவதும், முற்கோபமுமாகிய குணமுடையவராயிருந்தனர். ஆனால் அவருடைய கெட்டகுணத்தின் போக்கை இடையறாது போராடினதால் அதை முழுதும் வென்று தான் மிகுதியும் இச்சித்த பொறுமை யென்னும் பாக்கியத்தை யடைவதற்கு வேண்டிய பலத்தை வரவரப்பெற்றார்.

ஒரு மனிதன் தன் சரீர அமைப்பிற் பலஹீனமாயிருக்கலாம். ஆனால் நன்மையான குணத்தை அருளப்பெற்று அவனுடைய சித்தமானது பெருந்தன்மையும், சுறுசுறுப்பும், மேன்மையும் இராஜத்துவமும் பொருந்தியிருக்கலாம். பேரடே (Faraday) உடைய நல்லொழுக்கத்தையும் சாஸ்திரத்திற்காகத் தன்னயம் பூராமல் முயற்சித்ததையும் பற்றித்தேர்ந்தவராகிய டின்டால் (Tyndall) நேர்த்தியாய் விவரித்துச் சொல்லுகையில், திடமும் சுவயமான சுபாவமும் எரிச்சலான குணமுமிருப்பினும் மிகுந்த உருக்கமும் அறிவுமுடையவராக அவரைவிளக்கினார். அவருடைய இனிமைக்கும், சாந்தத்திற்கும் அடியில் ஓர் எரிமலையின் உஷ்ணம் இருந்தது. அவர்முற்கோபமும் எரிச்சலான சுபாவமுமுடையவராயிருந்தார். ஆனால் அவர் தன்னை உயர்வுறச் சிக்ஷித்தமையால் தன் எரிச்சலை வாழ்க்கைக்குப் பிரதான பிரகாசமும் சாதகசக்தியாகவும் மாற்றிக்கொண்டனர். உபயோகமற்ற இச்சைகளிற் பயனறும்படி விடவில்லை.

பேரடே (Faraday) உடைய ஒழுக்கத்தில் நாம் கவனிக்கத்தக்க ஓர் அழகிய இலட்சணம் உண்டு. அதைத்தான் மன அடக்கமென்று சொல்லத்தகும். : அதாவது, தன்னயமறுப்பேயாம். அவர் பாகுபாட்டின் பரிசோதனையில் தன் காலத்தைக்கழிப்பதால் மிக்க செல்வத்தை விரைவிற் சம்பாதித்திருக்கலாம். ஆனாற் கௌரவத்துடன் அந்த இச்சையை மறந்து சுவயமான சாஸ்திரத்தின் வழியைப் பின்பற்றி, ஆராய்வதே சிலாக்கியமாகக்கொண்டனர். "அவர் ஜீவித்திருந்தநாளைக் கணக்கிடுகையிற் கொல்லனுக்கு மகனும், புஸ்தகம் கட்டுகிறவனிடம் வேலைபழகுபவனுமாயிருந்த இவர், ஒருபக்ஷம் லக்ஷத்து ஐம்பதினாயிரம் பவுனும் மற்றொருபக்ஷம், செல்வப்பயனில்லாத சாஸ்திரமுமாக இவ்விரண்டில் எதைக்கைப்பற்றுவதென்பதைத் தீர்மானிக்கநேரிட்டு, பிற்கூறியதையே தெரிந்தெடுத்து ஓர் ஏழையாக இறந்தனர். இங்கிலாந்திற்குரிய சாஸ்திரசம்பந்தமான கீர்த்தியை நாற்பது வருஷகாலம் அந்தஜாதியாருக்குள் உயரத்தூக்கிக்கொண்டிருந்த மகிமையானது அவருடையதாக இருந்தது." என்று மிஸ்டர் டிண்டால் (Tyndall) என்பவர் சொல்லுகின்றனர்.

ஒரு பிரான்சுக்காரன் தன்னயம்பாராட்டாமையின் இதேவித திருஷ்டாந்தத்தை யெடுப்போம். 'ஆங்துயிட்டில்' (Anguctil) என்னும் சரித்திரக்காரன் பிரான்சுதேசத்திலுள்ள சொற்பவித்வான்களுள் ஒருவராயிருந்தார்: இவர் நெப்போலியன் (Napolean) உடைய ஆளுகைக்குட்பட மறுத்தனர். அவர் ரொட்டியும் பாலும்மாத்தி

ரம் உண்டும் ஒருநாளைக்கு மூன்று குமாரர்களுக்குமட்டும் செலவுக்குக்கொடுத்தும் தரித்திரதசையில் மூழ்கியிருந்தனர். "மாரங்கோ (Marengo) ஆஸ்ட்டர்லிட்ஸ் (Austerlity) ஜயவிரருக்காகஇன்னும் இரண்டு குமாரர்களை மீதப்படுத்திவைத்திருக்கிறேன்" என்று அவர் சொன்னார். ஆனால் நீர் நோயில் விழுந்தால் உமக்கு வெகுமானசம்பளம் வேண்டியிருக்கும். மற்றவர்கள் செய்கிறதைப்போல நீர் ஏன் செய்யக்கூடாது. நீர் உய்வதற்குச் சக்கிரவர்த்தியின் தயவுவேண்டும். அவருக்குவந்தனம்செய்யும்" என்று அவருடைய இஷ்டரொருவர் சொன்னார். "நான்சாவதற்கு அவருடைய தயவுவேண்டேன்" என்று அந்தச்சரித்திரக்காரர் மறுமொழி தந்தனர். ஆனால் ஆங்குயிட்டில் (Anquetil) என்பவர் வறுமையால் இறந்தனரல்லர். அவர் தொண்ணூற்று நான்குவயசு வாழ்ந்தனர். அவருடைய அந்தியக்காலத்தில், ஓர் இஷ்டனைநோக்கி "வாரும், இதோபாரும்' இன்னும் பூரணஜீவனுடன் ஒருமனிதன் சாகிறான்." என்று தன்னைப்பற்றி மொழிந்தனர்.

ஸர் ஜேம்ஸ் ஔட்ரேம் (Sir-James Outram) என்பவரும் கௌரவமுள்ள தன்னயம்பாராட்டாமையாகிய இதே குணத்தை வேறுவகையான முயற்சியில் விளக்கினார். பெரிய அரசனாகிய ஆர்தர் (Arthur) ஐப்போலத்தன் சொந்த நயத்தை மறுத்த ஆண்பிள்ளையாக விருந்தனர். அவருடைய வாழ்நாள் முழுதுமுள்ள நடப்பில் தன்னயம் பாராட்டாமையாகிய கௌரவமான குணமே விளங்கிற்று. ஒவ்வோர் காலத்திற் செய்யும்படி ஏவப்பெற்ற இராஜகாரியத்தில் அவருக்குச்சொந்த அபிப்பிராயம் வேறுபட்டிருப்பினும் தன் கடமைவிஷயத்திலொருமுறையுங்கூடநெறிதவறினவரல்லர். இவ்வாறே ஸ்சிண்டி (Scinde) தேசத்தின்மீது படையெடுக்க அவருக்குச் சம்மதியின்று. ஆனால் அந்தப்போர்க்களத்தில் அவர்செய்த வேலைகள் மிகவும் கீர்த்திபெறத்தக்கதாயிருக்கிறதாக, ஜெனரல்-ஸர்-ஸி. (General-Sir-C. Napier) ஆல் அங்கீகரிக்கப்பட்டன. ஆனால் யுத்தம் முடிவானபொழுது ஸ்சிண்டி (Scinde) தேசத்திற்பறித்த கொள்ளைப்பொருள்கள் அந்தஜயவானுடையகர்லிற்கிடந்தன. "அந்தயுத்தம் செய்தது எனக்குச் சம்மதியின்று. இந்த வெகுமானப்பொருளில் எனக்குப்பாகம்வேண்டியதில்லை என்று ஔட்ராம் (Outram) சொன்னார்.

(தொடரும்.)

உ

சிவமயம்.

ஆத்திசூடிச் சூத்திரவிருத்தி.

(முற்றொடர்ச்சி.)

இனி; மறுமைப்பயனென்பது அடுக்குநற்பிறவியுந் துறக்கவின்பமும். இம்மையிற்செய்யும் அறவினையெல்லாம் இவ்வின்பங்களையே தருமென்க. ஏனைவீட்டின்பமோ வெனின் இதனையெய்துவதன்று. அதுபற்றிச்செய்யும் வினை நல்வினையின்பாற்படாது. இதுபற்றியன்றே திருவள்ளுவரும் 'இருள்சேரிருவினையுஞ் சேராவிறைவன்' என நல்வினையையும் வீட்டின்கட்படுத்தாராயினர். வீட்டின்பம் நிட்காமியமாகிய சரியைகிரியை யோகங்களானும் அவற்றின் வாயிலா நின்ற ஞானத்தானும் எய்துவதோர் பெரும்பேறுமென்பர்.

இனிச்; சாதிதருமமென்பதொன்று. அது அவரவர் தத்தம் இனவொழுக்கிற் பிழையாதிருத்தலும், இன்னாருக்கு இன்னது உரியதென்றமைத்தபடி நிற்றலுமாம். அதாவது ஆண்மகன் ஆண்டன்மையிற் பிழையாமையும், பெண்மகள் அவடன்மையில் வழுவாமையுமென்க. அவற்றினடைவே ஆன்றோர் கூறும் ஒழுக்கங்களைக்கடைப்பிடித்தொழுகலுமாம். அவள் தன்மை நாணம் மடம் அச்சம் பயிர்ப்பென்பன. இதுவேயன்றிப் புலாலுண்ணுங் குலத்துளொருவன் புலான்மறுத்தல் கூடாதென்பதும், கட்குடியன்மகன் கள்ளையொழித்தலாகாதென்பதும் சாதிதருமமன்று. இழிந்த குலத்துள் ஒழுக்கம்பெற் றுயர்ந்தோனாகலாம். அக்குலத்திழிந்தாளொருத்தி திருந்தியுயர்ந்தோளாகலாம். அதுவுஞ் சாதிதருமமேயாம். அரக்கர் குலத்து வீடணன் ஒழுக்கம்பெற்றுயர்ந்தோனாயினன். பெண்டகைமையிழந்த அக்குலத்துத் திரிசடை யொழுக்கமுற்றுயர்ந்தோளாயினள். ஆகவே யவரவர்க்கது சாதிதருமமேயாயிற்று. சாதிதருமமென்பது குலத்தைக்கருதுவதன்று. மக்களுள் இருபாலர்க்கும் அமையத்தகு நல்லொழுக்கமென்க. சிறப்புடைய வுயர்திணை மக்கட்கே, தேவர்க்கே, ஏனைநரகர்க்கேயன்றி யஃறிணை விலங்கே, புள்ளே

யென்றிவற்றிற்குஞ் சாதிதரும முண்டென்க. சுக்கிரீவனும் அனுமனும் அங்கதனும் வாலியுமே சான்றாவர். அன்றி; மழைக்காலிருட்டெனினும் மந்தி கொம்புபிழையாதென்பதும் 'மரம்பயில்கடுவ'னெனக் கூறுமாறுங்காண்க. கவரிமான் செயலுமுணர்க. ஏனைப்புள்ளுக்குங் கண்டுழிக்காண்க. பிறவுமன்ன. விரிக்கிற்பெருகும்.

இனி; அறமெனப்பொதுப்படக் கூறினமையின் இல்லறந் துறவறமென்னு மிரண்டறங்களையும், அவற்றதொழுக்கநெறிகளையுங்கொள்க. அவற்றுள் இல்லறம், அற்புடை நெறியிற் கற்புடையவளோடு, விருந்து புறந்தந் தருந்தவர்ப்பேணி, வரையா நாளின் மகப்பேறு குறித்துப், பெருநலந்துய்க்குந் திருநலவாழ்க்கை. துறவறம்; பொன்னே புவியே பெண்ணே யென்றிவை, யென்னே யெனவகன் றிருவினையொப்பும், ஆற்றலும் அருளும் போற்றிய நெறியிற், பேரருள் வழங்கும் பெற்றித்தன்றே; இவை உரைச்சூத்திரம். அவற்றதொழுக்கநெறிதான் அறமெனப்படும். அது முறையே மனுமுதலிய நூல்களின் விதித்தனசெய்து விலக்கியன வொழித்தலும், பற்றற்று நிற்றலுமாம். இவ்விரண்டறங்களும் அன்பேயருளே யென்றிரண்டானு நடத்தப்படுவன. அன்பு தொடர்புடையார்மாட்டுவகை. அருண்மற்றெல்லா வுயிரினு முவகை; இவை உரைச்சூத்திரம்.

அன்றியிற்; பொதுப்படக் கூறியதனை ஈண்டு அறம் மேலே கூறிய இல்லறமே துறவறமே யென்றிவற்றின்மேல் வைத்துப் பிரமசரியங் கிரகஸ்தம் என்றிரண்டுநிலையினர்க்குங் கூறியதெனினும், இளைஞர்க்குங் குமரர்க்குங் கூறியதெனினும் பொருந்தும். அவ்வாறாக;

அதனுள் அறம் விரும்பு என்பதோரதிகரணம். செய விரும்பு என்பதோரதிகரணம். ஆக இரண்டதிகரணத்ததிச்சூத்திரமென்றுணர்க. இவ்விரண்டும் ஒன்றற்கொன்று காரணகாரியங்களாய் ஒரு பொருண்மேல் வருதலின் ஒரு சூத்திரத்தாற் கூறினார். இவ்வாறே வருஞ் சூத்திரங்களுள்ளும் (எல்லாவற்றிற்குமன்று) இடைக்கிடைச் சிலப் பல சூத்திரங்கட்கு அதிகரண மமைத்துக்கோடல் கண்டுகொள்க. தன்னாற் கூறப்படும் பொருளும், அதற்குப் பிறர்கூறும் பக்கமாகிய ஆட்சேபமும், அதனைமறுத்துக்கூறுந் துணிபும், இயைபும் என்னுமிவற்றின் நிலைக்களம் ஈண்டு அதிகரணமெனக்கொள்ளப்படும்.

அவற்றுள் இயைபு, பொருளியைபும், சூத்திரவியைபும், வினையியைபும் எனமூவகைப்படும். அவையெல்லாம் ஆண்டாண்டுக் காட்டுதும்.

முதலதிகரணம்.

இம்முதலதிகரணத்தாற் கூறப்படும் பொருளாவது அறத்தை நிறுத்துதற்பொருட்டு முதற்கண் வேண்டுவதிதுவெனச் சாதித்தல.

அறம்விரும்பு என்பதாம்.

'ஒல்லும் வகையா னறஞ்செய்க' வென்றாற்போல அறஞ்செய்க வென்னாது விரும்பென்றார்; அறஞ்செய்தற்கு ஆற்றலும் பொருளும் வேண்டியிருத்தலின் அவ்விரண்டுமியலாதார் என்செய்வதென்பாரை நோக்கி இயலாதாயினும் அவர்தம் நோக்கமாயினும் அதனிடத்துச் சென்றால் அதுவும் அறமெனப்படுமென்பதே கருத்தாக அங்ஙனங் கூறினாரென்க. தனதுயிருடல்களுக்கும் பிறருடற்கும் நன்மைதரும் அறத்தைச் செய்தற்கு ஆற்றலும் பொருளும் அரிதே பெறினும் அந்தோ! அதனை விரும்பும் மனமும் அதுபெறுவேண்டுமா! விரும்பு என்றதனால் மனத்தூய்மை பெறப்படும். விருப்பம் மனத்தினிகழ்காரியம்; அது தூய்மையது. தூயன நினைத்தலே மனத்திலமையவேண்டுவதென்பதாயிற்று. ஆகவே அறமுந்தூயதாமென்பதுந், தூயனவற்றையே நினைத்தல் வேண்டுமென்பதும், தூயன நினைத்தலே மனத்திற்குச் சாதிதருமமென்பதும், அறத்தைநினைத்தோரும் தருமிகளேயென்பதும், அறத்தைச்செய்தார் பெறும்பேறு செய்யவியலாது அதனை விரும்பினார்க்கு முண்டென்பதும், அறநினைவிருந்தால் எவ்வாற்றானும் ஒல்லும் வகையானதனைச்செய்ய முயல்வர் என்பதும் பெறப்படும். இதுகருதியே பின் "அறனைமறவேல்" எனவுங் கூறினார். இனிச் செய்தலுக்கு முன்னாவதும் அதற்கு ஏதுவாவது மனநினைவாகிய விருப்பமாதலானும், சார்ந்ததன் வண்ணமாய் எவ்விடத்தும் எச்செய்கையினுஞ் செல்லுமியல்புடைய மனத்தை அறத்தின்வழிச் செலுத்தில் அது தூய்மைபெற்று அத்தூய்மையுந் தருமமெனப்பெறுதலானும் விருப்பத்தையே ஈண்டு முதற்கண்வியந்தாரெனலமையுமென்க. அல்லதூஉங் கல்விபயிலுஞ் சிறுவர்க்கு முதற்,

கண் அறிவும், அதனான் நன்னெறியின் விருப்பமும், அவ்வேதுவாகச் செய்கையும் வேண்டப்படுதலான் முன்னர் அறத்தை நிறுத்திப்பின் அதன்மாட்டுவிருப்பத்தை யேவினாரெனவுங் கொள்க. அன்றியில் இளம்பருவத்தே யற விருப்பமுண்டாயின் அது பசுமரத்தாணிபோலப் பதிந்து குமாரப் பருவமெய்தியக்கால் அச்செய்கையில் அவரை நிறுத்துமென்பது கருதியுமாமென்க. விரிக்கிற்பெருகும்.

முதலதிகரண முடிந்தது.

—:o:—

இரண்டாமதிகரணம்.

முதலதிகரணத்தில் அறமும் அது செய்தற்கு ஏதுவுங்கூறினார். ஏதுக்கூறியதுணையே செய்கையுஞ் சாதித்தற் கெழுந்ததிவ்வதிகரணம்.

செயவிரும்பு என்பதாம்.

செய்தலை விரும்பென்பது, செய்கவென்று ஒருதலையாயேவாது விரும்புஎனக் கூறினார். அவ்வாறு இலேசங்கூறியது இடிக்காது நயத்தினால் நல்வழிப்படுத்தலென்னும் விதிநயம் பற்றியென்க. பொருளிலார்க்கு அறநெறியின் விருப்பமுண்டாவதியல்பு. அவ்விருப்பம் பொருளுண்டாங்கால் ஒழிவதுமவ்வாறியல்பேகாண்; அவ்வாறின்றி இல்லாத போழ்துண்டாகிய விருப்பம் பாழ்படாது உண்டாம் போழ்து அதனைச்செய்கையில் வைக்கவென்பார் செயவிரும்பென்றார். பின் செய்தலை முன்விரும்பெனச் சிறுவர்க்கும் முன்விரும்பிய அறத்தைப்பின் செய்யவிரும்பெனக் குமரர்க்குமாக இருபருவத்தினர்க்கும் ஒரு சேரக்கூறினாரெனலும் பொருந்தும். விரும்பியவன் செய்யாதொழியானன்றே, ஆயிற்செயவிரும்பென்றது மிகையாமன்றோவெனின்; விரும்பினானேனும் ஆற்றலும் பொருளுமின்மையாலோ, அவைதாம் உளவாகவைத்தும் அது செய்யுமாறுணராமையாலோ, உணர்ந்துவைத்தும் வேறோரிடையூறு கருதியோ, இடையூறின்றாகப் பொருளழிவுக்கஞ்சியோ செய்யர்தொழியினுமொழியுமென்று கருதி எவ்வாற்றானும் ஒல்லும்வகையாற் செயவிரும்பென்றாரென்க. இதுபற்றியன்றே பின் "தானமதுவிரும்பு" என்றுங்கூறினார்.

அல்லதூஉஞ் சிருட்டிமுதலிய ஐந்தொழிலாற்றனோக்கிக் கடவுண்மாட்டு விருப்பமெய்தினாற்கு வேறு செயுமாறில்லையாகவிருப்பமொன்றேயவற் கமையும் மற்றுச்செயல்வேண்டா வென்பாரைமறுத்து அவ்விருப்பம் அவரையன்புசெய்தற்கேதுவா மாகலின் அவ்வன்பை அறத்தினுக்காக்கி அதனைச் செயவிரும்பென்றாரெனலுமாம். அவ்வாறாயிற் கடவுளையவர்தந்தொழிலான் வியந்துவிரும்பலும் அவரை வழிபடுவகையுளொன்றாகலின் விருப்பமொன்றேயமையுமே செயவிரும்பென்றது எற்றிற்கெனின், அவ்விருப்பம் இடையறாது நடைபெறுதலின் அதுவும் செய்கையேயாமென்பார் செயவிரும்பென்றாரென்பதுங்கொள்க. இதனான் மனங்காயங்களாகிய இருகரணங்களும் அறத்தின் ஒத்து நின்றமையுணர்க. அங்ஙனம் இரண்டே கூறியதாயினும் இனம்பற்றிவாக்கும் அமையுமென்க. அறத்தை விரும்பிச் செய்தானொருவன் அதனைப் பிறர்க்குணர்த்தலுஞ் செய்வன். இதனான் முதலதிகரணத்தோடு பொருளியைபு பெற்றமைகாண்க. இளமை நீங்கிய குமாரப்பருவத்தினர்க்குச் சொல்லுங்கால் செயவென்பதனைச் செயப்படு பொருண்மை யுணர்த்தும் எதிர்கால வினையெச்சமாகக்கொள்க. விரிக்கிற்பெருகும்.

இரண்டாமதிகரண முடிந்தது.

—:o:—

இனி; அறஞ்செய விரும்பு என்றதனான் மறஞ்செய விரும்பேல் என்னும் எதிர்மறையும் பெறப்படுவது காண்க. மறம்-பாவம். பாவகாரியத்தை விரும்புதலும் பாவஞ்செய்தலோடொக்கும். பாவத்தை விரும்பியவன் அது தன்னாலியலாமையாலன்றோ செய்யாதொழிந்தான். இயலுமேற் செய்தேதீர்வான். அதுபற்றியே பாவத்தை விரும்பியவனும் பாவியாம்.

இனி; அறம் பொருள் இன்பம் வீடென வெண்ணப்பட்ட நான்கனுள் முதற்கணின்றது அறம்; ஏனை மூன்றும் அறத்தினானெய்துவ வாகலினென்க. எங்ஙனமெனின்; இம்மையிற்செய்யும் அறம் 'சிவிகை-பொறுத்தானோ டூர்ந்தானிடை' யென்பதனான் மறுமையிற் பொருளையும், அப்பொருளெய்துவது அறத்தினானாதலின் அப்பொருட்கு முதற்காரணமாகிய 'அறத்தான் வருவதேயின்ப' மென்

பதனான் மறுமையினின்பத்தையும், காரணகாரியத் தொடர்ச்சியாய்க் கரையின்றிப் பெருகிவருவதாகிய பிறவிப்பெருங்கடலி லகப்பட்டுழலும் உயிர் அவ்வுடலோடு கூடித்துய்க்கும் இன்பம் அநித்தமாகலின் அவ்வுடல் நீங்கியவழி யுயிர்க்குச் 'சிறப்பீனும், எனவும் 'பொன்றுங்காற் பொன்றாத்துணை' யெனவும், 'வாழ்நாள்வழியடைக்குங்கல்' எனவும் அறங்கூறுதலான் மறுமையின் வீட்டையுந் தந்து இவ்வகையே ஏனைப்பொருளு மின்பமும் வீடுமென்னு மூன்றிற்கு முதற்காரணமாய் நிற்றலான் அறம் முதற்கண் வைக்கப்பட்டதென வுணர்க. இது கருதியே இவ்வாசிரியரும் தாம் அறமும் பொருளும் எடுத்தோதப்புகுந்த இந்நூலுள் அறத்தை முதற் சூத்திரத்தாற் கூறுவாராயினார். அல்லதூஉஞ் சிறுவர் முதற்கண் உணர வேண்டுவது அறமெனக்கருதி யதனை முதற்க ணுணர்த்தினாரெனலு மாமென்க. ஆகவே அறமே செய்யத்தக்க தென்பதாயிற்று.

அற்றேல்; ஏனைப்பொருளு மின்பமும் செய்யவேண்டாவோ வெனின்; அறம் ஓர் உருவப்பொருளன்று. முயலப்படின் அம் முயற்சியே யதுவாகிப் பயனெய்துவிக்கும். பயனளிப்பது முயற்சியேயாக அறமெற்றிற்கோவெனின்; முயன்றும் பொருளெய்தா தெய்க்கும் மக்களுமுளரே. ஆதலின் முயற்சியே பொருட்குக்காரணமாதலில்லை. அம்முயற்சியையெழுப்பி அதனாற்பயனளிக்கும் அறமே பொருட்குக் காரணமாம். ஆகவே பொருளுஞ் செயவேண்டுவ தென்பதாயிற்றென வுணர்க. இன்பமு மஃதே. ஏனைவீடுமதுவே யென்க. ஆகவே அறமொன்றே ஏனைப்பொருளே, இன்பமேவீடே யென்னும் மூன்று காரியங்களையும் ஏற்று அம்மூன்றுறுதிகளாயு நிற்பதுணர்க.

இனி; உலகம் தொழிற்படுதற்கும் வீடுபேறடைதற்கும் வேண்டுஞ் செயல்கள் இரண்டு. அவை மனுமுதலிய நூல்களின் விதித்தன செய்தலும் விலக்கியன வொழிதலுமாம். 'விதித்தன செய்தலும் விலக்கிய வொழிதலுங், கதித்தரு முலகிற் காண்பன பயனே' 'அவைதாம், புண்ணியம் பாவமென்றெண்ணவும் படுமே' 'நல்வினை தீவினை யென்பவு மன்ன' இவையுரைச் சூத்திரம். உறுதிப்பொருள் நான்கனுட் பொருளு மின்பமும் புண்ணியத்தையே யன்றிப் பாவமுந் தருவன. ஏனைவீடு புண்ணியத்தின் பயன்று. இதுபற்றி யன்றே 'அறவாழி யந்தணன்' என்றாற்போல அறத்தைப் பிறிதோர் கடவுட்கேற்றி வீடெனக் கூறுவாருமுளராயினர். அது செய்கையின் பாற்படாது. இனிச் செய்கையின் வைத்துப் புண்ணியமொன்றே பெறுவது அறமொன்றுமேயாம். அவ்வறஞ் சாராது செய்யப்படும் ஏனைப்பொருளு மின்பமும் பயனுடைய வல்ல; பாவமுஞ் சார்தலி னென்க. 'அறந்தலைத்தந்த வரும்பொருடாங்கி' எனவும் 'மற்றெல்லாம்—புறத்த புகழுமில' வெனவும் பிறர் கூறுமாறுங் காண்க. ஆகவே முற்பிறவியிற் செய்துபோந்த அறமேதுவாக வெய்திய பொருளின்பங்களான் அடுத்துவரும் பிறவியி னவைதா மெய்துதற்கு இம்மையின் அவ்வறமே செய்த வென்பது பெறப்பட்டது.

இனி; அறமென்பது அருட்டன்மையது. அருளே உலகத் தோற்றத்திற்கேது. அருளுண்டாயவழி யெல்லாவறங்களு முண்டாம். அருளான் அறம் பலதிறப்படும். அவையெல்லாந் 'தானமது விரும்பு' முதலிய அறத்தின் பாற்படுஞ் சூத்திர விருத்தியுட் கூறுதும். ஆண்டாண்டுக் கண்டுகொள்க.

இனி அறஞ்செய விரும்புதலா னெய்தும் பயன் இனையவாக அது செய்தான் உலகினுயிர்களாற் போற்றவும் பெறும். 'கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி-யெல்லா உயிருந் தொழும்' என்பர். அன்றியில் அவனைப் பாவம் வந்தடையுமாறு மிலையென்க. 'அறனை நினைவானை யல்பொருளஞ்சும்' என்ப. விரிக்கிற் பெருகும்.

திருவள்ளுவர்.

"செயற்பால தோரு மறனே யொருவற்
குயற்பால தோரும் பழி"

(தொடரும்.)

கோ. வைத்தியலிங்கப்பிள்ளை.

கதாசரித் சாகரம்.

௫-வது சதுர்த்தாரிகாலம்பகம் ௧-வது தரங்கம்.

[ஸ்ரீமத்-வீராசாமி ஐயங்காரவர்கள் மொழிபெயர்த்தது.]

(முற்றொடர்ச்சி.)

அப்போது பிறரையுபசரித்தே ஜீவித்துவருகின்றபுரோகிதன், பொருளாசையால் மாதவனைத்தனதுகிரகத்திலேயே வசிக்கவேண்டுமென்று வேண்டிக்கொள்ள அவன் றன்னைச்சேர்ந்தவேஷதாரிகளுடன், விநாசத்திற்கு ஹேதுவான நீர்க்கோழி, வசிப்பதற்கு மரக்கிளையையடைவதுபோலப் புரோகிதன் வீட்டையடைந்தான். அங்ஙனம் வசிக்கின்றமாதவன், கிருத்திரிமமான மாணிக்கக்கற்களாற் பற்பலவிதமாகச் செய்யப்பட்டுள்ள ஆபரணங்கள் நிறைந்தவொருபெட்டியை அவன்வீட்டறையில் வைத்துக்கொண்டு இடையிடையேசிற்சில சமயங்களில் தனித்துப் புரோகிதனை அழைத்துச்சென்று அதனைத் திறந்து கபடமாய்க்காண்பித்து அதிலுள்ள ஆபரணங்களினாலவன் மனதைப்பசும்புற்களாற் பசுவின் மனதைக்கவர்வதுபோற் கவர்ந்தனன். பின்பு அப்புரோகிதன் அந்த ஆபரணங்களை யுயர்ந்த விலைமதிப்புள்ளனவென்று நம்பியிருக்கின்றானென்பதை யறிந்த மாதவனிதுதான் சமயமென்று கருதி ஆஹாரத்தைக்குறைத்துத்தின்று தன் தேகத்தை மெலியச் செய்துகொண்டு மிகுந்த ரோகமுற்றவன்போலப் படுத்தபடுக்கையுடனிருந்தான்.

அத்தருணத்திற் புரோகிதனிவனைப்பார்ப்பதற்காக வந்துபடுக்கையருகிலுட்காரவும் சூதாடிகட்கரசனாகிய மாதவன் புரோகிதனை யுற்றுப்பார்த்து ஓ பிராமணோத்தமரே, இப்பொழுதென் சரீரத்தின் நிலைமை முற்றிலும் மாறுபட்டிருக்கின்றது. ஆதலாலிஹபரசாதகமாகும்படி எனது பொருள்களனைத்தையும் தானஞ்செய்யப்போகின்றேன்; அதற்காக வொருபிராமணசிரேஷ்டரை யழைத்துவரவேணும். தெளிந்தமனதுடையவனுக்கு நிலையில்லாத உயிர்வாழ்க்கையிலாவது தனங்களிலாவது பற்றென்பதெப்படி யுண்டாகுமென்றனன்.

இதனைக்கேட்டதும், தானம்வாங்கி ஜீவித்தலையே தன்றொழிலாகவுடைய புரோகிதனுமுமதெண்ணத்தின் வண்ணமே செய்கின்றேனென்றுசொல்ல உடனேமாதவன் அவன் கால்களில்வீழ்ந்து நமஸ்கரித்தனன். பின்புபுரோகிதன் சென்றழைத்துவந்த வொவ்வொருபிராமணனையும் மாதவன் கவனியாது தானம்வாங்குகின்றவர் இன்னும் விசேஷ யோக்கியதையுள்ளவராக இருத்தல்வேண்டுமென்ற எண்ணத்தினாற் சிரத்தையில்லாதிருக்கின்றவன் போலபிநயித்தான். இதனைப்பார்த்ததும் அவனுடைய பக்கத்திலிருக்கின்ற சூதாடுவோனொருவன், எங்களரசர்க்கு ஸாமான்யபிராமணர்களிடத்தில் மனம்பற்றாது. ஆதலால் சிப்ராநதிக்கரையிற் சிவனென்று பிரசித்திபெற்ற ஒரு பெருந்தவத்தினரிருக்கின்றார். இப்பொழுது அவர் இவர்மனத்திற் கிசைந்தவராயில்லையாவென்று கேட்கவேண்டுமென்றனன்.

அப்படியவன்சொல்லியதைக்கேட்டதும் மாதவன் வியாதியினால் துன்புறுகின்றவன்போலப் பாசாங்குடன்புரோகிதனைப் பார்த்து ஓகோ! அனுக்ரஹிக்கவேணும். அவரையொத்தபிராமணர் உலகத்திலொருவருமில்லை; அழைத்துவரவேண்டுமென்றான். உடனே புரோகிதன் அப்படியேசெய்கிறேனென்று சிவனுடைய சமீபத்திற் செல்ல அச்சமயத்திலவன் கண்களைமூடிக்கொண்டு தியானஞ்செய்பவன்போலசையாதிருக்க அவனைப்பிரதக்ஷிணஞ்செய்துவிட்டுக் கைகளைக்கட்டிக்கொண்டு எதிரிலுட்கார்ந்திருந்தான். அப்போதந்தச்சூதாடிச்சிவன் மெல்லமெல்லக்கண்களைவிழிக்கவும் புரோகிதன் அவனை நமஸ்கரித்துவணக்கத்துடன் நின்றவண்ணமே, ஹேபிரபுவே, தாங்கள் கோபங்கொள்ளாதிருந்தாலொருகாரியம் தெரிவித்துக்கொள்ளுகிறேனென்றான்; அதனைச்செவியுற்றசிவன் வாய்திறந்துபேசாமலே சாடையினால் தெரிவித்துக்கொள்ளும்படி யனுமதிசெய்ய, புரோகிதன்சிவனைநோக்கி ஸ்வாமீ, தக்ஷிணதேசத்தினின்றும் பெருஞ்செல்வரான மாதவனென்றபெயருடையவொரு ராஜகுமாரரிங்கு வந்திருக்கின்றார். அவர்தேகஸௌக்கியமில்லாமையால் தன் பொருள்கள் யாவற்றையுந்தானஞ்செய்துவிடுவதாயுத்தேசிக்கின்றார். இவ்விஷயத்தில்தங்கட்கபிப்ராயமிருந்தால் விலைமதிப்பற்றபற்பலவிதமான இரத்தினங்களாலியற்றிய ஆபரணங்களுடன் பிரகாசிக்கின்ற பொரு

ள்களனைத்தையும் கிரகித்துக்கொள்ளலாமென்று சொல்ல அதனைக் கேட்ட சிவன் மெல்லமௌனத்தைவிட்டு ஓ பிராமணரே! பிக்ஷையெடுத்துண்கின்ற பிரமசாரியாகிய எனக்குத்திரவியங்களினாலென்ன பிரயோஜனமிருக்கின்றது என்றனன்.

அதற்குப்புரோகிதன் ஹே! பெருந்தவம்புரியும் பிராமணோத்தமா! இவ்விதஞ்சொல்லலாகாது. ஆச்சிரமங்களின்கிரமத்தைத்தாங்கள் அறியாதவர்களல்லர். விவாகஞ் செய்துகொண்டு வீட்டிலிருந்தே தென்புலத்தார் தெய்வம் விருந்தினர் முதலானோர்களை யோம்புகின்றவர் மெய்வருந்தாது தமது பொருள்களால் தருமார்த்த காமமென்கிற மூன்றுபுருஷார்த்தங்களையு மடைகின்றார்கள். ஆதலாலில்லறத்திலிருக்கின்றவர்களே! யேனைய ஆச்சிரமிகளிலுஞ் சிறந்தவர்களாகின்றார்கள். அன்றியும் தங்களைப்போன்ற மகான்களாயுள்ளவர்கள் முறையாக இல்லறம் பூண்டு அதற்குரிய நல்லறங்களின் வழுவாதொழுகி யுலகத்திலுள்ளவர்களை நல்வழிப்படுத்தாவிடின் அவ்வறத்திற்குந்தான் என்ன சிறப்பிருக்கின்றது. எல்லா முணர்ந்த தங்கட்கு யானின்னும் விசேஷமாய்த் தெரிவித்துக்கொள்வது யாதிருக்கின்றதென்றனன். இதைக்கேட்டதும் சிவன்; ஓ பிராமணா! சொல்லுகிறேன் கேளும். இல்லறமென்பது, நற்குலத்திற் பிறந்து நற்குணங்களுமமைந்துள்ள மனதிற்கிசைந்த வொரு கன்னிகையை யொருவன் மணந்தா லொருவாறு சரியாய் நடைபெறும். அதுவுமெளிதன்று; ஆகையாலெனக்கு விவாகமெதற்காக, யானோ வதேனும் சாமானியமானதொரு குலத்தில் ஜனித்த கன்னிகையை மணந்துகொள்ளேனென்று சொல்ல, அப்பேராசையுள்ள புரோகிதன், மாதவன்பொருள்களை யொருவாறு சுகமாயனுபவிக்கலாமென்ற வெண்ணத்துடனிது தான்சமயமென்றுகருதிச் சிவனைநோக்கிச் சுவாமீ! தாங்களெவற்றிற்கும் யோசிக்கவேண்டியதில்லை அதிரூபவதியாய் நற்குணங்களமைந்துள்ள வினயஸ்வாமினி யென்னும் பெயரையுடையவொருகன்னிகை எனக்குஇருக்கின்றாள்; அவளைத்தங்களுக்குமணஞ் செய்துகொடுக்கின்றேன். அன்றியும் மாதவப்பிரபுவிடத்தில் தாங்கள் தானம்வாங்கும் தனம்முழுவதும் யானே காப்பாற்றித் தருகின்றேன்; ஆதலாலில்லறத்தைக் கைப்பற்றவேண்டுமென்றனன்.

இதனைக்கேட்டதும் சிவன் நமதெண்ணத்தின்படி நிறைவேறிற்றென்று கருதிப்புரோகிதனைப்பார்த்து ஓ பிராமணரே! இப்படித்தான் செய்யவேண்டுமென்றுமக்கு ஒருதலையான அபிப்பிராயமிருந்தாலுமது சொற்படி செய்கின்றேன். ஆனால் யானோதபஸ்வி. இரத்தினம் சுவர்ணமிவற்றின் ஸ்வரூபமின்னதென்று யாதொன்றுமறிந்திலேன். உமதுசொற்களைநம்பித்தான் இதிற்பிரவிருத்திக்கின்றேன். உம்முடைய அறிவிற்குத்தக்கபடி யோசித்துக்கொண்டு செய்யுமென்றனன். இவ்விதம் சிவன் கூறியதைக்கேட்டு மூடனான புரோகிதன் சந்தோஷத்துடனப்படியே செய்கிறேனென்று சிவனென்னும் மங்களப்பெயருடன் கூடி அமங்களத்தைப்புரிகின்ற அவனைத்தன்வீட்டிற் கழைத்துச்சென்று ஓரிடத்திலிருக்கச்செய்துவிட்டு மாதவனிடம்வந்து தான்சிவனையழைத்துவந்திருக்கும் விவரத்தைத்தெரிவிக்க அவனுஞ்சந்தோஷித்தான். உடனே புரோகிதன் தன்வருத்தத்தினால் விருத்திசெய்யப்பட்டும் மூடத்தன்மையால் பறிகொடுக்கப்படும் சம்பத்தைப்போலவே தனதுபுதல்வியைச் சிவனுக்குக்கொடுத்தனன். பின்பு விவாகமானதும் மூன்றாவதுதினம் மணக்கோலத்துடனிருக்கின்ற சிவனைத்தானம்வாங்குவதற்காகப் புரோகிதன், கபடத்தால் நோயுற்றிருக்கும் மாதவன் சமீபத்திற்கழைத்துச்செல்லவும் படுத்திருந்த மாதவன் சிவனைக்கண்டவுடன் விரைவிலெழுந்து கைகளைக்குவித்துத் தலைமீது வைத்துக்கொண்டு, எண்ணுதற்கரிய தவத்தினையுடைய வுண்மைப்பொருளே! நமஸ்கரிக்கின்றேனும்மையென்றுசொல்லிச் சிவனுடைய கால்களில் வீழ்ந்தனன். அச்சமயத்தில் கிருத்திரிமமான மாணிக்கக்கற்களாற்செய்த மிகுந்த ஆபரணங்களடங்கியபெட்டியைப் பொக்கிஷத்தினின்றுமொருவன் கொண்டுவர அதனைவிதிப்படி மாதவன் சிவனுக்குத்தானஞ்செய்தான்.

(இன்னும் வரும்.)

பிழை திருத்தம்.

“செந்தமிழ்” ௭-ம் தொகுதி, ௯-ம் பகுதி, ௪௮௧-ம் பக்கத்தில் ௧௯-ம் வரியில், ‘வேலைக்காரனை’ என்பதை ‘வேலைக்காரிகளை’ எனவும் ௬ தொகுதி ௧0-ம் பகுதி ௩௧௫-ம் பக்கத்தில் ௫-ம் வரியில், ‘அன்னத்தில்’ என்பதை ‘அன்னத்தினால்’ எனவுந் திருத்திக்கொள்க.

உ

கடவுள் துணை.

ஒருவேண்டுகோள்.

ஈண்டுபல் வளனும் வேண்டுத லொரீஇ
வேண்டினர்க் குதவு மாண்டகன் னலத்துப்
பாண்டிய நாட்டிற் காண்டகு சிறப்பி
னீண்டுவிண் ணவரூர் தாண்டி மேற்புகும்
பூமலர்ப் பொழிலும் பொய்கையும் பண்ணையுந்
தேமுறப் பொழிதலிற் றெருவெலாம் வழுக்கும்
பாலவ நத்துப் பதிக்கர சாகிச்
சீலமும் புகழுந் தினந்தொறும் வளர்ப்போ
யிருநிதி யொருவடி வெய்தியிங் குற்றென
மருவுபே ராளன் வருந்தமிழ்ப் புலவர்
கார்தலைக் கூப்புங் கல்விக் களஞ்சிய
நிரந்தர மொழிவின்று நீணிலத் துள்ளோன்
பொன்னுச் சாமிப் பூபதி தவத்தா
லிந்நிலத் துதித்த மன்னவர் திலக!
வந்தணை ராசா ஞதியர்க் கன்றி
முந்துறு வணங்கா முடியுடைக் கொற்றவ!
வளியெலாங் குடிகொள வம்போருகம் போற்
களிமிக விளக்குங் கருணைக் கண்ண!
தென்னவர் வளர்க்க மன்னிய தென்றமி
ழுங்கிய ராசாற் றன்னலங் குறைஇ
யொழியுமென் றுலகோ ருறுங்கவ லொழித்துக்
கழிபெருஞ் சிறப்புக் கண்டுளங் களிப்பத்
தண்டமிழ்ச் சங்கந் தன்னைமுன் னிறீஇ
மண்டுபல் புலவரை வம்மென வேற்றுக்
கொண்டுநன் றாற்றுங் குணப்பெருங் குன்றே
வேண்டிற் றெவர்க்கும் விரைந்தினி துதவும்
பாண்டித் துரையெனும் பாவலர் கோவே!
தவலரும் புலவர்சொற் றழைக்குநின் செவிக்கண்
ணவிலுமென் மாற்றமு நயந்து கேண்மதி
நந்தமிழ்ச் சங்க நாவிசண் டாண்டு

வந்துழி யான்புகல் வாழ்த்துப் பாவை
புரையுடன் றீட்டி யுதனுட னுய்த்தனன்
வரைவதற் குரியதா மற்றிதென் றெள்ளா
தெந்த நாவலரு மேற்றுளங் களிக்குஞ்
செந்தமி ழகத்துச் சேர்த்திட லொன்று
மற்றவ் வவைக்கண்யான் வந்தாங் கேற்றப்
பெற்றதா மீகையிற் பேசிய வினைத்துங்
குற்றமின் றாகக் குவலயங் கொள்ளக்
கற்றவர் தொழுநின் கருத்தினுக் கேற்ப
வுற்றதோர் முகவுரை யுவப்புடன் பொறித்துத்
தந்திட லொன்றெனத் தகுவ மிரண்டு
மிந்தநாள் விரும்பினே னெவர்க்குமேற் றாங்கே
யெல்லா முதவ வல்லா ருன்னை
யல்லா தெவரு மில்லா ராதலிற்
றண்ணளி புரிந்து தமியே
னுண்ணிறை யுவகை யுறப்புரி வாயே.

இங்ஙனம்,
எம். கே. எம். அப்துல்காதிறு ராவுத்தர்.

*வாழ்த்துக்கவி.

கேளாரு மகிழ்ந்துபுகழ் சொல்வலியன் பீகைமுதற் கெழுமக் கொண்ட
வேளாக வருபாண்டித் துரையேநின் சொல்வலியின் வியன்மாண் பைப்பன்
னாளாகக் கருதினன்பாண் டிருத்துமொழி நயத்தாலிந் நாமம் பெற்றாய்.
வாளாசொற் றிடுவதென்னே தமிழ்ச்சங்கத் துடனூழி வாழி வாழி.

(இதன்பொருள்.) கேளாரும் - பகைவரும், மகிழ்ந்துபுகழ் - வியந்து துதிக்கின்ற, சொல்வலி அன்பு ஈகை முதற்கெழுமக் கொண்ட - சொல்லாற்றல் அன்புடைமை கொடை முதலிய நற்

---

* மதுரைத் தமிழ்ச்சங்க எட்டாம் வருடோத்சவத்தன்று, சோதுகுடி எம். கே. எம். அப்துல் காதிறு ராவுத்தரவர்களால் சங்க அக்கிராசனாதிபதியவர்கள் மீது கூறப்பெற்ற வாழ்த்துக்கவி.

குணங்கள் பலவற்றையும் விளக்கமுற அடைந்த; வேளாகவரு -- மதனையொப்பத் தோன்றிய, பாண்டித்துரையே—, நின்சொல்வலியின் - நினது சொல்லாற்றலின், வியன்மாண்பை - பெரியமாட்சியை, பன்னாளாகக் கருதினன் - பல தினங்களாக (யான்) சிந்தித்தேன், பாண் திருத்து மொழி நயத்தால் - பண்ணையும் திருந்தப்புரிகின்ற சொல் லின்பமுற்றிருத்தலால், இ நாமம் பெற்றாய் - (பாண்டித்துரை)யென்னும் அப்பெயரினைப் பெற்றனை. வாளா சொற்றிடுவதென்னே - இங்ஙனம் நின் பெயரே நின் சொல்வலியை விளக்கி நிற்பதாகவும் யான் வீணாக (ப் பலபடக்) கூறிடுவதி லென்னபயன்? தமிழ்ச்சங்கத்துடன்.— ஊழி வாழி வாழி - ஊழிக்காலத்தளவும் வாழ்வாயாக வாழ்வாயாக. (எ - று.)

குறிப்பு:—உம்மை உயர்வு சிறப்பு. ஏகாரம் முன்னது விளிப்பொருளது. பின்னது அசைநிலை. பாண் - உம்மை விகாரத்தாற் றொக்கது. அடுக்கு, உவகைப் பொருளது. திருத்து என்பதுதித்து என மருவியதாகக் கொள்ளப்பட்டது.

விசேடவுரை:—"கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்-வேட்ப மொழிவதாஞ்சொல்" என்பவாகலின் கேளாரு மகிழ்ந்து புகழ்சொல், எனவும் "சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொ லச்சொல்லை - வெல்லுஞ்சொ லின்மை யறிந்து" என்பவாகலின் சொல்வலி எனவும் உண்ணிறைந்த பேரன்புடையார் மாட்டன்றி இன்சொற் பிறவாமையும், இன்சொலா னன்றி யிருநீர் வியனுலகம் வன்சொலால் மகிழாமையும், சிறந்த சொல்லேயாயினும் உலகமகிழ்ந்து கோடற்கியையாத வழிப்பயனற்றதாகு மென்பதையும் நோக்கிச் சொல்வலியையடுக்க அன்பு என்பதை வைத்தும், பேசுந்திறனும் அன்பும் பெற்றக்காலும் இவறன்மையுடையார்க்குப் புகழிலதாதலும் அன்பின்பயனே ஈதலாதலும் நோக்கி அன்பு என்பதையடுக்க ஈகை என்பதை வைத்தும், இன்னோரன்ன நலம்பல நிரம்பப் பெறுதலை விளக்குவான் முதற்கேழுமக்கோண்ட என்ற சொற்களைத் தந்தும், இவ்வெல்லா நலங்களையும் பெற்றவழியும் முகவசீகரமான வடிவழகு வாய்ப்பப் பெறாவிடில் காட்சியின்பும் பயவாமையும் அழகின் அளவுக்கேற்பவே குணனும் அமையுமெனக்கொண்டு "நல்லெழில் பகருமுன் னூலோர் - இலங்கெழி லளவு குணமென விசைப்பர்" எனவும், "உருவின் மிக்கதோ ருடம்பது பெறுதலு மரிதே" எனவும் முன்னோர் கூறுதலால் வடிவழகும் அவசியம் வேண்டப்படுவதோன்றுதலும் நோக்கி வேளாக வருபாண்டித் துரையே என விசேடித்தும் கூறியவாறும்.

பிறன் கூற்றைத் தன் கூற்றாகத் தோற்றுவித்துப் பொய்ப்புகழ் பூணும் கள்ளக்கவிகள்போலாகி அடிப்பட்ட சான்றோரியற்றியருளிய முறைப்பட்ட நூல்கள் பலவற்றையும் நல்லாசிரியன்பாற்கற்று நன்மாணுழைபுலம் பெற்றுவிளங்கும் தன்னியற்கை மதிநுட்பத்தாலறிந்தவிடயங்களை யவையஞ்சாது கூறுதற்சிறப்பை விளக்குவான் நின்சொல் வலியின் எனவும்,

உலகநூல்களைக் கற்றுப்பாராட்டிக் கல கல கூஉந்துணையான வெற்றுரை பரப்பும் போலிப் புலவர்களது பயனில் சொற்போலாது அலகு சால் கற்பின் அறிவுநூல் பலவுங்கற்றுக் கேட்பவருள்ளம் வேட்புறப் பிணிக்கும் பெற்றிமைவாய்ப்பக் குன்றக் கூறலாதிய குற்றமொழித்துச் சுருங்கச் சொல்லலாதிய அணிநலஞ் சிறப்ப உயிர்க்குறுதி யுதவும் அறத்தின் வழியமையக் கூறும் பொருட்சிறப்பின் பெருமைமிகச் சிறந்ததொன்றும், என்பதை விளக்குவான் வியன்மாண்பை எனக் கூறியவாறும்.

எடுத்த விடயத்திற்கு ஏற்றமொழிகளைப் பன்னாட்டேடிப் பலகாற்சிந்தித்து வைத்த முயற்சி வலியானே குருட்டுப்பூனை விட்டத்திற் பாய்ந்தாற்றொப்ப ஓர் கால் ஒருவிடயத்தை யெடுத்து நன்கு பேசிமுடித்து மகிழும் பாலப்புலவர் போலாது அரியபெரிய விடயங்கள் பலவும் அவ்வவற்றின் பாகுபாடுகளுடன் உள்ளத்தின் கண்ணே நிறைவுற்றிருப்பக்கொண்டு எச்சமையத்திலும் எவ்விடயத்தைப்பற்றிப் பேசவேண்டினும் அவ்வப்போது சொற்சுவையும் பொருட்சுவையும் வரவரப்பெருகிப் பரவப் பலகாலத்தில் பல விஷயங்களைப் பலகாற் பிரசங்கிக்கும் நிறைபெரும் புலமைத் திறத்தை விளக்குவான் பன்னாளாகக் கருதினன் எனக்கூறியவாறும். இங்ஙனங் கோடலன்றியும் உற்றுநோக்கி யாராயாது விரைந்து கூறும்

கருத்துக்கள் பின்னர் மாறுபடுதல் கூடுமாதலின் யான் அவ்வாறு கூறுகிற்றிலன். நெடிது சூழ்ந்து திறப்படுத்திய கருத்து இதுவாம் எனத் தேற்றுவிப்பான். பன்னாளாகக் கருதினன் எனக்கூறியதாகக் கொள்ளலும் பொருந்தும்.

> "விரைந்து தொழில்கேட்கு ஞாலநிரந் தினிது
> சொல்லுதல் வல்லார்ப் பெறின்."

என்பவாகலின் யார்யார் எவ்வெவற்றைக் கூறினும் இனிய மொழிகளாற் சொல்லினன்றிப் பயன்படாமையால் செவிக்கின்பந் தந்து மனத்தைக் குளிர்விக்குந் தன்மையுற்றுப் பண்டிதபாமர ரஞ்சிதமாக விளங்கும் சொற்களாதலின் அத்தகையபண்ணினையும் செவ்விதாக்கும் சொல் நயம் எனப்பொருள் தரக்கருதி பாண்டிருத்து மொழிநயம் எனக்கூறியவாறும். பாண்டித்துரை எனற்கு வேறு பொருளிருப்பவும் பாண்தித்து (திருத்து) உரை எனப்பொருள் கொண்ட தன் குறிப்பையேற்றிக் கூறுதலை விளக்குவான் இந்நாமம் பெற்றாய் எனக்கூறியவாறும். இத்தகைய இன்சொலாற்றல் மிக்க நினது அவைக்கண்யான் எனது புன்மொழிகளால் விண்படக்கூறுதலிற் பயனில்லையே யெனவும், நின்பெயர்க்கு இங்ஙனம் சிறந்த பொருளிருப்ப இதனையுற்றறியாது வாளா கூறுத லியையாதெனவும், ஒன்றைச்சொல்லப் புகுவார் நின்னைப் போலிவ்வாறு சிறப்பக் கூறாது வாளாகூறுதலால் யாதுபயனோஎனவும் விளக்குவான் வாளா சொற்றிடுவதென்னே எனக்கூறியவாறும். இப் பாட்டுடைத்தலைவர் தமதுடல் பொருளாவிகளினும் இம் மதுரைத் தமிழ்ச்சங்கத்தையே மிக்குமதித்துப் போற்றிவருதலானும், கவியின் கருத்துக்கும் அஃது ஒப்பமுடிந்த தொன்றாகலானும் தமிழ்ச்சங்கத்துடன் எனவும், மானுடப்பிறவிக்குரியது சில்வாழ் நாளாதலின் இறைவனருளால் பல் ஊழிகாலம் வாழ்ந்திருக்கவேண்டு மென்பதைப் புலப்படுத்துவான் ஊழி வாழி வாழி எனவும் கூறியவாறும்.

இனி கேளாரும்என்பதை கேள்வி+ஆரும் எனக்கண்ணழித்துக் கேள்வியுற்ற யாவரும் எனக்கொண்டு கூட்டியுரைப்பினுமமையும். கேள் - வினைத்தொகை. உம் - முற்றுப்பொருளது. அன்றியும்,

கேளாருமகிழ்ந்து புகழ்சொல்வலியன்பீகை - என்பதில் சொல்வலியன்பீகை என்பதை சொல் வலி அன்பு ஈகை எனப்பிரித்து, கேளாருமகிழ்ந்து புகழ் என்பதைச் சொல் முதலிய நான்குடனுங்கூட்டி, கேளாருமகிழ்ந்து புகழ்சொல், கேளாருமகிழ்ந்து புகழ்வலி, கேளாருமகிழ்ந்து புகழ் அன்பு, கேளாருமகிழ்ந்து புகழீகை எனக்கொண்டு கூட்டி நேரிற்கேள்வியுறாதவரும வியந்து துதிக்குஞ்சொல் எனவும பகைவரும் வியந்து துதிக்கும வலி எனவும், (கேளார்—பகைவர்) சுற்றத்தாரும் வியந்து புகழ் அன்பு எனவும், ஒன்றையிரந்து கேளாரும் வியந்து புகழீகை எனவும் முறையே பொருள்கூறுதலும் ஒன்று. மேல், **கேளாருமகிழ்ந்துபுகழ்வலி** எனற்குப்பகைவரும் வியந்து துதிக்கும் வலியென்றதில், பகைவர் துதிக்கும் வலியாவது இராமன் வலியை இராவணன் வியந்து கூறியாங்குக் கூறப்பெறுவதோர் வலிமை. அதனை,

> "வரிசிலை நாணிற் கோத்து வாங்கினான் விடுதலொன்றுந்
> தெரிகில தமர்த னாற்றல் யாரவன் செய்கை தேர்வார்
> பொரிசினத் தரக்க ராவி போகிய போகவென்று
> கருதிய வுலக மெல்லாஞ் சரங்களாய்க் காட்டு மன்றே."

என்னும் கல்வியிற்பெரியோர் கூறிய இராமாயணச் செய்யுளானும் பிறகவிகளானும் நன்கு தேறலாம். இன்னும் விரிப்பின் வரம்பின்றிப் பெருகுமாதலின் இவ்வளவிற் சுருக்கிமுடித்தாம்.

இங்ஙனம்,
சோழகுடி,
எம். கே. எம். அப்துல்காதிறுராவுத்தர்,
யூனியன் சேர்மென்,
இளையான்குடி.

பிழைதிருத்தம்.

சென்ற ஆவணிமாதச் "செந்தமிழிலே" (தொகுதி எ. பகுதி ௧0)ல், தோற்றிய "ஆங்கிலமொழிக்கலப்பு" என்னும் விஷயத்திலே, பின்வரும் திருத்தங்களைச்செய்து வாசிக்க.

பக்கம்	வரி.	பிழை	திருத்தம்
௪௧0	௨௧	கண்காட்டல்	————
௪௧௪	௧௧	கண்முதலி வற்றால்	கண்முதலியவற்றால்
௪௧௫	௧	பிழையாக "	சொற்கள் பிழையாக,

உ

திருச்சிற்றம்பலம்.



குதிரையைப்பற்றிய ஆராய்ச்சி.

இது பிரமாவின் நாவிலும், அவன் விழிநீரிலும், இந்திரன்முதலிய அட்டதிக்குப் பாலர்களிடத்திலுங், கடலமிர்தத்திலும், அக்கினியிலுங், கருப்பையிலுங், கோட்டான்முட்டையிலும் ஆகிய இவ்வேழிடத்திலுந் தோன்றுமென்பர். திருவாதவூரடிகள் புராணம், குதிரையிட்ட சருக்கத்தில், "மிக்கசெழுமறைநாவிற் கமலநாதன்விழிப்புனலில் விண்ணோர்களெண்மர்தம்பான், மைக்கடன் மேலமிர்தத்தினங்கி மீதின்மல்குகருப்பையிலுலூகவண்டந்தன்னிற், றொக்கவேழ்பேதமெனு மிவற்றிற்றோன்றும்" எனக்கூறிய, ௪௦-ஆஞ்செய்யுளிற் காண்க. இச்செய்யுளுரையில், மறைநா என்பதற்குப் பிரமன் சாமவேதங்கூறுநா வென்றும், விழிப்புனல் என்பதற்கு யாகஞ்செய்யும்போது அப்பிரமன் கண்ணினின்றுமொழுகிய நீரென்றும், அங்கி என்பதற்கு அவன்செய்யுமயாகாக்கினி என்றும், உலூகவண்டமென்பதற்கு இலக்குமிசாபத்தாற்கோட்டான் வடிவமைந்த பிரமனிட்ட முட்டையென்றுங் கூறினர். இக்கருத்துப்பற்றிக் கல்லாடம், ௪௯-ஆவது அகவலில், * "ஏழிடந்தோன்றியினனூர்தியைந்து" எனக் கூறினர்.

---

* இதனுரையில், ஏழிடத்தோன்றியென்பதற்கு ஏழிடமுயர்ந்தெனப் பொருளுரைத்தார். அவ்வேழிடத்தின் வகையுமுரைத்திலர்.

இது, சுற்றும் நீளமும் உயரமுமொத்திருப்பதாய், உயர்ந்தசுழியுடையதாய், உயர்ந்த நிறமுடையதாய், அழகுடைய அவயவத்ததாய், முரசு சங்கமென்னுங் குரலுடையதாய், ஐங்கதியுடையதாய்ப், பாகர் மனத்தாற்குறிப்பதையும் வார்த்தையாற் குறிப்பதையுங் கையாற்குறிப்பதையும் ஆசனத்திருப்பாற்குறிப்பதையுங் காலாற்குறிப்பதையும் அறிந்துகொள்வதாய், இலக்கணங்களிற் குறைவில்லாததாய், யாளி யானை முதலியவற்றின் கதியுடையதாயிருப்பதென்பர். மகாபாரதம்; சூதுபோர்ச்சருக்கத்தில்,—

"சுற்று நீளமு முயரமு நிகர்ப்பன சுழியின் மிக் கனதீமை
யற்று மேதகு நிறத்தன கவினுடை யவயவத் தனவாகி
யெற்று மாமணி முரசமுஞ் சங்கமு மெனுங்குரன் மிகுத்திப்பார்
முற்று மாதிரத் தளவுமைங் கதியினான் முடிப்பன விமைப்போதில்."

"ஆளி னெஞ்சமும் வார்த்தையுஞ் செங்கையு மாசனத் தொடுதாளுங்
கோளி லின்புறக் குறிப்பன வெவற்றினுங் குறைகளற் றனவாகி
யாளி குஞ்சரம் வானர முதலிய வியக்கினால் விசும்பெங்குந்
தூளி கொண்டிட மிடைந்துவந் தனநெடுந் துரகதம் பலகோடி."

எனக்கூறிய ௮௧, ௮௨-ஆஞ் செய்யுளிற்காண்க. முற்கவியிற்கூறிய ஐங்கதியாவன:—மல்லகதி, மயூரகதி, வானரகதி, வியாக்கிரகதி, இடபகதியென்பன; சூடாமணிநிகண்டு, பன்னிரண்டாவதில்,—

"மல்லொடு மயூர மற்றை வானரம் வல்லி யங்கள்
சொல்லுமால் விடைக ளென்ப துரகத கதிக ளைந்தாம்."

எனக்கூறிய, ௪௧-ஆஞ்செய்யுளிற்காண்க. இவ்வைங்கதியிற்சிலவேறுபடவுங் கூறுவர். காஞ்சிப்புராணம், நகரப்படலத்தில்,—

"மல்லலை மயில்களை வான ரங்களைப்
புல்லிய முயல்களைப் பொருச ரங்களை
வல்லவா புறக்கொடை கண்ட வான்கதிப்
பல்லியற் புரவியின் பந்தி யாயிரம்."

எனக்கூறிய ௧௮-ஆஞ் செய்யுளிற்காண்க. சீவகசிந்தாமணி, காந்தருவதத்தையாரிலம்பகத்தில்,

"விக்கிதம் வற்கிதம் வெல்லு முபகண்ட
மத்திமஞ் சாரியோ டைந்து."

எனக்கூறிய ௨௯௨-ஆங் கவியுரையிற்காண்க. இவ்வைந்திற்கும் பொருளுரைத்திலர். பிற்கவியில், யாளி குஞ்சரம் வானர முதலியகதியைக் கூறலால் நவகதியுமுண்டென்பதனைக் குறித்தாரெனக் கொள்ளல்வேண்டும். மகாபாரதம்; பதினான்காம்போர்ச்சருக்கத்தில்,— "நவகதிக்குரகதக்குலம் யாவும்" எனக்கூறிய, ௪௭-ஆவது கவியிற் காண்க. நவகதியாவன; பின்னர்க்காண்க.

நல்லிலக்கணமுள்ள குதிரை ஒருவனிடத்திலிருந்தால் அவனிடத்தில் இலக்குமிதங்குவள், செல்வமுங்கீர்த்தியும் வளரும் என்பர்

"பொருவில்சீ ரிலக்கணப் புரவி யொன்றுதா
னொருவன திடைவதிற் றுறையி னொல்லென
மருவுறுந் திருமகண் மல்லற் செல்வமும்
பெருகுறுங் கீர்த்திகள் பல்கும் பெற்றியால்."

எனக்கூறிய திருவிளையாடற்புராணம், நரிபரியாக்கியபடலம் ௮௭-ஆவது செய்யுளிற் காண்க.

மாந்தளிர் நிறமுள்ள நாவினதாய்க், குளம்புயர்ந்ததாய், நீண்டு தம்முளொத்த பற்களையுடையதாய், மார்புங்கண்டமும் பாம்பின் படம்போ லுள்ளதாய்;

அகன்றநெற்றியையுடையதாய்த், தலைமயிரைப்போலக்கொய்த, பிடர்மயிரும் ஒரே நிறமுள்ளதாய், மூக்கோணமுள்ள அழகுமிகுந்த முகத்தையுடையதாய்;

போரிலே முகத்தில்வாளினால் வெட்டினாலு மெதிர்ப்பதாய்க், குரங்கு, புலி, யானை, நாய், ஆடு, நரி, சிங்கம், சரபபக்ஷி, முயல் ஆகிய இவ்வொன்பதின் கதியையுடையதாய்;

உயரத்தளவுநீளமுடையதாய்ச்,சங்கைப்போலவும் வெண்கரும்பைப்போலவும்நிறமுள்ள நுரையைக்கக்குவதாய்த், தனித்தனி ஒவ்வொரு நிறமுமுள்ளதாய், ஐவகை நிறமுங்கலந்துள்ளதாய்;

கழுத்திற்*றெய்வமணியுள்ளதாய்,†அட்டமங்கலத்தையுடையதாய்ப், ‡பஞ்சகல்யாணமுள்ளதாய்;

குங்குமங்கருப்பூரம்அகில்கஸ்தூரிபோல்ப்பரிமளமுள்ளதாய்ச், சங்கமும் மேகமுஞ் சரபமுஞ் சிங்கமும்போல ஒலிப்பதாய்;

கடைந்தெடுத்துச்சேர்த்ததுபோலநாலுகால்களுமுடையதாய், கொள்ளிவட்டத்தைப்போலச் சுழன்றுவருவதாய், மேலிருந்தசேவகன் காலினுளடங்குவதாயிருப்பதென்பர்; திருவிளையாடற்புராணம், நரிபரியாக்கிய படலத்தில்,—

"நெய்த்திடு மாந்தளிர் நிறத்தநாவின
வைத்திடு குளம்புச ளுயர்ந்த வார்ந்துநே
ரொத்திடு மெயிற்றின வுரமுங் கண்டமும்
பைத்திடு மராப்படம் போன்ற பாடலம்"
"அகலிய நுதலின வாய்ந்த குஞ்சிபோ
னிகாறு கொய்யுளை நிறமொன் றாயின
புகாறு கோணமூன் றாகிப் பொற்புறு
முகமுடை யனவய மொய்கொள் கோடகம்."
"முட்டிய சமரிடை முகத்தில் வாளினால்
வெட்டினு மெதிர்ப்பதாய்க் குரங்கு வேங்கைதோல்
*பட்டிமை நரியரி சரபம் பாய்முய
லெட்டிய கதியின விவுளி யென்பவே."

"உன்னத நீளமுண் டாகிச் சங்குவெண்
கன்னலின் வாலிய விலாழி கால்வதாய்ப்
பின்னமா கியதனி வன்னம் பெற்றமை
வன்னமு முடையது வன்னி யாவதே."

---

* தெய்வமணி, † அட்டமங்கலம், ‡ பஞ்சகல்யாணம் இம்மூன்றையும் பின்னர்க்காண்க.

* பட்டிமை என்பதற்கு, உரைப்பிரதியில் வஞ்சமெனப்பொருள் காணப்படுகின்றது; அங்ஙனம் பொருள் கொள்ளில், ஒன்பது கதிக்கு இரண்டு கதியில்லை. அக்கவியில் ஒன்பதுகதியுங்கூறியதாகவே ஆன்றோருரைக்கின்றார். பட்டியென்பதற்குப் பிங்கலநிகண்டு பத்தாவதில் நாயெனப்பொருள் கூறுதல் காண்க. மலையாளத்திலும் பட்டி நாயென்பது பெருவழக்கம்.

தோல் - யானை. மை - ஆடு.

"திணிதரு கழுத்தினிற் சிறந்த தெய்வத
மணியுள தாகியெண் மங்க லத்ததா
யணிதரு பஞ்சகல் யாண முள்ள தாய்க்
குணிதரு நீரது குதிரை யாவதே."
"குங்குமங் கருப்புரங் கொழுந்தின் காரகிற்
பங்கமான் மதமெனக் கமழும் பாலதாய்ச்
சங்கமு மேகமுஞ் சரப முங்கொடுஞ்
சிங்கமும் போலொலி செய்வ தாம்பரி."
"நாலுகால் களுங்கடைந் தெடுத்து நாட்டினாற்
போல்வதாய்க் கொட்புறும் போது சுற்றுதீக்
கோலையொப் பாகிமேற் கொண்ட சேவகன்
காலினு ளடங்குவ தாகுங் கந்துகம்."

எனக்கூறிய, ௮௮-ஆவது செய்யுண்முதல், ௯௪-ஆவதுசெய்யுள் வரையுங் காண்க. இவை பொதுவிலக்கணமென்பர். இனிச்சிறப்பிலக்கணம் வருமாறு:—

வெள்ளியையும் முத்தையும் பாலையுஞ் சந்திரனையுஞ் சங்கையும் பனியையும்போல நிறம்வாய்ந்த குதிரை வெள்ளைக்குதிரை, மாதுளம்பூவையுஞ் செம்பஞ்சுக்குளம்பையும் போலச் செந்நிறத்தையுடைய குதிரை செங்குதிரை, கருமையுங் குயிலும் வண்டும் கார்மேகமும் போலக் கருநிறத்தையுடைய குதிரை கருங்குதிரை, நெருப்புங் கோரோசனையும் போல நிறம்வாய்ந்த குதிரை பொன்னிறக்குதிரை என்றும்;

மேற்கூறிய வெண்மை முதலிய நான்கு நிறமுங் கலந்த குதிரைக்கு மிச்சிரமென்றுபெயர், முகமும் மார்பும் உச்சியும் வாலும் நான்கு காலுமாகிய எட்டுறுப்பினும் வெண்ணிறமுள்ள குதிரைக்கு அட்டமங்கலமென்றுபெயர், உச்சியும் நான்குகால்களுமாகிய ஐந்துறுப்புக்களிலும் வெண்மையுள்ள குதிரைக்குப்பஞ்சகல்யாணியென்றுபெயர் என்றும்;

கண்டத்தில் வலமாகச்சுழித்திருந்தால், அந்தச்சுழிக்குத் தெய்வமணியென்றுபெயர், முகம் தலை நாசி மார்பு என்னும் நான்குறுப்புக்களிலும் இரண்டிரண்டாகச்சொல்லப்பட்ட சுழிகளும் நெற்றி நடுவிலும் பின்பக்கத்திலும் ஒவ்வொரு சுழியும் உடைய் குதிரை இலக்கணங்களையுடைய குதிரை இச்சுழிகளில்லாத குதிரை இலக்கணவழுவுடைய குதிரைஎன்றும்;

மார்பில் ஒன்றோடொன்று கலவாமல் ஐந்து சுழிகளையுடைய குதிரைக்கு சிரீவற்சமென்றும் பெயர். நெற்றியில் இரண்டு சுழியாயினும் மூன்றுசுழியாயினும் இருந்தால் நல்லது, அன்றேல்நான்கு சுழி வலம்புரியாய் உள்ளதுநல்லது, அன்றி முன்னங்கால்களினும், மூலத்தினும் இரண்டு சுழிகளிருந்தாலும் நல்லது என்றும;

கண்டத்தின் நடுவில் இரண்டுசுழியுடைய குதிரை தன் எஜமானுக்கு மிக்கவறுமையையும் மிக்க துன்பத்தையும் உண்டாக்கும், அவ்விரட்டைச்சுழிகள் கணைக்காலிலுள்ளனவாகிய குதிரை பயத்தையும் துன்பத்தையும் விலங்குபூணுதலையு முண்டாக்கும், மேலுந் தடு முன்னங்காலடி கபோலம் மூளந்தாழாகிய விந்நான்குறுப்புக்களிலுஞ் சுழிகளிருந்தால் எஜமானனைக்கொல்லும் என்றும்;

மேற்கூறிய சுழிகளையுடைய குதிரையைக் குதிரைப்பந்தியிற் கட்டியிருப்பினுங் குற்றமாம். இவை நிற்க. குதிரைக்குவயது முப்பத்திரண்டாம், அவத்தைபத்தாம், ஒவ்வோரவத்தைக்கும் மூன்றுவருடமும், இரண்டுமாதமும் பன்னிருநாளும் நிச்சயித்து அளவிட்டார் என்றும்;

எந்த நிறத்தின் பேதங்கள் மிகுந்திருந்தாலும், வெள்ளைகலந்திருக்குமானல் அக்குதிரை நன்மையைத் தரும். கருங்குதிரைக்கு வயிற்றிலாயினும் மார்பிலாயினுஞ் செந்நிறமிருந்தால் அது வெற்றியுள்ளது. அவ்விரண்டுறுப்பினும் வெண்ணிறமிருந்தால் அக்கருங்குதிரைக்கு வாருணமென்றுபெயர். அதுபோரில் வெற்றியைத் தரும் என்றும்;

பிடரின் வெளுப்புப் புத்திரப்பேறு தரும், மார்பின் வெளுப்பு மகிழ்ச்சியைத் தரும், கண்டத்தின் வெளுப்புப் பொருளைத் தரும், முகத்தின் வெளுப்பு வெற்றியைத் தரும, பின்பக்கத்தின் வெளுப்புச் சுகத்தைத்தரும், இடப்பால் வெளுப்புச் சந்ததி தழையச்செய்

யுஞ் செல்வத்தை வளர்க்கும், வலப்பால் வெளுப்புத் தனத்தையும் பலதானியங்களையுந் தரும் என்றும்;

முதுகு வால் முகம் ஆகிய மூன்றுறுப்புக்களும் வெளுப்புள்ள குதிரை வெற்றியைக் கொடுக்கும், உந்திதொடங்கி முன்பக்கமெல்லாஞ் சூரியனைப்போலச் செந்நிறம் வாய்ந்து பின்பக்கமெல்லாஞ் சந்திரனைப் போல வெளுத்திருக்குங் குதிரைக்குப் பகற்காலம் விசயம் பெருகச் செய்யும். முன்பக்கமெல்லாஞ் சந்திரனைப்போல வெண்ணிறம் வாய்ந்து, பின்பக்கமெல்லாஞ் சூரியனைப்போல செந்நிறம் வாய்ந்த குதிரைக்கு இராக்காலம் விசயம் பெருகச்செய்யும், என்றும்;

அடியெடுத்து வைத்தாற் பந்தைப் போலவும், நின்றால் மலையைப் போலவும், முழக்கஞ் செய்தாற் சிங்கத்தைப் போலவும், வேகத்தாற் காற்றைப்போலவும், மிதிக்கு நடனத்தால் நாட்டியப் புலவனைப்போலவும், நடந்தாற்சிங்கத்தையும் யானையையும் போலவுந் தன்மையுடையதாகி; குலமாதர்போலக் கவிழ்ந்த முகமுங், கருநெய்தற் பூவையொத்த கண்களும், மேகத்தைப்போலக் கருநிறமும், கருநெய்தற்பூவின் மணம்போல மணமும் பெற்று, மலர்மாலையையும் அகிற் குழம்பையுஞ் சந்தனக்குழம்பையும் மணியாபரணங்களையும், அலங்கரித்தால் மகிழ்ச்சிமிகுந்து விளங்குவது உத்தமவாசியென்று பெயர் என்றும்;

உத்தமசாதிக் குதிரைக்கு உயரம் நூறுவிரலளவாம், மத்திம சாதிக் குதிரைக்கு உயரம் எண்பத்துநான்கு விரலளவாம், அதம சாதிக்குதிரைக்கு உயரம் அறுபத்தொருவிரலளவாம், இக்குதிரைகளை அரசர்பூசித்துக் கயிறுமாறுவார் என்றுங்கூறுவர்.

திருவிளையாடற்புராணம், நரிபரியாக்கிய படலத்தில்,

"வெள்ளிகித் திலம்பால் சந்திரன் சங்கு வெண்பனி போல்வது வெள்ளைத்
துள்ளிய புரவி மாதுளம் போது சுகிர்ந்தசெம் பஞ்சியின் குழம்பிற்
றெள்ளிய நிறத்த செம்பரி மாமை சிறைக்குயில் வண்டுகார் முகில்போ
லொள்ளிய கரிய பரியெரி யழல னுரோசனை நிறத்தபொற் பரியே."

(இன்னும் வரும்.)

சே. ரா. சுப்பிரமணியக்கவிராயர்,
சைவநூற்பரிசோதகர், மதுரைத்தமிழ்ச்சங்கம்.

உ

திருச்சிற்றம்பலம்.

பெரியபுராண அரும்பத விளக்கம்.

———:o:———

[பழைய ஏட்டினின்று எடுக்கப்பட்டது.]

(முற்றொடர்ச்சி.)

(௧௫௫) நீத்தாருந்தொடர்பரிய நெறிநின்றார் - முனிவராலுந் தொடர்தற்கரிய நெறியில் நின்றார்.

(௧௫௭) பூமியைப்பெய்தவருநல்லபொன்னிலெடுத்து, மூலமென்றுகொடுபோந்த ஆணியின்முன்னே உரைப்பிக்க.

(௧௬௩) பொன் புற்கென்றிட - பொன்னும் ஒளிமழுங்க.

(௧௬௮) சங்குநிரையோடு பவளக்கொடியையும் மணிக்குவையையும் முத்தையுங் கடற்றிரை கொண்டு.

(௧௬௫) பருகாவின்னமுதத்தை - வாயாற்பருகுதலரிய இனிய அமுதத்தை.

(௧௬௭) கல்லாற்செய்யப்பட்ட மதில் பக்கத்தேசூழ்ந்த.

(௧௭௧) ஆவியினுமடைவுடையார் - ஆன்மாவினுஞ்சிறப்புடையார்.

(௧௭௩) சுத்தமாகியநதிகளில் வண்டொலிக்கும்பொலிவாகிய முல்லை, குறிஞ்சி வளஞ்செறிந்தமருதம் ஆகிய இவை பலவற்றைக் கடந்து.

(௧௭௪) பாநாடும் - பாக்களுள் ஆராயப்படும்.

(௧௭௬) குறுகாமையால் மிகுந்தபசிவருத்தத்தால்.

(௧௭௭) மலையின்மேல்மருந்தானார் - திருக்கழுக்குன்றத்தினிருக்கின்ற அருமருந்துபோல்வார்.

(களகூ) கடும்பகற்போதிடும்பலிக்கு - மத்தியானத்திலிடும்பலிக்காக.

(கஅஉ) வன்றொண்டர் சிவயோகியார்மறைய.

(க-கூ) தெற்றியாடன்முழவதிர - சித்திரகூடங்களில் நடனமுழவொலிக்க.

(கஅகூ) சிவனுக்கு மோசம்வருமோ என்று பயந்து.

(ககூஉ) காணமோடுபொன்வேண்டி - பொற்காசோடு பொன்னைவேண்டி. நெய்யும்பாலும் கலைவிளங்கும்-நெய்யும்பாலுமெனக்கலைநூலில்விளங்கும்.

(ககூகூ) வடதிசையிலுள்ள ஸ்ரீபருப்பதமும் திருக்கேதாரமலையும் முதலாக இடமாகச்சிவபெருமான் மகிழ்ந்தஸ்தலங்களையெல்லாம்.

(உ0க) ஆதிபுரி - திருவொற்றியூர்.

(உ0ரு) வட்டுவரியில் - "திருவொற்றியூர் நீங்கலாக" என்று எழுதஅறியும் கண்மலரும் அழகியநெற்றியையுடைய சிவபிரானது வாசனைபொருந்திய தாமரைமலர்போன்ற சிவந்தபாதங்களில்.

(உ0அ) பழைய அநிந்திதையானவர் வேளாளகுலத்தில் மிகுந்த நன்மையுடையோர் வாழுகின்ற ஞாயிறு என்னுமூரில் மேலாங்கொள்கையையுடைய வேளாண்டொழிலில் மிக்கஅழகிய ஞாயிறுகிழவரிடத்தே.

(உ0கூ) இமயமலையரசன் மகளுடைய தாமரைமலர்போன்ற பாதங்களைமறவாத அன்பினாலே வந்தவழிதலையாம் அறிவு வந்தடையத் தாமாகவே அவ்வுணர்வைஅறிந்த சங்கிலியாரானவர் கொலைத்தொழில்பொருந்திய வேல்போன்றகண்களையுடைய சிறியபெண்கள் கூட்டத்தோடும்.

(உக0) கச்சும்அழகிய ஆபரணங்களும் அவாவும்வளர்கின்ற மென்மையானமுலைகள்.

(உகக) படிவம் - தன்மை. நிகழுங்காலமென்ன் - நிகழுங்காலத்திலென்றுகூற.

(உகங) தைவந்ததுநீங்க - தடவுதலாவதுநீங்க.

(உகரு) பந்தம் - தொடர்பு.

(உகசு) தீதங்கிழைத்தேயிறந்தான்போற்செல்ல, விடுத்தாருடன்சென்றார் - தீமையைச்செய்திறந்தான்போல இறக்கவிடுக்கப்பட்டோரும் உடனே இறந்தார்.

(உகஎ) செய்தவிதியைப்போலதுநிகழ மேலோர்க்குள்ளபடிகூறி.

(உகஅ) வணங்கிச்சிவன்மாட்டுள்ள தன்மையேயன்றி வார்த்தை வேறொன்றறியாள்.

(உககூ) அந்நகரில் தண்ணீர்தடஞ்சூழ் கன்னிமாடத்துத்தங்கிப்புரிவீர் தவமென்று.

(உஉக) கடிசேர்முறைமைக் காப்பியற்றி -- காவல்சேர்ந்த முறைமையையுடைய மதிலையுண்டாக்கி.

(உஉஎ) அன்பாகியநாரிற் சிவனுடையபஞ்சாக்கரத்தை நெஞ்சுதொடுக்கப்பூவைத்தொடுத்து.

(உஉஅ) துளையாதமுத்தையும் வண்டுகள்வீழாத செழுந்தமிருதுவாகிய அருமையும்நிகர்த்த புதியவராகிய (கன்னிகை) சங்கிலியாரைச் சிவனடியார்கண்டபோது மனமானது நிறையாற்கரவாது அவரிடத்தேபோய்விழ.

(உஉகூ) பொன்னும் மணியும் மலர்ந்த ஒளியை அமுதிலளாவிப் பாலசந்திரனிடத்துள்ள நீர்மையினைக் குழைத்து.

(உஙக) மின்போன்ற சடையையுடையார்க்கு அடிமையாம் விதியோடு வாழும், என்னைவருத்திச் சிவனுடைய அருளால் வரும் பேற்றைத்தவத்தாலணையாதபடி தடுத்து என்னுடைய அரிய உயிரையும் அழகிய பூவையும் ஒருசேரப்பிணைக்கும் இவளை.

(௨௩௨) கிளைத்தல் - அகழ்தல்.

(௨௩௩) உமையை ஒருபால் மகிழ்ந்ததுமன்றி அழகிய நெடிய முடியில்கங்கையைமறைத்தருளும்விருப்புடையீரே! அடியேனுக்கும் இங்கே திருமாலையைத்தொடுத்து மனக்கட்டுப்பாட்டை அவிழ்த்த.

(௨௩௫) இளம்பிறை வாழ்கின்ற சடைமுடியையுடையசிவன் மகிழ்கின்ற கோயிலின் புறத்தே ஒரு பக்கத்தே வந்திருப்பச் சூரியன் அஸ்தமிக்க மாலையாகிய கடலைக்கண்டயர்வாராய்க் கன்னிகையாகிய சங்கிலியை மணம்புணர்க்கவேண்டிச் சிவன் தமக்கருளும் நண்பால் நினைந்து நினைந்து மனமழிய.

(௨௪௨) தகுந்த விதியையுடைய மணத்தால்.

(௨௪௩) பின்னல் முடியார்முன் - சடைமுடியையுடைய சிவனுக்கு முன்னரே. குன்றாதீபம் போல்வார் மிகநாணி வணங்கிக் கூறுவார், நிலையான திருவாரூரின் கண் அலர்மிகவும் மகிழ்ந்திருப்பது என்னுந்தன்மையை எம்பெருமானே அறிந்தருளும்.

(௨௪௪) ஒருசபதம் அற்ற முறுநிலைமையினால்—ஒருசத்தியத்தை (உன்மாட்டாசை பொருந்தலால் வந்த) சோர்வு பொருந்தும் நிலையால்.

(௨௪௬) சென்று கிடைத்து - சென்றடைந்து.

(௨௪௯) கோயில்விட - கோயில்விட்டு.

(௨௫௧) வழியடிமைப் பெருமையை நினைத்தோ.

(௨௫௩) அற்றம் - சோர்வு. ஈண்டுச்சோர்வென்றது "அங்கு நமக்கெதிர்செய்யுமிதற்கு நீயிசையாதே." என்றதை.

(௨௫௫) நீங்கினதுயிலையுடைய தோழியர்க்கு "ஒற்றியூர்ப்புற நீங்கல்" என்ற எழுத்தை அறியுமவர்.

(௨௫௯) சுத்தமான பணிக்குரிய பொழுதாகத் தொண்டுசெய்வோருடன்போகக் கோயிலின் முன்காலமுதவோராகக் குறித்தடைந்தார்.

(௨௬௦) இவர் சொன்னபடியை மறுத்தால் இது அலராகினுமாகும். அவர் - பலரறிந்து புறங்கூறல்.

(௨௬௧) மூவாத - அழியாத.

(௨௬௫) ஆதிபுரியை ஒற்றிக்கொண்ட சிவனாட்கொண்ட-ஆதிபுரி திருவொற்றியூரென்பது முன்னுங்காட்டப்பட்டது.

(௨௬௬) விழுகின்ற அவருக்கிடையே தோன்றியிருக்கின்றபுலவியும் புணர்ச்சியுமாகிய இவற்றின்கண் ஒரு கணம் ஊழியாம். அந்த ஊழி ஒரு கணமாம்.

(௨௭௧) பொலிந்த தமிழையுடைய பொதியமலையிற் பிறந்து, பொலிவாகிய சந்தனவாசனையில் அளாவி, (அருவியிடையறாதுசொரிதலால்) குளிர்ந்த சாரலில் வளர்ந்த செழித்த தென்றலானது அங்கேவர; திருவாரூர் வீதிவிடங்கப்பெருமானானவர் உற்சவகாலத்தில் வசந்தோச்சவத்தை எதிர்கொண்டருளும் வகையை நம்பியாரூரர் நினைந்தார்.

(௨௭௨) வீதிவிடங்கப் பெருமானுடைய அழகிய நெற்றியையுடைய பெண்கள் பக்கத்தே பரந்த கொலுமண்டபத்தில்.

(௨௭௩) பிரியாதவிருப்பால் நினைந்த அன்பரை நினைவோரை. வசறவு - வருத்தம்.

(௨௭௫) முன்னரே கால் செல்லும் வழிகள் தோன்றாது.

(௨௭௬) சூளுறவு - சத்தியம்.

(௨௭௯) காய்தல் - கோபித்தல்.

(தொடரும்.)

ஜி. சதாசிவம் பிள்ளை.

ஸ்ரீ:

நுண்பொருண்மாலை.

(முற்றொடர்ச்சி.)

௬௮௮. "தூய்மை............பண்பு"

நு - லை:—இம்மூன்றொடு கூடிய மெய்ம்மையு மெனவிவையே இலக்கணமென்றதனா லின்னொடுவின்பொருட்கண் வந்தது. புறநடைச் சூத்திரவிதியா லமையுமென்க.

௬௯௪. "செவிச்சொல்லுஞ்............ரகத்து."

நு - லை:—அவித்தொழுகல் பயனிலை.

௬௯௮. "இளைய............படும்."

நு - லை:—பல்லோர் படர்க்கையென்னும் விலக்குப்பற்றியொழுகப்படுமென்பதனை யொழுகுதல் செய்யப்படுமென வொழுகுதலை யெழுவாயாக்கிச் செயப்படுமென்பதனைப்பயனிலையாக்கினதுகாண்க. "வஞ்சரையஞ்சப்படு" (௮௨௪) மென்பதுமது. "செழுங்கார் முழவதிர்" என்னுங் கோவையாருள், (௧௫௭) "வழங்கா வதரின் வழங்கென்றுமோ வின்றெம் வள்ளலையே." யென்பதுமது.

௭௧௧. "அவையறிந்............யவர்."

நு - லை:—செஞ்சொல் இலக்கணைச்சொல் குறிப்புச்சொல்லென மூன்றுமடங்குதற்குச் சொல்லின்றொகையென்றார். "நோயு மின்பமு மிருவகை நிலையி" லென்னுஞ் சூத்திரவிதிபெற்றன இலக்கணைச்சொல். வாராமரபினவாகக் கூறுதலுமென்பன குறிப்புச்சொல். இவ்விரண்டு மல்லாதன செஞ்சொல். இலக்கணக் குறிப்பென்ப திவ்விரண்டுங் கூடிநிற்பது. இலக்கணமரூ இலக்கணவழக்கு என்பன போலவென்க. இவையெல்லாங் காமத்துப்பாலுட் காண்க.

௭௨௦. "அங்கணத்து............கொளல்."

நு - லை:—கொளல் - கொள்ளற்க; கொள்ளென்னு முதனிலைத் தொழிற்பெயர் விதியினின்று பின்னெதிர்மறைவிகுதியோடுகூடி "மகனெனல்போல" நின்றது, "அரங்கின்றி வட்டாடியற்றே"யென்பதுபோல வாராமையாலென்க. இவ்வுரையாசிரியருடம்பாட்டினை விதி யென்பர்; இதனுள் அற்றென்பது பெயரடுத்துநின்றதா லீண்டிவ்வாறுரைத்தார்; "வையத்திறந்தாரை யெண்ணிக்கொண்டற்று" என்பது முதலியவற்றெல்லாம் வினையையடுத்து வருதலின் இவ்வாறுரையாதொழிந்தாரென்க.

௭௨௫. "பகையகத்துச்.........கவர்."

நு - லை:—அஞ்சாதுசாவா ரென்றுரைத்ததனாலு மஞ்சாது சொல்லவல்லாரென் றுரைத்ததனாலு மஞ்சாமை சாவாரென்பதனோடுங் கூடி அதனாற் சொல்லுவாரென்பது வருவிக்கப்பட்டதென்றார். அதனாலென்று சுட்டியது சாவாரென்றதனை.

௭௨௪. "கற்றார்முற்........கொளல்."

நு - லை:—அவற்றினெனச் சுட்டியுரைத்தது தாங்கற்ற வென்பதனை.

௭௨௬. "வாளொடென்............பவர்க்கு."

நு - லை:—நுண்ணவை இருந்தாரது நுண்மை அவைமேலேற்றப்பட்டது. நல்லவை புல்லவை யென்பவுமாம். அல்லாக்கால் நல்லாரவையஞ்சுவா ரென்பது போலவரும்.

௭௨௭. பகையகத்துப்....... நூல்."

நு - லை:—பேடியைப் பிடித்தவள் குற்றத்தாலெனப் பெண்பாலாயுரைத்தது, "ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவி, யாண்மை யறிசொற் காகிட னின்றே", என்ற விதிபற்றியென்க. "பெண்ணவாயாணிழந்த பேடி யணியாளோ" (தொல்; சொல் - ௯௨)என்பதுமது.

௭௩௧. "தள்ளா.........நாடு."

ந - லை:—மற்றை உயர்திணைப்பொருள்களோடுஞ் சேர்தற்கு ழிலோடு மியையாமையின் விளையுள் விளையுளைச்செய்வோரென உழவர்மேனின்றது.

௭௩௨. "பெரும்பொருளாற்......நாடு"

ந - லை:—பெட்டக்கது - விரும்பத்தக்கது. "செய்தக்க" என்பதுபோலப் பெள்ளென்னும் முதனிலைத்தொழிற்பெயர் செயவெனெச்சமானது காண்க. மிக்கபெயல், பெயலின்மை, யெலி, விட்டில், கிளி, பன்றி, புல்வாய், யானை, அரசண்மை, வேற்றரசெனக்கேடு; இவற்றை வடநூலார் ஈதிவாதை யென்பர்.

௭௩௬. "கேடறியாக்.........றலை."

ந - லை:—அறியாது குன்றாதவென்னும் வினையெச்சம் பெயரெச்சங்களினிறுதிநிலை விகாரமென்க.

௭௪௩. "உயர்வகலக்.........நூல்."

ந - லை:—"வரிவிற்பொறியுங்...............கருவிரற் கூகையு" மென்பன பாட்டுக்குறை.

௭௪௮. "முற்றாற்றி........தரண்"

ந - லை:—பற்றின்கண்ணே யெனவிரியும். வெல்வதென்பதுடையார் தொழிலின் மேனின்றது.

௭௫௬. "உறுபொருளு..........பொருள்."

ந - லை:—உறுபொருள்-நெடுங்கால நிலத்திற்கிடந்து பின் கண்டெடுத்ததுந் தாயத்தார்பெறாததுமென்க. உல்குபொருள்-சுங்கப்பொருள். தெறுபொருள்-பகைவரைவென்றதிறை.

௭௬0. "ஒண்பொருள்........மொருங்கு"

ந - லை:—காழ்த்தல்—முதிர்தல்.

(தொடரும்.)

பத்திராசிரியர்.

609
1909
MADRAS

கடவுள் துணை.

செந்தமிழ்

தொகுதி-௭.] சௌமிய௵ ஐப்பசிமீ [பகுதி-௧௨.

குண்டலகேசி வரலாறு.

இப்பெயர்பெற்ற நூல் தமிழில்வழங்கும் "பஞ்சகாவியங்"களில் ஒன்றென்பது பலரும் அறிவர். இந்தக்காவியம் இப்போது அகப்பட்டில்தாயினும், வேறு நூல்களில் இதைப்பற்றி வழங்கும் கதைகள் பாடல்கள் முதலியவிஷயங்களைச் சேதுஸம்ஸ்தானவித்வான் ஸ்ரீ: ரா. இராகவையங்காரவர்கள் இப்பத்திரிகையின் முதற்றொகுதி ௩-ம் பகுதியில் "குண்டலகேசி" என்றதலைப்பின்கீழ் நன்கு எழுதியிருக்கிறார்கள். அவற்றை யெல்லாம் இங்கே குறிப்பிப்பது மிகை யாதலால் அவற்றைவிடுத்து, குண்டலகேசியின் சரித்திரசம்பந்தமான ஒருவிஷயத்தை மட்டும் ஈண்டுக்குறிப்பிடுவாம். "நீலகேசி" என்றபழைய நூலினுரையில் இக்குண்டலகேசி வரலாறாக எழுதப்பட்டவை, ஐயங்காரவர்கள் காட்டியபடி, அடியில் வருமாறு:—

"குண்டலகேசி யென்பாள் ஒருவைசிய கன்னிகை; இவள் ஒருநாள் பிராஸாதஸ்தலத்து (மாளிகைமேடை) விளையாடுகின்றாளாக, ஒரு கிதவ (தூர்த்தனாகிய) வைசியபுத்திரன் காளன் என்பான்: இவன் புத்ததரிசனங்கொண்டு பல்வழியும் சோரவிருத்தி பண்ணிச் செல்வானை அரசன் 'வதிக்க' என்றேவச் சிறைப்பட்டுப் போகின்றானை முன்சொன்ன குண்டலகேசி கண்டு காமபரவசையாக, அதனையறிந்து அவளுடையபிதா ராஜாவைக்கண்டு யாதானுமோருபாயத்தால் மீட்டு இவனுக்குக் குண்டலகேசியென்னுங் கன்னிகையினை விவாகவிதியாற்கொடுத்து இனிது செல்கின்ற காலத்து ஒருநாள், பிரணயகலகத்து நர்மோக்திமுகத்தால் (பரிகாச வார்த்தையால்) 'நீ கள்வனன்றோ' என்று குண்டலகேசி சொல்லக் காளனுந் தன்னுள்,

ளத்தே சினங்கொண்டு, பின்பு ஒருநாள் வித்யாஸாதன வியாஜத்தால் இவளைத் தனிக்கொண்டு ஒரு பர்வதத்தேறி "நீ இவ்வாறு என்னைச் சொல்லுதலில் யானுன்னைக் கொல்லத்துணிந்தேன்" என்ன, குண்டலகேசியும் 'தற்கொல்லியை முற்கொல்லுக' என்பதன்றே? இவனை யான் கொல்வேன் எனநினைந்து, "யான்சாகிறேனாகில் உம்மை வலங்கொண்டு சாவல்" என அதற்கியைந்த காளனை வலங்கொள்கின்றாள் வரையினின்றும்(அவனை)வீழ நூக்கினாள்; நூக்க, காளனும் புத்தஸ்மரணத்தினால் மோக்ஷித்தனன். குண்டலகேசியும் பர்த்ருவிரகதுக்கிதையாகித் துறப்பனென நினைந்து பரசமயங்களெல்லாம் நாவல் நட்டு ஜயித்துப் பௌத்ததரிசனங்கொண்டு முத்திபெற்றனள்(மொக்கலவாதச்சருக்கம்-௨௦) எனக்காண்க.

இவ்வரலாறு குண்டலகேசிகாவியத்திற் கூறப்படும் கதைச்சுருக்கமென்று கொள்ளப்படுகிறது. இச்சரித்திரத்தினுண்மை, மற்றொரு வழியாலும் நமக்கிப்போது தெரியவந்துறுதிப்படுதல் அறிந்து மகிழத்தக்கது. 1900-ம் வருஷம் ஸெப்டம்பர் அக்டோபர் மாதங்களில் வெளிவந்த மகாபோதிசங்கத்துப் பத்திரிகையில், (Journal of the Mahabodhi Society) குண்டலகேசி என்பாளைப்பற்றியசரிதம் அடியில் வருமாறு காணப்படுகின்றது.

"பெரிய தனவைசியனொருவனுடைய புத்திரியாகிய பத்தய-குண்டலகேசியென்பாள் சகல சௌகரியங்களுடனும் தந்தையால் வளர்க்கப்பட்டுவந்தாள். அவள் தன்தந்தை மாளிகையின் மேன்மாடத்தில் வாசம் செய்துவரலானாள். ஒருநாள், அவள் வெளியில் நடந்துவரும் விசேடங்களைச் சாளரவழியே உற்றுநோக்கிக் கொண்டிருந்தபோது, வாலிபனொருவன் நகரக்காவலரால் கொலைக்குற்ற விசாரணையின்பொருட்டு நியாயசபைக்குக் கொண்டுபோகப்படுவதைக் கண்டாள். அவ்வாலிபன், அரசனமைச்சரிலே ஒருவரது குமாரனாயிருந்தான். அவனதுபேரெழிலைக்கண்டு இவள் அதிமோகங்கொண்டு அவனே தன் கொழுநனாகவேண்டுமென்பதைத் தன்தந்தையிடம் தெரிவித்துக் கொண்டாள். தகப்பன் இவளெண்ணத்திற்குமாறாகப் பல ஆக்ஷேபங்களைக்கூறித் தடுத்தும் ஒன்றும் பயன்படவில்லை. அதனால், அவ்வாலிபனைச்சிறைமீட்பதற்கு, பெருந்தொகையான பொருள்களைக் காவலாளர்க்கு 'அவன் 'லஞ்சம்' கொடுத்தே ஆகவேண்டியதாயிற்று. இங்ஙனமாகச் சிலகாலம் அவளுக்கு அவன் கணவனாக வாழ்ந்துவந்தான். ஆனால், அவன் நெடுங்காலம் பழகிவந்த கொடுந்தொழில்களில் மறுபடியும் அவன் மனங்கவிந்தது. அதனால், தன் மனைவியையே ஒரு தனித்தவிடத்திற்கு அழைத்துச் சென்று அவளாபரணங்களையெல்லாம் அபகரித்து அவளைக் கொன்றுவிட நினைத்தான். உடனே அவன் தன்மனைவியிடம் "காவலர் தன்னைச் சிறைப்படுத்தியகாலத்தில் தான் விடுவிக்கப்பட்டால் தெய்வத்துக்குப் "பலிகாம" வேள்வியை நிறைவேற்றுவதாகப் பிரார்த்தனை செய்திருந்ததைச்சொல்லி, அதற்கு அவளைச் சகலஆபரணங்களையும் உடைகளையும் தரித்துக்கொண்டு உடன்வரச்செய்து, ஒரு மலைச்சிகரத்திற்கு அழைத்துச் சென்றான். சென்றதும், மனைவியை நோக்கி, அவளை மலையுச்சியினின்றும் கீழே தள்ளிக் கொன்றுவிட்டு ஆபரணங்களையெல்லாம் அபகரிப்பதற்காகவே தானழைத்துவந்ததாகத் தன்னுள்ளக்கருத்தை அவட்கு அறிவிக்கலானான். உடனே குண்டலகேசியும், அதற்குத் தான் சித்தமாகவிருப்பதாய்க் கூறி, ஒரு சமயோசிதமான யுக்தியால் வஞ்சகமொன்று செய்து, அம்மலையுச்சியினின்றும் தன்புருஷனையே கீழே தள்ளிவிட்டாள். இங்ஙனமாக அவனிறந்துவிட்டானென்பதுதெரிந்து உலகவாழ்க்கையை வெறுத்து "நிகந்தர்" என்ற முனிவரிருப்பிடம் அடைந்து அவருடன் கலந்து காலங்கழிக்கக் கருதினாள். ஆனால் அக்கூட்டத்தாரின் விதிமுறைப்படி தன் அழகான தலைமயிரைப் பிடுங்கிக் கொள்ள வேண்டியிருந்ததால் சிலகாலத்திற்குள் அதிருப்தி மேலிட்டு, அவரைவிட்டு விலகி, சிராவஸ்திநகரஞ்சென்று, அங்கு மகாத்மாவின் (புத்தர்) சிஷ்யர்களைக்கண்டு அவர்களுடன்வாதஞ்செய்து முடிவில் பிக்ஷுணிவாழ்க்கையை யேற்றுப் பரிசுத்தமான அருகத்பதத்தையடைந்தாள்" எனக் காண்க.

இவ்வரலாற்றுக்கும், நீலகேசியிற்கண்டதும் முற்காட்டியதுமான வரலாற்றுக்கும் சிலபேதங்களே உள்ளனவாயினும், பெரிதும் ஒற்றுமையிருத்தல் கண்டுகொள்க. இதனால், வைசியபுராணம் என்னும் புத்தகத்தில் ௩௪-ம் அத்யாயத்துக்கண்ட குண்டலகேசி வரலாறுமுழுதும் அதற்கு சம்பந்தமில்லாதகதையேயன்றி உண்மை சிறிதுமுடையதன்றெனத் தெரிந்துகொள்க. பத்திராசிரியர்.

உ

சாங்கிய கதோபதேசம்.

சாங்கியம் என்றது வேதசம்பந்தமான தரிசன சாத்திரங்கள் ஆறனுள்ளே ஒன்று. பிரகிருதி முதலிய பதார்த்தங்களின் சங்கியைய அறிவித்தலாற் சாங்கியம் எனப்பட்டது. சங்கியை - எண். தரிசன சாத்திரங்களாவன:— மீமாஞ்சை, நியாயம், வைசேடிகம், சாங்கியம், யோகம், வேதாந்தம் என்பன. தரிசனம் - பிரமஞானோபாயங் கூறும் நூல். சாங்கியநூல் செய்தவர் கபிலமுனிவர்; இந்தச் சாங்கிய நூலிலே கடவுள் இல்லையென்பதும், மூலப்பிரகிருதியே யாவற்றிற்குங் காரணம் என்பதும், மூலப்பிரகிருதியிலிருந்து மகத்தத்துவம் முதலியன பரம்பரையாய்த் தோன்றும் என்பதும், புருடன் முத் துக்கங்களினும் நீங்கித் தன்னையும், மூலப்பிரகிருதியையும் பகுத்துணரும் விவேகம் பெறுதலே வீடு பேறு என்பதும், பிறவும் தடைவிடைகளோடு சொல்லப்படும்.

மூலப்பிரகிருதியாவது சாத்துவிகம், இராசதம், தாமதம் என்னும் முக்குணங்களும் சமத்தன்மையுடையனவாய் நிற்கும் நிலை. மூலம் - காரணம். பிரகிருதி - பிரதானம், இயற்கை. இது பிறிதொன்றினின்றும் தோன்றாமையால் அவிகிருதி எனவும் படும். மகத்து மனம் எனவும், புத்தியெனவும் கூறப்படும். புத்தியினின்று தோன்றுவது நானென அபிமானிக்கும் அகங்கார தத்துவம். அகங்காரத்தினின்று தோன்றுவன, தன்மாத்திரைகளும், ஞானேந்திரியங்களும், கன்மேந்திரியங்களுமாம். தன்மாத்திரையிலிருந்து தோன்றுவன, பிருதிவி முதலியனவாம். இவை மனத்தோடு சேர்த்துக்கணிக்குங்கால் இருபத்தைந்தாகும். புருடன் - ஆன்மா. இவை "சுவையொளி" என்னுங் குறளுரையிலே பரிமேலழகராலுங் கூறப்பட்டுள. முத் துக்கங்களாவன:—காமம், வெகுளி, மயக்கம் என்பன. முத்துக்கங்களினின்றும் நீங்குதலே புருடார்த்தம் என்று முதற் சூத்திரத்திலும் கூறினர்.

சூத்திரம்.

𑌅𑌥 𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌧𑌦𑍁𑌃𑌖𑌾𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌰𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌰𑍍𑌥𑌃॥

(இதன் மொழிபெயர்ப்பு.)

(காமம், வெகுளி, மயக்கம் என்னும்) மூவகைத் துக்கங்களினின்றும் பூரணமாக நீங்குதலே பூரணமான ஆன்மப் பிரயோசனமாகும்.

முத் துக்கங்களையும் தவிர்ந்திருத்தலே முத்தியுபாயம் என்பது இதன் கருத்து. 𑌅𑌥 என்பது வடமொழியிலே வழங்கப்படும் ஒரு மங்கலமொழி. திரிவிதம் - மூவகை. அத்தியந்தம் - மிகுதி. நிவிர்த்தி - நீக்கம். புருடார்த்தம் - ஆன்மப்பிரயோசனம். இந்தச்சூத்திரமும் "காமம் வெகுளி" என்னும் திருக்குறளும் பொருளால் ஒற்றுமையுடையன.

திருக்குறள்.

காமம் வெகுளி மயக்க மிவைமூன்றன்
நாமங் கெடக்கெடு நோய்.

சாங்கிய மதத்தவருள்ளே சிலர் பிரகிருதியே பொருள் என்றும், லர் விகிர்தியே பொருள்என்றும், சிலர் பிரகிருதியும் விகிர்தியும் பொருள் என்றும், சிலர் அவையிரண்டும் பொருளல்ல என்றும் கூறுவர் என்று சாயணமாதவாசாரியர் கூறுவர். சிவசாங்கியர் என்றும் விஷ்ணுசாங்கியர் என்றும் வகையுளவென்று வேறுசிலர் கூறுவர். அவைநிற்க; இந்தச் சாங்கியநூலிலே நாலாம்பாகத்திலே உபதேசம் முதலிய சில விடயங்கள் கதைவாயிலாக உணர்த்தப்படுகின்றன. அவற்றுள்ளே சிலசில செந்தமிழ் படிப்பார்க்கு விநோதமாயிருக்குமென்று இங்கே எழுதப்படுகின்றன.

சூத்திரம்.

𑌰𑌾𑌜𑌪𑍁𑌤𑍍𑌰𑌵𑌤𑍍 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑍋𑌪𑌦𑌶𑌾𑌤𑍍 ॥

(இதன் மொழிபெயர்ப்பு.)

(இளம்பருவத்திலே, வேடரோடுகூடி வளர்ந்த) ஓர் இராசபுத்திரன் மெய்யுபதேசத்தினால் இராச்சியநிலைமை அடைந்ததுபோல

(ஆன்மாவும் மெய்யுபதேசத்தினால் உண்மையுணர்ந்து தன்னிலையை அடையும்.)

மெய்யுபதேசத்தினாலே பொய்யுணர்வு நீங்கி மெய்ந்நிலை கைகூடும் என்பது கருத்து. தத்துவோபதேசம் - மெய்யுபதேசம். சூத்திரமாதல்பற்றி வேண்டுஞ்சொற்கள்வருவித்துப் பொருள்முடிக்கப் பட்டது. உபதேசத்தினால் ஆத்துமா மெய்ந்நிலை அடைதற்குத் திருட்டாந்தம் இராசகுமாரன் கதை.

இராசகுமாரன்கதை.

இராசகுமாரனொருவன் இழிந்தநாளிற் பிறந்தகுற்றங் காரணமாகத் தந்தையாகிய இராசாவையும், பிறரையும், தனது நாடுநகரங்களையும் இளம்பருவத்தில் விட்டுநீங்கி, மற்றொரு தேசத்தை அடைந்தான். அவனை அத்தேசவாசியாகிய வேடனொருவன் கண்டு தழுவியணைத்து வேடசேரியிற் கொண்டுபோய்த் தன் பிள்ளைபோல அன்புடன் வளர்த்தான். வளருங்கால் அவ்விராசகுமாரனும் வேடரோடு கூடிப்பயின்றும், வேடர்க்குரிய உண்டிகளை உண்டும், உடைகளைத் தரித்தும், தொழில்களைச்செய்தும், மொழிகளைப்பேசியும் ஒரு வேடனாகவே விளங்கினான். தானும் ஒரு வேடன் என்றே கருதியிருந்தான். இராசகுமாரன் என்பதை எட்டுணையும் அறிந்திலன்.

இப்படியிருக்கும் நாள்களில் தந்தையுடைய மந்திரிமார்களுள்ளே ஒருவன் அந்த வேடசேரியிற்போய் அவனைநோக்கி "மைந்தனே! நீ வேடரோடுகூடிவளர்ந்து நின்னிலையையும் இழந்து மயங்கி இடர்ப்பட்டு வருந்தினாய்; நின் செயலிருந்தவாறென்னை? வேடர் கூட்டத்தை விட்டுவிடு! நீ வேடனல்லை! ஓர் இராசகுமாரன் என்பதை உணர்ந்துகொள்!" என்று உண்மையை உபதேசித்தான். இந்த உபதேசத்தைக்கேட்ட இராஜகுமாரனும் அதிசயித்து, "அந்தோ! இழிந்த வேடரோடு கூடி இதுவரையும் உண்மைதெரியாமல் மயங்கி இடர்ப்பட்டேன்! யானோ வேடனல்லேன்! இராசகுமாரனாகிய எனக்கு வேடர்சேரி இயையுமா? என்றுசொல்லி உண்மையுணர்ந்து வேடரையும் வேடர்சேரியையும் விட்டு நீங்கி அந்த மந்திரியோடு சென்று தன்பதவியை அடைந்தான்.

இந்தச் சூத்திரமும் சிவஞானபோதத்தில் வரும் "ஐம்புலவேடரின்" என்னும் எட்டாஞ்சூத்திரமும், சித்தியாரில் வரும் "மன்னவன்றன் மகன்வேடர்", என்னும்செய்யுளும், பொருளால் வேறுபாடுடையனவல்ல.

சிவஞானசித்தியார்.

மன்னவன்றன் மகன்வேட ரிடத்தே தங்கி
வளர்ந்தவனை யறியாது மயங்கிநிற்பப்
பின்னவனு மென்மகனீ யென்றவரிற் பிரித்துப்
பெருமையொடுந் தானாகப் பேணு மாபோற்
றுன்னியவைம் புலவேடர் சுழலிற் பட்டுத்
துணைவனையு மறியாது துயருறுந்தொல் லுயிரை
மன்னுமருட் குருவாகி வந்தவரி னீக்கி
மலமகற்றித் தானாக்கி மலரடிக்கீழ் வைப்பன்.

சூத்திரம்.

𑌪𑌿𑌶𑌾𑌚𑌵𑌦𑌨𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑍋𑌪𑌦𑍇𑌶𑍇𑌽𑌪𑌿 ॥

(இதன் மொழிபெயர்ப்பு.)

பிறனுக்குச்செய்யும் உபதேசத்தின் கண்ணும் பிசாசம் ஒன்றுக்குப் பயனுண்டாயவாறு போலப் பக்கத்தினின்று கேட்போருக்கும் பயனுண்டாகும்.

உபதேசிக்கும்போது பக்கத்தினின்று கேட்போரும் பயன் பெறுவர் என்பது இதன் கருத்து. பிசாசம் - பேய். அந்நியார்த்தம் - பிறன்பொருட்டு.

பிசாசின் கதை

துரியோதனன் முதலியோரும், தருமன் முதலியோரும் யுத்தஞ்செய்யும்படி குருக்கேத்திரத்திலே போய்நின்றார்கள். அவருள்ளே அருச்சுனன் போர்புரிய நிற்பவர்கள் யாவர்யாவர் என்று பார்த்தான். பார்த்தபோது நிற்பவர்களெல்லாஞ் சுற்றத்தவர்களாய்த் தோன்றக்கண்டு கண்ணபிரானை நோக்கி "இருடிகேசா! இங்கேநிற்கும் என் சுற்றத்தவர்களைநோக்கி என்னவயவங்கள் சோர்

கின்றன! வாயும் புலர்கின்றது! உடம்பும் நடுங்குகின்றது! உரோமமுஞ் சிலிர்க்கின்றது! காண்டீபமும் கையினின்றும் வழுவுகின்றது! மனமும் மயங்குகின்றது! இருத்தற்கும் இயலவில்லை! அபசகுனங்களையும் காண்கின்றேன்! என்சுற்றத்தவர்களை யான் கொல்லமாட்டேன்!" என்றுசொல்லிப் போர்புரிதலை மறுத்தான். அப்போது கண்ணபிரான் அவனைக்கொண்டு போர்செய்விக்க எண்ணி ஆத்மதத்துவோபதேசத்தைக் கீதைவாயிலாக உபதேசித்தார். அதனைப் பக்கத்திற் கேட்டுநின்ற ஒருபிசாசும் பிரகிருதிக்கும் ஆத்மாவுக்குமுள்ள பேதத்தை உள்ளவாறே உணர்ந்துகொண்டது.

சூத்திரம்.

𑌨𑌿𑌰𑌾𑌶𑌃 𑌸𑍁𑌖𑍀 𑌪𑌿𑌙𑍍𑌗𑌲𑌾𑌵𑌤𑍍 ॥

(இதன் மொழிபெயர்ப்பு.)

ஆசையில்லாதவன் பிங்கலை என்பவளைப்போலச் சுகமுடையவனாவன்.

ஆசையே துக்கமுறுதற்குக் காரணம் என்பது இதன் கருத்து.

பிங்கலை கதை.

ஓரூரிலே பிங்கலை என்னும் பெயரையுடைய கணிகை ஒருத்தி இருந்தாள். அவள் ஒரு நாயகனைப்பெறவேண்டும் என்று பலநாள் ஆசைகொண்டு பரிவுற்றலைந்தாள். அந்த நாயகனோ அவளுக்கு வாய்த்திலன். அவளுடைய ஆசையும் பயனற்றதாயிற்று. பின்னர் அவள் மனம் வருந்தி, அந்தோ! இந்த ஆசை என்னை எவ்வளவோ வருத்திற்று. இந்த ஆசையினாலே யாதொரு பயனும் இல்லை என்று சொல்லி ஆசையை முற்றக்களைந்தாள். ஆசையற்றபோதே துக்கமுமற்றுச் சுகமுடையவளானாள்.

பொருள்களிற் பற்றுவைத்தலே துயருறுதற்குக் காரணம், "இச்சையாம் விறகுமண்டா லிடுக்கணும் வெந்நீமாளும்" என்று பிறருங் கூறுவர். இந்தச்சூத்திரமும், "அவாவில்லார்" என்னுந் திருக்குறளும் பொருளால் ஒற்றுமையுடையன.

திருக்குறள்.

அவாவில்லார்க் கில்லாகுந் துன்ப மஃதுண்டேற்
றவாஅது மென்மேல் வரும்.

இவையன்றிச் செந்தமிழ்நூற் பொருட்சம்பந்தமுடையனவாய் இன்னும் பல வருகின்றன. இந்தச் சாங்கிய மதம் இக்காலத்திலே அநுசரிக்கப்படுவதொன்றன்று.

இங்ஙனம்,

அ. குமாரசுவாமிப்பிள்ளை.

உ

திருக்குறட் பரிமேலழகருரை விளக்கம்.

(முற்றொடர்ச்சி.)

மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார்.

இ-ள். மலர்மிசை.................வாழ்வார். எ-று.

அன்பானினைவாரது................நினைத்தல்.

வி-ம். மலரின்கண்ணே என்றது இதயகமலத்தின்கண்ணே என்றவாறு. மலர் -- தாமரைமலர்; அஃது ஈண்டு இதயகமலத்தைக் குறிப்பானே உணர்த்திநின்றது. இவ்வாறே பிறரும் "பூதம் யாவையி னுள்ளலர் போதென" திருத்தொண்டர் புராணம், எனவும் "வானவன்காண்..........கருதுவாரிதய கமலத்தூறுந் - தேனவன்காண்" (தேவாரம்) எனவும், "செங்கமலப்போதிற் றிகழ்செல்வன்..........தமதுள்ளத் - தங்கமலத் தோடேத் திடவண்டத் தமர்வாரே" (தேவாரம்) எனவும், "𑌹𑍃𑌤𑍍𑌪𑍁𑌣𑍍𑌡𑌰𑍀𑌕𑌂 𑌵𑌿𑌰𑌜𑌂 𑌵𑌿𑌶𑍁𑌦𑍍𑌧𑌂 𑌵𑌿𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯𑌮𑌧𑍍𑌯𑍇 𑌵𑌿𑌶𑌦𑌂 𑌵𑌿𑌶𑍋𑌕𑌂 । 𑌅𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯𑌮𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌮𑌨𑌨𑍍𑌤𑌰𑍂𑌪𑌂 𑌶𑌿𑌵𑌂 𑌪𑍍𑌰𑌶𑌾𑌨𑍍𑌤𑌮𑌮𑍃𑌤𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌯𑍋𑌨𑌿𑌂"(கைவல்லியோபநிடதம்) எனவும், "𑌦𑌹𑌰𑌂𑌵𑌿𑌪𑌾𑌪𑍍𑌮𑌂 𑌪𑌰𑌵𑍇𑌶𑍍𑌮𑌭𑍂𑌤𑌂 𑌯𑌤𑍍𑌪𑍁𑌣𑍍𑌡𑌰𑍀𑌕𑌂𑌪𑍁𑌰𑌮𑌧𑍍𑌯𑌸𑌂𑌸𑍍𑌥𑌂"

(மகாநாராயணோபநிடதம்) எனவும், “𑌅𑌥 𑌯𑌦𑌿𑌦𑌮𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌪𑍁𑌰𑍇 𑌦𑌹𑌰𑌂 𑌪𑍁𑌣𑍍𑌡𑌰𑍀𑌕𑌂𑌵𑍇𑌶𑍍𑌮 𑌦𑌹𑌰𑍋𑌽𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑌨𑍍𑌤𑌰𑌾𑌕𑌾𑌶𑌸𑍍𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌯𑌦𑌨𑍍𑌤𑌸𑍍𑌤𑌦𑌨𑍍𑌵𑍇𑌷𑍍𑌟𑌵𑍍𑌯𑌂 𑌤𑌦𑍍𑌵𑌾𑌵 𑌵𑌿𑌜𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑌿𑌤𑌵𑍍𑌯𑌂” (சாந்தோக்கியோபநிடதம்) எனவும், இதயகமலம் ஒன்றுளதாகக் கூறுதல் காண்க. “அண்டபிண்டமவை சமமாதலால்” அண்டத்திலுள்ளனவெல்லாம் பிண்டத்துள்ளுஞ் சூக்கும ரூபமாயுண்மையின் அண்டவடிவாகிய முப்பத்தாறு தத்துவங்களும் இதயத்திற் கமலரூபமாய் விளங்கும் என்க. எங்ஙனமெனின்; நிலமுதலிய இருபத்துநான்கு தத்துவங்களும் நாபியினின்றுந்தோன்றும் எண்விரலளவைத்தாகிய நாளவடிவாகவும், வித்தியாதத்துவமேழும் சுத்தவித்தையுமாகிய எட்டும் எட்டிதழ் வடிவாகவும், அவற்றின்மேற்கருதப்பட்ட ஈசுரதத்துவமும் சதாசிவதத்துவமும் அறுபத்துநான்கு கேசரவடிவாகவும், சத்திதத்துவம் அக்கேசரங்களுக்குள்ளாகிய பொகுட்டுவடிவாகவும், சிவதத்துவம் அப்பொகுட்டினுட் காணப்படும் ஐம்பத்தொரு பீசவடிவாகவும் அமைந்து விளங்கும் என்க. இதன்வடிவைப் பிறவாறு கூறுவாருமுளர். இதன் விரிவையெல்லாம் சிவஞானபோத மாபாடியம் ௨0௨-ம், ௨0௩-ம் பக்கங்களிற்காண்க.

சென்றவனது என்றார், அடிசேர்ந்தாரது உள்ளக்கமலத்தின்கண் சோதிக்குட் சோதியாய் வெளிப்பட்டுத் தானே தோன்றுவனாதலின். இதனை; “நிர்க்குணனாய்.........ஆனவறிவா யளவிறந்து தோன்றானே - வானே முதல்களையின் வந்து” (சிவஞானபோதம்) எனவும், “இந்தனத்தினெரிபாலினெய்...........சிந்தனைசெய்தர்ச்சிக்கச் சிவனுளத்தே தோன்றித்தீ யிரும்பைச் செய்வதுபோற் சீவன்றன்னைப் - பந்தனையை யறுத்துத்தானாக்கித் தன்னுருவப் பரப்பெல்லாங் கொடுபோந்து பதிப்பனிவன் பாலே” (சிவஞானசித்தியார்) எனவும், “வானவன்காண்...............கருதுவாரிதய கமலத்தூறுந் - தேனவன் காண்” (தேவாரம்) எனவும், “பாவிப்பார்மனம்பாவிக் கொண்டான்றனை” (தேவாரம்) எனவும் கூறியவாற்றானே அறிக.

மாட்சிமைப்பட்ட அடியென்றார் சேர்ந்தாருடைய பாசத்தை நீக்கிச் சர்வஞ்ஞாதி குணங்களைக்கொடுத்துப் பதித்துவமாக்கலின். அது; “சுழலார் துயர்வெயிற் சுட்டிடும் போதடித் தொண்டர் துன்னு - நிழலாவன வென்று நீங்காப் பிறவிநிலைகெடுத்துக் - கழலா வினைகள் கழற்றுவ கால வனங்கடந்த - வழலா ரொளியன காண்கவை யாற னடித்தலமே” (தேவாரம்) என்பதனாலும், “மதிக்குந்.............திருவடியென் றலைமேல் வீற்றிருப்பக் - கதிக்கும் பசுபாசமொன்றுமிலோம்......................கொண்டன்றே” (திருவாசகம்) என்பதனாலும், “ஆவா........பூவா ரடிச்சுவடென் றலைமேற் பொறித்தலுமே - தேவானவா பாடித்தெள்ளேணங்கொட்டாமோ” (திருவாசகம்) என்பதினானு மறியப்படும். (தே - கடவுட்டன்மை.)

சேர்ந்தார் என்றது ஞானக்கண்ணினாலே மெய்ப்பொருளை யறிந்து அதனோடொற்றுமைப்பட நின்று அத்துவிதமாகப் பாவனை செய்தோர் என்றவாறு. ௩௫௮-வது குறளின் விசேடவுரையில், “அதனைக் காண்கையாவது உயிர் தன்னவிச்சை கெட்டு அதனோடொற்றுமையுற இடைவிடாது பாவித்தல்” எனப்பரிமேலழகரும் கூறுதல் காண்க. “சேர்தல் இடைவிடாது நினைத்தல்” என அவர் கூறியதூஉம் இக்கருத்து நோக்கியே. இதுவே அத்தியாசிரமபாவனை எனவும், சிவோகம்பாவனை எனவும் கூறப்படும். மெய்ப்பொருள் ஞானக்கண்ணினாலேயே அறியப்படும் என்பதை, “ஊனக்கண் பாசமுணராப் பதியை - ஞானக்கண்ணினிற் சிந்தைநாடி” (சிவஞானபோதம்) எனவும், “பாசஞானத்தாலும் பசுஞானத்தாலும் பார்ப்பரிய பரம்பரனைப் பதிஞானத்தாலே - நேசமொடு முள்ளத்தே நாடி” (சிவஞானசித்தியார்) எனவும், [illegible] । [illegible] । (சிவாகமம்) எனவும், “மைப்படிந்த...............அப்படியு மந்நிறமு மவ்வண்ணமு மவனருளே கண்ணாகக் காணினல்லா - லிப்படிய னிந்நிறத்த னிவ்வண்ணத்த னிவனிறைவ னென்றெழுதிக் காட்டொணாதே” எனவுங் கூறுமாற்றானே அறிக. அதனோடொற்றுமைப்படநின்று அத்துவிதமாகப் பாவித்தலாவது அதுவேறு தான்வேறு என்னுந் துவித பாவனையை யொழித்து அதுவே நானென்று அத்துவிதமாகப் பாவித்தல். அது “𑌶𑌿𑌵𑍋𑌽𑌨𑍍𑌯𑍋𑌽𑌹𑌮𑌥𑌵𑌾𑌨𑍍𑌯𑌃 𑌪𑍃𑌥𑌗𑍍𑌭𑌾𑌵𑌂 𑌵𑌿𑌵𑌰𑍍𑌜𑌯𑍇𑌤𑍍 । 𑌯𑌃 𑌶𑌿𑌵𑌃 𑌸𑍋𑌽𑌹𑌮𑍇𑌵𑍇𑌤𑌿 𑌸𑌦𑌾𑌦𑍍𑌵𑍈𑌤𑌂 𑌭𑌾𑌵𑌯𑍇𑌦𑍍𑌬𑍁𑌧𑌃” (சர்வஞானோத்தரம்) எனவும், “கண்டவிவை யல்லேனானென் றகன்று

காணுக் கழிபரமு நானல்லே னெனக்கருதிக் கசிந்த - தொண்டினொடு முளத்தவன்று னின்றகலப் பாலே சோகமெனப்பாவிக்கத் தோன்று வன்வே றின்றி..................பண்டை மறைகளுமதுநா னென்று பாவிக்கச் சொல்லுவதிப் பாவகத்தைக் காணே” (சிவஞானசித்தியார்) எனவும் கூறியவற்றானே பெறப்படும். நாயனார் “பிறப்பென்னும் பேதைமைநீங்கச் சிறப்பென்னுஞ்-செம்பொருள்காண்பதறிவு” எனக் கூறியதூஉம் இப்பாவனையையே.

எல்லாவுலகிற்கு மேலாய வீட்டுலகென்றது “பிருதுவிசலில வாயு அந்தரிக்ஷலோக தேவலோக சந்திரலோக பிராஜாபதிலோகமென்னும் லோகமெல்லாங்கடந்த பிரமலோக” மென்றவாறு. (இதனைப் பிரமசூத்திர சைவபாடியம் உபநிடதஉபக்கிரமணிகையிற் காண்க.) “[illegible]” என்னும், (வாயுசங்கிதை) சுலோகத்தானும், “𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌲𑍋𑌕𑌮𑌭𑌿𑌸𑌂𑌪𑌦𑍍𑌯𑌤𑍇” என்னும் (சாந்தோக்கியோபநிடதம்) சுலோகத்தானும், “மெய்யருளே யுடையானை விண்டவரேறுவர் மேலுலகே” என்னும் (தேவாரம்) செய்யுளானும், “துஞ்சலிலாவுலகம்” என்னும் (தேவாரம்) செய்யுளானும் கூறப்பட்டனவும் இப்பிரமலோக (சிவலோக) மே.

அழிவின்றிவாழ்வார் என்றது மீளப்பிறவியை நோக்காது நிரதிசய பிரமானந்தத்தோடு மற்றைய வேட்டபோகங்களையு மனுபவித்து வாழ்வார் என்றவாறு. பிரமலோக மெய்தினோர் மீளப்பிறவியை நோக்காரென்பது “𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌲𑍋𑌕𑌮𑌭𑌿𑌸𑌂𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 𑌨 𑌚 𑌪𑍁𑌨𑌰𑌾𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 𑌨 𑌚 𑌪𑍁𑌨𑌰𑌾𑌵𑌰𑍍𑌤𑌤𑍇” (சாந்தோக்கியோபநிடதம்) என்பதனானும், “𑌅𑌨𑌾𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌶𑍍𑌶𑌬𑍍𑌦𑌾 𑌅𑌨𑌾𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌶𑍍𑌶𑌬𑍍𑌦𑌾𑌤𑍍” (வேதாந்த சூத்திரம்) என்பதனானும், “[illegible]” (வாயுசங்கிதை) என்பதனானும், பிரமானந்தத்தோடு மற்றைய வேட்ட போகங்களையு மனுபவித்து வாழ்வாரென்பது “𑌸𑍋𑌶𑍍𑌨𑍁𑌤𑍇𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍𑌕𑌾𑌮𑌾𑌨𑍍 𑌸𑌹 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌾𑌵𑌿𑌪𑌶𑍍𑌚𑌿𑌤𑌾” (தைத்திரியோபநிடதம்) என்பதனானும், “நிலையுடைய் பெருஞ்செல்வ நீடுலகிற் பெறலாமே” (தேவாரம்) என்பதனானும் அறியப்படும்.

அடிசேர்ந்தாரது உள்ளக் கமலத்தின்கண் இறைவன் செல்வானென்பது உரைப்பிரமாணத்தாற் றெளியப்பட்டதாதலின் தெளிவுபற்றி ஏகினனென இறந்தகாலத்தாற் கூறினாரெனினு மமையும். என்னை? “வாராக் காலத்து வினைச்சொற் கிளவி - யிறப்பினு நிகழ்வினுஞ் சிறப்பத் தோன்று - மியற்கையுந் தெளிவுங் கிளக்குங்காலை” என்பதோத்தாகலின். இங்ஙனமே சிவஞானபோதச் சிற்றுரைகாரரும், “ஏகமாய் நின்றே யிணையடிக ளொன்றுணரப் - போகமாய்த் தான்விளைந்த பொற்பினான்” என்பதில் தெளிவுபற்றி விளைந்த என இறந்த காலத்தாற் கூறினார் எனக்கூறுதல் காண்க. பிறிதோர் கடவுளென்றது அருகனை; அது “பூமிசை நடந்த வாமனை வாழ்த்தி” என்பதனாலறியப்படும். இடைவிடாது நினையாதொழியின் பாசஞானம் வந்து பற்றுமென்க.

சி. கணேசையர்.

௨

உபாத்தியாயர் வகையுஞ் செயலும்.

பண்டைக்காலப் பாடசாலைகளுக்கும் இப்பொழுதைப்பாடசாலைகளுக்கும் உள்ள வேறுபாடுகள் மிகப்பல; அக்காலத்திற் பாடசாலையென வேறு இடமின்றித் தேவாலயம் மடாலயம் உபாத்தியாயர் வீடு ஆகியவற்றிற் கல்வி கற்பிக்கப்பட்டு வந்தது. கற்போர் தொகையும் அங்கங்கு சொற்பஞ்சொற்பமாய் இருந்தது. ஒவ்வோரிடத்திலுங் கற்பிப்போரும் பெரும்பான்மையும் ஒவ்வொருவரே. கற்பிக்கும் முறையும் வேறு; அம்முறையுஞ் சிறிது தூரங் கற்றுத் தேர்ந்தவர்க்கே கற்பிக்க உரியது. “இருவென இருந்து சொல்லெனச் சொல்லி” என்றற்றொடக்கத்தன சான்றாகும். இக்காலத்திலோ அப்படியன்று. பாடசாலைக்கென்று இடங்கள் வேறாகச் சுகாதார விதிகளை அனுசரித்துக் கட்டப்படுகின்றன. அவைகளிற் கற்கும் மாணாக்கர் தொகையும் மிகப்பெரிது. ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலுங் கற்பிக்கும் ஆசிரியரும் அனேகர். அவரெல்லாம் ஒரு திறத்தி

னராகமாட்டார். பல திறத்தினராயே விளங்குவர். அவர் வகையையுஞ் செயலையும் இனி ஆராய்வாம்.

இக்காலப்பாடசாலைகளிற் கற்கும் மாணாக்கரும் வயது தேர்ச்சி முதலியவற்றாற் பல்வேறு திறத்தினரும் தொகையான் மிகப்பெரியருமாயிருத்தலின், அவரைக் கற்பிப்பதற்கும் ஒவ்வொருபள்ளிக்கூடத்திலும் உபாத்தியாயர் அனேகர் வேண்டப்படுகின்றனர். அவருள்ளும் ஒருவரே பாடசாலையை நடாத்தும் பாரத்தை வகிப்பர். அவர் அத்தியக்ஷர் என்றுந் தலைமை உபாத்தியாயர் என்றுஞ்சொல்லப்படுவர். மற்றையோர் அவர் சொற்கமைந்து நடக்கும் உதவியாசிரியரெனப்படுவர். ஒவ்வொரு பாடசாலையிலும் உதவியாசிரியர்கள் அப்பாடசாலைத் தலைமை உபாத்தியாயரது சம்மதியுடனேயே நியோகிக்கப்பட்டவராயிருத்தல் வேண்டும்; இல்லையேல் தலைமைஉபாத்தியாயருக்கும் உதவியுபாத்தியாயர்களுக்கு மிடையில் ஒற்றுமையின்மை உண்டாதல் கூடும். இளைஞர்களாயுள்ள வரையே உதவியாசிரியர்களாக நியோகித்தல் நன்று; சரீர மனமுயற்சிகணிறைந்துள்ளவராகலின்.

உதவியாசிரியர்களாற் செயற்பாலனவாய செயல்வகைகள் இரண்டு. அவற்றுள் ஒன்று ஒருவகுப்புக்குரிய எல்லாப்பாடங்களையும் ஒருவரே படிப்பிப்பது. மற்றது வகுப்பு வகுப்பாகச் சென்று சிலசிலபாடங்களை ஒவ்வொருவரும் படிப்பிப்பது. இவ்விருவகைகளும் வழக்கிலுள்ளன. ஒன்றே சிறந்தது என்றும் மற்றது குறைந்தது என்றுஞ் சொல்லல் பொருந்தாது. ஒவ்வொன்றும் ஒவ்வோர் இழுக்குடைத்து. ஒருவர் ஒருவிஷயத்தை மாத்திரங்கற்பிப்பவராக இருந்தால் அவர் அவ்விஷயத்துக்கும் மற்றவிஷயங்களுக்குமுள்ள தாரதம்மியத்தை மறந்து தாங்கற்பிக்கும் விஷயமே முக்கியமானதென்றெண்ணவும், பிள்ளைகள் தங்கள் மற்றைப் பாடங்களை அலக்ஷியஞ்செய்து அவ்வொரு பாடத்திலுமே கவனம் வைப்பதற்கும் ஏதுவாம். ஒவ்வொரு வகுப்புக்கு ஒவ்வொரு உபாத்தியாயராக நியமிக்கின் இக்குறை வருதல் இல்லை. என்றாலும், இதற்கும் வேறோர் குறையுண்டு. அது ஒருவன் தனக்குத் தெரியாதனவான பாடங்களையும் படிப்பிக்க வேண்டியிருத்தலே. இவ்வகைகளிரண்டுங் கலந்திருப்பதே உத்தமம். பெரும்பான்மையுங் கீழ்வகுப்புகளொவ்வொன்றும் ஒவ்வோர் உதவியுபாத்தியாயன் பொறுப்பிலிருத்தலே அவ்வகுப்பு ஒழுக்கத்திற்குந் தேர்ச்சிக்கும் அனுகூலமாம். மேல்வகுப்புகளில் வகுப்பின் ஒழுக்கத்திற்கு ஒருவர் உத்திரவாதியாயிருப்ப மற்றவர்கள் தாந்தாம் எவ்வெவ்விஷயத்திற் பாண்டித்தியம் பெற்றிருக்கின்றனரோ அவ்வவ்விஷயத்தைக் கற்பிக்கும்படி நியமிக்கப்படல் வேண்டும்.

“இதனையிதனாலிவன்முடிக்குமென்றாய்ந்
ததனையவன்கண்விடல்.”

என்பதனாலும் அறிக.

இனித்தலைமை யுபாத்தியாயர் செய்யவேண்டியது யாதென ஆராய்வாம். தலைமை உபாத்தியாயராவார்கடப்பாடு படிப்பித்தலும் மற்றவர்களின் வேலையை மேற்பார்வை செய்தலும் என இருவகைத்து. அவர் தந்நேரம் முழுமையையும் படிப்பித்தலிலேயே கழித்தல் வேண்டற்பாலதன்று. மற்றை உதவியுபாத்தியாயர்களின் வேலையை மேனோக்கலும் அத்தியாவசியகம். அஃதில்லாவழிவருந்தீமை பல. பாடசாலை சிறிதாயின் தலைமையுபாத்தியாயர் மேற்பார்வையோடுசில பாடங்களைப்படிப்பித்தலுஞ்செய்யலாம். அஃதன்றிப்பாடசாலை பெரிதாயின் படிப்பிக்கும் வேலையை மிகக்குறைத்து மேற்பார்வை செய்தலை அதிகமாகக் கைக்கொள்ளவேண்டும். மேலதிகாரிகளால் வரையறுக்கப்படாவழிக் கற்பிக்கவேண்டிய விஷயங்கள் இன்ன இன்னவென்றும் பாடங்கள் இன்ன முறையிற் றொடர்வனவென்றும் வரையறுத்தலும், அவைகளைக்கற்பிக்கும் நேரசூசிப்பத்திரம் வரைதலும் உதவியுபாத்தியாயர்கள் செய்யவேண்டிய வேலையை அவரவர்க்குக் கூறுபடுத்துக் கொடுத்தலும், மாணாக்கர்களை அவரவர் தேர்ச்சிக்கியைந்த தரங்களில் வைத்தலுங், காலத்துக்குக் காலம் வகுப்புத் தோறுஞ்சென்று சுற்றிப்பார்த்தலும் பரீக்ஷித்தலும், இளைஞர்களும்புதியர்களுமான உதவியாசிரியர்களின் வேலையை மேற்பார்வை செய்தலும், பாடசாலையதிகாரிகளுக்குப் பாடசாலையை நடாத்தும் விதத்தில் வேண்டுந்திருத்தங்களை யெடுத்துக்காட்டுவதும் இவை போன்ற

பிறவும் தலைமை உபாத்தியாயராற் செயற்பாலதாய் கடப்பாட்டுளடங்குவவாம்.

பள்ளிக்கூடத்தை நடாத்தும் பாரம் முழுதுந் தலைமையுபாத்தியாயரிடந் தங்கியிருப்பினும் அவர் தம் உதவி உபாத்தியாயர்களுடன் சூழ்ந்து அவர்களின் ஆலோசனையையும் அறிதல் மிக வேண்டற் பாலது. ஒவ்வொருவருந் தத்தங் கடனைச்செய்தலோடு மற்றவர்கள் செய்கையையும் ஒப்பநோக்கல் மிகுந்த நன்மை பயப்பதாகும். வினைசெய்யுந்திறங்களைத் தான் அறிந்தவிடத்தும் அப்பொழுது நடக்கின்ற உலகவியற்கையை அறிந்து அதனோடு பொருந்தச் செய்ய வேண்டும். ஒவ்வொரு பாடசாலையுபாத்தியாயர்களுங் காலத்துக்குக் காலந் தந் தலைமை உபாத்தியாயரின் அறையிலாதல் வேறெவ்விடத்தாதல் ஒன்றுகூடல் வேண்டும். அவ்வித கூட்டங்களில் ஒவ்வொருவருந் தாந்தாம் அவதானித்திருக்குங் குறிப்புக்களையும் உபாயங்களையும் பிள்ளைகளைப்பற்றிய அபிப்பிராயங்களையும் வெளியிட்டு ஒப்புநோக்கி மேற்செய்யவேண்டியவற்றை ஆலோசிக்கலாம். சில பாடசாலைகளில் ஒவ்வொரு வாராந்தத்திலும் உபாத்தியாயர்கள் ஒன்றுகூடிச் சென்ற வாரத்துச்செய்யப்பட்ட வேலையின் கணுள்ள குறைவுகளை யாராய்தலும் அடுத்த வாரத்துவேலையைக் குறித்து ஆலோசித்தலுஞ் செய்வது வழக்கம். இவ்வழக்கம் மிகுந்த அனுகூலகரமென்பதிற் சிறிதும் ஐயமின்று. இவ்வித கூட்டங்கள் இல்லையேல் உபாத்தியாயர்கள் கைக்கொள்ளுஞ் சிக்ஷாபாயங்கள் தம்முள் ஒரு சிறிதும் ஒற்றுமையுறாது ஆளுக்கு ஒவ்வொருவிதமாக இருக்கும். அதுமட்டோ! தலைமையுபாத்தியாயர் தன் உதவியுபாத்தியாயர்களைத் தன்னினீங்காமல் அணைத்தற்கும் ஏற்றவழி யிதுவேயாம். தலைமை உபாத்தியாயர் மற்றை உபாத்தியாயர்களோடு தழுவி நடக்குங்கால் தன் கௌரவங்குறையாது பாதுகாத்தலும் வேண்டும்.

"கருமஞ்சிதையாமற்கண்ணோடவல்லார்க்
குரிமையுடைத்திவ்வுலகு" என்றார் நாயனாரும்.

தி. சதாசிவஐயர்.

திருவாசகம்.

சில அருந்தொடர் விளக்கம்.

"மரகதக்குவாஅன்......வாணுதற்பெண்ணெனஒளித்தும்."

மேற்கண்டபாகம் திருவண்டப்பகுதியில் இருக்கின்றது. இதனை அர்த்தம் செய்வதில் அதிக கஷ்டமிருக்கிறது. திருவாசகத்திற்குப் பதவுரைசெய்திருக்கின்றவரும், ஆங்கிலேய பாஷையில் மொழிபெயர்ப்பு ஆசிரியருமான போப்பு என்பாரும் இதன்பொருளைச் சரியானபடி அறிந்திருக்கின்றனர் என்று எனக்குத்தோன்றவில்லை. இப்பாகத்தில் ஸ்ரீமாணிக்கவாசகர் அருமையானவும் உயர்வானவுமான விஷயங்களை உபதேசித்துள்ளார்.

விஷயம் :—பக்தியின் உயர்வு.

௧. "மரகதக்குவாஅன்பாமணிபிறக்கம்" இந்த அடியைப் பின்னால் வருகின்ற ௩-ம் அடியுடன்சேர்த்து, "திசைமுகனுக்கு" அடைமொழியாக வழக்கமாய் அர்த்தம் செய்திருக்கிறார்கள்; இது சரியன்று. "தேடினர்" என்று பன்மைவினை வருகிறது. அதனால், திசைமுகனைத்தவிர வேறு ஓர் எழுவாயும் இருத்தல் வேண்டும். "மரகத........பிறக்கம்" என்பது பச்சைநிறமுள்ள விஷ்ணுவைக் குறிப்பிடுகின்றது. "பச்சைமா மலைபோல்மேனி பவள்வாய் கமலச் செங்கண்." என்ற தொண்டரடிப் பொடியாழ்வார் அருளிச்செய்த தொடர் இங்குகவனிக்கத்தக்கது. ஆக முதன்மூன்று அடிகளுக்குக் குறிப்பு அர்த்தம் என்னவென்றால்,பச்சைமேனியையுடைய விஷ்ணுவும் திசைமுகனும் முறையே வராக அவதாரமாகவும் அன்னப் பறவையாகவும் பரமசிவனின் அடிமுடியைத் தேடினர்; அவர்களாற் காணமுடியவில்லை.

௨. "உறையுளி ஒற்றி முயன்றவர்க் கொளித்தும்"

உறையுளி: உறை+உள்+இ=கோசத்துக்குள்ளானவன் என்ற அர்த்தம் மிகவும் நன்றாயிருக்கிறது. தைத்திரீய உபநிஷத்தில் முத

லாம் வல்லியில் பிரணவத்தின் மஹிமையைப்பற்றிச் சொல்லுமிடத்து, "ப்ரஹ்மணஃகோஶோஸி" என்ற வசனம் உள்ளது. இதன் பொருள்:...பிரஹ்மத்தின் கோசம், அதாவது உறையாக நீ (பிரணவமே) இருக்கிறாய் 'உறையுளி' என்றால், பிரஹ்மத்தின் மஹா உத்கிருஷ்டமான பிரதீகமான "ஓம்" என்றதனுள் அந்தர்கதமாகவுமுள்ளவர் என்பது பொருள். இவ்விடத்தே வாக்கியத்தின் அர்த்தம் என்னவென்றால், பரமசிவனைப் பிரணவஸ்வரூபியாக உபாசிக்கின்றவருக்கும் அவர் தம்மை ஒளித்துக்கொண்டார் என்பதாம்.

௩. "ஒற்றுமைகொண்டு......உறைப்பவர்க்கொளித்தும்"

கஷ்டத்துடனே சித்தவிருத்திகளை ஒடுக்கி, உள்ளே நோக்கி இந்நிலையில் இருக்கின்றவர்க்கும் பரமசிவன் ஒளித்துக்கொண்டார்.

௪. "இத்தந்திரத்திற்காண்டும்..........."

இது வெளிப்படையாக இருக்கின்றமையால் விவரிக்கவில்லை.

௫. "முனிவரைநோக்கி...வாணுதற்பெண்ணெனஒளித்தும்."

இது கேன உபநிஷத்தின், ௩-ம் கண்டத்தில் சொல்லியிருக்கிற கதையைப்பற்றியது. தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் நேர்ந்த சண்டையில் தேவர்கள் பக்ஷமாகப் பரமேசுவரன் இருந்து அசுரர்களை வென்றார். தேவர்கள் தாங்களே தங்களுடைய மஹிமையால் வென்றோமென இறுமாப்புக்கொண்டார்கள். அதைத் தவிர்க்கும் பொருட்டு தேவர்கள்முன் ஆகாசம் பூமி இரண்டும் அளாவிய ஒரு யக்ஷஸ் ஸ்வரூபமாகப் பரமசிவன் தோன்றினார். அவரைத்தேவர்கள் அறியமுடியவில்லை. அக்கினிபகவானை அதை இன்னதென்று அறிந்து வரும்படியாக அனுப்பினார்கள். அவர் அறியக்கூடவில்லை. பின்பு வாயுபகவானை அப்பினார்கள். அவரும் அறியக்கூடவில்லை. பின்பு இந்திரனை அதை அறிந்துவரும்படி கேட்டுக்கொண்டார்கள். இந்திரனும் உடன்பட்டு அறிய முயற்சித்தார். அந்த யக்ஷஸ் தோன்றியவிடம் சென்றார். அது திரோதானமாயிற்று. அந்தவிடத்தில் ரூபலாவண்யமுள்ள தோஜோமயமான ஒருஸ்திரீ தோன்றுவாளாயினள். இந்தக்கதையை ஸ்ரீ மாணிக்கவாசகர் இந்தப்பாசுரத்தில் சொல்லியிருக்கின்றார். முதலில் யக்ஷஸ் "ஆணாகத்தோன்றினார்." தேவர்களுக்கு இன்னதென்று புலப்படாமையால் அலியெனப்பின்பு மாறினார் என்றும், பின்பு அலியும் மறைந்து வாணுதல் பெண்ணுருவத்தில் பரமசிவன் தம்மை ஒளித்துக்கொண்டார் என்றும் மாணிக்கவாசகர் அருளிச்செய்திருக்கின்றார்.

ஆத்மநாதன்.

உ

சிவமயம்.

ஒட்டக்கூத்தர் ஈட்டியெழுபது பாடிய வரலாறு.

"ஈட்டியெழுப"தென்பது "கவிச்சக்கரவர்த்தி" யென்று உலகம் புகழக்கீர்த்திவகித்திலங்கிய ஒட்டக்கூத்தர், தம்மரபினராகிய *"செங்குந்தர்"களின் வேண்டுகோளின்படி தலைப்பிள்ளைகள் ஆயிரத்தெண்மர் சிரங்களை ஆசனமாகப்பெற்று, அதன்மீ தெழுந்தருளித் தங்குலத்திற்குரிய ஆயுதமாகிய † ஈட்டியைச்சுட்டிப் பாடியதோர் பிரபந்தமாம். இங்ஙனம் தெய்வீகம் விளங்கப்பாடும் பேரறிவாளராகிய இப்பெருந்தகையாரது மெய்வைத்தவரலாறு இக்காலத்துப் பல்வேறுவகையான் வழங்கப்படுகின்றது. அவற்றினதுண்மை கண்டறிவது பிரயாசையாகவே முடிகின்றது. செங்குந்த மரபினர் பெருமையாதிய விசேடங்கள் அன்னார்க்குரிய சிறந்த நூல்களாம் "கந்தபுராணம்" "சேங்குந்தர்புராணம்" "வீரநாராயணர் விஜயம்" முத

---

* செங்குந்தர் - பகைவரது உதிரத்தாற் சிவந்த' ஈட்டியையுடையவர்.

† ஈட்டியென்னும் ஆயுதத்தை, செங்குந்தர்கள் பார்வதியாரிடத்துப் பெற்றாரென்பதை,

"சலம்பிரியாத் சூட்டேச் சாவற் கேதனு மெஞ்ஞான்றும்
வலம்பிரியாத செவ்வேட் குறுதுணையாக மன்னுட்
குலம்பெறவந்தா ரென்றங் கொடியுமை தந்தவீட்டி
நலம்பெறு மிந்தக் குந்தர் பரிசுபோ லீட்டியுண்டோ." (16)

ஈட்டியெழுபது.

எனவருவதாலுணர்க.

லியவற்றில் நன்கு விளக்கப்பட்டிருக்கின்றன. அதனை ஆண்டுக்கண்டுணர்க. இனி ஈட்டியெழுபது பாடியவரலாறும், அதனைப்பாடினார் மேவருஞ்சிறப்பும், பாடப்பட்டவிடமும், காலமும், அதனைக்கேட்டிருந்தசோழ னின்னானென்பது மாதிய விஷயங்கள் முறையே விளக்குவாம்.

கி. பி. 10-ம் நூற்றாண்டினில், சோழதேசத்தைப் பல்லாற்றானுஞ் சிறப்பெய்த ஆட்சிபுரிந்த சோழமன்னர்பலருள், கி. பி. 1118 முதல், 1200 ஆண்டுவரை அரசுசெலுத்திய விக்கிரமன்தொடங்கி, இராசராசன் இறுதியாகக்கூறும் மூவரசர் காலத்திலேதான் ஒட்டக்கூத்தர் ஒப்புயர்வற்ற திப்பியப்புலவரென யாவரும்போற்றிப் பணிந்தேத்தத் திகழ்ந்திருந்தனர். இவர் இங்ஙனம் சிறத்தற்குக் காரணம் பலவுண்டெனினும், புலமையாற்றலே முதன்மையெனக் கொள்ள வேண்டும். இவ்வாறு கொள்வதற்குத் தம்மை அபிமானித்துக் காத்த சோழவள்ளல்களைப் பலமுறை பாமாலைகள்சூட்டி மகிழ்வித்ததேயாம். இவை ஈட்டியெழுபதென்னும் நூலில்,

"தென்னனைச் சேரனைச் சிறுமை சொல்லவும்
மன்னனை வளவனை மகிழ்ந்து பாடவும்"

எனவருதலால், தமிழ் மூவேந்தருட் சோழனையே உயர்த்திப்பாடினாரென்பதுணரப்படும். இங்ஙனம் சோழமன்னர் அபிமானத்திற்குப் பெரிதும் உரியராகி அரசர்க்கொத்த பலவரிசைகளையும், குறைவறச் சிறக்கப்பெற்றுக் * கவிச்சக்கரவர்த்தியென்னும் உயரிய பட்டத்தையும் அடைந்துவிளங்கினர். இவ்வாறு தமிழகம்புகழ விளங்கியபுலவர் சிகாமணிகளுள், இவரினும்மேம்பட்டு அவ்வரசர்பாற் பெருஞ் சிறப்பெய்தினார், வேறொருவருமிலர்; இதனைப்புலவர்புராணமுடையார்,

---

* இவர்க்கு இப்பெயருளதென்பதை, தக்கயாகப்பரணி யிறுதிக்கண் 'வாழி கவிச்சக்ரவர்த்தி கூத்தனே:' 'கூத்தன் கவிச்சக்ரவர்த்தி வாழியே' எனவருவனவற்றானறிக. சயங்கொண்டார் கலிங்கத்துப்பரணி பாடியும், செட்டிகண்மேல் 'இசையாயிரம்' பாடியும், கவிச்சக்ரவர்த்தி என்று அபயனாற் சிறப்புப்பெயர் பெற்றாற்போல, இவர் அரும்பைத் தொள்ளாயிரம் பாடியும், தக்கயாகப்பரணி பாடியும், உலா முதலியனபாடியும் விக்கிரமசோழன் முதலியோரால் அச்சிறப்புப்பெயர் புனையப்பெற்றனராவர். (செந்தமிழ்த்தொகுதி உ. பக்கம் சுoச)

"எத்தனை புலவரோமுன் னிறைவரை வயஞ்செய்துற்றா
ரத்தனை பேருளாரு மருந்தமி ழொட்டக் கூத்த
னொத்தவர் முடிமேல்தந்தா ளுறவைத்த தில்லையில்லை
யித்தனை யதிட்டமன்னோற் கிசைந்தமை யேற்றந்தானே."

என விளக்கியவாறறிக. உபயகுலோத்தமனென விளங்கியிருந்த அபயன் பேரனும், விக்கிரமசோழன் மகனும்ஆகிய, "குமாரகுலோத்துங்கன்" பட்டாபிஷேக காலத்தில் அவனுக்கு க்ஷேமமுண்டாகும்படி கூத்தர்,

* "ஆடுங் கடைமணி நாவசை யாம லகிலமெல்லா
நீடுங் குடையிற் றரித்த பிரான்"

என்று பாடத்தொடங்கி முடிக்குமுன், அச்சோழன் தமக்காசிரியர் முறையிலிருக்குங்கூத்தர் தம்மைத்துதித்தல், மரபல்லவென்றுகருதி எஞ்சிய பகுதியை,

—கித்தநவம்

"பாடுங் கவிப்பெரு மானொட்டக் கூத்தன் பதாம்புயத்தைச்
சூடுங் குலோத்துங்க சோழனென் றேயென்னைச் சொல்லுவரே."

(தமிழ்நாவலர் சரிதை)

என்றுபாடிச் சிறப்பித்ததை முருகதாசர், தமது புலவர் புராணத்தில் எடுத்தாண்டனர் என உணர்க. இப்புலவர் காலநிர்ணயத்தையும், சிலவிசேட வரலாறுகளையும், செந்தமிழ்த்தொகுதி 2. 3ல் பக்கம் 393,439ல் பத்திராசிரியரவர்கள் "புகழேந்தியொட்டக்கூத்தர்" என்னும் மகுடவாயில் விளக்கியிருப்பதால், மீண்டும் அதனையே இங்குவிரிப்பது மிகையாகுமென்று நிறுத்தப்பட்டது.

---

* விநோதரசமஞ்சரி, தனிப்பாடற்றிரட்டு முதலியவைகளில்,

—இந்தநீணிலத்திற்

"பாடும் புலவர் புகழொட்டக் கூத்தன் பதாம்புயத்தைச்
சூடுங்..சொல்லுவரே.'

எனவரும் பாடலில், தனிச்சீரும் மூன்றாமடியும், வேறாகக் காணப்படுகின்றன. கூத்தர் பாடல்களில், இதுபோன்ற பிறழ்வுகளும், புனைந்துரைகளும் பலவுள. விரிக்கிற்பெருகும்.

இனி இப்புலவர்பிரானுக்கு "ஒட்டக்கூத்தர்" எனப் பெயர்சிறந்ததானது செங்குந்தரது அற்றதலைகளாகிய சிங்காதனத்தமர்ந்து "ஈட்டியெழுப" தென்னும் நூலைப்பாடிப்பின், அற்றதலைகள் ஒட்டப்பாடியதனாலும், விக்கிரமசோழன் திருமுன்னர் இவர் முதன்முதல் எய்தியபோது அவன் இவரது "அரும்பகைத்தொள்ளாயிரத்து ஓர் செய்யுளைத் தனக்கு ஒட்டப் பாடச்சொல்லியதனாலும், அங்ஙனம் பலமுறை ஒட்டப்பாடிய சிறப்பான் ஒட்டக்கூத்தர் எனப் பெயர்பெற்றனரென்ப. ஒட்டம் என்பது பந்தயம்வைத்துப் பாடுதலென ஒருபொருளுண்டென்பது யாழ்ப்பாணத்து அகராதியிற் கண்டது.

விக்கிரமசோழ னுலாப்பாடியபோது ஒருகண்ணியை யொட்டிப்பாடென்றபோது கூத்தர் பாடியது.

> * கையு மலரடியுங் கண்ணுங் கனிவாயுஞ்
> செய்ய கரிய திருமாலே—வைய
> மளந்தா யகளங்கா வாலிலைமேற் பள்ளி
> வளர்ந்தாய் தளர்ந்தாளென் மான்.'

அரும்பகைத் தொள்ளாயிரம் பாடும்போது விக்கிரமசோழன் கேட்டு ஒருகவியை ஒட்டச்சொல்லென்று சொன்னபோது கூத்தர் பாடியது.

> † "நடித்தது நச்சர வுச்சியி னுச்சி மதிலிலங்கை
> பிடித்தது வென்ற திருபது தோள்பதி னெண்பகலே
> முடித்தது பாரதம் வீரப் புலிவைப்ப மூரிச்செண்டா
> லடித்தது பொற்கிரி விக்ரம சோழ வகளங்கனே.'

எனத் தமிழ்நாவலர் சரிதையிற் காணப்படும் செய்யுட்களான் இவர் ஒட்டப்பாடுதலிற் சிறப்புடையாரென்பது தெளியப்படும். ஒட்டக்கூத்தர் என்று பெயர்சிறந்த காரணமிதுவாக, இதனைச் சிலர் வேறாகக் கூறுதலுமுண்டு.

---

* இதன் முதலடியிரண்டும் விக்கிரமசோழனுலா ௧௫௮-வது கண்ணியிலும், அதன் இறுதிவெண்பாவிலும் காணப்படுகிறது. 'தளர்ந்தாளிம்மான்' எனவும் பாடம்.

† இது முத்தொள்ளாயிரம், வச்சத்தொள்ளாயிரம், சயங்கொண்டார் செட்டிகண்மேற் பாடிய இசையாயிரம் என்பன போல்வதொன்றாம். இலக்கண விளக்கப்பாட்டியல் ௪௮-ஞ் சூத்திர உரைக்கண் 'அரும்பைத் தொள்ளாயிரம்' என ஒருநூல் காட்டப்பட்டது. இதுவேபோலும். (செந்தமிழ்த் தொகுதி ௨. பக்கம் ௩௧௮.)

இனிக், கலைமகள் அருள்பெற்ற வரகவியாகிய ஒட்டக்கூத்தர், ஒரு சமயத்துத் "திருபுவனம்" என்னும் ஊரின்கணுள்ள தமதுபெருநண்பினரான "சோமன்" என்பவனைக் காணவேண்டிச் சென்றிருந்தாரென அறியப்படுகிறது. அங்ஙனம் சோமன்மனைக்குச் சென்ற சமயம் இது போழ்தென அறியக் கூடவில்லை. சோமன் மனைக்கண், இவரிருந்த போது, ஆலூர்ச் செங்குந்தர்கள், கூத்தர்பால் பாடல்பெற வேண்டுமென்னும் ஆவலுடன் புலவர் பெருமானைத் தக்கவாறு சென்று கண்டுகொண்டனர். கூத்தரும் அவர்கள் வரவிற்கு ஆனந்தங்கொண்டு அவர்களுடன் அளவளாவியிருந்தனர். இங்ஙனமிருக்குமிடையில், செங்குந்தர்கள் கூத்தரை நோக்கிப் புலவரேறே! வேளாளர்க்கு *ஏரெழுபதும், வன்னியர்க்குச் †சிலையெழுபதும், செட்டிகட்கு ‡ இசையாயிரமும், அவரவர் மரபின் இயலை விளக்குவதாயிருக்கின்றது. அதுபோல் நம்மரபினர்க்கும் நீவிர் ஒரு நூல்செய்து நமது குலவளத்தைச் சிறப்பிக்கவேண்டும் என்று வேண்ட புலவர் அவர்களை நோக்கி ஐயன்மீர்! இயல்பிற்றானே பல சிறப்போடுங்கூடி விளங்கும் நமது குலவண்மையைப்பற்றிப் பாடுவிக்கவேண்டில், நம்மினுமுயர்ந்த வருணத்தனொருவனால் பாடுவித்தலழகு. நம்மிற்றாழ்ந்தோனாற் பாடுவித்துக்கொள்ளுதலழகன்று. ஆகவே நம்மை நாமே சிறக்கப்பாடிக்கொள்வது அதனினும் குறைவன்றோ? இதனை நீங்கள் உய்த்துணர்மின்கள், எனக் கூறி அவர்களிடத்து விடைகொண்டனராகக், கருதிய கருமம் கைகூடாதொழிந்தமைக்குப் பெரிதும் வருந்திய இவர்கள் முடிவில் பெருஞ்சினம் கொண்டவராகி "இப்புலவன் நமது மரபினனாயிருந்தும், நமது மரபின் பிரபாவத்தை விளக்கவல்ல ஓர் பிரபந்தம் பாடித்தரும்படி கேட்டுக்கொண்டால், நம்மின் மேலான வருணத்தானொருவனைக்கொண்டு பாடல்பெறும்படி கூறிவிட்டானல்லவா? இவ்வுலகிற் புன் கவிகளாயுள்ளோர் வெளிப்படின், அவர்களை எனது வீரவாளால் பொன்றுவிப்பேனென்றோர் வெற்றிக் கொடித்தம்பம் நாட்டித் தான் கற்றுள்ள கல்வியின் மாத்திரம் அபிமானம் வைத்துள்ள இவன், தான் பிறந்துள்ள குலத்திற் சற்றும் அபிமானமில்லாதவனாயிருக்கின்றான். இத்தகையனை

---

* இது கம்பர் பாடியது. † இது கம்பர் பாடியது.

‡ இது சயங்கொண்டார் பாடியது.

நாம் இவ்வுலகிலிராதபடி கொன்றுவிடுவதே சரியென்று,, தங்களுக்குள் நிச்சயித்துக் கொண்டவர்களாய் உடனே வளை, தடி, வாள், முதலிய ஆயுதங்களேந்தி அவரிருக்குமிடத்தை நாடிவந்தார்கள். அதுகண்ட கூத்தர் திடுக்குற்று பயத்தால் சோமன் பாலோடி அடைக்கலம் புகுந்தாரென்ப.

இவை "தமிழ் நாவலர் சரிதையில்" பழிகாரர் தொடர்ந்தபோது கூத்தர் சோமன்வாசலிலே ஓடிச்சொன்ன கவிஎன்னுந்தலைப்பின் கீழ்,

"அடையென்பார் தள்ளென்பா ரன்பொன் றிலாமற்
புடையென்பார் தங்கடைக்கே போகேன்—கொடை யென்றுன்
முந்துஞ்சோ மாபுவனை முன்னவனே நின்கடைக்கீழ்
வந்துஞ்சோ மாதலான் மற்று.,,

எனக் காணப்படுகிறது.

சோமன் தன் பால் அடைக்கலம்புகுந்த புலவரைக் காத்தல் வேண்டி, தன்னொருமகனையும் பேழையுள் வைத்துத் தன்மனையைச் சூழ்ந்த அப்பழிகாரர் பால் உய்த்து, "இதன் கணுள்ள உங்கள் புலவனாகிய கூத்தனை நீங்கள் விரும்பியவாறு செய்மின்" எனக் கூறிவிடுப்ப, அப்பழிகாரர்கள் அப்பேழையைத் தனித்தவிடத்துக் கொண்டுபோய்த் திறந்து பார்த்தவளவில், தாம் கருதிய புலவரைக் காணாமற் சோமன்மகனாதல்கண்டு, சோமனது வண்மையை வியந்து அம்மகனைக் கொலைசெய்யாது விடுத்துச் சோமன் பால் எய்தி நிகழ்ந்த துரைக்கச் சோமன் பழிகாரரை நோக்கி நீங்கள் புலவன் விரும்பியபடி செய்தால் பாடாதிரார் என்றுரைத்தனர். இதனிடையில் கூத்தர், நிகழ்ந்த விஷயமுணர்ந்தவராய்ச் சோமன்பெருமித குணத்திற்கும், தம் பால் வைத்துள்ள பேரபிமானத்திற்கும், பெரிதும் வியந்து அவனைப்புழ்ந்து பாடினாரென்ப.

இவை தமிழ்ச் செய்யுட் சிந்தாமணியில்,

"தன்னுடைய தேவியர்க்குத் தார்வளவன் றானுரைப்ப
துன்னுடைய சீர்த்தி யுயர்நலமே—துன்னுபுகழ்ச்
சோமா திரிபுவனத் தோன்றலே நின்புகழை
யாமா ருரைக்க வினி."

என வருதலானறிக. (தொடரும்.),

சி. கு. நாராயணசாமிமுதலியார்.
கோவை.

உ

கதாசரித் சாகரம்.

௫-வது சதுர்த்தாரிகாலம்பகம் ௧-வது தரங்கம்.

[ஸ்ரீமத்-வீராசாமி ஐயங்காரவர்கள் மொழிபெயர்த்தது.]

(முற்றொடர்ச்சி.)

சிவனும் தானம்வாங்கினவுடன் புரோகிதனைப்பார்த்து இதன் விஷயம் யாதொன்று மெனக்குத்தெரியாது, நீர்தானிதனையறிந்திருக்கின்றீர்; ஆதலால நீரேவைத்துக்கொள்ளுமென்று அவன்கையிற் கொடுக்க வுடனே புரோகிதன் யான்முன்பே யொப்புக்கொண்டிருக்கின்றேனே; உமக்கேன்கவலை இவ்விஷயத்திலென்றுகூறி அதனைப் பெற்றுக்கொண்டான். உடனே சிவன் மாதவனைநோக்கி மாதவா! உன்னிஷ்டம் நிறைவேறுமென்று ஆசீர்வதித்துவிட்டுத் தன் புது மனைவியிருக்கும் வீட்டிற்கேகினன்.

புரோகிதனும் போலிமாணிக்கக்கற்கள் நிறைந்த பெட்டியைத் தனது கோசக்கிரகத்திற் கொண்டுபோய் வைத்தான். மறுதினம் மாதவன் நோயென்னும் வியாஜத்தை மெல்ல விலக்கிவிட்டுத் தான் செய்த மகாதானத்தின் ப்ரபாவத்தினால் தனது ரோகம் முற்றிலும் நீங்கிற்றென்று பேசிக்கொண்டிருக்கும்போது தன்பக்கத்தில் புரோகிதன்வர அவனைப்பார்த்துத் தர்மகாரியத்திற்குச் சகாயமாயிருந்தவும்மாலன்றோ யானிந்த ஆபத்தினின்றும் விடுபட்டேன். உமக்கு யாது கைம்மாறு செய்யப்போகிறேனென்று புகழ்ந்துகொண்டே சிவனிடம் சென்று நமஸ்கரித்து நின்று வணக்கத்துடன் இந்த மகானுடைய பிரபாவத்தினாற்றானிந்தச் சரீரமிருக்கின்றதென்று சொல்லி யாவருமறியும்படி கூறி வெளிப்படையாகவே சிவனோடு சிநேகித்திருந்தான். இவ்வாறு சிலநாட்கழிந்தபின் சிவன் புரோகிதனைக் குறித்து நானிவ்வித மெத்தனை நாளுமது கிரகத்திலேயே புஜித்துக் கொண்டு காலங்கழிப்பது. ஆதலாலாபரணங்களனைத்தையும் நீரே வைத்துக்கொண்டு அவற்றின்கிரயத்தொகையையெனக்குக்கொடுக்கீ

வேண்டும். ஆனாலவை விலைமதிப்பிற்கடங்காதனவென்றால் உம்மிடத்திலிருக்கின்றபொருள்களை அவற்றின் கிரயத்தொகையாகக்கொடுத்தாலும் பெற்றுக்கொள்ளுகிறேன் என்றனன். அதைக்கேட்டுப் புரோகிதன் அவ்வாபரணங்கள் விலைமதிப்பிற் கடங்காதனவென்று கருதி இதுதான் சமயமென்று தன் கையிலுள்ள பொருள்களனைத்தையுமவற்றிற்கு விலையாகக்கொடுத்துவிட்டு இப்படிச்செய்துகொண்டதற்காக முறியொன்று வேண்டுமென்று சிவனிடத்தினின்றுமவன் ஸ்வஹஸ்தமான பத்திரமொன்று வாங்கிக்கொண்டதுடன் தானும் தன்கைப்பட ஒரு முறியெழுதிச் சிவன்கையிற்கொடுத்தபின்பு இருவரும் தனித்தனி வேறு வேறு கிரகத்தில் வசித்துவந்தனர். பின்பு சிவனும்மாதவனுஞ் சேர்ந்துகொண்டு புரோகிதன்பொருள்களைத் தங்களிஷ்டப்படி அனுபவித்துக்கொண் டவ்வூரிலேயிருந்தனர். இவ்வாறு சிலகாலங்கழிந்தபின் ஒருநாள் புரோகிதனுக்குப்பணம்வேண்டியிருந்தமையா லவ்வணிகளிலொன்றை விக்கிரயஞ் செய்வதற்காகக் கடைவீதியிற்கொண்டுசென்று இரத்தினங்களின் உண்மைதெரிந்த வணிகர்களிடம் காண்பிக்க அவர்களதனையுற்றுநோக்கியதும் ஓகோ! இஃதெவன்செய்த கிருத்திரிமம்; வேலைப்பாடு நன்றாயிருக்கின்றது. சாதாரணமான பளிங்குக் கற்கள் பற்பலவிதமான சாயங்களேற்றப் பட்டுப் பித்தளையாற் கட்டப்பட்டிருக்கின்றன. மாணிக்கமுமன்று சுவர்ணமுமன்று என்றனர்.

அதைக்கேட்டதும் புரோகிதன் வியாகூலமுற்றவனாக அப்போதேசென்று தன் வீட்டிலிருந்த வாபரணங்களனைத்தையும் கொணர்ந்து அவ்வணிகர்களிடம் காண்பித்தனன். அவர்களவற்றையும்பார்த்து முந்திப்பார்த்த நகைபோல் இவையும் கிருத்திரிமமேயன்றி வேறில்லை சந்தேகப்படவேண்டாமென்று கூறலும், உடனே வச்சிராயுதத்தினா லடிக்கப்பட்டவன்போலாகி யாதொன்றுந்தோன்றாது அறிவிலியாகிய புரோகிதன் அப்போதே சிவனிடம் சென்று உமது நகைகளை வாங்கிக்கொண்டு எனது பணத்தைக்கொடுத்துவிடுமையா வென்று சொல்லலும், அதற்குச்சிவன் என்னிடத்திற் பணமேது எவ்வளவு காலமாயிற்று எல்லாம் குடும்பத்திற் செலவாகிவிட்டதே யென்றான்.

புரோகிதன் மறுபடியும் பணத்தைக்கேட்கச் சிவன் பணங்கொடுக்கமுடியாதென்று சொல்ல, அவ்விருவரும் விவாதத்துடன் மாதவன் முதலானோர் பக்கத்திலிருக்கின்ற சமயத்தி லரசனிடத்திற்செல்ல அரசன் இவர்குறிப்பையறிந்து விசேஷம் யாதென்று வினாவுதலும் புரோகிதன் அரசனைநோக்கி மகாராஜா! இவர்நன்றாய்ச் சாயமேற்றிய மண் கல்களின் துண்டுகளைப் பித்தளையாற்சேர்த்து விசித்திரமாய்க் கட்டப்பட்ட போலிநகைகளடங்கிய பெரியவொரு பெட்டியை என்னிடங்கொடுத்துவிட்டு யாதொன்றுமறியாதவெனது பொருள்கள் யாவுங்கவர்ந்து பட்சித்தனரென்றான்.

அதற்குச்சிவன் அரசே! யான் பால்யமுதல் தபசியாகவிருந்தேன். இவரென்னிடம்வந்து மாதவரென்ற ஒரு இராஜகுமாரன் அசௌக்கியத்துடனிருக்கிறாரென்றும், அவர் விலைமதிப்பற்ற இரத்தினாபரணங்களடங்கிய தன் பொருள்களைத் தானஞ்செய்யக் கருதுகிறாரென்றும், அதனை நீரே வாங்கிக்கொள்ளவேண்டுமென்றும், பிரார்த்தித்துச் சும்மாவிருந்த என்னைத் தானம் வாங்கிக்கொள்ளும்படி செய்தனர். ஆனால் நான் அப்பொழுதே இவரிடத்தில் இரத்தினம் முதலியவற்றின் தன்மை யொன்றுமறிகின்றிலேனென்றும் அவற்றினுண்மையை நீரே யறிந்துகொள்ளவேண்டுமென்றும் உமதுசொற்களை நம்பித்தானிதில் பிரவர்த்திக்கிறேனென்றும் சொல்ல, இவர் அதற்கு நானிருக்கின்றேன் நீரொன்றும் யோசிக்கவேண்டாமென்று கூறினர். ஆதலால் யான் தானம்வாங்கினவுடன் அப்பொருள்கள் அனைத்தையுமிவர் கையிலேயே கொடுத்துவிட்டேன். பின்பு இவரிஷ்டத்தின்படி அவற்றிற்கென்று கொடுத்த கிரயத்தொகையைப் பெற்றுக்கொண்டேனேயன்றி வேறில்லை. இவ்விஷயத்தில் நாங்களொருவர்க்கொருவர் ஸ்வஹஸ்தலிகிதமாய்ச் செய்துகொண்ட பத்திரங்களுமிருக்கின்றன. இப்பொழுது இதற்குமேற்பட்டதுணையை விஷ்ணுதானறிவார் என்று சிவன் சொல்லிமுடித்தவுடன் பக்கத்திலிருந்த மாதவன் புரோகிதனைப்பார்த்து ஐயா, இவ்விதமுத்தரவு செய்யலாகாது தாங்களோ யாவராலும் மதிக்கத்தக்கவர்கள்; என்னிடத்திலென்ன குற்றமிருக்கின்றது; நான் தங்களிடத்திலாவது சிவனவர்களிடத்திலாவது யாதொன்றும் பெற்றுக்கொள்ளவில்லை.

எனது பிதிரார்ஜிதமான பொருள்களை நெடுநாளாக மற்றோரிடத்திலும் வைத்திருந்தேன்; அவற்றையே அப்போது கொண்டுவரச் செய்து இதோ நிற்கின்ற பிராம்மணோத்தமருக்குத் தானஞ்செய்தேன்; ஆனாலப்பொருள்கள் உண்மையில் சுவர்ணங்களாகவும் மாணிக்கங்களாகவும் இருந்தனவே அல்லாமல் பித்தளைகளாகவும் உபயோகமற்ற சாயக்கற்களாகவுமிருந்தால் அவற்றைத் தானஞ் செய்ததனாலுண்டாகும் பலனே எனக்குக்கிடைக்கும். ஆனால்கடக்க முடியாத வியாதியினின்றும் விடுபட்டு யாவருமறியும்படி யான் இத்தன்மையிலிருப்பதினால் கபடமற்ற மனதுடன் தானஞ்செய்தேனென்பதிலெனக்குமுற்றிலும் நம்பிக்கைதான் என்றிவ்விதம் மாதவன் தன் முகத்திற் சிறிதும் வேறுபாடுதோன்றாது சொல்லலும், மந்திரியுடன் அரசன் சிரித்துக்கொண்டவண்ணமே மாதவனைப் பற்றிச் சந்தோஷித்தனன்.

அச்சமயத்தில் சபையிலுள்ளோர்களும் வெளியிற்றோன்றாதுள்ளுக்குட் சிரித்துக்கொண்டு மாதவனுடைய அநியாயத்தினாலாவது சிவனுடைய அநியாயத்தினாலாவது ஒன்றும் நடந்ததாகத்தோன்றவில்லையென்று சொல்லப் புரோகிதன் தன் பொருள்முழுதும் பறிகொடுத்துவிட்டு வெட்கத்துடன்கூடியவனாக வீட்டிற்குச் சென்றான். ஆனால் பேராசையினால் மதிகெட்டால் எந்த விபத்திற்குத் தான் ஹேதுவாகாது.

பின்பு சிவன் மாதவனென்ற விரண்டுசூதாடிகளும் அவ்வூரிலேயே அரசன் சந்தோஷிக்கும்படி அவனது அநுக்கிரகத்தினால் சுகமுற்று நெடுநாளிருந்தனர். இவ்விதமுலகத்தில் ஜாலத்தினால் ஜீவனஞ் செய்கின்ற சூதர்கள் ஓடுகின்றநீரில் செம்படவர் வலைகளைவீசி மீன்களைக் கவர்தல்போலத் தமது நாவாகிய வலைகளை உடன்படிக்கை யென்னும் பற்பலவிதமான கயிறுகளால் விஸ்தரித்து ஜனங்களை வஞ்சிக்கின்றனர். ஆதலால், ஏ பிதா! இப்பார்ப்பானும் கனகபுரியைப் பார்த்ததுபோல் பொய்யுரைகூறி யும்மை வஞ்சித்து என்னை அடையக்கருதுகின்றனன். ஆகையாலிப்பொழுது நீர் என் விவாக விஷயத்தில் விரைதல் செய்யவேண்டாம். யான் கன்னிகையாகவே யிருக்கின்றேன்; இதில்தானென்ன நடக்கப்போகின்றதென்பதைப் பார்ப்போமென்று கனகரேகையென்பவள் தன் பிதாவிடம் சொல்லலும் அப்பொழுதந்தப் பரோபகாரியென்ற வரசன் தன் புத்திரியைப் பார்த்து ஹே பெண்ணே, யௌவன திசையில் விவாஹமாகாது கன்னிகைத் தன்மையோடு நெடுநாளிருப்பது ஒழுங்கன்று; ஏனெனில், உலகத்தில் பிறர்நன்மைகளிற் பொறாமையுடைய துர்ஜனர்கள் பொய்யான தோஷத்தையாரோபித்துச் சொல்லுவார்கள்; அதிலுமுயர்ந்தோர்களிடத்தில் விசேஷமா யபவாதத்தையுண்டுபண்ணுவார்கள். இதற்குதாரணமாய் ஒரு கதை சொல்கின்றேன் கேள்.

கங்காநதிக்குச் சமீபத்தில் குசுமபுரமென்று பிரசித்திபெற்றதொரு நகரமிருக்கின்றது. அதில் ஹரஸ்வாமியென்று பெயருடைய தீர்த்தவாசியான பிராம்மண தபஸ்வி யொருவரிருந்தனர். அவரக்கங்கைக்கரையில் சிறுகுடிசையமைத்து அதில் வசித்துக்கொண்டு பிக்ஷையெடுத்து ஜீவனஞ்செய்து தவம்புரிந்து வந்தனர். அவர் செய்கின்ற தவத்தின்மேன்மையா லுலகத்தோரால் நன்குமதித்தற்குரியராயினர். இப்படியிருக்கும் சமயத்திலொருநாள் அவர் தூரத்தில் பிக்ஷையெடுத்துக்கொண்டுசெல்கின்றபோது அவரைப்பார்த்து அவரது நற்குணங்களில் பொறாமையுடைய துஷ்டனொருவன் பல ஜனங்கள் நடுவில் நீங்களறிகின்றீர்களா? இவன் எப்படிப்பட்ட கபடக்காரனான தபஸ்வியாய்விட்டானென்பதை, இவனாலேயே யிந்நகரத்திலுள்ள குழந்தைகள் பலவு மிராக்காலங்களி லொருவருமறியாதபடி கொன்றுதின்னப்படுகின்றனவென்று சொன்னான். அதைக் கேள்வியுற்றது மவனைப்போன்ற மற்றொருவனு மிஃதுண்மைதான் ஜனங்கள்சொல்ல யானும் கேட்டிருக்கின்றேன் என்றனன். அவ்விருவர்க்கிணங்க மற்றொருவனும் இவர்கள் சொல்கின்றபடி அது இவ்வண்ணமே நடந்துவருகின்றதென்று முடிவாய்ப்பேசினன்.

ஆனால் அதமர்களாலியற்றப்படும் சம்வாதமென்னுஞ் சங்கிலியானது பூஜ்யர்களான மேலானோர்களைப்பற்றிய அபவாதமென்னும் யானையை வேறிடத்திற் செல்லாது பிணிக்கின்றது. அவர்கள்கூறியபடியே அவ்வூர் முழுதும கர்ணபரம்பரையாக அந்த அபவாதம் மிகுதியாய்ப் பரவிற்று. அப்பொழுது அந்நகரத்திலுள்ள யாவரும் ஹரஸ்வாமியென்பவர் குழந்தைகளைத்தையு மழைத்துச் சென்று

கொன்று தின்றுவிடுகிறாரென்று குழந்தைகளைத் தங்கள் தங்கள் வீட்டைவிட்டு வெளியேறாமலிருக்கும்படி செய்தனர். பின்பவ்வூரிலுள்ள பிராம்மணர்கள் தங்கள் சந்ததிக்கே ஹானி வந்துவிடுமென்று பயந்தவர்களாய் ஒன்றுசேர்ந்து ஹரஸ்வாமியை இந்நகரத்தினின்றும் வெளியேற்றவேண்டுமென்று இரகசியமாய்ப்பேசி முடிவுசெய்து கொண்டு நாம் நேரிற்சென்று அவரிடமிதனைச்சொன்னால் கோபத்தினால் நம்மையும் விழுங்கிவிடுவாரென்று பயந்து சிலதூதரையனுப்பினர். இப்படிப்பட்ட தைரியசாலிகளான பிராம்மணர்களின் வல்லமையையென்சொல்வது. அந்தத்தூதர்கள் சென்று தூரத்திலிருந்தே, ஹரஸ்வாமியை நோக்கி, உம்மை யிவ்வூரினின்று வெளியேறிப் போகவேண்டுமென்று பிராம்மணர்க ளெல்லோருஞ் சொல்லுகின்றனர்; ஆதலால் நீரிவ்விடத்தி லிருக்கக்கூடாதென்றுசொல்லவும் இதைக்கேட்ட ஹரஸ்வாமியென்பவ ராச்சரியமுற்றவராய் எதற்காக நான் போகவேண்டுமென்று கேட்க, அவர்களதற்கு நீரிவ்வூரிலுள்ள குழந்தைகளைக்கொன்று தின்றுவருவதுதான் காரணமென்றனர்.

அதைச் செவியுற்ற ஹரஸ்வாமி யிதென்ன பாவமென்று மனவருத்தத்துடன்கூடியவராய் அந்தணர்கட் கறிவிக்கவேண்டுமென்று அவர்கள் சமீபஞ் செல்லுங்கா லிவரைக்கண்டு ஜனங்களெல்லோரும் பயந்தோடத்தலைப்பட்டனர். பிராம்மணர்களு மிவரைக்கண்டவுடன் பயந்து மாடங்களின்மீ தேறிக்கொண்டனர். ஆனால் கர்ணபரம்பரையாய்ச் சொல்லிக்கொள்ளும் பேச்சைக்கேட்டு மயங்கின மனிதர்கள் பெரும்பாலும் விசாரித்துப் பாரார்கள். பின்பு ஹரஸ்வாமியென்பவர் கீழே நின்றவண்ணமே மாடத்தின்மேலே நின்றுகொண்டிருக்கின்ற பிராம்மணர்களைப் பார்த்து ஒவ்வொருவர் பெயரையும் சொல்லியழைத்து ஹே பிராம்மணர்களே! இதென்ன அறியாமை வந்துங்களுக்கிப்போது, நான் யாருடைய வெத்தனை குழந்தைகளை யெவ்விடத்தில் பக்ஷித்துவிட்டே னென்பதைப்பற்றி யொருவரோ டொருவர் ஆலோசித்துப் பார்க்கவேண்டாமா வென்றனர்.

(தொடரும்.)

௨

நல்லொழுக்கம்.

ஆறாம் அதிகாரம்

[ஸ்ரீமத்-இலக்குமணப்போற்றிகள் மொழிபெயர்த்தது.]

(முற்றொடர்ச்சி.)

லக்னென்ற பட்டணத்திற்கு யுத்தஞ் செய்துகொண்டுபோகையில் ஹேவலக் (Havelock) என்பவருக்கு உதவிசெய்யும்படி பலத்த சேனையோடு அவர் அனுப்பப்பட்டபொழுது அவர் உதாரகுணத்தோடு தன்னயம் பாராட்டாமலிருந்ததை நாம் அதிகமாய்க் கவனிக்கத்தக்கதாயுமிருந்தது. அவர்மேலான உத்தியோகஸ்தராகச்சேனாதிபத்தியத்தைத்தாமேவஹிக்க உரிமைப்பட்டிருந்தார். ஆனால் ஹேவலக் (Havelock)என்பவர் முன்னமேசெய்திருந்ததை அங்கீகரித்து அருமையான பிறர்நயம்பாராட்டுங் குணத்தோடு தனக்குப்பிந்திய உத்தியோகஸ்தருக்குள் வாலண்டியர் (volunteer) ஆக ஊழியஞ்செய்யச் சம்மதித்து அந்த யுத்தத்தை முடிக்கும்படியான மகிமையைத் தன்னிலுங்குறைந்த அந்தஸ்துள்ள அவருக்குக் கொடுத்துவிட்டனர். “மேஜர்-ஜெனரல் ஔட்ரேம் (Major General Outram) என்பதாகத் தான் சம்பாதித்துக்கொண்ட கீர்த்தியோடு மற்றொருவர்களுடன் கூட்டாத மகிமையுங்கண்யதையும் பங்கிட்டுக் கொள்ளக்கூடியவர். ஆனால், அதினால் அப்பேர்ப்பட்ட பரோபகார உதாரத்துடன் செய்த தன்னயம்பாராட்டாமையின் மதிப்புக்குறைவில்லை,” என்று லார்ட் கிளைட் (Lord Clyde) என்பவர் சொன்னார்.

ஒருமனிதன் தன்னுடைய வாழ்நாளில் கண்யமாயும் சமாதானமாயும் இருக்கவிரும்பினால், அவன் பெரிய காரியங்களிற்போல அற்பக் காரியங்களிலும் தன்னயமறுப்பைப் பழகுவதற்கு அவசியம் கற்றுக்கொள்ளவேண்டும். மனிதர்கள் சகித்துக்கொள்ளவும் பொறுத்துக்கொள்ளவும் வேண்டுங்குணமானது பகுத்தறிவின் வசப்பட்டிருக்க வேண்டியது. துர்க்குணம், எரிச்சல், தூஷணையாகிய அற்பங்

பிசாசுகளைத் தீர்மானமாகத் தூரத்தில் வைக்கவேண்டும். அவைகள் ஒருமுறை மனதிற்பிரவேசிக்க வழிகண்டால் அவைகள் திரும்ப நுழையவும் அவ்விடத்தில் தங்களுக்குத் தாங்களே நிலைப்பான முயற்சியை ஸ்தாபித்துக்கொள்ளவும் மிகவும் தகுதியுள்ளவைகளாயிருக்கின்றன.

ஒருவன் தன்னுடைய வார்த்தைகளையும் செயல்களையும் அடக்குவதற்குப் பழகுதலானது, ஒருவனுடைய சொந்த இன்பத்திற்கு அவசியமாயிருக்கின்றது. ஏனென்றால், அடியைப்பார்க்கிலும், மிகவும் கடினமாய்ச் சாடக்கூடிய வார்த்தைகள் உண்டு. மனிதர்கள் ஈட்டிகளை உபயோகப்படுத்தாமலே ஈட்டிகளைப்போற் பாயும்படி பேசலாம்.

விஷக்கொட்டுப்போன்றமறுமொழி உதடுவரையெழுந்து வந்து வெளியிட்டால் எதிரியைக் கலங்கும்படி செய்யத்தக்கதைச் சொல்லாமல் நிறுத்துவதற்குச் சிலகாலம் எவ்வளவு கஷ்டமாயிருக்கின்றது. “வார்த்தைகளின் கெடுதியான ஆற்றலினின்றும், கடவுள் நம்மைக்காப்பாராகுக! கூர்மையுள்ள கத்திகளைவிட அதிகமாய் இருதயத்தைப் பிளக்கத்தக்க வார்த்தைகளிருக்கின்றன. வாழ்நாள் முழுதும் மனதைக் கொட்டிக்கொண்டேயிருக்கத்தக்க முனையுள்ள வார்த்தைகள் உளவாகின்றன.” என்று மிஸ் பிரீமர்(Miss Bremer) தனக்குள்ளே சொல்லுகின்றனள்.

இவ்வாறு ஒழுக்கமானது ஏனையவற்றில் விளங்குவது போன்று வார்த்தையைக் கட்டுப்படுத்துவதிலும் விளங்குகின்றது. விவேகமும் சகிப்புமுள்ள மனிதன், மற்றவர்களுக்கு வருத்தம் உண்டாமாறு குயுக்தியும் கொடுமையுமான காரியத்தைச் கொல்லும் அவாவை அடக்கிக்கொள்வான். ஆனால் மூடனானவன் தான் நினைக்கிறதைப் புத்தியீனமாய்க் குழறித்தன் பரிகாசத்தைவிடத் தன் இஷ்டனை இழந்துவிடுவான். “ஓர் விவேகியினுடைய வாயானது அவனுடைய இருதயத்தில் இருக்கின்றது. ஓர் மூடனுடைய இருதயமானது அவனுடைய வாயில் இருக்கின்றது” என்று சாலமன் (Soloman) என்பவர் கூறினர்.

691

ஆகிலும் சிலமனிதர்கள் மூடரல்லர். சகிப்பும், தம்மையடக்கும் பொறுமையும் இன்மையால் தங்கள் வார்த்தைகளிலும் செயல்களிலும் கவனமின்றியிருக்கின்றனர். விரைவுற்ற ஆலோசனையும் கோபமூட்டுமொழிகளுடைய இலகுவான யூகமுடையோன் தற்கால உற்சாகத்தினாற் கொண்டாடப்பட்டுத் திடீரென்று நிந்தாவாக்கியத்தைச் சொல்லிவிடுகின்றனன். அது அவன் சொந்தத்திற்கே அளவற்ற நஷ்டத்தை யளிக்கின்றது. தங்களுடைய விரோதிகளுக்கு வருத்தமுண்டாகுமாறு சாதுர்யமும் பகைமையுமுள்ள காரியங்களைச் சொல்லும் இச்சையைத் தடுப்பதற்குச் சக்தியின்மையால் தவறுதல் கொண்ட இராஜதந்திர மந்திரிகளும் இருந்திருக்கின்றனர். “ஒரு வாக்கியத்தின் போக்கானது அநேக இஷ்டர்களுடையவும் எனக்குத் தெரிந்தமட்டில் அநேக இராஜ்யங்களுடையவும் முடிவைக் கண்டுவிட்டது” என்று பென்தாம் (Bentham) என்பவர் சொல்லுகின்றனர். அப்படியே ஒரு சாமர்த்தியவானாற் கடுமையான காரியத்தை எழுதும்படி ஒருவன் தூண்டப்பட்டபொழுது, அதைஅடக்குவது கஷ்டமானபோதிலும் அதனை மைக்கூட்டில் தானே விட்டுவிடுதல் எப்பொழுதும் மிகவும் நன்மையானதாயிருக்கின்றது. “ஒருவாத்தினுடைய இறகானது ஒருசிங்கத்தினுடைய நகத்தைவிட அதிகமான கெடுதலைப்பெரும்பாலும் செய்கின்றது.” என்று ஸ்பேனிஷ் (Spanish) பழமொழியிருக்கின்றது. “தன்மனதைத்தனக்குள்ளே எவ்விதமும் அடக்கக்கூடாதவன் எவ்விதபெரியகாரியத்தையும் சாதகஞ் செய்யமுடியாது.” என்று ஆலிவர் கிராம்வெல் (Oliver-Cromwell)ஐப்பற்றிப் பேசுகையில் கார்லைல் (Corlyle) என்பவர் சொல்லுகிறார். கர்வமான அல்லது விவேகமற்ற வார்த்தையானது மௌனமான ஊவில்லியம் (William the silent) உடைய உதட்டில் நின்றும் வெளிவந்ததை ஒருக்காலும் அறிந்ததில்லை என்று அவருடைய பெரிய சத்துருக்களில் ஒருவனாற் சொல்லப்பட்டது. அவரைப்போலவே உவாஷிங்டன் (Washington) என்பவர் எதிரியின் துர்ப்பல சமயத்தைப் பற்றிக்கொள்ளாமலும் அல்லது தர்க்கவாதத்திற் சொற்பநேரம் நிலைக்கும்படியான வெற்றியைத் தேடிக்கொள்ளாமலும், வார்த்தை உபயோகப்படுத்துவதில் விவேகத்தின் அவதாரமாயிருந்தார். கடைசியில் உலகமானது, மௌனமாயிருக்கவேண்டிய

சமயத்தையும் வித்தையும் அறிகிற விவேகியைச் சூழ்ந்து ஆதரிக்கின்றது.

மிக்க அநுபவமுள்ள மனிதர்கள் தாங்கள் பேசிவிட்டதற்காகப் பலமுறை துக்கப்பட்டதாகவும், தங்கள் நாவை அடக்கிக்கொண்டதற்காக ஒருமுறையாவது துக்கப்பட்டிருப்பதில்லையென்றும் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறோம். மௌனமாயிரு அல்லது மௌனத்தைவிட அதிக நன்மையான சிலவற்றைச்சொல்லு என்று பித்தாகிரஸ் (Pythagoras) என்பவர் சொல்லுகிறார்.

உசிதமாகப்பேசு அல்லது விவேகத்துடன் மௌனமாயிரு என்று ஜார்ஜ் ஹெர்பர்ட் (George Herbert) யென்பவர் சொல்லுகிறார். லீஹண்ட் (Leigh Hunt) என்பவர், ஜெண்டில்மேன் ஸெண்ட் (Gentleman Saint) என்று அழைத்த ஸெண்ட்பிரான்ஸிஸ்-டி-ஸேல்ஸ் (St. Fancis-de-sales) என்பவர் உண்மையைத் துர்க்குணத்தோடு பேசுவதைவிட மௌனமாயிருப்பது மெத்த நல்லது; நேர்த்தியானபோஜனத்தட்டைக் கெட்டகுழம்பினால் நிறைப்பதாற்கெடுப்பதைக் காட்டிலும சும்மாயிருப்பது மெத்த நல்லது என்று சொல்லுகிறார். மற்றொரு பிரான்சுக்காரரான லேக்கார்டையர் (Lacordaire) என்பவர் வாக்கு முன்னும் மௌனம் பின்னுமாக அடையாளத்தாற் குறிப்பிடுகின்றனர். வாக்கினுக்குப் பின்னர் மௌனமானது உலகத்தில் மிகவும் பேராற்றலுடையதெனக் கூறுகின்றனர். சமயத்திற் பேசிய ஒருவார்த்தையானது எவ்வளவு சக்தியுள்ளதாயிருக்கலாம். திருவருட்பேற்றினர்வாயில் பொன்போன்ற நா இருக்கிறதென்னும் உவேல்ஸ்தேசத்து முதுமொழி உளது.

டி. லியன் (De-Leon) உடைய மன அடக்கத்தைப்பற்றி ஓர் சிறந்த திருஷ்டாந்தம் உளது. அவர் பதினாறாவது நூற்றாண்டிலிருந்த கீர்த்திபெற்ற ஸ்பேனிஷ் (Spanish) கவிஞர் வேதபுஸ்தகத்தின் ஓர் பாகத்தைத் தன் சொந்தபாஷையில் மொழிபெயர்த்ததற்காக விசாரணைக்குற்றவாளிகளின் அறையில் வெளிச்சமாவது கூட்டுறவாவது இன்றி பல வருஷங்கள் கிடந்தனர்.

(தொடரும்.)

உ

சிவமயம்.

கல்வி.

பலபேதமான பிறவிகளுள் மனிதப்பிறவி மிகவிசேடமுடைத்து. மனிதப்பிறப்பையெடுத்தவர்களாற் றேடற்பாலனவாகிய பொருள்கள் கல்விப்பொருள் செல்வப்பொருள் என இரண்டு.

கல்வியாவது கற்றற்குரிய நூல்களைக் கற்றலேயாம். அவையாவன:—அறநூல், நீதிநூல், யானை, குதிரை, தேர், படைக்கலமென்றிவற்றின் நூல்களும், இவற்றிற்குக் கருவியாகிய நூல்களுமாம். கருவி நூல்களாவன நிகண்டு, இலக்கணம், கணக்கு, தருக்கம் முதலியனவாம். மற்றைநூல்களை யறிதற்குக் காரணமாயிருத்தல்பற்றி, இவைகள் கருவிநூல்களென்று சொல்லப்பட்டன. முதலிலே கருவி நூல்களைக் கற்று அவற்றை நிலைப்படுத்தினாலொழிய ஏனைய நூல்களைக் கற்றலரிது. கருவிநூல்களைக் கற்காதோர் ஏனையநூல்களைக் கற்றுக்கொள்ளமாட்டார். ஆதலிற் கருவிநூல்களே முதலிற் கற்கத்தக்கன.

செல்வப்பொருள் கள்வர் அரசர் முதலியோராற் கவரப்படும். கல்விப்பொருளோ ஒருவரானுங் கவரப்படமாட்டாது. செல்வப்பொருள் பிறர்க்குக் கொடுக்குந்தோறும் குறைந்துகொண்டேவரும். கல்விப்பொருளோ பிறர்க்குக் கொடுக்குந்தோறும் வளர்ந்துகொண்டே வரும். செல்வப்பொருள் இவ்வளவினதென்று விலைமதிக்கக்கூடியதாயிருக்கின்றது. கல்விப்பொருளோ ஒருவரானும் இவ்வளவினதென்று விலைமதித்தற்கு இலகுவானதன்று. செல்வப்பொருள் வெள்ளத்தினாலழிவெய்தும். அக்கினியாலழிவெய்தும். கல்விப்பொருளோ ஒன்றானு மழிவடையமாட்டாது. செல்வப்பொருள் பணிவுடைமையை யடைவிக்கமாட்டாது. கல்விப்பொருளோ அவ்வித அநேக குணாதிசயங்களை யடைவிக்கின்றது. செல்வப்பொருள் தேடுதல் காப்பாற்றுதல் இழத்தல் என்னுமிவற்றா னிடையறாத் துயரத்தையுண்டாக்கி எல்லோரையும் பகைப்பிக்கும். கல்விப்பொருளோ தன்னைப் பொருந்தியுள்ளவர்களுக்கு இம்மையிற் கீர்த்தி

முதலியவற்றைக்கொடுத்து மறுமைக்கண் நற்கதியிற் சேர்க்கின்றது. மாமியும் மருமகளும் ஓரிடத்திலிருக்கலாகாதென வெண்ணினாற்போலச் செல்வப்பொருள் கல்விப்பொருளாகிய இரண்டும் ஒருவர்மாட்டமைந்திருத்தல் அரிதாகின்றன. கல்விப்பொருள் உள்ளவர்மாட்டு உலகத்துள்ளாரனைவரும் அன்புடையவராக இருப்பார். கல்வியுடையவருக்குச் சென்ற சென்ற இடங்களிலெல்லாஞ் சிறப்புண்டு. இதுபற்றியே நீதிநூற்காரரும்,

‘மன்னனும் மாசறக் கற்றோனுஞ் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்—மன்னர்க்குத்
தன்றேச மல்லாற் சிறப்பில்லைக் கற்றோர்க்குச்
சென்றவிட மெல்லாஞ் சிறப்பு.”

என்று கூறியிருக்கின்றனர். ஆதலின் செல்வப்பொருளினுங் கல்விப்பொருளே மிக விசேடமுடைத்து.

உயர்ந்த வருணத்தாராயினும் அழகுள்ளவராயினும் கல்வியில்லாதார் முருக்கம்பூவையே நிகர்ப்பர். அழுக்கேறாத புடைவையிலே சாயம் நன்றாகப்பிடிக்கும். அதுபோலஇளமையிலே கற்கும் கல்வி மனதிலே நன்றாகப் பதியும். இதுபற்றியே ஔவையாரும் “இளமையிற் கல்” என்று கூறினார். முதிர்ந்த வயதிலே கற்கும் கல்வி மனதிலே நன்றாகப் பதியமாட்டாது. ஆதலினாலே கல்வியை அவமதியாது அனைவரும் இளமையிலே கற்றல்வேண்டும்.

கல்வியிலே தேர்ச்சியடைய விருப்பமுள்ளவர் கல்வி கற்பிக்குந் திறமையும் நற்குணமுமுடைய ஆசிரியனை அடைந்து சந்தேகவிபரீதமறக் கற்றல் வேண்டும். சந்தேகமாவது பொருள் இதுவோ அதுவோ என்று ஒன்றிலே துணிவுபிறவாமை. விபரீதமாவது ஒன்றை மற்றொன்றாக எண்ணுதல். கல்விகற்றற்குப் பெரும்பாலும் வேண்டியன பொருளுடைமை உதவியுடைமை பிணியின்மை புத்தியுடைமை நல்லாசிரியருடைமை என்பனவாம். ஆசிரியர் மாணாக்கரிடத்தே அதிக அன்புள்ளவராக இருக்கவேண்டும். மாணாக்கரும் ஆசிரியர்மாட்டு மிக்க அன்புடையவராக இருக்கவேண்டும். கல்வியை மிகவும் ஊக்கத்துடன் கற்கவேண்டும். ஒருநாள் ஊக்கமாவும் மற்றநாள் ஊக்கமின்றியும் ‘கற்கக்கூடாது.’ அறிந்துவிட்டோமென்று ஒருதரங்கற்போர் தேர்ச்சியடையார். பலதரமும் கற்பவரே தேர்ச்சியடைவார். இதுபற்றியே திருவள்ளுவரும்,

“தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு.” என்று கூறினார்.

கல்வியை நன்றாகக் கற்கவேண்டும். கற்றால் பின்பு கற்றபடி ஒழுகுதல்வேண்டும். இதுபற்றியே திருவள்ளுவரும்,

“கற்க கசடறக் கற்பவை கற்றபி
னிற்க வதற்குத் தக.” என்று கூறினார்.

ஆசிரியரிடம் கேட்குமுன் பாடங்களை ஆயத்தப்படுத்திக்கொள்ளல் வேண்டும். கல்வியைச் சிறிது கற்றவளவிலே அமையாது மேன்மேலும் கற்க முயலல்வேண்டும். மாணாக்கர்கள் தாங்கேட்டவைகளைப் பலதரமும் ஆயத்தப்படுத்தல்வேண்டும். ஒருசாலைமாணவருடன் அவற்றைக் கேட்டற்கும் விடைகொடுத்தற்கும் பழகல்வேண்டும். ஒரு நூலைப்பலதரமும் பார்த்தாலொழிய அதன்நுட்பம் விளங்காது. யாவராயினும் கற்கவேண்டும் என்று எண்ணுவார்களொழியக் கற்றதை மனதிலே வைத்துக்கொள்ள வேண்டுமென்று எண்ணார். அது எவ்வாறெனில், கையிற்சேர்ந்தபொருளை விடுத்து அரிப்பு அரித்தெடுத்தல்போலாம். கல்வி கற்கும்பொழுது மனம் மாறுபடாது ஒருநெறிக்கட் செல்லவேண்டும். அவ்வாறன்றி வேறு விடயத்திற்செல்லின் அது மனத்திற்பதியாது.

எத்தானத்தினும் வித்தியாதானமே சிறந்தது. ஆன்மசுகத்துக்கேற்ற அன்னவஸ்திரம் முதலியவற்றையும் ஞானத்தையுங் கொடுத்தலின். அன்னவஸ்திரங் கொடுத்தல் ஒருவர்க்கே பயன்படும். கல்வியோவெனின் அப்படி அன்று. ஒருவர் வேறொருவருக்குச் சொல்ல, அவர் இன்னும் இருவர்க்குச் சொல்ல, அவர்களும் இவ்விதமே பலருக்கும் சொல்லுவர். அதனாலே அநேகர் முத்திநூல்களைக் கற்று மோக்ஷத்தை அடைவார்கள். ஆதலினால் எவற்றினுங்கல்வியே சிரப்புடைத்தென்று பெறப்படுகின்றது.

சி. ஜகநாத ஐயர்.

ஸ்ரீ:

நுண்பொருண்மாலை.

(முற்றொடர்ச்சி.)

௭௬௪. "அறிவின்..................படை."

நு - லை:—வன்கணதுவே படையென்றது, குற்றியலுகரத்தின்முன்னுடம்படுமெய் விகாரத்தால் வந்தது. "புணர்ப்போ நிலனும்" (கள) என்னுங்கோவையாருட் 'புகுந்ததுவே' என்பதுமது. "ஆற்றலதுவேபடை" (௭௬௫) என்பதுமது. 'விண்வத்துக்கொட்கு'மெனக்காட்டினர் நச்சினார்க்கினியார். "வல்சியினெண்கு" (௨௬௪) என்னுங்கோவையாருட் செல்வரிதன்றெனக் காட்டினர் (பேராசிரியர்) இவ்விரண்டுமொற்றின் முன்னுடம்படு மெய்வந்தது. "கன்னின்று" (வெண்பாமாலை) னென்னும்பாட்டு மிதனுட்காண்க.

௭௬௮. "அடற்றகையு..............பெறும்."

நு - லை:—தகை முன்னது தறுகண்மை; பின்னது தோற்றப்பொலிவு. நிலைமக்கள் சாலவுடைத்தென்பதனுள், தளகத்தனில்லாத படையில்லாதென்பது காண்க.

௭௯௪. "குடிப்பிறந்து.......... ......நட்பு."

நு - லை:—வேண்டுமென்பதொருசொன்னீர்மைத்து. உறுப்பினுள் யாது கொடுத்துங் கொளலென்பதனையொக்குங் கொளல்.

௭௯௮. "உள்ளற்க.......... நட்பு."

நு - லை:—ஆற்றறுத்தல் - கைவிடுதல். "அமரகத்தாற்றறுக்குங்கல்லாமா"வுமது. (திருக்குறள்-௮௧௪)

௮௦௧. "பழைமை..........நட்பு."

நு - லை:—கிழமை உரிமையாயவர்குபெயர். கெழுதகையெனவருவனவுமது. கீழ்ந்திடுதல் - சிதைத்தல். "ஆண்டிலெடுத்த" என்னுங் கோவையாருள் (௨௪௧) "பஃறாமரைகீழ்ம்பழன"மென்பதுமது. "மீள்வதுசெல்வதன்"றென்னுங் கோவையாருள் (௨௪௭) கீள்வது செய்த கிழவோனென்றதனாற், கீண்டல் வேறு.

௮௦௨. "நட்பிற்...............கடன்."

நு - லை:—உறுப்பென்பதிலக்கணையடியாக வந்த குறிப்புச்சொல். "அனிச்சப்பூக்கால்" (திருக்குறள் ௧௧௧௫.) என்பதுமது. வடநூலாரிலக்கணாமூலத்தொனி யென்பர். வேறின்மை தோன்ற வுறுப்பென்றார்.

௮௨௧. "சீரிடங்.....நட்பு."

நு - லை:—எறிதற்குப்பட்டடை, யெறிதற்குத் துணையாயபட்டடை. "ஆரம்பரந்"தென்னுங் கோவையாருட், சீரம்பரம் - சீர்த்தவம்பரமென இறந்தகால வினைத்தொகையானது போல ஈண்டுஞ் சீரிடம் வாய்த்தவிடப். பரிபாட்டுட், "புகர்வரி வண்டு-புகர்த்தவரி வண்டு." 'அமர்க' கட்டு' (திருக்குறள் - ௧௦௮௬.) என்பதுமது.

௮௩௯. "பெரிதினிது...............றில்."

நு - லை:—பெரிதினிது - மிகவினிது. புகழ்வார் போன்று பழித்தலென்னு மேதுவலங்காரமுங் காண்க.

௮௬௧. "வலியார்க்கு.........பகை."

நு - லை:—ஓம்பா - ஒழியாது. மேக - விரும்புக. ஒன்றுகடைக்குறைந்தது; ஒன்று இடைக்குறைந்தது. "தத்தந் திரிபே சிறிய வென்ப" (தொல்-எழுத்- ௮௮.) என்பதுபோலச் சிங்கநோக்காயீண்டுப் பொதுப்படமெலியார்மேலு. முன்னர்ச்சிறப்புவகையால் மெலியார்மேலும் பகைமாட்சி சிங்கநோக்காயிற்று.

௮௮௮. "அரம்பொருத........குடி."

நு - லை:—பொருதென்னுஞ் செயப்பாட்டுவினையெச்சந் தேயுமென்னும் வினைகொண்டது. "ஆகாறளவிட்டிதாயினு"(திருக்குறள்-

சஎஅ) மென்பதற்குரைத்தாங்குரையா தாரத்தின்றெழிலாயினுங் குடிமேலேற்றுதலின் விளைமுதன் வினையாயிற்று என்பது வினவுக.

கூகஅ. "ஆயுமறிவின.........முயக்கு."

நு - லை:—அணங்கு - காமநெறியாலுயிர்கொள்ளுந்தெய்வமகள். தாக்கு - தீண்டல்; காமத்துள் "தாக்கணங்கு"(க0அஉ)என்பதுமது.

கூஉச. "நாணென்னு.........தார்க்கு."

நு - லை:—நல்லாளெனப் பெண்பாலாக்கியது, சொல்லப்பட்ட சொற்களையெல்லாமாண்பால் பெண்பால் அலிப்பாலென பால்வரையறுத்தோதுதல் வடநூலார்மதமாகலின். இலச்சையென்பதைப் பெண்பாலென்பதுபற்றி நல்லாளென்றாரென்க; அவை: ஸ்திரீலிங்கம், புல்லிங்கம், நபுஞ்சலிங்கமென்பர்.

கூருரு. "உருளாய.........படும்."

நு - லை:—பொருளாயம் - பொருளும் பொருள்வருவாயுமென்றதனும்மைத்தொகை. உருள் - உருளுங்கவறு. ஆயத்தை இக்காலத்தார் ஆதாயமென வழங்குவர்.

கூருசு. "அகடாரா.........டார்."

நு - லை:—மூடப்பட்டார் எழுவாயாகியதால் அல்லலுழப்பரென்பது, பயனிலையாதனோக்கிப்பெயரென்னாது எதிர்காலமுற்றுவினைச் சொல்லென்றார்.

கூஎ0. "இழத்தொறூஉங்.........றுயிர்."

நு - லை:—தொறு - தான சார்ந்தவிடத்தைப் பலவாக்கியாண்டாண்டென்பதுபட நிற்பதோரிடைச்சொல். இழத்தொறு முழத்தொறுமென நின்றன விழக்குந்தொறு முழக்குந்தொறுமெனநின்றன. "இறைத்தொறூறுங்கிணறென்பது" மது. "கடந்தொறும்வாரண" மென்னுங் கோவையாருள், (உருரு.) "தொடர்ந்தொறு" மென்பதுமது. (தொடரும்.)

பத்திராசிரியர்.

உ

திருச்சிற்றம்பலம்.

குதிரையைப்பற்றிய ஆராய்ச்சி.

(முற்றொடர்ச்சி.)

"தெரிதர வகுத்த வின்னிற நான்குஞ் செறிந்தன மிச்சிர மிதன்பே [ண்மை
ருரைசெய்வர் முகமார் புச்சிவால் காலென் றுரைத்தவெட் டெறப்பினும் வெ
விரவிய தட்ட மங்கலந் தலைவால் வியனுர மென்றவிம் மூன்று
மொருவிய வுறுப்போ ரைந்திலும் வெள்ளை யுள்ளது பஞ்சகல் யாணி."

"அணிகிளர் கழுத்தில் வலஞ்சுழித் திருந்தா லறிந்தவ ரதனையே தெய்வ
மணியென விசைப்பர் முகந்தலை நாசி மார்பமிந் நான்கு மிவ்விரண்டு
பணிதரு சுழியு நுதலடுப் பின்னைப் பக்கமு மொவ்வொரு சுழியுந்
துணிதர விருப்ப திலக்கண முளதிச் சுழியில திலக்கண வழுவே."

"பிரிவுற வுரத்தி லைஞ்சுழி யுளது பேர்சிரீ வற்சமா நுதலி
லிருசுழி யாதன் முச்சுழி யாத விருக்கினு நன்றது வன்றே
லொருவற நான்கு சுழிவலம் புரியா யுள்ளது நல்லது வன்றி
யிருசுழி முன்னங் கால்களின் மூலத் திருக்கினு நல்லதென் றிசைப்பார்."

"களநடு விரட்டைச் சுழியுடைப் பரிதன் கருத்தனுக் கறமிடி காட்டு
மளவறு துன்ப மரணமுண் டாக்கு மவைக்கணைக் காலுள வாகி
லுளபயந் துன்ப நிகளபந் தனமே லுதடுமுற் காலடி கபோலம்
வளர்மூளந் தாளிந் நின்கினுஞ் சுழிகள் மன்னினுந் தலைவனை வதைக்கும்."

"இச்சுழி யுடைய புரவிபந் தியில்யாத் திருக்கினும் புழுதிவை கிடக்க
வச்சமில் பரிக்குப் பிராயநா லெட்டா மவத்தைபத் தாகுமொவ் வொன்றில்
வைச்சது மூன்று வருடமு மிரண்டு மதியமும் பன்னிரு நாளு
நிச்சயித் தளந்தா ரின்னமு மொருசார் நிகழ்த்திடு மிலக்கண மதுகேள்."

வேறு.

"எவ்வண்ண பேதமிருந் திருந்தாலும் வெள்ளை கலந்திருந்த தானு
லவ்வண்ணப் பரிநன்று கரும்புரவிக் ககடேனு மகன்மார் பேனுஞ்
செவ்வண்ண மிருக்கினது சயமுளதப் படிவெண்மை சேர்ந்தா லந்த
மைவண்ணப் பரியின்பேர் வாருணமாஞ் சயங்கொடுக்கு மாற்றார் போரில்."

*

"மகவளிக்கும் பிடர்வெளுப்பு மகிழ்வளிக்கு முரவெளுப்பு மணித்தார்க் கண்டத், தகவெளுப்புப் பொருள்கொடுக்கு முகவெளுப்புச் சயங்கொடுக்கு மதன் பின்பக்கத், தகவெளுப்புச் சுகம்பயக்கு மிடவெளுப்புச் சந்தானந் தழைக்குஞ் செல்வ, மிகவளர்க்குந் தனம்பலதா னியநல்கும் வலப்புறத்து வெள்ளைமாதோ."

"நற்புறம்வான் முகமூன்றும் வெளுத்தபரி வென்றிதரு நாபி தொட்டு
முற்புறமெல் லாம்பரிதியெனச்சிவந்து மதியெனப்பின் முழுதும் வெள்கும்
பொற்புடைய வயப்பரிக்குப் பகல்விசய மதியெனமுற் புறம்பு வெள்கிப்
பிற்புறமெல் லாங்கதிர்போற் சிவந்தபரிக் கிராவிசயம் பெருக்குமன்றே."

"வந்தனவா லிவ்விரண்டு வகைப்பரியும் புரவியடி வைத்தா லொத்த
பந்தெனவு நின்றாலோ மலையெனவு மொலித்தாலோ பகடு சீறும்
வெந்தறுக ணரியெனவும் வேகத்தாற் காற்றெனவு மிதிக்குங் கூத்தாற்
சந்தநட மகனெனவு நடக்கிலரி களிறெனவுந் தகைய வாகி."

"குலமகள்போற் கவிழ்முகமுங் கருநெய்த லெனக்கண்ணுங் கொண்டு கார்போ, லிலவியசீர் வண்ணமுங்கார் நெய்தலெனக் கடிமணமுநிறைந்து நாற்ற, மலாகில்சந் தெரிமணிப்பூ ணலங்கரிக்கி லானுத மகிழ்ச்சியெய்தி யிலகுவதுத் தமவாசி யென்றுரைப்பர் பரிவேத மெல்லை கண்டோர்."

"நூறுவி லுத்தமவாம் பரிக்குயர்வீ ரெட்டுவி னூறு நீக்கிக்
கூறுவிரன் மத்திமவாம் பரிக்கறுபத் தொன்றதமக் குதிரைக் கென்ப
* வீறில்புக ழாய் †பொருந ரிப்பரியைப் பூசனைசெய் திறைஞ்சிப் பாச
மாறுவரா லெனமணித்தார் சதங்கைசிலம் பணிவித்து மதிக்கோ மாறன்."

எனக்கூறிய ௧௦௬-ஆஞ் செய்யுள் முதல் ௧௨௦-ஆஞ் செய்யுள் வரை காண்க.

---

*"ஈறில் புகழாய் பொருநரிப் பரியை" என்பதற்கு "முடிவில்லாத கீர்த்தியையுடையபாண்டியராசனே, அரசர் இக்குதிரைகளையெனப்பொருள்" கொள்க. பொருநரிப்பரியை யென்பதற்குச் சிலேடையாக "பொருகின்ற நரியாகிய குதிரையை" யென உண்மைதோன்ற அமைத்துக்கூறினாரென்க. பொருநர்-அரசர் என்பதனைச், சூடாமணி நிகண்டில் பதினொராவது பகரவெதுகை-௨௮-ஆஞ்செய்யுளிற் காண்க. "ஈறில் புகழாய்ப் பொருநரிப் பரியை" என்னும் பாடத்தை, "ஈறில்புகழாயவொருநரிப்பரியை" எனப்பாடங்கூறி, ஒருநர் ஈறு இல் புகழ் ஆய இப்பரியை எனப்பிரித்துக்கூட்டி - வாங்குமொருவர் முடிவில்லாத புகழமைந்த இக்குதிரையையென வுரைசெய்திருக்கின்றனர். இப்பாடமும்உரையும் பொருந்தாமை காண்க.

௩௩-ஆவது கவியிற் குதிரையின்சாரி இருவகையென்றார். ௭௭-ஆவது கவியிற் சாரியின் விகற்பம் பதினெட்டென்றார்.' புறப்பொருள் வெண்பாமாலையினுஞ் சாரி பதினெட்டு என்றார். அவைகளை விரித்துரைத்திலர்.

திருவாதவூரடிகள் புராணம், குதிரையிட்டசருக்கத்தில், வாலடியிற் சந்திரசுழி, அண்டாவர்த்த சுழிகளும், உடம்பின் பக்கத்தில், கௌவகசுழி காகாவர்த்தசுழிகளும், முன்வளையச்சுழி, கேதாரிச்சுழிகளும் கேசாவர்த்த சுழியும், பட்டடைச்சுழியும் * இருத்தல் கூடாதென்றும்;

தலையிலிரண்டு சுழியும், நாபியின்பின் நான்குசுழியும், மார்பிலிரண்டுசுழியும், நெற்றியிலொருசுழியும், உதட்டிலொரு சுழியும், ஆகிய இப்பத்துச் சுழிகளும் குறையாமலிருக்கவேண்டுமென்றும்;

நரி, வெருகு, காகம், பேய், ஓரி, நாய், பன்றி இவ்வாறினுடைய சத்தமில்லாதிருக்கவேண்டுமென்றும், சமுத்திரமும் மேகமும் சங்கும் இடபமும் மிருதங்கமும்போலச் சத்தமுடைத்தாயிருக்கவேண்டுமென்றும்;

புலி, கரடி, கழுதை, செந்நாய், பூனை,நரி,காகம்,புகை இவற்றின் நிறமில்லாதிருக்கவேண்டுமென்றும்;

முத்து, சந்திரன், நீலமணி, தாமரைப்பூவின்மகரந்தம், பொன், காயாமலர், செவ்வரத்தமலர், பச்சைக்கிளி இவற்றின்நிறம் பொருந்தியிருக்கவேண்டுமென்றும்;

மாதாளனும் சாரங்கனும் கங்காநீலனும் வெளவழகனும் கொங்காளனும் சன்னசாம்பனும் குங்குமச்சேரனும் கரியானும் நீலனும் சாரனும் வள்ளானும் ஊரஞ்சிவந்தானும் நல்லானும் பொல்லானும் கருங்கற் சாம்பனும், ஆகிய இப் ‡ பதினைந்து நிறங்களையுடைய குதிரை யுயர்ந்தசாதிக் குதிரை என்றும்;

---

* இக்குற்றமுள்ளசுழிகளை விரித்துக்கூறவில்லை.

‡ இப்பதினைந்து நிறத்தையும் விரித்துக்கூறவில்லை.

கொம்புபோல நீண்டசெவியும் முறுகியசெவியும் மூன்றுகால் விளர்த்து ஒருகால் கறுத்திருப்பதாகிய நஞ்சபாதமும், மூன்றுகால் கறுத்து ஒருகால் விளர்த்திருப்பதாகிய கொள்ளிக்காலும், வெள்ளிய கண்ணும், நீலகண்டமும், பீசமின்மையும், ஒன்றற்கொன்று குறைவாய்ப் பெருத்த பீசமும், முகம், வால், நான்குகால்களில் சுழியின்மையும், கழுத்தடியில் மார்க்கண்ட மிரட்டையாகப் பொருந்தாமையும் குற்றமென்றுங் கூறுவர்.

உத்தமவிலக்கண மமைந்த குதிரையை நம்பிரானென்பர். சீவகசிந்தாமணி, மண்மகளிலம்பகம், ௫௯-ஆஞ் செய்யுட் குறிப்புரையிற்காண்க.

மாளவதேசத்திடத்தனவாகிய குதிரைகள் அஞ்சாத வாண்மையுடையனவாய்த் தாமரை நிறத்தனவாய் வெண்குளம்பையுடையனவாய் இருக்குமென்றும்;

சிந்துவின் கரையனவாகிய குதிரைகள் பறையொலிபோல் முழங்குவனவாய், நாவலின் கனிபோலுங் கோலத்தனவாயிருக்கும் என்றும்;

பாரசூரவம் பல்லவம் என்னும் பதியிற்பிறந்த குதிரைகள் வீரவாற்றலுடையனவாய் மதுநிறத்தனவாய், கதியால் விண்புகுவனவாய் இருக்கும் என்றும்;

மாராட்டதேசத்திடத்தனவாகிய குதிரைகள் மயிற்கழுத்துப்போலும் நிறத்தனவாயிருக்கும், கப்பலில் வந்திறங்கிய குதிரைகள் கிளிபோலு நிறத்தனவாய்ப், பவளக்குளம்புடையனவாயிருக்குமென்பர்; அவ்விலம்பகத்தில்,

“தறுக ணுண்மைய தாமரை நிறத்தன தகைசான்
மறுவில் *வான்குளம் புடையன மாளவத் தகத்த
பறையி னுலுவ படுசினை நாவலின் கனிபோற்
குறைவில் கோலத்த குளிர்புனற் சிந்துவின் கரைய.”

---

* வான் - வெண்மை.

“பார சூரவம் பல்லவ மெனும்பதிப் பிறந்த
வீர வாற்றல விளைகடுந் தேறலி னிறத்த
பாரிற் றேர்செலிற் பழிபெரி துடைத்தென நாணிச்
சோரும் வார்புய றுளங்கவிண் புகுவன துரகம்.”

“பீலி மாமயி லெருத்தெனப் பெருவனப் புடைய
மாலை மாரட்டத் தகத்தன வளரிளங் கிளியே
போலு மேனிய பொருகடற் கலத்தின்வந் திழிந்த
கோல நீர்ப்பவ ளக்குளம் புடையன குதிரை.”

மாலை - ஒழுங்கு, மாரட்டம் - மகராஷ்ட்ரம்.

எனக்கூறிய ௫௮, ௫௯, ௬௦-ஆஞ்செய்யுட்களிற் காண்க.

போரிற்செல்லுங் குதிரைகள் பறந்துசெல்லுஞ் செலவிலே தருக்கினவாய்ப், போரிலே கறங்குபோலத் திரிவனவாய்க், கவரியையணிந்த நெற்றியையுடையனவாய், நூலோர் பிறந்தவிடமறிகவென்று துடையிலே எழுதின வெழுத்தையுடையனவா யிருப்பனவென்பர். அவ்விலம்பகத்தில்,

“பறந்திய றருக்கின பரவை ஞாட்பினுட்
கறங்கெனத் திரிவன கவரி நெற்றிய
பிறந்துழி யறிகெனப் பெரிய நூலவர்
குறங்கெழுத் துடையன குதிரை யென்பவே.”

என்றுகூறிய, ௧௧௪-ஆஞ் செய்யுளிற்காண்க.

குதிரையைப் பறக்கச்செய்யு மந்திரமும், வேண்டுமிடத்தே நிறுத்தச்செய்யு மந்திரமும் ஆகிய வீரமந்திரமிரண்டையும் அதன் செவியிற் கூறுவதுண்டென்பர்! காந்தருவதத்தையாரிலம்பகத்தில்,

“தம்பியைச் சீவக னோக்கிச் சாமரை
வெம்பரி மான்செவி வீர மந்திர
மிம்பர் நம்மிடர் கெடவிரண்டும் வல்லையாய்
நம்பிநீ மொழிகென நயந்து கூறினான்.”

எனக்கூறிய, ௩௦௦-ஆஞ்செய்யுளிற் காண்க.

வெல்லக்கட்டியுடனே கலந்த அரிசியும், வெந்த காணமுமுணவாகக் கொடுப்பர் என்பர்; விமலையாரிலம்பகத்தில், "கட்டியுமரிசியும் புழுக்குங் காணமும், * புட்டில்வாய்ச்செறித்தனர்புரவிக்கு" எனக் கூறிய, ௫௦-வது செய்யுளிற் காண்க.

இனி அரசர்க்குரிய பரியிலக்கணமாமாறு; மாதர் மனம்போல மனத்தையுடையதாய், வாழைமடல்போலவளர்ந்த செவியையுடையதாய், நான்கு கால்களும் பிடரியும் முகமும் முதுகும், வெண்ணிறமுடையதாய், எண்பத்திரண்டு விரலுயரமுள்ளதா யிருப்பதென்பர்; †மாதர் மனமென மிக்க மனத்தது, வாழைமடலென வளர்ந்தசெவியது, நாலுதாளுமெருத்துமுகனும், வெந்நுமுன்னும்வெண்மையுடையதா, யெண்பத்திருவிரலுயரமுயர்ந்தது, பண்புடையரசர்க்காவது பரியே. எனப்பிங்கல நிகண்டிற் கூறியது காண்க.

சே. ரா. சுப்பிரமணியக்கவிராயர்,

சைவநூற்பரிசோதகர், மதுரைத் தமிழ்ச்சங்கம்.

* * *

---

* புட்டில் - குதிரைக்கு உணவுகட்டுங் கருவி.

† "மாதர்மனமெனமிக்கமனத்தது" என்னும்பாடத்தைமாற்றி, "மாதர் மணமென மிக்க மணத்தது" என அச்சிட்டிருக்கின்றனர். சூடாமணிநிகண்டில் "மாதர்தம் மனத்தையொத்த மனத்ததாய்" எனக்கூறுதலானும் திருவிளையாடற்புராணத்தில், "குங்குமங்கருப்பூரங்கொழுந்தின் காரகில் - பங்கமான்மதமெனக்கமழும்பாலதாய்" எனக்கூறுதலாலும் அது பாடமன்றென்க.

திருச்சிற்றம்பலம்.

பெரியபுராண அரும்பத விளக்கம்.

——:o:——

[பழைய ஏட்டினின்று எடுக்கப்பட்டது.]

(முற்றொடர்ச்சி.)

(௨௮௦) அஞ்சலியோடு குவித்தகையைத் தலைமேற்கொண்டு நின்று வணங்கி "நீர் கோயிலுள்ளீரே" என்ற சுந்தரமூர்த்தி நாயனாருக்கு ஊன்றுகோலைக் கொடுத்திணக்கமற்ற மொழியால் "உள்ளோம் போகீர்" என்று அந்நியர்போலக் கூறினார்.

(௨௮௯) மூலமறிவரியாராய சிவபெருமான் கண்ணையளித்துக் காமாட்சியம்மையாருடைய முலைச்சுவட்டுக் கோலத்தைத் தரிசிப்பித்தலும்.

(௨௯௧) பார்வதி தேவியாருடைய முலைச்சுவட்டையும் வளைத்தழும்பையும் அணிந்த இளம்பிறைபொருந்திய கொன்றைப்பூமலிந்த நெடிய சடையையுடையவரை ஸ்தோத்திரஞ்செய்து அருளதுவாக.

(௨௯௩) வன்னிப் பத்திரத்தோடு வில்வத்தையும்.

(௨௯௪) சிறந்தநாடாகிய சோழநாட்டை.

(௨௯௬) உரவுநீர் - பரந்த நீர்.

(௩௦௩) வன்றொண்டரானவர் திருவாரூரில் (இரவும் பகலும் மயங்கின) மாலைக்காலத்திற் புகுந்து நெருங்கிய சடையையுடைய தூவாயரை முன்னரே வணங்க வந்தணைந்தார்.

(௩௦௫) விரவுவார் திருத்தொண்டருடன்கூடி வந்தடைகின்ற திருத்தொண்டரோடு கூடி, இடபத்தையுயர்த்திய சிவபெருமானுடைய திருமூலஸ்தானத்தே சமயமறிந்துவந்து உவமையற்ற திருவத்த யாமத்திலே வணங்கவந்தடைந்தார்.

(௩0௬) சிவனடியார் எதிரே வர அவருடைய முகத்தைப்பார்த்துக் குற்றமற்ற இசையோடு "குருகுபாய" என்று கோத்தெடுத்து அந்நியரைப்போல் வினவித் துக்கத்தால் திருப்பதிகத்தை விரும்புகின்ற கைக்கிளையாற் பாடிக் கலந்தடைவார்.

(௩0௮) தாழ்ந்தகருத்தினை நிரப்பி - ஒருகண்ணில்லாமையால் தாழ்ந்த கருத்தினை முற்றுவித்து, கண்ணைத்தாருமென்று அழுதார்.

(௩0௯) வாயாற் பருகற்கரிய இனிய அமுதத்தை.

(௩௧0) அடிமையுந் திருத்தோழமையுமாகுந்திறத்தோடு.

(௩௧௧) நம்பியாரூரர் விரும்பின வேதனையை நீக்கவிரும்பிக் கிருபா நோக்கஞ் செய்தருளி.

(௩௧௩) விட்டுணுவும் பிரமாவுந் தம் முறைகூறற்கு இருக்கும் வாயிலானது கழியப்புறத்தே வந்து.

(௩௧௪) நங்கையாகிய பரவையாரானவர் தம்மைச் சுந்தரமூர்த்தி நாயனார் பிரிந்துபோனபின் இருக்கின்ற அழகிய மாளிகையின் கண்ணே தனிமைமிகத்தளருபவர்க்கு நாளெல்லாம் இராப்பகலாய்ப் பகல் இரவாய்க் கழிய மிக்கவிருப்பம் மேற்படப் புலர்வார் சிலநாள் நீங்கிய பின்னர். "கங்குல்பகலாய்ப்பகல்கங்குலாக" என்றது, இராக்காலத்திற்குரிய புணர்ச்சி நினைவு அயர்ச்சி முதலியன பகற்காலத்திலும், பகற்காலத்திற்குரிய விழிப்பு காமவின்ப நீக்கம், புறத்துச்செல்லுதல் முதலியன இராக்காலத்தும் இவர்மாட்டு நிகழ்கின்றமையானென்க.

(௩௧௫) மெய்ம்மைவார்த்தையைத் தாம் அச்சுந்தரமூர்த்திநாயனார் மாட்டே அனுப்பினோர் வந்துகூறத் தம்மை அறியாத கோபத்தால்; தம்மையறியாத கோபமென்றது, தம்மையும் கோபத்தையும் வேறுபிரித்தற்கரிய கோபமென்ற கருத்திற்று; எனவே, கோபமயமாயினார் என்பது தாற்பரியம்.

(௩௧௬) மிருதுவான பூஞ்சயனத்தில் நித்திரையுஞ்செய்யார், அம்மட்டோ விழித்து மினிதாக அமரார். அழகிய பூந்தவிசின்மேலுமிரார். அம்மட்டோ! நிற்கவும்மாட்டார். செல்லவும் மாட்டார், அம்மட்டோ; புறத்தே போதலையும் ஒழியார், மன்மதனது பூம்பாணமாகிய மழையைக் கழியார், மறவார், அம்மட்டோ நினையார், என் செய்வார்; எலும்பையும் ஊடே உருக்குவிக்கும் புலவியோ, பிரிவோ யாமறியேம், இரண்டினிடையே அகப்பட்டார். மறவார் நினையார் என்பதை "நினைந்ததும் மறந்ததுமிலாத நெஞ்சினாள்" என்பதுபோற் கொள்க.

(௩௧௭) கையறவு - வருத்தம். பிறைக்கண்ணி - இளம்பிறையாகிய கண்ணி. சென்ற பெருமையையுடைய பரிசனங்கள் உட்புகப் பெறாது புறத்தே நின்றார்.

(௩௧௮) செயற்கை முழுதையும் ஒன்றும் ஒழியாவண்ணம் அறிந்து அவ்விடத்துள்ளோராய பெண்கள் தள்ள.

(௩௧௯) உலகியல்பைக் கற்றமாந்தர்.

(௩௨௧) பேதமில்லைமை நீதியினால் - ஊடலுக்குரிய ஒழுக்கநீதியால்.

(௩௨௩) அருகுசூழ்ந்தார் துயின்று திருவர்த்தயாமப் பூசையுமுடிந்து.

(௩௨௪) பழையவினையால் இப்பிறப்பிறப்பிற்கு மூலமாயினாருடைய பக்கத்தையடையுமாறு.

(௩௨௫) அடியாருடைய வருத்தத்தைத்தரியாதவர் அடிமைக்கொண்ட தோழருடைய குறையை முடியாதிருக்கவல்லரா? முழுதையுமீன்ற உமையினுடைய அழகியதளிர்போலும் கையில்பொருந்திய வளைத்தழும்பும் முலைச்சுவடுமுடையார் அடியாராகிய நம்பியாரூரர் காணும்படியால்.

(௩௨௬) அவயவங்கள்நடுங்கி, மயிர்கள் உரோமாஞ்சங்கொள்ள அம்பிகையை இடப்பக்கத்திலுடையோருடைய செந்தாமரை மலர் போன்ற பாதங்களின் கீழ். அம்பிகாவல்லவர் - அம்பிகைக்குவலப் பக்கத்தினர்; வலவர் வல்லவர் என விரித்தல் விகாரம்பெற்று நின்

றஅ. இனி, வல்லவன் என்பதற்குப் புருஷன் எனப்பொருள்கொண்டு அம்பிகைக்கு நாயகன்என்று கூறினுமமையும். இங்ஙனமன்றி வல்லவர் என்பதில் வலம் என்பதற்கு இடமெனப் பொருள்கொண்டு இடம் இடப்பக்கமென்றல் போலியுரை என மறுக்க.

(௩௨௭) நானே தொடங்கும் குற்றத்திலகப்பட்டு வருந்துமென்னை இன்னும் உமக்கு அடுத்தாளவேண்டுமென்று.

(௩௨௯) தலைவர் தேவரீரே; நானிங்கே தேவரீருக்கே அடியேன், ஆனால் தேவரீர் அடியேனுக்குத் தாயினும் பார்க்க நல்ல தோழனுமாகும். அடியேனுக்குத்தலைவர் தேவரீராயின், பொருந்திய அறிவுமிழந்து அழிவேனுடைய அயர்வை நோக்கி அவ்வளவும் போய் இவ்விரவிலேயே பரவைபொருந்திய புலவியைத்தீர்த்துத் தாருமென்று வேண்ட.

(௩௩௦) அன்பையே விரும்பும் ஆன்மநாயகர் அடியார்வேண்டியதையே விரும்பி முன்னரே நின்று விண்ணப்பஞ்செய்த நம்பியினுடைய முகத்தைப்பார்த்து.

(௩௩௧) முல்லையரும்பையொத்த வெள்ளிய பற்களையுடைய பரவையாரது முகில்படியும் மாடத்தே தாம் செல்லுமாறு நில்லாது மிக நெருங்கி எம்பெருமானே எழுந்தருளிப் புலவியை நீக்குமென வணங்கினர்.

(௩௩௩) தேவாசிரிய மண்டபத்திற் காவலாக இருக்கும் தேவருளெல்லாம் சேவைசெய்துபோவாருள் வேண்டுவோர்போத ஒழிந்தோர்புறத்தே ஒழிந்துவிட நீங்காத அணுக்கச் சேவையிலுள்ளோராகிய நந்தி பிருங்கி முதலியோர்களும் பூதகணாதியர்களும் அழியாத முனிவர்களும் யோகிகள் முதலாயினோர்களும் முன்னரே ஒழிய.

(௩௩௪) உவமையில்லாத அன்பர்விடுந் தூதராகிய சிவபெருமான்.

(௩௩௫) விட்டுணுவும் பிரமாவுங்காணாத சிவனுடைய மலர்போன்ற பாதங்களைப் பொருந்திவந்து வழிபடுங்காலமிதுவேயென்று

அவ்விருவரையு மழைத்தாற்போலக் கடலானது உண்டாக்கின நஞ்சையுண்டகாளகண்டருடையபாததாமரைகளிற் சிலம்புகளொலிப்ப.

(தொடரும்)

ஜி. சதாசிவம் பிள்ளை.

உ

புத்தகக்குறிப்பு.

(1) ஹிந்துமத தூஷணை பரிகாரமும், (2) மனிதன்வமிசாவளியினுண்மையும்:—இப்பெயர்கள் கொண்ட இரண்டு சிறந்த நூல்கள், இந்நகர்ப் பிரபல வக்கீல்களிலொருவரும், தியஸாபிகல் ஸொஸைட்டிப் பிரஸிடெண்டுமாகிய ஸ்ரீமாந்-ப. நாராயணையரவர்களால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இவை, இப்பரதகண்டத்து சநாதனமதத்துக்கென்றே தம் முடல்பொருளாவிகளை அர்ப்பித்துழைத்துவரும் அனிபெஸண்டம்மையாரவர்களால் இயற்றப்பெற்றவைகளாம். இவற்றுள் ஹிந்துமத தூஷணையின் பரிகாரத்திலே விக்கிரகாராதனம், பலதெய்வக்கொள்கை முதலிய வைதிகமதசம்பந்தமான விஷயங்களில் அறிவிலிகள் சிலரால் நிகழ்த்தப்பெறும் தூஷணைகளைச் சுருதியுக்திகளைக்கொண்டு பரிகரித்து, தத்துவநுணுக்கங்கள் விளக்கப்படுகின்றன. இது, நம்மவர்களெல்லாம் பொதுவாக வாங்கிப் படித்தற்குரியதாதலோடு, நம் பெண்டிர் பிள்ளைகளுக்குச் சிறப்பாக வேண்டத்தக்கதென்னலாம். இதன் மொழிபெயர்ப்பு எளிய தமிழ்நடையில் அமைந்துளது. விலை அணா நான்கே. இனி அடுத்த மனிதவமிசாவளியினுண்மை, ௸ அம்மையாரால் சென்னையில், 1903-ம் ௵ செய்யப்பட்ட நான்கு உபந்யாஸங்களடங்கியது. இவ்வுபந்யாஸக் கருத்துக்கள், நம் புராண இதிகாசங்களிற் குறிக்கப்படும் ககோள பூகோளச் செய்திகள் முதலிய எண்ணிறந்த விஷயங்களினுற்பத்திக்கிரமம், முடிவு முதலியவற்றின் தத்துவ ரகசியங்களைத் தியஸாபிகல் சங்கத்தாரது கொள்கைகளுடன் கலந்து கூறு

வது. இதனிற்ப்பல நுணுக்க விஷயங்கள் லோகானுபவத்தின் வன்மையாலும், எண்ணிறந்த சாஸ்திர ஆராய்ச்சித் திறமையாலும், இவ்வம்மையாரால் கூறப்படுதல் காணலாம். இப்புத்தக விலை அணா எட்டு. வேண்டியவர்கள்:—இம் மொழிபெயர்ப்பாசிரியர்க்கு எழுதிப்பெற்றுக்கொள்க.

ஸ்ரீவேதாந்ததேசிகர் வைபவம்:—ஸ்ரீவைஷ்ணவ சமயாசாரிய கூடஸ்தரில் சிறந்தவருளொருவரான இப்பெரியார்சரித்திரம் மணிப்பிரவாள ரூபத்திலும், வேறுவிதமாகவும் வெளியிடப்பட்டுளதாயினும், தற்காலத்துக்கேற்ற இனிய செந்தமிழ்நடையில் சிலகாலத்துக்குமுன் தக்க பண்டிதரொருவரால் எழுதப்பட்டிருப்பது தெரிந்து பெருமகிழ்ச்சி யடைந்தோம். அப்பெரியார் **ஸ்ரீவேதாந்ததேசிகர்** என்று பிரபலமாக வழங்கும் ஸ்ரீவேங்கடநாதாசாரியரேயாவர். இம்மகானுடைய சரித்திரத்தைப் பல அதிகாரங்களாக வகுத்துக்கொண்டு, அநேக நூல்களை ஆராய்ந்து, சென்னையில்வசிக்கும் தில்லையம்பூர் பண்டிதர் ஸ்ரீ உ. வே. வேங்கடராமையங்காரவர்கள் விரிவும் விளக்கமும்பெற எழுதியிருக்கிறார்கள். தேசிகர் உண்மையில் வடநூற்கடலை நிலைகண்டுணர்ந்த ஆசாரியர் என்பது மட்டுமன்று. தமிழினும் பல பிரபந்தங்களியற்றியருளினவர். இதனை நாலாயிரப் பிரபந்தங்களிற் சில பகுதிகட்கு இவரெழுதியருளிய உரைகளாலும் தேசிகப்பிரபந்தம் என்னும் தமிழ்ப்பிரபந்தத்தாலும் நன்கறியலாம். இம்மகானுடைய வரலாறு முழுமையும், நன்கு தெரிந்து மகிழும்படி இனிய செந்தமிழ்நடையில் எழுதிய ஐயங்காரவர்கட்குப் பொதுவாகத் தமிழ்நாட்டாரும், சிறப்பாக ஸ்ரீ வைஷ்ணவர்களும் நன்றிபாராட்டல் கடமையாம். இதன் விலை அணா எட்டு.

பத்திராசிரியர்.

விலாசம்:—

ஸ்ரீ: தி. வேங்கடராம ஐயங்காரவர்கள்.
தமிழ்ப்பண்டிதர், 27. கிருஷ்ணன்கோயிற்றெரு,
மண்ணடி, சென்னை.

61

ஸ்ரீ:
கடவுள் துணை.

சந்திராலோக மூலம்.

இஃது
இராமநாதபுரம்
ஸம்ஸ்தான வித்வான்—சதாவதானம்

முத்துசாமி ஐயங்காரவர்கள்

இயற்றியது.

"செந்தமிழ்"ப்பிரசுரம்.—௨௮.

மதுரை :
தமிழ்ச்சங்க முத்திராசாலைப்
பதிப்பு.

1909.

ஸ்ரீ:

சந்திராலோகமூலம்.

௧. அமிழ்தினு மினிய தமிழ்மறை யருளிய
வகுளா பரணன் வனசமென் மலரடி
சிந்தைவைத் தியம்புவல் செய்யுட் கணியே.

௨. அணிதான் பொருள்சொல் லெனவிரண் டவற்றுட்
பொருளணி யொன்றே சிறப்பெனப் புகல்வர்.

௩. அதுவே, உவமை பொதுநீங் குவமை புகழ்பொரு
ளுவமை யெதிர்நிலை யுருவகந் திரிபே
பலபடப் புனைவே நினைப்பு மயக்க
மைய மொழிப்பு தற்குறிப் பதனோ
டுயர்வு நவிற்சி யொப்புமைக் கூட்டம்
விளக்கு பின்வரு விளக்கே தொடர்முழு
துவமை யெடுத்துக்காட் டுவமை காட்சி
வேற்றுமை யுடனிகழ் வின்மை நவிற்சி
சுருங்கச் சொல்லல் கருத்துடை யடையே
கருத்துடை யடைகொளி பல்பொருட் சொற்றொடர்
புனைவிலி புகழ்ச்சி புனைவுளி விளைவே
பிறிதி னவிற்சி வஞ்சப் புகழ்ச்சி
வஞ்சப் பழிப்பெதிர் மறைமுரண் விளைந்தழிவு
பிறிதா ராய்ச்சிகா ரணவா ராய்ச்சி
கூடாமை தொடர்பின்மை தகுதி யின்மை
தகுதி வியப்பே பெருமை சிறுமை
யொன்றற்கொன் றுதவி சிறப்பு நிலையே
மற்றதற் காக்கல் காரண மாலை
ஒற்றைமணி மாலை மாலை விளக்கே
மேன்மே லுயர்ச்சி நிரனிறை யதனொடு
முறையிற் படர்ச்சி மாற்று நிலையே
யொழித்துக் காட்ட லுறழ்ச்சி. கூட்டம்

வினைமுதல் விளக்கே யெளிதின் முடிபே
விற்கோ டொடர்நிலைச் செயுட்பொருட் பேறே
தொடர்நிலைச் செயுட்குறி வேற்றுப்பொருள் வைப்பே
மலர்ச்சி கற்றோர் நவிற்சியுய்த் துணர்வே
பொய்த்தற் குறிப்பே வனப்பு நிலையே
யின்ப துன்பமக மலர்ச்சி யிகழ்ச்சி
வேண்ட விலேசங் குறிநிலை யரதன
மாலை பிறிதின் குணம்பெற லதனொடு
தொல்லுருப் பெறல்பிறி தின்குணம் பெறாமை
தன்குண மிகைமறை பொதுமை மறையாமை
சிறப்பிறை நுட்பங் கரவுவெளிப் படுப்பே
வஞ்ச நவிற்சி குறிப்பு நவிற்சி
வெளிப்படை நவிற்சி யுத்தியே யுலக
வழக்கு நவிற்சி வல்லோர் நவிற்சி
மடங்குத னவிற்சி தன்மை நவிற்சி
நிகழ்வி னவிற்சி வீறுகோண் மிகுதி
நவிற்சி பிரிநிலை நவிற்சி விலக்கே
விதியே யேது வெனநூ றணியே.

௪. அவற்றுள், இருபொருட் கொப்புமையியம்புவ துவமை.

௫. அதுவே, விரியே தொகையே யெனவிரு வகைத்தாம்.

௬. வருணிய மல்பொருள் வாசகந் தன்மயின்
நான்கும் விரிதர நவில்வது விரியே.

௭. மொழிந்த வருணிய முதலிய நான்கனு
ளொன்றும் பலவுந் தொகுவது தொகையஃ
தெண்வகைத் தாக வியலு மென்ப.

௮ அல்பொருள் புனைவுளி யாகவோர் பொருளையே
யுரைப்பது பொதுநீங் குவமை யென்ப.

௯. வாக்கிய மிரண்டனுள் வருணியா வருணிய*
மாறத் தொடுத்தல் புகழ்பொரு ளுவமை.

---

* வருணியம், புகழ்பொருள், புனைவுளி என்பவை உவமேயத்தைக் குறிப்பன என்றும்; அவருணியம், அல்பொருள், புனைவிலி என்பவை உபமானத்தைக்குறிப்பனவென்று முணர்க.

௰ குறைவொன் றற்குக் கூறுவ தெதிர்நிலை.

௧௧. அதுவே, அல்பொருள் புகழ்பொரு ளாக்கிக் கூறல்
புனைவிலி தனைப்புகழ் பொருளெனக் காட்டி
வருணியந் தனையவ மதித்தன்மற் றதனையே
மாறத் தொடுத்தல் வருணியத் தோடு
மல்பொருட் கொப்புமை யன்றெனல் புகழில்
பொருள்வீ ணென்று புகறலை வகைத்தே.

௧௨. ஒற்றுமை செய்கை யொன்றாற் புனைவுளி
தன்னிலல் பொருளைத் தாக்குவ துருவகம்.

௧௩. அதுவே, ஒற்றுமை யதன்செய்கை யென்றிரு வகைத்தாய்
மிகைகுறை யின்மை யெனவிரு மூன்றே.

௧௪. அன்றுறுஞ் செய்கையி லாம்பயன் கொள்ளப்
புனைவிலிப் பொருடான் புனைவுளி யுருக்கொடு
பரிணமித் திடுதல் பரிணாம மென்ப.

௧௫. பல்லோ ரொன்றிற் பலவியல் பானும் *
அறிபல பொருள்களை யாரோ பித்தல்
பின்னரும் விடய பேதங்க ளாற்பல
பொருள்களை யொருவரே புகட்டுத † லென்ன
விருபா லாகும் பலபடப் புனைவே.

௧௬. ஒருபொரு ளினைக்கண் டொப்புமைத் திறனான்
மற்றொரு பொருளை மனத்துன னினைப்பே.

௧௭. ஒன்றைமற் றொன்றென் றொப்புமை யதனா
னறிதன் மயக்க வணியெனப் படுமே.

௧௮. ஒப்புமை யிற்பொரு ளொன்றனை நோக்கி
யிதுகொ லதுகொ லெனக்கொள லையம்.

---

* இயல்பு, இயல், தன்மை, தர்மம் என்பன ஒருபொருட் கிளவிகள்.

† ஆரோபித்தல், புகட்டுதல், தாக்குதல், ஏற்றிடலென்பன ஒருபொருட்கிளவிகள்.

௧௯. அற்றொரு தன்மை யாரோ பிப்பான்
மற்றொரு தன்மை மறுத்திட லொழிப்பாம்
அதுவே யறுவகைத் தாகு மென்ப.

௨௦. அவற்றுள், அல்பொருட் டன்ம மாரோ பித்தற்
குவமேய வியல்பை யொழித்தல்வெற் றொழிப்பே.

௨௧. கழறிய வவ்வணி காரணத் தோடுங்
கூடி வருதல் காரண வொழிப்பே.

௨௨. புனைவுளி யிடத்துப் புகட்ட மற்றொரு
பொருளியன் மறுத்தல் வேறுபாட் டொழிப்பே.

௨௩. ஒன்றைமற் றொன்றென் றுட்கொளூஉ மருளா
யுண்மை கூறி யொழிப்பது மயக்கே.

௨௪. வினவிய தஞ்சொன் மெய்ம்மையை மறுத்து
வேறொரு பொருளை விளைப்பதச் சொற்கே
வல்லோ ரொழிப்பென வகுத்தனர் புலவர்.

௨௫. பெயர்முதற் சொல்லாற் பெரிதும் வருணியத்
தியன்மறுத் துரைத்தல் வஞ்சக வொழிப்பே.

௨௬. பொருளை மற்றொரு பொருளியற் றொடர்பா
னிஃதஃ தன்றெனவெண்ணியு மதுவென்
றத்திய வசித்தல் தற்குறிப் பணியது
நினைக்கின் றேன்போல் நிச்சய முண்மை
துணிவு முதலிய சொற்க ளுருபாத்
தொக்கும் விரிந்துந் தோன்று மென்ப.

௨௭. அதுவே, பொருட்டற் குறிப்பே யேதுத்தற் குறிப்பே
பயன்றற் குறிப்பெனப் பகுதிமூன் றவற்றுட்
புலன்விரி தொகையெனப் பொருட்டற் குறிப்பிரு
பாலா மொழிந்த பொருளுள திலதென
இவ்விரண் டாகு மென்மனார் புலவர்.

௨௮. ஒருபொருட் டன்சொலி னுரைக்கப் படாஅது
கேட்போ ருண்மகிழ் விளப்பது மிஃதஃ

தன்றெனத் தெரிந்து மாமெனத் துணியப்
படுவதூஉ மாகிய பான்மையிற் றேறற்
கொருபுல மாத லுயர்வு நவிற்சி
மற்றஃ தேழு வகைப்படு மென்ப.

௨௯. அவற்றுள், புகழ்பொரு டனைத்தன் கிளவியிற் புகலா
தில்பொருட் சொல்லி னிலக்கணை யாக
வுரைப்ப தருவக வுயர்வு நவிற்சி.

௩௦. நாட்டுமுன் னுயர்வு நவிற்சி நீக்கொடு
கூட்டி முடித்த லொழிப்புயர் நவிற்சி.

௩௧. தீர முருவஞ் செல்வ முதலிய
சொற்களைப் பிரித்துச் சொல்வது பிரிநிலை.

௩௨. தொடர்பில் பொருட்கொரு தொடர்பு புனைதலுந்
தொடர்புறூஉம் பொருட்குத் தொடர்பில தாக்கலு
மெனவிரு வகைத்தாந் தொடர்புயர் நவிற்சி.

௩௩. கால மொன்றிற் காரண காரிய
நிகழ்த் தொடுத்தன் முறையிலி யென்ப.

௩௪. காரண வுணர்ச்சி யொன்றிற் காரியம்
பிறத்தல் விரைவுயர் நவிற்சி யாகும்.

௩௫. காரிய முன்னுங் காரணம் பின்னு
நிகழப் புனைதன் மிகையுயர் நவிற்சி.

௩௬. புனைவுளி புனைவிலி பலவும் பொதுவியல்
பொன்றின் முடித்த லொப்புமைக் கூட்டம்.

௩௭. வருணியா வருணியம் வாய்ப்பமேலோ ரியல்பின்
முடிவது விளக்கென மொழிந்தனர் புலவர்.

௩௮. சொல்லும் பொருளுஞ் சொல்லொடு பொருளும்
வாக்கியப் பின்னரும் வருவது பின்வரு
விளக்கது மூன்று விரியு மென்ப.

௩௯. ஒப்புமை யிருபால் வைப்பது தொடர்முழு
துவமை முரணிக ளெனவிரு வகைத்தே.

௪௦. பிம்பப் பிரதி பிம்பபா வத்தைக்
காட்டுத லெடுத்துக் காட்டுவ மையது
முரணிக ரெனவிரு முறைமைய தென்ப.

௪௧. வாக்கியம் பதம்பொருள் காட்சிமூ வகைத்தே.

௪௨. வாக்கியப் பொருளிரண் டற்கா ரோபம்
புனைதல் வாக்கியப் பொருட்காட்சி யென்ப.

௪௩. ஒன்ற னியன்மற் றொன்றிடை யேற்றிடல்
பதப்பொரு ளென்னப் பாத்தனர் புலவர்.

௪௪. நற்பொரு டீப்பொரு ணவிலுமிவ் விரண்டனு
ளொன்றைச் செய்கையி னுணர்த்தல் பொருளே.

௪௫. ஓதிய பொருள்களி லொன்றுயர் வுடைத்தென்
றறைவது வேற்றுமை யணியெனப் படுமே.

௪௬. சிறியோ ருண்மகிழ் செயுமுட னிகழ்வை
யுரைப்பது தனையுட னிகழ்ச்சி யென்ப.

௪௭. புகழ்பொரு ளினையொரு பொருளின் மையினா
லிழிவுயர் வுறச்சொல லின்மை நவிற்சி.

௪௮. அடைமொழி யொப்புமை யாற்றலி னல்பொருட்
செய்தி விளங்கப் புகழ்பொருட் செய்தியைச்
சிலேடை பொதுவடை யெனுமிரு திறத்தினுந்
தோன்றக் கூறல் சுருங்கச் சொலலே.

௪௯. கருத்தொடு பொருந்தடை கருத்துடை யணியே.

௫௦. கருத்தொடு விசேடியங் காட்டுத லடைகொளி.

௫௧. பல்பொரு டொடும்பல் பதங்கள் புணர்த்துச்
சொல்வது பல்பொருட் சொற்றொட ரணியது
புனைவுளி புனைவிலி யிருமைமூ வகைத்தே.

௫௨. புனைவிலி தன்னைப் புனையுந் தொடர்பாற்
புகழ்பொருள் புலப்படல் புனைவிலி புகழ்ச்சி
யொப்புமை பொதுமை சிறப்பே காரணங்
காரிய மெனவைந் தாகு மதுவே.

௫௩. புனைவுளி யான்விழை புகழ்பொரு டோன்றல்
புனைவுளி விளைவெனப் புகன்றனர் புலவர்.

௫௪. நினைத்த பொருளை நேரிதிற் புகலாது
மற்றொரு திறத்தான் வழங்குதல் வஞ்சனை
தன்னா னிட்ட சாதனை யென்றிரு
பெற்றிய தென்ப பிறிதி னவிற்சி.

௫௫. பழிப்பிற் புகழ்ச்சி புகழ்ச்சியிற் பழிப்பு
புகழ்ச்சியிற் புகழ்ச்சி யெனமூப் பாலாப்
போந்தது வஞ்சப் புகழ்ச்சி யாகும்.

௫௬. நிந்தையா னிந்தை நேர்படல் வஞ்சப்
பழிப்பென நூலோர் பகர்ந்தன ரென்ப.

௫௭. ஒழிப்பின் வேறு யுவப்பமைந் தொளிரு
மறுப்பைக் கூறன் மறையணி யாமே.

௫௮. அதுவே, இயம்பிய பொருளை யேதுவின் மறுத்தல்
மறுப்பினை நீத்து மற்றொரு பொருடா
னுடம்படு சொல்லான் மறுப்பை யுணர்த்த
லெனமூத் திறத்த தென்மனார் புலவர்.

௫௯. கருதுமோ ரிடத்தவாய்க் காரிய காரணம்
ஏலாத் தரும மிரண்டன் மேலுந்
தோன்றி யழியும் பகைமை தொடுத்து
மொழித லென்ப முரண்விளைந் தழிவே.

௬௦. உலகறி காரண மொன்று மின்றிக்
காரியம் பிறத்தலுங் காரணவிய றொடர்
பிரண்டிலொன் றெஞ்சி யிருப்பக் காரியம்
பிறத்தலுங் காரியம் பிறத்தற் காந்தடை
யுள்ள தாக வதுதா னுதித்தலுங்
காரண மல்லா மற்றொரு கருத்தாற்
காரியம் பிறத்தலுங் கடும்பகைக் காரணந்
தன்னிற் காரியந் தழைத்தலுங் காரிய
நின்றதிற் காரண நிலாவலு மெனவறு
பெற்றிய தாகும் பிறிதா ராய்ச்சி.

௬௧. எஞ்சாக் காரண மிருப்பக் காரியம்
பிறவா ததுகா ரணவா ராய்ச்சி.

௬௨. காரிய மருமையாக் காட்டல்கூ டாமை.

௬௩. காரண மோரிடத் திருப்பக் காரியம்
மற்றோ ரிடத்தின் மருவன் மாறி
ஓரிடஞ் செய்தற் குரியதை மற்றோ
ரிடத்தி லியற்ற லியற்றப் புக்கதற்
காகாப் பகையொன் றாக்கிக் கோட
லெனமூன் றுந்தொடர் பின்மை யணியே.

௬௪. பொருந்துந் தகையில் பொருள்களைப் பொருத்தலுங்
காரண மதிற்பகைக் காரியம் பிறத்தலும்
ஒருவினை தொடங்கி யனிட்ட முறுதல்
யிட்டா நிட்ட மிரண்டு மடைத
லிட்டமடை யாமை யெனுமூ வகையொடு
தருமூப் பாலாந் தகுதி யின்மை.

௬௫. தகுமிரு பொருட்டொடர் சாற்றுதல் காரியங்
காரணச் செய்கையிற் காட்டுதல் கருத்தில்
பொருளடை யாது புரிந்ததை யடைத
லெனமூப் பாலா வியம்புவர் தகுதி.

௬௬. கருதியோர் பயனைக் காட்டா ததற்குப்
பகையா முயற்சி பண்ணுதல் வியப்பே.

௬௭. ஆதார வாதேய மிரண்டனு ளொன்றைப்
பெரிதிற் பெரிதெனப் பேசுதல் பெருமை.

௬௮. ஆதே யத்தினு மாதார மதனைச்
சிறிதிற் சிறிதாச் செப்புதல் சிறுமை.

௬௯. ஒன்றற் கொன்றே யுதவலந் யோந்நியம்.

௭௦. நிலையின் றுதேய நிகழத் தொடுத்தல்
ஏற்றதோர் பொருள்பல் லிடங்களி னிற்பக்
காட்டுதல் சிறிய காரியஞ் செய்வான்

தொடங்கிவே றருவினை தோற்றுதன் மூன்று
நிகழ்வது சிறப்பு நிலையணி யென்ப.

௭௧. ஒருகா ரியத்தி னுலகறி காரண
மதன்பகைக் காரிய காரண மாக்குதல்
தொழிலோன் றற்குத் துணையெனக் கொண்ட
பொருளைப் பகைத்தொழிற் கருவி யாக்கல்
ஒருதொழி லமைப்பா னொருவ னுள்ளிய
பொருளாற் பிறன்பகை வினைநனி பொருத்தலென்
றுகுமூ வகைத்தே மற்றதற் காக்கல்.

௭௨. பின்பி னாகப் பேசும் பொருட்கு
முன்முன் னாக மொழிய வரூஉமவை
காரண மாகவுங் காரிய மாகவும்
வழங்குவ காரண மாலை யென்ப.

௭௩. முன்னது போல்வரு முன்னவை பின்னவை
யடைசொ லாக வடைகொளி யாக
வழங்குத லொற்றை மணிமாலை யணியே.

௭௪. தீவகத் தொடுமுன் செப்பிய வேகா
வளிதனைச் சார்த்தன் மாலை விளக்கே.

௭௫. ஒன்றற் கொன்றுமென் மேனுயர் விழிவுக்
குணத்தா னுயர்வு குறிப்பது மேன்மே
னுயர்ச்சி யணியென் றுரைத்தனர் புலவர்.

௭௬. நிறுத்த முறையே நெறிப்படப் பொருளைக்
குறித்த னிரனிறை யெனக்கூ றுவரே.

௭௭. பல்லிடங் களினும் படா வொருபொருள்
புகறலோர் வயிற்பல் பொருள்சென் றடைய
நெறியிற் கூறன் முறையிற் படர்ச்சி.

௭௮. இழிவிற் றுயர்வுறன் மாற்று நிலையே.

௭௯. ஓரிடத் திலதென வொழித்தொரு பொருளை

யுண்டென மற்றோ ருழிநிய மித்த
லொழித்துக் காட்டென் றுணர்ந்தனர் கொளலே.

௮0. ஒட்டைத் தொனுமிரு நிலையினை விகற்பித்
தறைத லுறழ்ச்சி யணியா குமே.

௮௧. இகலின் றொருபொழு தினையும் பொருளின்
குழுவைக் குறித்தலுங் கூடுபல் காரணந்
தம்மிற் காரியஞ் சாற்றலுங் கூட்டம்.

௮௨. வினைமுதற் கேற்ற வினைகளை முறைப்பட
விளம்பல் வினைமுதல் விளக்கணி யாமே.

௮௩. ஒருவன் செய்தற் குற்ற காரிய
மற்றொரு காரண வழிவரு முதவியின்
முடித லெளிதின் முடிபணி யென்ப.

௮௪. வன்பகை யன்றி மற்றதன் துணைமேல்
விசயங் கோடல் விறல்கோ ளணியே.

௮௫. பொருளொன் றுரைக்கத் தண்டா பூபிகை
வழக்கான் மற்றொரு வண்பொரு டோன்றல்
தொடர்நிலைச் செய்யுட் பொருட்பே றணியே.

௮௬. மன்னிய பொருளை வாக்கியார்த் தத்தி
னாயினும் பதார்த்தத் தாயினு மிரண்டி
னாயினு நாட்டற் கமைவது தொடர்நிலைச்
செய்யுட் குறியெனச் செப்பினர் புலவர்.

௮௭. பொதுவாற் சிறப்புஞ் சிறப்பாற் பொதுவும்
புகறல் வேற்றுப் பொருள்வைப் பணியே.

௮௮. சிறப்பினை நாட்டப் பொதுவுமப் பொதுவினை
மீட்டு நிறுத்த மேலொரு சிறப்பும்
வகுத்துக் கூறல் மலர்ச்சி யணியே.

௮௯. மிகுதிக் காரண மேவாத தனைக்
கருவி யாக்கல் கற்றோர் நவிற்சி.

௯0. இவ்வா றாயி னீதுறு மெனவொரு
காரிய முடிவைக் கருதலுய்த் துணர்வே.

௯௧. பொருளைப் பொய்ம்மை யாக்க மற்றொரு
பொய்ப்பொருள் புனைதல் பொய்த்தற் குறிப்பே.

௯௨. வருணிய மடைகொளி யாக வகுத்துப்
புகழும் பொருட்டொடர் போலும் பொருணிலை
வருணிப் பதனை வனப்புநிலை யென்ப.

௯௩. விரும்பிய வினைமுயல் வின்றி முடிதலும்
விழைபொரு டன்னின் மிகுபொரு ளடைதலும்
முபாய முயற்சியிற் பயனே யுறுதலு
மெனமுத் திறத்த தின்ப வணியே.

௯௪. விழைபொருட் கிவற்றும் வினையே வேறு
தொடர்பகைப் பொருடா றன்ப வணியே.

௯௫. ஒன்றன் குணகுற் றங்களா னொன்றற்
கன்னல்வ சொலலக மலர்ச்சி மற்றவ்
துறுகுணங் குற்ற முறழுநால் வகைத்தே.

௯௬. குற்றங் குணங்களான் மற்றொன் றற்கவை
யுளவா காமை யோதுத லிகழ்ச்சி
இருவகை யாகவஃ திசையு மென்ப.

௯௭. குற்றங் குணந்தரக் கண்டு மற்றது
விரும்பிக் கூறல் வேண்ட லணியே.

௯௮. குணங்குறை மாறிக் கூறுத லிலேசம்.

௯௯. புகழ்பொரு ளுணர்த்தப் புகூஉஞ் சொற்களாற்
கூர்ந்தறி பொருளைக் கூறல் குறிநிலை.

௧00. முன்னிய பொருளை முன்பின் முறையின்
வழுவா துரைத்த லரதன மாலை.

௧0௧. ஒருபொரு டன்னியல் பொழிந்து பிறிதியல்
கோடல் பிறிதின் குணம்பெற லணியே

௧௦௨. ஒன்றன்மற் றொன்றி னுறுகுணம் பெறினு
மீட்டுந் தன்குண மேவலும் விகாரமஃ
தடையினு முன்னிலை யமைதலு மென்றா
தொல்லுருப் பெறலணி சொல்லிரு வகைத்தே.

௧௦௩. தன்னொடு சார்பிறி தின்னியல் பெருமை
பிறிதின் குணமெனப் பேசினர் புலவர்.

௧௦௪. தன்னுடை யியற்கைத் தன்மைமற் றொன்றின்
சார்பான் மிக்குற றன்குண மிகையே.

௧௦௫. பொதுவியல் பானிரு பொருட்கு வேற்றுமை
தோற்றா ததனைச் சொல்லன் மறைவணி.

௧௦௬. ஒப்பி னிருபொருட் குயர்வு தோன்றாமை
பொதுமை யணியெனப் புகன்றனர் புலவர்.

௧௦௭. பொதுக்குணத் தொன்றும் பொருளிரண் டற்கோர்
ஏதுவான் வேற்றுமை யியம்பன் மறையாமை.

௧௦௮. ஒப்பிற் பொதுமை யுறும்பொரு ளிரண்டற்
குயர்வொரு காரணத் துதித்தல் சிறப்பே.

௧௦௯. ஒருகருத் துள்ளுற வுரைப்பது மறைப்பிறை
வினாவொன் றற்கது வேவிடை பலவாம்
வினாவிற் கொருவிடை விளம்பல் வியப்பிறை.

௧௧௦. கருதிய பிறன்கோள் கண்டு குறிநிலைச்
செய்கையி னிகழ்த்துஞ் செப்பே நுட்பம்.

௧௧௧. மறைசெய லறிந்த மாட்சி தோன்றக்
குறிநிலைச் செய்கை கொண்டுமற் றதனைக்
காட்சியின் விரித்தல் கரவுவெளிப் படுப்பே.

௧௧௨. ஒருகா ரணத்தா னுதித்த சத்துவ
குணத்தைப் பிறிதோர் காரணங் கூறி
மறைத்து மொழிதல் வஞ்ச நவிற்சி.

௧௧௩. குறித்தொரு பொருளைக் கூறற் குரியது
மற்றொரு பொருண்மேல் வழங்கல் குறிப்பு
நவிற்சி யணியென நாட்டினர் புலவர்.

௧௧௪. சிலேடையான் மறைத்துச் செப்பும் பொருளை
விண்டு மொழிதல் வெளிப்படை நவிற்சி.

௧௧௫. உட்கோண் மறைத்தற் குன்னிப் பிறரைச்
செயலான் வஞ்சனை செய்தலே யுத்தி.

௧௧௬. உயர்ந்தோ ராட்சியி னுற்றசொற் றழுவன்
மன்னிய வுலக வழக்கு நவிற்சி.

௧௧௭. மற்றொரு பொருளையவ் வழக்குச் சொல்லே
வாய்ப்பக் கோடல் வல்லோர் நவிற்சி.

௧௧௮. ஒருவரோர் பொருளறி வுறுத்தற் கோதிய
சொற்குவே றொருவன் சூழ்ந்து சிலேடையின்
எடுத்தன் முதலிய விசைவிகா ரத்தின்
மற்றொரு பொருடரன் மடக்குத னவிற்சி.

௧௧௯. மேவிய சாதி வினைகள தியற்கைத்
தன்மை யுரைப்பது தன்மை நவிற்சி.

௧௨௦. இறப்பி னெதிர்வி னியன்றதை யாங்கே
நிகழ்வ தாக்க னிகழ்வி னவிற்சி.

௧௨௧. செல்வ மிகுதியை யாதல் செப்புறு
மருங்கதை புகழ்பொருட் கங்கமா யாதல்
கூறுவது வீறு கோளணி யென்ப.

௧௨௨. வியப்பும் பொய்ம்மையு மேலத் திறல்கொடை
முதலிய புகழ்தன் மிகுதி நவிற்சி.

௧௨௩. அறைந்த பெயர்ச்சொற் காற்றலின் மற்றொரு
பொருள்வருத் துரைத்தல் பிரிநிலை நவிற்சி.

௧௨௪. வெளிப்படை யாகி மேவிய கருத்தொடு
பொருந்து நீக்கம் புகல்வது விலக்கே.

கஉ. வெளிப்படைப் பொருளின் விதியொரு கருத்தொடு
மேவி வருதல் விதியணி யென்ப.

கஉசு. காரணங் காரியத் தோடு சார்த்தலும்
காரிய காரண வொற்றுமை காண்டலும்
என்றிரு வகைத்தா மேது வணியே.

முற்றும்.

* * *

உ

திருச்சிற்றம்பலம்.

திருவாலவாயுடையார் கோயில்

திருப்பணிமாலை.

———:o:———

தேவேந்திரன்செய்தது.

எண்ணரிய தானசதுர் யுகந்தனக்கு முன்ன மிந்தவுல கத்தடைந்து கடம்பவனத் தெய்திப்,புண்ணியத்தெண் ணீரம்பொற் றாமரையி லாடிப் பொற்கமலங் கொய்துகடம் பாடவிநா யகனைத், தண்ணளியா லருச்சனைசெய் தட்டகசந் தாங்குந் தமனியவிந் திரமான மெனுங்கருப்பக் கிரகம், விண்ணுலகு மண்ணுலகும் பணிந்தேத்த வமைத்தான் விருப்பொடுதே வேந்திரனும் விண்ணவர்நா யகனே. (க)

வெள்ளையானை.

ஆங்கதன்பின் றுருவாசன் சாபமதா லேகாட் டானையா யுழன்றுகடம் பாடவிசேர்ந் தம்பொற், பூங்கமலத் தடம்படிந்து பழையவடி வடைந்து புங்கவனைப் பூசித்துத் தன்பேரான் மேல்பால், ஓங்குகணே சனுமானை யூருணியுஞ் சமைத்தவ் வுயர்வனத்தின் கிழக்கயிராவதநல்லூர் வகுத்துப், பாங்குடனிந் திரேசுரனைத் தன்பேராற் பதிட்டை பண்ணியதா லெழிலயிரா பதமதவா ரணமே. (உ)

க. இத்திருப்பணி வரலாறு திருவிளையாடற்புராணம் இந்திரன் பழி தீர்த்தபடலத்துக் காண்க.

உ. இத்திருப்பணி வரலாறு ஷை நூல் வெள்ளையானைச் சாபந்தீர்த்த படலத்துக்காண்க. வெள்ளையானை பிரதிஷ்டைசெய்த கணேசருக்கு ஐராவதகணேசர் என்பது திருநாமம். அவ்யானையால் உண்டாக்கப்பெற்ற தீர்த்தம் யானையூருணி எனவும் கணபதியேந்தலெனவும் வழங்கும்; மதுரைக்கு மேற்கேயுள்ளது. அஃது உண்டாக்கிய ஊர் ஐராவதநல்லூர் என்பது; மதுரைக்குக் கிழக்கேயுள்ளது. ஐராவதத்தால் பிரதிஷ்டை செய்யப்பெற்ற சுவாமி ஐராவதேசுவரர் எனப்படுவர்.

குலசேகரபாண்டியன்.

மலைமகள் கோயிலு நாயகர் கோயிலு மாமதிளு
மலர்கதிர்ச் சூரிய னாதிசண் டேச்சுர னந்தமதா
யிலகிய சுற்றத் திருந்தவர் கோயிலும் யாவுஞ் செய்தான்
பலகலை தேரு முகில்குல சேகர பாண்டியனே. (௩)

திட்ட மொடுகடப் பங்காடு வெட்டித் திருத்தியண்ட
மட்டள வுங்கொத் தளக்கோட்டை யுஞ்சக்ர வாளமென
இட்ட முடன்கட்டு வித்திந்த்ர லோக மென்மதுரைப்
பட்டண முங்கண் டனன்குல சேகர பாண்டியனே. (௪)

பார்சொக்க நாத னுரைப்படி கீழ்த்திசைப் பாங்காரி
யரபுத் திரன்சத்த மாதாக்கள் தென்றிசை யக்குடபாற்
கருணைப் புயலுத் தரங்காளி கூடலைக் காத்தளிக்கப்
பரிவிற் ப்ரதிட்டைசெய் தான்குல சேகர பாண்டியனே. (௫)

மலையத்துவசபாண்டியன்.

சுருப்பணி தார்க்குல சேகர மாறன் றெடுத்தபடித்
திருப்பணி பூசை மதுரே சருக்குச் சிறக்கச்செய்து
மருப்பணி சோலை மணலூருந் தந்தனன் வாய்த்தசெம்பொற்
பருப்பத மொத்த புயன்மலை யத்வச பாண்டியனே. (௬)

சுந்தரபாண்டியன்.

சந்திர சேகரர் தென்மது ரேசர்தஞ் சந்நிதியில்
வந்தொரு கோபுர மாமக மேரு வளர்ந்ததெனச்
சுந்தர பாண்டியன் கோபுர மொன்று துலங்கச்செய்தான்
மந்த்ர நேர்புயன் சுந்தர பாண்டிய மன்னவனே. (௭)

அந்தரி யங்கயற் கண்ணா யகிசெம்பொன் னாலயத்துட்
சுந்தர பாண்டிய மண்டபமுஞ் சொக்க ராலயத்தே
சுந்தர மாறன் திருமா மதிலுந் துலங்கச்செய்தான்
பைந்தமிழ் சந்தத முந்தெரி சுந்தர பாண்டியனே. (௮

திருநடு வூர்த்தென் மதுரையிற் செய்த திருநகரின்
மருவிய கோயிலொன் றுண்டாக்கி யேயிம் மையினன்மையைத்
தருசிவ லிங்கப் பதிட்டைசெய் தர்ச்சனை தானுஞ்செய்தான்
பருமலை யன்னசெம் பொற்புயன் சுந்தர பாண்டியனே. (௯)

விக்கிரமபாண்டியன்.

கல்லானை யானதை யெல்லாருங் காணக் கரும்புதந்த
யெல்லாமும் வல்லசித் தர்க்குப்பொற் கோயி லினிதமைத்தான்
வல்லாரில் வல்லவன் சந்த்ர குலேசன் மகாமன்னவன்
பல்லாரும் போற்ற வருகூடல் விக்கிரம பாண்டியனே. (௧௦)

மட்டா ரலங்கல் புனைசோழன் விட்ட மதகளிற்றைக்
கட்டா ரழல்விழிச் சிங்கக் கணைதொட்டுக் காய்ந்தசொக்கர்க்
கட்டாலை மண்டப முண்டாக்கி னானல் லறந்தழையப்
பட்டாபி டேகம் புனைகூடல் விக்கிரம பாண்டியனே. (௧௧)

பராக்கிரமபாண்டியன்.

சிரமேவு கங்கை யணிசொக்க நாதர்க்குச் சீர்பெறவே
வரகா திபனுறை பாதலம் பேதித் துவானங்கட்டித்

---

௩. ௪. ௫. இவை திருநகரங்கண்ட படலத்துக்காண்க. (௫) இப்போதுள்ள அம்மன்தேர்முட்டிக்கு மேல்பக்கத்துமுடுக்கிலிருந்த வெண்கலமடைஐயனார் கோயிலே இதிற்கூறப்பட்ட மகாசாத்தாகோயில் என்பர்.

௭. சுந்தரபாண்டியன் கோபுரம்-சுவாமிசந்நிதிக்கீழைப்பெரியகோபுரம்.

௯. திருநடுவூர் என்பது மேலைமாசிவீதிக்கு மேற்கேயுள்ள இம்மையே நன்மைதருவாருள்ள இடம். இதிலுள்ள ஸ்வாமிக்கு இஹாபீஷ்டப்பிரதாயகர் இம்மையேநன்மைதருவார் எனவும்; அம்பிகைக்கு மத்தியபுரநாயகி நடுவூர்நாயகி எனவும் திருநாமங்கள் வழங்கும். (எ. அ. கூ.) இத்திருப்பணிகளைச் சுந்தரபாண்டியன் செய்தகாலம் சகாப்தம் ௧௧௪௦. (கி. பி. 1218) என்று தெரிகிறது. [செந்தமிழ்த்தொகுதி ௫. பக்கம் ௫௭௦. திருவாலவாயுடையார் கோயிற் றிருப்பணிவிவரம்.]

௧௦. ௧௧. இப்பெயர்பெற்ற பாண்டியன், ஜடிலவர்மன் சுந்தரபாண்டியனையடுத்துப் பட்டமடைந்தவன் என்பர். (செந்தமிழ். தொகுதி ௪. பக்கம் ௪௯௦. பாண்டியசாஸனங்கள்) அட்டாலைமண்டபம்-இப்பெயருள்ள மண்டபமொன்று பண்டைக்காலத்தில் கீழைக்கோட்டைமதிலைச் சாரவிருந்ததென்று தெரிகிறது; இக்காலத்து மண்டியூர்த்தெப்பக்குளத்தின் வாயுமூலையில் ௧௯-கால்களால் ஆகியதோர் மண்டபமிருக்கிறது. இதற்கு வடக்கேயுள்ளது யானைமலை. (பழைய திருவிளையாடற்பதிப்பு 63-ம்பக்கக் குறிப்பு.)

௧௨. இப்பாண்டியன் இத்திருப்பணிசெய்தது சகாப்தம் ௧௨௪௫.

திரமேவு மேரு வெனக்கோ புரமேற் றிசையமைத்தான்
பரராசர் நாளும் பணியும் பராக்கிரம பாண்டியனே. (௧௨)

ஆனந்தத் தாண்டவநம்பிகற்பாள்.

கன்னலுஞ் செந்நெலுஞ் சூழ்செல்வி நாடன் கவுணியர்கோன்
நன்னர்க ளெண்ணிய வானந்தத் தாண்டவ நம்பிகற்பாள்
தென்னவர் போற்றிய வங்கயற் கண்ணம்மை செல்வித்திருச்
சன்னிதிக் கோபுரங் கட்டினள் தன்மந் தழைக்கவென்றே. (௧௩)

விசுவப்ப நாயக்கர்.

எண்ணிய கோபுரம் நாயகன் கற்படை யீங்கிதனுக்
கண்ணிய கீழ்ப்பால் விசுவீச் சுரமுமொன் றுங்கமைத்தான்
மண்ணுல கேத்தும் புகழீ சுரன்றன் மதலைநண்பு
நண்ணிய வத்தி கிரிவாழ் விசுவப்ப நாயக்கனே. (௧௪)

செல்லப்பெண், மாணிக்கம்.

வன்னி யடியில் நடராச மூர்த்தியின் மண்டபமுந்
தன்னியல் போதி னாலேயொ ரூரையுந் தந்தன்பினாற்
கன்னியர் போற்றுந் திருமலை மாணிக்கங் கண்டளித்தாள்
இன்னருட் கந்தனைச் செய்தனள் செல்லப்பெண் ணென்பவளே. ()

(கி. பி. 1323) இவ்வரசன், வாளால் விழித்துறங்கும் பராக்கிரமபாண்டியன் என வழங்கப்படுவன்.

௧௩. கற்பாள் - பத்தினியார்: மனைவியார். ஆனந்தத்தாண்டவநம்பி என்பவர் வேம்பத்தூர்ச் சோழியப்பிராமண வகுப்பினரும், திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணமியற்றிய பெரும்பற்றப்புலியூர் நம்பியின் வமிசத்தவருமாவர் என்பர். இவர்காலம் சகாப்தம் ௧௧௫௦. (கி. பி. 1227—1228) [மஹாமஹோபாத்தியாயர்: ஸ்ரீ வே. சாமிநாதையரவர்கள் பதிப்பித்தபழையதிருவிளையாடற்புராணத்து நூலாசிரியர் வரலாறுபார்க்க.).

௧௪. விசுவீச்சுரம் - சுவாமிசந்நிதிக் கீழைப்பெரியகோபுரத்தின் வடபுறத்தே திருமதிலையொட்டியிருந்தது என்பர்.

௧௫. செல்லப்பெண் திருப்பணிசெய்தது சகாப்தம் ௧௪௮௫ (கி. பி. 1513) (செந்தமிழ்த்தொகுதி ௯. பக்கம் ௫௭௨). மாணிக்கம்பட்டி என்னும் கிராமமொன்று மதுரைத்தேவஸ்தானத்துக்கு உண்டு.

அன்னக் குழியு மரன்றிருக் கோயிலு மாங்கவற்கு
மன்னப் பெரிய மலைகுடைந் தாலன்ன மண்டபமுந்
தன்னொப்பி லாத மதுரேசற் கென்றினி தூவமைத்தாள்
மன்னிச் செறியு மதுரேச மாணிக்க மாமயிலே. (௧௬)

நல்லபெண்.

மண்ணினுள் ளோர்களும் யாவரும் போற்று மதுரைச்சொக்கர்க்
கண்ணிய சந்நிதி வாசலி லேநல் லழகுபெறத்
திண்ணிய பேரருள் நந்தீ சரைப்பிர திட்டைசெய்தாள்
பெண்ணினி னல்லபெண் ணென்றே பெயர்மிகப் பெற்றவளே. (௧௭)

கம்பணவுடையார்.

பின்னொரு காலந் திருக்காப்பு நீக்கித்தன் பேரன்பினால்
முன்னுள வூர்களும் பின்புதி தாய்விட்டு முக்கணர்க்கு
மன்னிய பூசை திருப்பணி கூடல் வளரச்செய்தான்
கன்னியும் பொன்னியுங் கங்கையுங் கொண்டருள் கம்பணனே. (௧௮)

கம்பலராயன்.

எண்டிசை யெண்டெட்ச ணாமூர்த் தியினுக் கெழின்மண்டபம்
பண்டயன் மாலடி கண்டறி யாதலிங் கோற்பவர்க்கு
மண்டபந் துர்க்கைக்கு மண்டபங் கூடலில் வாய்க்கச்செய்தான்
வண்டவிழ் தார்ப்புயன் கம்பல ராய மகீபதியே. (௧௯)

---

௧௬. அன்னக்குழிமண்டபம் மதுரை மேலைச்சித்திரைவீதியிலுள்ளது.

௧௭. நந்திகேசுரர்சந்நிதி-சுவாமிசந்நிதியில் வடக்குமுகமாகத் திருவாயிலினுட்பக்கத்து உள்ளது.

௧௮. இவர் விஜயநகர அரசரால் அனுப்பப்பட்டுத் தென்னாட்டை ஜயித்து, அவர் பிரதிநிதியாக ஆண்டவர். மகமதியஅரசரால் மதுரைக்கோயில் அழிபட்டதுகேட்டு, கி.பி. 1372-ல் மதுரைநோக்கிப் படையெடுத்துத் துருக்கர்களைவென்று, கோயிலைத் திருக்காப்புநீக்கி, பழையபடியே வேண்டிய சிறப்பெல்லாஞ் செய்வித்து ஸம்ரக்ஷித்தார். இவர் வீரசைவ வகுப்பினரென்பர். (Nelson's "The Madura Country." Part III. pp. 81.)

௧௯. இப்பாட்டிற்கண்ட மூன்று மண்டபங்களும் சுவாமியின் கருப்பகிரக விமானத்தோடுசேர்ந்து, தெற்கு மேற்கு வடக்குப்பிராகாரங்களில் முறையே உள்ளவை.

மாவலி.

மன்னன் குலசேகர பாண் டியன்செய்த மாமண்டபம்
பின்னொரு காலத் தரைகுறை தீர்த்துப் பிறங்கச்செய்து
பொன்னின் றிருவா பரணம் பலபுதி தாகத்தந்தான்
மன்னும் புகழ்த்திரு மாலிருஞ் சோலை மகாவலியே. (௨௦)

பாறுசூழ் சுடரிலைவேற் குரிசில்குல சேகரபாண் டியன்றான் செய்த
ஆறுகாற் பீடத்திற் சிலபழைய தைப்புதிதா வழகிற் செய்து
வீறுசேர் நாயகர்சந் நிதித்திருக்கா வணப்பத்தி விளங்க வைத்தான்
தேறுநீர்க் கடலுலகெண் சுந்தரமா வலிகீர்த்திச் செல்வன் றானே. ()

மந்திர மிக்க கயற்கண்ணி சந்நிதி மாமண்டபஞ்
செந்திரு வம்மை முற்பிரா காரத் திருமண்டபஞ்
சுந்தரப் பள்ளி யறைவகுத் தான்றுன்ன லார்வணங்க
வந்தரு ளுந்திரு மாலிருஞ் சோலை மகாவலியே. (௨௨)

செவ்வந்திமூர்த்தி செட்டி.

தேனூ றியதிரு வாயிலிற் கோபுரஞ் செங்கற்படை
வானா ரிடைக்கட்டு வாயிலிற் கோபுரம் வானமுத
லானாத கற்படை செங்கற் படைமுதல் யாவுஞ்செய்தான்
மானா கரன்செட்டி செவ்வந்தி மூர்த்தி வரோதயனே. (௨௩)

---

௨௦. பாண்டிநாட்டுத் திருமாலிருஞ் சோலைப்பக்கத்தே, நடுநாட்டிலிருந்த வாணவமிசத்தார், சகாப்தம் 15-வது நூற்றாண்டில் ஆண்டுவந்தார்களென்பதற்கு சாஸனங்கள் உண்டென்பர். (செந்தமிழ் தொகுதி ௪, பக்கம் ௪௨௭) சுந்தரமாவலி என்பவன் இத்திருப்பணிகள் செய்தகாலம் சகாப்தம் ௧௩௭௪. (கி. பி. 1452). இவன் சுந்தரத்தோண்மாவலிவாணாதிராயன் எனவும் வழங்கப்படுவன். "குலசேகரன்செய்த மாமண்டபம்"-நடராஜர் எழுந்தருளியிருக்கும் சந்நிதிமண்டபம்.

௨௧. "வீறுசேர்நாயகர் சந்நிதித் திருக்காவணப்பத்தி"-உற்சவநயினார் எழுந்தருளியிருக்கும் மண்டபம்.

௨௩. இடைக்கட்டுவாயிலிற் கோபுரம் - மூக்குறுணியரிசிப்பிள்ளையார் சந்நிதிக்கு எதிரிலுள்ளதும், அம்மன்சுவாமிகோயில்களுக்கு மத்தியிலுள்ளதுமான திருவாயிற்கோபுரம். இத்திருப்பணி நடந்தது சக - ௧௪௮௧. (கி. பி. 1559.)

வீரப்பன்.

கூடலம் பதியிறைவர் முன்வெள்ளி யிமையமது குலவியிடை
வொருகல்லினாற், குறடுகோ புரவாயி லிற்கதவு தென்வாயில் கொள்
அருட் படிபரமனா, ராடுபா மண்டபத் தளவிசை திருப்பள்ளி ய
றையிலுயர் படிக ளுமையா, ளாலயத் தளவிசை திருக்கதவு பல்லக்
கொ டானபொற் பட்ட மழகா, ரோடைசூழ் வீரப்ப னற்றோப்பு
மத்தோப்பி லோங்குமுயர் பணிமண்டபம், ஓதுமிவை போலினிய
பணிவிடைகள் சொக்கருக் கொருமையுட னேயுதவினான், மேடையும்
மாடரங் கெங்குமட வார்கள்பயில் வீதிசூழ் தானை யதிபன், வேதியர்
கள் காவலர்க ணாவலர்கள் வாழவரு வீரையன் வீரப்பனே. (௨௪)

திம்மப்பநாயக்கர்.

கண்டர கண்டன் குறடுங் கனபுரு ஷாமிருக
மண்டப முங்கண் டரகண்டன் தோப்பும் வளம்பெறவே
யெண்டிசை யோர்புக ழுஞ்சொக்க நாதர்க் கினிதமைத்தான்
திண்டிறற் றிம்மப்ப நாயக்கன் கீர்த்தி செயதுங்கனே. (௨௫)

கம்பலராசி.

கண்டர கண்டன் குறட்டுக்கு முன்னான்கு காலிலொரு
மண்டப மும்மண் டபமேற் சிகரமும் வாய்த்திலங்க
விண்டர வோங்கு மிடபக் குறடும் விளங்கச்செய்தா
னெண்டிசை யோர்புகழ் கம்பல ராசி யெனுமன்னனே. (௨௬)

சிராமலைச் செவ்வந்திமூர்த்திச்செட்டி.

சிகரா சலச்சிலைச் சொக்கர்க்குச் செம்பொற் சிகரங்கள்சூழ்
மகமே ருவையொரு கோபுர மாக வகுத்ததென்னத்
தகவாக வேதெற்கு வாயிலிற் கோபுரந் தான்கட்டினான்
செகராசர் மெச்சுஞ் சிராமலை யாதிபன் செவ்வந்தியே. (௨௭)

---

௨௪. இவர், விஜயநகர அரசரது பிரதிநிதியாக மதுரையிலிருந்தாண்டவர். இவர் தந்தையார் கிருஷ்ணப்பநாயக்கர். இவர் திருப்பணிசெய்தகாலம் சக - ௧௫௦௦ (கி. பி. 1578.)

௨௫. இவர் விஜயநகர அரசரது பிரதிநிதியாய்வந்து மதுரையை ஆட்சிசெய்தவர். திருப்பணி செய்த காலம்-சக. ௧௪௮௬. [கி. பி. 1564]

௨௭. இவர் திருப்பணிகள் செய்த காலம் சக. ௧௪௮௧ [கி. பி. 1559]

சிற்பார் சொக்கர் மகிழ்ந்துறை செம்பொற் சிகரத்துக்குப்
பொற்குட முப்பத் திரண்டங் கயற்கட் புரிகுழலுக்
கற்புத மாகப்பொன் னிந்த்ரவி மானமுன் பாக்குவித்தான்
நற்றமிழ் தேர்செட்டி செவ்வந்தி மூர்த்தி நராதிபனே. (௨௮)

மற்றொப்பி லாவொரு பச்சைப் பதக்கமும் வண்பவளக்
கொற்றக் குடையு மொருவெள்ளிப் பாத்திர முங்கொடுத்து
நற்றிருக் கோயிற் றிருவம்ப லேசுர னன்கமைத்தான்
கற்றவர் தாபர மூர்த்திசெவ் வந்தி கனதுங்கனே. (௨௯)

அட்டதிக் கென்ன வருலோக நாதன்முன் னன்பிற்செய்த
பிட்டுக்கு மண்சுமை மண்டப முன்பினும் பின்பெரிதாக்
கட்டுவித் துச்செழுங் காவுமுண் டாக்கினன் காசினியெண்
செட்டி சிராமலை மூர்த்தியன் பாகிய செவ்வந்தியே. (௩௦)

பெருமாள்.

கொற்றஞ்செய் சொக்கர்க்கு நான்கூருந் தந்நடுக் கோபுரத்தைப்
பற்றிய மண்டப முந்த்வார பாலரும் பார்வதிமுன்
னுற்றபொற் றாமரை மண்டப மும்படி யும்மிளையான்
பெற்றதெய் வங்கள் பெருமாள் வகுத்தனன் பேர்பெறவே. (௩௧)

பட்டுத் திருமலைநாயக்கர்.

கங்காள நாத ரவர்க்குமுன் மண்டபங் காமர்வெள்ளிச்
சிங்கா சனந்திரு வாபர ணஞ்சில செய்தமைத்தான்
பங்கே ருகவயல் சூழ்தஞ்சை வாழும் பலவன்மைந்தன்
நந்தா ரெனவந்த பட்டுத் திருமலை நாயக்கனே. (௩௨)

திருவம்பலச்செட்டி செய்தது.

தார்பணி பூங்குழ லங்கயற் கண்ணம்மை சந்நிதியிற்
கார்பணி யும்படிக் கேமூர்த்தி மண்டபங் கட்டுவித்தான்

---

௩௧. இவர் செய்தகாலம் சக-௧௪௯௧ [கி. பி. 1569.]

௩௨. இந்நாயக்கர் செய்தகாலம்.சக. ௧௪௯௧ [கி. பி. 1569] கங்காளநாதர்-பிக்ஷாடனர்.

௩௩. (௨௭-௩௦-ஆம்)பாடல்களிற் கூறப்பட்ட செவ்வந்திமூர்த்தி செட்டியின்புதல்வர்இவர். திருப்பணிநடத்தியது சக. ௧௪௮௪[கி. பி. 1562]

சீர்பணி மார்பன் சிராமலைச் செவ்வந்தி செட்டிசெல்வன்
பார்பணி வேலப்பன் முன்னோன் றிருவம் பலச்செட்டியே. (௩௩)

வேலப்பசெட்டி.

விஞ்சிய மூர்த்தீச் சுரம்விசு வீச்சுர மேருநிக
ரஞ்சு நிலைவடக் குக்கோ புரஞ்சொக்க ராலயத்துட்
செஞ்சொற் றளவிசை சந்நிதிப் பொற்கம்பஞ் செய்தமைத்தான்
கஞ்சக் கரன்செட்டி செவ்வந்தி வேலன் கருணையனே. (௩௪)

சங்கர நாகரசன்.

நிறையோடு சேர்ந்த திருநோக் கழகிய நீடவத்தோன்
முறையோடு செய்த திருமா மதிட்சுற்று முற்றுமறை
குறைதீரக் கட்டிப் புதுக்குவித் தான்புகழ் கொண்டசது
மறையோதுஞ் சங்கர நாகர சன்னெனு மாதவனே. (௩௫)

வேள் மூர்த்திசெட்டி.

தாரணி சொக்கர்க்கு மாமண் டபத்துத் தனிமகர
தோரண மாக வொருதீப மாலையுஞ் சோலைகளுஞ்
சீரணி தாகவே யோர்திரு மண்டபஞ் செய்தனனும்
வாரணி கொங்கையர் வேண்மூர்த்தி செட்டி மகிபதியே. (௩௬)

சின்னப்பநாயக்கர்.

திருமிகுதென் னவனடத்தா வணிமூ லத்தின் றிருநாட்குத்தேர்
புதிதா வீதி யூர்கள், மருவியசொக் கருக்கினிதாம் பூசை சந்தி
மண்டபங்க ளுயகளு யகத்துப் பத்தி, யருண்மிகுசின் னீச்சுர
முத் தளக்கு வாயி லகவணைகள் புறவணைக ளன்பாற் செய்தான்,
ஒருமைதிகழ் மல்லையசின் னப்ப பூப னேங்குபுகழ் சேர்கூத்தி
யூரன் றனே. (௩௭)

---

௩௪. இவர் முற்கூறியவர்க்குத் தம்பி; திருப்பணி நடத்தியகாலம்-சக ௧௪௮௨[கி. பி. 1560]மூர்த்தீசுரம்-வண்டியூர்த் தெப்பக்குளத்து மேல்கரையில் உள்ளது; இப்போது முத்தீசுரம் எனவழங்குகிறது. "அஞ்சுநிலை வடக்குக்கோபுரம்.-ஆடிவீதிக்குள்ளேயுள்ள வடகோபுரம்.

௩௫. திருநோக்கழகியார் சக. ௧௫௦௬[கி.பி. 1584]-ல் ஆடிவீதிப்பெரிய திருமதிட்டிருப்பணி நடத்தினரென்க. [செந்தமிழ். தொ-௫. பக்-௪௮௨]

௩௭. சின்னீச்சுரம்-அம்மன்சந்நிதி மடைப்பள்ளிக்கு வடக்கில் மேற்குப்பார்த்திருப்பது. முத்தளக்குவாயில் ஷை சின்னீச்சுரர் சந்நிதியில் உள்ள

685

குப்பையாண்டி.

இந்திரன் போற்றிய பொற்றா மரைக்கரைக் கேகிழக்காய்
வந்தொரு லிங்கங் குடிகொண்ட தென்ன மதின்மண்டபம்
அந்தம தாகக்கட் டிப்பிர திட்டைசெய் தானன்பினாற்
செந்தமிழ் தேர்வழி யான்குப்பை யாண்டி திசைபெறவே. (௩௮)

அப்பன்பிள்ளை.

சுரர்புகழ்பொற் றாமரைக்குத் தென்மேற்குத் தனதுபிதாத்
தொடுத்துச் செய்த,திருமதின்மண் டபங்கர்ப்பக் கிரகஞ்சோ பான
முதற் சிறக்கச் செய்து, பெருகுபுக்ழ் விசுவநா தரைவிசா லாட்சி
தனை ப்ரதிட்டை செய்தான், தரைபுகழப் பன்பிள்ளை தருமப்பன்
பிள்ளைவெகு தவத்தி னானே. (௩௯)

செட்டியப்பநாயக்கர்.

மன்னியமூ லக்கரையின் மண்டபமும் பொற்றா
　　மரைக்குமேல் பான்மூர்த்தி மண்டபமுன் பாகத்
தன்னுடைய பெயராலோர் மண்டபமுங் கயற்கட்
　　டார்குழலி தன்னிரண்டாம் பிரகாரஞ் சூழும்
பன்னரிய திருச்சுற்று மண்டபமுஞ் சூழப்
　　பத்திகளும் பத்தியுட னேபணிந்து செய்தான்
தன்னிகரில் கச்சிவரு பொப்பணபூ பாலன்
　　றந்தமுகில் செட்டியப்பன் றரியலர்க ளரியே. (௪௦)

கிருஷ்ணப்பநாயக்கர்.

தாலம் புகழ்மயி லங்கயற் கண்ணம்மை சந்நிதியிற்
கோலஞ்செய் கோயிலொன் றுண்டாக்கிச் செல்வக் குமரர்தம்மை
ஞாலம் புகழப்ர திட்டைசெய் தானவ நாகரிகன்
சீலன்றென் காசி வருபொம்ம நாயக்க கிருஷ்ணப்பனே. (௪௧)

தீத்தியப்பசெட்டி.

மதுரேச ருட்பிர காரத்து மேல்ப்புற மண்டபந்தண்
கதிர்வா ணுதற்கயற் கட்கிரண் டாம்பிர காரத்தினிற்
றிதமான தென்புற மண்டபஞ் செய்தனன் தீத்தியப்பன்
அதிரூப னாண்ட பெருமாள் குமார னருட்கொண்டலே. (௪௨)

மூர்த்தியென்பவள்.

வாரார் முலையங் கயற்கண்ணி கோபுர வாயிறன்னிற்
றூராரு மேனிக் களிற்றா னனன்றனைத் தாபித்தன்பாற்
சீராருங் கோயிற் படியனுக் கத்திற் சிறக்கச்செய்தா
ளேராருங் கூடலஞ் சந்நிதி வாழ்மூர்த்தி யென்பவளே. (௪௩)

இலிங்கம நாயக்கர்.

அத்தர்தென் கூடற் பதிச்சொக்க நாதருக் கன்புடனே
முத்தளக் குங்கோ புரக்கற் படைக்குறை முற்றுஞ்செய்தான்
கொத்தளக் கோட்டை கொளும்விச்வ நாதன் குமரனென்னார்
தத்தளிக் கப்பொரு லிங்கம நாயக்க சற்குணனே. (௪௪)

திம்மராவுத்தன்.

விண்டல மெண்ணு மெழுகட லுக்குத்தென் மேல்கரைமேற்
கண்டவ ருள்ளங் களிக்கவொர் மண்டபங் கட்டுவித்தான்
தண்டமிழ்க் கச்சி வளம்பதி வாழுஞ் சதுரனெங்குந்
திண்டருங் கீர்த்திக் கசுவப் பையன்திம்மு ராவுத்தனே. (௪௫)

து; இப்போது, அது “முத்துவழி” எனவழங்குகிறது. சின்னப்பநாயக்கர் இத்திருப்பணிகள் நடத்தியது சக. ௧௪௪௮. [கி. பி. 1526]

௩௮. இவர் திருப்பணிசெய்தகாலம்—சக. ௧௪௯௫[கி. பி. 1573]

௩௯. அப்பன்பிள்ளை திருப்பணிநடத்தியது சக. ௧௫௦௦ [கி. பி. 1578] பொற்றாமரைக்குத் தென்புறமண்டபமும் ப்டியும் திருமதிலும் விசுவநாதப்பிரதிஷ்டையும் இவர் செய்தனவென்று தெரிகிறது. [செந். தொ-௫. பக்-௫௭௨]

௪௦. இவர் திருப்பணி நடத்தியது சக. ௧௪௮௫[கி. பி. 1563]

௪௨. இத்திருப்பணிகள் நிகழ்ந்த காலம் சக. ௧௪௮௭[கி. பி. 1565]

௪௪. இவர், கி. பி. 1682-வரை ஆட்சிசெய்த முத்துவீரப்பநாயகர்,அவர்குமாரர் சொக்கநாதநாயகர்—இவ்விருவரிடத்தும் பெரியசேனாதிபதியாக விளங்கியவர் என்றுதெரிகிறது.

௪௫. இம்மண்டபம் சங்கிலிமண்டபத்துக்குத் தெற்குமண்டபமென விவரங்காணப்படுகிறது (செந். தொ-௫. பக்-௫௭௨). இவர்க்கு வழங்கும் “ராவுத்தன்” என்னுஞ்சிறப்புப்பெயர், குதிரைச்சேவகன் என்னும பொருளில்வருமெனவும்; இராஜபுத்ரன் என்னும் வடமொழிச் சிதைவெனவும் கூறுவர் [திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராண ஆராய்ச்சி பார்க்க] இத்திம்மராவுத்தர் திருப்பணிசெய்த காலம் சக. ௧௪௮௬ [கி. பி. 1564.]

இராமப்பநாயக்கர்.

தெண்டிரைக் கங்கைச் சடையாளர் சொக்கர்தெப் பத்திருநாள்
கொண்டருளும்படிக் கன்பொடு தெப்பக் குளக்கரையின்
மண்டபங் கட்டுவித் தான்பெத்த பூபதி மைந்தனுயர்
புண்டரி கத்திரு வாழ்கச்சி ராமப்ப பூபதியே. (சசு)

கம்பைய ராச குலாதிப னங்கயற் கண்ணம்மைக்குத்
[தம்பெயரால் வசந்த மண்டப மொன்றுதான் கட்டிக்கொடுத்]
தம்பிகை பாகர்க்கு மூன்றாருந் தந்தன னல்லன்பினால்
நம்பினர் தாபரம் பெத்தன்சொல் ராமப்ப நாயக்கனே. (சஎ)

அனந்தாழ்வான் ஐயன் செய்தது.

விரவுநந் தனவனஞ் சோலைநீ லத்தோடை வீதிமா சித்தெருத்
தேர் - மேவுதிரு நாடிருத் தேர்முட்டி மண்டபம் விஞ்சுபொற் பலிபீ
டமுந், துரவுநீர்த் துறையினிற் சந்தியா மண்டபஞ் சூழ்சுற்று மதின்
மண்டபம் - தூய்கால பூசைக்கு மூர்கள்பல் லக்கிவைகள் சொக்கநாத
ர்க்குதவினான், வரமிகுங் குரவையம் பாவையும் மேருமா மங்கையும்
பரவு முரவோன் - வாழ்வுதவ ருதநற் சீரங்க னருள்வாழ வந்தபா
ரத்துவசனா, டரவினின் றுடுபோ ரேற்றினுட னேவந்த வந்தணர்
குலாதிபதிபா - லாறுசூழ் தொண்டைநா டாளுமுர வோனனந் தாழ்
வா னியற்குரிசிலே. (சஅ)

விசுவநாத நாயக்கர்.

செஞ்சொல்புனை மதுரேசர் திருவால வாயிறைவர் திருவுள மகி
ழ்ந்து புனையச், செம்பொற் பதக்கமுட னவாபரணமுஞ் சேர்ந்த
பரி கலமாதருங்-கஞ்சவயல் சூழுகோம் மட்டிமா தலையின்மேற் கய
ல்குதிகொ டாத லூருங், காக்கள்செறி யுந்திருக் கானையும் பூகவ
யல் காட்டுமே லைப்பறம்பும் - மஞ்சுதவழ் சோலைசூ ழிளமைநல் லூ
ரையும் மருவுமிந் திரவிமானம், வளமையொடு பழமைபுதி தாகவே
பொன் பூசி மகிமையுட னேயுதவினான் - விஞ்சிவரு திருவடி தனைப்
பொருந்து திறைகொண்டு மீனவனை வாழ்வித்தமால், மேவுதென் கச்
சிநக கயன்விசுவ நாதனுயர் வெற்றிப்ர தாப முகிலே. (சகூ)

அரியநயினா முதலி.

அருமா தவஞ்செ யறுபத்து மூவ ரவர்மண்டப
மருவாருஞ் சோலை யறச்சாலை மண்டபம் வன்னியடி
முருகேசன் சொக்கற்கு வெள்ளிச்சிங் காதன முற்றுஞ்செய்தான்
வருமா லரிய நயினா முதலி மதிமந்த்ரியே. (ரு௦)

கிருஷ்ணவீரப்ப நாயக்கர்.

முத்தமிழ்க் கூடற் பதிச்சொக்க நாதர்க்கு முத்தளக்குஞ்
சித்திரக் கோபுரஞ் செங்கற் படையைச் சிறக்கச்செய்தான்
மத்தகப் போர்விச்வ நாதன் குமாரன் மனுமுறைமைக்
கொத்துறப் பார்புரக் குங்கிருஷ்ண பூப குணக்கொண்டலே. (ருக)

விதிக்கு முகுந்தற்கு மெட்டாத சொக்கர்க்கு மேதினியோர்
துதிக்குங் கொடிக்கம்ப மண்டப மொன்று துலங்கச்செய்தான்
கதிக்கும் பரமன்னர் பொன்னார் முடிகளைக் காலிலெற்றி
மிதிக்குங் கடாசலத் தான்கச்சி வாழ்க்ருஷ்ண வீரப்பனே (ருஉ)

[ ] இவ்வடையாளத்து ளடங்கியது பிரதியின்சிதைவைக் காட்டும்.

சகூ. இவர் வீரசேகர சோழனால் அபகரிக்கப்பட்ட தென்னாட்டைச் சந்திரசேகரபாண்டியனுக்கு அளித்துவரும்படி, விஜயநகரஸம்ஸ்தானாதிபதியால் அனுப்பப்பட்டு, அவ்வாறே ஷை பாண்டியனுக்களித்தும், பின் பாண்டியவமிசம் அற்றுப்போக, இவரே அந்த ஸம்ஸ்தானாதிபதியாக, தம் எஜமானரான விஜயநகரஅரசரால் நியமிக்கப்பெற்றும்விளங்கியவர்; இக்காரணத்தால் மதுரை நாயகராஜவமிசத்துக்கு மூலபுருஷரானவர். இவர் ஆட்சிக்காலம் கி. பி. 1559—1563.

ரு௦. இவர்,விஜயநகர அரசரால் விசுவநாதநாயகருக்குத்துணையாக அனுப்பப்பட்டு, பாண்டிநாட்டை ஜயித்து, தமது வீரத்தாலும் மதியூகத்தாலும் மகாராஜதந்திரி எனப் பெயர்பெற்றவர். மதுரைநாயகராஜவமிசத்தை நிலைக்கச்செய்தவர். இவர், காஞ்சீபுரத்துக்கு அருகிலுள்ள "மெய்ப்பேடு" என்ற கிராமத்தில், ஓர் ஏகழவேளாளகுடும்பத்திற் பிறந்தவர் என்பர். இவர் ஷை விசுவநாதநாயகர் காலத்தும் அவர் குமாரர்காலத்தும் மந்திரியாய்விளங்கி அநேக அரிய காரியங்களைச் செய்தார். இவரைப்பற்றிய வேறு சரித்திரங்கள் தக்கநூல்களிற் கண்டுகொள்க. இவர், அரியநாயகமுதலி, நயினாத்தை எனவும் வழங்கப்பெறுவர். இவர் அறுபத்துமூவர் மண்டபத்திருப்பணி நடத்தியது சக. கசகூக. [கி. பி. 1569.] இம்மண்டபம், முன்பு, சுவாமி சந்நிதி இரண்டாம் பிராகாரத் தென்புறவரிசையிலிருந்ததாம். இப்போது அது முதற் பிராகாரத் தென்புறத்துள்ளது.

ருக. இவர், மேற்குறித்த விசுவநாத நாயகர் புத்திரராய், அவர்க்குப் பின் பட்டத்துக்கு வந்தவர். ஸ்ரீ குமார அல்லது பெரிய கிருஷ்ணப்பநாயுடுகாரு எனவும் வழங்கப்பெறுவர். இவர் ஆட்சிக்காலம் கி. பி. 1568—1573. இவர் இத்திருப்பணிகள் நடத்தியது சக. கசகூரு [கி. பி. 1573.]

அய்யர்சிங் காரச் செழுநீர்ப் புனல்வெள்ளி யம்பலமுஞ்
செய்ய வடக்குத் திருக்கோ புரமுஞ்செவ் வீச்சுரமுந்
துய்ய திருமடைப் பள்ளியு மன்புடன் றோன்றச்செய்தான்
தையலர் மோகன வேள்கிருஷ்ண வீர சயதுங்கனே. (ருங)

வாரிப் புவிபுக ழாயிரக் கான்மணி மண்டபமு
மேருற்ற மூர்த்தியம் மன்மண் டபமு மிரண்டாம்பிர
காரத் திருச்சுற்று மண்டப முங்கொடிக் கம்பத்துமுன்
வீரப்ப மண்டப முஞ்செய் தனன்கிருஷ்ண வீரப்பனே. (ருச)

அல்லொத்த பூங்குழ லங்கயற் கண்ணம்மை யாலயத்துண்
மல்லப்ப னாட்டுபொற் கம்பம் பழகிய வாறுகண்டே
நல்லிட்ட மாகப்பொன் பூசுவித் தானண்ண லாருக்கொரு
வில்லிட்டுப் போரை விலக்கிட் டருள்கிருஷ்ண வீரப்பனே. (ருரு)

காளத்தியப்ப முதலி.

எண்ணிய வீரீச் சுரமுநற் காளத்தி யீச்சுரமும்
வண்மை யரிய நயினா முதலி வகுத்தமைத்தான்
அண்ண லரியீச் சுரம்வகுத் தானரி யான்புதல்வன்
புண்ணியத் தால்வந்த காளத்தி நாதன் புகழ்வள்ளலே. (ருசு)

தென்னவ னீன்றரு ளம்மைக்குப் பங்குனித் தேர்த்திருநாள்
சன்னிதி யேழ்நிலைக் கோபுரங் கற்படை தானமைத்தான்
மன்னு மரிய நயினா முதலி மகிழுமைந்தன்
இன்னருட் காளத்தி நாதன்றென் பாகைக் கிறைவனே. (ருஎ)

ருரு. மல்லப்பன் என்பவரால், சுவாமி சந்நிதி இரண்டாம் பிராகார மேல்புறமும் ஐந்துநிலைக்கோபுரமும் சக-கஉகூசு-ல் செய்யப்பட்டன. (செங். தொ-ரு. பக்-ருஎக)

ருசு. அரியான், முற்கூறிய அரியநயினாமுதலியாரின் பெயர்ச்சுருக்கம். இவர்குமாரர் காளத்தியப்பமுதலியாரென்பது அடுத்தபாட்டானுந் தெளிவாதல் காண்க.

ருஎ. சந்நிதியேழ்நிலைக்கோபுரத் திருப்பணியை இவர் நடத்திய காலம் சக-கசகூஉ [கி. பி. 1570] தென்பாகைஎன்பது பாகை, வக்கபாகை திருவக்கரையென வழங்கும் ஸ்தலம்போலும்.

நயினாமுதலி.

கொற்றவ ராகி முடிசூடுஞ் சொக்கர்பொற் கோயிலுள்வாழ்
கற்றவர் போற்றுந்துர்க் காதேவி மண்டபங் கட்டினன்கா
ருற்றிடு தண்டலை சூழ்கூடல் வாழ்கூட் டூருடையான்
நற்றவ மென்ன வரும்பாட்டி யானயி னாமகிழ்ந்தே. (ருஅ)

வீரகிருஷ்ணப்பநாயக்கர்.

வீரீச் சுரங்கிட்டி ணீச்சுரஞ் சோதி விளங்குமையங்
காரீச் சுரங்கயற் கண்ணிரண் டாம்பிர காரத்தினிற்
சீரார் வடபுற மேல்புற மண்டபஞ் செய்தமைத்தான்
நாராரு மன்மத வேள்வீர கிருஷ்ணப்ப நாயக்கனே. (ருகூ)

வீரராகவன்.

திருவளர் கூடலின் முத்தளக் குந்திருக் கோபுரஞ்சீ
ருருவளர் வன்னக் கலாபமு நாயகர்க் கோங்குசெம்பொற்
குருவளர் மண்டப முன்னாளி லுள்ள குறையுஞ்செய்தான்
தருவளர் மாவைப் பதிவீர ராகவ சற்குணனே. (சுo)

செவ்வந்தி.

சுரிகுழ லங்கயற் கண்ணிபொற் கோயிலைச் சூழ்ந்ததெற்குத்
திருமதி லுக்கரு கேயொரு மண்டபஞ் செய்ததிலே
யுரிமையி னாலருட் செவ்வந்தி யீசரை யுண்டாக்கினான்
திருவளர் கல்லூர்ச் சனிப்பெரு மாடந்த செவ்வந்தியே. (சுக)

ருஅ. துர்க்காதேவிமண்டபம் சுவாமிசந்நிதி முதற்பிராகாரத்து வடபுறத்துள்ளது.

ருகூ. இவர் முன்புகூறிய கிருஷ்ணவீரப்ப நாயகர்போலும். இவர் திருப்பணிநடத்தியகாலம் சக-கசகூக. [கி. பி. 1569]

சுo. மாவைப்பதி-திருவாமாத்தூர் என்னும் சிவஸ்தலம்.

சுக. இச்செவ்வந்தீச்சுரம் இப்போதும் அப்பெயரானேயுள்ளது. இப்பிரதிஷ்டை நடந்தேறியகாலம் சக-கசஅசு[கி. பி. 1564] இத்திருப்பணி நடாத்திய செவ்வந்தியென்பார், மதுரைத்திருவிளையாடற்கதைகளை விரித்துக் கூறுவதும், இச்சங்கத்தே முதன்முதற் கண்டதுமான சுந்தரபாண்டியம் என்னும் நூலியற்றிய அநதாரி என்னும் புலவர்பெருமானால் அந்நூலில் ஆங்காங்கே புகழப்பட்ட, கல்லூராதிபனான மன்றைத்திருவிருந்தானென்பாருக்குச் சகோதரர். இச்செவ்வந்தி, முன்சொன்ன நாயகவரசரான கிருஷ்ணவீரப்பரால் (கி. பி. 1563—1573) பெரிதும் அபிமானிக்கப்பெற்றவர். இவற்றை ஷை சுந்தரபாண்டியம், நகரச்சருக்கம், சகூ-ம் பாடலில்வரும் "அன்னவ னரசர் சூழுங் கச்சிவீ ரப்பனென்னு, மன்னவ னருள்சேர் மன்றைச் செவ்வந்தி துணைவன் வாய்மைத், தென்னவன் திருவிருந்தான்" என்பதனால் அறிக. இவர்களூர் கல்லூரென்பது, "கல்லூராதிபனுந்திருவிருந்தவன்" என்னும் அந்நூற்பாயிரவடியாலும், இப்பாட்டினீற்றடியாலும் விளங்கும்.

கடந்தைமுதலி

நற்றா ரணிபுக ழங்கயற் கண்சன் னதிவிளங்கப்
பொற்றா மரைக்கு வடகீழ்ப் புறத்தினிற் போற்றியன்பாய்க்
கற்றார்க ளெண்ண வொருதிரு மண்டபங் கட்டுவித்தான்
வற்றாத கீர்த்திக் கடந்தை முதலி மகீபதியே. (௬௨)

நாகுசெட்டி.

வேரியங் கொன்றை மதுரா புரிச்சொக்கர் வீற்றிருக்குஞ்
சீரிய கோயி லிரண்டாம்ப்ரா காரத் திருச்சுற்றெல்லாம்
பாரிலுள் ளோரும் புகழத் தளவிசை பண்ணுவித்தான்
நாரியர் வேள்கச்சிப் போத்தய னாக நராதிபனே. (௬௩)

பெத்தப்ப செட்டி.

தருந்தமிழ்ச் சொக்கர்க் கிரண்டாம்ப்ரா காரத் தளவிசையும்
விரும்பி யணிந்திடப் பொற்றிரு வாசிய் மேன்மையொடு
திருந்திய நேசத் துடனளித் தான்செக மேழுமெச்சும்
பெரும்புகழ் நாயகன் பெற்றருள் மாப்பிள்ளைப் பெத்தப்பனே. (௬௪)

பாப்பு செட்டி.

உறுபத்தி யாற்றிருக் கொட்டாரந் தேரோன் றுமைக்குச்செய்தான்
மறுவற்ற சீர்ப்புக ழான்பாப்பு செட்டி மதுரைதனில்
அறுபத்து மூவரோ டைம்பத் தொருலிங்க மாங்கமைத்தான்
மறுவற்ற சிந்தையி னான்பாண பத்திர மாதவனே. (௬௫)

பாப்பெல்லப்பசெட்டி.

தாரார் குழலங் கயற்கண்ணி கோயிற் றளவிசையுஞ்
சீரருஞ் செம்பொற் பதக்கமுஞ் சொக்கர்க்குச் செய்தளித்தான்
காரார் பொழில்புடை சூழ்கச்சிக் குப்பணன் காதன்மைந்தன்
போரார் படைச்செங் கரதலன் பாப்பெல்ல பூபதியே. (௬௬)

---

௬௨. இவர் திருப்பணி நடத்தியது சக-௧௫௩௩ [கி. பி. 1611] இவர் கட்டிய மண்டபம் "முதலிப்பிள்ளைமண்டபம்" என்று வழங்கும். (செந். தொ-௫. பக்-௫௭௩)

௬௫. ஐம்பத்தொருலிங்கம்-சுவாமிகோயில் முதற்பிராகாரத்து வடபுறத்தே பிரதிஷ்டைசெய்யப்பட்டுள்ளன.

சின்னச் செவ்வந்தி.

கொத்துப் பவளஞ்செம் பொற்பட்டம் வெள்ளிக் குடஞ்சிறந்த
முத்துத் தொடைவெள்ளி யாற்சிங்க வாகன முத்தமிழ்தே
ரத்திருப் பூவணாற் றங்கரை மண்டப மன்பிற்செய்தான்
தித்தித்த வாசகன் கல்லூர் வருசின்னச் செவ்வந்தியே. (௬௭)

திண்டிறற் றிம்மப்ப நாயக்கன் முன்பு செயுங்கண்டர
கண்டன் குறட்டுடன் செவ்வந்தி மண்டபங் கட்டுவித்து
மெண்டரு மாடித் திருத்தேருண் டாக்கின னெண்டிசைசூழ்
தெண்டிரைப் பார்புகழ் கல்லூர் வருசின்னச் செவ்வந்தியே. (௬௮)

நற்றமிழ்ச் செவ்வந்தி யீசருக் கேசன் னதிமண்டபஞ்
சுற்றுத் திருமதில் சோபான முஞ்செய்து சுப்பிரமண்யக்
கொற்றவர்க்குக்கீழைக்கோட்டைமுன்னாகவொர்கோயில்செய்தான்
மற்புய வேள்சின்னச் செவ்வந்தி நாத வரோதயனே. (௬௯)

சின்னியான்.

விடைக்கலங் காரர் மதுரே சருக்குவெண் டும்பைவில்வத்
தொடைக்கன கத்தி லமைத்தவர் கோயிலுட் டுயபாக்க
விடைக்கட்டு வாயில் வெளிதெரி யாம லினிதமைத்தான்
அடைக்கலங் காத்தா னருள்சின்னியான்வைத்தவன்புநன்றே. (௭௦)

---

௬௭. திருப்பூவண ஆற்றங்கரைமண்டபம் என்பது, பொன்னனையாளுக்காக இரசவாதஞ்செய்த திருவிளையாடலின் பொருட்டு, ஸ்ரீ சுந்தரேசுவரர் மதுரைக்குக் கிழக்கேயுள்ள திருப்பூவணமென்னும் ஸ்தலத்துக்குப் புறப்பாடாகி எழுந்தருளியிருக்கும் மண்டபம். இஃது, அந்த ஸ்தலக்கோயிலுக்கு ஈசான்யதிசையில் வையையின் தென்கரையில் உள்ளது.

௬௮. திம்மப்ப நாயக்கரென்பவர், விஜயநகர அரசரது பிரதிநிதியாய் கி. பி. 1519—1524-வரை மதுரையை ஆட்சிபுரிந்த குருகுரு-திம்மப்ப நாயக்கராவர். கல்லூர்ச் சின்னச்செவ்வந்தி யென்பவர் முற்கூறிய கல்லூர்ச் செவ்வந்தியின் துணைவரான திருவிருந்தான்போலும், திருவிருந்தான் கன்னடைப்படையைவென்று சிறந்தவரென்றும், இவரதூரான மன்றைப்பதி ஸ்ரீரங்கத்துக்கு வடக்கணுள்ளதென்றும் சுந்தரபாண்டியநூல் கூறுகிறது. "கண்டரகண்டன் குறடு" என்பது இப்போதுள்ள செவ்வந்தீச்சுரர் சந்நிதிக்குத் தெற்குப்பக்கத்துள்ள பெரிய மேடைபோலும்.

விருப்பணன்.

ஆசறு சொக்கர்க் கபிடேக பூசையுண் டாக்கித்தென்பால்
தேசுறு மேற்றிக்கு மூலையி லேதிரு நாண்மண்டப
மாசற வங்கயற் கண்ணம்மைக் காக வகுத்தனனாறன்
வீசு பெருங்கொண்டைக் கம்பல ராய விருப்பணனே. (எக)

நயினுந்தை முதலி.

சீரேற்ற சொக்கர்க் கபிடேகக் கட்டளை செய்துசெம்பொன்
வாரேற்ற பூண்முலை யங்கயற் கண்ணிக்கு மாசித்திருத்
தேரேற்ற மண்டபஞ் செய்தனன் தம்பிச்ச தீரன்செல்வன்
தாரேற்ற திண்புய வேணயி னுத்தை சயதுங்கனே. (எஉ)

வையங்காப்பவன்.

மைப்படி யுங்குழ லம்மைக்குப் பொற்றிரு வாசிசொக்கர்க்
கிப்புவி யெண்ணும்வெள் ளிப்பூத வாகன மேர்பெற்றதோர்
செப்பரும பொன்வில்வ மாலைபெத் தீச்சுரஞ் செய்தளித்தான்
கைப்புயன் மாப்பிள்ளைப் பெத்தன் றரும்வையங் காப்பவனே.(எங)

சீராமலை வேலப்ப சின்னச்செவ்வந்தி.

குராவணி யாறு முகப்பெரு மாளுக்குக் கோயிலுநல்
லராவணி வேணியர் வேலீச் சுரமுந்த னன்பிற்செய்தான்
தராதல கற்பக தாருவென் றேத்தத் தருங்கொடையான்
சீராமலை வேலப்ப செட்டியென் னுஞ்சின்னச் செவ்வந்தியே. (எச)

எக. இத்திருநாண்மண்டபம், "சுவாமிகோயில் இரண்டாம் பிராகார திருமூலைமண்டபம்" என விவரங்காணப்படுகிறது. இத்திருப்பணி நடந்தகாலம் சக-கருகo. [கி. பி. 1588] (செந்தமிழ். தொ-கு. பக் - கூஎங.)

எஉ. பெரிய தேரடிமண்டபம்; கீழை மாசிவீதியிலுள்ளது.

எங. இப்பாட்டில் வரும் "பெத்தீச்சுர"மும், அடுத்த பாட்டில் வரும் "வேலீசுர"மும், இப்போது அப்பெயர்களுடன் வழங்கவில்லையாயினும், சுவாமிகோயில் இரண்டாம்பிராகார மேற்றிசையிலே உள்ள, சிவலிங்க பிரதிஷ்டைகள் அமைந்த சிறுகோயில்களைச்சேர்ந்தவைகளாகக் கருதப்படுகின்றன.

முத்துவீரப்பநாயக்கர்.

தண்டாள நகையெங்க ளங்கயற் கண்ணம்மை தனதுபா கத்தில்
வாழுந் தக்கமது ராபுரிச் சொக்கநா யகர்திருச் சந்நிதி விளங்கிடவே, கொண்டல்படிய கமேருவரை தனைக்குத்திக் குடைந்துவெளியாக்கிமற்றக் குலகிரிக ளைத்தூண்க ளாகவேவெளியிற்குறித்திடைநிறுத்தியதென, மண்டலந் தனிலுள்ள மண்டபக் குலதீப மண்டபங்கட்குநாயன்-மண்டப சிரோரத்ன மானவீ ரவசந்த மண்டபங் கட்டுவித்தான், வெண்டாள மணிவிசுவ நாதகிருஷ் ணயவீரன் மெச்சும்விசுவப்பனன்பான்- மேவுமுத் துக்கிருஷ்ண மகிபால னருள்முத்து வீரப்ப பூபாலனே. (எரு)

குஞ்சமழகிரி நாயக்கர்.

விடையுற்ற சொக்கர்தம் முட்பிர காரத்து மேற்புறமும்
வடதிக்கு மொக்கத் தளவிசை கோபுர வாயிலுக்கோர்
படிமிக்க வெண்கலத் தாலமைத் தானெல்லன் பாலனென்னோர்
உடன்முற்று வீரப்ப னூழியன் குஞ்ச மழகிரியே. (எசு)

ஞானப்பிரகாச பண்டாரம்.

[அண்டர்பணி சொக்கர்க்கு மங்கயற் கண்ணிக்கு மபிடேகநைவேத்ய வகைமாத பூசை, மண்டபங்கள் திருத்தேர்...வாகனங்கள்...வளமருவுபூஞ்சோலையநேக மினிதமைத்தான், யெண்டிசை யெண்குருராய...னிடைமருதூரருணந்திதேவனடிபரவுந், தண்டமிழ்தேரபிஷேக ஞானப்பிரகாசன் சைவசித்தாந்தந்தெளிந்த சைவசிகாமணியே.] ()

எரு. முத்துவீரப்பநாயக்க ரென்பவர், மதுரையை ஆட்சிபுரிந்த ஸ்ரீ முத்துகிருஷ்ணப்ப நாயடுகாருவின் புதல்வராய்ச் சிம்மாஸனமேறியவர்; இவர் ஆட்சிபுரிந்தகாலம் கி. பி. 1609 முதல் 1623 வரை என்பர். இவ்வரசர்க்குப் பின்பே, இவரிளைய சகோதரரும், மகாகீர்த்திமானுமாகிய ஸ்ரீ திருமலைநாயக்கராட்சிபுரிந்தது. இம்முத்துவீரப்பர், தஞ்சையரசன், மைசூர் அரசன் மமைதியர் இவர்களை ஜயங்கொண்டவரென்றும், இவர்காலத்தில், Fransis Xavier, Father Fernandey, Robertde Nobilibus முதலியவர்கள் இத்தென்னாட்டில் விளங்கினரென்றும் சரித்திரங்கூறுகின்றது. இனி, இவர் கட்டிய "வீரவசந்தராயர் மண்டபம்" என்பது, சுவாமி சந்நிதிக்குப் போம் வழியில் ஆயிரக்கால் மண்டபத்துக் கீழ்ச்சார்பாகக் கிழமேலோடிய பெரிய மண்டபம். இத்திருப்பணியை இவ்வரசர் நடத்திய காலம் சக - கருகூ. [கி. பி. 1611.]

சதுரா னனன்புகழ் சொக்கர்க்குக் கோபுரந் தண்டலைகள்
விதுவார் மதின்மண் டபக்குறை யாவும் விளங்கச்செய்தான்
புதுவாச வண்டண்ட தாருவின் வாழப் பொழில்வளரும்
மதுரா புரிவரு ஞானப்ர காச வரோதயனே. (௭௮)

[ஆதியர் மதுரேச ராலையத் தென்புறத் தறுபத்துமூவர் கோயி, லாதியறை கட்டியவர் கோயிலிற் பலகணியு மழகாக வேயமைத்து- நீதியபி டேகநை வேத்யமெள் ளோதரை நீள்பிச்சை யுண்டையமுது, நித்தமு நடக்கவு மிரண்டாம்பிர காரத்தி னிருதிதிசை யின்மண்டபஞ்- சோதிவலை வீசுபொன் மேவுமண் டபமுமது சூழ்ந்ததென்னஞ்சோலையும், துய்யவை யைக்கரைத் தோப்புபொற் றாமரைசூழ்ந்தகீ ழப்படியுமை-பாதியாஞ்சொக்கர்க்கு......கம் பண்டாரம் செய்விக்கவே பரிவுட னீந்தனன் களந்தை யம்பதி மேவுதார்....] (௭௯)

திருமலைநாயக்கர்.

தரணிபுகழ் மேருகிரி பலவுரு வெடுத்துநற் சந்நிதா னத்தில் வந்து - தவமுற்ற தென்னநூற் றிருபத்து நாலுகா றன்னிலே யெந்தநாளும், திரமான புதுமையா மண்டபங் கட்டியே சித்திரமு மெழுதியந்தச்- செய்யமண் டபமணியு மாலையென விருபாற் சிறந்தமண் டபமியற்றிக், குரவார் கருங்குழ லங்கயற் கண்ணம்மை கொன்றையணி சொக்கேசனார் - கூடிவிளை யாடியும் வசந்தமெனும் நல்விழாக் கொண்டருள வேசெய்தனன், பரராச சேகரன் பரராச பூஷணன் பரராச ராசதிலகன் - பரராசர் பணிமுத்து கிருஷ்ணப்ப பூபனருள் பாலதிருமலை பூபனே. (௮0)

மகரமெறி கடல்ராம வாளியால் முனிகையான் மாறனார் தாட்சிலம்பால், மாதவ னெடுத்தவவ தாரமீ னத்தினால் வருசுப்ர மணியன் வேலால், தகர்பட்டுவெந்துபய மாய்ப்பின்ன மாகிமிகு தாழ்வாகியுடலம் வற்றித், தரைபட்டு மொருகால நின்றவுற் றுமிப்படித் தளர்ந்து கடை பட்டவதனாற், புகலரிய சத்தசா கரமுமத னடுவிலே புவனநவ கண்டங்களும், பொன்மேரு நிகர்மேவு மண்டபமு மதுரேசர் புகழுநவ மாய்ப்புதுக்கித், திகழ்செய்திரு மலைநாய கர்சமுத் திரமெனும் தெப்பக் குளங்கண்டனன், சிகரபுய பலவிசய சமுகமுத்துக் கிருஷ்ண திருமலை மகீபாலனே. (௮௧)

உரக்கவெகு ரோக்கங் கொடுத்துப் படங்குதூ ணுத்திர முதற் பழங்கல், லொடிந்தன பிடுங்கிநவ மாயமைத் துக்காரை யோடுசீ ரண

---

௭௯. அறுபத்துமூவர்கோயில், முன்பு சுவாமிசந்நிதி இரண்டாம் பிராகாரத் தென்புறத்திலிருந்ததென்றும், பிற்காலத்தில், அச்சந்நிதி முதற்பிராகாரத் தென்புறத்தில் பிரதிஷ்டைபண்ணப்பட்டதென்றுந் தெரிகிறது.

௮0. இத்திருமலை நாயக்கர், ஸ்ரீமுத்துகிருஷ்ண நாயடுகாருவின் இளைய புதல்வராய்த் தென்னாட்டை மிக்க கீர்த்தியுடன் ஆட்சிபுரிந்தவரென்பது பிரசித்தம். இவர் ஆட்சிக்காலம் கி. பி. 1623 முதல் 1659 - வரை என்பர். திருமலைநாயக்கருடைய அருமை பெருமைகள் மிகப்பலவாதலால், அவற்றைச் சரித்திரநூல்களிற் கண்டுகொள்க. இத்திருமலைநாயக்கர் கோயில் பூஜைச்செலவுக்குமட்டும், வருஷம் ௧ - க்கு ரூபா. 36,000-உம், கோயிற் பிரசாதச்செலவின்பொருட்டு வருஷமொன்றுக்கு ரூபா.88,000 வருவாயுள்ள கிராமங்களும் கொடுத்தனரென்றும், இக்கிராமங்கள் மொத்தத்தில் 150 - என்றும் சரித்திரங்கூறுகின்றது. இவர் கட்டியதாக இப்பாட்டிற்கூறப்படும் புதுமண்டபம், உத்தேசம் 300-அடி நீளமும் 80-அடி அகலமுமுள்ள அழகிய கருங்கற்கட்டடம். இம்மண்டபத்தில் வசந்தோற்சவம் மிக விமரிசையாக நடைபெறும். இம்மண்டப வேலை, கி. பி. 1626 - ஆம் ஆண்டு தொடங்கப்பெற்று, 1645 - வருஷம் முடிவுற்றதென்று தெரியவருகிறது. இம்மண்டபத்தின் மத்தியில், திருமலைநாயடுகாரு, தம்முடைய பட்டமகிஷிகள் அறுவருடன் விளங்கும் பாவனையாகச் சிலாவுருவங்கள் மிக வழகாக அமைக்கப்பெற்றுள்ளன. மற்றுமுள்ள தூண்களில், இவர்க்கு முன் ஆண்ட ஒன்பது நாயக்கவரசர் உருவங்களும் வைக்கப்பெற்றிருக்கின்றன. இவற்றைச்செதுக்கிய சிற்பி, சுமந்திரமூர்த்தி ஆசாரி என்பர்.

௮௧. மதுரைமாநகரின் கீழைக்கோடியில் அமைந்து மிகவழகாகவிளங்கும் இத்தெப்பக்குளம், பக்கமொன்றுக்கு 300-கஜமாக, நான்குபக்கங்களிலும் 1200-கஜம்சுற்றளவுள்ள சதுரவடிவானது. இது, சிற்பாலங்காரத்துடனும் சுந்தரமாகவும் பலமானகற்களால் கட்டப்பட்டிருப்பதோடு, இக்குளத்தின் மத்தியில், ஒருசிறிய தீவெனும்படி, அழகிய கருங்கற்கட்டடக்கோயிலும் அதைச்சுற்றிலும் கண்ணைக்கவரத்தக்க உத்தியானவனமும் அமைக்கப்பட்டுள்ளன. தைப் பூசந்தோறும், இக்குளத்தில் ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரேசுவரர்களது தெப்போத்ஸவம் மிகவிமரிசையுடன் நடைபெற்றுவருகின்றது.

௮௨. அம்மன்சந்நிதி அஷ்டலக்ஷ்மி முன்மண்டபவேலை இவ்வாறு பலமுடையதென்பர்.

மகற்றி, யரைத்தசுண் ணாம்பைவெல் லச்சாறு விட்டுநன் றாய்க்கு ழைத் துச்செங்கலும், அடுக்காப் பரப்பிக் கடுக்காயொ டாமலக மரிய தான் றிக்காயுழுந், தொருக்கா லிருக்கா லிடித்துநன் னீரினி லூறிய கடுஞ்சா றும்விட், டூழிகா லங்களினு மசையாத வச்சிரக் காரையிட் டோங்கு மம்மை, சிரக்காலம் வாழவே மீனாட்சி கோயிலுஞ் செப்பமிடு வித்து நன்றாய்ச், செய்வித்த புண்ணியஞ் சதகோடி புண்ணியந் திருமலை மகீபனுக்கே. (௮௨)

முனைவேல் விழியங் கயற்கண்ணி சந்நிதி முன்மடத்து
ளனைவோர்க்கு மன்னமுந் தோழியம் மாட னறைக்குமது
தினமே தினியில் நடக்கும் படிக்கீந் திசையுங்கொண்டான்
புனவேலி தந்தனன் கச்சித் திருமலை பூபதியே. (௮௩)

சங்கர ரெங்கள் மதுரா புரிச்சொக்கர் சந்நிதியிற்
பொங்கு கொடிக்கம்ப மாபலி பீடம்பொன் பூசுவித்தான்
செங்கம லத்திரு வாழ்முத்து க்ருஷ்ணப்பன் செல்வனெங்கும்
பொங்கி வளர்ந்த புகழான் றிருமலை பூபதியே. (௮௪)

நன்னுத லங்கயற் கண்ணி தனக்கு நலம்பெறவே
யுன்னத மாகுங் கொடிக்கம்ப மாபலி பீடமுடன்
சொன்ன மளித்துப்பொன் பூசுவித் தான்சுக போகனெங்கள்
மன்னன் றிருமலை பூபன் மதுரை வரோதயனே. (௮௫)

பின்னிய செஞ்சடைச் சொக்கர்தம் மாறுகாற் பீடத்தினு
மின்னெழி லம்மைத னாறுகாற் பீட மிசையினுந்தான்
இன்னருள் பெற்றரு ளுந்துவார பாலரையேயமைத்தான்
பொன்னணி தாரார் புயத்தான் றிருமலை பூபதியே. (௮௬)

முத்தழகாத்திரி நாயக்கர்.

கங்கையிம சேதுவும் புகழ்மதுரை வைகையின் கரைதிருமலேந் த்ரபுரதக்- கணமான புதுவீதி யணுகவோ ராலயங் கனகவரை

---

௮௩. அம்மன்சந்நிதிக்கு வடபக்கத்தும் தென்பக்கத்தும் ஒருமண்டபம் இருந்ததென்றும் முன் இங்கு அன்னதானமும் நடந்ததென்றுஞ்சொல்வர். இம்மண்டபம் எடுபட்டு அவ்விடத்தில் பூச்செடிகள் வைக்கப்பட்டுள்ளன.

௮௬. இந்த துவாரபாலகரது பெரிய திருவுருவங்கள் தாமிரத்தால் அமைக்கப்பட்டவைகளாம்.

போற்சிகரமும், புக்கமுட னேசெய்து லிங்கமன் பெயர்பெறப் புந் திமகிழ் வுடன்முடித்துப்- போர்முகத் தந்தியுங் கந்தவே டன்னையும் புகலுமெழில் விசுவ நாதர், பங்கில்வள ரும்விசா லாட்சிநந் தீசுரர் பண்புசெறி சண்டேச்சுரர்-பரிவினுடனிவையெலாம் பிரதிட்டை செய்துமன் பாகவபி டேகபூசை, அங்காங்க மாய்நடந் திடவில்லி யூர்குக் குலாஞ்சேரி யுங்கொடுத்தான்- அருண்முத்து வீரப்பன் வரபுத்ரனென்னுமுத் தழகாத்ரி மகிபாலனே. (௮௭)

கந்தப்பொடி பெத்துசெட்டி.

மதுரேசர் கோயி லிரண்டாம்ப்ர காரத்தில் மன்னுமலை
யதுதான் மிகப்பழுத் தாலென்ன வாண்ட விநாயகனைப்
புதிதாப் பிரதிட்டை செய்தானம் மூர்த்தி புதல்வன்மிக்க
சதுரான. கந்தப் பொடிபெத்து செட்டி தயாபரனே. (௮௮)

மொல்லாச்செட்டி.

தட்டுப் புழுகணை சொக்கர்க்குப் பூவணாற் றங்கரைக்கே
யெட்டுத் திசையும் புகழச்செவ் வந்தி யியல்புடனே
கட்டின மண்டப முன்பினும் பின்புதி தாய்க்கட்டினான்
கெட்டிமொல் லாச்செட்டி தன்கிளை தானுங் கிளைத்திடவே. (௮௯)

பிட்டுச்சொக்தப்பண்டாரம்.

புகலரிய சொக்கர்க்கு மெங்குமிக் கானகோ புரங்கணா யகத்தும் வீர- பூபன்மண் டபத்துக்கு மாடிவீ திக்குமழை பொழியுமிடம் வைத்த சிலைமேல், மகாமேரு விருபத்தி ரண்டுதூ ணசையாத வகைநிறுத் திப்போதிகை- வைத்தவுத் திரபக்க மாடரங் குஞ்சிங்க நடுவருபடங்கு பாக்கல், மிகவுமுன் னதமெனத் தெய்வங்க ணாயக மேவுசந் நிதிநாயகம்- விளங்குநா யகமண்ட பங்கணா யகமிது வெனக்கட்டி னன் மண்டபம், இகபரமி ரண்டுக்கு முண்டெனக் கினிமேற்செய் திடுவத

---

௮௮. ஆண்டவிநாயகர்—முக்குறுணியரிசிப் பிள்ளையார்.

௮௯. இம்மண்டபம் செவ்வந்திகட்டினதென்பது, இந்நூலின் ௬௭-ம் பாடலிற் காண்க.

௯௦. இம்மண்டபம், திருக்கல்யாண மண்டபத்திற்கு வடபால் அல்லது தென்பாலுள்ள மண்டபங்களில் ஒன்றாதல் வேண்டும். திருப்பணி விவரத்

வர் கடனென்னவே- ஏவண முராரிசிகர் பூவண மகாமுனிவ னீன்ற விட் டுச்சொக்கனே. (௬௦)

சொக்கப்பசெட்டி.

இந்நிலம் புகழ்மதுரை மாசிவி தித்தெருவி லினியதென் பாரிசத்தி-லிரசதச் சபையெனச் சிலையினன் மண்டப மினியநற் சோபானமுங், கன்னரு றுடன்வாழை யிளநீர் நறும்பழுக் காய்கட்டி மேற்கட்டி தூக்- கனகட்டு வர்க்கமல ரால்நிறைத் துத்தாரு காவனமிதென்ன வதனு, ளன்னநடை மீனாட்சி மதுரேச ரும்மெழுந் தருளியபிஷேக நைவேத்- யஞ்செயவு மானசம பங்கட்டும் வெகுவரிசையன்பினொடு செய்வித்தனன், சொன்னமொழி தவறாத பெத்தயன்பெற்றவுத் துங்கன்முத் தையபூபதி- துணைவனென வந்தருளு மனைவர்க்கு முபகாரி சொக்கப்ப மகிபாலனே. (௬௧)

மங்காமை அழகாத்திரி நாயக்கர்.

மைத்திகழ் கண்ணியங் காளம்மை சோட்டையின் வாயிலுக்கு
முத்தரம் வைகையின் தென்பாற் படித்துறை யோர்மண்டப
மித்தல மெண்சொக்க ராவணி மூலத் தெழுந்தருளப்
புத்தியிற் செய்தான்மங் காமை யழகாத்ரி பூபதியே. (௬௨)

செவ்வந்தி யாண்டிசெட்டி.

வேண்ட வரங்கள் தருமேழ் கடற்கு மிகவுந்தென்பால்
ஆண்டகை சொக்கர் திருநா டொறும்வர வாகவன்பு
பூண்டொரு மண்டபஞ் சுற்றக்ர காரம் புகழச்செய்தான்
தாண்டவன் றந்தருள் செவ்வந்தி யாண்டி தயாநிதியே. (௬௩)

சொக்கஞ்செட்டி.

கண்டொத்த செஞ்சொன் மயிலங் கயற்கட் கவுரிபங்கர்
விண்டலர் கொன்றைச் சடைச்சொக் கருக்கு விறகுகட்டு
மண்டபங் கட்டுவித் தான்சொக்கஞ் செட்டி வரத்தில்வந்த
தண்டர ளப்புயத் தான்சொக்கஞ் செட்டி சயதுங்கனே. (௬௪)

தில், பேச்சக்கால்மண்டபம் பிட்டுச்சொக்குப்பண்டாரம் செய்தது என்றும் இத்திருப்பணி சக. ௧௫௮௦ (கி. பி. 1658) ல் நடந்ததென்றுங் காணப்படுகின்றது.

௬௨. அங்காளம்மை- (புதுத்தெருவிற்குப் பின்புறத்துக் கோயிலிலுள்ள) செல்லியம்மை.

விஜயரங்க சொக்கநாத நாயக்கர்.

[தென்னவன் மகிழுங் கயற்கண்ணி கோயிற் றிருப்பள்ளியறையின் முன்பு- சிங்காரவறைகட்டியபிஷேகமாதிச் சிறப்புகள் விழாபூசையும், எந்நாளுடைக்கவில் லாப்ராகு..யிலெழின் மண்டப- மிதமாகவேகட்டி மதுரேச ரம்மையுட னினிதா யெழுந்தருளியே, வன்னவபிஷேகவகை பாவாடை வரிசையும் வளமையொடு கொண்டருளவே- வாகான செந்நெல்வகை வில்லா புரத்தையு மாதர்முத்தம்மைபேரால், நன்னயத் தொடுதலத் தார்கள்பாரிசமாக நண்பினுட னேயுதவினன்- ரங்ககிர்ட் டிணமுத்து வீரனருள் விசயரங் கச்சொக்க நாதேந்திரனே.] (௬௫)

அச்சயராயன்.

மிகவு மபிஷேகநை வேத்தியக் கட்டளை மீனாட்சி சொக்கருக்கு- மிக்கதந் தச்சிவிகை சாமரமு மொருநான்கு மெச்சுமுச் சிதவிசிறிகள், பக்குமெழி லங்கயற் கண்ணிக்கு மூக்குத்தி பாதத்தி லங்கிதண்டை- பாடகந் தங்கத்தி லட்டசா மதுவலாற் பன்னெட்டெ ழுஞ்சதங்கை, செகமெலாம் விலைகொண்ட ரத்னகண் டாவளி சிந்தைமகிழ் வாயளித்துஞ்- செங்கோல் நடாத்திவரு கர்த்தாக்கண் மகிழவே தேவிசந்நிதிவிளங்க, மகமேரு வைக்குடைந் தாலென்ன வவர்காண மண்டபஞ் செய்தமைத்தான்- வையகம் புகழ்நார ணையன்மெய்த் துணையாக வந்தவச் சயராயனே. (௬௬)

சமுகம் மீனாக்ஷி நாயக்கர்.

கூடலம் பதியில்வளர் மீனாக்ஷி சந்நிதிக் கோபுரக் கொடுங்கைமட்டுங்- கோகனக மன்னிலே மண்டபங் கட்டினன் குறைவின்ம காதோரண, மாடலம் பிகைமுன்ன மிருபாரிசத் தமூக் கைக்குமேனடோசிபு- மாகவே பதினொன்று தண்டமுறு தீபமு மறுநூறு பதின்மூன்றுடன், கூடவொரு வெண்கல நூற்றுமுப் பத்தாறு துலாமெனும் படி

---

௬௬. அம்மன் சந்நிதிக்குக் கிழக்கேயுள்ளது "அச்சயமண்டபம்'; இஃது இப்போது "நகராமண்டபம்" எனப்படுகிறது. அச்சயராயர் என்பவர், கி. பி. 1635 முதல் 18 வருஷங்களாக மதுரைமண்டலத்தைத் தம்பேரர் பொருட்டாட்சிபுரிந்த மங்கம்மையாரிடம் மந்திரியாயிருந்த ஒருபிராமணர்.

௬௭. இவர் மண்டபங்கட்டின காலம் சக. ௧௬௩௦ [கி. பி. 1708] என்று காலவிவரங் காணப்படுகிறது. [செந்தமிழ். தொ-௫; பக்-௫௭௩] அம்மன் சந்நிதித் தோரணவிளக்கு, முன்பு இவராற் செய்யப்பட்டதென்று தெரிகிறது.

தனக்குச்-சொல்லும்பொனு னூறுகூலியிரு நூறுன தொகையும்விலை யாயிரம்பொன், நாடெலாம் விளங்கவே தீபசந்த்ரோதய நல்கியே நிலை காட்டினன்-நன்மைதரு, திருவேங்க டன்பெற்ற மீனாட்சி நளினலட்சுமிகாந்தனே. (௯௭)

அருணாசலமுதலி.

எண்ணிய சகாத்தமோ ராயிரத் தறுநூற்றொ டெண்பதுட னொரு பதின்மே-லேற்றம் பெறுஞ்சர்வ தாரிவரு டத்தினி லியன்மகர மாதந்தனில், நண்ணிவரு மொன்பதாந் தேதியே காதசியி னயமான புதவாரமு-நாடிமிகு ரோகணிநி ருதிநாம யோகமுட னற்பத்ர வாகரணமுந்—திண்ணமுட னற்றின மெனமனத் தெண்ணியே திருவாப்பனூரில்வைகுஞ், சிவன்றனக் காலயந் தேவிபரி வாரமுதல் செய்து பிர திட்டை செய்தான், அண்ணலுறு மயிலாபுரிக்கிறைவ னுந்தம்பி யண்ணனருள் மகராசவேள் - அத்தர்பத துத்திய விருத்தாசலன் றுணைவ னருணா சலக்குரிசிலே. (௯௮)

திருமதுரையம்பதியில் வைகைவடகரைமீது சிரிதின் முளைத்தெழுந்த - செய்யதிரு வாப்பனூரீசர்க்கு மதுகரஞ்சேர்ந்தகுர வங்கமழ்குழற், பரைதனக் குங்கர்ப்ப கரமர்த்த மண்டபம் ப்ராங்குடன் கட்டி வைத்துப்- பார்தட்சிணாமூர்த்தி லிங்கோற்பவர் துர்க்கை பயிரவர் சண்டேச்சுரர், கருதரிய நந்திகேச்சுரர்த்வார பாலகர் காராணை மாமுகன்வேற் - கடவுடிரு வுருவமுங் கண்டவர்கள் கோயிலுங் கட்டிவைத் தியல்பாகவே, அருமறைகள் சொன்னபடி கும்பாபிடேகமு மன்புட னடாத்தி வைத்தான் - பலர்மா திருக்குமுயர் மயிலாபுரிக்குள்வள ரருணா சலக்குரிசிலே. (௯௯)

காளத்தியப்பன்.

திருமதுரையூர்நடுவி லிம்மையினி னன்மைதரு சிவலிங்கர் கோவிலெங்குஞ் - சீரணைத் தாரணஞ் செய்துபர தத்துவஞ் செஞ்சடைக் கடவுளல்லா, லிந்நிலத் தினில்வேறு தெய்வங்க ளெந்நாளு மில்லையென் பதுபோலவே - யிடபசாலைவீசு பொற்கம்ப மெதிர்நாட்டி யெழில்விழா நடத்தி வைத்தும், பருமடைப் பள்ளியுங் கற்கிணறு மொருபெரிய பாங்கான பலிபீடமும் - பண்பாகு மாதிசண் டேச்சுரர் கோவிலும் பங்கயன் மாலமருங், கருதரிய நந்திகேசுரர்குறடு மன்புடன் கட்டிவைத் திசைமேவினுன் - காவுற்ற சுப்ரமண்ய வேள் பெற்ற புத்ரன்மன்னு காளத்தி யப்பமன்னனே. (௧00)

ஏர்கொண்ட வையைநதி சூழ்மதுரை யூர்தனி லிம்மையினன்மை தருவார் - யெய்தா லயத்திலிங் கோற்பவர் வயிரவ ரெண்டோளி யானதுர்க்கை, தார்கொண்ட தட்சிணா மூர்த்திதங் கோயிலுஞ் சார்புடன் செய்து வைத்துந் - தாமரைத் தடாகமுண் டாக்கியுங் கோபுரஞ் சார்ந்ததிரு மதில்கட்டியும், நீர்கொண்ட பண்ணைபுடை சூழுமள காபுரியை நேசமா மீட்டு விட்டும் - நித்யவபிடேகநைவேதனந் திருவிழா நிலைபெற நடாத்தி வைத்துங், கார்கொண்ட பார்மீதி லாய்ந்தசிவ புண்ணியுங் காணியாத் தேடிவாழுங் - காவுற்ற சுப்ரமண்ய வேள்பெற்ற புத்ரன்மன்னு காளத்தி யப்பமன்னனே.

திருமலைராயன்.

வருமலை மாதிடச் சொக்கர்க்குக் கோச்சடை மண்டபம்பொற்
பருமலை யீருரு நேர்பொற் கதவுபொற் பல்லக்குட
னொருமலை காத்தருள் மத்தய ராச னுவந்தளித்த
திருமலை ராச னளித்தான் கருணைச் செழுங்கொண்டலே. (௧0௨)

நாரணப்பன்.

பைகொண்ட துத்தி யரவணி கூடற் பதிச்சொக்கரு
மையுண்ட வங்கயற் கண்ணியுங் கண்டு மனமகிழக்
கைகொண்ட பொன்கொண்டு கோச்சடை மண்டபங் கட்டுவித்தான்
வைகுண்ட நாத னருணா ரணப்ப மகீபதியே. (௧0௩)

கோனேரி நாரணன்.

சங்கரர் சொக்கர்க்குச் செம்பொற் பதக்கம்பொற் றாமரைப்பூ
வங்கயற் கண்மட மாதுக்குப் பொற்சிலம் பாமெனவே
தங்குந் திருவா கனவறை யாவுந் தயங்கச்செய்தான்
பொங்கெழிற் பாகையிற் கோனேரி நாரண பூபதியே. (௧0௪)

---

* ௯௮. சகாத்தம் ஆயிரத்தறுநூற்றொடெண்பது டனொருபத்து-சக. ௧௬௯0; அஃதாவது கி. பி. 1768. ஆகும்.

௧00. இந்த அளகாபுரி என்னும் ஊர், சிவகங்கை ஜமீனைச்சார்ந்த மதுரைத்தேவஸ்தானகிராமமாகும்.

௧0௧. கோச்சடை மண்டபம்:—ஆடிவீதியில் அக்கினி மூலையிலுள்ள தென்பர். மதுரைக்குச் சமீபத்துமேல்பாலுள்ள கோச்சடையில் சுவாமி எழுந்தருளிவந்த மண்டபம், பிற்காலத்தில் அப்பெயாற் கோயிலுக்குள்ளேயே கட்டப்பட்டது போலும்.

ஆறுமுகத்தமுதலி.

திருவளரு மதுரைநகர் மீனாட்சி தேவிதன் திருமுன்ன ராடி வீதித்-
திருமதி ளணித்தாக மேருவெனு மண்டபந் திரமதாய்க் கட்டி வைத்
துப், மருவளர் மலர்க்கொன்றை யணிசொக்க நாயகரு மதிநுதற் கய
ற்கணுமையும் - மகிழ்வுற்று வெள்ளிவிடை மீதெழுந் தருளவே மன
மகிழ்ந் தடிபணிந்தோன், பருவம தறிந்துதவு வைகையாற் றங்கரைப்
படித்துறையு முடனமைத்தோன் - பாரினெடு நாளிருந் தின்னமிகு
சிவபுண்ய பணிவிடைக ணிறைவேற்றுவோன், உருவளரு மாரனே
நந்தியம் பாக்கமெனு மூருடைய வன்னியப்ப-வுத்தமன் பெறுமாறு
முத்தனென விசைமேவி யுலகில்வரு சயதுங்கனே. (௧௦௫)

அழகிரிநாயக்கர்.

கோலம் புனையும் வடக்குவாய்ச் செல்விதன் கோவிலுக்கு
ஞாலம் பரவ வருமாசி வீதிக்கு நல்கியதென்
பாலொரு மண்டபஞ் சொக்கர்க்குச் செய்தனன் பாரளந்தான்
போலெங்கண் மும்முடி தந்த வழகிரி பூபதியே. (௧௦௬)

☞ இன்னுஞ்சில பாடல்கள் மிகச்சிதைந்து காணப்படுகின்றனவாதலால், அவை இங்கே பதிப்பிக்கப்படவில்லை.

---

௧௦௪. இவ்வாடிவீதிமண்டபம் அக்கினிமூலையிலுள்ளதென்றும், சக ௧௬௮௨ [கி. பி. 1760]ல் கட்டப்பட்டதென்றும் விவரங்காணப்படுகிறது. (செந்தமிழ். தொகுதி-௫; பக்-௩௭௩)

நெல்.

பொது:—இவ்வுலகை ரக்ஷிப்பது தான்ய வகைகளே. தான்ய வகைகளில் மிகச்சிறந்ததும் தென்னிந்தியாவில் தொன்றுதொட்டு மிகுதியாக விளைவதும் சரீரபோஷணைக்கு மிகவும் ஏற்றதும் இந்த நெல்லேயாம்.

ஆதியில் நெல்விளைவது இந்தியாவுக்குமட்டுமே உரிமையாயிருந்தது. பின்பு இந்தியாவிலிருந்துதான் ஜப்பான், அமெரிக்கா, ஆஸ்திரேலியா, இங்கிலாண்டு முதலிய அந்நியநாடுகட்குப் பரவுவதாயிற்று. ஆயினும், தற்காலம் நம் இந்தியரைப் பார்க்கினும் அவ் அந்நிய நாட்டார் இவ்விஷயத்தில் கண்ணுங்கருத்துமாக உழைத்து மிகத்தேர்ச்சியடைந்துள்ளார்கள். நம் நாட்டாரோ ஊன்றிக்கவனியாமல் மேற்போக்காகவே நெல் சாகுபடி செய்கின்றனர். உழுவதும், விதைப்பதும் களையெடுப்பதும் தண்ணீர்கட்டுவதும் காப்பதுமாகிய இவ்வைந்து வகைத் தொழில்களும் சாதாரணமாகச் செய்து வருகின்றார்களன்றி நன்கு கவனித்துச் செய்வதில்லை.

> “ஏரினு நன்றா லெருவிடுதல் கட்டபின்
> னீரினு நன்றதன் காப்பு.”

என்ற திருக்குறளுரையில் பரிமேலழகரும் இவ்வைந்துவகைத் தொழிலைக்கூறினர். தமிழ்ப்புராணங்களில் நாட்டுவளங்கூறுமிடத்து மருதநிலவருணனையில் நெல்விளைவின் பெருக்கமும் விளைவிக்குந் தன்மையும் பலவாறாக எடுத்துக்கூறக் காண்கிறோம்.

---

* இவ்வியாசம், மதுரை டிஸ்திரிக்கட்டு அக்கரிக்கல்ச்சரல் சபையாரால் திறக்கப்பட்ட கால்நடைக்காட்சி வருஷோத்சவக்கூட்டத்தில், டிஸ்டிரிக்கட்டு மாஜிஸ்டிரேட் கனம்-பிரையண்ட், எம். ஏ., ஐ. ஸி. எஸ்., துரையவர்கள் அக்கிராசனத்தின்கீழ் வாசிக்கப்பெற்றது.

பண்டைக்காலத்தில் கால இயல்பாலும் நிலவளத்தாலும் உழைப்புவகையாலும் இத்தானியம் மிக வியக்கத்தக்கவாறு நம் நாட்டில் விளைந்து வந்தது. புராணங்களில் நெல் கரும்பைப்போலிருந்ததென்பர். "நெற்கரும்பெனக் கரும்பெலா நெடுங்கமுகென்ன" எனவும், "கரும்பல்ல நெல்லென்ன" எனவும் வருவனவாம். இதுமட்டோ! சங்கநூல்களில் ஒன்றாகிய மதுரைக்காஞ்சியில் (247) "களிறுமாய்க் குங்கதிர்க் கழனி" என்று கூறுவர். யானைகள் நடுவேவந்தால் அவை மறையும்படி யானையுயரத்திலும் மிக்குயர்ந்துள்ள நெற்பயிரையுடைய வயல் என்பது இதன்பொருள். இவ்வாறு சிறப்புறப் பரிபாலிக்கப்பட்டு வந்த இந்தத்தானியத்தின் பெருமையோ கடவுளோடொக்கக் கூறத்தக்கது. புறநானூறு (186)-வது கவியில், "நெல்லுமுயிரன்றே நீருமுயிரன்றே" என்றவிடத்து, "உயிரையாக்குவன நெல்லும் நீரும்" என்பர் நச்சினார்க்கினியர். இவ்வாறு நம்முன்னோர்களாற் புகழ்ந்து போற்றப்பட்ட நெல் விவசாயத்தைப்பற்றி நன்றாக ஆராய்ந்து நாளுக்குநாள் அபிவிர்த்தியாகச் செய்வது தேசக்ஷேமத்திற்கு இன்றியமையாததென்பது எல்லாரும் ஒப்புக்கொள்ளவேண்டிய விஷயமேயாம்.

நெல்வகை:—நம் நாடே நெல்விளைவில் பிரசித்திபெற்றதாயினும் வகைகள் அதிகப்பட்டிருக்கவில்லை. இவ்வுலகத்தில் தற்போது 1400-வகை நெல் இருப்பதாக விவசாயமுறை நூல்களிற்றேர்ந்த பண்டிதர்கள் எழுதியிருக்கிறார்கள். இலங்கைத்தீவில் 160-வகையும் ஜப்பானில் 580-வகையும் இருக்கின்றனவாம். நம் இராஜதானியில் எங்காவது ஓரிடத்தில் எல்லாவகை நெல்களையும் சேர்த்துவைத்து அந்தந்த நெல்லினையும் முறைகளையும் எழுதி வெளியிட்டால் மிகவும் அநுகூலமாயிருக்கும். தஞ்சைஜில்லா விவசாயசங்கத்தார் நம் சென்னை ராஜதானியிற் கிடைத்த 163-வகை நெல்சேர்த்து வைத்திருப்பதாகத் தெரிகிறது. ரோமபுரிப் பொருட்காட்சிச்சாலையில் பலதேயங்களிலிருந்து தருவித்த 347-வகைநெல் இருப்பதாக அறிகிறோம்.

பெயர்வகை.—இதன்பெயர் பெரும்பாலும் காரணம்பற்றிவந்தனவேயாம். சிறுபான்மை இடுகுறியாகவுமிருக்கின்றன. பெயர்கள் சிலவருமாறு.

குறுவை.

அறுபதாங்குறுவை
கருங்குறுவை
செங்குறுவை
வாற்குறுவை
கோணக்குறுவை
மொட்டைக்குறுவை
அன்னதானக்குறுவை

கார்.

செங்கார்
கருங்கார்
மணற்கார்
கருத்தக்கார்
சண்டிக்கார்
சிறுமணியன்
மிளகி
பெருநெல்
செம்பாளை
குத்தாளை
காட்டுக்குத்தாளை.

சம்பா.

வெற்றிலைச்சம்பா
பக்கிரிச்சமபா
சிவப்புச்சம்பா
கம்பன்சம்பா
வாசனைச்சம்பா
மல்லிச்சம்பா
சின்னச்சம்பா
இச்சிலிச்சம்பா
ஈர்க்கஞ்சம்பா
சீரகச்சம்பா
கட்டைச்சம்பா
முத்துச்சம்பா
பனிக்காட்டுச்சம்பா
கொத்துமல்லிச்சம்பா
பொன்கம்பிச்சம்பா
கருடன்சம்பா
மிளகுசம்பா
சடைச்சம்பா
கைவிரிச்சம்பா
தங்கச்சம்பா
வாடஞ்சம்பா

முதலிய பலபெயருண்டு.

நிலம்:—நெல்விளைவுக்குரிய நிலம் நீர்வளமிக்க மருதநிலமேயென்பது நம் முன்னோர்கொள்கை. தற்கால அநுபவத்திலே இன்னநிலந்தான் நெற்பயிருக்கு ஏற்றதென்று ஒரு வரையறை செய்யக்கூ

டாததாயிருக்கிறது. எல்லா நிலங்களிலும் நெல் சாகுபடியாகின்றது. ஜலமும் உரமும் இருந்தாற்போதும். களரிலும் விளைவிக்கலாம். கல் நிறைந்த தரையிலும் விளைவிக்கலாம். நெற்பயிரின்வேர் வெகுநுட்பமானது. ஆதலால் அவ்வேர் மண்ணுக்குள் தாராளமாகப்படரும்படி மண் நயமாயிருக்கவேண்டும். அஃதாவது இளக்கமுள்ளதாகவேண்டும். கடினப்பட்டிருந்தால் வேர் அதனையூடுருவிச் செல்லாதாகையால் வளர்ச்சியும் பலனுங்குறையும். குறுவை சண்டிக்கார் சடைச்சம்பா முதலியன முத்துப்பேட்டை வகையராவிடங்களில் களரான நிலத்தில் நன்றாகவிளைகின்றன. நம் மதுரை ஜில்லாவின் பலபாகங்களில் களரானநிலத்தில் வெள்ளைக்கட்டை, உவருண்டான் முதலியவகை நெல்விளைகின்றன "உவருண்டான்" என்றபெயரே அது உவர்நிலத்தில் விளைவதென்பதைக் காட்டுகின்றதல்லவா? "எந்நாளு முவர்நிலத்தி னென்முளைவித் திடினும்விளை வெய்திடாது" என்பார் வில்லிபுத்தூரார். இவர்விளைவெய்திடாதென்றது சம்பாமுதலிய விலையுயர்ந்த நெல்லைக்குறிப்பிடுங்காற் பொருந்துமேயன்றி உவருண்டான் முதலிய நெல்லைக்குறிப்பிட்டால் பொருத்தமுறாது.

மழை:—"மழையின்றி மாநிலத்தார்க்கில்லை" என்றபடி நெற்பயிருக்கு மழையின் உதவியே முக்கிய ஆதாரம். மற்றப்பயிர்கள் எல்லாவற்றினும் நெற்பயிருக்கு ஜலம் அதிகம்வேண்டும். ஆனதுபற்றியே கிணற்றிறைவைப்புன்செய்களில் பெரும்பாலும் நெல் சாகுபடி செய்யப்படுவதில்லை. காவிரி தாம்ரபர்ணிபோன்ற ஜீவநதிப்பாய்ச்சலுள்ளவிடங்களில் தான் நெல்விளைவு அதிகம். பல இடங்களில் மழைகாலத்துவரும் ஜலத்தைக் குளங்களிற்கட்டிவைத்து நீர்பாய்ச்சி விளைவிக்கப்படுகிறது மழை அதிகமாகப்பெய்கிற மலைப்புறநாடுகளிலோ புன்செய்ப்பயிராகவே நெல்விளைகிறது. மலையாளம் இலாகா பாலக்காடுமுதலிய இடங்களிலும் இமயமலைச்சாரற் பிரதேசங்களிலும் நெல்லை விதைத்துவிட்டால் பின்பு நீர்பாய்ச்சவேண்டுமென்ற சங்கடமில்லாமல் மழையின் உதவியால் தானே விளைந்துவிடுகிறது. இவ்விடங்களில் உழவர்கட்குச் சங்கடமேயில்லை. நெல்விளைவுக்கு ஆதாரமாகிய மழையே இதன்கெடுதிக்கும் ஆதாரமாகும். விதைத்தவுடன் மழைபெய்தால் விதை நன்றாய்முளையாது. பூ உண்டாகும் சமயம் மழைபெய்தால் தாது ஜலத்திற்போய்விடும். நெல்மணி திரட்சியின்றிப் பதரேயதிகப்படும். கதிரறுக்கும்போது மழைபெய்தால் நெல் உதிர்ந்துபோகும். அறுவடைக்கு ஆளுங்கிடையாது; களம் சேர்க்கக் கஷ்டமதிகம். ஆகவே வேண்டும்போது பெய்தும் வேண்டாக்கால் பெய்யாமலும் மலையாளம் இமயமலை இப்பக்கங்களில் மழையே நெற்பயிரை ரக்ஷிக்கவேண்டியிருக்கிறது. இதனாலன்றோ, "கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே - யெடுப்பதூஉ மெல்லா மழை" என்றருளினார் செந்நாப்போதார். இக்குறளில், "கெடுப்பதூஉம்" என்பதற்குப் பரிமேலழகர், "பூமியின்கண் வாழ்வாரைப் பெய்யாது நின்று கெடுப்பதூஉம்" எனப்பொருள்கூறியுள்ளார். ஆனால் வேண்டும்போது பெய்தும் வேண்டாக்கால் பெய்யாமலும் நின்று உலகை ரட்சிக்கவேண்டியிருக்கிறது மழையேயாதலின், "கெடுப்பதூஉம்" எனற்கு "பெய்யாது நின்றும், அதிகமாகப் பெய்தும் கெடுப்பதூஉம்" எனப்பொருள் கூறுதலே சிறப்புடைத்தாம்.

பட்டம்:—ஒவ்வொருமாகாணங்களிலும் மழைபெய்யும் பருவகாலத்துக்கேற்ப இன்னகாலந்தான் நெல்விதைப்புக்கு ஏற்றதென்று கொள்வார்கள். நம் நாடுகளில் ஆனி, ஆடி மாதங்களே முதற்றரமான பட்டமாம். ஆவணி மாதம் இரண்டாந்தரமே. ஆனி, ஆடி மாதங்களில் நன்றாக உழுது புழுதியாக்கி விதைத்துவிட்டால் ஒருமாதம்வரை மழையில்லாதிருந்து பிந்திப்பெய்தாலும் முன்விதைத்த நெல் அனைத்து முளைத்துவிடும். காலம் தவறிய விதைப்புப் பயன்படாது. இதனாற்றான், "பட்டம் தப்பினால் நட்டம்" என்று பழமொழி வழங்குவதாயிற்று. பயிருக்கு உழவு, உரம், நீர் இவைகளைப்போலவே பட்டமும் அவசியம் வேண்டியதொன்றேயாம். இதன் அருமையுணர்ந்த ஔவையாரென்ற மூதாட்டியார் "பருவத்தே பயிர்செய்" என்றருளினர்.

உழவு:—கிருஷித்தொழிலில் முதன்மையானது உழவுதொழிலேயாம். சரியானபடி உழவுசெய்துள்ள நிலம் அதிகப்பலனைக்கொடுக்கும். அநேக இடங்களில் 4-அங்குல ஆழம் உழுதால் போதுமென்று நினைக்கிறார்கள். இது பிசகு. கடப்பை, கர்நூல், பல்லாரி,

மைசூர் முதலிய நாடுகளில் குறைந்தது ஆறு அங்குலம்வரை உழுகிறார்கள். இத்தலிதேயத்திலோ 12-அங்குலம்வரை உழுகிறார்கள். நம்முன்னோர்கள் ஆழமாக உழவேண்டுமென்று நன்கு தெரிந்திருப்பதை, "அகல உழுவதை ஆழ உழு" என்ற பழமொழியால் நன்கு தெரியலாம். ஆழமாக உழுதால் மண் குழம்பாயிளகியிருக்கும். இத்துடன் எருமுதலிய உரமும் கலந்திருக்குமானால் மிகவும் சிலாக்கியமே. கடினமான மண் ஆயினும் வருஷாவருஷம் தழையும் உழவும் அதிகப்பட்டால் மிருதுவாகும். மண்மிருதுவானால் நெற்பயிரின் வேர் தாராளமாகச் செல்லும். நீர்வற்றிக்காய்ந்த காலத்தும் காய்ச்சலைத் தாங்கும்படி அடியிலுள்ள ஈரம் பயிருக்கு உணவாகும். ஆழமாக உழாதநிலத்தில் அடிமண் கடின்மாயிருப்பதால் பயிரின் வேர் அதிக ஆழத்திற்போகாது. அப்போது கொஞ்சம் நீர் குறைந்து காய்ச்சல் ஏற்பட்டால் சீக்கிரத்திற் பயிர்கருகிப்போகும். நன்செய் நிலத்திற்கு 8-உழவுவேண்டுமென்கிறார்கள். நன்செய்நிலம் சேறாகியிருப்பதால் உழவுக்கு எருமைக்கடாக்களே ஏற்றனவென்பார்கள். எருதுகள் பலமுள்ளவையானால் மட்டுமே இவ்வுழவு செவ்வையாக நடக்கும். தூங்கலான மாடுகளைக்கொண்டு உழுது பயன்படாது. வியவசாயிகட்கு உழவுகாலத்திற்றான் சிரத்தையதிகம் வேண்டும். இதுபற்றியல்லவா, "உழுகிறகாலத்தில் ஊர்வழிபோனவன் அறுக்கிற காலத்தில் ஆள் தேடிப் பயனில்லை" என்று பழமொழி வழங்குவதாயிற்று. நம்மை ஆதரித்துவரும் காருண்யகவர்ன்மெண்டாரவர்கள் ஏற்படுத்திய அக்கரிக்கல்ஜரல் (Agricultural) முறையை நன்றாய் அறிந்து ஆங்கிலேயர் கண்டுபிடித்த புதிய ஏர்களால் உழுவது அதிகசிரமமின்றிப் பயனுதவும்.

உரம்:—நிலத்தின் சத்தினாலேயே நெல்விளைகின்றதால் ஒருதரம் விளைந்தபின்பு அந்நிலத்தின்சத்து குறைகின்றது. ஆனதால் மறுதரம் விளைவதற்கு அந்நிலத்திற் சத்துண்டாகும்படி உரம்போட வேண்டியது மிகஅவசியம். நம் நாட்டிற் சாதாரணமாக ஆட்டெரு மாட்டெரு கொழிஞ்சி ஆவிரை முதலிய தழைகள் சாம்பல் முதலியவற்றை யுபயோகப்படுத்துகிறோம். இவைகளிலெல்லாம் எருவே மிகச்சிறந்த உரமாகும். மாட்டுத்தொழுவங்களினருகே நாலைந்து

அடி பள்ளந்தோண்டித் தினமும் விழுகிற சாணி குப்பை கூளம் சாம்பல் முதலிய கழிவுபதார்த்தங்களை அப்பள்ளத்தில் போட்டுவரவேண்டும். இவ்வாறு பலமாதவரை சேர்ந்தபின் வேண்டும்போது நன்செய்க்கு உரமாகப்போட அதனாற்சத்து அதிகமுண்டு. ஆடு கிடைமறிப்பது அதன் மூத்திரத்தின் உபயோகத்தைக்கருதியே. ஆட்டு எருவைவிட அதன் மூத்திரமே உபயோகமதிகம். மழைவருவதற்கு முந்தியே ஆடு கிடைமறிக்கவேண்டும். மழை வந்துவிட்டால் தரை சேறாகிவிடும். அப்போது கிடைமறித்தால் முடியாது. உழவுக்குப்பின் கொழிஞ்சிமுதலிய பலவகைத் தழைகளையும் வயலில் போட்டு மிதித்துவைக்கவேண்டும். இவைகளெல்லாம் மண்ணின்கடினத்தை நீக்கி இளகச்செய்கின்றதுடன் மண்ணுக்குச்சத்தும் கொடுக்கின்றன. எலும்புத்தூள் பிண்ணாக்கு முதலியனவும் சிரேஷ்டமே.

ஜப்பானியர் சுண்ணாம்பை உரமாக உபயோகிப்பதுண்டு. இது மிகவுங் கெடுதியைத் தரும். நாளடைவில் மண்ணையிறுகச்செய்து விளைவைக் குறைத்துவிடும். நம் நாட்டிலிந்த வழக்கமில்லாததுடன் தழை எருமுதலியவைகளையே உபயோகப்படுத்துவது ஆதிமுதல் வழக்கம். மாங்கனீஸ் சத்து நெல்விளைவை ஜப்பானியர் மிகவிருத்திசெய்கின்றார்கள்: சீமையில் வண்ணான் சலவைசெய்த கழிவுபதார்த்தங்களை இந்தசசத்துநெல்லுக்கு உரமாகப்போடுகிறார்கள். இந்த நூதன உரம் மாங்கனீஸ் ஸல்பேட் மாங்கனீஸ் குளோரைட் இருவிதமாகும். இன்னும் அவித்த எலும்பு, எலும்புப்பொடி, எலும்புச்சாம்பல் பொடாஸியம் பாஸ்பரேட் முதலியபலவும் அவர்கள் உபயோகிக்கிறார்கள்.

பர்மா ஜப்பான் இடங்களில் உரம்போடுகிறமுறையை நாம் கையாளுவதேயில்லை. அவர்கள் போடும் உரத்தின் பலத்தாற்றான் புட்டரிசிநெல் என்னும் மிகச்சத்துள்ள நெல் அவ்விடங்களில் விளைகின்றது. அந்த நெல்லரிசி மிகுந்த சத்தைக்கொடுக்கிறது. சென்னையில் ருதுவானபெண்களுக்கு இதைவேகவைத்துக்கொடுத்தால் தேகபலம் அதிகப்படும் என்று பெரும்பாலும் உபயோகிக்கிறார்கள். நம் நாட்டில் உழுந்தைத்திரித்து மாவாக்கிக் கழிக்கிண்டிப்போடுவார்கள்.

உரம்போடுவதின் நன்மையறிந்தல்லவா திருவள்ளுவர் "ஏரினும் நன்றால் எருவிடுதல்" என்று கூறியருளினார்.

விதையும் விதைப்பும்:—"விரையொன்றுபோடச் சுரையொன்று முளைக்குமா" என்பது பழமொழி. இதனால் விதை எவ்வளவு சிறந்ததாக இருக்கிறதோ அதற்குத்தக்கபடியே பலனுண்டு. நம் நாட்டில் முதலில்வரும் தலையடி நெல்லையே விதைக்கு எடுத்துக்காய வைப்பது சகசம். ஆயினும் இவ்விஷயமாகக் கவனிக்கவேண்டியன பலவிஷயமுண்டு. நல்ல நெல்லுடன் மட்டைநெல் கலந்துவருவது நிதர்சனமே. இதனால் விலைகுறைந்து நஷ்டமுண்டாகும். இதற்குக் காரணம் நெல்லடிக்குங் களங்கள் விசாலமில்லாததால் பலவகைநெல் ஒன்றோடொன்று கலந்துவிடும். அவ்விதையை விதைப்பதால் கலந்தே வளர்கின்றது. தவிரவும் நல்ல நெல் ஆறுமாதத்தில் விளையும். மட்டைநெல்களோ மூன்றுமாதமுதல் கதிராகும். இப்படியான கதிர்கள் உதிர்ந்து பூமியில் தங்கி அடுத்தவருஷப் நல்ல நெல்லுடன்கூட முளைக்கும். இக்கெடுதியை நீக்கவே முந்தி முதிர்ந்த கதிர்களைப்பிடுங்கிவிடுவதுண்டு. இதற்கு மட்டைபொறுக்கல் என்றுபெயர். சில ஜில்லாக்களில் நல்ல நெற்கதிரை விதைக்காகத்தனியே பிடுங்கியெடுத்து வேண்டுமளவு சேர்த்துவைத்து விதைக்கு உபயோகப்படுத்துவார்கள். இப்படிச் சிலவருஷம செய்தால் மட்டைகலப்பது தொலையும். இவ்வாறு செய்வது முதலிரண்டு மூன்று வருஷங்கட்குச் சிரமமேயாயினும் பின்பு இதனால் லாபம் அதிகமாம். விலையதிகமாக விற்கலாம். உணவிற்கும் பொருத்தமாம். இவ்வாறு மட்டை நீக்கினும் விதைநெல் மிகமுற்றாமல் கொஞ்சம் பசுங்காயாயிருக்கும்போதே அறுத்து இரண்டு மூன்று காய்ச்சல்போட்டுப் பதமாக எடுத்துவைக்கவேண்டும். காய்ச்சல்போடுவதில் கவனம் அதிகம் வேண்டும். உமியைப்பிரித்துப்பார்த்தால் அரிசியின் ஒருபக்கம் பால் சுருங்கியிருக்கவேண்டும். இதற்குப்பால் ஒதுங்கும் பக்குவமென்று பெயர். அதிகமாய்க்காய்ந்தால் அரிசி வெடிப்பாகி முளைக்கும் சத்தியைப்பெறாது. ஈரமாயிருந்தால் மடித்துப்போம். இவ்வாறு மிகக்காயாமலும் ஈரமில்லாமலும் பக்குவம்பார்த்து எடுத்துக் காற்றோட்டமுள்ள இடத்தில் அந்துவிழாதபடி பந்தோபஸ்துச்செய்யவேண்டும்.

"ஆயிரநெல்லுக்கோரந்து":— என்றபடி அந்துவிழுமேயானால் நெல் ஒன்றுக்குமுதவாதுபோகும். நெல்லுடன் வேப்பிலையையும், புங்க இலையையும் கலந்துவைத்தால் அந்துவராது. நெல்விதைக் கோட்டையின்மேல் ஒரு கலயத்தில் ஜலம்விட்டுவைத்தால் அந்துமுழுதும் அந்த ஜலத்தில்விழுந்து மடியும். இவ்வாறு பாதுகாத்துவரவேண்டும். அதிகக்கொழுமையான நிலத்திலும் கொழுமையற்ற நிலத்திலும் விளையும் நெல் விதைக்குதவாதென்றும் நடுத்தரமான நிலத்தில்விளையும் நெல்லே விதைக்குபயோகமானதென்றும் ஜப்பானியர் கருதுகின்றனர்.

விதையைக் கவனிப்பதுபோலவே விதைப்பைப்பற்றிக்கவனிக்கவேண்டியனவும் பலவுண்டு. மிகநெருக்கமில்லாமலும் மிக இடைவெளியின்றியும் விதைக்கவேண்டும். விதையை நனைத்து முளைகிளம்பச்செய்து விதைப்பதுமுண்டு. முளைதோன்றியவுடன் விதைத்துவிடவேண்டும். முளைசற்று அதிகம் வெளிப்பட்டால் எடுப்பதிலும் விதைப்பதிலும் முனைமுறிவுபடும். நம் நாடுகளில் கையினாலே விதைப்பதைத்தவிர வேறுகருவிகளால் விதைக்கும் வழக்கத்தைக் காணவில்லை. பெரும்பாலும் நெருக்கமாகவே விதைக்கின்றார்கள். நந்தியா, கர்நூல் முதலியவிடங்களில் "தோர்று" என்னுமொருவித கலப்பையால் சால்சாலாக விதைக்கிறார்கள். ஒரு ஏக்கராவுக்கு 20 படி விதையே போதுமானதாகவிருக்கிறது. கர்நூலில் 6-அங்குலம் சந்துவிட்டு விதைக்கிறார்கள். சீனாவிலோ செடி 1-க்கு 6-அங்குல தூரமும் வரிசை 1-க்கு 13 முதல் 18-அங்குல தூரமுமிருக்கும். செங்கற்பட்டில் இக்கலப்பையால் 4-அங்குலதூரத்தில் விதையிடும்படி செய்துவைத்திருக்கிறார்கள். நிலத்தை மிகவும் கொழுமைப்படுத்தும் அமெரிக்காவிலோ செடி 1-க்கு 5-அங்குலதூரமும் வரிசை 1-க்கு 18-அங்குல தூரமுமிருக்கும்படி விதைக்கிறார்கள். நிலத்தின் கொழுமைக்குத்தக்கபடி செடிகள் தூரமாக இருப்பதைக்கவனிக்கவேண்டும். சீனா, ஜப்பான்தேசங்களில் விதையை உப்பு ஜலத்திற் கொட்டி மிதக்கிறவைகளையெடுத்துவிட்டு அமிழ்ந்த நெல்லையே விதைப்பது எப்போதும் வழக்கம். ஒரு பக்காப்படி ஜலத்துக்கு 10-பலம் உப்புவிதங்கலந்து வேண்டிய அளவு விதையைப்போட்டு

மிதப்பதைத்தள்ளவேண்டுமென்று ரசாயனசாஸ்திரமூலமாகக் கண்டிருக்கிறார்கள். ஜப்பானியர் இவ்வாறு செய்யாமல் விதைப்பதேயில்லை. மேலும் தாய்ச்செடியில் விளைந்தநெல் விதை 1-க்கு 17-கதிர்கள் தோன்றும்படி கிளைத்ததென்றும், கிளைக்கதிரில்வந்த நடுராசி நெல்விதை 1-க்கு 21-கதிர் தோன்றும்படி கிளைத்ததாகவும், கணுக்களில் தோன்றியநெல் விதைக்கு உதவாதென்றும் பதினாறுவருஷம் பரீட்சைசெய்து கண்டிருப்பதாக ஜப்பானியர் கூறுகின்றனர். நம் நாட்டிலோ இவ்வாறான பரீட்சையாராய்ச்சியே கிடையாது. நாமும் நம்நாட்டின் சீதோஷ்ணமுதலியவற்றைக் கவனித்து விவசாய விஷயமான ஆராய்ச்சியும் பரீட்சையும் செய்யவேண்டியது மிகமுக்கியம். எந்த வர்த்தகமும் விவசாயத்துக்கு ஈடாகாது. வர்த்தகத்தில் ஒன்றுக்குக்கால் அரையதிகம் கிடைப்பது துர்லபம். அதிகமாகக்கண்டால் ஒன்றுக்கு இரண்டுபங்குகூடக் கிடையாது. "ஒன்றிரண்டாம் வாணிகமில்" என்பதுநம்மவர் கொள்கை. நெல் விவசாயத்திலோ இவ்விஷயம் மிகவும் வியக்கத்தக்கதாயிருக்கிறது. அமெரிக்காவில் ஒரு நெற்கதிரில் 160-நெல் இருக்கின்றன. எந்தத்தொழிலிலும் ஒன்றுக்கு 160-பங்கு இலாபம் காண்பது அரிதேயென்று சொல்லவும் வேண்டுமோ?

நாற்றும் நடுகையும்:—கைவிதைப்பாக விதைத்துப் பயிராக்குவதிலும் நாற்றுவளர்த்து நடுவதே சிலாக்கியமென்பது எல்லாருக்குந் தெரியும். 10-ஏக்கர் நிலம் நடுகைபோடுவதற்கு ஒரு ஏக்கர்நிலம் நாற்றுப்பாவுவது கோதாவரி முதலிய வடதேசவழக்கம். மதுரை திருநெல்வேலி முதலிய இடங்களில் 15-ஏக்கர் வரையில் நட ஒருஏக்கரே நாற்றுப்பாவுகிறார்கள். நாற்றங்கால்வயலை நன்றாக உழுது கருஞ்சேறாக்கியே நெல்லைநனைத்து வைத்த தொண்ணூறுநாழிகைக்குமேல் முளையதிகம் தோன்றுமுன் விதைக்கவேண்டும். நாற்றங்கால் பகலில் நீர்வடிந்து காய்ந்து இரவில் நீர் நிறைந்து இருத்தல் நலம். ஆஸ்திரேலியாவில் ஏக்கராவுக்கு 3-படி விதையும் சீனதேசத்தில் 4-படிவிதையும் அமெரிக்காவில் 10-படிவிதையும் விதைக்கிறார்கள். திருநெல்வேலி முதலிய தென்பாகங்களில் ஒரு ஏக்கருக்கு அறுபதுபடி விதைவரை விதைக்கிறார்கள். ஆனால் நன்றாகத்தான் விளைகிறது. ஆயினும் சாஸ்திநிலம் வைத்திருப்பவர்கள். ஒரு ஏக்கர் நிலமாவது ஒவ்வொருபோகத்திலும் பரீட்சைக்காக வைத்து விதைகுறைவாகவும் மற்றும் பலவகையாகவும் பரீட்சித்துப்பார்க்கவேண்டும். நாற்றங்காலில் அடர்த்தியாகாமல் கலக்கமாகவே விதைக்கவேண்டும். அப்போதுதான் நாற்றுப் பலமாயிருக்கும். நெருங்கிவந்தால் ஊசிபோலாகும். நெல்வகைக்குத் தக்கபடி விதைத்த நாற்பதுநாள் முதல் அறுபது நாளைக்குள் நாற்றைப்பிடுங்கி நடவேண்டும். நம் நாட்டில் பலநெற்பயிரை ஒன்றாகச்சேர்த்து நடுகிறார்கள். இப்படி நடுவதின் காரணம் ஒரு செடிபோனாலும் ஒருசெடி முளைக்குமென்பதே. இது தக்கதன்று. பலசெடிகள் சேர்ந்து வளர்வதில் வேர்நெருங்கி ஊசிபோல வருவதால் பலன் குறையும். தனித்தனி நாற்றைநடுவதே சிலாக்கியம். இப்படிச்செய்தால் பயிர்விரலளவுபருமனாகும். கிளைகள் அதிகமாகும். கதிர் நன்றாயிருக்கும். நெல்லும் திரட்சியாகும். இப்படி நடுமுன்னமே பரம்படிப்பதுமிக நல்லது. பரம்படிப்பதால் நிலம் சமதளப்பட்டு எங்கும் ஒரே அளவாக நீர்நிற்கும். இதனாற்றான் "பரம்படியாதநெல்வெள்ளாமை பாழ்வெள்ளாமை" என்பார்கள்.

நீர்பாய்ச்சல்:—நடுகை போட்டபின்பு பகலில் காயவிட்டு இரவில் நீர் நிரப்பிவரவேண்டும். களை பிடுங்கியபின்பு நமது நாடுகளில் இரண்டு அங்குல அளவு நீர் கட்டிவரவேண்டியது. அமெரிக்கர்கள் 6 அங்குலம் ஜலம்நிறைப்பர். நமக்கு அவ்வளவு வேண்டியதில்லையாயினும் இரண்டு அங்குலத்துக்காவது எப்போதும் நீர் இருந்துவரவேண்டும். கதிர்தோன்றிப் பால்பிடிக்கும்போது கட்டாயம் நீர் கட்டவேண்டும். அப்போது காய்ந்தால் சாவியாகும். பால் பிடித்தபின்பு காய்ச்சல் வந்தாலும் தோஷமில்லை. மற்றப்பயிர்களைவிட நெல்லுக்கு ஜலம் அதிகம் வேண்டுமென்பதே நம்மவர் கொள்கை. ஔவையார் அரசனை வாழ்த்தவேண்டியபோது "வரம்புயர" என்று வாழ்த்தி, வரம்புயர நீருயரும், நீருயர நெல்லுயரும், நெல்லுயரக் குடியுயரும், குடியுயரக் கோலுயரும், கோலுயரக் கோமான் உயர்வான், ஆதலால் வரம்புயர என்றதே ராஜவாழ்த்தாகும் என்றுபொருள்கூறினராம். இதனால் வரம்பு செவ்வையாகப்போட்டு நீர் கட்டிவரவேண்டுமென்பது தொன்றுதொட்டு நமது கொள்கை. கால்

வாய், குளம் முதலிய பாசனங்களில் இரண்டு அங்குலநீர் போதுமானதாயினும் கிணற்றிறவைகளில் சற்று அதிகமாகவே நீர் கட்டவேண்டும். கிணற்றுநீர்ப் பாசனங்களில் உரம் அதிகமாகப்போடவேண்டும். ஆற்றுநீர்ப் பாசனங்களில் புதுவெள்ளத்தில் வண்டல்கலந்துவரும். காவிரிப்பாசனத்தில் புதுவெள்ளம் வந்தபோது வயல் நிறையக்கட்டிவைத்து வடித்துவிட்டால் வயலில் வண்டல்படிந்துறைவது தெரியும். இஃதென்ன ஆச்சரியம்! நீர்கலங்கி மண்கலந்துவருவதே நிதர்சனமாகும். கதிரறுப்புக்கு இரண்டுவாரத்துக்கு முன் முதல் அறுப்புவரை நீர்கட்டாமல் நிலத்தைக் காயவைக்கவேண்டும். காய்ந்தால்தான் ஜனங்கள்நின்று அறுவடை வேலைநடத்த அனுகூலப்படும்.

களையெடுப்பு:—"களை பிடுங்காதபயிர் காற்பயிர்" என்பது பழமொழி. நாற்றுநட்டு 15-நாளைக்குமேல் முதற்றரம் களையெடுக்கவேண்டும். அதன்பின் 30-நாளைக்குமேல் மறுபடி இரண்டாந்தரம் களையெடுக்கவேண்டும். சிலவிடங்களில் மூன்றாந்தரமும் களையெடுப்பதுண்டு. வயலிற்பாயும் நீருடன் களைக்குரிய வித்துக்கள் வந்து சேர்ந்தும், பட்சிகளாலும் மற்றும் பலகாரணங்களாலும் களைச்செடிகள் முளைக்கின்றன. களையைப் பிடுங்காதுவிட்டால் நெற்பயிருக்குரிய நீரையும் உரத்தையும், களைப்பயிர் சாப்பிடுவதால், நெல்லுக்குவேண்டிய நீரும் உரமுங்குறையும். ஒருவனுக்குப்போட்ட உணவை வேறு ஒருவனுஞ்சேர்ந்து சாப்பிட்டால் ஆகாரபோஷணை குறைவது இயல்புதானே. இதுமட்டுமல்ல நெல்வேர் செல்லத்தக்க இடங்களில் களைவேர் ஊடுருவிப்போவதால் நெல்வேர் தாராளமாகச்செல்ல இடமில்லாதுபோகும். இவ்வகைக்காரணங்களால் களை வளரவளரக் களைவதே சிலாக்கியமாகும். நமக்குணவாகும் நெல் முதலிய தானியப்பயிர்கட்குச் சனியன்போலவரும் இச்செடிகட்கு நம் முதியோர்கள் களையென்று பெயரிட்டது மிக அருமையாயிருக்கிறது. களையென்றால் நீக்கிவிடு, பிடுங்கு என்றுபொருளாம். பிடுங்கியெறியவேண்டிய இச்செடிகட்கு இப்பெயர்வைத்த நம்மவர் புத்திகூர்மை வியக்கத்தக்கதொன்றல்லவா? தமிழ்ப்புராணங்களில் களையெடுப்பைப்பற்றி மிக விஸ்தாரமாகவும் வேடிக்கையாகவும் சொல்லியிருக்கிறார்கள். அவ்விடங்களில் படிக்கப்படிக்க மிக இனிமைதோன்றும். கொட்டைக்கிராந்தி, நீர்முள்ளி, பிரமதண்டி, ஆரை, நாய்க்கடுகு, கோரை, நீர்மேல் நெருப்பு, கொடிப்பாசி, வேப்பம்பாசி, துளிர்ப்பாசி முதலியன வயல்களிற்றோன்றுங் களைகளாம்.

கதிரறுப்பு:—கதிர் நெல்லில் பால்பிடித்து முற்ற பயிர் நிலைகொள்ளாது சாயும். அறுக்கும்படியான காலத்தில் மிகவும் சாக்கிரதைவேண்டும் தாமதப்பட்டால் நஷ்டமாம். அமெரிக்கரும் ஐரோப்பியரும் யந்திரங்களைக்கொண்டே அறுவடைசெய்கிறார்கள். அவ்வாறு நாம் இங்கே செய்யமுடியாது. அந்நாடுகளில் ஒருவயல் சுமார் 5-ஏக்கர்முதல் 20-ஏக்கர்வரையிருக்கும். இதனாலும், புழுதியாகவே அவர்கள் விதைப்பதாலும் அவர்கட்கு அவ்வாறு செய்ய இயலும். சிறுவயலும் சேற்றுப்பயிருமாகவிருக்கும் நமது நாடுகளில் ஜனங்களே அறுவடை செய்யவேண்டும். இப்படி அறுக்கும் அரிவாளுக்குப் பன்னரிவாள் என்று பெயர். இப்பக்கங்களில் இந்த அரிவாள் ஒருஅடி நீளம் வளைவாயிருக்கிறது. அநேகவிடங்களில் இரண்டு அடிநீளமுண்டு. நீளம் அதிகப்பட்டிருப்பதே நல்லது. மிகவும் கூர்மையாக இருக்கவேண்டும். வடதேசங்களில் கதிரறுப்பவர்கள் அரிவாளுடன் அதைக்கூர்மைப்படுத்தும்படி தீட்டத்தக்க சாணைக்கல்லும் எப்போதுங்கொண்டுபோய் அப்போதப்போது தீட்டிக்கொள்கிறார்களாம். இப்பக்கங்களில், அப்பழக்கமில்லை. கூர்மையாகவிருப்பதற்கேற்ப அறுவடை சீக்கிரமாகும். ஆள்மானம் அதிகமாகாது. நம் நாட்டார்கள் அரிவாள் கூர்மையாகவும் நீளம் அதிகமாகவுமிருக்கும்படி சீர்திருத்தவேண்டியது முதன்மையானது.

களமும் நெல் சேர்ப்பதும்:—கதிர்களைக்கொண்டுவந்து சேர்த்து நெல் சேர்க்க இடம் விசாலமாக அமைக்கவேண்டும். நம்நாடுகளில் போதுமான இடம் களமாகவில்லை. கொஞ்ச இடத்தில் பலர் பலவகைநெற்கதிரைக் கொண்டுவந்துசேர்த்து வேலைநடத்துவதால் ஒருசாதி நெல்லுடன் வேறுசாதி நெல் கலந்துவிடவும் பதர்போகும். தூற்றுதற்குப்போதுமான இடம் வாய்க்காமையால் ஒருவர்பொலி தூற்றுவதில் வரும் குப்பையும் பதரும் மற்றவர் பொலிநெல்லுடன் சேரும்படியாகவும் நேரிடுகிறது. பலஜாதிநெல் கலக்காமல் பாதுகாப்

பது குடித்தனத்தாருக்கு. மிக நல்லது. விதைநெல்லில் இதுமிக அவசியம் கவனிக்கவேண்டும். மற்றநெல்லிலும் ஒரேஜாதியாயிருந்தால் விலையேறும். பலஜாதிகலந்தால் விலை குறையும். ஒவ்வொரு கிராமங்களிலும் போதுமானபடி நெல்லடிக்குங்களம் அமைத்துத் தரும்படி நமதுகருணை தங்கிய கவர்ன்மெண்டார் கவனிக்கவேண்டும். நாமும் அவர்களிடம் பிரார்த்திக்கவேண்டும். ஜமீந்தார்கள் பிரபுக்கள் தாங்களே தங்கள் நிலங்களில் களத்துக்குப்போதுமான இடம் விட்டு ஏற்பாடு செய்யவேண்டும். இன்னும்வேண்டிய வகைகளிலெல்லாம் ஊன்றியோசித்து வியவசாய முறைநூல்களை யங்கங்கே மாணாக்கர்கள் கற்கும்படி நாமே ஏற்பாடு செய்யவேண்டும். நிலம் அதிகமுடையவர்கள் மிகவும் இந்த முறைகளையனுசரித்து வருவது அவசியம். நாம்வியவசாய விதிகளைக்கவனியாமலே வீட்டிலிருந்துகொண்டு பண்ணையாளர்கள் வேலைசெய்துகொடுப்பதைப் பெற்றுவந்தால் தக்கபடி லாபங்கிட்டுவதரிதாகும்.

முடிவுரை.

இன்னும் ஆராய்ச்சிவகையாலும் அனுபவவகையாலும் பலவகையில் நெல் சாகுபடியை விருத்திபடுத்தவேண்டும். நிலம் அதிகமுள்ள மிராசுதார்களே இவ்விஷயத்தில் கவலையெடுத்துக்கொண்டு தங்கள் தங்கள் குடியானவர்களுக்குங் கற்பித்துவருவது உத்தமம். திருநெல்வேலிஜில்லா சிவகிரிஜமீனில் சூப்ரிண்டெண்டு வேலைபார்த்த மகா-ள-ள-ஸ்ரீ அ. ராமராவ் அவர்கள் இவ்விஷயத்தில் ஆய்ந்து உழைத்து வியவசாயம் நடத்தியதில் 376-ஏக்கர் நிலத்தில் 1306-ம் பசலியில் 1694-கோட்டைநெல் விளைந்தது. (ஒரு கோட்டையென்பது பட்டணம் பக்காவுக்கு 126-படி) 1313-ம் பசலியில் 2222-கோட்டை விளைந்தது. 306-ம் பசலிமுதல் 313-ம் பசலிவரை விளைவு அதிகரித்தே வந்தது. 8-வருஷத்துக்குள் 528-கோட்டை அதிகம் விளைந்தது. இக்காட்சி நம் வியவசாயிகட்கு ஒரு பிரதமபாடசாலைபோலிருக்கின்றதல்லவா? ஜப்பான்தேசத்து நெற்பயிரில் சரிபாதி எடை வைக்கோலும் சரிபாதி எடை நெல்லுமிருக்கிறதாகவும், அமெரிக்காவில் இரண்டுபங்கு எடை வைக்கோலும் ஒருபங்கு எடை நெல்லுமிருப்பதாகவும், கட்ப்பை திருநெல்வேலி முதலிய சில இடங்களில் 4-பங்கு எடை வைக்கோலும், ஒருபங்கு எடை நெல்லுமிருப்பதாகவும், தஞ்சைஜில்லாவில் எட்டுப்பங்கு வைக்கோலும், ஒருபங்கு நெல்லுமிருப்பதாகவும் மற்றும்பல அரியவிஷயங்களும் அக்கரிகல்ஜ்ஜரல் இன்ஸ்பெக்டர் ஸ்ரீமத்-ஜி. இராஜகோபாலநாயுடு அவர்கள் தெரிவிக்கிறார்கள். தற்காலத்தில் அவர்கள் இவ்விஷயத்தில் மிகப்பாடுபட்டுத் தேர்ச்சிபெற்றுள்ளார்கள். நாமும் இவ்வாறே முயற்சிசெய்தால் மேன்மை அடைவது நிச்சயம். நாடெங்கும் வாழக்கேடொன்றுமில்லை. எல்லாம்வல்ல இறைவன் திருவருளைக்கொண்டு நமது டிஸ்டிரிக்கட்டு (Agricultural Association) என்னும் வியவசாயசங்கமானது நாளுக்குநாள் விருத்தியடைந்து நம் நாடே எல்லா நாடுகளிலும் சிறந்த ஒப்பற்ற பலவளங்களும் ஒருங்கே நிறையப்பெற்ற ஒரு நாடாகுக.

முற்றிற்று.

இங்ஙனம்,

எம். கே. எம். அப்துல்காதிறு ராவுத்தர்
Committee Member of the Madura
District Agricultural Association, Madura.

உ

கடவுள் துணை.

விக்கிரமசோழனுலா.

க. சீர்தந்த தாமரையாள் கேள்வன் றிருவுருவக்
கார்தந்த வுந்திக் கமலத்துப்—பார்தந்த

உ. ஆதிக் கடவுட் டிசைமுகனு மாங்கவன்றன்
காதற் குலமைந்தன் காசிபனு—மேதக்க

ங. மையறு காட்சி மரீசியு மண்டிலஞ்
செய்ய தனியாழித் தேரோனு—மையல்கூர்

ச. சிந்தனை யாவிற்கு முற்றத் திருத்தேரின்
மைந்தனை யூர்ந்த மனுவோனும்—பைந்தடத்

ரு. ஒரு துறையி லடுபுலியும் புல்வாயுங்
கூடநீ ரூட்டிய கொற்றவனும்—நீடிய

சு. மாக விமானந் தனியூர்ந்த மன்னவனும்
போகபுவிபுரந்த பூபதியும்—யாகத்துக்

எ. கூற வரிய மனுக்கொணர்ந்து கூற்றுக்குத்
தேற வழக்குரைத்த செம்பியனு—மாறழிந்

அ. தோடி புறவி யொளிப்ப முதுமக்கட்
சாடி வகுத்த தராபதியுங்—கூடார்தந்

கூ. தூங்கு மெயிலெறிந்த சோழனு மேல்கடலில்
வீங்குநீர் கீழ்கடலில் விட்டோனு—மாங்குப்

க0. பிலமதனிற் புக்குத்தன் பேரொளியா னாகர்
குலமகளைக் கைப்பிடித்த கோவு—முலகறியக்

கக. காக்குஞ் சிறுபுறவுக் காகக் களிகூர்ந்து
தூக்குந் துலைபுக்க தூயோனு—மேக்குயரக்

ச. "மைந்தனையூர்ந்தமறவோனும்"—எனவும் பிரதிபேதம்.

சு. "பூபதியு—மாகத்து"—பி - ம்.

௧௨. கொள்ளுங் குடகக் குவடூ டறுத்திழியத்
தள்ளுந் திரைப்பொன்னி தந்தோனுந்—தெள்ளருவிச்

௧௩. சென்னிப் புலியே றிருத்திக் கிரிதிரித்துப்
பொன்னிக் கரைகண்ட பூபதியு—மின்னருளின்

௧௪. மேதக்க பொய்கை கவிகொண்டு வில்லவனைப்
பாதத் தளைவிட்ட பார்த்திவனு—மீதெலா

௧௫. மெண்கொண்ட தொண்ணூற்றின் மேலு மிருமூன்று
புண்கொண்ட வென்றிப் புரவலனுங்—கண்கொண்ட

௧௬. கோதிலாத் தேறல் குனிக்குந் திருமன்றங்
காதலாற் பொன்வேய்ந்த காவலனுந்—தூதற்காய்ப்

௧௭. பண்டு பகலொன்றி லீரொன் பதுசுரமுங்
கொண்டு மலைநாடு கொண்டோனுந்—தண்டேவிக்

௧௮. கங்கா நதியுங் கடாரமுங் கைக்கொண்டு
சிங்கா தனத்திருந்த செம்பியனும்—வங்கத்தை

௧௯. முற்று முரணடக்கி மும்மடிபோய்க் கல்யாணி
செற்ற தனியாண்மைச் சேவகனும்—பற்றலரை

௨0. வெப்பத் தடுகளத்து வேழங்க ளாயிரமுங்
கொப்பத் தொருகளிற்றாற் கொண்டோனு—மப்பழநூல்

௨௧. பாடரவத் தென்னரங்க மேயாற்குப் புன்மணியா
லாடரவப் பாய லமைத்தோனுங்—கூடலார்

௨௨. சங்கமத்துக் கொள்ளுந் தனிப்பரணிக் கெண்ணிறந்த
துங்கமத யானை துணித்தோனு—மங்கவன்பின்

௨௩. காவல் புரிந்தவனி காத்தோனு மென்றிவர்கள்
பூவலய முற்றும் புரந்ததற்பின்—மேவலர்தஞ்

௨௪. சேலைத் துரந்து சிலையைத் தடிந்திருகாற்
சாலைக் களமறுத்த தண்டினான்—மேலைக்

௨௫. கடல்கொண்டு கொங்கணமுங் கன்னடமுங் கைக்கொண்
டடல்கொண்ட மாராட் டரசை—யுடலை

௨௬. யிறக்கி வடவரையே யெல்லையாத் தொல்லை
மறக்கலியுஞ் சுங்கமு மாற்றி—யறத்திகிரி

---

௧௮. “கைவர்க், கங்கா புரிபுரந்த கற்பகமும்”—எனவும் பி-ம்.
௨௫. “அடல்கொண் டமாரா டரசை”—எனவும் பி-ம்.

௨௭. வாரித் திகிரி வலமாக வந்தளிக்கு
மாரிற் பொலிதோ ளபயற்குப்—பார்விளங்கத்

௨௮. தோன்றியகோன் விக்கிரம சோழன் றொடைத்தும்பை
மூன்று முரச முகின்முழங்க—னோன்றலைய

௨௯. மும்மைப் புவனம் புரக்க முடிகவித்துச்
செம்மைத் தனிக்கோ றிசையளப்பத்—தம்முள்

௩0. விடவுட் படுத்த விழுக்கவிகை யெட்டுக்
கடவுட் களிறு கவிப்பச்—சுடர்சேர்

௩௧. இணைத்தார் மகுட மிறக்கி யரசர்
துணைத்தா ளபிடேகஞ் சூட்டப்—பணைத்தேறு

௩௨. நீராழி யேழு நிலவாழி யேழுந்தன்
பேராழி யொன்றாற் பொதுநீக்கிச்—சீராரு

௩௩. மேய திகிரி விரிமே கலையல்குற்
றாய நிலமடந்தை தோள்களினுஞ்—சாயலி

௩௪. னோது முலகங்க ளேழுந் தனித்துடைய
கோதில் குலமங்கை கொங்கையினும்—போதில்

௩௫. நிறைகின்ற செல்வி நெடுங்கண் களினு
முறைகின்ற நாளி லொருநா—ளறைகழற்காற்

௩௬. றென்னர் திறையளந்த முத்திற் சிலபூண்டு
தென்னர் மலையாரச் சேறணிந்து—தென்னர்

௩௭. வரவிட்ட தென்ற லடிவருட வாட்கண்
பொரவிட்ட போரயம் போற்ற—விரவிட்ட

௩௮. நித்திலப் பந்தர்க்கீழ் நீணிலாப் பாயன்மேற்
றொத்தலர் மாலைத் துணைத்தோளு—மைத்தடங்

௩௯. கண்ணு முலையும் பெரிய களியன்ன
மெண்ணு முலகங்க ளேழுடைய—பெண்ணணங்கு

௪0. பெய்த மலரோதிப் பெண்சக்ர வர்த்தியுட
னெய்திய பள்ளி யினிதெழுந்து—பொய்யாத

௪௧. பொன்னிப் புதுமஞ் சனமாடிப் பூசுரர்கைக்
கன்னித் தளிரறுகின் காப்பணிந்து—முன்னை

---

௨௯. “முடிசூடிச்”—பி-ம்.

௪௨. மறைக்கொழுந்தை வெள்ளி மலைக்கொழுந்தை மௌலிப்
பிறைக்கொழுந்த வைத்த பிரானைக்—கறைக்களத்துச்

௪௩. செக்கர்ப் பனிவிசும்பைத் தெய்வத் தனிச்சுடரை
முக்கட் கனியை முடிவணங்கி—மிக்குயர்ந்த

௪௪. தானத் தொழின்முடித்துச் சாத்துந் தகைமையன
யானக் கலன்கள் வரவருளித்—தேன்மொய்த்துச்

௪௫. சூழு மலர்முகத்துச் சொன்மா மகளுடனே
தாழு மகரக் குழைதயங்க—வாழுந்

௪௬. தடமுலைப் பார்மடந்தை தன்னுடனே தோளிற்
சுடர்மணிக் கேயூரஞ் சூழப்—படருந்

௪௭. தணிப்பில் பெருங்கீர்த்தித் தைய லுடனே
மணிக்கடகங் கையில் வயங்கப்—பிணிப்பின்

௪௮. முயங்குந் திருவுடனே முந்நீர் கொடுத்த
வயங்கு மணிமார்பின் மல்க—வுயங்கா

௪௯. அருங்கொற்ற மார்க்கு மணங்கி னுடனே
மருங்கிற் றிருவுடைவாள் வாய்ப்பப்—பொருந்திய

௫௦. வண்ணற் படிவத் தரும்பே ரணியணிந்து
வண்ணத் தளவில் வனப்பமைத்துக்—கண்ணுதலோன்

௫௧. காமன் சிலைவணக்க வாங்கிய கட்டழகு
தாம முடிவணங்கத் தந்தனைப்—காமருபூங்

௫௨. கோலத் தொடுபெயர்ந்து கோயிற் புறநின்ற
காலத் ததிருங் கடாக்களிறு—ஞாலத்துத்

௫௩. தானே முழங்குவ தன்றித் தனக்கெதிரா
வானே முழங்கினுமவ் வான்றடவி—வானிற்

௫௪. கணியு மருப்பு மடற்கையு மின்மை
தணியும் யமராச தண்டந்—தணியாப்

௫௫. பரிய பெருங்கோ டிணைத்துப் பணைத்தற்
குரிய தொருதானே யாகிக்—கரிய

௫௬. மலைக்கோ டணைத்து மடித்திடியக் குத்துங்
கொலைக்கோட்டு வெங்கால் கோப—மலைத்தோட

---

௪௮. "முயங்கா"—பி-ம்.

௫௭. வூறு மதந்தனதே யாக வுலகத்து
வேறு மதம்பொரு வேகத்தாற்—கூறென்றத்

௫௮. தாங்கிப் பொறையாற்று தத்தம் பிடர்நின்றும்
வாங்கிப் பொதுநீக்கி மண்முழுது—மோங்கிய

௫௯. கொற்றப் புயமிரண்டாற் கோமா னகளங்கன்
முற்றப் பரித்ததற்பின் முன்புதா—முற்ற

௬௦. வருத்த மறமறந்து மாதிரத்து வேழம்
பருத்த கடாந்திறந்து பாயப்—பெருக்கத்

௬௧. துவற்று மதுரச் சுவடுபிடித் தோடி
யவற்றி னபரங்கண் டாறி—யிவற்றை

௬௨. அளித்தன னெங்கோமா னுதலா லின்று
களித்தன வென்றுவக்குங் காற்று—நெளித்திழிய

௬௩. வேற்றுப் புலத்தை மிதித்துக் கொதித்தமரி
லேற்றுப் பொருமன்ன ரின்னுயிரைக்—கூற்றுக்

௬௪. கருத்து மயிரா வதநின் றதனை
யிருத்தும் பிடியடியா வேறித்—திருத்தக்க

௬௫. கொற்றக் கவிகை நிழற்றக் குளிர்ந்திரட்டைக்
கற்றைக் கவரிகளின் காலசைப்ப—வொற்றை

௬௬. வலம்புரி யூத வளைக்குல மார்ப்பச்
சிலம்பு முரசஞ் சிலம்பப்—புலம்பெயர்ந்து

௬௭. வாட்படை கொட்ப மறமன் னவர்நெருங்கக்
கோட்புலிக் கொற்றக் கொடியோங்கச்—சேட்புலத்துத்

௬௮. தென்னரு மாளுவருஞ் சிங்களருந் தோற்றுதகை
மன்னருந் தோற்க மலைநாடு—முன்னைங்

௬௯. குலையப் பொருதொருநாட் கொண்ட பரணி
மலையத் தருந்தொண்டை மானும்—பலர்முடிமே

௭௦. லார்க்குங் கழற்கா லனகன் றனதவையுட்
பார்க்குமதி மந்திர பாலகரிற்—போர்க்குத்

௭௧. தொடுக்குங் கமழ்தும்பை தூசினெடுஞ் சூடிக்
கொடுத்த புகழ்முனையர் கோனு—முடுக்கரையுங்

---

௬௮. "மலைநாட்டார்"—பி-ம்.

௭௨. கங்கரையு மாராட் டரையுங் கலிங்கரையுங்
கொங்கரையு மேனைக் குடகரையுந்—தங்கோன்

௭௩. முனியும் பொழுது முரிபுருவத் தோடு
குனியுஞ் சிலைச்சோழ கோனுஞ்—சனபதிதன்

௭௪. றோளுங் கவசமுஞ் சுற்றமுங் கொற்றப்போர்
வாளும் புலியு மதியமைச்ச—நாளுமா

௭௫. மஞ்சைக் கிழித்து வளரும் பெரும்புரிசைக்
கஞ்சத் திருமறையோன் கண்ணனும்—வெஞ்சமத்துப்

௭௬. புல்லாத மன்னர் புலாலுடம்பைப் பேய்வாங்க
வொல்லாத கூற்ற முயிர்வாங்கப்—புல்லார்தங்

௭௭. தாங்கு மடமகளிர் தந்தங் குழைவாங்க
வாங்கும் வரிசிலைக்கை வாணனும்—வேங்கையினுங்

௭௮. கூடார் விழிஞத்துங் கொல்லத்துங் கொங்கத்து
மோடா விரட்டத்து மொட்டத்து—நாடா

௭௯. தடியெடுத்து வெவ்வே றாசிரிய வீரக்
கொடியெடுத்த காலிங்கர் கோனுங்—கடியரணச்

௮௦. செம்பொற் பதணச் செறியிஞ்சிச் செஞ்சியர்கோன்
கம்பக் களியானைக் காடவனும்—வெம்பிக்

௮௧. கலக்கிய வஞ்சக் கலியதனைப் பாரில்
விலக்கிய வேணாடர் வேந்துந்—தலைத்தருமம்

௮௨. வாரிக் குமரிமுதன் மந்தா கினியளவும்
பாரித் தவனனந்த பாலனும்—பேரமரின்

௮௩. முட்டிப் பொருதார் வடமண்ணை மும்மதிலு
மட்டித்த மால்யானை வத்தவனு—மட்டையெழ

௮௪. காதிக் கருநாடர் கட்டரணங் கட்டழித்த
சேதித் திருநாடர் சேவகனும்—பூதலத்து

௮௫. முட்டிய தெவ்வர் சடைகட்ட மொய்கழல்
கட்டிய காரானை காவலனு—மொட்டிய

௮௬. மான வாசிரிய வட்கலிங்கத்
தானை துணித்த தவதிகனு—மீனவர்தங்

---

௭௫. "பொழிற்புரிசை"—பி-ம்.
௮௪. "காதித்திருநாடர்"—பி-ம்.

௮௭. கோட்டாறுங் கொல்லமுங் கொண்ட குடைநுளம்பன்
வாட்டார் மதயானை வல்லவனு—மோட்டரணக்

௮௮. கொங்கைக் குலைத்துக் குடகக் குலமொடித்த
செங்கைக் களிற்றுத் திகத்தனு—மங்கத்து

௮௯. வல்லவனுங் கோசலனு மாகதனு மாளுவனும்
வில்லவனுங் கேரளனு மீனவனும்—பல்லவனு

௯௦. மென்னும் பெரும்போ ரிகல்வேந்தர் மண்டலிகர்
முன்னு மிருமருங்கு மொய்த்தீண்டப்—பன்மணிச்

௯௧. சோதி வயிர மடர்க்குஞ் சுடர்க்குழையார்
வீதி குறுகுதலு மேலொருநாள்—மாதவத்தோன்

௯௨. சார்ந்த பொழுதனங்கன் றன்னை யறிவித்த
பூந்துவரை யந்தப் புரம்போன்று—மேந்திப்

௯௩. பரக்குங் கலையல்குற் பாவையரே யானை
புரக்குந் திருநாடு போன்றும்—வரக்கருதா

௯௪. ஏனை முனிக்குறும்பு கொல்ல விகன்மாரன்
சேனை திரண்ட திரள்போன்றுங்—கானலங்

௯௫. கண்டன் மணற்குன்றத் தன்னக் கணம்போன்றுங்
கொண்டலின் மின்னுக் குழாம்போன்று—மண்டு

௯௬. திரைதோறுந் தோன்றுந் திருக்குழாம் போன்று
வரைதோறுஞ் சேர்மயில்கள் போன்றும்—விரவினராய்

௯௭. இந்து நுதல்வெயர்ப்ப வெங்கணுங் கண்பரப்பிச்
சிந்தை பரப்பித் தெருவெங்கும்—வந்தீண்டி

௯௮. உத்தி சுடர வொளிமணிச் சூட்டெறிப்பப்
பத்தி வயிரம் பரந்தெறிப்ப—முத்தி

௯௯. னிணங்கு மமுத கலசங்க ளேந்தி
வணங்கு தலையினராய் வந்து—கணங்கொண்டு

௧௦௦ பார்க்குங் கொடுநோக்கு நஞ்சுறைப்பக் கிஞ்சுகவாய்
கூர்க்கு மெயிறுவெறுங் கோளிழைப்ப—வேர்க்க

௧௦௧. வரைகொ ணெடுமாடக் கீணிலையின் மல்கி
யுரக வரமகளி ரொப்பார்—விரல்கவரும்

---

௧௦௦. "பெருங்கோளிழைப்ப"—பி-ம்.

௧௦௨. வீணையும் யாழுங் குழலும் விசிமுழவும்
பாணி பெயர்ப்பப் பதம்பெயர்த்துச்—சேணுயர்

௧௦௩. மஞ்சிவரும் வெண்பளிக்கு மாடத் திடைநிலையின்
விஞ்சையர் மாத ரெனமிடைவார்—ரஞ்சனக்

௧௦௪. கண்ணிற் சிறிது மிமையாத காட்சியு
மண்ணிற் பொருந்தா மலரடியுந்—தண்ணென்ற

௧௦௫. வாடா நறுஞ்செவ்வி மாலையுங் கொண்டழகு
வீடா நிலாமுற்ற மேனிலையிற்—கூடி

௧௦௬. யுருவி னொளியி னுணர்வி னுரையிற்
பொருவி லரமகளிர் போல்வார்—அருகணைந்து

௧௦௭. சீரள வில்லாத் திருத்தோ ளயன்படைத்த
பாரள வல்ல பணைப்பென்பார்—பாருமின்

௧௦௮. செய்ய வொருதிருவே யாளுஞ் சிறுமைத்தோ
வைய முடையபிரான் மார்பென்பார்—கையிரண்டே

௧௦௯. ஆனபோ தந்த முருகவே ளல்லனிவன்
வேனில்வேள் கண்டீ ரெனமெலிவார்—யானென்று

௧௧௦. மெண்ணுக் கிசைய வருமே யிவனென்பார்
கண்ணிற் கருணைக் கடலென்பார்—மண்ணளிக்கும்

௧௧௧. ஆதி மனுகுலமிவ் வண்ணலான் மேம்படுகை
பாதியே யன்று லெனப்பகர்வார்—தாரெடுத்த

௧௧௨. கொங்கை பசப்பார்தங் கோல்வளை காப்பார்போற்
செங்கை குவிப்பார் சிலர்செறிய—அங்கொருத்தி

பேதை.

௧௧௩. வந்து பிறந்து வளரு மிளந்திங்கட்
கொந்து முகிழாக் கொழுங்கொழுந்து—பைந்தழைத்

௧௧௪. தோகை கொடாமஞ்ஞை சூடுண்டு தோற்றவன்மேல்
வாகை புனைய வளர்கரும்பு—கோகிலத்தின்

௧௧௫. பிள்ளை யிளவன்னப் பேடை பிறந்தணிய
கிள்ளை பவளங் கிளைத்தகிளை—கள்ளங்

---

௧௦௨. "பதம்பெயர்த்து—நீணிலா"—பி-ம்.
௧௧௪. "தோகைதொடாமஞ்ஞை"—பி-ம்.

௧௧௬. தெரியப் பெருங்கட் சிறுதேறல் தாயர்
பிரியாப் பருவத்துப் பேதை—பரிவோடு

௧௧௭. பாவையு மானு மயிலும் பசுங்கிளியும்
பூவையு மன்னமும் பின்போதக்—காவலன்

௧௧௮. பொன்னிப் புகார்முத்தி னம்மனையுந் தென்னாகை
நன்னித் திலத்தி னகைக்கழங்குஞ்—சென்னிதன்

௧௧௯. கொற்கைக் குளிர்முத்தின் கோலமணி வல்சியுங்
கற்கைக்கு வேண்டுவன கைப்பற்றிப்—பொற்கொடியார்

௧௨௦. வீதி புகுந்து விளையாடு மெல்லைக்கண்
ஆதி யுகம்வந் தடிக்கொள்ள—மேதினிமே

௧௨௧. லொன்று கலிகடிந்த வுத்துங்க துங்கன்றன்
மூன்று முரச முழக்குதலும்—வான்றனைத்

௧௨௨. தாயர் வரவந்து தாயர் தொழத்தொழுது
தாயர் மொழிந்தனவே தான்மொழிந்தாள்—சேயோன்

௧௨௩. படியின் மதியும் பகலவனுந் தோற்கு
முடியி லொருகாலு மூள்ளா—வடிவின்

௧௨௪. மகிழ்ந்து மலரான் மலர்க்கண்ணு நெஞ்சு
நெகிழ்ந்த திருநோக்கி னோரா—முகிழ்ந்து

௧௨௫. சிரிக்குந் திருப்பவளச் சேயொளியூ டாடா
விரிக்குந் திருநிலவின் வீழா—பரிக்கும்

௧௨௬. உலகம் பரவுந் திருப்புருவத் தோடா
திலக முகாம்புயத்திற் சேரா—பலவுந்

௧௨௭. திசையை நெருக்குந் திருத்தோளிற் செல்லா
விசையுந் திருமார்பத் தெய்தா—வசையிலாக்

௧௨௮. கைம்மலரிற் போகா வடிமலரிற் கண்ணுறு
மெய்ம்மலர்ப் பேரொளியின் மீதூரா—வம்மகள்

௧௨௯. கண்ணு மனமுங் கழுநீர்க் குலமுழுது
நண்ணுந் தொடையன்மே னாட்செய்ய—வுண்ணெகிழ

---

௧௧௭. "மானும் மயிலும்"—பி - ம்.
௧௧௯. "முத்த வல்சியுஞ் சோறடவு" எனவும் "பொற்றொடியார்"—எனவும் பி - ம்.
௧௨௧. "உத்துங்கசோழன்"—பி - ம்.

௧௩௦. வம்பின்க ளன்னைமீர் மாலை யிதுவாங்கித்
தம்பின்க ளென்றுரைப்பத் தாயரு—மம்மே

௧௩௧. பெருமானை யஞ்சாதே பெண்ணமுதே யாமே
திருமாலை தாவென்று செல்வேங்—திருமாலை

௧௩௨. யாங்கொள்ளும் வண்ண மெளிதோ வரிதென்னத்
தேங்கொள்ளு மின்சொற் சிறியாளு—மாங்குத்தன்

௧௩௩. மார்பத்துக் கண்ணினீர் வாரப் பிறர்கொள்ளு
மார்வத்துக் கின்றே யடியிட்டாள்—சேர

௧௩௪. விருத்தி மணற்சோ றிளையோரை யூட்டு
மருத்தி நடுவே யயர்த்தாள்—ஒருத்தி

பெதும்பை.

௧௩௫. மழலை தனது கிளிக்களித்து வாய்த்த
குழலி னிசைகவர்ந்து கொண்டாள்—நிழல்விரவு

௧௩௬. முன்னர் நகைதனது முல்லைகொளமுத்தின்
பின்னர் நகைகொண்ட பெற்றியாள்—கன்னி

௧௩௭. மடநோக்கந் தான்வளர்த்த மானுக்கு விட்டு
விடநோக்க வேலிரண்டு கொண்டாள்—சுடர்நோக்குந்

௧௩௮. தானுடைய மெய்ந்நுடக்கந் தன்மா தவிக்களித்து
வானுடைய மின்னுடக்கம் வாங்கினாள்—பூநறும்

௧௩௯. பாவைதன் பைங்குர வேந்தப் பசுங்கிளியும்
பூவையு மேந்தும் பொலிவினாள்—மேவு

௧௪௦. மடநடை யன்னப் பெடைபெறக் கன்னிப்
பிடிநடை பெற்றுப் பெயர்வாள்—சுடர்கனகக்

௧௪௧. கொத்துக் குயின்ற கொடிப்பவள பந்தத்தின்
முத்துப் பொதியுச்சி முச்சியா—ளொத்திறத்தும்

௧௪௨. வீரவேள் போல்வாரை விட்டி விழுத்தவர்மேன்
மாரவேள் கண்சிவப்ப வாய்சிவப்பாள்—நேரொத்த

---

௧௩௪. "இளையோரை யூட்டி யருத்தி யறவே"—பி - ம்.
௧௩௫. "கொள்வாள்"—பி - ம்.
௧௩௮. "பூநாறும்"—பி - ம்.

௧௪௩. கோங்க முகையனைய கொங்கையா டன்கழுத்தாற்
பூங்கமுகை யிப்போது பொற்பழிப்பாள்—பாங்கியருந்

௧௪௪. தாயரும் போற்றுமே தானே துயிலெழுந்து
பாயல் புடைபெயர்ந்து பையச்சென்—றியாயே

௧௪௫. தளரு மிடையொதுங்கத் தாழுங் குழைத்தாய்
வளரு மொருகுமரி வல்லி—கிளருங்

௧௪௬. கொழுந்து மளவிறந்த கோங்குங் கவினி
யெழுந்து கிளைகவிப்ப வேறித்—தொழுந்தகைய

௧௪௭. கொங்குடைய பொன்னடருஞ் சென்னிக் கொழுங்கோங்கின்
பங்குடைய ஊரிப் பணையணங்—தங்குடைய

௧௪௮. வண்டு முரல மணநாற வைகுவது
கண்டு மகிழ்ந்தேன் கனவிலெனக்—கொண்டு

௧௪௯. வருக வருக மடக்கிள்ளை முத்தந்
தருக தருகவெனத் தாயர்—பெருக

௧௫௦. விரும்பினர் புல்லி விரைய முலைவந்
தரும்பின வாகத் தணங்கே—பெரும்புயங்கள்

௧௫௧. புல்லி விடாத புதுவதுவை சென்னியுடன்
வல்லி பெறுதி யெனவழுத்து—மெல்லை

௧௫௨. யரச னபய னகளங்க னெங்கோன்
புரசை மதவரைமேற் போத—முரசந்

௧௫௩. தழங்கு மறுகிற் றமரோடு மோடி
முழங்கு முகின்மாட முன்றிற்—கொழுங்கயற்கட்

௧௫௪. பொன்னொன வெல்லா மழகும் புனைவதொரு
மின்னென வந்து வெளிப்பட்டு—மன்னருயி

௧௫௫. ருண்டாற் றியவேங்கை வைக்க வொருதிருக்கைச்
செண்டாற் கிரிதிரித்த சேவகனைத்—தண்டாத

௧௫௬. வேகங் கெடக்கலிவாய் வீழ்ந்தாற்றும் பார்மகளைச்
சோகங் கெடுத்தணைத்த தோளானை—யாகத்துக்

---

௧௪௬. "கிளைகவிப்பவேறி"—பி - ம்.
௧௪௯. "தாயர்—வீரவி"—பி - ம்.
௧௫௬. "சோகங்கெடுத்தெடுத்த"—பி - ம்.

கருஎ. கொங்கை பிரியாத வீறோடுங் கோகனக
மங்கை பிரியாத மார்பனை—யங்கமலக்

கருஅ. கையு மலரடியுங் கண்ணுங் கனிவாயுஞ்
செய்ய கரிய திருமாலைத்—தையலுங்

கருகூ. கண்டகன் வாங்காள் தொழுமுகிழ்த்த கைவிடாள்
மண்டு மனமீட்கு மாறறியாள்—பண்டறியாக்

கசு0. காமங் கலக்கக் கலங்கிக் குழல்சரியத்
தாமஞ் சரியத் தனிநின்றாள்—நாமவேற்

கசுக. சேரனு மீனவனுஞ் சேவிப்பச் செம்பியரில்
வீரனு மவ்வெல்லை விட்டகன்றான்—மாரனுங்

கசுஉ. தக்குத் தகாதாளை யெய்து தரைப்படுத்துப்
புக்குத் தொடைமடக்கிப் போயினான்—மைக்குழல்

மங்கை.

கசுந. மங்கைப் பருவத் தொருத்தி மலர்பொதுளுங்
கங்கைப் புளினக் களியன்ன—மெங்கோனை

கசுச. மன்னனை மன்னர் பிரானை வரோதயனைத்
தென்னனை வானவனைச் செம்பியனை—முன்னொருநாட்

கசுரு. கண்ட பெதும்பைப் பருவத்தே தன்கருத்தாற்
கொண்ட பரிவு கடைக்கூட்டப்—புண்டரிகச்

கசுசு. செய்ய வடிமுதலாச் செம்பொன் முடியளவு
மைய லகல மனத்திழைத்துக்—கையினாற்

கசுஎ. தீட்டுங் கிழியிற் பகற்கண் டிரவெல்லாங்
காட்டுங் கனவு தரக்கண்டு—நாட்டங்கொண்

கசுஅ. டியாதொன்றுங் காணா திருப்பாள் பொருகளிற்றுத்
தாதொன்றுந் தொங்கற் சயதுங்கன்—வீதி

கசுகூ. வருகின்றா னென்ன மணியணிகள் யாவுந்
தருகென்றாள் வாங்கித் தரித்தாள்—விரிகோதை

கஎ0. சூடினாள் பைம்பொற் றுகிலுடுத்தாள் சந்தனச்சே
றாடினா ளன்பே ரணியணிந்தாள்—சேடியர்

கஎக. காட்டும் படிமக் கலத்துக் கமலத்தை
யோட்டும் வதனத் தொளிமலர்ந்து—கேட்டு

கஎஉ. விடைபோ மனங்கன்போல் வேல்விழிக டாமும்
படைபோய் வருவனபோற் பக்கங்—கடைபோய்

கஎந. மறித்து மதர்மதர்த்து வார்கடிப்பு வீக்கி
யெறிக்குங் குழைக்காதிற் கேற்று—நெறிக்கு

கஎச. மளக முதலாக வைம்பாற் படுத்த
வளர்கருங் கூந்தன் மலிந்துங்—கிளர

கஎரு. வரியன நித்திலத்தி னம்பொற் றொடித்தோள்
பரியன காம்பிற் பணைத்துந்—தெரியற்

கஎசு. சுவடு படுகளபத் தொய்யில்சூழ் கொங்கைக்
குவடு படவெழுச்சி கொண்டுந்—திவடா

கஎஎ. முந்துங் கலையல்குன் மூரித் தடமகன்று
நொந்து மருங்கு லுடங்கியும்—வந்து

கஎஅ. மிடையும் புதுவனப்பு விண்ணோரும் வீழ
வடையுந் தனதுருக்கண் டஞ்சிக்—கொடையனகன்

கஎகூ. பண்டறியு முன்னைப் பருவத் துருவத்துக்
கண்டறியு மவ்வடிவு காண்கிலேன்—பண்டறியு

கஅ0. முன்னை வடிவு மிழந்தேன் முகநோக்கி
யென்னை யறிகலன்யா னென்செய்கேன்—றன்னை

கஅக. வணங்கி வருவ தறிவ னெனவந்
திணங்கு மகளி ரிடைநின்—றணங்கு

கஅஉ. மிறைவ னகளங்க னெங்கோன் குமரித்
துறைவ னிருபகுல துங்கன்—முறைமையாற்

கஅந. காக்குங் கடல்கடைந்த கைமலரு முந்திமலர்
பூக்கு முலகளந்த பொற்கழலு—நோக்குந்

கஅச. திருக்கொள்ளு மார்பமுந் தெவ்வேந்த ரெல்லாம்
வெருக்கொள்ளு மூரித்தோள் வெற்பு—முருக்கு

கஅரு. மகரக் குழைக்காது மாதரார் மாமை
நுகரப் புடைபெயரு நோக்குந்—துகிரொளியை

கஅசு. வெளவிய கோல மணிவாய மெப்பொழுதுஞ்
செவ்வி யழியாத் திருமுகமு—மெவ்வுருவு

கஎச. “மலிந்து—மிளிர”—பி - ம்.

கஅஎ. மாறு படாவண்ண மண்ணல் படிவத்து
வேறு படுவனப்பு மெய்விரும்பித்—தேறும்

கஅஅ. பிறையாம் பருவத்துப் பேருவகை யாம்பல்
நிறையா மதிக்கு நெகிழ்ந்தாங்—கிறைவனைக்

கஅகூ. கண்டு மனமு முயிருங் களிப்பளவிற்
கொண்டு பெயர்ந்தது கொல்யானை—பண்டு

ககூ0. நனவு கிழியிற் பகற்கண்டு நல்ல
கனவு தரவிரவிற் கண்டு—மனமகிழ்வாள்

ககூக. தீட்ட முடியாத செவ்வி குறிக்கொள்ளும்
வாட்ட முறங்கா மையுநல்க—மீட்டுப்

ககூஉ. பெயர்ந்தா டமர்தம் பெருந்தோள் களில்வீழ்ந்
தயர்ந்தா ளவணிலையி தப்பாற்—சயந்தொலைய

மடந்தை.

ககூங. வெந்து வடிவிழந்த காமன் விழிச்சிவப்பு
வந்து திரண்டனைய வாயினா—ளந்தமி

ககூச. லோலக் கடலேழு மொன்றா யுலகொடுக்குங்
காலக் கடலனைய கட்கடையாள்—ஞாலத்தை

ககூரு. வீட்டி வினைமுடிக்க வெங்கால தூதுவர்கள்
கோட்டி யிருக்குங் குவிமுலையாள்—நாட்ட

ககூசு. வடிவின் மருங்குலாண் மாரனைப்போன் மேலோர்
முடிவி னுணர்வை முடிப்பாள்—கடிதோடிப்

ககூஎ. போகா தொழியா திடையென்று போய்முட்டிய
லாகாமை கைவளரு மல்குலாள்—பாகாய

ககூஅ. சொல்லி யொருமடந்தை தோழியைத் தோள்வருந்தப்
புல்லி நிலாமுற்றம் போயேறி—வல்லிநாஞ்

ககூகூ. சேடிய ரொப்ப வகுத்துத் திரள்பந்து
கோடியர் கண்டிருப்பக் கொண்டாடி—யாடினா

உ00. லெண்மாலை நீகொள்வ தியாங்கொள்வ தெங்கோமான்
றன்மாலை வாங்கித் தருகென்று—மின்னனையாள்

ககூகூ. "கண்டுவப்பக்கொண்டாடி"—பி - ம்.

உ0க. வட்டித் தளகமுங் கொங்கையும் வார்தயங்கக்
கட்டிக் கனபந்து கைப்பற்றி—யொட்டிப்

உ0உ. பொருதிறத்துச் சேடியர்தம் போர்தொலையத் தானே
யிருதிறத்துக் கந்துகமு மேந்திப்—பெரிது

உ0ங. மழுந்துறா தானத் தலைத்தன்னைச் சூழ
விழுந்து மெழுந்து மிடைய—வெழுந்துவரி

உ0ச. சிந்த விசிறு திரையி னுரையூடு
வந்த வனச மகளேய்ப்ப—முந்திய

உ0ரு. செங்காந்த ளங்கை சிவக்குஞ் சிவக்குமென்
றங்காந்து தோள்வளைக ளார்ப்பெடுப்பத்—தங்க

உ0சு. னுடங்கு கொடிமருங்கு னொந்தசைந்த தென்றென்
றுடங்கு கலாப மரற்றத்—தொடங்கி

உ0எ. யரிந்த குரலினவா யஞ்சி றடிக்குப்
பரிந்து சிலம்பு பதைப்ப—விரிந்தெழுந்

உ0அ. கைக்கோ விடைக்கோ கமல மலரடிக்கோ
மைக்கோல வோதியின்மேல் வண்டிரங்க—வக்கோதை

உ0கூ. பந்தாடி வென்று பருதி யகளங்கன்
சந்தாடு தோண்மாலை தாவென்று—பைந்துகிற்

உக0. றானை பிடித்தலைக்கும் போதிற் றனிக்குடைக்கீழ்
யானைமேல் வெண்சா மரையிரட்டச்—சேனை

உகக. மிடையப் பவளமு நித்திலமு மின்ன
வடையப் பணிலங்க ளார்ப்பப்——புடைபெயர

உகஉ. வார்ந்து மகர வயமீன் குலமுழுதும்
போந்து மறுகு புடைபிறழச்—சேர்ந்து

உகங. ‘பதலை முழங்கப் பகடேற்றி விட்ட
மதலைகண் முன்னர் மலிய—விதலையராய்த்

உகச. தாழுந் தொழிலிற் கிளைபுரக்கத் தண்டடைந்து
வாழும் பரதர் மருங்கீண்ட—வீழுந்திக்

உகரு. கன்னியு நன்மதையுங் கங்கையுஞ் சிந்துவும்
பொன்னியுந் தோயப் புகார்விளங்க—மன்னிய

உ0ங. "மெழுந்து தாளத் திலைதன்னைச்"—பி - ம்.
உகச. "தன்னடைந்து வாழும்"—பி - ம்.

௨௧௬. செங்கோற் றியாக சமுத்திர னண்ணுதலுந்
தங்கோ மறுகிற் றலைப்பட்டுத்—தங்களி

௨௧௭. லொட்டிய வொட்ட முணராதே தோள்வளையுங்
கட்டிய மேகலையுங் காவாதே—கிட்டித்

௨௧௮. தொழுதா ளயர்ந்தா ளுளங்கினள் சோர்ந்தா
ளழுதா ளொருதமிய ளானாள்—பழுதிலாக்

௨௧௯. காக்குந் துகிலு மிலங்கு பொலன்கலையும்
போக்கு நிதம்பம் புனைகென்று—வீக்கு

௨௨0. மணிக்கச்சுந் தம்முடைய வான்றாசுங் கொங்கை
பணிக்கக் கடைக்கண்கள் பாரா—வணிக்கமைந்த

௨௨௧. குன்றாத நித்திலக் கோவையும் பொன்னிறத்த
பொன்றாத பட்டும் புனைகென்று—நின்று

௨௨௨. கொடுத்தன கொங்கைகளுங் கொண்டன தானு
மடுத்தனர் தோண்மே லயர்ந்தாள்—கடுத்துக்

௨௨௩. கவரு மனங்களுடன் கைகலந்த தன்றித்
தவரு முதுகிளவித் தாய—ரவரெங்குங்

௨௨௪. கூசினர் சந்திற் பனிநீர் குழைத்திழைத்துப்
பூசினா ராலி பொழிந்தொழிந்தார்—வீசினா

௨௨௫. ரிட்டார் நிலவி லிளந்தென் றலுங்கொணர்ந்து
சுட்டார் குளிரி தொடுத்தெடுத்தார்—விட்டாரோ

௨௨௬. பள்ள மதனிற் படரும் பெரும்புனல்போ
லுள்ள முயிரை யுடன்கொண்டு—வள்ளல்பின்

௨௨௭. னோதை மறுகி லுடன்போன போக்காலிப்
பேதை நடுவே பிழைத்தொழிந்தாள்—மாதரில்

அரிவை.

௨௨௮. வாரி படுமமுத மொப்பாண் மதுகரஞ்சூழ்
வேரி கமழ்கோதை வேறொருத்தி—மூரித்தேர்த்

௨௨௯. தட்டுஞ் சிறுகப் பெருகு மரகதத்திற்
கட்டுங் கனபொற் கலாபாரம்—பட்டுங்

---

௨௨௨. "அடுத்தன தோண்மேல்"—பி - ம்.

௨௩0. துகிலுங் கரப்பச் சுடர்பரப்பிக் ககபோர்
யகல்கின்ற வல்கு லரிவை—யிகலி

௨௩௧. யொருக்கி மருங்குகடிந் தொன்றினைவந் தொன்று
நெருக்கிய மாமை நிரம்பித்—தருக்கி

௨௩௨. யிடங்கொண்டு மின்னுக் கொடியொன் றிரண்டு
குடங்கொண்டு நின்றதெனக் கூறத்—தடங்கொண்

௨௩௩. டிணைத்துத் ததும்பி யிளையோர்க ணெஞ்சம்
பிணைத்துத் தடமுகட்டிற் பெய்து—பணைத்துப்

௨௩௪. பெருமை யுவமை பிறங்கொலிநீர் ஞாலத்
தருமை படைத்ததனைத் தன்னங்—கருமை

௨௩௫. யெறித்துக் கடைபோ யிருபுடையு மெல்லை
குறித்துக் குழையளவுங் கொண்டு—மறித்து

௨௩௬. மதர்த்து வரிபரந்து மைந்தர் மனங்கள்
பதைத்து விழநிறத்திற் பட்டுத்—ததைத்துக்

௨௩௭. கழுநீ ரிதழின் கனிவழித்து மானின்
விழிநீர்மை வாய்த்த விழியாள்—முழுது

௨௩௮. நெறிந்து கடைகுழன்று நெய்த்திருண்டு நீண்டு
செறிந்து பெருமுருகு தேக்கி—நறுந்துணர்

௨௩௯. வார்ந்து கொழுந்தெழுந்த வல்லியாய் மாந்தளிர்
சோர்ந்து மிசையசைந்த சோலையாய்ச்—சேர்ந்து

௨௪0. திருவிருந்த தாமரையாய்ச் சென்றடைந்த வண்டின்
பெருவிருந்து பேணுங் குழலாள்—பொருகளிற்றின்

௨௪௧. வந்து மறுகி லொருநாண் மனுகுலத்தோன்
றந்த பெரிய தனிமைக்கட்—செந்தமிழ்க்

௨௪௨. கோனே கவர்ந்தெம்மைக் கொண்டனன் வந்தெமக்குத்
தானே தரிற்றருக வென்பனபோற்—பூநே

௨௪௩. ரிணைக்கையுந் தோளு மிடுதொடிக ளேந்தா
துணைக்கண் டுயிற்றத் துயிலா—மணக்கூந்தல்

௨௪௪. போது மறந்தும் புனையா பொலங்கச்சு
மீது படத்தரியா வெம்முலைகள்—சோதி

௨௪௫. யுடுக்குங் கனபொற் றுகில்பேணா தல்குல்
கொடுக்குந் திருவெணஞ்சு கொள்ளா—தெடுக்குங்

௨௪௬. கருப்புச் சிலையனங்கன் கையம்பால் வீழ
நெருப்புக் குருகி நிறைபோ—யிருப்புழிப்

௨௪௭. பாடிய பூவைக்கும் யாதும் பரிவின்றி
யாடிய தோகைக்கு மன்பின்றிக்—கூடிய

௨௪௮. கிள்ளைக்குந் தம்மிற் கிளரு மிளவன்னப்
பிள்ளைக்கு மாற்றாள் பெயர்ந்துபோய்க்—கொள்ளை

௨௪௯. பயக்கு மலர்க்குரவப் பந்தர்ப் படப்பை
நயக்கு மிளமரக்கா நண்ணி—வயக்களிற்று

௨௫௦. மன்னன் குலப்பொன்னி வைகலு மாடிரா
லன்னங்கா ணீரென் றழிவுற்றுஞ்—சென்னி

௨௫௧. பெருகும் புகாரடையப் பெற்றீரான் மற்றைக்
குருகுகா ளென்று குழைந்துங்—கருகிய

௨௫௨. நீலக் குயிலினங்கா ணீர்போலுஞ் சோணாட்டுச்
சோலைப் பயில்வீ ரெனத்துவண்டும்—பீலிய

௨௫௩. பேரியன் மஞ்ஞை பெறுதிராற் கொல்லியு
நேரியுஞ் சேர்வீ ரெனநெகிழ்ந்து—நேரியன்

௨௫௪. தண்டுழாய் மாலை பலகாலுந் தைவந்து
வண்டுகாள் வாழ்வீ ரெனமருண்டுந்—தொண்டிக்கோன்

௨௫௫. மன்றன் மலயத்து வாளருவி தோய்ந்தன்றே
தென்றல் வருவ தெனத்திகைத்து—நின்றயர்கான்

௨௫௬. மன்னற்கு மன்னன் வளவ னகளங்கன்
முன்னர்ப் பணில முழங்குதலுந்—தன்னிற்போய்ப்

௨௫௭. பேணுந் திருமடனு மென்றும் பிரியாத
நாணும் பெருவிருப்பா னல்கூரக்—காணுங்கா

௨௫௮. லேய்ப்ப வெதிர்வந் திரவி யுருவவொளி
வாய்ப்ப முகபங் கயமலர்ந்தாள்—போய்ப்பெருகு

௨௫௯. மீதா ரகலல்குல் வீழ்கின்ற மேகலையும்
போதாத வண்ணம் புடைபெயர்ந்தாள்—சோதி

---

௨௫௪. "தண்டுள வாம்ப லறுகாலுந் தைவந்து"—எனவும் "தெண்ணைக்கோன்" (தனிச்சீர்) எனவும்—பி-ம்.

௨௫௮. "போய்ப்பெயர்"—பி-ம்.

௨௬௦. குழைய நடுவொடுக்குங் கொங்கையுந் தோளும்
பழைய படியே பணைத்தாள்—பிழையாத

௨௬௧. பொன்னித் துறைவன் பொலந்தார் பெறத்தகுவார்
தன்னிற் பிறரின்மை சாதித்தாள்—சென்னிக்குப்

௨௬௨. பாரான் முலையாலும் பங்கயத்தா டோளாலும்
வாரா விருப்பு வருவித்தா—ளோரணங்கு

தெரிவை.

௨௬௩. கோது விரவாக் கொழும்பாகு கொய்தளிரின்
போது புலராப் பொலங்கொம்பு—மீது

௨௬௪. முயலா லழுங்கா முழுத்திங்கள் வானிற்
புயலா லழுங்காப் புதுமின்—னியல்கொண்

௨௬௫. டெழுதாத வோவ மெழுசிறைய வண்டு
கொழுதாத கற்பகத்தின் கொந்து—முழுது

௨௬௬. மிருளாக் கலாபத் திளந்தோகை யென்றுந்
தெருளாக் களியளிக்குந் தேறல்—பொருளால்

௨௬௭. வருந்தக் கிடையாத மாணிக்கம் யார்க்கு
மருந்தத் தெவிட்டா வமுதந்—திருந்திய

௨௬௮. சோலைப் பசுந்தென்ற றாது வரவந்த
மாலைப் பொழுதின்கண் மண்டபத்து—வேலை

௨௬௯. விரிந்த நிலாமுன்றில் வீழ்மகரப் பேழ்வாய்
சொரிந்த பனிக்கற்றை தூங்கப்—பரிந்துழையோர்

௨௭௦. பூசிய சாந்தங் கமழப் பொறிவண்டு
மூசிய மௌவன் முருகுயிர்ப்பத்—தேசிகப்

௨௭௧. பேரிசை யாழ்ப்பாணன் பேதை விறலியொடுஞ்
சேர வினிதிருந்த செவ்விக்கண்—ணேரியுங்

௨௭௨. கோழியும் வேங்கையு முப்பணையுங் கோரமும்
பாழி யயிரா பதப்பகடு—மாழியான்

௨௭௩. சூடிய வாரமு மாணையுஞ் சோணாடுங்
காடு திரைத்தெறியுங் காவிரியும்—பாடுகெனக்

---

௨௬௦. "நடுவொதுங்கக்"—பி-ம்.

௨௭௩. "காடுதிரைத்திரைக்கும்"—பி-ம்.

௨௭௪. கூன லியாழெடுத்தான் பாணன் கொதித்தெழுந்து
வேனி லரசனுந்தன் வில்லெடுத்தான்—றேனிமிர்

௨௭௫. தந்திரி யாழ்ப்பாணன் றைவந்தான் றைவந்தான்
வெந்திறன் மாரனுந்தன் வில்லினாண்—முந்த

௨௭௬. நிறைநரம்பு பண்ணி நிலைதெரிந்தான் பாணன்
றிறன்மதனு மம்பு தெரிந்தான்—விறலியொடும்

௨௭௭. பாண னொருபாணி கோத்தான் பலகோத்தான்
றாணி தொலையச் சுளிந்துவேள்—மாண

௨௭௮. விசைத்தன பாண னியாழ்ப்பாணி பெய்து
விசைத்தன வேனிலான் பாணி—விசைத்தெழுந்த

௨௭௯. வீணை யிசையாலோ வேனிலா னம்பாலோ
வாணுதல் வீழா மதிமயங்காச்—சேணுலாம்

௨௮௦. வாடை யனைய மலையா நிலந்தனையுங்
கோடை யிதுவென்றே கூறினாள்—நீடிய

௨௮௧. வாரை முனிந்த வனமுலைமேல் விட்டபனி
நீரை யிதுவோ நெருப்பென்றா—ளூரெலாங்

௨௮௨. காக்குந் துடியை யழிக்குங் கணைமாரன்
தாக்கும் பறையென்றே சாற்றினாள்—சேக்கைதொறு

௨௮௩. வாழு முலகத் தெவரு மனங்களிப்ப
வீழு நிலவை வெயிலென்றாள்—கோழிக்கோ

௨௮௪. னெங்கோ னகளங்க னேழுலகுங் காக்கின்ற
செங்கோல் கொடுங்கோல் சிலர்க்கென்றாள்—கங்குல்

௨௮௫. புலருந் தனையும் புலம்பினா ளாங்குப்
பலரும் பணிந்து பரவக்—குலகிரு

௨௮௬. மூழிப் புவன முடைய வுடையபிரான்
சூழிக் கடாயானை தோன்றுதலும்—யாழி

௨௮௭. னிழைக்கு மிசைமுதலா வெப்பகைக்கு மாற்று
தழைக்கு முயிர்தழைப்ப வோடிப்—பிழைத்தனளாய்

௨௮௮. ஈட்டுந் திகிரி கிரியின் முதுமுதுகிற்
கட்டுங் கடவுட் கடாயானை—யெட்டுந்

---

௨௭௫. "தடவத்தான் றைவந்தான்"—பி-ம்.

௨௮௯. தரிக்கு முலகந் தனிதரித்த கோனைப்
பரிக்கு மயிரா பதமே—செருக்கிப்

௨௯௦. பொருந்த நினையாத போர்க்கலிங்க ரோடி
யிருந்த வடவரைக ளெல்லாந்—திருந்தா

௨௯௧. விதையம் பொருதழித்த விந்தமே போலப்
புதைய நடந்த பொருப்பே—சிதையாத்

௨௯௨. திங்கட் குலத்திற்குந் தெய்வப் பொதியிற்கு
மங்கப் பழங்குமரி யாற்றிற்குந்—தங்கள்

௨௯௩. படிக்கும் பொருநிருப பன்னகங்கள் வீழ
விடிக்குந் தனியசனி யேறே—கடிப்பமைந்த

௨௯௪. யாம முரசா விழுந்த நிறைநினது
தாம முரசு தரப்பெற்றே—னாம

௨௯௫. விடைமணி யோசை விளைத்தசெவிப் புண்ணின்
புடைமணி யோசை புலர்ந்தேன்—தடைமுலைமே

௨௯௬. லாறா மலையக்கா லட்டசூ டுன்செவியின்
மாறாப் பெருங்காற்றான் மாற்றினேன்—வேறாகக்

௨௯௭. கூசும் பனித்திவலை கொண்டுபோ மென்னுயிர்நீ
வீசு மதத்திவலை யான்மீட்டேன்—மூசிய

௨௯௮. காற்றுலா மோதக் கடல்முழங்க வந்ததுயர்
நேரிலா நீமுழங்க நீங்கினேன்—பேரிரவி

௨௯௯. லென்மே லனங்கன் வரவந்த வின்னலெல்லா
நின்மே லனகன் வர நீங்கினே—னின்னுலா

௩௦௦. கடைபோக வென்னுயிரைக் காத்தியேல் வண்டு
புடைபோகப் போதும் பொருப்பே—விடைபோய்நீ

௩௦௧. ஏட்டுந் தடங்கலக்கின் மாரற் கயில்வாளி
காட்டுந் தடமே கலக்குவாய்—கேட்டருளாய்

௩௦௨. கார்நாணு நின்கடத்து வண்டொழியக் காமனார்
போர்நாணின் வண்டே புடைத்துதிர்ப்பாய்—பார்நாதன்

௩௦௩. செங்கைக் கரும்பொழியத் தின்கைக் கனங்கனார்
வெங்கைக் கரும்பே விரும்புவா—யெங்கட்

---

௨௯௪. (தனிச்சீர்.) "ஏம"—பி-ம்.

௩0௪. குயிரா யுடலா யுணர்வாகி யுள்ளா
யயிரா பதமேகீ யன்றே—பெயராது

௩0௫. கிற்கண்டா யென்றிரந்து நின்றா ளுதலாக [கோன்
விற்கொண்ட பேரிளம்பெண் வேறொருத்தி—கொற்கையர்

பேரிளம்பெண்.

௩0௬. மல்லற் புயத்தான்றன் மால்யானைக் கைபோலக்
கொல்லத் திரண்ட குறங்கினா—ளெல்லையில்

௩0௭. கோடுங் கொலைகுயின்ற சேடன் குருமணிவெய்ங்
தாடும் படமனைய வல்குலாள்—சேடியாய்த்

௩0௮. தம்மை யெடுக்கு மிடைகடிந்த தம்பழிக்குக்
கொம்மை முகஞ்சாய்த்த கொங்கையாள்—செம்மை

௩0௯. நிறையு மழகா னிகரழித்துச் செய்யா
ளுறையு மலர்பறிப்பா ளொப்பாள்— நறைகமழு

௩௧0. மாலை பலபுனைந்து மான்மதச்செஞ் சாந்தெழுதி
வேலை தருமுத்த மீதணிந்து—சோலையில்

௩௧௧. மானு மயிலு மனைய மடந்தையருந்
தானு மழகு தரவிருப்பத்—தேனிமி

௩௧௨. ரூற விளம்பாளை யுச்சிப் படுகடுந்
தேறல் வழிந்திழிந்த செவ்விக்கண்—வேறாக

௩௧௩. வாக்கி மடனிறைத்து வண்டு மதுநுமையும்
போக்கி யொருத்தி புகழ்ந்துதர—நோக்கி

௩௧௪. வருந்திச் சிறுதுள்ளி வள்ளுகிரா லெற்றி
யருந்தித் தமர்மே லயர்ந்தாள்—பொருந்து

௩௧௫. மயக்கத்து வந்து மனதுங்க துங்க
னயக்கத் திருக்கனவு நல்கு—முயக்கத்து

௩௧௬. மிக்க விழைவு மிகுகளிப்பு மத்துயிலு
மொக்க விகல வுடனெழுந்து—பக்கத்து

௩௧௭. வந்து சுடரு மொருபளிக்கு வார்சுவரிற்
றந்த தனதுநிழ லுளைக்கிப்—பைந்துகிற்

௩௧௮. காசுசூ ழல்குற் கலையே கலையாகத்
தூசு புடைபெயர்ந்து தோணெகிழ்ந்து—வாசஞ்சேர்

௩௧௯. சூடிய மாலை பரிந்து துணைமுலைமே
லாடிய சாந்தி னணிசிதைந்து—கூடிய

௩௨0. செவ்வாய் விளர்ப்பக் கருங்கண் சிவப்பூர
வெவ்வா னுதலும் வெயரரும்ப—விவ்வாறு

௩௨௧. கண்டு மகிழ்ந்த கனவை நனவாகக்
கொண்டு பலர்க்குங் குலாவுதலும்—வண்டுசூழ்

௩௨௨. வேரிக் கமழ்கோதை வேறாகத் தன்மனத்திற்
பூரித்த மெய்யுவகை பொய்யாகப்—பாரித்த

௩௨௩. தாமக் கவிகை நிழற்றச் சயதுங்க
னாமக் கடாக்களிற்று நண்ணுதலுந்—தேமொழியுங்

௩௨௪. கண்டது கெட்டேன் கனவை நனவாகக்
கொண்டது மம்மதுச்செய் நோலமே —பண்டுலகிற்

௩௨௫. செய்த தவஞ்சிறிது மில்லாத தீவினையேற்
கெய்த வருமோ யிவனென்று—கைதொழுது

௩௨௬. தேறி யொருகாலுந் தேறாப் பெருமைய
லேறி யிரண்டா வதுமயங்கி—மாறிலாத்

௩௨௭. தோழியர் தோண்மே லயர்ந்தாளத் தோழியரு
மேழுயர் யானை யெதிரோடி—யாழியாய்

௩௨௮. மாடப் புகாருக்கும் வஞ்சிக்குங் காஞ்சிக்குங்
கூடற்குங் கோழிக்குங் கோமானே—பாடலர்

௩௨௯. சாருந் திகிரி தனியுருட்டி யோரேழு
பாரும் புரக்கும் பகலவனே—சோர்வின்றிக்

௩௩0. காத்துக் குடையொன்றா லெட்டுத் திசைகவித்த
வேத்துக் குலகிரியின் மேருவே—போர்த்தொழிலா

௩௩௧. லேனைக் கலிங்கங்க ளேழனைய போய்க்கொண்ட
தானைத் தியாக சமுத்திரமே—மானப்போ

௩௩௨. ரிம்ப ரொழுபொழில் வட்டத் திகல்வேந்தர்
செம்பொன் மவுலிச் சிகாமணியே—நம்பநின்

௩௩௩. பாரிற் படுவன பன்மணியு நின்கட
னீரிற் படுவன நித்திலமு—நேரியநின்

௩௩௪. வெற்பில் வயிரமும் வேந்தநின் சோணாட்டுப்
பொற்பின் மலிவன பூந்துகிலு—நிற்பணியக்

௩௩௫. தொண்டா யிவடனது கொங்கைக் கொழுஞ்சுணங்குந்
தண்டா மரையின் றளிர்நிறமும்—பண்டத்

௩௩௬. துயிலுங் கவர்ந்ததுநின் றொல்குலத்து நீங்கள்
பயிலுந் திருநாற் படியே—புயல்வளவ

௩௩௭. மன்னிய தொண்டை வளநாடு வாளியும்
பொன்னி வளநாடு பூஞ்சிலையுங்—கன்னித்

௩௩௮. திருநாடு தேருங் குறையறுப்பச் செய்தாற்
றருநாண் மடமகளிர் தம்மை—யொருநாளவ்

௩௩௯. வேனற் கரசன் விடுமே யவன்சிலையிப்
பானற்க ணல்லா ருயிர்ப்பரமே—யானக்காற்

௩௪0. குன்றே யெனத்தருநின் கோபுரத்திற் றூங்குமணி
யொன்றே யுலகுக் கொழியுமே—யென்றிணைய

௩௪௧. கூறி வணங்கிடு மிவ்வளவுங் கோதைமேற்
சீறி யனங்கன் சிலைவளைப்ப—பாறழியக்

௩௪௨. குத்துங் கடாக்களிற்றுப் போந்தான் கொடைச்சென்னி
யுத்துங்க துங்க னுலா.

கையு மலரடியுங் கண்ணுங் கனிவாயுஞ்
செய்ய கரிய திருமாலே—வைய
மளந்தா யகளங்கா வாலிலைமேற் பள்ளி
வளர்ந்தாய் தளர்ந்தாளிம் மான்.

விக்கிரமசோழனுலா முற்றிற்று.

185024

---

௩௩௫. "தண்டா கிறையும்"—பி - ம்.

௩௪௧. "செருப்பெய்ய"—பி - ம்.

ஆவணக் காப்பகம்
சென்னை-600 008